தமிழகத்தின் பண்பாட்டு வரலாறு ஆய்வுகளிலும் நாட்டார் தெய்வங்கள் பற்றி பல்வேறு ஆய்வுகளை நடத்தி அதை வெளி உலகிற்கு பறைசாற்றியவர் தொ.ப என்ற இரண்டு எழுத்திற்குச் சொந்தக்காரரான தொ.பரமசிவன். வரலாறுகளை மக்களின் கண்ணோட்டத்தில் எழுதிய மகத்தான மனிதர். திராவிடப் பண்பாட்டை தென்னிந்தியாவின் பொதுமையான பழக்கவழக்கங்களை எளிமையாக எடுத்துச் சொன்னவர். இவரை பண்பாட்டுக் களஞ்சியம் என்றால் அது மிகையாகாது. ஏனென்றால் அவர் எழுதியது 20 புத்தகங்கள் அல்ல. 2000 ஆண்டு தமிழர் வாழ்வை. பேராசிரியர்கள் பலர் சோழர் வரலாற்றைத் தேடினார்கள். இவர் மட்டுமே சோற்றின் வரலாற்றைத் தேடியவர். நாம் அறியாமலே பலவற்றை பின்பற்றுகிறோம். ஆனால் தெரிந்தே நம் பண்பாட்டை சிதைக்கிறோம் எப்படி என்ற விளக்கத்தை தந்தவர். இவரின் பண்பாட்டுப் பதிவில் மஞ்சள் பெறும் இடம் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: Manjal Neerattu (Turmeric Bath); Puberty Ritual; Mother Goddess Worship; Women Culture; Antiseptic; Medicinal Value; Auspiciousness; Naming Tradition; Cultural Anthropology; Oral History; Sanskritisation

Abstract

Tho. Paramasivan—known simply by the initials “Tho. Pa.”—was a scholar who conducted extensive research into Tamil cultural history and folk deities, bringing them to the attention of the wider world. He was a remarkable figure who chronicled history from the perspective of the common people and articulated Dravidian culture and the shared customs of South India with great simplicity. It is no exaggeration to call him a “cultural repository,” for his writings encompassed not merely twenty books, but the entire span of two millennia of Tamil life. While many professors focused on the history of the Chola dynasty, he was the one who sought out the history of *soru* (cooked rice). He explained how we often unknowingly follow certain practices, yet consciously erode our own culture. This article explores his insights regarding the significance of turmeric within our cultural traditions.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பா, மு. . வை. (2026). தொ. பா -வின் பண்பாட்டுப் பதிவில் மஞ்சள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 35–39. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8411

முன்னுரை:

தமிழ் பண்பாட்டிற்கு ஆயிரம் பக்கங்களில் விளக்கம் எழுதிக் கொண்டிருந்த அறிஞர்கள் இடையே இரண்டு பக்கங்களில் நாம் ஒரு பொருட்டாகவும் கருதாத உப்பு, எண்ணை, தேங்காய், உடை, உணவு முறை, உறவுமுறைப் பெயர்கள், தாலி, மஞ்சள் முதலானவற்றைக் கொண்டு 2000 ஆண்டுகால தமிழரின் பண்பாட்டு அடையாளத்தை அர்த்தப்படுத்தியவர் பண்பாட்டு ஆய்வாளர் தொ பரமசிவன் அவர்கள். அதில் மஞ்சள் பண்பாட்டை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

பண்பாட்டு விளக்கம் :

மனிதனை பண்பட்டவனாக காட்டுவது பண்பாடாகும் பண்பாட்டை கொண்டே சமுதாய நிலை தீர்மானிக்கப்படுகிறது **“பண்பாடு என்பது சமுதாயத்தில் உறுப்பினராக இருந்து மனிதன் பெற்றிடும் அறிவு கலை நீதி நம்பிக்கை மதிப்பு சட்டம் சம்பிரதாயங்கள் மொழி இன்ன பிற ஆற்றல்கள் ஆகியவற்றை கொண்ட முழுமையாகும்”** என இபி டெய்லர் குறிப்பிடுகிறார். பண்பாடு நம்முடைய ரத்த ஓட்டத்தோடு கலந்தது அது நமது மூச்சுக்காற்றை போல இதனை சதர்லேண்ட் பின்வருமாறு கூறுகிறார் **“ஒரு தலைமுறை மக்கள் தங்களது அடுத்த தலைமுறையினருக்கு வழங்கக்கூடிய அனைத்தும் பண்பாட்டில் அடங்கும் மக்களின் பண்பாடு என்பது அவர்களின் சமூக பாரம்பரியத்தை குறிக்கிறது” என்கிறார்.**

“**பண்பாட்டு வளர்ச்சியில் ஒவ்வொரு தனி மனிதனும் தன் பங்கினை அளித்தாலும் அது தனி மனித சொற்கள் என்று சமுதாய சாதனை அது உருவாகுவதும் வளர்ச்சி பெறுவதும் ஒரு சமுதாயத்தில் தான் என்பதை மறந்து விடக்கூடாது ஒரு சமுதாயம் எந்த உயர்ந்த குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு முன்னேறுகிறதோ அவற்றினை பண்பாடு தன்னுள் பெற்று மிளிருகிறது**” என ஆர் பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

தொன்மை அல்லது பழமை என்பது சுவைக்கு உதவாதது அப்பாவித்தனமானது மூடநம்பிக்கை கொண்டது. மாறிவரும் உலகத்தை பார்க்க மறுப்பது என்பது சமூக உளவியல் ரீதியான கருத்து. இதிலிருந்து மாறுபட்ட கருத்தை உடையவர் தொ. பரமசிவன் அவர்கள். இவர் பண்பாட்டிற்கு புது விளக்கம் தருகிறார்.

பண்பாடு என்பது தொன்மையான மற்றும் உயிர் திறல்களின் காலம் சார்ந்த அசைவுகளின் வெளிப்பாடு. “**உயிர்த்திறல் என்றால் அருகம்புல்லும் மூங்கில் தூறும் ஆழ மரமும் நமக்கு காட்டுகின்ற வெளிப்பாடுகள் என்கிறார் புதர் என்பதன் முந்திய வடிவமான அருகம்புல் தூறு என்பதனை வெளிக்காட்டும் மூங்கில் விழுதுகளாக வெளியினை நிரப்பும் ஆலமரம் என்பவை தொன்மையும் பண்பாடும் என்ன என்று உணர்த்துபவை என விளக்கம் தருகிறார்**” (தொ. பரமசிவன், மஞ்சள் மகிமை, ப. 12) அவ்வகையில் மஞ்சள் பண்பாடு குறித்து மஞ்சள் மகிமை என்ற தனி நூலையே எழுதியிருக்கிறார்.

மஞ்சள் என்பது வெறும் மூலிகை அல்ல அது ஒரு பண்பாட்டுக் குறியீடு தமிழரின் பழக்க வழக்கங்கள் சடங்குகள் விழாக்கள் முதலியவற்றில் பொருள் பொதிந்த பண்பாட்டை புலப்படுத்தி நிற்பது. சோபாவின் மஞ்சள் பண்பாட்டுச் செய்திகள் அதிர்ச்சியும் அதிசயமும் நிறைந்ததாக அமைந்திருக்கிறது.

விறலி மஞ்சள்:

பூசு மஞ்சள் புகழ்பெற்றது விறலி மஞ்சள். விறல் என்றால் முகம். விறல் என்றால்

முகபாவங்கள் காட்டி நடித்து நடனமாடும் பெண். அன்று கூத்தாடி பெண்கள் விளக்கு ஒளியில் நாட்டியமாடும்போது அவர்களின் முகம் துடிப்பாகத் தெரிய வேண்டும் என்பதற்காக மஞ்சள் அரைத்து முகத்தில் பூசிக் கொண்டனர். காலம் செல்லச் செல்ல குடும்பப் பெண்களும் பூச தொடங்கினர். விறலியை மதிக்காத சமூகம் விறலி மஞ்சள் மட்டும் கொண்டாடத் தொடங்கியது இன்றும் கொண்டாடி வருகிறது பெரும்பாலும் பெண்கள் அன்றைய காலத்தில் மஞ்சள் மட்டுமே தேய்த்துக் குளிப்பதனையே வழக்கமாகக் கொண்டிருந்ததையும் அறிய முடிகிறது கிருமிக் கொள்ளியாக அறியப்பட்ட மஞ்சளும் வேப்பிலையும் தமிழர்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது இதன் வழி அறிய முடிகிறது

பெண்ணின் அடையாளமும் மங்கலமும்

தமிழர் பண்பாட்டில் பெண் மஞ்சள் பெண்ணோடு இணைந்தது மஞ்சள் பூசாத பெண் முகம் நெற்றி வெறுமையானது என்றே கருதப்பட்டது மஞ்சள் என்பது வெறும் அழகு சாதனம் அல்ல அது உயிர் காக்கும் கிருமி நாசினி என்பதை நம் மூதாதையர்கள் அறிந்திருந்தனர் இந்த அடிப்படையிலேயே பெண்ணின் மங்கள அடையாளமாக மஞ்சள் மாறி இருக்கிறது.

திருமணத்தில் மஞ்சள் கிழங்கு கட்டுதல், மஞ்சள் பூசி குளித்தல், மஞ்சள் தாலி, மஞ்சள் குங்குமம் ஆகியவை திராவிட பண்பாட்டின் தொடர்ச்சி. வடமொழிப் பண்பாட்டில் குங்குமத்திற்கு உள்ள இடத்தை விட தமிழகத்தில் மஞ்சளுக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. தாலியின் மஞ்சள் கயிறு கூட ஆரியப்படுதலுக்கு முன்பு வெறும் மஞ்சள் நூல் தான் கட்டப்பட்டது. தாலி என்பது பெண்ணை கட்டும் சங்கிலி அல்ல மஞ்சள் கயிற்றால் பெண்ணை காக்கும் மருந்தாக பயன்படுத்தப்பட்டது என்ற பண்பாட்டுப் பதிவை தோப்பா முன் வைக்கிறார்

மஞ்சள் நீராட்டு :

பூப்பெய்துதல் என்றால் பூப்பது போல மலர்வது. ஒரு செடி பூத்தால் எப்படி கொண்டாடுவோமோ அப்படி பெண் பூத்ததை கொண்டாடுவது தமிழ் மரபு. இதை தீட்டு என்று சொன்னது பிற்கால வருகை. சங்க இலக்கியத்தில் பூப்பெய்திய பெண்ணை பூப்பு நீராட்டு என்றே குறிப்பிடுகிறார்கள். பெண் பூப்பெய்திய பிறகு நடக்கும் மஞ்சள் நீராட்டு விழாவில் தான் அவளுக்கு பெரியவள் என்ற புதிய அடையாளப் பெயர் கிடைக்கிறது. மஞ்சள் நீராட்டு என்பது உடல் சடங்கு அல்ல. சமூக அங்கீகாரச் சடங்கு. அன்றுதான் அவள் திருமணத்திற்கு தயாரானவள் என்று ஊரால் அறியப்படுகிறது **“உதிரப்போக்கில் போது பெண்ணின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் மஞ்சள் அவளை கிருமியிலிருந்து காக்கும் இயற்கை கவசம் அதனால் தான் மஞ்சள் நீராட்டு என்று அழைக்கப்படுகிறது”.**

முன்பு மஞ்சள் நீராட்டு என்பது பெண்ணுக்கு கல்வி தரும் சடங்காக இருந்தது. இன்று அது பெண்ணை விளம்பரப்படுத்தும் சடங்காக மாறிவிட்டது. மண்டப விழாவாக பணம் காட்டும் விழாவாக உருமாறி விட்டது. தமிழர் பண்பாட்டில் பெண் தீட்டு இல்லை அவள் தான் வீட்டின் மங்கலம் அந்த மங்களத்தின் நிறம் தான் மஞ்சள் என இப்பண்பாட்டை வலியுறுத்துகிறார் தொ. ப.

பழந்தமிழ் மரபில் மஞ்சள் நீராட்டு என்ற சொல் பூப்பு நீராட்டினை மட்டும் குறிப்பதன்று. போர்க்களம் செல்லும் வீரர்கள் மஞ்சள் நீராட்டு செய்து அல்லது மஞ்சள் உடை உடுத்தி செல்லு செல்லுவர். இது இறப்பினை எதிர்கொள்ளும் வீர உணர்வினையும் தியாக உணர்வுகளையும் குறித்து நிற்கிறது. இவ்வழக்கத்தின் தொல் எச்சம் ஆகவே அரக்கனை அழிக்கச் செல்லும் தாய் தெய்வத்தின் சாமியாடி

மஞ்சள் நீராடி மஞ்சள் உடை உடுத்தி செல்கிறார் என விளக்கம் கூறுகிறார் தொ.பா.

பெயர் வைக்கும் பண்பாடு:

பழந்தமிழர்கள் குழந்தைகளுக்கு அழகான பெயர்களை வைக்க மாட்டார்கள் வேண்டுமென்றே அசிங்கமான இழிவான பெயரை வைப்பார்கள் இதை மறைப்பெயர் என்கிறார் தொ. ப. மஞ்சள் என்பது அன்றாடம் கையில் படும் பொருள் அதனால் அதைப் பெயராக வைத்தால் தீய சக்தி அண்டாது என்பது தமிழர் நம்பிக்கை இதனை குழந்தை அழகாக இருந்தால் கண் பட்டுவிடும் என்று பச்ச, குப்பை கூலம், மஞ்சள் என்று பெயர் வைத்தார்கள் என்கிறார்.

மஞ்சம்மாள், மஞ்சளம்மாள், மஞ்சன், மஞ்சுநாதன் இவையெல்லாம் மஞ்சளிலிருந்து வந்த பெயர்கள். இவை தென் மாவட்ட வழக்கம் என்பதை அறிய முடிகிறது. மஞ்சள் என்ற பெயர் இன்று குறைந்துவிட்டது. மஞ்சுளா என்ற வடமொழி மயமாக்கப்பட்ட பெயர் நிறைந்திருக்கிறது. மஞ்சள் என்ற பெயரில் மருத்துவம் இருக்கிறது மங்கலம் இருக்கிறது நிறம் இருக்கிறது ஆனால் இன்றைய பெயர்களில் ஒளி மட்டுமே இருக்கிறது வாழ்வு இல்லை என்று பண்பாட்டை மறந்து பெயரில் அந்நிய மோதல் ஆகிவிட்டோம். என்கிறார்.

பழைய தமிழ் பெயர்கள் எல்லாம் பொருள் உள்ளவை. உப்பு, புளி, மிளகாய், மஞ்சள், கருப்பன், வெள்ளையன், ஆண்டி, கிழவன் என இவையெல்லாம் வாழ்வோடு இணைந்தவை. பிற்காலத்தில் வடமொழிப் பெயர்கள் வந்தபோது இபாபெயர்கள் பொருள் இழந்தன. எனவே நமது பண்பாட்டு அறிவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியமானதாக அமைகிறது.

மருத்துவத்தில் மஞ்சள்:

மருத்துவத்தில் முதலிடம் பெறுவது மஞ்சளாகும். பிள்ளை பெற்ற பெண்ணுக்கு மஞ்சள் கசாயம் கொடுப்பது கிருமி நாசினியாகவும் உடல் வெப்பத்தை சீராக்கும் செய்யும் மரபு முறையாகும். அம்மை நோய் கண்டு மீண்டவர்களை முதற் குளியலில் மஞ்சளையும் வேப்பிலையையும் அரைத்து கலவையாக தேய்த்து குளிப்பாட்டுகின்றனர் பத்து இருபது நாட்கள் குளிக்காத அந்த உடலில் எழுகின்ற நாற்றம் இந்த கலவையால் நீக்கப்படுகிறது. இவ்வாறு மருத்துவத்தில் முக்கிய பங்காற்றக் கூடியதாக மஞ்சள் பண்பாடு அமைகிறது.

தாய் தெய்வ வழிபாட்டில் மஞ்சள்:

கிராம தேவதைகள் மாரியம்மன், காளியம்மன் கோயில்களில் மஞ்சள் அபிஷேகம், மஞ்சள் காப்பு, மஞ்சள் நீராட்டு ஆகியவை இன்றும் நடக்கின்றன. சிறு தெய்வங்களுக்கு மஞ்சள் என்றும் பெரும் தெய்வங்களுக்கு குங்குமம் என்றும் பிரிவு, பண்பாட்டு அதிகார மாற்றத்தின் குறியீடு என்கிறார் தொ. ப. மஞ்சள் பூசிய பானை மஞ்சள் கலந்த அரிசி ஆகியவை சடங்கின் தூய்மைக்கு அடையாளமாக அமைகின்றன. தமிழரின் தாய்தா தெய்வ வழிபாட்டில் மஞ்சள் முதன்மையாக இன்று வரை நிலைத்து நிற்கின்றது. தென் தமிழகத்தில் மஞ்சள் குடும்பம் என்று குலப்பெயர் உண்டு . உப்பு விற்றவன் உப்பிலியன் என்றும் என்னை ஆட்டியவன் செக்கான் என்று அழைக்கப்பட்டதை போன்று மஞ்சள் விவசாயம் செய்பவர்கள் மஞ்சள் விற்பவர்கள் அந்தப் பெயரைப் பெற்றனர் இது இன்றளவும் தமிழர் பண்பாட்டின் எச்சமாக இருக்கிறது.

முடிவுகள்:

- பண்பாடு என்பதை அது மீறப்படுகிற போது உணர்கிறோம். இன்னொரு

கட்டமாக தேவைப்படுகிற போதும் பண்பாட்டை உணர்கிறோம். அந்த அடிப்படையில் மஞ்சள் என்பது தமிழர் வாழ்வில் நீங்கா இடம் பிடித்த ஒன்று.

- குழந்தையை காக்கும் மருத்துவ நம்பிக்கையாக இது இருந்து வருகிறது பெண்ணை சமூகத்தில் அடையாளப்படுத்தும் சடங்குகளாக விளங்குகிறது தமிழரின் பொருள் பொதிந்த பெயரின் மரபின் எச்சமாக காணப்படுகிறது.
- மஞ்சள் என்பது பெண் உணவு மருத்துவம் வழிபாடு வேளாண்மை ஆகிய ஐந்தையும் இணைக்கும் பண்பாட்டுப் பொருளாக அமைகிறது.
- மொத்தத்தில் நாம் ஒரு பொருட்டாக கருதாத சிறு பொருளான மஞ்சளில் தமிழரின் 2000 ஆண்டு பண்பாட்டு அடையாளம் படிந்து கிடப்பதை தொ. ப எழுத்து வழி அறிய முடிகிறது.

துணை நின்ற நூல்கள்

1. தொ. பரமசிவன், மஞ்சள் மகிமை காலச்சுவடு பதிப்பகம் சென்னை
2. ஆர். பாலசுப்பிரமணியன், இந்திய பண்பாடு தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம் சென்னை 1981
3. பண்பாடு சமூக கலை இலக்கிய ஆய்வு சஞ்சிகை இந்து சமய கலாச்சார அலுவல்கள், திணைக்களம் 2009

© 2026 முனைவர் . வைடூரியம்மாள் பா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 40–46
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

குருக்கள்பட்டி கிராமச் சிறுதெய்வ வழிபாடும் பண்பாட்டு வரலாறும்

முனைவர் .மேனகா கு*

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம், சாராள் தக்கர் கல்லூரி(தன்னாட்சி), திருநெல்வேலி - *7, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் .மேனகா கு — menagarajandoss@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00020	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம்,
சாராள் தக்கர் கல்லூரி(தன்னாட்சி),
திருநெல்வேலி - 7

Keywords / திறவுச்சொற்கள்: சிறுதெய்வ வழிபாடு (Folk Deity Worship); காவல் தெய்வங்கள் (Guardian Deities); முன்னோர் வழிபாடு (Ancestor Worship); குருக்கள்பட்டி (Kurukkulpatti); வாய்மொழி வரலாறு (Oral History); நாட்டார் தெய்வங்கள் (Folk Deities); ஜமீன்தார் வரலாறு (Zamindar History); வீரமாமுனிவர் (Veeramapunivar / Constanzo Beschi); எஸ்தர் அம்மையார் (Esther Ammaiyar).

How to cite / மேற்கோள் காட்டும் முறை: கு, மு. . (2026). குருக்கள்பட்டி கிராமச் சிறுதெய்வ வழிபாடும் பண்பாட்டு வரலாறும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 40–46. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8413

முன்னுரை

தமிழக நாட்டார் வழக்காற்றியலில் சிறுதெய்வ வழிபாடு மிக முக்கியப் பண்பாட்டு இடத்தைப் பெறுகிறது. பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து மாறுபட்டு, மக்களது அன்றாட வாழ்க்கை, எல்லைக் காவல் தேவை, முன்னோர் வழிபாடு மற்றும் சமூகக் கட்டுப்பாடுகளோடு பிணைந்து இச்சிறுதெய்வங்கள் இயங்குகின்றன. குருக்கள்பட்டி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட களப்பணித் தரவுகளின் அடிப்படையில் இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது.

சிறுதெய்வம் - சொல் விளக்கம்

கிராம மக்களின் வழிபாட்டுக்குரியது சிறுதெய்வமாகும்.

"மக்கள் தம்குறை நீங்க வழிபடும், (பெரும்பாலும்) அந்தணரல்லாத பூசாரி பூஜை செய்யும் தெய்வம்"1 என்று கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

சிறுதெய்வம் என்ற சொல்லாட்சி முதன்முதலில் அப்பர் தேவாரத்தில்

காணப்படுகிறது; எனவே இப்பெயர் வழக்கு 'மேலோர் மரபு' சார்ந்ததாகும்.

முதன் முதலாக "சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்"2 என்று அப்பர் தேவாரத்தில் பயின்று வருகிறது; இதன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு.

17-ம் நூற்றாண்டில் குமரகுருபரர், "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்"3 என்று முருகனைக் குறிப்பிடுகிறார்; இப்பாடலில் செத்துப் பிறப்பவனாக அவர் குறிப்பிடுவது சிறுதெய்வங்களையே எனலாம்.

"ஆதிக்குடிகள் இயற்கையில் காணும் தீ, இடி, பெருமழை, பூகம்பம் போன்ற அச்சம்தரும் நிகழ்ச்சிகளுக்கும், நோய்களுக்கும் காரணம், உலகின் கண் உலவும் கணக்கற்ற ஆவிகளே என நம்பினர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாகக் கொண்டு வழிபட்டார்"5 என கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

சிறுதெய்வங்களின் பண்புகளும் வழிபாட்டு நோக்கங்களும்

சிறுதெய்வங்களின் பண்புகளுக்கேற்ப அவை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

- ❖ அச்சந்தரும் இயற்கைப் பொருட்களும் நிகழ்ச்சிகளும் தெய்வங்களாக உருவாக்கப்பட்டன.
- ❖ பருவத்தில் மழை பெய்யவும், பயிர் வளம் செழிக்கவும் தானாக உருவாக்கப்பட்ட சக்திகளாக விளங்குகின்றன.
- ❖ நீர் நிலைகளையும், ஒவ்வொரு ஊரையும் காவல் காக்கும் சக்தியாக உருவகம் செய்து வழிபடப்படுகின்றன.
- ❖ கொள்ளை நோய்கள், குழந்தைகள் மற்றும் கால்நடைகளைக் காக்கும் சக்தியாக அமைந்துள்ளன.
- ❖ குலதெய்வ வழிபாடு ஊர்தெய்வ வழிபாடாகவும், பிறகு பலரும் வணங்கும் சக்தியுள்ள தெய்வ வழிபாடாகவும் பரவிச் செல்வாக்குப் பெறுகிறது.
- ❖ பல்வேறு இனக்குழு மக்கள் தங்கள் இனக்குழுக்குறிகளுக்குச் (Totems) சிறுதெய்வ நிலை கொடுத்துள்ளனர்.

வழங்கப்படும் வேறு பெயர்கள்: இச்சக்திகளுக்குச் சிறுதெய்வம், குலதெய்வம், ஊர்தெய்வம், கிராம தேவதை, சிற்றுயிர் வணக்கம், காவல் தெய்வம், எல்லைத்தெய்வம் முதலிய பல பெயர்கள் வழங்கி வருகின்றன. பாமர மக்களின் உணர்வைத் தாக்கும் வலிய அரணாக இச்சிறு தெய்வ வழிபாடு விளங்குகிறது.

வழிபடுவோரும் கோவில் அடையாளங்களும்

வழிபடும் சமூகங்கள்: பிராமணரல்லாத எல்லாச் சாதியினரும் சிறுதெய்வ வழிபாட்டை உடையவர்களாவர். தேவர், கோனார், நாடார், செட்டியார், இல்லத்துப்பிள்ளை, பள்ளர், பறையர், அருந்ததியர், நாவிதர், புலவர் போன்ற மற்ற சமூகத்தவர் அனைவரும் சிறுதெய்வங்களை வழிபடுகின்றனர்.

கோவில் அடையாளங்கள்: சிறுதெய்வக் கோவில்கள் சிறியவை; சில இடங்களில் கட்டடமின்றி அமைவதும் உண்டு. புற்றுகளும் மரங்களும் (வேம்பு, பனை, உடை, பூவரசு) தெய்வங்களாக வழிபடப்படுகின்றன.

திசைகளும் பீடங்களும்: பெண் தெய்வக் கோவில்கள் பெரும்பாலும் வடக்கு நோக்கியும், சில கோவில்கள் கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளன. ஆண் தெய்வக் கோவில்கள் கிழக்கு நோக்கியே அமைவது பெரும்பான்மை மரபாகும். சிறுதெய்வக்

கோவில்களில் பீடங்கள் ஒன்று அல்லது இருபத்தொன்று என்ற எண்ணிக்கையைக் கொண்டிருக்கும்.

தெய்வங்களின் பெயரமைப்பு: ஆண் தெய்வங்களின் பெயர்கள் பொதுவாக அய்யா, அப்பன், அடியான், சாமி முதலிய விகுதிகளோடு அமையும் (எ.கா: வெளியப்பசாமி, கருப்பசாமி, உறங்காப்புலிமாடன், பண்டுவன்சாமி); பெண் தெய்வங்கள் வடிவு அம்மன், ஈஸ்வரி அம்மன் போன்ற பெயர்களில் அமைந்திருக்கும்.

கோவில்கள் அமையும் இடங்கள்: ஊர் மந்தை, ஊரின் எல்லை, குளக்கரை, கண்மாய்க்கரை, களத்துமேடு, வயற்புறம், அழிந்த கோட்டைகளின் வாசற்பகுதி, நெடுஞ்சாலை ஓரம் முதலிய இடங்களில் இவை அமைந்துள்ளன. இவ்விடங்கள் அனைத்தும் காவலுக்குரியவை என்பதால் பெரும்பாலான சிறுதெய்வங்கள் காவல் தெய்வங்களாகவே அமைந்துள்ளன.

சமூகச் சூழ்நிலையும் தெய்வங்களின் தோற்ற நிலைகளும்

சாதிவெறியும் தீண்டாமையும் உச்சகட்டத்தில் இருந்த காலகட்டத்தில் சமூகக் கட்டுப்பாட்டினை மீறும்போது மனிதன் தண்டிக்கப்படுகிறான் என்ற நம்பிக்கையில் இத்தெய்வங்கள் தோன்றின என்று மொழியியல் ஆய்வாளர் செல்லமுத்து கூறுகிறார்.

சிறுதெய்வங்களின் தோற்ற நிலைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

- மனிதத் தலைவர்கள் தெய்வமாகக் கருதப்பட்டு அவர்களுக்குக் கோவில் கட்டி வழிபாடு செய்ய முயன்ற நிலை.
- தன்னுடன் தன் காலத்தில் வாழ்ந்தவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு அவர்கள் பெயரில் கோவில் அமைத்து வழிபட்ட நிலை.
- ஊர்ப்புறங்களில் வீரம் வாய்ந்து உடல்திறமையால் விளங்கியவனுக்கு அஞ்சியவர்கள், பின்னாளில் அவன் நினைவாக அச்சத்திற்குட்பட்டு அவனை வணங்கிய நிலை.

உறங்காப்புலி மாடன், போத்திமார், வெளியப்பசாமி, பண்டுவன் போன்ற தெய்வங்கள் கொலை செய்யப்பட்டும், இயற்கை மரணமடைந்தும் தெய்வங்களாக உருவெடுத்தன; இந்த முன்னோர் வழிபாடே சிறுதெய்வ வழிபாடாக அமைந்தது.

குருக்கள்பட்டி சிறுதெய்வங்களும் வாய்மொழி வரலாறுகளும்

வெளியப்பசாமி கோவில்

வெளியப்பர் என்பவர் தேனி மாவட்டத்திற்கு உட்பட்ட 'கலாடி' கிராமத்திலிருந்து ஒரு பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து கொண்டு ஊரைவிட்டு வெளியேறி விட்டார். குருக்கள்பட்டிக்குக் கிழக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மேலநீலிதநல்லூர் என்ற கிராமம் வரை பெரிய காடுகள் இருந்தன. அங்கு இரண்டஞ்செடி, கிளுவை மரங்கள் அடர்ந்து காணப்பட்டதால் அக்காட்டிற்குள் யாரும் செல்ல முடியாது. அதற்குதென்று தனிவழி ஒதுக்கித்தான் போக முடியும். அவ்வளவு அடர்த்தியாக இருந்தது. அப்படிப்பட்ட அடர்ந்த காட்டிற்குள் ஒளிந்திருந்தார்களாம். அந்தப்பெண்ணின் சகோதரர்கள் பெண்ணைக் காணவில்லை என்று கூறி, பல நாட்களாக ஊர் ஊராகத் தேடி அலைந்து கொண்டிருந்தார்களாம். ஒரு நாள் குருக்கள்பட்டி கிராமத்தில் வந்து ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் இடையர்களிடம் விசாரித்தார்களாம். அவர்கள் அப்படி யாரும் இங்கு வரவில்லை, ஆனால் அதோ அந்தக்காட்டிற்குள் நடுவே ஏதோ புகை போவது

போன்று தெரிகிறது என்றனராம். உடனே அவர்களும் சந்தேகத்தில் பார்க்கச்சென்றனர். இருவரும் உணவு சமைத்துக் கொண்டிருந்தார்களாம். அங்கேயும் இங்கேயும் சுற்றித்திரிந்த ஆத்திரத்தில் இருவரையும் கொலை செய்து விட்டார்களாம்.

இவர்கள் இருவரும் ஊத்துமலையிலுள்ள ஜமீன்தாரிடம் கனவில் போய் நடந்தவைகளைக் கூறிவிட்டு, எந்தப்பாவமுமே செய்யாத எங்களுக்கு இந்தக்கதியாகிவிட்டது, எனவே எங்களைக் கோவில் கட்டி வணங்கினால் நாங்கள் உங்களுக்குக் காவல்காரராக இருப்போம் என்று கூற, ஜமீன்தார் எந்த மறுப்பும் கூறாமல் உடனே 'கோவில்கட்டி' விடுவோம் என்று கோவிலைக் கட்டினார். இதன் மூலம் இக்கோவில் ஜமீன்தாரால் கட்டப்பட்டது என்பது தெரிகிறது.

இக்கோவில் குருக்கள்பட்டி கிராமத்திலேயே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். இது மாசிமாதம், சிவராத்திரி அன்று கொண்டாடப்படும் திருவிழாவாகும். இத்திருவிழாவிற்கு மதுரை, தேனி, கம்பம், நாகர்கோவில், கன்னியாகுமரி, கலாடி, சொக்காடி போன்ற பகுதியிலுள்ள அனைத்து சாதியினரும் வழிபட வருவார்கள். ஆகையால் தமிழகத்தில் பரந்துபட்ட எல்லாச் சாதியினரும் கொண்டாடும் விதமாக இத்திருவிழா அமைந்திருக்கும்.

போத்திமார் கோவில்

குருக்கள்பட்டி ஜமீனுக்கு உட்பட்டது மேலநீலிதநல்லூர் கிராமமாகும். அங்கு தேவர், கோனார், பள்ளர், பறையர், அருந்ததியர் போன்ற சமூகத்தவர் வாழ்ந்து வருகின்றனர். அதில் தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் உள்ளனர். அனைத்து சாதியினரும் விவசாயிகளாகவும், விவசாயக்கூலிகளாகவுமே வாழ்ந்து வருகின்றனர். கோடைகாலங்களில் தொழில் இல்லாததால் தேவர் சாதியைச் சேர்ந்தவர்கள் ஜமீந்தார் அரண்மனைக்குக் காவல்காரர்களாகப் பணிசெய்து கொண்டிருந்தார்கள். அவ்வாறு பணிசெய்து கொண்டிருந்தவர்கள் ஜமீன் அரண்மனையில் உள்ள பெண்களிடம் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இச்செய்தி ஜமீந்தார் காதுக்கு எட்டவே, ஜமீந்தார் தம் அரண்மனையிலேயே தவறு செய்துவிட்டார்கள் என்று எண்ணி இவர்களை வெளியே அனுப்பினாலும் அசிங்கப்படுத்திவிடுவார்கள், அப்படியே விட்டுவிட்டாலும் மேலும் தவறு செய்வார்கள் என்று எண்ணி அரண்மனைக்குள்ளேயே பெரிய 'நிலவறை தோண்டி' (குழிதோண்டி) அதற்குள் உயிருடன் இறக்கி வைத்துப் பெரிய பாறாங்கல்லால் மூடி வைத்துவிட்டார். இப்பொழுதும் அரண்மனை 1/2 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. அந்த இடத்தை யாரும் பயன்படுத்த முடியாது. அவர்கள் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து மேலநீலிதநல்லூர் தேவர் சாதியைச் சேர்ந்தவர்கள் 'பிடிமண்' எடுத்துக்கொண்டு போய் கோவில்கட்டி வழிபட்டு வருகிறார்கள்.

அந்தக் கோவிலில் ஆடு, கோழி பலி செலுத்தியும் குழந்தைகளுக்கு வாரிசுதாரர்கள் அல்லது சந்ததியார்கள் மொட்டையடித்தும் நேர்ச்சை செய்து வருகிறார்கள். சாமியாடியும், குறி சொல்லியும் வழிபட்டு வருகிறார்கள்.

பண்டுவன் கோவில்

பண்டுவன் என்பவர், காலத்தைக் கணித்தறிந்து தன் உயிர் உடலைவிட்டுப் பிரியும் காலத்தை உணர்ந்து தனக்குத்தானே குழி தோண்டி மரணம் எய்தும் போது குழிக்குள் இறங்கி அமர்ந்து உயிரைவிட்டார். அப்படிப்பட்டவரை அவருடைய உறவினர்கள் கோவில்கட்டி வழிபட்டு வருகிறார்கள். ஆண்டுக்கொருமுறை

அனைவரும் சேர்ந்து பொங்கல் வைத்துப் படையல்கள் படைத்துச் சாமியாடியும், ஆடு, கோழி பலி செலுத்தியும் வணங்கி வருகிறார்கள். இக்கோவிலை வழிபடுபவர்களை இப்பொழுதும் பண்டுவன் கூட்டம் என்றே கூறுவார்கள். ஆண்டிற்கு ஒருமுறை அக்குடும்பத்தார்கள் மட்டும் நாள் குறித்து ஒன்றுகூடி பொங்கல் வைத்து, படையலிட்டு, சாமியாடி, ஆடு மற்றும் கோழிகளைப் பலியிட்டு வழிபடுகின்றனர்

உறங்காப்புலி மாடன்

உறங்காப்புலி மாடன் கோவில், தேவர் சமூகத்தில் 50 குடும்பங்களுக்கு மட்டும் சொந்தமானதாகும். இக்கோவிலை வழிபடுபவர்கள் 'பூரிக் கூட்டம்' என்று அழைக்கப்படுகின்றனர். ஆண்டிற்கு, இரண்டு முறை வழிபடுவார்கள்: சித்திரை, மாசி சிவராத்திரிக்கு மறுநாள் வணங்குவார்கள்.

அந்தக்கோவிலைச் சுற்றி விவசாயம் செய்யும் இடம் அதிகமாக உள்ளது. அதனைச்சுற்றி இருக்கின்ற கிணறுகளில் களவு, திருட்டு எதுவும் நடக்காது என்று கூறுவார்கள். அப்படி திருடினால் கண் தெரியாமல் ஆகிவிடும் என்று மக்களால் நம்பப்படுகிறது. காடுகளில் விளைந்த தானியங்களை அடித்துக் காற்றில் பொதிபோட்டிருந்தால் காவலுக்கு யாரும் போகமாட்டார்கள். அப்படி இருக்கும் போது, ஒரு நாள் திருடர்கள் களத்தில் போட்டிருந்த தானியங்களை அள்ளிக்கொண்டு செல்லுகொண்டிருந்தார்கள். செல்லும் வழியில் கண்தெரியாமல் விடியவிடிய மூட்டையைக் கட்டி வைத்துக்கொண்டு அப்படியே நின்றுவிட்டார்கள். அப்படி அந்தக் காவல் தெய்வம் உறங்காமல் புலிமாதிரி காப்பதால் அந்தத்தெய்வம் உறங்காப்புலி மாடன் எனப் பெயர் பெற்றது. திருடியவர்களை இக்குடும்பத்தினர் மன்னித்து விட்டதால் இத்தெய்வத்திற்குப் பயந்து காடுகளில் திருடு போவதில்லை. இக்கோவிலில் வேளார் பூசாரியும், சில புலவர்களும் பூசை செய்கின்றனர்.

வடிவு அம்மன் கோவில்

குருக்கள்பட்டி கிராமத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள இக்கோவில், 15 ஆண்டுகளுக்கு முன் அனைத்துச் சமூகத்தவராலும் ஒருங்கிணைந்து கட்டப்பட்டது

மாரியம்மன் கோவில்

நாடார் சமூகத்தைச் சேர்ந்த 30 குடும்பத்தினர் இக்கோவிலை வழிபட்டு வருகின்றனர். சித்திரை (மே) மாதத்தில் 8 நாட்கள் தொடர்ச்சியாகத் திருவிழா நடைபெறும். கரகாட்டம், வில்லுப்பாட்டு, ராஜாராணி ஆட்டம், ஆன்மீகச் சொற்பொழிவுகள், ஆடல் பாடல், பாட்டுக்கச்சேரி, பட்டிமன்றம் போன்றவை நடைபெறுகின்றன. அன்னதானம், தண்ணீர்ப்பந்தல், மோர்பந்தல், பானக்கரம் போன்ற நேர்த்திக்கடன்களும் வழங்கப்படுகின்றன.

குருக்கள்பட்டியின் வரலாற்றுச் சிறப்புகள்

ஜமீந்தார் வாழ்க்கை

குருக்கள்பட்டியில் ஆண் ஜமீந்தார்கள் வாழவில்லை; 'நாச்சியார்' என்ற அம்மையாரே வாரிசு இல்லாததால் ஆட்சி புரிந்துள்ளார். இவரை ஊத்துமலை ஜமீன் இருதலையமருதுபாண்டியனுக்குத் திருமணம் செய்ய முயன்றபோது மறுத்துவிட்டார். உடனே குருக்கள்பட்டி மக்கள் 'குருட்டுக்கம்பில்' தாலிகட்டி, 500 பேருடன் உரல் உள்ளிட்ட சீர் வரிசைகளைச் சுமந்து ஊத்துமலைக்குச் சென்ற வரலாற்றுச் செய்தி அறியப்படுகிறது.

ஆராய்ச்சிபட்டி, ஆயாள்பட்டி, மடத்துப்பட்டி, வெங்கடாசலபுரம்,

பெரும்பத்தூர், தடியம்பட்டி, நரிக்குடி, கருப்பனாத்து, பனவடலிச்சத்திரம், வன்னிக்கோனேந்தல், தேவர்குளம், ஊத்துமலை, குருக்கள்பட்டி, கிருஷ்ணாபுரம், மருதப்பபுரம், ரெட்டியாபட்டி, முத்துக்கிருஷ்ணாபுரம், ஜமீன்இலந்தைக்குளம் அஜமீன் கட்டுப்பாட்டில் இருந்த 18 கிராமங்கள்: ஆகும்.

வீரமாமுனிவர்

இயற்பெயர் 'பெஸ்கி' கொண்ட வீரமாமுனிவர் ஊர் ஊராகச் சென்று கிறித்தவ மதத்தைப் பரப்பியபோது குருக்கள்பட்டி கிறித்தவக் கோவிலில் தங்கியிருந்தார். பிற சமயத்தவர்களின் ஒழுங்கைக் கண்டு தாமும் காவி உடையணிந்து தாடியுடன் இந்து துறவி போல் மாறித் தமிழில் வீரமாமுனிவர் எனப் பெயர் வைத்துக்கொண்டு பணியாற்றினார். நிலங்களை வாங்கி கிணறு தோண்டி வேளாண்மை செய்தார். தேவர் சமூகத்தினர் மதம் மாறினால் சலுகைகள் பெறலாம் என எண்ணிப் பேசியபோது, இறைவனுக்குச் சொந்தமானதை யாரும் அனுபவிக்கக் கூடாது என மறுத்ததால் அவரை ஊரை விட்டுத் துரத்திவிட்டனர். அவர் இருந்ததற்கான ஆதாரமாக R.C. கத்தோலிக்க நிர்வாகக் கட்டடமும், இடி கிணறும் அங்கு உள்ளன.

எஸ்தர் அம்மையார்

குருக்கள்பட்டி கிராமத்தில் கோனார் சமூகத்தைச் சேர்ந்த பொன்னையா - சண்முகத்தாய் தம்பதியருக்கு இரட்டைக் குழந்தைகளாக பிறந்தவர்களில் ஒருவர் இராமாத்தாள் (எஸ்தர்). வறுமையால் சங்கரன்கோவில் வடமலாபுரம் 'பிரதரன் மிஷின்' ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டு, டாக்டர் ஆலிவர் மற்றும் லண்டன் செவிலியர் மெக்ரேக்கர் உதவியால் படித்தார். C.S.I நிர்வாகம் மூலம் மதுரை மிஷினரி கல்லூரியில் செவிலியர் படிப்பு முடித்துக் கிறித்தவ மதத்திற்கு மாறி எஸ்தர் எனப் பெயர் பெற்றார். பின்னர் 1966-இல் கிராம நிர்வாக அதிகாரி சண்முகவாத்தேவர், ஊராட்சித் தலைவர் முத்துப்பாண்டியன் மற்றும் மெக்ரேக்கர் உதவியுடன் சொந்தச் செலவில் 34 சென்ட் இடம் வாங்கி மருத்துவமனை கட்டினர். எஸ்தர் அம்மையார் 5000-க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்குப் பிரசவம் பார்த்துள்ளார்.

முடிவுரை

குருக்கள்பட்டி கிராமச் சிறுதெய்வ வழிபாடு என்பது மக்களின் அச்சம், மரியாதை, முன்னோர்களின் நினைவேந்தல், காவல் தேவை மற்றும் சமூக ஒற்றுமையின் வெளிப்பாடாகத் திகழ்கிறது. சாதியக் கட்டமைப்புகள் நிலவிய காலத்திலும், வழிபாட்டின் வழியாகக் கிராமியக் கலைகளையும் கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாத்த நாட்டார் பண்பாட்டு வரலாற்றை இக்கட்டுரை உறுதிப்படுத்துகிறது.

அடிக்குறிப்புகள்

1. கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, ப-439
2. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப-123.
3. மேலது, பக்.123
4. கலைக்களஞ்சியம், 5ஆவது, ப-451.
5. ச.அகத்தியலிங்கம் (ப.ஆ), ஆய்வுக்கோவை (தொகுதி.2) ப.641.
6. வே.சண்முகை, வயது 58, விவசாயம், குருக்கள்பட்டி.
7. செ.தங்கவேலு, வயது 45, விவசாயம், குருக்கள்பட்டி.

பார்வை நூல்கள்

1. கிரியாவின் தற்காலத்தமிழகராதி, 48 எண் 4,24, கிழக்கு தெரு, சென்னை,1972.
2. பரமசிவன்.தொ,பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2001.
3. கலைக்களஞ்சியம்,தொகுதி-5,தமிழ்வளர்ச்சிக்கழகம், சென்னை,1959.
4. அகத்தியலிங்கம் (ப.ஆ.), 27ஆம் கருத்தரங்கு, ஆய்வுக்கோவை, இந்தியப்பல்கலைக்கழகம்,தமிழியல்துறை,புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 1998.

© 2026 முனைவர் .மேனகா கு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 47–51
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தென்மாவட்ட படைப்பாளர்களின் படைப்புகளில் தாது வருட பஞ்சம்

The Famine of the Dhathu Year in the Works of Writers from the Southern Districts

சிவலிங்கம் இரா*

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - *600005, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சிவலிங்கம் இரா — sivaphd23@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00021	

ஆய்வுச்சுருக்கம்

தென்மாவட்டப்பகுதிகள் பழமையான பாண்டிநாட்டுப் பகுதியாக போற்றப்படுவனவாகும். அவற்றில் நெல்லை வட்டாரப்பகுதிகளில் பழங்காலந்தொட்டே இலக்கிய ஆளுமைகள் தோன்றி தமிழுக்கு தொண்டாற்றி வந்துள்ளனர். அவ்வகையில் தமிழக வரலாற்று எழுதியலில் மறுக்க முடியாத நிலப்பகுதியாகவும் அமைந்த இப்பகுதி தென்னிந்திய நிலப்பகுதி முழுமையும் நிலவியிருந்த தாது வருட பஞ்சம் பற்றிய பாடுபொருளைக் கொண்டு இலக்கியம் படைத்த புகழுக்கும் உரியதாகும். அவ்வகையில் தாது வருடப்பஞ்சத்தை சுட்டும் சிற்றிலக்கியங்களான பஞ்சலட்சண திருமுக விலாசம், காந்திமதியம்மை கலித்துறை அந்தாதி எனும் இரு நூல்களில் அறியலாகும் வறட்சிப்பற்றிய குறிப்புகளை இவ்வாய்வு விளக்குகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: தாது வருட பஞ்சம்; காந்திமதியம்மை கலித்துறை அந்தாதி; பஞ்சலட்சண திருமுக விலாசம்; புறநானூறு; பஞ்ச அறிக்கை; கரிசல் வட்டாரம்; நாஞ்சில் வட்டாரம்.

Abstract

The southern district regions are revered as the ancient regions of Pandinadu. In these regions, literary figures have emerged from ancient times in the Nellai region and have rendered service to Tamil. In this regard, this region, which has also been an undeniable geographical area in the writing of Tamil Nadu's history, is also renowned for having produced literature on the subject of the Dhathu Year famine that prevailed throughout the South Indian region. In this manner, this study explains the references to drought found in the two minor literary works, Panchalakshana Thirumuga Vilasam and Gandhimathiyammai Kalithurai Anthathi, which point to the Dhathu Year famine.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: இரா, சி. (2026). தென்மாவட்ட படைப்பாளர்களின் படைப்புகளில் தாது வருட பஞ்சம். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 47–51. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8415

முன்னுரை

தமிழகத்தின் தென் மாவட்டங்கள் சங்க காலம் முதல் தற்காலம் வரை பல புலவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. வள்ளுவர், பாரதி, புதுமைப்பித்தன், சிதம்பர ரகுநாதன் வரை இன்றளவும் பல புலவர்களையும் எழுத்தாளர்களையும் அறிமுகப்படுத்தியுள்ள நிலப்பகுதி இப்பாண்டிய தேசமே ஆகும். கரிசல் மற்றும் நாஞ்சில் நாட்டு வட்டார பகுதிகளை உள்ளடக்கிய தென்மாவட்ட இலக்கிய வட்டாரங்கள் தென்மாவட்ட இலக்கியப் புகழுக்கும் வளர்ச்சிக்கும் இலக்கிய பரம்பரை உருவாக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. நவீன தமிழ் இலக்கிய சூழலில் தம் ஆளுமையைச் செலுத்திய பெரும்பான்மையான இலக்கியவாதிகள் பெரும்பாலும் கரிசல் மற்றும் நாஞ்சில் வட்டார இலக்கியவாதிகளாகவே இருந்தனர். மகாகவி பாரதியும், சிறுகதை மன்னரான புதுமைப்பித்தனும், முதல் சிறுகதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதெமி விருதுப்பெற்ற கு. அழகிரிசாமியும், வட்டார இலக்கியங்களில் மறுக்கவொன்னாத நிலையில் இருக்கும் கி.ராஜநாராயணனும், நாஞ்சில் நாடனும், ஆய்வுலகில் தனக்கென்று தனித்த முத்திரைப்பதித்த தொ.மு.சி. ரகுநாதன் அவர்களும் தென்மாவட்ட படைப்பாளர்களின் பட்டியலில் முன்னிலை வகிக்கின்றனர். இவ்விரு வட்டார இலக்கியங்களில் பண்பாட்டுப்பதிவுகளையும் நாகரிக வளர்ச்சியையும் தம் படைப்புகளில் பதிவுசெய்துள்ளனர். அவ்வாறான பதிவுகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பன்னிரண்டு ஆண்டுகாலம் தொடர்த்து பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கிய தாது வருட பஞ்சம் பற்றியக் குறிப்புகளைப் பெரும்பாலும் தங்கள் படைப்புகளில் பதிவு செய்தாலும், தனிப்பட்ட பஞ்ச கருப்பொருளைக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கியங்கள் குறைவாகவே காணப்படுகிறது. அவ்வகையில் வில்லியப்ப பிள்ளை பாடிய பஞ்ச இலட்சண திருமுக விலாசமும், அழகிய சொக்கநாத பிள்ளை இயற்றிய காந்திமதியம்மை கலித்துறை அந்தாதியும் காட்டும் தென்னாட்டு தாதுவருடப்பஞ்சத்தை பற்றி இலக்கிய பதிவுகளைக்கொண்டு நெல்லை வட்டார தாது வருடப் பஞ்சத்தைப்பற்றியக் குறிப்புகளை இங்கு காண்போம்.

தாது வருட பஞ்சம்

சங்க காலத்தில் குறுகிய வேனிற் பருவகாலத்தில் தோன்றும் பாலைப்படிமக் காட்சிகளிலிருந்து நானிலமும் பாலையாக தன் வளம் குன்றி மாறுபாடடையும் காட்சிகளைக் காண முடிகின்றன. ஆனால் நீண்ட கால வறட்சியின் தோற்றம் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. சங்கப் பாடல்களில் பெரும்பானமையானவை பாலைப் பாடல்களே ஆகும். பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படை தவிர்த்த ஏனைய நான்கு ஆற்றுபடை நூல்களும் ஆற்றுப்படுத்தும் கூத்தன், பாணன் மற்றும் பொருநனின் வறுமை நிலையினை குறிப்பிடுகிறது. அவ்வகையான வறட்சி வறுமைக்கான காரணத்தைப் புறநானூற்று பாடல் ஒன்று

> **“வெள்ளி தன்புலத்து உறைய விளைவயல்**
>
> **பள்ளம் வாடிய பயன்இல் காலை”** (புறம்.388:1-2)

என்று பண்ணன் எனும் வேளிடம் பரிசில் கேட்கப் புகும் பாணன், சுக்கிரன் எனும் வெள்ளி கோளின் தோற்றத்தால் உண்டான நீண்டகால வறட்சியைப் போக்கும் பொருட்டு நல்ல விளைச்சலுடைய நெல் வயல்களைக் கேட்பதாக அமைந்த மேற்கண்ட பாடாண் திணைப்பாடலில் சுட்டப்படும் வெள்ளி எனும் கோள் நிலை

நீண்ட காலத்திற்கு மழைக்குன்றி நீர்நிலை வற்றி வேளாண் தொழில் பாதிப்படையும் செய்தியைப் பதிவு செய்கிறது. சிலம்பில் கண்ணகி மதுரையை எறித்தபின் நெடுங்காலம் மழையின்றி மதுரை வறட்சி எய்திய நிலையையும், நாலடியார் பாடிய சமண முனிவர்களும் நெடுநீண்ட பஞ்சத்தின் காரணத்தினாலே பாண்டிநாடு புகுந்தது பற்றியும் இலக்கிய தோற்றம் பற்றிய கதையாடல்களின் வழியும் அறிய முடிகிறது.

சிவகங்கை மாவட்ட பிரமனூரில் மிராசுக் கணக்கராக பணியாற்றிய வில்லியப்ப பிள்ளை பாடிய பஞ்ச இலட்சண திருமுக விலாசமும், திருநெல்வேலி மாவட்ட தச்சநல்லூரில் பிறந்த முன்சீப் கோர்ட் எழுத்தராக பணிசெய்த அழகிய சொக்கநாத பிள்ளை இயற்றிய காந்திமதியம்மை கலித்துறை அந்தாதி ஆகிய இரு நூல்களும் தமிழ் நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய தாது வருட பஞ்சத்தை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட இரு பிரபந்தங்கள் ஆகும். ஆங்கிலேயர்களின் ஆட்சியில் தோன்றிய இக்கொடும் பஞ்சத்திற்கு காரணமாக கிரகங்களின் நிலையையும் வெள்ளி எனும் சுக்கிரன் கோளின் கிரகப்பார்வையையும் காரணங்களாக கொள்வோர் ஒருபுறமிருக்க, ஆங்கிலேயர்களின் முறையற்ற ஆட்சியும் மிகப்பெரிய காரணமாக அமையும் பான்மையை தொ. மு. சிதம்பர இரகுநாதன் அவர்கள் தாம் பதிப்பித்த காந்திமதியம்மை கலித்துறை அந்தாதியின் முன்னுரையில் **'இந்தியாவை நாகரிகப் படுத்துவதாகச் சொல்லி வந்த ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டு கிராமங்களை அபிவிருத்தி செய்யவோ, பாசன வசதிகளைச் செய்து தரவோ போதிய அக்கறை காட்டவில்லை. மாறாக, அவர்கள் இந்திய விவசாயிகளை மேலும் மேலும் ஓட்டாண்டிகளாக்குவதிலேயே கவனம் செலுத்தினார்கள்'** (ப.3) என்கிறார். அவ்வாறான ஆட்சிமுறையில் நடந்த செயல்களாக கள்ளச்சந்தை, கொள்ளை லாப வியாபரங்களும், வரிச்சுமையும் நிலவி வந்ததாக சுட்டுகிறார். அக்காலப்பகுதியை 1876 முதல் 1890 வரையிலான இடைவெளியை பஞ்ச காலமாக சுட்டுகிறார் தோ.மு.சி அவர்கள் மழையின்றி பஞ்சம் தலைவிரித்தாடிய காலத்தையும், மீண்டும் மழைப்பெய்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிய காலத்தையும் அப்போதைய ஆங்கிலேயர்களின் வரிச்சுமை ஆகியவற்றையும் கொண்டு தம் ஆய்வு முன்னுரையில் சுட்டுகிறார். ஆனால் பஞ்ச காலம் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் நீடித்திருந்த செய்தியை அழகிய சொக்கநாத பிள்ளை அவர்கள்

> **"அரசற்ற ஆக்கினை உண்டோ? இது முதலாக மழை**
>
> **வருஷித்துப் பூமிக் செழிக்கச் செய்து, அம்பல வாணரிடம்**
>
> **பரிசுற்ற காந்திமதி அம்மையே! இந்த பன்னிரண்டு**
>
> **வருஷத்துப் பஞ்சத்தை நீக்கி, அன்பாய் எம்மை வாழ்விப்பையே"** (காந்திமதி. 90)

என்று தாது வருட பஞ்சம் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்த செய்தியை தம் நூலில் பதிவு செய்துள்ளார். பஞ்சத்தால் அடைந்த துயர்களை வரிசைப்படுத்தி நெல்லை காந்திமதியம்மையிடம் முறையிட்டு வேண்டிக்கோள்வதுபோல அமைந்த இவ்வந்தாதி நூலானது நூறு பாடல்களைக் கொண்டது முதலில் இடம்பெற்ற தொண்ணூறு பாடல்களும் பஞ்சத்தைப் பற்றிய முறையீடுகளையும் இறுதி பத்துப் பாடல் அம்மைக்கு நன்றி சொல்லும் விதமாகவும் அமைந்துள்ளது. அப்பஞ்ச காலக்கட்டத்தில் நெல்லைப் பகுதி மட்டுமல்லாது மெட்ராஸ் மாகாணமாக கருதப்பட்ட தென்னிந்தியா முழுவதுமே இப்பஞ்சத்தின் கோரப்பிடிக்குள்

சிக்கியிருந்த செய்திகள் பற்றி ஆங்கிலேய பஞ்ச கமிஷன் அறிக்கைகள் அறிவுறுத்துகின்றன. அவ்வாறான அறிக்கைகளை வில்ல்லியம் டிக்பி எனும் ஆங்கிலேய பத்திரிகையாசிரியர் தாம் எழுதிய 1877 தாது வருடப்பஞ்சம் எனும் நூலில் **"திருநெல்வேலியின் அருகே பஞ்சத்தின் பாதிப்பு குறைவாக இருப்பதாக் கருதப்பட்ட இடங்களில் அந்த மாவட்ட ஆட்சியரான திரு. மேக்குஹே முப்பது கிராமங்களைச் சென்று ஆய்வு செய்ததில், அங்கிருக்கும் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி உணவிற்காக அலைய ஆரம்பித்துவிட்டதாகக் கூறுகிறார். அருகில் இருக்கும் காடுகளில் கிழங்குகளைத் தோண்டுவதன் மூலம் வாழ்ந்ததாகத் தேரிவிக்கிறார்.**

திரு. மேக்குஹே தனது இந்தப் பயணத்தில் நூறு பேருக்கும் மேலான மக்கள் இதுபோன்று உடல் நலத்திற்கு உகந்தது இல்லாத கிழங்குகளைத் தோண்டித் தின்பதைப் பார்த்ததாகப் பதிவு செய்கிறார். எறும்புப் புற்றுகளில் இருந்து, ஆறு முதல் எட்டு மணி நேரம் அலைந்து சேகரிக்கப்பட்ட ஒரு கையளவு தானியத்துடன் திரும்பிய பத்து பெண்களைத் தான் பார்த்ததையும் பதிவு செய்கிறார். பஞ்சத்தின் பாதிப்பு ஆரம்பித்த நாட்களிலேயே கிழக்குலக மக்கள் உணவை பாதியாகக் குறைத்துக் கொள்கின்றனர். அதாவது ஒரு வெளை உணவு மட்டுமே தினமும் அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு முறை உண்ணுகின்றனர். ஜனவரி 1877 லேயே திரு. மேக்குஹே, கிராமங்களில் இது போன்ற வாழ்ந்தவர்களைப் பார்த்ததாகக் கூறுகிறார்"(1877- தாது வருட பஞ்சம், ப. 26-27) இவ்வாறாக பஞ்ச கமிசன் அறிக்கைகள் தயாரிக்கும் பொழுது நெல்லை மாவட்டத்தின் பஞ்ச காட்சியையும் பதுவு செய்கின்றனர்.

மேற்கூறப்பட்ட புறநானூற்றுப்பாடல் கூறும் வெள்ளி கோளின் நிலையை வில்லியப்ப பிள்ளை தம் பஞ்சலட்சண திருமுக விலாசத்தில்

"..... .... **..... சீருதவு** (பஞ்ச.147)

மாதித்தனே முதலா யற்புத நவகிரகங்கள்

வாதித் தொன்றோடொன்று மாறுபட்டே – யாதித்தன் (பஞ்ச.148)

தொன்னீர்மை யாமழைக்கோட் சுக்ரனைப் பின்னாகவிட்டு

முன்னேறிச் செல்லு முறியாலும்" (பஞ்ச.149) - என்று

பஞ்ச லட்சண திருமுக விலாசக் கண்ணிகளில் குறிப்பிடுகிறார்.

இவ்விரு நூல்களும் தென்மாவட்ட மக்கள் தாது பஞ்சத்தால் உற்ற கொடுமைகளையும் ஆங்கிலேய ஆட்சுக்கொடுமை, வியாபாரிகள் செய்த மோசடிகள் என பலவும் பேசப்பட்டுள்ளது. சுமார் ஐம்பது இலட்ச மக்களின் உயிர்களைப் பலிக்கொண்ட இத்தாதுவருடத்தில் கஞ்சிதொட்டிகள் திறக்கப்பட்டன. அக்கஞ்சித்தொட்டிகளைத் திறந்து கிராமங்களில் இருந்த கம்மாய், ஏரி மற்றும் குளங்களைத் தூர்வாறும் பல பணிகளையும் ஆங்கிலேய அரசு மேற்கொண்டது. மக்கள் கொடும்பாவி சுமந்து பஞ்சத்தைப் போக்க வேண்டி இழுத்தனர். மழைக்கஞ்சி சுமந்து வழிப்பாடுகளை நடத்தினர். இன்றளவும் தமிழகத்தின் பல கிராமபுறங்களில் மழைக்கான இவ்வழிபாடுகள் நடப்பதைக் காணமுடிகின்றது. ஆனால் தென்மாவட்டங்களில் நிலவிய பஞ்சத்தினை பதிவு செய்யும் இலக்கியங்களாக மேற்கண்ட பஞ்சலட்சண திருமுக விலாசமும், காந்திமதியம்மை கலித்துறை அந்தாதியும் ஆகிய இரண்டும் காணப்படுகிறது. கி.ராவும் தனது கோபல்ல கிராமம் புதினத்தில் விட்டில் பூச்சி படையெடுப்பையும் அதனால் ஏற்பட்ட பஞ்சத்தையும்

பதிவிட்டுள்ளார்.

முடிவுரை

தமிழகம் முழுமையும் காலந்தோறும் பலவகையான பஞ்சங்கள் தோன்றி பல புலம்பெயர்வுகளும் காணப்பட்டுள்ளன. ஆனால் அவற்றுக்கான வரலாற்று ஆதாரங்கள் மிகவும் குறைவே. இவ்வகையான வறட்சி மற்றும் புலம்பெயர்வுக் குறிப்புகளே வறட்சிக்கு மேலாண்மைக் காரணிகளையும், புலம்பெயர்வால் கைவிடப்பட்ட நிலப்பகுதிகளை பற்றிய குறிப்பும் அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய அகழாய்வுப் பணிக்கான தொடக்கமாகவும் அமைகின்றன. அவ்வகையில் தென்னிந்தியா முழுதும் இருந்த தாது வருட பஞ்சத்தைப் பற்றிய குறிப்புகளை இலக்கியக் கருவாகக்கொண்டுப் பாடப்பட்ட மேற்கண்ட நூல்கள் பல கோணங்களில் ஆய்வு செய்யப்பட வேண்டியவையாகும்.

துணைநூற்பட்டியல்

1. அழகிய சொக்கநாத பிள்ளை, திருநெல்வேலி காந்திமதியம்மை பேரில் கலித்துறை அந்தாதி, வெ.ப. சு. தமிழ்க்கலை ஆய்வு மையம், ம.தி.தா. இந்துக்கல்லூரி திருநெல்வேலி -10, 1990.
2. உ.வே.சா., புறநானூறு, உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், 2, அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை -600090. 2023
3. வில்லியப்ப பிள்ளை, பஞ்சலட்சண திருமுக விலாசம், ஸ்ரீ ராமசந்திர விலாசம் பிரஸ், குருசாமிக்கோனார் தெரு, மதுரை வடக்கு மாசி வீதி, 1932.
4. வில்லியம் டிக்பி,1877- தாது வருடப் பஞ்சம், கிழக்குப்பதிப்பகம், 2022.

© 2026 சிவலிங்கம் இரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 52–55
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

Domestic Space as a Site of Cultural Preservation in Padma Viswanathan's The Toss of a Lemon

Dr .Swathy R*

Guest Lecturer PG and Research Department of English Rani Anna Government College for Women, India

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: Dr .Swathy R — swatradhak@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00022

Abstract / ஆய்வுச்சுருக்கம்

Padma Viswanathan's The Toss of a Lemon (2008) presents the household as an important site of cultural preservation, where traditions, memories, values, and social practices are transmitted across generations. Through the life of Sivakami, the novel portrays domestic space not merely as a private setting but as a living cultural environment shaped by food, ritual, clothing, marriage, widowhood, caste practices, and family relationships. Everyday domestic activities become ways of learning and preserving cultural knowledge. The kitchen, in particular, becomes a space where food practices and social customs are passed from one generation to another, while rituals and clothing communicate religious and social identity. Marriage and family relationships further reinforce cultural values and community structures. Viswanathan does not present tradition as completely fixed. Sivakami's adherence to inherited practices exists alongside her gradual responses to social change, especially through her son Vairum's education and his questioning of established beliefs. The domestic sphere therefore becomes a space where tradition is preserved, negotiated, and transformed. This paper argues that the household functions as a living cultural archive in The Toss of a Lemon, preserving collective memory through ordinary practices while allowing new ideas to enter family life.

Keywords / திறவுச்சொற்கள்: Domestic space; cultural preservation; cultural memory; tradition; caste; and gender.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: R, D. . (2026). Domestic Space as a Site of Cultural Preservation in Padma Viswanathan's The Toss of a Lemon. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 52–55. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8417

Domestic Space as a Site of Cultural Preservation in Padma Viswanathan's *The Toss of a Lemon*

Padma Viswanathan's *The Toss of a Lemon* (2008) follows the life of Sivakami, a Tamil Brahmin woman whose life spans a period of significant social and cultural change in South India. Born in 1896, Sivakami enters marriage at the age of ten when Hanumarathnam, a village healer and astrologer,

approaches her parents with a proposal. His horoscope predicts that he will die during his tenth year of marriage, yet the marriage takes place because of his reputation and the standing of his Brahmin family. After Hanumarathnam's death, Sivakami becomes a young widow and assumes responsibility for her children and household. Through her experiences, Viswanathan presents domestic space as more than a private setting. The household becomes a place where cultural practices are preserved through everyday life, while inherited traditions can also be questioned and transformed. Food, ritual, astrology, widowhood, education, medicine, and family relationships demonstrate that culture is transmitted within the home, but that each generation can reinterpret what it inherits.

Sivakami acquires much of her cultural knowledge through domestic life. Her understanding of food, ritual, caste, marriage, gender, and family responsibility develops through participation in everyday household practices. Rather than learning culture only through formal instruction, she learns by observing and repeating what previous generations have practiced. This process can be connected to Pierre Bourdieu's concept of habitus, in which cultural practices become embedded through repeated everyday actions. Cooking, observing rituals, maintaining relationships, and following expectations concerning caste and gender all contribute to Sivakami's cultural identity. The household therefore functions as an informal space of cultural education where traditions become ordinary and are passed from one generation to another.

Food provides an important example of this cultural transmission. In the novel, cooking and eating are connected with caste, purity, ritual, and family identity. The kitchen becomes a cultural archive because methods of preparation, restrictions, and ideas about purity are preserved through repeated practice. Women play a central role in this process because cooking and household maintenance are traditionally associated with their responsibilities. At the same time, these practices can reproduce social divisions. Food restrictions may reinforce caste distinctions, while domestic expectations reinforce gender roles. Viswanathan therefore shows that preserving culture can also mean preserving the social hierarchies associated with it.

Ritual and astrology similarly preserve inherited cultural knowledge. Hanumarathnam's identity as a healer and astrologer makes astrology an important part of family life. Birth, marriage, and death are interpreted through horoscopes and ritual practices. Through these traditions, the household preserves a worldview inherited from previous generations. The same household also becomes a place where these beliefs are challenged. Vairum eventually rejects his father's astrological worldview, declaring, "Horoscopes are nothing. Less than nothing. Ashes of something long dead" (Viswanathan 213). His rejection is significant because he first learns astrology within the family before questioning it. The home therefore becomes both a space of cultural preservation and cultural transformation.

Sivakami's experience of widowhood further demonstrates how culture is expressed through the body. After Hanumarathnam's death, she shaves her head and wears a white sari associated with Brahmin widowhood. Her appearance and behaviour are transformed according to social expectations. These practices demonstrate that culture is not simply a matter of belief; it is also expressed through clothing, appearance, and everyday behaviour. At the same time, widowhood changes Sivakami's relationship with the household. After returning to her natal family, she realizes that her brothers may not make decisions in the best interests of her children. She therefore returns to her marital home and assumes responsibility for raising them. Domestic knowledge, although shaped by restrictive traditions, gives her the ability to manage her family and exercise a degree of authority.

The relationship between Sivakami and Vairum demonstrates most clearly how the household

becomes a site of transformation. Although Sivakami remains deeply connected to traditional beliefs, she chooses to provide Vairum with a secular education. Her decision shows that cultural preservation does not necessarily require rejection of modernity. She attempts to maintain her family's cultural identity while preparing her son for a changing world. Vairum's education eventually contributed to his rejection of astrology and caste identity. His changing worldview creates distance between him and Sivakami, yet it develops from his experience of the traditional household. He can question inherited beliefs because he has first encountered and understood them. Sivakami therefore becomes both a transmitter of tradition and an agent of change.

The episode involving Thangam's difficult childbirth provides another example of traditional and modern knowledge meeting within the household. Sivakami initially relies on established women's knowledge and is reluctant to involve a doctor. She observes, "No one in her family has ever been seen by a doctor. She knows there are women doctors for women patients, but it's too late to get one" (Viswanathan 424). The situation reveals the gradual arrival of modern medicine into a household governed by older practices. Modern medical knowledge does not immediately replace traditional knowledge; instead, the family must negotiate between the two. The household becomes the point where wider social changes in medicine and education enter everydayum calls her "Amma," Sivakami responds despite the restrictions associated with widowhood.

Sivakami's relationship with Vairum also shows how personal experience can challenge cultural restrictions. When Vairum calls her "Amma," Sivakami responds despite the restrictions associated with widowhood. Viswanathan writes that she steps outside "because she doesn't want to lose her son the way she lost her husband: without a word" (611). This moment demonstrates that inherited practices do not always retain the same authority throughout an individual's life. Sivakami has followed the restrictions of widowhood for years, yet her relationship with her son causes her to reconsider them. Her decision is not simply a rejection of tradition; it shows how personal experience can alter the meaning of inherited cultural practices.

In *The Toss of a Lemon*, domestic space therefore functions as both a cultural archive and a site of transformation. Through food, ritual, astrology, widowhood, education, medicine, and family relationships, cultural knowledge is preserved and transmitted between generations. At the same time, the household provides opportunities to question and reinterpret inherited traditions. Sivakami is shaped by tradition, but she also makes choices that create possibilities for change. Viswanathan presents the home not as a space isolated from social change but as the place where cultural change is experienced most intimately. Culture survives not because it remains unchanged, but because each generation practices, negotiates, and transforms what it inherits.

Works Cited

Boas, Franz. "The Growth of Indian Mythologies: A Study Based Upon the Growth of the Mythologies of the North Pacific Coast". *Journal of American Folklore*, 1896

Bourdieu, Pierre. *The Logic of Practice*. Translated by Richard Nice, Stanford UP, 1990.

Shaw, Susan M., and Janet Lee. *Women's Voices, Feminist Visions: Classic and Contemporary Readings*. 6th ed., McGraw-Hill, 2012.

Viswanathan, Padma. *The Toss of a Lemon*. Houghton Mifflin Harcourt, 2008.

© 2026 Dr .Swathy R. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use,

distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 56–60
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தென்தமிழகக் கிறித்தவ மதமாற்றமும் சாதியும்

அனுஷா மா[1,*], முனைவர் .ஜென்ஸிஸ் குமார்., மி.[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர்,பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.கேரளம் *695034., India*
[2] இணைப்பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.கேரளம் *695034., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: அனுஷா மா — anushaaziphabari@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00023	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தென்னிந்தியாவில் கிறித்தவ மதத்தின் வருகை குறிப்பிடத்தக்கது. வணிக நோக்கோடு உள் நுழைந்த காலனிய ஆட்சியாளர்கள் பின்னர் மதபரப்புதலையும் மேற்கொண்டனர்.சமத்துவத்தைப் போதித்த கிறித்தவத்தின் செயல்பாடுகள் இதுவரை சமத்துவத்தைக் கண்டிராத அடித்தள மக்களை ஈர்த்தது. இதனால் பெரும்பாலான விளிம்புநிலை மக்கள் கிறித்தவத்திற்கு மதம் மாறினர். ஆதிக்க வகுப்பினரில் பெரும்பான்மையினர் சமூக, பொருளாதார உயர்வுக்காக மதமாற்றத்தை மேற்கொண்டனர். இங்கு நிலவியிருந்த சாதியச் சமூகக் கட்டமைப்பில் ஊறியிருந்த ஆதிக்க வகுப்பினரால் அடித்தள மக்கள் தங்களுக்குச் சரிசமமாக கிறத்தவத்தில் நடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் விளைவாக, கிறித்தவத்தில் சாதிய வேறுபாடுகள் தோன்றின.ஒரு பங்கில் ஒரே பிரிவைச் சார்ந்தவர்கள் இருக்கும்போது எவ்விதச் சிக்கலும் ஏற்படுவதில்லை. மாறாக, ஒன்றுக்கு மேற்பட்ட சாதியினரைச் சார்ந்தவர்கள் இருக்கையில் அங்கு சாதிய ஏற்றத்தாழ்வுகள் உருவாகின்றன. ஆலயத்திற்குள் இருவகுப்பினரும் ஒன்றாக அமர்வதை கிறித்தவம் ஏற்றுக்கொண்டாலும்,சாதியச் சிந்தனையுடைய மேல்தட்டு வகுப்பினரால் அதை ஏற்க முடியவில்லை. இவ்வாறு மதமாற்றத்திற்குப் பின்பும் சாதி அடையாளங்களும் அதன் அடிப்படையிலான வேறுபாடுகளும் பல்வேறு வடிவங்களில் கிறித்தவத்தில் தொடர்ந்ததை தொடர்வதை இக்கட்டுரை ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: மதமாற்றம்; கிறித்தவம்; சாதி; கத்தோலிக்கம்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மா, அ., & மி., மு. . கு. (2026). தென்தமிழகக் கிறித்தவ மதமாற்றமும் சாதியும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 56–60. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8419

முன்னுரை

தென்னிந்தியச் சமூக வரலாற்றில் கிறித்தவ மதத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது.புனித தோமாவின் வருகையினால் கிறித்தவம் வந்ததாகக் கூறப்படுகிறது எனினும், இடைக்காலத்தில் போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்ற

ஆட்சியாளர்களின் ஈடுபாட்டால் கிறித்தவ மதம் இந்தியாவின் பெரும்பகுதிகளில் வேரூன்றியது. வணிக நோக்கோடு உள்நுழைந்த காலனிய ஆட்சியாளர்கள் பின்னர் கிறித்தவ மதப்பரப்புதலையும் மேற்கொண்டனர்.கிறித்தவத்தின் வருகை தென்னிந்தியச் சமூகத்தில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தியது.இந்நிலையில் கிறித்தவத்தின் வருகையும், மதமாற்றமும் சாதிய அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியதா ? என்பதை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

மதமாற்றக் காரணிகள்

போர்ச்சுக்கீசியர் வருகையினால் பதினைந்தாம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் கிறித்தவம் தென்னகத்தில் நுழைந்தது. தமிழகத்தை பொறுத்தமட்டில் பரதவர்களை அரேபியர்களிடமிருந்து போர்ச்சுக்கீசியர்கள் காப்பாற்றியதன் பொருட்டு பரதவர்கள் குழுமமாக கிறித்தவத்திற்கு மதம் மாறினார். மேலும் போர்ச்சுக்கீசிய சேசு சபையினர் தமிழகக் கடற்கரைப் பட்டினங்களுக்குப் பின்புலமாக இருந்த கிராமங்களுக்குச் சென்று அங்கு வாழ்ந்திருந்த மக்களை அணுகி கிறித்தவத்தைப் போதித்து மதமாற்றம் செய்தனர்.

பொருளாதார மற்றும் சமூக உயர்வுக்காகவுமே பெரும்பாலான ஆதிக்க வகுப்பினர் மதம் மாறினர். சாதியிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்ட உயர்சாதியினரும் வேறு வழியில்லாமல் இஸ்லாம் அல்லது கிறித்தவ மதத்தை தழுவினர்.கோவாவில் நடந்த மதமாற்ற நிகழ்ச்சியைப் பற்றி பாக்ஸர் எனும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுகையில், திருவிழா ஊர்வலத்தின் போது சேசு சபையினர் அடிமைகளை வைத்து கோவானிய இந்துவைப் பிடித்து உதட்டில் மாட்டுக்கறியைத் தேய்த்து மதமாற்றம் செய்ததாகக் குறிப்பிடுகிறார் (ஆ.சிவசுப்பிரமணியன்:2025).இவ்வணுகுமுறை, கட்டாய மதமாற்றம் நிலவியிருந்ததைப் புலப்படுத்துகிறது.

ஆளும் வர்க்கத்தினரை ஈர்க்க நினைத்த கிறித்தவ மதபோதகர்கள் ,ஒவ்வொருப் பிரிவாகப் பிரிந்து மதமாற்றச் செயல்களில் ஈடுபட்டனர். சேசு சபைத் துறவியான இராபர்ட்.டி.நோபிலி காவி சந்நியாசி வேடமணிந்து, புலால் உணவைத் தவிர்த்து பிராமணர்களை மதமாற்றம் செய்யும் முயற்சியை மேற்கொண்டார். வெள்ளாளர் வகுப்பிலிருந்து பண்டாரச் சாமிகளை உருவாக்கி மற்ற சாதியினரையும் மதமாறச் செய்யும் செயல்களில் ஈடுபட வைத்தார்.(ஆ.சிவசுப்பிரமணியன்:2025).

தென்னிந்தியச் சூழலில் நிலவியிருந்த பல்வேறு பண்பாட்டு அடையாள ஒடுக்குமுறைகள், அடிமை முறை,தீண்டாமை, கொத்தடிமை முறை மற்றும் சாதியச் சமூக இறுக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் வழிமுறையாக அடித்தள மக்கள் மதமாற்றத்தைக் கண்டனர். இது மட்டுமல்லாது, 1876-ல் துவங்கியத் தாது வருடப் பஞ்சம் பெரும்பாலான அடித்தள மக்கள் குழும மதமாற்றத்தை மேற்கொள்ள முக்கியக் காரணியாக அமைந்தது.

சொத்துரிமை மற்றும் ஜமீன்தாரின் பாலியல் தொல்லையிலிருந்து குடும்பப் பெண்களை பாதுகாக்கவும் மதமாற்றத்தை மேற்கொண்டனர்.கழுகுமலை நாடார்கள் இரத வீதியில் பல்லக்கு ஊர்வலம் செல்ல உரிமை பெற்றுத் தருவதாக இருந்தால் கிறித்தவத்திற்கு மதம் மாறுவதாகக் கூறியமையை ஜார்ஜ் சே.ச பதிவு செய்கிறார்(கழுகுமலையில் கிளர்ச்சியும் வளர்ச்சியும் 1895:2025).

சமூகத்தில் சில வகுப்பினருக்கு மட்டுமே உரிமையுடையதாக இருந்த கல்வி, மருத்துவம் மற்றும் வேலை வாய்ப்புப் போன்றச் சமூக அமைப்புகளைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கும் கிடைக்கும்படியாக கிறித்தவ மிஷனரிகள் முன்னெடுத்த முயற்சிகள் குழும மதமாற்றத்திற்கு வழி வகுத்தது.

மதமாற்றமும் சாதியும்

பிராமணர்கள் வேதத்தைத் மறை பொருளாக வைத்தது போன்று அல்லாமல்,கிறித்தவம் வேதத்தை அனைவரும் பயன்பெறுமாறு அனுமதித்தது.சைவ, வைணவ மத கோயில்களில் வழிபாடு மறுக்கப்பட்டவர்களை கிறித்தவ ஆலயங்கள் பேதமின்றி வரவேற்றன.

அடித்தள மக்களை ஈர்க்கும் பொருட்டு அவர்கள் ஏற்கனவே பின்பற்றியிருந்த நாட்டார் வழிபாடுகளுக்கு சமானமான புனிதர் வழிபாடு, அசனம் கொடுத்தல், தேர் ஊர்வலம், மொட்டை அடித்தல் போன்ற சடங்குகளை முன்வைத்து கத்தோலிக்கத் திருச்சபை மதமாற்றத்தை மேற்கொண்டதேத் தவிர விவிலியத்திற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை. அதற்கு பதிலாக பத்து கட்டளைகள் ,திருச்சபை கட்டளைகள் போன்ற அடிப்படைச் சமய விதிகளும் மந்திரங்களுமே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன (ஆ.சிவசுப்பிரமணியன்:2023).இங்ஙனம் கிறித்தவச் சமய வழிபாட்டு முறைகள் மரபு வழி மதஅடையாளங்களுக்கு உட்படுத்தி மக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டன.

உள்நாட்டுப் பகுதியிலும் கிறித்தவத்தைப் பரப்புவதற்காக மதுரையை மையமாகக்கொண்டு கி.பி1601-ல் மறைத்தளம் உருவாக்கப்பட்டது.இம்மறைத்தளம் மதுரை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் முத்துக்குளித்துறை மறைத்தளங்களான கன்னியாகுமரி முதல் வேலூர் வரையிலான கடலோரப் பகுதிகளையும் உள்ளடக்கியது.இங்கு பணிபுரிய வந்த இராபர்ட்.டி.நோபிலி, சாதியின் செல்வாக்கை அறிந்து கொண்டு, ஆதிக்க வர்க்கத்தினரை மதமாற்றம் செய்தார். அவர் “கிறித்தவர்களாக மதம் மாறுபவர்கள் சாதியையோ, சாதிய அடையாளங்களையோ, சாதியப் பழக்கங்களையோ, சமூக உயர்நிலையையோ விட்டுவிடத் தேவையில்லை” என்று தனது இருப்பிடத்தில் எழுதி வைத்திருந்தார் என்பதை ஆ.சிவசுப்பிரமணியன் பதிவு செய்கிறார்(கிறித்தவமும் சாதியும்:2025).இச்செயல் சாதியம் கிறித்தவத்தில் ஊடுருவ வழி வகுத்தது.

கிறித்தவத்தில் நிலவிய சமத்துவம் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு மகிழ்வைப் பெற்றுத் தந்தாலும்,சாதியக் கட்டமைப்புச் சமுதாயத்தில் மூழ்கியிருந்த ஆதிக்கச் சக்திகள் தங்களால் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் தங்களுக்குச் சரிசமமாக நடத்தப்படுவதை ஏற்க முடியவில்லை.

பல்வேறு பிரிவினையைச் சார்ந்தவர்கள் ஒரே பகுதியில் வசிக்கும்போது அங்கு சமத்துவத்தை எதிர்பார்க்கும் சூழல் அமையவில்லை.இதனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏனைய கத்தோலிக்கர்களுக்கு இணையான நிலையை அடையமுடியவில்லை. இவை அடைக்கலப்பட்டினங்கள் உருவாக காரணமாயின இதன் பொருட்டு திருநெல்வேலி பகுதியில் முதலூர், சாயர்புரம், ஆனந்தபுரம், டோனாவூர் போன்ற ஊர்கள் தோன்றின.

இங்ஙனம் கிறித்துவ சமயச் செயல்பாடுகளில் சாதிய வேறுபாடுகள் வெளிப்படத்துவங்கின. இதன் விளைவாக வழிபாட்டிற்கு ஒன்றுக்கூடினாலும் கோயில்களில் பிரிவினைச் சுவர்கள் கட்டப்பட்டு, ஒவ்வொருப் பிரிவினருக்கும் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டது.இதனை ஆ.சிவசுப்பிரமணியன் “தீண்டத்தகாத சாதியினர் சிறுதூண்களை உடைய கைப்பிடிச் சுவரினால் பிரிக்கப்பட்டிருந்தார்கள் அத்துடன் அவர்கள் அமருமிடம் சற்றுப் பள்ளமாக இருந்தது” என்று குறிப்பிடுகிறார் (கிறித்தவமும் சாதியும்:2025). இத்தகைய வேறுபாடு சிலுவை வடிவில் கட்டமைக்கப்பட்ட திருநெல்வேலி வடக்கன்குளம் ஆலயத்தில்

நிலவுயிருந்தது.முன்பகுதியில் வெள்ளாளர், முதலியார், கம்மாளர் போன்றோருக்கும் பின்பகுதியில் சற்றுத் தாழ்வான இடத்தில் நாடார்களுக்கும் இரு தரப்பினருக்கிடையில் அளிபோடப்பட்டிருந்ததாக 'கிறித்தவமும் சாதியும்' நூலில் பதிவு செய்கிறார்.

இச்சாதிய வேறுபாடு பிரிவினைச் சுவரோடு மட்டுமல்லாது கோயில் பீடத்தில் வேலை செய்வது, பூசையில் உதவி செய்வது, பாட்டு பாடுவது, தேர் இழுப்பது, தீபம் ஏற்றுவது எனப் பல்வேறு வழிபாடுகள் சார்ந்தச் செயல்கள், மேல் சாதியினர்களுக்கு உரியதாக அமைந்தது. நன்மை வாங்கவும், குழந்தை இயேசுவின் உருவத்திற்கு காணிக்கை வைத்து முத்தமிடுவதிலும் அடித்தள மக்கள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டனர். (ஆ. சிவசுப்பிரமணியன்:2025).

காமநாயக்கன்பட்டி ஆலயத்திலும் தெற்கு வடக்காக அளியமைத்து, கிழக்குப் பகுதியில் நாடார்களுக்கும் மேற்குப் பகுதியில் பிள்ளைமார்களுக்கென்றும் பிரிக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற பிரிவினைச் சுவர்கள் தென் தமிழகத்தில் மட்டுமல்லாது, வடபகுதியிலும் நிலவியிருந்ததைப் புதுச்சேரி ஆலயத்தினுள் நிலவியிருந்தப் பிரிவினைச் சுவர் குறித்து ஆனந்தாரங்கன் பிள்ளை தனது நாட்குறிப்பில் குறிப்பிட்டதாக ஆ.சிவசுப்பிரமணியன் சுட்டிக்காட்டுகிறார் (கிறித்தவமும் சாதியும்:2025). இந்நிலை கிறித்தவத்திலும் சாதிய வேறுபாடுகளுடனான கோயில்கள் வடிவமைக்கப்படவும், சாதிகளுக்கென்றுத் தனிக் கோயில்கள் உருவாகவும் காரணமாயின. மேலும் சாதிய ஏற்றுத்தாழ்வுகள் பிரிவினைச் சுவரோடு மட்டும் நின்று விடாமல், வழிபாடுச் செயல்கள், கல்லறை, சடங்குகள், திருவிழா, கோயில் நிர்வாகம் எனப் பல்வேறு நிலைகளில் ஆதிக்கம் செலுத்தியது.தொடக்கக்காலக் கத்தோலிக்கத் திருச்சபையில் அடித்தட்டு மக்கள் துறவறம் மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.பின்னர் அவர்களுக்கெனத் தனி துறவறச் சபைகள், தேவாலயங்களில் தனி ஆயர்களை நியமித்தல் எனத் திருச்சபையிலும் சாதியின் தாக்கம் தோன்றியது.

நெல்லை மாவட்ட சாயர்புரத் தேவாலயப் பகுதியில் நாடார் மற்றும் பள்ளர் என இரு தரப்பினர் இருந்தனர். ஆலயத்தின் முன் பகுதியில் நாடார்கள், பின்பகுதியில் பள்ளர்களின் இருப்பிடமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாடார் பிரிவைச் சார்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்த போதகரை வழிபாடு நடத்த அனுமதிக்காதது குறித்து வேதமுத்து என்ற மதகுரு 1867-ல் எழுதியக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்(ஆ.சிவசுப்பிரமணியன்:2025).இந்நிகழ்வு தங்களை விடச் சாதியப் படிநிலையில், கீழ்ப்படிநிலையில் உள்ள அடித்தட்டு வகுப்பினரைச் சார்ந்த போதகர்கள் தங்களுக்கு வழிபாடு நடத்துவதை உயர்சாதியினர் ஏற்றுக்கொள்ளவில்லை எனப் புலனாகிறது .இங்கனம் மதமாற்றத்திற்குப் பின்னரும் சாதிய அடையாளங்களும் அதன் அடிப்படையிலானச் சமூக வேறுபாடுகளும் பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது என்பதை அறிய முடிகிறது.

முடிவுரை

கிறித்தவம் மேட்டிமை வகுப்பினரின் சமூகப் பண்பாட்டு ஒடுக்குமுறைகளுக்கு இரையான அடித்தள மக்களின் முன்னேற்றத்திற்கும் பாதுகாப்பிற்கும் உரியச் சமயமாக விளங்கியப் போதிலும், சாதிய ஒடுக்குமுறை மேலோங்கியச் சமூகத்தில் மதப் பரப்புதலைக் கருத்தில் கொண்டும், மதம் மாறியவர்கள் கிறித்தவத்திலிருந்து வெளியேறாமல் இருப்பதற்காகவும்,தங்களது இருப்பை நிலைநாட்டுவதற்காகவும், சமத்துவத்தை இலக்காகக் கொண்டு மதமாற்றம் மேற்கொண்ட கிறித்தவம், சாதியை ஏற்று மேல்தட்டு மக்களுடன் சமரசம் செய்து கொள்ள வேண்டிய நிலைக்குத்

தள்ளப்பட்டது.இந்நிலையில் கிறித்தவத்தைத் தழுவியப் பின்னரும் சமூகத்திற்குள்ளும் ஆலயத்திற்குள்ளும் சாதியின் உந்துதலும்,சாதி எந்தெந்த நிலைகளில் தொழில்படுகிறது என்பதும் புலனாகிறது.

அடிக்குறிப்பு

1. ஆ.சிவசுப்பிரமணியன், கிறித்தவமும் சாதியும், ப.110.
2. ர.ஜார்ஜ், சே.ச,கழுகுமலையில் கிளர்ச்சியும் வளர்ச்சியும் 1895, ப.43.
3. ஆ.சிவசுப்பிரமணியன், கிறித்துவமும் தமிழ்ச்சூழலும், ப.33.
4. மேலது, கிறிஸ்தவமும் சாதியும், ப.95
5. மேலது, ப.60.
6. மேலது, ப.61.

மேலது, ப.29.

7. மேலது, ப.35.

துணை நூற்பட்டியல்

1. ஐசக் அருள்தாஸ். ஜி,குமரி மண்ணில் கிறிஸ்தவம் ,ஜி. ஐசக் அருள்தாஸ் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 2024, கன்னியாகுமரி.629602.
2. சிவசுப்பிரமணியன். ஆ, கிறித்தவமும் தமிழ்ச்சூழலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பத்தாம் பதிப்பு 2023,

நாகர்கோவில்,629001.

3. மேலது , கிறித்தவமும் சாதியும், காலச்சுவடு பதிப்பகம், எட்டாம் பதிப்பு 2025,

நாகர்கோவில்.629001.

4. மேலது, அடித்தள மக்கள் வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,நான்காம் பதிப்பு 2023,

நாகர்கோவில் ,629001.

5. டேவிட் பாக்கியமுத்து ,திருநெல்வேலிக்கு கிறித்தவம் வந்தது, யாதுமாகி பதிப்பகம், ,முதற்பதிப்பு 2003,

திருநெல்வேலி ,627002.

6. முத்தாலங்குறிச்சி காமராசு, நெல்லை சீமையில் கிறித்தவம், காவ்யா பதிப்பகம், முதற் பதிப்பு 2025,

சென்னை ,600024.

7. ஜார்ஜ். ர. சே.ச, கழுகுமலையில் கிளர்ச்சியும் வளர்ச்சியும் 1895, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், , இரண்டாம் பதிப்பு 2025,

நாகர்கோவில் 629001.

© 2026 அனுஷா மா, முனைவர் .ஜென்ஸிஸ் குமார்., மி.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 61–67
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

பாரதியின் கவிதைகளில் ஆழ்மன ஆற்றல் (Law of Attraction) மற்றும் நேர்மறைச் சிந்தனை – ஓர் ஆய்வு

முனைவர். கீதா வீ*

உதவிபேராசிரியர், தமிழ்த்துறை அ. வீரையா வாண்டையார் நினைவு திருபுட்பம் கல்லூரி(த) பூண்டி தஞ்சாவூர் *9626013677, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். கீதா வீ — ageethaageethas@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00024	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகள் புதுமையான மொழிநடை, விடுதலை உணர்வு, சமூகச் சீர்திருத்தம், பெண்விடுதலை, சாதி மறுப்பு, மனிதநேயம், அறிவியல் நோக்கு, ஆன்மீகத் தேடல் மற்றும் தனிமனித ஆளுமை போன்ற பல்வேறு சிந்தனைத் தளங்களை உள்ளடக்கியுள்ளன. அவற்றுள் எண்ணம், கனவு, மனவுறுதி, தன்னம்பிக்கை, அச்சமின்மை, அறிவு மற்றும் செயல் உறுதி ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாய்வு, பாரதியின் கவிதைகளில் காணப்படும் அகச்சிந்தனைகளைத் தற்காலத்தில் பேசப்படும் Positive Thinking, Affirmation, Visualization, Goal-oriented Thinking, Subconscious Mind, Law of Attraction போன்ற நவீன கருத்துகளுடன் கருத்தியல் ஒப்பீட்டு நோக்கில் ஆராய்கிறது. “நினைவு நல்லது வேண்டும்”, “கனவு மெய்ப்பட வேண்டும்”, “மனதிலுறுதி வேண்டும்”, “எண்ணிய முடித்தல் வேண்டும்”, “அச்சமில்லை” போன்ற பாரதியின் கவிதைத் தொடர்கள் மனிதனின் அகநிலையையும் செயல் நோக்கையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

எனினும், பாரதியை நவீன Law of Attraction கோட்பாட்டின் நேரடி வரலாற்று முன்னோடியாகக் கருதுவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. பாரதியின் சிந்தனை அவரது காலச்சூழல், இந்திய விடுதலை இயக்கம், சமூகச் சீர்திருத்தம் மற்றும் ஆன்மீகப் பின்னணி ஆகியவற்றோடு ஆழமாகத் தொடர்புடையது. எனவே, இவ்வாய்வு வரலாற்றுத் தாக்கத்தை நிறுவ முற்படாமல், கருத்தியல் ஒற்றுமைகளை மட்டும் ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: பாரதி; ஆழ்மன ஆற்றல்; எண்ணம்; நேர்மறைச் சிந்தனை; ஈர்ப்பு விதி; அச்சமின்மை; தன்னம்பிக்கை; மனவுறுதி; கனவு; ஆளுமை வளர்ச்சி.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: வீ, மு. கீ. (2026). பாரதியின் கவிதைகளில் ஆழ்மன ஆற்றல் (Law of Attraction) மற்றும் நேர்மறைச் சிந்தனை – ஓர் ஆய்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 61–67. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8421

1. அறிமுகம்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ் இலக்கியத்தின் நவீன சிந்தனை வளர்ச்சியில் மிக முக்கிய ஆளுமையாகத் திகழ்கிறார். கவிஞர், பத்திரிகையாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர் மற்றும் தேசியவாதி எனப் பல தளங்களில் இயங்கியவர். இவரது வாழ்க்கைக் காலம் இந்திய விடுதலை இயக்கம் தீவிரமடைந்த வரலாற்றுச் சூழலில் அமைந்தது.

சுதேசி இயக்கம், வங்கப் பிரிவினை, காலனித்துவ அரசின் கட்டுப்பாடுகள் மற்றும் பத்திரிகைச் செயல்பாடுகள் போன்றவை பாரதியின் சிந்தனையைப் பெரிதும் பாதித்தன. 1908ஆம் ஆண்டு புதுச்சேரிக்குச் சென்று அங்கு வாழ்ந்த காலமும் இவரது படைப்புச் சிந்தனையில் மிக முக்கியமானதாகும். பாரதியின் கவிதைகளில் தனிமனிதனின் மனவிடுதலை, நாட்டின் விடுதலை, பெண்ணின் சுதந்திரம், சமூக சமத்துவம் மற்றும் அறிவு வளர்ச்சி ஆகியவை ஒன்றோடொன்று பிணைந்துள்ளன. எனவே, இவரது “எண்ணம்”, “கனவு”, “உறுதி”, “அச்சமில்லை” போன்ற கருத்துகளை வெறும் தனிமனித ஊக்கவுரைகளாக மட்டும் அணுகுவது இவரது சிந்தனையின் பரப்பைக் குறுக்கிவிடுவதாகும்.

இவ்வாய்வில் “ஆழ்மன ஆற்றல்” என்பது பாரதியார் நேரடியாப் பயன்படுத்திய சொல் அல்ல. மாறாக, அவரது கவிதைகளில் காணப்படும் அக ஆற்றல், மனவுறுதி, எண்ணம், கனவு, அறிவு மற்றும் செயல் ஆகியவற்றை நவீன உளவியல் மற்றும் சுயமுன்னேற்றக் கருத்துகளுடன் ஒப்பிடுவதற்கான ஒரு ஆய்வியல் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.

2. எண்ணம் – பாரதியின் அக உலகின் அடிப்படை

மனிதனின் செயல்பாடு அவனது எண்ணங்களோடு நேரடித் தொடர்புடையது என்ற கருத்து பாரதியின் கவிதைகளில் பல இடங்களில் வெளிப்பட்டுள்ளது.

“நினைவு நல்லது வேண்டும்”

என்ற பாரதியின் வேண்டுதல், மனதில் தோன்றும் எண்ணம், நோக்கம் மற்றும் விருப்பம் ஆகியவற்றின் தூய்மையையும் தரத்தையும் வலியுறுத்துகிறது. மேலும், “நல்லவே எண்ணல் வேண்டும்” என்ற வரி, எண்ணத்தின் தரத்திற்கும் செயலின் தரத்திற்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துகிறது.

இதன்படி பாரதியின் சிந்தனையில் **நல்ல எண்ணம் \rightarrow நல்ல நோக்கம் \rightarrow நல்ல செயல்** என்ற தொடரைக் காண முடிகிறது. இக்கருத்து தற்கால *Positive Thinking* என்ற கருத்துடன் மிக நெருக்கமாக ஒப்பிடத்தக்கதாகும். எனினும், பாரதியின் எண்ணம் தனிமனித வெற்றிக்காக மட்டும் அமைந்ததல்ல; அது ஒட்டுமொத்த சமூகத்தின் முன்னேற்றத்தையும் இலக்காகக் கொண்டது.

3. “கனவு மெய்ப்பட வேண்டும்” – இலட்சியமும் காட்சிப்படுத்தலும்

பாரதியின் கவிதைகளில் “கனவு” என்பது வெறும் பகற்கல்வு அல்ல; அதுவொரு முக்கியமான கோட்பாடாகும்.

“கனவு மெய்ப்பட வேண்டும் கைவசமாவது விரைவில் வேண்டும்.”

இங்கு கனவு என்பது நடைமுறையில் நிறைவேற்றப்பட வேண்டிய மாபெரும்

இலட்சியமாக அமைகிறது. தற்கால ஆளுமை மேம்பாட்டுச் சிந்தனையில் *Visualization* என்பது ஒருவர் அடைய விரும்பும் இலக்கை மனக்காட்சியாக உருவாக்கிக் கொள்வதாகக் கருதப்படுகிறது. பாரதியின் "கனவு மெய்ப்பட வேண்டும்" என்ற கருத்துடன் இதனை ஒப்பிட்டுப் பார்த்தல் பொருத்தமாகும்.

ஆனால் பாரதி வெறும் கனவு காண்பதோடு நின்றுவிடவில்லை. "கண் திறந்திட வேண்டும், காரியத்தில் உறுதி வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்துகிறார். இதனால் அவரது சிந்தனையில் **கனவு + விழிப்பு + செயலுறுதி = இலட்சிய நிறைவேற்றம்** என்ற கட்டமைப்பு உருவாகிறது. எனவே, பாரதியின் கனவு என்பது செயலற்ற ஆசையல்ல; செயலுக்கான உறுதியான உளவியல் உந்துதலாகும்.

4."மனதிலுறுதி வேண்டும்" – உள்ளுறுதியின் ஆற்றல்

"மனதிலுறுதி வேண்டும், வாக்கினிலேயினிமை வேண்டும்; நினைவு நல்லது வேண்டும், நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்."

இவ்வரிகளில் மனவுறுதி, நல்ல எண்ணம், இனிய பேச்சு மற்றும் இலக்கை அடைதல் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இதனை **மனவுறுதி \rightarrow நல்ல எண்ணம் \rightarrow நல்ல செயல்பாடு \rightarrow இலக்கு நிறைவேற்றம்** என்ற வாழ்வியல் தொடராகப் புரிந்து கொள்ளலாம்.

இங்கு "மனதிலுறுதி" என்பது சாதாரண மனநிலை அல்ல. அது செயலை வெற்றிகரமாக இயக்கும் அக ஆற்றலாகும். பாரதியின் சிந்தனையில் மனமும் செயலும் பிரிக்க முடியாத இணைப் பிரிவுகளாக விளங்குகின்றன.

5. "எண்ணிய முடித்தல் வேண்டும்" – எண்ணத்திலிருந்து செயலுக்கு

"எண்ணிய முடித்தல் வேண்டும்; நல்லவே எண்ணல் வேண்டும்; திண்ணிய நெஞ்சம் வேண்டும்; தெளிந்த நல்லறிவு வேண்டும்."

இவ்வரிகளில் எண்ணிய முடித்தல், நல்ல எண்ணம், திண்ணிய நெஞ்சம் மற்றும் தெளிந்த நல்லறிவு ஆகிய நான்கு அடிப்படை நிலைகள் வெளிப்படுகின்றன. இதன் மூலம் பாரதியின் சிந்தனை வெறும் "எண்ணினால் மட்டுமே எல்லாம் கிடைக்கும்" என்ற சோம்பேறித்தனமான நிலையில் நின்றுவிடவில்லை என்பது தெளிவாகிறது. **நல்ல எண்ணம் + மனவுறுதி + அறிவு + செயல் = நிறைவேற்றம்** என்பதே அவரது கவிதைச் சிந்தனையின் உண்மையான இயல்பாகிறது.

6. "அச்சமில்லை" – எதிர்மறை எண்ணத்தை வெல்லும் மனப்பாங்கு

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்ற வரிகள் பாரதியின் வீர உணர்வையும் அஞ்சா நெஞ்சத்தையும் வெளிப்படுத்தும் மிகச் சிறந்த பாடலாகும். "அச்சமில்லை" என்ற தொடர் மனித மனத்தில் துணிவை உருவாக்கும் ஒரு சக்திவாய்ந்த உறுதிமொழியாகவும் செயல்படுகிறது. தற்கால உளவியல் உரையாடலில் இதனை *Positive Affirmation* எனப்படும் கருத்துடன் கருத்தியல் ரீதியாக ஒப்பிட முடியும்.

ஆனால் பாரதியின் அச்சமின்மை என்பது தனிமனிதனின் உளவியல் பயிற்சி மட்டும் அல்ல. அது காலனித்துவ ஆட்சிக்கு எதிரான அரசியல்

மனவிடுதலையுடனும் நேரடியாகத் தொடர்புடையது. பாரதியின் பாடல்கள் அன்றைய மக்களிடையே வீர உணர்வையும் விடுதலை வேட்கையையும் உருவாக்கும் பெரும் பணியை வெற்றிகரமாக மேற்கொண்டன.

7. நேர்மறைச் சிந்தனையும் சமூக விடுதலையும்

பாரதியின் நேர்மறைச் சிந்தனையை வெறும் தனிமனித வெற்றிக்கான எளிய உளவியல் உத்தியாக மட்டும் சுருக்கிப் பார்க்க முடியாது. அது சமூக மாற்றத்தோடும் நாட்டினுடைய விடுதலையோடும் பலமாக இணைந்துள்ளது:

- **அச்சமின்மை** \rightarrow அரசியல் விடுதலைக்கு வழிவகுத்தல்
- **பெண்விடுதலை** \rightarrow சமூக முன்னேற்றத்தை உருவாக்குதல்
- **சாதி மறுப்பு** \rightarrow சமூக சமத்துவத்தை ஏற்படுத்துதல்
- **கல்வி** \rightarrow அறிவு வளர்ச்சியைப் பெருக்குதல்
- **தமிழ்ப்பற்று** \rightarrow மொழி மறுமலர்ச்சியை உண்டாக்குதல்
- **மனிதநேயம்** \rightarrow உலக ஒருமைப்பாட்டைப் பேணுதல்

இவ்வாறு பாரதியின் நேர்மறைச் சிந்தனை தனிமனித ஆளுமை வளர்ச்சியையும் சமூக மாற்றத்தையும் ஒருங்கிணைத்து வழங்குகிறது.

8. “வேண்டுவன” – தனிமனித ஆசையைத் தாண்டிய வேண்டுதல்

“மனதிலுறுதி வேண்டும்” பாடலில் பாரதி இறைவனிடம் வேண்டுகின்றவை வெறும் சுயநலமான பொருளாதாரச் செல்வம் சார்ந்தவை அல்ல. அவர் வேண்டுவது மனவுறுதி, நல்ல நினைவு, கனவு நிறைவேற்றம், விழிப்புணர்வு, காரிய உறுதி, பெண் விடுதலை, மண் பயனுறுதல் மற்றும் உண்மை நிலைபெறுதல் என்பனவாகும்.

இதன்மூலம் பாரதியின் வேண்டுதல் அகமாற்றம் மற்றும் சமூகமாற்றம் என்ற இரு பரிமாணங்களையும் உள்ளடக்கியதாக விரிவடைகிறது. “பெண் விடுதலை வேண்டும்” என்ற அவரது வேண்டுதல், தனிமனித உளவியல் வளர்ச்சியை சமூக விடுதலையோடு இணைக்கும் மிக முக்கியமான சான்றாகும்.

9. பாரதியும் நவீன Law of Attraction-உம்

நவீன *Law of Attraction* உரையாடலில் பொதுவாக விரும்பிய இலக்கைத் தெளிவாக எண்ணுதல், அதை மனக்காட்சியாக உருவாக்குதல் மற்றும் நேர்மறை மனநிலையைப் பேணுதல் ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. பாரதியின் கவிதைகளிலும் இதனுடன் ஒத்த கூறுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக: “நினைவு நல்லது வேண்டும்”, “கனவு மெய்ப்பட வேண்டும்”, “எண்ணிய முடித்தல் வேண்டும்”, “திண்ணிய நெஞ்சம் வேண்டும்” போன்ற வரிகளைக் குறிப்பிடலாம்.

ஆனால் பாரதியின் சிந்தனையில் மிகவும் அவசியமான கூடுதல் கூறு **செயல்** ஆகும். “காரியத்தில் உறுதி வேண்டும்” என்ற வரி, வெறும் விருப்பம் அல்லது எண்ணம் மட்டும் வாழ்வின் வெற்றியைத் தராது; செயல்பாடு கட்டாயம் அவசியம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. எனவே, பாரதியின் சிந்தனையை *Law of Attraction*-ன் நேரடி வரலாற்று முன்னோடியாகக் கருத இயலாது; இரண்டிலும் காணப்படும் ஒற்றுமைகள்

கருத்தியல் ஒப்புமைகள் மட்டுமே ஆகும்.

10. எண்ணம் + செயல் – பாரதியின் தனித்துவம்

பாரதியின் கவிதைகளை முழுமையாக ஆராயும் போது அவரது சிந்தனை பின்வரும் வாழ்வியல் தொடராக உருவெடுக்கிறது:

{எண்ணு} {கனவு காண்} {உறுதி கொள்} {அறிவைப் பெறு} {அஞ்சாதே} {செயலில் இறங்கு} {நிறைவேற்று} இதனை, **உயர்ந்த எண்ணம் + தெளிந்த அறிவு + திண்ணிய நெஞ்சம் + செயல் உறுதி = இலட்சிய நிறைவேற்றம்** என்ற எளிய கருத்துச் சமன்பாட்டில் சுருக்கிக் கொள்ளலாம். இதுவே பாரதியின் சிந்தனையை வெறும் கற்பனை ஆசைநிலையிலிருந்து அல்லது மேலைநாட்டு சுயமுன்னேற்றக் கோட்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபடுத்துகிறது.

11. தற்கால ஆளுமை மேம்பாட்டுடன் தொடர்பு

இன்றைய *Personality Development* துறையில் *Positive Thinking, Self-confidence, Goal Setting, Visualization, Affirmation, Mental Strength* போன்ற கருத்துகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றுடன் பாரதியின் கருத்துகளைப் பின்வருமாறு ஒப்பிடலாம்:

Positive Thinking – “நல்லவே எண்ணல் வேண்டும்”

Self-confidence – “திண்ணிய நெஞ்சம் வேண்டும்”

Goal Setting – “கனவு மெய்ப்பட வேண்டும்”

Action Orientation – “காரியத்தில் உறுதி வேண்டும்”

Mental Strength – “மனதிலுறுதி வேண்டும்”

Positive Affirmation – “அச்சமில்லை அச்சமில்லை”

Awareness – “கண் திறந்திட வேண்டும்”

12. ஆய்வின் முக்கியக் கண்டறிதல்கள்

1. பாரதியின் கவிதைகளில் எண்ணம் என்பது மனிதனின் மிக முக்கியமான அக ஆற்றலாக அமைகிறது.
2. எண்ணம் தனித்து இயங்காமல் கனவு, மனவுறுதி, அறிவு மற்றும் செயல் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுகிறது.
3. “அச்சமில்லை” போன்ற பாடல்கள் எதிர்மறை மனநிலையை முழுமையாக மறுக்கும் உறுதிமொழி இயல்பைக் கொண்டுள்ளன.
4. பாரதியின் நேர்மறைச் சிந்தனை வெறும் தனிமனித வெற்றியைக் கடந்து பரந்த சமூக விடுதலையை நோக்கியதாக உள்ளது.
5. *Positive Thinking, Visualization, Self-confidence, Goal Orientation* போன்ற நவீன கருத்துகளுடன் பாரதியின் சிந்தனையில் கருத்தியல் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.
6. இவ்வொற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டு பாரதியை *Law of Attraction*-ன் நேரடி வரலாற்று முன்னோடியாகக் கூறுவதற்குப் போதிய

வரலாற்று ஆதாரங்கள் இல்லை.

7. பாரதியின் சிந்தனையின் தனித்துவமே எண்ணத்தைச் செயலோடு மிக அர்ப்பணிப்புடன் இணைப்பதில் தான் அடங்கியுள்ளது.

13. முடிவுரை

மகாகவி பாரதியின் கவிதைகள் மனிதனின் அக உலகை எழுப்பும் மாபெரும் ஆற்றல் கொண்டவையாக விளங்குகின்றன. எண்ணம், கனவு, மனவுறுதி, தன்னம்பிக்கை, அச்சமின்மை, அறிவு மற்றும் செயல் ஆகியவை அவரது கவிதைகளில் தனித்தனியான கருத்துகளாக இல்லாமல் ஒருங்கிணைந்த ஒரு வாழ்வியல் தத்துவமாகத் திகழ்கின்றன.

நவீன *Law of Attraction* மற்றும் *Positive Thinking* கருத்துகளுடன் பாரதியின் கவிதைகளை ஒப்பிடும்போது எண்ணத்தின் முக்கியத்துவம், இலட்சியக் காட்சி, நேர்மறை மனநிலை, உறுதிமொழி மற்றும் மனவலிமை போன்ற பல கூறுகளில் ஆச்சரியமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால் அவை ஒரே வரலாற்றுக் கோட்பாட்டின் நேரடித் தொடர்ச்சிகள் என்று கூற முடியாது.

பாரதியின் சிந்தனையின் தனிச்சிறப்பு, “மனிதன் தான் விரும்புவதைப் பெறுவான்” என்ற வெறும் தனிமனித சுயநல நோக்கில் மட்டும் இல்லை. மனிதன் முதலில் தன்னுள் அகமாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு, பின்னர் சமூக மாற்றத்திற்கான செயல்பாட்டில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பதில்தான் அதன் மையம் உள்ளது. எனவே, பாரதியின் கவிதைகளில் காணப்படும் ஆழ்மன ஆற்றலை நவீன சுயமுன்னேற்றக் கருத்துகளுடன் ஒப்பிடத்தக்க மிகச் சிறந்த அக ஆற்றல் சிந்தனையாக நாம் வாசிக்கலாம்.

துணைநூல் பட்டியல்

அ. முதன்மை ஆதாரங்கள்

1. பாரதியார், சுப்பிரமணியர். பாரதியார் கவிதைகள். சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
2. பாரதியார், சுப்பிரமணியர். தேசிய கீதங்கள். சென்னை: பாரதி பதிப்பகம்.
3. பாரதியார், சுப்பிரமணியர். ஞானப் பாடல்கள். சென்னை: பாரதி பதிப்பகம்.
4. பாரதியார், சுப்பிரமணியர். பாரதியார் கட்டுரைகள். சென்னை: வானதி பதிப்பகம்.

ஆ. பாரதி ஆய்வு நூல்கள் 5. பாலசுப்ரமணியன், சி. பாரதியும், பாரதிதாசனும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். 6. பாரதியார் நூல்கள் ஒரு திறனாய்வு. 7. சுப்புரெட்டியார், ந. பாரதியம். தமிழ் இணையக் கல்விக்கழக மின்னூல் வளம்.

இ. வாழ்க்கை வரலாற்று ஆதாரங்கள் 8. Government of Puducherry, Department of Art and Culture. *Mahakavi Bharathiyar Museum*. 9. Press Information Bureau, Government of India. “Subramaniya Bharathiyar – Heroes of Freedom Struggle”, 15 August 2016. 10. Tamil Virtual Academy. “பாரதியார்”, பாடத்திட்ட வளம். 11. Pondicherry District Census Handbook, Poet Bharathi.

ஈ. ஒப்பீட்டுச் சிந்தனைக்கான நூல்கள் 12. Murphy, Joseph. *The Power of Your Subconscious Mind*. Prentice Hall, 1963. 13. Byrne, Rhonda. *The Secret*. New York: Atria Books, 2006.

© 2026 முனைவர். கீதா வீ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 68–73
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கி.ராஜநாராயணனின் 'கதவு ' சிறுகதையில் வாழ்வியல் பண்பாடு.

Ki. Rajanarayananin Kathavu Sirukathaiyil Vazhviyal Panbadu

முனைவர் . முத்தமிழ்ச் செல்வி. க*

தமிழ் உதவிப் பேராசிரியர், சௌராஷ்டிரா கல்லூரி. மதுரை., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் . முத்தமிழ்ச் செல்வி. க — muthamilselvi1974@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00025	

ஆய்வுச்சுருக்கம்

பெண்கள், சிக்கல்கள் நிறைந்த இவ்உலகில் ஏமாற்றங்களையும், வறுமையையும் சந்திக்கும் பொழுது அவர்களை தூக்கி நிறுத்துவது தன்னம்பிக்கை என்னும் கருவியாகும். குடும்பம், தொழில், குழந்தைகள், சமூகம் என்னும் புறப்போராட்டங்களால் உடைந்து விடாமல் தன்னம்பிக்கையோடும், தைரியத்தோடும் சமூகத்தில் நடமாட வேண்டும் என்னும் கருப்பொருளையும், குழந்தைகளின் உலகம் தன்னலமற்றது. மகிழ்ச்சியானது. இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள். கற்பனைத் திறனும், படைப்பாற்றல் திறனும் அவர்களை கனவுலகத்திற்கு அழைத்துச் செல்லும். இக்குழந்தைகளின் வாழ்வில் வறுமை நுழைந்து விட்டால் மனம் வாடி சிதைந்து விடுவர் என்னும் கருப்பொருளையும் களமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: கரிசல் மண்; தன்னம்பிக்கை; பண்பாடு; ஆளுமைத்திறன்; வாழ்வியல்; சூழ்நிலை; மனித நேயம்; படைப்பாற்றல்; நேர்மறை.

Abstract

In a world filled with numerous challenges, self-confidence serves as a vital force that helps women overcome disappointments and poverty. This paper explores the theme that women should move through society with self-confidence and courage without being broken by the external struggles associated with family, profession, children, and society.The world of children is selfless and joyful. Children are the leaders of tomorrow. Their imagination and creative abilities take them into a world of dreams. However, when poverty enters the lives of these children, their minds become distressed and their imaginative world begins to disintegrate. This paper examines these themes through the social and cultural life depicted in Ki. Rajanarayanan's short story "Kathavu."

How to cite / மேற்கோள் காட்டும் முறை: க, மு. . மு. செ. (2026). கி.ராஜநாராயணனின் 'கதவு ' சிறுகதையில் வாழ்வியல் பண்பாடு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 68–73. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8423

முன்னுரை

21 ஆம் நூற்றாண்டில் உலகமானது 'விஞ்ஞானமயமாக்கல்' என்னும் நிலையை அடைந்து அதனைக் கொண்டாடிக் கொண்டிருந்தாலும் எல்லா நாடுகளிலும் எங்கோ ஒரு மூலையில் வறுமையின் குரலும் ஒலித்துக் கொண்டுதான் உள்ளது. கணினி யுகமான இக்காலகட்டத்தில் உலக மக்களின் வாழ்க்கைத் தரமும், கல்வி மேம்பாடும் வளர்ந்து விட்ட அதே சூழலில் நமது பண்பாட்டு மரபுகளும் வாழ்க்கைச் சூழலும் வறுமை காரணத்தால் சற்று தடுமாற்றம் அடையவே செய்திருக்கின்றன. குழந்தைகளின் உலகம் தன்னலமற்றது, மகிழ்ச்சியானது. தாயின் கடமைகளில் அக்குழந்தைகளின் உயிரைப் பாதுகாத்தலும், வளர்த்தலும் முக்கியமாக கருதப்படும் இக்காலகட்டத்தில் வறுமையிலும் குழந்தைகளை பேணிக்காத்த ஒரு தாயின் உள்ளம் இக்கதையின் மூலம் தெரியலாகிறது. மனித நேயம், மனிதப் பண்பு என்ற சொல்லின் ஆழமறியாமல் திரியும் மனிதர்களையே ஒவ்வொரு நூற்றாண்டும் விதைத்துக் கொண்டுள்ளது. தமிழகப் பண்பாட்டில் இந்த வகையான ஆதிக்கப்போக்கு ஒரு மனிதனை விலங்கு நிலைக்குத் தள்ளுகிறது. மனிதன் மனிதப்பண்பு இல்லாமல் இழிநிலைக்குத் தள்ளப்படும் பொழுது அங்கு பண்பாடும் தாழ்ந்து விடுகிறது என்பதை எடுத்துக் கூறும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

கி ராஜநாராயணனின் படைப்புச் சிந்தனை

உலகத்து எழுத்தாளர்கள் கடவுள்களையும் கடவுள் தொடர்பானவர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடும் பொழுது குழந்தைகளின் வறுமைநிலையையும், வீட்டில் உள்ள கதவையும் கருப்பொருளாகக் கொண்டு கதை எழுதியவர் கி.ராஜநாராயணன். மக்களின் பலதரப்பட்ட வாழ்க்கை நிலையை நேரில் கண்டு அதனை தன் படைப்பின் கருத்தோட்டமாகப் பதிவு செய்து தந்துள்ளார். கரிசல் எழுத்தாளரான இவர் கிராமமண்ணுக்கே உரிய அன்பு, பாசம், வீரம், கள்ளங்கபடமற்ற உள்ளம், உழைப்பு, உண்மைப் பேச்சு ஆகியகூறுகளை தம் பாத்திரப்படைப்பிற்குள் நுழைத்து நம் பண்பாட்டின் சின்னமாய் நிமிர்ந்து நிற்கும் கிராம வாழ்க்கை முறையை படிப்பவரின் கண்முன்னே நிறுத்துகிறார். வறண்ட நிலமான கரிசல் பகுதியை தனது கருப்பொருளாகக் கொண்டு அதில் வறுமை, குழந்தைகளின் நிலை, ஏழ்மையான தாய்,அஃறினைப் பொருளான கதவு ஆகியவற்றை கதை மாந்தர்களின் உள்ளத்து உணர்ச்சிகளின் மூலம் உத்திகளாக வெளிப்படுத்துகிறார்.

வாழ்வியல் பண்பாடு

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் '

என்கிறது கலித்தொகை. மனிதனை செம்மைப்படுத்தி அவனை நல்வழியில் நெறிப்படுத்துவது பண்பாடு. "பண்பட்டு வருவது பண்பாடு.நிலம் பண்பட பண்பட நல்ல விளைச்சல் கிடைக்கும். ஒரு சமுதாயம் நற்பண்புகளில் பண்பட பண்பட சமுதாயத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைத்து நிற்கும். இந்த பண்பாடு மக்களின் வாழ்க்கை முறையிலும் மனித உறவுகளிலும் பட்டொளி வீசிப் படரும்." என்று மா. பா. குருசாமி அவர்கள் கூறுகிறார்.

சமூகத்தில் தனி மனிதனின் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளே பண்பாட்டை தோற்றுவிக்கின்றன. ஏழை மக்களின் வறுமையும், கணவனில்லாப் பெண்களின் திறமையும், குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற உள்ள உணர்ச்சியும் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன. குழந்தைகள் தங்கள் வாழ்கின்ற

இடத்தில் மற்ற குழந்தைகளோடும் அஃறிணைப் பொருட்களோடும் ஏற்படுத்திக் கொள்ளும் உறவின் பாலமே 'கதவு' என்னும் சிறுகதையாகும். ‘ஒரு பெண் கணவன் இல்லாமல் வாழ முடியாது’ என்ற கட்டமைப்பை உடைத்து சுய உழைப்புடன் பொறுமையையும் மனத்திண்மையையும் தனது சக்தியாக்கிக் கொள்ளும் பெண்மையை தன் கதையின் தலைவியாக்கி இருக்கிறார் கி.ராஜநாராயணன்.

வறுமை வாழ்வியல்

"சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவினர்க்குரிய பொருள் கிடைக்கப் பெறாத நிலையே வறுமை எனப்படும். "(புதுக்கவிதையில் சமுதாயம்.ப-62) மழை ஒன்றையே நம்பி வாழ்க்கை நடத்தும் கரிசல் மக்களின் உலகமே போராட்டம் நிறைந்தது.கிராமத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் அடிப்படைத் தேவைகளான பொருளாதாரம், உணவு, கல்வி ஆகியவை பெற முடியாத நிலையில் வறுமையில் வாடுகின்றனர். எவ்வித குறையும் இல்லாமல் எதிர்கால உலகை கட்டமைத்து நிற்கும் மனித இனத்தின் கனவை சோர்வுறச் செய்வது வறுமை. இதனை இக்கதையின் தலைவி ரங்கம்மாள், தலையாரிடம் கூறும் கூற்றிலிருந்து தெரிய முடிகிறது.

"ஐயா, அவரு ஊரிலே இல்ல. மணிமுத்தாறு போயி அஞ்சு மாசமாச்சி.ஒரு தகவலையும் காணோம். மூணு வருஷமா மழை தண்ணீ இல்லயே. நாங்க என்னத்த வெச்சு உங்களுக்கு தீர்வை பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலி வேலை செய்து இந்தக் கொளந்தைகள காப்பாத்ரதே பெரிய காரியம். உங்களுக்குத் தெரியாததா?"

என்று தலையாரிடம் கெஞ்சிக் கேட்கும் தாயின் பணிவும், வேண்டுதல் நிலையும் வெளிப்படுவதிலிருந்து கணவன் இல்லாமல் வாழும் பெண்ணின் வறுமை நிலை புலப்படுகிறது. "இப்பொழுது உலகத்தின் சில பாகங்களில் பெண்மக்கள் உணர்ச்சி பெற்று தங்கள் உரிமையை நாடி உழைக்கிறார்கள்" (தமிழ்ச் சோலை-ப. 50) என்று திரு.வி.க கூறுவது போல ரங்கம்மாளும் குழந்தைகளுக்காக காட்டுக்குச் சென்று சுள்ளிகளைப் பொறுக்கி வாழ்க்கையை நடத்துகிறாள். வீடு இருந்தும் கதவு இல்லாமல் உபயோகமற்று இருந்த நிலையை குறிப்பிடும் ஆசிரியர் அக்காட்சியையும், வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் பசிக் கொடுமையின் மூலம் புலப்படுத்துகிறார். தம்பி சீனிவாசன்,

"அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து பசிக்கி. சாப்பிட்டு இந்தப் படத்தை ஓட்டணும். தம்பி கஞ்சி இல்லை. நான் வெளிக்குப் போய் இருந்தேன். ஏதோ நாய் வந்து எல்லா கஞ்சியையும் குடித்துவிட்டுப் போய்விட்டது. கதவு இல்லையே! " என்று துக்கத்தோடும் ஏக்கத்தோடும் கூறுவதைப் பார்க்கும் பொழுது ஔவையின்,

"கொடிது கொடிது வறுமை கொடிது

அதனினும் கொடிது இளமையில் வறுமை "

என்னும் நல்வழிப் பாடலின் பொருள் விளங்குகிறது.

பெண்மையின் வாழ்வியல்

' கதவு' என்னும் இச்சிறுகதையில், ரங்கம்மாள் என்ற பெண், 'கணவன் இல்லாமல் வாழ முடியாது' என்ற கட்டமைப்பை உடைத்து சுய உழைப்புடன் பொறுமையையும் மனத்திண்மையையும் தனது சக்தியாக்கிக் கொள்கிறாள். குடும்பத்தின் பொறுப்பு, பொருளாதாரம், பாதுகாப்பு, குழந்தை நலன் ஆகிய அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் திறனுடன் சமூகத்தில் பல சவால்களையும் நேரடியாக சந்தித்து வெற்றி பெறும் சூழலையும் கற்றுக் கொள்கிறாள். இதனை,

அவளது மகளான லட்சுமி தலையாரிடம்,

'அப்பா ஊருக்குப் போயிருக்காங்க. அம்மா, காட்டுக்குப் போய் இருக்காங்க' என்று கூறும் கூற்றிலிருந்து தெரியமுடிகிறது. இன்றைய சமூகத்தில் ஆண்களை விட பெண்களே பல்வேறு பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர். அவர்களுக்கு குடும்ப பொறுப்புணர்வும், கணவன் வருவாய் தர இயலா நிலையில் இவர்களே வருவாய் ஈட்டும் இடத்திலும் இருந்து பெற்ற குழந்தைகளுக்கு பாதுகாவலராகவும் உள்ளனர். குடும்ப நிலையிலும் பொறுப்பு நிலையிலும் ஒரு ஆடவனின் உழைப்பும், ஒழுக்கமும், இல்லற மாண்பும் சமூகத்தில் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றன. ஆனால் இக்கதையில் வரும் ரங்கம்மாளின் கணவன் எங்கிருக்கிறான் என்பதே தெரியாமல் குடும்பமும் வறுமையில் வாழ்கிறது. ஒரு ஆணுக்குப் பொறுப்பும், கடமையும், ஒழுக்கமும் இருந்தால் தான் குடும்பமும், நாடும் பண்பட்டு மேலோங்கி இருக்கும் என்பதை அன்றே ஔவையார்,

"நாடா கொன்றோ! காடா கொன்றோ!

அவளா கொன்றோ!மிசையா கொன்றோ!

எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லல் வாழிய நலனே "

என்று குறிப்பிடுவதன் மூலம் உணர முடிகிறது.

தன் ஆற்றாமையை யாரிடமும் கூற முடியாமல் தவிக்கும் பொழுது வாய்விட்டு அலறி தன் துக்கத்தை வெளிப்படுத்தும் ரங்கம்மாளின் நிலை இரக்கம் நிறைந்ததாக இருக்கின்றது.

"கதவை தலையாரி எடுத்துச் சென்று விட, காட்டில் ரங்கம்மாள் சுள்ளி சேகரிக்கும் பொழுது கையில் தேள் கொட்டிய வலியுடன் வீட்டிற்கு வருகிறாள். கதவை தலையாரி எடுத்துச் சென்று விட்டதையும் கைக்குழந்தைக்கு காய்ச்சலாக இருப்பதையும் தாங்கிக் கொள்ள முடியாமல் ரங்கம்மாள், "என்னைப் பெத்த தாயே" என்று அலறி அழுகிறாள்.

வாழ்வின் பிரச்சனைகளை மனதிற்குள்ளே வைத்து ஒவ்வொரு நாளும் புழுங்கிக்கொண்டு தன் ஆளுமையைச் சிதைத்துக் கொள்ளும் பெண்ணாக இல்லாமல் தனக்கு முன் உள்ள சிக்கலான பிரச்சனைகளை தைரியமாக எதிர் கொண்டு போராடும் பெண்ணாகவே ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ளாள். இதனை கூற வந்த ஆசிரியர், கண் கலங்க வைக்கும் ஒரு காட்சியை நம் கண் முன்னே நிறுத்துகிறார்.

"வீட்டுக்கு வேலியாக இருக்கும் கதவு இல்லாததால் கார்த்திகை மாதத்தில் எழும் விஷ வாடைக்காற்றின் கொடுமை தாங்காமல் கைக்குழந்தையும் இறந்து விடுகிறது."

இதனை பார்க்கும் பொழுது, சமுதாயத்தின் மிகப்பெரிய அவலமான வறுமையினால் இறப்பு நிகழ்ந்தது என்பதை ஒரு தாயின் மனவேதனைக் கண்ணீரே அடையாளப்படுத்துவதை அறிய முடிகிறது. ஒவ்வொரு நாளும் அத்தாய் அடையும் மனப்போராட்டம் இறுதியில் அவளை வெறுமை நிலைக்குத் தள்ளுகிறது.அதனால் தன் கைக்குழந்தை இறந்தும் மற்ற இரு குழந்தைகளையும் பேணிக்காக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு வேலைக்குச் செல்கிறாள். இத்தாயின் சிந்தனை, செயல், நடத்தை, சொல் யாவும் தன் குழந்தைகளைச் சுற்றியே அமைகின்றன. எவ்வித கஷ்டமான சூழ்நிலையிலும் தன் குறிக்கோளை அடைவதற்குரிய விடாமுயற்சியே

அவளிடம் காணப்படுகிறது, என்பதை இக்கதை உணர்த்துகிறது.

குழந்தைகளின் வாழ்வியல்

குழந்தைகளின் உலகம் மிகவும் அற்புதமானது. ஆனந்தமானது. நேர்மறை எண்ணங்களும், விளையாட்டு உள்ளமும், குதூகளிப்பும் நிறைந்தது. தன் கண்ணுக்கு எதிரே நடப்பவை அனைத்தும் உண்மையென நினைக்கும் ஆற்றல் கொண்டது. நல்லது எது? தீயது எது? என அறியும் திறன் இல்லாத வெகுளித்தனமான உள்ளம் கொண்டவர்கள் குழந்தைகள். அவர்களது உலகில் மகிழ்ச்சி என்றும் நிலையானது. அனைத்து குழந்தைகளிடமும் கூடிக்களிக்கும் ஒற்றுமைப்பண்பும்,சுயநலமற்ற மனப்பாங்கும், நட்புடன் கூடிய தோழமையும் கொண்டது. வறுமையில் உடல் வாடினாலும் உள்ளம் மகிழ்ச்சியில் ஊஞ்சலாடும் என்னும் கருத்தோட்டத்தை ஆசிரியர் இக்கதையில் பதிவு செய்கிறார்.

"சிறுவர்கள் நிறைந்த அறிவு பெறாதவர்கள்.அவர்கள் அறிந்த சொற்கள் மிகக் குறைவு.அவர்கள் உள்ளமும் எதையும் நம்பும் இயல்புடையது. தீயவை நல்லவை என்று பகுத்தறிய முடியாதது" (குழந்தை இலக்கிய வரலாறு.ப-244) என்று பூவண்ணன் அவர்கள் குழந்தைகளின் மனநிலையை விளக்குகிறார்.

மன மகிழ்ச்சிக்காகவும் பொழுதுபோக்குக்காகவும் சீனிவாசன், பக்கத்துவீட்டு குழந்தைகளுடன் வீட்டில் உள்ள கதவின் மீது ஏறி விளையாடுகிறான். அஃறிணைப் பொருளான கதவின் மீது லட்சுமியும் சீனிவாசனும் பாசத்தையும், நேசத்தையும் வைத்திருந்ததால் 'கதவு 'வீட்டு ஆட்களோடு ஒருவரானது. அக்கதவில் படங்களை ஒட்டி விளையாடுவதால் அவர்களின் அம்மா அப்பா இல்லாத குறையையும் கதவு சரி செய்தது. சீனிவாசன் உணவின்றித் தவித்த பொழுதும் கதவில் படம் ஒட்டுவதையே தன் மகிழ்ச்சியாக நினைத்திருந்தான். ஆனால் தலையாரி கடனுக்காக கதவைத் தூக்கிச் சென்ற பொழுது சீனிவாசனுக்கும் லட்சுமிக்கும் பசியோடு ஏமாற்றமும் வருத்தமுமே மிகுதியாக இருந்தன.

சிறு வயதானாலும் லட்சுமி, "தான் சமைத்த கஞ்சியை நாய் குடித்து விட்டு சென்றுவிட்டதே. தாயின் பசிக்கு உணவில்லையே! என்று வருந்தும் நிலையை பார்க்கும் பொழுது அக்குழந்தையின் தாய்ப்பற்றும், வறுமையின் கொடுமையும் புலப்படுகிறது. போட்டி, பொறாமை எண்ணம் இல்லாத இக்குழந்தைகள் கடைசியில் தங்களின் வீட்டுக் கதவு சாவடியில் இருக்கிறது என்றவுடன் இருவரும் ஆனந்தம் கொண்டனர். தங்களின் கதவைக்காண மண்ணில் முளைத்திருந்த சா ரணத்தியும், வாழைச் செடிகளும் மிதிபடும்படியாக ஓடிச் சென்று கதவைக் கண்டு தங்களின் பாசத்தை கண்ணீரோடு கதவில் இணைத்து மகிழ்ந்தனர் என்று கதையை முடிக்கிறார் ஆசிரியர். கரிசல் காட்டு இலக்கியமான இக்கதையின் மூலம் குழந்தைகளின் மனதில் எவ்வித கெட்ட எண்ணங்களும், கிடையாது, மாறாக மிகுந்த இரக்கமும்,அன்பும், பண்பும் மிகுந்தவர்கள் என்று குழந்தைகளின் மன ஓட்டத்தையும் சிந்தனைகளையும் நமக்கு தெளிவாக சித்தரித்துக் காட்டுகிறார்.

முடிவுரை

வானம் பார்த்த பூமியில் மழை பொய்க்கும் பொழுது அக்கிராம மக்களின் வாழ்வில் தடுமாற்றம் ஏற்படுகிறது. வறுமையும், பசிக் கொடுமையும் அம்மனிதர்களை வாட்டுகின்றன. எனினும் கணவன் இல்லாமல் வாழும் ஒரு பெண் குழந்தைகளுடன் ஒவ்வொரு நாளும் சூழ்நிலையோடு போராடிக் கொண்டிருக்கும் நிலையை கதவு என்னும் சிறுகதையின் மூலம் ஆசிரியர் கி.ராஜநாராயணன்

வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருப்பது பாராட்டுதலுக்கு உரியது.

பார்வை நூல்கள்

1. தமிழக பண்பாட்டு வரலாறு -மா. இராசமாணிக்கனார்.

2. தமிழ் இலக்கிய வரலாறு- தமிழண்ணல்.

3. கதவு -கி. ராஜநாராயணன் .

© 2026 முனைவர் . முத்தமிழ்ச் செல்வி. க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 74–79
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கு.அழகிரிசாமியின் “ராஜா வந்திருக்கிறார்”சிறுகதையில் பண்பாட்டுப் பதிவுகள்

முனைவர்.உமாராணி க*

உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி திருச்சிராப்பள்ளி-*620002., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.உமாராணி க — umaranisrc2016@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00045

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இக்கால இலக்கியம் என்ற இலக்கிய வகைப்பாட்டில் சிறுகதை இலக்கியம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. சிறுகதை எழுத்தாளர்களில் எளிய நடையில் அழகு தமிழில் சிறுகதைகளை வார்த்தெடுத்த பெருமைக்குரியவர் கு.அழகிரிசாமி ஆவார். இவரின் “ராஜா வந்திருக்கிறார்” சிறுகதை ஏழ்மையிலும் மனிதநேயம், தாய்மை, விருந்தோம்பல், பகிர்ந்துண்ணுதல் போன்ற உயரிய தமிழர் பண்பாடுகளை எடுத்துரைக்கும் சிறந்த படைப்பாகும். எளிய நடையிலும் ஆழ்ந்த உணர்வுகளுடனும் அமைந்துள்ள இக்கதையில் தாயம்மாள், தன் பிள்ளைகளுடன் பெற்றோரற்ற சிறுவன் ராஜாவையும் அன்போடு அரவணைத்து, உணவு, உறைவிடம், உடை ஆகியவற்றை வழங்குகிறாள். குறிப்பாக, பசியால் எச்சில் இலைகளில் சோற்றுப் பருக்கைகளை உண்ணும் சிறுவனின் நிலை வறுமையின் கொடுமையை வெளிப்படுத்துகிறது. அவனைத் தன் பிள்ளையாகக் கருதி உணவளித்து, தீபாவளியன்று தன் கணவனுக்காக இருந்த புத்துண்டையும் வழங்கும் தாயம்மாளின் செயல், “விருந்தோம்பல்”, “பகுத்துண்டு வாழ்தல்”, “பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதுதல்” போன்ற தமிழர் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்துகிறது. மேலும், தன் செயல்களின் வழியாகவே பிள்ளைகளுக்கு மனிதநேயம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைக் கற்றுத் தருகிறாள். இவ்வகையில், “ராஜா வந்திருக்கிறார்” சிறுகதை தாய்மையின் பெருமையையும் விருந்தோம்பலின் சிறப்பையும் எடுத்துரைப்பதோடு, ஏழ்மையிலும் பிறருக்கு உதவும் உயர்ந்த உள்ளம் கொண்ட வாழ்வியல் நெறியைப் பதிவு செய்யும் பண்பாட்டுச் சிறுகதையாகத் திகழ்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: சிறுகதை; விருந்தோம்பல்; பண்பாட்டு விழுமியங்கள்; மனிதநேயம்; சமத்துவம்; சகோதரத்துவம்.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: க, மு. (2026). கு.அழகிரிசாமியின் “ராஜா வந்திருக்கிறார்”சிறுகதையில் பண்பாட்டுப் பதிவுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 74–79. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8425

செம்மொழியான தமிழ்மொழியில் காலந்தோறும் படைக்கப்படுகின்ற இலக்கிய வளங்கள் யாவும் மொழியின் செழுமையை உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டே வருகின்றன. இறையனார் அகப்பொருள் உரையில் தொடங்கி இக்கால இலக்கியம் வரை பல்வேறு இலக்கியப் படைப்புகள் உருவாகிக்கொண்டே வருகின்றன. புத்திலக்கியங்களும், புனைகதைகளும் தமிழன்னைக்கு பெருமை சேர்க்கின்றன. இணையத்திலும் தமிழ்மொழி ஈடில்லா சிறப்புடன் வலம் வருகின்றது. மக்களின் யதார்த்த வாழ்க்கையினைப் பிரதிபலிக்கின்ற வகையில் சிறுகதை படைப்பாளர்களால் படைக்கப்பட்ட எழுத்தோவியங்கள் மனதிற்கு இலக்கிய இன்பத்தை அள்ளி வழங்குகின்றது. அவ்வகையில் எழுத்தாளர் கு.அழகிரிசாமி அவர்களின் சிறுகதைகள் எளிய நடையில் ஆழ்ந்த பொருளில் சுவைபட படைக்கப்பட்டுள்ளன. இவர்தம் “ராஜா வந்திருக்கிறார்” சிறுகதையில் இடம்பெறுகின்ற பண்பாட்டுப் பதிவுகளை இக்கட்டுரையில் காண்போம்.

பிறப்பும் கல்வியும்

தமிழ்நாட்டின் இன்றைய தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கும் கயத்தாறுக்கும் இடையில் உள்ள இடைசெவல் என்னும் சிற்றூரில், குருசாமி-தாயம்மாள் ஆகியோருக்கு முதல் மகனாக 23 செப்டம்பர் 1923 அன்று பிறந்தார்.

வசதியின்மை காரணமாக அவரை நான்காவது வரைகூட படிக்க வைக்க அவரது பெற்றோரால் முடியவில்லை. ஆனால், விடாமுயற்சியுடன் பத்தாம் வகுப்பு வரை படித்து முடித்தார். அந்தச் சிற்றூரில் பத்தாம் வகுப்பு வரை படித்தவர் என்ற பெருமை அவருக்கு உண்டு. பள்ளிப் படிப்பைவிட அவர் அனுபவத்தில் பெற்ற அறிவே அதிகம் எனலாம்.

ரஷ்ய எழுத்தாளர் கார்க்கியின் எழுத்து அவரை மிகவும் கவர்ந்தது. கார்க்கியின் நூலை முதன் முதலில் தமிழாக்கம் செய்தவர் இவர்தான். தமிழ் இலக்கியங்களுடன் மேல்நாட்டு இலக்கியங்களையும் படித்தார். பழைய பாடல்களுக்கு உரை எழுதும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார்.

இதழாசிரியர் பணி

அரசுப் பணியில் சேரத் தேர்வு பெற்றதால், சார்பதிவாளர் அலுவலகத்தில் முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்தில் எழுத்தர் உத்தியோகம் கிடைத்தது. ஆனால், நாள்தோறும் பத்திரங்களைப் பதிவது அவருக்குப் பிடிக்கவில்லை. அந்த எழுத்தர் உத்தியோகத்தில் மனநிறைவு ஏற்படவில்லை. அதனால் சென்னைக்கு வந்து, முதல் கதையை வெளியிட்ட "ஆனந்த போதினி' பத்திரிகை அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தார். "பிரசண்ட விகடனி'ல் வெளிவந்த அவரது கதைகளைச் சமகால எழுத்தாளர்களான வல்லிக்கண்ணனும், புதுமைப்பித்தனும், தொ.மு.சி.ரகுநாதனும் பாராட்டினார்கள். பிரசண்ட விகடன் பத்திரிகை அலுவலகத்தை விட்டுவிட்டு "தமிழ்மணி' என்ற அரசியல் வார இதழில் சேர்ந்தார்.

"தமிழ்மணி' வார இதழில் அவர் சில காலம்தான் பணியாற்றினார். அதன் பிறகு வை.கோவிந்தன் வெளியிட்ட "சக்தி' மாத இதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். அதன் ஆசிரியராக இருந்தவர் தி.ஜ.ரங்கநாதன். கு.அழகிரிசாமியின் முற்போக்குச் சிந்தனையையும், ஆற்றலையும் கண்டுகொண்ட வை.கோவிந்தன், அழகிரிசாமிக்குச் சக்தி இதழிலும் பதிப்பகத்திலும் இடமளித்து, எழுதுவதற்கு வாய்ப்பளித்தார். அழகிரிசாமியின் முயற்சியால் வெளியான கம்பராமாயணம், காவடிச் சிந்து ஆகிய பதிப்புகள் அவருடைய ஆராய்ச்சித் திறனையும் மொழியாக்க ஆற்றலையும் வெளி உலகுக்குத் தெரியப்படுத்தின. "ராஜா வந்திருக்கிறார்' என்ற அவரது கதை இந்திய

மொழிகளிலும், ரஷ்ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த கதையாகும். மலேசியாவில் ஐந்தாண்டுகள் (1952-1957) பணியாற்றினார்.

தமிழகத்தில் மீண்டும் எழுத்தாளர் பணி

1957-ஆம் ஆண்டு சென்னை திரும்பிய அவர், 1960-ஆம் ஆண்டு வரை காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். பிறகு "நவசக்தி' நாளிதழில் 1965 வரை பணியில் இருந்தார். "நவசக்தி' இதழில் இருந்த காலத்தில்தான் அவர் "கவிச்சக்ரவர்த்தி' என்ற வரலாற்று நாடகத்தை எழுதினார். அந்த நாடகம் அவருக்குப் பெயரையும் புகழையும் பெற்றுத்தந்தது. "நவசக்தி' நாளிதழ் பணியிலிருந்து விலகி, ஐந்தாண்டுகள் சுதந்திர எழுத்தாளராக இருந்தார். கடிதம் எழுதுவதை அவர் கடமையாகக் கொண்டிருந்தார். அவ்வாறு அவர் எழுதிய கடிதங்களை கி.ராஜநாராயணன் தொகுத்து, "கு.அழகிரிசாமி கடிதங்கள்' என்ற நூல் வெளிவந்துள்ளது. கு.அழகிரிசாமியின் சிறுகதைகள் ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. இறுதியாக "சோவியத் நாடு' ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். ஆனால், உடல்நிலை காரணமாக அவரால் முழுமையாக அந்தப் பணியில் தொடர முடியவில்லை.

சிறுகதை வரலாற்றில் கு.அழகிரிசாமி

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் அழகிரிசாமி பதித்த தடம் வித்தியாசமானது; சிறப்பானது. அவரை, அவரது சிறுகதைப் படைப்புகள்தாம் முதன் முதலில் தமிழ் இலக்கிய உலகிற்கு அடையாளம் காட்டின எனலாம். கதைகளில் உள்ளடக்கம், அமைப்பு அனைத்திலுமே சிக்கலற்ற எளிமைத் தன்மை காணப்படுகிறது. மனித உணர்வுகளே இவரது கதைகளில் அடிநாதமாக ஒலிக்கின்றன. அவர் எழுதி அச்சில் வெளிவந்த சிறுகதைகள் 101 ஆகும். 1963ஆம் ஆண்டு **அழகிரிசாமி கதைகள்** என்ற பெயரில் அவருடைய முதல் தொகுதி வெளிவந்தது. பின்பு, பன்னிரண்டு தொகுதிகள் தமிழ்ப் புத்தகாலயம், தேன்மழைப் பதிப்பகம் என்பவை மூலம் வெளியிடப்பட்டன. முதலில் வெளிவந்த **அழகிரிசாமியின் கதைகள்** என்ற தொகுதியே, **அன்பளிப்பு** என்ற பெயரில் ஒன்றிரண்டு கதை மாற்றத்துடன் திரும்பவும் வெளியிடப்பட்டது. அவருடைய கதைகள் அனைத்தும் 1940களிலிருந்து 1970 வரையிலான சுமார் 30 ஆண்டுக் காலத்தில் வெளிவந்தவைகளாகும். அழகிரிசாமி தம் கதைகளில் பல்வேறு கதைமாந்தர்களைப் படைத்திருந்தாலும், குழந்தைகளைப் பல கதைகளில் கதை மாந்தர்களாகப் படைத்துள்ளார். கு.அழகிரிசாமி, தம் தாயின் மீது மிகுந்த பற்றுடையவர். தம் தாயையே அவர் சில கதைகளில் பாத்திரமாக்கியுள்ளார். **ராஜா வந்திருக்கிறார்** கதையில் தம் தாயார் **தாயம்மா**வை மிகப் போற்றியுள்ளார்.

“ராஜா வந்திருக்கிறார்” சிறுகதை

தமிழ்இலக்கிய வரலாற்றில் 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்த அழகிரிசாமியின் அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு 1970-இல், சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது. இச்சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள “ராஜா வந்திருக்கிறார்” என்ற சிறுகதை ஓர் ஏழைக்குடும்பத்தில் பிறந்த மூன்று பிள்ளைகளின் மனவுணர்வினைப் படம்பிடித்துக் காட்டுகின்ற வகையில் எளிய நடையில் உணர்வுப்பூர்வமான படைத்துள்ளார் ஆசிரியர்.

கதைச்சுருக்கம்

தாயம்மாள் என்ற பெண்ணுடைய மூன்று பிள்ளைகள் செல்லையா, தம்பையா, மங்கம்மாள் ஆகியோர் ஆவர். இவர்களோடு பள்ளியில் ஒன்றாகப் படிக்கின்ற ராமசாமிக்கும் இவர்களுக்கும் எப்போதும் ஒரு போட்டி இருந்துகொண்டே இருக்கும். செல்லையாவுக்கும், ராமசாமிக்கும் புத்தகத்தில் உள்ள படங்களை ஒருவருக்கொருவர் காட்டி விளையாடுகின்ற படப்போட்டி நடக்கின்றது. இதில் செல்லையா தோற்றுபோய் விடுகிறான். மேலும் ராமசாமி தன்னிடம் சில்க் சட்டை இருப்பதாகவும், உங்களிடம் அது இருக்கா என்றும் மீண்டும் போட்டி போடுகிறான். அதற்கு மங்கம்மாள் எங்க அண்ணன் போட்டிருக்கும் சட்டை கெட்டியானது. சில்க் சட்டை சருகுபோல இருக்கு, என்று சொல்லி விடுகிறாள். பிள்ளைகள் எல்லோரும் சிரிக்கிறார்கள். ராமசாமிக்கு அதைத் தாங்க முடியவில்லை. தன்னுடைய வீடு வந்தவுடன் உள்ளே ஓடி விட்டான்.

தாயம்மாளின் மூன்று பிள்ளைகளும் வீட்டிற்கு வருகிறார்கள். மறுநாள் தீபாவளி இவர்கள் மூவருக்கு மட்டும் புத்தாடைகள் ஜாதிக்காய் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. அதோடு ஒரு புது துண்டு ஒன்று மட்டும் இருந்தது. அவங்க அம்மா தாயம்மாவிற்கு புத்தாடை இல்லை. அன்று இரவு மழை பெய்து கொண்டிருந்தது. செல்லையா, தம்பையா இருவரும் வீட்டிற்கு வெளியே சிறுநீர் கழிக்க சென்றபோது, தாய் தந்தையை இழந்து அனாதையாக நின்ற சிறுவன் தன் அத்தை வீட்டிற்குச் செல்ல நினைத்து பயணம் மேற்கொண்ட போது இரவுப்பொழுதானதாலும், பசி வந்ததாலும் ராமசாமி வீட்டிலிருந்து தூக்கி வீசப்பட்ட எச்சில் இலைகளில் உள்ள பருக்கைகளை உண்பதைப் பார்த்து அவனை விரட்டி அடிக்கின்றனர். உடனே அங்கு வந்த தாயம்மாள் அந்த சிறுவனை வீட்டிற்குள் அழைத்து வந்து உணவு தந்து தன் பிள்ளைகளோடு சேர்த்து உறங்க வைக்கிறாள்.

மறுநாள் தீபாவளி அன்று தன் கணவருக்காக இருந்த அந்த ஒரே ஒரு புதுத் துண்டினையும் அந்த சிறுவனுக்குத் தருகின்றனர். ராமசாமி வீட்டில் புது மாப்பிள்ளை அவனது அக்காவின் கணவன் ராஜா தீபாவளி கொண்டாட வந்திருக்கிறார். புத்தாடைகளை அணிந்து கொண்டு வீதியில் விளையாட வந்த மங்கம்மாளிடம் ராமசாமி எங்கள் வீட்டிற்கு ராஜா வந்திருக்கிறார் என்று கூற போட்டி போடுவதாக எண்ணிக்கொண்டு உடனே மங்கம்மாளும் தனது வீட்டிற்கு வந்த அந்த சிறுவன் பெயரும் ராஜா என்பதால் எங்கள் வீட்டிற்கும் ராஜா வந்திருக்கிறார் வேணும்னா வந்து பாரு என்று சொல்கிறாள். இவ்வாறாக கதை முடிவு பெறுகிறது.

பண்பாட்டுப் பதிவுகள்

“ராஜா வந்திருக்கிறார்” சிறுகதையில் தாயம்மாள் கதாபாத்திரம் தாய்மையின் இலக்கணமாக காட்சியளிக்கிறது. கருணை, அன்பு, இரக்கம் ஆகிய பண்புநலன்களைக் கொண்ட பெண்ணாக தாயம்மாள் காட்சி தருகிறாள். ஏழ்மையிலும் இரக்ககுணம் கொண்டவளாக திகழ்கிறாள். தனது மூன்றாவது பிள்ளை மங்கம்மாளைக் கொஞ்சுவதிலும், பிள்ளைகளைக் குளிப்பாட்டி, சோறூட்டி அன்பைத் தருவதிலும் தலைசிறந்தவளாகக் கருதப்படுகிறாள். வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களை உபசரிக்க வேண்டும், தாங்கள் உண்ணுவதை அவர்களுக்கும் தர வேண்டும் என்ற விருந்தோம்பல் பண்பாடு போற்றப்படுகின்றது.

விருந்தை வரவேற்றல்

தொல்காப்பியம் **“விருந்தே புதுமை”** என்கிறது. புதிதாக தனது வீட்டிற்கு வந்த சிறுவனை அன்போடு அழைத்து வந்து பரிவோடு பாசம் காட்டுகிறாள்.

முகத்தானாம் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்

இன்சொல் இனிதே அறம் - (குறள்.93)

என்ற குறட்பாவிற்கிணங்க அந்த சிறுவனை கருணையோடு கண்ணோக்கி கனிவோடு அரவணைத்து ஆதரவளிக்கிறாள். வீட்டிற்கு வந்தவர் பகைவராய் இருந்தாலும் அவர்களை வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடு. பகைவர் இல்லையென்றாலும் தன் பிள்ளை போல் உள்ள அந்த சிறுவனை வரவேற்று உபசரிக்கும் தாயம்மாளின் அறப்பண்பு பாராட்டுதற்குரியது.

விருந்து பரிமாறுதல்

உணவு வழங்கி உபசரிப்பது தமிழரின் தலையாய பண்பாகும். தானத்தில் சிறந்தது அன்னதானம் எனப்படுகிறது.

“தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில்

இந்த ஜகத்தினை அழித்திடுவோம்” – (பாரதியார் கவிதைகள்)

என்றார் பாரதியார். உயிர்வாழ்க்கைக்கு உணவே ஆதாரமாகின்றது. மழையில் நனைந்தபடி பசிக்காக ஏங்கி எச்சில் இலைகளில் சோற்றுப் பருக்கைகளைப் பொறுக்கி உண்ணக்கூடிய சிறுவனின் நிலை மிகவும் வேதனைக்குரியது.

“கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை” – (ஔவை.தனிப்பாடல்கள்)

என்றார் ஔவையார். நல்ல உணவினை வயிராற உண்ண வேண்டிய இளம்வயதில் ராஜா என்ற சிறுவன் பெற்றோரை இழந்து அனாதையாகி தனது அத்தை வீட்டிற்குச் செல்லுகின்ற வழியில் பசி மேலிட எச்சில் உணவினை உண்ணுகின்றான் அதனைக் கண்ட தாயம்மாள் அவனை அழைத்து வந்து தனது பிள்ளைகளுக்குத் தருகின்ற அந்த உணவையே அவனுக்கும் தந்து பசியாற்றுகிறாள்.

விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா மருந்தெனினும்

வேண்டற் பாற்று அன்று –(குறள்.82)

என்கிறது வள்ளுவம். இந்த சிந்தனை மரபினையுடையவளாக நிற்கிறாள் தாயம்மாள். அழுக்கு உடையோடு உடலில் காயங்களோடு காட்சி தருகின்ற அந்த குழந்தையையும் தன் குழந்தை போல் எண்ணுகின்ற நேரத்தில் தாயம்மாள் அன்னை தெரசா போலவே காட்சி தருகின்றாள்.

விருந்தைக் கொண்டாடுதல்

குளிரால் நடுங்கிய மயிலுக்குப் போர்வை போர்த்தினான் கடையெழு வள்ளல்களில் ஒருவனான பேகன் என்னும் வள்ளல். அது போலவே தீபாவளி அன்று நீராடிவிட்டி ஆடையின்றி நின்ற அந்த ஏழைச் சிறுவனுக்கு தன்னிடம் தன் கணவனுக்கான இருந்த ஒரே ஒரு துண்டினையும் வழங்கி விருந்தைக் கொண்டாடினாள் தாயம்மாள். ஒரு மனிதனுக்கு உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை இவை மூன்றும் அடிப்படை தேவைகளாகும். அவற்றையெல்லாம் சற்றும் முகம் சுளிக்காமல் தயையோடு வழங்கிய தாயாக கருணைக்கடலாக தாயம்மாள் காணப்படுகிறாள்.

பண்பாட்டைக் கற்றுத் தருதல்

சமுதாயத்தில் வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும், பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போல் எண்ண வேண்டும் ஆகிய சிந்தனைகளைத் தன் பிள்ளைகளுக்கு தனது செயல்பாட்டின் மூலமாக கற்றுத் தருகிறாள் தாயம்மாள்.

பகுத்துண்டு வாழ வேண்டும், பிறர் நலம் காக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனைகள் இவளின் நடவடிக்கைகளில் வெளிப்படுகின்றன. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது பழமொழி. பிள்ளைகளுக்கு இளம் வயதில் சொல்லித் தருகின்ற படிப்பினைகள் பசுமரத்தாணி போல் அவர்கள் மனதில் பதிந்து விடும். செல்லையா, தம்பையா, மங்கம்மாள் ஆகிய மூன்று குழந்தைகளோடு சேர்த்து ராஜாவையும் தனது பிள்ளை போல் எண்ணுகின்ற தாயம்மாளின் பாசம் தாய்மையின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

இவ்வாறாக அழகிய நடையில் தெளிந்த நீரோடை போல அமைந்துள்ள "ராஜா வந்திருக்கிறார்" சிறுகதை வாசிக்க வாசிக்க இன்பம் தருகின்றது. நவில்தொறும் நூல் நயம் என்ற குறளுக்கு இலக்கணமாக அமைந்துள்ளது. ஆசிரியர் தனது தாயாரை மனதில் வைத்து எழுதியிருக்கும் இச்சிறுகதை தாயின் அன்பினை, அக்கறையினை, அரவணைப்பினை எடுத்துக்காட்டுகின்றது. அன்னையின் கருணைக்கு அளவில்லை என்பதை வலியுறுத்துகின்றது. விருந்தோம்பல் பண்பாட்டினைப் போற்றுகின்ற வகையில் அமைந்துள்ளது. தன்னைப் போல பிறரையும் நேசிக்க வேண்டும் என்ற பண்பினைக் கற்பிக்கின்றது. சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகளைப் போற்றுகின்றது.

துணைநூல்கள்

1. அன்பளிப்பு சிறுகதைகள், அழகிரிசாமி கு. சக்தி காரியாலயம், சென்னை, 1952.
2. ஔவையார் தனிப்பாடல்கள், புலியூர் கேசிகன், மங்கை வெளியீடு, சென்னை, 2010.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 2008.
4. பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம், சென்னை, 1977.
5. திருக்குறள் தெளிவுரை, வரதராசனார், மு. திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே. சாலை, சென்னை,1969.

© 2026 முனைவர்.உமாராணி க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 80–84
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தேன்கிண்ணம் கவிதையில் இறையும் இயற்கையும்

மோனிகா காந்தி மோ[1,*], முனைவர். வைடூரியம்மாள் பா[2]

[1] (பதிவு எண்: 241111701004) முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி., *India*

[2] உதவிப்போராசிரியர், தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: மோனிகா காந்தி மோ — bvaiduma@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00044	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

அறிஞர் சூ.செல்லப்பா ஓர் இந்திய ஆட்சிப்பணி அதிகாரியாக பணியாற்றியபோது பல கவிதை நூல்களைப் படைத்துள்ளார். “தேன் கிண்ணம்” என்னும் தலைப்பிலான கவிதைத் தொகுதியில் பல பாடு பொருள்களைக் கவிதையாக்கியுள்ளார். அவற்றில் இறை, இயற்கை இவ்விரண்டைப்பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.படைப்பாளி, ஏராளமான கவிதை நூல்களையும், மொழி பெயர்ப்புக் கவிதைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் உருவாக்கியிருந்தாலும் “தேன்கிண்ணம்” எனும் கவிதை நூல் மட்டுமே இதன் ஆய்வு எல்லையாக அமைகின்றது.இயற்கையைப் பற்றிய கவிதையில் மனித இனத்திற்கு மட்டுமல்லாது எல்லா உயிர்களுக்கும் பயன் அளிக்கும் தன்மையையும் கடவுள் பற்றிய புரிதலும் இவ்ஆய்வின் பயனாகக் கொள்ளப்படுகின்றது.

Keywords / திறவுச்சொற்கள்: இறை; இயற்கை; கவிதை; இயற்கையின் கொடை

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மோ, மோ. கா., & பா, மு. வை. (2026). தேன்கிண்ணம் கவிதையில் இறையும் இயற்கையும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 80–84. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8427

Kd;Diu:

gd;Kfg; gilg;ghspahd #.nry;yg;gh mth;fs; ,e;jpa Ml;rpg; gzp (IAS) mjpfhhpahfg; gzpahw;wpa mDgtq;fspD}lhf> jdJ ftpahSikapd; top gy ftpijfisAk; gbg;Nghhpd; nrtpfSf;Fj; Njd; fye;J nfhLj;jpUf;Fk; ,dpikahd thpfSf;Fhpath;. fhpry; g+kpapy; gpwe;J> rNthpahh; fy;Y}happy; gapd;W> Me;jpu khepyj;jpy; gzpahw;wpa gilg;ghspapd; tho;tpay; #oypy;> jd;Dila Chpd; epiyiag; gy ftpijfshf;fpj; je;Js;shh;. jd;Dila ,iw mDgtq;fisAk; mofpay; Nehf;fpYk; mq;fj nkhopapYk; ftpijahf;fk; nra;Js;sij ,f;fl;Liu tpsf;Ftjhf mikfpd;wJ.

,aw;ifr; rpj;jphpg;G:

kdpj Fyj;jpw;F ,aw;if nfhLj;jpUf;Fk; Vuhskhf nfhilfisg; ngw;Wf; nfhz;L> ,aw;ifia mopg;gjpy;

ftdk; nrYj;jf;$lhJ vd;w gjpiyf; fhz Kbfpd;wJ.

“Nfl;lhy; nfhLf;Fk; ,aw;if

NfshkYk; nfhLg;gtd; flTs;”

-g.11- Njd;fpz;zk;

,aw;if czT:

ftpQh; jd;Dila cly;> nghUs;> Mtp vd midj;jpYk; ,aw;if ClhbapUg;gijr; rpj;jphpg;Gr; nra;Js;shh;. vd;Dila fz;fs; jpd;gJ #hpadpd; fhiyr; nrt;thdk;. vdJ fhJfspy; fly; miyfspd; ,iur;ry; ghly;fshfg; gjpe;Js;sd. neQ;rk; caph;g;gJ ,jkhd njd;wy; fhw;W topahf vd ,aw;if moF jdf;F czthf mike;Js;sijf; $wpAs;shh;. tho;ehspy; ney;> mapiu kPd;> fha;> fdpfs; vy;yhk; vdf;F czthfpd;wd. ,Wjpapy; vd; %r;R epw;Fk;NghJ vd; cliy ,aw;ifNa czthf;fpf; nfhs;fpd;wJ. mjhtJ> ,we;j gpd;dh; kz;zpy; mlf;fk; nra;Ak; epiyapidj; njspTgLj;Jfpd;whh;.

“----------

ehd; thOk; NghJ

eP vdf;F czthfpwha;

ehd; rhFk;NghJ

vd;idNa czthf;fpf; nfhs;fpwhNa!”

-g.18- Njd;fpz;zk;

vd;w ftpij thpfspy; ,we;jgpd;G cliy ,k;kz; jpd;fpwJ vd;w epiyahikf; fUj;jpidr; Rl;bAs;shh;. ,aw;if czT gw;wpa ,f;ftpijapy;> Ntshz;Fb kf;fspd; tho;tpay; epiykhfpa kUj epy tay;fspYk; XilfspYk; ‘mapiu kPd;’ Mb Xb tpisahLfpd;wd vd;w nra;jpapidAk; Mrphpah; Fwpg;gpl;Ls;shh;.

,aw;if mopg;G:

ftpQh; ,aw;ifiag; ghJfhf;f Ntz;Lk; vd;w cahpa Nehf;fpy;> jhd; gpwe;J tsh;e;j Chpd; ,aw;ifahd MW> Fsk; Mfpatw;iw vLj;jhz;Ls;shh;. Ntshz;ikf;Fg; gad;gLk; Fsq;fs; kioapd;wp tw;wpg; Nghdhy; vd; fz;fs; fz;zPh;f; Fsk; MFk; vd;fpwhh;. Nfhilf;fhyj;jpYk; tPRk; fhw;wpdhy; nrb> cjph;e;J Nghtij> kuq;fspd; Nriyfs; mtpo;f;fg;gLtjhff; $wpAs;shh;. mjidj; njhlh;e;J tUk; Gjpa jsph; mtw;iw jhtzpahy; Nghh;j;jpf; nfhs;Sk; vd;w ,skq;ifia cUtfkhf;fpAs;sij Mrphpahpd; ftpahSikahff; Fwpg;gplyhk;.

gilg;ghspapd; gpwe;j Cuhd K.Nfhl;^hpy; XLfpd;w itg;ghw;wpy; kzy; nfhs;is Nghtijf; fz;bf;fpwhh;. Mw;wpy; kzy; nfhs;isabf;fg;gLtjhy; itg;ghW jd; Milapid ,oe;jJ vd;gij>

“Fsq;fs; tw;wplf; fz;lhy;

Fsq;fs; MFk; vd; fz;fs;!

Nfhilf; fhw;Wk; nfhQ;rk;

nrb nfhbfspd; Nriyia mtpo;jhNy

FKwpf; FiyAk; vd; neq;rk;!

GJj; jsph;j; jhtzpahNy

Nghh;j;jp kfpo;e;J nfhQ;Rk;!

Mw;W kzy; nfhs;isapdhy;

Mil ,oe;jJ itg;ghW”

,aw;ifia mopj;J ePAk;

ahUld; tho;tha; ,q;Nf?"

-g.24- Njd;fpz;zk;

Nkw;Rl;ba ftpij thpfspy; moFglf; $wpAs;sij mwpa Kbfpd;wJ.

kdpj ,dk; Vd; jw;nfhiy nra;J kha;j;Jf; nfhs;fpwJ? vd;w Nfs;tpia> ,aw;ifj; jhaplk; Nfl;fpwhh;. ,aw;if md;idNa gytpj gilg;Gfis eP gilj;Js;sha;. rpwpa caph;fs; vd;W ehq;fs; fUJfpd;w ML> khL> mzpy;> kapy; Nghd;w caph;fs; jq;fSf;F vj;jid Jd;gq;fs; te;jhYk; mitfs; jw;nfhiy nra;akhl;lh? Mdhy; MwwpT nfhz;l kdpjd; kl;Lk; jw;nfhiy nra;tjd; xOf;fk; vd;d? vd;w tpdhit vOg;gp> jw;nfhiy nra;af;$lhJ vd;w fUj;ijg; gilg;ghsp jkJ ftpijapy; Rl;bAs;shh;.

",aw;ifj; jhNa!

gilg;Gfs; gw;gy eP gilj;jhNa!

rpw;Waph; vd;W ehq;fs; fUJk;

MLk;> khLk; mzpYk; kapYk;

vj;jidj; Jd;gq;fs;

vjph; te;jhYk;

jw;nfhiy nra;ah.....?"

-g.33- Njd;fpz;zk;

ftpijfspy; ,iw:

gilg;ghsp #.nry;yg;gh mth;fs; ,iw ek;gpf;iff; nfhz;bUg;gtuhfj; jd;Dilaf; ftpj;Jtj;ij ntspg;Lj;jpAs;shh;. mofhd ,t;Tyfj;ijg; gilj;j flTs; jd;Dilag; ngaiu vq;Fk; Fwpg;gplhky; ,Ue;Js;sjhff; $Wfpd;whh;. gy;NtW rkaq;fs; gy ngah;fSld; ,iwtid topgL nja;tkhfr; Rl;bAs;sd. ftpQh; #.nry;yg;ghTk; vtUk; flTSf;Fr; #l;lhj xU Gjpa ngaiug;> "gbkf; fiyQd;" vd;W ftpahf;fpAs;shh;.

" mofpa cyfj;ij Mf;fpa

me;jg; gbkf; fiyQd;

vq;Fk; jd;Dila ngaiu

vOjhky; kwe;jJ Vd;"?

-g.11- Njd;fpz;zk;

vd;w thpfspy; cyifg; gilj;j gbkf; fiyQdhff; flTisr; rpj;jphpj;Js;shh;.

,t;Tyifg; gilj;j flTs; gy epiyfspy; fhyr; rf;fuj;ij> cyfk; ,aq;Fk; epiyia vg;gb nray;gLj;Jfpd;whd; vd;w fUj;J> gilg;ghspaplk; Vw;gl;lJ. ,iwtidg; ghh;f;f tljpirf;Fr; nrd;whh;. Mdhy; ,iwtNdh Fljpir Kbia itj;Jf; Fwl;il tpl;L epj;jpiu nra;jjhfg; gjptpl;Ls;shh;. fhyr;rf;fuk; Xl;Ltij tpl;L tpl;L mtdhy; vg;gb cwq;f Kbfpd;wJ? vd;W rpe;jpf;Fk; Ntisapy;> ,iwtdJ fz;fs; tpopj;Jf; nfhz;ld. mtdJ fdpe;j cjl;by; rphpg;G kpd;dpaJ vd;fpwhh;. cd;dhy; vg;gb mikjpahf cwq;f Kbfpd;wJ? ,e;j mikjpia vdf;Fk; mUs;tha; vdf; ftpQh; Nfl;lNghJ> ,uz;L fl;lisfisf; nfhLj;jhh;. cyfpy; cs;s vy;yh caph;fSf;Fk; ed;ik nra;! nkd;NkYk; njhlh;e;J ed;ik nra;! kdpjh;fs; midtUk; nra;a Ntz;ba ,f;fl;lisfis>

"----------

,uz;L fl;lisfis

vdf;Ff; nfhLj;jhd;

vy;yh caph;f;Fk; ed;ik nra;;

nra;Ak; ed;ikia

nkd;NkYk; nra;

-g.14- Njd;fpz;zk;

vd;w ftpij thpfspy; cuf;fr; nrhy;ypapUg;gij mwpa Kbfpd;wJ.

flTSk; khe;jDk; vd;w fUj;J ts;StUf;F Kd;dNu jkpo;f; FKfk; flTs; gw;wpa njspthd Nfhl;ghl;bidf; nfhz;bUe;jJ. fle;J epd;wtd;> cs;spUe;J ,af;Ffpd;wtd; vd;w nghUs; nghjpe;j nrhw;fs; flTspd; Nguhw;wiyAk; ,aq;F epiyiaAk; tpsf;FfpwJ vd;W fl;Liuahsh; $wpAs;shh;. (g.58> ftpQh; #.nry;yg;ghtpd; gilg;Gyfk;)

flTisj; Njb xUehs; fhl;Lf; NfhtpYf;Ff; ftpQh; nrd;Ws;shh;. Mdhy; mf;flTNsh> ele;J> ele;J eype;J Nghd jk;Kila njhz;lh;fspd; jpUtbfisf; fOtplf; fhnly;yhk; jphpfpd;whuhk; vd;w nra;jpapid>

“----------

mtNdh

ele;J ele;J

eype;jjd; fOtplj;

jphpfpwhdhk; fhnly;yhk;”

-g.14- Njd;fpz;zk;

ftpij thpfshf;fp eak;gl ciuj;Js;shh;. ,f;ftpij cUthf;fk; kw;Wk; fUthf;fk; ngWtjw;F> J}a tptpypak; mbg;ilf; fhuzk; vd;gijf; ftpQh; tpsf;fpAs;shh;.

tptpypaj;jpd; Gjpa Vw;ghl;by; ,iwtd; ,NaR gpuhd; jd;Dila rPlh;fspd; fhy;fiyf; fOTk; Kf;fpakhd epfo;T> cyfpy; NtW ve;j FUthdtUk; jd;Dila rPlh;fSf;Fr; nra;ahj> msg;gwpa> rPlh;fs; gpd;gw;w Ntz;ba mhpa nraiyr; nra;J fhl;bdhh;.

“Ngh[dj;ij tpl;nle;J t];jpuq;fisf;

fow;wp itj;J. xU rPiyia vLj;J

miuapNy fl;bf; nfhz;L> gpd;G ghj;jpuj;jpy;

jz;zPh; thh;j;J> rP\Uila fhy;fisf; fOtTk;>

jhk; fl;bf; nfhz;bUe;j rPiyapdhy; Jilf;fTk;

njhlq;fpdhh;.!!

(J}a tptpypak; Nahthd; 13:4-5)

tptpypaj;jpy; ,NaR gpuhd; epfo;j;jpa xU nraiy ftpijahf;fpa MSikia czu Kbfpd;wJ.

KbTiu:

gilg;ghsp mwpQh; #.nry;yg;gh fhpry; tl;lhuj;jpy; gpwe;J ftp MSikahy; cah;e;J epw;gth;. ,aw;ifia mof;ff;$lhJ vd;w nghJikj; jd;ikia tpsf;fpAs;shh;. kdpj Fyj;jpw;F ,aw;ifapd; nfhil msg;gwpaJ.

,aw;if nfhLf;Fk; czitg; ngw;Wf; nfhs;fpNwhk;. Mdhy; kdpjd; ,wf;Fk;NghJ mtdJ cliy ,aw;ifNa (epyk;)

czthf;fpf; nfhs;fpwJ vd;w czTg; ghpkhw;wj;ijf; ftpijahf;fpAs;shh;.

jd;Dila Chpd; Fsq;fs; jz;zPhpd;wp tw;wpaijf; fz;Zw;w ftpQhpd; fz;fs; fz;zPh;f; Fskhfptpl;lJ vd;w Jd;gpaiy vLj;jhz;Ls;shh;.

,aw;ifahf Mw;W kzy; kdpjUf;Fg; gad;gLtijg; nghWj;Jf; nfhs;f Kbahky;> jpUl;Lf; $l;lkhd kzy; nfhs;isah;fisf; ftpijapy; rhbAs;shh;.

cyfj;ijg; gy tpjq;fspy; moFzh;r;rpAld; gilj;j flTisg;> “gbkf; fiyQd;” vd;w ngah; #l;b mioj;Js;shh;. rpwpa caph;fs; $lj; jw;nfhiy nra;ahj epiyapy; kdpjd; kl;Lk; Vd; jw;nfhiy nra;fpwhd;? Vd;w tpdhit vOg;Gfpwhh;.

,iwtd; ,NaRgpuhd; jk;Kila rPlh;fspd; fhy;fisf; fOtpa J}a tptpypa epfo;itf; fijf; fskhf;fpAs;shh;. mjhtJ> ,iwtidj; Njbj;Njb miye;j kdpjhpd; fhy;fis ,iwtNd fOtpa Kd;khjphpahd jho;ikf; Fzj;ij cyfpw;Fr; nrhd;w gilg;ghspahf #.nry;yg;gh (IAS) tho;e;J tUfpd;whh; vd;gij Muha Kbfpd;wJ.

Jiz epd;w E}y;fs;:

1.	#.nry;yg;gh IAS	Njd; fpz;zk; rq;fk; gjpg;gfk; rhiy vz; 2 gpypk; efh;> Ijuhghj;J ,uz;lhk; gjpg;G 2025
2.	M.nry;yg;gh (g.M)	ftpQh; #.nry;yg;ghtpd; IAS gilg;Gyfk;> (fUj;juq;ff; fl;Liufs;) nt.g.R jkpopay; Ma;T ika ntspaPL> k.jp.jh ,e;Jf; fy;Y}hp jpUney;Ntyp Vg;uy; 2025
3.	--------	J}a tptpypak;> ,e;jpa Ntjhfkr; rq;fk;> ngq;f@h;.

© 2026 மோனிகா காந்தி மோ, முனைவர். வைடூரியம்மாள் பா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 85–88
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கு.அழகிரிசாமியின் சிரிக்கவில்லை-மௌனப் பார்வை

முனைவர்.விஜயலெட்சுமி ஆ*

உதவிப்பேராசிரியர்&துறைத்தலைவர்,தமிழ்த்துறை,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஓட்டப்பிடாரம்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.விஜயலெட்சுமி ஆ — vijayalakshminov74@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00043

Abstract / ஆய்வுச்சுருக்கம்

‘சிரிக்கவில்லை’ சிறுகதை மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் வெளிப்படும் உளவியல் உணர்வுகள், சமூகச் சூழல், உறவுகளின் தன்மை, மனப்போராட்டங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி ஆராயத்தக்கதாக அமைகிறது. இக்கதையில் இடம்பெறும் கதாபாத்திரங்களின் செயல்பாடுகள் மற்றும் உரையாடல்,உரையாடலின்மைகளின் வழியாக அவர்களின் வெளிப்படையான நடத்தைக்கும் உள்ளார்ந்த மனநிலைக்கும் இடையிலான வேறுபாடு வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, சிரிப்பு என்பது மகிழ்ச்சியின் வெளிப்பாடு மட்டுமல்ல; சில நேரங்களில் மனவேதனை, ஏமாற்றம், இயலாமை, சமூக அழுத்தம் ஆகியவற்றை மறைக்கும் வெளிப்புறத் தோற்றமாகவும் அமைகிறது .

‘சிரிக்கவில்லை’ சிறுகதையின் கதை அமைப்பு, கதாபாத்திரப் படைப்பு, உளவியல் கூறுகள், சமூகப் பார்வை, உரையாடல் உத்தி மற்றும் தலைப்புப் பொருத்தம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. கதாபாத்திரங்களின் மனவுணர்வுகள் எவ்வாறு நிகழ்வுகளின் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பதும் ஆராயப்படுகிறது. இச்சிறுகதை தனிமனித உளவியலையும் சமூக உறவுகளையும் இணைத்துப் பதிவு செய்யும் படைப்பாக இவ்வாய்வில் அணுகப்படுகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: உணர்வு வெளிப்பாடு; சிரிப்பின்மை; மௌனப் பார்வை; உளவியல்; உடல்மொழி

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ஆ, மு. (2026). கு.அழகிரிசாமியின் சிரிக்கவில்லை-மௌனப் பார்வை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 85–88. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8429

முன்னுரை:

இலக்கியவகைகளில் சிறுகதை என்பது வெறும் பொழுதுபோக்குக்குச் சாதனமாக இல்லாமல்,படித்து முடிப்பவரின் சிந்தையில் ஒரு சிறந்த கருத்தை,சிறந்த உண்மையைக் கையிருப்பாக விட்டுச்செல்லவேண்டும் என்றக் கோட்பாட்டை

அழகாகத் தம் கதைகளில் பதிவு செய்கிறார் கு.அழகிரிசாமி.அவர்தம் படைப்புகளில் 'சிரிக்கவில்லை' என்னும் படைப்பு, பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

தலைப்பின் பொருத்தம்:

'சிரிக்கவில்லை' என்பது படைப்பின் முக்கியமான குறியீட்டுத் தலைப்பாக அமைகிறது. சிரிப்பு என்பது மகிழ்ச்சி, நெருக்கம், அன்பு, ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் இயல்பான உணர்வாகும். எனவே, 'சிரிக்கவில்லை' என்பது ஒரு செயலின் எதிர்வு மட்டுமல்ல; கதாபாத்திரத்தின் உள்ளத்தில் நிகழும் உணர்ச்சிப் போராட்டத்தின் வெளிப்பாடாகவும் அமைகிறது.

மனித உறவுகளின் சித்திரிப்பு:

கதையில் ராஜாராமன், பாப்பம்மாள் உள்ளிட்ட பாத்திரங்களின் எளியச் செயல்பாடுகள் வழியாக மனித உறவுகள் சித்திரிக்கப்படுகின்றன. ஒருவர் மற்றொருவரிடம் கொண்டுள்ள அக்கறை நேரடியாகச் சொல்லப்படாமல், பார்வை, பேச்சு, வருகை, உடல் மொழி போன்றவற்றின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது.

"சும்மாவந்தேன் என்றாள் பாப்பம்மாள்

எப்பக் கேட்டாலும் 'சும்மாதானா'!

ராஜராம்சிரித்தான். பாப்பம்மாள் சிரிக்கவில்லை.அவசியம் இல்லாமலே நான் வீட்டுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டுபோய்விட்டாள்"(பக்11சிரிக்கவில்லை ,தமிழ்ப்புத்தகாலயம்)

இதனால் ஆசிரியர், "சொல்லப்படாத உணர்வுகளுக்கும் இலக்கியத்தில் இடம் உண்டு" என்பதை உணர்த்துகிறார். ஒரு சிறிய நிகழ்வைக் கூட மனநிலைகளின் மாற்றத்தோடு இணைத்துக் காட்டுவது படைப்பின் சிறப்பாகும்.

உளவியல் அணுகுமுறை:

பிராய்டின் உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டின்படி, மனிதனின் வெளிப்படையான செயல்களுக்குப் பின்னால் நனவிலி மனத்தில் புதைந்திருக்கும் ஆசைகள், எண்ணங்கள், உணர்வுகள் செயல்படுகின்றன. நனவிலி உள்ளடக்கங்கள் நேரடியாக வெளிப்படாமல் வேறு வடிவங்களில் வெளிப்படலாம்.("That source is the unconscious."— Sigmund Freud, The Interpretation of Dreams)

'சிரிக்கவில்லை' கதையில் பாப்பம்மாள் ராஜாராமனின் வீட்டிற்கு அடிக்கடி வந்து, அவனுடைய தாயாருக்கு வீட்டு வேலைகளில் உதவுவது போன்ற செயல்கள் வழியாக அவளுடைய அன்பும் ஈடுபாடும் மறைமுகமாக வெளிப்படுகின்றன. இத்தகைய பாத்திரச் சித்திரிப்பே கதையின் உளவியல் தன்மைக்கு அடிப்படையாக அமைகிறது.("The dream would not occur if the preconscious wish were not reinforced from another source: Sigmund Freud, The Interpretation of Dreams)

பாப்பம்மாள் முதலில் சிரித்த நிகழ்வுக்கும் பின்னர் சிரிக்காமல் இருந்த நிகழ்வுக்கும் இடையிலான வேறுபாடு, அவளுடைய மனவளர்ச்சியையும் உணர்வு மாற்றத்தையும் வெளிப்படுத்துவதாக இலக்கியத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (கார்ல் யுங் – நனவிலி மனமும் குறியீடும்)யுங், மனித மனத்தில் நனவிலி நிலை முக்கியப் பங்கு வகிப்பதாகக் கருதுகிறார். குறிப்பாக குறியீடுகள் (symbols) மூலம் நனவிலி மனத்தின் உள்ளடக்கங்களைப் புரிந்துகொள்ள முடியும்.(Man and His Symbols) நூல் நனவிலி மனம், கனவு, குறியீடு ஆகியவற்றின் தொடர்பை விளக்குகிறது)

‘சிரிக்கவில்லை’ படைப்பின் முக்கியமான இலக்கியச் சிறப்பு அதன் உளவியல் நோக்கு ஆகும். கதாபாத்திரங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை மட்டும் ஆசிரியர் பதிவு செய்யவில்லை; அவர்கள் எவ்வாறு உணர்கிறார்கள் என்பதையும் வாசகன் உணரக்கூடிய வகையில் நிகழ்வுகளை அமைக்கிறார்.

படைப்பில் காணப்படும் வீட்டு வாழ்க்கை, பொருளாதாரச் சூழல், அன்றாட வேலைகள், வெயில், உணவு மற்றும் குடும்பச் செயல்பாடுகள் போன்ற விவரங்கள் சமூக வாழ்க்கையை இயல்பாகப் பிரதிபலிக்கின்றன.

பாத்திரப் படைப்பு

பார்ப்பம்மாள் பாத்திரமும் வெறும் துணைப் பாத்திரமாக இல்லாமல், கதையின் உணர்வியல் இயக்கத்திற்கு முக்கியத்துவம் பெறுகிறது. அவளது வருகை, பேச்சு, செயல்பாடுகள் மற்றும் குறிப்பாக சிரிப்பின் இல்லாமை ஆகியவை கதையின் மைய உணர்வை வலுப்படுத்துகின்றன.

இயற்கைச் சூழலின் பங்கு:

படைப்பில் வெயில், வாசல், வீடு, சுற்றுப்புறச் சூழல் போன்றவை வெறும் பின்னணிக் கூறுகளாக மட்டும் அமையவில்லை. கதாபாத்திரங்களின் மனநிலையோடு அவை இணைக்கப்படுகின்றன.

குறிப்பாக வெயிலின் கடுமை, காட்சியின் உணர்வுத் தீவிரத்தையும் மனநிலையின் அழுத்தத்தையும் அதிகரிக்கிறது. இயற்கைக் காட்சியை மனித உணர்வுடன் இணைப்பது படைப்பின் கலைத்தன்மையை உயர்த்துகிறது.

உரையாடல்களின் சிறப்பு

படைப்பில் இடம்பெறும் உரையாடல்கள் கதையை முன்னெடுத்துச் செல்வதோடு மட்டுமல்லாமல், பாத்திரங்களின் மனநிலையையும் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக நேரடியாகச் சொல்ல முடியாத உணர்வுகள் உரையாடல்களின் இடைவெளிகளிலும் எதிர்வினைகளிலும் வெளிப்படுகின்றன.

குறியீட்டியல் நோக்கு

இப்படைப்பில் ‘சிரிப்பு’ ஒரு முக்கியக் குறியீடாகக் கொள்ளத்தக்கது. சிரிப்பு இல்லாமை என்பது ஒரு சாதாரண உடல் வெளிப்பாடு அல்ல. அது உறவுக்குள் உருவாகும் இடைவெளியையும், மன த்தடையையும், எதிர்பார்ப்பையும் குறிக்கிறது.

முடிவுரை

, ‘சிரிக்கவில்லை’ என்னும் படைப்பு வெளிப்படையாக ஒரு சிறிய வாழ்க்கை நிகழ்வைச் சொன்னாலும், அதன் உள்ளடக்கத்தில் மனித உறவுகளின் நுட்பம், சொல்லப்படாத உணர்வுகள், உளவியல் போராட்டம், சமூக யதார்த்தம் ஆகிய பல்வேறு கூறுகள் பொதிந்துள்ளன. ‘சிரிப்பு’ என்ற ஒரு சிறிய மனித உண்ர்வுவெளிப்பாட்டை மையமாக வைத்து, ‘சிரிக்காமை’க்குள் மறைந்திருக்கும் உணர்வுகளை வாசகனுக்குப் புலப்படுத்துவதே படைப்பின் முக்கியக் கலைச்சாதனை. (ப. 10.அழகிரிசாமி, சிரிக்கவில்லை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு, 1952)

துணைநூற்பட்டியல்:

1.அழகிரிசாமி, கு. சிரிக்கவில்லை : கதைகள். சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், முதற்பதிப்பு, 1952.

2.தா. ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ஜெய்தினைப் பதிப்பகம், சென்னை, 2012.

3.தி. ச. நடராசன், திறனாய்வுக்கலை, NCBH, சென்னை, 2012.

க. பஞ்சாங்கம், தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அகம், தஞ்சாவூர், 2004.

4.க. கைலாசபதி, திறனாய்வுப் பிரச்சனைகள், சென்னை புத்தக ஹவுஸ், சென்னை, 1980

5.குவிகம் மின்னிதழ்

6.ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம். சிரிக்கவில்லை : கதைகள் / கு. அழகிரிசாமி.

7. Sigmund Freud, The Interpretation of Dreams ◆

Psych Web

© 2026 முனைவர்.விஜயலெட்சுமி ஆ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 89–98
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

ஆழிசூழ் உலகு நாவல் காட்டும் பரதவர் வாழ்வியல்

சந்திரா கோ[1,*], முனைவர்.ராமபாண்டி க[2], முனைவர்.மகேஸ்வரி மு[3]

[1] *India*
[2] உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி,திசையன்விளை ., *India*
[3] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்., *India*
* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சந்திரா கோ — chandra16477@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00042

Abstract / ஆய்வுச்சுருக்கம்

நவீன இலக்கியங்களில் ஒன்றான நாவலானது மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாகும். படைப்பாளரின் சமூக நோக்கங்களுக்கு ஏற்ப படைப்பிலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. சாகித்ய அகாதெமி விருது பெற்ற நாவலாசிரியரான ஜோடி குரூஸ் அவர்கள் தங்கள் படைப்புகளில் தான் பிறந்து வளர்ந்த மண்ணின் நாமம் பரப்பும் பரதவ இன மக்களின் வாழ்வியலை அனுபவத்தின் வாயிலாக படைத்திருப்பதைக் காண முடிகிறது. அவ்வகையில் அவருடைய ஆழி சூழ் உலகு நாவலில் பரதவ மக்களின் வாழ்வியல் கூறுகளான தொழில், விருந்தோம்பல் பண்பு, மேற்கொள்ளும் பிரச்சனைகள் மனிதாபிமான செயல்கள் அனைத்தையும் கண்டறிவதாக இவ்வாய்வு அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: நவீன இலக்கியம்; மக்கள் வாழ்வியல்; சமூக நோக்கம்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: கோ, ச., க, மு., & மு, மு. (2026). ஆழிசூழ் உலகு நாவல் காட்டும் பரதவர் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 89–98. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8431

முன்னுரை

மக்களின் வாழ்க்கையினைக் கதை மூலமாகக் கலை வடிவில் வெளிப்படுத்தும் கதை மட்டுமல்ல அது ஒரு சமூகத்தின் வெளிப்பாடு நாவல் எனலாம். நாவல் மூலமாக ஒரு சமூகத்தை வெளிப்படுத்துவதில் நாவலாசிரியரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் தான் உணர்ந்த வாழ்க்கையை மொழி வடிவில் வெளிப்படுத்த அசாத்தியமான திறமை வேண்டும். இத்திறமை ஜோடி குருஸுக்கு அமைந்திருக்கிறது. இவருடைய மூன்று நாவல்களும் பரதவ சமூக மக்களின் வாழ்க்கையை கட்டமைக்கின்றன. பரதவ மக்கள் பற்றிய பதிவுகள் மிகக் குறைந்த அளவே ஆகும். நெய்தல் நிலம் பற்றிய படைப்புகளில் கரையிலிருந்து கடலை

நோக்கிய ஒரு பார்வை காணப்பட்டது. ஆனால் ஜோடி குருஸின் நாவல்கள் முதல்முறையாக பரதவ மக்களின் வாழ்க்கையைக் கடலில் இருந்து கரையை குறித்த பார்வையாக வித்தியாசமான போக்கை கொண்டிருக்கின்றன இவ்வாறு ஜோடி குரூஸின் நாவல்கள் சூரிசூர் உலக நாவல் காட்டும் பரதவ சமூக மக்களின் வாழ்வியலைக் கண்டறிவதே இக்கட்டுரை ஆகும்.

ஜோடி குரூஸ்

ஜோடி குரூஸ் நெல்லை மாவட்டம் உவரியில் பிறந்தவர். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் ரெஜிஸ் ஜோ ஆனந்த் என்பதாகும். இவர் தனது பள்ளி படிப்பை இடையான்குடியிலும், கல்லூரி படிப்பை எம்ஃபில் பொருளாதாரம் சென்னை லயோலா கல்லூரியிலும், படிப்பை திருச்சி புனித வளவனார் கல்லூரியிலும் பயின்றுள்ளார் 30 ஆண்டுகளுக்கு மேலாக சரக்கு கப்பல் நிறுவனங்களில் பணியாற்றி உள்ளார் சென்னை ராயபுரத்தில் வணிக கப்பல்களுக்கான ஆலோசனை நிறுவனம் நடத்தி வருகிறார்.

படைப்புகள்

- புலம்பல்கள் (கவிதை) - 2004
- விடியாத பொழுதுகள் (ஆவணப்படம்)- 2004
- ஆழி சூழ் உலகு (நாவல்) – 2004
- கொற்கை (நாவல்) – 2009
- டு வாட்ஸ் டவுன் (ஆவணப்படம்) – 2009
- எனது ஜனமே (ஆவணப்படம்) - 2010
- அஸ்தினாபுரம் (நாவல்) – 2016
- வேர்பிடித்த விலைநிலங்கள் (தன் வரலாறு) – 2017
- இணையம் துறைமுகம் (ஆவணப்படம்) – 2018
- கவனம் ஈர்க்கும் கடலோரம் கட்டுரைகள் – 2019
- யாத்திரை (நாவல்) 2021

விருதுகள்

கொற்கை நாவல் 2013ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது. ஆழிசூழ் உலகு நாவல் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை பரிசினை பெற்றுள்ளது.

- கனடா இலக்கியத் தோட்ட விருது -2006
- சுஜாதா உயிர்மை விருது - 2011
- லூர்தம்மாள் சைமன் விருது - 2013
- லயோலா இலக்கிய விருது - 2014
- இலக்கிய வீதி அன்னம் விருது - 2014
- உஸ்தாத் பிஸ்மில்லாகான் விருது -2015
- திருவள்ளுவர் இலக்கிய விருது – 2015

பற்றி விளக்குகின்றன

ஆழி சூழ் உலகு

கடலிலும் கடற்கரையிலும் பரதவர் படும் பாட்டை எடுத்துக் கூறும் புதினம் ஆழி சூழ்

உலகு ஆகும். பரதவர்களின் வாழ்க்கை போராட்டத்தை ஜனனவழி ஒன்றுதான் மரண வழிகள் எத்தனை? என்று அவர்களின் வழிகளை எடுத்துக் கூறும் புதினம் ஆகும். திருச்செந்தூரிலிருந்து கன்னியாகுமரி செல்லும் வழியில் சரிபாதி தூரத்தில் அமைந்துள்ள ஊர் ஆமந்துறை. இதைச் சுற்றியுள்ள ஊர்களில் 1933 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரை நடந்த நிகழ்வுகளை விளக்குவதாக இப்புதினம் அமைந்துள்ளது. முத்துக்குளித்தல், சங்கெடுத்தல் மீன்பிடித் தொழில்கள் கட்டுமரங்கள் வள்ளங்கள் கொண்டு நடைபெற்ற நிகழ்வுகள் போன்றவற்றை இனிமையான வட்டார வழக்குகளில் உணர்வுபூர்வமாய் உயிரோட்டமாய் பதிவு செய்யப்பட்டுள்ளன. பரத மக்களின் மூன்று தலைமுறை வாழ்க்கை பற்றிய பதிவாகவும் கடலில் ஏற்படும் பருவநிலை மாறுதல் அவர்கள் அடையும் துயரங்களை விளக்குவதாக இவை அமைகின்றது.

பண்பாடு

1. பண்பாடு என்பது மனித அனுபவத்தின் ஊடாக ஓர் உலகளாவிய பண்பாக உள்ளது. எனினும் அந்தந்த வட்டாரத்தின் தன்மைகளை உள்வாங்கிக் கொண்டு தனித்துவமானதாக காணப்படுகிறது.
2. பண்பாடு என்பது நிலைபெற்று நிற்கக் கூடியது. அதே நேரத்தில் இயக்கம் சார்ந்ததாகவும் உள்ளது. இந்த இயக்கத்தில் ஊடாக ஒரு தொடர்ச்சியான மாற்றத்திற்கு அது ஆட்படுகிறது.
3. நம் வாழ்க்கை முறைக்கு ஒரு முழு உருவத்தை அளிக்ககூடியதாகப் பண்பாடு திகழ்கிறது. இன்னொரு வகையில் நம் வாழ்க்கை முறையை நிர்ணயிக்கிற ஒன்றாகவும் பண்பாடு திகழ்கிறது" (பண்பாட்டு மானிடவியல், ப.21)

பண்பாடானது மக்களிடையே பல்வேறு நிலைகளில் காணப்பட்ட போதிலும் அதிகாரம் மற்றும் அடிமைத்தன வெளிப்பாடாகவும் எழுதி வருவதை நாம் காணலாம். மக்களுடைய இணக்கமான ஒன்றாக இவை காணப்பட்டாலும் பல்வேறு அடையாளங்கள் வாயிலாக அவை ஆடை, அணிகலன்கள் பயன்படுத்துகின்ற பொருட்கள், பேச்சுக்கள், வழிபாடுகள் உணவு முறைகள் போன்றவற்றின் வாயிலாக ஒவ்வொரு மக்களுடைய பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் நாம் எளிதில் இனம் கண்டுகொள்ள முடிகிறது எனலாம்.

பரதவர்களின் உடலமைப்பு

பரதவ இன ஆடவர்கள் கட்டான முருக்கேறிய தசையினையும் பறந்து அகன்ற மார்பின் குன்றென திரண்ட தோள்களையும், உடையவர்கள் அஞ்சாத நெஞ்சமும் ஆற்றலும் வீரமிக்கவர்கள் துடுக்கும் மிடுக்கும் துணிவும் கொண்டவர்களாக ஓங்கி உயர்ந்து உருமிஎழும் அலைகளின் ஊடுருவி பாய்ந்து பயின்று அச்சத்தை அகற்றி உழைப்பவர்கள் இவர்கள் வலிமை வாய்ந்தவர்களாகவும் தோற்றத்தில் உறுதியும் வலிமையும் உடையவர்களாக காணப்பட்டாலும் பழகுவதற்கு கபடமில்லாத குழந்தை உள்ளம் கொண்டவர்களாக இருப்பார்கள். உடலிலும் உள்ளத்திலும் வீரமிக்கவர்களாகவும் கடல் வேட்டையில் தேர்ச்சி பெற்றவர்களாகாவும் கொடும் சுறாக்களையும் கொல்லுவதில் கைதேர்ந்த தன்மை உடையவர்கள் இந்நாவலின் முக்கியமான பாத்திரமாக விளங்குபவர் தொம்மாந்திரை "உயர்ந்து வளர்ந்த தேக்கு மரத் தேகம் நீண்டு கால் மட்டும் வரை தொங்கும் கைகள் பின்னோக்கி சீவப்பட்ட தேசம் வலது நெற்றியில் அரிவாள் வெட்டுதழும்பும், சுருக்கங்களும், வலது புஜத்தில் ஒரு பெரிய சுறா மீனும், இடதுபுஜத்தில் பெரிய சம்மனசானவர் படமும்

கருந்தேகத்தில் பளிச்சிட்டன" (ஆ.சூ.உ.ப.23) என்று கூறுவதில் இருந்து பரதவ இன மக்களின் உடலமைப்பு வலிமை மிக்கதாகவும் அச்சமின்றி எதையும் துணிவோடு எதிர்க்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

கலைகள்

பரதவ இன ஆடவர்கள் மீன்பிடித் தொழிலில் மட்டுமல்லாது பிற கலைகளிலும் தங்களை ஈடுபடுத்தி தங்களது ஆற்றலை வளர்த்து வந்துள்ளனர். பரதவர்கள் "எந்த பிரச்சனைக்கும் முடிவு மோதி பார்ப்பதுதான் என்று கருதக் கூடியவர்கள் கடல் தொழில் தவிர மற்ற நேரங்களில் களியல் கூத்து என்று இருந்தாலும் சிலம்பாட்டம் வாள் வீச்சு, களரி என்று தற்காப்பு கலையிலேயே வாலிபர்கள் அதிக ஆர்வம் உள்ளவர்கள். (ஆ.சூ.உ.ப.61) என்று கூறுவதில் இருந்தும் ஆனாலும் சிலமும் நாட்டு சண்டை வாள்வீச்சு வரும் என்று பல கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தான். ஒத்த வீச்சு, படவீச்சு போன்ற சிலம்பு விளையாட்டுகளில் ஜஸ்டினை ஜெயிக்க அந்த பிராந்தியத்திலேயே ஆள்கள் யாரும் இல்லை. (ஆ.சூ.உ.ப.41) என்பதிலிருந்தும் பரதவ ஆடவர்கள் பிற கலைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதை நாவலாசிரியர் வெளிப்படுத்தி இருப்பதை காண முடிகிறது

தொழில்கள்

பரதவ மக்கள் முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல், உப்பு உற்பத்தி செய்தல் போன்றவற்றோடு தங்களது பிரதான தொழிலாக மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.மீன்களின் இடப்பெயர்வுகளையும் அசைவுகளையும் நுட்பமாகக் கண்டறிந்து அத்தொழிலை கையாண்டுள்ளனர். மீன்பிடித் தொழிலில் சுறாப்பாறு பயணம் என்பது மிகக் கடினமான தொழிலாக கருதப்பட்டுள்ளது. இது ஒரு ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாகும்.

"சுறாப்பாறு பயணம் என்பது உயிரை பணயம் வைக்கும் மிகக்கடினமான தொழில் வீரமும் விவேகமும் நிறைந்தவர்களால்தான் இந்தத்தொழிலுக்குச் சென்று திரும்ப முடியும். போராட்டங்களுக்கு மத்தியில் நல்ல லாபகரமான தொழிலாய்க் கருதப்பட்டாலும் கூட சுறாப்பாறு தொழில் என்பது பரதவர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனந்தான் ஆடிமாதம் கடலடியிலும் பூண்டுத் தொழில் செய்பவர்கள் கூட இந்த சுறாப்பாறு என்ற பெயரை கேட்டதுமே அஞ்சி நடு நடுங்குகிறார்கள். காற்றையும் கடலையும் எதிர்த்து போரிடுவது இவர்களின் அன்றாட வாழ்வாக இருந்தாலும்

இந்த சுறாமீன் வேட்டையில் கரணம் தப்பினால் மரணம் நிச்சயம். சுறாப்பாறுக்கு இவர்கள் குறி வைத்துப் போவது சுறாமீன் வேட்டைக்காகத்தான் வேளா, இழுப்பா கொளம்பன் சுறா, வரிபுலியன் உழுவை போன்ற சுறா மீன்களுக்காகத்தான். (ஆ.சூ.உ.ப.24) என்று கூறுவதிலிருந்து சுறா மீன்களைப் பிடிப்பது எவ்வளவு கடினம் என்பதையும்

"விவரம் இல்லாமல் சுறாப்பாறு தொழிலுக்குப் போகிறேன் என்று போனவர்கள் திரும்பி வராமல் மரித்துப் போவதும் உண்டு. கருத்துப் பெருத்த விழிகளை உருட்டியவாறு வரும் வரிப்புலியன் போன்ற மீன்களைப் பார்த்தவுடன் பயந்து இறங்கி கடலில் விழுந்து அதன் ஜோடி மீன்களால் கடித்து குதறப்பட்டவர்களும் உண்டு. மிக ஆழ்கடல் பகுதியாக இருப்பதால் பெரிய மீன்களின் தொந்தரவு அதிகம்"(ஆ.சூ.உ.ப.25) என்பதிலிருந்தும் மீன்பிடித் தொழில் எவ்வளவு அபாயகரமான தொழில் என்பதனையும், அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் நாவலாசிரியர் பிரதிபலித்துக் காட்டியுள்ளதை நன்கு அறிய முடிகிறது எனலாம்.

மீன்களின் குணநலன்களை அறிதல்:-

பரதவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் போது மீன்களின் தன்மைகளையும் குணநலன்களையும் நன்கு அறிந்து வைத்துள்ளனர். அஃறினை உயிர்களுக்கும்,உயர்திணை உயிர்களுக்கும் இடையேயான ஒரு உறவினை, அன்பை நாம் காணலாம்.

“போஸ்கோ பயப்புடாத ஒன்கல்வ ரெம்ப நல்லதுவ காந்திமாதிரி சாதுவானதுவ தோணியள்ல போற நம்ம ஆள்க தவறி கீழே விழுந்திற்றான்வயின்னா இந்த ஓங்கல்வதாம் சுத்தி நின்னு சுறாப்பயல்வ கிட்ட வராம காப்பாத்துமாம்” (ஆ.சூ.உ.ப.27) என்பதிலிருந்து ஓங்கல் மீனின் தன்மைகளையும் அவற்றின் பண்புகளையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். ஒரு உயிரினங்களுக்கு இடையான பாசப்பிணைப்புகளையும்

“அந்தக்கறுப்பு இன்னும் கீழதெரியுது பாருங்க... என்றான் ஆமா ஈவு இரக்கம் இல்லாம ஜோடியா இருந்தவள பிரிச்சி கொண்டு போறோம். அதுவளுக்கும் ஆத்துமா இருக்குமில்ல பாரு கோத்ரா எவ்வளவு பாசம் இருந்தா அந்த ஜோடி மீனு பின்னாலயே வரும்! ஒரு ராத்திரி முழுசும் கடந்தாச்சி இன்னும் வந்துக்கிட்டு இருக்கி நம்ம என்ன நெனக்கிறோமுன்னா மனுசனுக்குத்தான் பந்த பாசம் எல்லாம் இருக்குமுன்னு அப்படியின்னா கீழ வாற கறுப்புக்கு பாசம் இல்லாமலா தொடர்ந்து வருது?” (ஆ.சூ.உ.ப.47) என்று கூறுவதிலிரும் மீன்களிடையே காணப்பட்ட உறவு நிலைகளையும் நாவலாசிரியர் பாத்திரக் கூற்றுகளின் வழியாக புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

விருந்தோம்பல்:-

பண்பாட்டைப் போற்றி வாழக்கூடியவர்கள் நம் தமிழர்கள். அவர்களது தலையாயப் பண்பாக அன்று முதல் இன்று வரை காணப்படுவது விருந்தோம்பலாகும். கணவன் மனைவி இருவரும் இணைந்து இல்லறத்தில் ஆற்ற வேண்டிய பண்பாக அறமாக இருப்பது விருந்தோம்பலாகும்.இன்றளவும் மக்களிடையே அவர்களது உணர்வுகளில் ஊறிப்போன ஒன்றாகக் காணப்பட்டு வருவதை காண முடிகிறது. ஆமந்துறையிலிருந்து கொழும்பிற்கு பிழைப்பதற்காகச் சென்று கொழும்பில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் தான் பிறந்த நாட்டிற்கே அகதிகளாக வரும் மிக்கேல் பர்னாந்துவின் குடும்பம் இந்நாவலில் காட்டப்படுகிறது மிக்கேல் பர்னாந்து இறந்துவிட அவரது வாய் பேசமுடியாத மகனும் மருமகளும் ஆமந்துறைக்கு வருகிற இவர்களை தொம்மாந்திரையும், கோத்ராவும் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு உதவக்கூடிய தன்மையினையும் காண முடிகிறது.

“ தொம்மாந்திரையாரின் வீட்டிற்கு அவர்களைக் கூட்டிக்கொண்டு முன்னே நடந்தார் போஸ்கோ சற்று பின்னே வந்த கோத்ரா மெதுவாக தொம்மாந்திரையரிடம் கேட்டார், இப்ப தங்க வச்சிருவம் கையில வச்சிருக்க காச வச்சி கொஞ்சநாள் போவும் பெறவு வருமானத்துக்கு என்னவழி?...” கூடமாட தொழிலுக்கு கூட்டிட்டுப் போயி பழக்கிற வேண்டியதாம் எல்லாருக்கும் படி அளக்குற அந்த கடலாத்தா அவனுக்கும் பசி ஆத்தாமாட்டாளா ! (ஆ.சூ.உ.ப.189) என்று பாத்திரக்கூற்றுகளின் வழியாக நாவலாசிரியர் பரதவர்களின் விருந்தோம்பல் பண்புகளை சுட்டிக்காட்டியிருப்பதை காண முடிகிறது.

தலைவர்கள்:-

பரதவ இன மக்களின் தலைவர்கள் பல நிலைகளில் காணப்பட்டுள்ளனர். பரதவ

இன சமூகத்தின் மூத்தவர்கள், பெரும்பணக்காரர்கள் அரசியல் தலைவர்கள், மெனக்கடம்மார், மேசைக்காரர் என அழைக்கப்பட்டிருக்கின்றனர். பரதவ இன மக்களின் குறைகளையும் பிரச்சனைகளையும், தீர்க்ககூடியவர்களாக இவர்கள் காணப்படாமல் அவர்களது சுயநலத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து வாழ்ந்துள்ளார்கள். சமூகநலம் என்ற போர்வையில் கூடும் பணம் படைத்தவர்கள் இந்த கூட்டங்களை கூத்தடிப்பதற்காகவே பயன்படுத்துகிறார்கள். முன்னேறியவர்களும் சமுதாயத்தின் உயர்த்தரப்பினராய் மதிக்கப்பட்டவர்களும் தங்கள் பதவிகளை காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தார்களே அல்லாமல் யாரும் எதற்காகவும் எந்த காலத்திலும் சமூக முன்னேற்றத்திற்கு வழி காட்டவில்லை.” (ஆ.சூ.உ.ப.146)

“கோத்ரா, வீண் பெருமையிலே அழிஞ்சி போரானுவ இப்ப கூட இந்த மேடையில் இருக்கான்வளே இதுல எவனுக்காவது இந்தப்பாவப்பட்ட ஜனங்கள் நமக்காகத்தான இப்படி காத்துக் கெடக்குதுவ இதுவளுக்கு ஏதாவது பண்ணனுமேன்னு அக்கறை இருக்கா பாரு” (ஆ.சூ.உ.ப.147) என்று கூறுவதில் இருந்து காலம் காலமாகவே மக்களை ஏமாற்றி, மக்களுக்காக வாழாமல் சுய நலத்துடன் வாழும் தலைவர்கள் இருந்துள்ளனர், இருக்கின்றனர் என்பதை நாவல் ஆசிரியர் நமக்கு வெளிப்படுத்தி காட்டியுள்ளதை அறிய முடிகிறது.

பிரச்சனைகள்:-

பரதவ மக்கள் தங்கள் பிரச்சனைகளை தீர்க்கக்கூடியவர்களாக தலைவர்களை நம்பியுள்ளனர். அவர்கள் வாழ்வில் கல்வி, தொழில், பொருளாதாரம் என்ற நிலைகளில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வந்துள்ளனர். “ஆயன் இல்லாத ஆடுகள் போலிருந்த இவர்களின் நிலை வரப்போகும் இந்தத்தலைவர்கள் நினைத்தால் தங்கள் வாழ்வில் நல்ல மாற்றம் வரும். தங்கள் குழந்தைகளின் படிப்பில் முன்னேற்றம் போன்றவற்றிற்கு ஒரு வழி திறக்கும் என்று மனதார நம்பினார்கள். தூத்துக்குடிக்கு வரும் கப்பல்கள் தங்கள் வலைகளைக் கிழிப்பது... ஆழியில் நடக்கும் சாவு பற்றியும், கடல் சீற்றமான காலங்களில் ஊருக்குள் கடல் தண்ணீர் புகுந்து குடிசைகளை அரித்துக் கொண்டோடுவது இந்தப் பிரச்சனைகளில் குறைந்த பட்சம் ஒன்றிரண்டிற்காவது தீர்வு பிறக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.” (ஆ.சூ.உ.ப.144) “கடற்துறைகளில் வாழும் இந்த பரதவர்களுக்கும் சுற்றி நாட்டுப்புறங்களில் வாழும் நாடார் சமூகத்திற்கும் ஒத்துப்போவது இல்லை. சிறிய பிரச்சினைகளில் ஆரம்பிக்கும் இந்த மோதல்கள் கொலை கொள்ளை வரை தான் போய் முடிந்திருக்கிறது.” (ஆ.சூ.உ.ப.145)

“ஆனி ஆடி புரட்டாசி மாதங்களில் கடலடி அதிகமாக இருப்பதால் ஆமந்துறையில் தொழில் செய்ய முடிவதில்லை இந்தக்காலங்களில் வயிற்றுப்பாட்டுக்காக மக்கள் கடலடி குறைந்த துறைகளை நாடிச்செல்வது வழக்கம்” (ஆ.சூ.உ.ப.67)என்று கூருவதிலிருந்து இருந்து பரதவ மக்கள் பல்வேறு பிரச்சினைகளுடன் தங்கள் வாழ்வைக் கொண்டு சென்றுள்ளனர் என்பதைக் காண முடிகிறது.

ஒற்றுமையின்மையும் போராட்டங்களும்:-

காலங்காலமாகவே மக்களிடையே ஒற்றுமையின்மையும் போராட்டங்களும் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. பிற இன மக்களுடனான போராட்டம் இன்றி தங்கள் கொள்ளும் உயர்வு தாழ்வு கருதியும் பொருளாதார இயலாமையை பிரச்சினைகளுடன் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன அடுத்த சமூகத்தோடு சண்டை என்று வரும்போது தாங்கள் சொந்த பந்தங்களை மறந்து ஒன்றுபட்டு இந்த

பரதவர்கள் மற்ற சமயங்களில் தாங்கள் கொள்ளும் வந்த காலம் தொட்டு ஒற்றுமை இல்லாமல் தான் வாழ்ந்து இருக்கிறார்கள் இவர்களுக்குள் ஏற்பட்ட பெரும் கலகங்களின் நதி மூலத்திற்கு போனால் அவை எல்லாம் பெண்களாகவும் பதவிகளை காப்பாற்றி கொள்வதற்காகவும் தான் நடந்திருக்கிறது. நேருக்கு நேர் கம் எடுத்து கழகம் பண்ணி வெட்டிக் கொள்வது நடந்தாலும் குடும்பங்களை வேரோடு சாய்ப்பதற்கு ரத்த உறவுகளாலே துதி விதைகளை வைத்து பிழைப்பு நடத்தும் தொல்லைகளை நாடி சென்று இருக்கிறார்கள் தங்களுக்கு பிடிக்காதவர்களை பழிவாங்க கடலில் பெரிய மீன்களை ஏவிவிடும் வழக்கமும் இருக்கிறது என்பதை கொண்டு நாவலாசிரியர் பிரதம இன மக்களின் ஒற்றுமையின்மையை சுட்டிக்காட்டி உள்ளார்.

“அமந்துறையில் வறுமை தாண்டவம் ஆடியது ஒரு சிற்றுண்டி கூட கடலில் இறங்க முடியவில்லை, ஜனங்கள் எத்தனையோ முறை யார் வீட்டின் முன் வந்து அழுது மண்டியிட்டு பார்த்து விட்டார்கள் இருட்டியார் மனம் இளகவேயில்லை.

கடல் வறண்டும் போனதற்கு முழு இதற்கு காரணம் இருட்டியர்கள் தான் என்பது அவர்களுக்கு தெரிந்தது... கையில் வைத்திருந்த சிலையை வைத்து யாரையும் “போ... கடலுக்கு போ” என்று இருட்டு அறையில் ஆகவும் ஊர் முழுவதும் வேளமாய் கிடந்தது (ஆ.சூ.உ.ப. 102). என்று கூறுவதில் இருந்து மந்திரம் மாயவித்தைகள் கடற் கொள்ளையர்கள் மக்களை துன்பத்திற்கு உள்ளாக்கி இருப்பதையும் இருட்டியார் என்ற பாரதத்தின் வழியாக நாவலாசிரியர் பிரதிபலித்து காட்டியுள்ளார்.

திருமணம் முறை

திருமண முறைகள் பரதவ மக்களிடையே பல்வேறு தன்மைகளில் நடைபெற்று வந்திருக்கின்றன. நவீன காலம் மாற்றங்களுக்கு ஏற்ப கலப்புத் திருமணம், காதல் திருமணம், விதவை மறுமணம் என்ற போன்றவை நடைபெற்று இருக்கின்றன. உறவு முறையற்ற திருமணமும் நிகழ்ந்துள்ளன. அண்ணன் தங்கையை திருமணம் செய்து கொள்ளும் முறை இருந்துள்ளன. “என்ன... மொறயில்லாமப் பேசுற அவ எனக்கு தங்கச்சி முறையில்லையா?” ஆனால் எங்க சித்திக்கு புறக்கலையே சாமி.. இது சரிவர மாதிரி எனக்கு தெரியல சாமி.. நான் அவளை விரும்புறஞ் சாமி... அவளும் என்ன விரும்புகிறா என்று கில்பர்ட் எஸ்கலின் என்ற பாத்திரங்களின் வழி அண்ணன் தங்கையை திருமணம் செய்யும் முறையற்ற திருமணத்தை நாவலாசிரியர் சுட்டிக்காட்டுவதிலிருந்து திருமண பந்தம் இன்றைய இளைஞர்கள் திசை மாறி போவதை அறிய முடிகிறது.

மனிதாபிமான செயல்

மனிதர்களிடையே மனிதாபிமானம் காலத்தால் ஏற்ப மாற்றம் அடைவதோடு அச்செயல் குறைந்து வருவதையும் நாம் காண முடிகிறது. மனிதனை மனிதன் நேசிப்பது குறைந்துக் கொண்டே வருகிறது. “ தன் குடும்பத்தை நம்பி தான் வீட்டிலேயே வளர்ந்து வரும் ஒரு மனிதனை அவ்வீட்டுத் தலைவன் கொல்ல சதி திட்டம் தீட்டுவதை கண்டறிந்த மனைவியானவள் அவ்வுயிரைக் காப்பாற்றிய தன்மையினை “பீமணி இங்க வா என்றால் அமலி மானாப்பிள்ளை வீட்டை தவிர வேறு யார் பீமனி என்று கூப்பிட்டாலும் அவனுக்கு பிடிப்பதில்லை..” என்னக்கா .. அய்யா ராத்திரியோட ராத்திரியா யார்ட்டையுஞ் சொல்லாம இப்பயே வளவு வழியாக எங்கேயாவது ஓடிரு... எதுக்குக்கா?.... நாளைக்கு ஒன்னைய கொல்ல போறான்வ என்று கண்ணீரோடு சொன்னார் அமலி... எதுக்குக்கா என்று கண்ணீரோடு கேட்டான் பீமணி... அதெல்லாம் எனக்கு தெரியாது இந்தா... கையில 200 ரூபாய் இருக்கு இத

எடுத்துக்கிட்டு நடந்தே தெசையவிளைக்கு போயி அங்கிருந்து ஏதாவது பஸ் புடிச்சு எங்கேயாவது போயிரு.... பீமணி எவ்வளவோ மறுத்தும் விடாப்பிடியாக அவனை வெளியே கதவடைத்தாள்." (ஆ.சூ.உ.ப.208) என்று நாவலாசிரியர் மனிதாபிமானத்துடன் பெண் ஒரு உயிரை காப்பாற்றியதை எடுத்துக் கூறுகிறார்.

உணவு முறை

மீனவர்களின் முக்கிய உணவா மீனாகும். குழந்தை பெற்ற பெண்களுக்கு மீன் உணவு கொடுக்கப்பட்டுள்ளது. :குழந்தை பெற்ற பெண்களுக்கு மாங்காய் சாளையை ஓமக்கறி வைத்து கொடுப்பார்கள். சுவையாக இருக்கும் பால் சுரப்பு அதிகமாகும் சூரை மீன்களின் தோல் வெள்ளி நிலத்தில் தகதகனாக மின்னும் சதைப்பகுதி ரத்த சிவப்பாக இருக்கும் இந்த மீன்களை பயன்படுத்தி தான் மாசி என்ற சுவையான உலர்மீன் தயாரிக்கப்படுகிறது." (ஆ.சூ.உ.ப.26) என்பதிலிருந்தும் கடலில் செல்லும் போது உணவு இல்லாத வேலைகளில் மீன் தொழில் செய்யும் ஆடவர்கள் ஆமையின் ரத்தத்தையும் குடித்து வாழ்ந்துள்ளனர் என்பதை "சடார் என்று எழும்பிய அவர் பக்கத்தில் நீந்தி கொண்டிருந்த பஞ்சலாமைக் குட்டியை வளர்த்தி போட்டார். சூச ஆம இரத்தம் ரொம்ப நல்லது. சீக்கிரம் செமிக்காது. நல்ல வலுவு கூட எத்தனை நாளைக்கு இப்படிப்பட்டினியோ யார் கண்டா சீக்கிரம் குடிங்கல ஆமையின் வாயை சூசையார் பிடித்துக் கொள்ள சிலுவை ரத்தத்தை குடிக்க ஆரம்பித்தான். பிறகு சூசையர் குடித்தார் ((ஆ.சூ.உ.ப.189) என்பதிலிருந்து அவர்களது உணவு முறையை அறிய முடிகிறது.

நம்பிக்கை

இன்று மக்களுடைய பேய் பிசாசு வீட்டிற்கு வரக்கூடாது பில்லி சூனியம் தனக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்று கருதி மந்திரவாதியிடம் சென்று தாயத்து திருநீறு குங்குமம் போன்ற பொருட்களை ஒரு துணியில் கட்டி விட்டு வாசலில் தொங்க விடுவார்கள். அதை போன்றதொரு நம்பிக்கை பரதவர்களிடம் காணப்பட்டது. "வீட்டு வாசலில் ஆமை ஈரலிலும் உருக்கி எடுத்த எண்ணெய்யை சிறிய பாத்திரத்தில் அல்லது பாட்டிலோ இன்னும் கட்டி வைத்திருப்பார்கள். பேய் பிசாசுகளுக்கு ஆமை எண்ணெயின் வாடை ஆகாது என்பது ஐதீகம்" (ஆ.சூ.உ.ப.182) என்று கூறுவதில் இருந்து அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை புலப்படுத்தப்படுகிறது. மதமாற்றம் மக்கள் தங்களுடைய வாழ்வு வளமாக அமைய வேண்டும் துன்பங்களிருந்து விடுபட வேண்டும் என்று கருதி தங்களுக்கு பிடித்த தெய்வத்தின் மீது மிகுந்த பற்றுடையவர்களாக காணப்படுவார்கள். சிலர் துன்பங்கள் வரும்போது உதவி செய்பவர்களின் சொற்படி கேட்டு நடப்பதுண்டு. அதை போன்று தான் பரதவ மக்கள் கத்தோலிக்க சமயத்திற்கு மாறியதை இன்று வரை கடைபிடித்து வருவதை காண முடிகிறது திருச்செந்தூர் முருகன் கோவில் சாச்சமார்கிட்ட இருந்து காப்பாற்றுவதற்காக போர்ச்சுகீசிய வியாபாரி மார்ட்ட உதவி கேட்டுக்கான்வா ஆனா அதுக்கு நன்றியா மதம் மாறி இருக்கானுவ போர்ச்சுகீசியரின் நிபந்தனை வாக்குப்படி தூத்துக்குடியை தலைமையாகக் கொண்ட ராமேஸ்வரம் முதல் கன்னியாகுமரி வரையிலான பரதவர் துறைகள் அனைத்தும் தங்கள் சாதி தலைவரின் ஒப்புதலோடு கிறிஸ்தவ மதத்தை தழுவினார்கள். (ஆ.சூ.உ.ப.78) என்பதிலிருந்து அவர்கள் மதம் மாறிய தன்மையை அறிய முடிகிறது.

தொழிலும் பொருளாதாரமும்

பரதவர்கள் மீன்பிடித்தல் முத்து குளித்தல் , உப்பு உற்பத்தி செய்தல் பெரிய கப்பல்களில் சரக்குகளை ஏற்றுதல் இறக்குதல் போன்ற தொழில்களை

மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். “அந்த காலத்தில் இருந்தே முத்துக் குளித்துறையிலிருந்து முழு உரிமை பரதவ மக்களின் சார்பாக அவர்களின் சாதி தலைவர்கள் பெற்றிருந்தார் கடலின் பெற்ற முத்துக்களில் ஒரு பகுதியை அந்தந்த காலங்களில் ஆட்சி பொருப்பிலிருந்த அரசர்களுக்கு தங்கள் சாதித்தலைவரும் மூலம் கொடுத்துவிட்டு மீதியை சந்தையில் விற்று பெரும்பொருள் திரட்டி வந்துள்ளனர். (ஆ.சூ.உ.ப.51) மீனவர்கள் கடலின் நீரின் போக்கு அலைகளில் போக்கு அசைவுகள் கடலில் வாழும் உயிரினங்கள் மீன் வகைகள் கடலில் உள்ள மலைகள் கடற்பாரைகள் நீர் சுழிவு போன்றவைகளையும் அறிந்து மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

மாந்திரீகமும் வர்மக்கலையும்

மாந்திரீகம் என்பது இன்றும் மக்களிடையே தன்மை தீமை காரியங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனலாம் இருட்டியார்கள் மலையாளத்தில் மாந்திரீகம் படித்ததாகவும் ஏற்கனவே பரம்பரையாக அவர்களுடைய தாத்தா காலத்தில் இருந்து காப்பாற்றப்பட்டு சிலை ஒன்றை அவர் வைத்திருந்து பூஜை செய்ததாகவும் கதை கதையா பேசுவார்கள். மாந்திரீகத்தோடு நாட்டு அடிமுறைகளும் வரமும் தெரிந்து வைத்திருந்தார். கடலில் யாரூ காவது ஆலிமேல் அடிபட்டு மூச்சி இல்லாமல் கொண்டுவரப்பட்டால் ஒரே தட்டில் மூச்சு வர வைத்து விடுவார், வர்மத்தில் யாராவது அடிபட்டு வந்தாலும் அதற்குரிய வைத்தியம் பார்த்துவிடுவார் ஊரில் செய்வினை போன்ற விஷயங்கள் யார் வீட்டில் இருந்தாலும் அதை எடுப்பதற்கு இருட்டியார்கள் அழைக்கப்படுவார்” (ஆ.சூ.உ.ப.100) என்று கூறப்படுவதில் இருந்து மக்கள் மாந்திரீகங்களை நம்பி அதற்கு பயந்தும் வாழ்வை மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். இவை நன்மை தீமை இரண்டிற்கும் அதிக அளவு பயன்பட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது.

குத்தகை முறைகள்

தேவாலயங்களின் நிர்வாக தேவைக்கு பயன்படுத்தும் பணத்தை திரட்டி கத்தோலிக்க திருச்சபை பின்பற்றிய வரிவிதிப்பே குத்தகைவே எனப்படுகிறது. கடல் துறைகளில் பிடிக்கப்படும் சுறா மீன்களின் தூவிகள் வெட்டப்பட்டு அவை கோவிலுக்கு சென்று கொடுக்கப்படும். மேலும் ஊர் தோப்பு, குத்தகை ஊர் எல்லையில் ஊருக்குள் வரும் சாமான்களை இறக்குவதற்கோ வண்டியில் இருந்து பிரிக்கும் கோயில் காசு போன்றவற்றை ஏலத்தில் விடப்பட்டு ஏலம் எடுத்தவர்கள் அதை தினசரி பிரித்து ஊரில் கட்டிவிட வேண்டும். அதை பங்கு சாமியாரே ஆண்டு அனுபவித்து வருகிறார்” (ஆ.சூ.உ.ப.77) என்று கூறுவதில் இருந்து பரதவர்கள் அனைவரும் குத்தகை முறிக்கும் உட்பட்ட ஆக வேண்டும் என்ற நிலைமை இருந்துள்ளது.

முடிவுரை

மீனவர்கள் வாழ்வானது இயற்கையுடனும், கடல்-காற்று அலைகள், புறாக்களுக்களுடனான போராட்டமின்றி, ஒவ்வொன்றிலும் பல்வேறு இனங்களை சந்தித்து வாழ்ந்துள்ளனர்.

அதிகம் படிப்பறிவில்லாத இந்த மக்கள் பயம் என்பதை இல்லாதவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியும் போராட்டமாய் இருப்பதால் எதையும் ஒரு அசட்டுத்துணிச்சலோடு எதிர்கொள்ளும் மன தைரியம் உள்ளவர்களாக இருந்துள்ளனர்.

வாழ்வின் ஒவ்வொரு கூறுகளையும் தொழில் கலைகள் விருந்தோம்பல்

மனிதாபிமான செயல்கள் போன்றவற்றை மேற்கண்டவாறு அறிய முடிகிறது.

முதன்மை நூல்

ஜோடிகுரூஸ்.ஆர்.என்.2004 ஆழி சூழ் உலகு : சென்னை தமிழினி பதிப்பகம் வெளியீடு

பார்வை நூல்கள்

1. பக்தவச்ல பாரதி, 2011 பண்பாட்டு மானிடவியல் புத்தாநத்தம் : அடையாளம் வெளியீடு
2. அனந்தபுரம் கிருட்டின மூர்த்தி – 2002 மீனவர் வாழ்வியல் சென்னை : திருக்குறள் பதிப்பகம் வெளியீடு
3. சிவசுப்பிரமனியஞ் ஆ.2011 : அடித்தள மக்கள் வரலாறு, சென்னை : பாவை பப்ளிக்கேசன்ஸ் வெளியீடு
4. ஜான் கென்னடி சே.ச. 2006 கடல்நிலம் மக்கள் , திண்டுக்கல் : வைகறை பதிப்பகம் வெளியீடு

© 2026 சந்திரா கோ, முனைவர்.ராமபாண்டி க, முனைவர்.மகேஸ்வரி மு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 99–102
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தென்மாவட்ட நாட்டுப்புற இலக்கியங்கள்

முனைவர். விஜயலட்சுமி இரா*

வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை – *600 102., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். விஜயலட்சுமி இரா — viji.grv@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00041	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தென்மாவட்ட நாட்டுப்புற இலக்கியங்கள் என்று தலைப்பின் வாயிலாக தாலாட்டுப்பாடல்கள், பழமொழிகள், சிவகங்கை சரித்திரக் கும்மி கூறும் கலைநிகழ்வுகள், வட்டார மற்றும் நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், தேனி மாவட்டத்து தொழில்ப்பாடல்கள் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: தாலாட்டு; பழமொழிகள்; சரித்திரக்கும்மி; தனுஷ்கோடி; தொழில்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: இரா, மு. வி. (2026). தென்மாவட்ட நாட்டுப்புற இலக்கியங்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 99–102. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8433

முன்னுரை:

ஒரு சமூகத்தின் வரலாறு மற்றும் வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்த அச்சமுகத்தின் நாட்டுப்புறக்கலைகள், நாட்டுப்புறப் பாடல்கள் பயன்படுகின்றன. மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடித்து வந்த பழக்கங்கள் காலத்தின் மாற்றத்தால் வழக்கமாக மாறியது. இவ்வழக்கமே காலப்போக்கில் பண்பாடாக மாறியது. இதுவே பண்புள்ள மனிதனையும், மனித சமுதாயத்தையும் உருவாக்கும் கருவியாக அமைந்திருக்கிறது. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்கவழக்கங்களை வரலாற்றை நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவது நாட்டுப்புற இலக்கியமாகும் என்பதனை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

தாலாட்டுப்பாடல்கள் :

குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தும் அல்லது தூங்கசெய்யும் சூழலில் தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றன. தால் என்று சொல்லுக்கு நாக்கு என்று பொருள். நாவினை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு என்று பெயர் பெற்றது. தாயின் கற்பனை வளத்தின் வெளிப்பாடே தாலாட்டுப் பாடல்கள் ஆகும்.

"ஆராரோ ஆரிராரோ
என் கண்ணே நீ உறங்கு

வாழைக் கனி தருவேன்

வாடாமல் நான் வளர்ப்பேன்"

வாய்மொழியாக வழங்கி வரும் இப்பாடல் குழந்தையின் உடல், உள்ள வளர்ச்சிக்கு பயன்படுவதாகவும் உள்ளது. குழந்தையின் அழுகை சிணுங்களால் உணர்சிகளின் நரம்புகளையே மீட்டி வருகிறது என்கிறார் தமிழண்ணல். (1966:12)

முதன்முதலாகத் தமிழ் இலக்கியத்தில் தாலாட்டுப் பாடிய பெருமை பெரியாழ்வாருக்குரியது "குழவி மருங்கினும் கிழவதாகும்" (தொல். புறம். 82) என்று தொல்காப்பியத்திலும் தாலாட்டின் கூறுகள் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. மேலும் தாலாட்டுப்பாடலுக்கு அடிவரையறை இல்லை என்றும் தாயின் மனநிலைக்கு ஏற்பவும், குழந்தையின் உறக்க நிலைக்கு ஏற்பவும் தாலாட்டு பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கும் என்று டாக்டர் த. ரெஜித்குமார் அவர்கள் குறிப்பிடுகிறார். ஆனால் அத்தகைய சிறப்பு பெற்று தாலாட்டுப் பாடல்களைப் பாடும் வழக்கம் இளையதலைமுறையினரிடம் குறைந்து காணப்படுகிறது. வயதானவர்களே இப்பாடல்களைப் பாடுகின்றனர் என்றே கூறலாம்.

பழமொழிகள்:

நாட்டார் இலக்கிய வகைமைகளுள் மிகவும் பழமையானவை பழமொழிகளாகும். பழமொழிகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தது. இதனை தொல்காப்பியர்

" நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
எண்மையும் என்று இவை விளங்கத் தோன்றி
குறித்த பொருளை முடித்தற்குவரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப" (தொல். சொல். 165)

என்று கூறுகிறார். பழமொழிகளை பெரும்பாலும் எல்லா விதமான சூழல்களிலும் மக்கள் கையாளுகின்றனர். பழமொழியின் தன்மையினை டாக்டர் த. ரெஜித்குமார் அவர்கள் பழமொழிகள் பொதுவாக உண்மையின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும் மக்களிடையே வழக்கில் உள்ளதாகவும் அளவில் சிறியதாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். உலகில் உள்ள அனைத்துப் பொருட்கள் பற்றியும் பழமொழிகள் பேசுகிறது. பழமொழிகள் தொடாத பொருளே இல்லை எனலாம். பழமொழிகளின் கருப்பொருளை 1. மக்கள் இனம், விலங்கினம், மரம், செடி, கொடி இனம், பண்பாடு, பல்பொருள் பற்றியது எனப்பிரிக்கலாம் என்று சு. சக்திவேல் அவர்கள் நாட்டுப்புற இயல் ஆய்வு என்ற நூலில் குறிப்பிடுகிறார். உதாரணமாக வேளாண்மை குறித்து இடம்பெறுகின்ற பழமொழியினை நாம் இங்கு காணலாம்.

" அகல உழுவதை விட ஆழ உழு

நன்செய்க்கு ஏழு உழவு, புன்செய்க்கு நான்கு உழவு "

என்று இடம்பெற்றுள்ளது. இவ்வாறு அனைத்து பொருளிலும் பழமொழிகள் இடம்பெற்றுள்ளது.

சிவகங்கை சரித்திரக்கும்மி கூறும் கதை நிகழ்வுகள்:

சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரும் அவரது இளையராணியும் காளையார்கோவிலில் சாமி கும்பிட்டிருக்க, முத்துராணி வேலு நாச்சியார் கொல்லங்குடியில் தங்கியிருந்தார். கோவிலில் தீபாராதனை பார்த்துவிட்டு வெளியே வந்தபோது நவாப்படைகளும், ஆங்கிலேய படைகளும் சேர்ந்து பீரங்கித் தாக்குதல்

நடத்திய போது, முத்து வடுகநாதரும் அவரது மகளும் இறந்து போன வரலாற்றை ஜெகாதா அவர்கள் “வரலாறு கூறும் வட்டார இலக்கியம்” என்ற நூல் வழியாக எடுத்துரைக்கின்றார்.

"கொல்லங்குடி தன்னில் பெரிய ராணி

குணமுடனே அங்கு இருந்து கொண்டாள்...

வல்லபமாக இளையராணி மகா

ராசாவுங் காளையார்கோவில் வந்தார்.

வேளையறிந்து பீரங்கிக்குண்டை

விருவிரென்று யேவிவிட்டார்.”

என்ற இப்பாடல் சிவகங்கை சரித்திர கும்மி முத்துவடுகநாதரின் உயிர்தியாகத்தை எடுத்துரைக்கின்றது.

வட்டார மற்றும் நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்:

வட்டார மற்றும் நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் வழி அனைத்து வட்டாரம் மற்றும் நகரம் சார்ந்த வரலாறு, வாழ்வியல், பண்பாடு மற்றும் நாகரிகம், பற்றிய அனைத்து செய்திகளையும் நாம் அறிகிறோம். அவ்வகையில் டாக்டர் கே. ஏ. குணசேகரன் அவர்களின் நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் என்ற நூலில், தனுஷ்கோடி அழிந்த கதையினை,

" தனுஷ்கோடியிலுள்ள பழங்காலக் கட்டிடமெல்லாம்

தரை மட்டமாக இடிய - அய்யய்யோ வென்று

சத்தமிட்டு மக்கள் மடிய - நிமிசத்திலே

சமுத்திர தேவியவள் கணக்கற்ற ஜனங்களைத்

தாவியே விழுங்கி முடிய"

என்ற பாடல் வழி குறிப்பிடுகிறார். கொடுமையான புயல் வீசியது. புண்ணிய தலமாம் தனுஷ்கோடி தரைமட்டமானது. பாம்பன் பாலத்தில் ரயில் விழுந்தது. தமிழ் நாடெங்கும் புயலால் பெருத்த சேதங்கள் ஏற்பட்டு மக்களின் மனதை பாதித்த செய்தியை இக்கதைப்பாடலில் மிக அழகாக குறிப்பிட்டுள்ளார்.

தேனி மாவட்டத்து தொழில் பாடல்கள் :

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் நாட்டுப்புறப்பாடல்கள் இன்றுவரை சிறப்பாக பாடப்பட்டு வருகின்றன. தாலாட்டு, கும்மி, தொழில் மற்றும் ஒப்பாரி எனப்பல நாட்டுப்புறப்பாடல்கள் உள்ளன. அவற்றுள் தொழில்பாடல்கள் குறித்து இடபெற்றுள்ள பாடல்கள் குறித்து பார்ப்போம். தொழில் புரியும் போது மக்கள் பாடும் பாடல்கள் தொழில்பாடல்கள் எனப்படுகின்றன. தொழிலின் சிரமமும் களைப்பும் தெரியாமல் இருக்கப்பாடுகின்றனர். தொழில் பாடல்கள் தொழிலாளர்களது இன்ப துன்பங்களையும், நெஞ்சக் குமுறல்களையும், ஆசாபாசங்களையும், விருப்பு வெறுப்புகளையும் வெளிப்படுத்துகின்றன. இங்கு ஆண் பெண் இருவரும் சேர்ந்து பாடும் ஒரு தொழில் பாடலை

பெண் : கத்தரிக்கா தோட்டக்காரா

எங்க கவலாண்ட புள்ளையாண்ட

கார்த்திக தீபத்துக்கு ஆச மச்சானே

நீங்க காய் கொடுத்தாலாகாதோ

நேச மச்சானே

ஆண் : காய் கொடுத்திடுவேன்

காய் கொடுத்துடுவேன்

புள்ள கல கலன்று பேசிடுவேன்

முனைவர் க. சத்திய பிரியா ஞானவேல் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இத்தகைய தொழில் பாடல்கள் வாயிலாக மக்கள் செய்த தொழில்கள் பற்றியும், அத்தொழிலின் நுட்பங்கள் பற்றியும், அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமுதாய அமைப்பைப் பற்றியும் நாம் அறிந்து கொள்கிறோம்.

முடிவுரை:

இத்தலைப்பின் வாயிலாக பண்டைத்தமிழர்களின் அறிவு நுட்பம், பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் ஆகியவை வெளிப்படுகிறது.

துணைநூல் பட்டியல்:

1. முனைவர் க. சத்திய பிரியா ஞானவேல், தேனி மாவட்டத்து நாட்டுப்புறப்பாடல்கள் – ஆய்வு, சான்லாக்ஸ் பதிப்பகம், மதுரை.
2. டாக்டர் த. ரெஜித்குமார், நாட்டுப்புற இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98.
3. டாக்டர் கே. ஏ. குணசேகரன், நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்.
4. ஜெகதா, வரலாறு கூறும் வட்டார இலக்கியம், பிரியா நிலையம், சென்னை.
5. டாக்டர் சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108.

© 2026 முனைவர். விஜயலட்சுமி இரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 103–108
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

அறியப்படாத தமிழகத்தின் வழி தென் தமிழக மக்களின் வாழ்வியல்

முனைவர்.கலாவதி வி*

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.கலாவதி வி — skalavathiv@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00040	

ஆய்வுச்சுருக்கம்

தமிழர்களின் வாழ்வியல் என்பது மொழி, உணவு, நம்பிக்கை, பண்பாடு, மரபு ஆகிய பல்வேறு கூறுகளை உள்ளடக்கியதாகும். இவ்வாழ்வியல் கூறுகள் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வருவதுடன், காலமாற்றத்திற்கேற்ப பல்வேறு மாற்றங்களையும் பெற்றுள்ளன. தொ. பரமசிவம் எழுதிய அறியப்படாத தமிழகம் என்னும் நூல், குறிப்பாகத் தென் தமிழக மக்களின் வாழ்வியல் கூறுகளை எளிமையாகவும் ஆழமாகவும் பதிவு செய்யும் முக்கியமான படைப்பாகத் திகழ்கிறது. இந்நூலை முதன்மை ஆதாரமாகக் கொண்டு, தமிழ்மொழியின் மாண்பு, தமிழரின் உணவு முறைகள், உணவு சார்ந்த நம்பிக்கைகள் ஆகியவை இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன. தமிழின் தொன்மை மற்றும் சிறப்பை எடுத்துரைக்கும் வகையில் தமிழின் பெயரைக் கொண்ட ஊர்ப்பெயர்கள், கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்கள் போன்றவை சுட்டிக்காட்டப்படுகின்றன. மேலும், பண்டைய தமிழரின் உணவுப் பழக்கவழக்கங்கள், நிலவியல் சார்ந்த உணவுப் பொருள்கள், பண்டமாற்று முறை, அயல்நாட்டு வாணிபம் ஆகியவை விளக்கப்படுகின்றன. உணவு சார்ந்த நம்பிக்கைகள் நேரம், கிழமை, பருவகாலம், சடங்குகள், பயணம், விழாக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தமையும் ஆராயப்படுகிறது. காலமாற்றத்திற்கேற்ப தமிழர்களின் உணவுப் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களும் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்படுகின்றன. இவ்வாய்வின் வழியாகத் தென் தமிழக மக்களின் வாழ்வியலில் மொழியும் உணவும் நம்பிக்கைகளும் முக்கியமான பண்பாட்டு அடையாளங்களாக விளங்கியுள்ளமை வெளிப்படுத்தப்படுகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: தமிழ்மொழி; தமிழரின் வாழ்வியல்; தென் தமிழகம்; உணவு முறைகள்; உணவு சார்ந்த நம்பிக்கைகள்; உணவுப் பண்பாடு; அறியப்படாத தமிழகம்

Abstract

The Tamil way of life encompasses various elements such as language, cuisine, beliefs, culture, and tradition. While these elements have been practiced across generations, they have also

undergone various changes in keeping with the passage of time. The book *Ariyappadaatha Tamilagam* (The Unknown Tamil Nadu) by Tho. Paramasivam stands as a significant work that records the lifestyle elements of the people of southern Tamil Nadu—particularly their cuisine—with both simplicity and depth. Using this book as a primary source, this article examines the dignity of the Tamil language, Tamil dietary practices, and food-related beliefs. To highlight the antiquity and excellence of Tamil, the study points to place names derived from the language and names found in inscriptions. Furthermore, it explains the dietary habits of ancient Tamils, food products associated with specific geographical landscapes, the barter system, and foreign trade. The study also explores food-related beliefs rooted in factors such as time, days of the week, seasons, rituals, travel, and festivals. Additionally, the article highlights the transformations that have occurred in Tamil food culture over time. This research reveals that language, cuisine, and beliefs have served as vital cultural markers in the lives of the people of southern Tamil Nadu.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: வி, மு. (2026). அறியப்படாத தமிழகத்தின் வழி தென் தமிழக மக்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 103–108. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8435

முன்னுரை

மொழி என்பது மனிதன் தனது கருத்துகளைப் பேசவும் எழுதவும் உருவாக்கிக்கொண்ட ஒப்பற்ற கருவியாகும். குறியீடுகள், வேறுபட்ட ஒலிகள், உணர்ச்சிகள் ஆகியவற்றின் வெளிப்பாடாகத் தோன்றிய மொழி, காலப்போக்கில் மனித இனத்தின் நுண்ணறிவால் நேர்த்தியான வடிவத்தையும் இலக்கண அமைப்பையும் பெற்றது எனலாம். மொழியின் அமைப்பை ஆய்வறிஞர்கள் பலரும் ஆராய்ந்துள்ளனர். மொழி குறித்த ஆய்வுகள் காலங்காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தமிழ்மொழி பற்றிய ஆய்வுகளைத் தமிழறிஞர்கள் மட்டுமின்றி, மேலைநாட்டினரும் மேற்கொண்டுள்ளனர். கால்டுவெல், வீரமாமுனிவர், பெஸ்கி பாதிரியார் போன்ற பலரும் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்துள்ளனர்.

அவ்வகையில், தொ. பரமசிவம் எழுதிய அறியப்படாத தமிழகம் என்னும் நூலின் வழியாக அறியலாகும் தென் தமிழக மக்களின் வாழ்வியல் கூறுகளை மையப்படுத்தி இக்கட்டுரை ஆராய்கிறது.

தமிழ் மொழியின் மாண்புகள்

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் நாகரிகம் வளர்ச்சியடைந்த பின்னர் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. மொழி வளர்ச்சி, உழவுத் தொழில், நெசவுத் தொழில், கலை, அறிவியல் போன்ற பல்வேறு துறைகளில் அறிவுப்பூர்வமாகவும் அனுபவப்பூர்வமாகவும் சிந்திக்கும் ஆற்றல் உடையவர்களாகத் தமிழர்கள் திகழ்ந்துள்ளனர்.

தமிழ்மொழியின் பெருமைகளை எடுத்துரைக்கும் தொ. பரமசிவம்,

“வடமொழி ஆதிக்கமும், தெலுங்கு மொழி ஆதிக்கமும் அரசியல் அறிந்த தமிழர்களால் உணரப்பட்ட இடைக்காலத்தில் தமிழ் தெய்வத் தன்மை உடையதாகவும் தாயாகவும் கருதப்பட்டது.” [1]

(அறியப்படாத தமிழகம், ப. 18)

என்று குறிப்பிடுகின்றார்.

தமிழ்மொழியைப் பற்றிய ஆய்வு நூல்களாக தமிழ்மொழி வரலாறு, மொழி ஆராய்ச்சி, தமிழின் சிறப்பு, மொழி வரலாறு போன்ற எண்ணற்ற நூல்கள் வெளிவந்துள்ளன. எனினும், அறியப்படாத தமிழகம் நூலில் தமிழின் மாண்பினை மிகவும் எளிமையான முறையில் தொ. பரமசிவம் எடுத்துரைக்கின்றார். குறிப்பாக, தமிழின் பெயரைக் கொண்ட தென் மாவட்டங்களில் உள்ள ஊர்ப்பெயர்களைப் பட்டியலிடுகின்றார்.

"நெல்லை மாவட்டம் ஆலங்குளத்துக் கருகில் தமிழூர் என்ற ஊரும், நாங்குநேரிக்கு அருகில் தமிழாக்குறிச்சி என்ற ஊரும் அமைந்துள்ளன. அருப்புக்கோட்டைக்கு அருகில் தமிழ்ப்பாடி என்ற ஊரும் உள்ளது. கல்வெட்டுகளில் தமிழன், தமிழதரையன் ஆகிய பெயர்களையும் காணமுடிகிறது."[2]

(அறியப்படாத தமிழகம்)

மேலும், கி. ஆ. பெ. விசுவநாதன்,

"நமது நாட்டிற்குச் செந்தமிழ் நாடு என்ற பெயர் வைத்தவர் சுப்ரமணிய பாரதியார். இதில் நாட்டிற்கு அடைமொழியாக நமது மொழியும், மொழிக்கு அடைமொழியாகச் செம்மையும் அமைந்திருப்பது பெரிதும் வியப்பிற்குரியதாகும்."[3]

(தமிழின் சிறப்பு, ப. 10)

என்று குறிப்பிடுகின்றார்.

இதன் வழியாகத் தமிழ்மொழியின் சிறப்பையும், தமிழ்மொழியோடு தமிழர்களுக்குள்ள ஆழமான உணர்வுத் தொடர்பையும் அறிந்துகொள்ள முடிகிறது.

தமிழரின் உணவு முறைகள்

பண்டைய தமிழரின் உணவுப் பழக்கவழக்கங்கள் அவர்களின் வாழ்வியல் சூழலோடு நெருங்கிய தொடர்புடையவையாக இருந்தன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களில் விளைவிக்கப்பட்ட உணவுப் பொருள்களைத் தங்களின் தேவைக்குப் பயன்படுத்தியதோடு, எஞ்சியவற்றைப் பண்டமாற்று முறையில் பரிமாறிக்கொண்டனர் என்று தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

பட்டினப்பாலை,

"பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"[4]

என்று குறிப்பிடுவதன் மூலம் அயல்நாட்டு வாணிபம் தமிழகத்தில் நடைபெற்றதை அறிந்துகொள்ள முடிகிறது.

பண்டைய மக்களின் உணவுப் பழக்கத்தைப் பற்றி தொ. பரமசிவம் கூறுகையில்,

"சங்க இலக்கியத்தில் மிளகு, புளி, கீரை, இறைச்சி, கும்மாயம் பற்றிய உணவுக் குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. பக்தி இயக்கத்தின் எழுச்சியோடு தமிழர் உணவு வகையில் பெரிய மாற்றம் நிகழ்ந்திருக்கிறது."[5]

என்று பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் விளக்குகின்றார்.

மரபுசார் உணவுப் பழக்கவழக்கங்கள் அக்கால மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையவையாக இருந்தன. சங்க காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களின் விளைவாகப் பாரம்பரிய உணவு முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாகப் புதிய வகையான உணவுப் பொருள்களும் உணவுப் பழக்கங்களும் தமிழகத்தில் அறிமுகமாகின.

உணவு சார்ந்த நம்பிக்கைகள்

பாரம்பரிய உணவு முறைகளைப் பின்பற்றுவதோடு, குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட உணவுகளை உண்ண வேண்டும் என்ற கருத்துகளும் மக்களிடையே நம்பிக்கைகளாக நிலைபெற்றன. இதனைத் தொ. பரமசிவம்,

“உணவு சார்ந்த நம்பிக்கைகள் பலவகையாகும். நேரம், கிழமை, பருவ காலம், சடங்குகள், பயணம், விழாக்கள் ஆகியவை சார்ந்து உணவு சார் நம்பிக்கைகள் அமைகின்றன. விளக்கப்பட்டவை விதிக்கப்பட்டவை என்று இருபெரும் பகுப்பில் இவற்றை அடக்கலாம்.”[6]

(அறியப்படாத தமிழகம், ப. 29)

என்று குறிப்பிடுகின்றார்.

உணவு முறைகள் எல்லா நாட்களிலும் எல்லோராலும் ஒரே விதமாகப் பின்பற்றப்பட்டனவா என்றால், அவ்வாறு கூற இயலாது. குறிப்பிட்ட நம்பிக்கைகளையும் வாழ்வியல் நெறிகளையும் பின்பற்றியவர்கள் இவற்றைப் பின்பற்றியிருக்கலாம் எனலாம்.

‘உணவு’ என்ற சொல்லின் பொருளை விளக்கும் நமச்சிவாயம்,

“உண், உணா, உணவு என உண் என்பதே அடிச்சொல்லாக அமைகின்றது. அடிச்சொல்லின் அடிப்படையில் உண்ணப்படுவது அனைத்தும் உணவு எனக் கருதத் தோன்றும். உடல் நலம் உள்ளவனுக்கு உணவாகப் பயன்படும் கஞ்சி நோயுற்றவனுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது.”[7]

(அறியப்படாத தமிழகம், ப. 15)

என்று குறிப்பிடுகின்றார்.

இதன் மூலம் உணவு என்பது வெறும் பசியைப் போக்கும் பொருளாக மட்டுமன்றி, மனித வாழ்க்கையைச் சிறப்புடையதாக மாற்ற உதவும் முக்கியக் கூறாகவும் விளங்குவதை அறிய முடிகிறது.

பண்டைய காலத்தில் எல்லா வகையான உணவுப் பொருள்களும் பயிரிடப்படவில்லை. நாகரிகம் வளர வளரப் புதிய பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, அவற்றைப் பயனுள்ள வகையில் பயிரிடத் தொடங்கினர்.

இதனை விளக்கும் வகையில்,

“கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே மணிலா எனப்படும் நிலக்கடலை பயிரிடப்பட்டு எண்ணெய் வித்தாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.”[8]

என்று தொ. பரமசிவம் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் எண்ணெய் வித்துக்களின் பயன்பாடும் காலப்போக்கில் ஏற்பட்ட உணவுப் பண்பாட்டு மாற்றங்களும் அறியப்படுகின்றன.

முடிவுரை

தொ. பரமசிவம் எழுதிய அறியப்படாத தமிழகம் என்னும் நூல், தமிழர்களின் அன்றாட வாழ்வியலுக்குள் பொதிந்துள்ள பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும் சிறப்புமிக்க படைப்பாக அமைந்துள்ளது. இந்நூலின் வழியாகத் தமிழ்மொழியின் மாண்பு, தமிழரின் உணவு முறைகள், உணவு சார்ந்த நம்பிக்கைகள் ஆகியவற்றை ஆராயும்போது, தமிழர்களின் வாழ்வியல் என்பது மொழி, மரபு, பண்பாடு, நம்பிக்கை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக இருந்தமை புலப்படுகிறது.

தமிழரின் உணவு முறைகள் அவர்களின் இயற்கைச் சூழல் மற்றும் தொழில் முறைகளோடு நெருங்கிய தொடர்புடையவையாக இருந்துள்ளன. நிலவியல் அடிப்படையில் கிடைத்த உணவுப் பொருள்களைப் பயன்படுத்தியதோடு, எஞ்சிய பொருள்களைப் பண்டமாற்று முறையில் பரிமாறிக்கொண்டனர். வாணிப வளர்ச்சியின் காரணமாகப் புதிய உணவுப் பொருள்களும் தமிழகத்தில் அறிமுகமாகியுள்ளன. இதன் மூலம் தமிழரின் உணவுப் பண்பாடு காலத்திற்கேற்ப மாற்றம் பெற்றுள்ளதை அறியலாம்.

அறியப்படாத தமிழகம் நூலின் வழியாகத் தென் தமிழக மக்களின் வாழ்வியலை ஆராயும்போது, மொழி, உணவு, நம்பிக்கை ஆகியவை தனித்தனியான கூறுகளாக இல்லாமல் ஒன்றோடொன்று தொடர்புடைய பண்பாட்டு வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. மாறிவரும் நவீன வாழ்க்கைச் சூழலில் மறைந்து வரும் இத்தகைய மரபுசார் வாழ்வியல் கூறுகளை ஆவணப்படுத்துவதிலும், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதிலும் இத்தகைய ஆய்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேற்கோள்கள்

1.தொ.பரமசிவம் - அறியப்படாத தமிழகம், ப. 18)

2. மேலது

3. க.நமச்சிவாயம் - தமிழின் சிறப்பு ப. 10)

4. பட்டினப்பாலை –

5. தொ.பரமசிவம் - அறியப்படாத தமிழகம், ப. 18)

6. மேலது

7. மேலது

8. மேலது

துணை நின்ற நூல்கள்

1. தொ.பரமசிவம் –

அறியப்படாத தமிழகம்,

2. தமிழின் சிறப்பு -

கி. ஆ. பெ. விசுவநாதன்

பாரி நிலையம் ,சென்னை

3. தமிழர் உணவு

க.நமச்சிவாயம்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை
4. பட்டினப்பாலை –
நியூ செஞ்சுரி புத்தக நிலையம்,
சென்னை

© 2026 முனைவர்.கலாவதி வி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 109–114
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

இராசிபுரம் வட்ட சிறுதெய்வங்களின் கோயில் அமைப்பும் வழிபாடும்

திருமதி.லீலாவதி வெ[1,*], முனைவர்.தினகரன் ப[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தமிழ்த் துறை,கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,நஞ்சனாபுரம்,ஈரோடு, *India*

[2] துறைத் தலைவர்,தமிழ்த்துறை,கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,நஞ்சனாபுரம்,ஈரோடு., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: திருமதி.லீலாவதி வெ — leelaarun0912@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00038

ஆய்வுச்சுருக்கம்

அச்சத்தின் காரணமாக தோன்றியவையே தெய்வ வழிபாடாகும். அன்றிலிருந்து இன்றுவரை ‘நம்பிக்கை’ என்ற ஒற்றை சொல்லில் அனைவரின் வாழ்க்கையும் அடங்கியுள்ளது என்றால் மிகையாகாது. அதற்கு முதலும் முடிவுமாக இருப்பவர் ‘கடவுள்’. உலகின் பல்வேறு பகுதிகளில் நாகரிகம் தோன்றி வளர்வதற்கு முன்பே, பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய இனம் நம் தமிழினம் என்று வரலாறுகளும் இலக்கியங்களும் கூறுகின்றன. இவர்களின் வாழ்க்கையில் ஒன்றியிருக்கும் இறை வழிபாடே தமிழர்களின் தலையாய வழிபாடாகும்.

இயற்கையை வழிபட்டு வணங்கிய மனிதன், நாளடைவில் தம் முன்னோர்களையும் வழிபடத் தொடங்கினான். தம் குடும்பத்தில் அகால மரணமடைந்தவர்களால் தமக்கு ஏதேனும் இடையூறு வந்துவிடுமோ? என்று அஞ்சியவன் இறந்தவர்களையும் வழிபடலானான். இவ்வாறு, ஒவ்வொரு குடும்பமும் தனித்தனித் தெய்வங்களை வழிபட்ட மரபே சிறுதெய்வ வழிபாடாக முகிழ்த்தது. மக்கள், தம் வாழ்நிலைக்கு ஏற்ப இத்தெய்வத்திற்குத் திருவிழாக்களையும் வழிபாடுகளையும் செய்கின்றனர். அந்த வகையில் நாமக்கல் மாவட்ட நகராட்சிகளில் ஒன்றான இராசிபுர வட்ட சிறுதெய்வங்களின் அமைவிடங்களையும் வழிபாட்டையும் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

Keywords / திறவுச்சொற்கள்: வழிபாட்டின் வளர்ச்சி நிலைகள் – சிறுதெய்வம் விளக்கம் – பொதுப்பெயர் அமைவு – கோயிலின் அமைப்பு – வழிபாடும் நம்பிக்கைகளும் – அபிஷேக வழிபாடு – இராசிபுரம் மாரியம்மன் – அங்காளம்மன் - இரா.புதுப்பட்டி துலக்க சூடாமணியம்மன்.

Abstract

The worship of gods is what arose out of fear. From that time to this day, it is no exaggeration to say that everyone's life is encompassed in the single word 'faith'. The one who is the beginning and the end of it is 'God'. History and literature say that our Tamil nation was the race that

excelled in culture and civilization before civilization emerged and developed in various parts of the world. The worship of God, which is integral to their lives, is the main worship of the Tamils. The man who worshipped and worshipped nature, eventually started worshipping his ancestors as well. He who feared that some hindrance would come to him due to the untimely deaths of his family, started worshipping the dead as well. Thus, the tradition of each family worshipping separate gods emerged as the worship of minor gods. People perform festivals and worships to this god according to their living conditions. In this regard, this research article aims to investigate the locations and worship of minor deities in Rasipura, one of the municipalities of Namakkal district.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: வெ, தி., & ப, மு. (2026). இராசிபுரம் வட்ட சிறுதெய்வங்களின் கோயில் அமைப்பும் வழிபாடும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 109–114. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8437

வழிபாட்டின் வளர்ச்சி நிலைகள்

காலத்திற்கேற்றவாறு வழிபாட்டின் தன்மைகளை,

1. **இயற்கை வழிபாடு**
2. **விலங்கு வழிபாடு**
3. **மர வழிபாடு**
4. **முன்னோர் வழிபாடு**
5. **நடுகல் வழிபாடு**
6. **சிறுதெய்வ மற்றும் பெருந்தெய்வ வழிபாடு**

என்று வகைப்படுத்தலாம். இதனை,

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்[1]

என்னும் சிலப்பதிகார பாடல் அடிகள் மூலம் அறியலாம். இயற்கை வழிபாடே அனைத்திற்கும் மூலக்காரணமாய் அமைந்திருக்கிறது. சங்ககாலம் முதலே இவ்வழிபாட்டின் தொன்மையைக் காணலாம்.

சிறு தெய்வம் - சொல் விளக்கம்

இச்சொல் முதன்முதலாக **‘சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்’** என்று அப்பர் தேவாரத்தில் கூறப்படுகிறது. இதன் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு ஆகும். இதற்கு நேர்மாறாகப் **‘பெருந்தெய்வம்’** என்ற சொல் வழக்கு புறநானூற்றிலேயே காணப்படுகிறது. இரண்டு வேந்தர்களையும் ஒன்றாகக் கண்ட புலவர் **‘இரு பெருந்தெய்வமும் உடன் நின்றா’** (பா.எண்.58) என்று பலராமனையும் திருமாலையும் நினைத்துப் பாடுகிறார்.

‘சிறு தெய்வம்’ பிராமணரால் பூசை செய்யப்பெறாதவை ஆகும். ஆதலால், சிறு தெய்வம் இரத்தப்பலி பெறும் தெய்வங்களாகும். இத்தெய்வங்கள் நாள்தோறும் ஆறுகாலப் பூசை பெறுவதில்லை. இத்தெய்வங்களின் திருவிழாக்களில் ‘சாமியாட்டம்’ இடம்பெறும்.

சிறுதெய்வங்களின் பொதுப்பெயர் அமைவு

சிறு தெய்வங்களின் பெயர்கள் பெருந்தெய்வங்களின் பெயர்களிலிருந்து

வேறுபட்டு நிற்கின்றன. ஆண் சிறு தெய்வங்களின் பெயர்கள் பொதுவாக **அய்யா, அப்பன், அடியான், சாமி** என்றும் (கருப்பையா, இருளப்பன், பனையடியான் கருப்பசாமி) பெண் தெய்வங்களின் பெயர்கள் **அம்மன், நாச்சி, கிழவி** என்றும் (முத்தாலம்மன், பெரிய நாச்சி, அரியாக்கிழவி) அழைக்கப்படுகிறது.

கோயிலின் அமைப்பு

சிறுதெய்வக் கோயில்களின் அளவு மிகச்சிறியது. சில இடங்களில் அவை கட்டடமின்றி அமைதலும் உண்டு. இன்னும் சில இடங்களில் மரங்களையே தெய்வமாகக் கருதி வழிபடுவர். மரங்கள் பெரும்பாலும் **வேம்பு, பனை, பூவரசு** ஆகியவையாக இருக்கும். பெண் தெய்வக் கோயில்கள் பெரும்பான்மை வடக்கு நோக்கியும், சிறுபான்மை கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளது.

சிறுதெய்வக் கோயில்கள் பொதுவாக ஊரின் எல்லை, குளக்கரை, கண்மாய்க்கரை, களத்துமேடு, வயற்புறம், அழிந்த கோட்டைகளில் வாசற்பகுதி இருந்த இடம், நெடுஞ்சாலை ஓரம் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும். அந்த இடங்கள் அனைத்தும் காவலுக்குரிய இடங்கள் ஆகும். எனவே, பெரும்பாலான சிறு தெய்வங்கள் காவல் தெய்வங்களாக அமைந்துள்ளன.

பெண் சிறுதெய்வங்கள் பீடத்தின் மேல், அமர்ந்த கோலத்தில் இரண்டு கைகளோடு, தலையில் வெவ்வேறு வகையான மகுடங்களுடன் இருக்கும். கையில் வேல், வடிந்த காது, கழுத்தில் காரை, காலில் தண்டை ஆகியவற்றோடு அமைந்திருக்கும். ஒன்றிரண்டு தனித்த வேறுபாடுகளும் உண்டு. **எடுத்துக்காட்டாக:** உச்சினி (உஜ்ஜயினி) மாகாளியம்மன் இடது உள்ளங்கையில் கபாலம் ஏந்தியிருக்கும். சில பெண் தெய்வங்கள் இடுப்பில் குழந்தை ஒன்றை வைத்திருப்பதாக நாட்டுப்புறப் பாடல்களிலும், வழக்கு மரபுகளிலும் செய்திகள் உள்ளன. ஆண் தெய்வங்கள் நின்ற கோலத்திலும், ஒரு காலை மட்டும் முழங்காலிட்ட கோலத்திலும், தவழ்ந்த கோலத்திலும் அமைந்திருக்கும்.

வழிபாடும் நம்பிக்கைகளும்

நாமக்கல் மாவட்டத்தில் வழிபாடுகள் பல நிலைகளில் காணப்படுகின்றன. பெருந்தெய்வம் அளவிற்கு வழிபாடுகள் சிறுதெய்வத்திற்குச் செய்யப்படுவதில்லை. எனினும் பெரும்பகுதிக் கோயில்களில் ஒரு காலப் பூசையாகப் பின்பற்றப்படுகின்றன. சிறுபகுதி கோயில்களில் வாரத்தில் இரண்டு நாட்கள், மாதத்தில் ஒருசில நாட்களும் ஆண்டுகளுக்கு மூன்று அல்லது நான்கு நாட்களும் பூசைகள் நடைப்பெற்று வருகின்றன.

அபிஷேக வழிபாடு

நாள் வழிபாட்டினைத் தொடர்ந்து சிறப்பு நாட்களிலும் விழா நாட்களிலும் அபிஷேகங்கள் நடத்தப்பெறுகின்றன. இச்சிறப்பு அபிஷேகம் வேண்டுதல்காரர்களாலும் நடத்தப்பெறும். ஆண்டுதோறும் குறிப்பிட்ட நாட்களில் ஒவ்வொருவரும் செய்யும் 'படி' முறையும் இவ்வாட்டாரத்தில் காணப்படுகின்றது. அபிஷேகம் செய்வதற்கு விரும்புவோரை இவ்வாட்டாரத்தில் **'உபயதாரர்'** என அழைக்கப்படுகின்றனர். அபிஷேகத்திற்குத் தேவையான பொருட்களை உபயதாரர் கொண்டு வந்து பூசாரியிடம் கொடுப்பர். பூசாரி ,கோயிலுக்கு வந்திருக்கின்ற அபிஷேகம், புதிய துணிகளை அம்மனுக்கு அணிவித்து மலர் மாலைகளால் அலங்கரிப்பர். இவ்வபிஷேகம் அனைத்தும் கருவறையில் உள்ள மூலவருக்கு மட்டுமே நிகழ்த்தப்பெறும்.

அருள்மிகு மாரியம்மன் - செல்லாண்டியம்மன் திருக்கோயில் (இராசிபுரம்)

இறைவன்: அருள்மிகு மாரியம்மன்

தல விருட்சம்: வேப்ப மரம்

தலச் சிறப்பு

இத்திருத்தலம் இராசிபுரம் நகரின் மேற்குப் பகுதியில் பெரிய மதிற்சுவருடன் மிகச் சிறப்பான, பொலிவுடன் விளங்குகிற பிரசித்திப் பெற்ற தலமாகும். ஒரு காலத்தில் ஊர் மக்கள் எல்லாம் பிளேக், காலரா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு, எல்லோரும் ஊரை விட்டு வெளியேறிக் கொண்டு இருந்தார்கள். அப்பொழுது திருவிழாவிற்கான ஏற்பாடு நடைபெற்று, காப்புக்கட்டி, கம்பம் போடப்படும். பிறகு ஒரு சிலர், கம்பம் போட்ட பிறகு நம்மில் யாரும் ஊரை விட்டு வெளியேறக் கூடாது என்று கூறி அங்கேயே இருந்தார்கள். அப்பொழுது திருவிழா முடிந்து குளத்தில் கம்பம் விடுவது வழக்கம். அப்படி கம்பம் விட்டுவிட்டு கோயிலுக்கு வருவதற்கு முன், குளத்தில் விட்ட கம்பமானது கோயில் முன்பாக வந்து இருந்தது. அதைக் கண்ட பெரியவர்கள், ஆச்சரியத்துடன் பார்த்தபோது சில தாய்மார்களுக்கு அருள் வந்து, மாரியம்மன் தன் கணவர் இறந்த இடத்திலேயேதான் இருக்க வேண்டும் என்றும் அருள்வாக்கு சொல்லியது.

அன்று முதல் நித்திய சுமங்கலியாக மாரியம்மன் இருக்க வேண்டும் என்றமையால், வருடந்தோறும் பண்டிகைக் காலங்களில் பழைய கம்பத்தை எடுத்துவிட்டு, புதிய கம்பத்தை கோயில் முன்பு நடுவது வழக்கமாக இருந்து வருகிறது. வருடம் முழுவதும் அம்மனுக்கு கம்பம் உள்ள திருக்கோயிலாகும்.

நடை திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி முதல் – பகல் 1.00 மணி வரை

அன்னாதானம்

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னாதானத் திட்டத்தின்படி தினந்தோறும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

இராசிபுரம் அங்காளம்மன் திருக்கோயில்

தல சிறப்பு

ஆகமவிதிகளின்படி அருள்மிகு அங்காளம்மன் சிலை செய்யப்பட்டது. தற்போதைய வெளி பிரகாரம் உள்ளிட்ட இடத்தில் கல் மண்டபம் மற்றும் அன்னையின் மற்றொரு அவதாரமாக உள்ள பேச்சியம்மன் என்கிற பூங்காவன தாய், பெரியண்டவர் சன்னதி, காவல் தெய்வங்களாக உள்ள வீரபத்திரர் உடன் ராகு கேது தெய்வங்களுடன் ஸ்ரீ ராஜகணபதி, வேல் மயில் முருகன் சுவாமி சன்னதிகளுடன் கூடிய அர்த்த மண்டபம், அன்னைக்கு இருபுற வாயிலில் இரு பெண் காவல் தெய்வங்கள், உடன் நந்திகேஸ்வரர் அன்னையின் திருப்பாதம், ஊஞ்சல் மற்றும் கம்பீர கொடிக்கம்பத்துடன் உள்ள மகா மண்டபம், அதன் வலப்புறத்தில் அன்னையின் பிரதான காவல் தெய்வங்களான இருளப்பன், பாவாடையன், பேச்சியம்மன் (மடியில் குழந்தை உருவுடன் உள்ளது) மற்றும் மதுரை வீரன் உடன் வெள்ளையம்மா, பொம்மி, விநாயகர் ஆகியோர் அருள் பாலிக்கிறார்கள்.

இத்திருக்கோவிலில் தற்போது புதிதாக திருப்பணிகள் நடைபெற்று, தங்கமுலாம் பூசப்பட்ட செம்பாலான விமானமும் அமைக்கப்பட்டுள்ளது

சிறப்பாகும்.

பூசை மற்றும் நடை திறந்திருக்கும் நேரம்

தினமும் ஒரு கால பூசை நடைபெறுகிறது. காலை 9.00 மணி மற்றும் மாலை 6.00 மணி முதல் – இரவு 8.00 மணி வரை நடை திறக்கப்படுகிறது. நாமக்கல்லில் இருந்து 30 கி.மீ தொலைவில் உள்ள இராசிபுரம் நகரின் மையப்பகுதியில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

இரா.புதுப்பட்டி துலக்க சூடாமணியம்மன்

தல விருட்சம்: வேப்ப மரம்

தல வரலாறு

"திருக்கோயில் அமைந்துள்ள இடத்தில் நவாப் மன்னர் ஒருவர் தனது படை இளைப்பாற முகாம் போட்ட போது, வனாந்திரமாக இருந்த இடத்தில் வளர்ந்திருந்த புற்றினை இடித்துவிட்டார். பின், குருதிப்பீரிட்டு நவாப் மற்றும் ஏவலாட்களுக்கு கண் தெரியாமல் போய்விட, நவாப் மன்னர் பணிந்து புற்றிடம் தங்கிய அம்மனை வேண்டி வழிபட மீண்டும் கண்ணொளி பெற்றதாக இத்திருக்கோவில் திருத்தல வரலாறு கூறுகிறது. மேலும், நவாப் மன்னர் நன்றிக் கடனாக புற்றை சுற்றி கோயில் அமைத்து ஊர் பெரியோர்களைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்தார். எனவே அம்மனுக்கு **'துலக்க சூடாமணியம்மன்'** என்ற பெயர் உண்டாயிற்று."[2]

தனிச்சிறப்பு

இவ்வம்மனை பக்தியுடன் வேண்டி வழிபட்டால் கண் நோய்கள் நீங்குகின்றன. உடலில் ஏற்பட்ட கட்டி, மருவு ஆகியவைகளும் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து போகும். ஊமைகள் பேசவும், செவிடர்கள் கேட்கவும் அளப்பரிய சக்தியை உண்மையான பக்தர்களுக்கு அன்னை அருள்புரிகிந்றாள். இத்திருக்கோயில் இராசிபுரத்திலிருந்து வடக்குப் பகுதியில் 12 கி.மீ தொலைவில் உள்ள புதுப்பட்டி எனும் ஊரில் கிழக்கு முகமாக அமைந்துள்ளது.

தினமும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

காலை 6.00 மணி முதல் பகல் 1.30 மணி வரை

மாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை

அன்னதானம்

இத்திருக்கோயிலில் தினந்தோறும் 25 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது.

முடிவுரை

சிறுதெய்வ வழிபாட்டில் ஆண், பெண் என்ற பாகுபாட்டுடன் தெய்வங்கள் இடம் பெறுகின்றன. இதில் ஆண் தெய்வங்களை விட, பெண் தெய்வங்களே எண்ணிக்கையில் அதிகமாகவும் தனிச்சிறப்பிடமும் பெறுகின்றன. மனித வாழ்வில் பெண் சிறப்பிடம் பெறுவதால் பெண்ணைத் தெய்வமாக்கிச் சிறப்பு செய்தனர் என்றும் கூறலாம்.

சிறு தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வங்கள் மனித உணர்வில் தோன்றியவையாகும். பெரும்பாலும் கோயில் அமைப்பு இல்லை. சிறுதெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடில்லை.

தெய்வத்திற்குப் படைக்கும் பொருட்களில் அசைவப் பொருட்களைப்

படைக்கும் வழக்கம் மக்களால் உண்டாக்கப்பட்டு வழிபடுவதையும் சிறு தெய்வங்கள் பற்றிய தோற்றக் கதைகள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், உருவத்தோற்றங்கள் யாவும் ஒரே மாதிரியானவை, ஒரே காலத்தவை என்று கூறிவிட முடியாது. ஏனெனில், ஊர்ப்பகுதிகளில் சூழல்களின் தன்மைக்கேற்ப அவை வேறுபட்ட தன்மைகளைக் கொண்டவையாகயும் அமைந்துள்ளன என்பதையும் சிறு தெய்வங்களிடம் வேண்டிக்கொண்ட அனைத்தும் நடைப்பெறும் சாத்தியமிக்கவை என்பதையும் இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறியமுடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. ஸ்ரீ சந்திரன்.ஜெ., சிலப்பதிகாரம், சிலம்பு, மங்கல வாழ்த்துப்பாடல்
2. கோ.அருட்கலை, தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைகள், ப.131

துணைநூற்பட்டியல்

1. ஸ்ரீ சந்திரன்.ஜெ., சிலப்பதிகாரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 1999.
2. அருள்தாசு., தமிழர் பண்பாட்டில் வாழிபாடு, வி.பி.ஞானப்பிரகாசம், சூ.இன்னாசி பதிப்பகம்.
3. நாட்டுப்புறவியல், காவியா பதிப்பகம், முதல் குறுக்குத்தெரு, பிரஸப்புரம், கோடம்பாக்கம், சென்னை – 24.

தகவலாளர் பட்டியல்

1. முத்துசாமி.அ., நாமக்கல், வயது 62
2. சீனிவாசன்.கு., திருச்செங்கோடு, வயது 56
3. செல்மா.காமராசன், பொத்தனூர், வயது 57

© 2026 திருமதி.லீலாவதி வெ, முனைவர்.தினகரன் ப. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 115–122
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

மகாபாரத மறுவாசிப்பில் பூமணியின் கொம்மை

சிவசங்கரி வி*

முனைவர் பட்ட ஆய்வாளர் சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு, *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சிவசங்கரி வி — sivakrishna2524@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00037

ஆய்வுச்சுருக்கம்

மகாபாரத மறுவாசிப்புப் பனுவல்களில் எழுத்தாளர் பூமணியின் கொம்மை, அவர்தம் வட்டார மரபறிவின் பிரதிபலிப்பாக அமைகிறது. கொம்மையில் இடம்பெற்றுள்ள பெண்மொழியின் தேவையையும், நாட்டுப்புறக் கூறுகளின் கட்டமைப்பையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. மகாபாரதத்தின் புனிதத்துவ மரபுகளையும் நாட்டுப்புற மரபுகளையும் பூமணி எவ்வாறு தன் புனைவிற்கேற்ப மறுகட்டமைப்பு செய்திருக்கிறார் என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது

Keywords / திறவுச்சொற்கள்: பூமணி; கொம்மை; மகாபாரதம்; மறுவாசிப்பு; நாட்டுப்புறக் கூறுகள்; பெண் கதைமாந்தர்கள்; வட்டார மரபறிவு.

Abstract

Among the retellings of the Mahabharata, Poomaṇi's Kommai serves as a reflection of regional traditional knowledge. This article examines the significance of women's voices and the construction of folk elements represented in Kommai. It also explores how Poomaṇi reconstructs the sacred traditions of the Mahabharata and its folk traditions in accordance with his fictional framework. The study further seeks to understand the ways in which classical epic traditions and folk narrative elements are reconfigured through the regional cultural knowledge embedded in the novel.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: வி, சி. (2026). மகாபாரத மறுவாசிப்பில் பூமணியின் கொம்மை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 115–122. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8439

முன்னுரை

காலம்தோறும் தனக்கான வெளியை விரிவுபடுத்திக் கொள்ளும் பேரிலக்கியமாக மகாபாரதம் விளங்குகிறது. தமிழ்மொழியில் வில்லிபுத்தூரார் பாரதம் தொடங்கி, தற்கால நவீனப் புனைவுகளிலும் மகாபாரதம் தன்னை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. உளவியல், தத்துவம், பெண்ணியம், தலித்தியம், எதார்த்தம், வரலாறு முதலிய கோணங்களில் புதினங்கள் மகாபாரதத்தை விவரிக்கின்றன. அவ்வகையில் எழுத்தாளர் பூமணியின் கொம்மை புதினம்

மகாபாரதத்தின் வட்டாரக் கூறுகளோடு புனையப்பட்டுள்ளது. மேலும் மகாபாரதத்தின் வடஇந்திய பதிப்பு, தென்னிந்திய பதிப்பு, இந்திய அளவிலான நாட்டுப்புறக் கூறுகள், தமிழகக் கூத்து மரபுகள் முதலியவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் தரவுகள் புதினத்தின் புனைவுத் தன்மைக்கு ஏற்றவாறு எடுத்தாளப்பட்டுள்ளன. மகாபாரதப் பெண் கதைமாந்தர்களின் நிலை, மகாபாரதம் தொடர்புடைய நாட்டுப்புறக் கதைக்கூறுகள், மகாபாரத நிகழ்வுகளின் மரபுக் கட்டுடைப்பு முதலியன புதினத்தின் ஆய்வுத் தளங்கள் ஆகும்.

தமிழில் மகாபாரத இலக்கியங்களின் வரிசையில் கொம்மை

சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவற்றில் மகாபாரதக் கூறுகள் - உவமை, அரசனின் புகழ் உரைத்தல், திருமாலின் மேன்மையைக் கூறுதல் முதலிய நிலைகளில் இடம்பெற்றுள்ளன. வில்லிபாரதம், நல்லாப்பிள்ளை பாரதம் முதலிய காப்பியங்கள் வியாசபாரதத்தைத் தழுவி எழுதப்பட்ட வழிநூல்களாக விளங்குகின்றன. தற்கால இலக்கிய வரிசையில் மகாபாரதம் - கவிதை, சிறுகதை, புதினம் ஆகிய பரிணாமங்களை எட்டியிருக்கிறது. தற்கால இலக்கியங்கள் மகாபாரதத்தைச் சமகாலத் தேவைகள், ஆய்வுகள், மீள்வாசிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரதிபலிக்கின்றன.

புனைவிலக்கியங்கள், மகாபாரதத்தின் மீது எழுப்பப்படும் கேள்விகளுக்கு மகாபாரதத்திலிருந்தும் எழுத்தாளரின் ஆய்வுகள் மற்றும் அனுமானங்களிலிருந்தும் விடை காணும் முயற்சியாக அமைகின்றன. மேலும் காலம்தோறும் கூறப்பட்டு வரும் மகாபாரதத்தின் புனித, வேதாந்தக் கட்டமைப்பை மடைமாற்றம் செய்ய முற்படுகின்றன.

எம். வி. வெங்கட்ராமின் நித்தியகன்னி, எஸ். ராமகிருஷ்ணனின் உபபாண்டவம், இந்திரா பார்த்தசாரதியின் கிருஷ்ணா கிருஷ்ணா, ஜெயமோகனின் வெண்முரசு நாவல் வரிசை முதலிய புதினங்கள் மகாபாரத மறுஆக்கங்களாகவும் மறுவாசிப்பு படைப்புகளாகவும் விளங்குகின்றன. இந்த வரிசையில் 2018-ஆம் ஆண்டு வெளிவந்த பூமணியின் கொம்மை மகாபாரதப் புனைவுகளில் தனக்கென ஒரு தனித்த இடத்தை உருவாக்கியுள்ளது. கொம்மையின் குறிப்பிடத்தக்க கூறுகளாவன:

1. இயல்பான இலக்கிய நடையும் கரிசல் வட்டார மொழிநடையும் கொண்டு எழுதப்பட்டுள்ளது.
2. நாட்டுப்புறக் கூறுகளான சொலவடைகள், பாடல்கள், கதைகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.
3. மகாபாரதமும் ஸ்ரீமத் பாகவதமும் ஒருசேர புனையப்பட்டிருப்பதன்வழி குருவம்ச வரலாறும் கிருஷ்ணனின் மேன்மையும் சமநிலையில் விவரிக்கப்பட்டுள்ளன.
4. மகாபாரதத்தின் பதினெண் பருவங்களின் சுருக்கமாக இப்புனைவு இருப்பினும் செறிவாகப் பெண் கதைமாந்தர்களின் நிலையை வெளிப்படுத்துகிறது.
5. பாண்டவர்களில் குந்தியின் மக்கள் முதன்மை பெறும் அதேசமயம் மாத்ரியின் புதல்வனான சகாதேவன் குறித்த நுட்பமான புனைவுகளும் எழுதப்பட்டுள்ளன.

மகாபாரத பெண் கதைமாந்தர்கள்

பாண்டவர், கௌரவர், பீஷ்மர், கர்ணன், கிருஷ்ணன் முதலானோர்

மகாபாரதத்தின் முதன்மைக் கதைமாந்தர்களாக விளங்குகின்றனர். ஆனால் மகாபாரதத்தின் அதிகம் பேசப்படாத பக்கமாகவும் உடைமைச் சமூகத்தின் பிரதிபலிப்பாகவும் விளங்கக்கூடியது பெண் கதைமாந்தர்களின் வாழ்வியல் ஆகும். இப்புதினத்தின் மைய நோக்கம் மகாபாரதத்தில் காணலாகும் அபலைப் பெண்களை முன் வைத்து மக்கள் மொழியில் மகாபாரதத்தை எழுதுதல் என்று பூமணி குறிப்பிடுகின்றார் (பூமணி, 2023, பக்.9).

மகாபாரதப் பெண்கள் பலதரப்பட்டவர்கள். அப்பெண்களின் வாழ்கையைத் தீர்மானித்த காரணிகளை இரண்டு நிலைகளாகப் பகுத்துக் கொள்ளலாம்.

1. தனக்கு நேர்ந்த துயரத்தினைச் சகித்துக் கொள்ளுதல்.
2. துயரத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து அதனைக் கேள்விக்குட்படுத்துதல்; எதிர்த்தல்.

அம்பிகை, அம்பாலிகை, குந்தி, இடும்பி ஆகிய பெண்களின் வாழ்கையைத் தீர்மானித்த முடிவுகள் பிறரால் எடுக்கப்பட்டவை. இப்பெண்கள் முதல் நிலையைச் சேர்ந்தவர்கள்.

அம்பிகை, அம்பாலிகை ஆகியோரது திருமணம் பீஷ்மரால் முடிவு செய்யப்பட்டது; குழந்தைப் பேற்றிற்கான நியோகமுறை சத்தியவதியால் தேர்ந்தெடுக்கப்பட்டது; விருப்பம் இல்லையெனினும் இவ்விரண்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர். ‘அறுதலிக்குப் புத்திரனா, அதென்ன வினோதமான தர்மம்... மறுத்தால் விடவா போகிறீர்கள்.உங்களைச் சார்ந்திருக்கும் எங்களுக்கு வேறு கதியேது’ என அம்பிகை தனது நிலையை எண்ணி நொந்துக் கொள்கிறாள் (பூமணி, 2023, பக்.77).

சூரசேனனின் மகளாகப் பிறந்த பிரதை குந்திபோஜனுக்கு மகளாகத் தத்துக்கொடுக்கப்பட்டாள்; அரசனின் மகளாக இருந்தபோதும் அந்தணர்களுக்குப் பணிவிடை செய்ய நியமிக்கப்பட்டாள்; திருமணத்திற்கு முன்பு பிறந்த குழந்தையைச் சமூகத்தின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாக ஆற்றொழுக்கில் விட்டாள்; கணவனை இழந்தபின் அஸ்தினாபுரத்தின் மீது தனக்கு உள்ள உரிமையை நேரடியாகக் கேட்க முடியாத நிலையில் தனது பிள்ளைகளின் மூலம் அதை நிலைநிறுத்த முயற்சிக்கிறாள். ‘காட்டில் வாழும் பிள்ளைகளைக் கறையேற்றி நாடாள வைக்கணுமே, அவர்கள் கட்டுக்கோப்புடன் ஒற்றுமையாக இருந்தால்தான் கறையேற முடியும்’ என்ற எண்ணத்தைச் சுற்றியே குந்தியின் செயல்பாடுகள் அமைந்தன (பூமணி, 2023, பக். 212). இப்படியாகக் குந்தியின் வாழ்வானது தந்தை, வளர்ப்புத் தந்தை, கணவன், பிள்ளைகள் ஆகியோரின் நலனை மையமிட்டே கட்டமைக்கப்பட்டுள்ளது.

பீமன் மீது கொண்ட காதல் காரணமாகத் தனது சகோதரனின் ஆணையையும் புறக்கணித்தவள், இடும்பி. சாலிகோத்திரத்தில் பயமின்றி பாதுகாப்புடன் வாழ்வதற்காக இடும்பியின் துணையைப் பாண்டவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர் இடும்பியின் மகனான கடோத்கஜன் ராஜசூய யாகத்திற்கு பொருள் திரட்டி வரவும் போரில் பெரும்படையைச் சமாளிப்பதற்காகவும் மட்டுமே பயன்படுத்தப்பட்டான் கடோத்கஜனின் விருப்பத்தின் பெயரில் பீமனைக் காண இந்திரபிரஸ்தம் செல்லும் இடும்பி, குந்தியால் அவமதிக்கப்படும் பகுதி (பூமணி, 2023, அத்தியாயம்.94). கொம்மையில் இடம்பெற்றுள்ளது. ‘எனக்குச் சேர வேண்டிய சொத்த அநியாயமாப் பறிச்சு வச்சுக்கிட்டு கண்ணுலகூடக் காட்டமாட்டங்காளே’ என்று அழுது புலம்பும் இடும்பி பீமன் மீது கொண்ட அன்பினால் வஞ்சிக்கப்பட்ட கதைமாந்தராக

வெளிப்படுகிறாள் (பூமணி, 2023, பக். 317). ஆறுமாத காலம் மட்டுமே கிடைத்த அன்பிற்காக வாழ்க்கை முழுக்கவும் பீமனின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு இன்னல்களை ஏற்றுக்கொள்கிறாள்.

அம்பை, திரௌபதி, சாவித்திரி, தமயந்தி முதலானோர் தனக்கு நேர்ந்த நிலையினை 'விதிப்பயன்' என்று ஏற்றுக்கொள்ளாமல் கேள்விக்குட்படுத்தும் கதைமாந்தர்களாக விளங்குகின்றனர். அம்பை, திரௌபதி ஆகியோர் தன் நிலையை மாற்றி அமைப்பதற்கான முயற்சியில் போராட்டங்களையும் இன்னல்களையும் தோல்வியையும் கடந்து வெற்றியடைகின்றனர். சாவித்திரி, தமயந்தி ஆகியோர் துயர்நிலை கண்டு துவளாமல் மனத்திடத்துடனும் மதிநுட்பத்துடனும் போராடி வெற்றியடைகின்றனர்.

விசித்திரவீரியனுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காகப் பீஷ்மரால் கவர்ந்து வரப்பட்ட அம்பை, தனது வாழ்க்கைத் துணையை (சால்வ மன்னன்) ஏற்கனவே தீர்மானித்தவளாக இருக்கிறாள். ஆனால் சத்திய விரதத்தின் பெயரிலும் சத்திரிய தர்மத்தின் பெயரிலும் பீஷ்மராலும் சால்வனாலும் அலைக்கழிக்கப்படுகிறாள். 'தம்பிக்காக சுயம்வரத்துக்கு வந்து கலந்துக்கிறவன் எப்படிச் சத்திரியனாருக்க முடியும். காதலிச்ச ஒரு பொண்ணக் கைவிட்றவன் சத்திரியன்னு எப்படி மார்தட்டிக்கிற முடியும்.' (பூமணி, 2023, பக்.69) என்று அம்பை எழுப்புகின்ற கேள்வி, பெண்களைத் துச்சமாகக் கருதும் ஆண் சமூகத்தின் மீது வைக்கப்படும் கேள்வியாகும். நியாயம் கிடைக்காது தோற்றுப்போன அம்பை, சிகண்டியாகப் பழிதீர்த்துக் கொள்கிறாள். பெண்ணின் ஆழ்மன வைராக்கியம் கண்டவெற்றியாக அம்பை - சிகண்டி விளங்குகின்றனர்.

திரௌபதியைப் பூமணி வனவாசிப் பெண்ணுக்குப் பிறந்தவளாக புனைந்துள்ளார். அர்ஜுனனுக்கு மாலையிட்டாலும் பாண்டவர் ஐவருக்கும் குந்தியின் சொல்லை முன்னிட்டு மனைவியாகிறாள்; வனவாசத்தின் போது பாண்டவர்களின் ஒற்றுமையைப் பேணுகிறாள்; வனவாசிகளுக்குரிய வீரமும் தற்காப்புத் தன்மையும் அவளிடம் இயல்பாகவே வெளிப்படுகிறது; கௌரவர் சபையில் அவமதிக்கப்படும் திரௌபதிக்குத் தன்னைப் பாதுகாக்கப் பாண்டவரோ கிருஷ்ணனோ தேவைப்படவில்லை என்கிற பூமணியின் மரபுக்கட்டுடைப்பு குறிப்பிடத்தக்கது. 'சீச்சீ, பொழச்சுப் போடா மூடனே! அவனுக்கு அபயமளித்து முழு ஆடையில் உடம்பை மறைத்துக் கொள்கிறாள். சபையினரைக் காளியின் ருத்ரகோலத்தில் கம்பீரமாக பார்க்கிறாள்' (பூமணி,2023,பக்.329). கௌரவர் சபையில் தான் செய்த சபதத்தில் திரௌபதி வெற்றி பெறுகிறாள். இருப்பினும் தனது பிள்ளைகளுக்குத் தாய்ப்பாசம் காட்ட முடியாத நிலையிலும் பாண்டவர் ஐவரிடமும் ஒரே தன்மையிலான அன்பை வெளிப்படுத்தி எதிரஅன்பைப் பெறமுடியாத நிலையிலும் தோற்றுப்போகிறாள்.

மேற்குறிப்பிட்ட கதைமாந்தர்கள் மட்டுமின்றி கங்கை, அம்பிகையின் பணிப்பெண் சிவை, சுபத்திரை, யயாதியின் மகள் மாதவி, காண்டவ வனத்தின் நெருப்பிலிருந்து தன் பிள்ளைகளை மீட்ட பெண் பறவை ஜரிதை முதலானோரைச் சமூகத்தில் உள்ள பல நிலைப்பட்ட பெண்களின் பிரதிநிதிகள் என்று கொள்ளலாம்.

பூமணி மகாபாரதப் பெண்களின் பேச்சு வெளியை விரிவுபடுத்தியுள்ளார். சான்றாக, கங்கை - சத்தியவதி உரையாடல், சகாதேவன் - பாஞ்சாலி உரையாடல் ஆகிய பகுதிகளைக் குறிப்பிடலாம்.

சத்தியவதி, குந்தி, மாதவி ஆகிய கதைமாந்தர்களின் மூலம் பெண்ணின் கன்னித்தன்மை மீது ஏற்றி வைக்கப்பட்ட புனிதம் உடைகிறது. சத்தியவதி, குந்தி ஆகியோர் முறையே பராசரர் மற்றும் சூரியன் மூலம் கன்னிகாபுத்திரரைப் பெறுகின்றனர்; குழந்தை பெற்றபின் மீண்டும் கன்னியாவாய் என்ற வரத்தையும் பெறுகின்றனர். மாதவி நித்தியகன்னி எனும் வரத்தைப் பெற்றவள்; காலவ முனிவனின் குருதட்சணைக்காக அரியசுவன், திவோதாசன், உசீநரன் ஆகிய மூன்று அரசர்களுக்கும் விசுவாமித்திரருக்கும் மனைவியாகி பிள்ளைகளைப் பெற்றுத் தர வலியுறுத்தப்படுகிறாள்.

இக்கதைமாந்தர்களின் வழி மகாபாரதம் தோன்றிய காலத்தின் சமூகம், ஆண் மையச் சமூகம் என்பதும் அச்சமூகம் பெண்களை நுகர்வு பொருளாகவும் உடைமையாகவும் உற்பத்திக்கருவியாகவும் பயன்படுத்தியுள்ள தன்மையும் புலனாகிறது.

மகாபாரதம் சார்ந்த இந்திய நாட்டுப்புறக் கூறுகள்

மகாபாரதம் ஏட்டுப் பிரதியாக மக்களிடம் பரவியதைக் காட்டிலும் வாய்மொழி வழக்காகவும் நிகழ்த்துக்கலைகள் மூலமாகவும் அதிகம் பரவியிருக்கிறது. மகாபாரதம் - அது வழங்கப்படும் நிலத்தின் பண்பாட்டோடும் மக்களின் நம்பிக்கைகளோடும் இணைக்கப்பட்டு புதிய வடிவம் கொள்கிறது. படைப்பாளிகளும் மகாபாரதத்தை தங்கள் மொழியில் வெறுமனே மொழிபெயர்ப்பதைக் காட்டிலும் தமது மொழி மற்றும் பண்பாட்டு கூறுகளின் தழுவலாகப் படைப்பதையே விரும்பியிருக்க வேண்டும். சான்றாக, தமிழின் வில்லிபாரதம், ஒடியாவின் சரளா மகாபாரதம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். மேலும் ஸ்கந்தபுராணம், பத்மபுராணம் முதலிய புராணங்களின் சில கூறுகள் வியாசபாரத நிகழ்வுகளை வேறுவடிவத்தில் முன்வைக்கின்றன.

எழுத்தாளர் பூமணியின் கொம்மை, கரிசல் வட்டார மொழி நடையும் இந்திய அளவிலான மகாபாரதம் தொடர்புடைய நாட்டுப்புறக் கூறுகள் சிலவற்றையும் உள்ளடக்கிப் புனையப்பட்டுள்ளது.

1. **அரவான்**

பிரம்மச்சரிய விரதம் ஏற்று வனவாசம் மேற்கொண்டிருந்த அர்ஜுனனுக்கும் நாககன்னிகை உலூபிக்கும் பிறந்த மகன். வியாசபாரதத்தின் அடிப்படையில் அரவான் எட்டாம் நாள் போரில் ஆர்ஸ்யஸ்ருங்கி (அலம்புஷன்) என்கிற ராட்சதனால் கொல்லப்படுகிறான் (இராமானுஜாசாரியர்,ம.வீ. 1919, பக்.353). வில்லிபாரதத்தின் அடிப்படையில் போருக்கு முந்தையநாள் அரவான் காளி முன்பு தன் உறுப்புகளை அறுத்து பலியிட்டுக் கொள்கிறான் (கிருஷ்ணமாச்சாரியர்,சே. 1966, பக்.324). வில்லிபாரதத்தின் இக்குறிப்பு ‘நவகண்டம்’ எனும் போரியல் உயிர் பலிச்சடங்கோடு ஒப்புநோக்கத்தக்கது. கொம்மையில் கிருஷ்ணனின் உபாயத்தின்படி அரவான் போரின் பத்தாம் நாள் பலியிடப்படுகிறான்.

வியாசபாரதம் – வில்லிபாரதம், இவ்விரண்டிலும் அரவானின் திருமணம் பற்றிய செய்தி இடம்பெறவில்லை. ‘அரவானின் ஆசையை நிறைவேற்ற மோகினி அவதாரம் எடுத்துக் கிருஷ்ணன் அவனை மணந்துக் கொண்டான்’ என்பது நாட்டுப்புற மரபாகும். அரவானை மணந்துக் கொண்டவள், போர்வீரர்களைத் திருப்திப்படுத்த அழைத்து வரப்பட்ட பெண்களில் ஒருத்தி என்றும் அவளது பெயரைக் கூட அரவான் அறிந்திருக்கவில்லை என்றும் பூமணி தன் புதினத்தில் புதிய கோணத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

பலியிடப்படும் முன் அரவான், போரில் பகைவர்கள் இறந்த பின்னரே தன் உயிர் போகவேண்டும் என்கிற வரத்தைக் கிருஷ்ணனிடம் வேண்டிப் பெற்றுக்கொள்கிறான். இச்செய்தி வில்லிபாரதத்தில் இடம் பெறுகிறது.

ஸ்கந்த புராணத்தின் கௌமாரிக காண்டத்தில் கடோத்கஜனின் மகனான பர்பரீகன் பற்றிய செய்தி இடம் பெறுகிறது. பிரம்மாவின் சாபத்தினால் பிறப்பெய்திய யட்சனான பர்பரீகன், கிருஷ்ணனின் சுதர்சன சக்கரத்தால் தலை கொய்யப்பட்ட பிறகு விமோசனம் அடைகிறான். சண்டிகா எனும் தெய்வத்தின் அருளால் அமுதம் தெளிக்க பெற்று அவனது தலை உயிர் பெறுகிறது.மேலும், போர் நிகழ்ச்சிகளை மலையின் உச்சியிலிருந்து காண்கிறது.

அரவான் தமிழக மரபிலும் பர்பரீகன் – காட்டு ஷ்யாம் என்கிற பெயரில் ராஜஸ்தான் மரபிலும் நாட்டார் தெய்வங்களாக விளங்குகின்றனர். இருவரது கதையுமே போருக்கு முந்தைய உயிர்ப்பலி என்பதை மையமிட்டது. இவ்விரு மரபுகளையும் இணைத்து பூமணி போரின் பத்தாம் நாள் பலியிடப்பட்ட அரவானின் தலை உயிரூட்டப் பெற்று வன்னிமரத்தின் மேலே வைக்கப்பட்டதாகவும் மீதமுள்ள எட்டு நாள் போரையும் பாண்டவர்கள் வெற்றியையும் கண்ட பிறகு உடலுடன் பொருத்தப்பட்ட தலை உயிரிழந்ததாகவும் புனைந்துள்ளார். இவ்விரு தெய்வங்களின் தலை மட்டுமே வழிபாட்டு மூலமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

2. **பொன்னுருவி**

தமிழக நாட்டுப்புறக் கதை மரபுகளில் கர்ணனின் மனைவியாகப் பொன்னுருவி சுட்டப்படுகிறாள். கர்ணமோட்சம் (நாடகம்), பொன்னுருவி மசக்கை (அம்மானை) ஆகியவற்றில் பொன்னுருவி பற்றிய குறிப்பு கிடைக்கிறது.

இவ்விரு இலக்கியங்களிலும் பொன்னுருவியின் நாடு இன்னதென்ற குறிப்பு இடம் பெறவில்லை. பூமணி பொன்னுருவியைப் புகேய நாட்டு மன்னன் வகுசன் மகள் என்று குறிப்பிடுகிறார். (பூமணி, 2023, பக். 470) எழுத்தாளர் கவிதா கானே, (Kavita Kane) கர்ணனின் மனைவி (karna’s wife: the outcast’s queen)என்கிற புதினத்தில் உருவியைப் புகேய நாட்டு இளவரசியாகக் குறிப்பிடுகிறார்.

தமிழக நாட்டுப்புற மரபில் பொன்னுருவி கர்ணனைச் சத்திரியன் எனக் கருதி மணக்கிறாள்; சூதக்குலத்தவன் என்கிற காரணத்தால் கர்ணனை வெறுக்கின்ற பொன்னுருவி, அவனைக் குந்தியின் மகன் என்று அறிந்த பிறகு ஏற்றுக்கொள்றாள். கவிதா கானேவின் படைப்பில் சூதக்குலத்தவன் என்று அறிந்தும் கூட காதலின் காரணமாக, உருவி கர்ணனை மணக்கிறாள்; எல்லா நிலைகளிலும் அவனுக்கு உறுதுணையாக இருக்கிறாள்.

பொன்னுருவி கர்ணனைப் புறக்கணித்ததன் காரணமாகக் காஞ்சனமாலை என்கிற சூதப்பெண்ணைத் துரியோதனன் கர்ணனுக்குத் திருமணம் செய்து வைப்பதாகவும் அவளே கர்ணனுக்கு எல்லா நிலைகளிலும் துணையாக உடன் இருப்பதாகவும் பூமணி புனைந்துள்ளார். மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் தமிழக நாட்டுப் புற மரபையும் நவீன புனைகதை மரபையும் இணைத்து பொன்னுருவி கதாபாத்திரத்தைப் பூமணி படைத்திருக்கிறாரா என்பது மேலும் ஆராயத்தக்கது.

3. **புளியமரத்தின் சாபம்**

மகாபாரதம் மற்றும் பாகவதம் ஆகிய நூல்களில் கிருஷ்ணனுக்கு இணக்கமான கோபிகை என்ற அளவில் மட்டும் குறிப்பிடப்படும் ஒரு கதாபாத்திரம், ராதா. தன் பாதத்தைக் காயப்படுத்திய புளியமரத்திற்கு ராதா, அதன் பழங்கள் முற்றிலும்

பழுக்கும் முன்னரே உதிர்ந்து விடும்படி சாபமிடுகிறாள்.

கிருஷ்ணன் துவாரகையை உருவாக்கும் முன் தனது இளமைக் காலங்களைக் கழித்த பகுதி விரஜபூமி (Braj bhoomi) என்று குறிப்பிடப்படுகிறது. தற்போதைய உத்தரபிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக விரஜபூமி குறிப்பிடப்படுகிறது. விரஜபூமியின் வட்டார மரபுகளில் காணலாகும் இம்லி தாலாவின் (imli thala : புளியமரம்) இக்கதை வடிவம் கொம்மையில் இடம்பெற்றுள்ளது.(பூமணி, 2023, பக்.581)

தமிழ்நாடு, ராஜஸ்தான், வங்காளம் முதலிய பகுதிகளின் வாய்மொழி மரபுகளில் சில கொம்மையில் எடுத்தாளப்பட்டுள்ளன. பூமணி மகாபாரதம் தொடர்புடைய இந்திய அளவிலான நாட்டுப்புறக் கூறுகளில் தனது புனைவியல் கூறுகளையும் இணைத்து புதிய கதைக்களத்தை உருவாக்கியிருக்கிறார் என்று கருதலாம். எனவே, கொம்மையில் இடம்பெற்றுள்ள மகாபாரதத் தரவுகளை எழுத்து மரபிலானவை, வட்டார வழக்குகள், புனைவு நிலைப்பட்டவை என தரம் பிரித்துக் கொள்ளுதல் அவசியமாகிறது.

பூமணியின் கற்பனைக் களங்கள்

கொம்மையில் பூமணி மகாபாரதத்தின் சில பகுதிகளைக் கற்பனையாகச் சித்தரித்திருக்கிறார். அவைகளில் சில பின்வருமாறு:

1. பாண்டவர்களின் தந்தையராக அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த விதுரன், திருதராஷ்டரன், கிருபர், தௌமியர் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். பீமனைக் கொல்லும் மனநிலையிலுள்ள திருதராஷ்டிரனும், உபபாண்டவர்களைக் கொல்லுவதற்குத் துணைநிற்கும் கிருபரும் இப்புனைவிற்கு முரணாகின்றனர். மேலும் பாஞ்சாலியின் சுயம்வரத்தின் போது பாண்டவர்களுக்குப் புரோகிதராகின்ற தௌமியர் அவர்களின் பிறப்புக்குக் காரணமாக அமைகிறார் என்பதும் முரணைத் தோற்றுவிக்கிறது.
2. கிருஷ்ணனைப பூமணி இறைவனாகவும் இயல்பான மனிதனாகவும் இருநிலைகளில் காட்சிபடுத்துகிறார். திருமாலின் அவதாரமாகவே இருப்பினும் மனிதனுக்குரிய இயல்புகளோடு விளங்கும் கிருஷ்ணனைப் பூமணி புதினத்தின் பிற்பாதி பகுதிகளில் முதன்மைப்படுத்தியிருக்கிறார். பாஞ்சாலியின் மானம் காத்தல், விஷ்வரூபம் எடுத்தல், கீதை உபதேசித்தல், மோகினி அவதாரம் எடுத்தல் போன்ற நிகழ்வுகள் கொம்மையில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
3. ‘அசுவமேத யாக குதிரையைப் பாதுகாக்கும் பொருட்டு வீரர்களோடு செல்லும் அர்ஜுனன் எதிர்கொள்ளும் கவுரிவனம் தனக்குள் நுழைகின்ற அனைத்தையும் பெண்களாக மாற்றக்கூடியது’ எனும் கதைப்பகுதி கொம்மையில் இடம்பெற்றுள்ளது (பூமணி, 2023, பக்.542). இக்கதையின் நாட்டுப்புறப் பின்னணியை அடையாளங்காண இயலவில்லை. எனவே இதனைப் பூமணியின் கற்பனையாகக் கொள்ள இடமுண்டு
4. அசுவமேதச் சடங்குகள் பற்றிய பூமணியின் விவரணை மாறுபட்ட கோணத்தில் உள்ளது. அவ்விவரணைகளின் மூலம் ஆராயத்தக்கது.
5. சொர்க்கத்தை அடைந்த தருமரும் வைகுண்டத்தில் இருக்க வேண்டிய கிருஷ்ணனும் தன் உற்றார் இருக்கும் நரகத்திலேயே இருக்க விரும்பும் புதினத்தின் நிறைவு பகுதி, சொர்க்கம் என்பது நாம் விரும்புகிறவர்கள் இருக்கும் இடம்தான் எனும் கருத்தை முன்னிறுத்துவதாக அமைகிறது.

முடிவுரை

மகாபாரத மறுஆக்கங்களில் பூமணியின் கொம்மை வெளிப்படுத்துகின்ற மாற்றுச் சிந்தனைகளை இக்கட்டுரை முன்வைத்திருக்கிறது. மகாபாரதத் தொடர்புடைய நாட்டுப்புறக் கூறுகளும் மகாபாரதப் பெண் கதைமாந்தர்களின் பெண்ணிய மொழியும் புதினத்தில் இடம்பெற்றுள்ள தன்மை ஆராயப்பட்டுள்ளது. நவீனப் புனைவுகளில் காணலாகவும் வாய்மொழி கூறுகளின் தாக்கத்திற்கு இப்புதினம் சான்றாக அமைகிறது. இதிகாச அடிப்படையிலான பூமணியின் கொம்மையிலும் பூமணியின் பிற படைப்புகளிலும் இடம்பெற்றுள்ள கூறுகளை ஒப்பிட்டு எதிர்கால ஆய்வுகள் அமையலாம்.

துணைநூற்பட்டியல்

தமிழ் நூல்கள்

1. இராமானுஜாச்சாரியார்,ம.வீ.(ப.ஆ.). ஸ்ரீ மகாபாரதம் – பீஷ்ம பர்வம், கணேஷா பிரஸ், 1919.
2. கிருஷ்ணமாச்சாரியர், சே., கோபாலகிருஷ்ணமாச்சாரியர், வை.மு. (ப.ஆ.). ஸ்ரீவில்லிபுத்தூரார் பாரதம் – உத்தியோக பருவம், வை.மு. கோபாலக்ருஷ்ணமாச்சார்யர் கம்பெனி, 1966.
3. புகழேந்திப் புலவர். பொன்னுருவி மசக்கை, Roja Muthaiah Research Library, https://rmrl.in/ta/dl/books/10017, accessed on September 14, 2026.
4. பூமணி. கொம்மை, டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், 2023
5. முனிசாமி முதலியார்(ப.ஆ). பதினேழாம் போர் என்னும் கர்ண மோக்ஷ நாடகம், மதராஸ் டைமண்ட் அச்சுக்கூடம், 1910

ஆங்கில நூல்கள் மற்றும் இணையக் கட்டுரைகள்

6. Idaya Rani, C., Subbulakshmi, M. *"A Critical Analysis of Kavita Kane's Karna's Wife: the Outcast's Queen -A Humanistic Approach"*, https://www.researchgate.net/publication/353734481, accessed on September 14, 2026.
7. Pattanaik Devdutt. Jaya : An illustrated retelling of the Mahabharata, Internet Archive, https://dn790003.ca.archive.org, accessed on September 14, 2026
8. Prasad, Dev. Krishna: A Journey through the lands & legends of Krishna, GoogleBooks,https://books.google.co.in/books?id=o0_5caqiUH0C&pg=PT137&source=gbs_selected_pages&cad=1#v=onepage&q&f=false, accessed on September 14, 2026.
9. Skanda purana, wisdom library, https://www.wisdomlib.org/hinduism/book/the-skanda-purana, accessed on September 14, 2026.

© 2026 சிவசங்கரி வி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 123–129
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

MINOR DEITY WORSHIP AND FOLK TRADITIONS IN ANCIENT TAMIL SOCIETY

Muhil Arasi P[1,*], Dr.Rajadurai S[2]

[1] *Research Scholar, PG & Research Department of History, Rani Anna Government College For Women, Tirunelveli, TamilNadu., India*

[2] *Associate Professor, PG & Research Department of History, Rani anna Government College For women, Tirunelveli, TamilNadu., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: Muhil Arasi P — muhiilarasii@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00036	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

Minor deity worship forms an important part of the religious, social, and cultural traditions of Tamil society. The origins of these traditions can be traced to the early relationship between human beings and nature, as well as to ancestral, hero, and community-based forms of worship. Ancient Tamil literary sources such as the Tolkappiyam, Akananuru, Purananuru, Ainkurunuru, Kuruntokai, and Silappathikaram provide valuable evidence for understanding these practices. The worship of natural forces such as rain, sun, mountains, and other elements was closely connected with the livelihood and survival of early communities. Similarly, the practice of erecting and worshipping Nadukal (Hero Stones) for warriors who sacrificed their lives for the protection of their people reflects the development of hero and ancestral worship. Over time, such traditions contributed to the development of clan and local deity worship.

The study also examines the worship of Korravai, guardian deities, Kannagi, Durga, Aiyai, and Kali, highlighting their association with warfare, protection, fertility, community welfare, and religious beliefs. Clan deity worship further demonstrates the relationship between ancestral memory, family identity, social relationships, and cultural heritage. Folk customs associated with minor deities were preserved through stories, songs, proverbs, rituals, festivals, and oral traditions. These practices were transmitted across generations and adapted according to changing social conditions. The study argues that minor deity worship should be understood not merely as a religious practice but also as an important source for reconstructing the social and cultural history of Tamil communities. Thus, minor deities and their associated folk traditions provide valuable insights into the continuity of ancestral memory, community identity, and Tamil cultural heritage.

Keywords / திறவுச்சொற்கள்: Minor Deities; Folk Worship; Nadukal; Ancestral Worship; Korravai; Clan Deity; Guardian Deities; Tamil Culture.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: P, M. A., & S, D. (2026). MINOR DEITY WORSHIP AND FOLK TRADITIONS IN ANCIENT TAMIL SOCIETY. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 123–129. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8441

Foreword

During the Stone Age, human beings lived a nomadic life and moved from one place to another in search of the three basic necessities of life: food, clothing, and shelter. While fulfilling these needs, they encountered various challenges from nature, wild animals, and changing climatic conditions. Gradually, human beings learned to produce their own food and adapt themselves to their natural surroundings.

Nature played an important role in the development of early religious beliefs. Rain and sunlight were essential for agricultural production, and therefore they came to be regarded as sacred forces. The moon, which provided light during the night, thunder and lightning, which created fear, and fire, which was discovered and used by early human beings, were also associated with supernatural powers. Thus, the worship of natural forces became one of the earliest forms of religious practice.

As human beings gradually moved from individual life to community life, they also began to honour individuals who sacrificed their lives for the protection of their community. Warriors and other heroic figures who died while protecting their people were commemorated through Nadukal (Hero Stone) worship. Over a period of time, such practices became associated with ancestral and local deity worship. These traditions contributed to the development of minor deity worship in Tamil society.

Worship

The practice of worship became prominent with the development of beliefs in supernatural and natural forces. Worship may be understood as an expression of reverence, respect, devotion, and obedience towards a deity or sacred power. Through worship, people expressed their respect for the forces that they believed influenced their lives.

Worship also served as a means through which communities expressed their values, beliefs, gratitude, and cultural identity. Thus, religious worship was not merely an individual practice but also formed an important part of the social and cultural life of early communities.

Origin of Worship

People across different societies have followed various forms of rituals and religious practices from ancient times. In the early period, natural elements such as the sun, moon, stars, rivers, seas, mountains, animals, snakes, plants, and other natural forces were worshipped. The emergence of deity worship can be associated with several factors, including fear, struggle, dependence on nature, and gratitude. Human beings were dependent on natural forces for their survival but had limited control over them. As a result, they developed beliefs and rituals through which they sought protection, prosperity, rainfall, fertility, and relief from natural difficulties.

Thus, fear, struggle, dependence, and gratitude played an important role in the development of early forms of worship.

Religious and Natural Elements in Tamil Worship

In ancient Tamil society, there was no strict distinction between major and minor deities in the early stages of religious development. Deities such as Shiva, Thirumal, Murugan, Indra, and Varuna were worshipped along with various local and nature-related deities.

At the same time, traditional forms of worship such as nature worship, Korravai worship, Nadukal or hero worship, ancestral worship, and guardian-deity worship were also practised. These traditions demonstrate the close relationship between religious beliefs, nature, warfare, community life, and social customs in ancient Tamil society.

Hinduism as a Banyan Tree

Hinduism may be compared to a banyan tree with several branches representing different religious traditions. Six major traditions are traditionally identified:

1. Saivism – The worship of Shiva as the supreme deity.

2. Vaishnavism – The worship of Vishnu or Thirumal as the supreme deity.

3. Saktam – The worship of Sakthi or the Goddess as the supreme divine power.

4. Ganapathyam – The worship of Ganesha as the supreme deity.

5. Kaumaram – The worship of Murugan as the supreme deity.

6. Sauram – The worship of the Sun as the supreme deity.

Alongside these major religious traditions, various forms of minor deity and folk-deity worship continued to exist within local communities. These traditions were closely connected with village life, ancestral beliefs, nature, agriculture, protection, and local customs.

Minor Deity Worship

The belief that a village should not exist without a temple reflects the important place occupied by religious institutions in Tamil society. Folk and minor deities have traditionally held a significant position in the religious and cultural life of Tamil communities. They can also be viewed as important expressions of local traditions and Tamil folk culture.

Early human beings first worshipped natural forces and later developed beliefs associated with spirits and ancestors. Spirit worship was connected with the belief in deceased ancestors and their continuing relationship with the living community. Animals that were considered important or helpful to particular communities were sometimes adopted as clan symbols and subsequently associated with religious worship.

The worship of deceased heroes through Nadukal also became an important tradition. Over time, ancestor worship developed into forms of clan-deity worship and local deity worship. Clan-deity worship therefore became one of the important components of minor deity worship, and many communities continued to worship their ancestral deities as part of their traditional religious practices.

Minor deities are generally associated with particular villages, communities, families, or localities. Their worship is closely connected with the protection and welfare of the community. In many traditional temples dedicated to minor deities, worship practices differ from those followed in major temple traditions. In several places, non-Brahmin priests traditionally perform the rituals, reflecting the community-based nature of these forms of worship.

The rituals associated with minor deities may include offerings, festivals, vows, possession rituals, and, in some traditions, animal sacrifice. The practices vary according to the particular deity and local custom. There is also no strict division between Saiva and Vaishnava traditions in many forms of minor deity worship.

The images of minor deities may be made from stone, wood, clay, or other locally available materials. Some deities are represented in distinctive or powerful forms and are believed to possess particular supernatural powers. Unlike the highly institutionalised worship associated with major temple traditions, minor deity worship is often closely connected with everyday village life.

Minor deity traditions are therefore strongly associated with the Little Tradition, in which religious

beliefs and practices are transmitted through local customs, oral traditions, festivals, rituals, and community participation. These traditions provide valuable evidence for understanding the social, cultural, and religious history of Tamil villages.

Thus, minor deity worship represents an important dimension of Tamil religious culture. It reflects the interaction of nature worship, ancestor worship, hero worship, clan traditions, village customs, and community beliefs and has continued to evolve through different historical periods.

Minor Deity Worship in Ancient Tamil Society

The worship of minor deities in ancient Tamil society was closely associated with ancestral worship, hero worship, nature worship, and the protection of the community. Among these traditions, Nadukal (Hero Stone) worship occupies an important place. Hero stones were erected in memory of warriors who lost their lives while protecting their people, cattle, or territory. The Tolkappiyam provides evidence for the practices associated with the erection and worship of hero stones.

«“Kaatchi Kaalkol Neerppadai Nadukal

Seerthagu Marapin Perumpadai Vaazhthalenru

Iru Moonru Marapin Kallodu Punara”

— Puraththinaiyiyal, 5»

This evidence indicates that the hero stone was not merely a memorial stone but also became an object of reverence. Warriors who died while protecting cattle and the community were remembered through such stones, and rituals were performed in their honour.

The Akananuru also provides evidence for the worship of hero stones. It describes how the hero who protected the cattle herds was commemorated, and how offerings were made before the hero stone:

«“Nuzhainuthi Ned uvel Kurumpadai Mazhava

Munai Aathandhu Murampin Veezhtha

Villo Vaazhkai Vizhuthodai Marava

Vallaan Pathukkaik Kadavul Penmaar

Nadukal Peeli Sootti Thudipaduthu

Thoppik Koododu Thuruu Uppili Kodukkum…”

— Akananuru, 35:4–10»

Similarly, the Ainkurunuru refers to hero stones bearing inscriptions that recorded the names and achievements of the warriors:

«“Vizhuthodai Marava Villidath Tholainthor

Ezhuthudai Nadukallenna”

— Ainkurunuru, 352»

The Tolkappiyam also mentions the practice of engraving the name and honour of the hero on the stone:

«“Peedum Peyarum Poriththu Athaa Thorum

Peeli Soottiya Pirangu Nilai Nadukal”

— Tolkappiyam, 67»

These literary references show that hero-stone worship gradually acquired elements of ancestral worship. Warriors who died for the protection of their community were initially honoured through memorial stones. Over time, the memory of such deceased persons became connected with the belief that they could continue to protect their descendants and community. This tradition can therefore be considered one of the historical foundations of later clan-deity and ancestral-deity worship.

Nature Worship

Nature worship was another important element of ancient Tamil religious practices. Rain, mountains, forests, rivers, and other natural forces were regarded as having a direct influence on human life. The people prayed to the rain deity for favourable rainfall and relief from excessive rain. The Purananuru records such a practice:

«"Malaivaan Kolkena Uyirppali Thooy

Maari Aanru Mazhai Mekku Uyaga Enak

Kadavul Peniya Kurava Makkal

Peyal Kan Maariya Uvagaiya"

— Purananuru, 143:1–4»

This passage indicates the close relationship between the people, nature, and religious belief. Rain was essential for agriculture and livelihood, and therefore prayers and ritual practices were performed to seek favourable climatic conditions.

Worship of Korravai

Korravai was another important deity associated with ancient Tamil society. She was particularly connected with warfare, victory, and the martial traditions of the Palai landscape. Warriors worshipped Korravai before and after battles and celebrated their victories through ritual performances. The Tolkappiyam refers to the place of Korravai worship in the martial tradition:

«"Marang Kadai Koottiya Thudinilai Sirandha

Kotravai Nilaiyum Aththinai Purname"

— Tolkappiyam, Puram, 62»

The worship of Korravai involved rituals associated with victory and warfare. The Vettuva Vari section of Silappathikaram provides a detailed description of the worship of Korravai and the ritual practices associated with her. This shows that deity worship was closely connected with the social and military life of ancient Tamil communities.

Guardian Deities and Community Worship

The worship of guardian deities was also an important feature of ancient Tamil religious life. Silappathikaram provides evidence for the worship of the Kaaval Bootham at Puhar during the Indra festival. Various food items, flowers, incense, and offerings were presented to the deity. People also performed dances and ritual activities and prayed for the prosperity and welfare of the kingdom.

«"Kaaval Boothathuk Kadaikezhu Peedikai

Puzhukkalum Nolaiyum Vizhukkudai Madaiyum

Poovum Pugaiyum Pongalum Sorindhu

Thunaingaiya Kuravaiya Anang Ezhunthaadip

Perunila Mannan Irunilam Adangalam

Pasiyum Piniyum Pagaiyum Neengi

Vasiyum Valanum Surakkena Vaazhthi”

— Silappathikaram, Indra Vizha»

This passage demonstrates that guardian-deity worship was not limited to individual religious devotion. It was also connected with the collective welfare of society. People prayed for the removal of hunger, disease, and enmity and sought prosperity and abundance.

Worship of Kannagi

The story of Kannagi in Silappathikaram also illustrates the transformation of a human figure into a deity. After the destruction of Madurai, Kannagi was believed to have attained divine status. The Kuravar people witnessed her ascent and worshipped her as a divine being. This episode indicates how an individual remembered for extraordinary qualities or actions could gradually become an object of worship.

Ancient Tamil literature also refers to the presence of deities in public spaces such as streets, squares, junctions, and common places. These places were associated with community-based religious practices and indicate that worship was integrated into everyday social life.

Worship of Durga, Aiyai and Kali

The worship of female deities such as Durga, Aiyai, and Kali can also be identified in ancient Tamil literature. Offerings and ritual practices were performed as part of their worship. The Kuruntokai refers to a ritual in which a yellow thread was tied around the arm of the person participating in the ceremony:

«“Vidaa Mugai Adukkathu Viralkezhu Soolikkuk

Kadanum Poon aam Kain Nool Yaavam”

— Kuruntokai, 218:1–2»

Such ritual practices demonstrate the importance of vows, offerings, and ritual protection in ancient Tamil religious traditions. Some of these practices continued in later village-deity festivals in different forms.

SIGNIFICANCE OF IDOL WORSHIP

Minor deity worship is often associated with the installation of stones or images and the offering of flowers and garlands. These practices represent important elements of the cultural heritage of Tamil communities. Through such forms of worship, the memories, values, and traditions of ancestors have been preserved and transmitted from one generation to another.

The worship of minor deities also reflects the importance given to human relationships and community bonds by earlier generations. Various traditional customs, rituals, and practices were developed in connection with the worship of these deities. These practices helped strengthen family and community relationships and preserved the cultural identity of the people.

CLAN DEITY WORSHIP

Clan deity worship has played an important role in maintaining family traditions and relationships. Our ancestors worshipped their clan deities and considered them protectors of their families and communities. Through these traditions, they preserved family honour, identity, social status, and the

cultural heritage of their lineage.

Clan-deity worship is closely associated with ancestral traditions. Many families traditionally maintain a connection with a particular clan deity and visit the deity's temple during important occasions and festivals. In some cases, these temples are located in remote areas such as forests, mountains, fields, or other places associated with the ancestral settlement of the community.

Such traditions demonstrate the close relationship between ancestral memory, family identity, religious belief, and community life. Clan-deity worship therefore forms an important component of minor deity worship and folk religious traditions in Tamil society.

CONCLUSION

Folk deities and their worship preserve the stories, beliefs, rituals, and cultural traditions of Tamil communities. These practices reflect the experiences, values, and social life of earlier generations. Therefore, minor deity worship remains an important part of the religious, social, and cultural heritage of Tamil society.

BIBLIOGRAPHY

1. Akananuru: Mulamum Uraiyum. New Century Book House (NCBH), Chennai, April 2004.

2. Natrinai: Mulamum Uraiyum. New Century Book House (NCBH), Chennai, April 2004.

3. Kuruntokai: Mulamum Uraiyum. New Century Book House (NCBH), Chennai, April 2004.

4. Ainkurunuru: Mulamum Uraiyum. New Century Book House (NCBH), Chennai, April 2004.

5. Pulavar Kuzhanthai. Tolkappiyam Porulatikaram: Urai. Poompukar Pathippagam, Chennai.

6. Tamilannal, Mu. Tolkappiyam Porulatikaram. Manivasagar Pathippagam, Chennai.

7. Silampum Sirutheyvangalum. Article, Vikatan, 6 January 2015.

8. Panubriya, A. Ra. Pazhantamilar Vazhipatil Sirutheyva Vazhipadu. Article, E-journal published by the Tamil Cultural Centre, Alagappa University, 15 June 2017.

9. Porkodi, Ma. Sool Navalgalil Siru Deiva Vazhipadu. International Journal of Creative Research Thoughts (IJCRT), ISSN: 2320-2882.

© 2026 Muhil Arasi P, Dr.Rajadurai S. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 130–131
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கொற்றவை: தொன்மங்களை மீட்டுருவாக்கம் செய்யும் புனைவு

முனைவர்.ஹேம்லின் ஐடா நே.க.*

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி,, *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.ஹேம்லின் ஐடா நே.க. — hemaburg2@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00035

ஆய்வுச்சுருக்கம்

தொன்மம் என்பது மரபுகளை வெளிப்படுத்துவது. மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்திருப்பது. மக்களின் வாழ்க்கைச் சூழல் மாறும் பொழுது தொன்மங்கள் மறுபடைப்பாக்க நிலையை எட்டுகின்றன. குமரி மண்ணில் இருந்து உருவாகி இந்நிலத்திற்குரிய தொன்மங்களுடன் கூடிய புனைவுகளில் பெண் பற்றிய பார்வையை ஜெயமோகனின் கொற்றவை என்ற புனைவு முன்னெடுக்கிறது. இளங்கோவடிகள் தரும் தகவல்களையும் உணர்வுகளையும் தாண்டி ஜெயமோகன், தொன்மங்களால் கூடுதலான கதைகளை உண்டாக்கி அதிகப்படியான விவரங்களைத் தருவதன் மூலம் இக்கதைக்கு வலிமை சேர்த்து இருக்கிறார். அதற்குத் தொன்மமும் அவருக்குக் கை கொடுத்திருக்கின்றது. ஜெயமோகன் கொற்றவை என்ற புனைவின் ஊடாக சிலப்பதிகாரக் கதையை மீட்டுருவாக்கம் செய்திருக்கிறார். அதற்குத் தொன்மத்தை மிக முக்கியமான கருவியாகப் பயன்படுத்துகிறார். அன்றையச் சமய, பண்பாட்டு, கலாச்சார, அரசியல் சூழலைத் தொன்ம நிகழ்வுகளுடன் பொருத்திக் காட்டியுள்ளார். மக்களின் மனங்களில் புதைந்து கிடக்கும் தொன்மக்கதைகளை நிகழ்காலத்துடன் பொருத்தி மறு வடிவம் ஆக்கியுள்ளார்.

Keywords / திறவுச்சொற்கள்: தொன்மம்; தொன்மவியல்; தொன்மகதை; குறியீட்டுத் தொன்மம்; கருத்தியல் தொன்மம்.

Abstract

Myth serves as an expression of tradition and is deeply intertwined with the lives of the people. As the socio-cultural context of a people evolves, myths undergo a process of re-creation. Emerging from the soil of the Kumari region, Jeyamohan’s novel 'Kotravai' advances a specific perspective on women by weaving together narratives rooted in the myths indigenous to this land. Going beyond the information and sentiments provided by Ilango Adigal, Jeyamohan has strengthened the story by generating additional narratives and details derived from mythology; in this endeavor, myth itself has served as a vital ally. Through 'Kotravai', Jeyamohan has re-imagined the story of 'Silappathikaram', employing myth as a crucial instrument. He has aligned the religious, cultural, and political milieu of that era with mythological events, reshaping the myths embedded in the collective consciousness of the people to resonate with the present.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: நே.க., மு. ஐ. (2026). கொற்றவை: தொன்மங்களை மீட்டுருவாக்கம் செய்யும் புனைவு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 130–131. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8443

The full text was submitted as a DOC file (HEMLIN-IDA.doc). It is available as a separate download from the editorial dashboard.

© 2026 முனைவர்.ஹேம்லின் ஐடா நே.க.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 132–133
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தோப்பில் முகமது மீரானின் நாவல்களில் விளிம்புநிலை இஸ்லாமியர்களின் வாழ்வியல்

முனைவர் .பெர்க்மான்ஸ் இயே*

உதவிப் பேராசிரியர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் .பெர்க்மான்ஸ் இயே — yburgmonds@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00034

ஆய்வுச்சுருக்கம்

தோப்பில் முகமது மீரானின் நாவல்கள் விளிம்பு நிலை மக்கள் சார்ந்த பன்மை அடையாளங்களின் தொகுப்பிற்கு நல்ல உதாரணங்களாக அமைவனவாகும். தமிழ்ச் சூழலமைவில் வாழ்வின் பரப்பிற்குள் முஸ்லீம் மைய நீரோட்டத்தில் கலவாத விளிம்புநிலை மூஸ்லீம்கள் பலர் உள்ளனர். ஒசாக்கள் என்ற நாவிதர்கள், வண்ணார், மீன் பிடிப்போர், பீடி சுற்றுபவர்கள், தோல் தொழில் செய்வோர், நெசவு, பாய்த்தொழில் செய்வோர், கபறுகுழி தோண்டுபவர்கள், கசாப்புக்கடை வியாபாரம் செய்பவர்கள், இரும்பு பட்டறைத் தொழிலாளர்கள், குடியிருப்பின்றி அலைந்து திரிகின்ற நாடோடிகள், அடித்தட்டு வாழ்க்கை வாழும் பெண்கள் இவர்கள் அனைவரும் தோப்பில் முகமது மீரானின் நாவல்களில் பிரதான பாத்திரங்களாக வந்துபோகின்றனர். இவர்கள் வலிகளோடும், பிறழ்வுகளோடும் ஏமாற்று வஞ்சகங்களோடும், வன்முறைகளோடும் வாழத்தலைப்பட்டவர்களாக உள்ளனர். இவர்களின் வாழ்வியலை தோப்பில் முகமது மீரான் நாவல்கள் காட்சிப்படுத்துகின்றன. இதை இக்கட்டுரை ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: வாழ்வியல்; விளிம்பு நிலை; சமூக அதிகாரம்; அதிகாரம்; சமூக ஒழுங்கு; சமத்துவமின்மை; தண்டனை.

Abstract

Thoppil Mohamed Meeran’s novels serve as excellent examples of the diverse identities associated with marginalized communities. Within the Tamil social landscape, there exist many Muslims-situated on the fringes-who do not integrate into the Muslim mainstream. Barbers (known as 'Osakkas'), washerfolk, fisherfolk, 'beedi' rollers, leather workers, weavers, mat weavers, grave diggers, butchers, blacksmiths, homeless nomads, and women living in abject poverty all appear as key characters in Thoppil Mohamed Meeran’s novels. These individuals navigate lives marked by pain, deviance, deceit, treachery, and violence. Thoppil Mohamed Meeran’s novels vividly portray these lived experiences; this article examines that portrayal.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: இயே, மு. . (2026). தோப்பில் முகமது மீரானின் நாவல்களில் விளிம்புநிலை இஸ்லாமியர்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 132–133. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8445

The full text was submitted as a DOC file (PERGMANS.doc). It is available as a separate download from the editorial dashboard.

© 2026 முனைவர் .பெர்க்மான்ஸ் இயே. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 134–140
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தென் தமிழகத்தில் அந்தோணியார் வழிபாடும் பண்பாட்டுப் பதிவுகளும்

பாஸ்கர் வேளாங்கண்ணி ஜே[1,*], முனைவர்.கலைச்செல்வன் ச[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,அரசு கலைக்கல்லூரி,உடுமலைப்பேட்டை., *India*
[2] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,அரசு கலைக்கல்லூரி,உடுமலைப்பேட்டை., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: பாஸ்கர் வேளாங்கண்ணி ஜே — baskertamil1990@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00033	

ஆய்வுச்சுருக்கம்

சமயங்கள் என்பவை மனித சமூகத்தைச் செம்மைப்படுத்தி நல்வழிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகள் ஆகும். அவ்வகையில் யூத மதத்திலிருந்து தோன்றிய ஒரு புதிய மார்க்கமே கிறிஸ்தவம் ஆகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பின் தோன்றிய இம்மதம் காலப்போக்கில் உலக அளவில் பெரும் வளர்ச்சி அடைந்தது. மேலைநாட்டினர் வாணிப நோக்கத்திற்காக தமிழகத்திற்கு வருகை புரிந்தனர். இங்கு வாழ்ந்த மக்களின் ஏழ்மையையும் எளிய நிலையையும் கண்ட அவர்களிள் சிலர் இம்மக்களுக்கு ஆன்மீக சமயப் பணிகளோடு சமூக நலப்பணிகளையும் ஆற்றத்தொடங்கினர். மக்களுக்கு தேவையான மருத்துவம் மற்றும் கல்விச் சேவைகளை செய்துள்ளனர். இவர்களின் அன்பான அணுகுமுறையாளும் தியாக உள்ளதாலும் ஈர்க்கப்பட்ட மக்கள் பலர் கிறித்துவ மதத்தினை தழுவினர். இவர்களிடையே புனிதர்களின் வழிபாட்டை புகுத்தினர். இவ்வாறு கிறித்துவ புனிதர்களின் வழிபாடு தென் தமிழகத்தில் பரவலாக வீறு கொண்டு எழுந்தன.

Keywords / திறவுச்சொற்கள்: அந்தோணியார் வழிபாடு> மக்களின் நம்பிக்கை> வாழ்வியல்> அசனம்> கொடியேற்றம்> கூட்டு வழிபாடு> வாசாப்பு> மண்டகப்படி> நேர்த்திக்கடன்> திருவிழா> குருக்கள்.

Abstract

Religions are organizations created to refine and guide human society. In this way, Christianity is a new religion that emerged from Judaism. This religion, which emerged after the birth of Jesus Christ, has grown greatly on a global scale over time. Westerners visited Tamil Nadu for commercial purposes. Seeing the poverty and simple condition of the people living here, some of them started providing social welfare services along with spiritual and religious services to these people. They provided necessary medical and educational services to the people. Many people, attracted by their kind approach and sacrifice, embraced Christianity. They introduced the worship of saints among them. Thus, the worship of Christian saints became widespread in South Tamil Nadu.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ஜே, பா. வே., & ச, மு. (2026). தென் தமிழகத்தில்

அந்தோணியார் வழிபாடும் பண்பாட்டுப் பதிவுகளும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 134–140. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8447

முன்னுரை

கிறித்துவ மக்களிடையே அந்தோணியாரின் பக்தி முயற்சி மிகுந்தே காணப்படுகின்றது. மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், மற்றும் கடற்கரை பகுதிகளில் வாழும் மக்கள் அந்தோணியாரின் வழிபாட்டில் ஈடுபாடு உடையவர்களாக காணப்படுகின்றனர் அவ்வகையில் மதுரை மாவட்டத்திலிருந்து பிரிந்த திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மக்கள் அந்தோணியார் மீது மிகுந்த பக்தி கொண்டவர்களாகவும் தேர் திருவிழாவில் பண்பாடு தொடர்புடைய கலை நிகழ்வுகளை நிகழ்த்தியும் சமய நல்லிணக்கத்துடன் கொண்டாடி வருவதை காண முடிகின்றது. அவ்வகையில் அந்தோணியார் வழிபாட்டையும் மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

தமிழகத்தில் கிறிஸ்தவம்

தமிழகத்தில் கிறிஸ்தவ சமயம் கி.பி முதல் நூற்றாண்டிலேயே புனித தோமா என்பவரால் கடற்கரை பகுதிகளில் பரப்பப்பட்டு வந்தது. என்று குறிப்பிடுகின்றனர். “இந்திய மக்களுக்கு முதன்முதலில் நற்செய்தி அறிவித்தவர் பன்னிரு திருத்தூதர்களின் ஒருவரான புனித தோமையார் ஆவார். இவர் கிபி 52 ஆம் ஆண்டு தரை வழியாக இந்தியாவுக்கு வந்தார் என்றும் கேரளாவில் கொடுங்கலூர், பாலையூர், பாரூர், கோக்கமங்கலம், நிரணம், சாயல், கொல்லம் ஆகிய ஏழு இடங்களில் கோவில்களை கட்டி எழுப்பியுள்ளார். பின்னர் மயிலாப்பூருக்குச் சென்றார் அங்கே கிபி 75 ஆம் ஆண்டு கொலையுண்டார் என்றும் குறிப்பிடப்படுகிறது. அவருடைய கல்லறையின் மீதுதான் சாந்தோம் பேராலயம் எழுப்பப்பட்டுள்ளது.”[1] என தோமையார் கேரளா, தமிழக கடற்கரையோர பகுதி மக்களிடையே நற்செய்தியை பரப்பியும் அவர்கள் வழிபடுவதற்கான ஆலயங்களையும் எழுப்பினார் என மோனிகா அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தென் தமிழகத்தில் சமய நல்லிணக்கம்

நமது நாடு சமயங்களை ஆதரித்து அரவணைக்கும் தாய்மை உள்ளம் கொண்ட நாடாக திகழ்கிறது இத்தகைய சூழலில் கிறித்துவ மதத்தினரையும் அவர்கள் வணங்கும் புனிதர்களின் வாழ்வையும் மக்கள் போற்றி மதித்து வருகின்றனர். தென்தமிழகத்தில் குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் அந்தோணியார் வழிபாடு மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது இங்குள்ள மக்கள் ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவை கோலாகலமாக கொண்டாடுகின்றனர். மேலும் இங்கு வாழும் மக்கள் புனித அந்தோணியார் மீது மிகுந்த நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

புனித அந்தோணியார்

கிறிஸ்தவ சமயத்தில் அந்தோணியார் என்ற பெயரில் இரண்டு முக்கிய புனிதர்களை குறிப்பிடுகின்றனர். ஒன்று எகிப்து நாட்டில் வாழ்ந்த அந்தோணியார் இரண்டு பதுவா நாட்டில் வாழ்ந்த அந்தோணியார் இவ்விருவரையும் வேறுபடுத்தி காட்டுவதற்காக எகிப்து நாட்டில் வாழ்ந்தவரை பெரிய அந்தோணியார் என்றும் வனத்து அந்தோணியார் என்றும் பாலைவன அந்தோணியார் என்றும் குறிப்பிடுகின்றனர். பதுவா நாட்டில் வாழ்ந்தவரை புனித பதுவை அந்தோணியார்

என்று மக்கள் அழைத்து வழிபட்டு வருகின்றனர்.

புனித பெரிய அந்தோணியார் கிபி 251 ஜனவரி 12ஆம் நாள் பிறந்தவர் எகிப்து நாட்டில் கோமா என்னும் பகுதியில் மிகப்பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். தனது இருபதாம் வயதில் பெற்றோரை இழந்தார். பின் உலக வாழ்வில் பல இன்னல்களையும் சோதனைகளையும் சந்தித்துள்ளார் அப்போது "நிறையுள்ளவனாக விரும்பினால் நீர் போய் உன் உடமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும் அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வந்தராய் இருப்பீர் பின்பு வந்து என்னை பின்பற்றும்"[2] என்னும் மத்தேயுவின் வசனங்களை கேட்ட அந்தோணியார் தனது சொத்துக்களை எல்லாம் விற்று ஏழை எளியோருக்கு கொடுத்துவிட்டு தமது தமக்கையையும் துறவற மடத்தில் ஒப்படைத்து விட்டு தனது கிராமத்திற்கு அருகில் தனிமையில் துறவர பயிற்சியில் ஈடுபட்டார். பின்பு பாலைவனப் பகுதிக்குச் சென்று கடுமையாக தவம் புரிந்து வந்தார் என இவரின் வாழ்க்கை வரலாறு குறிப்பிடுகின்றது.

"ஒரு மனிதன் இடைவிடாமல் தனிமையில் ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்த அந்தோணியார் தொடர்ந்து ஜெபத்தில் இருந்தார். இக்காலத்தில் அவர் நேர்மை, பரிவு, இடைவிடாத ஜெபம், சுதந்திரம், பொறுமை, மற்றவர்களிடம் அன்பான இருத்தல் சகிப்புத்தன்மை, ஒறுத்தல் முயற்சி, வெறும் தரையில் தூங்குதல் போன்ற புண்ணிய பண்புகளை கற்றுக் கொண்டார்"[3] ஒருவர் நிறை வாழ்வை அடைய பொருட்கள் மீது பற்றின்மை அன்பு பொறுமை சகிப்புத்தன்மை இவைகளே தேவை என்பதை உணர்ந்த அந்தோணியார் அவற்றை கடைப்பிடித்தார் பாலைவனத்தில் வாழ ஆரம்பித்தார். தன்னை நாகரீக வாழ்வில் இருந்து முற்றிலுமாக துண்டித்து வாழ முயற்சித்த தவ முனிவர் இவரே.

அந்தோணியார் திருவிழா

கிறிஸ்தவர்கள் வாழும் கிராமங்களில் பங்கின் பாதுகாவலராக ஒரு புனிதரை வழிபட்டாலும் புனித அந்தோணியாருக்கு என்று தை மாதத்தில் பொங்கல் வைத்து திருவிழாவினை நடத்துகின்றனர். அதிலும் மாரம்பாடி, உலகம்பட்டி, கரிசல்பட்டி, கல்லாத்துப்பட்டி போன்ற ஊர்களில் வெகுவிமர்சையாக திருவிழாவினை நடத்துகின்றனர். ஏனெனில் இவ்ஊரில் பாதுகாவலராக விளங்குபவரே புனித பெரிய அந்தோணியார் ஆவார். இத்திருவிழாவில் சுற்றுப்புறத்தில் இருந்தும் பிற இடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்கின்றனர்.

திருவிழா தொடக்கம்

திருவிழாவின் தொடக்கமாக விழாவறைதல் முக்கிய பங்காற்றுகிறது திருவிழா நடைபெறும் நாளை மக்களுக்கு அறிவிக்கும் விதமாக பறைஇசை கலைஞர்கள் பறையடித்துக் கொண்டு ஊரை சுற்றி வருதலே விழா வறைதல் ஆகும். விழா வறைவோராக குயவர் இருந்ததை நற்றிணை 161 ஆம் பாடல் தெரிவிக்கின்றது.

திருவிழாக்கள் கோயிலோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை கோயில்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் கூட திருவிழாக்களை ஒட்டியே அமைகின்றன அக்காலத்தில் கோயில்கள் சமூகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன சமூகத்தின் ஒரு அங்கமாக கோயில்கள் விளங்கின என்பதை, "மனிதன் அன்றாடம் உழைத்து உழைத்துச் சோர்வடைந்த போது விழாக்களின் வருகை மனிதனுக்கு உற்சாகம் அளிப்பதாக அமைந்தது எனவே அன்றிலிருந்து இன்று வரை திருவிழாக்கள் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகின்றன இவ்விழாக்கள் பல்வேறு சமூகத்தினரை ஒன்றிணைப்பதாக அமைகின்றன."[4] இத்தகைய

திருவிழாக்கள் மனிதனின் கவலைகளை போக்குவதாகவும் அவனை உற்சாகப்படுத்தும் ஓர் சக்தியாகவும் தான் அடைந்த நன்மைகளுக்கு நன்றியாகவும் மனித நேயத்தை மேம்படுத்துவதற்கானஒரு கருவியாகவும் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. “வருடம் முழுதும் உழைத்து வாழும் மக்கள் விழாக்களின் போது ஓய்வு எடுத்துக் கொள்வதோடு தங்களை மகிழ்ச்சியோடு இயக்கவும் தகவமைத்துக் கொள்கின்றனர் அதாவது வருடத்தில் சில தினங்களில் உழைப்பை நிறுத்திவிட்டு உற்றார் உறவினரோடு ஒன்று கலந்து கூடி மகிழ்ச்சியோடு இருக்க விரும்புகின்றனர் அதன் அடிப்படையிலேயே கிராமங்களில் விழாக்கள் கொண்டாட ஆரம்பித்திருக்கலாம்."[5] திருவிழாக்கள் மன மகிழ்ச்சிக்காகவும் உழைப்பின் பயனை இறைவனுக்கு செலுத்தவும் உழைக்கின்ற மக்கள் ஓய்வெடுக்கவும் உறவினர்களுடன் விருந்து உண்ணவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டுநிகழ்வே திருவிழா என டாக்டர்.திருமதி. சற்குணவதி குறிப்பிடுவதில் இருந்து திருவிழாவின் நோக்கத்தினை அறிய முடிகின்றது.

கொடியேற்றம்

கிராமங்களில் நடக்கும் முக்கிய நிகழ்வுக்கு ஊர் முக்கியஸ்தர்களின் ஊர் கூட்டம் நடைபெற்ற பின்னரே நிகழ்வு தொடங்குகிறது. திருவிழா நடைபெறுவதை தெரிவிக்கும் விதமாக கொடி ஏற்றப்படுகிறது அக் கொடியில் புனிதரின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். அதனை ஊரின் முக்கிய வீதிகளில் சுற்றி வந்து குருவானவரின் முன்னிலையில் கொடியேற்றுகின்றனர் .அதன்பின் கூட்டு வழிபாட்டு நிகழ்வு நடைபெறுகிறது. கொடியேற்றப்பட்ட நாளிலிருந்து பத்தாம் நாள் திருவிழா நடைபெறும் என்கின்றனர். சில ஊர்களில் முதல் நாள் கொடியேற்றி மறுநாள் திருவிழா கொண்டாடுகின்றனர். “திருவிழா என்னும் நிகழ்வால் மக்கள் குடியிருப்பை விட்டு புறத்தளத்திற்குச் சென்று அங்கு இறைவனை அதன் வெளித்தளத்திலிருந்து இறக்கி புறத்தளத்திற்கு கொண்டு வருவதே என்ற தளமாற்றம் நிகழ்வதை சுட்டுவதாக அமைகிறது."[6] திருவிழா நடைபெறும் ஊரில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி அருகில் உள்ள ஊர்களில் இருந்தும் பிற பகுதிகளில் இருந்து மக்கள் திரளாக கலந்து கொண்டு புறத்தளத்தில் இருக்கும் புனிதரிடம் மன்றாடுகின்றனர் தங்களின் வேண்டுதல்களை கோரிக்கையாக வைக்கின்றனர் என்பதை மேற்கண்ட கூற்றிலிருந்து அறிய முடிகிறது.

மண்டகப்படி

கடவுளுக்கு செலுத்தும் கொடையே மண்டகப்படி என்கின்றனர். மண்டகப்படி செலுத்தும் சில சமூகத்தினர் உரிமை உடையதாகவும், சாதியத்துவத்தை நிலை நாட்டுவதாகவும் இருக்கின்றது. “திருவிழாக்களில் மண்டகப்படி என்பது இறைவனுக்கு கொடை வழங்கும் உரிமையாகும் உள்ளூர் கோயில்கள் முதல் பெரிய கோயில்கள் வரை திருவிழாக்களின் போது கோயிலோடு உரிமை பெற்ற சமூகத்தார் முறை வைத்து மண்டகப்படி செய்வர் சாதிவாரியாக மண்டகப்படி நடத்துவது சமூக அமைப்பில் நிலவி வரும் சாதி அமைப்பின் படிநிலையையும் அதிகாரத்துவத்தையும் வழிப்படுத்தும் செயலாகும்"[7] என்று மண்டகப்படி செலுத்தும் முறையை தமிழர் மானுடவியலில் பக்தவாச்சலபாரதி குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவ சமயத்தை மேற்கொண்டு வரும் மக்கள் இதுபோன்ற மண்டகப்படி கொடையை செலுத்துகின்றனர். இது சாதி, சமய தொடர்புடையதாக குறிப்பிடப்படவில்லை திருவிழாவிற்கு வருபவர்கள் விருப்பம் இருப்பின் யார் வேண்டுமானாலும் மண்டகப்படி செலுத்தலாம் என்கின்றனர். இதில் செலுத்தியவர் பெயர், குடும்ப பெயர், ஊர் போன்றவை தேர் பவனிக்கு முன்பு வாசிக்கப்படும் இங்கு சாதி

சமயத்திற்கு இடம் இல்லை என்ற சமத்துவத்தை காண முடிகின்றது.

ஒரு சமயத்தில் இருந்து இன்னொரு சமயத்திற்கு மாறும்போது பழைய சமய நம்பிக்கைகளையும் சடங்கு முறைகளையும் கைவிட வேண்டிய சூழல் ஏற்படுகிறது ஆனால் மேலைநாட்டு குருக்கள் தென் தமிழகத்தில் சமயப் பணியாற்றும் போது அவர்களின் முந்தைய நம்பிக்கைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் புனிதர்களின் வழிபாட்டை அறிமுகப்படுத்தி நிலைக்கச் செய்தனர் என்பதை "தெய்வ வழிபாட்டுடன் நாட்டார் தெய்வ வழிபாட்டையும் கொண்டிருந்த மக்கள் திறன் கிறித்தவரான பின் முந்தையவழிபாடுகளை கைவிடுவது இயல்பானதே அவர்களின் பழைய சமய வாழ்வுக்கு இணையான ஒன்றாக புனிதர் வழிபாடு இங்கு அன்றிக் அடிகளார் சுட்டப்படுகிறது"[8] புனிதர்களின் வழிபாடு இவ்வாறு மக்களிடையே கொண்டு சென்றனர். இவர்களின் வாழ்வையும் வரலாற்றையும் அறிந்த மக்கள் வியப்பில்ஆழ்ந்து தங்களின் கோரிக்கைகளை வேண்டுதல்களாக இப்புனிதர்களிடம் வைக்கின்றனர். அதன் மூலம் பயனடைந்ததற்கு நன்றியாக நன்றிக் கடன் செலுத்துகின்றனர்.

நேர்த்திக்கடன் செலுத்துதல்

அந்தோணியார் வழிபாட்டில் நேர்த்திக்கடன் முக்கிய வாழ்வில் கூறாக கருதப்படுகிறது. தாங்கள் வைத்த வேண்டுதல்கள் நிறைவேறியவுடன் அதற்கு பதிலாக குறிப்பிட்ட வழிபாட்டை மேற்கொள்வதாக மக்கள் உறுதி எடுக்கின்றனர் மொட்டை அடித்தல், பொங்கல் வைத்தல், கிடா வெட்டுதல், தேர் பவனிக்கு மின்னலங்கார உபயம் செய்தல், கொடி மரத்திற்கு மின் உபயம் செய்தல், கோவில் கோபுரத்திற்கு மின் உபயம் செய்தல் மற்றும் பொதுமக்களுக்கு அசனம் கொடுப்பதாக வேண்டிக் கொண்டதை நிறைவேற்றுகின்றனர். காணாமல் போன பொருட்கள் கிடைக்கவும், கால்நடைகளை பாதுகாக்கவும் பேய்பிடித்தவர்களை சுகமாக்கவும் இப்புனிதரிடம் வேண்டிக்கொண்டு பலன் பெறுகின்றன்ா.

இதன் மூலம் தங்கள் வாழ்வில் வளம் பெறுவதாக நம்பிக்கை கொள்கின்றனர்.

திருவிழாவும் சமூக ஒற்றுமையும்

திருவிழா என்பது தனிப்பட்ட வழிபாட்டை தாண்டி மக்களை ஒருங்கிணைக்கும் சமூக நிகழ்வாக அமைகிறது. "மாரம்படி புனித அந்தோணியார் திருவிழாவிற்கு சுற்றுப்புற கிராமங்களில் இருந்தும் வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்தும் மக்கள் வருவது இதற்குச் சான்றாகும் ஜனவரி 16,17,18 ஆகிய மூன்று நாட்கள் திருவிழா நடைபெறுகிறது சாதி மத பேதமின்றி மக்கள் திரளாக கலந்து கொண்டு புனிதரின் அருள் ஆசிரை பெறுகின்றனர்."[9] இத்திருவிழாவில் பாரம்பரிய கலை நிகழ்வுகளான கும்மி, கோலாட்டம், பறை இசை கலைஞர்களின் பறை ஆட்டம் மற்றும் அந்தோணியாரை வரவேற்கும் வாசாப்பு பாரம்பரியமாக தொடர்ந்து நடைபெறுகிறது இதன் பின்னரே வான வேடிக்கைகளும் நடைபெறுகிறது.

முடிவுரை

திண்டுக்கல் மாவட்ட மக்களின் அந்தோணியார் வழிபாட்டை ஆராயும் போது அது வெறும் சமயச்சடங்காக மட்டுமே விளங்கவில்லை என்பது தெளிவாகிறது. மக்களின் வாழ்க்கை துன்பங்கள், எதிர்பார்ப்புகள், குடும்ப நலம், பொருளாதாரத் தேவைகள், வேளாண்மை, சமூக உறவுகள், பண்பாட்டு மரபுகள் ஆகிய அனைத்துடனும் அது தொடர்புடையதாக உள்ளன. இத்திருவிழாக்கள் தென் மாவட்டத்தின் ஓர் பண்பாட்டு தொடர்ச்சியாக ஆண்டுதோறும் நிகழ்கிறது இதில்

மக்கள் சமய நல்லிணக்கத்துடனும் கலந்து கொண்டு புனிதரின் அருளையும் ஆசிரியையும் பெற்று செல்கின்றனர்.

அடிக்குறிப்பு

1. மோனிகா – புனிததோமா நமது தோமா, பக்.22
2. பரிசுத்தவேதாகமம் – இந்திய வேதாகம இலக்கியம், பக்.32
3. ஜான் கென்னடி.சமி. – பெரிய அந்தோணியாரின் வாழ்க்கை வரலாறு,பக்.23
4. அம்பை.மணிவண்ணன் – கோயில் ஆய்வும் நெறிமுறைகளும், பக்.187
5. சற்குணவதி - தமிழக நாட்டுப்புறவியில், பக்.108
6. பக்தவத்சலபாரதி – தமிழர் மானுடவியல், பக்.368
7. மேலது, பக்.369
8. சிவசுப்பிரமணியன்.ஆ – தமிழ்க்கிறித்தவம், பக்.86
9. தகவலாளர் சவரியம்மாள் வயது 76 ஊர் மாரம்பாடி

துணைநூற்பட்டியல்

1. மோனிகா - புனித தோமா நமது தோமா,
வைகறை பதிப்பகம்,
திண்டுக்கல்.
2. பரிசுத்த வேதாகமம் - இந்திய வேதாகம் இலக்கியம்,
67 பராக்காசாலை,
சென்னை.
3. சமி.ஜான்கென்னடி - பெரிய அந்தோணியார் வாழ்க்கை வரலாறு,
ஆரஞ்ச பிரிண்ட் சொல்யுசன்ஸ்,
சிவகாசி.
4. அம்பைமணிவண்ணன் - கோயில் ஆய்வும் நெறிமுறைகளும்,
ஜெ.ஜெ.பப்ளிகேஷன்ஸ்,
மதுரை.
5. முனைவர்.திருமதி.சற்குணவதி - தமிழக நாட்டுப்புறவியல்,
மணிவாசக்கா பதிப்பகம்,
சென்னை.
6. பக்தவத்சலபாரதி - தமிழர் மானுடவியல்,
அடையாளம் பதிப்பகம்,
திருச்சி.
7. ஆ.சிவசுப்பிரமணியன் - தமிழக்கிறித்தவம்,
காலச்சுவடு பப்ளிகேஷசன்,
நாகர்கோவில்.

© 2026 பாஸ்கர் வேளாங்கண்ணி ஜே, முனைவர்.கலைச்செல்வன் ச. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 141–148
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தென் மாவட்ட படைப்புகள் - பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில்

Pandya region—specifically the Madurai Meenakshi Amman Temple

கற்பகவல்லி க[1,*], முனைவர் .பத்மபிரியா மா[2]

[1] பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,எஸ். எஃப்.ஆர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) சிவகாசி., *India*

[2] உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழ் ஆய்வுத்துறை, எஸ். எஃப். ஆர். மகளிர் கல்லூரி, (தன்னாட்சி) சிவகாசி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: கற்பகவல்லி க — karpagamurugan02@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00032

ஆய்வுச்சுருக்கம்

தென் மாவட்ட படைப்புகள் - பாண்டிய நாட்டு திருத்தலங்கள் ஆக இருக்கக்கூடிய கோவில்களில் குறிப்பாக பன்னிரு திருமுறையில் பாடப்பட்ட தேவார பாடலில் இடம் பெற்ற பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில் உடைய சிறப்பு பற்றி ஆராய்வதாக இந்த கட்டுரை அமைகிறது மேலும் மதுரை மீனாட்சியம்மன் கோவில் உடைய அமைப்பு அதற்குரிய பெருமைகள் பற்றியதாக இந்த ஆய்வு அமைகிறது .

Keywords / திறவுச்சொற்கள்: சமயம்; திருத்தலம்; தென் தமிழகத் தலங்கள்

Abstract

This article examines the significance of the temples in the Pandya region—specifically the Madurai Meenakshi Amman Temple, which is celebrated in the *Tevaram* hymns of the *Panniru Thirumurai*—and explores the temple's architectural structure and its associated glories.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: க, க., & மா, மு. . (2026). தென் மாவட்ட படைப்புகள் - பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 141–148. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8449

முன்னுரை :

அன்று முதல் இன்று வரை மக்கள் இறை நம்பிக்கையோடு நற்பண்புகளை கடைபிடித்து வாழ்ந்து வருகின்றனர். இந்த நற்பண்புகளை பக்தி இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிய இயலும். இதற்கு நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்கள் உடைய பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. **மனித வாழ்வை புனித வாழ்வாக மாற்றுவதில் முக்கியமானது இறைமை நிலை** (1) **ஆகும். பண்டைய காலத்தில் கோயில்களில்** மனித நடத்தையை சீரமைக்கும் நோக்கில் பல்வேறு விதிமுறைகள்

பின்பற்றப்பட்டன. வானளாவிய **கோயில்**களை **ம**ன்னர்கள் எழுப்பினர்.இந்த கோயில்கள் மூலம் இறை உணர்வும் சிந்தனை மாற்றமும் வலியுறுத்தப்பட்டது தமிழ்நாட்டில் கோயில்களுக்கு தனிச்சிறப்பு உண்டு. அதிலும் குறிப்பாக சேர சோழ பாண்டிய பல்லவர்கள் கட்டிய கோயில்கள் சிறப்பு வாய்ந்தவை. இதனை நாம் இன்றும் கண்கூடாக காண எழுதுகிறது.

சமயம்:

மனித வாழ்க்கையில் அடையப் பெறவேண்டிய அனைத்தையும் சுட்டிக் காட்டுவதாக சமயம் அமைகிறது. அன்பு, அருள், அமைதி இன்பமாகிய உயர்ந்த பண்புகள் மனித மனதில் ஒளி விட்டு திகழுமாறு செய்து அவனை பண்பு உடையவனாக மாற்றுவது சமயம் ஆகும். "மனித பண்பில் மலர்ச்சி ஏற்படுத்தும் இறை நம்பிக்கையில் உயிரோட்டம் இருக்கிறது"(2) என்பதை இலக்கியங்கள் **பறைசாற்றுகின்றன**. தமிழ்நாட்டில் மட்டும் 35,000க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் இருப்பனவாகத் தெரிகிறது. இந்தச் சிறப்பு உலகில் வேறு எந்த நாட்டிலும் காண முடியாத ஒன்று.

"திருத்தலச் சிறப்பு" :

"திருத்தலச் சிறப்பு" என்பது ஒரு குறிப்பிட்ட ஆன்மீகத் தலம், கோவில் அல்லது புனிதப் பகுதியின் வரலாற்றுப் பெருமை, ஆன்மீக முக்கியத்துவம் மற்றும் அங்குள்ள இறைவனின் தனித்துவமான சிறப்புகளைக் குறிப்பதாகும்.பொதுவாக, தமிழ்நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்கள், வைணவத் திவ்ய தேசங்கள், முருகனின் அறுபடை வீடுகள் போன்ற புண்ணிய பூமிகளின் சிறப்புகளை விவரிக்கும் போது இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு திருத்தலத்தின் சிறப்பு முக்கியமாக பின்வரும் காரணிகளின் அடிப்படையில் அமைகிறது:

- **மூர்த்திச் சிறப்பு:** அங்கு வீற்றிருக்கும் முதன்மைத் தெய்வம் (சுயம்பு லிங்கம், தனித்துவமான சிலை அமைப்பு) மற்றும் அதன் அற்புதங்கள்.
- **தல வரலாறு (ஸ்தல புராணம்):** அந்த கோவில் உருவானதற்கான பின்னணி, இறைவனால் நிகழ்த்தப்பட்ட அற்புத லீலைகள் மற்றும் தொடர்புடைய புராணக் கதைகள்.
- **தீர்த்தச் சிறப்பு:** பாவங்களைப் போக்கக்கூடியதாகக் கருதப்படும் அங்கேயுள்ள புனிதக் குளங்கள், கிணறுகள் அல்லது ஆறுகளின் பெருமை.
- **பதிகங்கள்/பாடல்கள்:** நாயன்மார்கள் (தேவாரம், திருவாசகம்) அல்லது ஆழ்வார்களால் (திவ்ய பிரபந்தம்) மங்களாசாசனம் செய்யப்பட்டுப் பாடப்பட்ட பெருமை உண்டாகிறது.

<u>தென் தமிழகத் தலங்கள்(பாண்டிய நாடு)</u>

தென் தமிழகம் எனப்படும் பாண்டிய நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்கள் மொத்தம் 14 உள்ளன. இவற்றை 'பாண்டிப் பதினாலு' (3) என்று அழைப்பார்கள்.

<u>பாண்டிய நாட்டு தேவாரத் திருத்தலங்கள் பட்டியல்:</u>

1.மதுரை மாவட்டம்: திருஆலவாய் (மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை) **:** திருஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்று, கூன் பாண்டியனின் வெப்பு

நோயைத் தீர்த்து சைவம் தழைக்கச் செய்த மிக முக்கியமான வரலாற்றுத் தலம்.

2.திருஆப்பனூர் (ஆப்பனூர் நாதர் திருக்கோயில், செல்லூர், மதுரை)

3.திருப்பரங்குன்றம் (சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில்)

4.திருவேடகம் (ஏடகநாதர் திருக்கோயில்)

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 2 கோயில்கள் உள்ளன.

1.குற்றாலம் குற்றாலநாதர் திருக்கோயில்:

திருக்குற்றாலம் (குற்றாலநாதர் கோவில்): சம்பந்தர் பாடிய தலம். இங்குள்ள அருவியும், இயற்கை எழிலும், சிவபெருமானின் வடிவமும் திருமுறைகளில் போற்றப்பட்டுள்ளன

2.திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில்

திருநெல்வேலி (நெல்லையப்பர் கோவில்): சம்பந்தரால் பாடப்பெற்ற தலம். இங்கு இறைவன் நெல்லுக்கு வேலியிட்டு காத்ததால் நெல்லையப்பர் என்று அழைக்கப்படுகிறார்.

திருவாடானை (ஆடானைநாதர் கோவில்): இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள சம்பந்தர், அப்பர் பாடிய தலம்.

ராமேஸ்வரம் (இராமநாதசுவாமி கோவில்): அப்பர் மற்றும் சம்பந்தரால் பாடப்பெற்ற தலம். ஸ்ரீராமர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட தலம்.

பன்னிரு திருமுறையில் பாடப்பட்ட தேவார பாடலில் இடம் பெற்ற பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில் உடைய சிறப்பு பற்றி பின்வரும் **தரவு**கள் எடுத்துரைக்கிறது.

.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் மதுரையின் நடுவே அமைந்துள்ள சிவன் கோயிலாகும். இச்சிவன் கோயிலின் மூலவர் சுந்தரேசுவரர் மற்றும் அம்பிகை மீனாட்சியம்மன் ஆவர். இக்கோயிலை மதுரை மீனாட்சியம்மன் கோயில் என்றும் அழைக்கின்றனர். இக்கோயில் தமிழ்நாட்டில் உள்ள 366 மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்களின் மூலக்கோயிலாக உள்ளது. இத்தலத்தில் முதல் பூசை, அம்பிகை மீனாட்சிக்கே செய்யப்படுகிறது. இத்தலம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் பாண்டிய நாட்டுத் தலங்களுள் ஒன்றாகும்.

மதுரையின் சிறப்பு

திருவாசகத் தலங்களுள் ஒன்று எனும் பெருமையையும் உடையது. இத்தலத்தின்

பெயரைச் சொன்னாலே முக்தி என்பது சைவர்களின் நம்பிக்கையாகும். பாண்டியர்கள் முடிசூட்டிக் கொள்ளும் தலங்களுள் இது முதன்மைத் தலமாகும். சைவர்கள் பூசும் திருநீற்றின் சிறப்பைக் கூறும் "திருநீற்றுப் பதிகத்தை " இத்தலத்தில் தான் திருஞானசம்பந்தர் பாடினார்.

இராஜசேகர பாண்டியனுக்கு இறைவன் வெள்ளியம்பலத்தில் கால் மாறி ஆடிய தலம் . மாணிக்க வாசகர் இறைவனது பெருமையை அரிமர்த்தன பாண்டியனுக்கு உணர்த்திய தலம். கூன் பாண்டியனின் வெப்பு நோய் ஞானசம்பந்தரால் நீக்கப்பெற்று, நின்றசீர் நெடுமாற நாயனார் ஆகிய தலம்.

மதுரையின் வேறு பெயர்கள்:

- சிதம்பரம், காசி, திருக்காளத்தி வரிசையில், முக்கியமான நான்காவது தலமாகத் திருவாலவாய் உள்ளது. இந்த நகரம் புராண காலத்தில் திருவாலவாய் என்று அழைக்கப்பட்டுள்ளது.

  " நலந்திகழ் வாயின் சருகிலைப் பந்தர்செய்த

  சிலந்தியை அரசதாள அருளினாய் என்று திண்ணங்

  கலந்துடன் வந்து நின்தாள் கருதிநான் காண்பதாக

  அலந்தனன் ஆலவாயில் அப்பனே அருள் செய்யாயே"(4)

- இத்தலத்தினைச் சிவன் முக்திபுரம் என்றும் இராசமாதங்கி சியாமள பீடம் என்றும் அழைக்கின்றனர்.
- இத்தலம், முக்கியமான சிவத்தலமாக மட்டும் இல்லாமல், அம்பிகையின் 51 சக்தி பீடங்களுள் ஒன்றுமாகும்.

- இத்தலம் 18 சித்தர்களில் ஒருவரான சுந்தரானந்தரின் சித்தர் பீடமாகவும் உள்ளது. விநாயகரின் அறுபடை வீடுகளில் நான்காவது படைவீடாகவும், சிவபெருமான் மீது பாடப்பெற்ற தேவாரப்பாடல் பெற்ற 274-ஆவது சிவ ஆலயமாகவும், 192-ஆவது தேவாரத்தலம் ஆகவும் உள்ளது. இது தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் பாண்டிய நாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.
- இத்தலத்தில் தரப்படுகின்ற பிரசாதமான தாழம்பூ குங்குமம் பிரசித்தி பெற்றதாகும்.

தல வரலாறு

விருத்திராசூரனைக் கொன்றமையால்,இந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மகத்தி தோசம் நீங்க, கடம்பவனத்தில் இருந்த இந்தச் சிவலிங்கத்தைப் பூசித்துத் தனது தோசத்தைப் போக்கிக் கொண்டதாகவும் ஒரு வரலாறு கூறுகிறது.

முதன் முதலில் கடம்பவனக் காட்டில் சுயம்பு லிங்கத்தைக் கண்டறிந்து, முதலில் இந்தக் கோவிலையும், பின் மதுரை நகரத்தையும், குலசேகரப் பாண்டிய மன்னன் நிர்மாணித்ததாக வரலாறு என்கிறார்கள் சிலர். கடம்பவனமாக இருந்த காட்டை அழித்து, அழகிய நகரமாக்கும்படி, பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்து வந்த குலசேகரப் பாண்டியனின் கனவில், சிவபெருமான் தோன்றிக் கூறியதால், அம்மன்னன் கடம்பவனக் காட்டை அழித்து மதுரை எனும் அழகிய நகரத்தை உருவாக்கினான். சிவபெருமான் தன் சடையிலுள்ள சந்திரனின் அமுதத்தைச் சிந்தி, புதிய நகருக்கு ஆசி வழங்கினார் என்று வரலாறு கூறுகிறது. இக்கோயில்,அம்மனின் 248 சக்தி பீடங்களில் ஒன்றாகவும் விளங்குகிறது.

சாத்தப்பர்:

இத்தலத்தில் சிவபெருமான் அன்றைய மதுரையின் மன்னரான மலைத்துவச பாண்டியனிடம் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டதால் அதாவது பிரம்பால் சிவபெருமானை சாத்தியதால் இத்தல இறைவனுக்கு சாத்தப்பர் என்ற திருப்பெயரும் உள்ளது.

மனிதன், ஒன்றில் ஒன்ற வேண்டும். அந்த ஒன்று கடவுள்; எல்லா உலகுக்கும் ஒருவனாக இருக்கின்ற கடவுள்; அவன் அவனுமல்லன், அவனுக்கு ஒன்றென்றே பெயர் கூறினும் பொருந்தும். அவனையே “எல்லா உலகமும் ஆனாய் நீயே” (5)என்று அப்பரடிகள் பாராட்டுகிறார். “அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்”(6) என்று சாத்திரம் பேசும். ஞாலமே விசும்பே இவை வந்து போம் காலமே என்று மணி மொழி பேசும். அந்த ஒன்றில் வேறுபாட்டுணர்வு அற்று, ஒன்றிக் கலந்தால் துன்பம் வாராது என்ற கருத்தை அப்பரடிகள் இனிது விளக்கிப் பாடுகின்றார். அதாவது, தனிமை துன்பம் தரும். பொதுமை இன்பம் தரும். கடவுள் ஒன்று. அதுவே உலகத்திற்கு ஒன்று. அந்த ஒன்றை ஒன்றியிருந்து நினைத்தால் இன்புறலாம் என்பதாகும்.

மன்றத்துப் புன்னைபோல மரம்படு துயரமெய்தி
ஒன்றினா லுணரமாட்டே னுன்னையும் வைக்கமாட்டேன்
கன்றிய காலன்வந்து கருக்குழி விழுப்பதற்கே
அன்றினா னலமந்திட்டே னதிகைவீ ரட்டனீரே.(7)

என்பது அப்பர் திருப்பாட்டு.

அப்பரடிகள் உருவகத்தில் செய்திகள் அமைத்து விளக்குவதில் ஈடு இணையற்றவர். அப்பரடிகள், வாழ்க்கையில் அறிவுவினுள் தெளிவும், தெளிவினுள் சிவமும் காண வேண்டுமென்ற கொள்கையினர். வாழ்க்கையில் அறிவு தலைப்படுவதே அருமையிலும் அருமை. அறிவில் தெளிவு காண்பது எளிதன்று. அறிவில் தெளிவின்மையினாலேயே சமயக் கணக்கர்

முரண்படுகின்றனர்; மோதுகின்றனர். சமயச் சண்டைகள் கால்கொள்கின்றன. அறிவில் தெளிவு காண்புழி - இன்ப அன்பு முகிழ்க்கும் அதுவே சிவநிலையாக இருக்கிறது.

இந்த நிலையை எய்திட வேண்டிய ஆருயிர் மயக்க வலையிற் சிக்கித் தவிப்பதை அப்பரடிகள் நகைச்சுவை ததும்ப உருவகிக்கின்றார். எரிகின்ற அடுப்பு. அதில் உலைப்பானை உலைப்பானை நீரில் மெள்ளச் சூடேறுகிறது. அந்நிலையில் குளிர் நீரில் கிடந்து மரத்துப்போன ஆமை உலைப்பானையில் இடப்பெறுகிறது. ஆமைக்கு இளம்சூடு உணக்கையாக இருக்கிறது; மகிழ்கிறது. அந்த மகிழ்ச்சியில் அந்தப்பானை நீர்க்குள்ளேயே திளைத்து நின்று விளையாடுகிறது. என்னே அறியாமை எரிகின்ற அடுப்பிலிருக்கும் உலைநீர் எப்பொழுதும் இளவெந்நீராக இருக்காது. வெந்நீரின் வெப்பநிலை ஏறும். ஆமை, வெப்பநிலை மாற்றத்தால் அழியுமல்லவா? இதை அறிந்துணரும் ஆற்றல் ஆமைக்கு இல்லை. ஆமைக்குத்தான் இல்லையா? ஆறறிவு படைத்த மனிதனுக்கு உண்டோ?

வாழ்க்கையே இவ்வுலகம் என்ற ஓர் அடுப்பு. அவ் அடுப்பில் ஆசை என்ற தீ எரிகிறது. உணர்வாகிய நீர் மனிதன் பெற்ற சிறுபொழுது இன்பமே இளஞ் சூடுடைய வெந்நீர். இதனையே நிலையெனக் கருதித் திளைத்து மகிழ்ந்து விளையாடுகிறான் மனிதன். ஆனால் அவன் பெற்றதோ நிறை இன்பமல்ல. அவன் பெற்றது துன்பத்திற்குக் காரணமாய், இன்பம் போலத் தோற்றிய துன்பமே என்று விளக்க,

"**உலையை யேற்றித் தழலெரி மடுத்த நீரில்**
திளைத்து நின்றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்து நின்றாடுகின்றேன் ", என்பார், அப்பரடிகள்.(8)

அப்பரடிகள், பழமொழிகளைக் கொண்டு அறநெறிகளை விளக்குபவர். இறைவன் கருணையை நினைந்து, நெஞ்சு நெகிழப் பாடுபவர். உயிர் அருவப்பொருள்; அதற்கு ஓர் உருவத்தைத் தந்து, உலகிடை அனுப்பித் துய்ப்பன துய்த்து, மகிழ்வன மகிழ்ந்து - குறைநீங்கி நிறைநலம் பெறச் செய்யும் கருணையே கருணை. இதனை,

"**என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய் திட்டு**

என்னையோ குருவ மாக்கி " (9)

என்று பாடுகிறார். இந்த உருவமாக்கிய பணிக்கு ஈடாக எதனைக் கூறமுடியும்? இந்த உருவத்தினை முதலாகக் கொண்டுதானே மனிதன் வளர்கிறான்!வரலாறு படைக்கிறான்? உலகில் வேறு எந்த அறிவியல் படைப்பையும் விட இந்த மானுட யாக்கையின் படைப்பு அதி நுட்பமானது; அறிவியல் தன்மையுடையது; இந்த உடல்-உயிர்க்கூட்டின் பயன் உயிரை இன்புறுத்தலேயாம். இறைவன் திருவுள்ளம் இன்புறுத்தலேயாம். ஆயினும் உயிர் பெற்றுள்ள சிற்றறிவு அடங்கவா செய்கிறது? அது தன்னிச்சையிலேயே ஆட்டம் போடுகிறது;

அறிவுப் பொருளைத் திருத்திச் சீராக்குதல் எளிய காரியமன்று. அறிவற்ற சடப்பொருள் எளிதில் பக்குவப்படும். அறிவு நாடகமாடும்; நடிக்கும்; உணர்ந்தது போல் காட்டிப் பின் தன்னெறியே மேற்கொள்ளும்; இன்பத்தைத் துன்பமாகக் கருதும்; துன்பத்தை இன்பமாகக் கருதும்; அடக்கினாலும் சில நாள் அடங்கும்; வாய்ப்பு வந்துழி மிஞ்சும். இத்தனை இக்கட்டான நிலையில் உயிருக்கு அறிவு கொளுத்தியே - அதனை அறியச் செய்தே பக்குவப் படுத்தவும் வேண்டியிருக்கிறது; அதை அடிமைப்படுத்தவும் முடியாது. இன்பத்திற்கு எதிர் துன்பமே. துன்பத்திற்குக் காரணம் அறியாமையும் அறியாமையினால் செய்த செயல்களின்

விளைவுகளுமாம். நோய் நீங்குகிறவரை உணவு சுவைக்காததைப் போல, வினைநீக்கம் பெறும்வரையில் நிறை நல் இன்பத்தையும் துய்க்கமுடியாது.

“ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றி என்னாத விவ் யாக்கை யாற் பயனென்
கால்களாற் பயனென் கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ்சூழாக் கால்களாற் பயனென்”(10)

(அப்பர்)

மக்கட் சமுதாயம் இன்பமாக வாழவேண்டுமானால் அனைவரும் பரந்த மனப்பான்மையோடு பிறர் நலத்தைப்பேணி வாழ்வதைத் தவிர வேறு வழி இல்லை. “நான்-எனது” என்னும் செருக்குகள் குறையக் குறைய உயிரினங்களை அன்புடன் நேசிக்கும் பண்பு தோன்றும். இதனை நன்குணர்ந்த நம் முன்னோர்கள், வாழ்க்கையோடு சமயத்தையும் இணைத்து வாழ்ந்து காட்டினர்.

முடிவுரை :

மனித வாழ்வில் நற்பண்புகளால் மட்டுமே இன்பம் நிறைவாய் கிடைக்கும். அத்தகைய நிறைவான வாழ்வு வாழ வழிகாட்டியாய் அமைவன சைவ சமய இலக்கியங்கள் என்று கூறலாம். மனித சக்தியை மகத்தான சக்தியாக மாற்றும் ஆற்றலும் இறை நம்பிக்கையால் மனிதனுக்கு கிடைக்கிறது. நம் முன்னோர்கள், வாழ்க்கையோடு சமயத்தையும் இணைத்து வாழ்ந்து காட்டினர். இதன் பயன் இறையுணர்வு என்று கூறலாம். பன்னிரு திருமுறையில் பாடப்பட்ட தேவார பாடலில் இடம் பெற்ற பாண்டிய நாட்டு திருத்தலமான மதுரை மீனாட்சியம்மன் கோவில் உடைய சிறப்பு பற்றி இந்த **ஆ**ய்வு எடுத்துரைக்கிறது.

அடிக்**குறிப்புகள்:**

1. பக்தி இலக்கியம் ஒரு அறிமுகம், பக் -18
2. திருமுறைத் தலங்கள், பக் -652
3. திருமுறைத் தலங்கள், Tamilvu.org/slet/I4100
4. திருமுறைத் தலங்கள், பக் -657
5. திருவையாறு பண் திருத்தாண்டவம் 720 வது பாடல்
6. Tamilvu.org/slet/I4100
7. Wikipedia. org
8. திருக்களிற்றுப்படியார், 670 வது பாடல்
9. **அப்பர், 4** -ம் திருமுறை ,2 வது பாடல்
10. திருஞானசம்பந்தர் நாலாம் திருமுறை அங்க மாலை, 7 வது பாடல்

துணை நூல் பட்டியல்:

1.பக்தி இலக்கியம் ஒரு அறிமுகம், டாக்டர் பா அருணாச்சலம் முல்லை நிலையம் சென்னை முதற்பதிப்பு 2002

2.திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரப் பதிகங்கள், சதாசிவ செட்டியார் பிஏ திருமுறை ஒன்று இரண்டு மூன்று சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிட்ட 1973

3.திருமுறைத் தலங்கள் ,ஜெய செந்தில்நாதன் பூ மா தமிழ் நிலையம் சென்னை

1995

4.திருக்களிற்றுப்படியார் மூலமும் றையும் உய்ய வந்த தேவனால் பாடப்பட்டது சித்தாந்த சாத்திரம்

5.https://shaivam.org/hindu-hub/temple

6.Tamilvu.org/slet/I4100

7.Wikipedia. org

8.Tamilvu.org/slet/I4100

© 2026 கற்பகவல்லி க, முனைவர் .பத்மபிரியா மா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 149–155
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

புதியமாதவியின் ‘ரசூலின் மனைவியாகிய நான்’ நாவலில் பெண் உளச் சிக்கல்கள்

அனுமோள் ஆ[1,*], முனைவர் .சீனிவாசன் ச.பொ[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா. (கேரளப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), *India*

[2] துறைத்தலைவர், தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா. (கேரளப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: அனுமோள் ஆ — anumolanandhan@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00031	

ஆய்வுச்சுருக்கம்

ஜூலை, 2008 - குஜராத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தையும், அந்தக் குண்டுவெடிப்பில் பாதிப்பிற்குள்ளான குடும்பங்களின் அவலநிலையினையும், அவர்களுக்கு ஏற்பட்ட அக, புற வலிகளையும் பிரதிபலிக்கும் வகையில் நாவல் அமைந்துள்ளது. குறிப்பாக சமூகத்தில் சாதி மதப் பாகுபாடு, விதவைப் பெண்களின் மனநிலை, மறுமணம், ஆண், பெண் உறவுநிலை, அதனைச் சமூகம் அணுகும் முறை உள்ளிட்ட சிக்கல்கள் விளக்கப்பட்டுள்ளன.

Keywords / திறவுச்சொற்கள்: புதியமாதவி; ரசூலின் மனைவியாகிய நான்; பெண்ணியம்; ஆவுடை அக்காள்

Abstract

The novel reflects the 2008 Gujarat bomb blasts, the plight of the affected families, and the internal and external pain they endured. In particular, it addresses issues such as caste and religious discrimination in society, the state of mind of widows, remarriage, male-female relationships, and the way society approaches these matters.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ஆ, அ., & ச.பொ, மு. . (2026). புதியமாதவியின் ‘ரசூலின் மனைவியாகிய நான்’ நாவலில் பெண் உளச் சிக்கல்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 149–155. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8451

புதியமாதவி

புதியமாதவி திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். தற்போது மும்பையில் வாழ்ந்து வருகிறார். சிறந்த கவிஞரும் எழுத்தாளருமான இவர் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் முதலிய இலக்கியத் தளங்களில் சிறந்த எழுத்து பணியைச் செய்து கொண்டிருக்கிறார். இவரது படைப்புகள் அனைத்தும், சமூகம், அரசியல், பெண்ணியம், அடித்தள மக்களின் வாழ்வியல் முதலியவைகளைச் சமகாலச் சிந்தனைகளோடு முன் வைப்பவை. இவர்

சிற்பி இலக்கிய விருது, பெரியார் விருது, சிறந்த பெண் எழுத்து விருது முதலிய ஐந்துக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்ற பெண்ணிய எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். பச்சைக்குதிரை, சிறகொடிந்த வலசை, மக்ஃபி முதலிய நாவல்களை எழுதியுள்ளார். புதியமாதவியின் 'ரசூலின் மனைவியாகிய நான்' என்னும் நான்காவது நாவல் 2025-இல் வெளியிடப்பெற்றுள்ளது.

ரசூலின் மனைவியாகிய நான்

ரசூல், கவுரி இருவரும் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள். எதிர்பாராத விதமாக நடந்த ரயில் குண்டுவெடிப்பு விபத்தில் சிக்கிய ரசூல் கோமா நிலைக்குப் போய்விடுகிறான். உயிர் இருந்தும் உணர்வில்லாமல் இருக்கும் அவனை நினைத்து கவுரி கவலைப்படுகிறாள். ரயில் விபத்தில் பலியானவர்களில் ரசூலின் நண்பன் காம்ப்ளேவும் உண்டு. அவன் மனைவி புஷ்பா, அவளின் குழந்தை தன்வி யாருமின்றி தவிக்கின்றனர். வேலையின்றி பொருளாதார சிக்கலில் தவிக்கிற புஷ்பாவிற்கு, அவள் கணவன் வேலைசெய்த கம்பெனியில் இருந்து உதவித்தொகை கிடைக்கிறது. அவளுடைய மகளுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும் என்று கணவனின் தம்பியை மறுமணம் செய்து கொள்கிறாள். அவனிடமிருந்து புஷ்பாவிற்கு அன்பு, பாதுகாப்பு எதுவும் கிடைக்கவில்லை. இதற்கிடையில் கவுரி இரண்டு ஆண்களைச் சந்திக்கிறாள். அவள் மனம் அலைபாய்ந்தாலும் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒருபக்கம் இருக்க, மறுபக்கம் உயிரோடு இருக்கும் ரசூலின் மீதுள்ள காதலில் அவள் இறுதிவரை ரசூலின் மனைவியாகவே வாழ்ந்து விடுகிறாள்.

சமூகத்தில் சாதி, மதப் பாகுபாடு

நாவலின் முதன்மைக் கதைமாந்தர்களாக ரசூல் - கவுரி, புஷ்பா - காம்ப்ளே அவர்களின் மகள் தன்வி, ருக்மணிபாட்டியும், துணைமைக் கதைமாந்தர்களாக கவுரியின் மாமனார், காம்ப்ளேவின் தம்பி, மங்கத்ராமின் மனைவி, ராமச்சந்திர யுச்சில், ராகுல் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

சாதி, மதம் ஆகிய இரண்டும் ஒருவர் தங்கும் இடத்தை முடிவுசெய்யும் அளவிற்கு சமூகத்தில் தாக்கத்தை செலுத்தி இருப்பது மிகவும் அச்சுறுத்தலான நிகழ்வாகும். காலம் மாறி அறிவியல் யுகமாக உருவானாலும், மக்கள் மனதில் சாதி, மத ஏற்றத்தாழ்வுகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதை நாவலின்வழி அறிந்துகொள்ள முடிகிறது. "வீடு வாடகைக்குப் பார்க்கும்போது மட்டும் ரசூல் என்ற பெயரைக் கேட்டவுடனேயே... வீட்டுச் சொந்தக்காரர்கள் முகம் மாறியதை இருவரும் கவனித்தார்கள். அப்படி ஒரு நாளில்தான் அவன் தன் பெயரை ராகுல் என்று சொன்னான். வீட்டுக்காரருக்கு எந்தச் சந்தேகமும் வரவில்லை"1 என்னும் உரையாடலின் மூலம் இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவருக்கு வீட்டை வாடகைக்குக் கொடுக்க பிற மதத்தைச் சார்ந்தவர்கள் சற்று யோசிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே, ஒருவரின் உண்மையான அடையாளத்தை மறைத்தும், மாற்றியும் ஒரு இடத்தில் வசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். 'ரசூல்' என்ற பெயருக்குக் கிடைக்காத வீடு 'ராகுல்' என்ற பெயருக்குக் கிடைக்கிறது. இது போன்ற செயல்கள் இன்றைய காலகட்டத்திலும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஒருவரின் பெயரை வைத்தும், அவர்களின் பழக்கவழக்கங்களை வைத்தும், அவர்களின் மதத்தையும் ஜாதியையும் தீர்மானிக்கிறார்கள். அவ்வாறு செய்வதால், மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற பின்விளைவுகளையோ மனப் பாதிப்புகளையோ அவர்கள் உணர்வதில்லை.

சமூகத்தில் திருமணம் நடைபெறும்போது, பெரும்பாலும் ஒரே சாதி, மதம் பார்த்து நடத்தப்படுகிறது. ஒருவேளை, மதம் மாறி திருமணம் செய்து கொள்கிறவர்கள் அவர்களின் பொருளாதாரத்தைப் பொறுத்து ஆணோ, பெண்ணோ மதம் மாறி திருமணம் செய்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் கவுரி, ரசூல் இருவரும் தங்களின் மதத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அவர்கள் இருவரும் காதல் - அன்பு என்ற உணர்வுகளுக்கு இடையே, மதத்தைப் பொருட்படுத்தாமல் திருமணம் செய்து கொள்கிறார்கள். மதமும் சாதியும் மட்டும் ஒருவரின் வாழ்க்கையை நிர்ணயிப்பதில்லை. அதற்கு அப்பாற்பட்டு, பல நுண்ணிய உணர்வுகள் வாழ்க்கையை தீர்மானிக்கின்றன என்பதை ரசூல் - கவுரி கதாபாத்திரங்கள்வழி புரிந்துகொள்ள முடிகிறது.

விதவைப் பெண்களின் மனநிலை

இளம்வயதில் விதவையான ருக்மணி பாட்டி, கணவன் இருந்தும் - இல்லாமல் இருக்கும் கவுரி, கணவனை இழந்து துயரப்படும் புஷ்பா ஆகியோரின் மனநிலையை நாவலின் தொடக்கத்திலிருந்து இறுதி வரையிலும் உணர முடிகிறது.

திருமணம் ஆகியும் குழந்தை இல்லாத கவுரி, கைக்குழந்தையோடு இருக்கும் புஷ்பா அவர்களின் இருவேறுபட்ட பெண்களை இங்குக் காண முடிகிறது. கணவனை இழந்து தவிக்கும் பெண்ணின் மனநிலையும், கணவன் இருந்தும் - இல்லாமல் இருக்கும் பெண்ணின் மனநிலையும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. கவுரியின் கணவன் ரசூல் கோமாவில் உணர்வுகளற்றுக் கிடக்கும் அந்த வலியும், அவனுடன் வாழ்ந்த நினைவுகளும் அவளைத் தினமும் கொல்கின்றன. அதுபோல புஷ்பா கணவனை இழந்து கைக்குழந்தையுடன் இளம் விதவையாக நிற்கின்ற நிலை, பொருளாதாரச் சிக்கல், குழந்தையை இனி எப்படி வளர்க்கப் போகிறோம் என்ற கவலை அவளுக்குள் வலியை ஏற்படுத்துகிறது.

கவுரி கோமாவில் இருக்கும் கணவனைப் பார்க்க மருத்துவமனைக்குச் செல்கிறாள். அங்கு ரசூலைப் போலவே, மேரி என்ற பெண்ணும் கோமாவில் இருப்பதையும், அவளின் கணவன் அவளை வந்து பார்த்துவிட்டுச் செல்வதையும் கவுரி பார்க்கிறாள். இதைக் கண்ட கவுரிக்கு அவனுடைய நிலையும் தன்னைப் போலவே இருக்கிறது என்று உணர்கிறாள். தனிமையில் இருக்கும் ஆண், பெண் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்கின்ற பொழுது, ஏதோ பல உணர்வுகள் அவர்களுக்குள் அலை மோதுவதுண்டு. அவ்வகையில், இருவர் மனதிலும் ஏதோ ஒரு உணர்வு அலை மோதுகிறது. இதுபோலவே, கவுரிக்கு மற்றொரு நிகழ்வும் நேர்கிறது. கம்பெனி மேனேஜரான ராகுலைச் சந்திக்கும் பொழுதும் அவர்கள் இருவர் மனதிற்குள்ளும் காதல் உணர்வு உருவாகிறது. ஆனால், ரசூலை நினைக்கும் பொழுது அவள் அதை அப்படியே மனதுக்குள் புதைத்து விடுகிறாள். ஏனெனில், ரசூலின் மீது அவள் வைத்திருந்த காதலும் மற்றும் சமூகம் அவளை எவ்வாறு பார்க்கும் என்ற எண்ணமும் அவள் மனதுக்குள் இருந்துகொண்டே இருந்திருக்கிறது.

தனிமை என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே உணர்வுகளை கடத்துகின்றது. மன அமைதி, ஆறுதல் இதை அவர்களின் மனம் எதிர்பார்க்கின்றது. ருக்மணி பாட்டி இளம்வயதில் விதவையானவர். விதவையின் வருத்தத்தையும் ஏக்கத்தையும் தீர்க்க அவர் அடிக்கடி ‘ஆவுடை அக்காள்’ பாடல்களைக் பாடிக்கொள்வார். ஆவுடை அக்காள் என்பவர் செங்கோட்டையைச் சேர்ந்தவர். பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பக்தி, யோகா, ஞானம், வேதாந்தம், ஸமரஸ் போன்ற பாடல்களை இயற்றியுள்ளார். ஆவுடை அக்காள் இளம்வயதில்

விதவையானவர்தான். விதவையாக இருப்பவர்களின் சோகத்தையும், அதன் தாக்கத்தையும் அவர் இயற்றிய பாடல்களில் காணமுடிகிறது. எனவே, அந்தக் காலத்தில் 'சுந்தரபாண்டியபுரம், சாம்பூர், வடகரை, ஆம்பூர் ஆழ்வார்குறிச்சி நாகர்கோவில், வடுவீஸ்வரம், முன்னீர்பள்ளம், கல்லிடைக்குறிச்சி முதலிய கிராமங்களில் உள்ள விதவைகள் மத்தியான உணவுக்குப்பின் பத்துப் பெண்கள் கூடி உட்கார்ந்து அக்காள் பாடல்களைப் பாடி தங்கள் சோகத்தையும் தாகத்தையும் தீர்த்துக் கொண்டதாக அம்மா அடிக்கடி சொல்வாள்”2 இதை நாவலாசிரியர் ருக்மணி பாட்டி பாடிக்கொண்டு இருப்பதாக வெளிக்காட்டியுள்ளார்.

“ஆசையானேன் வெங்கடேச ஸ்வாமி மேலாசை ஆனேனே... ஆனேனே... ஆசை ஆனேனே.. என்று பாடிக்கொண்டே வரும் பாட்டி அடிக்கடி ராகத்தை மாற்றிக் கொள்வாள். ‘தேகத்தை விடும்போது தரிசனம் எனக்குத் தந்து மோக்ஷத்தை வெல்லாமல் மோசம் போகாதே’னு பாட்டி சோகத்தில் பாடிக்கொண்டே கைவேலைகள் செய்வாள். தேகத்தைக் கொன்றுவிடு... அல்லாமல் குரூணான மோகத்தை விட்டுவிடு... தேகத்தைக் கொன்றுவிடு"3 என்பது ஆவுடை அக்காளின் பாடலாக நாவலில் இடம்பெறுகிறது.

ஆவுடை அக்காளின் தத்துவக் கருத்துகளின் தாக்கம் பாரதியாருக்கு ஏற்பட்டிருக்கிறது. பாரதியின் பாடலில், “மோகத்தை கொன்று விடு அல்லால் /என்றன் மூச்சை நிறுத்திவிடு / தேகத்தை சாய்த்திவிடு அல்லால் / அதில் சிந்தனை மாய்த்துவிடு"4 என்றவாறு வெளிப்படுகிறது. விதவைகளாக இருப்பவர்கள் மற்றும் தனிமையில் ஏங்குகிறவர்கள் பாடுகின்றனர். கவுரிக்கு கணவனோடு இருந்த அந்நினைவுகள் வருகிறது. அவள் உடலும் உயிரும் படும் அவஸ்தையை தீர்க்க மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் பாடல் வரிகளைப் பாடி துக்கத்தில் அழுகிறாள். அவளின் அழுகைக்குப் பின்னால் கணவன் இல்லை என்ற சோகம், அவள் ஆறுதல் அடைவதற்குக் குழந்தை இல்லை என்ற சோகமும் அவளைத் துயரத்தில் ஆழ்த்துகிறது. எனவே, பெண்கள் விதவையாக வாழ்நாள் முழுவதும் வாழ்வது தாங்க முடியாத துன்பமாக இருந்து வருகிறது.

சமூகத்தில் விதவைகளின் நிலை

இன்றைய காலகட்டத்தில் அதிநவீன கணினியுகத்தில் பெண்களின் நிலை பெரும்பாலும் மாறிவிட்டது. நகரத்தில் வாழும் பெண்களுக்குச் சுதந்திரம் கிடைக்கிறது. இன்றும் கிராமத்தில் பெண்களின் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இதனையே நாவல் பதிவுசெய்கிறது. கணவனின்றி விதவையாக இருப்பதுகூட அவர்களுக்குத் துயரம் தருவதில்லை. ஆனால், சமூகத்தில் விதவைகளை ஒதுக்கி வைப்பதுதான் பெருந்துயரம். சாஸ்திரம் பார்க்கிறவர்கள் நல்ல காரியங்களுக்கு விதவைகளை ஒதுக்கி வைப்பதுண்டு. அது அவர்களுக்கு இன்னும் பல வலிகளை தருகின்றன. திருமணம், பூப்புச் சடங்கு, வளைகாப்பு, கோவில் திருவிழா முதலிய மங்கள நிகழ்விற்கு அவர்களை அழைப்பதோ, மரியாதை தருவதோ இல்லை. அவர்கள் அதில் கலந்து கொண்டால் மங்கள நிகழ்வு அமங்கலமாகிவிடும் என்று சமூகத்தில் உள்ளவர்கள் கருதுகின்றனர்.

“இந்த ஐந்து வருடங்களில் அவளை யாருமே இம்மாதிரி திருமண வீட்டுக்கு அழைத்ததில்லை. அவள் வீட்டுக்கு அழைப்பிதழ் எடுத்துக்கொண்டு யாரும் வந்ததில்லை."5 என்று கவுரியின் மன வருத்தத்தை விதவைகளின் மன வருத்தமாக நாவலாசிரியர் வெளிப்படுத்துகிறார். சமூகத்தில் இந்நிலை மாற வேண்டும் என்பதை மங்கத்ராமின் மனைவியின் வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளார். அவர் வீட்டில் நடக்கப் போகும் திருமணத்திற்கு முறையாக கவுரிக்கு அழைப்பிதழைக் கொடுக்க

வருகிறார். இதைக் கண்ட கவுரி, அதிர்ச்சியில் கை நடுக்கத்துடன் தாம்பளத் தட்டை வாங்கி அழைப்பிதழைப் பிரித்துப் பார்க்க தோன்றவில்லை. அன்றைய காலத்தில், கணவன் இறந்துவிட்டால் மனைவி உடன்கட்டை ஏறுகின்ற மரபு இருந்திருக்கிறது. சட்டத்தால் தடைவிதிக்கப்பட்டபின் கைம்மை நோன்பு சமூகத்தால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உடன்கட்டை ஏறுவதைக் காட்டிலும் மிகக் கொடுமையானது கைம்மை நோன்பு அனுபவம் ஆகும். வுறதவைகளாக இருக்கும் பெண்கள் வெள்ளைச் சேலையை உடுத்துதல், தலையை மொட்டையடித்துக் கொள்ளுதல், தலையில் பூ வைத்துக் கொள்ளாமல் இருத்தல் உள்ளிட்ட பல்வேறு செயல்களின் மூலம் கணவனை இழந்து விதவைப் பெண்களைச் சமூகம் தனிமைப்படுத்தியது.

“கணவன் இறந்தபின் பதிவிரதைகள் விதவா தர்மத்தை அடைந்து நாள்தோறும் பேசாமல் மௌன ஸ்நானம் (உடம்பு முழுதும் மண்ணைப்பூசிக் கொள்வது) ஜலத்தில் உத்தமமான அஞ்சலி ஸ்நானத்தையும் (இரு கைகளாலும் நீரைத் தலையில் இறைத்துக் கொள்வது) செய்ய வேண்டும். அதன்பிறகு தன் கணவனைப் பற்றிய விவரத்தையும், நியமத்தையும் செய்ய வேண்டும்.”6 என விதவைகளுக்குக் கூறப்படும் விதவா தர்மத்தில் குறிப்பிட்டிருப்பதாக கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு செய்வதால் பெண் மோட்சம் அடைந்து விண்ணுலகத்தை அடைவாள் என்பது நம்பிக்கை. இது எவ்வளவு பெரிய தவறாக இருந்திருக்கிறது. இதுபோல பல இதிகாச, புராணங்கள் மற்றும் பலர் அவர்களின் விருப்பப்படி ஒவ்வொரு கருத்துக்களையும், சாஸ்திரங்களையும் உருவாக்கி வைத்துவிட்டுப் போகின்றனர். அதுவே காலப்போக்கில் நடைமுறைக்கு வந்து விதவையாக துயரத்தில் இருக்கும் பெண்களுக்கு மேலும் மனக்கசப்பை உருவாக்குகிறது.

கணவனை இழந்த பெண்கள் ஆடை அலங்காரத்துடன் மகிழ்ச்சியாக இருப்பதை இச்சமூகம் ஏற்பதில்லை. அவர்கள் சோகத்துடனும் எவ்வித அலங்காரமுமின்றி இருப்பதையே இச்சமூகம் விரும்புகிறது. மாறாக, அவர்கள் அலங்காரம் செய்து கொண்டால், அவர்களைச் சமூகத்தில் உள்ளவர்கள் இழிவாக எண்ணுகின்றனர். அழகுபடுத்திக் கொள்ளாமல் இருப்பதே கணவனை இழந்த துயரத்தில் அவன் மீது அளவு கடந்த அன்பு வைத்திருப்பதாக சமூகம் கருதுகின்றது. ஆனால், உண்மையில் இது சமூகச் சித்திரிப்பே தவிர, ஒருவரின் வருத்தம் அவர்கள் அணியும் ஆடையிலோ அலங்காரத்திலோ கிடையாது.

இவ்வாறு சமூகத்தின் தவறான பார்வையால் பல விதவைகளும் தங்களின் உண்மைத்தன்மையை மறைத்து அவர்களின் சுயத்தை இழந்து சமுதாயத்திற்காக தங்களின் வாழ்க்கையை வாழ்கின்றனர். கவுரியும் அவ்வாறு இருந்திருக்கிறாள். கவுரியின் சிந்தனைகளை மாற்றுகின்ற கதாபாத்திரமாக நாவலின் இறுதியில் தன்வி காணப்படுகிறாள். கணவன் இருந்தும் இல்லாமல் தவித்த கவுரியின் வாழ்க்கை சுமார் 20 வருடங்களுக்கு மேலாகிவிடுகிறது. அவள் அவனின் நிலையை நினைத்தும், அவனோடு வாழ்ந்த நினைவுகளோடு மட்டுமே வாழ்ந்தாளே தவிர, தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு தோன்றவே இல்லை. புஷ்பா தன் மகள் தன்வியைச் சூழ்நிலையால் கவுரியிடம் ஒப்படைக்கிறாள். தன்வியை வீட்டில் வைத்து வளர்க்கும்பொழுது, கவுரியின் மன ஆறுதலுக்கும் அவளின் சிந்தனைகளை மாற்றுவதற்கும், தன்வி முக்கியப் பங்காற்றுகிறாள் என்பதை நாவலின்வழி அறிய முடிகிறது.

“கி.பி. 1986-இல் சென்னை மாவட்டத் திராவிடர் கழக மகளிர் அணி சார்பில்

பெரியார் திடலில், பெண்கள் விடுதலை மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டு நிகழ்ச்சியில் விதவைகளுக்குப் 'பூக்கள்' வழங்கப்பட்டன. இவ்வாறு செய்வதன் மூலம் விதவைச் சகோதரிகளின் சிந்தனையில் ஒரு புதுத் திருப்பம் ஏற்படுத்தப்பட்டது."7 விதவைப் பெண்களின் தவறான எண்ணத்தையும், சமூகத்தின் மூடநம்பிக்கையையும் உடைத்தெரிந்து விதவைப் பெண்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கும், அவர்கள் மறுமணம் செய்துகொள்வதற்கும் தந்தை பெரியார் பெரும்பணியாற்றி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மறுமணம்

நாவலில் ஒரு பெண் மறுமணத்திற்குத் தயங்குகிறாள். மற்றொரு பெண் மறுமணம் செய்துகொள்கிறாள். "மறுமணம் செய்துகொள்ள விரும்பும் பெண்களுக்குத் தாராளமாய் மணஞ் செய்துகொள்ள இடமளிக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கை"8 என்பது பெரியாரின் கருத்து. கவுரி மறுமணத்திற்குத் தயங்க, புஷ்பா கணவனின் தம்பியை மறுமணம் செய்துகொள்கிறாள். கவுரி மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவளது மாமனாரே அறிவுரை கூறுகிறார். "நீ மறுமணம் செய்து கொள்ள வேண்டும் கவுரி... ஒரு தகப்பனாக மட்டும் இதைச் சொல்லவில்லை. ஒரு மனிதனாகவும் இதைச் சொல்கிறேன். உங்கள் திருமணம் எப்படி நடந்தது என்று நான் கேட்கப் போவதில்லை..... எங்கள் மதம் இம்மாதிரி ஒரு சூழலில் ஒரு பெண்ணுக்கு அவள் கணவனிடமிருந்து விவாகரத்து பெறும் உரிமையைக் கொடுத்திருக்கிறது. எனவே, இந்த உறவை நீ எப்போது வேண்டுமானாலும் விலக்கி விட்டு உன் வாழ்க்கையை வாழ வேண்டும்... நீ வாழணும்ம்மா"9 என்று கூறுகிறார். கவுரியின் மறுமணத்தைப் பற்றி, அவரது மாமனரே வலியுறுத்துவதாக, நாவலாசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

தொகுப்புரை

சமூகத்தில் சாதி, மதப் பாகுபாடுகள் இருக்கின்றன என்பதை ரசூல் - கவுரி கதாபாத்திரங்களின்வழி அறிந்துகொள்ள முடிகிறது. விதவைகளுக்குச் சரியான அங்கீகாரம் இல்லை என்று நாவல் குறிப்பிடுகிறது. பெண்கள் மங்களகரமாக இருந்தால் மட்டும் சமூகம் அவர்களை அங்கீகரிக்கிறது. அந்நிலை மாற வேண்டும் என்ற நோக்கத்துடன் நாவல் படைக்கப்பட்டிருக்கிறது. விதவைகள் மறுமணத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் நாவல் வலியுறுத்துகிறது.

அடிக்குறிப்புகள்

1. புதியமாதவி, ரசூலின் மனைவியாகிய நான், ப.14
2. மேலது., ப.21
3. மேலது., ப.21
4. www.ta.wikisource.org
5. புதியமாதவி, ரசூலின் மனைவியாகிய நான், ப.24
6. கி. வீரமணி, மகாபாரதத்தில் வர்ண (அ)தர்மமும் பெண்ணடிமையும், ப.41
7. பா. மகாலெட்சுமி (க.), தந்தை பெரியாரும் பெண் உரிமையும், இரா.தாமோதரன் (பதி.), பெரியாரும் உலகப் பகுத்தறிவாளர்களும், ப.113
8. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?, ப.46
9. புதியமாதவி, ரசூலின் மனைவியாகிய நான், பக். 19, 20

துணைநூற்பட்டியல் :

1. புதியமாதவி, ரசூலின் மனைவியாகிய நான், ஹெர் ஸ்டோரீஸ் பதிப்பகம், முதற்பதிப்பு, மே, 2025

2. கி. வீரமணி, மகாபாரதத்தில் வர்ண (அ)தர்மமும் பெண்ணடிமையும், திராவிடர் கழக (இயக்க) வெளியீடு, மூன்றாம் பதிப்பு, மே, 2004

3. இரா.தாமோதரன் (பதி.), பெரியாரும் உலகப் பகுத்தறிவாளர்களும், பாரதிதாசன் பல்கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு, 2011

4. www.ta.wikisource.org

*****

© 2026 அனுமோள் ஆ, முனைவர் .சீனிவாசன் ச.பொ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 156–162
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

நதிக்கரை மீன்கள் காட்டும் பண்பாட்டு வெளிப்பாடுகள்

இராஜன் ஜான் அ*

உதவிப் பேராசிரியர் ,தமிழ்த்துறை ,ஜெ.பீ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி தென்காசி ., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: இராஜன் ஜான் அ — rajanjohn315@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00030

Abstract / ஆய்வுச்சுருக்கம்

பண்பட்ட மனிதர்களின் வாய்ச் சொற்கள் கதைகளாக மாறின. அந்தக் கதைகளின் வாயிலாக ஒரு குறிப்பிட்ட பகுதியின் சமூக நிலை, கலாச்சாரங்கள், பேச்சு வழக்கு, இவை போன்ற பண்பாட்டுக் கூறுகளை நாம் அறிந்து கொள்ள முடியும். அவ்வகையில், திருநெல்வேலி பகுதியில் வசிக்கும் பேட்டை வணிக வைசிய அரசு தொடக்கப்பள்ளியின் ஆசிரியரும் தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப் பற்றாளர் விருது பெற்ற வாழும் படைப்பாளருமான திரு. வ. செல்வ மாரிமுத்து அவர்களின் நதிக்கரை மீன்கள் என்ற கதைத்தொகுதி பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைத் தனக்குள் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இக்கதைத் தொகுதியில் கூறப்பட்டுள்ள பண்பாட்டு வெளிப்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதே கட்டுரையின் நோக்கமாக இருக்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: கதைத்தல்; கருதுகோள்; விழுமியம்; பட்டறிவு

How to cite / மேற்கோள் காட்டும் முறை: அ, இ. ஜா. (2026). நதிக்கரை மீன்கள் காட்டும் பண்பாட்டு வெளிப்பாடுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 156–162. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8453

முன்னுரை

மக்கள், தங்களுடைய வாழ்வியலை முறைப்படுத்திக் கொள்வதற்கு முன்பு அவர்களுக்குப் பல்வேறு அனுபவங்கள் கிடைத்தன. இந்தப் பட்டறிவுகளைக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை அவர்கள் சீர்படுத்திக் கொள்ளத் தொடங்கினார்கள். இந்தப் பட்டறிவு, 'பண்பாடு' ஆகும். பண்பாடுகள், எழுதப்படாத வாய்மொழி வாயிலாக மக்களுக்குள் கதைகளாகக் கூறப்பட்டன. கதைகள், எளிமையாக மக்களுக்குப் புரிந்த காரணத்தினால் கலாச்சாரப் பண்பாடுகள் இவற்றின் வாயிலாக அனைவரிடமும் மிக வேகமாகப் பரவின. எனவே, படைப்பாளர்கள் தற்போது கதைகளின் வாயிலாகப் பண்பாடு தொடர்பான கருத்துக்களைப் பதிவு செய்து வருகிறார்கள். அவ்வகையில் நதிக்கரை மீன்கள் என்ற கதைத் தொகுதியில் சில பண்பாட்டுக் கூறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கதை - சொல் விளக்கம்

‘கதைத்தல்’ என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு செயல்பாடு ஆகும். **“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்”**[1] என்பார் வள்ளுவர். அவ்வகையில், காதுகளால் கேட்டு, மனதிற்குள் நிறுத்தி, அதனை மீண்டும் வாழ்வில் பயன்படுத்த கதைகள் உந்து சக்தியாக இருக்கின்றன. சிறியோர் முதல் பெரியோர் வரை கதை சொல்வதற்கும் கேட்பதற்கும் ஆர்வம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரியாத நபர்களுக்குக் கூட கதைகளின் வாயிலாக சிறந்த கருத்துக்களைப் புரிய வைக்க முடியும்.

பண்பாடு :

வாழ்வியல்,பழக்கவழக்கம்,நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள்,சொல்லாடல்கள் என இவற்றின் தொகுப்பே பண்பாடு.தனிமனிதனுடைய வாழும் முறையிலிருந்து அவனுடைய பண்பாட்டை அறிந்து கொள்ள முடியும்.சில பண்பாடுகள் காலப்போக்கில் அழிந்துவிடுபவை. ஆனால், சில பண்பாட்டுகள் காலத்துக்கு ஏற்ப, தன்னை மாற்றிக்கொண்டு தொடர்ந்து பயணிக்கக்கூடியவை. **“ஒருவன் தன் குணங்களை நிரப்புவதிலும் சமுதாயத்தின் நலங்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் பக்குவ நிலையே ஆகும்.”**[2] என்ற வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்தின் வாயிலாகப் பண்பாடு பற்றிய விளக்கத்தை அறியமுடிகின்றது.

வழிபாடு

வழிபாடு என்பது முன்னோர்கள் வகுத்துக் கொடுத்த வழியில் நடப்பது. ‘வழிப்படுத்துதல்’ என்ற பொருளில் அமைகிறது .ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை எந்த முறையில் வணங்க வேண்டும் என்ற விதிமுறைகளுக்கு வழிபாடு என்று பெயர். வழிபாட்டு நிகழ்வுகளின் வாயிலாக ஒரு குறிப்பிட்ட பகுதியின் கலாச்சார பண்பாடுகள் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். **“விரையும் உள்ளுணா விற்கு ஏதாவதொன்று வேண்டுமன்றே ? பொருந்தியது எது ? வழிபாடு, வழிபடுதல் வழிபாடு, உளளுணாவு வளர்ச்சிக்கு வழிபாடு ஒளி போன்றது.”**[3] என்ற இந்தக் கருத்தின் வாயிலாக மனிதனுடைய உள்ளார்ந்த சிந்தனைகளின் வெளிப்பாட்டைக் காட்டுவதே வழிபாடு என்று அறிந்து கொள்ள முடிகிறது. உள்ளார்ந்த சிந்தனைகள் செயல்களாக வெளிப்படும்போது அவையே பண்பாடாக மாறுகின்றது.

திருமண வாழ்வியல் :

திருமணம் என்பது ஒவ்வொரு மனித வாழ்விலும் திருப்பு முனையாக இருக்கும் ஒரு பண்பாடு சார்ந்த நிகழ்வாகும்.குறிப்பிட்ட எந்த விதிமுறையும் இல்லாமல் மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருந்த பண்பாடற்ற மனித இனத்துக்கு வழிகாட்டும் ஒரு கலாச்சார நிகழ்வே திருமணம் ஆகும். **“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப”**[4]என்ற தொல்காப்பியரின் விளக்கத்தின் படி, பண்பாட்டு மீறல்கள் நடந்த பிறகே திருமணம் என்பது கொண்டுவரப்பட்டது என்பதை அறிய முடிகிறது.நதிக்கரை மீன்கள் என்ற கதைத் தொகுப்பில் பொருத்தமான தேர்வு என்ற தலைப்பிலான கதையில், திருமணம் என்பது எவ்வாறு நிச்சயிக்கப்படுகிறது.

திருமணம் என்பது கண் பார்வையால் மட்டும் புரிந்து கொண்டு வாழ்க்கை தொடங்கும் வாழ்வியல் முறை அல்ல. ஒருவருடைய மனதின் ஆழங்களைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றார் போல அமைத்துக் கொள்ளக்கூடிய வாழ்வியல். திருமண உறவுகளுக்குள் பண்பாட்டு ரீதியான சூழல்கள் உருவாகி அந்தப் பிணைப்பு சிறப்பாக இருக்க வேண்டும். ஆனால், சரியான நபரைத் தேர்வு செய்யாமல்

திருமணங்கள் பண்பாட்டில் இருந்து விலகி ரத்து செய்யப்படும் அளவிற்குச் செல்லக்கூடிய சூழல்கள் ஏற்படுகின்றன என்பதை ஆசிரியர் பொருத்தமான தேர்வு என்ற கதையின் வாயிலாக விளக்குகிறார். **“அழகான தோற்றம் மற்றும் பாரம்பரியமான ஆடை அணிந்திருக்கும் பெண் நல்ல குணம் கொண்டவர்களாக இருப்பாள் என்று நான் நம்பினேன் ஆனால் அவள் அப்படி இல்லை நீ காதலித்து என்னிடம் அறிமுகம் செய்த பெண் நவநாகரீக ஆடை அணிந்திருந்த காரணத்தினால் அவளை நான் குடும்பத்திற்கு ஒத்து வராதவள் என்று கூறி ஒதுக்கி விட்டேனே இப்பொழுது என் மகனின் உன் வாழ்க்கை இவ்வாறு ஆகிவிட்டது”**[5] என்று சூர்யாவின் தாய் அவனிடம் புலம்புவதில் இருந்து இதனை அறிந்து கொள்ள முடிகிறது.

கலப்புத்திருமண பண்பாடு :

திருமணம் என்பது மனிதனை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இருக்க வைக்கும் கட்டுப்பாடுகள் நிறைந்த ஒரு செயல்பாடாகும்.திருமணத்தால் மனிதனின் வாழ்வு கட்டுக்குள் கொண்டுவரப்படுவது சரியே.ஆனால், திருமணமே ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவது தவறு என்பது ஆசிரியரின் கருத்தாக இருந்துள்ளது.அனைத்துப்பகுதிகளிலும் பெரும்பாலான கௌரவக் கொலைகள் நடைபெறுகின்றன.ஆனால்,கலப்புத்திருமணத்தை ஆதரிக்கும் பண்பாடும் தென்மாவட்டப்பகுதிகளில் முன்பு இருந்துள்ளதை மனம் மாறியது என்ற கதையின் வாயிலாக ஆசிரியர் விளக்குகின்றார்.

முதலியார் சாதியைச் சார்ந்த ஒருவரின் மக்கள் வேறு ஜாதி ஆண்மகனைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறாள்.இதனால் கோபமடைந்த முதலியார் அவளை வீட்டைவிட்டு விரட்டுகின்றார்.அப்பெண் தன்னுடைய கணவனோடு அதே ஊரில் வசித்து வருகிறாள். பெரிய நல்ல நாள் ஒன்றில் முதலியார் தன்வீட்டில் ஊரையே அழைத்து விருந்து வைத்து மகிழ்ச்சியடைகின்றார்.ஆனால்,ஊர்மக்கள் மற்றும் உறவினர்கள் அவருடைய மகளை ஒதுக்கி வைத்துவிட்டு இவ்வாறு கொண்டாடுவது தவறு என்று எடுத்துரைக்கின்றார்கள்.இதனை,"**உனக்கு தகப்பன் இஸ்தானத்திலிருந்து காயத்ரி உபதேசம் பண்ணினவன் நான்தானே.நானே சொல்றேன் .சாதி என்னடா சாதி...நாளைக்கே நீயும் நானும் செத்துப் போனா ஒடம்ப எரிக்கப்போறது நம்மவா இல்ல.வெட்டியான் தான்.நீ என் சாதி இல்ல .அதனால என் உடம்ப தொடக்கூடாதுனு சொல்லமுடியுமா? வயசாளி நானே இத பெருசா எடுத்துக்கல."**[6]என்று வயதான ஒரு பெரியவர் கதாப்பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் விளக்குகின்றார்.

நம்பிக்கையும் மூடநம்பிக்கையும் :

நம்பிக்கைகள்,என்பவை உளவியல் தொடர்புடையவையாகும்.ஒரு குறிப்பிட்ட கருதுகோள் பெயரில் அதன்மேல் வைக்கும் பற்று நம்பிக்கை எனப்படுகின்றது. இந்த நம்பிக்கைகள் மனிதனின் பண்பாட்டை விளக்குகின்றன.ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களின் நம்பிக்கைகள் அவர்களின் பண்பாட்டுக்கு ஏற்ப மாறுபடுகின்றன.பாம்புகளைக் கடவுளாக வணங்கும் பண்பாடு கொண்டவர்களாக நம்மில் பலர் இருக்கின்றார்கள்.ஆனால்,அதே பாம்புகள் சில நாட்டவர்களால் உணவாக உண்ணப்படுகின்றது.இதிலிருந்து ஒரு குறிப்பிட்ட செயலைக்கொண்டு அது இருக்கும் இடத்தின் பண்பாட்டு முறையை அறியமுடிகின்றது.

சில நம்பிக்கைகள் நம் அறிவு வளர்ச்சிக்கு ஒவ்வாதவையாக

இருக்கலாம்.ஒருவர் வாழுகின்ற சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்குப் பொருந்தாத பொருளற்ற நம்பிக்கைகளையும் சடங்குகளையும் மூட நம்பிக்கைகள் என்பர்"[7] என்ற வரிகளின் வாயிலாக மூடநம்பிக்கைகள் பற்றிய விளக்கத்தை அறியமுடிகின்றது.மேலும், **"சோதிட நம்பிக்கை என்பது தமிழ்நாட்டுப் பெண்களிடம் அழுத்தமாகப் பதிவாகி விட்ட ஒன்று. இந்நிலையில் நாவல்களில் வரும் பெண்மாந்தர்களில் சிலர் சோதிட எதிர்ப்பு உணர்வு உள்ளவர்களாக மு.வ. படைத்துக் காட்டுவது மிகுந்த கவனத் திற்கு உரியதாக அமைகின்றது."**[8] என்ற வரிகளில் பெண்கள் சோதிடம்,சாஸ்திரம் போன்ற மூடநம்பிக்கைகளுக்கு அடிமையாகி இருப்பதை மு.வரதராசனார் சுட்டிக்காட்டுவதிலிருந்து அறியமுடிகிறது.

இதே மூட நம்பிக்கை நதிக்கரை மீன்கள் என்ற கதைத்தொகுப்பிலும் ஆசிரியரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.நாளாவது கிழமையாவது என்ற கதைத்தொகுப்பில் வரும் பின்வரும் வரிகளின் வாயிலாகப் பெண்கள் மூட நம்பிக்கையில் மூழ்கி இருந்ததை அறியமுடிகின்றது. **"இன்னைக்கு அம்மாவாசை,அதுவும் ஆடி அமாவாசை.ஆடி மாசம் ஆம்பள பிள்ளை பொறந்தா குடும்பத்தையே ஆட்டி வைப்பான்.நாளைக்கு மூல நட்சத்திரம் வேற வருது.மூல நச்சத்திரத்துல பொம்பள பிள்ளை பிறந்தா மாமனாருக்கும் மாமியாருக்கும் ஆவாது"**[9] என்று சுப்பு என்ற கதைமாந்தர் வாயிலாக ஆசிரியர் பேச வைக்கின்றார்.

பெரியாரை மதித்தல்

மதிப்பு என்பது பண்பாட்டு விழுமியத்தில் மிகவும் முக்கியமான ஒன்றா வயதில் மூத்த அனுபவம் மிகுந்த நபர்களுக்கு மதிப்பு கொடுத்து பழங்கால மன்னர்கள் போற்றினார்கள் மன்னருக்கு ஆலோசனை வழங்கும் முக்கியமான இடத்தில் ராஜ குருவாக வயது முதிர்ந்த சான்றோர்கள் இருந்துள்ளார்கள்.இதனை, **"வாசனை இல்லாத பூவும், கல்வி அறிவு குணம் இவற்றில் வல்ல பெரியோர் கூடி இல்லாத சபையும்,பூவுலகத்தில் இருந்தம் என்ன பிரயோஜனம்"**[10] என்ற கருத்தின் வாயிலாக அறியமுடிகிறது. இக்கருத்தின் அடிப்படையில் பெரியோர்கள் இல்லாத சபை பயனற்றது என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

மேலும், பெரியோர்களுக்குப் பழங்காலத்தில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தையும் அது பண்பாட்டின் வாயிலாக எந்த அளவு மக்களோடு இணைந்துள்ளது என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. பதில் உபகாரம் என்ற சிறுகதையில் பெற்று வளர்த்த தன்னுடைய தகப்பனை அவருடைய சொத்துக்களையும் பறித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே விரட்டிய சொந்த மகன் மற்றும் மருமகளின் நிலை விளக்கப்படுகிறது. வயது வேறுபாடு பார்க்காமல் மருமகள் அவரை உதாசீனப்படுத்திப் பேசுவதை ஆசிரியர் இந்தக் கதையில் விளக்கியுள்ளார்.பெரியோர்களை மதிக்க வேண்டும் என்ற பண்பாட்டுச் செயல்பாடு மீறப்பட்டுள்ளது. மேலும், விரட்டப்பட்ட அந்தப் பெரியவர் அருகில் உள்ள ஒரு குப்பத்துக்குச் சென்றிருக்கிறார்.

அங்கு சிவகாமி என்ற ஒரு பெண் அவரைத் தன்னுடைய சொந்தத் தாத்தாவாக நினைத்து அவருக்கு இறுதிவரை உடனிருந்து அனைத்து ஈம காரியங்களைச் செய்ததையும் ஆசிரியர் விளக்கியுள்ளார். ஒரு குறிப்பிட்ட சமூகத்து மனிதர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பெரியோர்களிடம் நடந்து கொள்ளும் வேறுபட்ட பண்பாட்டு முறைகளை இவர் அழகாக விளக்கியுள்ளார்.

இதனை **“பழைய உணவு கெட்டுப்போன பொருள்கள் போன்றவற்றை என் மருமகள் எனக்கு கொடுக்கிறாள் உரிய நேரத்தில் மாத்திரை தருவதில்லை என் அருகில் வந்தால் என்னிடம் இருக்கும் ஏதேனும் நோய்கள் குழந்தைக்கு பரவி விடும் என்று பேரன் பேத்திகளை என்னிடம் வர அனுமதி கொடுப்பதில்லை”**[11] என்று உயில் அவர் எழுதி வைத்திருப்பதிலிருந்து அறிய முடிகிறது.

வட்டார வழக்குச் சொற்கள் :

சொற்கள் என்பவை ஒரு குறிப்பிட்ட மொழி ஒவ்வொரு பகுதியிலும் எவ்வாறு தன்னை உருவாக்கிக் கொண்டு பேசப்பட்டு வருகிறது என்பதைத் துல்லியமாக வெளிப்படுத்தக் கூடியதாகும். பல்வேறு காலங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் பல்வேறு விதமான தமிழ்ச் சொற்கள் பண்பாட்டின் தொடர்ச்சியை விளக்குவதாக அமைகின்றன.அவ்வகையில், நதிக்கரை மீன்கள் என்ற இக்கதைத்தொகுப்பிலும் ஆசிரியர் தென்பகுதியில் உள்ள சில பொதுவான வழக்குச்சொற்களைக் கையாண்டுள்ளார்.”**வாட்டசாட்டமான,வயசாளி,அப்பிசி,அப்பாரு,வல்லரக்கி ,வழிச்சு நக்கினது”** [12]என இவைபோன்ற வட்டார வழக்குச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.இச்சொற்கள் வாயிலாக தென்பகுதி மக்கள் கூற வரும் கருத்துக்களை எளிமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

முடிவுரை :

நதிக்கரை மீன்கள் என்ற கதைத்தொகுப்பில்,தென்மாவட்ட மக்களின் பேச்சு,பழக்கவழக்கங்கள்,சோதிட நம்பிக்கைகள்,திருமணம் பற்றிய உளவியல் புரிதல்கள் என அனைத்தும் ஆசிரியரால் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.நெல்லை மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளில் பரவியுள்ள சொல்லாடல்களை ஆசிரியர் இந்தக் கதைத் தொகுப்பில் பயன்படுத்தியுள்ளார்.இந்தச் சொற்கள் ஆசிரியர் சொல்ல வரும் கருத்துக்களை எளிமையாக மக்களுக்கு விளக்கும் தன்மை கொண்டவையாக இருக்கின்றன.தென்மாவட்ட நெல்லை வாழ் மக்களின் பண்பாடுகள் இந்தக் கதைத்தொகுப்பில் ஒவ்வொரு கதையிலும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. திருக்குறள் எளிய உரை.,மாணவர் மன்றம் சென்னை 12.,முதல் பதிப்பு 1960., ப 104
2. தமிழர் பண்பாடு.,பேரா.வையாபுரிப்பிள்ளை.,தமிழ்ப்புத்தகாலையம் சென்னை 5.,முதல் பதிப்பு 1949.,ப 2
3. உள்ளொளி.,திரு. வி. க.,சாது அச்சுகூடம் ராயப்பேட்டை சென்னை.,முதல் பதிப்பு 1945., ப 69
4. தொல்காப்பியம் பொருளதிகாரம்.,கல்விக்கடல் அச்சுக்கூடம்.,முதல் பதிப்பு 1847.ப 606
5. நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப 12
6. நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப
7. காப்பியங்களில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.,புலவர்.சி.வசந்தா.,ஸ்ரீ வித்யா பதிப்பகம் சென்னை 2.,முதல் பதிப்பு டிசம்பர் 2001.,ப 21.

8. பெரியாரிய நோக்கில் மு.வ.,அறவேந்தன் .,உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தொழில்நுட்ப வளாகம் தரமணி சென்னை 12.,முதல் பதிப்பு 2012.,ப 29.
9. நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்)
10. குமரேசன் சதகம்.,ஜமதக்கனி நாயக்கர்.,ரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ்.,சென்னை 12.,முதல் பதிப்பு 1937.,ப70.
11. நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப 25
12. மேலது., ப 39

துணை நூல் பட்டியல்

முதன்மை ஆதாரம்

சிவ செல்வ மாரிமுத்து நதிக்கரை மீன்கள்.,
முத்துமோகன் பதிப்பகம் நெல்லை
முதல் பதிப்பு 2025

துணைமை ஆதாரங்கள்

1. ---------- திருக்குறள் எளிய உரை
மாணவர் மன்றம்
சென்னை 12.
முதல் பதிப்பு 1960.,
2. பேரா.வையாபுரிப்பிள்ளை தமிழர் பண்பாடு
தமிழ்ப்புத்தகாலையம் சென்னை 5.,
முதல் பதிப்பு 1949.
3. திரு. வி. க உள்ளொளி
சாது அச்சுகூடம் ராயப்பேட்டை சென்னை.
முதல் பதிப்பு 1945
4. தொல்காப்பியர் தொல்காப்பியம்
பொருளதிகாரம்.
கல்விக்கடல் அச்சுக்கூடம்.
முதல் பதிப்பு 1847
5. புலவர்.சி.வசந்தா காப்பியங்களில்
பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.,
ஸ்ரீ வித்யா பதிப்பகம் சென்னை 2
முதல் பதிப்பு டிசம்பர் 2001
6. அறவேந்தன் பெரியாரிய நோக்கில் மு.வ
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

தொழில்நுட்ப வளாகம் தரமணி சென்னை 12.
முதல் பதிப்பு 2012

7. ஜமதக்கனி நாயக்கர் குமரேசன் சதகம்
ரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ்.,சென்னை12
முதல் பதிப்பு 1937

குறிப்புகள் / Notes

[1] திருக்குறள் எளிய உரை.,மாணவர் மன்றம் சென்னை 12.,முதல் பதிப்பு 1960., ப 104

[2] **தமிழர் பண்பாடு.,பேரா.வையாபுரிப்பிள்ளை ப 2**

[3] **உள்ளொளி.,திரு. வி. க., ப 69**

[4] தொல்காப்பியம் பொருளதிகாரம்.,ப 606

[5] **நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப 12**

[6] நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப 23

[7] காப்பியங்களில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.,புலவர்.சி.வசந்தா., ப21

[8] பெரியாரிய நோக்கில் மு.வ.,அறவேந்தன் ., ப29

[9] நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப 32

[10] குமரேசன் சதகம்.,ஜமதக்கனி நாயக்கர்., ப70

[11] நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப 25

[12] மேலது., ப 39

© 2026 இராஜன் ஜான் அ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 163–168
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கொற்கை நாவலில் பொருளாதார அதிகாரமும் உட்சாதி முரணும்

சுபா பா[1,*], முனைவர் . ஜென்ஸிஸ் குமார் மி[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர்,பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.கேரளம்.*695034., India*
[2] இணைப்பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்.கேரளம்.*695034., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சுபா பா — subhapauldurai8@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00029	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

பரதவர் சமூகத்தில் பொருளாதார அதிகாரத்தின் அடிப்படையில் உருவான சமூக படிநிலைகளையும் உட்சாதிப் பிரிவுகளுக்கு இடையேயான முரண்பாடுகளையும் ஆராய்கிறது. இவ்வாய்வில் மேசைக்காரர்கள், மெனக்கெடார்கள், கம்மரக்காரர்கள் ஆகிய பிரிவுகளின் சமூக மற்றும் பொருளாதார நிலைகள் ஆராயப்படுகின்றன. குறிப்பாக ஜோ டி குரூஸ் அவர்களின் ‘ கொற்கை’ நாவலை முதன்மைத் தரவாகக் கொண்டு பரதவர் சமூகத்தில் பொருளாதார அதிகாரம் மற்றும் உட்சாதிப் படிநிலை எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது ஆராயப்படுகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: பரதவர் சமூகம்; பொருளாதார அதிகாரம்; உட்சாதி முரண்பாடு; மெனக்கெடார்; கொற்கை.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பா, சு., & மி, மு. . ஜெ. கு. (2026). கொற்கை நாவலில் பொருளாதார அதிகாரமும் உட்சாதி முரணும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 163–168. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8455

சமூக அமைப்பு உருவாக்கத்தை, மார்க்சியம் மேற்தளம்(சாதி, பண்பாடு,கல்வி,மதம்,அரசியல்,கலை,குடும்பம், திருமணவுறவு முறை) மற்றும் அடித்தளம்(பொருளாதாரம்) என வகைப்படுத்துகிறது. இவ்விருத்தளங்களும் தனித்தனியாக இயங்குபவையன்று. ஒன்றையொன்றுச் சார்ந்தும் ஊடாடியும் செயல்படக்கூடியவை எனக் கருதப்படுகின்றன.அத்தகைய நிலையில் மேற்தளத்தில் இடம்பெறும் சாதிய அமைப்பானது மதம், அரசியல், பண்பாடு, திருமணவுறவு முதலியவற்றோடு ஊடாடுவதுப் போன்று அடித்தளத்தில் உள்ள பொருளாதாரம் மற்றும் உற்பத்தி உறவுகளுடனும் இயைபுக்கொண்டு தனது விரிவையும் பரப்பையும் விசாலப்படுத்தியுள்ளது.

இதன் பொருட்டு ஏழும் பல்வேறு சிக்கல்களில் ஒன்றாக பொருளாதார அடிப்படையில் ஒரே சாதி பிரிவிற்குள் உருவாகும் வர்க்க வேறுபாடுகள் பின்னாளில் படிநிலை, ஒடுக்குமுறை முதலிய சாதியக் கருத்தியல்களோடு இணைந்து ஒரே சாதியினுள் செயல்படும் உட்சாதிப் பிரிவுகளாக உருப்பெறும் நிலையே இவ்வாய்வுக்

கட்டுரையின் கருதுகோளாகச் சுட்டலாம். இச்சிக்கலை இனம் காட்டும் முகமாக ஜோடி குரூஸ் அவர்களால் எழுதப்பட்ட கொற்கை எனும் நாவலில் இடம்பெறும் பரதவர் சமூகத்தினிடையே காணப்படும் உட்சாதிப் பிரிவுகளின் வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் அதிகார உறவுகளின் பின்னணியில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பரதவர் சமூகத்தின் பொருளாதார அடித்தளமும் உட்சாதிப் படிநிலை உருவாக்கமும்

நெய்தல் திணை மக்களான பரதவர்களின் வாழ்வாதாரமும் பொருளாதார உற்பத்திக் களமும் கடலே ஆகும். அம்மக்களின் அடிப்படைத் தொழில்கள் மீன் பிடித்தல், சரக்குத் தோணிகளைக் கடலில் இயக்குதல், உப்பு விளைவித்தல், சங்கு மற்றும் முத்துக்குளித்தல் ஆகியவையாகும். மீன் விற்பனையின் மூலம் சந்தைப்படுத்துதலும் அதன் வழியாக வணிகமும் நடைபெற்று வந்தன. இதன் பொருட்டே “பண்டையச் சமூகத்தில் நெய்தல் திணையில் மட்டுமே கடற்பயணம், பண்டமாற்றம், சங்கு, முத்து, உப்பு முதலிய பொருட்களின் உற்பத்தியின் மூலம் வளமான விரிவான பொருளாதார ஏற்பட்டது என்கிறார் பக்தவத்சல பாரதி(அய்யாயிரம் ஆண்டுத் தமிழகம் பண்பாட்டு மானுடவியல் பார்வை;2025)

இவ்வாறு கடலை மையமாகக் கொண்ட உற்பத்தியும் வணிகமும் பரதவர் சமூகத்தின் அடித்தளமாக அமைந்த நிலையில் இவ்வுற்பத்தி சாதனங்களின் மீதான கட்டுப்பாடு தெற்கே ஆண்ட பல பேரரசுகளின் அதிகாரத்தின் கீழ் இருந்தன. இவர்களன்றி, “தமிழகத்தின் முத்துக் குளித்துறை என்று அழைக்கப்பட்ட ஏழு கடற்துறை ஊர்கள் கி.பி 8ம் நூற்றாண்டில் தமிழகம் புகுந்த அரேபியர்கள், அஞ்சு வண்ணம் எனும் வணிகக் குழுவின் மூலம் வணிக உறவுகளை வலுப்படுத்தியதோடு படிப்படியாக வளர்ந்து பரதவர்களின் கடல் வணிகப் பொருளாதாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தியதுடன், சங்கு எடுத்தல் மற்றும் முத்துக் குளித்தல் ஆகியவற்றையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இதனால் பரதவர்கள் ஒடுக்கப்பட்டு அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டன”(ச.டெக்லா;2012).

இப்பொருளாதாரச் சுரண்டலிலிருந்து விடுபடவும் தங்களது உரிமைகளைத் திரும்பப் பெறவும் விரும்பிய பரதவர்கள் 1498 ஆம் ஆண்டு அரேபியர்களைப் போன்று வணிகத்தின் பொருட்டு தமிழகம் வந்த மற்றொரு அந்நிய நாட்டவரான போர்ச்சுகீசியர்களிடம் உதவிக் கோரினர் . மதம் மாறினால் உதவுவதாக அவர்கள் கூறியதால் கி.பி 1536 ஆம் ஆண்டு பரதவர்கள் பெரும் குழுமமாக மதம் மாறினர்.

ஆனால் முன்னவர்களைப் போலவே “போர்ச்சுக்கீசியர்களும் தங்கள் நாட்டின் நலன் கருதியே செயல்பட்டனர். முத்துக்குளித்தலில் கிடைக்கும் வருவாயில் நாலில் ஒரு பங்கு போர்ச்சுக்கீசிய மன்னருக்கும் மற்றொரு பங்கு தூத்துக்குடியில் இருந்த போர்ச்சுக்கல் கேட்டனுக்கும் படை வீரர்களுக்கும் சென்றது. மீதமுள்ள ஒரு பங்கு மட்டுமே உழைக்கும் மக்களான பரதவர்களுக்குக் கிடைத்தது. மேலும் முத்துக்குளித்தலுக்கான உரிமையை வரையறுக்கப்பட்ட தொகைக்குப் பெரும் வணிகர்களுக்கும் பணக்காரர்களுக்கும் விற்றனர்”(ஆ. சிவசுப்பிரமணியன்; 2023). மேற்கூறிய வணிகர்களும் செல்வந்தர்களும் வெளிப்புற அதிகாரக் குழுவினராக அல்லாமல் பரவர்களுக்குள்ளயே இருந்தனர். பொருளாதார வளர்ச்சியும், இவர்களுக்கு அனுகூலமாக அமைந்த போர்ச்சுக்கீசியர்களின் செயல்பாடும் இவர்களை மேலும் வளம் படைத்தவர்களாக ஆக்கின. இதன் விளைவாகப் பொருளாதார அதிகாரத்தில் ஏற்பட்ட வேறுபாடுகள் பரதவர் சமூகத்திற்குள்ளேயே சமூக வேறுபாடுகளை உருவாக்கி மேசைக்காரர்கள், மெனக்கெடார்கள்,

கம்மாரக்காரர்கள் எனும் உட்சாதிப் பிரிவுகளின் உருவாக்கத்திற்கும் அவற்றுக்கிடையேயான முரண்பாடுகள் வலுப்பெறுவதற்கும் காரணமாக அமைந்தன.

கொற்கை நாவலில் பொருளாதார அதிகாரமும் உட்சாதி முரணும்

மேற்குறிப்பிட்ட வரலாற்றுப் பின்னணியை கூர்ந்து நோக்கின், பொருளாதார வளங்களின் மீதான மேலாண்மை பரதவர் சமூகத்தில் படிநிலையை உருவாக்கியுள்ளமை தெளிவு. அப்பிரிவுகளில் மேசைக்காரர்கள் குறித்த ஆய்வுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாய்வுகளில் மேசைக்காரர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலை குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர்களுக்கு அடுத்து பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைந்தவர்களாக மெனக்கெடார்கள் என்னும் கூட்டம் உருவாகின்றனர். இவர்களைப் பற்றிய தனித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மேசைக்காரர்கள் குறித்து வெளிவந்த ஆய்வுகளிலும் மெனக்கெடார்களின் சமூக தகுதி குறித்தோ அவர்கள் எவ்வாறு பொருளாதார வளங்களைக் கட்டுப்படுத்தி ஆதிக்கச் சக்திகளாக உருவெடுத்தனர் என்பது குறித்தோ விரிவான குறிப்புகள் இடம் பெறவில்லை.ஆனால் கொற்கை நாவலின் கதை நகர்வின் ஊடாக இவர்களின் வளர்ச்சி நிலைகளும், ஏனைய இரு பிரிவினருடன் எழும் முரண்பாடுகளும் பதிவாகியுள்ளன. இத்தரவுகளை ஆராய்வதற்கு முன் ‘மெனக்கெடார்’ என்ற பெயர் காரணத்தை புரிந்து கொள்வது அவசியம்.

ஜோ டி குரூஸ் அவர்கள் கொற்கை நாவலுக்கு முன் 2004 இல் எழுதிய ஆழி சூழ் உலகு என்னும் நாவலின் இறுதி பகுதியான வட்டார அகராதியில் ‘மெனக்கெடன்’ என்னும் சொல்லுக்கு “கடல் தொழில் செய்யாமல் இருப்பது” எனப் பொருள் கூறுகிறார். அதாவது கடல் தொழிலுக்குச் செல்லாமல் இருக்கும் விடுமுறை நாளை மெனக்கெடன் என வழங்கும் பழக்கம் பரதவர்களிடையே இருந்து வந்துள்ளது. அதோடு இவர்களில் யாராவது இறந்தாலும் அன்று விடுமுறை அறிவிக்கப்பட்டு கடல் தொழிலுக்குச் செல்வதில்லை. இந்நாவலில் ஊமையன் எனும் கதாபாத்திரம் இறந்து போக ஊர் முழுவதற்கும் மெனக்கெடன் அறிவிக்கப்படுகிறது.” நாள மெனக்கெடன்னு ஊர் புதா தம்புறு அடிச்சிச் சொல்லிரு”(ஆழி சூழ் உலகு; 2004,271)

இதன் அடிப்படையில் நோக்கும்பொழுது ஆரம்பத்தில் கம்மரக்காரர்களாக கடலில் தொழில் புரிந்தவர்கள் புதிய தொழில்நுட்பத்தின் பொருட்டும் கல்வி வளர்ச்சியின் காரணமாகவும் கப்பல்களில் முகவர்களாகவும் வணிக நிறுவனங்களிலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரசு பணிகளிலும் இடம்பெற்றுள்ளனர். இதனால் இவர்கள் கடல் தொழில்களிலிருந்து தங்களை முழுமையாக துண்டித்துக் கொண்டுள்ளனர். இங்கனம் கம்மரக்காரர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காக “மெனக்கெடார்கள்” எனும் பெயர் இவர்களாலோ அல்லது பிற பரதவர்களாலோ இடப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுள்ளது. எவ்வாறு வெள்ளையர்களைப் போன்று உணவருந்த மேசையைப் பயன்படுத்தியதால் மேசைக்காரர்கள் எனப் பிறரால் அழைக்கப்பட்டு அதுவே பின்னர் அவர்களுக்கான சமூக அடையாளமாக உருவானதோ, அதைப் போன்று இப்பெயரும் இவர்களுக்கான சமூக அடையாளமாக மாறியிருக்கலாம். இதனை உறுதிப்படுத்தும் வகையில் கொற்கை நாவலின் வட்டாரச் சொற்கள் -அகராதியில் ‘ மெனக்கெடார்’ என்ற சொல்லுக்கு “பரதவர்களில் படித்து வேலையிலிருப்பவர்கள் திடீர் பணக்காரர்கள்” எனப் பொருள் கூறப்படுகிறது. அடித்தள மக்கள் வரலாறு என்னும் நூலிலும் “தொழில்நுட்பம் கல்வி இதன் விளைவாக கம்மாரக்காரர்களில் ஒரு பிரிவினர்

கல்வியறிவு பெற்ற மத்தியதர வர்க்கமாகவும் தோணிகளுக்கு உரிமையாளர்களாகவும் ஆங்கிலேயர் நிறுவனங்களில் முகவர்களாகவும் தரகர்களாகவும் விளங்கினர்" என்கிறார் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள்(2023).

கொற்கை நாவல் 1914 ஆம் ஆண்டு சாதித் தலைமையான பாண்டியாபதியின் இறப்பிலிருந்து தொடங்குகிறது நாவலில் ரிபோராக்கள், கர்டோசா, மோத்தா, தல்மொய்தா ஆகியோர் வளம் படைத்த மேசைக்காரர்களாக காட்டப்படுகின்றனர். இவர்கள் இலங்கையிலும் கொற்கையிலும் வணிக நிறுவனங்களின் உடமையாளராகவும் அரசியலில் பலம் பொருந்தியவர்களாகவும் விளங்கினர்.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் புதிய தொழில்துறைகள் பெருகின. ரயில் போக்குவரத்திற்காக நிலக்கரி தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. 1915 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து அதிக அளவில் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது. நூல் தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன. இந்நிறுவனங்களின் பொறுப்பாளர்களாகவும் முகவர்களாகவும் உயர்பதவிகளிலும் மெனக்கெடார்கள் அமர்த்தபட்டனர். மேலும் உப்பு ஏற்றுமதி அதிகரித்ததன் காரணமாக உப்பளங்கள் உருவாகி உப்பு விளைவித்தலும், பெரும் தோணிகளுக்கு சொந்தக்காரர்களாகவும் விளங்கிய இவர்கள் வணிகர்களாகவும் அதே நேரத்தில் முதலாளிகளாகவும் உயர்ந்தனர். ஆகையால் பொருளாதாரத்தின் பல்வேறு நிலைகளிலும் மேசைக்காரர்களுக்கு போட்டியாகச் செயல்பட்டனர். இவர்களை அடுத்து கீழ் நிலையில் மீன்பிடித்தல், சங்கு மற்றும் முத்து குளித்தல், தோணிகளில் தண்டாலாகச் செல்லும் கம்மரக்காரர்கள் வைக்கப்பட்டனர்.

இப்படிநிலை பரதவர்களின் சமூகத்தில் பொதுவான சமூகப் படிநிலையாக இருப்பதை "பர்னாந்துமாருல மூணு வக கோட்டு சூட்டு போட்ட மேசைக்காரங்க படிச்சி வேலயளுக்கு போற மெனக்கெடமாரு இன்னும் தோணி, சங்குகுளி, மீன்பிடிக்கப் போற கம்மரக்காரங்க"(கொற்கை;2024, ப:45)

பொருளாதரத்தில் வளர்ச்சி அடைந்திருந்தாலும் மெனக்கெடார்கள் சமூகப் படிநிலையில் மேசைக்காரர்களுக்கு அடுத்த நிலையிலேயே வைத்து மதிக்கப்பட்டனர். இருப்பினும் சமூகத் தகுதியைப் பெறுவதற்காக மேசைக்காரர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்ள மெனக்கெடார்கள் விரும்பினர். ஆனால் மேசைக்காரர்கள் தங்களுக்குள்ளேயே திருமணவுறவு வைத்துக் கொள்ளும் அகமனக்குழுவாகத் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு பிற பிரிவினருக்கான வாய்ப்புகளை மறுத்தனர். இதனால் மேசைக்காரரான தல்மொய்தாவின் மகள் லிடியா திருமணம் ஆகாமல் கன்னிப் பெண்ணாகவே இறக்கும் நிலையை நாவலில் காணலாம். இத்தகைய கதவடைப்பை மெனக்கெடார்களும் கம்மரக்காரர்களுக்கும் செய்தனர். ஏனெனில் முதல் இருப்பிரிவனரும் கம்மரக்காரர்களையும் அவர்களது தொழிலையும் இழிவானதாக கருதினார். ஆனால் தொழிற் வளர்ச்சியின் காரணமாக இம்மக்களிலும் தோணிகளைச் சொந்தமாக் கொண்ட சிறு முதலாளிகள் தோன்றினர்.இருப்பினும் இவர்களை முதலாளிகளாக ஏற்றுக் கொள்ளவில்லை."நம்ம பத்துத் தோணி வச்சி தொழில் செஞ்சாலும் மேசைக்காரன்வ நம்ம பக்கம் திரும்பிப் பார்க்க மாட்டன்வ"(மேலது; ப:384).

ஆனால் காலகதியில் சாதித்தலைமைப் பதவி, வெள்ளையர்களின் சிவில் ஆட்சியாளும் முத்துக்குளித்தல் மீதான கட்டுப்பாடும் பின்னர் இத்தொழில் நிகழாததாலும் காணாமல் போனது. மேசைக்காரர்களும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து நலிந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையில் பொருளாதார

ஆதாயத்தை கருத்தில் கொண்டு மெனக்கெடார்களுக்கு எதிராக வசதி படைத்த கம்மரக்காரர்கள் உடன் திருமணவுறவு வைத்துக் கொண்டாலும் தங்களது சமூகத் தகுதியை விட்டுக் கொடுக்கவில்லை.

ஆரம்பத்தில் பொருளாதார உற்பத்தியாலும் உபரியின் அதிகரிப்பாலும் வருவாய் ஒரு குழுவினரிடம் மட்டுமே குவிந்ததால் ஒரே சாதியினுள் வர்க்கப் பிரிவுகள் தோன்றின. இப்பிரிவுகள் அகமணம், ஒதுக்குதல் முதலிய கருத்தியல்களாலும் தங்களது சாதி நலனை பேணுவதற்காக சாதிச் சங்கங்களை உருவாக்கியதாலும் இறுக்கமான சாதிக் குழுக்களாக மாறின. விளிம்புநிலை மக்களாக இருந்த கம்மரக்காரர்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்த பின்னரும் அவர்களது பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றம் சமூகப் படிநிலையில் அதற்குரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இதுவே சாதிப் படிநிலையின் வலிமையை வெளிப்படுத்துகிறது.

இச்சாதிப் படிநிலையால் உருவான முரண்பாடு 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற மாதா திருவிழாவின் போது தேரை யார் இழுப்பது என்பது தொடர்பாக நிகழ்ந்த சம்பவத்திலும் வெளிப்படுகிறது. “அது என்னவே ஒரே சாதிக்குள்ளேயே இப்படி ஏத்தம் ஏறக்கம் பாக்குறது பொண்ணு குடுக்காத எடுக்காத ஏன்னா நாங்க ஏழை எளியதுவ இவுரு போற தெருவுல நாங்க போவக் கூடாதாம் இவுங்கள்வ வுடுவ இருக்க எடங்கள்வ கலியாண ஊர்வலங்க வரக்கூடாதாம் மையங்கள கோயிலுக்கு எடுத்திற்று போவக் கூடாதாம்”(மேலது;ப460). இவ்வுரையாடல் வரிகள் ஒரே சாதி மற்றும் மதத்தைச் சேர்ந்தவர்களிடையேயும் தீண்டாமை, ஒதுக்குதல் மற்றும் சமூக அடக்குமுறை போன்ற நடைமுறைகள் நிலவியத்தை வெளிப்படுத்துகின்றன. பொதுவான சாதியமைப்பில் எண்ணிக்கைச் சிறுபான்மை ஆதிக்கச் சாதிகள் எண்ணிக்கையில் பெரும்பான்மையான அடித்த மக்களை ஒடுக்குவதற்கு பயன்படுத்திய மேற்கூறிய கருத்தியல்களையும் நடைமுறைகளையும் ஒரேச் சாதி பிரிவுனுள் உருவான உட்சாதிக்குழுக்களிடமும் மாறாமல் கடைபிடிக்கப்பட்டதே சாதியின் வெற்றியாகும்.

முடிவுரை

பரதவர் சமூகத்தின் பொருளாதார அடித்தளம் கடலை மையமாகக் கொண்ட தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ்வளங்களின் மீதான கட்டுப்பாடும் அவற்றின் மூலம் உருவான பொருளாதார வேறுபாடுகளும் அச்சமூகத்திற்குள் படிநிலைகளை உருவாக்கியுள்ளன. இதன் விளைவாக மேசைக்காரர்கள், மெனக்கெடார்கள், கம்மரக்காரர்கள் எனப் பொருளாதார மற்றும் சமூக நிலைகளின் அடிப்படையில் வேறுபட்ட பிரிவுகள் உருவாகியுள்ளன.

. கொற்கை நாவலின் பதிவுகளின் வழியாக நோக்கும் போது, பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் சமூகப் படிநிலையிலும் உடனடியான மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. என்பது புலப்படுகிறது. மெனக்கெடார்கள் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்து மேசைக்காரர்களுக்குப் போட்டியாக உயர்ந்த போதிலும் அவர்களுக்குரிய சமூகத் தகுதி முழுமையாக வழங்கப்படவில்லை. அதே போல் கம்மரக்காரர்களிடையேயும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் சமூகப் படிநிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட கீழ்நிலை மாறவில்லை. மேலும் திருமணவுறவு, சமூக ஒதுக்கல், தொழில் சார்ந்த உயர்வு- தாழ்வு, தீண்டாமை போன்ற கருத்தியல்கள் பொருளாதார வேறுபாடுகளுடன் இணைந்து செயல்பட்டுள்ளமை நாவலின் பதிவுகளின் வழியாகத் தெளிவாகிறது. பொருளதார நிலை மாறிய பின்னரும் சமூகத் தகுதி மற்றும் சாதியப் படிநிலை தொடர்ந்திருப்பது, பொருளாதார

வேறுபாடுகள் மட்டும் இப்பிரிவுகளின் தன்மையை விளக்கிவிட முடியாது என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு கொற்கை நாவல் பரதவர் சமூகத்திற்குள் பொருளாதார வளங்களின் பகிர்வு, அதிகாரம், சமூகப் படிநிலை மற்றும் உட்சாதி முரண்பாடுகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாகச் செயல்பட்ட விதத்தைப் பதிவு செய்கிறது.

அடிக்குறிப்பு

1)ஆ.சிவசுப்பிரமணியன், அடித்தள மக்கள் வரலாறு, ப.125

2)மேலது ப.126

3)மேலது ப.132

4)பக்தவத்சல பாரதி, அய்யாயிரம் ஆண்டுத் தமிழகம் பண்பாட்டு மானிடவியல் பார்வை, ப.85

5)ஜோ டி குரூஸ் , ஆழி சூழ் உலகு, ப.554

6)மேலது, ப.271

6)ஜோ டி குரூஸ் , கொற்கை, ப.1137

7)மேலது, ப.45

8)மேபது, ப. 384

9)மேலது, ப.460

10)சடெக்லா, முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், ப.4

11)மேலது, ப.15

துணை நூற்பட்டியல்

1)சிவசுப்பிரமணியன். ஆ. அடித்தள மக்கள் வரலாறு, நியூ செஞ்சரி புக் ஹவுஸ், நான்காம் பதிப்பு செப்டம்பர் 2023, சென்னை - 600 050

2)டெக்லா. ச. முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், இரண்டாம் பதிப்பு ஆகஸ்ட் 2012, சென்னை - 600 098

3)பக்தவத்சல பாரதி, அய்யாயிரம் ஆண்டு தமிழகம் பண்பாட்டு மானிடவியல் பார்வை, அடையாளம் பதிப்பகம் ,முதல் பதிப்பு 2025

4)ஜோ டி குருஸ் ஆர் .என், கொற்கை, காலச்சுவடு பதிப்பகம், பதினைந்தாம் பதிப்பு பிப்ரவரி 2024, நாகர்கோவில்.

5)ஜோ டி குருஸ் . ஆர் .என், ஆழி சூழ் உலகு தமிழினி, முதல் பதிப்பு நவம்பர் 2004.

© 2026 சுபா பா, முனைவர் . ஜென்ஸிஸ் குமார் மி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 169–176
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் பண்பாட்டுப் பதிவுகள்

Cultural Records in the Worship of Sadhu Chidambara Swamigal

தங்கத்துரை சொ[1,*], முனைவர் .இலக்குவன் இரா[2]

[1] பதிவு எண்-23211074021002 முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக்கல்லூரி,திருநெல்வேலி- 627 010. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இணைவு பெற்றது , திருநெல்வேலி- *627 012, India*

[2] உதவிப்பேராசிரியர், வெ.ப.சு.தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக்கல்லூரி,திருநெல்வேலி- 627 010 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இணைவு பெற்றது , திருநெல்வேலி- *627 012, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: தங்கத்துரை சொ — ctdurai85@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00028	

ஆய்வுச்சுருக்கம்

தமிழகத்தின் நாட்டுப்புற சமய மரபில் சித்தர் வழிபாடும், குரு வழிபாடும் முக்கிய இடம் பெறுகின்றன. தென் மாவட்டங்கள் மற்றும் சேலம், கோவை, ஈரோடு போன்ற சுற்றுவட்டாரப் பகுதிகளில் வழிபடப்படும் சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு மரபைப் பண்பாட்டு நோக்கில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். சாது சிதம்பர சுவாமிகள் ஒரு சமய சீர்திருத்தவாதியாகவும், மக்களின் துயர் துடைத்த ஞானகுருவாகவும் விளங்கியவர். அவரது வழிபாட்டில் அன்னதானம், சமத்துவம், சைவ நெறி, குரு பக்தி, இயற்கையோடு இயைந்த வாழ்வியல் போன்ற பண்பாட்டுக் கூறுகள் பொதிந்து கிடக்கின்றன. அவரது முன்னோர் வழிபாடு, மருத்துவம், அமாவாசை வழிபாடு, குருபூஜை வழிபாடு, தொண்டர் குல மக்களின் நேர்த்திக்கடன்கள் ஆகியவை தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன.

இவ்வாய்வு கள ஆய்வு மற்றும் நேர்காணல் முறையில் அமைகிறது. தொண்டர் குல மக்களிடம் பெறப்பட்ட வாய்மொழித் தகவல்கள், வழிபாட்டுத் தலங்களில் காணப்படும் நடைமுறைகள், பாடல்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவை முதன்மைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் வழி, சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாடு வெறும் சமய நிகழ்வாக மட்டுமின்றி, தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு, ஒழுக்கவியல், சமூக ஒற்றுமை ஆகியவற்றைப் பறைசாற்றும் ஒரு பண்பாட்டுப் பதிவாக விளங்குகிறது என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: சாது சிதம்பர சுவாமிகள்; முன்னோர் வழிபாடு; பசு; யானை வழிபாடு; மருத்துவம்; பண்பாடு.

Abstract

In the folk religious tradition of Tamil Nadu, Siddhar worship and Guru worship hold an

important place. The aim of this research is to examine from a cultural perspective, the worship tradition of Sadhu Chidambara Swamigal, who is widely worshipped in the southern districts and surrounding areas such as Salem, Coimbatore, Erode. Sadhu Chidambara Swamigal was a religious reformer and a Jnana Guru who alleviated the sufferings of the people. His worship embodies cultural elements such as Annadhanam (food offering), equality, Saiva principles, devotion to the Guru, and a life in harmony with nature. His ancestor worship, healing practices, Amavasya worship, Guru Pooja, and the votive offerings of the Thondar Kula People stand as cultural identities of the Tamils.

This research is based on fieldwork and interview methods. Oral information obtained from the people of the Thondar Kula, the practices observed at worship centers, songs, and methods of worship have been used as primary data. Through this, this article reveals that the worship of Sadhu Chidambara Swamigal is not merely a religious event, but a cultural record that proclaims the culture, ethics, and social unity of Tamil society.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: சொ, த., & இரா, மு. . (2026). சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் பண்பாட்டுப் பதிவுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 169–176. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8457

முன்னுரை

தமிழர் வாழ்வியல் என்பது இயற்கையோடும் இறைமையோடும் இணைந்த ஒரு பண்பாட்டு வெளிப்பாடாகும். உணவு, உடை, மருந்து, வழிபாடு என அனைத்திலும் தமிழரின் அறிவியல் பார்வையும் பண்பாட்டுக் கூறுகளும் பின்னிப் பிணைந்துள்ளன. சங்க இலக்கியங்கள் காட்டும் வேளாண் மரபும், சிறுதானிய உணவு முறையும்,மூலிகை மருத்துவ அறிவும் இன்றளவும் தொடரும் வாழும் மரபுகளாகும்.

அந்த வகையில் சுவாமிகளின் கொள்கையைப் பின்பற்றி வாழும் தொண்டர் குல மக்களால் போற்றி வழிபடப்படும் சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு மரபு, தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சியாக விளங்குகிறது. சுவாமிகளின் பண்பாட்டில் நிகழ்த்தப்படும் கூழ் பூஜை, கும்பம் ஏற்றுதல், ஜோதி வழிபாடு, முன்னோர் வழிபாடு, நினைவுச்சின்ன வழிபாடு, பிரசாதம் வழங்குதல் போன்ற ஒவ்வொரு நிகழ்வும் வெறும் சடங்காக மட்டுமின்றி, தமிழரின் உணவுப் பண்பாடு, மருத்துவப் பண்பாடு ஆகியவற்றின் பதிவுகளாக அமைந்துள்ளன. எனவே சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு நிகழ்வுகளைக் கள ஆய்வின் மூலம் அணுகி, அதில் பொதிந்துள்ள பண்பாட்டுப் பதிவுகளை ஆவணப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

சாது சிதம்பர சுவாமிகள்

தூத்துக்குடி மாவட்டம், திருநெல்வேலி - தூத்துக்குடி நெடுஞ்சாலையில், திருநெல்வேலியிலிருந்து 18 கி.மீ தொலைவில் உள்ள ஊர் வல்லநாடு. வல்லநாட்டில் இருந்து 1 கி.மீ. தூரத்தில்; பாறைக்காடு என்ற ஊர் அமைந்துள்ளது. சண்முக சாது என்ற நாட்டு மருத்துவருக்கும், உலகம்மையாருக்கும் மகனாய்ப் பிறந்தவர் சாது சிதம்பர சுவாமிகள் ஆவார். இவர் 1922 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இருபதாம் நாள், தீபாவளி அன்று பிறந்தவர். சிதம்பரம் இரண்டாம் வகுப்பு வரையே பள்ளிப்படிப்பு படித்துள்ளார். இவர் வள்ளலாரின் கொள்கையைப் பின்பற்றி வந்தார்.

பண்பாடு

பண்பாடு என்பது ஒரு இலக்கியக் கருப்பொருள். இதற்குப் பல நிலைகளில்

வரையறை உண்டு. ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. மற்றொரு நிலையில் மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள், கருவிகள் போன்றவை பண்பாட்டுக்குள் அடங்கும். **"பண்பாடு மனிதர்களுடைய மொழி, எண்ணங்கள், நம்பிக்கைகள், வழக்கங்கள், தடைகள், விதிமுறைகள், நிறுவன அமைப்புகள், கருவிகள், செயல்முறைகள், காலப்பொருட்கள், சடங்குகள், விழாக்கள், அடையாளச் சின்னங்கள் போன்ற எல்லா அம்சங்களும் கலந்திருக்கும் ஒரு கலவையாகும்."[1] (1998:115)**

முன்னோர் வழிபாடு

"வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்து தமது முன்னோர்களையும், தாய் தந்தையரையும் போற்றும் நோக்கில் மனிதன் அவர்களைத் தெய்வமாக வணங்கத் தொடங்கினான். அவர்கள் நன்மைகளைச் செய்து தம்மை காப்பதாகவும் நம்பினான். இதன் விளைவாகத் தோன்றியதே முன்னோர் வழிபாடு ஆகும். முன்னோர் வழிபாட்டிற்கு ஆவி பற்றிய நம்பிக்கையே அடிப்படை என்று கூறப்படுவதும் உண்டு."[2] (2007:120)

"பல குடும்பங்களில் முன்னோர்களை ஆண்டுக்கு ஒரு நாள் நினைத்து வழிபடுகின்றனர். அவர்கள் பயன்படுத்திய பொருள்களைப் பேணி வைத்திருந்து அவற்றுக்கும் தனி மதிப்புக் கொடுப்பது வழக்கமாக உள்ளது."[3] (1981:51) சாது சிதம்பர சுவாமிகளின் நினைவாலயத்தில், அவர்தம் சித்தப்பாவிற்கு சமாது வைக்கப்பட்டு, தொடர்ந்து வழிபாடு நடைபெற்று வருகிறது.

நாள்தோறும் நடைபெறும் நித்திய பூஜையில், காலை வேளையில்; கேழ்வரகு கூழும், நண்பகலில் சுத்த அன்னமும் நிவேதனமாகப் படைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் நடைபெறும் சுவாமிகளின் தாய், தந்தையார் குருபூஜை நாளன்று பால், பஞ்சாமிர்தம், சர்க்கரைப்பொங்கல் ஆகியவை படைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது. ஆனால் இவருக்கென்று தனியாகக் குருபூஜை விழா நடைபெறுவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கச் செய்தியாகும்.

யானை, பசு வழிபாடு

சாது சிதம்பர சுவாமிகளின் நவக்கிரக ஜோதி வழிபாடு, அமாவாசை வழிபாடு, குருபூஜை வழிபாடு, 108 மற்றும் 1008 ஜோதி வழிபாடு முதலிய வழிபாடுகள்;நடைபெறுகின்றன. இவ்வழிபாடுகளில் முதன்மையாக இடம் பெறுவது பசு வழிபாடு, யானை வழிபாடு ஆகும்.

முதலில் யானையை நீராட்டி, பன்னீர் தெளித்து, சந்தனம், குங்குமம் கொண்டு நான்கு பாதங்களிலும் வால் பகுதியிலும் திலகமிடப்படுகிறது. பின்னர் துண்டு, வேட்டி போன்ற ஆடைகள் அணிவிக்கப்பட்டு, 108 எலுமிச்சம் பழ மாலை, எருக்கம்பூ மாலை, அருகம்புல் மாலை, துளசி மாலை, பூ மாலை உள்ளிட்ட மாலைகள் சூட்டப்படுகின்றன. தொடர்ந்து வெண்பொங்கல், சர்க்கரைப்பொங்கல், அப்பம், பொரி, மோதகம், கடலை, கொழுக்கட்டை, அவல், வெல்லம், கற்கண்டு, கரும்பு, வாழைப்பழம் ஆகிய நிவேதனங்கள் யானைக்கு ஊட்டப்பட்டு, தீபம் ஏற்றி வலம் வருதலுடன் இவ்வழிபாடு நிறைவு பெறுகிறது. இத்தகைய நடைமுறை, மனிதனும் விலங்கும் இணைந்த பண்பாட்டு மரபையும், கணபதி வழிபாட்டின் தொன்மையான வழக்காற்றையும் பதிவு செய்யும் சிறந்த பண்பாட்டுப் பதிவாகத் திகழ்கிறது. இவ்வழிபாட்டு முறையே பசுக்கும் நடைபெறுகிறது.

நாக வழிபாடு

"பாம்புகளால் நிலம் வளம் பெறுகிறது என்றும், பாம்புகளை வழிபடுவதால் தங்கள் குடும்பத்தில் செல்வ வளம் பெருகி நிலைக்கும் என்றும் மக்களிடையே நம்பிக்கை நிலவுகிறது."[4](1981:59) அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் கோயில், குளக்கரை அல்லது அரச மரத்தடி போன்ற இடங்களில் பாம்பு வடிவம் செதுக்கப்பட்ட கற்கள் நடப்பட்டு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. நாகராஜாவைத் தெய்வமாக வழிபாடும் வழக்கம் காலம் காலமாகத் தொடர்ந்து வருகிறது.

இம்மரபின் தொடர்ச்சியாகவே சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு மரபில் நாக வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது. அதற்குச் சான்றாக, அருள் ஆனந்த செந்தில் விநாயகப் பெருமான் ஆலயத்தில் பாம்பு வடிவம் செதுக்கப்பட்ட கற்கள் காணப்படுகின்றன. இது மண்ணையும் மரபையும் மனித நம்பிக்கையையும் இணைக்கும் தொன்மையான பண்பாட்டுப் பதிவாகத் திகழ்கிறது.

காகம்

"வைதீகமாக உள்ளவர்கள் அல்லது ஆசாரங்களைக் கடைப்பிடிப்பவர்கள் தாங்கள் சாப்பிடுவதற்கு முன் காகத்துக்கு ஒரு வாய்ச் சோறு படைப்பார்கள். ஏதாவது ஒரு மேடைமீது சோற்றை வைத்துத் தெருதோறும் 'கா, கா' என்று உரத்த குரலில் அழைப்பவர்களும் உண்டு. காகத்துக்குச் சோறு இடுவது இறந்துபோன ஆன்மாக்களுக்கு மகிழ்ச்சி தரும் என்பர். காகம் சனி பகவானுடைய வாகனமாக இருப்பதால் குறிப்பாக, சனிக்கிழமைகளில் காகங்களுக்குச் சோறு படைக்கும் பழக்கம் பரவியிருக்கிறது."[5] (1981:58)

இத்தகைய தொன்மையான மரபின் தொடர்ச்சியாகவே சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டிலும் காகத்திற்கு உணவு வைக்கும் பழக்கம் காணப்படுகிறது. குறிப்பாக, பூச நட்சத்திர வழிபாடு, குருபூஜை வழிபாடு போன்ற வழிபாட்டு நாட்களில் மதிய பூஜையில் சுத்த அன்னம் படைக்கப்படுகிறது. அந்த அன்னத்தினைக் காகம் உண்பது மரபாகக் கருதப்படுகிறது.

காகத்திற்கு உணவிடுவது பித்ருக்களை மகிழ்விக்கும் செயலாகவும், சனிதோஷம் நீக்கும் பரிகாரமாகவும் நம்பப்படுகிறது. இது மனிதர் மட்டுமின்றி பிற உயிர்களோடும் உணவைப் பகிரும் தமிழரின் உயிர் இரக்கப் பண்பை வெளிப்படுத்துகிறது. இத்தகைய தொன்மையான மரபின் நீட்சியாகவே சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் அன்னம் காகத்திற்குப் படைக்கப்படுகிறது.

கருடன்

சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் மாதந்தோறும் அமாவாசை ஜோதி வழிபாடு நடைபெறுகிறது. அமாவாசை நாளன்று மாலை வேளையில் நடைபெறும் அமாவாசை ஜோதி வழிபாட்டின் போது கருடன் வட்டமிடுவது மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது. கருடன் விஷ்ணுவின் வாகனம். எந்த இடத்தையாவது கருடன் வட்டமிட்டால் அந்த இடம் புனிதமாகி விடுகிறது என்பது நம்பிக்கை. எனவே அமாவாசை ஜோதி வழிபாட்டு நேரத்தில் கருடன் தோன்றுவது சுவாமிகளின் அருளாசி கிடைத்ததற்கான அடையாளமாக தொண்டர் குல மக்களால் கருதப்படுகிறது.

மருத்துவம்

சித்த மருத்துவம் தமிழர் பெற்ற அரிய மருத்துவச் செல்வமாகும். இம்முறையைத் தோற்றுவித்த சித்தர்கள் அட்டமா சித்திகள் கைவரப்பெற்றவர்களாகவும்,

இறையருள் பெற்ற ஞானிகளாகவும் வரையறுக்கப்படுகின்றனர்.

இம்மரபின் நீட்சியாக சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு முறையிலும் மருத்துவக் கூறு உள்ளடங்கியுள்ளது. குறிப்பாக, நீர், அருகம்புல், துளசி ஆகியன கலந்த தீர்த்தம் வழிபாட்டில் முதன்மைப்படுத்தப்படுகிறது. இத்தீர்த்தத்தின் வழி பல்வேறு நோய்கள் குணமானதாகக் கள ஆய்வில் தொண்டர்குல மக்கள் தெரிவிக்கின்றனர். துளசி, அருகம்புல் போன்ற மூலிகைகளைத் தீர்த்தமாக்கி வழங்குவதன் மூலம் தமிழரின் பாரம்பரிய மருத்துவ அறிவு இன்றும் சுவாமியின் வழிபாட்டின் வழி உயிர்ப்புடன் பேணப்படுகிறது என்பது புலனாகிறது.

நினைவுச் சின்ன வழிபாடு

ஒற்றைக்கொம்பு யானையின் சிரசு

தமிழர் பண்பாட்டில் இறந்த முன்னோர்கள், தியாகிகள், தெய்வீகத் தன்மை பொருந்திய விலங்குகள் ஆகியவற்றின் நினைவாக அவற்றின் எச்சங்களையோ, அடையாளங்களையோ வைத்து வழிபடும் மரபு நெடுங்காலமாக உள்ளது. இது நடுகல் வழிபாட்டின் நீட்சியாகும்.

சதுரகிரியில் எழுந்தருளியுள்ள சுந்தர மகாலிங்கத்திற்கு 'ஒற்றைக்கொம்பு' என்னும் யானை 1900-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டு வரை தன் இறுதிக் காலம் வரை பூசை செய்து வந்ததாகச் செவிவழிச் செய்தி நிலவுகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அங்குக் கல்வெட்டும், ஒற்றைக்கொம்பு யானை பூஜை செய்யும் ஓவியமும் காணப்படுகின்றன. அந்த யானை உயிர் துறந்த பின்னர், அதன் இடது தந்தத்தைப் பக்தர்களின் தரிசனத்திற்காக 24.08.1971 அன்று சாது சிதம்பர சுவாமிகள் பிரதிஸ்டை செய்தார். பின்னர் ஒற்றைக்கொம்பு யானையின் சிரசு தூத்துக்குடி மாவட்டம் பாறைக்காடு அருள் ஆறுதல் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. தினமும் காலை பூசையில் கேழ்வரகு கூழும், மதிய பூசையில் சுத்த அன்னமும் படைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது.

இவ்வாறு இறைப்பணி புரிந்த உயிரைத் தெய்வமாக மதித்து, அதன் உடல் எச்சத்தைப் பாதுகாத்து வழிபடுவது தமிழரின் நன்றியுணர்வு சார்ந்த பண்பாட்டு மரபாகும். இதுமட்டுமின்றி சுவாமிகள் யானைக்கு கேழ்வரகுக் கூழ் படைப்பது சித்தர் மரபின் எளிய உணவு முறையையும், மனிதன்-விலங்கு இடையிலான பிணைப்பையும் வெளிப்படுத்துகிறது.

மணிகண்டன் யானையின் தந்தம்

சங்க காலத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டனர். குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுதலையும், கான் பொருள் சேகரித்தலையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். குறிஞ்சி நிலக் கடவுளான முருகப் பெருமானின் வழிபாட்டில் யானையின் தந்தங்களுக்குத் தனி இடம் இருந்துள்ளது. சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையில் (வரி219-222), குன்றகப் பெண்டிர் வெறியாட்டு வழிபாட்டின் போது, வேட்டையாடிப் பெற்ற பெரிய யானையின் தந்தங்களைக் களத்தில் நட்டு, அவற்றின் மீது பூமாலைகளைத் தொங்கவிட்டு, மலர் தூவி, நறுமணப் புகை காட்டி வழிபட்ட செய்தி குறிப்பிடப்படுகிறது.

வெ. சங்கரபாண்டியன் எழுதிய வல்லநாட்டுச் சித்தர் சாது சிதம்பர சுவாமிகள் வரலாறு என்ற நூலில், சாது சிதம்பர சுவாமிகள் தமது வழிபாட்டுத் தேவைக்காகத் தொண்டர்குல மக்கள் மூலம் கேரளாவிலிருந்து யானை ஒன்றை வாங்கி வளர்த்ததாகவும், அதற்கு 'மணிகண்டன்' எனப் பெயரிட்டு அழைத்ததாகவும்

குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது. சுவாமிகளின் தலைமையில் நடைபெறும் அனைத்து வழிபாட்டிலும் மணிகண்டன் யானை கலந்து கொள்வது வழக்கமாகும். பின்னர் மணிகண்டன் யானை வயது முதிர்ந்த காரணத்தால் புரட்டாசி மாதம் 10-ஆம் தேதி, உத்திரட்டாதி நட்சத்திரத்தன்று காலமானது. மணிகண்டனுக்குச் சாது சிதம்பர சுவாமிகளின் சமாதுக்கு எதிரே தொண்டர்குல மக்களால் சமாது வைக்கப்பட்டுள்ளது. பின்னர் மணிகண்டனின் இரண்டு தந்தங்களை எடுத்து அருள் ஆனந்த செந்தில் விநாயகப் பெருமான் ஆலயத்தில் வைத்துத் தினமும் பூஜை நடைபெற்று வருகிறது.

சங்க காலத்தில் வழிபாட்டுக் களத்தில் தந்தத்தை நட்டு வழிபட்ட மரபு, இன்று வல்லநாட்டில் தந்தத்தையே நினைவுச் சின்னமாகப் பிரதிஸ்டை செய்து வழிபடும் மரபாகத் தொடர்கிறது.

உடை

உடையை ஆடை, உடுப்பு என்கிறோம். ஆடை என்னும் தமிழ்ச்சொல்லுக்கு இலை என்னும் பொருள் உண்டு. இது அடகு அல்லது அடை என்ற சொல்லிலிருந்து தோன்றியது எனலாம். “இலை தழைகள், மரவுரியால் ஆன உடைகளைப் பழங்காலத்தில் உடுத்தியுள்ளனர். ‘தழையும் தாரும்’ தந்து தலைவன் தலைவியைக் களவு மணம் புரிந்த வழக்கத்தைச் சங்க அகப்பாடல் சுட்டுகிறது.” தமிழர்களின் பண்பாட்டு மரபில் உடையின் பங்களிப்பு அளப்பரியது.

இம்மரபின் தொடர்ச்சியாக, சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு மரபில் தொண்டர்குல மக்கள் இன்றும் வெள்ளை மற்றும் பச்சை நிற ஆடையை அணிந்து வழிபாட்டினை நிகழ்த்துகின்றனர். இதில் வெள்ளை நிறம் தூய்மையையும், பச்சை நிறம் இயற்கையோடும் வாழ்வோடும் இணைந்த வளமையையும் குறிக்கிறது.

கோயிலை அலங்கரித்தல்

தமிழர் வழிபாட்டு மரபில் கோயிலை அலங்கரித்தல் என்பது வெறும் அழகுபடுத்துதல் அன்று, அது ஒரு பண்பாட்டுச் சடங்கு. சாது சிதம்பர சுவாமிகளின் பூச நட்சத்திரம், குருபூஜை விழாவிற்கு ஒரு நாள் முன்பே, அருள் ஆறுதல் இல்லம், சுவாமிகளின் நினைவாலயம் மற்றும் அருள் ஆனந்த செந்தில் விநாயகப் பெருமான் ஆலயம் ஆகியவை தொண்டர் குல மக்களால் தூய்மைப்படுத்தப்படுகின்றன. பின்னர் கோயிலின் முன்பாக தென்னங்கீற்றுகளால் பந்தல் அமைத்தல், வாழை மரங்கள் கட்டுதல், பச்சை இலைதழைகளைக் கொண்டு சுற்றித் தடுப்பு அமைத்தல் மற்றும் தோரணம் கட்டுதல் போன்றவை முக்கிய இடம்பெறுகின்றன.

இங்கு பயன்படுத்;தப்படும் தென்னங்கீற்று, வாழை, பச்சை இலைதழைகள் அனைத்தும் தமிழரின் இயற்கையோடு இயைந்த பண்பாட்டைக் காட்டுகின்றன. சாது சிதம்பர சுவாமிகள் வலியுறுத்திய இயற்கை சார்ந்த எளிய வாழ்வியல் நெறியின்படி, செயற்கை அலங்காரங்களைத் தவிர்த்து, இயற்கைப் பொருட்களால் இறைவனை வரவேற்பதே தொண்டர்குல மக்களின் தனிச்சிறப்பாகும்.

நெல்

தமிழர் பண்பாட்டில் நெல் என்பது வெறும் உணவுப் பயிர் மட்டுமன்று, அது வாழ்வின் அடையாளம். நெல் நன்செய் நிலத்தில் பயிர் செய்யப்படுகிறது. உணவுப் பயிர்களில் முதன்மையானதாகவும், உணவுப் பற்றாக்குறையைப் போக்கக் கூடிய தானியமாகவும் விளங்குகிறது. நெல் பொங்கும் பெரும்பயிர் என்பதைச் சங்க

இலக்கியங்களும் தொல்காப்பியமும் எடுத்துக்காட்டுகின்றன. **'எல்லாப் பயிரானாலும் நெல்லுப்பயிர் செய்', 'உழுபுலத்தில் நெல் விதை'** போன்ற நாட்டுப்புறப் பழமொழிகள், நெல் பயிரின் இன்றியமையாமையை உணர்த்துகின்றன.

சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் நெல் புனிதப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. நவக்கிரக ஜோதி வழிபாடு, அமாவாசை ஜோதி வழிபாடு, குருபூஜை ஜோதி வழிபாடு போன்ற அனைத்து வழிபாடுகளிலும் கும்பம் ஏற்றப்படுகிறது. கும்பம் ஏற்றும்போது ஒரு வாழை இலையை விரித்து, அதன் மேல் நெல் குவிக்கப்பட்டு, அதன் மீது கும்பம் வைக்கப்படுகிறது. வாழை இலை மீது நெல் குவித்து கும்பம் வைப்பது வளமையைக் குறிக்கும் செயலாகும். இது சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டு முறைகளில் சிறப்பாக பின்பற்றப்படுகிறது.

கேழ்வரகு

தமிழர்களுக்கு அடிப்படை உணவாக கேழ்வரகு இருந்துள்ளது. கேழ்வரகில் அதிகமான சத்துக்கள் இருப்பதை உணர்ந்த முன்னோர்கள் அதை விரும்பி உண்டுள்ளனர். கேழ்வரகில் மிகுந்த மருத்துவக் குணங்கள் உள்ளன. இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவையும் மூட்டுவலியையும் குறைக்கிறது. கேழ்வரகுக் கூழைக் குடிப்பதால் உடலுக்குக் குளிர்ச்சி ஏற்படுவதுடன், நீண்ட நேரம் பசி தாங்கும் ஆற்றலும் கிடைக்கிறது. இந்த உணவுப் பண்பாட்டின் தொடச்சியாக, சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாட்டில் காலை வேளையில் கேழ்வரகுக் கூழ் பூஜை சிறப்பாக நடைபெறுகிறது. கேழ்வரகில் கூழ் காய்ச்சி ஜோதிக்குப் படைத்து, பின்னர் அது தொண்டர்குல மக்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

மஞ்சள் கிழங்கு

மஞ்சள் கிழங்கு நெருக்கமாக மண்ணுள் வளரக்கூடியது. மஞ்சள் உணவுக்கான துணைப்பொருளாகவும் மருந்துக்கான மூலப்பொருளாகவும் பயன்படுகிறது. சங்க காலம் முதல் தற்காலம் வரை மஞ்சள் பயன்பாடு இருந்து வருகிறது. சங்ககாலத்தில் இஞ்சியும் மஞ்சளும் சேம்பும் கூட்டுப்பயிராக வளர்ந்து வந்துள்ளன என்பதை **"சேம்பு மஞ்சளும் ஓம்பினர்" (கலி:3441)** என்ற அடி எடுத்துக்காட்டுகிறது.

"மஞ்சள் ஆரோக்கியம் தொடர்பான ஒரு பொருளாகவே தமிழர் வாழ்வில் முன்பு இருந்துள்ளது. கிருமி எதிர்ப்புச் சக்தி, மஞ்சளில் உள்ளதாக நம்பப்படுகிறது."[6] **(2022:101)** சுவாமிகளின் வழிபாட்டில் மஞ்சள் படைக்கும் வழக்கமும் உண்டு. கும்பம் ஏற்றும்போது கும்பத்திற்குள் மஞ்சள் போடப்படுகிறது. மேலும் அமாவாசை ஜோதி, குருபூஜை ஜோதி வழிபாடுகளில் மஞ்சள் கலந்து நீரால் ஜோதிஸ்தம்பங்கள் அபிஷேகம் செய்யப்படுகிறது. தொண்டர் குல மக்களுக்கு மஞ்சள் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

முடிவுரை:

சாது சிதம்பர சுவாமிகள் வழிபாடு என்பது வெறும் வழிபாட்டு முறை மட்டுமன்று, அது தமிழர் பண்பாட்டின் தொகுப்பாகும். இவ்வழிபாடு சங்க காலம் முதல் இருந்து வரும் முன்னோர் வழிபாடு மற்றும் நடுகல் எனும் நினைவுச் சின்ன வழிபாட்டின் தொடர்ச்சியாக விளங்குகிறது. யானை, பசு, நாகம், கருடன் போன்ற உயிர்களையும் மதிக்கும் தமிழரின் உயிர் நேயத்தைக் காட்டுகிறது. காலையில் நடைபெறும் கூழ் பூஜை, கேழ்வரகு போன்ற சிறுதானிய உணவு மரபை பாதுகாக்கிறது. கும்பத்தில் மஞ்சள் கிழங்கு இடுதல், மஞ்சள் நீர் அபிஷேகம் ஆகியவை மஞ்சளின் மருத்துவக்

குணத்தைப் போற்றும் மருத்துவப் பண்பாடு ஆகும். வாழை இலையில் நெல்பரப்பி கும்பம் ஏற்றுவது வேளாண் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கிறது. உணவே மருந்து என்ற தமிழரின் அறிவியல் பார்வை இவ்வழிபாட்டில் தெய்வீக மரபாக மாறியுள்ளது.

நவீன காலப்போக்கில் மறைந்து வரும் தொன்மையான மரபுகள் பலவற்றை, சாது சிதம்பர சுவாமிகளின் வழிபாடு தன்னகத்தே தாங்கி உயிர்ப்புடன் பாதுகாத்து வருகிறது. எனவே, இவ்வழிபாடு காலத்தால் அழியாத வாழும் பண்பாட்டுப் பெட்டகமாகத் திகழ்கிறது என்பது இவ்வாய்வின் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

அடிக்குறிப்பு

1.சௌந்திரராஜன்.கே.வி, இந்தியப் பண்பாடு, 1998, ப.115

2.முத்தையா.ஓ. பண்பாட்டுப் பதிவுகள், 2007, ப.120

3.சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், 1981, ப.51

4.மேலது, ப.59

5.மேலது, ப.58

6.பரமசிவன்.தொ, பரண், சென்னை:ரிதம் வெளியீடு, 2022, ப.101

துணைநூற்பட்டியல்

1.சங்கரபாண்டியன்.வெ, வல்லநாட்டுச்சித்தர் சாது சிதம்பரசுவாமிகள் வரலாறு, சென்னை: மேடைமணி பதிப்பகம், 2010.

2.சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், புது தில்லி: நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, 1981.

3.சௌந்திரராஜன்.கே.வி, இந்தியப் பண்பாடு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 1998.

4.பரமசிவன்.தொ, பரண், சென்னை:ரிதம் வெளியீடு, 2022

5.முத்தையா.ஓ. பண்பாட்டுப் பதிவுகள், சென்னை:காவ்யா பதிப்பகம், 2007.

6.வையாபுரிப்பிள்ளை.எஸ்., தமிழர் பண்பாடு, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்,1958

Reference

1. Sankarapandiyan.V., Vallanaattu Chithar Saadhu Sithampara Swamigal Varalaru, Chennai: Medaimani Pathippagam, 2010.
2. Somale, Tamilnaattu Makkalin Marabum Panpaadum, Puthu Delhi: National Book Trust India, 1981.
3. Soundararajan.K.V., Indhiyap Panpaadu, Chennai: Manivasagar Pathippagam, 1998.
4. Paramasivan.T., paran, Chennai: Rhythm Veliyeedu, 2022.
5. Muthaiya.O., Panpaattup Pathivugal, Chennai: Kavya Pathippagam, 2007.
6. Vaiyapuri Pillai.S., Tamizhar Panpaadu, Chennai: Tamil Puthakalayam, 1958.

© 2026 தங்கத்துரை சொ, முனைவர் .இலக்குவன் இரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 177–183
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

பாமாவின் படைப்புகளில் தலித்திய மொழி

ஷகிலாலோகநாயகி க[1,*], முனைவர் . நித்தியகல்யாணி சு[2]

[1] முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் பதிவு எண் : 19211204022021 தமிழ்த்துறை ஆய்வுமையம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி இணைவுபெற்றது., *India*

[2] உதவிப்பேராசிரியர் (சுயநிதிப்பிரிவு) தமிழ்த்துறை ஆய்வுமையம், ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி இணைவுபெற்றது., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: ஷகிலாலோகநாயகி க — kslogaumi@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00027	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

எல்லா ஊடகங்களையும் விட மொழியானது மனிதனின் அன்றாட வாழ்க்கையில் முதன்மையான ஒன்றாக இருக்கிறது. மொழி என்பது, ஒருவர் அறிந்துள்ள வார்த்தைகளைத் தான் வாழும் இடச்சூழலுக்கேற்ப பிறருடன் பகிர்ந்து கொள்வது என்பதாகும். தமிழ் இலக்கிய மொழி நடையில் தலித் இலக்கிய வரவால், புதியதாய் ஒரு வடிவம் தோன்றியுள்ளது. தலித் இலக்கியம் என்பதே எதிர்ப்பிலக்கியம் என்று கூறப்படுகிறது. ஒரு படைப்பிற்கு இலக்கியத்தகுதி வழங்குவதில்
மொழிநடை இன்றியமையாப் பங்காற்றுகிறது. இன்று தலித் இலக்கியங்கள் தங்களுக்கென்று புதிய மொழிநடையை உருவாக்கிக் கொண்டுள்ளது. எளிமையும், சுவையும், தெளிவும், சுருக்கமும் ஒருங்கே காணப்பட்டு எல்லாருக்கும் புரியும் வகையில் அமையும் நடையே சிறப்பான நடையாகும். ஒரு படைப்பாளனின் தனித்தன்மையைக் காட்டுவது அவனது படைப்பின் மொழி நடையேயாகும். இத்தகைய இயல்பின்படி சமகால படைப்பாளர் பாமா, தன்னுடைய படைப்புக்களில் கையாளும் மொழிநடையைக் குறித்து இக்கட்டுரையில் ஆராயமுடிகின்றது.

Keywords / திறவுச்சொற்கள்: தலித் இலக்கியம்; எதிர்ப்பிலக்கியம்; படைப்பு மொழி

How to cite / மேற்கோள் காட்டும் முறை: க, ஷ., & சு, மு. . நி. (2026). பாமாவின் படைப்புகளில் தலித்திய மொழி. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 177–183. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8459

முன்னுரை

ஒரு படைப்புக்குரிய மொழி நடையானது வாசகர்களுக்கு எளியமுறையில் சென்று சேர்வதாக இருக்க வேண்டும். இலக்கியத்தில் சொற்கள் பயணிக்கின்ற முறையையே மொழிநடை என்கிறோம். மனிதன் வாழும் வாழ்க்கை முறை, அவன் வாழுகின்ற

நிலத்தியல்பு, தட்பவெப்ப, இயற்கைச் சூழலுக்கேற்ப அமையும் மொழியும், சூழலுக்கேற்ற குறியீடுகளை உள்ளடக்கிய சொற்கள் ஆகியவை மூலமும், செய்யும் தொழிலை ஒட்டியும், பயன்படுத்தும் பொருட்களை ஒட்டியும் மொழிநடை அமையும். அவ்வாறு அமைகின்ற மொழிநடையானது படைப்பாளர் பாமாவின் படைப்புகளில் தலித்திய மொழிநடையாக எவ்வாறு அமைந்தது என்பதை விளக்கமாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மொழிநடை விளக்கம்

ஒரு படைப்பிற்கு இலக்கியத் தகுதி வழங்குவதில் "மொழிநடை" என்பது இன்றியமையாத பங்காற்றுகிறது. நடை என்பதற்கு ஆங்கில அகராதி "ளுவலடந" என்ற சொல்லைத் தருகிறது. "ஓர் ஆசிரியனின் இயல்பையும், சமுதாயப் பார்வையினையும் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அவனை அடையாளம் கண்டுகொள்ளும் வகையில் அமையும் மொழிப்புலப்பாட்டுப் பாங்கே நடை ஆகும்"1 என்று குறிப்பிடுகிறார். மேலும் ஒவ்வொரு சாதியும் தனக்கென ஒரு மொழிநடையை உருவாக்கி வைத்திருக்கிறது. மொழி என்பது அனுபவங்களில் இருந்து உருவாகி வரவேண்டும்.

மொழி குறித்து மொழி நூலாரின் கருத்துக்கள்

மொழி என்பது உலக மாந்தர் அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகும். தமது உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளியிட வேண்டுமென்ற துடிப்பும், பிறர் உணர்வுகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் ஆகிய இவற்றின் அடிப்படையில்தான் மொழி தோன்றியிருக்க வேண்டும். இத்தகைய மொழியைப் பற்றிய மொழி நூலாரின் கருத்துக்களை அறிவது அவசியமாகின்றது.

மு.வரதராசன்

"மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை: அந்த மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது"2 என்று அறிவை வளர்த்து அறியாமையைப் போக்கும் கருவியாக மொழி விளங்குகிறது என்று மொழிநூல் அறிஞர் மு.வ.கூறுகிறார்.

மேலும் **"சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக உள்ள மொழி அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது. சமுதாயத்தால் வளர்ந்து சமுதாயத்தை வளர்த்து வருகிறது"3** சமுதாயத்தையும் வளர்த்து தன்னையும் வளர்த்துக் கொள்ளும் தன்மையுடையதாக மொழி இருப்பது குறித்துக் கூறுகிறார்.

ஞா.தேவநேயன்

"மொழியாவது மக்கள்தம் கருத்தை ஒருவருக்கொருவர் வெளியிடுவதற்குக் கருவியாகும் ஒலித்தொகுதி"4 கருவியாகவும் அதேபோல் பல்வேறு குறிப்புகளைப் பகிர்ந்தளிக்கும் ஒலியின் கூட்டமாகவும் உள்ளதாகத் தேவநேயன் கூறுகிறார்.

பொன்.கோதண்டராமன்

"மொழி பொதுவாகக் கருத்து வெளிப்பாட்டிற்குரிய ஒரு கருவி என்று கூறுவார்கள். மொழி கருத்து வெளிப்பாட்டிற்கு மட்டும் உரிய கருவியல்ல. உணர்ச்சி வெளிப்பாட்டிற்குரிய கருவியுமாகும்"5 என்றும் மொழியானது கருத்தை வெளிப்படுத்துவதோடு, உணர்ச்சிகளை வெளிக் கொண்டுவர உதவுவதாகவும் கூறுகிறார்.

இவ்வாறு மொழிநூலாரின் பார்வையில் மொழியானது, கருத்துக்களை வெளிப்படுத்தவும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் மாந்தர்களிடையே ஒரு சாதனமாகப் பயன்பட்டு வந்திருப்பதை அறிய முடிகிறது.

மொழி பற்றிய சிந்தனை

அடிப்படையில் மொழி ஒரு தொடர்பு ஊடகம் என்று வரையறுக்கப்படுகின்றது. எந்தவொரு மனிதரும் சமூகத்தில் தனித்து வாழ்ந்திட முடியாது. ஒவ்வொரு மனிதரும் பிற மனிதரோடு ஏதாவது ஒரு தேவையின் பொருட்டுச் சேர்ந்து வாழ வேண்டிய அவசியம் இருக்கிறது. அதன் பொருட்டே மொழிதல் நிகழ்கிறது. ஆகவே, மொழிதல் எனும் நிகழ்வினைக்கு மனிதர்கள்தான் காரணமாக அமைகிறார்கள். இந்நிலையில் **“தன்னைச் சார்ந்த சமுதாயத்துடன் உறவாட, தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள, தன் சமுதாயத்துடன் தன்னைப் பிணைத்துக்கொண்டு, ஒரே சமூகமாக இயங்கத் துணையாகும் கருவியாக மொழி அமைகிறது”6** என்று சூ.இன்னாசி குறிப்பிடுவதாக, மகாராசன் கூறுகிறார்.

மேலும் “சமூகமாக, குழுக்களாக, கூட்டமாக வாழும் மனிதஇனத்தின் நிலை, முன்னேற்றம், வரலாறு, பண்பாடு, வாழ்வியல், சமுதாயநிலை, பொருளாதாரநிலை, சமய நிலை, நம்பிக்கைகள் போன்ற பலவற்றை அவர்கள் பயன்படுத்தும் மொழி பதிவு செய்து வெளிப்படுத்துகின்றது” என்று அன்னிதாமசு குறிப்பிடுவதாக மகாராசன் கூறுகிறார்.

இதனால் ஒரு குழு அல்லது சமூகத்திற்கும் மொழிக்கும் உள்ள மிக நெருக்கமான தொடர்பும் உறவும் நுட்பமான தன்மையில் அமைந்திருக்கின்றன. அதோடு குழுப்பேச்சு நிகழ்வாக மட்டுமே மொழிதல் அமைவதில்லை. அம்மொழிதல் நிகழ்வு ஒரு சமூகச் செயலாகவும் அமைகின்றது.

மொழியும் பண்பாடும்

நம் எண்ணங்களை, உணர்வுகளை தேவைகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கு மொழியானது பயன்படுகிறது. ஆயினும் ஒரு குறிப்பிட்ட சமூக, அரசியல் சூழலில் மொழி இதற்குமேல் பல பரிமாணங்களைப் பெற்று, அது ஒரு பண்பாட்டு அரசியல் ஆயுதமாக மாறி விடுகின்றது. அதிகாரத்தின் சின்னமாகவும் அடிமைத்தனத்தின் வெளிப்பாடாகவும் ஆகிவிடுகின்றது. மொழி, பண்பாட்டின் ஒரு அம்சமாக இருக்கும் அதேவேளையில் பண்பாட்டின் ஊடகமாகவும் உள்ளது. அதாவது ஒருமொழிச் சமூகத்தினரின் பண்பாடு அவர்களின் மொழியில் பிரதிபலிக்கின்றது அல்லது வெளிப்படுகின்றது. அவ்வகையில் மொழியையும் பண்பாட்டையும் பிரிக்க முடியாது.

“எந்த மொழியுமே அழகானதுதான். அது அழகாயிருப்பதற்குக் காரணம், அது மனித மனதைப் பிரதிபலிப்பதால்தான். சமுதாய வாழ்வின் ஒரு முக்கியப் பகுதி மொழி. எனவே எல்லாப் பேச்சுமொழிகளும் இலக்கியத்தின் ஒரு பகுதியே. பயன்படுத்தப்பட்ட மொழிதான் இலக்கியத்தின் தனிப்பட்ட மொழி என்பது உண்மையல்ல. சமூகம் மொழிகளாலும் சாதிகளாலும் பிரிக்கப் பட்டிருக்கிறது ஒவ்வொரு பகுதிக்கும் தனிப்பட்ட அனுபவங்கள் இருக்கின்றன. அவை வரவேற்கப்பட வேண்டியவையே”7 என்று ஊர்மிளா பவார் கூறுகிறார். எனவே மொழியானது ஒரு சமூகத்தையும், அதன் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் கருவியாக விளங்குகிறது என்று கூறலாம்.

சாதிக்கேற்ற மொழி

“ஒரு குறிப்பிட்ட சாதியினர் தங்களுக்குள் இருக்கக்கூடிய சாதிய அடக்குமுறையை, ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக மொழியின் தன்மை அமைந்திருக்கிறது. உயர் சாதிக்காரர்கள் தாழ்த்தப்பட்டவர்களை அவமானப்படுத்துவதாக மொழிநடை அமைந்துள்ளது. இத்தகைய மொழிநடை சாதிய மொழிநடை என்பதாகும்”8 என்று கூறப்பட்டுள்ளது.

சாமி, அய்யா, ஆண்டே, நாச்சியா, நைனா என அழைக்கும் ஒரு தலித்தின் குரல் ஒலிப்புமுறை தலித் என அடையாளம் காட்டும். சாதிக்கேற்ற மொழி கையாளப்பட்டிருப்பதை இங்கு நாம் நினைத்துப் பார்க்கமுடிகிறது. திறந்த வெளியில் உழைக்கும் இவர்களது உச்சரிப்பில் இழுவைத் தன்மையும், ஒலிப்பு முறையில் உரத்த தன்மையும் வெளிப்படுத்துவது இயல்பாகிறது.

தலித் மக்களுக்கான மொழிநடை, தனித்த தன்மை உடையது. பேச்சு வழக்கு மொழியை ஆதாரமாகக் கொண்டே படைப்புக்களில் பாத்திரங்களின் மொழிநடை அமைந்துள்ளது. திறந்த வெளிகளில் வாழ்க்கைச் சூழல் இருப்பதனால், இயல்பாக உரத்து ஒலிக்கும் குரல் வளத்தினைத் தலித் மக்கள் பெற்றுள்ளனர். பல நேரங்களில் மேலாதிக்கச் சாதியினரின் அதிகாரங்களுக்குப் பயந்தும, பணிந்தும் வாழ வேண்டியிருப்பதால், இவர்களின் உடல்களும் குரல்களும் ஒடுங்கி ஒலிக்கும் இயல்புடையவைகளாகின்றன.

தலித்திய மொழிநடை

இன்றைய இலக்கியங்களில் பேச்சு மொழிநடையின்றி, இலக்கிய மொழிநடை படைக்கப் பட்டு வருகின்றன. இதனைத் தகர்ப்பது தான் தலித்திய மொழிநடை. அசிங்கம், அருவெறுக்கத் தக்கது, அவமானம், அபச்சாரம் என்று எதை ஆதிக்கச் சாதியினர் கருதுகின்றார்களோ, அதனை இலக்கியங்களில் எழுதுவது தான் தலித்திய மொழிநடை. ஆதிக்க சாதியினரை எதிர்த்துப் பேசுவது, அவர்களின் வாழ்வையும் கேலியாகப் பேசுவதுதான் தலித் மொழிநடையாகும். இலக்கியங்கள் வாயிலாக மொழிநடைக்கு எதிராகப் புதிய நடையை எழுதுவது தான் தலித்திய மொழிநடையாகும். **“படைப்பாளனுக்கே உரிய புதிய அனுபவத்தை அல்லது உணர்வை வெளிப்படுத்த தன்னகத்தே உறைந்துள்ள வார்த்தைத் தொகுதியிலிருந்து சரியான சொல்லைத் தெரிவு செய்து புதிய வார்த்தைகளை உருவாக்கியது தலித்திய மொழிநடை ஆகும்”9** என்று சிவகாமி கூறுகிறார்.

பாமாவின் படைப்பில் மொழிப்பயன்பாடு

மொழியானது சமூகத்துடன் சேர்ந்து வளரக்கூடியது. பாமர மக்களின் பேச்சு மொழியும் இத்தன்மையதே. எனவே அந்தந்தக் காலகட்டங்களில் வழங்கிவரும் பேச்சுநடையைக் கையாண்டு இலக்கியம் படைக்கும்போதுதான் அஃது எதார்த்த இலக்கியமாகிறது. தன்வரலாறுகளில் பேச்சுநடை கையாளப்;பட்டிருப்பதால், எதார்த்த இலக்கியமாக அவை மிளிர்கின்றன. அந்த வகையில் பாமாவின் “கருக்கு” நாவலானது தன்வரலாறாக இருப்பதால், அது வாழ்வின் யதார்த்தங்களை அப்படியே பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. மலைக் காட்டிற்குள் சென்று, விறகு எடுக்கும்போது, தான் அனுபவித்த கொடுமை குறித்துப் பாமா கூறும்போது,

“மலங்காட்டுக்குள்ள போறது அம்புட்டு சொலபமில்ல. ஆளோட ஆளா ஏறிப்போயி, அங்ன ஒன்னு இங்ன ஒன்னுமா கெடக்குற காஞ்ச வெறகுகளப் பெறக்கி, ஒன்னுசேதுக் கட்டணும். கட்டமுன்னாடி மூஞ்சிமொகற, கை, காலுன்னு பாக்காம முள்ளுக்காடு பெறாண்டிப் போடும். தோலெல்லாம் கீறி ரத்தம் வரும். அதெல்லாம் பாத்துக்கிட்டு நின்னா வெறகு பெறக்க முடியாது.

முடியையும் கண்ட மாணிக்கப் புடுச்சு இழுத்து தலவலி மண்டயப் பௌக்கும். எங்குட்டு கூடித்தான் போறதுன்னு தெரியாது. அங்க என்ன ரோடா போட்டு வச்சிருக்கு? நாமதான் முட்டி, மொளஞ்சு, மோதி பொதருக்குள்ளயும், முள்ளுக்குள்ளயும் போகனும்"10 என்று கூறுகிறார்.

படைப்பில் தலித் மொழிநடை

தன்னுடைய படைப்புக்களில் தாழ்த்தப்பட்ட மக்களிடம் காணப்படுகின்ற நிறை, குறைகளையும், சமூகத்தில் அவர்கள் பிற இனத்தவரால் நடத்தப்படும் விதத்தையும் தருகிறார். ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை விலங்குகள் என்றாவது தகர்த்து எறியப்படும். அந்தக்காலம் ரொம்ப தூரத்தில் இல்லை என்ற அவரின் கனவைப் பிரதிபலித்துக் காட்டுகிறார் பாமா.

படைப்புக்களில் ஆசிரியர் சார்ந்து வாழும் இடம், தலித மக்களின் பிரச்சினைகள் இவற்றைப் பற்றிக் கூறுவதால், அம்மக்கள் பேசுகின்ற மொழி நடையிலேயே உரையாடல்களை அமைத்துத் தருகிறார்.

"ஒரு தாத்தாவும் எருமையும்" என்ற கதையில் "மாலாண்டி" தாத்தாவுக்கும் "கந்தசாமிக்கும்" இடையே நடக்கும் உரையாடல் தலித் மக்களின் பேச்சுநடைக்கு உதாரணமாக அமைகிறது.

"உடும்பப் புடுச்சு என்னத்துக்கு தாத்தா?"

"அடப்படுவா, என்னத்துக்கின்னா கேக்க? உடும்புக்கறி தின்னா ஒடம்புக்கு நல்லதுடா. மருந்துப் பண்டங்கெணக்கா அது. அம்புட்டுச் சாமானியத்துல உடும்புக்கறி கெடைக்காது தெரியும்ல".

"போ. தாத்தா...போ. ஏங்கண்ணுல மட்டும் அது தட்டுப்பட்டுச்சுன்னு வையி. கல்லக் கொண்டி ஒற்றே இறுத்துதான். வெக்காளி விலுக்கு விலுக்குனு துள்ளிக்கிட்டுச் சாகும்"11 என்று கந்தசாமி ரொம்பச் சவுடாலாச் சொன்னான்.

தலித் மக்கள் எந்தெந்த வகையில் எல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவே அவர்களின் மொழிநடையில், தன் படைப்புக்களைப் படைத்துள்ளார் பாமா. அடிபட்டவன் எழுதும் மொழியில் வலியின் வேதனைகள் காணப்படுகிறது. அதனால் தலித் மொழி உயிரோட்டமுடையதாக அமைகிறது. தலித் அல்லாதோர் மொழியில் கதையும் அனுதாபமுமே மிகுந்திருக்கும். எனவே தான் தலித்துக்களின் மொழியை, உறவுமுறைகளை, உறவுகளை, நம்பிக்கைகளை அதற்கான மதிப்பீடுகளை, அவர்கள் பயன்படுத்தும் வசைமொழிகளை உள்ளது உள்ளபடியே எடுத்துக்கூறும் போக்கு பாமாவிடம் காணப்படுகிறது.

"தாவணி" என்ற சிறுகதையில், ஐந்தாம் வகுப்பு முடித்த செல்லக்கிளி என்ற தன் மகளைக் குப்பாம்பட்டணத்துல இருக்கிற முதலாளியின் மகள் வீட்டிற்கு, படிப்பிற்கு மற்றும் வீட்டு வேலைக்கு என்று அனுப்பி வைத்தான் இருளப்பன். ஆனால் அங்கு முதலாளியின் மகள் செய்த கொடுமையின் காரணமாக செல்லக்கிளி இறக்க நேரிடுகிறது. இச்செய்தியைக் குப்பாம்பட்டணத்து மக்களின் பேச்சிலிருந்து இருளப்பன் அறிந்து கொள்ள நேரிடுகிறது.

"காலைல கூட அந்தப் பிள்ள துணி தொவச்சதப் பாத்தேன். சாயங்காலம் மூனு மணிக்குள்ள கொன்னுட்டாளே பாவி."

"மருந்தக் கிருந்த குடுத்துக் கொன்னுட்டாளோ?"

“இல்ல இல்ல: மூனுமணிக்குள்ள மாவாட்டனும்னு சொல்லிட்டு டவுனுக்குப் போனாளாம். அந்தப் பிள்ள ஆட்டி முடிக்க நாலுக்கு மேல ஆச்சாம். அந்தாணிக்க சவுக்குக் கட்டையக் கொண்டு பெடதி;ல பாத்து போட்டுருக்கா, ஒரு போடு. அது படாத எடத்துல பட்டு அங்னகுள்ளயே பிள்ள விலுக்கு விலுக்குன்னு துள்ளிருச்சாம். வாயுல மொறைத் தள்ளவும் பயந்து போயி ஒப்புக்கு டாக்டருட்டப் போனாளாம். எடவழிலயே செத்துப் போச்சாம். அதான் ஓடனே வந்து பெணத்த எரிச்சுட்டாளாம்.

அவுகய்யனும் மாமனும் வந்து பெணத்தக்கூட பாக்கலியே. இந்த வெசயந் தெருஞ்சவுகளுக்குப் பணத்தக் குடுத்துச் சரிக் கெட்டிட்டா. அந்தப் பிள்ளயோட தகப்பன் ஒரு அப்பிராணி. பாவம் வாயில்லாப் பூச்சியாப் போறான்”12 என்று இருளப்பனின் மகள் செல்லக்கிளியின் மரணத்திற்கானக் காரணத்தைக் குப்பாம்பட்டணத்து மக்கள் கூறுவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை

இவ்வாறு தலித்திலக்கியப் படைப்பாளியான பாமா, தான் அனுபவித்த கொடுமைகளையும், தனக்கு ஏற்பட்ட அவமானங்களையும் தன்னுடைய படைப்புக்களில் தன் மொழியிலேயே மறுஉருவாக்கம் செய்துள்ளார். மேலும் தன்னுடைய வலியையும் வேதனையையும் புனைவுகள் ஏதுமின்றி, அனுபவ ரீதியாக வெளிப்படுத்தியிருப்பது படிப்பவர்களிடத்தில் தலித் மக்கள் குறித்த ஒருவிதமான மாற்றுச் சிந்தனையை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. தலித் மக்களில் பெரியவர்கள் மட்டுமன்றி, தலித் இனச் சிறுவர், சிறுமிகளும் உயர்சாதியினரின் வன்கொடுமைகளுக்கு உயிர்ப் பலியாவதைப் பாமா தலித் மக்களின் பேச்சு நடையிலேயே வெளிப்படுத்தும்போது, உணர்வுப்பூர்வமாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்குப் பேச்சுமொழிநடை பெரிதும் உறுதுணையாக இருப்பதை அறிய முடிகிறது. அனுபவம் சார்ந்ததாக அமையும் இந்த மொழிநடையானது, மிகவும் யதார்த்த தன்மையை உள்ளடக்கியதாகவும் காணப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. ந.பிச்சமுத்து, மு.வ.வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம், ப.74.
2. மு.வரதராசன், மொழி வரலாறு, ப.1.
3. மேலது., ப.1
4. ஞா.தேவநேயப் பாவாணர், ஒப்பியல் மொழிநூல், ப.11.
5. பொன்.கோதண்டராமன், பொற்கோ கவிதைகள், ப.1
6. மகாராசன், பெண்மொழி இயங்கியல், ப.34.
7. காலச்சுவடு, ஏப்ரல்-ஜுன் 1995, ப.12.
8. ராஜ்கௌதமன், தலித்திய விமர்சனக் கட்டுரைகள், ப.248.
9. அ.சஜன், தலித்தியம் இயக்கமும் இலக்கியமும, 2004: பக்.91-92.
10. பாமா, தழும்புகள் காயங்களாகி, பக்.54-55.
11. பாமா, ஒரு தாத்தாவும் எருமையும், ப.40.

12. மேலது, ப.34.

துணைநூற்பட்டியல்

1. தழும்புகள் காயங்களாகி, 2004, பாமா, விடியல் பதிப்பகம், கோயமுத்தூர், இரண்டாம்பதிப்பு.

2. ஒரு தாத்தாவும் எருமையும், 2010, பாமா, விடியல் பதிப்பகம், கோயமுத்தூர், இரண்டாம்பதிப்பு.

3. தலித் அரசியல், 2002, விழி. பா. இதயவேந்தன், காவ்யா வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு.

4. பொற்கோ கவிதைகள், 1987, பொன்.கோதண்டராமன், தமிழன் நூலகம், சென்னை, முதற்பதிப்பு.

5. தலித்தியம் : இயக்கமும், இலக்கியமும் (தலித்திய கட்டுரைகள்), 2004, அ. சஜன், காலசகம் வெளியீடு, நாகர்கோவில், முதற்பதிப்பு.

6. ஒப்பியல் மொழிநூல், 1965, தேவநேயப் பாவாணர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு.

7. பெண் மொழி இயங்கியல், 2010, மகாராசன், தோழமை வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு.

8. மு.வ.வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம், 1988, ந. பிச்சமுத்து, சக்தி புத்தக நிலையம், சென்னை, முதற்பதிப்பு.

9. தலித்திய விமர்சனக் கட்டுரைகள், 2005, ராஜ்கௌதமன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதற்பதிப்பு.

© 2026 ஷகிலாலோகநாயகி க, முனைவர் . நித்தியகல்யாணி சு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 184–189
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

நாஞ்சில் நாடன் படைப்புகளில் சமூகச் சிந்தனைகள்

மாரித்துரை ம[1,*], முனைவர் . பன்னீர்செல்வம் க[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை பதிவு எண் : *B1/TAM24PJULY0910/2024* ஈரோடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரங்கம்பாளையம்., *India*

[2] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை ஈரோடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரங்கம்பாளையம், பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் இணைவுப்பெற்றது., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: மாரித்துரை ம — sangaimaridurai62@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	1 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00026	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

சமுதாயத்தில் நிகழும் நிகழ்வுகளைக் கண்டறியும் நுட்பமும் அதை அலசி ஆராயும் ஆற்றலும் படைப்பாளர்களுக்கு அவசியமானது என்பர். சமுதாய உணர்வுகள் இன்றி எந்த ஒரு படைப்பாளளும் தன்னைப் படைப்பாளனாக வெளிப்படுத்திக்கொள்ள முடியாது. ஒரு படைப்பாளன் சமுதாயத்தில் நடக்கும் பிரச்சனைகள் மற்றும் சமூக மாற்றங்களை தன் உள்ளத்தில் பதிவு செய்து அதனை சிறந்த படைப்பாக வெளிப்படுத்துகின்றான். இதனை இன்றைய தற்காலப் படைப்பாளர்கள் சிறப்புடன் செய்துவருகின்றனர். அந்தவகையில் நாஞ்சில் நாடன் தன்னுடைய படைப்புகளில் சமூகத்திற்குத் தேவையான மாற்றங்கள் என்னென்ன என்பதைத் தெளிவாகப் வெளிக்காட்டியுள்ளார். தன்னுடைய படைப்புகளில் காணப்படும் சமூகம் மற்றும் அச்சமூகத்தில் காணலாகும் மக்கள் வாழ்வியல் முறைகள், அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்; போன்றவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார. அதனை விரிவாகவும், விளக்கமாகவும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

Keywords / திறவுச்சொற்கள்: சமூக மாற்றம்; வாழ்வியல் முறை; சிக்கல்கள்; தீர்வுகள்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ம, மா., & க, மு. . ப. (2026). நாஞ்சில் நாடன் படைப்புகளில் சமூகச் சிந்தனைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 184–189. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8461

முன்னுரை

இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையில் இருந்து உருவானவையாகும். ஒவ்வொரு காலத்திலும் மக்கள் எவ்வாறெல்லாம் வாழ்ந்தார்கள் என்பதை இலக்கியங்கள் வெளிக் காட்டுவனவாக இருக்கின்றன. தமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் உருவாகி மக்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாடுகளையும் பதிவாக்கியுள்ளது. காலந்தோறும் தமிழில் பல புதிய இலக்கிய வடிவங்கள்

தோன்றின. அவ்வகையில் தோன்றி வளர்ந்த இலக்கிய வடிவங்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்தது சிறுகதை வடிவமாகும்.

எழுத்தின் ஆற்றலும் கூர்மையும் அணியாகக் கொண்டு படைக்கப் பெற்ற சிறுகதைகள் மக்களின் வாழ்க்கையையும், வாழ்வியல் சார்ந்த சூழல் மாற்றத்தையும், மறுமலர்ச்சியையும் வெளிப்படுத்தும் ஊடகமாகச் செயல்பட்டன. அந்த வகையில் நாஞ்சில் நாடனும், நாஞ்சில் நாட்டு வட்டார மொழியில், அப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கையையும், பண்பாட்டையும். அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் மையமாகக் கொண்டு பல படைப்புகளைப் படைத்துள்ளார். நாஞ்சில் நாடன் படைப்புகளின்வழி வெளிப்படும் சமூகச்சிந்தனைகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாஞ்சில் நாடன் படைப்புகளில் வறுமை

நாஞ்சில் நாடன் தம் படைப்புகளில் சமூகத்தில் நிகழும் சீர்கேடுகளான வறுமை, சாதியப் பாகுபாடுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை அழுத்தமாகப் பதிவு செய்து வருகின்றார்.

வறுமை என்பது மிகவும் கொடுமை நிறைந்த ஒன்றாகும். அப்படிப்பட்ட வறுமையில் உழன்றிருக்கின்ற மக்களைப் பற்றி எழுத்தாளர்கள் பல்வேறு வடிவங்களில் குறிப்பிடுகின்றனர். வறுமையின் கொடுமையைப் பற்றி ஔவையார் குறிப்பிடுகிறார். இதனை,

“கொடியது கேட்கின் நெடிய வெல் வேலோய்

கொடிது கொடிது வறுமை கொடிது

அதனினும் கொடிது இளமையில் வறுமை”1

என்ற பாடலில் வறுமை என்பது கொடிய நோய் என்றும், அவற்றை விட இளமையில் தோன்றும் வறுமையானது மிகவும் கொடுமையானது என்றும் குறிப்பிடுகிறார்.

இ்மைப்பருவம் என்பது கல்வி பயில்வதற்கும், விளையாடுவதற்குரிய தாகும். ஆனால் அவ்வாறில்லாமல் இளமையில் தொழிலாளார்களாக மாறி வறுமையில் உழன்று இரப்பவர்களாக இருப்பதை தம் சிறுகதைகளின் வாயிலாகப் பதிவுசெய்கிறார்; நாஞ்சில் நாடன்.

'உப்பு” என்னும் கதையில் சொக்கன் எனும் சிறுவன் தனது பாட்டியுடன் வளர்கிறான். அக்கிழவி நிலத்தில் உழைத்துத் தன் பேரனைக் காப்பாற்றி வருகிறாள். ஒருநாள் மழை வெள்ளத்தில் சிக்கி மீள முடியாமல் இறந்து விடுகிறாள். அதன் பின்னர் ஆதரவற்று சிறுவன் சொக்கன் வறுமையில் உழன்று வாடுகிறான் என்பதை இளமையில் வறுமையைப் பற்றி உப்பு என்னும் படைப்பில் எடுத்துக்காட்டுகிறார்.

“ஆசையெனும் நாய்கள்” என்னும் சிறுகதையில் ஏழ்மை குடும்பத்தைச் சேர்ந்த மூக்கனின் வறுமைத் துயரைப் படம் பிடித்துக் காட்டியுள்ள நாஞ்சில் நாடன். பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களின் வீட்டுச் சிறுவர்கள் திருவிழாக் காலங்களில் கடைத்தெருவில் பண்டங்களை வாங்கி உண்கின்றார்கள். அச்சமயத்தில் மூக்கன் எவ்வழியுமின்றி நின்றிருந்த நிலையைப் பற்றிக் குறிப்பிடுகையில், **“எல்லோரும் பத்துப் பைசா கொடுத்து கலர் குடித்தபோது மூக்கன் யோகி போலத் திரும்பிப் பார்த்துக் கொண்டு நின்றான்”**[2] என்கிறார். இவ்வாறு மூக்கன் இளம் வயதிலேயே

வறுமைக்குள்ளாகிய இழிநிலையைப் பற்றி நாஞ்சில் நாடன் பதிகின்றார்.

'ராஜாக்களும் சீட்டுக் கம்பெனிக்காரர்களும்" என்னும் சிறுகதையில் வறுமையின் இறுதி நிலை பிச்சையெடுக்கும் நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதைப் பற்றி விவரிக்கின்றார். பெயர் சுட்டப்பெறாத மாந்தர் ஒருவர் பேருந்திற்காகக் காத்திருந்து பின் பேருந்தில் ஏறி ஓர் இருக்கையில் அமர்ந்து கொள்கிறார். பல்வேறு பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்க வரிசையில் வர இறுதியாக ஒரு சிறுவனும் வருகிறான். அவனுக்குப் பத்து வயதிருக்கும். அச்சிறுவன் அழுக்காகிப் போன துண்டு ஒன்றை இடுப்பில் உடுத்தியிருந்தான். பிச்சையெடுக்கையில் அதிக உரிமையுடன் அனைவரையும் தொட்டு சிரித்து காசு கேட்பது அவன் வழக்கமாக இருக்கின்றது. காசு இல்லையென்றபோதும் வாடாது அடுத்தவரிடம் சென்று பிச்சை எடுக்கலாயினான். இறுதியாக அச்சிறுவன் இருக்கையில் அமர்ந்த நபரின் அருகே வந்து,

"நீரு அஞ்சு பைசா தந்தேருண்ணா எதுத்த கடையிலே போயி என்னவாது வாங்கி திம்பேன்" என்றான். பதிலுக்கு அவர் "ஒரு ரூவா தந்தா என்ன செய்வே சொல்லு" என்றான். உடனே அச்சிறுவன் "சோறு தின்னு ரெண்டு நாளாச்சுல்லா தெனமும் தோசை இல்லனா இட்லிதான். ஒரு ரூவா தந்தேருண்ணா வவுறுபுள்ளா சோறு வாங்கி திம்பேன்"[3] என்றான். ஆனால் அத்தகைய இளைய சமுதாயம் பசியிலும் எதிர்கால சமுதாயத்தை வறுமையிலும் உழன்று பிச்சையெடுக்கும் அளவுக்கு இழிவான நிலைக்குச் அவர்களைத் தள்ளியுள்ள நிலையை இச்சிறுகதையானது பதிவு செய்துள்ளதை அறியமுடிகின்றது.

சாதிய பாகுபாடுகள்

சாதியை ஒழிக்க காலந்தோறும் பல்வேறு முயற்சிகள் பலராலும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. சாதியைக் களைய அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் சமூகக் குழுக்களும் என யாவும் முனைந்தபோதும் எண்ணங்களும், சாதிய ஏற்றத்தாழ்வுகளும் சமூக வெளியில் பரவலாக இருந்த இன்று வரை முழுமையாக வேரறுக்க முடியவில்லை என்பதே உண்மையாகும். சாதிய கட்டமைப்பு தள்ளமுடியாத அளவுக்கு நுண்மையாக மறுபடியும் மறுகட்டமைப்பிற்கு உட்படுகிறது.

சாதி என்பது இனக்குழு வாழ்க்கையின் நீட்சியாகும். அவ்வாறு உருவாகிய சாதியில் உயர்வோ. தாழ்வோ பாராட்டுவது முறையற்றதாகும். சாதியத்தைப் பற்றி பியூலா மெர்சி குறிப்பிடுகையில், **"சாதியின் கொடுமையைச் சமுதாய அளவில் மட்டும் பார்க்காமல் தனிமனிதனின் வாழ்க்கை அளவில் நோக்கி ஓரளவும் வெற்றிக் கண்டவன் எழுத்தாளன் தான். சாதியைச் சமூகப் பிரச்சனையாகப் எதிர்கொள்ள மறுக்கும் மனிதன் அது தன் வாழ்வில் குறுக்கிடும்போது அதைப்பற்றி சிந்திக்கத் தொடங்குகிறான்"**[4] என்கிறார்.

அந்தவகையில் நாஞ்சில் நாடன் படைப்புகளில் சாதியம் தொடர்பான சிக்கல்களைக் கதைமாந்தர்களது பாத்திரப்படைப்பின் வழியே வெளிப் படுத்தியிருக்கிறார்.

"சில வைராக்கியங்கள்" என்னும் சிறுகதை எள்ளல் சுவையுடைய தாகவும், அதே சமயம் சாதியத்தைச் சாடுகின்ற கதையாகவும் உள்ளது. பரமசிவம் பிள்ளை சாதிசங்க மாநாட்டிற்குச் சென்று திரும்பும் போது, தன் நண்பரான சங்கரலிங்கம் பிள்ளையிடம் சாதிக்கு மறுப்பாகப் பேசுகின்றார். அதன் பின்னர் வீட்டிற்குச்

செல்லும் பரமசிவம் பிள்ளை தன் மைத்துனர் தன் மகளுக்குக் கொண்டு வந்திருக்கும் வரன் பற்றி பேசுகையில், **“நல்லதரம் கொண்டாந்திருக்கேடே மருமகளுக்கு பரமசிவம் குரலில் கேலியிருந்தது காரணம் அந்த வரன் மருமக்கள் வழி"**[5] எனவே, அவர் அந்த வரன் வேண்டாமென மறுத்துவிடுகிறார்.

சாதிக்கு எதிராகக் கருத்துகளை பேசிவரும் பரமசிவம்பிள்ளை, தன் மகள் திருமணம் என்ற உடனே சாதியைவிட மறுக்கிறார். தன் சாதியின் உட்பிரிவாய் வரும் சாதியையே அவரால் ஏற்க முடியவில்லை. ஊருக்கு ஒருமுகம் உள்ளுக்குள் ஒருமுகம் கொண்ட மனிதர்களைத் தோலுரிக்கும் விதமாக “சில வைராக்கியங்கள்' என்னும் படைப்பினைப் படைத்துள்ளார் நாஞ்சில் நாடன் என்பதை அறியமுடிகின்றது.

இளையோரிடமும் சாதி

நாஞ்சில் நாடனின் 'நேர்விகிதம்” என்னும் சிறுகதையில் இளையவர்கள் எவ்வாறு சாதிய ஏற்றத்தாழ்வு நிலைக்கு உள்ளாகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறார். முருகப்பன் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் கோடைவிடுமுறை சமயத்தில் தன் நண்பர்களுடன் சூனாப்பிள்ளை மாந்தோப்பில் மாங்காய் பறிக்கச் செல்கின்றனர். அச்சமயம் சூனாப்பிள்ளையிடம் மாட்டிக் கொள்கிறார்கள். பின்பு சூனாப்பிள்ளையானவர் மாட்டிக் கொண்ட சிறுவர்களின் சாதியைப் பற்றி வினவி, ஒவ்வொருவராக விடுவிக்கின்றார். அவர்களில் முருகப்பனை மட்டும் விடாது, அவனை பலவாறாக இழிந்துரைத்ததோடு, அடிக்கவும் செய்கின்றார் என்பதை நாஞ்சில் நாடன் வெளிப்படுத்துகையில், **“திருட்டு தேவடியாவுள்ள களவாங்கவா வந்தே? சாதிகெட்ட பயலுக்கு ரொம்ப தைரியம் தான்லே”**[6] என்று சொல்லிக்கொண்டே கீழே கிடந்த சுள்ளியை எடுத்து நிறுத்தாது அடித்துக்கொண்டே இருந்தார். சூனாபிள்ளையைப் போன்ற சாதி வெறியர்களைத் தோலுரித்துக் காட்டும் விதமாக இச்சிறுகதையை நாஞ்சில் நாடன் படைத்துள்ளார்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையின் அடிப்படையில் பொருள் அவசியமாகின்றது. பொருள் சேர்த்து வைத்திருக்கும் அளவின் அடிப்படையிலே இச்சமூகம் ஒருவரை மதிப்பீடு செய்கின்றது என்பதை “அம்பாரி மீது ஒரு ஆடு” என்னும் சிறுகதை விளக்குகின்றது.

ஒரு நாடக அரங்கில் செல்வந்தர்களுக்கென ஒதுக்கப்பட்ட கூலித் தொழிலாளி ஒருவன் அமர்வதால் ஏற்படும் அவல நிலையை இக்கதை குறிப்பிடுகிறது. சுவாமிநாதனிடம் டிரைவராக வேலைப் பார்ப்பவன் சின்னக்கண்ணு. தன்னால் செல்ல முடியாத டிராமாவிற்கான டிக்கெட்டை, தனது டிரைவர் சின்னக்கண்ணுவிடம் கொடுத்து அனுப்பி வைக்கின்றான் சுவாமிநாதன். சின்னக் கண்ணுவும் அரங்கத்தில் நுழைந்து தனக்கான இருக்கையில் அமர்கிறான். அவன் தோற்றத்தைக் கண்ட அரங்கத்தின் செயலாளர்,

“ஏம்பா இது உன்சீட்டா..

ஆமாங்க.....

எங்கே டிக்கெட்டைக் காட்டுப் பார்ப்போம்

ஒருவகை நடுக்கத்துடன் டிக்கெட்டை எடுத்துக் காட்டுகின்றான்.

இது உனக்கில்லப்பா சுவாமிநாதனுக்கு இல்ல கொடுத்திருக்கோம்..

அவருதாங்க எனக்கு தந்தாரு

அவர்தான் கொடுத்தார்னா முதல் ரோவலே வந்து உட்கார்ந்திரதா?"7

என்கின்றான் அரங்கத்தின் செயலாளர். பின் எழுந்து நடந்த சின்னக்கண்ணு பின்னிருக்கையில் சென்று அமராது, தான் அடைந்த நிலையை எண்ணியவாறே வீட்டுக்குச் செல்கின்றான். இவ்வாறு சமுதாயத்தில் மதிப்பென்பது, பொருளின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படுகின்றது என்று இக்கதையில் வெளிப்படுத்துகின்றார் நாஞ்சில் நாடன். பொருளற்றவரின் தன்மையைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகையில்

“அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு

இவ்வுலகம் இல்லாகி யாங்கு"[8]

என்கின்றார். வாழ்க்கையில் பொருள் நிறைவாய் இல்லாதவர்களுக்கு. இவ்வுலகம் உரிமையுடையதாக இருக்காது என்பதை வள்ளுவனார் குறிப்பிடுகின்றார்.

“இருள்கள் நிழல்களல்ல” என்னும் படைப்பினில் முடித்திருத்தும் பண்டாரமும், மற்ற ஏழை மக்களும் திருமண வீட்டின் பந்தியில் அமர்ந்து உணவு உண்ண முடியாத அவலத்தைக் குறிப்பிட்டிருப்பார் நாஞ்சில் நாடன்.

இவ்வாறு பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் சமூகத்தில் எல்லா மக்களும் ஒரே அளவில் மதிக்கப்படுவதில்லை. இந்த அவலம் மாற வேண்டும் என்ற நிலையில் இச்சிறுகதையானது அமைந்திருக்கும்.

முடிவுரை

வட்டார எழுத்தாளராக அடையாளப்பட்டிருக்கும் நாஞ்சில்நாடனது படைப்புகள் முழுமையும் எண்ணற்ற சமுதாயச் சிந்தனைகள் பதிவாகியுள்ளன. அவ்வாறு அவரது சிறுகதைகளில் பதிவாகியுள்ள வறுமை நிலையை உழல்வதால் விளையும் இன்னல்களைப் பற்றியும், அவ்வறுமை நிலை எவ்வாறு இளம்தலைமுறையினர் வரையிலும் வேரூன்றி உள்ளது என்பது வரை நோக்கப்பட்டது.

மேலும் சாதியால் எவ்வாறு சமுதாயம் பிரிந்திருக்கின்றது என்பதையும், அவ்வாறு சாதியின் அடிப்படையில் நிகழும் வன்கொடுமைகள் குறித்தும் அவர்தம் சிறுகதைப் படைப்புகளில் காணப்படும் செய்திகளையும், மேலும் பொருளாதார அடிப்படையில் எவ்வாறு தனிமனிதன் மதிப்பிடப்படுகின்றான் என்பதையும், பொருளாதாரத்தில் நலிந்திருக்கும் மக்களின் வாழ்வியல் குறித்தும் இக்கட்டுரையின்வழி ஆராயமுடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. ஔவையார்- தனிப்பாடல் திரட்டு.ப-6

2. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், ஆசையெனும் நாய்கள்.ப.110

3. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், ராஜாக்களும் சீட்டுக் கம்பெனிக்காரர்களும். பக்-192-93

4. இருபதில் சிறுகதைகள்.ப.64

5. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், சில வைராக்கியங்கள்.ப-34

6. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், நேர் விகிதம்.ப-73

7. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், அம்பாரி மீது ஒரு ஆடு.ப-97

8. திருக்குறள் எண்.247

© 2026 மாரித்துரை ம, முனைவர் . பன்னீர்செல்வம் க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 190–196
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

ஆற்றுப்படை நூல்கள் வழி நிலம் பூத்து மலர்ந்த நாள் நாவல் ஓர் ஒப்பீடு

ஜோதி பூ[1,*], முனைவர்.ராமலெட்சுமி சி[2]

[1] முழு நேரம் முனைவர் பட்ட ஆய்வாளர் வெ.ப.சு தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக் கல்லூரி,திருநெல்வேலி-10. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். திருநெல்வேலி-12 .தமிழ்நாடு, இந்தியா., *India*

[2] உதவி பேராசிரியர்,வெ.ப.சு தமிழியல் ஆய்வு மையம்,ம.தி.தா.இந்துக் கல்லூரி, திருநெல்வேலி-10. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம். திருநெல்வேலி -12 ,தமிழ்நாடு, இந்தியா., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: ஜோதி பூ — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00094	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியப் பத்துப்பாட்டுத் தொகுப்பில் அமைந்த 'ஆற்றுப்படை நூல்கள்' (பொருநர், சிறுபாண், பெரும்பாண், கூத்தராற்றுப்படை, திருமுருகாற்றுப்படை) கலைக் குழுவினரின் பயணத்தையும், கொடை மரபையும் பேசும் பிரதான இலக்கிய வடிவங்களாகும். மனோஜ் குரூர் எழுதி கே.வி. ஜெயஸ்ரீ தமிழாக்கம் செய்த 'நிலம் பூத்து மலர்ந்த நாள்' புதினம், இச்சங்க ஆற்றுப்படை மரபின் தொடர்ச்சியாகவும், அதேவேளையில் அதை நவீனப் புனைவுப் பார்வையில் மறுவாசிப்பு செய்யும் ஒரு மாற்று ஆவணமாகவும் திகழ்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: அலைகுடி இசைக்கலைஞர்கள்- (Itinerant Musicians / Bards); பாணர்; கூத்தர்; விறலியர்- (Panar; Koothar; Viraliyar); கபிலர் மற்றும் பறம்பு மலை-(Kapilar and Parambu Malai); அதிகார அரசியலும் போரும்-(Power Politics and War); ஐந்திணை வாழ்வியல்- (Five Landscapes / Thinai Life) யாழிசை மற்றும் பண்கள் -(Yazh and Ancient Tunes)

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பூ, ஜோ., & சி, மு. (2026). ஆற்றுப்படை நூல்கள் வழி நிலம் பூத்து மலர்ந்த நாள் நாவல் ஓர் ஒப்பீடு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 190–196. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8463

முன்னுரை

தமிழ் நாவல் இலக்கியம் சமூகத்தின் பல்வேறு வாழ்க்கை நிலைகளைப் பதிவு செய்யும் முக்கியமான இலக்கிய வடிவமாகும். குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் பேச்சு, தொழில், உறவுமுறை, பழக்கவழக்கம், நம்பிக்கை போன்றவற்றை இயல்பாகப் பதிவு செய்யும்போது அந்தப் படைப்பில் வட்டாரத் தன்மை உருவாகிறது.

ம.காமுத்துரையின் கலவை நாவலும் இத்தகைய வட்டார வாழ்வியலை வெளிப்படுத்தும் படைப்பாகக் கருதலாம். நாவலில் பயன்படுத்தப்படும்

பேச்சுவழக்கு சொற்கள், சொலவடைகள் பழமொழிகள் ஆகியவை கதாபாத்திரங்களின் இயல்பான உரையாடல்களோடு இணைகின்றன. அதேபோல் மக்கள் கடைப்பிடிக்கும் நம்பிக்கைகள், சடங்குகள், புழங்கு பொருட்கள், தொழில் சார்ந்த பழக்கங்கள் ஆகியவை அவர்களின் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன.

ஆய்வின் நோக்கம்

கலவை நாவலில் இடம்பெறும் வட்டார வழக்குகளைக் கண்டறிதல், அவற்றின் தன்மையை விளக்குதல், சொலவடைகள், பழமொழிகள், நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள் ஆகிய பண்பாட்டுக் கூறுகளையும் ஆராய்வதே இவவாய்வின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

வட்டார வழக்கு – பொருள்

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மக்கள் தங்களுக்கே உரிய முறையில் பயன்படுத்தும் மொழிநடை, சொற்கள் உச்சரிப்பு, சொற்றொடர்கள், பழமொழிகள், சொலவடைகள் ஆகியவற்றின் தொகுப்பை வட்டார வழக்கு எனலாம். அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்க்கை அனுபவத்தையும் பண்பாட்டு நினைவுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும் மொழியியல் அடையாளமாகும்.

கலவை நாவலில் வட்டார வழக்கு (பேச்சுமொழி)

கலவை நாவலில் கதாபாத்திரங்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பேச்சுமொழி இடம்பெறுகிறது. இதனால் கதாபாத்திரங்களின் உரையாடல்கள் இயல்புத் தன்மையைப் பெறுகின்றன. தேனி மாவட்ட மக்களின் வட்டார பேச்சுமொழி, சொல் உச்சரிப்பு, சொற்றொடர், பேச்சுநடை ஆகியவற்றில் தனித்தன்மை பெற்று விளங்குகின்றது.

“வாங்குனதப் பூராம் சிறுவாட்ல ஒதுக்குனா காணமத்தேம் போகும்" என கொணட்டிப் பேசிவிட்டாள் முனியம்மா. அவ்வளவுதான் காமுத்தாயிக்கு அவளைக் கண்டாலே ஒப்பாது. பச்சநாவியாத்தான் எரிந்து விழுவாள்.”[1]

இம்மேற்கோளில் தேனி வட்டார மக்களின் பேச்சுநடையில் வட்டார வழக்கானது வெளிப்படுவதை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை அவர்கள் குறிப்பிடுகிறார்.

மேலும், **வெறுவாக்யளங்கெட்டவ, கீசறிமேசறி, ரச்சகெட்டசிறுக்கி, பக்கி பதவக்காடு** போன்ற வட்டார வழக்குகளையும் கலவை நாவலில் பதிவிடுகிறார். **வகுசி, விருமுட்டி, ரப்பு, பகுமானக்காரி** போன்ற வட்டார வழக்குச் சொற்களை கடசல் நாவலிலும்

மெப்பனை, ராவிட்டேன், இசிபட்டு, நொண்டம் போன்ற வட்டார வழக்குச் சொற்களை மில் நாவலிலும் ம.காமுத்துரை அவர்கள் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது.

வட்டார நம்பிக்கைகள்

வட்டார மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கைகள் முக்கியமான பண்பாட்டுக் கூறாக விளங்குகின்றன. இயற்கை, தெய்வம், குடும்பம், மருத்துவம், நோய், பிறப்பு, இறப்பு, கனவு போன்றவற்றைச் சுற்றி பல்வேறு நம்பிக்கைகள் உருவாகியுள்ளன. கலவை நாவலில் இடம்பெறும் நம்பிக்கைகள் அந்த மக்களின் வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் முறையை வெளிப்படுத்துகின்றன.

“நம்பிக்கை என்பது காலம் காலமாக ஒரு தலைமுறை இடமிருந்து இன்னொரு தலைமுறைக்கு பரவி வருதாகும்.”[2] என்ற மேற்கோளில் சு.சக்திவேல் அவர்கள் தனது நாட்டுப்புற இயல் ஆய்வு நூலில் குறிப்பிடுகின்றார்.

“நாட்டுப்புற நம்பிக்கைகளுக்கு மூன்று வகை காரணங்களை உரைக்கலாம். ஒன்று செய்வினை எனப்படும் மந்திரம் (MAGIC), இரண்டு மருத்துவம் (FOLK MEDICINE), மூன்று விலக்குகள் (TABOOS)”[3] என்னும் மேற்கோளில் சு.சண்முகசுந்தரம் தனது நாட்டுப்புற இயல் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அருள்மிகு மொண்டிக்கருப்பு துணை, இவ்விடத்தே நல்ல முறையில் தொக்கம் எடுக்கப்படும். மருந்து மாயம் ஏவல் செய்வினை அனைத்தும் பார்த்து நிவர்த்தி செய்யப்படும். தொக்கம் எடுக்க வரும்போது சளி, இருமல் சரிபண்ணிவிட்டு வரவும், முக்கியமாக வெறும் வயிற்றில் வருவது சிறந்தது.

இப்பத்தியில் நோய் மற்றும் மருத்துவம் தொடர்பான நம்பிக்கையை தெளிவாக தனது கலவை நாவலில் ம.காமுத்துரை அவர்கள் எடுத்துரைக்கிறார். இக்கருத்தைப் போன்றே

“பூச்சி (பாம்பு)க்கடி, பூரான்கடிக்கு அங்கே உட்கார்ந்துதான் மருந்து அரைத்துக் கொடுப்பார். முக்கியமாக பேய்பிடித்த பொம்பளைகளுக்கு உடுக்கை அடித்துப் பேய் ஓட்டுவது அந்த மண்டபத்தில்தான்.”[4]

என்ற மேற்கோளில் நோய் மற்றும் மருத்துவ நம்பிக்கையை தன் பிற நாவலான கடசலில் ம.காமுத்துரை அவர்கள் குறிப்பிட்டுள்ளது ஒப்புநோக்கத்தக்காதாகும்.

அரசமரமும் மரத்தின் கீழ் திரிசூலம் ஒன்று ஊன்றப்பட்டு சந்தன குங்குமம் தீற்றப்பட்ட ஒரு அம்மன் கோயிலும் இருந்தது என்ற இயற்கை நம்பிக்கையை கடசல் நாவலிலும்,

“ஈரல தனியாசுட்டு வச்சிரணும். படையல்ல முனியப்பனுக்கு முக்கியம்..”[5] என்ற மேற்கோளில் தெய்வ நம்பிக்கையையும் ம.காமுத்துரை அவர்கள் குதிப்பி நாவலிலும் எடுத்துரைக்கிறார்.

வட்டார சடங்குகள்

ஒரு சமூகத்தினர் அல்லது குறிப்பிட்ட வட்டார மக்கள் தங்களுடைய மரபு, நம்பிக்கை, சமயம், வாழ்க்கைமுறை, ஆகியவற்றின் அடிப்படையில் தலைமுறை தலைமுறையாக கடைபிடித்து வரும் செயல்முறையே சடங்கு எனப்படுகிறது. இச்சடங்கினை **செந்தமிழ் அகராதி ‘கிரியை’** என்று குறிப்பிடுகிறது. பிறப்பு, திருமணம், தெய்வ வழிபாடு, நேர்த்திக்கடன், இறப்பு போன்ற பலதரபட்ட சடங்கு முறைகளும் பின்பற்றப்படுகின்றது.

பூமி பூஜையில் வந்து நின்றவர் வானம் தோண்டும்போது, பில்லர் நடுகிறபோது, சுவர் எழுப்புகிற நேரம் என்று ஒவ்வொன்றுக்கும் நாள், கிழமை, நேரம் குறிப்பதோடு எந்தத் திசையில் நின்று வேலையைத் தொடவேண்டும் என்றும் உத்தரவு சொல்லுவார்

இப்பத்தியில் நல்ல நேரம் பார்த்து பூமி பூஜை தொடங்குதல், பில்லர் நடுதல் போன்ற தெய்வ வழிபாட்டுச் சடங்குமுறைகளை கட்டிடத்தொழிலாளர்கள் பின்பற்றியுள்ளதை ம.காமுத்துரை அவர்கள் கலவை நாவலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

நீர்மாலை எடுக்கறப்ப பல்லு தீத்தி, பூணூல் போட்டு.. கொள்ளிவச்சு கொடம் ஒடச்சு, குளியல் போட்டாச்சுனா கடம முடியும்...

இத்தொடரில் இறந்த தந்தைக்கு மகன் செய்யும் இறப்புச் சடங்கைப் பற்றி தனது பிற நாவலான குதிப்பி நாவலில் ம.காமுத்துரை குறிப்பிட்டுள்ளதை பார்க்கமுடிகிறது.

வட்டாரத் தெய்வ வழிபாடு

ஒரு குறிப்பிட்ட வட்டார மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் முக்கியக் கூறுகளில் தெய்வ வழிபாடும் ஒன்றாகும். மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் இன்பம், துன்பம், நோய், இயற்கை மாற்றம், குடும்ப நலம், தொழில் வளம் போன்றவற்றுடன் தெய்வ நம்பிக்கையை இணைத்துப் பார்க்கின்றனர். எனவே, தெய்வ வழிபாடு என்பது வெறும் சமயச் செயல்பாடாக இல்லாமல், மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு அடையாளத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது.

சந்தை மாரியம்மன் மூலஸ்தானம் ஊருக்குள்தான் இருக்கிறது. பெரிய கோயிலுக்கு ஊர்வலமாக இங்கிருந்துதான் கிளம்புவார்.

ஆமாயா, பொட்டி தூக்கி கொட்டு மொழக்கோட ஆத்தாள அழச்சிட்டுப் போவணும்ல

இவ்வரிகளின் மூலமாக வட்டார மக்களின் தெய்வங்கள், அந்த தெய்வங்களுக்கு நடத்தப்படும் திருவிழாக்கள் போன்ற தெய்வ வழிபாட்டு முறைகள் பற்றி ம.காமுத்துரை அவர்கள் தனது கலவை நாவலில் சித்தரிக்கின்றார்.

வட்டாரத் தொழில்கள்

கலவை நாவலின் முக்கியமான பண்பாட்டுப் பதிவுகளில் தொழில் சார்ந்த வாழ்க்கையும் ஒன்றாகும். குறிப்பிட்ட தொழிலைச் சார்ந்த மக்களின் அன்றாட உழைப்பு, தொழில் நடைமுறைகள், தொழிலாளர் உறவுகள், பயன்படுத்தப்படும் கருவிகள் தொழில் சார்ந்த சொற்கள் ஆகியவை அவர்களின் வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன

கலவைக்கு சல்லி சுமக்கும் ஆளை, காலிச்சட்டிகளைப் போய்ச் சேகரிக்கச் சொல்வான். சட்டியை அடுக்கிக் கொண்டிருக்கும் பெண்ணை மிசினுக்கு தண்ணி சுமந்து ஊற்றச் சொல்வான். எல்லாம் கிடைக்கட்டுமென வயசுப் பிள்ளைகளைப் பூராவும் சாரத்தில் ஏறி நிற்கச்சொல்வான்.

இத்தொடரில் கட்டுமான தொழிலாளர்களின் தொழில் பண்பாட்டை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை எடுத்துக்காட்டுகிறார்.

வட்டாரச் சொல்லாடல்

மக்கள் பேசும் விதத்தில் வெளிப்படும் தனித்துவமான மொழி நடை சொல்லாடல் எனப்படுகிறது. வெறுமனே வார்த்தைகளை பயன்படுத்துவது மட்டுமல்லாமல் ஒரு குறிப்பிட்ட சூழலில் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்ளும் முறையே சொல்லாடல் எனப்படுகிறது.

கெடக்கது கெடக்கட்டும் கெழவியத் தூக்கி மனையில வய்யிடின்னு பேசுனர் என்னா சொல்றது? என்ற வரிகளில் முக்கியமான ஒரு செயலைப் புறக்கணித்துவிட்டு, அதைவிட அவசியமில்லாத வேறு ஒரு செயலில் கவனம் செலுத்தும் ஒருவரை குத்திக்காட்டும் நோக்கோடு குறிப்பிடக்கூடிய சொல்லாடலை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை தெளிவுபடுத்துகிறார்.

வட்டாரச் சொலவடைகள்

குறிப்பிட்ட கருத்தை சுருக்கமாகவும் அனுபவத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தும் மரபுத்தொடர் சொலவடை எனப்படுகிறது. இச்சொலவடையானது வட்டார மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் சமூகச் சிந்தனைகளையும் சுருக்கமாக வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளாகும்.

வெளக்க மாத்துக்கு பட்டுக்குஞ்சம் கட்டுனமாதிரி என்ற வரிகளில் பொருத்தமில்லாத இடத்தில் ஆடம்பரம் செய்யும் செயலை நகைச்சுவை உணர்வோடு தனது கலவை நாவலில் சொலவடையாக ம.காமுத்துரை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட்டாரப் பழமொழி

முதுமொழி, பழஞ்சொல், முதுசொல், வசனம் என்னும் பல பெயர்களைக் கொண்ட பழமொழியானது குறைந்த சொற்களில் நிறைந்த கருத்தைக் கூறும் தனித்துவத்தைக் கொண்டதாகும்.

ஆக்குறவளுக்கு ஆறு மாசப் பாடு. அழிக்கிறவளுக்கு? அர நுமுசந்தே!

ஒரு பொருளை உருவாக்குவதற்கோ வளர்ப்பதற்கோ நீண்ட கால உழைப்பு தேவைப்படுகிறது. ஆனால் அதை அழிப்பதற்கு மிகக் குறுகிய நேரமே போதும் என்ற ஆழ்ந்த கருத்தை குறுகிய வரிகளில் கூறக்கூடிய பழமொழியை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை கையாண்டுள்ளார்.

“மாட்டுக்கு நோவாம் காக்காயிக்கு கொண்டாட்டமாம்” மடமடவெனப் பொரிந்தான்ராசு”[6]

இந்த மேற்கோளில் ஒருவருக்கு ஏற்படும் துன்பம் மற்றொருவருக்குப் பயனாகவோ மகிழ்ச்சியாகவோ அமையக்கூடிய கருத்தினை பழமொழி வடிவில் தனது பிற நாவலான மில் நாவலில் ம.காமுத்துரை அவர்கள் பதிவிடுகிறார்.

புழங்கு பொருட்கள்

ஒரு வட்டார மக்களின் அன்றாட வாழ்வில் பயன்பட்டு வரும் பொருட்கள், அவர்களின் வாழ்வியல் முறையையும் பண்பாட்டு அடையாளத்தையும் வெளிப்படுத்தும்போது அவை புழங்கு பொருட்களாகக் கருதப்படுகின்றன.

நாலு சல்லடை, பதிமூணு, தண்ணி ட்ரம், எண்பத்து மூணு, சாந்துச் சட்டிகள், எட்டு மம்பட்டி, திம்ஸ் மூணு, பிக்காச்சி ரெண்டு சம்மட்டி மூணு கடப்பாரை ஆறு, கோக்காலி சிறுசு அஞ்சி, பெருசு மூணு

இவ்வரிகளில் கட்டிடத்தொழிலாளர்கள் அன்றாடம் தன் தொழிலுக்கு பயன்படுத்தும் புழங்குபொருட்களை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை அவர்கள் தெளிவாகப் பட்டியலிடுகின்றார்.

இக்கருத்தைப் போன்று

பம்ப், அரம், காம்பஸ், பிட்டு, பெல்டு, பேரிங், புல்லர், டர்னர்

என பட்டறைத் தொழிலாளர்களின் புழங்குபொருட்களை தனது பிற நாவலான கடசல் நாவலில் ம.காமுத்துரை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பட்டப்பெயர்கள்

வட்டார வழக்கில் பட்டப்பெயர் என்பது ஒருவரின் இயற்பெயருக்கு அப்பால்,

அவருடைய தோற்றம், குணம், தொழில், உடல் அமைப்பு, பழக்கம், செயல்பாடு, குடும்பப்பின்னணி போன்றவற்றின் அடிப்படையில் ஊர் மக்களால் வழங்கப்படும் பெயராகும். கலவை நாவலில் இடம்பெறும் பட்டப்பெயர்கள் வெறும் அழைப்புச் சொற்களாக இல்லாமல், அப்பகுதி மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு உறவுகளின் பதிவுகளாகவும் அமைகின்றன.

கலவை நாவலில் **சாம்பார், கொசுவு, கொரங்குவெரட்டி குமாரு, கொடமுருட்டி கணேசன்** போன்ற பட்டப்பெயர்கள் இடம்பெறுகின்றன. நாவலில் குமார் என்பவன் தன்னுடன் பணிபுரியும் மற்ற பணியாட்களை வேலை வாங்குவதற்காக குரங்கு விரட்டுவதைப் போன்று விரட்டும் செயல்பாட்டினை வைத்து அவனை கொரங்குவெரட்டி குமாரு என்று பட்டப்பெயர் வைத்து அழைக்கும் விதத்தினை தனது கலவை நாவலில் ம.காமுத்துரை தெளிவாக பதிவிடுகிறார்.

முடிவுரை

ம.காமுத்துரையின் கலவை நாவல் கதை சொல்லும் படைப்பாக மட்டுமின்றி குறிப்பிட்ட வட்டார மக்களின் மொழி மற்றும் பண்பாட்டு வாழ்வியலைப் பதிவு செய்யும் இலக்கிய ஆவணமாகவும் பார்க்கத்தக்கது. நாவலில் இடம்பெறும் வட்டாரச் சொற்கள், பேச்சுமொழி சொலவடைகள், பழமொழிகள், நம்பிக்கைகள், சடங்குகள், தொழில் சார்ந்த நடைமுறைகள் மற்றும் புழங்குபொருட்கள் ஆகியவை மக்களின் வாழ்வியலை முழுமைப்படுத்துகின்றன. எனவே, கலவை நாவலில் பதிவாகும் வட்டார வழக்காறுகள் தென்னாட்டு மக்களின் பண்பாட்டுப் பதிவுகளை வெளிப்படுத்தும் சான்றாக அமைகின்றது.

அடிக்குறிப்புகள்

1. கலவை - ம.காமுத்துரை – பக்கம் : 131
2. நாட்டுப்புற இயல் ஆய்வு – சு.சக்திவேல் - பக்கம்: 189
3. நாட்டுப்புற இயல் – சு.சண்முகசுந்தரம் – பக்கம்: 149
4. கடசல் – ம.காமுத்துரை – பக்கம் : 79
5. குதிப்பி – ம.காமுத்துரை – பக்கம் : 87
6. மில் - ம.காமுத்துரை – பக்கம் : 21

துணை நூற்பட்டியல்

1. காமுத்துரை. ம, குதிப்பி, டிஸ்கவரி புக் பேலஸ்,
சென்னை - 600 078. முதல் பதிப்பு : நவம்பர் 2019.
2. காமுத்துரை. ம, மில், டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், ரோஹிணி பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 078. முதல் பதிப்பு : மே 2010.
3. காமுத்துரை. ம, கலவை, விகடன் பிரசுரம்,
சென்னை - 600 002. முதல் பதிப்பு : டிசம்பர் 2023.
4. காமுத்துரை. ம. கடசல், எழுத்து பிரசுரம்,
சென்னை - 600 040. முதல் பதிப்பு : டிசம்பர் 2021.
5. சக்திவேல். சு, நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம்,

சென்னை - 600 108. நான்காம் பதிப்பு : டிசம்பர் 2016.

6. சண்முகசுந்தரம். சு, நாட்டுப்புற இயல், காவ்யா வெளியீடு, சென்னை - 600 024. ஐந்தாம் பதிப்பு : டிசம்பர் 2013.

© 2026 ஜோதி பூ, முனைவர்.ராமலெட்சுமி சி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 197–203
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தலித் இலக்கிய வரலாற்றின் தோற்றமும் வளர்ச்சியும்

செல்லப்பா அ[1,*], முனைவர்.கவிதா மி[2]

[1] தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 23211284021015, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இணைவு பெற்றது, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – *627 002., India*

[2] உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இணைவு பெற்றது, பாளையங்கோட்டை, திருநெல்வேலி – *627 002., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: செல்லப்பா அ — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00093	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

சமூகத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த சாதியப் பாகுபாடுகளாலும் ஒடுக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் உரிமைக் குரலையும் வெளிப்படுத்தும் இலக்கியப் போக்காகத் தலித் இலக்கியம் உருவெடுத்துள்ளது. மனிதநேயத்தையும் சமூக நீதியையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இவ்விலக்கியம், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் துயரங்கள், சமூகப் புறக்கணிப்பு, உரிமை மறுப்பு, எதிர்ப்பு உணர்வு, விடுதலை வேட்கை ஆகியவற்றைப் பதிவு செய்கிறது. 'தலித்' என்னும் சொல்லின் பொருள், அதன் தோற்றம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை விளக்குவதோடு, தலித் இலக்கியத்தின் உருவாக்கப் பின்னணியும் அதன் தனித்துவமான இலக்கியப் பண்புகளும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன. குறிப்பாக, தலித் மக்களின் வாழ்வியலை மையப்படுத்தி எழுதப்பட்ட படைப்புகள் அவர்களின் சமூக இருப்பையும் உரிமைகளையும் வெளிப்படுத்தும் ஆவணங்களாக அமைவதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. மேலும், தலித் இலக்கியம் வெறும் இலக்கிய வெளிப்பாடாக மட்டுமின்றி, சமூக அநீதிகளைக் கேள்விக்குட்படுத்தி சமத்துவத்தையும் சமூக நீதியையும் வலியுறுத்தும் மாற்றுக் குரலாக விளங்குவதையும் இவ்வாய்வு விளக்குகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: தலித்; தலித் இலக்கியம்; சாதியம்; சமூக நீதி; உரிமை; ஒடுக்குமுறை; விடுதலை.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: அ, செ., & மி, மு. (2026). தலித் இலக்கிய வரலாற்றின் தோற்றமும் வளர்ச்சியும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 197–203. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8465

முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பு காலத்தின் தேவைக்கு ஏற்ப பல்வேறு கோணங்களில் வளர்ந்து வருகின்றது. மக்களின் குரலாக ஒலிக்கும் இலக்கியங்கள் பலதரப்பட்ட

பாடுபொருள்களைக் கொண்டு இயக்கம் பெறுகின்றது. சமுதாயத்தில் உரிமை இழந்து ஒதுக்கப்பட்டு வாழும் மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் பணியைச் சில படைப்பாளர்கள் மேற்கொண்டனர். பிறப்பின் அடிப்படையிலும் தொழிலின் அடிப்படையிலும் பிரிவினைச் சூழ்ச்சியில் துண்டாடப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமையை எடுத்துரைக்கும் இலக்கியமாகத் தலித் இலக்கியம் விளங்குகின்றது.

மனித நாகரிகம் தொடங்கிய காலத்தில் சாதியப் பிரிவினைகள் வேறுபாடுகள் தோன்றலாயின. சாதியப் பிரிவினையால் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளையும் உணர்வுகளையும் இழந்தனர். பின்பு இம்மக்களுக்கான உரிமைகளைப் பல இயக்கங்கள் பலதரப்பட்ட போராட்டங்கள் வழியாகப் பெற்றுத்தர முனைந்தன. தலித் மக்களின் நிலைப்பாட்டினை உணர்ந்த தலைவர்கள் தலித் மக்களின் வாழ்வுக்காகப் போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தனர். மறுநிலையில் படைப்பாளர்கள் தலித் மக்களின் உரிமைக்காக இலக்கியங்களைக் கைக்கொண்டனர். அன்று முதல் இன்று வரையிலும் தலித் மக்களின் வாழ்வியல் பின்புலத்தையும் வரலாற்றுப் பதிவுகளையும் எடுத்தியம்பும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

தலித் - சொற்பொருள் விளக்கம்

‘தலித்’ என்ற சொல் மராட்டியிலும் இந்தியிலுமிருந்து நேரடியாகத் தமிழுக்குப் பெறப்பட்டது. அது ‘தல்’ என்ற எபிரேய மூலச் சொல்லிலிருந்து பைபிளை இந்தியில் மொழி ஆக்கம் செய்த போது எடுத்தாளப்பட்ட சொல். இந்தத் ‘தல்’ என்ற சொல்லைத் தமிழ் பைபிளில் ‘ஏழைகள்’ என்றே தமிழாக்கம் செய்துள்ளனர். இந்தத் தலித் என்னும் சொல்லுக்குப் பள்ளம்; பள்ளத்தாக்கு என்பது பொருளாகும். இச்சொல் இடவாகு பொருளாகப் பள்ளத்தில் வீழ்த்தப் பட்டவன் அல்லது தள்ளப்பட்டவன் அல்லது அமுக்கப்பட்டவன் என்றெல்லாம் பொருள்தரும். ஆங்கிலத்தில் ‘டிப்ரஸ்டு’ என்ற சொல்லுக்கு ‘அழுத்தப்பட்டவன்’ என்னும் பொருள்பட தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ‘டிப்ரஸ்டு கிளாஸ்’ என்று அழைப்பது போலத் தலித் என்னும் சொல்லாடல் மூலம் இவர்ளை வீழ்த்தப்பட்டவர்கள், அடக்கப் பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என்றும் அழைத்துக் கொள்கின்றனர்.

தலித் இலக்கியம்

கீழ் நிலையில் இருக்கும் பெரும்பான்மை மக்களின் அவல வாழ்வியற் கூறுகளைக் கருப்பொருள்களாகக் கொண்டு இலக்கியம் ஆக்கும் முயற்சி இன்றைய நவீன இலக்கியப் போக்காக மாறி வருகின்றது. இத்தகைய ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் இலக்கிய வெளிப்பாடே தலித் இலக்கியமாகும். தலித் இலக்கியம் சமூக, பண்பாடு மற்றும் பொருளாதார நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையோடு தொடர்புடையது. ஒடுக்கப்படும் மத நிறுவனங்களுக்கு எதிராகக் கலகப் போராட்டத்தினை முன்வைக்கிறது. இத்தலித் இலக்கியம் குறித்துப் பல அறிஞர்கள் பல்வேறு விதங்களில் விளக்கம் கூறுகின்றனர். மராத்திய அறிஞர் டாங்ளே தலித் இலக்கியம் சாதிய இலக்கியம் ஆகாது என்பதனைக் கீழ்க்காணும் நிலையில் எடுத்துரைக்கிறார்.

“இந்தியாவில் உள்ள தீண்டாமை மற்றும் சாதிய அமைப்பு அதன் கொடுமையான இயல்பு மற்றும் அதன் சுரண்டல் அமைப்பு ஆகியவற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒன்றாக ஒடுப்பட்டோர் இலக்கியம் அமைகிறது. ஒடுக்கப் பட்ட இனம் ஒரு சாதி அல்ல. அது ஒரு உணர்வு பூர்வமான புரிதல், பட்டறிவு, மகிழ்ச்சி,

துயரம் மற்றும் அவர்களின் போராட்டம் ஆகியவற்றோடு தொடர்புள்ளது. இது நிறுவனங்களுக்கு எதிரான கலக உணர்வைக் கொண்டது. இந்த இலக்கியம் கற்பனை கலந்து பொழுதுபோக்கு வகையாக அல்லாமல் சுரண்டப்படும் மக்களின் விருப்பங்களையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. தாழ்த்தப்பட்டோரின் மோசமான அவல வாழ்வியல் உணர்வுகள் வெடித்துச் சிதறலுக்கு ஏற்ப, கோபதாபங்கள் நிறைந்த மேல்பூச்சுப் பெறாத ஒரு மொழி நடையினைக் கொண்டது. இது பழைய மரபுகளை எதிர்த்து புதிய பண்பாட்டு மதிப்புகளையும், அழகியலையும், புதிய தொன்மங்களையும் உருவாக்கும் விதத்தில் அமைந்துள்ளது.”

தலித் இலக்கிய வரையறை

தலித் இலக்கியத்தினை வரையறை செய்து இதுதான் தலித் இலக்கியம் என்று ஒரு சட்டத்திற்குள் இதனை அடைத்துவிட முடியாது. ஏனெனில் “தலித் இலக்கியம் என்பதை இப்படித்தான் எழுத வேண்டும் என்று யார் வரையறுக்க நினைத்தாலும் அந்தக் கட்டுப் பாடுகளைத் தலித் இலக்கியம் தகர்க்கும். அது தலித் இலக்கியம் என்ற அமைப்பாக இருந்தாலும் கூட” என்று சிவகாமி உள்ளிட்ட சிலர் கருதுகின்றனர். தலித் மக்களின் இருப்பியலை நிலை நிறுத்தும் வண்ணம் இவ்விலக்கியம் தலித்கலப் பண்பாட்டினை மையப்படுத்துகிறது. சமூக நிறுவனங்களான மதம் போன்ற அமைப்புகளைக் கேள்விக்குட்படுத்துகிறது. மரபு சார்ந்த தொன்மங்களை இது உடைத்தெறிகிறது.

தலித் இலக்கியத்தின் வளர்ச்சி நிலை

அம்பேத்கரின் மறைவுக்குப் பின் 1960 களின் இறுதியில் ஔரங்காபாத்திலுள்ள கல்லூரி மாணவர்களும் ஊழியர்களும் தங்களின் இலக்கியத் தேடலைப் பரிமாறிக்கொள்ள ‘மிலிண்ட் ஷாகித்ய பரிஷத்’ எனும் அமைப்பினை ஏற்டுத்தினர். இவ்வமைப்பு ‘அஸ்மிதா’ என்ற காலாண்டிதழை வெளியிட்டது.

1967 இல் ‘மஹாராஷ்டிரா பௌத்த இலக்கிய அவை’ பம்பாயில் தலித் மாநாட்டினைக் கூட்டியது. இம்மாநாடு பம்பாய், ஔரங்காபாத், நாசிக், சோலாப்பூர் முதலிய பகுதிகளைச் சார்ந்த தலித் படைப்பாளிகளை ஒன்று சேர்த்தது. இம்மாநாட்டில் வெளியிட்ட ‘அகார்’ எனும் கவிதைத் தொகுப்பில் பாபுராவ் பாகுல், தயா பவார், அர்ஜுன் டாங்களே, பந்து மாதவ், பேராசிரியர் யாதவராவ் கங்குட்டே, சொக்கா காம்ளே, ஹீரா பான் சோடே முதலியவர்களின் படைப்புக்கள் இடம்பெற்றன.

பாபுராவ் பாகுலின் ‘என் சாதியை நான் மறைத்து வைத்த போது, ‘மரணம் மலினப்பட்டுப் போகிறது’ ஆகிய சிறுகதைத் தொகுப்புகள் மராத்திய இலக்கிய உலகை அதிர்ச்சியுற வைத்தன. 1969 இல் தான் தலித் இலக்கியம் என்னும் சொல்லாடல் மராட்டியத்தில் வழக்கத்திற்கு வந்தது எனத் தெரிகிறது. அறுபதுகளின் தொடக்கத்தில் தலித் படைப்புகள் அதிக அளவில் வெளிவரத் துவங்கின. இப்படைப்புகள் ‘சத்ய கதா’, ‘பிரதிஸ்தான்’, ‘மரத்வாடா’, ‘அம்ஹி’ ஆகிய இதழ்களின்வழி வெளிவந்தன. பின்பு 1972 இல் ‘மகோவா’ என்ற பழங்குடி இயக்கத்தினரின் இதழில் தலித் படைப்புகள் பல வெளிவந்தன.

மராத்திய இலக்கிய உலகின் மரபு சார்ந்த மதிப்பீடுகளை உடைத்தெறியும் வகையில் நாம் தேவ் தாசல் தலித் மக்களின் தீவிர வேதனையின் வெளியீடாகக் ‘கோல்பிதா’ என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். இது தலித் மக்களின் மொழியில் எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறே பேராசிரியர்

பி.இ.ஸோன் காம்ளேயின் 'அத்வானியின் சே பக்சி' என்ற படைப்பு தீண்டத்தகாதவரின் இளமைப் பருவத்தின் கொடுமையினை வெளிப்படுத்தும் படைப்பாகும். ஸ்ரீனிவாஸ் குல்கர்ணியின் 'ஈரடிப்பாட்டுகள்' குழந்தை மனத்தை ஆய்வு செய்யும் படைப்பாகவும் விளங்குகின்றன. இவற்றின் மொழி நடை கரடு முரடானவை. இவை குறித்து அர்ஜுன் டாங்ளே "ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்தைப் புரிந்துகொண்டு போற்றுவதற்குப் புதிய மதிப்பீடுகளை நாம் நிறுவ வேண்டியதைப் போல, அதன் மொழியைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு ஒரு புதிய அகர முதலி தேவைப்படுகிறது" என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் தலித் மொழி நடையின் போக்கினை அறிய முடிகிறது.

1978 முதல் 1986 வரை மராத்திய தலித் இலக்கியக் காலக் கட்டங்களில் தன் வரலாற்று காலமாகக் கருதப்படுகிறது. "ஒரு தன் வரலாறு என்பது ஒரு ஒடுக்கப்பட்ட எழுத்தாளன் வாழ்வோடு மட்டும் குறுகிப் போய்விடுவதில்லை. அது ஒரு சமூக அமைப்பின் விரிந்துரையும் சித்தரிப்பின் நீட்சியாகும்."

இத்தகைய வரலாற்று இலக்கியங்களுள் தயா பவாரின் 'பலூடாவும்', ஸோன் காம்ளேயின் 'அத்வானின்சே பக்சியும்' லட்சுமண் மானேயின் 'உபாராவும்' குறிப்பிடத் தகுந்தவை. "ஒடுக்கப்பட்டோர் இலக்கியம் என்பது வெறும் இலக்கியமல்ல. ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான இயக்கத்தோடு தொடர்புடையது. ஒரு புதிய சமூகத்தின், புதிய மக்களின் நம்பிக்கைகளையும் நாட்டங்களையும் இது பகர்கிறது. எனவே இது ஓர் இயக்கமாகும்." என்ற அர்ஜுன் டாங்ளேவின் கூற்றிலிருந்து தலித் அரசியல் இயக்கச் செயல்பாட்டினை முன்னிறுத்தியே தலித் இயக்கங்கள் படைக்கப்பட்டு வருகின்றன என்பதை அறிய முடிகிறது.

'சேரி மொழியின் செவ்விதின் கிளந்து', 'வினைவலர் பாங்கினும்', 'ஏவலர் பாங்கினும்' என்ற தொல்காப்பியரின் வரிகள் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிய குறிப்புகளாகக் கொள்ளத்தக்கன. சங்கப் பாடல்களில் இம்மக்கள் புலையர், புலைத்தி, இழிசனர், பறையர், பாணர், துடியர் என்ற பெயரில் அழைக்கப்பட்டனர். இடைக்காலத்தில் திருப்பாணாழ்வார் என்ற தாழ்த்தப்பட்டவரை வைணவச் சமயம் ஆழ்வார் நிலையிலிருந்து ஒதுக்கி வைத்தது. பிற்காலத்தில் சித்தர் பாடல்களில் சாதி ஒழிப்பைப் பற்றிய கருத்துக்களில் இம்மக்கள் இடம்பெற்றனர்.

17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய முக்கூடற்பள்ளு என்னும் சிற்றிலக்கியம் தமிழில் தோன்றிய முதல் தலித் இலக்கியம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் முக்கூடற்பள்ளு என்னும் சிற்றிலக்கியம் நிலவுடைமை வர்க்கத்தைச் சார்ந்த மேல்தட்டு மக்களின் நேரடிக் கண்காணிப்பில் பள்ளர்களின் வாழ்வியல் முறைகளைக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே மேல்தட்டு வர்க்கத் தன்மையுடன் வெளிப்படும் இவ்விலக்கியத்தைத் தமிழில் தோன்றிய முதல் தலித் இலக்கியமாகக் கருத வேண்டியதில்லை என்றும் பொ.வேல்சாமி உள்ளிட்ட சிலர் கருதுகின்றனர். தொண்ணூறுகளின் தொடக்கத்தில்தான் தமிழகச் சூழலில் தலித் இலக்கியம் தோற்றம் பெற்றது. இந்த இலக்கிய நிகழ்வின் பின்புலமாக அரசியல், சமூக நிகழ்வுகள் அமைகின்றன. அம்பேத்கரின் நாடு தழுவிய நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் (1992) இட ஒதுக்கீட்டைப் பரிந்துரை செய்யும் மண்டலக் குழுவின் அமலாக்கம் ஏற்கெனவே மராட்டியத்தில் தோன்றி வளர்ந்திருந்த தலித் இலக்கியச் சிந்தனைகள் ஆகியவை தமிழகத்தில் தலித் இலக்கியச் சூழல் உருவாவதற்கான அடிப்படையை ஏற்படுத்திக் கொடுத்தன எனலாம். இவற்றின் எதிரொலியாகக் கல்வி கற்ற தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் நடுவில் தன்மான உணர்ச்சி, சிற்றூர்களில் அம்பேத்கர் சிலைவைப்பு, பல்வேறு அமைப்புகளின் தோற்றம் ஆகிய பல

நிலைளில் தலித் எழுச்சி ஏற்பட்டது.

தமிழில் தலித் இலக்கிய முன்னோடியாக டேனியல் (1927-1986) கருதப்படுகிறார். இவர் ஈழத்துத் தீண்டாமைக் கொடுமையினை எதார்த்த வாத எழுத்துக்களில் வெளிப்படுத்தினார். நீக்ரோக்கள் தங்களைப் 'பிளாக் பாந்தர்' என்று அழைத்துக் கொண்டு வெள்ளையர் ஆட்சிக்கு எதிராகப் போராடினார். இதனைப் பின்பற்றி மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த தலித் போராளிகள் 'தலித் பாந்தர்' என்ற இயக்கத்தை 1972 இல் பம்பாயில் தோற்றுவித்தனர். இந்த இயக்கத்தினரின் போராட்டம் அனைத்து மக்களையும் கவர்ந்தது. மராட்டியத்தில் தலித் இலக்கிய வளர்ச்சிக்கும் இவர்கள் காரணமாயினர். தமிழகத்தில் மதுரையில் 1978 இல் இந்த இயக்கம் தோற்றம் பெற்றது.

தமிழில் தலித் இலக்கியங்களின் தோற்றம்

காந்தியடிகளின் தீண்டாமை இயக்கம், சிங்காரவேலரின் நாத்திக இயக்கம் ஆகியவற்றின் காரணமாகத் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு குறித்த நிகழ்வைக் கு.ப.ராவின் 'புறச்செங்கான்' என்ற கதையும் ஒடுக்கப் பட்டவர்கள் உண்டு என்பதை ந.பிச்சமூர்த்தியின் 'அடகு' என்ற கதையும் எடுத்தியம்புகின்றன. மேலும் புதுமைப்பித்தனின் 'கடவுளின் பிரதிநிதி', 'புதிய நந்தன்' போன்ற கதைகளும் குறிப்பிடத்தக்கன. ஆனால் தொடக்கக் காலத்தில் தமிழ் நாவல்களை ஆதிக்கச் சாதியினர் மட்டுமே படைத்துள்ளனர். எனவே அவர்கள் தங்கள் சமுதாயத்தினரை மேன்மைப் படுத்தும் நோக்கில் அவற்றை எழுதியுள்ளனர். அவற்றில் 1925 இல் இடைக்காடரால் எழுதப்பட்ட 'நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்' என்ற புதினம் குறிப்பிடத்தக்கது.

மேலும் 1927 இல் 'முருகன் ஓர் உழவன்' என்ற புதினத்தைக் கா.சி.வேங்கடரமணி படைத்தார். இதில் ஆதிக்கச் சாதிக் கதைமாந்தர் உயர்வான குணம் உடையவராகவும் தாழ்ந்த சாதிக் கதை மாந்தர் தாழ்வான குணம் உடையவராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து அவர் 1932 இல் 'தேச பக்தன் கந்தன்' என்ற மற்றொரு புதினத்தையும் படைத்துள்ளனர். இந்தப் புதினத்தில் ஆதிக்கச் சாதியினரைப் படித்தவர்களாகவும் சமுதாய விடுதலையில் அக்கறையுள்ளவர்களாகவும் படைத்துள்ளதோடு தலித் சமுதாயத்தினரைக் குடிகாரர்களாகவும் திருடர்களாகவும் படைத்து அவர்கள்மீது பரிதாபப்படுகிறார். 1937 இல் எச்.நெல்லையப்பர் என்பவரால் 'காந்தமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி' என்ற புதினம் படைக்கப்பட்டுள்ளது. 1948 இல் 'சர்க்கா' என்ற பி.எம்.இராஜகோபாலனின் புதினத்தில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் இடம்பெற்றன.

பின்னர்க் கல்கி, வல்லிக்கண்ணன் போன்றோர் சமுதாயச் சமத்துவத்தைத் தங்கள் படைப்புகளில் முன் வைத்தனர். தொடர்ந்து டி.செல்வராஜின் 'மலரும் சருகும்' போன்ற புதினங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க்கையை வர்க்கத்தின் அடிப்படையில் அணுகின. ராஜம் கிருஷ்ணனின் 'அலைவாய்க் கரையில்', 'குறிஞ்சித்தேன்' போன்றவை பாட்டாளி மக்களின் பிரச்சனைகளை எடுத்துக் கூறின. 1978 வரை படைப்பாளர்கள் தலித் மக்களின் வாழ்க்கையைப் பொருளாராதச் சுரண்டலாக மட்டும் பார்த்தனர். மராட்டியத்தில் தலித் இலக்கியம் தோன்றின பின்பு தமிழிலும் 'தலித்' மக்களின் வாழ்வைக் கருவாகக் கொண்ட இலக்கியப் படைப்புகள் தோன்றின. தமிழில் தலித் **இலக்கியங்களின் வளர்ச்சி**

தமிழில் தலித் இலக்கியம் அதன் முழுமையான பொருளில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோன்றியது. தலித்தியப் படைப்பாளர்கள்

சேரிகளில் வாழும் தலித் மக்களின் அவல வாழ்க்கையை வெளிப்படுத்துவதுடன் ஆதிக்க எதிர்ப்புக் கருத்துக்களைப் பரப்பித் தலித் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தங்கள் படைப்புகளைப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் எழுதி வருகின்றனர். தற்போது தலித் இலக்கியம் தனக்கென்று ஒரு தனி அடையாளத்தைப் பெற்றுள்ளது. தலித் அல்லாத விமரிசகர்களும் வெளியீட்டாளர்களும் வாசகர்களும் தற்போது தலித் அடையாளத்தை ஏற்பதிலும் தலித் இலக்கியத்தை அறிமுகம் செய்வதிலும் தன்முனைப்புக் காட்டி வருகிறார்கள். இந்த நிலையில் தமிழிலும் தலித் இலக்கியப் படைப்பாளர் குறித்து இரு வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவை

1) தலித் இலக்கியத்தைத் தலித் படைப்பாளர் மட்டுமே எழுத முடியும்.

2) தன்னைத் தலித்தாக உணரும் எவரும் தலித் படைக்கலாம் என்பன.

“தலித்துகள்தான் தலித் இலக்கியத்தைப் படைக்க வேண்டும் என்றாகிவிடும். இது வேடிக்கையாக உள்ளது.” என்று கோடாங்கி இதழ் குறிப்பிட்டுள்ளது. இதிலிருந்து தலித் சமுதாயச் சிக்கல்களில் அக்கறை உடைய தலித் அல்லாதவர்கள் தங்களைத் தலித்தாக உணர்ந்து தலித் இலக்கியப் படைப்பாளி சாதி, மதப் பற்றுகள் அற்றவராகவும் எதார்த்தத்தை எழுதுபவராகவும் இருக்க வேண்டும். என்றாலும் தலித்துகளே தலித் இலக்கியத்தைப் படைப்பது மிகவும் பொருத்தமானது.

முடிவுரை

சமூகத்தில் புறந்தள்ளப்பட்ட, விளிம்பு நிலையில் உள்ள ‘தலித்’ மக்களின் மனக்குமுறலை, உணர்வுப் பெருக்கை எடுத்து இயம்பும் வகையில் தலித் இலக்கியங்கள் தோன்றின. தலித் மக்களின் வாழ்வியல் பின்புலங்களை நன்குணர்ந்த படைப்பாளர்கள் அவற்றை வெளிப்படுத்த இலக்கியங்களைக் கைக்கொண்டனர். புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற இலக்கிய வகைகள் வழியே எடுத்துரைத்தனர். தலித் மக்களின் வாழ்வியல் விடுதலையாக இவ்விலக்கியங்கள் ஒலிப்பதைக் காணமுடிகிறது. இன்றைய கால இலக்கிய வளர்ச்சியில் தலித் இலக்கியங்களின் படிநிலை வளர்ச்சியடைந்தே காணப்படுகின்றது. சமுதாயத்தில் தலித் மக்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் அவமானங்களையும் உலகிற்கு உரக்கச் சொல்ல வேண்டும் என்ற முனைப்புடன் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளை உருவாக்கி வந்துள்ளமையைக் கண்டுணர முடிகிறது. ‘தலித்’ இலக்கியங்கள் இன்றளவு தவிர்க்க இயலாத இலக்கியமாக வளர்ச்சி பெற்று வருவதைக் காணமுடிகிறது. தலித் இனத்தைச் சார்ந்தவரும் சாராதவரும் தங்கள் படைப்பில் தலித் மக்களின் வாழ்வியல் நிகழ்வை உணர்வோடு அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்து வருகின்றனர். கால மாற்றத்திற்கு ஏற்பத் தலித் இலக்கியங்களின் வகையும் வடிவமும் பாடுபொருளும் வளர்ச்சியடைந்து வருவதை இவ்வியல் வழியே தெள;ளத் தெளிவாக அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. இராஜேந்திரசோழன், தலித்தியம், உதயம் வெளியீடு, மயிலம், மு.ப.1997.

2. க.ப.அறவாணன், தமிழ் சமுதாய வரலாறும் தமிழ் இலக்கியச் சமூகவியலும், தமிழ்க்கோட்டம், புதுச்சேரி, மு.ப.1992.

3. மோகன்லார்பியர், தலித் விடுதலைக்கான அரசியல், தலித் ஆதார மையம், மதுரை.

4. தலித் விடுதலையும் திராவிடர் இயக்கமும், தி.பெ.கமலநாதன், தமிழில் ஆ.சுந்தரம்.

5. மனுதர்ம சாஸ்திரம், அத்தியாயம்-10; ஸ்லோகம்-48.

© 2026 செல்லப்பா அ, முனைவர்.கவிதா மி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 204–208
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

பூமணி சிறுகதைகளில் சமுதாயம்

முனைவர். மைக்கேல் சைனி பி*

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை, *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். மைக்கேல் சைனி பி — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00092	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

கரிசல் இலக்கிய படைப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர் பூமணி ஆவார். அவரது படைப்புகளில் எதார்த்த வாழ்வியல் மையம் கொண்டுள்ளன. பசி, தாகம், வறுமை, தண்ணீர்த் தட்டுப்பாடு, விவசாயத்தின் நிலையற்ற தன்மை ஆகியவை இந்த சமூக அவலத்தின் பல்வேறு முகங்களாக அமைகின்றன. இவை மிகைப்படுத்தப்பட்ட பரிதாபக் காட்சிகளாக அல்லாமல், அன்றாட வாழ்க்கையின் இயல்பான நிகழ்வுகளாகக் கதைகளில் இடம்பெறுகின்றன. இதனால் பூமணியின் சிறுகதைகள் கரிசல் மக்களின் துன்பத்தைப் பதிவு செய்வதோடு, அவர்களின் உழைப்பு, மன உறுதி, மண்ணுடனான உறவு ஆகியவற்றையும் வெளிப்படுத்துகின்றன. கரிசல் நில மக்களின் வாழ்வியலை சிறுகதைகளில் பூமணி பதிவு செய்யும் பாங்கினை எடுத்துரைப்பதாக கட்டுரை அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: திறவுச்சொற்கள்: கரிசல் சமுதாயம் - உணவுப் பண்பாடு - விவசாயம் - வறுமை -வாழ்வியல் - குருதி - உழைப்பு - யதார்த்தம் - கதைக்களம் - மண் - உழவன் - பசி - தாகம் - சுமை - உறவு - தெய்வ வழிபாடு

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பி, மு. மை. சை. (2026). பூமணி சிறுகதைகளில் சமுதாயம். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 204–208. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8467

முன்னுரை

ஒவ்வொரு படைப்பாளியின் கதைகளையும் ரசனையின் அடிப்படையில் சில படிமங்களாகவேத் தொகுக்கலாம். கரிசல் மண்ணில் ஆழக் கோடிழுக்கும் எழுத்துக் கூர்மை பூமணியின் சிறுகதைகளின் காணக் கிடைக்கின்றன. எழுத்தில் நீரின் தன்மையையும், தீயின் வெம்மையையும் அவரது எழுத்துக்கள் மூலம் உணரலாம்.

'பூமணியின் கதைகளை உறைந்து கறுத்த ரத்தத் துளிகளாகவே உணர முடிகிறது. இவரது எல்லாக் கதைகளிலும் இருப்பது தீவிரமான மானுட அவலம். ஆனால் அடிப்பட்ட காயத்திலிருந்து வழியும் குருதியாக அவை இல்லை, என்றோ எப்போதோ பட்ட அடியில் இருந்து சொட்டி உலாந்து கருகி கரிப்பொட்டாக ஆகி எஞ்சியிருக்கும் குருதி தொட்டு முகர்ந்தால் மட்டுமே அது குருதி என்று தெரிகிறது. எனும் வரிகள் பூமணியின் சிறுகதகள் பயணிக்கும் கதைக் கனத்தை, கரிசல்

வெளியைக் கண்முன் காட்டுகின்றது. இவ்வாறு பூமணியின் கண்மணி வழிக் காணும் சிவந்த மண்ணில் எழுதப்பட்ட, மக்களின் வாழ்வியல் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

சமுதாயம்

'சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒரு கட்டமைப்பாகும். ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைய் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும். இது மக்கள் ஒன்றுகூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓரிடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும் என்று வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது.' (வாழ்வியற் களஞ்சியம் தொகுதி.5', ப.469). சமுதாயம் சமூக வாழ்க்கையின் அனைத்து நிலைகளையும் கொண்டிருக்கின்ற சிறிய நிலப்பகுதியிலுள்ள குழுவைக் குறிப்பதாகும்.

பூமணியின் சிறுகதைகளில் காணப்படும் இலக்கியச் சுவை

'இலக்கியச் சுவை' என்ற சொல்லாட்சி குறித்து இலக்கியத் திறனாய்விற்கு கோட்பாட்டாளர்கள் 'ஒரு புறவயமான குறியீட்டு அமைப்பினை முகாந்தரமாகக் கொண்டு மனதில் கற்பனை மூலம் நிகழ்த்தப்படும் அனுபவம்' (ஜெயமோகன் 'பூக்கும் கருவேலம்', ப.49) என்று 'இலக்கியச் சுவை பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

கண், காது, மொழிப்புலன் ஆகியவை தொட்டு உணரும் உணர்ச்சிகள் வேறு. 'படைத்தல்' அனுபவம் என்பது வேறு.

பூமணி அவர்களின் சிறுகதைகளில் காணக்கிடைக்கும் 'இலக்கியச் சுவை' யானது, ஒருவரை 'ஆர்வமூட்டும் அத்த மனத்தாவல்' போல் இருக்கும். ஒரு 'சாக்லேட்' என்பது ஒரு குறியீட்டுப் பொருள். ஒரு கவிதைப் படிமம் போல நாக்கை ஊடகமாகக் கொண்டு மனதில் விரிந்த அனுபவத்தை உருவாக்குகின்றது சாக்லெட். படிமமும் மொழிப்புலத்தை ஊடகமாகக் கொண்டு அதையே நிகழ்த்துகிறது. ஆகவே சுவையனுபவம் என்பது பொதுவானதுதான். பூமணியின் கதைகளில் 'பழக்கம்' மற்றும் 'புதுமை நாட்டம்' ஆகியவற்றாலான முரணியக்கத்தைக் காணலாம்.

பூமணியின் கதைக்களம்

சென்னை வாழ்வினைப் பற்றிக் கூறும்போது, 'சென்னை நகரில் கவிதை எழுதுவது என்பது நடக்காத காரியம். வேண்டுமானால் செய்யுள் எழுதலாம். இதை ஒரு போர்டில் எழுதி எழும்பூர் ரயில் நிலையத்திலும் சென்டிரல் ரயில் நிலையத்திலும் தொங்கவிட்டால் இங்கே குடியேறுவதற்காக வரும் உண்மைக் கவிஞர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக, இருக்கும்' என்று கு. அழகிரிசாமி குறிப்பிடுகிறார்.

முக்கால்வாசி பேர்கள் இந்தத் தலைமுறையிலும் போன தலைமுறையிலும் கிராமங்களிலிருந்து எழுதத் தொடங்கி பிறகு நகரங்களை நோக்கி நகர்ந்தார்கள். வாழ்வு முறைக்கான மையம் நகரமாக இருந்தாலும் கதை மையமாக கிராமிய வாழ்க்கை முறையை, வேளாண் எழுத்தாளர்கள் சிலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுள் ஒருவராக பூமணி காணப்படுகிறார்.

'நகரம் அவருக்குள் பதிவாகவில்லை அவருக்குள் கிராமத்தான் இன்னும் சப்பணமிட்டு அட்டணைக்கால் போட்டு உட்கார்ந்திருக்கிறான். எந்த இடத்தில் முனைத்து வந்ததாரோ அந்த வட்டாரமும், எந்த காலத்தில் அவர் உதயமாகிப் பதியமானாரோ அந்த வரலாறும் தான் பூமணியின் படைப்புக்களாக வருகின்றன' (பூமணி, 'பூமணி கதைகள்', ப.1).

'சென்னை மாநகருக்கு வந்து உயிர்ப்பற்ற பொட்டல் வெளியில் தன்னந்தனியாய் முளைத்து வெக்கைக் காற்றுக்கு ஆடும் புல் போல் வெருள வெருளத்தான் பார்க்கிறார்.

'கால்ல ஒட்டுன கரிசக்காட்டு மண்ணா

சீலைல ஒட்டுன செவக்காட்டு மண்ணா' (மேலது, ப.9)

என்று உதறிவிட முடியாமல் பிறந்த மண்ணோடு அதன் உறவுகளோடு நீ உண்டு. நான் உண்டு என்று தான் ஒட்டிக்கொண்டு நிற்கிறார்.'

உணவு முறைகள்

மக்கள் தங்கள் பசியைப் போக்கிக் கொள்வதற்காக, உணவு உண்கின்றனர். அவ்வுணவுப் பழக்கமானது, மக்கள் வாழும் நிலம், அந்நிலத்தில் விளையும் பயிர் தட்ப வெப்பநிலை போன்றவற்றுக்கேற்ப அமைகின்றது. வானம் பார்த்த பூமியான கரிசல் நிலத்தில் வாழும் மக்கள் கம்பு, குதினரவாலி, சோளம், சானம், வரகு, கேழ்வரகு போன்ற சிறுதானிய வகைகளை முக்கிய உணவாக உட்கொள்கின்றனர். காணப்பயிறு, தட்டைபயிறு, பாசிப்பயிறு போன்ற தங்கள் நிலத்தில் விளையும் பயறு வகைகளையும் துணை உணவாகக் கொள்கின்றனர். கரிசல்காரர்களின் முக்கிய உணவு கஞ்சியும், களியும், கூழும் ஆகும். கரிசல் மக்களுக்கு நெல்லுச்சோறு என்பது ஓர் ஆடம்பரமாகக் கருதப்பட்டது. நெல்லும் சோற்றினைக் கல்யாணம், சடங்கு போன்ற விழா நாட்களிலும் பண்டிகை நாட்களிலும் உட்கொண்டனர்.

'மிக எளிய உணவுகளின் சுவைகளாலானதாகப் பூமணியின் புனைவுலகம் விரிந்து கொண்டே இருக்கிறது. கம்பங்கூழ் மீது படரும் ஆடை, கலத்தில் இருந்து கையால் அள்ளி வைக்கும் புளித்த கஞ்சியின் வாடை, பலவகையான சிறு பறவைகள், அணில்கள், கறிச்சுவைகள், 'சக்கணன் கோவைக் கொடியிலிருந்து இலைகளை ஆய்ந்து கொண்டிருந்தான். கல்லை வாங்கி அவக்கென்று இழுத்தரைத்து இலை நசுக்கலை விரலால் வழித்தான் கருப்பன். . . அதைப்புழிஞ்சு உப்புல ஒரு செரங்க குடிச்சா தாவல' என வரும் மருத்துவச்சகவைகள்' எனத் தகவல்கள் அவர் சிறுகதைகளில் கொட்டிக் கிடக்கின்றன.

உணவுக்கு இடையில் வறுமையும் ஊடாடுவதைக் காணலாம்

'இன்னைக்குக்கூட மதியக்கஞ்சி குடிக்கல. குடிக்கணும்னு பானையைத் தொறந்து பாத்தென். தண்ணிதான் கெடந்துச்சு. சின்னம்மாளக் காணும். அழுக வந்துருச்சு. அடக்கீட்டு பேசாம இருந்துக் கிட்டென்.' (மேலது, ப. 22)

'இயற்கை என்ற புகழ்பெற்ற பேருரையில் எமர்சன் நிலமே மொழியாகிறது' என்கிறார். பூமணியின் கரிசலே அவரது மொழியாக இலக்கியமாக ஆகியிருக்கிறது. அவரது படைப்புகளின் எல்லாச் சுவைகளும் அந்நிலத்தின் சுவைகளே ஆகும்.

விவசாயம்

கரிசல் காட்சிவெளியாக அவரது சிறுகதைகளில் காட்டப்பட்டிருக்கும். 'பொழுதடைய இன்னும் கொஞ்சம் நேரந்;தான் இருந்தது. எலுமிச்சம் பழத்தை மெல்ல மெல்ல விழுங்கிய மாதிரி மலமுகடுகளுக்கிடையில் பொழுது நழுவிக் கொண்டிருந்தது' எனக் கரிசலில் அந்திப்பொன்னிறம் கொள்வதைக் கூடச் சர்வ சாதாரணமான அழகியலும் சொல்லிச் செல்கிறது பூமணியின் பார்வை. 'தண்ணீர் வாய்க்கால் வழியாகக் கிழக்காமல் அலுப்புத் தீர ஓடி தெற்கே அடர்ந்து வளர்ந்த மிளகாய்ச் செடித் தோட்டத்துக்குள் நுழைந்தது. பூவும் பிஞ்சுமாகப் பூரித்து நிற்கும் செடிகளுடே தண்ணீர் ஓடுவதைப் பார்த்தால் ஒரு கானகத்துக்குள் ஆறு ஓடுவதைப்

போல பிரமை' எனக் குழந்தைத் தனமான விவரணை சட்டென்று 'காய்ந்து சிறு விருவோடிய நிலத்தில் நீர் நனைக்கவும் ஆவி விட்டு நீர்த்து பொருமிப் பூரிக்கும் கண்ணிலிருந்து குளுமையான மணம் கிளம்பியது' என நுண்ணிய அனுபவப் பதிவாகவும் ஆகிறது.
விவசாயத் தொழிலை மேற்கொள்பவர்கள், உழவன், உழத்தி என்ப பண்டையத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் தம் உழைப்பை நிலத்தின்பால் செலவிட்டு நிலத்தை விளைநிலமாக மாற்றிய பெருமைக்குரியவர்கள். வளர்ந்து வரும் நவீன மாற்றங்கள் விவசாயத் தொழிலுக்குப் பலவகையான இடப்பாடுகளையும் கொடுத்த வண்ணம் உள்ளன.

விவசாயத் தொழிலானது மண்ணையும் விண்ணையும் நம்பியதொரு தொழில், இடைவிடாது பயனை அளிக்கவும் மண் தன்னுடைய வளமையை இழந்துவிடும் என்பது வேளாண் விஞ்ஞானிகளின் கருத்து. விவசாயம் நடைபெறத் தண்ணீர் மிகவும் தேவை ஆனால் தண்ணீர் கிடைப்பதில் இயற்கையின் பங்கு சீரானதாக இல்லை.

'எங்க அண்ணன் பெரியாளாயிட்டான். அண்ணா அவுக வீட்ல சம்பளத்துக்கு இருக்கான். ஒரு நானைக்குத் தண்ணி பாய்ச்சுவான். ஒரு நாளைக்குக் கமல எறப்பான்' எனும் ஆசிரியரின் கூற்று விவசாயிகளின் உற்பத்தியினை உணர்த்துகிறது.

மண்ணைக் கிண்டி மண்ணில் வாழ்ந்து மறையும் பெரிய மண்ணாடி மண்ணின் ஒரு பகுதியாகவே தோன்றும் அந்த மகத்தான பிரமையே சிறுகதைகளை இலக்கியமாக ஆக்குகிறது. அதன்பின் மண்ணின் சுவையை ஒவ்வொரு வரியிலும் தேக்கிக் காட்டியிருக்கிறது.

பிறநுண்கலைகளிலிருந்து, இலக்கியத்தைப் பிரிப்பது இந்த அம்சம் தான். இலக்கியத்தின் 'எலும்புக் கட்டமைப்பு' ஆக வாழ்வியல் கூறுகள் இருக்கின்றன. பெரும்பாலும் இலக்கியப் படைப்புகளின் வடிவத்தைத் தீர்மானிப்பதும் இதுவே. 'இலக்கியப் படைப்பில் மிகவும் பருண்மையான கூறும் இதுவேயாகும். சமூகத்திற்கும், படைப்புகலைக்கும் உள்ள உறவு, பிரிக்க முடியாததும் புறக்கணிக்க இயலாததுமாகும். படைப்பாளியின் படைப்பு அவரைச் சமூகத்திலுள்ள மக்களுடன் இணைக்கிற சங்கிலியாகவும், பாலமாகவும் அமைகிறது. சமூகத்தின் மீதான கருத்துக்கள், கணிப்புகள் குறிக்கோள்கள், வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகள் அளவுகோல்கள் போன்றவை கலைப் படைப்பு உருவாகக் காரணமாக அமைகின்றன.

தொகுப்புரை

பூமணியின் கரிசலே அவரது மொழியாக இலக்கியமாக ஆகியிருக்கிறது. அவரது படைப்புலகின் எல்லாச் சுவைகளும் அந்நிலத்தின் சுவைகளே ஆகும். விவசயாத் தொழிலானது மண்ணையும் விண்ணையும் நம்பியதொரு தொழில், இடைவிடாது பயனை அளிக்கும் மண் தன்னுடைய வளமையை இமந்துவிடும் என்பது வேளாண் விஞ்ஞானிகளின் கருத்து. விவசாயம் நடைபெறத் தண்ணீர் மிகவும் தேவை ஆனால் தண்ணீர் கிடைப்பதில் இயற்கையின் பங்கு சீரானதாக இல்லை. மண்ணைக் கிண்டி மண்ணில் வாழ்ந்து மறையும் பெயிய மண்ணாடி மண்ணின் ஒரு பகுதியாகவே தோன்றும் அந்த மகத்தான பிரமையே சிறுகதைகளை இலக்கியமாக ஆக்குகிறது. அதன்பின் மண்ணின் சுவையை ஒவ்வொரு வரியிலும் தேக்கிக் காட்டியிருக்கிறது. கரிசல் தமிழ் இலக்கியத்தில் அழியாத இடம் பெற்றது

முன்வேலிக்குள்; சிக்கிக்கொண்ட கிழிந்த துணியெனப் படபடத்தபடியே ஆகாசத்தில் ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கும் சூரியனும், ஆட்டு உரல்களில் கூட நிரம்பி வழியும் வெயிலும், குடிநீருக்காக அலைந்து திரியும் பெண்களும், தாகமும், பசியும் அடங்காத காட்டு தெய்வங்களும் கொண்டதுதான் கரிசல் வெளி. வாழ்நாளெல்லாம் உழைத்தவர்கள் உணவே கடவுளாகத் தவமிருக்கும் அந்தக் காட்சி அளிக்கும் ஆழமான வலி நிறைந்த வாழ்வுத் தழும்புகள் பூமணியின் பல சிறுகதைகளைக் கனம் மிக்கவை ஆக்குகின்றன என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

துணை நூற்பட்டியல்:

1) வாழ்வியல் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

2) பூமணி சிறுகதைகள், காலச்சுவடு பதிப்பகம்

© 2026 முனைவர். மைக்கேல் சைனி பி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 209–214
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கன்னியாகுமரி மாவட்ட காணிக்காரர்கள் வழிபாட்டு முறைகள்

முனைவர் .விஜயலட்சுமி ச*

உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, நியூ பிரின்ஸ் ஸ்ரீ பவானி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, சந்தோசபுரம், சென்னை - *600073., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் .விஜயலட்சுமி ச — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00091

Abstract / ஆய்வுச்சுருக்கம்

மனித இனம் ஐம்பூதங்களின் அற்புதங்களைக் கண்டு வியந்து அவற்றை வணங்கத் தொடங்கியமையே கடவுள் நம்பிக்கையின் தொடக்கமாகும். இயற்கையின்பால் கொண்டுள்ள அச்சமே மக்கள் சமுதாயத்தைக் கடவுள் நம்பிக்கைக்குக் கொண்டு சென்றதென்பது மானிடவியலாரின் கருத்து. நிலம் மற்றும் வாழும் இருப்பதை வைத்தே அவர்களின் நம்பிக்கை வழியாகக் மக்களிடையே நிகழ்த்தும் செயல்பாடுகள் கடவுளைக் காணமுடிகின்றது. இது அவர்கள் வாழ்கின்ற நிலப்பகுதியின் சூழ்நிலையின் காரணமாகவும், அது பயத்தின் விளைவாகவும் இருக்கலாம். இதனை, "இயற்கையின் சக்திகளைக் கண்டு அச்சமடைந்த மனிதன் அவற்றில் உயிர்ப்பு இருப்பதாக எண்ணினான். இறந்தவர்களது ஆவிகள் தங்களுடனேயே வாழ்கின்றன. அவற்றின் ஆட்சியே இயற்கைச் சக்திகளாக வெளிப்படுகின்றன என்றெல்லாம் காணிக்கார்கள் நம்பினான். எனவே இவை குறித்த நம்பிக்கைகளும் இயற்கையின் மீதான அச்சமுமே கன்னியாகுமரி காணிக்கார பழங்குடிமக்களிடையே கடவுள் நம்பிக்கையாக உருவெடுத்தன"இது 'இறப்பு, நோய்கள் முதலானவற்றை இயற்கையின் கோபமாக நம்பி வணங்கிய நிலையிலிருந்து பல வகையில் வழிபட்டுவருகின்றனர் அதனை ஆய்வதாகவே இந்த ஆய்வு அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: காணி; காணிக்கார்கள்; கொடுதி; காலட்டுப்பேய் கொடுதி; கார்த்திகை கொடுதி; ஆவிக்கொடுதி; மழைக்கொடுதி.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ச, மு. . (2026). கன்னியாகுமரி மாவட்ட காணிக்காரர்கள் வழிபாட்டு முறைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 209–214. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8469

முன்னுரை

இந்தியாவின் கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பெரும்பகுதியைத் தன்னுள் கொண்டு, மிகுந்த இயற்கை வளம் மிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. கல்வி யிலும் அறிவில் துறையிலும் வளர்ச்சி பெற்றவர்கள் அதிகமிருக்கும் இம்மாநிலத்தில், மிகவும் பின்தங்கிய நிலையில் பல வகைப்பட்ட பழங்குடிமக்கள்

வாழ்கின்றனர் . இவர்களில் பெரும்பான்மையோர் மலைப்பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள். "தமிழ்நாட்டின் வடபகுதிகளிலிருந்தும் (காஞ்சிபுரம், மதுரை, திருநெல்வேலி மற்றும் இவற்றைச் சார்ந்துள்ள பகுதிகளிலிருந்து) மலைப்பகுதிகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்த பழங்குடியினருடன் கலந்து நிரந்தரமாகத் தங்கி விட்டவர்கள் மிக்க உள்ளனர், அதில் குறிப்பாக, தமிழகத்தின் சமவெளிப்பகுதிகளில் காணப்படும் காணிக்காரர்களின் சமயத் தொடர்பான நம்பிக்கைகளும். இயற்கை, ஆவி, சிறுதெய்வ வழிபாட்டு முறைகளும் பழக்க வழக்கங்களும் முற்காலந்தொட்டே தொடர்ந்து இன்று வரை காணமுடிகின்றன. அவர்களின் வழிபாட்டு முறைகளில் தனித்து காணப்படும் கன்னியாகுமரி மாவட்ட காணிக்காரர்கள் வழிபாட்டுமுறைகள் பற்றி மட்டுமே ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கமாகும்.

காணி சொல் விளக்கம்

காணி என்பது நிலத்தைக் குறிக்கும். நிலத்திற்குச் சொந்தக்காரரைக் (மலை நிலத்தை ஆள்பவர்) காணிக்காரர் எனக் கூறுவர். இவர்கள் பொதிகை மலையிலுள்ள அகத்தியர் சிகரம் கடல் மட்டத்திலிருந்து 6000 அடி உயரமுடையது. காணிக்காரர்களின் குருவாகிய அகத்தியமுனிவர் அகத்தியர் சிகரத்தில் இன்றும் தவம் செய்து கொண்டிருப்பதாகக் காணிக்காரர்கள் நம்புகின்றனர். எனவே மலைவாழ்மக்களாகிய காணிகள் வருடத்திற்கொருமுறை பாபநாசத்தில் இருக்கும் அகத்தியர் மலைக்குச் சென்று வழிபடுவதுடன் அம்மலையைப் புனித மலையாக நினைத்துப் போற்றுகின்றனர். பொதிகை மலைப்பகுதியில் வாழ்ந்து வந்த காணிக்காரர்கள் இடைக்காலத்தில் மழைவளம் குறைந்துவரவே, தொழில், உணவு, நீர்வளம், நிலவளம் போன்றவற்றின் வசதிதேடி இடம் பெயர்ந்து செழிப்புள்ள குமரி ஓலைப்பகுதிகளில் குடியமர்ந்தனர். அவ்வாறு குடியமர்ந்த **'காணியர் எனப் பொதுவாக வழங்கப்படும் காணிக்காரர் தென்திருவிதாங்கூர் மலைகளை வாழ்விடமாகக் கொண்ட காட்டினக் குடிகளாவர்'** எட்கர் தர்ஸ்டன் (எட்கர் தர்ஸ்டன், 1975:120) அவர்கள் குறிப்பிடுள்ளார்.

மேலும் "**மதுரையில் பாண்டிய மன்னர்களை எதிரிகள் தாக்கித் தோல்வியுறச் செய்த போது மன்னரின் மெய்க்காவலர்கள் பயந்து தென்மாவட்டங்களில் ஓடி ஒளிந்தனர். ஒளிந்தவர்களில் சிலர் நெல்லை மாவட்டத்திலுள்ள பொதிகை மலைப்பகுதியில் அகத்திய முனிவரைக் கண்டு ஆறுதல் பெற்று மலைப்பகுதிகளில் குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்கள் கையில் வேல் வைத்திருந்தனர். அந்த வேலன்மாரே காணிக்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள் என ப. சூரியன் விளக்கம் தருகின்றார்**. " (ப. சூரியன் காணி, வயது 58, V), மேலும் இக்குறிப்பிகள் இருந்து பார்க்கையில் காணிக்காரர்கள் மலைப்பகுதியில் இருப்பிடம் கொண்டவர்களாகவும் அவர்களின் அடையாளமாக கையில் வேல் கருவியினை வைத்திருக்கும் மக்களாகவும் இருப்பதை அறியமுடிகிறது.

காணிக்காரர்கள் வழிபடும் தெய்வங்கள்

காணிக்காரர்கள் ஐம்பூதங்களோடு, சூரியன், சந்திரன், கல், மரம் போன்ற இயற்கைப் பொருட்களையும் வழிபடுகின்றனர். இறந்தோரின் ஆவி மற்றும் வனதேவதைகள் குறிப்பாக மலங்காளி, வாழாற்றுமாடன், காலாட்டுப்பேய், வடக்கன்பேய், வரம்பொதி ஆயன், அடங்காட்டு ஆயன், கரும்பாண்டியம்மன், பத்திரகாளி, மாரியம்மன், பேச்சியம்மன் போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட சிறுதெய்வங்களோடு இறந்தோரின் ஆவிகளையும் வழிபாடு செய்கின்றனர்.

இவ்வழிபாட்டு முறைகளிடன் ஆதிச்சன் வழிபாடு, பால்மரங்கள் வழிபாடு, சிலைகளற்ற வழிபாட்டு முறை, கொடுதி வழிபாட்டு முறைகள் முதலானவைகளும் வழிபுகின்றனர். அவற்றில் தனித்துவமாக காணப்படும் கொடுதி வழிபாட்டு முறைகள் மட்டும் இக்கட்டுரையில் விரிவான முறைகளில் இப்பகுதியில் காணலாம்.

ஆதிச்சன் வழிபாடு

இயற்கைத் தெய்வங்களுள் ஆதிச்சன் வழிபாடு (ஆதித்தன், சூரியன்) சிறப்பிடம் பெறுகிறது. வாழ்க்கைக்குத் தேவையான எந்தச் செயலையும் செய்ய முற்படும்போது, முதலாவதாக திறந்த வெளியில் புது மண்பானையொன்றில் அரிசிப் பொங்கல் செய்து; தலைவாழை இலைவிரித்து, பொங்கல், பூ, பழம், குங்குமம், பஸ்பம் ஆகியன படையலிட்டுக் குந்திரிக்கம் (சாம்பிராணி) புகைத்து சூரியபகவானை நோக்கி வணங்குகின்றனர். பொங்கலினை அனைவருக்கும் பகிர்ந்தளித்து நினைத்த காரியத்தைத் தொடங்குகின்றனர். ஆதிச்சன் வழிபாட்டின் முக்கியத்துவம் குறித்து வினவியபோது, காட்டில் வாழும் எங்களுக்கு ஆதிச்சன் இல்லையெனில் வாழ்க்கையேது என்ற நிலையில் இடம்பெற்றுள்ளனர்.

பால்மரங்கள் வழிபாடு

காணிக்காரர்கள் வேம்பு, வேங்கை, ஆல், அரசு, பலாப் போன்ற மரங்களில் தெய்வம் உறைந்திருப்பதால் அவற்றிலிருந்து பால்வடிவதாக நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவே அவை வழிபட வேண்டியன என்றும் கூறுகின்றனர்.

சிலைகளற்ற வழிபாட்டு முறை

சிறுதெய்வங்களில் மலங்காளியை முதன்மையான குலதெய்வமாக நினைத்து வழிபாடு செய்கின்றனர். சிறுதெய்வங்களுக்கெனக் காணிக்காரர்கள் உருவச்சிலைகள் வைப்பதில்லை. கூம்பு வடிவத்தில் அமைந்திருக்கும் கல்லைச் சிறிய மண்பீடத்தின் மீது வைத்து; அதனையே சிறுதெய்வங்களாக நினைத்து வழிபடுகின்றனர்.

கொடுதி வழிபாட்டு முறைகள்

கொடுதி என்பது காணிக்காரர்கள் வழிபடும் தெய்வங்களுக்கு எடுக்கின்ற கொடை போன்ற வழிபாட்டு நிகழ்வைக் குறிக்கும். இக்கொடுதி வழிபாடானது 1. காலாட்டுப்பேய்க் கொடுதி, 2.கார்த்திகைக் கொடுதி, 3. மலங்காளிக் கொடுதி, 4. ஆவிக்கொடுதி, 5. மழைக்கொடுதி என்ற பல நிலைகளில் காணிக்காரர்கள் வழிபட்டு வருகின்றனர்.

காலாட்டுப்பேய்க் கொடுதி

காணிக்காரர்கள் விபத்துக்கள், இயற்கையின் சீற்றம் போன்றவற்றினால் துன்பங்கள் ஏற்படும் சூழலில் தங்களைக் காலாட்டுப்பேய் பாதுகாக்கின்றது என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றனர். எனவே ஆண்டுதோறும் சித்திரை மாதம் கடைசிச் செவ்வாய்க்கிழமை இரவில் எல்லாக் குடியிருப்புகளிலும் காலாட்டுப்பேய்க்குக் கொடுதி நடத்துவர். கொடுதிக்கு முன்னர் ஏழு முழு வாழை இலைகளைச் சேர்த்து விரித்து அதன் மேல்; அவல், பொரி, பழம், தேங்காய், கமுகம்பூ, இளநீர், கள், சாராயம், இறைச்சி, மஞ்சணை (சுண்ணாம்பும் மஞ்சள் பொடியும் கலந்த கலவை), குங்குமம், பஸ்பம் ஆகியவற்றைப் படைத்து வழிபாடு செய்வர். அப்போது பிலாத்தியின் மீது துள்ளல் ஏற்பட்டு இரத்தப்பலி கேட்டால் கோழியைப் பிடித்து பலிகொடுப்பர், பின்னர் ஏனைய கொடுதி விழாக்கள் நடைபெறும் போதும் முதலில் காலாட்டுப்பேய்க்குப் படையலிட்ட பின்னரே கொடுதி விழாவை நடத்துகின்றனர்.

இவ்வழிபாட்டு முறையில் முதல் நிகழ்வாக படையல் முதன்மையானதாக இருப்பதை காணமுடிகிறது.

கார்த்திகைக் கொடுதி

வனதேவதைகளைக் கோபத்திற்குள்ளாக்கினால்; காட்டிற்குள் செல்லும்போது மரங்கள், பாறைகள், ஆறுகள் போன்றவற்றில் நிலைத்திருக்கும் வனதேவதைகள் தங்களை வழிமறித்து ஆபத்தான இடங்களில் கொண்டு விட்டு விடும். அதோடு அவை காட்டிலுள்ள விலங்குகள், பறவைகள் போல் காட்சியளித்துத் தங்களை அச்சுறுத்தும். கார்த்திகை மாதத்தில் கொடிய கொள்ளை நோய்களைத் தங்களுக்களித்துத் துன்புறுத்தும் என்றெல்லாம் வனதேவதைகள் மீது காணிக்காரர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

கார்த்திகை மாதத்தின் ஆரம்பநாள் முதல், கடைசி வெள்ளிக்கிழமை வரைக் காணிக்காரர்கள் தங்கள் குடியிருப்புகளில் இரவில் பசனைப்பாடி வனதேவதைகளை மகிழ்விக்கின்றனர். குடியிருப்புக்களில் கொடிய நோய்களைத் தராமல் தடுத்து நிறுத்தியதற்கும், வனத்தில் தங்களைப் பாதுகாத்து உதவியமைக்கும் நன்றிக்கடனாகக் கார்த்திகை மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை இரவில் பழுத்த வாழைக்குலைகளைக் காட்டில் படைத்து வனதேவதைகளை வேண்டி பசனைப்பாடி, பழங்களைக் காட்டின் நான்கு திசைகளிலும் வீசி எறிகின்றனர். எறியும் பழங்களை வனதேவதைகள் உண்டு மகிழும் என்பது காணிக்காரர்களின் நம்பிக்கை. இக்கொடுதி விழாவை; வனதேவதைகளுக்கு நன்றி செலுத்துவதோடு, அவற்றை அமைதிப்படுத்தி மகிழ்விப்பதாகவும் நம்பி, காணிக்காரர்கள் ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர்.

வனவிலங்குகளிடமிருந்துதங்களைப் பாதுகாப்பதற்காகக் காணிக்காரர்கள் மலங்காளியை வழிபடுகின்றனர். முதன்மையான குலதெய்வமாகிய மலங்காளிக்கு ஆண்டுக்கொருமுறை கொடுதி நடத்துகின்றனர். கொடுதி பெரும்பாலும் பங்குனி, சித்திரை, தை ஆகிய மாதங்களில் கடைசி வெள்ளிக்கிழமையன்று நடைபெறுகின்றது. குறிப்பிட்ட நாளன்று இரவு மலங்காளிக்குக் கோழி, ஆட்டுக்கடா போன்றவற்றை உயிர்ப்பலி கொடுத்து, தேங்காய், பூ, பழம், அவல், பொரி, பஸ்பம். கஞ்சா, மதுவகைகள், மாமிசம் போன்ற பொருட்களைப் படைத்து வழிபடுவர். வழிபாட்டின் போது மலங்காளியிடம் காணிமக்களாகிய தங்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களைக் களைந்து, காவல்காத்து உதவிகள் செய்திடுமாறு வேண்டுவர். அப்போது மலங்காளியின் பெருமையினைக் கூறிப் பாடுவர் அதனை

"**வெள்ளி வெளிக் கெரியுண்ணு வெண்கலங்கள் ஓசையிடுண்ணு**

தங்க வெளக் கெரியுண்ணு தழை நெறஞ்சக் காடாணு

கூந்தப் பள யாணு தணுப் பெடுக்குன்ன கானலாணு

ஏந்துப் பலகையின்னு தொண இருப்பா மலங்காளி

சங்கு மொழங்கிடாணு சுடுகாட்டுச் சண்டாளராணு

கானாற்றுப் பொய்கையாணு காவல் கொண்ட இடமாணு

காணிகள் நெங்களுக்கெல்லாம் நின் காவலே கேட்குனோம்

அம்மே மலங்காளீ!" (ச. விசோம்பரன் காணி, வயது -67, XIV) என்று பாடி முடிந்ததும் அவர்கள் கொக்கறை, சீங்குழல் போன்ற இசைக்கருவிகளை இசைத்து

ஒலி எழுப்புகின்றனர். அவ்வேளையில் பிலாத்தி மந்திரங்கள் சொல்லி மலங்காளியை வரவழைப்பார். தெய்வம் பிலாத்தியின் மீதோ அல்லது வேறு யாதானுமொரு காணியின் மீதோ வந்திறங்கி ஆடும்.

ஆவிக்கொடுதி

காணிக்காரர்களிடம் ஆவி வழிபாடு மிக அழுத்தமாக உள்ளது. பொதுவாக ஆண்டிற்கொருமுறை ஆடி மாதத்தில் வரும் அமாவாசை நாளன்று ஆவிகளுக்கு வழிபாடு நடத்துகின்றனர். இதனை நினைவுபடுத்தும் வகையில் '**பழங்குடி மக்களிடையே இறந்தவர்களின் ஆவிகள் தங்களைத் துன்புறுத்துகின்றன; அல்லது உதவி செய்கின்றன என்ற நம்பிக்கையில் அவை வணங்கப்பட்டன' என்னும் ஐ.சி. ஜார்வியின் (1972: 4)** கூற்று தொளிவுபடுத்துகிறது. இத்தகைய ஆவி வழிபாட்டினைச் 'சாவு வழிபாடு' என்று காணிக்காரர்கள் கூறுகின்றனர் யானை, புலி, பாம்பு போன்றவற்றால் இறந்தவர்களின் ஆவிகளை முறையே ஆனச்சாவு, புலிச்சாவு, பாப்பிச்சாவு என்றும்; வயது முதிர்ந்து இறப்பதை முதுசாவு என்றும்; திருமணத்திற்கு முன் இளம் வயதில் இறந்தால் கன்னிச்சாவு என்றும் பல பெயர்களில் இறந்தவர்களை அழைப்பதோடு, அவர்களுக்குத் தனித்தனியாகப் படையலிட்டும் காணிக்காரர்கள் கொடுதி வழிபாட்டு முறையினை நிகழ்த்திவருகின்றனர்.

மழைக்கொடுதி

நீர்வளத்தை மாரியாகக் காண்பது பழங்குடிமக்களின் மரபு. மலைவாழ் காணிக்காரர்கள் மழையை மாரியம்மனாக நினைத்து வழிபடுகின்றனர். மலைத்தெய்வங்கள், ஆவிகள் ஆகியவற்றிற்குக் கொடுதி கொடுக்காமையும், மக்களிடையே காணப்படும் ஒழுக்கமின்மையும் மழையின்மைக்குரிய காரணங்களாகி, மழை பெய்யாமல் வறட்சி தோன்றுகிறது; வருடந்தோறும் வழக்கமாகப் பொழியும் காடுகரிஞ்சான்', 'காடுதிருத்தான்' என்றழைக்கப்படும் மழைகள் பெய்யாவிட்டால், அவ்வருடம் பருவமழையும் பொய்த்துவிடும் என்பது காணிக்காரர்களின் நம்பிக்கை. காணிக்குடியிருப்புகளில் இருக்கும் முதியவர்கள் மழையின்மையால் மக்கள்படும் இன்னல்களை நினைத்துத் தெய்வங்களிடம் தினமும் தூங்குமுன்னர் இரங்கி வேண்டுகின்றனர். அப்பொழுது முதியவர்களின் கனவில் மழைத்தெய்வத்திற்குக் கொடுதி நடத்துமாறு கூறப்பட்டால், உடனே காணிக்காரர்கள் ஒன்று சேர்ந்து கொடுதி நடத்துவதற்குரிய இடம், நாள் ஆகியவற்றை முடிவு செய்வர். அவ்வழிபாட்டின் போது குறையிரந்து வேண்டல் முறையும் காணமுடிகிறது.

காணிக்கார்கள் இந்தமுறையினை பெரும்பாலும் குடிலின் முன்பகுதியில் ஏழு வாழை இலைகளில் சோறு, இளநீர், மதுவகைகள், கஞ்சா, வெற்றிலை, பழம், பூ, மஞ்சணப்பெட்டி, பஸ்பம் போன்றவைகளைப் படைத்து வைப்பர். பகல் பன்னிரெண்டு மணியளவில் காணித்தலைவர்களும், மக்களும் குறையிரந்து வேண்டும் நிகழ்ச்சி நடைபெறும் போது

"மேலுலவு பாட்டமாருக்கு குறிவந்து அணையினது

மேலுலவு பாட்டமாரு பூவுலகு செல்லினது

சாத்தனென்னும் மாயவனும் வாயுவைக் காணினது

சாத்தனென்னும் மாயாவு பூவுலகு சொரிச்சினது

வெள்ளிக்கதிரு பூமாடம் அவரு சொரிச்சினது

அவரு கண்டு கேட்டு அங்ஙனமே இருக்கினது

பந்திரெண்டு மல முத்திமாரும் பொன்னின்னா பூவுலவு

காணிக்குடிச் சாவுகளும் பொன்னின்னா பூவுலவு

நூற்றொண்ணு புத்திரமாரு பொன்னின்னா பூவுலவு

படச்ச படபொருளு அவரு கண்டு கேட்டு இருக்கிணது

இண்ணுதொட்டு ஏழாம்பக்கம் வருமிண்ணு பறயிணது"(ச.இராமன் காணி, வயது -70, 1) என்று பாடலைக் கூறி பிலாத்தி வெள்ளிக் கதிரு பூமாடத்திலிருந்து மழைக்காக வேண்டுவார். வெள்ளிக் கதிரு பூமாடம் என்பது கொடுதி கொடுப்பதற்கு அமைத்திருக்கும் பந்தலைக் குறிப்பதாகும். அனைவரும் குறையிரந்து வேண்டிக் கொள்ளும் போது சாத்தனென்னும் 'மாயாவு' ஆவிகளிடம் பூவுலகின் அடியாரது குறைகளைத் தீர்க்கும் படியாகக் கூறுவதாகவும்; அதற்கு உடன்பட்ட ஆவிகள் ஒன்றுசேர்ந்து தன் இனத்தாருக்கு மழைவளமும், விளைச்சலும் தந்திடும்படியாக மாரியம்மனிடம் வேண்டுவதாகவும் காணிக்கார்களின் நம்பிக்கை சார்ந்த முறையில் இவ்வழிபாட்டு முறை காணமுடிகிறது.

முடிவுரை

காணிக்காரர்கள் வழிபடும் தெய்வங்களுக்கு நிகழ்த்துகின்ற கொடை போன்ற வழிபாட்டு நிகழ்வைக் 'கொடுதி' என்றழைக்கின்றனர். கொடுதி விழாக்களின்போது காலாட்டுப்பேய்க்கு முதல் படையலிடுகின்றனர். வன தேவதைகளுக்குக் 'கார்த்திகைக் கொடுதி' நிகழ்த்தினால் கொடிய கொள்ளை நோய்கள் தங்களைத் தாக்காது என்பது காணிக்காரர்களின் நம்பிக்கை. காணிச்சமூகத்தாரிடம் ஆவிவழிபாடு குறித்த நம்பிக்கை மிக அழுத்தமாக இருப்பதால்; ஆண்டிற்கொருமுறை ஆடிமாதம் அமாவாசை நாளன்று ஆவிகளுக்கும் வழிபாடு நடத்துகின்றனர். வருடந்தோறும் வழக்கமாகப் பொழியும் 'காடுகரிஞ்சான்', 'காடுதிருத்தான்' என்றழைக்கப்படும் மழைகள் பெய்யாவிட்டால் 'மழைக்கொடுதி' நிகழ்த்தும்போது மழைப்பொழியும் என்பது காணிக்காரர்களின் நம்பிக்கை. காணிக்காரர்களின் வழிபாட்டு முறையானது சங்கியல் நிலையிலும் அதிகம் படையல் நிகழ்வினையும் வெளிப்படுத்துகிறது .

பார்வை நூல்கள்

1. இரத்தினம். க- தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி- மூன்று தமிழ் பல்கலைக்கழகம் வெளியீடு, தஞ்சாவூர், முதல்பதிப்பு: 1987.
2. சக்திவேல். சு. தமிழ்நாட்டு பழங்குடி மக்கள் வாழ்வும் வரலாறும், மணிவாசகர் நூலகம், 89- லிங்கிச்செட்டி தெரு, சென்னை-600001, முதல்பதிப்பு :1980.
3. ஸ்டீபன். ஞா- கொக்கறை, காரணிக்காரர் வாழும் வழிபாடும் திணை வெளியீடு பெருமாள்புரம் திருநெல்வேலி – 627007, முதல்பதிப்பு: 1997.

© 2026 முனைவர் .விஜயலட்சுமி ச. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 215–218
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

பள்ளு இலக்கியத்தில் மருதநிலத்தெய்வம்

இசக்கியம்மாள் மு[1,*], முனைவர். செல்லப்பா ஆ[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், வெ.சு.ப. தமிழியல் ஆய்வு மையம், ம.தி.தா.இந்துக் கல்லூரி, திருநெல்வேலி-*10., India*

[2] இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, ம.தி.தா.இந்துக் கல்லூரி, திருநெல்வேலி-*10., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: இசக்கியம்மாள் மு — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00090	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வில் பள்ளு இலக்கியத்தில் மருதநிலத்தெய்வம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்திரவழிபாடு பற்றி இக்கட்டுரை மிகத் தெளிவாக ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: மருதநிலத் தெய்வம் இந்திரன் – பள்ளு இலக்கியத்துடன் தொடர்பு – இந்திர வழிபாடும் வேளாண்மையும் – மருதநிலத்தின் இயற்கைக் கூறுகள் – மருத நிலமும் பள்ளு இலக்கியமும் – மழையின் முக்கியத்துவம்.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மு, இ., & ஆ, மு. செ. (2026). பள்ளு இலக்கியத்தில் மருதநிலத்தெய்வம். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 215–218. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8471

முன்னுரை:

தமிழ் இலக்கியம் இயற்கையையும் மனித வாழ்க்கையையும் ஒன்றோடொன்று இணைத்துப்பேசும் சிறப்புடையது. சங்க காலத்தில் தமிழர்கள் தங்கள் வாழ்விடங்களை குறிஞ்சி, முல்லை, மருதம். நெய்தல், பாலை என ஐந்து திணைகளாகப் பிரித்தனர். அவற்றுள் வயலும் வயல் சார்ந்தப் பகுதிகளும் மருதத் திணை எனப்பட்டன. மருதநிலத்தின் முக்கியத் தொழில் உழவாகும். குறிப்பாக உழவர் வாழ்க்கையை மையமாகக்கொண்ட பள்ளு இலக்கியத்தில் மருதநிலத்தின் இயற்கை, வேளாண்மை, நீர்வளம் மற்றும் தெய்வ நம்பிக்கைகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

மருதநிலத்தெய்வம் – இந்திரன்:

சங்க இலக்கிய மரபில் மருதநிலத்தின் தெய்வமாக இந்திரன் குறிப்பிடப்படுகிறார். இந்திரன் மழையுடன் தொடர்புடைய தெய்வமாகக் கருதப்பட்டதால் வேளாண்மைச் சமூகத்தில் அவருக்கு முக்கிய இடம் இருந்தது. மழை இல்லாமல் வேளாண்மை சிறக்க முடியாது நல்ல மழை பெய்தால் வயல்கள் நீர் பெற்று நெற்பயிர்களும் செழிக்கும். எனவே மழை –> நீர்வளம் -> வேளாண்மை ->

நீர்வளம் -> வேளாண்மை -> உணவுவளம் என்ற வாழ்க்கைச் சங்கிலியில் இந்திரனுக்கான நம்பிக்கை முக்கியத்துவம் பெற்றது.

பள்ளு இலக்கியத்துடன் தொடர்பு:

பள்ளு இலக்கியத்தின் மையப்பொருளே உழவர் வாழ்க்கை என்பதால், மருதநிலத்தின் பல கூறுகள் அதில் காணப்படுகின்றன. வயலை உழுதல், விதை விதைத்தல், நாற்று நடுதல், நீர் பாய்ச்சுதல், பயிர்களைப் பாதுகாத்தல் அறுவடை செய்தல் போன்ற வேளாண்மைச் செயல்கள் பள்ளு இலக்கியங்களில் விரிவாகப் பேசப்படுகின்றன. மழை இல்லாமல் வயல் செழிக்காது. வயல் செழிக்காமல் உழவனின் வாழ்க்கையும் சிறக்காது. இதனால் மருதநிலத் தெய்வமான இந்திரனுடன் தொடர்புடைய மழைச் சிந்தனை பள்ளு இலக்கியத்தின் வோளாண்மைச் சூழலைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

இந்திர வழிபாடும் வேளாண்மையும்:

பண்டைய வேளாண்மைச் சமூகத்தில் இயற்கை நிகழ்வுகள் மனித வாழ்க்கையில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தின. குறிப்பாக மழை என்பது மனிதர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக இருந்ததால், மழையை வழங்கும் சக்தியாக இந்திரன் கருதப்பட்டார். இதனால் மழைக்கான வேண்டுதல், வளத்திற்கான எதிர்பார்ப்பு, வேளாண்மைச் செழிப்பு ஆகியவை இந்திர வழிபாட்டுடன் தொடர்பு பெற்றன.

மருதநிலத்தின் இயற்கைக் கூறுகள்:

நிலம் - வளமான வயல்வெளி

நீர் - ஆறு, குளம், கால்வாய் போன்ற நீர்நிலைகள்

மழை - பயர் வளர்ச்சிக்கான அடிப்படை

பயிர் - குறிப்பாக நெற்பயிர்

உழவர் - வேளாண்மையின் முதன்மைச் செயற்பாட்டாளர்

எருது மற்றும் மாடுகள் - உழவுத்தொழிலில் பயன்படும் கால்நடைகள்

அறுவடை - உழைப்பின் பயனைப் பெறும் நிலை

இவை அனைத்தும் மருதநில வாழ்க்கையின் அடையாளங்களாகவும் பள்ளு இலக்கியத்தின் முக்கியக் கூறுகளாகவும் அமைகின்றன.

மருதநிலமும் பள்ளு இலக்கியமும்:

மருதநிலத்தின் மையம் வேளாண்மை. பள்ளு இலக்கியத்தின் மையம் உழவர் வாழ்க்கை. எனவே இவ்விரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. சங்க இலக்கியத்தில் மருதத்தினை வயல்வெளியும் உழவர் வாழ்க்கையையும் எடுத்துரைத்தது. பிற்காலத்தில் பள்ளு இலக்கியம் அதே வேளாண்மை உலகை மையமாகச் கொண்டு புதிய இலக்கிய வடிவத்தை, உருவாக்கியது.

சங்க இலக்கியத்தில் மருதம் பெரும்பாலும் அகப் பொருள் சார்ந்த பாடல்களின் பின்னணியாக அமைகிறது. ஆனால் பள்ளு இலக்கியத்தில் உழவனின் தொழில், குடும்ப வாழ்க்கை, பொருளாதார நிலை, சமூக உறவுகள் போன்றவை நேரடியாகப் பேசப்படுகின்றன.

மழையின் முக்கியத்துவம்:

மருதநில வாழ்க்கையில் மழை மிக முக்கியமான இயற்கைக் கூறாகும். மழை பெய்தால்தான் ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற நீர்நிலைகளில் நீர் பெருகும். அந்த நீர் வயல்களுக்கு சென்று பயிர்களுக்கு உதவும். இதனால் உழவுத் தொழில் சிறப்பாக நடைபெறும்.

பள்ளு இலக்கியம் உழவனின் வாழ்க்கையை மையமாகக் கொண்டிருப்பதால், மழை மற்றும் நீர்வளம் போன்றவை அதன் கருத்துலகில் முக்கிய இடம் பெறுகின்றன. இதன் மூலம் மருதநிலத் தெய்வமான இந்திரனோடு தொடர்புடைய மழை, நம்பிக்கையின் பண்பாட்டுப் பின்னணியையும் அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்துடன் தொடர்பு:

சங்க இலக்கியத்தில் மருதத்திணை வளமான வயல்கள், நெற்பயிர், ஆறு, குளம், உழவர் வாழ்க்கை ஆகியவற்றை எடுத்துரைக்கிறது. அதன் தெய்வமாக இந்திரன் குறிப்பிடப்படுகிறார். பிற்கால பள்ளு இலக்கியத்திலும் இதே வேளாண்மைச் சூழல் பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

எனவே, சங்க இலக்கியத்தின் மருதநில மரபும் பள்ளு இலக்கியத்தின் வேளாண்மை உலகமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. மருதநிலத்தின் இயற்கை, தொழில், நீர்வளம், தெய்வ நம்பிக்கை ஆகியவை பிற்காலத்தில் பள்ளு இலக்கியத்தின் பின்னணியைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

இந்திர வழிபாடு:

தமிழர் பண்பாட்டில் இந்திரன் மழை, வளம், வேளாண்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய தெய்வமாகக் கருதப்பட்டான். குறிப்பாக மருதத்திணையுள் வாழ்வியலில் இந்திர வழிபாடு முக்கிய இடம்பெற்றது. மழை பெய்தால்தான் வயல்கள் செழித்து, பயிர்கள் வளர்ந்து, மக்கள் வளமாக வாழமுடியும் என்பதால், மழையைத் தரும் தெய்வமாக இந்திரன் போற்றப்பட்டான்.

சங்க இலக்கியங்களில் மருதநில மக்களின் வேளாண் வாழ்க்கையோடு இந்திரன் தொடர்பு படுத்தபடுகிறான். இந்திரவிழா போன்ற விழாக்கள் மழை வளத்தையும் நாட்டின் செழிப்பையும் வேண்டி நடத்தப்பட்டதாக இலக்கியச் செய்திகள் கூறுகின்றன. குறிப்பாக பட்டினபாலை, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் இந்திர வழிபாடு மற்றும் இந்திரவிழா பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

பள்ளு இலக்கியத்திலும் வேளாண்மை, மழை, வயல்வளம் ஆகியவை முக்கியப் பொருள்களாக அமைவதால், மருதநிலத் தெய்வமாகிய இந்திரனின் வழிபாட்டை அந்த, வேளாண் பண்பாட்டு பின்னணியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். உழவனின் வாழ்க்கை மழையையும், நீர்வளத்தையும் சார்ந்திருந்ததால், இந்திரவழிபாடு வளமான விளைச்சலுக்கான நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைந்தது. சுருக்கமாக இந்திர வழியாடு என்பது மழை, நீர், வேளாண்மை மற்றும் வளமான விளைச்சலை மையமாகக் கொண்ட மருதநில மக்களின் சமய - பண்பாட்டு நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

முடிவுரை:

பள்ளு இலக்கியம் தமிழரின் உழவர் வாழ்க்கையைப் பதிவு செய்த சிறப்புமிக்க சிற்றிலக்கிய வகையாகும். மருத நிலத்தின் வளமான வயல்கள், மழை, நீர், நெற்பயிர், உழவர், கால்நடைகள் போன்ற கூறுகள் பள்ளு இலக்கியத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. மருதநிலத் தெய்வமான இந்திரன், மழை மற்றும் வோாண்மை

வளத்துடன் தொடர்புடைய தெய்வமாகக் கருதப்பட்டார். எனவே, பள்ளு இலக்கியத்தில் காணப்படும் வேளாண்மைச் சூழலைப் புரிந்து கொள்ள மருதநிலமும் அதன் தெய்வமான இந்திரனும் முக்கியமான பண்பாட்டுக் கூறுகளாகின்றன. இவ்வகையில், சங்க இலக்கியத்தின் மருதத்திணை மரபு பிற்கால பள்ளு இலக்கியத்திலும் புதிய வடிவில் தொடர்ந்து வெளிப்படுவதை அறியலாம்.

துணை நூற்பட்டியல்:

1. தமிழ் இலக்கிய வரலாறு - மு. வரதராசனார்.

2. முக்கூடற்பள்ளு - எம்மகுடக்குடி நாதர்.

3. சிற்றிலக்கியச் செல்வம் - வ. சுப. மாணிக்கம்.

4. தொல்காப்பியம் பொருளதிகாரம் – தொல்காப்பியர்

© 2026 இசக்கியம்மாள் மு, முனைவர். செல்லப்பா ஆ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 219–223
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

Breaking the Silence : Gender, Identity and Marital Disharmony in Shahi Desphande's That Long Silence

Mrs.Dhanalakshmi T[1,*], Dr.Mohamed Haneef S[2]

[1] *Reg. No.241111902023, Full-time Ph.D Research Scholar, Research Department of English, Sadakathullah Appa College (Autonomous), Rahmath Nagar, Tirunelveli- 627011 (Affiliated to) Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli- 627012, India., India*

[2] *Associate Professor & Head, Research Department of English, Sadakathullah Appa College (Autonomous), Rahmath Nagar, Tirunelveli- 627011 (Affiliated to) Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli- 627012, India., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: Mrs.Dhanalakshmi T — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00089	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

That long silence seeks to represent the plight of women especially Jaya Kulkarni , the main protagonist in a given social structure, attempting to rigorously scrutinize the portrayed gender roles that impose social norms, expectations and traditions on the grounds of gender discrimination. The research paper presents Jaya's submissive revolt against the constant psychological pressure of male superiority and social conventions. It is submissive because finally she accepts the traditional principle silence and surrendering believing that life has always to be made possible. Deshpande showcase her artistic brilliance that unlocks the complex human relationships wherein women's arduous lives are exposed with the writer's insightful meanings. This research paper focuses to expose Jaya's inner turmoil and trauma as she seeks to create her own unique identity in the society. She struggles to get solace as most of her questions remained unanswered. But with the passing of time she realizes her own fate.

Keywords / திறவுச்சொற்கள்: Discrimination; plight; submissive revolt; turmoil; trauma.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: T, M., & S, D. H. (2026). Breaking the Silence : Gender, Identity and Marital Disharmony in Shahi Desphande's That Long Silence. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 219–223. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8473

Indian English literature has attained immense popularity and widespread recognition. It is no longer regarded as a sub-standard variety of English. Several prestigious international awards have been bagged by its highly talented authors. Salman Rushdie, Arundhati Roy, Kiran Desai and Aravind Adiga have all earned the most coveted booker prize. R.N. Tagore, V.S. Naipaul have both been honoured with the literary world's most glorious award, the Nobel prize for literature.

Shashi Deshpande is a winner of the Sahitya Akademi award for *That Long Silence* (1989). She has emerged as a writer possessing deep insight into the female psyche. Focusing on the marital relation she seeks to expose the tradition by which a woman is trained to play her subservient role in the family. Her novels reveal the patriarchal traditions and uneasiness of the modern Indian woman in

being a part of them. She uses social reality as it is experienced by women. Her heroines rebel against the traditional way of life and patriarchal values. In *That Long Silence,* Jaya is not only silent but also the sufferer. Her 'silence' is socio-psychic in nature. She is an object of utmost sympathy. The novel goes on to determine the personality of Jaya through her long trials— social, economic, political, psychological, spiritual and religious.

There is no strong female voice against patriarchy rather only psychological conflicts were depicted. She revolts, but in silence. Jaya is presented not as a woman who has a desire to revolt but the one who reconciles her helplessness. Jaya realized:

> *A woman can never get angry. She can only be neurotic, hysterical and frustrated. There is no room for despair, either. There is only order and routine today. I have to change. She sheets tomorrow, shrubs the bathrooms the day after, and clean the fridge .... (147-148)*

Jaya reflects on how women are conditioned to suppressed their true feelings, conform to domestic routines and endure marital discord in complete silence rather than express legitimate rage or discomfort. Deshpande portrays the reality as it is. In this regard, she says: "My characters take their own *ways. I have heard people saying we should have strong woman characters. But my writing has to do with women and how they are...." (Vishwanath-1987:12).*

Feminism (a movement) gives an expression to the suppressed voice of women since long ago. Shashi Deshpande, Anita Desai, Nayantara Sehgal and Kamala Markandeya are the chief exponents of Feminism. It started in India late in the 1970's. It existed in spirit long before even the Western feminist movement had begun. Few women writers took the trouble of writing their pleas and issues those days. The feminist thought and feminist movements in the west have had some influence on the women's movements in developing countries like India. Yet feminism as it exists today in India has gone beyond its western counterpart. Uma Narayan (1997) has rightly remarked "Third World feminism is not a mindless mimicking of 'western agendas' in one clear and simple sense— Indian feminism is clearly a response *to the issues specifically confronting many Indian women"(*Weedon-1999: 13). The Indian women's struggle for emancipation could not mimic its western counterpart. In the Indian context, several feminists have realized that the subject of women's emancipation in India should not be reduced to the contradictions between man and woman.

Female protagonists in Deshpande's novels stand apart from that of their male counterparts in the writings of many contemporary women writers. Sandwiched between tradition and modernity, illusion and reality and the mask and the face, they lead a life of restlessness.

The title of the novel, *That Long Silence,* suggests the failure to communicate and assert one's own self. When one read the epigraph from the speech of Elizabeth Robins he will find that this silence refers to the reticence of a female character. In Deshpande's *That Long Silence* we can see the belated rebellion of Jaya after seventeen years of her married life. During her solitude, Jaya undertakes a stay towards her own self. She seeks her individual identity, which seems to be lost somewhere during such a long years of marriage.

Novels of Deshpande abound in female quest for identity. Her novels are usually narrated by female protagonists who strive to find out their own selves throughout the novels. They succeed to do this through their writing to reach a resolution in their lives. No doubt, they are haunted by the memories of past and feel a kind of worthlessness, but towards the end they realize their selves. Women do face a void, a vacuum in their lives. They appear to be successful externally, but they seem to lack direction and feel a sense of futility.

Deshpande got success in her representation of real life experience through *That Long Silence*. She realistically depicts the inner conflict through Jaya, who suffered from the beginning to end craving for the quest of the self and identity. She realized the frustration, alienation and over all emotional traumas she had undergone with her adolescent dreams being utterly shattered. Initially, after her marriage, she is apparently a satisfied spouse married to a responsible man of social status. For some time all went well and Jaya adjusted herself in new environment according to the wishes of her husband. She had absorbed herself in the family folds completely and was no more aggressive and inquisitive but now, she was a docile, meek, passive, nervous and dependent upon her husband for sustenance and existence. Mohan (Jaya's husband) was a man of orthodox view and he gave her not much freedom. In the novel, there lies the smell of frustration in married life of Jaya, who failed to be closer to her husband mentally and emotionally. Despite her marriage to Mohan and becoming a mother of two children, she suffered from isolation. Her husband could not understand her emotional self. She leads the life of silent indignation gifted by her husband.

The novel traces how Jaya gradually emerges as a confident individual fully in control of herself and refuses to be led by trap of the family. The protagonist of the novel rejects the image of traditional women like Sita, Savitri and Draupadi. Instead she prefers the image of a pair of the bullock to describe a married couple. Deshpande uses an appropriate image of a crawling worm into the hole, to describe the state of Jaya, a budding writer, doomed to dwindle into a stereotyped Indian home-maker: *"Oh God! I had thought I can't take any more even a worm has a hole it can crawl into."(148).*

Thus, at the end of the novel, Jaya's self-realization was brought out very skillfully. A woman wants home and family not at the cost of her identity. She wants liberty to implement her talent and respect which family members should give her. When she is denied to have liberty and identity, she possesses the ability to revolt against bindings. *That Long Silence*, thus, teaches women to fight the silence and express themselves. Woman according to Desphande can be understood better when they are pampered and showered with affection. As their hearts are tender they deserve tender love.

Jaya's character in That Long Silence

Deshpande describes the woeful plight of Jaya through the image of a woman crawling into a hole. Unsecured and suffocated, Jaya feels distance from real life. She is scared of writing, scared of failing. She is unable to face the challenge and wants to retreat back to her safe family life. *That Long Silence* concentrates on an important theme, that is, on gender differentiation and valorizing of the male categories, along with the silence and surrender to which a woman is subjected in our society.

The Novelist has woven the tragic tales of Jaya's relations with Mohan and her acquaintances into the texture of the novel. Jaya speaks of interdependence of love and sex. She speaks out her mind, *"First there's love, then there's sex that was how I had always imagined it to be. But after having with Mohan I had realized that it could so easily be the other way round."*

Mohan had crushed both the woman and the writer in Jaya as he neither loved nor encouraged her. Her silence is responsible for the misery and slavery. Her mental agony is so adverse that her desire for articulation fails. Jaya resolves to break that long silence by putting down on a paper all which she had suppressed in her seventeen years silence that long silence which had reduced herself in fragments:

> *I am not afraid any more. The panic has gone. I am Mohan's wife, I had thought, and cut off the bits of me that had refused to be Mohan's wife. Now I know that kind of fragmentation is of possible. The child, hands in pocket, has been with me through the years, she is with me still. (191).*

For this research article, I endeavored to analyze the different aspects of feminism and its concept. It is also examined on the post-modern feminist approaches. The methodology of the research paper is chiefly based on the comparison of the western feminism with the eastern concept of feminism (Third World feminism)—Indian feminism which is apparently a response to the issues specifically confronting many Indian women. A brief analysis has also been done to find the women's compatibility with their male counterpart in terms of the different equalities like economic, social and political.

The reading of Deshpande's *That Long Silence* has revealed that woman's position and status had little changed since India's independence. Their plight remained nearly the same. However, it should not be judged from the western suppressed women. The character of Jaya has succeeded to portray that patriarchy is still prevalent in our Indian society. To subdue patriarchy, the women have to undergo and face different challenges and issues in the society. Hence, we get a new woman in *That Long Silence* in the form of Jaya. She is new not because she is silent and submissive, but because she has compromised herself with her surrounding and fate (Nayak 2011).

The present paper is prepared with an avowed objective: to textually and contextually study the present day Indian English Literature, especially fiction. A stereotyped house wife initially nervous and seeking masculine support all the time thinks that she also has contributed to her victimization and that she has to fight her own battle and work out her own destiny.

Deshpande has unleashed a scathing blow to the patriarchal set up and ushered a novel chapter of women liberation in any sphere of life. It is not the circumstances that contribute to the negation of women right but that even their own women folk are polarizing their dig at the emancipation of women. The novel seeks to probe deeper in those subaltern tendencies which ruined the vital of our society.

The female protagonists of Deshpande evince sufficient vigor and courage to question the oppressive role of society, religion and culture, but yet they refrain from taking the paths suggested by the Western feminists. They rather seek to find their own paths. Indian feminism as reflected in the Indian fiction is a unique phenomenon that has to be valued on its own scale and should not be weighed against the scales of the western feminist literature. Shashi objectifies new female subjective experiences with a gynocentric vision. She reflects on the problems and concerns of the middle class Indian women.

Deshpande concludes that Jaya's rebellious nature is not the solution to the problems of life rather it complicates the things around her. The last sentence of *That Long Silence* explicitly shows that human happiness consists in harmonizing the opposites of life. In Deshpande's novels, men give up easily and go on to fresh fields but women fight on and do emerge victorious after most battles who want to achieve individuation and authentic self- identity without changing the culture and tradition of the society. They may be weak and even be oppressed but they have the will power to rise up like a phoenix out of its own ashes. Deshpande makes an authentic plea to free the female psyche from the conventional male control. The success of the novelist lies in her representation of real experiences. She realistically depicts the inner conflicts of Jaya and her quest for the self identity. Thus, this paper attempts to depict how the attitudes and behaviour of women differs according to the society she belongs to.

Works Cited :

Deshpande, Shashi. *That Long Silence*. Penguin Books. 1989.

Dwivedi O.P. *A Spectrum of Indian English Literature*, JAPSS, 2009.

http://www.goodreads.com/book/show/124894.That Long Silence. Press, Inc, ISBN 978-0-557-47470-7 http://journal.vpweb.com/spectrumopdwivedi.html

Nayak, Abhilash. "Making of the New Woman in Shashi Deshpande's Novels." *The Criterion: International. Journal in English,*vol.1, no.3, 2011, pp. 1-10, www.the criterion.com/V2/n3/Abhilash.pdf

Narayan Uma. *Dislocating, Cultures: Identities, Traditions and Third World Feminism.*Routledge, 1997.

Vishwanath V. "Interview with Deshpande". *A Woman's World–Literature Alive*, vol. 1, no. 3, 1987, pp.

Weedon, Chris. *Feminism, Theory and the Politics of Difference.* Oxford:Blackwell.

© 2026 Mrs.Dhanalakshmi T, Dr.Mohamed Haneef S. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 224–229
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கி ராஜநாராயணன் படைப்புகளில் வட்டார வழக்குகள்

முனைவர். சகாயமேரி இ*

இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி-*627008., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். சகாயமேரி இ — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00088

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய உலகில் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர்
கி.ராஜநாராயணன். இவர் தூத்துக்குடி மாவட்டத்தின் இடைச்சவள் என்ற கிராமத்தில்
பிறந்தவர் தான் வாழும் மண்ணையும் அந்த மண்ணில் வாழும் மனிதர்களின்
வாழ்வியலையும் பேச்சு மொழியிலேயே அதாவது வட்டார வழக்கினை கொண்டு
இலக்கியம் ஆகியவர் அவர இவரது படைப்புகளில் பயின்று வரும் வட்டார வழக்குச்
சொற்கள் அவற்றின் அமைப்பில் பண்பாட்டு முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாக
இருக்கின்றது சமூகத்தை தன்னுள் உள்ளடக்கி இருப்பது தான் இலக்கியம் என்று
கூறுவோம். அந்த இலக்கியத்தை படைக்கும் படைப்பாளி என்பவன் சமூகத்தின் ஒரு
அம்சமாக இருந்து அவனது படைப்புகளை வெளிப்படுத்துவான் என்பதற்கு உதாரணமாக
கி.ராஜநாராயணனுடைய படைப்புகள் காணப்படுகின்றது இப்படைப்புகளில் வட்டார
மரபுகள் அதன் தாக்கம் எந்த அளவில்i இருக்கின்றது என்பதை கி ராஜநாராயணனின்
கோபலபுரத்து மக்கள், பிஞ்சுகள், கிடை, போன்ற நாவல்களில் வெளிப்படும் மக்களின்
பழக்கவழக்கங்கள் பொருளாதார நிலைகள் விவசாயம் மண்ணின் தன்மை இவற்றை
அடிப்படையாகக் கொண்ட வட்டார வழக்குச் சொற்கள் வட்டார வழக்கு
சொற்களிடையே கதை மாந்தர்களின் களப்பின்னனினையும் உயிரோட்டமும் உள்ள
படைப்பு எவ்வாறு மக்களின் வாழ்வியல் தரத்தை பிரதிபலிப்பதாக

இருக்கின்றது
என்பதை மைய கருவாகக் கொண்டு கி.ராஜநாராயணன் படைப்புகளில் உள்ள வட்டார
வழக்குகளை ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

Keywords / திறவுச்சொற்கள்: நீத்து பாகம் – பழைய சோற்று நீர் மகுளி – சோற்றுக்கஞ்சி கெடாசுதல் – எறிதல் சீனி பையல் - செல்லமாக அழைக்கப்படும் சிறுவன் ஆமுடான் – கணவன் சிறு வண்டு- சிறு குழந்தைகள் அம்புட்டு- அவ்வளவு

How to cite / மேற்கோள் காட்டும் முறை: இ, மு. ச. (2026). கி ராஜநாராயணன் படைப்புகளில் வட்டார வழக்குகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 224–229. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8475

முன்னுரை:

தமிழ் இலக்கிய உலகில் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் கி.ராஜநாராயணன் இவரை கி ரா என்று சுருக்கமாக அனைவரும் அழைப்பர். பேச்சு மொழியையே எழுத்து மொழியாக்கி கோவில்பட்டி மற்றும் அதனை கிராமங்களில் மக்கள் பேசும் வழக்குச் சொற்களை மையமாக வைத்து அதாவது வட்டார வழக்கை பேச்சு மொழியிலிருந்து எழுத்து மொழியாக மாற்றி அமைத்து அதற்கு ஒரு தனித்துவமான இலக்கியத்தை உருவாக்கியவர் இவர் வட்டார வழக்கு என்பது வெறும் சொற்களின் தொகுப்பாக அல்லாமல் அந்தப் பகுதி மக்களின் பண்பாடு வாழ்வியல் சடங்குகள் அவர்களின் உழைப்பு மற்றும் உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும் இவரது படைப்புகளான கோபாலபுரத்து மக்கள் கிடை பிஞ்சுகள் ஆகிய படைப்புகளை மையமாக வைத்து கரிசல் மண்ணின் வட்டார மொழி பயன்பாடும் அதன் சமூக பண்பாட்டுத் தாக்கம் எவ்வாறு அவரது நாவல்களில் வட்டார வழக்குச் சொற்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது .

கரிசல் பட்டார வழக்கு :

கரிசல் வட்டாரம் என்பது கோவில்பட்டி சாத்தூர் விளாத்திகுளம் எட்டயபுரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது ஆகும் தமிழ் இலக்கியத்தில் வட்டார இலக்கியத்தின் முன்னோடியாக திகழ்ந்தவர் புதுமைப்பித்தன் இவர் தம்முடைய படைப்புகளில் முழுமையாக வட்டார வழக்குகளை எடுத்துக்காட்டவில்லை ஆனால் கி ரா ராஜநாராயணன் தம்முடைய படைப்புகள் ஒவ்வொன்றிற்கும் கடைக்கல அமைப்பினை எங்கு தேடிச்சென்றும் அலையவில்லை தன் வாழ்வில் கண்ட கேட்ட செய்திகள் காலம் களம் பாத்திரங்களின் தனித்தன்மையை வட்டார இலக்கியத்தை வலுப்படுத்திய ஒரு முன்னோடியாக திகழ்ந்து இருக்கின்றார் இவரது ஒவ்வொரு கதைக்கும் கரு என்பதே மிகவும் முக்கியமானதாகும் கருவே ஒவ்வொரு படைப்பாளரின் திறமையை அல்லது கதை பொருளை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல துணை புரிகின்றது உலகப் பொதுவான பிரச்சனைகளை ஒரு குறிப்பிட்ட வட்டார பின்னணியில் சித்தரிக்கும் திறமை ஹீராவின் கதைகள் பலவற்றிலும் விவசாயம் விவசாயம் தொடர்பான பிரச்சனைகள் தொழில் தீப்பெட்டி தொழில் மற்றும் ஆடு மேய்த்தல் தொழில் போன்ற போன்றவை மேற்கூறிய கதைகளுக்கு முன்னுரிமை கொடுத்து படைத்துள்ளார்

பிஞ்சுகள் குறுநாவலில் வட்டார வழக்குகள் :

கரிசல் பகுதியில் வாழும் குழந்தை தொழிலாளர்களின் பிரச்சினைகளை மையமிட்டு தம் கதைகளை உருவாக்கி உள்ளார் தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு

குழந்தைகள் வேலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் இதனால் குழந்தை கல்வி பாதிப்பதோடு உடல் நலமும் பாதிக்கின்றன இச்செய்தியை தனது கதைகளில் அப்பகுதி வட்டாரச் சூழலோடு சேர்ந்து கதையை கூறுகின்றார் பெண் குழந்தைகளுக்கு சூட்டு கோளினால் ஈரலில் சூடு போடப்பட்டது குழந்தைகள் எவர்சில்வர் தூக்குச் சட்டியையும் சிறு கையில் ஒரு டப்பாவையும் தூக்கிக்கொண்டு புற்றுக்குள் நுழைகின்ற நுழைகின்றது போல தீப்பெட்டிக்குள் குச்சிகளை அடுக்குவது போல அப்ப பிள்ளைகள் அங்கு வருகின்ற வண்டிகளில் திணிக்கப்பட்டு தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்பதை கூறுகின்றார் பிஞ்சுகள் குறுநாவலில் கரிசல் வட்டாரத்து குழந்தைகளின் உலகம் அவர்களின் விளையாட்டுகள் இயல்புகள் மற்றும் இவற்றையெல்லாம் அவர்கள் மறந்து தீப்பற்றி தொழிற்சாலைகளுக்குள் நுழைவதே வேதனையுடன் அவர் வெளிப்படுத்துகின்றார் இதில் சில உரையாடல்கள் மூலம் வட்டார வழக்குச் சொற்களை

கிட்டிப்புல்லு பம்பரம் சில்லி போன்ற சொற்களை கூறுகின்றார் “லேய் உன்னோட சிறுவாட்டுப் பானையில் எம்புட்டு காசு சேர்ந்து இருக்கும் “

“என்னடா செய்க “

“ அங்கன போயி உட்காரு %

“உனக்கு என்ன விவரம் தெரியும் ₹

அம்மாஞ்சி,அத்தாச்சி, அயினி, ஆவலாதி, நசப்பு சொட்டசிருசு, கெடாசு தல, ஒத்தை,வ ம்பலத்தல் சீமை,சரக்கு,சல்லி, புள்ள குட்டி,ஆச்சாரம், மசியுறது,அலைச்சல், ஆப்பம், கெடா,துட்டு,வெள்ளென,சீமை,செத்த நேரம், கடுதாசி, அம்புட்டு, அளவு,சீக்கு, பேத்தல் இவை போன்ற வட்டார வழக்குச் சொற்கள் மக்களிடையே , தலைமுறையாக புழக்கத்தில் இருக்கும் வாய்மொழிச் சொற்கள் ஆகும் மக்களின் வாழ்வியலையும் குழந்தை மனங்களின் வெகுளித்தனத்தையும் கிராமத்து மனிதர்களின் உணர்வுகளையும் படம் பிடித்து காட்டும் கதையான பிஞ்சுகள் குறுநாவலில் கரிசல் மண்ணின் தனித்துவமான வட்டார வழக்குச் சொற்களை பதிவு செய்து உயிரோட்டம் கொடுத்துள்ளார் ஆசிரியர் இச்சொற்கள் சாதாரண அகராதி வழக்கில் இல்லாதவை இவை மக்களிடையே கரிசல் பண்பாட்டின் அடையாளமாக திகழ்கின்றன மக்களின் அன்றாட உரையாடல்கள் சண்டை சச்சரவுகள் பாசம் மற்றும் நகைச்சுவை ஆகியவையும் பிஞ்சுகள் குறை நாவலின் உரையாடல்கள் இயல்பாக வெளிப்படுகின்றன மனிதர்களின் செயற்கை தனமற்ற இயல்பான பேச்சை பிரதிபலிப்பதாகவும் சிறுவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பொழுது பயன்படுத்தும் துணியும் கரிசல் வழக்கின் நகைச்சுவை உணர்வும் உரையாடல்களை மிருகெற்று உணவாக உள்ளனர் கி ராஜநாராயணனின் கூற்றுப்படி பேச்சு வழக்கிற்கு தான் உயிர்ப்பு அதிகம் அகராதி தமிழ் அழிக்காத ஒருவித நெருக்கத்தையும் மண்ணின் மனத்தையும் வட்டார வழக்கு உரையாடல்கள் வாசகர்களுக்கு வழங்குகின்றன பிஞ்சு பிஞ்சுகள் குறுநாவலில் வரும் உரையாடல்கள் வெறும் உரையாடல்கள் மட்டுமல்ல அது கரிசல் மக்களின் வாழ்க்கை முறை அவர்களின் சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு அமைப்பின் நேரடி வழக்குகளாக உள்ளன.

கோபாலபுரத்து மக்கள் நாவலில் வட்டார வழக்குகள் :

கோபாலபுரத்து மக்கள் என்ற நாவலில் பகடை மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை ஊருக்குள் பேசாமல் ஒரு வேம்படி நிழலில் கூடுவார்கள்

ஏனென்றால் ஊரில் களத்து பிச்சை போடுவார்கள் அதில் ஒருவன் களத்து பிச்சை போடுவான் ஒருவன் மண்ணடிப்பான் அப்படிப்பட்டவனை ஒரு பங்குல போட்டு பகுத்தா பங்காளி ஏத்துக்கிடுவானா என ஒரு இன மக்களின் தனிப்பட்ட பிரச்சனைகளை கருவாகக் கொண்டு அமைத்துள்ளார் ஆசிரியர்.

கோபாலபுரத்து மக்கள் நாவலில் கரிசல் நில மக்களின் பண்பாடு வாழ்க்கை முறை மற்றும் அவர்களின் தனித்துவமான உரையாடல் மொழியை ஆசிரியர் பதிவு செய்துள்ளார் இயல்பான கிராமத்து பேச்சுகளும் உறவு முறையை உரையாடல்களும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர் தெலுங்கு கலந்த தமிழ் சொற்கள் இந் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது தெலுங்கு சொற்களின் தாக்கம் என் நாவலில் பதிவு செய்யப்படுவதற்கு காரணம் விஜயநகர பேரரசு காலத்தில் தெற்கே தெற்கு குடியேறிய மக்களின் பின்னணி இப்பகுதியில் காணப்படுவதால் இச்சொற்கள் இந்நாவலில் இடம்பெறுகின்றன

அவுரி,அவுரி என்றால் நீலச்சாயம் தயார் செய்ய பயன்படும் செடி வகை. அம்மாஞ்சி-தாய் மாமன், இம்புட்டு,அம்புட்டு,எம்புட்டு ஓர முறை,கட்டி போடுதல் தவிட்டுப் பானை பொட்டி பாத்திரம், மசியல், தவிட்டுப் பானை, கம்பஞ்சோறு, ஆப்ப கல்லு, இறுக்கி, உச்சினி, எழுப்பு,ஒத்தையடி, பாதை கத்தாழை களவாணி கெடா,செத்த நேரம் பின்னே, வாங்கானம், போன்ற வட்டார வழக்குச் சொற்களும்,

“அவனுக்கு என்ன குறைச்சல்ன்னு கதையை அளக்கீங்க ஓரம் முறையில் பொண்ணு இருக்கிறப்போ தூரத்துல போயி தேடுவானேன் “

“நம்ம ஊரு ஜனங்களுக்கு வயிறு நிறைஞ்சா போதும் பொய் பித்தலாட்டம் பேசி தெரியாத பயலுக “

“கொஞ்சம் மசியலும் கம்பஞ்சோறும் திங்குறீங்களா? தாகத்துக்கு மோர் ஊத்தவா? “

உறவுமுறை ஆலோசனைக, கிராமத்து மனிதர்களின் எதார்த்த பேச்சுகள் இயல்பான கிராமத்து பேச்சு வழக்கும் உறவுமுறை உரையாடல்களும் அன்றாட சமையல் மட்டும் உபசரிப்பு சொற்கள் கரிசல் மொழியின் தனித்துவ இயல்புகளாக ஆசிரியர் சுட்டிக்காட்டி உள்ளார் உறவுகளில் அத்தை மாமன் பங்காளி போன்ற உறவுப் பெயர்கள் மரியாதை சொல்லாகவும் அன்பின் மிகுதியாகவும் உரையாடல்களில் கையாளப்பட்டுள்ளது. இயற்கை மற்றும் விவசாய சார்ந்த படிமங்கள் மழையின் போக்கை பற்றியும் நிலத்தின் தன்மையைப் பற்றியும் பேசும்போது சில வட்டார சொற்களும் இயல்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கிடை நாவலில் வட்டார வழக்குகள் :

கிடை நாவல் கோவில்பட்டி மற்றும் அதனைச் சுற்றி உள்ள கரிசல் நிலத்து மேய்ப்பவர்களின் வாழ்க்கை முறை சடங்குகள் நம்பிக்கை மற்றும் அவர்களின் எளிய பேச்சை காட்சிப்படுத்தும் விதமாக ஆசிரியர் கதை புனைந்து உள்ளார் இன்னாவளில் வட்டார வழக்குச் சொற்கள் மற்றும் உரையாடல்களின் தனித்துவம் அந்த வட்டாரத்திற்கே உரியதாக அமைகின்றது கே ராஜநாராயணன் தனது படைப்புகளில் அகராதி சொற்களைத் தவிர்த்து கரிசல் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் இயல்பான சொற்களையே கையாண்டு உள்ளார் கிடை நாவலில் காணப்படும் முக்கியமான வட்டார வழக்குச் சொற்கள் கிடை என்பதன் பொருளை ஆடு அல்லது மாடுகளை இரவு வேளையில் விளை நிலங்களில் உரத்திற்காக தங்க வைக்கும் முறை. மாடுகளை காப்பது மழையை எதிர்த்து காத்திருப்பது சம்சாரிகளுக்கும் அதாவது விவசாயிகள் கிடை மேய்ப்பவர்களுக்கும் இடையே நடக்கும் பேச்சுவார்த்தைகள் ஆகியவை கரிசல் மக்களின் கூட்டு வாழ்க்கையையும்

இயற்கை சார்ந்த அவர்தம் பொருளாதாரத்தையும் இந்நாவல் வெளிப்படுத்துகின்றன. கரிசல்காட்டு பகுதியில் ஆடுகளை மந்தையாக பராமரித்து இரவு வேளையில் விவசாய நிலங்களில் கிடை அமைத்து எருவிடும் ஆட்டுக்காரர்களின் வாழ்க்கை முறையை மையமாக கொண்ட கதை ஏன் இன்னாவல் கூறுகின்றது சடை சாமி மற்றும் சங்கரன் ஆகியோர் ஆட்டுக்கிடை பராமரிப்பு அவர்களின் உழைப்பு மற்றும் அவர்களுக்கிடையிலான பிணைப்பு போன்றவற்றை கதை நம்மிடையே ஆசிரியர் வட்டார வழக்குச் சொற்கள் ஓடு பிணைத்து தருகின்றார் மழை இல்லாத கரிசல் நிலத்தில் ஆடுகளுக்கு தேவையான தீவனமும் குடிக்க தண்ணீரும் கிடைக்காமல் ஆட்டுக்காரர்கள் படும் துயரங்களையும் மிக தத்ரூபமாக வட்டார வழக்கு உரையாடல்களுடன் விவரித்துள்ளார்.

அடைப்பும் கோடு, கிடைக்கட்டை, செவல் காய்ச்ச்சை, தொழுவம் ஒப்பாரி, அமுக்கு ஆசனை இருசு உச்சினி ஏத்தி ஒத்தையடி கிடாரி குந்துகை சாய் மானம் சீமை சூதானம் தம்பு திராணி, புல்லாச்சி, மம்பட்டி, வம்பு,

நாவலில் இடம்பெற்றுள்ள கரிசல் மண்ணிற்கே உரிய வட்டார வழக்குச் சொற்கள் ஆகும்.கிடைக்காரி கிடைபோடும் மேச்சல் சமூகத்து பெண்ணை குறிப்பதாகும் அம்மாஞ்சி தாய்மாமன் குறிக்கும் சொல். சம்சாரிகள், வக்கரணம் அடைப்பனை, புலப்பருத்தல், கொல்லை, போன்ற வட்டார வழக்குச் சொற்களும் காணப்படுகின்றன.

கிடை நாவலின் உரையாடல்கள் செயற்கையான இலக்கிய நடையில் இல்லாமல் மக்கள் இயல்பாக பேசும் ஒளி குறிப்புகளுடன் பேச்சு வழக்கின் படி அமைந்துள்ளது கதாபாத்திரங்களின் பேச்சில் இயல்பான ஏளனம் பாசம் கோபம், ஆகியவை வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்

“ஏல அங்கன என்ன பாத்துக்கிட்டு நிக்க சும்மா ஆட்ட மரிச்சு உடுல “

“ஏம்பா இந்த ஆடுகள் எல்லாம் எந்த ஊருடையது?யாரு மேய்க்கிறது “

“நம்ம ஊரு ஜனங்களுக்கு இது என்ன புதுசா ஆடு மேய்க்கிறது தானே நம்ம பொழப்பு “

“அந்தப் பக்கம் போகாதிய அங்கே மேச்சலுக்கு இடம் கெடையாது”

இந்த உரையாடல் கரிசல் மண்ணின் மனித உறவுகளையும் அவர்களின் வேலைப்பளுவையும் அப்படியே பிரதிபலிக்கின்றன.

முடிவுரை:

கி ராஜநாராயணனின் படைப்புகளில் கரிசல் வட்டாரம் வழக்கின் அழகிகளும் வாழ்வியலும் தமிழ் இலக்கிய உலகில் வட்டார வழக்கு மொழியை வெறும் பேச்சு மொழியாக மட்டும் பயன்படுத்தாமல் அதை ஒரு பண்பாட்டு அடையாளமாகவும் வாழ்வியல் ஊடகமாகவும் மாற்றிய பெருமை கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் கி.ராஜநாராயணனுக்கு உரியது. கோபாலபுரத்துமக்கள், கிடை பிஞ்சுகள் ஆகிய மூன்று நாவல்களும் கரிசல் நிலத்தின் மண்வாசனை மனித உறவுகள் மற்றும் அவர்களின் வாழ்வியல் போராட்டங்களை வட்டார வழக்கு மொழியின் வழியே மிக இயல்பாக பதிவு செய்துள்ளார் ஆசிரியர் கோபாலபுரத்து மக்கள் என்ற நாவலில் புலம்பெயர்ந்து வந்த மக்களின் வாழ்வியலையும் அவர்களின் அன்றாட உரையாடல்களில் கலந்திருந்த தமிழும் தெலுங்கும். சார்ந்த வட்டார சொற்களையும் பதிவு செய்து ஒரு தலைமுறையின் வரலாற்றை மொழியின்

வழியே உயிர்ப்பித்துள்ளார் ஆசிரியர் கிடை என்ற நாவலில் ஆடு மேய்க்கும் சமூகத்தின் தொழில் சார்ந்த கலைச்சொற்கள் இயற்கை சார்ந்த சார்ந்த சொற்கள் மற்றும் கிடை போடுதல் தொடர்பான உரையாடல்கள் மூலம் ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் பேச்சு வழக்கை உயிர்ப்பித்துள்ளார் பிஞ்சுகள் என்ற நாவலில் கிராமத்து குழந்தைகளின் உலகம் அவர்களின் விளையாட்டுகள் இயல்பான சொல் வழக்குகள் மற்றும் பெரியவர்களுடலான உரையாடல்கள் வழியே கரிசல் மண்ணின் தலைமுறை இடைவெளியற்ற வழக்கு மொழி தொடர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார் வட்டார வழக்குச் சொற்களும் உரையாடல்களும் வெறும் மொழி சார்ந்த ஆய்வுக்கு மட்டும் அல்லாமல் மறைந்து வரும் கிராமிய பண்பாட்டையும் மக்கள் வழக்காரங்களையும் பாதுகாக்கும் ஆவணமாக திகழ்கின்றன என்பது கி.ராஜநாராயணனின் படைப்புகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

துணை நூல் பட்டியல்:

1. ராஜநாராயணன் கி. கோபாலபுரத்து மக்கள் அன்னம் வெளியீடு, சிவகங்கை.
2. ராஜநாராயணன். கி. கிடை ஐந்திணை பதிப்பகம் சென்னை.
3. ராஜநாராயணன் கி. பிஞ்சுகள் மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
4. ராஜநாராயணன் கி. வட்டார வழக்குச் சொல் அகராதி கரிசல் வட்டாரம் அகரம் வெளியீடு, சிவகங்கை.
5. சிவசுப்பிரமணியன்.ஆ. கரிசல் மண்ணும் மனிதர்களும் காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
6. பஞ்சாங்கம்.க.கரிசல் இலக்கியமும் கி ராஜநாராயணனும் வல்லினம் பதிப்பகம்,புதுச்சேரி.

© 2026 முனைவர். சகாயமேரி இ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 230–234
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல்

முனைவர்.ஜோதி ரவீந்திரன் அ*

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை அறிவியல் கல்லூரி, நாகர்கோவில்-*4., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.ஜோதி ரவீந்திரன் அ — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00087

Abstract / ஆய்வுச்சுருக்கம்

கி.ராஜநாராயணன் சிறுகதைகளான கதவு மாயமான்,ஒரு செய்தி, கரண்டு, ஆகிய சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் பற்றி இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது கி ராஜநாராயணன் தனது கரிசல் மண் கதைகளில் சமூகத்தின் அடித்தட்டு மற்றும் விளிம்பு நிலை மக்களின் வறுமை உழைப்பு சுரண்டல் சமூகப் புறக்கணிப்பு மற்றும் அவர்களின் மனிதநேயத்தை இயல்பாக தமது சிறுகதைகளில் பதிவு செய்துள்ளார் வறுமையின் காரணமாக சொந்தமாக ஒரு கதவு கூட இல்லாத ஏழை மக்களினுடைய நிலை மக்களை ஏமாற்றி பிழைக்கும் போலித்தனங்களும் அதற்கு பலியாகும் அடித்தட்டு மக்களும் மக்கள் தங்களின் வறுமையைப் போக்க பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாறுகின்ற சமூக அமைப்பு அடித்தட்டு மக்கள் மீதான அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறை மற்றும் நீதி மறுக்கப்படுதல் மனிதர்களின் குரல்கள் அதிகாரத்தின் முன் கண்டு கொள்ளப்படாமல் நிற்கின்ற நிலை மனிதர்களிடையே மின்சாரம் போன்ற நவீன வளர்ச்சி அறிமுகமாகும் போது ஏற்படும் அனுபவங்கள் சமூகத்தில் நவீன வசதிகள் தங்களுக்கு எட்டாத ஒன்று என்று அச்சமும் அதேசமயம் அதனை கண்டு குழந்தைத்தனமான வியப்பும் உள்ள சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்கள் வெறும் பரிதாபத்திற்கு உரியவர்களாக மட்டும் சித்தரிக்கப்படாமல் வறுமையிலும் நகைச்சுவை உணர்வும் அசாத்திய வாழ்வியல் திறனமும் கொண்ட மனிதர்களாகவே உயிர்ப்புடன் வாழ்கின்றனர் என்பதை கி.ராஜ நாராயணன் முன் வைத்துள்ள விதத்தை இவ்வாய்வு அணுகியுள்ளது.

Keywords / திறவுச்சொற்கள்: வாழ்க்கைப் போராட்டம் வாழ்வியல் இயல்பு; நவீனமயமாக்கல் பொருளாதாரம் நடைமுறை தேவைகள்.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: அ, மு. ர. (2026). கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 230–234. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8477

முன்னுரை:

கி.ராஜநாராயணன் சிறுகததைகளில் வருகிற பெரும்பான்மையான மக்கள்

பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய விவசாயிகளான அடித்தட்டு மக்களாக அதாவது விளிம்பு நிலை மக்களாகவே இருக்கின்றனர். இவர்களின் உணர்வுகள்,,போராட்டங்கள்,முன்னேற்றங்கள், நடத்தைகள்,எல்லாம் பெரும்பாலும் சமூக எதார்த்தவியலின் அவலங்களை சுட்டிக் காட்டுவனாக அமைகின்றன.சமூகவியல் நோக்கில் இத்தகைய மக்களின் வாழ்க்கை ஏற்றத்தாழ்வுகளை கொண்டதாகவே காணப்படுகின்றது. ஒருபுறம் மித மிஞ்சிய வசதிகள் மற்றொரு புறம் அடிப்படை வசதிக்கு வள்ளல் படும் மக்கள் இது காலம் காலமாக தொடர்ந்து வரும் சமூகவியல் பார்வையாக இருக்கின்றது.இந்த சமூக அவலங்களில் சிக்குண்டு பெரிதும் அல்லல் படுபவர்கள் விளிம்பு நிலை மக்களே ஆவர். கி.ராஜநாராயணன் இத்தகைய விளிம்பு நிலை மக்களின் இன்னல்களையும் போராட்டங்களையும் தமது சிறுகதையில் கருவாக வைத்து கதையை அமைத்துள்ளார்.எனவே கி ராஜநாராயணன் சிறுகதைகளில் வருகின்ற விளிம்பு நிலை மக்களின் நடப்பியல் போராட்டங்கள் செயல்பாடுகள் குறித்து ஆராய்வது ஆய்வின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது. இவரது சிறுகதைகளில் வருகின்ற விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கைச் சூழலை வாழ்க்கை, நடைமுறை கல்வி தேவைகள் பொருளாதாரம் சமூகம் நவீனமாக்கல் என பல படிநிலைகளில் வகைப்படுத்தி ஆராயப்படுகின்றது.

சமூகமும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியலும் :

தனிமனிதனின் கூட்டு நடவடிக்கையை சமூகம் மனிதன் கூட்டம் கூட்டமாக வாழும் மனிதன் தான் வகுத்த நெறிமுறைகள் இவற்றினாலே வீழ்த்தப்படுகின்றான். ஏனெனில் தனிமனித உணர்வுகள் எவையும் முதன்மை பெறுவதே இல்லை. குழுநிலையில் அமைகின்ற உணர்வுகள் மட்டுமே முதன்மை பெறுகின்றன.இத்தகைய நிலையில் ராஜநாராயணன் படைப்பில் அமையும் விளிம்பு நிலை மக்களின் உணர்வுகள் எவ்வாறு சமூகத்தால் நசுக்கப்படுகின்றன. அவர்களின் உணர்வுகள் சமூகநிலையை எட்டாம் இலையை தவிர்க்கப்படுவது எவ்வாறு என்பதை இவர் சிறுகதையின் வாயிலாக காணலாம். ஊர் முழுவதும் பஞ்சம் தாண்டவம் ஆடுகின்றது இச்சூழலில் குடும்பத் தலைவனும் ஏமாற்றிவிட்டு சென்று விடுகின்றான். நிலத்தீர்வை கட்டக் கூறி அரசு நெருக்குகின்றது.உணவுத் தேடல் பெரும் திண்டாட்டமான சூழலில் இக்கதையில் வரும் கதை மாந்தரிடம் உள்ள ஒரே பொருள் அவள் வீட்டு கதவு தான். இந்நிலையில் சமூகம் அவளுக்கு கொடுக்கும் நெருக்கடியை அதாவது விளிம்பு நிலை பெண்ணுக்கு சமூகம் கொடுக்கும் துன்பத்தை கதவு என்னும் சிறுகதை காட்டுகின்றது.

கதவு சிறுகதை வறுமையின்பிடியில் சிக்கித் தவிக்கும் ஒரு ஏழை எளிய குடும்பத்தின் துயரத்தை கதவின் வழியே விளக்குகிறது. அதிகாரத்தின் அடக்குமுறையும் வறுமையும் பஞ்சத்தின் காரணமாக வரி தீர்வை செலுத்த முடியாத ஏழை குடும்பத்தின் வீட்டின் கதவை தலையாடரி கழற்றிக் கொண்டு எடுத்துச் சென்று விடுகிறான். ஏழைகளின் குரல் அதிகார வர்க்கத்தின் முன் எடுபடுவதில்லை என்பதை இந்த கதை காட்டுகின்றது. பாதுகாப்பின்மையும் இல்லாத கதவு இல்லாத வீட்டில் வாடைக்காற்றும் குளிர்ந்த காற்றும் பேசுவதால் கதவற்று வீட்டின் பாதுகாப்பு இல்லாத தன்மை காரணமாக அந்த குடும்பத்தில் உள்ள ஒரு கைக்குழந்தை இறந்து போகின்றது. சிறுவர்களின் கனவாக அந்த கதவு இருந்தது அந்த கனவில் சிறுவர்கள் ஏறி விளையாடுவதும் அது வெறும் மரக்கட்டை அல்ல தங்களுடைய சொர்க்கம் என்று விளையாட்டு நிலமாகவும் கனவு உலகமாகவும் திகழ்கின்றது.அந்த கதவு ஆனால் அந்த கதவு அதிகார வர்க்கத்தினாலானால்

கலட்டப்பட்டு ஊர்சாவடியில் கழற்றி வைக்கப்பட்ட கதவை கண்டு கட்டிப்பிடித்து கொள்ளும் காட்சி விளிம்பு நிலை சிறுவர்களின் பறிக்கப்பட்ட உரிமையையும் இயக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது.

விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் கனவு:

வாழ்க்கையும் நம்பிக்கையும் இருத்துப்பாதை போன்று என்றும் இணையாகவே செல்ல வேண்டும் ஆனால் ராஜநாராயணம் சிறுகதையில் வருகின்ற விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையை பொருளாதாரமே நிர்ணயம் செய்கின்றது. நம்பிக்கை என்பது நசுங்கிப் போய் விடுகின்றது பொதுவாக இவர்களின் வாழ்க்கை போராட்டங்கள் உணவு போராட்டத்தாலேயே அர்த்தமற்று போய்விடுகின்றது.அடிப்படை தேவையே எதிர்கால திட்டமாய் அமைந்திருக்கும் விவசாயத்தை ஒட்டியதாக அமைந்து கனவுகளை கலைந்து விடுகின்றது. இதனை மாயமான் சிறுகதை விளிம்பு நிலை விவசாயிகள் தொழிலாளர்களின் நிறைவேறாத ஆசைகளையும் வாழ்க்கை போராட்டங்களையும் பிரதிபலிக்கின்றது.

“ மழை மேகங்கள் இல்லை மழை பெய்வதாக இல்லை வெள்ளை வெயில் அடித்து என்றாவது ஒருநாள் கருமேகங்கள் கூடி சூரியனை பலமாக பந்தல் போட்டு. சொல் மேகங்கள் கணம் தாங்காது இப்போது பூமியில் இறங்கிவிடும். திடீரென்று எங்கிருந்தோ பெருங்காற்று வந்து மேகங்களை எல்லாம் வாய் சுருட்டுவது போல் சுருட்டிக்கொண்டு. ஜனங்கள் முணுமுணுப்பார்கள் “.. என்ற கதையின் உரையாடல் மாயமான சிறுகதையில் விவசாய மக்களின் வாழ்க்கை அவர்களின் போராட்டமாகவே இருக்கின்றது என்பதை காட்டுகின்றார். மாயமான் சிறுகதை விளிம்பு நிலை விவசாயிகள் தொழிலாளர்கள் நிறைவேறாத ஆசைகளையும் போராட்டங்களை தன் முழு போராட்டமாக கொண்டுள்ளனர்.ராமாயணத்தில் சீதைக்கு மாயமான் எவ்வாறு எட்டா கனியாக இருந்ததோ அதேபோல் வறுமையில் பாடும் எளிய மக்களின் ஆசைகளும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற விருப்பங்களும் மாயமான் போல எட்டாத இலக்காகவே இருக்கின்றன. பஞ்சமும் பிழைப்புக்கான போராட்டமும் மழை பொய்த்துப் போகும் கரிசல் மண்ணில் வாழ்வுதாரத்திற்காக போராடும் மக்களின் இயலாமையையும் மனித மனங்களின் போராட்டத்தை ராஜநாராயணன் இக்கதையில் சித்தரித்து உள்ளார்.

கல்வியும் விளிம்பு நிலை மக்களும் :

கல்வி அறியாமை இருளை அகற்றும் விளிம்பு நிலை மக்களிடையே ஆடம்பரமான ஒன்றாகவே கல்வி கருதப்பட்டு வருகின்றது கல்வியறிவு பெற்றுவிட்டால் தன் விவசாய தொழில் இருக்கு வாரிசு இல்லாமல் போய்விடும் என்று விளிம்புநிலை மக்கள் எண்ணுவர் இதன் காரணமாய் அடித்தட்டு விளிம்பு நிலை மக்களிடையே ஒருவன் கல்வியறிவு பெறுவது என்பது மிக அரிதான நிலையாகும் இந்நிலைக்கு காரணம் அறியாமை என்பதை காட்டிலும் பொருளாதாரமே முக்கிய காரணமாக இருக்கின்றது. வயிறு பசித்த நிலையில் கல்வி அறிவு திறன் அரிதான நிலையாக இருக்கும் என்பர் விளிம்புநிலை மக்களின் கல்வி அறிவை பறிப்பது பொருளாதாரம் மட்டுமின்றி அலட்சியப் போக்கும் காரணமாக இருக்கும் இதனை ஒரு செய்தி- சிறுகதையில் ராஜநாராயணன் கதை மாந்தர்கள் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

“படிச்சி என்ன செய்ய மண்டகப்படி கணக்கு எழுத போறாங்களா?முன்னெல்லாம் இப்படியே கேட்டுக் கொண்டிருந்தார்கள் “

“படிச்சி என்ன செய்ய கலெக்டர் வேலைக்கு போக போறாங்க “

“காடுகள போயி பாடுபட்டா வயித்துக்கு கஞ்சி கிடைக்கும் “ விளிம்பு நிலை மக்கள் கல்வியை விட விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது இச்சிறுகதை மூலம் தெளிவாகின்றது இதற்கு காரணமாக பொருளாதாரமும் வறுமையும் காரணமாக இருக்கின்றது.

நவீன மயமாக்கல்,பொருளாதார தேவைகள் விளிம்புநிலை மக்கள் :

தனிமனித தேவையும் சமூக முதன்மையும் காரணமாக இருப்பது பொருளாதாரமாகும் பொருளாதாரையே பற்றாக்குறை நிலையிலேயே தொடர்ந்து இருக்கின்றது அடிப்படை தேவையே அவர்களுக்கு சீராக கிடைப்பதில்லை அடிப்படைத் தேவையை பெறவே விளிம்பு நிலை மக்கள் உயிர் போராட்டம் நடத்த வேண்டிய நிலையில் உள்ளனர் பொதுவாக வறுமை நிலை உள்ளவர்களாக இருப்பது மட்டுமின்றி விவசாயக் குடியினராகவும் ராஜநாராயணன் கதைகளில் விளிம்பு நிலை மக்கள் இருந்து வருகின்றனர்.

தேவையே மனிதன் வாழ்வை நிர்ணயிக்கின்றது தேவை மிகையாகும் போது மனித வாழ்வில் தேடல் மிகையாக அமைகின்றது இதனால் விளிம்பு நிலைமக்களின் வாழ்வியலை பொறுத்து மாற்றம் பெற்று காணப்படுகின்றது.விளிம்பு நிலை மக்கள்

தேவைகள் இன்றி அமையாத தேவையான உணவு உடை இருப்பிடம் ஆகிவிட்டதை கொண்டதாகவே இருக்கும். விளிம்பு நிலை மக்களின் அடிப்படைத் தேவைகள் பெரிதும் புறக்கணித்துக் கொண்டு வருவதாக ராஜநாராயணன் தமது சிறுகதைகளில் குறிப்பிடுகின்றார். மனிதனின் வாழ்க்கை தேவைகள் என்பது பெரும்பாலும் மாறுதலுக்கு உட்பட்ட ஒன்றாகும். விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் போராட்டம் அத்தியாவசிய தேவைக்கான உயிர் போராட்டமாகும்.’ கரண்டு ‘ என்ற சிறுகதையில் சோளம் முளை கட்டுவதற்கு மின்சாரம் தேவைப்படுகிறது மின்சாரம் பெறுவதற்கு சென்ற கதை மாந்தர் பட்ட அவமானங்கள் ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். இச்சிறுகதையில் வரும் கதை மாந்தர் நாள் முழுவதும் கரண்ட் வேண்டும் என்று முதலில் ஒரு சிறிய அதிகாரியை சென்று பார்க்கின்றார் அவரிடம் எந்த கதையும் பலிக்கவில்லை.அதன் பிறகு பெரிய அதிகாரியிடம் சென்று நாள் முழுவதும் கரண்ட் வேண்டும் என்று கேட்கின்றார் கேட்டு அதற்கான ஒரு மனுவையும் அந்த அதிகாரியிடம் கொடுக்கின்றார். ஆனால் அந்த அதிகாரி அந்த மனுவை வாங்கிப் பார்க்காமலே ‘என்ன ‘என்று எரிச்சலோடு கேட்கின்றார் இப்பொழுது முடியாது எங்களுக்கு மேலே இருந்து எந்த ஆர்டரும் வரவில்லை ஸ்டிக்டா ஆர்டர் வந்திருக்கின்றது என்று சொல்லி அவரை புறக்கணித்து விடுகின்றார். இவ்வாறு விளிம்பு நிலை மக்கள் நவீன மயமாக்களில் முதன்மையாக உள்ள மின்சாரத்தைக் கூட தங்களால் பெற இயலாத நிலையை தன் கதையில் தத்ரூபமாக வெளிக்காட்டி உள்ளார்.

முடிவுரை:

கி ராஜநாராயணனின் மாயமான்,கதவு, ஒரு செய்தி,கரண்டு ஆகிய சிறுகதைகள் கரிசல் மண்ணின் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை யதார்த்தமாக வெளிப்படுத்துவதாக உள்ளன. இக்கதைகள் வாயிலாக பொருளாதார சுருண்டல் வறுமை மற்றும் நவீன உலகில் இயந்திரத்தனமான மாற்றங்கள் மக்களின் மீது திணிக்கும் தாக்கங்கள் ஆகியவை இக்கதையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.மாயமான் கதையில் வறுமையின் கோரத்தால் அரசாங்க உதவிகளின் சிக்கல்களால் தவிக்கும் குடும்பத்தின் நிலையும், கதவு கதையில் வரி பாக்கிக்காக குடிசையின் கதையே பறிபோகும் அவலமும் விளிம்பு நிலை

மனிதரகளின் துயரங்களை உணர்த்துகின்றன. ஒரு செய்தி மற்றும் கரண்டு போன்ற கதைகள் கிராமப்புற எளிய மக்களின் வாழ்க்கைக்குள் தொழில்நுட்பமும் நவீன வளர்ச்சியும் நுழையும் போது ஏற்படும் முரண்பாடுகளையும் அவற்றை எதிர்கொள்ளும் குழப்பங்களையும் காட்டுகின்றன. எத்தகைய துயரங்களும் ஏமாற்றங்களும் விளிம்பு நிலை மக்களை சூழ்ந்தாலும் அவர்களின் சுயமரியாதை பண்பாடு மற்றும் வறுமையிலும் மலரும் சில செய்திகளை ராஜநாராயணன் தனது கதைகளில் அழகாக வெளிப்படுத்தி உள்ளார்.

சமூகத்தில் அடித்தட்டு மக்கள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டும் அவர்களின் தேவைகள் சமூக மதிப்பை பெறுவது மிக இன்றியமையாத ஒன்றாகும்.விளிம்பு நிலை மக்களின் பொருளாதார நிலை மீது சமூகம் தனிக்கவனம் செலுத்த வேண்டும் இதனால் சமூகத்தின் பின்னடைவு தவிர்க்கப்படும்.

துணை நூற் பட்டியல் :

1. ராஜநாராயணன். கி. ராஜநாராயணன் சிறுகதைகள் முழுத்தொகுதி,அன்னம் பதிப்பகம், சிவகாசி.
2. பெருமாள்.அ.கா.கரிசல்காட்டு பண்பாடும் மக்களும்,தமிழினி பதிப்பகம்,சென்னை.
3. சண்முகசுந்தரம்.சு.தமிழ் நாவல்கள் மற்றும் சிறுகதைகளில் விளிம்பு நிலை மக்கள், பாவை பப்ளிகேஷன்,சென்னை.
4. பத்மநாபன்.சே.நவீன தமிழ் இலக்கியத்தில் விளிம்பு நிலை மனிதர்கள், காவியா பதிப்பகம், சென்னை.
5. தமிழவன்.நவீன தமிழ் இலக்கிய திறனாய்வு,அடையாளம் பதிப்பகம், திருச்சி.

© 2026 முனைவர்.ஜோதி ரவீந்திரன் அ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 235–239
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தொ. மு. சி. ரகுநாதனின் “பாரதி காலமும் கருத்தும்” நூலில் இடம்பெற்றுள்ள முற்போக்கு சிந்தனைகள்.

முனைவர். சிந்து ந*

உதவிப் பேராசிரியர் தமிழ்த் துறை, நூருல் இஸ்லாம் உயர் கல்வி மையம், குமாரகோவில், தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம்-*629180., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். சிந்து ந — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00086

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தொ. மு.சிதம்பர ரகுநாதன் தமிழின் முன்னோடி எழுத்தாளர் ஆவார். இவர் சிறுகதை நாவல் கவிதை நாடகம் என பல படைப்புகளை படைத்துள்ளார். திருச்சிற்றம்பல கவிராயர் என்ற புனைப் பெயரிலும் கவிதை எழுதியுள்ளார். இவரது பஞ்சும் பசியும் என்ற நாவல் நெசவாளர்களின் துயர வாழ்வை பேசும் நாவலாகும். இது செக் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது அயல் மொழியில் அதிக அளவு விற்பனையான முதல் தமிழ் நாவல் இந்நாவல் ஆகும் இவர் எழுதிய பாரதி காலமும் கருத்தும் என்ற நூல் முற்போக்கு சிந்தனையும் சமூகப் புரட்சியும் சாதிய கட்டமைப்பும் வர்க்கப் போராட்டத்தையும் கொண்ட நூலாகும். இந்நூலில் பாரதியை ஒரு ஆன்மீக கவிஞராகவோ தேசபக்த கவிஞராகவோ பார்த்த பார்வையில் இருந்து மாறுபட்டு பாரதி வர் க்க முரண்பாடுகளை சமூக ஒடுக்கு முறைகளையும் அறுத்தெறிய வந்த புரட்சியாளர் என்பதை என் நூலில் மிகவும் அழுத்தமாக பதிவு செய்துள்ளார். சாதிய கட்டமைப்பிற்கு எதிரான வர்க்க புரட்சி நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு சமூகப் புரட்சி சமூக அமைப்போடு கூடிய பெண் விடுதலை, அதாவது பெண் விடுதலையின் சமூக பரிமாணம், உலகளாவிய மனித நேயம், ஒடுக்கப்பட்டோர் மீதான வர்க்கப் புரட்சி, மதசார்பற்ற ஆன்மீகம், பாரதியின் சோசலிச பார்வை பொருளாதார ஏற்றத்தாழ்வு அற்ற வர்க்க உணர்வு உழைக்கும் வர்க்கத்தின் எழுச்சி தொழில் மற்றும் கூட்டுடைமைக் கொள்கை இவை போன்ற பல்வேறு முற்போக்கு சிந்தனைகளை பாரதி காலமும் கருத்தும் என்ற நூல் முன் வைத்துள்ளதை இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது.

Keywords / திறவுச்சொற்கள்: புரட்சி; வர்க்கம்; கட்டமைப்பு; முரண்பாடுகள்; பிரபுத்துவம்; முற்போக்கு சிந்தனைகள்; மனிதநேயம்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ந, மு. சி. (2026). தொ. மு. சி. ரகுநாதனின் “பாரதி காலமும் கருத்தும்” நூலில் இடம்பெற்றுள்ள முற்போக்கு சிந்தனைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 235–239. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8479

முன்னுரை :

ஒரு சமுதாயத்தின் வாழ்வியலை எடுத்துக்காட்டுவது இலக்கியங்கள் ஆகும். ஒரு சமுதாயத்தை மற்றொரு சமுதாயத்தினின்று வேறுபடுத்தி அறிவதற்கு துணையாக இருப்பதும் இலக்கியம் எனலாம். இவ்விலக்கியத்தை காலத்தை காட்டும் கண்ணாடி என்பர். படைக்கப்படும் ஒவ்வொரு இலக்கியத்தின் முக்கிய நோக்கம் சமுதாயத்தை பிரதிபலிப்பதே ஆகும். அந்த வகையில் தொ.மு.சிதம்பர ரகுநாதனின் "பாரதி காலமும் கருத்தும் "என்ற நூல் சமுதாயத்தின் அடி நாதமாக விளங்கும் மக்களின் போராட்ட வாழ்க்கையும் அரசியல்வாதிகளாலும் முதலாளித்துவ வர்க்கத்தினராலும் மக்கள் சுரண்டப்படுவதையும் சோசலிசத்தையும் பெண்ணியத்தையும் உலக மனிதாபிமானத்தையும் சித்தரிக்கின்றது இவை தொடர்பான முற்போக்கு சிந்தனைகளை இந்த நூலில் ஆசிரியர் எவ்வாறு எடுத்துரைத்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

சாதி ஒழிப்பும் முற்போக்கு சிந்தனையும்:

கவிதை வரலாற்றில் பாரதியின் கவிதை தோற்றம் என்பது தனி நபர் எழுச்சியாக மட்டுமல்ல இந்திய சமூக பொருளாதார அரசியல் சூழலின் வரலாற்று ரீதியான திருப்புமுனை என தொ.மு.சி.ரகுநாதன் அவர்கள் பாரதி காலமும் கருத்தும் என்ற நூலில் மிக அழுத்தமாக பதிவு செய்துள்ளார். பாரதியை தன்னுடைய காலத்தின் வர்க்க முரண்பாடுகளை சாதிய ஒடுக்கு முறைகளையும் விளக்க வந்த புரட்சியாளராக ரகுநாதன் இந்த நூலில் அடையாளப்படுத்துகிறார். இந்தியச் சூழலில் சாதி என்பது வெறும் சமூகப் பிரிவு மட்டுமல்ல அது வர்க்கச்சு சுரண்டலின் ஒரு வடிவமாகவே இருந்துள்ளது என்பதை மார்க்சிய தத்துவ பின்னணியில் ரகுநாதன் விளக்கியுள்ளார்.

நில பிரபுத்துவ சமூக அமைப்பில் உழைக்கும் மக்கள் சாதியின் பெயரால் அடிமைகளாகவும் தீண்டத்தகாதவர்களாகவும் வைக்கப்பட்டிருந்தனர். பாரதி சாதியை எதிர்த்த போது அவர் நில பிரபுத்துவ சுரண்டலின் வேர்களையே தாக்கினார் என்று ரகுநாதன் கூறுகின்றார். பாரதி வாழ்ந்த காலத்தில் நிலவிய பார்ப்பனிய ஆதிக்கத்தையும் சாதி பிரிவினைகளையும் தொ.மு.சி. ரகுநாதன் வரலாற்று தரவுகளுடன் பாரதியின் "சாதிகள் இல்லையடி பாப்பா" என்ற எளிய வழிகளுக்கு பின்னால் இருக்கும் சமூக புரட்சிக்கான ஆழமான தத்துவத்தை இந்நூலில் எடுத்துக்காட்டுகிறார்.

பாரதி பார்ப்பனராக பிறந்த போதிலும் பூணூலை துறந்து கனகலிங்கம் என்ற தாழ்த்தப்பட்ட சமூக இளைஞருக்கு பூணூல் அணிவித்த வரலாற்று நிகழ்வை ரகுநாதன் வெறும் சீர்திருத்த செயலாக கூறவில்லை அது சாதிய கட்டமைப்பின் உச்சியில் இருந்த ஒரு தத்துவார்த்த குறியீட்டை உடைத்தெறிந்த புரட்சிகரமான முற்போக்கு செயல்பாடு என்று மதிப்பிடுகின்றார்.

"பார்ப்பானை ஐயரென்ற

காலமும் போச்சே

வெள்ளைப்

பரங்கியைத் துறையென்ற

காலமும் போச்சே -பிச்சை

ஏற்பாரை பணிகின்ற காலமும்

போச்சே”

என்பதில் சாதிய ஆதிக்கத்தின் அடையாளமான பார்ப்பானும் வெள்ளைய ஆதிக்கத்தின் அடையாளமான பரங்கியும் வர்க்க ஆதிக்கத்தின் அடையாளமான பணக்காரர்களும் ஒரே நேர்கோட்டில் பாரதியால் எதிர்க்கப்படுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறார் இதன் மூலம் பாரதியின் சாதி எதிர்ப்பு என்பது இயல்பாகவே வர்க்க புரட்சியுடன் கூடிய முற்போக்கு சிந்தனையாகி விடுகின்றது. “இப்பொழுது இருக்கின்ற சுவடு எங்கும் மாறும் என்று பாடியவர் பாரதி” சாதி ஒழிய வேண்டுமானால் உழைப்பவனின் கையில் அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதை பாரதி உணர்ந்திருந்தார். “தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்ற பாரதியின் பாடல் வரி ஜாதியால் ஒடுக்கப்பட்டு உணவின்றி தவித்த ஏழை எளிய மக்களின் குரலாகும் என்று ஆசிரியர் கூறுகின்றார். பாரதி காலமும் கருத்தும் என்ற நூல் பாரதியை ஒரு சாதி ஒழிப்பு முற்போக்கு சிந்தனை வாதியாகவும் எதிர்ப்பு வெறும் மேலோட்டமான சீர்திருத்தம் அல்ல சமூகத்தின் அடித்தளத்தையே மாற்றி அமைக்க வந்த வரிகள் என்று இந்நூலில் ஆசிரியர் கூறுகின்றார்.

பெண் விடுதலையும் முற்போக்கு சிந்தனையும் :

பாரதி வாழ்ந்த காலத்தில் நிலவிய பெண் விடுதலை விடுதலைகளுக்கு எதிரான அடக்குமுறைகளையும் அதற்கு எதிராக பாரதி எடுத்த முற்போக்கு நிலைகளையும் என் நூலாசிரியர் விரிவாக விளக்கியுள்ளார் அன்றைய சமூகத்தில் நடைமுறையில் இருந்த குழந்தை திருமணம் விதவைக் கொடுமை தேவதாசி முறை மற்றும் பெண்களை வீட்டின் நான்கு சுவர்களுள் முடக்கி வைக்கும் நிலைமை அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்ற பிற்போக்குத்தனமான கருத்துக்களை பாரதி கடுமையாக எதிர்த்துள்ளார் ஆண்களுக்கு ஒரு நீதியும் பெண்களுக்கு ஒரு நீதியும் கற்பிக்கும் இரட்டை அநீதியை பாரதி ஏற்றுக்கொள்ளவில்லை, “ கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம் “ என்ற வரிகள் மூலம் பெண்களின் மீதான கற்பு சார்ந்த சமூக கட்டுப்பாடுகளை ஆண்களுக்கும் பொதுவாக வேண்டும் என்று சமத்துவ குரலை அதாவது முற்போக்கு சிந்தனையை அவர் எழுப்பியதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார் பாரதியின் பெண் விடுதலை சிந்தனையில் ஏற்பட்ட மிகப்பெரிய திருப்பத்தை ஆசிரியர் விரிவாக விவரிக்கின்றார் பாரதி தனது அரசியல் குருவாக கருதிய சகோதரி நிவேதிதாவை சந்தித்த பிறகே அவரது பெண் விடுதலை குறித்த பார்வையில் தெளிவும் தீவிரமும் கூடியது என்கின்றார் முழுமையான சுதந்திரம் பெண்ணை வெறும் போகப் பொருளாகவோ அல்லது ஆணுக்கு அடங்கிய துணையாகவோ பார்க்காமல் அவளை சமூகத்தின் சமமான சக்தியாக பார்க்க நிவேதிதா தேவியின் சந்திப்பு பாரதிக்கு வழிகாட்டியது என்கிறார்.

பராசக்தியின் வடிவம் பெண்ணை வீட்டின் லட்சுமியாக மட்டும் பார்க்காமல் அறிவும் வீரமும் நிறைந்த பராசக்தியின் வடிவமாகவே பார்க்கும் ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வை பாரதி பெற்றார் பாரதி படைத்த புதுமைப் பெண் உருவம் அன்றைய பாரம்பரிய கருத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு புரட்சி பெண்ணாக ஆசிரியர் ஆராய்கின்றார் “நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்” கொண்ட பெண்ணே பாரதி கண்ட புதுமைப்பெண். அச்சமும் மடமையும் நாணமும் பெண்களுக்கு உரிய குணங்களாக கூறப்பட்டு வந்ததை அவற்றையெல்லாம் விளக்கி தலை நிமிர்ந்து நிற்பதே புதுமைப் பெண்ணின் அடையாளம் என்கின்றார். புதுமைப்பெண் என்பவள் யாரையும்

சார்ந்திருக்க மாட்டாள் தனது வாழ்வின் முடிவுகளை தானே எடுக்கும் சுயமரியாதையும் சிந்தனையும் சுதந்திரமும் படைத்தவள் என்று கூறுகின்றார் தொ. மு.சி ரகுநாதன் தனது ஆய்வில் பாரதியின் பெண் விடுதலை கோட்பாட்டில் பொருளாதார சுதந்திரத்திற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றார்.

பெண்கள் கல்வி கற்பது வெறும் வாசிப்பிற்காக மட்டுமல்ல அவர்கள் உலக அறிவை பெறவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் அவசியம் என்பதை பாரதி வலியுறுத்தினார் தொழில் மற்றும் பொருளாதார தன்னாட்சி பெண்கள் வீட்டிற்குள் அடங்கி கிடக்காமல் தொழில் செய்யவும் அரசு நிர்வாகம் மற்றும் அறிவியல் துறைகளில் ஈடுபடவும் வேண்டும் என்று விரும்பியதை சாத்திரங்கள் கற்போம் சட்டங்கள் செய்வோம் என்ற பாரதியின் வரிகள் பெண்கள் சட்டம் இயற்றும் அதிகாரத்தை பெற வேண்டும் என்ற முற்போக்கு சிந்தனையை வெளிப்படுத்துகின்றன பாரதியின் தேச விடுதலையும் பெண் விடுதலையும் ஒன்றோடு ஒன்று சிரிக்க முடியாதவை என்பதை ரகுநாதன் இந்நூலில் முழுவதும் தெளிவுபடுத்தி உள்ளார் நாட்டின் மக்கள் தொகையில் பாதியாக இருக்கும் பெண்களை அடிமையாக வைத்துக் கொண்டு இந்திய தேசம் ஆங்கிலேயர் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற முடியாது என்பதை கூறுகின்றார் ஒரு நாட்டின் நாகரீகமும் முன்னேற்றமும் அந்த நாடு பெண்களை எவ்வாறு வழிநடத்துகின்றது என்பதை பொறுத்து அமைகின்றது பெண்கள் ஒடுக்கப்படும் வரை எந்த ஒரு சமூகமும் உண்மையான சுதந்திரத்தை அடைய முடியாது என்று பாரதி பாதித்ததை ஆசிரியர் முன்வைக்கின்றார்.

தொ மு சி ரகுநாதனின் பாரதி காலமும் கருத்தும் என்ற நூல் பாரதியை வெறும் கவிஞராக மட்டுமின்றி சமூகப் புரட்சியாளராகவும் உயர்த்தி காட்டுகின்றது பாரதியின் பெண் விடுதலை கருத்துக்கள் அன்றைய காலத்தின் எல்லையை கடந்து இன்றைக்கும் பொருந்தக்கூடிய முற்போக்கு சிந்தனைகளாக மிளிர்கின்றன பெண்களின் கல்வி சம உரிமை பொருளாதார சுதந்திரம் மற்றும் சுயமரியாதை ஆகியவற்றை வற்புறுத்திய பாரதியின் பார்வை தமிழ் சமூக சீர்திருத்த வரலாற்றில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியது என்கிறார் ஆசிரியர்.

மனித நேயமும் முற்போக்கு சிந்தனையும் :

காலத்தின் சூழல் கவிஞனை மனிதநேயமுடையவனாக எவ்வாறு உருவாக்குகின்றது என்பதே பாரதியின் காலத்தைச் சூழ்ந்திருந்த இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் விக்டோரியா காலத்திய நில பிரபுத்துவ சூழல் மற்றும் உலக புரட்சிகள் பாரதியை ஒரு முற்போக்கு சிந்தனை ஆளாக மாற்றியது என நூலின் ஆசிரியர் விளக்குகின்றார். அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாரதியின் மனிதநேயம் வெறும் மனிதர்களுக்கு உள்ளான எல்லைகளுக்கு உட்பட்டது அல்ல. “ காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் “ என்ற வரிகளின் வலி உலக உயிர்களையும் தன் உயிராக பார்க்கும் பரந்த மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது. சாதி மத வர்க்க வேறுபாடுகளைக் கடந்து மனித குலம் முழுவதையும் ஒன்றென போற்றும் மானுட சமத்துவத்தை பாரதி தமது கவிதைகளில் கட்டுரைகளில் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை தொ. மு. சி.ரகுநாதன் தனது நூலில் அதாவது பாரதி காலமும் கருத்தும் என்ற நூலில் வெளிப்படுத்துகின்றார் “மா காளி பராசக்தி உருசிய நாட்டில் கடைக்கண் வைத்தால் “ என்று பாரதி பாடிய வர்க்கப் போராட்டத்தினை முற்போக்கின் உச்சமாக ஆசிரியர் அடையாளப்படுத்துகிறார்.“தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை

அழித்திடுவோம்" என்ற பாரதியின் இந்த பாடல் வரி ஏழை பணக்காரன் என்ற இடைவெளியை எதிர்க்கும் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது என்கின்றார். மூடநம்பிக்கைகள் சடங்குகள் பெண் அடிமைத்தனம் ஆகியவற்றிற்கு எதிரான புரட்சிகரமான பாரதியின் கவிதைகளை ஆதாரங்களுடன் ஆசிரியர் விளக்கியுள்ளார் பெண்களின் கல்வி சம உரிமை மற்றும் நிமிர்ந்த நன்னடை சார்ந்த பாரதியின் புதுமைப்பெண் உருவகம் அக்கால சமூக தேவையின் விளைவாக எழுந்த முற்போக்கு கருத்து என்பதை விளக்குகின்றது. பாரதியின் தேசபக்தி என்பது குறுகிய எல்லைக்குள் மட்டுமல்ல அது நாட்டின் விடுதலையையும் எழுச்சியையும் விரும்பிய அதே வேளையில் உலக மக்கள் அனைவரின் சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் போற்றிய ஒரு மனித நேயமாக அது மலர்ந்துள்ளது என்பதையும் ஆசிரியர் விளக்குகின்றார்.

பாரதியின் கவிதைகள் இந்திய எல்லைக்குள் மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித குலத்தின் விடுதலைக்கான முழக்கமாக இருந்தது பாரதி வாழ்ந்த காலம் என்பது ஆங்கில ஏகாதிபத்திய ஒடுக்கு முறையை உலகளாவிய அளவில் பல்வேறு முதலாளித்துவ சுரண்டல்களும் நிகழ்ந்த காலமாகும் வித்தகைய சொல்லில் பாரதியின் மனிதநேயம் என்பது வெறும் உணர்ச்சிவசப்பட்ட கவிதை வரிகள் அல்ல அவை" யாதும் ஊரே யாவரும் கேளிர்" இந்திய மரபில் இந்திய மானுடத்தின் மீதான தத்துவார்த்த கவிதை வரிகள் ஆகும்.

முடிவுரை :

தொ.மு.சி.ரகுநாதனின் பாரதி காலமும் கருத்தும் என்ற ஆய்வு நூல் பாரதியை ஒரு தேசிய கவிஞராக மட்டும் பார்க்காமல் பாரதியை உலகளாவிய மனித நேயத்தின் அடையாளமாக காட்டுகின்றது மனித குலத்தை ஒடுக்கும் சாதி வர்க்கம் தேசம் மதம் என்ற அனைத்து சுவர்களையும் தகர்த்து ஒரு புதிய சமத்துவ உலகை படைக்க பாரதியின் கனவை தொ மு சி ரகுநாதன் மார்க்சிய பார்வையில் துள்ளியமாக இந்த நூலை தொகுத்துள்ளார் பாரதியின் உலகளாவிய மனித நேயம் இன்றும் உலகத்திற்கு தேவையான ஒரு உன்னத வழிகாட்டியாக இருக்கின்றது. பாரதியின் சிந்தனைகளில் இருந்த சோசியலிச தொலைநோக்கு பார்வை சிறந்த வரலாற்றுச் சான்றுகளுடஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். பாரதி தன் காலத்தில் வெளிப்படுத்திய சாதி எதிர்ப்பு பெண் விடுதலை மற்றும் மானுட சமத்துவம் ஆகிய முற்போக்கு சிந்தனைகள் வெறும் கவிதை நயத்திற்காக மட்டுமல்ல அவை சமூக மாற்றத்திற்கான தீர்க்கமான கருவிகள் என்பதை வரலாற்று பூர்வமாக தொ.மு.சி. ரகுநாதன் இந்நூலின் வழியே எடுத்துக் கூறியுள்ளார்.பாரதியின் இத்தகைய முற்போக்கு சிந்தனைகள் காலங்களை கடந்தும் அவரை ஒரு சமூகப் புரட்சியாளராக நிலை நிறுத்துகின்றது என்பதை என் நூலின் வழியே நாம் அறியலாம்.

© 2026 முனைவர். சிந்து ந. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 240–245
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சுசீந்திரம் ஸ்ரீ முன்னூற்றிநங்கை அம்மன் கோவிலின் அமைப்பும் அருள்ச்சிறப்பும்

முனைவர். விஜய சோபா மோ*

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில் தமிழ்நாடு, இந்தியா., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். விஜய சோபா மோ — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00085	

ஆய்வுச்சுருக்கம்

உலகின் ஆதி இனம் தமிழ் இனம். ஆலயங்கள் நிறைந்த பகுதி தமிழகமே. ஆன்மிகத்திற்கு அடிப்படையாக அமைவதும், பெரியோர்கள் தோன்றியதும் சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், வாழ்ந்த நாடு தமிழ்நாடு, அத்தகைய தனி சிறப்பு மிகுந்த தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் கிழக்கு முகமாக ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் சுசீந்திரம் ஸ்ரீ முன்உதித்த நங்கை அம்மன் கோவில் அமைந்துள்ளது, அம்மனின் அருள் தன்மை,சிறப்பையும் இவ்வாய்வில் விரிவாக காணலாம்

Keywords / திறவுச்சொற்கள்: தேவி; காணிக்கை மகிஷாசுரமர்த்தினி; ஆதிபராசக்தி வாடா விளக்கு கற்ப கிரகம்

Abstract

The Tamil race is the oldest race in the world. Tamil Nadu is a land filled with temples. Tamil Nadu is the land that is the foundation for spirituality, and where great saints, Siddhas, sages, and yogis were born and lived.

In such a uniquely special Tamil Nadu, Kanyakumari district, 5 kilometers to the east of Nagercoil, is situated the Suchindram Sri Munuthitha Nangai Amman Temple. The grace and greatness of the Goddess can be seen in detail in this research.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மோ, மு. வி. சோ. (2026). சுசீந்திரம் ஸ்ரீ முன்னூற்றிநங்கை அம்மன் கோவிலின் அமைப்பும் அருள்ச்சிறப்பும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 240–245. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8481

சுசீந்திரம் பெயர் விளக்கம்

ஞானாரண்யம் என்ற பெயரால் வழங்கி வந்த இடமே காலப்போக்கில் இந்திரன் சாபம் நீங்கியதால் சுசீந்திரம் என வழங்கல் ஆயிற்று, சுசி என்றால் மன்னித்தல், இந்திரம் என்பது இந்திரனுக்கு மன்னிப்பு அருளிய இடம் சுசீந்திரம். ஊரின் வடக்கு பகுதியில் பாய்ந்து வளம் கொழிக்கும் பஃறுழியாறு ஆறு சங்க கால புறநானூற்றில்

இடம்பெற்றுள்ளது, தற்பொழுது பழையாறு எனவும் அழைக்கப்படுகிறது, பழமையான பொன் நகரமான சுசிந்தை சிறப்பை எல்லாம் இன்னொரு நாவால் எடுத்தியம்பை இயலாது. என்பது கவிமணியின் வாக்கு அப்படிப்பட்ட சிறப்புடைய ஊரே சுசிந்தை பதியாகும்.

முன்னுரை

சங்க காலத்துக்கு முந்தைய காலத்திலேயே தமிழ்நாட்டில் கோவில்கள் இருந்திருக்கின்றன. பண்டைய தமிழர்கள் நிலத்தை ஐவகையாக பிரித்து ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தெய்வங்களை படைத்துக் காட்டினார்

மாயோன் மேய காடுறை உலகமும்

(தொல்:பொருள் :அகம்)

எந்த தொல்காப்பிய நூற்பாவால் இவ்உண்மையை அறியலாம். வடக்கே இமயத்தில் இருந்து தென்குமரி வரை பறந்து கிடக்கின்ற நமது பாரத திருநாட்டில் ஊருக்கு ஒரு கோவில் என்று ஆங்காங்கே அமைந்திருப்பதை ,தீர்த்த யாத்திரைக்காக சென்று வருவார்கள் பார்த்து மகிழ்ந்து வணங்கி வருவதை அறிகிறோம் உலகில் எல்லா கோவில்களும் ஒன்று போல் அமைவதில்லை கோவிலின் அமைப்பு நாட்டுக்கு நாடு மாநிலத்திற்கு மாநிலம் இடத்திற்கு இடம் மதத்துக்கு மதம் வேறுபடுகிறது. சுசீந்திரம் ஸ்ரீ முன்னுதித்த அம்மன் கோவிலின் அமைப்பும் அறச்சிறப்பும் குறித்து ஆராய்வோம்.

கோவில் விளக்கம்

இறைவனை பண்டைத் தமிழ் மக்கள்' கோ 'என்று அழைத்தனர் மக்கள் உறையும் இடம் 'இல்'என்று அழைக்கப்பட்டது. எனவே இறைவன் உறையும் இடம் கோவில் என வழங்கலாயிற்று.

(கலைக்களஞ்சியம் தொகுதி 4 பக்கம் 34)

கோவில்கள் மனிதனின் வழிபாட்டிடமாக இருப்பதோடு சிற்பம்!, ஓவியம் ,இசை, நாட்டியம்முதலிய கலைகளில் வளர்ப்பு பண்ணையாகவும் இருந்து வருகின்றனர். மனம் ஒன்றி வழிபடும் இடம் ஆத்ம சக்திக்கு உந்துதலாகவும் கோவில் அமைகின்றது.

கோவில் அமைவிடம்

சுசீந்திரம் ஸ்ரீ 3 முன்னுதித்த நங்கை அம்மன் கோவில் நாகர்கோவிலில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் கன்னியாகுமாரி செல்லும் வழியில் பழையாற்றின் கரையில் சோலைகளும் வயல்களும் சூழ அமைக்கப்பட்டுள்ளது .தெற்கு முகமாக திருக்கோவில் வாசல் அமைந்துள்ளது மகிஷாசுரமர்த்தினி அவதாரத்தில் அம்மன் கற்ப கரகத்தில் கிழக்கு முகமாக காட்சி தருகின்றாள் 5 அடி உயரத்தில் அருள் பாலிக்கின்றாள்.

பெயர் அமைப்பு

முன் உதித்த நங்கையே போற்றி !என்னுள் உதித்த நங்கையே போற்றி!

என்ற ஆன்றோர் வாக்கு மூலம் முக்கோடி தேவர்களுக்கும் முந்நூறு தேவியாக காட்சியளித்ததால் முன்னூற்றிநங்கை என்றும் முனனூதித்த நங்கை என்றும்

அழைப்பதாக தெரிகிறது.

அமைப்பு:

கர்ப்பக்கிரகம்,

வழிபாட்டு மண்டபம்,

அர்த்தமண்டபம் என மூன்றாக அமைப்பு பிரிக்கப்படுகிறது.

கர்ப்பக்கிரகம் வரிக்கல்லால் கட்டப்பட்டுள்ளது கர்ப்ப கிரகத்தில் அம்மன் மகிஷாசுர மர்த்தினி அவதாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.திருவுருவச் சிலையின் இருபுறமும் நான்கு சங்கலி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. திருவுருவத்தில் அங்கியும் அமைக்கப்பட்டு உள்ளது. முன்புறமாக அமைந்துள்ள அம்மன் இடத்தில் வாடா விளக்கு அமைக்கப்பட்டு தினமும் கோவில் நடை திறந்தவுடன் விளக்கேற்றி வைக்கப்பட்டு வருகிறது. வழிபாட்டு மண்டபத்தின் நேராக இரண்டடி உயரமுள்ள பீடத்தின் மேல் வேதாளம் சிலை உள்ளது. ஓரே நேரத்தில் நூறு பேர் உட்காரும் வகையில் வழிபாட்டு மண்டபம் அமைந்துள்ளது. அர்த்தமண்டபம் கர்ப்ப கிரகத்தை தொட்டு தெற்கு புறமாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் கன்னி மூலையில் விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

பிரகாரம்

பிரசித்தி பெற்ற சிறிய கோவில் மக்கள் சுற்றி வழிபடுவதற்கு உட்பிரகாரம், வெளிப்பிரகாரம் உண்டு.

கோவிலின் வடிவம்

நீள் சதுர வடிவத்தில் அமைந்த வடிவமுடையதாகும். கிழக்கு மதிற் சுவரில் ஒரு வாயிலும் வடக்கு மதிற்சுவரில் ஒரு வாயிலும் அமைக்கப்பட்டுள்ளது. ஓரே நேரத்தில் நூறு பேர் அம்மனை தரிசிக்கலாம்.

துணைக்கோவில்கள்

இந்து சமய கடவுளர்களுக்கென்று தனித்தனியாக கட்டப்பட்ட கோவில்கள் அனைத்திலும் விநாயகருக்கு இடம் அளிக்கப்பட்டு வருகிறது. நாகராஜா கோவில் ,ஐயப்பன் சுவாமி கோவில், சிவன், பார்வதி, சப்த கன்னிகர் வன்னியர், வன்னிச்சி, கருமாரியம்மன் போன்ற கோவிலும் காணப்படுகின்றன.

நாகராஜா கோவில் பக்கம் ஒரு அரசமரம் உள்ளது. அரச மரத்துக்கு இடி விழுந்தால் தாங்கிக் கொள்ளுகின்ற சக்தி உண்டு என்பர். கோவிலின் பின்பக்கம் ஒரு கிணறு உள்ளது. கோவிலுக்கு வேண்டிய தண்ணீர் அக்கிணற்றில் இருந்து எடுக்கப்படுகிறது. ஆடிச் செவ்வாய் நாட்களில் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் கோவிலை தரிசிக்க வருவார்கள்.

மடப்பள்ளி

கோவிலின் இடதுபுறம் ஒரு அறை இங்கு நெய்வேத்தியத்துக்கு தேவையான பொருட்கள் வைக்கப்பட்டுள்ளது. மேலும் வழிபாடு (பொங்கல், கடலை, பஞ்சாமிர்தம், புடடமிர்தம், பால்பாயசம், அப்பம்) செய்வதற்கு அங்கு அடுப்பும் உண்டு. கோவிலில் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் இங்கு வந்து நெய்வேத்தியத்திற்கான நெய்வேத்திய உணவை தாங்களே படைத்து இறைவிக்கு

சமர்ப்பிப்பார்கள். மேலும் யாராவது வழிபாடு செய்வதற்கு வந்தால் இம்மட பள்ளியில் உள்ள அறையில் சமைத்து இறைவிக்கு நெய்வேத்திய பிரசாதம் வழங்குவார்கள்.

மதில் சுவர்

எட்டடி உயரம் வரிக் கல்லால் கட்டப்பட்டு காவி வண்ணம் பூசப்பட்டு மிக தத்துருவமாக காட்சியளிக்கிறது.

அர்ச்சகர்

சல்லி ராயர் என்ற புரோகிதர் குடும்ப பாரம்பரிய முறையில் காலம் காலமாக இக்கோவிலில் பூஜைகள் நடத்தி வருகிறார்கள். தற்பொழுது நிர்வாகம் இவர்களுக்கு போதுமான அளவு ஊதியமும் வழங்குகிறது.

தல வரலாறு

இந்திரன் சாபம் நீங்க வேள்வி வளர்க்க வேண்டும். வேள்வியில் முனிவர்கள் மந்திரம் ஓதினர். ஆனால் மும்மூர்த்திகள் தோன்றவில்லை. கடைசியாக முனிவர்கள் ஆதிபராசக்தியை நினைத்து வழிபட்டார்கள். மும்மூர்த்திகள் தோன்றினர். அவ்வாறு இந்திரனுடைய சாபம் தீர்க்க முனைந்தனர். அந்த இடத்தில் தோன்றிய ஆதிபராசக்தியே முன்னூதித்த நங்கை அம்மன் ஆவார். குளத்தங்கரையில் அரசமரம் நடுவில் தேவி தோன்றினாள். இன்றும் அவ்வாறு பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றாள்.

நடைபெறும் பூஜைகள்

தினந்தோறும் காலையில் 5 மணிக்கு நடை திறக்கப்படுகிறது. மதியம் பன்னிரண்டு மணிக்கு நடை சாத்தப்படுகிறது. பின்பு மாலை ஐந்துமணி முதல் எட்டு மணிவரை வழிபாடுகள் தினந்தோறும் நடந்து வருகின்றன. வெளியூரிலிருந்து ஏராளமான மக்கள் அன்னையின் அருள் பெற்று செல்கின்றனர். தூர் சக்திகளை கட்டுப்படுத்தும் சக்தி முனனூதித்த நங்கை அம்மனுக்கு உண்டு.

திருவிழா

சுசீந்திரம் தாணுமாலையன் திருக்கோவில் பத்து நாட்கள் வருடம் தோறும் சித்திரை, ஆவணி, மார்கழி மாதங்களில் நடைபெறும் திருவிழாவில் 'அழகிய நாச்சியார்' என்ற பெயரில் வாகனங்களோடு ஊர்வலமாக அம்மன் காட்சி தருகின்றாள்.

நவராத்திரி விழா

புரட்டாசி மாத பூஜை வைப்பின் போது திருவனந்தபுரத்தில் உள்ள "கனககுன்று'அரண்மனையில் பூஜை வைக்க முன்னுதித்த நங்கை அம்மன் வழி நடை பாதையாக கோவில் பணியாளர்கள் அம்மனை தலையில் சுமந்து செல்கின்றனர். இன்னும் இந்த வழக்கம் இருந்து வருகின்றது. நவராத்திரி விழா முடிந்த உடன் அம்பாள் மீண்டும் சுசீந்திரம் திருக்கோவிலில் உள்ளே பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி பழைய கால பண்பாட்டின் அடையாளமாக இன்றும் கருதப்படுகிறது.

பிரதிஷ்டை

கொல்லம் ஆண்டு ஆவணி மாதம் 29/8 /1984 அன்று கருசர்க்கரை யோக மருந்தால் அம்பாள் வடிவமைக்கப்படுகின்றாள். மகிஷாசுரமர்த்தினி கோலத்தில் அம்மன் அருள் பாலிக்கின்றாள். செவ்வாய் வெள்ளி தினங்களில் பக்தர்கள் தங்கள் நைவேத்திய பிரசாதங்களை கோவிலுக்கு வழங்கி வழிபட்டு வருகின்றனர். அன்றைய தினம் அம்மனுக்கு அங்கியும், கவசமும் அணிவிக்கப்படுகிறது. மாதந்தோறும் கடைசி வெள்ளி என்று திருவிளக்கு வழிபாடு ஊர் பொது மக்களால் இன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. கோவில் விழாவின் போது வணிகர்கள் குறைந்த விலையில் பூஜைக்கான பொருட்களை வழங்கி வருகின்றனர்.

தேவியின் சில அற்புதங்கள்

பல வருடங்களாக குழந்தை இல்லாமல் இருக்கும் பெண்களுக்கு குழந்தை பாக்கியத்தை கொடுத்து அருள் பாலிக்கின்றாள். வேண்டுதல் நிறைவேறும் வகையில் காணிக்கையாக தொட்டிலும் பிள்ளையும், குழந்தையுடன் கூடிய ஒரு மண்பாவையை செய்து காணிக்கையாக வைக்கின்றனர். வறுமை கோட்டுக்கு கீழே இருக்கின்றவர்களுக்கு செல்வம் பெற்ற வாழ்வும், பில்லி சூனியம், பிசாசு தொந்தரவு நோயிலிருந்து விடுபடவும் பக்தர்கள் பிரார்த்தனை செய்து பரிபூரண குணம் அடைகின்றனர். கோவில் பணியின் போது பலிபீடத்தில் விழுந்த இளைஞனை உயிர் பிழைக்க வைத்து நிகழ்வு இன்றும் கோயில் வளாகத்தில் பக்தர்களால் பதிவு செய்யப்படுகிறது.

முடிவுரை

ஸ்ரீ முன் உதித்த நங்கை அம்மன் கோவிலில் வழிபாட்டுக்காக வரும் மக்கள் தினந்தோறும் அதிகரித்து வருவதை நாம் காண முடிகிறது, கன்னியாகுமாரி மாவட்டத்தின் பண்பாட்டுக் கருவூலமாக கோவில் அமைப்பு அமைந்துள்ளது. சக்தி மிகுந்த அன்னையின் அருள் உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் கிடைக்க வேண்டுகின்றேன்.

அடிக் குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம் ,தொகுதி 4 பக்கம் 304.

2. தமிழ் கோவில்களில் தமிழர் பண்பாடு தொ. மு .பாஸ்கர தொண்டைமான் பக்கம் 14.

துணை நூல் பட்டியல்

1.தொ.மு.பாஸ்கர தொண்டைமான் தமிழ் கோவில்கள் தமிழர் பண்பாடு.

2. குன்றக்குடி அடிகளார் ஆலயங்கள் சமுதாய மையங்கள் சென்னை 1 9 8 7 முதல் பதிப்பு.

3. கா .சுப்பிரமணிய பிள்ளை தமிழர் சமயம் கழக வெளியீடு திருநெல்வேலி 19 77 மூன்றாம பதிப்பு

Reference books

1. T.M.Baskaran tundaiman, Tamil Kovilkal Tamilar panpad.

2. Kuntakudi adigalar.

Alayankal samuthaya myyangal Chennai 1987 first edition.

3. K Subramanya Pillai ,Tamilrar samayam kalaka veliyidhu Tirunelveli 1977

3rd edition.

© 2026 முனைவர். விஜய சோபா மோ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 246–257
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தென்மாவட்ட சிற்றிலக்கியப் படைப்பாளிகளின் இயற்கைநேயவுணர்வு

Nature-Centred Consciousness of Sitrilakkiyam Authors in Southern Tamil Nadu

முனைவர்.பத்ம பிரியா மா*

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி, சிவகாசி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.பத்ம பிரியா மா — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00084

ஆய்வுச்சுருக்கம்

பாண்டிய நாட்டைச் சார்ந்த சிற்றில்கிய நூல்கள் 'முக்கூடற்பள்ளு' மற்றும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' ஆகும். இச்சிற்றிலக்கியங்கள் தென்தமிழக நிலப்பரப்பை இயற்கை வருணனையுடன் சித்தரிக்கின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது. பொதுவாகப் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் 'முக்கூடற்பள்ளு', திருநெல்வேலிப் பகுதி மக்களின் வேளாண் வாழ்க்கை, நாட்டுப்புற மரபுகள், வட்டார வழக்கு மற்றும் கலாச்சார நடைமுறைகளை வெளிப்படுத்துகின்றது. இதற்கு மாறாக, மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' (பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தது), குற்றாலப் பகுதியின் இயற்கை வளம் மற்றும் பண்பாட்டு அடையாளத்தை 'குறத்தி'யின் குரல் வழியாகச் சித்தரிக்கிறது. இவ்விரு நூல்களும் வேளாண் முறைகள், நெல் வகைகள், மாடு மற்றும் பறவை இனங்கள், பயிர்கள், நீர்நிலைகள், மழைப்பொழிவு, வெள்ளப்பெருக்கு மற்றும் நிலத்தின் வளம் ஆகியவற்றை ஆவணப்படுத்துவதன் மூலம் இலக்கியத்திற்கும் நிலப்பரப்பிற்கும் இடையிலான வலுவான பிணைப்பை வெளிப்படுத்துகின்றன. முக்கூடலின் (தற்போதைய சீவலப்பேரி) புவியியல் அமைப்பும் குற்றாலத்தின் அமைப்பும் இலக்கிய வெளிப்பாட்டிற்கும் வட்டார அடையாளத்திற்கும் இடையிலான தொடர்பை மேலும் உறுதிப்படுத்துகின்றன. முக்கூடலில் உள்ள அழகர் மற்றும் குற்றாலத்தில் உள்ள திரிகூடநாதர் ஆகியோருடன் தொடர்புடைய புனித நிலப்பரப்புகள், இயற்கை, வேளாண்மை, ஆன்மீகம் மற்றும் சமூக வாழ்க்கை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை உணர்த்துகின்றன. எனவே, இவ்விலக்கியங்கள் வெறும் படைப்புகளாக மட்டுமல்லாமல், தென்தமிழகத்தின் சூழலியல் உணர்வு, வேளாண் மரபு மற்றும் தனித்துவமான அடையாளம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் மதிப்புமிக்க கலாச்சார ஆவணங்களாகவும் திகழ்கின்றன.

Keywords / திறவுச்சொற்கள்: முக்கூடற் பள்ளு; திருக்குற்றாலக் குறவஞ்சி;

பாண்டியநாடு; தென்தமிழ் நிலப்பரப்பு; வேளாண்மை.

Abstract

This study examines the representation of the southern Tamil landscape in Mukkoodarp Pallu and Thirukkutralak Kuravanji, two significant minor literary works associated with the Pandyan region. Mukkoodarp Pallu, generally dated to the seventeenth century, reflects the agrarian life, folk traditions, regional dialect, and cultural practices of the people of the Tirunelveli region. In contrast, Thirukkutralak Kuravanji, attributed to Melakaram Thirikooda Rasappa Kavirayar and dated to the late seventeenth or early eighteenth century, portrays the natural wealth and cultural identity of the Courtallam region through the voice of the Kurathi. Both works demonstrate a strong relationship between literature and landscape by documenting agricultural practices, varieties of paddy, cattle and birds, crops, water resources, rainfall, floods, and the fertility of the land. The geographical settings of Mukkoodal (present-day Seevalaperi) and Courtallam further establish the connection between literary expression and regional identity. The sacred landscapes associated with Azhagar at Mukkoodal and Thirikoodanathar at Courtallam reveal the integration of nature, agriculture, spirituality, and community life. Thus, these works serve not merely as literary compositions but also as valuable cultural records that preserve the ecological consciousness, agrarian heritage, and distinctive identity of the southern Tamil land.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மா, மு. பி. (2026). தென்மாவட்ட சிற்றிலக்கியப் படைப்பாளிகளின் இயற்கைநேயவுணர்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 246–257. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8483

முன்னுரை

தென்மாவட்ட சிற்றிலக்கியப் படைப்பாளர்களான திரிகூடராசப்பக்கவிராயர் மற்றும் பெயர் தெரியாத முக்கூடற்பள்ளு ஆசிரியரின் மண்ணின் மீதான நேசத்தைக் கூறுவதே திருக்குற்றாலக்குறவஞ்சி மற்றும் முக்கூடற்பள்ளு எனலாம். முக்கூடற்பள்ளு எழுதப்பட்ட காலம் கி.பி.1680 ஆம் ஆண்டு என்று இலக்கிய ஆவணம் குறிப்பிடப்படுகின்றது. பள்ளு இலக்கியம் நாட்டுப்புற இசைப்பாடல் தன்மை உடையது. இதனை இயற்றியவர் பெயர் அறியப்படவில்லை என்று இலக்கியவரலாறு குறிப்பிட்டாலும்,ஒருசிலர் இயற்றியவர் என்னயினாப் புலவர் எனக் கூறுவர்.நூலில் திருநெல்வேலி பகுதிசார் மக்களின் வட்டார வழக்கை ஆங்காங்கே காணலாம்.பண்ணையார் என்ற நிலவுடைமையாளர்களிடம் வேலைசெய்யும் உழவுத்தொழில் மக்களின் இலக்கியமாக முக்கூடற்பள்ளு அமைந்தள்ளது. மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய குற்றாலக்குறவஞ்சியில் இடம்பெறும் குறத்தி என்னும் குறி சொல்லும் மரபினர் மலைதேசத்தின் பூர்வீககுடிகள் ஆவர். திருக்குற்றாலக் குறவஞ்சியின் காலம் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 18ஆம்நூற்றாண்டின் முற்பகுதி என்பர். குற்றால மலையின் வளம் அதன் இயல்பு நிலைகளில் பொருத்தப்பட்டு சூழலியல் நலத்துடன் பாடப்பட்டுள்ளன. பள்ளு,குறவஞ்சி இயற்கை வளத்தை எடுத்துரைக்கும் பாங்கில் எழுந்தன என்று கருத்துரைக்கும் பான்மையில் உழவுத்தொழில்,நெல்வகைகள்,மீன்வகைகள்,பறவை வகைகள்,பயிர்கள்

பெருக்கம், நீர்ப்பெருக்கம், மழையின் வரவு, வெள்ளப்பெருக்கு என நிலத்தின் விளைபொருட்களைப் பட்டியலிடும் பாங்கு இயற்கையின் மேன்மை கூறவனவாக அமைந்துள்ளது எனலாம்.

பள்ளு,குறவஞ்சியில் தென்னக மண்ணின்அடையாளங்கள்

திருநெல்வேலிக்கு வடகிழக்கே சித்திரா நதி, கோதண்டராம நதி ஆகிய இரு நதிகளும் தாமிரபரணி ஆற்றில் கலக்கும் இடம் முக்கூடல் என்றழைக்கப்பட்டது. இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் அழகர் என்னும் தெய்வத்தின் மீது பாடப்பட்டதே முக்கூடற் பள்ளு ஆகும். முக்கூடற் பள்ளு என்பது இடத்தால் பெற்ற பெயராகும். முக்கூடல் இன்று சீவலப்பேரி என்று குறிக்கப்படுகிறது. பாண்டியன் மாறவர்மன் ஸ்ரீவல்லபன் கி.பி. 12- ஆம் நூற்றாண்டில் தன் பெயரில் ஓர் ஏரி கட்டினான். அது ஸ்ரீவல்லபன் ஏரி எனப்பெயர் பெற்றது. இதனால் இவ்வூர் சீவலப்பேரி என வழங்கப்படுகிறது. இங்கு மூவேந்தர் கல்வெட்டுக்களுடன் கூடிய தொன்மையான திருமால் கோயில் உள்ளது. இங்குக் கோயில் கொண்டிருக்கும் திருமாலை 'அழகர்' என்றும் 'செண்டு அலங்காரர்' என்றும் முக்கூடற் பள்ளு புகழ்ந்து போற்றுகின்றது.

குற்றாலம் என்பது தமிழகத்தின் தென்பகுதியில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தின் தென்காசி வட்டாரத்தில் உள்ள ஊர் ஆகும். இந்த இடத்தில் குறும்பலா மரத்தின் அடியில் எழுந்தருளியுளள் ஈசனுக்கு பாடல்பாடப்பெற்றுள்ளது. இந்த இறைவனுக்குத் திரிகூடநாதர் என்ற பெயரும் உண்டு. இந்த இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது இந்நூல் ஆகும். முக்கூடற்பள்ளு,திருக்குற்றாலக்குறவஞ்சி இரண்டுமே பாண்டிய தேசத்தின் மண்அடையாளங்களைக் கொண்டுள்ளது எனலாம்.

இயற்கை

இயற்கை என்பது இயல்பானது. மனித ஆற்றலின்றி தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும்.

நிலம்நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம்”[1] (தொல்காப்பியம்,மரபியல்.நூற்பா.90)

இயற்கையின் இயல்பு நிலைகளாக நிலம்,நீர்,தீ,காற்று,ஆகாயம் என்ற ஐந்தும் கலந்த மயக்க நிலைப்பாடு என்று தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளது. இயற்கை என்ற சொல்லிற்கு “இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை”[2] என்று கழக அகராதி விளக்கமளிக்கின்றது. (கழக அகராதி ப.114) “இயல்பு, ஏது, குணம், தகுதி, திராணி, முறைமை”[3] என்று கௌரா தமிழ் அகராதி பொருண்மை சுட்டுகின்றது.க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் விளக்கமாவது, “மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் (மலைநீர்) போன்ற பொருள் அல்லது (மழைநீர், இடி,காற்று) போன்ற சக்தி.”[4] என்பதாகும். கீழ்கண்ட ஆங்கில அகராதி விளக்கப்படி

“**இயற்கை** *(nature)* என்பது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு என்னும் பொருள் கொண்டது. இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகியவை அனைத்தையும் இணைத்து இயற்கை என்கின்றோம். உயிரினம், உயிரின அறிவு போன்றவையும் இயற்கையில் அடங்கும். பொதுவாக இயற்கையை ஆய்வு செய்வதென்பது

அறிவியலின் மிகப்பெரிய ஒரு பகுதியாகும். மனிதர்களும் இயற்கையின் ஒரு பகுதியே ஆவர். ”[5] என்று இயற்கை குறித்து முழுமையான விளக்கம் அளிக்கின்றது.மேலும்,இயற்கை என்ற பதத்திற்கான ஆங்கிலச் சொல் தோன்றிய தன்மையானது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

“இயற்கை என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் நேச்சர்*(nature)* என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. நேட்சுரா என்ற இலத்தீன் சொல்லின் அடிப்படையில் தருவிக்கப்பட்டது தான் நேச்சர் என்ற ஆங்கில சொல்லாகும். இதன் பொருள் அவசிய குணங்கள், பிறவிக்குணம் என்பதாக அறியப்படுகிறது. பண்டைய இலக்கியங்களில் பிறவி அல்லது பிறப்பு என்று இதற்கு பொருள் கொள்ளப்பட்டிருந்தது. ”[6] என்பர். மேற்கண்ட விளக்கங்களில் இருந்து இயற்கை என்பது இயல்புநிலை என்பதே ஆகும். பூமியில் இயல்பாக தோன்றிய அனைத்தின் தன்மை குறித்தும் அறிவியலார் பின்வருமாறு வரையறுக்கின்றனர்.

இயற்கை என்பது உயிருள்ள மற்றும் உயிரற்ற தொகுதிகளின் கலவையாகும். இயற்கை வளங்களை இதனடிப்படையில் தான் பிரித்தரிவர்.உயிருள்ளவை என்பது உயிர்க்கோளத்திலிருந்து வருவிக்கப்படுபவை. உதாரணமாக காடு மற்றும் காடு சார்ந்த பொருட்கள், விலங்குகள் ஆகும். **உயிரற்றவை என்பது** உயிரற்ற கூறுகளான நீர் நிலம் வளி என்பவற்றிலிருந்து வருவிக்கப்படுபவை ஆகும்.

மரம், செடி, கொடி, புற்கள் போன்றவற்றைக் குறிக்கும் ஒரு பெரும் உயிரினப் பிரிவை **தாவரம் (Plant)** அல்லது **நிலைத்திணை** என்பர். இவ்வகை உயிரினங்கள் ஓரிடத்திலுருந்து மற்றோர் இடத்திற்கு தானே நகராமல் இருப்பதால் இவைகளை நிலைத்திணை என்பர். கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் எல்லா உயிரினங்களையும் இருவகையாகப் பிரித்துள்ளார். அவை தாவரங்கள் (நிலைத்திணை), விலங்குகள் (நகர்திணை) என இரு பெரும் பிரிவுகளாகும்.இத்தகைய இயற்கையின் பான்மையை இலக்கியத்தில் கூறுபவர்கள் இயற்கையியல்வாதிகள் ஆவர். பண்டைய மக்களின் ஐவகை நிலத்து வாழ்வியலை குறிஞ்சி(மலை), முல்லை(காடு), மருதம்(வயல்), நெய்தல்(கடல்), பாலை(மணல்) என்று இயற்கைப் பின்னணி அமைத்துப் பாடியுள்ளமை சங்கப்பாக்களில் வெளிப்படுகின்றன.

இயற்கையியல்

இயற்கையியல் என்பதனை ஆங்கிலத்தில் நேச்சுரலிசம்(Nataralism) என்பர். நேச்சுரலிசம் என்ற சொல்லுக்குப் பொருள் ”இயற்கையின்படி இருப்பது அல்லது இயங்குவதும்“ என்பதாகும். ‘இயற்கையியல்’ என்பது இலக்கியஇயக்கமாக படைப்பாளர்களால் வளர்ந்துள்ளது. இயற்கையில் படைப்பு என்பது எவ்வாறு அமையுமெனில், கலை அல்லது இலக்கியத்தில், வாழ்க்கையை ஒரு குறிக்கோள் முறையில் தீட்டிக்காட்டாமல், இயற்கையில் உள்ளபடியே முழுமையாகத் தீட்டிக்காட்டும் முயற்சியாகும். குறிப்பாக இயற்கையியல் படைப்பாளர்கள் இயற்கை என்னும் தூரிகையால் தம் படைப்பை எடுத்துரைப்பர். அவ்வகையில் முக்கூடற்பள்ளு இயற்றிய படைப்பாளியும், திருக்குற்றாலக் குறவஞ்சி எழுதிய திரிகூடராசப்பக் கவிராயரும் இயற்கைத் தூரிகையில் எழுதுகோலை நனைத்துள்ளனர் எனலாம்.

காயக் கண்டது சூரிய காந்தி

மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்

சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்

சீவல மங்கைத் தென்கரை நாடே. (முக்கூடற்பள்ளு.22)

முக்கூடற்பள்ளுவில் இடம்பெறும் இவ்நாட்டு வருணணைப் பாடலில் மனிதவாழ்வியலின் நடத்தை உணர்வுகள் இயற்கையின் பண்புகளுடன் ஒப்புமை செய்யப்பட்டுள்ளன. தென்கரைநாட்டில் வாழும் மக்களுக்குத் துன்பம் இல்லை என்பதை உரைக்க நினைத்த படைப்பாளி வெம்மையில் தகிப்பது சூரியகாந்தி மலர் மட்டுமே என்கிறார். மக்களிடம் மனஅமைதியிழந்த மருட்சி ஏற்பட்டதில்லை என்பதை உரைக்க வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் அபாய நீர்ச்சுழிகள் மட்டுமே நம்மால் பார்க்க இயலும் என்கிறார். வாழ்க்கையில் வீழ்ந்தேன் எனும் நிலை அங்குள்ள மக்களிடம் இல்லை எனக்கூற விளைந்து குலைசாய்வது செந்நெல் மட்டுமே என்கிறார். இத்தகைய இயற்கை வழியிலான காட்சிநிலை பண்புநிலை விளக்கம் குற்றாலக் குறவஞ்சியிலும் இடம்பெற்றுள்ளது.

நெருங்கக் காண்பது கன்னலில் செந்நெல்;
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து;
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
ஈசர் ஆரிய நாடு எங்கள் நாடே.

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்;
வருந்தக் காண்பது சூல்உளை சங்கு;
போடக் காண்பது பூமியில் வித்து;
திருக்குற்றாலர் தென் ஆரிய நாடே (திருக்குற்றாலக் குறவஞ்சி.56)

மேற்கண்ட பாடலில் செந்நெல்,மாம்பழக்கொத்து,கொல்லையின் முல்லை என்று விளைச்சல் முன்னிறுத்தப்பட வாழ்வியல் நடத்தைகள் பொருத்தப்பட்டுள்ளது. அதனைப்போன்றே வெள்ளம், சங்கு, வித்து என்று நீர்வளத்துடன் கூடிய இயற்கை வேளாண்மை வளம் முன்னிறுத்தப்படவே படைப்பாளி முயற்சித்துள்ளார்.

”செயற்கை யறிந்தக் கடைத்தும் உலகத்து

இயற்கை அறிந்து செயல்”[7] (அதிகாரம்:அமைச்சு குறள் எண்:637)

என்று திருவள்ளுர் சுட்டும் “இயற்கையறிந்து செயல்” என்பது பள்ளு,குறவஞ்சியில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன எனலாம். குற்றாலக்குறவஞ்சியில் இடம்பெறும் பாத்திர விளக்க வருணணையிலும் இயற்கை உவமைகள் இயல்பாக சுட்டப்பட்டுள்ளன.

செங்கையில் வண்டு கலின் கலின் என்று செயம் செயம் என்றாட

பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே! (திருக்குற்றாலக் குறவஞ்சி.பாடல்)

வசந்தவல்லி பந்தாடும் பாடலில் வண்டு ரீங்காரமிடும் ஒலிக்குறிப்பு சுட்டப்பட்டுள்ளது.பசுமையான கொடியின் தன்மையில் பெண்ணின் உடல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.மேலும்,

குறிஞ்சி பூத்த

காட்டுவளங் குழல்காட்டும் மலைவளந்தா னீயுரைத்துக்

காட்டு வானேன்? (திருக்குற்றாலக் குறவஞ்சி.பாடல்.45)

என்று வசந்தவல்லி குறத்தியிடம் மலைவளம் நாட்டுவளம் கேட்கும் பாடல்கள் அனைத்தும் குறிஞ்சிநிலத்து இயற்கைவளத்தொகுப்பாகும். குறவஞ்சியில் இடம்பெறும் பாத்திரங்களான வசந்தவல்லி,குறத்தி,சிங்கன் ஆகிய மூவரும் இயற்கை போற்றும் பாங்கினராக படைப்பாளரால் உருவாக்கப்பெற்றுள்ளனர்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
.....
குற்றாலத்திரிகூட மலைஎங்கள் மலையே;

(திருக்குற்றலாக்குறவஞ்சி,பாடல். 44)

முக்கூடற்பள்ளு சிற்றிலக்கியத்தில் மருதமெனும் வயலின் உழவுத் தொழில் பாடப்பட்டுள்ளது. உழவுத் தொழிலுக்கு அடிப்படையான நீர்வரத்து(மழை),முளைவித்து (விதை), மாடுகள் பற்றியும் விரிவான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்றுதே குறி - மலை
யாளமின்னல் ஈழமின்னல்
சூழ மின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக்
காற்று அடிக்குதே - கேணி
நீர்ப்படு சொறித் தவளை
கூப்பிடுகுதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்று அடைக்குதே - மழை
தேடி ஒருகோடி வானம்
பாடி யாடுதே (முக்கூடற்பள்ளு. 30)

முக்கூடற்பள்ளுவில் இடம்பெறும் மேற்கண்ட மழைக்கான அறிகுறிப் பாடல் உழவுத்தொழிலுக்கான அடிப்படை நீர் என்பதை முன்னிறுத்துகின்றது.

”விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே

பசும்புல் தலைகாண்பு அரிது.”[8]

”நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி

தான்நல்கா தாகி விடின். ”[9]

” நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்

வான்இன்று அமையாது ஒழுக்கு.“[10]

என்று நீரின் இன்றியமையாமை குறித்து திருவள்ளுவர் சிற்றிலக்கிய காலத்திற்கு முன்பே கூறியமை ஒப்புநோக்கத்தக்கது. மேலும் இச்சிற்றிலக்கியம் மூத்தபள்ளி,இளையபள்ளி எனும் பெண்பாத்திரங்கள் வாயிலாக மருதநிலத்து இயற்கைவளத்தில் நீர்வளம் குறித்தே மிகையாகப் பேசுகின்றது

எனலாம். திருநெல்வேலியின் வடகிழக்கே பாயும் சித்திரா நதி மற்றும் **கோதண்டராமநதி** ஆகிய இரு நதிகளும் **தாமிரபரணிஆற்றில் கலக்கும் இடம் தான் முக்கூடல் ஆகும்.இத்தகைய நீர்நிலையின் மீது அமைந்திருக்கும் ஊர் என்பதால் இந்நூல் நீர்ப்பெருக்கத்தைப் பாடியுள்ளது எனலாம்.**

வேளாண் விதைகளும் உயிரினப் பதிவுகளும்

பள்ளு,குறவஞ்சி எனும் இரு சிற்றிலக்கியங்களும் உழவர்,குறவர் என்று உழைக்கும் விளிம்புநிலைமக்களின் பதிவுகள் என்பதால் உழவுத்தொழிலையும் மலைவாழ் மக்கட் தொழிலையும் பதிவுசெய்யத் தவறவில்லை. உழவுத்தொழில் குறித்து ”ஏரோர் களவழி அன்றி களவழி தேரோர் தோற்றிய வென்றியும்”[11] (தொல்காப்பியம்,பொருளதிகாரம்,புறத்திணையியல்.75) என்பது ஏரின் வாழ்வாராகிய உழவரது தொழிலை யொத்துப் போர்மறவர் நிகழ்த்தும் போர்த் தொழிலை உருவகித்துப் போர்க்களத்தைப் புகழ்ந்து பாடும் துறையாகும் என்று தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.மேலும்,பன்னிருபாட்டியல் விளக்கத்தில் உழத்திப் பாட்டும் பள்ளு இலக்கியத் தோற்றத்திற்குக் காரணம் எனச் சுட்டப்பட்டுள்ளது. உழத்திப் பாட்டு என்பது உழவுப் பெண்களின் பாடல் என்று பொருள்படும். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ” **ஏர் மங்கலம், முகவைப் பாட்டு**”[12] என்பனவற்றைக் குறிப்பிடுகின்றார். இத்தகைய பழங்கால வேளாண்சமூகத்துப் பழக்கவழக்கங்களை முக்கூடற்பள்ளு பதிவுசெய்துள்ளது.சீரகச் சம்பா, நெடுமூக்கன், மூங்கிற் சம்பா, கருங்குறுவை, புனுகுச் சம்பா, பூம்பாளை முதலிய இருபதுக்கும் மேற்பட்ட நெல்விதை வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சித்திரக் காலி வாளாண் சிறை மீட்டான் மணல்வாரி

செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச்சம்பா

முத்து விளங்கி மலை முண்டன் பொற்பாளை நெடு

மூக்கன் அரிக்கிராவி மூங்கிற் சம்பா

கத்தூரி வாணன் கடைக கழுத்தன் இரங்கல் மீட்டான்

கல்லுண்டை பூம்பாளை பார்கடுக்கன் வெள்ளை

புத்தன் கருங்குறுவை புனுகுச் சம்பா **(முக்கூடற்பள்ளு. 109)**.

விதைகள் குறித்த வேளாண்மைக் கலைச் சொல்லாக இதனை அறிய முடிகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள தாவரங்களின் பெயர்களை சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள் என்னும் நூலில் ஆய்வாளர் இரா.காஞ்சனா பதிவுசெய்துள்ளார்.இந்நூல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பதிப்புத்துறையினரால்,1998 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.இந்நலில் பள்ளு இலக்கியம் குறிப்பிட்டுள்ள நெல்வகைகளின் தாவரவியல் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளது.

உழவு மாடுகள் உழவர்களின் செல்வம் ஆகும். மாடு என்பதற்கு செல்வம் என்றே பொருள் கூறுவர். பசு மாடு, எருமை மாடு,காளை மாடு என்ற வகைப்பாடு மட்டுமே தற்காலத்தில் அறியப்படுகிறது. பசு என்பது பெண்ணினம்,காளை என்பது ஆணினத்தையும் குறிக்கும். ஆனால் பசு என்பதற்கு “ஆ, பசு, ஆன், கோ, குடஞ்சுட்டு, சுரபி, தேனு, கபிலை, சேதா, குரம், கோமளம் ” போன்ற சொற்கள் திவாகர நிகண்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.ஆயினும் மறைந்து போன மாட்டின் வகைகள் பள்ளு இலக்கியத்தில் காணப்படுகின்றன.

குடைக் கொம்பன் செம்மறையன் குத்துக் குளம்பன் மேழை
குடைச் செவியன் குற்றாலன் கூடு கொம்பன்
வடர்ப் புல்லை கரும்போரான் மயிலை கழற்சிக் கண்ணன்
மட்டைக் கொம்பன் கருப்பன் மஞ்சள் வாலன்
படப்புப் புடுங்கி கொட்டைப் பாக்கன் கருமறையன்
பசுக்காலன் அணிற்காலன் படலைக் கொம்பன்
விடர்த்தலைப் பூ நிறத்தான் வெள்ளைக் காளையும் இந்த
உண்டு ஆயிரமே! **(முக்கூடற்பள்ளு. 110)**.

இதனைப்போன்றே பறவை இனங்கள் பலவற்றையும் திருக்குற்றாலக் குறவஞ்சி பதிவு செய்துள்ளது..

வருகினுமையே பறவைகள் வருகினுமையே

குருகும் நாரையும் அன்னமும் தாராவும்
கூழைக் கடாக்களும் செங்கால் நாரையும்

காடை வருகுது, கம்புள் வருகுது

காக்கை வருகுது; கொண்டைக் குலாத்தியும்

மாடப்புறாவும் மயிலும் வருகுது

மற்றொரு சாரியாய் கொக்குத் திரள் எல்லாம்

வெள்ளைப் புறாவும் சகோரமும் ஆந்தையும்
மீன்கொத்திப் புள்ளும் மரங்கொத்திப் பட்சியும்
கிள்ளையும் பஞ்சவர்ணக் கிளிக் கூட்டமும்
கேகயப் பட்சியும் நாகணவாய்ச்சியும்
உள்ளானும் சிட்டும் வலியானும் அன்றிலும் (திருக்குற்றாலக் குறவஞ்சி.பாடல்.79)

வேட்டுவர்களின் வாழ்வியலில் பறவைகளின் பட்டியலும் சிங்கன் வாயிலாக அறியப்படுகின்றன. பி. எல். சாமி என்கிற பி. லூர்துசாமி என்னும் ஆய்வாளரால் **சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்** என்னும் நூல் 1976ஆம் ஆண்டு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசைத்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப்பட்டது. ”இந்நூலில் பறவைகளின் தோற்றம், வாழிடங்கள், உணவு, வாழ்முறைகள் முதலியன பற்றியஅரிய செய்திகள் உள்ளன. பறவையினங்களின் தமிழ்ப்பெயர்களும், அவற்றிற்கான ஆங்கிலப் பெயர்களும், அறிவியல் வகைப்பாட்டுப் பெயர்களும் தந்துள்ளார்.”[13] சங்க இலக்கியத்தில் காணப்படும் மொத்தம் 62 பறவைகளைப் பற்றியதே இந்நூல். இதே நூல் பின்னொரு பதிப்பாக சங்க இலக்கியத்தில் பறவையின விளக்கம் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. இதனை சங்க இலக்கியச் செய்திகளையும் தற்கால பறவையியல் கருத்துக்களையும் சேர்த்துத் தரும் முதல் நூல் எனலாம். மேலும்,கானுயிர் வல்லுநரான மா. கிருஷ்ணன் 2010 ஆம் ஆண்டு எழுதிய மழைக்காலமும் குயிலோசையும் என்னும் நூல் தியோடர் பாஸ்கரனின் ஆங்கில மொழிபெயர்ப்பாகும்.

பள்ளு மற்றும் குறவஞ்சி சிற்றிலக்கியம் தொழில்நிலையால் வேறுபட்ட மக்களின் வாழ்வியலைச் சுட்டுகின்றது. மக்கள் தங்கள் வாழ்விடத்திற்கு ஏற்ற தொழிலை கையாண்டுள்ளனர். ”தொழில்நிலையாலும் பொருள் வளத்தாலும்

வேறுபடும் மக்களைப் பற்றி பல இலக்கிய வகைகள் உள.வயல் வேலை செய்யும் பள்ளர்கள் பற்றி உழத்தி பாட்டு,பள்ளு ஆகியனவும்.குறி கூறும் பணிசெய்யும் குறவர்கள் பற்றி குறத்தி பாட்டு,குறவஞ்சி,குறம் ஆகியனவும் உள”[14] (ந.வீ.செயராமன்,தமிழ் இலக்கிய வகைகள் தோற்றமும் வளர்ச்சியும்,ப.46) ஆதலால்,இவ்விலக்கியங்கள் அவர்களின் தொழில்முறை சார் உயிரினங்களையும் பதிவுசெய்கின்றது.மருத நிலத்தில் உள்ள நீர்நிலைகளில் மீன்பிடித்தொழில் நிகழ்ந்துள்ளது.மீன்களின் பெயர்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

குற்றாலத் திரிகூட மால்வரை உற்றே மேகம் பொழிந்த நீர்

கூடப் பொருநை நாடித் திருமுக்கூடல் பதியை வலம் கொண்டே

வற்றா மடுவில் பறவை, குறவை, வாளை, கோளை, தேளி மீன்,

மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆரால், ஓரா மீன்,

பற்றா அயிரை, கெண்டை, கெளிறு, பருவராலும் அணையிலே

பாய, காலில் பாய, குளத்தில் பாய, வயலில் பாயவே

சிற்றாறு என்பது பெற்றாலும் ஒரு சிறியவர் மனப் பெருமைபோல்

சித்திரா நல் நதி பெருகி வாற சித்திரம் பாரும் பள்ளீரே!(முக்கூடற்பள்ளு.51)

குற்றால அருவியைத் தன்னுள்ளே கொண்டது திரிகூட மலை. அந்த மலையின் சிகரங்களில் தங்கிய மேகங்கள் மழை பொழிகின்றன. நீர்ப்பெருக்கு வெள்ளமாகப் பரந்து ஓடுகிறது. தாமிரபரணி ஆற்றோடு கலந்து,அங்குள்ள குளங்களில் நிறைகின்றன. நீர்நிலைகளில் வாழும் பறவை மீன், குரவை மீன், வாளை மீன், கோளை மீன், தேளி மீன், மயிந்தி மீன், உழுவை மீன், அயிந்தி மீன், கூனி மீன், மணலி மீன், ஆரால் மீன், ஓரா மீன், கைகளில் பிடிக்கமுடியாத அயிரை மீன், கெண்டை மீன், கெளுத்தி மீன், பெரிய வரால் மீன் போன்ற பலவகை மீன்கள் சித்திரா நதி வாழ்விகளாகப் பட்டியலிடப்படுகின்றன. குற்றாலத்தின் குறிஞ்சி நிலவளம் பக்திஇலக்கியத்திலும் போற்றப்பட்டுள்ளன.

”வம்பார் குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்

கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்

அம்பால் நெய்யோ டாட லமர்ந்தான் அலர்கொன்றை“[15] (திருஞானசம்பந்தர்,தேவாரம்,திருக்குற்றாலப் பதிகம்,1.99.1)

”இருந்த விடம்வினவி லேலங்கமழ் சோலையின

வண்டியாழ்செய்

குருந்த மணநாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற்

குறும்பலாவே.”[16]

(திருஞானசம்பந்தர்,தேவாரம்,திருக்குறும்பலா பதிகம்,1.071.1)

குறிஞ்சி மலைவளம்,நீர்வளம் பெருகிய இவ்வூரினை இறைவனின் அற்புததலமாகப் பாராட்டுகின்றது பக்திஇலக்கியம். ”இவ்வூருக்கு வழங்கப்படும் வேறு பெயர்களாகத் தலபுராணத்தில் குறிப்பிடப்படும் பெயர்கள்:பிதுர் கண்டம் தீர்த்த, புரம்சிவத்துரோகம், தீர்த்த புரம்மதுவுண்டான் உயிர் மீட்ட புரம், பவர்க்க மீட்ட

புரம், வசந்தப் பேரூர்முதுகங்கை வந்த புரம், செண்பகாரணிய புரம், முக்தி வேலி, நதிமுன்றில் மாநகரம், திருநகரம், நன்னகரம், ஞானப்பாக்கம், வேடன் வலஞ்செய்த புரம், யானை பூசித்த புரம், வேத சக்தி பீட புரம், சிவ முகுந்த பிரம புரம், முனிக்கு உருகும் பேரூர், தேவகூட புரம், திரிகூடபுரம், புடார்ச்சுனபுரம், குறும்பலா விசேட புரம்."[17] என்பதாகும். மலைநாட்டில் பிறந்த படைப்பாளியின் பின்னணி அவர்சார்ந்த இயற்கையின் இயல்புணர்வை அவ்வாறே பதிவுசெய்துள்ளது எனலாம்.மேலும், இயற்கை சார்ந்த இயற்கையியல் படைப்பாளர் திரிகூடராசப்பக்கவிராயர் என்பதற்கு பின்வரும் பாடல்களே மிகச்சிறந்த சான்றாகும்.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

..... (திருக்குற்றலாக்குறவஞ்சி,பாடல்.54)

முழங்குதிரைப் புனலருவி கழங்கென முத்தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்.

.....

வளம்பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே.

(திருக்குற்றலாக்குறவஞ்சி,பாடல்.55)

குறிஞ்சி நிலத்து இயற்கை படைப்பாக்கத்தில், அங்குள்ள நிலையுயிர் (தாவரங்கள்), இயங்குயிர்(விலங்குகள்) இயல்பாக இடம் பெற்றுள்ளன எனலாம்.

முடிவுரை

முக்கூடற் பள்ளு, திருக்குற்றாலக் குறவஞ்சி எனும் இரண்டு பிரபந்தமும் வட்டார இலக்கியப் பண்புகள் கொண்டதால் எளிய மக்களின் வாழ்விலை அவர்களின் இயற்கை சார்ந்த பின்னணியுடன் தந்துள்ளது. உழவுத்தொழில் செய்யும் மக்களின் வயல்சார்ந்த பதிவுகளைக் கொண்டு, மழைவளம், நீர்ப்பெருக்கு, நெல்வகைகள்,மீன் வகைகள், மாடு வகைகள் என முக்கூடற்பள்ளு இயற்கைசார்ந்தும், உயிரின வளம் சார்ந்தும் அமைந்தள்ளது. திரிகூட ராசப்பக் கவிராயர் குறவர் வாழ்வியல் பின்னணியாக மலைக்காட்டின் தன்மை, செடி,கொடி என பலகைப்பட்ட பறவைகளின் தொகுப்புரைத்து உணவுவளத்தின் பெருக்கமும் அதனூடான உயர்திணை, அஃறிணை இன்பநிலை என்று எடுத்துரைத்தள்ளார். நிலையுயிர்,இயங்குயயிர்களின் கலைக்களஞ்சியம் போன்று இயற்கையின் மொழியாக பள்ளு,குறவஞ்சி அமைந்துள்ளது எனலாம்.

குறிப்புகள்

1. தொல்காப்பியம்,மரபியல்.நூற்பா.90.
2. கழக அகராதி ப.114.
3. கௌரா தமிழ் அகராதி
4. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
5. *Harper, Douglas,Online Etymology Dictionary*.
6. Guthrie, W.K.C. *Presocratic Tradition from Parmenides to Democritus* (volume 2 of his *History of Greek Philosophy*) Cambridge UP, 1965.
7. திருக்குறள்,அமைச்சு, குறள்.637

8. திருக்குறள்,வான்சிறப்பு குறள்.16
9. மேலது, குறள்.17
10. மேலது, குறள்.20
11. தொல்காப்பியம்,பொருளதிகாரம்,புறத்திணையியல்.75.
12. சிலப்பதிகாரம்,நாடுகாண் காதை, 125 :134- 137.
13. பி.எல்.சாமி, **சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்,ப.1**
14. ந.வீ.செயராமன், சிற்றிலக்கியச்செல்வம்,ப.46
15. திருஞானசம்பந்தர்,தேவாரம்,திருக்குற்றாலப் பதிகம்,1.99.1
16. திருஞானசம்பந்தர்,தேவாரம்,திருக்குறும்பலா பதிகம்,1.071.1
17. சொ.சுப்பிரமணிய கவிராயர், திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும், பக்.35,36.

துணைநூற்பட்டியல்

1. **மேலகரம் மகாகவி திரிகூடராசப்பன் கவிராயர், திருக்குற்றாலக்குறவஞ்சி, திருக்குற்றாலநாதர் கோயில் வெளியீடு,ஸ்ரீ மீனாட்சி பிரஸ்,தென்காசி.ஐந்தாம் பதிப்பு,1953**
2. **ந. சேதுரகுநாதன்(உ.ஆ),முக்கூடற் பள்ளு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், வெளியீடு, 1/140, பிரகாசம் சாலை, சென்னை-1, 1973.**
3. **இளம்பூரணம்(உ.ஆ), தொல்காப்பியம்,பொருளதிகாரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1969.**
4. **வ.சுப.மாணிக்கம்,திருக்குறள் தெளிவுரை,மணிவாசகர் பதிப்பகம்.31,சிங்கர் தெரு,பாரிமுனை,சென்னை.2006.**
5. **ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ),சிலப்பதிகாரம் மூலமும் உரையும்(முழுமையும),சாரதா பதிப்பகம்,திருச்சி.2011.**
6. சொ.சுப்பிரமணிய கவிராயர், திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை.
7. பி.ரா. நடராசன்(உ.ஆ),திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (1,2,3 திருமுறைகள்),உமா பதிப்பகம்,சென்னை.
8. **பி. எல். சாமி, சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1976.**
9. **இரா.காஞ்சனா,சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,பதிப்புத்துறை வெளியீடு,மதுரை.1998**
10. மா.கிருஷ்ணன் மொ.ஆ), தியோடர் பாஸ்கரன்(தொ.ஆ), மழைக்காலமும் குயிலோசையும்,காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்.2010
11. ந.வீ.செயராமன் சிற்றிலக்கியச்செல்வம்,மணிவாசகர் நூலகம்,சிதம்பரம்.1979.
12. கழக அகராதி
13. கௌரா தமிழ் அகராதி

14. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
15. *Harper, Douglas,Online Etymology Dictionary.*
16. Guthrie, W.K.C. *Presocratic Tradition from Parmenides to Democritus* (volume 2 of his *History of Greek Philosophy*) Cambridge UP, 1965.

© 2026 முனைவர்.பத்ம பிரியா மா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 258–264
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

திருமலையாண்டவர் குறவஞ்சியில் பண்பாட்டுப் பதிவுகள்

ராதாகிருஷ்ணன் மு[1,*], முனைவர்.அருள்மனோகரி பா[2]

[1] முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர் பதிவு எண் : 2512124011003 தமிழ்த்துறை - ஆய்வு மையம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம். (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரி), *India*

[2] உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, சங்கரன்கோவில் - *627 756., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: ராதாகிருஷ்ணன் மு — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00083	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்கள் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன. அவற்றுள் குறவஞ்சி இலக்கியம், இலக்கியச் சுவையுடன் அக்கால மக்களின் வாழ்வியல், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், கலைகள், தொழில்கள், சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பதிவு செய்யும் சிறப்புடையதாக விளங்குகிறது. இவ்வகையில் “திருமலையாண்டவர் குறவஞ்சியில் பண்பாட்டுப் பதிவுகள்” என்னும் இவ்வாய்வு கட்டுரை திருமலையாண்டவர் குறவஞ்சியில் காணப்படும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் கண்டு ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நூலில் இடம்பெறும் இறை நம்பிக்கை, கோயில் வழிபாடு, திருவிழா மரபுகள், போன்ற சமயப் பண்பாட்டுக் கூறுகள் முதன்மையாக ஆராயப்படுகின்றன. மேலும் குறவர் சமூகத்தின் வாழ்க்கைமுறை, குறிசொல்லும் மரபு, நாட்டுப்புற நம்பிக்கைகள், குடும்ப உறவுகள், சமூக உறவுகள், தொழில் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவையும் ஆராயப்படுகின்றன.

Keywords / திறவுச்சொற்கள்: மலைவளமும் இயற்கைப் பண்பாடும் - வேடர் மற்றும் குறவர் வாழ்க்கை - குறிசொல்லுதல் - ஆடை அணிகலன் - இசை மற்றும் நாட்டுப்புறக்கலை - சமயம் - திருமண முறை - முருக வழிபாடு - திருவிழா மற்றும் ஊர்வலம் - மயில் வாகனம் - இசை முழக்கம் மற்றும் மங்கல நிகழ்வு - குடைகள் மற்றும் யானை ஊர்வலம்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மு, ரா., & பா, மு. (2026). திருமலையாண்டவர் குறவஞ்சியில் பண்பாட்டுப் பதிவுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 258–264. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8485

முன்னுரை

திருமலையாண்டவர் குறவஞ்சி தென்காசி அருகே உள்ள பண்பொழி திருமலையில் எழுந்தருளியுள்ள முருகன் மீது பாடப்பெற்றது. தென் மாவட்டப் பண்பாட்டு

Sealy, Allan. The Everest Hotel. IndianInk, 1998.

© 2026 Ms. Shinola R, Dr. Joseph Suresh I. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 281–285
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

Identity and Human Relationships: A Study of Anita Nair's Lessons in Forgetting and Preeti Shenoy's Wake Up, Life is Calling

RAJESWARI C[1,*], Dr. Joseph Suresh I[2]

[1] *Research Scholar (Full-Time), Reg No: 241111702025, PG and Research Department of English, Rani Anna Government College for Women, Gandhi Nagar, Affiliated to Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli-627012, Tamil Nadu, India., India*

[2] *Research Supervisor, Head and Associate Professor, PG Department of English, Government Arts and Science College for Women, Sathankulam, Thoothukudi-628604, Affiliated to Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli-627012, Tamil Nadu, India., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: RAJESWARI C — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00078	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

This study focuses on the interplay between identity and human relationships in Anita Nair's Lessons in Forgetting and Preeti Shenoy's Wake Up, Life is Calling. Both novelists explore how women navigate personal struggles, emotional challenges, societal expectations, and evolving relationships in contemporary Indian society. The two contemporary Indian women writers explore different aspects of human relationships. They focus on the lives of married women and portray their emotional and social struggles. They also show how these women face difficulties and try to overcome the challenges in their lives. In Lessons in Forgetting, the protagonist faces marital problems, emotional loneliness, and personal struggles. These experiences help her understand herself and begin a new phase in her life. Similarly, Wake Up, Life Is Calling portrays a woman who faces emotional and personal challenges. Through these experiences, she gains a better understanding of herself and her relationships. A parallel reading of the two novels shows how relationships can both limit and support a person's identity. The study also explores the characters' psychological struggles, emotional pain, self-discovery, resilience, and ability to make their own choices. Overall, the study shows how identity, emotions, and human relationships are closely connected in contemporary Indian women's fiction.

Keywords / திறவுச்சொற்கள்: Identity; Human Relationships; Self-discovery; Resilience; Emotions; Contemporary Indian women's fiction

How to cite / மேற்கோள் காட்டும் முறை: C, R., & I, D. J. S. (2026). Identity and Human Relationships: A Study of Anita Nair's Lessons in Forgetting and Preeti Shenoy's Wake Up, Life is Calling. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 280–284. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8493

Anita Nair hails from Shoranur in Kerala. She occupies an important place in contemporary Indian

English literature and is known for her feminist and postmodern perspectives. She has written novels, short stories, poetry, and books for children. Her works often explore women's lives, identity, relationships, and social issues. Nair has also spoken about her creative process in interviews. She describes writing as a meaningful and creative engagement with life and human experiences. Anita Nair is a well-known Indian writer in English. She writes novels, short stories, poems, essays, and stories for children. She has also worked as a creative director in an advertising agency. She is known for her novels *The Better Man and Ladies Coupé*. Her writing deals with women, identity, society, relationships, and personal freedom. She is known for her energetic and interesting writing style. Anita Nair is considered a talented and successful Indian writer.

Lessons of Forgetting (2010) is a significant novel that explores the lives, aspirations, and struggles of women within a society largely shaped by patriarchal values. The narrative centres on Meera, the central character, who lives in her ancestral home, Lilac House, along with her mother and grandmother. Their life in the house is initially peaceful and contented, strengthened by their close familial bond. However, the sudden death of Meera's father changes the course of their lives and places the family in a state of financial and emotional uncertainty.

Faced with difficult circumstances, the family is compelled to adopt a modest and restrained way of living. These experiences gradually shape Meera's outlook towards life. Rather than pursuing excessive material comforts or ambitions, she learns to remain satisfied with what is necessary for survival and dignity. Through Meera's experiences, the novel presents the challenges faced by women in a male-dominated social structure and highlights their resilience, adaptability, and quiet struggle for a meaningful life. The writer remarks:

> Meera never dreamt big dreams. She had no desire for designer cloths, diamonds or expensive holidays. In those hard years after her father's death, she learnt to works ship at the altar of enough. That was all she ever hoped for. Enough to keep the roof over their heads and food in their heads and food in their bellies. Enough to retain dignity and not have to ask reluctant removed relatives for a temporary hand out. (41)

Preeti Shenoy's Wake Up, Life Is Calling continues Ankita's journey following the events of Life Is What You Make It. After overcoming two suicide attempts and undergoing treatment for a mental health disorder, Ankita relocates to Mumbai, unrolls in a creative-writing course, and begins the challenging process of rebuilding her life. Her interactions with her parents, friends, former boyfriend, and, most importantly, her evolving relationship with herself play a significant role in her journey towards recovery and self-discovery. Shenoy presents the novel as an exploration of human resilience, emphasizing the capacity of the mind to overcome adversity and the possibility of transforming one's life through positive thinking, self-awareness, and a renewed understanding of oneself. An analysis of these two novels demonstrates that identity is neither static nor predetermined. Rather, it is continually shaped and reshaped through interpersonal relationships, societal expectations, emotional experiences, and the ways individuals respond to personal struggles and crises.

In Lessons in Forgetting, Meera's identity is closely connected to her family and social roles. She is a wife, mother, daughter, granddaughter, and working woman. Her life seems stable because her family and social relationships give her a sense of security. However, her husband's sudden disappearance changes everything. She is forced to make decisions on her own and take responsibility for matters that were earlier shared with or managed by others. Meera's broken marriage marks an important turning point in her life. Although her husband's departure causes her pain and uncertainty, it also gives her a chance to understand herself as an individual rather than only as a wife. Through

Meera's experience, Anita Nair shows how women may lose their individual identity when they are completely defined by family and social responsibilities. The novel also suggests that dependence within marriage can affect a woman's emotional, social, and financial independence. Meera's journey gradually helps her recognize her own abilities and develop a stronger sense of self.

Anita Nair further explores the question of female identity through characters such as Smriti. Although Smriti is unable to communicate normally after the accident, her situation helps JAK understand the difficulties experienced by young women in society. Her story reveals how women are often judged by social ideas about morality, sexuality, and respectability. The narrative does not focus only on the circumstances surrounding Smriti's condition; it also draws attention to the way society judges her choices and character. Through these experiences, Nair questions the social beliefs that restrict women's identities to marriage, sexuality, family duties, and public reputation. The novel shows that women have individual desires, experiences, and aspirations that cannot be understood only through traditional social roles. Meera, Kala Chithi, and Smriti each face different forms of social pressure, yet their experiences reveal their efforts to gain greater independence and develop their own sense of identity.

In Wake Up, Life Is Calling, Preeti Shenoy presents identity as something that changes through personal experiences and struggles. Ankita's past experiences with mental health have a strong influence on the way she sees herself. After facing difficult circumstances, she tries to begin her life again by returning to her studies, making new friends, and joining a creative-writing course. She wants to enjoy the freedom and experiences of a young adult. However, her earlier experiences continue to affect her thoughts and choices. Ankita's struggle is not only about dealing with her past difficulties. She also wants to move beyond the identity that others may associate with her condition. She wishes to be accepted for her personality, abilities, and dreams rather than being judged only by her past. Her experience shows the importance of seeing a person as a whole individual instead of defining them through one aspect of their life.

"Ankita's transformation reflects genuine psychological healing, illustrating that while trauma may never entirely disappear, it evolves, and resilience arises not from a single factor but from multiple independent predictors contributing to positive outcomes (Bonanno et.al, 511)". Writing plays an important role in Ankita's journey towards self-understanding. Through creative writing and keeping a journal, she is able to express her feelings and examine her thoughts. Writing gives her a way to understand her experiences and communicate what she finds difficult to express otherwise. In this way, creativity becomes an important part of her personal growth. Ankita gradually learns to accept her past while developing a new understanding of herself and her future. Anjali Hans remarks that:

> A woman cannot surpass her male counterpart because to the intricate networks that make up society. She has been reduced to a supporting role for ages. It is difficult for women who have internalised these ideas since they were young to against them because they are not viewed favourably by society. (1762)

Both novels show that a person's identity is closely connected with their relationships. The way people treat and respond to an individual can influence how that person understands themselves. Relationships can offer love, support, and a sense of belonging. At the same time, they can create social expectations and restrict personal freedom. In Anita Nair's Lessons in Forgetting, marriage plays an important role in shaping Meera's identity. Her marriage provides her with a sense of stability and social acceptance, but it also makes her dependent on her husband in several ways. When her marriage comes to an end, Meera is forced to face life independently. This difficult experience becomes an

important stage in her personal growth. By rebuilding her life, she gradually develops a stronger understanding of herself.

The novel also highlights the importance of relationships among women. The women in Meera's family come from different generations and have their own experiences and challenges. However, their lives reflect similar struggles involving family responsibilities, sacrifice, and social expectations. Their experiences are passed from one generation to another. At the same time, younger women begin to question traditional ideas and seek greater independence. In this way, Nair presents female relationships as an important source of understanding, support, and chang

The bond between Meera and JAK is another significant aspect of Lessons in Forgetting. Both characters have experienced pain and disappointment in their personal lives. Their meeting gives them an opportunity to understand each other and develop a relationship based on empathy and companionship. Their connection is not presented only as a romantic relationship. Instead, it grows from their shared experiences of loss and loneliness. Through their relationship, Nair suggests that emotional closeness can provide comfort and understanding without taking away a person's individuality.

In Wake Up, Life Is Calling, relationships also play an important role in Ankita's journey. Her parents are a major source of love and emotional support. Although their relationship with Ankita is affected by her earlier struggles and hospitalization, they continue to stand by her. Their care helps Ankita regain confidence and face the challenges of starting her life again. Through Ankita's experience, Shenoy shows how family support can give a person strength during difficult periods and contribute to the process of personal recovery. The novel also shows that relationships can sometimes make personal growth more difficult. When Ankita's former boyfriend comes back into her life, memories of her earlier experiences begin to affect her present situation. His return brings unresolved emotions from the past and makes it harder for Ankita to move forward. This experience shows how emotional connections and past memories can continue to influence a person even when they are trying to start a new chapter in life.

The two novels are different in their narrative style and tone. Anita Nair's Lessons in Forgetting presents a complex story through several characters and different generations. It connects the personal problems of the characters with larger issues related to gender, family, and society. In contrast, Preeti Shenoy's Wake Up, Life Is Calling mainly focuses on Ankita's personal experiences. Ankita feels, "I very badly want to sleep. To escape. I want a respite. Why don't you sleep forever? All of this will end then" (Shenoy,158). The novel follows her struggles and her efforts to rebuild her life in a simple and direct manner. Although the novels have different approaches, both writers present identity as something that develops over time. Meera gradually discovers her own abilities after facing changes in her personal life. She begins to understand herself beyond her role as a wife and mother. Similarly, Ankita learns to accept her past without allowing it to control her future. Both characters experience difficulties, but these experiences help them develop a stronger sense of self.

Anita Nair's Lessons in Forgetting and Preeti Shenoy's Wake Up, Life Is Calling explore important aspects of identity and human relationships in contemporary Indian English literature. Nair focuses on marriage, gender roles, family relationships, female bonding, memory, trauma, and personal independence through the character of Meera. Shenoy, through Ankita, explores friendship, family support, love, emotional struggles, self-expression, and resilience. Both novels show how difficult experiences and meaningful relationships can influence an individual's journey towards self-understanding and personal growth.

References

1. Nair, Anita. Lessons in Forgetting. HarperCollins Publishers India, 2010.
2. Shenoy, Preeti. Wake Up, Life Is Calling. Srishti Publishers & Distributors, 2019.
3. Anjali Hans, "*Feminism as a Literary Movement in India*," International Research Journal of Applied and Basic Sciences, Vol. 4, No. 7, 2013.
4. Bonanno, George A., et al. "Resilience to Loss and Potential Trauma." Annual Review of Clinical Psychology, vol. 7, no. 1, Apr. 2011, pp. 511–35. DOI:10.1146/annurevclinpsy-032210-104526.
5. Shenoy, Preeti. "*Aaj Savere: An Interview with Preeti Shenoy*." Interview by Jasleen Vohra. DD National, 16 Jan. 2018.

© 2026 RAJESWARI C, Dr. Joseph Suresh I. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 286–290
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

'கன்னிமை' - கீ.ராவின் சிறுகதை காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல்

முனைவர். சந்தானலெட்சுமி கா*

இணைப்பேராசிரியர் & தமிழ்த் துறைத்தலைவர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். சந்தானலெட்சுமி கா — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00077	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கிய உலகில் மக்கள் அனைவரையும் சென்றடையும் படைப்புக்களாக சிறுகதைகள் விளங்குகின்றன. தனக்கென தனித்தோர் கரிசல் வட்டார வழக்கு நடையில் எளிமையும் உணர்ச்சியும் கலந்த சிறுகதைகளால் மக்களைக் கவர்ந்த படைப்பாளராக கி. ரா அறியப்படுகிறார். காலம் தாண்டி நிற்கும் எழுத்துப் படைப்பாக கீ.ராவின் படைப்புலகம் விளங்குகின்றது. பெண்ணின் ஆளுமை, நிர்வாகத் திறன் உபசரிப்பு மனித நேய சமூக உறவாடல்கள் திருமணத்திற்கு முந்திய நிலையில் எத்தகைய சுதந்திர உணர்வோடு, அன்றாட வாழ்வியல் நடைமுறையாகின்றது என்பதை நாச்சியார் கதாபாத்திரத்தின் வாயிலாக தனது 'கன்னிமை' சிறுகதையில் கீ.ரா வெளிப்படுத்துகிறார். அதனூடே கரிசல் மக்களின் பண்பாடும் புலனாகின்றது. திருமணமான பின்பு பெண்ணின் வாழ்க்கை நிலை முற்றிலும் மாறுபடுவதையும் 'கன்னிமை' சிறுகதை உணர்த்துகிறது கரிசல் மக்களின் வாழ்வியலை கி.ராவின் 'கன்னிமை' சிறுகதை வாயிலாக சமூகவியல் ஆய்வு அணுகுமுறையில் இக்கட்டுரை காண விழைகின்றது.

Keywords / திறவுச்சொற்கள்: வெங்கலச் சொம்பு; சருவைச் சட்டி; மடிப்பருத்தி; வெள்ளைப் பருத்தி; குலவை; உப்புக் கண்டம்; திருவிளக்கு; சாண உருண்டை; கம்பங்கஞ்சி; குதிரைவாலி சோறு

How to cite / மேற்கோள் காட்டும் முறை: கா, மு. ச. (2026). 'கன்னிமை' - கீ.ராவின் சிறுகதை காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 285–289. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8495

முன்னுரை

தமிழர் பண்பாட்டினை தலைமுறை தலைமுறைகளாக கொண்டு செல்லும் வலிமை கதை சொல்லிகளுக்கு உண்டு. அனைத்து மக்களின் அன்றாட வாழ்வியலோடு இணைந்ததாக கதைகள் அமைகின்றன. கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலை வட்டார வழக்கோடு கீ.ரா சிறுகதை இலக்கியங்களாகப் படைத்துள்ளார். மண் மணம் பரப்பும் கரிசல் கதைகளின் கதைகளில் கீ.ராவின் சிறுகதையான 'கன்னிமை' படைப்பின் வாயிலாக கரிசல் மக்களின் வாழ்வியலை

சமூகவியல் ஆய்வு அணுகு முறையில் இக்கட்டுரை ஆராய விழைகின்றது.

கி.ராவின் படைப்புகள்

கீ.ராவின் கதை உலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் வாழ்க்கை நிலைப்பாடுகள் பற்றி பேசுவன ஆகும். கி. ராஜநாராயணன் என்ற பெயருடையவரே கீ.ரா என சுருக்கமாக அறியப்படுகிறார். செப்டம்பர் 16, 1922ல் கோவில்பட்டி அருகில் உள்ள இடைச்செவல் என்னும் கிராமத்தில் தனது பெற்றோருக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தவர். ஏழாம் வகுப்பு வரை படித்த கீ.ரா இயல்பிலே விவசாயி ஆவார். 1989ல் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றினார். படிப்பு பெற்றுத்தரும் வேலையை கீ.ராவின் படைப்புகள் அவருக்குப் பெற்றுத் தந்தன என்றால் அவரின் படைப்புகள் பெற்ற மக்கள் வரவேற்பினை அறிய முடிகின்றது.

”ஒரே கிராமத்தைச் சேர்ந்த இருவர் சாகித்திய அகாதமி விருது பெற்றது இடைசெவலில் தான்”[1] எழுத்தாளர் கு. அழகிரிசாமியும் கீ.ரா வும் ஒரே தெருவில் வசித்தவர்கள். 1991ல் சாகித்ய அகாடமி விருது பெற்ற கீ.ரா பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். “நவீன இலக்கியத்தில் நாட்டார் அழகியலைப் பயன்படுத்திய முன்னோடி கி. ராஜநாராயணன் ஆவார்”[2] சிறுகதைத் தொகுதிகள். நாட்டுப்புற கதைத்தொகுதிகள் நாவல்கள், அகராதி, சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம் என கி.ராவின் படைப்புலகம் விரிந்து பட்டது. இந்த இவள் (இ புத்தகம்), பெண் மனம் என்ற படைப்புகள் பெண்ணிற்கு அளிக்கும் முக்கியத்துவத்தைக் காட்டும். இவரின் படைப்புகளில் பெண்ணின் அன்றாட வேலைப்பாடுகள் அதி இயல்பாக வெளிப்படுவதை வாசித்து உணர முடியும்.

கன்னிமை சிறுகதை

“பெண்களுக்கான ஒரு நிறுவன அமைப்பாக அவர்கள் தன் குறைகளை முறையிடும், குறைகளை எடுத்துக் கூறி தீர்வு காண்பதற்கான பொதுச் சபை அரங்கமாக திகழ வேண்டும்”[3] என பெண்ணிய எழுத்து பற்றி கருத்துரைக்கப்படுகின்றது. கீ.ராவின் எழுத்துக்களில் பெண்களின் அனைத்து விதமான சிக்கல்களும் ஆராயப்பட்டுள்ளன. கீ.ராவின் படைப்புகளில் பெண்ணின் ஆளுமை சிறந்த முறையில் வெளிப்படுத்தப்படுகின்றது. “இலக்கியம் சிறக்க உதவும் பலவற்றுள் பாத்திரமும் ஒன்று. உலகிடை தோன்றிய இலக்கியங்களில் பாத்திரம் இல்லாத இலக்கியமே இல்லை என்று கூறிவிடலாம்”[4] சிறுகதைகளில் பாத்திரங்கள் நம்முடன் பயணிப்பவாயாக உள்ளன. அந்த வகையில் ‘கன்னிமை’ சிறுகதையில் வரும் ‘நாச்சியார்’ கதாபாத்திரமும் அமைகின்றது திருமணத்திற்கு முந்திய வாழ்க்கை பெண்ணின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் உள்ளதை கீ.ராவின் கதை வெளிப்படுத்துகின்றது. “சிறுகதைகள் எல்லாம் சித்திரங்கள் அவைகளை ஆக்குவதற்குக் கலைத்திறன் வேண்டும் அவை வாசிப்போரின் உணர்ச்சியை கிளப்பக்கூடியனவாகயிருக்கும்”[5] என்பதற்கேற்ப நடைமுறையில் நம்மோடு பயணிப்பவர்கள் சிறுகதையின் சிறந்த கதா மாந்தர்கள் ஆகின்றனர். நடப்பியல் வாழ்க்கையின் சமூகப் பிரதிநிதியாக அவர்கள் காலம் தாண்டியும் இலக்கியங்களில் வாழ்கின்றனர். “ஒரு நூல் சிறந்த இலக்கியமா என்று காண்பதற்குக் காலமே சிறந்த கருவி போலும்”[6]

கி.ராவின் படைப்புகளில் சிறப்பினையும் காலமே பறைசாற்றுகின்றது. கி.ராவின் ‘கன்னிமை’ சிறுகதையில் நாச்சியார் கதாபாத்திரம் வாயிலாக அக்கால மக்களின் உணவுமுறைகள், வழிபாடு, தொழில் ஆகியன புலப்படுத்தப்படுகின்றன.

கன்னிமை சிறுகதையில் உணவு பழக்கங்கள்

உணவு முறைகள் மண்ணின் அடையாளமாகின்றன. உழைக்கின்ற மக்கள் உண்ணும் உணவு அவர்களின் உழைப்பில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும். அதனால் அதன் சுவையும் அதற்கான விருப்பமும் கூடுதலாக இருக்கும். உணவும் உள்ளமும் இணைவதற்கான ஒரு பாலமாக பெண்களின் விருந்தோம்பல் உள்ளது. “எங்கள் வீட்டில் கன்னி காத்த அந்த நாட்கள் எங்கள் குடும்பத்துக்கு பொன் நாட்கள். வேலைக்காரர்களுக்கும் கூட அவளுடைய கையினால் கஞ்சி ஊற்றினால் தான் திருப்தி (கீ.ரா, பக்கம்: 126) எனும் அளவிற்கு நாச்சியார் அனைவரையும் மனநிறைவு கொள்ளும்படி உணவளிக்கிறாள். “அவளுக்கு என்னவோ அப்படி அடுத்தவர்களுக்கு படைத்து, படைத்து அவர்கள் உண்டு பசி ஆறுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதில் ஒரு தேவ திருப்திபடுகிறாள்” (கீ.ரா, பக்கம்: 128) பெண்ணிற்கே உரிய தாய்மை உணர்வு இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

காட்டில் விளையும் சிறுதானியங்களையே கரிசல் மக்கள் உணவாகக் கொண்டதை கி.ராவின் கதைகள் விவரிக்கின்றன. கம்பஞ்சோற்றினைப் பிசைந்து, கரைத்து மோர் ஊற்றிய சருவச் சட்டியிலிருந்து வெண்கல செம்பில் மோந்து, மோர் மிளகாய், வெங்காயம், உப்பிட்ட மிளகாய் போன்றவற்றையும் நாச்சியார் தருகிறாள். இவையெல்லாம் உணவினை மேலும் ருசியாக்குகின்றன.

காலை உணவுக்கு கஞ்சி என்றால் இரவில் வெதுவெதுப்பான குதிரைவாலி சோறு போட்டு, பருப்புக் கறியும் நல்லெண்ணையும் ஊற்றுவாள். அவித்த புளி ஊற்றிய சீனிவரக்காயை வெஞ்சனமாகத் தருகிறாள். மறு சோறுக்கு ரசம் பிழிந்து உன் கையில் வயிற்றோடு மனசும் நிறைகின்றது. “பிச்சைக்காரர்களுக்கும் கூட நாச்சியார் அம்மாள் என்றால் குலதெய்வம் தான்” (கீ.ரா, பக்கம்:129) என்று கூறுமளவிற்கு நாச்சியார் பிறருக்கு உணவளிப்பதில் சிறந்த நேயத்துடன் நடந்து கொள்வதை உணர முடிகின்றது.

ஜாதி நெத்திலி வறுவல், உப்புக் கண்டம், காரமிட்ட முட்டை, வெண்ணெய்க் கட்டி என நாச்சியார் அம்மா அளிக்கும் உணவு வகைகளைப் பட்டியலிட்டு கொண்டே செல்லலாம். அந்த அளவிற்கு உணவிட்டு உபசரிக்கும் அளவிற்கு அவர்களின் வீடு வளமையாக இருந்ததையும் உணர முடிகின்றது. “தீபம் போல் வீடு முழுக்க நிறைந்திருக்கிறாள்” (கீ.ரா, பக்கம்:129) என்ற கீ.ராவின் கூற்று பெண்ணின் ஆளுமைத் திறனைக் காட்டுகிறது. பெண் உள்ள வீடே வீடாக முழுமை பெறும் என்ற மக்கள் நம்பிக்கையும் இதன் மூலம் வெளிப்படுகின்றது. அதனால் தான் ஏழெட்டு ஆண்மக்கள் உள்ள வீட்டிற்கு தத்து பெண்ணாக ‘நாச்சியார்’ வருகிறாள். பெண்இல்லா குறையை நீக்கிய பெரும் தெய்வமாகவே நாச்சியார் பார்க்கப்படுகிறாள். மண்ணின் மக்களுக்கு ‘பெண்’ செல்வத்தின் அடையாளம் ஆகும். அது காலத்தில் மாற்றத்தில் மாறியது, மக்களின் வாழ்வியல் மாற்றத்தையே உணர்த்துகின்றது.

வழிபாடு

மார்கழி மாதத்தில் வீட்டினுள்ளும் தெருவின் முற்றத்திலும் தினமும் வகை வகையான கோலங்களைப் போட்டு அழகு படுத்துவாள். அதிகாலையில் நீராடி திவ்யப் பிரபந்தம் பாடுவாள். இதை கேட்பவருக்கு மனப்பாடம் ஆகிவிடும். வழிபாடும் கலையும் இணை பிரியாதவையாகும் என்பதை நாச்சியாரின் வழிபாடு காட்டுகின்றது.

மரத்தினால் ஆன திருவிளக்கில் ஒளி ஏற்றி பெண்கள் புடை சூழ ராகமிட்டு

பாடுவாள். விளக்கினைச் சுற்றிலும் சாண உருண்டையின் மீது அகல் விளக்கு ஏற்றப்பட்டிருக்கும். தீப ஒளி அவளின் அழகுக்கு மெருகேற்றும். “கறிக்கு உப்பைப் போல் அழகுக்கு அதிருசி கூட்டுகிறது போலும் விளக்கு”(கீ.ரா, பக்கம்:130) என்பதிலிருந்து நாச்சியாரின் அறிவாற்றலும் அழகும் ஒருங்கே வெளிப்படுத்தப்படுகின்றது.

முதல் விளைச்சலின் அடையாளமாக ஒரு கூறு பருத்தியை வழிபாட்டிற்கு உரியதாக்குவது கரிசல் மக்களின் பண்பாடாகும். தொட்டெரம்மா கோயிலின் இலந்தை முன் கோட்டையின் மேல் நாச்சியார் அம்மா ஒரு கூறு பருத்தி எடுத்து இரு கைகளிலும் ஏந்தி, பயபக்தியோடு அந்த முன் கோட்டையின் மீது போட்டார். பின்னால் வந்த பெண்கள் குலவை இட்டார்கள் என்பதிலிருந்து அறுவடையை தங்கள் வழிபடு தெய்வத்திற்கு சமர்ப்பிக்கும் கரிசல் மக்களின் பண்பாட்டினை உணர முடிகின்றது.

பருத்தி எடுத்தல்

காட்டிற்குச் சென்று பருத்தி எடுக்கும் நாச்சியர் கருவ மரத்து நிழலில் அதை கூறு வைத்து அனைவருக்கும் தருகிறாள். மடிப்பருத்தி, பிள்ளைப் பருத்தி, போடுபருத்தி என்று பகிர்ந்து போட பெண்கள் நாச்சியார் அம்மாவை வாழ்த்திச் சென்றார்கள். “எங்கள் வீட்டில் வேறு யார் வந்து கூறுவைத்துக் கொடுத்தாலும் போக மாட்டார்கள். நாச்சியார் அம்மாள் தான் வேணும் அவர்களுக்கு”(கீ.ரா, பக்கம்:130) என்பதிலிருந்து நாச்சியார் அம்மாவின் மனிதநேய சமூக உறவாடல் புலனாகிறது. இன்றும் கூட இட்டிலி கடைகளில் ‘பிண்ணாக்கு இட்லி’ என்று வாங்குவதைப் போலத்தான் பிள்ளைப் பருத்தி போடுதலும் உள்ளது. கரிசல் மக்கள் வாங்கித் தின்ன, பருத்தியைக் கொடுத்து தின்பண்டங்கள் வாங்கி உள்ளதையும் கி.ராவின் சிறுகதைகள் வாயிலாக அறிய முடிகின்றது.

நாச்சியாரின் கலையுணர்வு

வீட்டு வேலை, காட்டு வேலை போக மீதம் உள்ள பொழுதுகளில் தன் கலைத்திறனை வெளிப்படுத்தவும் நாச்சியார் தயங்கவில்லை. தன் கன்னிப் பருவத்தின் எண்ணங்களையும் கனவுகளையும் அதில் பதித்து பின்னுவது போல தோன்றும். நாச்சியார் அம்மா தலையனை உறைகளில் பின்னலிடுவது என்பதிலிருந்து கன்னிமை காலப் பொழுதுகள் ஒரு பெண்ணிற்கு சுகமும் சுதந்திரமும் தரக்கூடியதாக அமையும் என்பதை நாச்சியார் கதாபாத்திரம் வாயிலாக கீ.ரா உணர்த்துகிறார். நாச்சியாரின் பின்னல் வேலைகள் அவளின் கனவோடு கலந்த கற்பனை உணர்ச்சியையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. தனது வேலைகளில் சுதந்திரமும் தன்னாளுகையும் உள்ள போது அவளின் மனித நேய வாசிப்பும் உயிரோட்டமாக உள்ளது. இவ்வாழ்க்கை திருமணத்திற்குப் பின்பு மாறுவதையும் கதையின் பிற்பகுதியில் எங்கே அந்த நாச்சியார்? என்று வினவும் அளவிற்கு முற்றிலும் மாறுபட்டவளாக, மூன்று குழந்தைகளின் தாயாக சுயநலமியாக, நாச்சியார் காலஓட்டத்தில் மறைந்து போவதையே ‘கன்னிமை’ சிறுகதையில் உணர்ச்சி வெளிப்பாட்டுடன் கீ.ரா விவரிக்கிறார். திருமணம் பெண்ணின் வாழ்க்கையின் திசை காட்டு கருவியாக அமைகிறது. பல பெண்களின் வாழ்வில் திருமணமே முற்றுப்புள்ளி ஆகி விடுவதையும் உணர முடிவதையே கீர.ராவின் கன்னிமை சிறுகதை புலப்படுத்துகிறது.

முடிவுரை

திருமணத்திற்கு முந்திய வாழ்க்கையில் பெண்களின் ஆளுமைத் திறனில்

சுதந்திரம் பேணப்படுகிறது. நிர்வாகத் திறனும் சுய வெளிப்பாடும் கற்பனை உணர்ச்சியும் கலந்த வண்ணக் கலவையாக கலைக்டாக்ஸ்கோப்பாக ஜொலிக்கும். பெண்ணின் வாழ்க்கை திருமணத்திற்குப் பின் வெள்ளித்திரையாக மாறிவிடுகின்றது என்பதை இந்த ஆய்வு 'கன்னிமை' சிறுகதை வாயிலாகப் புலப்படுத்துகிறது. கரிசில் வட்டார மக்களின் புழங்கு பொருட்கள், உணவுவகைகள், தொழில்முறைகள் ஆகியவற்றையும் மண்ணின் மணத்தோடு கி.ராவின் கரிசல் கதைகள் வெளிப்படுத்துவதை 'கன்னிமை' சிறுகதை வாயிலாக இந்த ஆய்வு உறுதி செய்கின்றது.

குறிப்புகள்

1.கி. ராஜநாராயணன்- தமிழ் விக்கி 22/ நவம்பர்/ 2025

2. மேலது

3.கதிர் மகாதேவன், இரா மோகன், பதிப்பு ஆசிரியர்கள், பெண்ணியம் இபதம, பக்கம்: 23 4. ஆ.சா ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, பக்கம்: 22,

5. ர. வி சுப்பிரமணியன், தற்கால தமிழ் இலக்கியம், பக்கம்: 169

6. ஆ.சா ஞானசம்பந்தன், மேலது, பக்கம்: 22

துணை நூற்பட்டியல்

1.கி. ராஜநாராயணன்- தமிழ் விக்கி 22/ நவம்பர்/ 2025

2.கதிர் மகாதேவன், இரா மோகன், பதிப்பு ஆசிரியர்கள், பெண்ணியம் இபதம, வெள்ளி விழா மலர், மதுரை தியாகராசர் பல்கலைக்கழக வெளியீடு, 1994

3. ஆ.சா ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு -1953.

4. ர. வி சுப்பிரமணியன், தற்கால தமிழ் இலக்கியம், நவயுக பிரசுராலயம், சென்னை, முதல் பதிப்பு-1942

© 2026 முனைவர். சந்தானலெட்சுமி கா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 291–299
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

நுண்வெளிக் கிரகணங்களில் ஒக்கலிகர் பண்பாட்டுப் பதிவுகள் - பழங்குடி மரபின் சாயல்

முனைவர். தர்மலிங்கம் வை*

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி சித்தூர், கேரளா *678104, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். தர்மலிங்கம் வை — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00076	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

மதுரை வட்டாரத்தைச் சார்ந்த நாவல் சு, வேணுகோபால் அவர்களின் நுண்வெளிக்கிரகணங்கள். இந்நாவல் ஓர் இனக்குழுச் சமூகம் என அறியத்தக்க ஒக்கலிகர் வாழ்வியலைப் பேசுகிறது. கன்னட மொழிபேசும் ஒக்கலிகர் வட கர்நாடகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள். இவர்கள் பண்பாட்டு பழக்க வழக்கங்கள் முற்றிலும் சிறப்புத் தன்மை உடையதாக விளங்குகிறது. இவரது பண்பாட்டு அடையாளங்கள் வழி இவர்கள் ஆதி இனக்குழு சமுதாயத்தின் எச்சமாக விளங்கும் பழங்குடி மரபோடு எண்ணத்தக்கவர்கள் என இக்கட்டுரை நிறுவ முற்படுகிறது. கூடவே, எழுத்தாளர் ச. வேணுகோபால் ஒக்கலிகர் சமூகத்தின் சடங்குகள் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் வழிபாட்டு முறைகளை சிறப்பாக பதிவுசெய்துள்ளார் என்ற கருதுகோளை முன்வைத்தும் அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: தர்மக்கட்டு; குலத்தீட்டு கழித்தல்; களப்பட்டை சடங்கு; வீருமாரம்மாள் தெய்வ வழிபாடு

How to cite / மேற்கோள் காட்டும் முறை: வை, மு. த. (2026). நுண்வெளிக் கிரகணங்களில் ஒக்கலிகர் பண்பாட்டுப் பதிவுகள் - பழங்குடி மரபின் சாயல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 290–298. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8497

முன்னுரை

இலக்கியம் மக்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கும் கண்ணாடி என்பது பொதுவான ஒரு வழக்காக அமைகிறது. மக்கள் வாழ்க்கை இயல்பாய் நிலத்தை முன்வைத்தே அமைகிறது, எனவேதான் ஐந்திணை நிலம் குறித்துப் பேசும் போது நிலத்தையும் பொழுதையும் முன்வைத்துப் பேசுகிறார் தொல்காப்பியர். குறிப்பாக நிலம் முதன்மையாக அமைகிறது. ஒரு நிலத்தினை தீர்மானிக்க அந்நிலத்தில் உள்ள கருப்பொருள்கள் முதன்மையாக அமைகிறது. கருப்பொருளை வைத்தே உரிப்பொருள் கட்டமைக்கப்படுகிறது.

இங்கு நிலம் திணை என்பதில் கருப்பொருள் முதன்மையாக அமையும் போது தொல்காப்பியர் கருப்பொருள் என்பதை “தெய்வம் உணாவே மா மரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ அவ்வகை பிறவும் கருவென மொழிப” **(புலவர்குழந்தை :1968)** என்கிறார், ஆனால் நாற்கவிரச நம்பி அதனைப் பதினான்கு எனப் பட்டியலிடுகிறார். ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு ஊர்நீர் பூமரம் உணாப்பறை யாழ் பண் தொழில் எனக்கரு ஈர்எழுவகைத் தாகும் **(சா, திருஞானசம்பந்தம்;2018)** இதில் ஒரு நிலத்தின் எல்லா செயலுக்கும் தொழில் முதன்மையாகிறது. அது செயல் என அழைக்கப்படும் போது அச்செயலின் பின்னணியில் நுட்பமாக கருவி அமைவதைக் காண முடிகிறது. இவண் கருவி என்பது தொழில்கருவி என வில் அம்பு ஏர் அல்ல, இவண் நோக்கப்படுவது இசைக்கருவியாக அமைகிறது. எல்லா நிலத்திற்கும் அகத்திலும் புறத்திலும் கருவி இருப்பதை உற்றுநோக்கின் புலப்படும் அக்கருவிகள் நிலத்தின் செயலினை விளக்கும் முகமாகவும் அச்செயலோடு ஒத்திசைவு உடையதாகவும் அமைவதை இலக்கண இலக்கியங்கள் உறுதி செய்கின்றன.

ஐந்நிலத்திற்குரிய இசைக்கருவிகளான தோற்கருவி நரம்புக்கருவிகளில் முதன்மையாக இங்கு தோற்கருவி நோக்கப்படுகிறது. அவ்வகையில் ஐந்நிலத்திற்கும் முறையே தொண்டகப்பறை, ஏறுகோட்பறை, மணமுழவு, மீன்கோட்பறை, துடி எனும் கருவிகள் அமைகின்றன. சங்க இலக்கியங்கள் இப்பறையின் முழக்கம் அந்தந்த திணையின் செயலோடும் அவர்கள் வாழ்வியல் செயல்பாடுகளில் முதன்மை வகிப்பதையும் குறிப்பாக அத்திணைக்குரிய உரிப்பொருளை நுட்பமாக உணர்த்துவதில் அதன் இசை முழக்கம் பொருத்தப்பாடோடு அமைக் காணமுடிகிறது. தினைப்புனம் காப்பதில் தொண்டகப்பறையும் அதன்புறத்திணையான வெட்சியில் நிரைக்கவரும் போது தொண்டகப்பறை இசைப்பதையும் முல்லைத்திணையில் ஏழுதழுவல், ஆநிரை மேய்கும் போது எழுப்படும் ஏறுகோட்பறை எனப் பதிவு செய்துள்ளதைக்காண முடிகிறது. மருதநிலத்திற்குரிய மகிழ்வான நிகழ்வான திருமணம் ஊடல் கூடலோடு தொடர்புடைய மணமுழவு இசைக்கப்படுவதையும் தலைவன் வருகைக்காகக் கடற்கரையில் காத்திருக்கும் தலைவியின் சோகத்தில் மீன்கோட்பறை இசைப்படுவதையும் பிரிவு இரக்கம் கருணைக்கு அவை பொருந்திப்போவதை அக இலக்கியம் மட்டும் இல்லாது புற இலக்கியமான புறநானூறும் பதிவு செய்கிறது. “**ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல் ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப், புணர்ந்தோர் பூவணி அணிய, பிரிந்தோர் பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப**,”(புலியூர்கேசிகன்: 2010) பாலையில் வழிப்பறி செய்யும் போது கொள்ளையர்களும் வழிப்பறியில் இருந்து தப்பிக்க பாணர்களும் துடி முழக்கி நரம்பிசைத்து பஞ்சுரப்பண் பாடியதையும் காணமுடிகிறது.

இவண் இசைக்கருவி அவர்கள் வாழ்வின் எல்லா செயல்களையும் விளக்கும் முகமாகவும் அச்செயல்களின் அசைவுக்கு ஏற்றாற்போல விளங்குவதை காண்கிறோம். இத்தகைய நுட்பங்கள் நவீன இலக்கியத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை சு, வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணங்கள் வழி உணர முடிகிறது.

ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு இசைக்கருவி என்பது போல ஒக்கலிகர் சமூகத்தின் வாழ்வியல் சடங்குகள் பெரும்பான்மையானவற்றில் உறுமி எனும் இசைக்கருவி இயங்குவதைக் சு. வேணுகோபால் பதிவுசெய்கிறார். எல்லா சமுகம் பற்றிய நவீன படைப்புகளிலும் மக்கள் வாழ்வோடு இணைந்த சடங்குகளில் இசைக்கருவிகள் இசைப்படும் என்றாலும் தனித்துவம் நுண்வெளிக்கிரகணங்களில் இருக்கிறது என்பதைக் இக்கட்டுரை விளக்குகிறது. குறிப்பாக அதனை ஒலியோடு பதிவு

செய்யும் நுட்பம் சு, வேணுகோபாலுக்கு கைவரப்பெற்றிருக்கிறது.

இரண்டாவது பழங்குடி சமூக மரபில் திருமணப்பந்தம் தொடர்பாக தாலி அணியும் வழக்கம் இல்லை என்பதும் திருமண உறவில் கணவர் இறந்தபின் அவர்கள் குடும்பத்திலேயே அடுத்த நபரை திருமணம் செய்துகொள்ளும் தன்மையும் பழங்குடி மரபிற்கு உரியது. உடன் விதவைத் திருமணம் என்பதும் சிறப்பிற்குரியது இத்தன்மைகளை சு.வேணுகோபாலின் நுண்வெளிக்கிரகணம் பேசுகிறது.

மூன்றாவது ஒக்கலிகர் சமூகத்தின் நம்பிக்கைகள் புதினங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முறை குறித்து நோக்கப்படுகிறது.

வடக்கு கர்நாடகத்தில் துங்கப்பத்ரா ஆற்றங்கரைக்கு அப்பால் வாழ்ந்தவர்கள்; ஆடு மாடு மேய்தல்; விவசாயம் செய்தல்; ஆயர்பாடி கண்ணனை வழிபட்டவர்கள் ஒக்கலிகர்கள் ஆயர்பாடி ஆகையால் பசு. பசுவின் மடிக்காம்பில் ஒக்கிய சிந்திய சிதறிய பாலில் தோன்றியவர்கள் என பசு ஆடு இவற்றோடு தொடர்புடையவர்கள். இசுலாமியர்களோடு பெண்கொடுப்பினைத் தொடர்பாக கருத்துவேறுபட்டு அவர்களிடம் இருந்து தப்பித்துத் தெற்கு நோக்கி ஓடிவந்தவர்கள் ஒக்கலிகர்கள் என்பது நாவலில் உள்ள செய்தி, இதனை உள்வாங்கி சேதுமாதவன் “முகமதியருக்குப் பெண்கொடுப்பதைவிட கீழ்த்தேசம் சென்றுவிடுவதே மேல் எனக்கருதி அனைவரும் இரவோடு இரவாக கீழ்தேசம் நோக்கிப் புறப்பட்டனர்” என்கிறார் **(சேதுமாதவன் :2001)** இவ்வாறாக வந்த சாதியில் இசுலாமியருக்கும் பயந்து இறந்துவிட அவளையே வீரமாத்தி என குலதெய்வமாக வழிபாடு செய்யும் ஒரு குலம். முன்னோர் வழிபாட்டை மேற்கொள்பவர் என்றும் காட்டுகிறார் ஆனால் இது நாவல் பதிவுக்கு முரணாக அமைகிறது

ஒக்கலிகர் மரபில் வந்த சித்தையன் திம்மையன் ரெங்கசாமி என மூன்று தலைமுறைகளின் கதையைச் சொல்லும் நாவலில் அவர்களது வரலாறு நம்பிக்கை சடங்குகள் பழக்க வழக்கங்கள் செல்லப்படுகின்றன. குறிப்பாக திருமணம் உள்ளிட்ட பல்வேறுசடங்குகளில் உறுமி பயன்படுத்தப்படுகிறது. மிக நுட்பமாக நோக்கினால் துடி மற்றும் ஏறுகோட்பறையின் மாற்று வடிவமாக ஊறுமியைச் சொல்ல முடியும்., இக்கருவி உடுக்கை வடிவில் பெரியதாக இருப்பதும் இதன் தோல் ஆட்டுத்தோலால் பெரும்பான்மை இருப்பதும் நுட்பமான குறிப்புகள் கொண்டது எனக் கருத முடிகிறது. இவை அவர்களின் பண்பாட்டோடுதொடர்புடையது என்றும் கருதமுடிகிறது. மேலும் ஒக்கலிகர் பற்றிக் குறிப்பிடும் வீரகண்ணன் அவர்கள் அவர்களை பௌத்த மரபினர்என்றும் சமண மரபினர் என்றும் தமிழகத்தின் பல்வேறு மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடி இனத்தோடு தொடர்புடையவர்கள் என்றும் குறிப்பிடுகிறார் உன் ஒக்கலிகர்கள் கௌடர்கள் என்று அழைக்கபடுவதை சுட்டிக்காட்டுகிறார், (https://tamilmanam.in) அவர்களின் இசைக்கருவி அவர்களின் மரபார்ந்த வேளாண்மை சார்ந்த விலங்குகளோடு தொடர்புடையதும் அதனை செயலுக்கு ஏற்றாற் போல் இசைக்கும்நுட்பமும் தனித்தன்மையோடு விளங்குகிறது.

ஒக்கலிகர் குலமக்கள் தங்கள் வாழ்வியல் சடங்குகளான திருமணம், விதவை மறுமணம் மறுமணம் எனும் தர்மக்கட்டு, குலத்தீட்டு கழித்தல், களப்பட்டை, குலதெய்வ வழிபாடு மற்றும் இறப்பு ஆகிய நிகழ்வுகளின்போது நடத்தப்படும் சடங்குகளில் ‘உறுமி’யைப் பயன்படுத்துகின்றனர்.

உறுமியின் இசையானது நடத்தப்படும் சடங்கின் தன்மையை உணர்த்துவதாகவும் அதனை தொலைவில் உள்ளவர்களும் உணர்ந்து கொள்ளும் விதமாகவும் அமைந்துள்ளது. மேலும் ஒக்கலிகர் குலத்தொழில் விவசாயம்.

அத்தொழிலில் பயிர்களின் வளர்ச்சி மெதுவாக அமையும். அதைப்போலவே அவர்கள் வாழ்வியல் சடங்குகளில் இசைக்கப்படும் உறுமியின் இசையும் மெதுவாகவே அமைகிறது. அச்சடங்குகளின் மெய்பாட்டுத் தன்மைக்கு ஏற்ப இசையும் அமைவதை அவர்களின் சடங்குகள் காட்டுகின்றன. இந்த இசைக்கூறுகளின் நுட்பங்களை சு.வேணுகோபால் காட்டுகிறார்.

திருமணச்சடங்கில் திருமண நிச்சயதர்தத்தின் போது முதலில் தாம்பூலத் தட்டுகளைச் சரிபார்க்கும் போது உறுமி இசைக்கப்படுகிறது. அங்குள்ளோர் தமக்கு முன்னுள்ள தட்டுகளைப் பார்க்கிறார்கள். பார்க்கும் போது தலையை அசைத்துக்கொண்டே பார்க்கிறார்கள். தலையை அசைப்பதைப் போலவே உறுமியிலிருந்து ஒலியும் எழுகிறது, அவ்வொலி,

“ரா ̆மா ரா ̆மா ரா ̆மா ரா ̆மா

ரா மா ரா மா ரா மா ரா மா

ராமா ராமா ராமா தா ராமா ராமா ராமா ராமா ராமா’’(சு,வேணுகோபால்:1997)
என்று அமைகிறது.

ஒரு நிகழ்வுமுடிந்தவுடன் அதனை அறிவிக்கும் முகமாக உறுமியில் இருந்து ‘**கொடுபு டொக்** எனும் ஓசையை எழுப்புகிறார்கள். அடுத்த நிகழ்வாக சம்மதம் வாங்குதல் எனும் நிகழ்வு நடைபெறுகிறது. அந்நிகழ்விற்கு வந்துள்ள அனைவரிடமும் ஒக்கலிகர் சாதியின் பெரியமனிதர் சம்மதம் கேட்கும் போதும், மணப்பெண், மணப்பெண்ணின் தாய்மாமன், மணமகனின் தாய்மாமன் ஆகியோரிடம் சம்மதம் கேட்கும் போதும் ‘சம்மதவா’ என்று கேட்க அவர்கள் சம்மதம் என்கின்றனர். இந்த சம்மதம் தெரிவிப்பதை அவர்களின் வாய் ஓசைக்கு ஏற்ப

“டெவ்வுக் டெவ்வெ டேடேவ

டெவ்வுக் டெவ்வெ டேடேவ’’ (சு,வேணுகோபால்:1997)

என்று உறுமியில் இருந்து ஒலியை எழுப்புகின்றனர். மணமகனுக்கு மணமகனின் தாய்மாமனும் மணமகளுக்கு மணமகளின் தாய்மாமனும் காலில் மிஞ்சியை வைக்கும் போது குனிந்து கால்விரலில் மாட்டுவதற்கான அசைவோடு

“ ட்டிவீ டீ டிவிண்டா

ட் டிவீ டீ டிவிண்டா” (சு,வேணுகோபால்:1997)

என்று ஒரே வகையான இசை உறுமியில் எழுகிறது. திருமணத் தினத்தன்று மாப்பிள்ளை அழைப்பு நடைபெறும் போதும், பெண் அழைப்பு நடைபெறும் போதும் நடந்து செல்வதைக் குறிக்கும் விதமாக உறுமி இசைக்கப்படுகிறது. அது போலவே இறப்பின் போது உறவினர்கள் பிணத்திற்கு பட்டுத்துணி எடுத்துவரும்போது நடந்துவருகின்றனர். நடந்து வரக்கூடிய இந்த இரு நிகழ்வுகளின் போதும் உறுமி இசைக்கப்படுகிறது. ஆனால் இரண்டு ஓசை ஒரே தன்மை உடையதாய் இருப்பதில்லை. அவை மாறுபடுகின்றன. திருமணத்தின் போது மணமக்கள் தங்கள் உறவினரோடு நடந்து வரும்போது உறுமியின் ஓசை,

“டட்டவி டட்டி டட்டவி டட்டி

டட்டவி டட்டி டட்டவி டட்டி” [72]

என்று எழுகிறது. அதே உறுமி இறப்பு நடந்த பின் துணி எடுத்து வரும்போது,

“டெட்டே டேடே டெட்டெ டேடே

டெட்டே டேடே டெட்டெ டேடே"[73]

என்று எழுகிறது.

‘ திருமணத்தின் போது மங்கள இசையாக இசைக்கப்படும் உறுமியின் ஓசையை மங்கள ஓசை என்றும் ஒருவர் இறக்கும் போது இசைக்கப்படும் இசையை அபஸ்வரம் என்றும் சு. வேணுகோபால் குறிப்பிடுகிறார். அதில் அபஸ்வரத்தை அக்குபாரிக்கு தர்மக்கட்டு நடைபெறுவதற்கு ஒருமாதத்திற்கு முன்பு இசைக்கப்பட்டதையும் ரெங்கசாமி இறந்த போது இசைக்கப்பட்டது என இரண்டு இடங்களில் காட்டுகிறார். பிணத்தின் முன், உறுமி

“டெவ்வீவி டெவிக்கு டிவ்வி டெவிக்

டெவ்வீவி டெவிக்கு டிவ்வி டெவிக்” (சு,வேணுகோபால்:1997) என்று உறுமுகிறது. மங்கள ஒலியை திருமணத்தின் போது காட்டுகிறார். அவ்வொலியும் இரண்டு இடங்களில் இசைக்கப்படுகிறது. பத்மா என்ற பெண்ணின் திருமணத்தில் ஒக்கலிகரின் பாரம்பரிய இசைக்கருவியான உறுமியில் இருந்து

“டிடிகிடி டீடிகிடி

டிடிகிடி டீடிகிடி” (சு,வேணுகோபால்:1997) என்று எழுகிறது. இதே இசைதான் அக்குபாரிக்கு விதவைத் திருமணம் தர்மகட்டு நடைபெறும் போது இசைக்கப்படுகிறது.

திருமணத்தோடு தொடர்புடைய சடங்கில் ஒன்று புவ்வகுட்ட சடங்கு என்பதாகும். இச்சடங்கின் போது மணப்பெண்ணின் மடியில் உரலில் நெல்லிட்டு இடித்து புடைத்த பச்சரிசியைத் தருவர். அப்போது உரலில் இருந்து உலக்கைத் துக்குவதற்கும் உரலில் உலக்கை விழுவதற்குமான இசையை உறுமி எழுப்புகிறது. அவ்வோசை.

“ டெட் டெவுக் டெட் டெவுக்

டெட் டெவுக் டெட் டெவுக்” (சு,வேணுகோபால்:1997)

என எழுகிறது. இது உரலில் இருந்து உலக்கையைத் தூக்கும் போது டெட் என்றும் உலக்கை உரலில் இறங்கும் போது டெவுக் எனவும் விழுவதாக உணரமுடிகிறது.

மரணத்தின் போது பிணத்தின் முன்னர் உறுமியில் இருந்து ஓசை எழுப்புகிறார்கள். அவ்வோசை,

“ ரா...மா...ரா...மா...ரா...மா...டெட்” (சு,வேணுகோபால்:1997)

என்று அமைகிறது. இதே ஓசை குலத்தீட்டு எனும் சடங்கில் வேறுசாதி ஆடவனோடு உறவு கொண்டதாகக் கருதி சாதியில் இருந்து விலக்கி வைத்து அவள் இறந்து போனதாக எண்ணி குலத்தீட்டு கழிக்கின்றனர், அப்போது வைக்கோலால் ஆன அப்பெண்ணின் உருவத்தை பாடையில் தூக்குகின்றனர், அப்போதும் ரா...மா...ரா...மா...ரா...மா...டெட் என்ற அதே ஓசையை எழுப்புகின்றனர். மரணமடைந்தவர்களுக்குக் கருமகாரியம் நடைபெறும் போது இறந்தவர்கள் காக்கையாக வருவதாக எண்ணி சோறிடும் சடங்கில் அக்காக்கைக்கு சோறிட கா...கா.. வென அழைக்கும் போது,

“ டீடீஇ டவீட டட்டீ

டீடீஇ டவீட டட்டீ” [78] **(சு,வேணுகோபால்:1997)** என உறுமியை எழுப்புகின்றனர்.

களப்பட்டை எனும் சடங்கு ஒக்கலிகர் சமூகத்தில் நடத்தப்படுகிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த சடங்கின் போது பகையாளிகள் கடவுளின் முன்னிலையில் பால், நீர், கெஞ்சலம் ஆகியனவற்றை ஒருவருக்கு ஒருவர் மாற்றி குடிக்கின்றனர். இச்சடங்கின் போது இறைவன் ஒக்கலிகருக்குக் கொடுத்ததாகச் சொல்லப்படும் கம்பளியில் அமர்கின்றனர். அப்போது விதவையைத் திருமணம் செய்து கொண்டவர்கள் அதில் அமர அனுமதி கிடையாது. முப்பத்துமுக்கோடி தேவர்கள் அறிய அக்னி தேவன் அறிய வாயு தேவன் அறிய தங்கள் பகையை முறித்துக் கொள்கின்றனர். இதற்கு இறைவனுக்கு காணிக்கையை எண்ணி வைக்கின்றனர். அதற்கு ஏற்றார்போல் ஏற்ற இறக்கத்தோடு

“ டிவ்விவ்வி டிவிக்கிடிண்டி

டிவ்விவ்வி டிவிக்கிடிண்டி” [79] என்று உறுமி அதிர்கிறது.

பழைய ஆதி சமூகத்தின் தன்மையோடு ஒப்புநோக்கும் தன்மையோடு இருப்பதைக் காட்டுகிறது.

பிற பண்பாட்டுப்பதிவுகள்

ஒக்கலிகர்கள் தாலி அணியும் பழக்கம் இல்லை. ஆனால் தாலியை பாதுகாப்பு வேண்டி அணிய முற்படுகின்றனர். குச்சனூரில் திருமணம் செய்து கொண்டு போன சீரங்குவின் மகள் பத்மாவின் தோழி ராணி டீச்சர் சந்தைக்கு வரும்போது பாதுகாப்பு வேண்டி தாலியை அணிந்துகொள்கிறாள். ராஜாங்கம் என்பவர் தன் மனைவியோடு தாலி இல்லாமல் சென்ற போது பஸ்நிலையத்தில் அவரது மனைவியை தாழ்ந்த சாதி என்றும் விலைமகள் என்றும் ஒரு கூட்டம் கூறி சண்டை ஏற்படும் போது தாலியின் பாதுகாப்பு கருதி அதனை அணிந்துகொள்ள முற்படுகின்றனர்.

பொட்டு

கர்நாடகத்தில் இருந்து தமிழகத்திற்கு இடம்பெயர்நதவர்கள் அவர்களின் பண்பாட்டு அடையாளங்கள் காலப்போக்கில் மாறிவருவதைக் காணமுடிகிறது. காயத்திரி வீட்டிற்கு வரும் பத்மா டீச்சர் காயத்திரியின் வீடான சித்தையன் கோட்டையைக் வீட்டைக்கண்டு வியந்து வரும்போது காயத்திரியின் அம்மா தங்கத்தின் போட்டோ ஒன்றினைப் பார்க்கிறார்கள் அப்போது புகைப்படத்தில் தங்கம் ஒற்றை நாமம் போட்டிருப்பதைப் பார்த்து வியந்து போகிறார். **ஒற்றை நாமம் போட்டதைப் போட்டோவில்தான் பார்த்திருக்கிறாள். இப்போது எல்லாம் வட்டக் குங்குமம் தான்” (சு,வேணுகோபால்:1997)**

ஒக்கலிகரும் கோரைப்பாயும்

ஒக்கலிகர் சாதியைச் சார்ந்தவர்கள் தங்கள் வாழ்வில் இரண்டு செயல்களைச் செய்ய மாட்டார்கள். ஒன்று புங்க மரத்தை விறகை எரிக்க மாட்டார்கள், இரண்டு கோரைப்பாயில் படுக்க மாட்டார்கள். இந்த புங்க மரமும் கோரைப்பாயும் தான் அவர்கள் கர்நாகத்தில் இசுலாமியரிடமிருந்து தப்பித்து வரும் போது அவர்களைக் காப்பாற்றியன. கோரைப்புல்லில் மறைந்து வந்தவர்கள் ஒக்கலிகர்கள். துங்கபத்ரா ஆற்றைக் கடக்கும் போது ஒக்கலிகர்கள் வேண்டிக்கொண்டதற்கிணங்க புங்க மரம் வளைந்துகொடுத்து பாலாமாக நிற்க அதன் மீதேறி கடந்து வந்தார்கள். எனவே இவ்விரண்டையும் அவர்கள் பயன்படுத்துவது இல்லை. ஆனால் கால மாற்றங்களில் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறையான தங்கம் அவளது மகன் தனகோபால் கோரைப்பாயையும் புங்க மரவிறகையும் பயன்படுத்துகின்றனர், இதனைக் கண்டு முதல் தலைமுறையைச் சார்ந்த மொம்மம்மா பாட்டியால் புலம்ப

மட்டுமே முடிகிறது. சைக்கிளில் பாயைக் கொண்டு வந்து விற்கும் பாய்க்காரனிடம் தங்கம் வாங்கும்போது ,பாட்டி **ஒன்கு வெவஸ்தயிருக்கா நாம பாயில ஒக்காரக்கூடாது''திட்டினாள்.“தெரியும் சும்மா போங்க எல்லாம் நெட்டமாயிடுச்சு இந்த ஒண்ணுதான் கொறச்சல்''“பாய்வேணாம்னாவேணா” (சு,வேணுகோபால்:1997)** என்று சொன்னாலும் தங்கம் பாயை வாங்கி விடுகிறாள். வறுமை அவர்களை வாட்ட அவர்களுக்கு அமர்வதற்கும் படுப்பதற்கும் பாய் தேவையாகி விடுகிறது.

விதவை மறுமணம்

ஒக்கலிகர் சடங்குளில் ஒன்றான தர்மக்கட்டு என்பது ஒக்கலிகர் பிரிவின் ஒரு பிரிவான மூணுபளவினரிடம் உள்ள வழக்கமாக இருக்கிறது, தர்மக்கட்டு என்பது விதவைத் திருமணம் என்பதாகு. ஒக்கலிகர் சாதியில் ஒரு பெண் ஒருமுறைவிதவை ஆனால் மீண்டும் இரண்டு முறை முதலில் திருமணம் முடித்த வீட்டிலேயே உள்ள பிற ஆண்களுக்கு மனைவியாக வாழலாம். முறைப்படி திருமணம் செய்துவைக்கப்படும் இதற்கு தர்மக்கட்டு என்று பெயர். இந்தத் தன்மை பழங்குடியினர் வாழ்வியலோடு ஒத்துப்போவதைக் காண முடிகிறது. இதனை ஒக்கலிகர் பிரிவில் உள்ளமற்றொரு பிரிவான குஞ்சடிகர் பிரிவினர் வெறுப்பாக பார்க்கின்றனர், அதனாலேயே மூணுபளவினரைக் கீழானவர்களாக எண்ணுகின்றனர்.

குஞ்சடிகர் பிரிவில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சியில் ஊர் பெரிய மனிதர்கள் ஆண்கள் கம்பளித் துணியில் அமர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவது வழக்கம். அப்படியான பேச்சுவார்த்தை நடத்தும்போது எவரேனும் விதவையை திருமணம் செய்திருந்தால் அக்கம்பளியில் அமரக்கூடாது. விதவை மணம் அங்கீகரிக்கும் அதே சாதியில் அதனை தீட்டு போல பாவிக்கும் தன்மையும் காணப்படுகிறது.

களப்பட்டைச் சடங்கு

களப்பட்டைச் சடங்கு எனப்படும் உறவினரிடையே உள்ள பகை போக்கி நட்பு கொண்டாட ஐம்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை வழிபாடு நடத்தும் குல தெய்வக்கோவில் செய்யும் சடங்கின் போது கம்பளியில் அமரக்கூடாது. இந்த நிலைகளில் சிறு மாற்றம் ஏற்படுவதை சு. வேணுகோபால் காட்டுகிறார்.

மேலும் பூப்பு சடங்குகளில் நாய்க்கு சோறு வைக்கும்நிகழ்வு மாறிவருவதை மிக எளிதாக வீரசிக்கு எனும் கதைமாந்தர் மூலம் காட்டுகிறார். முன்றாம் தலைமுறை இரண்டாம் தலைமுறை இருந்த சடங்கு குறித்த நம்பிக்கைகள் மூன்றாம் தலைமுறைக்கு வரும்போது மிக எளிதாக கடந்து போவதை வேணுகோபால் பதிவு செய்கிறார். ரெங்கசாமி என்பவர் குழந்தையாக இருக்கும் போது அவரது பெற்றோர் சூடுவைத்தல் எனும் சடங்கைச் செய்ததைக் காட்டுகிறார். **“ரெங்கசாமியைத் தொட்டிலில் கிடத்தி மூன்று சூடு வைத்தார்கள். வீடே குழந்தையின் அழுகுரலால் பட்டு தெரித்தது. சூடுவைக்கப்பட்டவர்கள எல்லாம் வீரனாக வருவதில்லைதான். ஆனால் ரெங்கசாமிகென்று ஒருதோரனை வாகாக அமைந்துவிட்டது” (சு,வேணுகோபால்:1997) என்று கூறி நம்பிக்கையின் அபத்தத்தைப் பதிவு செய்து அடுத்த தலைமுறை கடந்து போவதைக் காட்டுகிறார்,**

வீருமாரம்மாள் தெய்வ வழிபாடு.

ஒக்கலிகர் சாதியைச் சார்ந்தவர் கதிரப்பா. அவரது குடும்பத்தில் மொத்தம் பத்து ஆண்கள். அவரே மூத்தவர். அவருக்குப் பின்னர் ஒன்பது பேர் அவரது தம்பிகள். கதிரப்பாவின் பட்டி போட்டு ஆடுமேய்த்து வரும் வேலை செய்துவருகிறார். அவரது

மனைவி வீருமாரம்மாள். ஆடு மேய்த்து வந்த கதிரப்பா கள்ளர்களிடம் இருந்து ஆடுகளைக் காத்து வந்ததார். எந்த நிலையிலும் அவர் விழித்திருப்பது போலவே இருப்பதால் அவர் இருக்கும் இடம் சென்று ஆடுகளைத் திருட முடியாமல் கள்ளர்கள் தவித்தனர். ஒரு நிலையில் கள்ளன் ஒருவன் கதிரப்பா விழித்திருப்பதன் சூட்சமத்தை வீருமாரம்மாளிடம் கேட்ட தன் கணவனைப் பற்றிக் கேட்டவுடன் பெருமைக்காக தன் கணவனின் நிலையைக் கூறுகிறாள். "கதிரப்பா நின்று கொண்டு இருக்கும் போது குச்சியைக் கையில் பிடித்து இருந்தால் அவர் விழித்துக்கொண்டு இருக்கிறார்" என்றும், "அவர் குச்சியை நாடியின்கீழ் வைத்து இருந்து கை தொக்கிக்கொண்டு இருந்தால் அவர் தூங்குகிறார்" என்றும் அர்த்தம் என்கிறாள்.

அடுத்த நாள் கள்ளர்கள் கதிரப்பாவை கொன்று விட்டு ஆடுகளைத் திருடிச் சென்றுவிடுகின்றனர். கதிரப்பாவின் பிணத்தை எரியூட்டும் போது "நான் தான் என்கணவன் சாவிற்கு காரணம்" என்று கூறி தன் கைக்குழந்தையோடு தீயில் விழுந்து விடுகிறாள். அவளே பின்னர் குல தெய்வமாக வணங்கப்பெறுகிறாள். அவளது கொழுந்தனார் ஒன்பது பேரும் ஒன்பது திசையில் சென்று கள்வர்களைத் தேடி கண்டுபிடிக்க முடியாது போக ஆங்காங்கே இருந்து வாழ்கின்றனர். அந்த ஒன்பது பேரின் வம்சம் விருத்தி அடைந்து இன்று ஒக்கலிகர் நாற்பத்தெட்டு பிரிவுகளாக விளங்குகின்றனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து ஐம்பது வருடங்களுக்கு ஒரு முறை கூடி குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு வருடமும் ஒரு வேலமரக்கன்றை(கொத்து கொம்பு) நட்டு வைப்பது வழக்கமாக உள்ளது. இத்தகைய மரபு பழங்குடி மரபின் எச்சம் எனக்கருத இடமிருக்கிறது,

இந்த வீருமாரம்மாள் தெய்வத்தின் கோவிலில் இன்று ஒன்பதுபேரின் நினைவாக ஒன்பது பெரிய தூண்கள் இருப்பதை நுண்வெளிக்கிரகணத்தின் ஆசிரியர் காட்டுகிறார். அத்தெய்வ வழிபாட்டில் செய்யப்படும் சடங்கில் தெய்வத்திற்கு மூச்சுக்காற்று ஆகாது என்பதற்காக முகத்தைக் கட்டிக்கொண்டு பூசை செய்யும் முறை காணப்படுகிறது. இந்த தன்மை பல குலதெய்வங்களுக்கு உரிய முறையாகும். இந்த தெய்வம் அம்மனாகப் போற்றப்படுகிறது. இந்தத் தெய்வத்திற்கு செய்யப்படும் சடங்கை நுண்வெளிக்கிரகணத்தில் புதினத்தில் காணமுடிகிறது.

> **"அரை ஓசை வந்தது. கர்ப்பகிரகத்தில் அபிசேகம் செய்தார்கள். தெய்வ அருள் வாக்குப்படி சொன்ன ஊரில் தனிய நெஞ்ச வண்ணப்பட்டு புடவையை உறுமி அழைத்து வந்தது . சேலைஉடுத்து சடங்கு நடந்தது. உறுமி பூசாரி ஊருக்கு கொத்து கொம்பு அழைக்கப்போனது. மல்லையபுரத்திலிருந்து பூசாரி கொத்து கொம்பு சொமந்து வந்த மண்டபத்துக்கு முன்னால் நட்டார். அது நாளடைவில் தளுத்து பெரிய வேலமரமா வளரும் எற்கனவே நாலு வேலமரம் அடர்ந்திருக்குது. நாங்க எல்லாம் பொம்மனம்பட்டிக்கு நடந்தே போனோம். முன்னால மேளதாளசேவை ஆட்டங்கள் ஆடிட்டுப் போனாங்க பெரியதனக்காரர் கோவில் உறுமி அதிர அவங்கவீட்டுச் சுமங்கலிப் பொண்ணு ஒம்போதடுக்கு போனத்த சுமந்துவந்தாங்க. சுமங்கிலிதான் சொமக்கனும். விதவை வாழாவெட்டி சொமக்கக்கூடாது. போனம் சுமக்குறப்போ வளையல் ஆடாம நூல் பின்னலில் கட்டிக்கிடுவாங்க. அம்மனுக்கு மூச்சுக்காத்து படக்குடாதங்கிறதால கண்ண மட்டும் விட்டிட்டு பட்டுத துணிய மொகத்துல கட்டிக்கிடுவாங்க "** [43]

என்று கூறி ஒக்கலிகர் குல தெய்வத்தின் கொடூர குணத்தையும் அதற்கு செய்யப்படும் சடங்குகளையும் காட்டுகிறார்.

முடிவுரை

எட்கர் தர்ஸ்டன் ஒக்கலிகரை (காப்பிலியர்கள்) என்று குறிப்பிட்டு பழங்குடிகளோடு ஒப்பிடுவதை முன்வைத்து வீரக்கண்ணன் இவர்கள் பழங்குடிகள் போல இருப்பதை காட்டுகிறார். சு வேணுகோபால் இவர்களை இவர்களது சடங்குகளை நுட்பாகப் பதிவுசெய்யும் தருவாயில் பழைய இசையோடு கூடிய வாழ்வியல் முறை சடங்குள் வழி பழங்குடி தன்மையோடு இருந்தவர் தற்காலத்தில் மாறிவருவதை பண்பாட்டுப்பதிவுகள் வழி காணமுடிகிறது.

பயன்பட்ட நூல்கள்

1. சேதுமாதவன் S., (2001) ஒக்கலிக வரலாறு, ஒக்கலிகர் காப்பு, மகாஜன சங்கம் வெளியீடு, மதுரை
2. திருஞான சம்பந்தம்,சா (2018) நம்பிஅகப்பொருள் கதிர்பதிப்பகம், திருவையாறு
3. புலவர் குழந்தை, (1968), தொல்காப்பியம் பொருளதிகாரம் வேலா பதிப்பகம், ஈரோடு, இந்தியா,
4. புலியூர்கேசிகன் (2010) பிறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை
5. வேணுகோபால் சு, (1997) நுண்வெளிக்கிரகணங்கள்,வேர்கள் பதிப்பகம், நெய்வேலி
6. https://tamilmanam.in

© 2026 முனைவர். தர்மலிங்கம் வை. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 300–305
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

கி.ரா.வின் ‘கதவு’ சிறுகதை புலப்படுத்தும் பண்பாடு

திருமதி .சுப்பம்மாள் பி*

தமிழ் ஆசிரியர், இந்தியன் பள்ளி அல் சீப், ஓமன்., *oman*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: திருமதி .சுப்பம்மாள் பி — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
3 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00075	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலை இயல்பான மொழிநடையிலும் நுண்ணிய சமூகப் பார்வையிலும் பதிவு செய்தவர் கி. ராஜநாராயணன் (கி.ரா.). அவருடைய ‘கதவு’ சிறுகதை, ஒரு பழைய வீட்டின் கதவை மையப்படுத்தி அமைகிறது. வறுமை, குடும்ப உறவு, குழந்தைகளின் விளையாட்டு, உழைப்பு, கிராமிய சமூக உறவுகள், வரிவசூல், பசி, இயற்கைச் சூழல், பொருளாதார நெருக்கடி, பொருள்களின் நினைவியல் மதிப்பு, உணவுப் பழக்கம், குழந்தைகளின் பொறுப்புணர்வு, கிராம நிர்வாக அமைப்பு, வரிவிதிப்பு, தாய்மை உணர்வு போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைப் இக்கதை பதிவு செய்கிறது.

இச்சிறுகதையில் ‘கதவு’ என்பது வெறும் வீட்டின் ஒரு பொருளாக அமையவில்லை. அது குழந்தைகளின் விளையாட்டுக் களமாகவும், குடும்பத்தின் அடையாளமாகவும், பாதுகாப்பின் குறியீடாகவும், இறுதியில் வறுமையின் கொடுமையை உணர்த்தும் பண்பாட்டுச் சின்னமாகவும் உருவெடுக்கிறது. கதவு சிறுகதையில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் உரையாடல்களின் அடிப்படையில் அதன் பண்பாட்டுப் பதிவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: கி.ரா – கதவு - கரிசல் பண்பாடு - நாட்டுப்புற வாழ்வியல்; குழந்தைகள் – பொறுப்புணர்வு – வறுமை – உழைப்பு - கிராமிய பண்பாடு – விளையாட்டு – கிராம நிர்வாக அமைப்பு – உணவுப் பழக்கம் – இயற்கைச் சூழல் – பொருளாதார வசதி – பாதுகாப்பின் குறியீடு - தாய்மை

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பி, தி. . (2026). கி.ரா.வின் ‘கதவு’ சிறுகதை புலப்படுத்தும் பண்பாடு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 299–304. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8499

முன்னுரை

ஒரு சமூகத்தின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு அதன் இலக்கியப் படைப்புகள் முக்கியமான ஆவணங்களாக அமைகின்றன. குறிப்பாக நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கை, பேச்சுமொழி, தொழில், உணவு, விளையாட்டு,

நம்பிக்கை, உறவுமுறை, பொருளாதார நிலை போன்றவை இலக்கியப் படைப்புகளில் இயல்பாகப் பதிவாகின்றன. கி.ரா.வின் படைப்புலகம் கரிசல் நில மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. அவருடைய 'கதவு' சிறுகதையும் அவ்வகையில் ஒரு கிராமிய குடும்பத்தின் வாழ்க்கைச் சூழலைச் சித்திரிக்கிறது. பழைய காலத்து காரை வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பெரிய கதவு, குழந்தைகளின் விளையாட்டுப் பொருளாக மாறுவதிலிருந்து, பின்னர் அந்தக் கதவு வீட்டிலிருந்து அகற்றப்படுவதால் ஏற்படும் பாதுகாப்பின்மை வரை கதை நகர்கிறது.

கதவு கதைக்கரு

வறுமையை தீர்க்க வடிக்கு கடன் வாங்கி, அதனை அடைக்க வெளியூர் வேலைக்கு சென்ற தந்தையிடம் எந்த தகவலுமில்லாமையால் 3 மாத கைக்குழந்தை மற்றும் ஒரு எட்டு வயது சிறுமி, அவளுக்கு இளையவன் என்று 3 பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு காட்டு வேலைக்குச் சென்று பசியாற்றுகிறாள் அவள் தாய். குழந்தைகள் அவ்வீட்டிக் கதவினை பேருந்தில் பயணம் செய்வதாக கற்பனை செய்து கொண்டு விளையாடுகின்றனர். ஊர் தலையாரிடமிருந்து வாங்கப்பட்ட கடனுக்காக கதவு தலையாரியால் தூக்கிச் செல்லப்படுகிறது. கதவற்ற சூழலில் வாடைக்காற்றினால் குழந்தை இறக்கிறது. உணவை நாய் உண்டு செல்கிறது. இதனை தாங்கிக்கொண்டு குழந்தைகளுக்காக தாய் உயிர் பிழைத்து வறுமையோடு போராடும் வாழ்வினை படம்பிடித்துக் காட்டுகிறது கதவு என்ற சிறுகதை தங்கள் வீட்டுக் கதவு சாவடியில் இருப்பதைக் கண்ட குழந்தைகள் அதனைப் பலமாக பற்றிக் கொள்வதாக கதை முடிகிறது.

கதவு – பண்பாட்டுச் சின்னமாக

சிறுகதையின் மையப் பொருளாக அமைவது 'கதவு'. "அது பழைய காலத்துக் காரை வீடு. பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது." இங்கு கதவு என்பது கட்டிடத்தின் ஒரு பகுதி மட்டுமல்ல. அந்தக் குடும்பத்தின் பழைய சமூக-பொருளாதார நிலைக்கும் அடையாளமாக அமைகிறது. ஒரு காலத்தில் வசதியுடன் வாழ்ந்த குடும்பம் பின்னர் வறுமைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே கதவு, கடந்த கால வளத்தையும் நிகழ்கால வறுமையையும் இணைக்கும் நினைவுச் சின்னமாகக் காணப்படுகிறது. மேலும், கதவு குழந்தைகளின் விளையாட்டுத் தளமாக மாறுகிறது. குழந்தைகள் கதவில் ஏறி, அதைப் பின்னும் முன்னுமாக ஆட்டி மகிழ்கின்றனர். இதன் மூலம் கிராமிய குழந்தைகளின் விளையாட்டு உலகில் விலையுயர்ந்த விளையாட்டுப் பொருட்களுக்கு மாற்றாகச் சுற்றுப்புறப் பொருட்களே விளையாட்டுக் கருவிகளாக மாறியிருப்பது புலப்படுகிறது.

குழந்தைகளின் விளையாட்டுப் பண்பாடு

'கதவு' சிறுகதையின் முக்கியமான பண்பாட்டுப் பதிவு குழந்தைகளின் விளையாட்டு ஆகும். சீனிவாசன் கதவைப் பேருந்தாகக் கற்பனை செய்து குழந்தைகளுக்கு 'டிக்கெட்' வழங்குகிறான்: "எல்லோரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க" குழந்தைகள், "திருநெல்வேலிக்கு" என்று கூறி, பின்னர் "திருநெவேலிக்கு, திருநெவேலிக்கு" (கதவு பக்.9) என்று கூச்சலிடுகின்றனர். இங்கு கற்பனை விளையாட்டு, பயண அனுபவம், குழுவாகச் செயல்படுதல் ஆகியவை இணைகின்றன. கதவு ஒரு பேருந்தாகவும், குழந்தைகள் பயணிகளாகவும், சீனிவாசன் நடத்துநராகவும் கற்பனை செய்யப்படுகின்றனர். இதன் மூலம் கிராமியக் குழந்தைகளின் கற்பனை ஆற்றல், கூட்டாக விளையாடும் பண்பு, சுற்றுச்சூழலை விளையாட்டாக மாற்றிக் கொள்ளும் திறன் ஆகியவை வெளிப்படுகின்றன.

உடன்பிறப்புப் பாசமும் குடும்ப உறவும்

லட்சுமி–சீனிவாசன் உறவு சிறுகதையின் மற்றொரு முக்கியமான பண்பாட்டுக் கூறாகும். லட்சுமி கண்டெடுத்த தீப்பெட்டிப் படத்தை முதலில் தம்பியிடம் கொடுக்க மறுக்கிறாள். பின்னர் இருவரும் சேர்ந்து அதைக் கதவில் ஒட்டுகின்றனர். “இரண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோஷத்தினால் கைதட்டிக்கொண்டு குதித்தார்கள்.” (கதவு, பக்.11) இதில் உடன்பிறப்புகளுக்கிடையிலான பகிர்வு, விளையாட்டு, பொருளின் மீதான மகிழ்ச்சி ஆகியவை வெளிப்படுகின்றன. மேலும், தாயார் காட்டுக்குச் செல்லும் சூழலில் மூத்த குழந்தைகள் கைக்குழந்தையைப் பார்த்துக்கொள்கின்றனர்: “லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும்வரை வைத்துக்கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.” (கதவு, பக்.10) இதன் வழியாக வறுமைச் சூழலில் குழந்தைகள் குடும்பப் பொறுப்பிலும் பங்கெடுக்கும் நிலை வெளிப்படுகிறது.

உழைப்புப் பண்பாடு

சிறுகதை வெளிப்படுத்தும் முக்கியமான சமூகப் பண்பாடு உழைப்பு ஆகும். கதையில் தாய் காட்டுக்கு வேலைக்குச் செல்கிறாள்; தந்தை மணிமுத்தாற்றில் கூலி வேலைக்குச் செல்கிறார். “அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள். அப்பா மணிமுத்தாறில் கூலிவேலை செய்யப் போய்விட்டார்.” (கதவு, பக்.10) இதன் மூலம் கிராமியக் குடும்பத்தின் வாழ்வாதாரம் கூலி உழைப்பைச் சார்ந்திருப்பது தெரியவருகிறது. பின்னர் தாய் காட்டிலிருந்து விறகுச் சுள்ளிகளைச் சுமந்து வருகிறாள்: “சாயந்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளிகளுடன் வந்தாள்.” இக்காட்சி பெண்களின் உழைப்பையும் குடும்பப் பராமரிப்பில் அவர்களுக்குள்ள முக்கியப் பங்கையும் காட்டுகிறது.

வறுமையும் கிராமியப் பொருளாதாரமும்

சிறுகதையின் அடிப்படைப் பின்னணியாக வறுமை அமைந்துள்ளது. “முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய்விட்டார்கள்.”(கதவு, பக்.10) இக்கூற்று குடும்பத்தின் பொருளாதார வீழ்ச்சியை நேரடியாக வெளிப்படுத்துகிறது. மேலும், மழையின்மை விவசாயம் மற்றும் கிராமிய வாழ்வாதாரத்தைப் பாதித்திருப்பதை தாய் கூறுகிறாள்: “மூணு வருசமா மழை தண்ணி இல்லையே.” (கதவு, பக்.12) மழையின்மை, வேலைவாய்ப்புக் குறைவு, வறுமை, வரி செலுத்த இயலாமை என்ற சமூகப் பொருளாதாரத் தொடர்பு இச்சிறுகதையில் பதிவாகிறது.

உணவுப் பண்பாடு

கதையில் உணவுப் பண்பாடும் வறுமையோடு இணைந்து வெளிப்படுகிறது. குழந்தைகள் ‘கம்மஞ்சோறு’ கேட்கின்றனர். “டேய் உள்ளே போய்க் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா, இந்தப் படத்தை நம்ம கதவிலே ஒட்டணும்.” (கதவு,பக்.11) பின்னர் வீட்டில் உணவுக்குக் கூட பற்றாக்குறை ஏற்படுகிறது. சீனிவாசன் பசியுடன் வந்து, “அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சியூத்து, பசிக்கி” (கதவு, பக்.14) என்று கேட்கிறான். ஆனால் வீட்டில் கஞ்சி இல்லை. இவ்வாறு கம்மஞ்சோறு, கஞ்சி போன்ற உணவுகள் வழியாக கிராமிய மக்களின் உணவுப் பழக்கமும் பொருளாதார நிலையும் ஒருங்கே பதிவு செய்யப்படுகின்றன.

மழை, வறட்சி, இயற்கைச் சூழல்

கிராமிய வாழ்வின் பொருளாதாரம் இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையது. மூன்று ஆண்டுகளாக மழையில்லாத நிலை குடும்பத்தின் வறுமைக்கு முக்கியக் காரணமாகச் சுட்டப்படுகிறது. பின்னர் கதவு இல்லாத வீட்டுக்குள் குளிர்காற்று புகும் காட்சி வருகிறது: “கார்த்திகை மாசத்து வாடை, விஷக்காற்றைப் போல் வீட்டினுள் வந்து அலைமோதிக் கொண்டே இருந்தது.” (கதவு, பக்.14) இயற்கைச் சூழலின் கடுமை ஏழைக் குடும்பத்தின் வாழ்வை எவ்வாறு நேரடியாகப் பாதிக்கிறது என்பதை இக்காட்சி உணர்த்துகிறது.

வரி மற்றும் கிராமிய நிர்வாக அமைப்பு

சிறுகதையில் ‘தலையாரி’ என்ற கிராமிய நிர்வாகப் பாத்திரம் இடம்பெறுகிறது. அவன் வரிப் பாக்கியை வசூலிக்க வருகிறான். “வந்தா, தீர்வையைக் கொண்டு வந்து போடச்சொல்லு.” (கதவு, பக்.12) தாய் பொருளாதார நெருக்கடியை எடுத்துக் கூறினாலும், வரி செலுத்த வேண்டிய கட்டாயம் தொடர்கிறது: “நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்?” (கதவு, பக்.12) இதன் மூலம் கிராமிய மக்களின் வாழ்க்கையில் நிர்வாக அமைப்பும் பொருளாதாரச் சுமையும் எவ்வாறு செயல்பட்டன என்பதற்கான ஒரு பண்பாட்டுச் சான்று கிடைக்கிறது.

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளின் தாக்கம்

கதவைத் தூக்கிச் செல்லும் நிகழ்வை குழந்தைகள் ஒரு ஊர்வலமாகக் கற்பனை செய்கின்றனர். ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பதைப் போலவும் மற்றொருவன் தவுள் வாசிப்பதைப் போலவும் பாவனை செய்கிறான். “ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப் போல் கைகளை வைத்துக்கொண்டு ‘பீப்பீ... பீ...பீ...’ என்று சத்தம் காட்டி...” அதேபோல், “திடும்... திடும்.. ததிக்குண... ததிக்குண” (கதவு, பக்.12-13) என்று தவுள் இசையைப் பின்பற்றுகின்றனர். இதில் கிராமிய ஊர்வலம், நாதஸ்வரம், தவுள் போன்ற நிகழ்த்துக் கலைப் பண்பாடுகள் குழந்தைகளின் கற்பனை விளையாட்டிலும் இடம்பெறுகின்றன.

பேச்சுமொழிப் பண்பாடு

கி.ரா.வின் படைப்புகளின் தனிச்சிறப்புகளில் ஒன்று வட்டாரப் பேச்சுமொழியைப் பயன்படுத்துவதாகும். ‘கதவு’ சிறுகதையிலும் உரையாடல்கள் இயல்பான கிராமியப் பேச்சு வழக்கில் அமைகின்றன.

எடுத்துக்காட்டாக, “டேய் உங்க ஐயா எங்கே?” “ஊருக்குப் போயிருக்காக.” “உங்க அம்மா?” “காட்டுக்குப் போயிருக்காக.” அதேபோல், “மூணு வருசமா மழை தண்ணி இல்லையே.” (கதவு, பக்.12) என்ற பேச்சுவழக்கு சொற்றொடர்கள் கிராமிய மக்களின் மொழியுணர்வையும் வட்டார மொழிப் பண்பையும் பதிவு செய்கின்றன.

வீட்டின் பாதுகாப்பும் கதவின் பண்பாட்டு முக்கியத்துவமும்

கதவு அகற்றப்பட்ட பிறகு வீட்டின் நிலை முற்றிலும் மாறுகிறது. “கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனம் இல்லாமல் இருந்தது.” (கதவு, பக்.14) இவ்வரி கதவின் பயன்பாட்டைத் தாண்டி அதன் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் உணர்த்துகிறது. கதவு என்பது வீட்டின் எல்லையையும் பாதுகாப்பையும் குறிக்கும். கதவு இல்லாததால் குளிர் வீட்டுக்குள் புகுகிறது; கைக்குழந்தையின் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. இறுதியில் அந்தக் குழந்தையும் உயிரிழக்கிறது. இதன் மூலம் ஒரு சாதாரண வீட்டுப் பொருள் குடும்பத்தின் வாழ்வில் எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார்.

பொருள்களோடு மனிதர்களுக்குள்ள உணர்வுப் பிணைப்பு

கதையின் இறுதியில் லட்சுமியும் சீனிவாசனும் தங்கள் பழைய கதவை மீண்டும் கண்டுபிடிக்கின்றனர். கதவு கிராமச் சாவடிக்குப் பின்னால் சாத்தப்பட்டிருக்கிறது. "உண்மைதான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது." (கதவு, பக்.15) குழந்தைகள் கதவைத் தொட்டு, தடவி, அதில் இருந்த மண்ணைத் துடைக்கின்றனர்."அருகில் போய் அதைத் தொட்டார்கள். தடவினார்கள்." (கதவு, பக்.15) லட்சுமி கதவோடு முகத்தை ஒட்டிக் கொள்கிறாள்: "கதவோடு தன் முகத்தை ஒட்டவைத்துக் கொண்டாள்." இறுதியில், "அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றியிருந்தன." (கதவு, பக்.15) என்று கதை முடிகிறது. இக்காட்சி கதவின் மீதான குழந்தைகளின் பாசத்தை மட்டும் காட்டுவதில்லை. அவர்களுடைய வீடு, குழந்தைப் பருவம், குடும்ப நினைவுகள், பாதுகாப்பு, கடந்த கால வாழ்க்கை ஆகிய அனைத்தும் அந்தக் கதவுடன் பிணைந்திருப்பதை உணர்த்துகிறது.

கதவு – நினைவின் பண்பாட்டு ஆவணம்

கதையில் கதவின் மீது ஏற்கெனவே ஒரு பழைய படம் ஒட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. "ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம்." (கதவு, பக்.12) இது கதவுக்கு தலைமுறைத் தொடர்ச்சியைக் கொடுக்கிறது. ஒரு தலைமுறையின் குழந்தைப் பருவம் அந்தக் கதவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது; அடுத்த தலைமுறையும் அதே கதவைத் தன் விளையாட்டிற்கும் நினைவுகளுக்கும் பயன்படுத்துகிறது. எனவே கதவு தலைமுறைகளை இணைக்கும் பண்பாட்டு நினைவுப் பொருள் என்ற நிலையைப் பெறுகிறது.

சமூக உறவும் அண்டை வீட்டுப் பண்பாடும்

கதவாட்டத்தில் பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் கலந்து கொள்கின்றனர்.

"பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்." (கதவு, பக்.9) இதன் மூலம் கிராமிய வாழ்வில் அண்டை வீட்டுக் குழந்தைகளுக்கிடையிலான நெருக்கமும் கூட்டாக விளையாடும் பண்பும் வெளிப்படுகின்றன. கதவு அகற்றப்பட்டபோது குழந்தைகள் மீண்டும் குடும்பத்தினருடன் வந்து நிற்பதும், லட்சுமி அழும்போது அமைதியாக அவளருகில் அமர்வதும் சமூகப் பரிவை வெளிப்படுத்துகின்றன.

பெண்ணின் வாழ்வியல்

ரங்கம்மாளின் பாத்திரம் கிராமியப் பெண்ணின் பல்வேறு பொறுப்புகளை வெளிப்படுத்துகிறது. அவள் காட்டுக்குச் சென்று வேலை செய்கிறாள்; விறகு சேகரிக்கிறாள்; குழந்தைகளைப் பராமரிக்கிறாள்; கணவன் இல்லாத சூழலிலும் குடும்பத்தைத் தாங்குகிறாள். விறகு சேகரிக்கும்போது தேள் கொட்டியிருந்தும், குழந்தைகளுக்காக வீட்டிற்கு வருகிறாள். இதன் மூலம் கிராமியப் பெண்ணின் உழைப்பு, குடும்பப் பொறுப்பு, தாய்மை, தியாகம் ஆகிய பண்பாட்டுக் கூறுகள் பதிவாகின்றன.

குழந்தைகளின் உலகமும் வறுமையின் தாக்கமும்

சிறுகதையின் தொடக்கத்தில் கதவு குழந்தைகளுக்கு மகிழ்ச்சியின் உலகமாக உள்ளது. ஆனால் கதவு அகற்றப்பட்டதும் அதே குழந்தைகளின் வாழ்க்கை துயரமாக மாறுகிறது. முன்பு: "மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது!" (கதவு, பக்.9) என்று மகிழ்ச்சி நிறைந்த காட்சி வருகிறது. பின்னர் கதவு இல்லாமல்: "சீனிவாசன்... ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்." (கதவு, பக்.15) என்று

துயரமான நிலை உருவாகிறது. இவ்வாறு ஒரே கதவு குழந்தைகளின் மகிழ்ச்சி–துயரம், விளையாட்டு–வறுமை, பாதுகாப்பு–பாதுகாப்பின்மை ஆகிய இரு எதிர்நிலைகளையும் இணைக்கும் மையச் சின்னமாக அமைகிறது.

முடிவுரை

கி.ரா.வின் 'கதவு' சிறுகதை ஒரு குடும்பத்தின் கதையை மட்டும் கூறுவதில்லை; அதன் வழியாக ஒரு கிராமிய சமூகத்தின் பல அடுக்குப் பண்பாட்டை ஆவணப்படுத்துகிறது. கதவு என்ற எளிய பொருளை மையமாகக் கொண்டு குழந்தைகளின் விளையாட்டு, உடன்பிறப்புப் பாசம், தாயின் உழைப்பு, கூலி வாழ்க்கை, வறுமை, உணவுப் பழக்கம், மழையின்மை, வரிவசூல், வட்டார மொழி, நாட்டுப்புறக் கலைப் பாவனை, அண்டை உறவு, வீட்டின் பாதுகாப்பு, பொருள்களோடு மனிதர்களுக்குள்ள நினைவுப் பிணைப்பு ஆகியவை சிறுகதையில் பதிவாகியுள்ளன.

குறிப்பாக, "கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனம் இல்லாமல் இருந்தது" என்ற வரி கதவின் பொருள்சார் பயன்பாட்டைத் தாண்டி, அது ஒரு குடும்பத்தின் வாழ்வியல் பாதுகாப்பையும் சமூக அடையாளத்தையும் தாங்கும் பொருளாக இருந்ததை உணர்த்துகிறது.

இறுதியில் குழந்தைகள் தங்கள் பழைய கதவை மீண்டும் கண்டுபிடித்து அதனைத் தொட்டு, தடவி, முகத்தை ஒட்டி, கைகளால் இறுகப் பற்றிக் கொள்வது, மனிதன் வாழும் இடம், பொருள், நினைவு, உறவு ஆகியவற்றுக்கிடையிலான ஆழமான பண்பாட்டுத் தொடர்பை வெளிப்படுத்துகிறது. எனவே, 'கதவு' சிறுகதை கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் ஒரு முக்கியமான பண்பாட்டு ஆவணமாகக் கருதத்தக்கது. கதவு இக்கதையில் ஒரு வீட்டின் நுழைவாயில் மட்டுமல்ல; ஒரு குடும்பத்தின் கடந்தகால நினைவுகளையும் நிகழ்கால வறுமையையும் எதிர்கால நம்பிக்கையையும் இணைக்கும் பண்பாட்டுச் சின்னமாக விளங்குகிறது.

துணை நின்ற நூல்கள்

1. வே.எவரெஸ்ட் மேரி, "கி.ராஜநாராயணனின் கதவு தந்த கனவு" புதிய அவையம், தொகுதி -7, வெளியீடு -2, சூன்.2023

2. வீ.ப.ஜெயசீலன் (தொ.ஆ), கி.ரா.வின் முத்து கதைகள் பத்து, கரிசல் இலக்கியக் கழகம் வெளியீடு, செப்.2024

© 2026 திருமதி .சுப்பம்மாள் பி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 306–310
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

பூமணியின் வெக்கை: ஓர் சமூகவியல் ஆய்வு

முனைவர் .பால்பாண்டி பெ*

கௌரவ விரிவுரையாளர், சமூகவியல் துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில், *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் .பால்பாண்டி பெ — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
2 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00074

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியத்தில் சமூக வாழ்வையும் சமூக முரண்பாட்டைமயும் பதிவு செய்யும் படைப்புகளுள் பூமணியின் வெக்கை நாவல் குறிப்பிடத்தக்கது. கரிசல் நில மக்களின் வாழ்வியல், நிலவுடைமைச் சமூக அமைப்பு, சாதிய முரண்பாடு, வன்முறையின் தோற்றுவாய், அரசு நிறுவனங்களின் செயல்பாடு, குடும்ப அமைப்பு, பாச உணர்வு, பெண்களின் பாத்திரம் போன்ற பல்வேறு அரசியல் சமூகக்கூறுகளை இந்நாவல் வெளிப்படுத்துகிறது. தனிமனிதச் செயலுக்கும் சமூகச் சூழலுக்கும் இடையிலான உறவை ஆய்வு பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. பூமணியின் கருத்தியல் நிலைப்பாடு நிலவுடைமை சாதிய சமூகத்தை காப்பதாக இருக்கிறது. இக்கட்டுரை மார்க்சிய சமூகவியல் அணுகுமுறையின் அடிப்படையில் ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: வெக்கை – பூமணி – இலக்கிய சமூகவியல் – மார்க்சியம் – நிலவுடைமை – சாதிய முரண்பாடு – கூட்டுமனம் – அரசு நிறுவனங்கள் –அரசு இயந்திரம் - கரிசல் வாழ்வியல்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பெ, மு. . (2026). பூமணியின் வெக்கை: ஓர் சமூகவியல் ஆய்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 305–309. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8501

முன்னுரை

சமூகத்தை தனது படைப்புக்கான ஆதாரமாகக் கொண்டிருக்கும் இலக்கியத்திற்கும் அச்சமூகத்தையே முதன்மையாக எடுத்துக்கொண்டு ஆராயும் சமூகவியலுக்கும் நெருக்கமான உறவு உண்டு. அதனால் தான் இலக்கிய சமூகவியல் என்ற கிளை பிற்பாடு உருவானது. இதில் முதன்மையானவராக கருதப்படுபவர் கைலாசபதி, கார்த்திகேசு சிவதம்பி நா.வானமாமலை ஆகியோரும் அடங்குவர். பூமணியின் வெக்கை நாவல் எந்த சமூக உற்பத்திமுறையின் கருத்தியலை (Ideology) பிரதிபலிக்கிறது. படைப்பாளனின் உணர்வு நிலையும் கருத்துநிலையும் பற்றி மார்க்சிய சமூகவியல் அடிப்படையில் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

நாவலின் மையம்

அண்ணண் கொலையுண்டதற்கு எதிர்வினையாக பதினைந்தே வயதுடைய சிறுவன் சட்ட மொழியில் கூறுவோமானால் குழந்தை சிதம்பரம் வடக்கூரான் என்னும் எதிரியை கையை வெட்ட நினைத்து குறி தவறி மார்பில் வெட்டுப்பட்டு இறந்து போகிறான். அதனைத் தொடர்ந்து ஒரு வார காலமாக தன் தந்தையுடன் காட்டிலும் மேட்டிலும் தலைமறைவாக இருந்து, பின்பு நீதிமன்றத்தில் சரணடைவது தான் கதையின் சாரமாக இருக்கிறது. கையில்லாமல் வாழ்நாள் வேதனையை கொடுக்க எண்ணி கையை மட்டும் வெட்ட நினைக்கிறான், அப்படி வெட்டயிலிருந்தால் அவனுக்கான தண்டனையாக இருந்திருக்கும். அது ஒருவனுக்கு கொடுக்கக்கூடிய உச்சபட்ச தண்டனையும் கூட, மாறாக அவன் இறக்க நேரிட்டதால் மற்றவருக்கு எச்சரிக்கையாக மாறிவிட்டது என்பது தண்டனையின் தன்மையாகும். கதை எளிமை இருந்தாலும் அதன் விவரிப்புகள் அபாரமானவை, அப்படிப்பட்ட எழுத்துக்கு சொந்தக்காராக இருக்கிறார் பூமணி.

கரிசல் நிலக்காட்சி

சிறுவன் சிதம்பரத்தின் பார்வையிலும் நினைவுகளிலும் முழுக்கதையும் செல்கிறது. கரிசல் நிலத்தின் விவசாய முறை, கிணறு, கண்மாய், கமலைநீர்ப்பானம், பறந்தோடும் விதவிதமான குருவிகள், மலைச்சுனை, மலைகளில் சவாலாக உணவு சமைத்தல், உணவு சேகரித்தலில் பல்வேறு காட்டுப் பழங்கள், பனைமரம், நாணல் புதர், மாடசாமிக்கு பன்றிகுத்தல் சடங்கு, கிடா வெட்டுதல், பல்வகைத் தின்பண்டங்கள், வரப்பு வாய்க்கால்கள் ஆகியவற்றை மகனும் அப்பாவும் மிக நெருக்கமாக அந்த காட்டிற்கு நம்மளையும் கூட்டிச் செல்கிறார்கள். அந்த நிலம் பற்றியான தொன்மையான அறிவு நாவல் முழுவதிலும் கொட்டி குவித்துவிட்டு செல்கிறார் ஆசிரியர்.

கூட்டுமனமும் கொலையும்

15 வயதுடைய சிதம்பரம் கொலை செய்யும் அளவுக்கு எது தூண்டுதலாக இருந்துருக்கும், தன் அண்ணன் வடக்கூரனால் கொலை செய்யப்பட்டது உறுதியானதால் தன் குடும்பத்தினரான அப்பா, அம்மா, மாமா, அத்தை, சின்னையா, சின்னம்மா அனைவரும் கொலைப்பலி கொடுக்க காத்துக் கொண்டிருந்தனர், சொல்லப்போனால் அந்த பகுதி மக்களின் எண்ணமும் அதுவாகவே இருந்திருக்கிறது. இதுபோல ஒரே மாதிரியான எண்ணமே கூட்டுமனம் (collective consciousness) என்கிறார் சமூகவியல் அறிஞர் எமில் டர்க்ஹம். இந்த கூட்டுமனம் சமூக விழுமியங்களால் கட்டமைக்கப்படுகிறது. கூட்டுமனம் வலுவாக உள்ள உயிரினங்களின் முதன்மையானவை தேனீக்கள் ஆகும், அவை எதிரிகளிடமிருந்து தன் கூட்டைக் காக்க தன் உயிரை கொடுத்து போராடுவது கூட்டுமனச் செயல்பாடே, இது தேனீக்களுக்கு இயல்பூக்கமாக இருக்கிறது. அதேபோல் பழங்குடினரும் தன் இனத்தைக் காக்க உயிரை கொடுக்கக்கூட தயங்கமாட்டார்கள் என்பது அச்சமூகத்தின் சமூகவயப்பட்ட கூட்டுமனம் ஆகும். பொதுவாக கூட்டுமனம் என்பது சமூகவயப்பட்டதாகவே இருக்கும், இந்த கூட்டுமனம் தான் சிதம்பரத்தை கொலை செய்யவும் தூண்டியிருக்கிறது. இந்த கொலை கூட்டுமனச் செயல்பாடு என்பதால்தான் இழிவைத் தராமல் புகழைத் தந்திருக்கிறது.

பழிக்குப்பழி – எதிர்வினை

இந்நாவல் பழிக்குபழி அடிப்படையாகக் கொண்டது என்ற வாதம் உண்டு, பழிக்குபழி என்ற சொல் வன்மமும் காட்டுமிராண்டித்தனமும் நிறைந்த சொல் போல தோற்றத்தை அளிக்கிறது. இந்த கொலை பழிக்குப்பழி அல்ல ஒரு கொலைக்கான

எதிர்வினை. எதிர்வினை எனபது இயற்கையானது, அறிவியல் பூர்வமானது, அது தவிர்க்கவியலாது. ஆக எதிரி வடக்கூரானின் கொலை சிதம்பரம் குடும்பத்தின் எதிர்வினையாகவும், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்வினையாகவும் இருக்கிறது. நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை எதிரியே தீர்மானிக்கிறான் எனபது தொல் மார்க்ஸிய சொல்லிற்கிணங்க சிதம்பரம் கொலை செய்தது தவிர்க்க முடியாதாயிற்று.

.

நிலவுடைமையும் சாதியும்

நிலவுடைமை உற்பத்தி முறை கொண்ட சமூக அமைப்பில் உள்ள முரண்கள் வர்க்க அடிப்படையிலானவையா (நிலவுடமையாளரும் விவசாயிகளும்) அல்லது சாதிய படிநிலை (ஆதிக்க சாதிகளும் ஒடுக்கப்பட்ட சாதிகளும்) அமைப்பு கொண்ட சமூகமா என்ற கேள்விகளுக்கான பதிலை எங்கும் நேரடியாக கூறவே இல்லை. இது சாதிய மோதலா அல்லது வர்க்க மோதலா எங்கும் தெளிவு காண முடியாத அளவிற்கு பந்த பாசத்தால் பிணைத்து இருப்பார் ஆசிரியர். ஆனாலும் நாம் யூகிக்க இடமுண்டு, நிலவுடைமைச் சமூகத்தை பொறுத்தவரை முக்கிய முரண்குழுக்கள் நிலவுடமையாளரும் விவசாயிகளும் அல்லது கூலிகளும் ஆகும். இந்தியாவைப் பொறுத்தவரை நிலவுடைமையாளர்கள் ஆதிக்க சாதியாகவும் விவசாயிகள், கூலிகள் ஒடுக்கப்பட்ட சாதிகளாகவும் இருக்கின்றனர் என்பது ஏதார்த்தமானவை. எனவே இக்கதையில் முக்கிய முரணாக இருப்பது சாதிய முரண்பாடகளே. நிலப்பிரச்சனையாக இருந்தாலும் அது சாதியை அடிப்படையாக கொண்டே இருக்கிறது. சிதம்பரத்தின் குடியிருப்பு பகுதி வடக்கூரான் கொலையுண்ட பிறகு ஊரே ஆயுதங்களுடன் விழிப்புடன் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் ஒற்றுமை ஒடுக்கப்பட்டோரின் சாதிய ஒற்றுமையாகவே இருக்கிறது. ஆகையால் இக்கதைக்களம் சாதிய பிரச்சினையினை அடிப்படையாக கொண்டதாகத் தான் எடுத்துக்கொள்ள முடியும். ஆக இந்தியாவை பொறுத்தவரை நிலவுடைமை சமூகம் என்பது சாதிய படிநிலை கொண்ட சமூக அமைப்பாகும்.

ஒடுக்கும் அரசு இயந்திரம்

அரசு நிறுவனங்களான நீதித்துறை, காவல் நிலையம், சிறைச்சாலை ஆகியவை சாமானியர்களுக்கு எதிராகவும் நில உடமையாளருக்கு ஆதரவாக இருக்கிறது என்ற பார்வையை சிதம்பரத்தின் ஐயாவின் புலம்பல் வாயிலாக வெளிப்படுத்துகிறார். அரசு என்பது ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கும் இயந்திரம் என்கிறார் பிரெஞ்சு மார்க்சிய சிந்தனையாளர் அல்தூசர். அரசு இரண்டு வழிகளில் ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவாக செயல்படும் 1. ஒடுக்குமுறை அரசு இயந்திரம் (Repressive State apparatus). நீதித்துறை, காவல்துறை, ராணுவம், சிறைச்சாலை ஆகியவற்றை கொண்டு நேரடியாக தாக்கம் செலுத்தும். 2. கருத்தியல் அரசு இயந்திரம் (ideological state Apparatus) கல்வி, மத நிறுவனங்கள் குடும்பம், ஊடகம், கதை, நாவல் ஆகியவற்றைக் கொண்டு கருத்தியல் ரீதியாக தாக்கம் செலுத்தும். இந்நாவல் அரசு நிறுவனங்கள் ஆளும் வர்க்கமான நிலவுடமையாளர், சாதிய நலன்களையே முதன்மையானதாகவே பாதுகாக்கிறது என்பதை அப்பா கதாபாத்திரத்தின் வழியே உணர்த்துகிறார் ஆசிரியர். கதைக்களம் புரட்சிகரமான சூழலை வாய்ப்பாக வழங்கினாலும் அரசை விமர்சனத்தோடு அணுகினாலும் கடைசியில் ஆசிரியர் பாசநயங்களின் கைதியாகிறார்.

பெண்களின் இருப்பு

பெண்களைப் பற்றி மிக சொற்ப இடங்களே கொடுத்து உள்ளார். சிதம்பரத்தின் அம்மா அத்தை தங்கை சின்னம்மா ஆகியோர் மட்டும் வருகிறார்கள், அவர்களும் அன்பை வாரிப் பொழிபவர்களாகவும், தேவையான நேரத்திற்கு உணவை கொடுக்கக் கூடியவர்களாகவும் காட்டப்பட்டுள்ளன்ா. ஆண்கள் சாதியை காப்பவராகவும், மத சடங்குகளை நடத்துபவராகவும், கிடாய் வெட்டுதல், சாமியாடுபவர், சாராயம், பீடிகுடித்தல் என அனைத்தும் ஆண்களாகவே இருக்கிறார்கள். பெண்களுக்கான இடம் சமூகத்திலும் நாவலிலும் எங்கும் காணக் கிடைக்கவில்லை. 'பதினஞ்சு வயசாகல நீ எங்களப் பொட்டப் பெயலாக்கீட்ட. மூஞ்சியிலகூட முழிக்காம தலைய ஒட்டீட்டுப் போறாரு ஓங்கய்யா'(ப.20), சிதம்பரம் கொலை செய்ததால் அது அவங்க அப்பாவையும் மாமாவையும் அவமானம் அடைந்ததாக அடிக்கடி புலம்பிக் கொள்கிறார்கள்.. கொலை செய்வது கூட வயது வந்து ஆணுக்கு உரியதாக இருக்கிறது. ஒருவேளை பெண்கள் யாரவது வடக்கூரானை கொலை செய்திருந்தால் இந்த ஆம்பளையெல்லாம் தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள்போல. ஆசிரியர் ஆண்கள் நலனிற்காக ஆண்களே மோதிக்கொள்ளும் ஆணாதிக்க சமூகமாகக் கட்டமைத்துள்ளார்.

பூமணியின் கருத்தியல்

பூமணி என்ன மாதிரியான கருத்துநிலை உடையவர் என்பதை இந்நாவலின் உதவி கொண்டு முயற்சிப்போம். நிலவுடைமை சமூகத்தில் சிறிய நிலத்துண்டு இருந்தாலும் அதை நிலவுடமையாளன் கைப்பற்றத்தான் நினைப்பான். அவன் அதற்காக கொலை செய்யும் அளவுக்கு சென்று சிதம்பரத்தின் அண்ணணையை கொலை செய்யவும் செய்கிறான். பிற்பாடு பழிக்குப்பழி வாங்கிய பின்பு அரசு நிறுவனமான காவல் நிலையம், நீதிமன்றம், சிறை ஆகியவை ஆளும் வர்க்கமான நிலவுடைமையாருக்கு சாதகமாகத்தான் செயல்படும் என்பதை பாதிப்படுவோரின் பக்கம் நின்று பேசுகிறார்.. அழித்தொழிப்பு என்பது இடதுசாரி சிந்தனையின் ஒரு பகுதி, இந்தியாவில் தமிழ்நாடு உட்பட நிலவுடமையாருக்கு எதிராக பல இடங்களில் சாதிய ஒடுக்குமுறைகள், தொழிலாளர் சுரண்டலுக்கு எதிராகவும் அழித்தொழிப்பு நடைபெற்று இருக்கிறது. அதை இக்கதையில் மையமாக வைத்துள்ளார். இந்நாவலின் உழைக்கும் வர்க்கத்திற்கு இழைத்த அநீதி கொலை அதற்கு பதிலாக உழைக்கும் வர்க்கம் எதிரியை அழித்தொழிப்பு, சமத்துவ வாழ்வு என்ற வகையில் இல்லாமல் முழுக்க பாசத்தில் கிடைத்துவிடுகிறார். நாவலின் இறுதி பகுதியில் இந்த சமூகத்தையும் அரசு நிறுவனங்களையும் விமர்சித்து விட்டு தன் ஆடுகள் அனைத்தும் வித்துவிட்டு அந்த பணத்தை கொண்டு அந்த அரசு நிறுவனத்திடமே சரணடைய செய்கிறார். சமூக மாற்றம், ,விடுதலை, சாதி ஒழிப்பு குறித்தெல்லாம் பேசாமல் கொலைக்கு பின்பாக அவர்கள் படும் இன்னல்களை கதைக் களமாகக் காட்டிள்ளார் என்பதில் இருந்து ஆசிரியரின் கருத்தியல் சார்புநிலை நிலவுடைமை பாதுகாப்பதில் நிலைத்துவிடுகிறது.

உழைக்கும் வர்க்கம் அல்லது ஒடுக்கப்பட்ட சாதிகள் எதிர்வினையாக கொலை செய்தால் காட்டிலும் மேட்டிலும் திரிய வேண்டியிருக்கும். நீங்கள் வாழ்நாள் முழுவதும் சம்பாதித்த சொத்தை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கிறார். இக்கொலை இச்சமூகத்தில் என்ன மாதிரி அதிர்வை உண்டாக்கிருக்கும் என்பதை மறைத்து சதாகாலமும் ஆதிக்க சாதினர் அச்சுறுத்தலுக்கும், அழிப்புக்கும் உள்ளாகிக்கொண்டே சாதாரணமாக நடைபெறும் குடும்பம், பாசத்தை பிரதானப் படுத்துகிறார்.

முடிவுரை

இறுதியாக, திரும்பவும் அல்தூசரிடமே வருவோம், ஆளும் சாதிகளின் நலனை பாதுகாக்க அரசு இயந்திரம் இரண்டு வழிகளில் செயல்படும் என்பதை பார்த்தோம். கருத்தியல் தளத்தில் ஆதிக்க கருத்தியலை நிலைநிறுத்த முக்கிய கருவியாக இலக்கியம் செயல்படுகிறது. வெக்கை எனும் நாவல் நிலவுடைமை சமூக அமைப்பை அதாவது சாதிய அமைப்பை பாதுகாக்கவே செய்கிறது.

துணைநூற்பட்டியல்

1. பூமணி , வெக்கை, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில், 2019.

2. ராஜ்கொதமன், எண்பதுகளில் தமிழ் கலாச்சாரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018

3 கார்த்திகேசு சிவத்தம்பி, இலக்கியமும் கருத்துநிலையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2011.

4. கைலாசபதி.க , சமூகவியலும் இலக்கியமும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 2002.

5. தனஞ்செயன். ஆ, இலக்கியச் சமூகவியல் கைலாசபதியின் அறிமுகமும் விமர்சனமும், உங்கள் நூலகம், செப்டம்பர் 2026, மலர்19 இதழ் 6.

6. Doshi S.L, Modernity, Post Modernity and Neo sociogical theories, Rawat publication, New Delhi, 2006

© 2026 முனைவர் .பால்பாண்டி பெ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 311–343
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சாதி ஆணவத்தின் ஆவணம்- செவ்வருகை

முனைவர்.முத்துலெட்சுமி தி*

இணைப்பேராசிரியர், தமிழ்த் துறை, ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.முத்துலெட்சுமி தி — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
2 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00073

Abstract / ஆய்வுச்சுருக்கம்

சாதி இந்திய பண்பாட்டின் நிறுவனமாக உள்ளது. இங்கு புனிதம்X தீட்டு, மேல்X கீழ் என்பது இயல்பாக இருக்கிறது. சாதிய, பாலின ஒடுக்குமுறை பெண்ணைச் சொத்தாக பார்க்கிறது. அதனைப் பெருமையாகக் கருதும் போக்கு உள்ளது.அது பெருமை அல்ல ஆணவம் என்று மறுக்கும் சிறுகதைகளை 'செவ்வருக்கை'தொகுப்பு. இந்திய சமூகம் பெண்ணை எவ்வளவு அடிமைப்படுத்தி கொலையும் தற்கொலையும் செய்திருக்கிறது. செய்ய வைத்திருக்கிறது என்பதற்கு 'சுதாரி' '-கன்னிக்குழி 'சிறுகதைகள் காட்டுகின்றன. ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இயங்கும் கழக கட்சிகள் இந்திய சமூக அமைப்பின் சாதிய படிநிலையைத் தக்க வைததக்க வைத்திக்கும் ஆணவத்தை 'சாதி நாற்காலி ''கழக காவலர் 'விருது கதைகள் சுட்டுகின்றன. இந்தியாவில் சாதி பண்பாட்டு ஒழுக்கமாகவும் பண்பாடும் ஒழுக்கமும் கூட சாதியாலும் கட்டமைக்கப்பட்டிருப்பதை 'நாசுவம் 'கதை சொல்கிறது .சாதியும் மதமும் சாதியும் வர்க்கமும் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்து இருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத போதைப் பொருளாக சாதி இங்கு இயல்பாகஇருக்கிறது. சாதி ஒழிப்பு போராட்டத்தில் இலக்கியத்திற்கான பங்காக 'செவ்வருக்கை'யை எம்.எம்.தீம் படைத்திருக்கிறார். நெல்லை மாவட்ட படைப்பாளியான இவர் நெல்லையை மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் சாதி ஆணவம் எவ்வாறு ஒருமைப்பாட்டுடன் செயல்படுகிறது என்பதை ஆவண படுத்துகிறார்.

Keywords / திறவுச்சொற்கள்: செவ்வருக்கை -ஆவணம்- ஆணவம்- சாதி- நாசுவம் -சுதாரி- கன்னிக்குழி - அடக்கம் -கை கயிறு- பண்பாடு.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: தி, மு. (2026). சாதி ஆணவத்தின் ஆவணம்- செவ்வருகை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 310–342. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8503

சமூகத்தின் சமநிலையைக் குறைப்பதில் சாதிக்கு முக்கிய பங்கு இருக்கிறது. சாதியைப் பாதுகாக்கும் அமைப்புகள் இந்து மதத்தில் மட்டுமல்ல, பிற மதங்களிலும் தொட்டு தொடர்ந்து படர்ந்து கிடக்கிறது விசாரணைக்கு உட்படுத்தும் கலை இலக்கிய படைப்புகள் குறைவு. செவ்வருக்கை என்னும் சிறுகதை தொகுப்பில்சாதிய பண்பாட்டை ஆவணமாக்குகிறார் எழுத்தாளர் எம். எம்.தீன் அவர்கள். எல்லா ஒடுக்கு

முறைகளுக்கும் அடிப்படை சாதியாகத்தான் இந்திய கலாச்சாரத்தில் அமைகிறது என்பதை இயல்பாகவும் எதார்த்தமாகவும் நடப்பியல் நிகழ்வுகளுடன் விவாதத்திற்கு

உள்ளாக்குகிறார்.

நெல்லை மாவட்ட படைப்பாளுமைகளில் முக்கியமானவர் எழுத்தாளர் கவிஞர் எம் எம் தீன் ஆவார். எம்ஜிஆர் உடன் பேசிக் கொண்டிருக்கிறேன், தன்னூத்து ராசா, சந்தனத்தம்மை, கல்லறை, யாசகம், செவ்வருக்கை போன்ற குறிப்பிடத்தக்க படைப்புகளைத் தந்தவர் எம். எம். தீன் ஆவார். செவ்வருக்கை சிறுகதை தொகுப்பு அண்மையில் வந்த குறிப்பிடத்தக்க நூலாகும். இத்தொகுப்பில் இடம்பெறும் 12 சிறுகதைகளும் தென் மாவட்ட

சாதிய ஆணவ பண்பாட்டு பதிவுகளைக் காட்சிப்படுத்துகின்றன.

இன்று பேசப்பட வேண்டிய விவாதத்திற்கும் கேள்விக்கும் உள்ளாக்கப்பட வேண்டிய

சாதிய கட்டமைப்பைக் குறித்த வெளிப்படையான எழுத்துக்களாக செவ்வருக்கை அமைகிறது. இந்திய கலாச்சாரத்தில் கட்புலனாகாத சாதிய கருத்தியலின் கோரமுகத்தை ஆவணமாக்குகிறார். காலம் காலமாக ஜாதி எப்படி வேரூன்றி உள்ளது என்பதை இந்த கதைகள் ஆவண படுத்துகின்றன நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்த நிலையிலும் சாதியை எப்படி தகவமைத்து வைத்துக் கொள்கிற சமூகப் பண்பாட்டைக் கண் முன் காட்டுகிறார். தென் மாவட்டங்களில் மட்டும் அல்லாமல் தமிழகம் முழுவதும்

ஆணவ படுகொலை செய்யப்பட்டு கொலையில் உதித்த தெய்வங்களின் புனைவுகளாக செவ்வருக்கை மற்றும் கன்னிக்குழி கதைகள் அமைகின்றன.

இவ்விரண்டு கதைகளும் பல மரபு கதைகளை இன்றைய அரசியல் அதிகார ஆணவ பின்னணியுடன் மறு கட்டமைப்பு செய்கிறார் ஆசிரியர்.

ஒரு காட்டையே பாதுகாக்கும் எளிய உழைக்கும் வர்க்கத்தின் மீது சாதி அதிகார வன்மத்தை உமிழும் கதை செவ்வருக்கை. அரிதாக ஆண்டுக்கு ஒருமுறை காய்க்கும் காவி நிறத்திலானசெவ்வருக்கை ஆண்டைகளுக்கு உரியது. நிறைமாத கர்ப்பிணி வெயிலா அதற்கு ஆசைப்பட அண்ணன் மாடப்புலையன், கணவன் ஆத்திப் புலையன் ஆகியோர் அந்தச்

செவ்வருக்கையைப்பறித்து கொண்டு வந்து தர அனைவரும் சாப்பிட்டு விடுகின்றனர் .இதனை அறிந்த பண்ணையார் ஆத்திப்புலையனையும்

வெயிலாவையும் கொலை செய்ய தப்பிய மாடபுலையன் தன் தங்கை மகன் செங்காடனை வளர்த்து பண்ணையார்களைக் கொல்ல அவர்கள் பதிலுக்கு மாமனையும் மருமகனையும் சூழ்ச்சியில் கொல்கின்றனர். அவர்களை குல சாமிகளாகவும் பண்ணையார்கள் குடும்பத்தினர் வணங்கி வருகின்றனர். இப்போதும் தங்களுக்கு கீழான பகை சாதிகள் மீது தாக்குதல் தொடுக்க செங்காடன் குல தெய்வங்களை வணங்கி உத்தரவு வாங்காமல் செல்வதில்லை "செங்காடனும் மற்ற குல தெய்வங்களும் பலியை மறந்து

சமாதானம் ஆகியோர்களை கண்டு பயந்தோ சிரித்தபடியே உத்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்" (ப.25) என்ற கதை முடிவு சாதிய பண்பாட்டின் அதிகார

முகத்தை எப்படி நாட்டார் வழிபாடு, கலாச்சாரம், நம்பிக்கைகள் மூடி மறைத்து இயல்பாக்குகின்றன என்பதைப் பதிவு செய்கிறது.

'சுதாரி'கதை அலைகுடிகளின் கதை. காதலின் பெயரில் ஏமாறும் ஒரு அழகிய நரிக்குறவ பெண்ணின் தற்கொலை கதை. தன் விருப்பத்தை வெளிப்படுத்தும் பெண் எப்படி பெற்றவர்களாலும் ஈவு இரக்கமில்லாமல் கைவிடப்படுகிறாள் .அவளையபெற்றோரும் உற்றாரும் சந்தேகிப்பதும் நிராதரவாக விடுவதும் தான் சாதி இனக்குழு தன் பண்பாட்டைக் காக்கும்

நடைமுறையாக இருப்பதைப் பதிவு செய்கிறார். சாதியப் பண்பாட்டைச் சுமக்க வேண்டியது பெண்ணின் மனமும் உடலும் தான் என்று திணிக்கப்படும் கதை

'கன்னிக்குழி '. ஐந்து அண்ணன்களால் பாராட்டி சீராட்டி வளர்க்க பெறும் பொன்னம்மாவின் மீது சந்தேகம் கொண்டு உயிரோடு பொன்னம்மாவைப் புதைத்து கொல்லும் வன்மத்தை ஆவண படுத்துகிறார். தமிழகம் முழுவதும் பல இடைநிலை சாதிகளிடம் இந்தக் கதையைப் பரவலாகக்கேட்கலாம். அந்தப் பெண் இறந்த பிறகு அவர்கள் கற்பனை செய்தது போல எந்த ராஜாவும் ஜமீனோ குதிரையிலோ யானையிலோ பெண் கேட்டு வரவில்லை என்ற கதை கூறு தான் பெண்கள் மீதான இந்த வன்முறையை வெளிப்படுத்துகிறது.

இந்து மதத்தில் மட்டுமல்ல, இங்கு வந்து சேர்ந்த மதங்களைத் தழுவியவர்களிடமும் சாதி எப்படி பரவி வேரூன்றி உள்ளது என்பதைப் பதிவு செய்வதே 'நாசுவம்'மற்றும்

'ஊரு ஒப்பாது'கதைகளாகும். நான் சுகம் கதை கல்வி தொழில் நுட்ப வளர்ச்சி போன்ற கால மாற்றங்கள் ஏற்பட்டாலும் மக்கள் மனதில் பரவி கிடக்கும் சாதியை ஒரு ஒடுக்கப்பட்ட குடியானவன் ஏற்றே ஆக வேண்டியுள்ளது என்பதை இஸ்லாமிய சமூக பின்னணியை கொண்டு விளக்குகிறார். கிறித்தவ பக்திமான்களாகிய இரு குடும்பத்தினரும் தங்கள் மகனுக்கும் மகளுக்கும் திருமணம் செய்ய விழைகின்றனர். மாப்பிள்ளை வீட்டின் சாதி தெரிந்து போக திருமணப் பேச்சை நாசுக்காக நிறுத்துகின்றனர் பெண் வீட்டார்.

கணினி வேலை, கைநிறைய ஊதியம் ,வசதி ,வாய்ப்புகள் இருந்தும் சகரியாவின் திருமண ஏற்பாடு அவன் சாதி தெரிந்ததும் நின்று போகிறது. கிறிஸ்தவ சபையில்

சாதி இல்லை என்பது நடைமுறையில் இல்லை என்கிற ஆவணம் தான் 'ஊரு ஒப்பாது 'கதை வாழும் போது தான் சாதிய பாகுபாடு என்றால் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் பிணத்தைக் கொண்டு செல்வதிலும் அதை அடக்கம் செய்வதிலும் இன்றும் தொடரும் ஆணவத்தை, இழிவைப் பேசும் கதை 'பொண அடக்கம் 'கதையாகும். காதல் இணையர்கள் தங்கபாண்டியனும் கீதாவும் தற்கொலை செய்து கொள்கின்றனர் .பிணத்தை வாங்க இரு தரப்பினரும் மறுக்கின்றனர். தங்கபாண்டியன் பிணத்தை அதே

சாதியைச் சேர்ந்த காவல் ஆய்வாளர் மரியாதையுடன் நல்லடக்கம் செய்ய, தலித் சமூகத்தைச் சார்ந்த கீதாவின் உடல் அடக்கம் கால்வாயின் ஓரத்தில் நடக்கிறது. குழி

தோண்டி இறக்கி போட்டோ எடுத்துக் கொள்கின்றனர் பின் பழைய இடம் தெரியாமல் மூடப்பட்டு விடுகிறது. அனாதையாக விடப்பட்ட தங்கப்பாவின் உடலை காவல்துறையினர் எப்படி மரியாதையுடன் அடக்கம் செய்கின்றனர் என்று காணொலிகள் மெச்சின. பதிலுக்கு ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண் எங்கு, எப்படி அடக்கப்பட்டாள் என்று தெரியாமல் போனது குறித்தும் சரம் மாறியாகப் பேசிய காணொளியும் வருகிறது. அடுத்த ஒரு மணி நேரத்தில் அது முடக்கவும் படுகிறது.தங்கப்பாவின் அடக்கத்தலம் பெரும்

மரியாதைக்குரியதாக மாறிக் கொண்டிருந்தது. இந்தக் கதை மக்கள் வழக்கறிஞர் தோழர் பா. ப. மோகன் அவர்கள் ஆசிரியரிடம் பகிர்ந்த உண்மை கதையாக

அமைந்து ஆவணம் ஆகிறது.

'கழக காவலர் விருது'என்கிற கதை ஐம்பது ஆண்டுகளாக சுயமரியாதை பேசி சாதி அடையாளத்தைத் துறந்ததாக நம்பும் ஒரு சராசரி தொண்டர் பைந்தமிழ் தாசனுக்கு வழங்கப்படுகிறது கழக காவலர் விருது. சாதி அடையாளத்திற்காக மட்டுமே கட்சி தலைமை வழங்கும் விருதின் அதிகார தலைமையை விமர்சிக்கிறது. சாதி மறுப்பு பேசிய சுயமரியாதை கொள்கைகளை ஏற்றுக்கொண்ட திராவிடக் கட்சிகளின் அதிகாரத் தலைமை ஆதிக்க சாதிகளின் கையில்

இருப்பதை ஆவணப்படுத்தும் சிறந்த கதை 'கழக காவலர் விருது' கதை.

இரண்டு இசை கலைஞர்கள் காதலில் கலந்து ஊரை விட்டு வந்து திருமணம் முடித்து கனவுகளோடும் வாழ்க்கையோடும் போராடிக் கொண்டிருக்க, மறுபுறம் ஆணவக் கொலை பயம் அவர்களை எப்படி துரத்துகிறது என்பதை படம் பிடிக்கிறார் ஆசிரியர் .தேடி வந்து கொலை செய்யும் விரோதம் ,பெற்ற பிள்ளைகளையும் கொல்லும் வன்மம் எல்லாம் சாதிக்கு தான் இருக்கிறது என்பதை ஆவணம் செய்கிறது 'பாடும் துண்டு நிலா 'கதை.' கல்வி நிறுவனங்களில் வண்ணக் கயிறு, பொட்டு, சாதி மெல்லிசை பாடல்கள் என்று பள்ளிகளிலேயே அடையாள

அரசியல் தொடங்கி விடும் போக்கை கதையாக்குறார். 'கை கயிறு 'கதை நாங்குநேரி சின்னதுரை என்ற மாணவன் சாதிய தாக்குதலுக்கு ஆளான பின்னணியைக்

கொண்டுள்ளது. இந்த வழக்கின் விசாரணையில் அதிகாரிகள் தலைமை ஆசிரியரைக் காப்பாற்றுவதில் ஒரே சாதி உணர்வு எப்படி வேலை செய்கிறது என்பதை ஆவணம் செய்கிறார் ஆசிரியர். குழந்தைகள் கையில் கயிறு கட்டி சாதி அடையாள அரசியலை வெளிப்படுத்துகின்றனர் என்றால் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியவர்களின் மனதில் எப்படி சாதிப் பற்று மேலோங்கி இருக்கிறது என்பதை இக்கதை சுட்டுகிறது.

நீண்ட காலத்திற்குப் பிறகு ஊராட்சி பதவிகள் தலித் மக்களுக்கு ஒதுக்கப்படும் போது அதையும்

மாற்று முறையில் கைப்பற்றிக் கொள்ளும் நூதன அவலத்தை ஆவணம் செய்கிறது 'பட்டத்தியின் கதை'. தற்சார்பும் சுயமரியாதையும் இல்லாத 'பட்டத்தியின் கதை 'க்கு

நேர் மாறாக அமைகிறது 'சாதி நாற்காலி'கதை. சமூக நீதி என்று ஊராட்சி மற்றும் ஊராட்சி பதவிகளில் எல்லா சமூகத்தினரும் பங்களிப்பு வழங்க இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. நடைமுறையில் ஆதிக்க சாதியினரின் அதிகாரத்தை ஒடுக்கப்பட்ட மக்கள் எப்படி எதிர்கொள்கின்றனர் என்ற ஆவணம் தான் சாதி நாற்காலி. அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த ஹேமா ஊராட்சி பொறுப்புக்கு வரும்பொழுது சாதி வன்மதால் கடுமையாகத் தாக்கப்படுகிறார். மீண்டு வந்து அவள் ஊராட்சி மன்ற

அலுவலகத்தில் கொடியேற்றி உரை நிகழ்த்துகிறார். ஊர் மக்கள் ஹேமாவிற்கு மாவட்ட ஆட்சியர் துப்பாக்கி லைசென்ஸ் வழங்கியிருப்பதாகவும் எப்போதும்

இடுப்பில் ரிவால்வர் வைத்திருப்பதாகவும் ஊரில் பேசிக்கொண்டனர் என்ற கதை முடிவு சிறந்த ஆவணமாகும். இக்கதையின் ஹேமா பாத்திரம் துணிச்சலும் தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் கொண்ட பெண்ணாக கட்டமைக்கப்படுவது சிறப்பு. ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு இடையே இருக்கும் உள் முரண்பாட்டைப் பேசும் சிறுகதை 'வன்மப்பழி '.ஆசிரியரே கதை சொல்லியாக இக்கதையைப் பதிவு செய்கிறார். ஒரு வழக்கறிஞராக ஆசிரியர் சந்தித்த வழக்கின்

அடிப்படையில் இக்கதை அமைகிறது.

"சமூகம் தன்னைச் சமநிலைப்படுத்திக் கொள்ள என்றும் விரும்புவதில்லை

.அழிந்து போன அடையாளங்கள் நெஞ்சில் சுமந்து கொண்டு திரியும். இன்னும் சாதியின் ஆழமான வேர் எல்லா பிடிமானங்களையும் விட்டு விடவில்லை" (ப152)என்ற கூற்றை நிரூபிக்கும் வகையில் இவரது அனைத்து கதைகளுமே அமைந்துள்ளன.நெல்லை மாவட்ட எழுத்தாளரான எம். எம். தீன் குறிப்பாக நெல்லையிலும் பரவலாக தமிழகத்திலும் இருக்கும் சாதி ஆதிக்க அதிகார ஆணவ முகங்களை ஆவணங்களாகவே பதிவு செய்கிறார். பண்பாடும் கலாச்சாரமும் சாதியாக இருப்பது களையப்பட்டு சமத்துவ, சமநீதி

நோக்கிய பண்பாட்டை முன்வைக்கும் சிறந்த படைப்பு செவ்வருக்கை.

.

© 2026 முனைவர்.முத்துலெட்சுமி தி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 344–353
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

பண்பாட்டுப் பார்வையில் சிவகாசி பத்திரகாளியம்மன் கோயில்

பொற்கொடி க[1,*], பத்மபிரியா மா[2]

[1] முனைவர் பட்ட பகுதி நேர ஆய்வாளர்,தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி., *India*

[2] தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: பொற்கொடி க — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
2 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00072	

ஆய்வுச்சுருக்கம்

பண்பாடு என்பது காலத்தை வெளிச்சமிட்டுக் காட்டும் கண்ணாடி போன்றதாகும். மனிதனின் நாகரீகத்தைத் தலைமுறை தலைமுறையாயக் கடத்தப்படுபவை மக்களின் பண்பாடு. அதிலும் குறிப்பாக நாட்டார் மக்களின் பண்பாடு ஆய்ந்து அறியப்பட வேண்டிய ஒன்று மக்களின் ஆன்மீக நம்பிக்கையுடன் வழிபாட்டின் அங்கமாய் இருப்பவை தெய்வங்கள். விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் அமைந்துள்ள முக்கியக் கோயில்களில் ஒன்று பத்திரகாளியம்மன் கோயில். பல நாட்டுப்புற மக்களின் வழிபாட்டிற்குரியத் தெய்வமாக இருக்கும் இக்கோயிலின் அமைப்பு, வழிபாட்டு முறை, திருவிழாக்கள் ஆகிய அனைத்திலும் பண்பாட்டு எச்சம் காணப்படுகிறது. தாய்தெய்வ வழிபாடு தமிழகத்தில் காணப்பட்ட மிக முக்கிய வழிபாடாகும். அத்தெய்வ வழிபாட்டின் ஆதாரமாயும் பல இனக்குழு மக்களின் அடையாளமாயும் விளங்கும் இக்கோயிலின் பண்பாட்டை ஆய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: சூரசம்ஹாரம்; கழுவேற்ற லீலை; கயர்குத்து திருவிழா

Abstract

Culture is like a mirror that illuminates and reflects the passage of time. The culture of a people is transmitted from one generation to another and serves as a representation of human civilization. In particular, the culture of folk communities is worthy of systematic study and documentation. Deities, which are closely associated with the spiritual beliefs of people, form an integral part of their worship and religious practices. The Badrakali Amman Temple, located in Sivakasi in Virudhunagar District, is one of the prominent temples in the region. As a deity worshipped by various folk communities, the temple reflects significant cultural traditions in its architectural structure, modes of worship, festivals, and related practices. Mother Goddess worship has been one of the most important forms of worship in Tamil Nadu. This temple, which serves both as a foundation of Mother Goddess worship and as a marker of the identity of various

ethnic and social groups, embodies several cultural traditions and remnants of folk practices. This article examines the cultural aspects of the Badrakali Amman Temple and its significance in preserving the traditions and identity of the communities associated with its worship.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: க, பொ., & மா, ப. (2026). பண்பாட்டுப் பார்வையில் சிவகாசி பத்திரகாளியம்மன் கோயில். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 343–352. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8505

முன்னுரை

தொன்மையும் பழமையும் உடையது தமிழ் மொழி. அம்மொழி பேசும் மக்கள் காலம் காலமாக பல நீண்ட நெடிய பண்பாட்டு வரலாற்றைக் கொண்டுள்ளனர். பண்பட்ட அமைப்பே பண்பாடாகும். ஒரு இனத்தின் பிரதிபலிப்பு பண்பாடு சார்ந்து அமையும். நாகரீக மக்கள் மாறுபடினும் நாட்டார் மக்களும் அவர்களால் வழிபடப்படும் நாட்டார் தெய்வங்களும் அவர்தம் பண்பாடும் மாறுபடுவதில்லை. மாறாச் சமூகம் கொண்ட நாட்டார் தெய்வங்களின் பண்பாட்டைப் பொருத்திக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்

பண்பாடு

தமிழகமும் தமிழக மக்களும் ஆழமான வரலாற்றைக் கொண்டவர்கள். அவர்களது மரபும், நாகரீகமும், பண்பாடும் ஒவ்வொரு தலைமுறைக்கும் கடத்தப்பட்டு வருகிறது. நாகரீகத்தின் முதுகெலும்பாய் இருப்பது கிராமங்கள். அக்கிராமங்களின் ஆணிவேராய் நிற்கும் தெய்வங்கள் சார் பண்பாடு பரந்துபட்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. பண்பாடு என்பதற்கு "பண்படு 'சீர்திருத்து' என்ற வினை அடியிலிருந்து உருவான சொல்லே பண்பாடு என்று அறியப்பட்ட நிலையில், அது இன்று பண்புவளம், 'நாகரிகமான தன்மை', 'நாகரிகப் படிவம்' எனப் பல்வேறு பொருளில் ஆளப்பட்டு வருகிறது"[1] என்கிறார் முனைவர் இரா.பாலகிருஷ்ணன். மேலும் "பண்பாடு அகவளர்ச்சியையும் நாகரிகம் புறவளர்ச்சியையும் குறிக்கும் என்பதாகும்"[2] என்று முனைவர் அ.தட்சிணாமூர்த்தி சுட்டுகிறார். "பண்பாடு என்பது இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள், தொழில்கள் போன்ற சில கூறகள் மட்டும் ஆகாது. இது மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயல்படுத்தும் ஒரு மிகப்பெரும் அமைப்பாகும்"3 என்கிறார் பக்தவத்சல பாரதி. பண்பாடு என்பதற்கு அகவளர்ச்சி என்றும் நாகரிகமான தன்மை, நாகரிகப் படிவம் என அறிஞர்கள் வரையறுக்கின்றனர்.

கோயில் அமைப்பும் பண்பாட்டுப் பிரதிபலிப்பும்

நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களின் கோயில்கள் மிகப்பெரிய அளவில் எழுப்பப்படுவதில்லை. பொதுவாக நாட்டார் கோயில்கள் ஆகம விதிப்படி அமைக்கப்பட மாட்டாது. பெரும்பாலான நாட்டுப்புறத்தெய்வங்களின் கோயில் பீடமாக அமைக்கப்பட்டிருக்கும். பீடங்களே கோயில்களாக மக்களால் கருதப்படுப்படுகின்றன. "சில நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு ஆகம விதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை, முன்மண்டபம், கொடிக்கம்பம், சுற்றுச்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன"[4] என்கிறார் சு.சக்திவேல்.

பெருந்தெய்வங்களுடன் ஒப்பிடும் வகையில் சிவகாசி பத்திரகாளியம்மன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கோயில்களைக் கண்டறியும் வகையில்

அமைபவை கோபுரங்கள். நாட்டார் தெய்வங்கள் காணலாகும் கோயில்களில் கோபுரங்கள் காணப்படுவதில்லை. ஆனால் சிவகாசி பத்திரகாளியம்மன் கோயில் 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு பிறது விரிவாக்கம் செய்யப்பட்டதாகக் கூறுவர். இக்கோயிலின் கோபுரம் திராவிட அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் 110 அடி உயரமும் ஏழு அடுக்குகளும் 7 கலசங்களும் கொண்டு கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது. பழங்காலத்தில் கோயிலின் கோபுரம் கண்டால் அங்கே ஊர் இருப்பது கட்டாயம் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு இக்கோயில் எழுப்பப்பட்டுள்ளது. மற்ற கோயில்களில் காணப்படுவது போல் கருவறைக்கு நேராக அமைக்கப்படாமல் தனியாகக் கட்டப்பட்டுள்ளது. மேலும் தமிழகக் காளி கோயில்களில் மிகவும் உயரமான ராஜகோபுரம் கொண்ட கோயில் என்ற பெருமைக்கும் உரியது.

திருச்சுற்றும் பரிவாரத்தெய்வங்களும்

கோயிலுள் இரண்டு மூன்று சுற்றுக்களை நிறைவு செய்த பின்னரேக் கருவறையில் இருக்கும் இறைவனைத் தரிசனம் செய்ய வேண்டும் என்ற பண்பாட்டு மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. இத்திருச்சுற்றுக்கள் கோயிலின் அளவுக்கேற்ப அமைக்கப்படும். பொதுவாக கோயில்களுக்கு வரும் பொழுது நேரடியாக ஒரு இறைவனை மட்டும் சந்திப்பதைவிட ஒரே இடத்தில் பல தெய்வங்களை வழிபட்டு அதன் பயனைப் பெறும் வகையில் திருச்சுற்றும் அத்தீருச்சுற்றில் பரிவாரத் தெய்வங்களும் அமைத்தனர். பெருந்தெய்வக் கோயில்களில் அத்தெய்வத்துடன் தொடர்புடையத் தெய்வங்களே பரிவாரத் தெய்வங்களாக வைத்திருப்பர்.

சிவகாசி பத்திரகாளியம்மன் கோயிலின் வெளிச்சுற்றில் பஞ்சமுக கணபதி, லட்சுமி நாராயணர், நாகராஜர், ஐயப்பன், ஆஞ்சநேயர், நவக்கிரகங்கள், காணப்படுகின்றன. இரண்டாம் திருச்சுற்றில் பேச்சியம்மன், கருப்பசாமி, வீரபத்திரர், முருகப்பெருமான், இருளப்பசாமி, பைரவர், விநாயகர், துர்க்கையம்மன், ராக்காச்சியம்மன், ஆகியோரின் சிலைகள் காணப்படுகின்றன. பெருந்தெய்வங்கள் மற்றும் சிறு தெய்வங்களை வழிபட்ட பலன் கிடைக்கவே இவ்வாறு அமைத்துள்ளனர்.

நந்தவனம்

கோயில்களில் நந்தவனம் காணப்படுவது மரபு. நந்தவனம் என்பவை “பழங்கால சிவன், திருமால், முருகன் கோயில்களில் காணப்படும் ஒரு தோட்டம் ஆகும்”[5] என்கிறது விக்கிபீடியா. நந்தவனத்தில் சாதாரண செடி, கொடிகள், மரங்கள் மட்டுமின்றி சில மூலிகைச் செடிகளும் சில தலமரங்களும் நந்தவனத்தில் வளர்க்கப்பட்ட முறைமை காலம் காலமாகப் பின்பற்றப்பட்டுள்ளது. நந்தவனத்ரதைப் பராமரிப்பதற்கென்று தனியே சிலர் நியமிக்கப்பட்டனர்.

சிவகாசி பத்திரகாளியம்மன் கோயிலினுள் ஒரு நந்தவனம் காணப்படுகின்றது. மேலும் இதை தரகன் நந்தவனம் என்றும் அழைக்கின்றனர். இங்கு ஆண்களும் ஆண் குழந்தைகளும் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட வயது வரை உள்ள பெண் குழந்தைகள் மட்டும் அனுமதிக்கப்படுகின்றனர். பருவ வயது முதல் வயது முதிர்ச்சி அடைந்தப் பெண்கள் வரை அனுமதி கிடையாது. இங்கு எண்ணற்ற செடி, கொடிகள், மரங்கள் மற்றும் மூலிகைகள் காணப்படுகின்றன. சில மூலிகைகளைத் தீட்டுப்பட்ட பெண்கள் தொட்டால் வாடி விடும் என நம்புவதால் பொதுவாக அனைத்துப் பெண்களும் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இங்கு இறுதி வரை நடந்து சென்றால் கடைசிப்பகுதியில் ஒரு கிணறும் மற்றொரு தெய்வமும் காணப்படுகிறது. இத்தெய்வத்தை வணங்கினால் மிகவும் சிறப்பாக

இருக்கும் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். மேலும் முந்தைய காலத்தில் ஐந்துதலை நாகம் இருந்ததாகவும் விதிமீறி நடந்து கொள்பவர்களை அது தண்டிக்கும் என்ற நம்பிக்கையும் மக்களிடம் நிலவுகிறது.

கருவறையும் பண்பாட்டுப்பார்வையும்

பண்பாட்டை மக்களின் அடிப்படை நம்பிக்கையாகக் கருதுகிறோம். நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஒரு காரணம் உண்டு. இறைவழிபாட்டிலும் பல்வேறு பண்பாட்டு நம்பிக்கைகளை நாட்டார் மக்கள் கொண்டுள்ளனர். தெய்வங்களின் கோயில்களும் உருவச்சிலைகளும் குறிப்பிட்டத் திசையில் அமைய வேண்டும் என்பது நாட்டார் மக்களின் கருத்தாகும். “பெண் தெய்வக் கோயில்கள் பெரும்பான்மை வடக்கு நோக்கியும் சிறுபான்மை கிழக்கு நோக்கியும் ஆண் தெய்வக் கோயில்கள் கிழக்கு நோக்கியும் அமைவதும் மரபாகும்”[6] என்கிறார் தொ.பரமசிவன். கோயில்கள் அமைந்திருக்கும் திசையிலேயே பெரும்பாலானக் கருவறைகள் அமைக்கப்படுகின்றன. கருவறைகள் மிகவும் புனிதமான இடமாகக் கருதப்படுகின்றது. உள்ளிருக்கும் தெய்வங்கள் மிகவும் சக்திவாய்ந்த தெய்வங்களாகக் கருதப்படுகின்றன.

சிவகாசி பத்திரகாளியம்மன் கருவறை விமானம் தங்கமுலாம் பூசப்பட்டத் தகடுகளால் பொருத்தப்பட்டவை ஆகும். பொதுவாக வடக்கு நோக்கியே அம்மன் காட்சி தருவர். ஆனால் இக்கோயிலில் கருவறை அம்மன் மேற்கு திசை நோக்கி அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார். எட்டுக் கைகளுடன் சற்று ஆக்ரோசமாகக் காணப்படுகிறார். ஒவ்வொரு கையிலும் சூலம், வாள், அக்கினி, கேடயம் ஆகியவற்றைக் கையில் ஏந்தியுள்ளார். கருவறையில் இருக்கும் மூலவருக்கு சில கோயில்களில் அபிசேகம் காணப்படாது. ஆனால் இந்த அம்மனுக்கு அபிசேகமும் அலங்காரமும் செய்கின்றனர். கருவறையின் முன்பு கொடிமரம், பலிபீடம், சிங்க வாகனம் காணப்படுகிறது.

பண்பட்ட வழிபாடு

பண்பாட்டின் மிக முக்கியக் கூறு வழிபாடு ஆகும். இனத்திற்கேற்ப, வட்டாரத்திற்கேற்ப, சூழலுக்கேற்ப வழிபாட்டு மரபுகள் மாறுபடும். “ஆதிமனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டான். இயற்கையை வழிபட ஆரம்பித்தான்”[7] என்று இறை வழிபாடு ஆரம்பித்த சூழலை டாக்டர் சு.சக்திவேல் சுட்டுகிறார். பத்திரகாளியம்மனுக்கு வாரத்தில் உள்ள ஏழு நாட்களுமே காலை, மாலை ஆகிய இரு வேளையிலும் அபிசேகம் செய்து பத்தி, சூடம், மாலை, பூ வைத்து வழிபாடு செய்யப்படுகிறது. மேலும் ஒவ்வொரு வாரத்திலும், செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை அன்று பத்திரகாளியம்மனுக்கு சிறப்புப் பூஜைகள் நடத்தப்படுகின்றன. பௌர்ணமி பூஜை, மாதவெள்ளி ஆகிய இரண்டு வழிபாடுகளும் நடைபெறுகிறது. பௌர்ணமியன்று முழுமையும் அம்மனுக்கு வழிபாடு செய்யப்படுகின்றது. இவ்வாறு செய்வதனால் தங்களது குடும்பம் நலமாய் வாழும் என்ற நம்பிக்கையை இவ்வழிபாட்டு முறையில் காணப்படுகிறது. பொதுவான வழிபாடுகள் மட்டுமின்றி சில குறிப்பிட்ட வழிபாடுகள் இக்கோயிலில் மிக முக்கியமானதாய்க் கருதப்படுகிறது.

ஆடி மாதம்

“ஆடி மாதம் அம்மனுக்கு உகந்த மாதம்” என்ற கருத்து மக்களிடம் காணப்பட்டதால் ஆடி மாதத்தில் அனைத்து அம்மன் கோயில்களிலும் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. ஆடி மாதத்தில் எதைத் தொடங்கினாலும் அது சிறப்பாக

இரக்கும் என்ற நம்பிக்கையும் மக்கிடம் காணப்படுகிறது. பத்திரகாளியம்மனுக்கு ஆடிமாதம் முழுவதும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. குறிப்பாக ஆடி வெள்ளியன்று சிறப்பு அபிசேகம் மற்றும் அலங்காரம் செய்யப்படுகின்றது. அம்மனுக்கு கூழ் காய்ச்சிப் படையலாக இடுகின்றனர். நாட்டில் நல்லபடியாக மழை பெய்வதற்காகவும் வெப்ப நோய் நீங்கவும் வேண்டி கூழ் சமைத்து அம்மனுக்கு படைத்தபின் அனைவருக்கும் கொடுக்கின்றனர்.

நவராத்திரி

நவம் என்றால் ஒன்பது என்று பொருள். அதாவது ஒன்பது இரவுகள் என்பதே நவராத்திரி எனப்பட்டது. பெண் தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வத்தின் வலிமை, வளமை ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. நவராத்திரியானது “சக்தியின் பெருமையை உலகுக்கு உணர்த்தவும் வாழ்வில் மகிழ்ச்சி பெறவும் கொண்டாடப்படுகிறது”8 என்கிறார் ஆசிரியர் ரெஜித்குமார். இந்நாளில் கொலு வைப்பது என்ற நிகழ்வு பத்திரகாளியம்மன் கோயிலில் நிகழ்த்தப்படுகின்றது. கொலு பொம்மைகளைக் கொண்டு வந்து படிகளில் வரிசையாக அடுக்குவர். ஒவ்வொரு படியிலும் தேவலோகம், பூலோகம், பாதாளலோகம் என்பதை சுட்டிக்காட்டும் வகையில் பொம்மைகளை அடுக்குவர். தேவலோகத்திற்கு சிவன், பெருமாள், முருகன், பார்வதி உள்ளிட்டப் பல தெய்வங்களையும் அவர்களது திருவிளையாடல்கள், அவதாரங்களை வெளிப்படுத்தும் சிற்பங்களையும் பூலோகத்திற்கு மனிதனின் அனைத்து வாழ்வியல் கூறுகளையும் பாதாளலோகத்திற்கு பாம்பு, பூரான், தேள் போன்ற பூச்சியினங்களையும் வைப்பர். இவற்றிற்கு இடையில் அம்மன் ஒன்பது நாட்களும் ஒன்பது வடிவங்களில் காட்சி தருகிறார். முதல் மூன்று நாட்கள் துர்க்கையாகவும் நடுமூன்று நாட்கள் இலட்சுமியாகவும் இறுதி மூன்று நாட்கள் கலைமகளாகவும் அலங்கரிக்கப்பட்டு வீரம், செல்வம், கல்வியைப் பெறும் நோக்கில் வழிபாடு செய்கின்றனர். பத்தாவது நாள் காளியாக வழிபடுகின்றனர்.

திருவிழா

உழைத்து சோர்ந்த மக்கள் தன் களைப்பு நீங்கி மகிழ்வதற்கும் பல இடங்களில் பிரிந்து சென்ற அனைவரும் ஒருங்கிணைந்து கொண்டாடும் விழாவே திருவிழா ஆகும். திருவிழாவின் வழி எண்ணற்ற நாட்டார் மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்ள முடிகிறது.

சிவகாசி பத்திரகாளியம்மன் கோயிலில் சித்திரைத் திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிவகாசி மாரியம்மன் கோயிலில் பங்குனித் திருவிழா கொடிசாட்டி முடிந்தவுடன் இரண்டு வாரங்களுக்குள் பத்திரகாளியம்மன் கோயிலில் கொடிசாட்டித் திருவிழாவைத் தொடங்குகின்றனர். ஆனால் பெரிய நேர்த்திக்கடன்கள் செய்பவர்கள் 48 நாட்களிலிருந்தே விரதம் இருக்கத் தொடங்குகின்றனர். சிறிய அளவிலான நேர்த்திக்கடன்கள் செய்பவர்கள் கொடிசாட்டிய நாளிலிருந்தே விரதம் இருப்பர்.

கொடி சாட்டுதல்

விழாவின் அடையாளமே கொடிசாட்டுதல் ஆகும். பத்திரகாளியம்மனின் கோட்டுருவம் பொறிக்கப்பட்டக் கொடியுடன், ஒரு மஞ்சள் துணியில் வேப்பிலை, எலுமிச்சம்பழம் மற்றும் பூ வைத்து அதனைக் கொடிமரத்தில் ஏற்றுவர். அதனொடு தர்ப்பைப்புல் வைத்து கட்டுவர். மாரியம்மன் கோயிலில் ஞாயிற்றுக்கிழமையும் பத்திரகாளியம்மன் கோயிலில் செவ்வாய்க்கிழமையும் கொடிசாட்டுவர்.

கொடிசாட்டிவிட்டால் அன்று முதல் ஊரைவிட்டு செல்லக் கூடாது என்ற மரபு மக்களிடையே பின்பற்றப்படுகிறது.

மேலும் நேர்த்திக்கடன்கள் செய்ய ஒப்புக்கொண்டால் குறிப்பிட்டக் காலகட்டத்தில் இறைச்சி, கீரை, எண்ணெய் சேர்த்த உணவுகள் ஆகியவற்றை சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். வீட்டில் உணவுகளைத் தாளிப்பது பாவமாகக் கருதப்படுகிறது. பிற வீடுகளில் உணவு உண்பதோ தண்ணீர் அருந்துவதோ கூடாது என்பர்.

பத்திரகாளியம்மன் கோயில் திருவிழா

மக்களை வருடத்தில் சில நாட்கள் ஒருங்கிணைக்கும் தன்மை உடையவையாகத் திருவிழாக்கள் திகழ்கின்றன. சிவகாசி பத்திரகாளியம்மன் கோயிலில் 10 நாட்கள் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. கொடிசாட்டும் நாளே திருவிழாவின் முதல் நாளாகக் கருதப்படுகிறது. கடைக்கோவில் எனும் இடத்திலிருந்து அம்மன் வெள்ளி சிங்க வாகனத்தில் கிளம்பி மாலை வேளையில் கோயிலுக்கு வந்ததும் கொடியேற்றப்படுகிறது. பிறகு இரவில் நகர்வலம் வரும் பொழுது வானவேடிக்கைகள் வெடித்து அம்மனை வரவேற்பர். இரண்டாம் நாளில் தங்க ஊஞ்சலில் அமர்ந்து பின் காமதேனு வாகனத்தில் ஊரை சுற்றி வலம் வந்து கோயிலுக்குள் கொண்டு வருவர். மூன்றாம் நாள் கைலாச பர்வத வாகனத்திலும் நான்காம் நாள் வேதாள வாகனத்திலும் அம்மனை வலம் வரச் செய்வர்.

சூரசம்ஹாரம்

ஐந்தாம் நாளிலிருந்து திருவிழா சற்று சிறப்பாகக் கொண்டாடப்படும். ஐந்தாம் நாள் அதிகாலை 3.00 மணியிலிருந்து சூரசம்ஹாரம் நிகழ்வு நடைபெறும். சூரனை அம்மன் வதம் செய்யும் நிகழ்வை நினைவூட்டும் விதமாக இந்நிகழ்வு நிகழ்த்தப்படுகிறது. சூரன் போன்று வடிவமைக்கப்பட்ட வைக்கோல் பொம்மை போல் உருவாக்கப்பட்ட அரக்கனுக்கு ஒவ்வொரு முச்சந்தியிலும் அரக்கனின் முகத்தை மாற்றுவர். அரக்கன் முகம் பொருத்தப்பட்ட உருவ பொம்மையை ஏந்தியவர்கள் அரக்கன் அம்மனுடன் சண்டை போடுவது போல் முன்னும் பின்னும் சுற்றி வருவர். பிறகு அம்மனின் சூலம் குற்றியதும் வேறு அரக்கனின் முகத்தை மாற்றிவிடுவர். இவ்வாறு மூன்று இடங்களில் மாற்றி இறுதியாக சூரனின் முகத்தை மாற்றுவர். முருகன் கோயில் முன்பு அம்மனுக்கும் அரக்கனுக்கும் இடையில் பயங்கர சண்டை நடக்கும். இறுதியில் அம்மனின் சூலம் குத்தியதும் அரக்கனின் வயிற்றில் இருக்கும் குடல் போன்ற அமைப்பை உருவி அம்மனின் முன்பு வைத்து எரித்துவிடுவர். சம்ஹாரம் முடிந்ததும் அம்மனை கோயிலுக்குக் கொண்டு போய்விடுவர்.

கழுவேற்ற லீலை

ஆறாம் நாள் திருவிழா சற்று முக்கியமானத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. ஆறாம் நாள் அன்று நவதானிய வர்த்தகர்களால் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்ட மண்டபத்தில் அம்மன் தங்கத்தாமரையில் வீற்றிருப்பாள். மாலை 5 மணி முதலே மக்கள் அம்மனை வழிபட ஆரம்பித்துவிடுவர். இரவு 10 மணிக்கு மேல் அம்மன் வெள்ளி ரிசப வாகனத்தில் உலா வந்து அதிகாலை 5 மணிக்கு மாரியம்மன் கோயிலுக்கு அழைத்து வரப்படுவார். அங்கு கழுவேற்ற லீலை என்ற நிகழ்வு நடைபெறும். கள்வர்களை ஊரிலிருந்து விரட்டி அம்மன் கழுவேற்றியதை நினைவுகூறும் வகையில் சிலர் கள்வர் போல் வேடமிட்டு அவ்விடத்தில் அமைக்கப்பட்ட கழுமரத்தில் விழுந்து இறப்பது போல் நடிப்பர். பிறகு அம்மன் கோயிலுக்கு சென்றுவிடுவார்.

ஏழாம் நாள் திருவிழாவில் அம்மன் சயன கோலத்தில் பூப்பல்லக்கில் ஊர்வலம் வருவார். இத்திருவிழாவை கொத்தமார்கள் மகமைப் பண்டு என்ற குழுவினர் நடத்துவர். அம்மன் ஊர்வலம் வரும் பொழுது திருமணம் முடித்த பெண் புகுந்த வீட்டிற்குக் கொண்டு செல்லும் சீர்வரிசைகளை எடுத்து செல்வர். அம்மன் ஊரை வலம் வந்து கோயிலுக்குள் சென்றதும் சீர் வரிசைகளைக் கோயிலில் ஒப்படைத்துவிடுவர்.

அம்மன் வேட்டைக்கு செல்லுதல்

எட்டாம் நாள் திருவிழா பொங்கல் திருவிழா எனப்படும். இத்திருவிமாவில் மாலை 5 மணிக்கு அம்மன் குதிரை வாகனத்தில் வேட்டைக்கு செல்லுவாள் என்று கூறி கோபம் கொண்ட பாந்து செல்லும் தன்மை உடைய குதிரையின் மேல் அம்மனை வைத்து ஊர்வலமாக வருவர். அவர்களுடன் ஆடு ஒன்றையும் மக்கள் அழைத்து செல்லுவர். முப்பிடாதி அம்மன் கோயிலின் அருகில் வைத்து ஆட்டை வெட்டிப் பலி இடுவர். அம்மன் வேட்டைக்கு சென்று வருவதை நினைவூட்டும் வகையில் இந்நிகழ்வு நிகழ்த்தப்படுகின்றது. அம்மனை அமைதிப்படுத்திய பின்பு இரவு 9 மணிக்கு சிம்ம வாகனத்தில் அம்மனை ஊரைச் சுற்றி அழைத்துவருகின்றனர்.

கயர்குத்து திருவிழா

ஒன்பதாம் நாள் திருவிழாவே கயர்குத்து திருவிழா எனப்படும். இந்த நாளில் மக்கள் தங்கள் வேண்டுதல்களை பெரும்பான்மையாக நிறைவேற்றுவர். அதிகாலை முதலே தங்கள் உடலில் பல வண்ண நிறங்களைப் பயன்படுத்தி கரும்புள்ளி செம்புள்ளி குத்தி வேப்பிலையுடன்,

> ‘ஆகோய் ஐயாகோய்
>
> ஆத்தாத்தா காளியாத்தா”

என்ற கோசங்களை எழுப்பிக் கொண்டே கோயிலுக்கு செல்லுவர். அங்கு வேப்பிலை கொண்டு செய்யப்பட்ட படுக்கையில் கொண்டு வந்த வேப்பிலைகளை போட்டு உருண்டு கொடுப்பர். பின்பு கோயிலுக்குள் சென்று அம்மனை தரிசிப்பர். திருவிழாவின் பொழுது மாமிசம் உண்ணும் பழக்கம் மக்களிடம் கிடையாது. ஆனால் ஒன்பதாம் திருவிழாவின் பொழுது கோயிலுக்கு சென்று வந்ததும் மாமிசம் எடுத்து சமைத்து உண்பர். மாலை வேளையில் அம்மன் கடைக்கோவிலிருந்து பூப்பல்லக்கில் எழுந்தருளுவார். கோயிலுக்குள் நுழைந்து திருச்சுற்றை நிறைவு செய்து அங்கிருக்கும் மண் திடலில் அம்மனின் பல்லக்கை நிறுத்துவர். பிறகு பல வானவேடிக்கைகளை நிகழ்த்துவர். அம்மன் வானவேடிக்கையைப் பார்த்து ஊரைச் சுற்றி வலம் வருவார். பிறகு கோயிலுக்கு சென்றுவிடுவார். ஒன்பதாம் திருவிழாவில் பறவைக்காவடி எடுக்கும் பாரம்பரிய முறையும் காணப்படுகிறது.

தேர்த்திருவிழா

பத்தாம் நாளில் தேர்த்திருவிழா நிகழ்த்தப் பெறுகின்றது. காலை 9 மணிக்குப் பெரிய தேரிலும் சிறிய தேரிலும் வடம் பூட்டப்படுகின்றது. மாலை 4 மணிக்கு அம்மனின் பெரிய தேரை மக்கள் அனைவரும் சேர்ந்து இழுக்கின்றனர். முதலில் சிறிய தேரை சுற்றி வரச் செய்து எல்லையில் நிறுத்துவர். பெரிய தேர் இழுக்க இரண்டு நாள் எடுக்கும். தேர் இழுக்கும் முன்பு சேவலைக் காவு கொடுப்பது போல் தேர் இழுத்து முடிந்ததும் தேங்காயை சிதறுகாயாக வீசி எறிகின்றனர். தேர் தடம் பார்த்ததும் அம்மன் மஞ்சள் நீராடி அன்ன வாகனத்தில் கோயிலுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றாள்.

தேர் எல்லை வந்த மறுநாள் 11 ஆம் திருவிழாவாகவும் கடைசித் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகின்றது. கடைசித் திருவிழா அன்று மாரியம்மனும் பத்திரகாளியம்மனும் கோயிலில் தங்க ஊஞ்சலில் இருந்துவிட்டு மாலை இருவரையும் வெள்ளி ரிசப வாகனத்தில் அழைத்து வருகின்றனர். கடைசித் திருவிழாவிற்கு மறுநாள் அம்மனைத் தெப்பத்தில் உள்ள தேரில் வைத்து தெப்போற்சவ விழா எடுத்துத் திருவிழாவை நிறைவு செய்கின்றனர். 11 நாட்களும் எடுக்கும் திருவிழாக்கள் பல தரப்பட்ட இனக்குழுமக்களால் காலம் காலமாக நிகழ்த்தப் பெறுகின்றது.

நேர்த்திக்கடன்கள்

பத்திரகாளியம்மன் கோயிலில் நிகழ்த்தப்படும் நேர்த்திக்கடன்கள் பல. இவை மக்களின் பண்பாட்டை அவர்களின் சூழலோடு எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளது.

1. பொங்கல் வைத்தல்
2. முடி காணிக்கை
3. தீச்சட்டி எடுத்தல்
4. உருண்டுக் கொடுத்தல்
5. பால்குடம் எடுத்தல்
6. மாவிளக்கு எடுத்தல்
7. உருவம் கொண்டு வருதல்
8. காணிக்கைக் கொடுத்தல்
9. பறவைக்காவடி எடுத்தல்
10. ஆயிரம் கண் பானை எடுத்தல்

ஆகியவை ஆகும்.

1. பொங்கல் வைத்தலும் முடிக்காணிக்கை கொடுத்தலும்

சித்திரைத் திருவிழாவின் பொழுது அதிக மக்கள் பத்திரகாளியம்மனின் கோயிலின் முன்பிருக்கும் பொங்கல் மண்டபத்தில் பொங்கல் வைப்பர். பக்தர்கள் தங்கள் மனதில் வீடுகட்டுதல், திருமணம், நீண்ட நாள் பிணி நீங்க அம்மனிடம் வேண்டிக் கொள்வார்கள். பிறகு வேண்டியது நிறைவேறியதும் அம்மனுக்குப் பொங்கல் வைத்து அம்மனுக்குப் படையல் வைப்பர். முடிக்காணிக்கைக் கொடுத்த பிறகும் பொங்கல் வைப்பதுண்டு. இனிப்பான உணவை அம்மனுக்குப் படைப்பது மரபார்ந்த பண்பாடாகும். எனவே பொங்கலை அம்மனுக்கு உணவாய்ப் படைக்கின்றனர்.

மனிதன் தன் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் மிகப் பெரிதாகக் கருதினான். எனவே இறைவனுக்கு முடி காணிக்கை செலுத்துகின்றனர். பொதுவாக ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இவ்வகை நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர். இப்பகுதியில் இருக்கும் மக்கள் குழந்தை பிறந்தவுடனும் திருவிழாக் காலங்களிலும் இக்கோயிலுக்கு வந்து தம் முடியினைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

இக்கோயிலோடு தொடர்புடைய மக்கள் எந்த ஊரில் இருந்தாலும் முடிக்காணிக்கைக் கொடுக்க வந்துவிடுகின்றனர். நேர்த்திக்கடன் போட்ட நாளில் இருந்து முடிக் காணிக்கைச் செலுத்தும் வரை தலை முடியை வெட்டக்கூடாது

என்பது மக்களின் நம்பிக்கையாகக் கருதப்படுகிறது.

2. தீச்சட்டி எடுத்தல்

தீச்சட்டி எடுத்தல் என்பது மண்பாத்திரம் ஒன்றில் நெருப்பை வார்க்கின்றனர். அவ்வாறு வார்க்கப்பட்ட தீச்சட்டியை விரதமிருந்தவர்கள் எடுத்துக்கொண்டு பத்திரகாளியம்மன் கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்வர். குடும்பத்திலுள்ளோருக்கு அம்மை, காய்ச்சல், காலரா போன்ற நோய்களில் இருந்து குணமடைய வேண்டும் என்றப் பல காரணங்களுக்காகத் தீச்சட்டியை எடுக்கின்றனர். கொடி சாட்டியதிலிருந்து பூச்சட்டி எடுக்க ஆரம்பித்து விடுவர். தீச்சட்டி எடுத்த பிறகு மக்கள் தங்களுடன் வந்தவர்களுக்கு மாமிச உணவை சமைத்துப் பரிமாறுவர். நேர்த்திக்கடனாக தீச்சட்டியை எடுப்பர்.

தீச்சட்டியை ஒரு கை மற்றும் இரு கைகளிலும் ஏந்தி வழிபாடு நிகழ்த்துவர். 21 சட்டியை ஏந்துவதும் அதைப் பார்ப்பதும் மக்கள் தங்கள் வாழ்வு மேம்படக் காரணமாக அமையும் என்று நம்புகின்றனர்.

3. உருவம் கொண்டு வருதல்

உருவம் கொண்டு வருதல் என்ற நேர்த்திக்கடன் பத்திரகாளியம்மன் கோயிலில் செய்யப்படுகிறது. கால்வலி, கைவலி போன்ற நோய்களுக்கும் குடும்ப உறவுகளில் துன்பம் நேரும் போது இந்நேர்த்திக்கடன் செய்வதாக இறைவனிடம் வேண்டுவர். கால்வலிக்கு கால் உருவ பொம்மையும் கை வலிக்கு கை உருவ பொம்மையும் குழந்தை வரம் வேண்டி குழந்தை உருவ பொம்மையும் திருமணம் நடைபெற ஆண் பெண் உருவ பொம்மையும் சொந்த வீடுகட்ட வீடு பொம்மையும் வாங்கி வைப்பர். வாங்கிய பொம்மையை கோயிலில் அடுக்கி வைத்து வழிபாடு செய்வர். இவ்வாறு செய்வதால் தமது வேண்டுதல் நிறைவேறும் என்று நம்புகின்றனர்.

4. பறவைக்காவடி எடுத்தல்

பறவைக்காவடி என்பது பக்தர்கள் தங்கள் உடலில் கம்பிகளைக் கொண்டு அலகு குத்துகின்றனர். பிறகு உயரமான இயந்திரத்தில் காவடி போன்ற அமைப்பை உருவாக்கிப் பெரிய இயந்திரத்தில் தொங்குவர். ஒவ்வொரு முக்கியமான இடம் வரும்பொழுது மேலிருந்து கீழாகப் பறந்து வருவதைக் காணமுடிகின்றது. அவ்வாறு வரும் பொழுது மக்கள் தங்கள் கைக்குழந்தைகளைக் கொடுத்து வாங்குவர். குழந்தைகளை அவர்களின் கையில் கொடுத்து வாங்குவதால் குழந்தைகள் நலமாக வாழ்வர் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகின்றது.

முடிவுரை

பண்பாடு என்பது காலம் காலமாய்க் கடத்தப்படும் மரபு சார்ந்த செயல்பாடாகும். நாட்டார் தெய்வ வழிபாட்டில் எண்ணற்றப் பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன. கோபுரம் அமைத்தல், திருச்சுற்று மற்றும் பிரகாரத் தெய்வங்களை நிறுவியதிலும், நந்தவனம் அமைத்ததிலும் பழங்கால மக்களின் மரபு சார்ந்த நம்பிக்கை காணப்படுகின்றது. இறை வழிபாட்டில் முக்கிய வழிபாட்டு முறையாக ஆடி வெள்ளி, பௌர்ணமி நாட்களிலும் நவராத்திரி போன்ற முக்கிய நாட்களிலும் அம்மனுக்கு வழிபாடுகள் செய்வதால் பழங்கால மக்களின் நாகரீகம் மற்றும் பண்பாடு புகத்தப்படுகின்றது. 10 நாள் திருவிழாவிலும் பல இனக்குழு மக்கள் திருவிழாவை எடுத்தும், திருவிழாவில் பங்கெடுக்கும் பணியையும் காலம் காலமாhய் மேற்கொண்டு வருகின்றனர். நேர்த்திக்கடன்கள் செய்வது மக்களின் நம்பிக்கை வெளிப்பாடாய் இருப்பது உள்ளிட்டப் பல கருத்துக்கள் இக்கட்டுரையில்

ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

அடிக்குறிப்பு

1. பாலகிருஷ்ணன்.இரா முனைவர், தமிழ் மொழி சமுதாயம் பண்பாடு, ப.6
2. தட்சிணாமூர்த்தி.அ முனைவர், தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.2
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.154
4. சக்திவேல்.சு டாக்டர், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.230
5. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A8%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B5%E0%AE%A9%E0%AE%AE%E0%AF%8D
6. சண்முகானந்தம்.ஏ, தென்புலத்து மன்பதை பேராசிரியர் தொ.பரமசிவன், ப.302
7. சக்திவேல்.சு டாக்டர், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப223
8. ரெஜித்குமார்.த டாக்டர், நாட்டுப்புற இயல், ப.164

பார்வை நூல்கள்

1. சக்திவேல்.சு டாக்டர், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600108, மறுபதிப்பு சனவரி, 2001.
2. சண்முகானந்தம்.ஏ, தென்புலத்து மன்பதை பேராசிரியர் தொ.பரமசிவன், உயிர் பதிப்பகம், 4, 5 ஆவது தெரு, சக்தி கணபதி நகர், திருவொற்றியூர், சென்னை 600 019, இரண்டாம் பதிப்பு, நவம்பர் 2023.
3. தட்சிணாமூர்த்தி.அ முனைவர், தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், AP 1108, தென்றல் காலனி, மூன்றாவது தெரு, மேற்கு அண்ணா நகர், சென்னை 600 040, திருத்திய மறுபதிப்பு ஏப்ரல் 2021.
4. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் 608001, விரிவாக்கப்பெற்ற திருத்திய பதிப்பு : ஏப்தல் 2003
5. பாலகிருஷ்ணன்.இரா முனைவர், தமிழ் மொழி சமுதாயம் பண்பாடு, சபாநாயகம் பதிப்பகம், 176, கீழரத வீதி, சிதம்பரம் 608 001, முதற்பதிப்பு டிசம்பர் 2013.
6. ரெஜித்குமார்.த டாக்டர், நாட்டுப்புற இயல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் 600 050, மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2020.

© 2026 பொற்கொடி க, பத்மபிரியா மா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 354–360
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சு. தமிழ்ச்செல்வியின் ஆறுகாட்டுத்துறை காட்டும் சமூக வாழ்க்கை

ரேணுகாதேவி க[1,*], முனைவர். நித்யா இரா[2]

[1] பதிவு எண் : *R 20162912,* முனைவர் பட்ட பகுதிநேர ஆய்வாளர், தமிழ்த்துறை அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி., *India*

[2] உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை அழகப்பா திறன் மேம்பாட்டு நிறுவனம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: ரேணுகாதேவி க — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00070	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

சமூகம் என்பது மாறுபட்ட குணங்களை உடைய பல்வேறு மாந்தர்களைத் தன்னுள் அடக்கிய ஓர் அமைப்பாகும். ஒரு சமூகம் என்பது குறிபபிட்ட சில காலத்தில் மட்டுமே நிலைபெறும். அக்காலத்திறகுப் பிறகு இன்னொரு சமூகம் உருவாகும். இதனால், சமூகங்கள் காலந்தோறும் வேறுபடுதலை அறியலாம். சங்ககாலச் சமூகம் என்பது வேறு, இடைக்காலச் சமூகம் என்பது வேறு. பிற்காலச் சமூகம் என்பது வேறு. இச்சமூகங்களின் நிலைகளை அவ்வக்காலங்களில் தோன்றிய பலதிறப்பட்ட இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இவ்விலக்கியங்கள் வழி, இன்ன காலத்தில் இன்ன சமூகம் இவ்வாறிருந்தது என்பதைத் தெரிந்து கொளள முடிகிறது. பழைய இலக்கியவகைகளே அன்றி, நவீன இலக்கியவகையான புதினமும் எழுதப்பட்ட காலத்துச் சமூகநிலையை எடுத்துக்காட்ட முறபடுகிறது. அவ்வகையில், சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகளின்வழிப் புலனாகும் வெவ்வேறு சமூக வாழ்க்கை மற்றும் அவற்றின் நிலைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

Keywords / திறவுச்சொற்கள்: சு. தமிழ்ச்செல்வி; சமூகவியல்; ஆறுகாட்டுத்துறை; அளம்; புதினம்; சிறுகதை; தனிமனித சிந்தனைகள்; சமூகவாழ்க்கை

How to cite / மேற்கோள் காட்டும் முறை: க, ரே., & இரா, மு. நி. (2026). சு. தமிழ்ச்செல்வியின் ஆறுகாட்டுத்துறை காட்டும் சமூக வாழ்க்கை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 353–359. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8507

முன்னுரை

மனிதர்களின் சமூக வாழ்வினையும், நிகழ்வுகளையும் உணர்வுகளையும் ஒருங்கே கொண்டுள்ளதாகப் படைப்பது படைப்பாளனின் கடமையாகும். தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் இத்தகையப் பண்பினதாகவே படைக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் நிகழும் இன்ப-துன்ப நிகழ்வுகளை உணர்ச்சியுடன் படைக்கும்

எணணற்ற படைப்பாளர்கள் தமிழில் இருக்கின்றனர். இன்றைய நவீன இலக்கியங்கள் சாதாரண மக்களின் இனனல்கள், துன்பங்கள், ஆகியவற்றை எடுத்துரைப்பதாக இருக்கிறது. இதில் கவிதை, சிறுகதை, புதினம் ஆகியவையும் அடங்கும்.

தற்கால இலக்கியங்களான புதினம், சிறுகதை போன்றவற்றைப் படைத்து எளிய மக்களின் வாழ்வை உலகிற்கு காட்சிப்படுத்தும் எழுத்தாளர்களில் சு.தமிழ்ச்செல்வியும் ஒருவர். இவரின் இலக்கியங்கள் தனிமனித, சமூதாயம் சார்ந்த, குறிப்பாக சாதாரண எளிய மக்களின் எதார்த்ததை வெளிப்படுத்துவனவாக இருக்கின்றது. பெண்களின் மீது சமுதாயம் கொண்டுள்ள மதிப்பீடுகளை தராசு தட்டில் இட்டு எடைபோட வைக்கும் இவரது படைப்புகள்.

தமிழ் இலக்கியத்தில் எத்தனையோ படைப்பாளர்கள் பல்வேறு பொருள்சார்ந்த படைப்புகளைப் படைத்திருந்தாலும், கிராமப்புறங்களில், நகர்ப்புறங்களில் ஆணாதிக்க வாழ்வில் தங்களின இன்ப துன்பங்களை இழந்து, சமூதாயத்திலும் குடும்பத்திலும் வன்கொடுமைக்கு ஆளாகும் பெண்களின் வாழ்க்கையை இவர் எடுத்துரைப்பதில் இவரது படைப்புகள் வெற்றியடைந்துள்ளன.ஆதலால் இவரது படைப்புகள் தமிழ் எழுத்துலகில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது எனலாம். அநதவகையில் சமூகவியல் பார்வையில் படைக்கப்படும்; இலக்கியங்களாக சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகள் இருப்பதால், அப்படைப்புகள் ஒரு குறிப்பிட்ட தாக்கத்தையும், மாற்றங்களையும் ஏற்படுத்துபவனவாக இருக்கிறது. இதனடிப்படையில் சு.தமிழ்ச்செல்வியின படைப்புகளான புதினம், சிறுகதை போன்றவைகள் எவ்வாறு சமூவியல் பார்வையினை வெளிப்படுத்துகிறது என்பதைப் பற்றி இக்கட்டுரை விளக்கமாக ஆராய்கின்றது.

சமூகவியல் சொல் விளக்கம்

அறிவியல், புவியியல், வேதியியல், உயிரியல் என வழங்கப்படும் சொற்களைப் போல சமூகவியல் என்பதும் ஒன்றாகும். சமூகம் சார்ந்தக் கருத்துக்களைப் படிக்கும் துறை, பயிற்றுவிக்கும் துறை என்பதனால் இதனை சமூதாயவியல் என்றனர். சமூகம் + இயல் - சமூகவியல் என ஆகும். ஆகவே சமூகவியல் பற்றியும், அதனின் பொருள் பற்றியும் அறிந்துகொள்ள முதலில் “சமூகம்” என்றால் என்பதற்கான பொருள் விளக்கத்தைக் காணலாம். சமூகம் என்பதற்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையில் கூறும் கருத்துக்களைக் காணலாம்.

கலைக்களஞ்சியம்

“சமுதாயம் என்பது பொதுவாக மக்கள் வாழும் இடம், காலம், சமயம், கல்வி, மொழி பொருளாதார அமைப்பு மற்றும் உலகத்தோடு கொள்ளும் உறவுமுறை ஆகியவற்றால் அமைவதாகும்”[1] எனக் கலைக்களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது. மேலும் கூட்டு வாழ்க்கை அல்லது மனித இனத்தின் சேர்க்கை என்று இதனை விளக்குகிறார். தோழமை என்னும் பொருள் கொண்ட இலத்தீன் சொல்லான “சோயஸ்”என்பதிலிருந்தே சமுதாயம் என்ற சொல் தோன்றியது எனக்; கூறுகிறது. **“ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம்”**[2] எனக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. இதிலிருந்து மனிதன் இணைந்து வாழும் அமைப்பு என்பதும், அனைவரும் கூடிவாழும் ஒரு முறை எனவும் கொள்ளலாம்.

“இந்தப் புதிய நடப்புச் சமுதாயத்திற்கு முன்நிற்கும் படிநிலைச்

சமுதாயத்திற்கும்; எல்லை வரம்போ, காலவரையறையோ காட்டுவது அறிவிற்கு எட்டாத வகையில் இது காலமறியாது தோன்றியது. அந்நாள் தொட்டு மெல்ல மெல்ல வளர்ந்து உருபெற்று, காலதேவன் கையில் பட்டு, பெறவேண்டிய மாறுதல்களைப் பெற்று, வளர்ந்து வாழ்ந்து வரும் ஒப்பற்ற ஒன்று. ஆகவே காலத்திற்குக் காலம் சமுதாயம் வளர்ந்து வருகிறது. புதிய புதிய மாற்றங்களைப் பெற்றுத் திகழ்கிறது"[3] என்கிறார் அ.மு.பரமசிவானந்தம். இவரின் கருத்தின்படி பார்த்தால் நிலைத்த சமூகங்கள் என்ற ஒன்று இன்றுவரையில் இல்லை என்றே கூறலாம். காலத்தால் மாறும் தன்மை கொண்ட, காலத்திற்கேற்ப மாறும் தன்மைகொண்ட சமூகங்களே நிலைத்து நிற்கவும் முடியும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

சமூகமும் இலக்கியங்களும்

இலக்கியங்களின் முதனமையானப் பணியே மனிதர்களின் நிலையைப் பாடுதல் எனலாம். **"பாடுதல் என்றால் முதலில் பாடும் வழக்கம் இருநதது. அதனால் அதன் பொருளால் இவவாறுதான் சொல்ல வேண்டும். பாட்டு அல்லது செய்யுள் வடிவில் இருந்த இலக்கியங்களே பின்னால் புதுவடிவம் பெற்று தற்கால இலக்கியங்களாக வலம் வருகிறது. இலக்கியம் படைப்பது என்பது கலையாகக் கருதப்பட்டது. இதனை "கலைகளுள் இசை மிகச் சிறந்தது என்பர் சிலர். இலக்கியமே மிகச் சிறந்தது என்பர் சிலர்"**[4] என மு.வ உரைப்பதின் வழியே உணரலாம்.

மேலும், கலையாகப் படைக்கப்படும் இலக்கியங்கள் மனித வாழ்வில் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதையே அறிஞர்கள் கலை கலைக்காகவே என்றனர். இதனையே ஆபர்குரோம் "அறிவின கலப்பு இல்லாத காரணத்தாலும், கேட்டோர் யாவரையும் பிணிக்கும் தன்மையாலும் இசையே சிறந்தது என்பர். மனித வாழ்வின் சிறப்பியல்பாக உள்ள மொழியால் அமையும் காரணத்தாலும், வழிவழியாக விளங்கி நிலைத்த பயன் அளித்தலாலும் சிறந்தது என்பர்" என மு.வ ஆபர்குரோமின சான்றினை எடுத்துக்கூறி இலக்கியம் கலையாகப் படைக்கப்படுகிறது எனக் கூறுகிறார். மு.வ கூறுவதிலிருந்து மனிதனோடு தொடர்புடைய இலக்கியம் என்பதை நாம் உணரலாம். மனித வாழ்வியலை அழகுறப்பாடுவதில் இசையைக் காட்டிலும் தன் அழகு சொல்லால் அலங்கரித்துச் சொல்வது இலக்கியமே என்பதையும் மு.வரதராசனார் வலியுறுத்துவதைக் காணலாம்.

சு.தமிழ்ச்செல்வியின படைப்புகள் சமூகவியல் பார்வை

சு.தமிழ்ச்செல்வி பெண் படைப்பாளர், நவீன தமிழ் இலக்கிய உலகில் தனக்கென்று தனியொரு இடத்தைப் பெற்று மக்களின் எளிய வாழ்க்கையைப் புதினங்களாக, சிறுகதைகளாகப் படைத்துவருகிறார். பெண்களின் வேதனைகளை சமூகத்திற்கு வெளிச்சமிட்டு காட்டவே இவர் படைப்புகளைப் படைத்து வருகிறார். இவரின் படைப்புகளில் ஆண்-பெண் ஆகியோரின் சமூக நிலையும், எளியவர்களின் குடும்பங்கள் தற்காலத்தில் எத்தகையத் துன்பத்துடன் இருக்கிறது என்பதையெல்லாம் தன் எழுத்துக்களின் வழியே வெளிப்படுத்தி வருகிறார்.

ஆறுகாட்டுத்துறை காட்டும் சமூக வாழ்க்கை

ஆறுகாட்டுத்துறை என்ற புதினம் மீனவர்களைப் பற்றியதாக இருக்கிறது. மீனவர்களின் வாழ்வியலை முன்னிறுத்தி படைப்பாளர் படைத்துள்ளார். நோக்கம்

எதுவானாலும் சமூதாயவியல பார்வையில் பார்க்கும் போது புதினங்களில் பேசப்படும் கதையானது ஏதாவது ஒரு இனத்தவரை முன்னுறுத்தி கதை படைக்கப்பட்டிருக்கும் என்பதற்கு "ஆறுகாட்டுத்துறை" சான்றாகக் கூறலாம். திருமணம், கல்வி, தொழில், இன்னல்கள் என்ற அடிப்படையில் ஆறுகாட்டுத்துறை புதினத்தை அணுகலாம்.

இந்தப் புதினமும் முழுமுழுக்க மீனவர்களைப் பறறியது என்றாலும், அதில் இடம்பெறும் கதாப்பாத்திரங்கள் கற்பனையானது என்பது இதனை வாசிக்கும் போது உணரலாம். காரணம் படைப்பாளர் தான் கண்ட காட்சிகளை அப்படியே சொல்லியிருந்தாள் அது படைப்பிலக்கியம் என்ற தன்மையைப் பெறாது. ஆதலால் பாத்திரங்களையும் கதையையும் கற்பனையாகவே படைத்துத்துள்ளார். இக்கதையில் வரும் கதைகளில் ஏதேனும் ஒரு கதாப்பாத்திரம் உண்மையில் வாழ்ந்திருக்கலாம். புதினத்திற்காக அனைத்து உண்மையாக வாழ்ந்த, வாழும் மனிதர்களை படைத்துக்காட்டமுடியாது என்பதற்கு ஆறுகாட்டுத்துறை புதினம் சான்றாக அமைகிறது.

கடல் நீரில் மீனவர்கள் வலை வீசுவது, கடற்காற்று வீசுவது,அலைகளை எதிர்த்து படகு செலுத்தும் தன்மைகளையும், கடற்கரையையும் அதனை ஒட்டிய கிராமப் புறங்களையும் சிறந்த வருணனைகளுடன் படைத்துக்காட்டியுள்ளார் எனலாம். மீனவர்களின் வாழ்வியல் மீன் விற்பது, பிடிப்பது, இரவு நேரத்தில் அவர்களின் மகிழ்வுகள், திருவிழாக்கள் எனப் பல்வேறு வகைகளில் மிகச்சிறந்த வருணனைகளுடன் இப்புதினம் அமையப்பெற்றுள்ளது.

"கடலுக்குள் முன்குவிந்து வளைந்த, கடற்கரை எங்கும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மரக்கணங்களும் கரையேற்றி வைக்கப்பட்டிருக்கும் கட்டுமரங்களுக்கும் மத்தியில் துறையில் சற்று தூரத்தில் ஆழமான பகுதியில் வரிசைவரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன விசைப்படகுகள் ஆறும். சிறு பிள்ளைகள் ஏறி விளையாட எட்டாத தூரமாயிருந்தது அந்த தூரம். தொடுமரம் கொண்டே படகுகளுக்குப் போக வேண்டும். பெண்களும் சிறுவர்களுக்கும்;; கிட்டேபோய் அவற்றைத் தொட்டுப் பார்க்கவும் அவற்றின் வழவழப்பையும் வர்ண ஜொலிப்பையும் தடவிப் பார்க்கவும் ஆசையாக இருந்தது"[5] என்பதில் படைப்பாளர் நேரில் கண்டதை அப்படியே கற்பனை நயத்துடன் சொல்லும் போது தொட்டுத்தடவிப்பார்க்க ஆசையாக இருந்தது எனத் தன் மன எண்ணத்தை வெளிப்படுத்தியிருப்பது படைப்பின் வியப்பான கற்பனை நயத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

கதை நிகழும் இடங்கள்: திருமணம், கல்வி, தொழில்

திருச்செநதூர், தூத்துக்குடி, கோடியக்கரை, வேதாரண்யகடற்கரை ஆகிய பகுதிகளை ஒட்டியுள்ள கடல் சார்;ந்த பகுதிகள் கதை நிகழும் இடங்களாக இருக்கிறது. இப்புதினத்தில் மீனவர்களின் வாழ்வியல் கூறப்பட்டுள்ளதால், இவர்களின திருமண முறையை முதலில் காணலாம். இவர்கள் திருமணம் நிச்சயக்கப்பட்ட திருமணங்கள் மற்றும் காதல் திருமணங்கள் என்ற இரண்டு முறைகளில் அமைகிறது. **"சவரிமுத்துவிற்கு சொந்த ஊர் திருச்செந்தூர். அதே ஊரைச் சேர்ந்த ஆரோக்கியத்தின் மீது ஆசைப்பட்டிருக்கிறான். அவளுக்கும் சவரிமுத்துமேல் ஆசைதான். ஆனால் இருவரின் வீட்டிலுமே சம்மதிக்கவில்லை. இரவோடு இரவாகக் கிளம்பி இருவரும் ஊரைவிட்டு ஓடி வந்துவிட்டார்கள்"**[6]

மீனவர்கள் பிள்ளைகளை அவர்கள் விரும்பினால் பள்ளிக்கூடத்திற்கு படிப்பதற்கு அனுப்பி வைப்பர். “தான் படித்த புத்தகங்களையும் நோட்டுகளையும் எடுத்து அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான் சாமுவேலின் தம்பி அருள்தாசு. முக்கியமானவைகளையும் எப்போதும் பயன்படக் கூடிய புத்தகங்களையும் பெட்டிக்குள் பத்திரப்படுத்தினான். பதினொன்றாம் வகுப்புப் பாடப் புத்தகங்களை தனியா அடுக்கினான். அவற்றை பழைய விலைக்கு யாராவது கேட்டால் கொடுக்கலாம். இல்லையென்றால் வேதாரண்யத்தில் இருக்கும் பழைய புத்தகக் கடைக்காரரிடம் போட வேண்டியதுதான். இவனே பாதி விலையில் வாங்கிய பழைய புத்தகங்கள்தான் அவை... அருதாசுக்கு பள்ளிப் படிப்பு முடித்துவிட்டு மேற்கொண்டு படிக்க வேண்டுமென்றால் தஞ்சாவூருக்குத் தான் போக வேண்டும். இவனுடன் படித்த வேதாரண்யத்துப் பையன்கள் சிலர் தஞ்சாவூர் கல்லூரியில் சேர்ந்து படிக்கப் போவதாய் சொல்லிக் கொண்டிருந்தார்கள்”7 இதன் மூலம் மீனவர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் அக்கறை செலுத்தினர் என்பது தெரியவருகிறது.

மீன்பிடித் தொழில்தான் முதன்மையானத் தொழில். நன்கு மீன்பிடித்தொழிலில் வல்லவர்களாக இருப்பவர்களை முழுக்காளி என அழைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

நம்பிக்கைகள், திருவிழாக்கள்,வழிபாடுகள்

“வயத்துக் காவ கடல் தாயிகிட்ட கையேந்துனா அவ அள்ளிஅள்ளி; குடுப்பா. ஆனா பழி வாங்குற எண்ணத்தோடு எறங்குனா நம்பள காவு வாங்கிடமாட்டாளா?”8 என்பதில் இவர்கள் கடல்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது புரியும். மீனவர்கள் கடலைத் தங்களின் தெய்வமாகவே நினைத்தனர்.

“தாயே சமுத்திராதேவி எல்லாத்தயும் நீ கேட்டுகிட்டுதான் இருக்கிறியா? ஓம் பொண்ணப் பத்தி என்னென்னமோ பேசுறாவொள..ந பொங்கிவர மாட்டியா?” (ஆறுகாட்டுத்துறை,பக்-98).

“சமுத்திராதேவி...சமுத்திராதேவி ஆ..ஊன்னு கத்துறியே அநத அம்மாகிட்டயேக் கேட்டுப்பாரு”(ஆறுகாட்டுத்துறை,பக்-98), போன்றவற்றை உதாரணத்திற்குக் காட்டலாம்.

“மாசி மாதம். பௌர்ணமி நிலவொளியில் குளிர்ந்து கிடந்தது நிலம். மன்மதன் கோயில் திடல் பெட்ரோமாக்ஸ் கிளக்கு வெளிச்சத்தில் மேலும் ஒளிர்ந்தது. பலூன் ஊதாங்குழல் விசிறிமட்டை அமைந்திருப்போரும் பொறித்த முறுக்கு விற்போருமென அத்திடல் கோலாகலமாய் காட்சியளித்தது. விளையாட்டுப்பொருள்கள், கிளுகிளுப்பை, பலூன் சகிதமாய் பிள்ளைகள் அங்குமிங்குமாய் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர்.”[9]

“சிங்காரவேலுப்படையாட்சிக்கு முன் அவருடைய அப்பா பொன்னுசாமி படையாட்சி, அவருக்கு முன் அவருடைய அப்பா ரெங்கசாமி படையாட்சி, அவருக்கு முன் அவருடைய அப்பா தம்பியப்பன் படையாட்சி, அவருக்குமுன் ராமு படையாட்சி, அவருக்குமுன் கந்த படையாட்சியும் நடித்தார்கள்”[10] என்பதின் வாயிலாக திருவிழா மிகச்சிறப்பாக நடத்தப்படுகிறது என்பதை நாம் அறியலாம்.

ஆறுகாட்டுத்துறையினர் கும்பிடும் காவத்தம்மன் கோயிலுக்கோ, நடுகாட்டய்யா சவுரியா கோயில் பூசைக்கோ, கடலில் செல்லும் போதெல்லாம்

கூடவந்து உயிர்காக்கும் மலையாள வீரன் கோயிலுக்கோ ஆறுகாட்டுத்துறையினரோடு சேர்ந்து செல்லாமல் இருந்ததுமில்லை.

"..குண்டுகட்டாய் தூக்கிக்கொண்டு ஓடினார். ஊர்சனமும் பிரசவம் பார்க்கும் பெண்களும் அவர் பின்னால் ஓடினர். கடற்கரையில் கொண்டுபோய் தன் பொண்டாட்டியை போட்டவர்,„தாயே..நீ குடுத்தப்புள்ள யாம் பொண்டாட்டி வயத்துக்குள்ள. யாம் பொண்டாட்டிய எனக்குக் குடுத்துரு. ஓம் புள்ளய நீ பாத்துக்க" என்றவாறே கரையில் கிடந்து புரண்டார்.பிரசவம் நன்றாக முடிந்தது. பிள்ளையும் தாயும் ஆரோக்கியமாக இருந்தனர்"[11] என்பதிலிருந்து அறியமுடிகின்றது.

கடலில் மீன்பிடித்தல் என்பதால் உயிருக்கு உத்திரவாதம் இல்லை. சாமுவேலின் அம்மா ஆரோக்கியம் கருவாட்டு லாரியில் பயணிக்கும் போது, தூங்கி வண்டியிலிருந்து விழுநது இறந்தாள். சாமுவேலின தந்தை சவரிமுத்து கடலில் பழுதான படகினை சரிசெய்ய சென்றவன் கடலில் அரிய வகை மீன் கடித்து இறக்கிறான். சாமுவேல் தன் மனைவியிடம் கோபித்துக் கொண்டு கடலில் போனவன், சூறாவளிக் காற்றடித்து வேறுதேசத்திற்குச் சென்று பல ஆண்டுகள் கழித்து திரும்பி வருகிறான். இவவாறு வாழ்க்கை என்பதும் உயிர் என்பது மீன்வர்களுக்கு மிக எளிதாக எடுத்துக்கொள்கின்றனர். குறைந்த ஆயுளில் வாழ்வது., கல்வி கற்கமுடியாது சூழல், பொருளாதாரத் தட்டுப்பாடு, கடலில் தோன்றும் புயல்காற்றுச் சேதங்கள் என இவையனைத்தும் இவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களாக எடுத்துரைக்கிறது.

முடிவுரை

இவ்வாறாக, சு.தமிழ்ச்செல்வி அவர்களின் படைப்புத்திறனை சமுகவியல் பார்வையில் கண்டறிவதற்காக சமூகவியல் என்றால் என்ன? என்பதற்கான விளக்கம் அளித்து, சமூகம் என்பதின் பொருள் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. படைப்பாளரின் படைப்புகள் எவ்வாறு சமுகப்பார்வையுடன் படைக்கப்பட்டிருக்கிறது என்பதை தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கதாப்பாத்திரங்களின் தன்மைகள், தனித்துவமான நிகழ்வுகள், கதையின் திருப்புமுனைகள் என பல்வேறு கோணத்தில் இலக்கியக் கொள்கையுடன், உத்திகளாச் சொல்லப்பட்டு, அவற்றை சான்றுகளுடன் கூறப்பட்டுள்ளது. சு.தமிழ்ச்செல்வியின் புதினங்கள், சிறுகதைகள் சமூகப்பார்வையில் படைக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் சொல்லப்பட்டு விளக்கப்பட்டிருப்பதை அறியமுடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. கலைக் களஞ்சியம் தொகுதி,ப.477
2. மேலது, ப.489
3. அ.மு.பரமசிவானந்தம்,-சமுதாயமும் பண்பாடும், பக்-24
4. மு.வரதராசானார், இலக்கியத் திறன், பக்-44
5. சு.தமிழ்ச்செல்வி, ஆறுகாட்டுத்துறை, பக்-50
6. மேலது, பக்-9-10
7. மேலது, பக்-105
8. மேலது, பக்-44

9. மேலது, பக்-26
10. மேலது, பக்-28
11. மேலது, பக்-43

© 2026 ரேணுகாதேவி க, முனைவர். நித்யா இரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 361–367
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

அ.மாதவையாவின் விஜய மார்த்தாண்டம் நாவலில் நாட்டுப்புறக்கூறுகள்

முனைவர். மகேஷ் பாண்டி சு*

கௌரவ விரிவுரையாளர் (தமிழ்), தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். மகேஷ் பாண்டி சு — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00069	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழ் நாவல் இலக்கியத்தின் தொடக்க கால வளர்ச்சியில் அ.மாதவையாவிற்கு குறிப்பிடத்தக்க இடமுண்டு. சமூக சீர்திருத்த நோக்கத்தையும் நடப்பியல் பார்வையையும் அடிப்படையாகக் கொண்டு படைப்புகளை உருவாக்கிய மாதவையா, தமது நாவல்களில் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகளையும் பதிவு செய்துள்ளார். குறிப்பாக விஜயமார்த்தாண்டம் என்ற நாவல் மறவர் சமூகத்தின் வாழ்க்கைச் சூழலை மையப்படுத்தி அமைந்துள்ளதால் அச்சமூகத்தின் பேச்சு வழக்கு, பழமொழிகள், நாட்டுப்புறப் பாடல்கள், தாலாட்டு, ஆண்டிப்பாட்டு, தர்க்கப்பாட்டு போன்ற பல்வேறு நாட்டுப்புறக் கூறுகள் நாவலுக்குள் இடம்பெறுகின்றன. நாவலின் கதையமைப்பு, சமூகப் பண்பாடு ஆகியவற்றோடு தொடர்புகின்றன என்பதை ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: அ.மாதவையா – ராஜ் கௌதமன் – விஜய மார்த்தாண்டம் – நாவல் – நாட்டுப்புறப் பண்பாடு – பழமொழிகள் – நாட்டுப்புறப் பாடல்கள் – மறவர் பாட்டு – தாலாட்டு – தர்க்கப் பாட்டு – ஆண்டிப் பாட்டு – மறவர்களின் உரையாடல்கள் – அழறாய் – சீமந்தினி – சிவகாமி – சுலோசனாசதி – அபிமன்யு சுந்தரி – சங்கர சங்கர சம்பு – தெம்மாங்கு – சிந்து அ.மாதவையர்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: சு, மு. ம. பா. (2026). அ.மாதவையாவின் விஜய மார்த்தாண்டம் நாவலில் நாட்டுப்புறக்கூறுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 360–366. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8509

முன்னுரை

1892 ஆம் ஆண்டு முதல் 1925 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தமிழக பண்பாட்டுச் சீர்த்திருத்தத்தை நாவல்கள், சிறுகதைகள், பத்திரிக்கை கட்டுரைகள் வாயிலாக எழுத்தாக்கங்கள் வழி நிகழ்த்திக் காட்டியவர் அ.மாதவையா ஆவார். மாதவையா, நடப்பியல் பாங்கிலான சமூக நாவல்களைப் படைத்தார் என்றாலும் நீதி உரைக்கும் நோக்கத்திற்காகவும், நாட்டுப்புறப் பாடல்கள் மீது தமக்கிருந்த நாட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும் தம் நாவல்களில் நாட்டுப்புற இலக்கியக்

கூறுகளைப் பயன்படுத்தியுள்ளார். அதனில் விஜய மார்த்தாண்டம் என்ற நாவலில் காணப்படும் நாட்டுப்புறக்கூறுகளை ஆய்வதாக இக்கட்டுரை விரிகிறது.

திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீ வைகுண்டம் தாலுகாவிலுள்ள பெருங்குளம் என்னும் கிராமத்தில் அநந்தநாராயணையர் என்பவருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் அ.மாதவையா. “இவர்களது மூதாதையர் தெலுங்கு நாட்டிலிலுந்து இடம்பெயர்ந்து பெருங்குளத்தில் குடிறேறியுள்ளனர்”[1] (மாதவையாவின் புதல்வர் மா.கிருஷ்ணன் ஆங்கிலத்தில் தயாரித்துள்ள ‘The Descent of the P.H.ites’ என்ற வரைபடத்தில் அந்த அவதானியின் மரபு வழிவந்தோர் பற்றிக் காணலாம்.) மாதவையாவுக்கு இசை மீது மிகுந்த ஆர்வம் இருந்தது. செவ்வியல் இசையையும் நாட்டுப்புற இசையையும் கேட்டு மகிழ்ந்தார். அவர் படைத்த நாவல்களில் குறிப்பாக விஜய மார்த்தாண்டம் நாவலில் அவருக்குச் சந்தப் பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள் ஆகியவற்றின் மீதிருந்த ஈடுபாட்டைக் காணமுடிகிறது.

விஜய மார்த்தாண்டம் நாவல்

மறவர் சமூகத்தின் காதல் கதை. நிலவுடைமையாளர்கள் சிற்றின்ப ஆசை காரணமாக செல்வம் தேய்ந்து, நிலைகுலைந்து அழிவதை கதைக்கருவாகக் கொண்டு படைக்கப்பட்ட நாவல் விஜய மார்த்தாண்டம் ஆகும். வீரசங்கிலித்தேவர் என்ற ஜமின்தாருக்கு இரு மனைவியரும் பல விலைமாதர்களும் வைப்பாட்டிகளும் உள்ளனர். புலிமலை ஜமினிலிருந்து வரக்கூடிய செல்வங்களை சிற்றின்ப நாட்டங்களிலேயே கழிக்கிறார். மற்றொரு இளைஞனைக் காதலிக்கின்ற சிவகாமி என்ற இளம்பெண்ணை அடைவதற்காக ஏராளமாக செலவு செய்கிறார். ஜமின் பெயரில் வட்டிக்கு கடன் வாங்குகிறார். இறுதியில் சிறை தண்டனை பெறுகிறார். சிற்றின்ப நாட்டம் செல்வத்தை அழித்து வாழ்வை நிர்மூலமாக்குவதை இந்நாவல் வழி காணமுடிகிறது. இந்நாவலில் திருடர்கள் வழிப்பறி செய்தல், கொள்ளையடித்தல், கொலைசெய்தல், பெண்ணைக் கடத்துதல், நீதிமன்றத்தில் பெண் வழக்காடுதல், தூக்குத்தண்டனை யைக் கடைசிக் கணத்தில் தடுத்தல், முதலிய நிகழ்ச்சிகள் எதிர்பாராத திருப்பங்களைக் கொண்டவையாக வைத்து வருணிக்கப்பட்டுள்ளன.

நாட்டுப்புற இலக்கியக் கூறுகள்

நாட்டுப்புற மக்களிடம் காணப்படும் நம்பிக்கைகள், சடங்கு முறைகள், பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், விளையாட்டுக்கள், கதைகள் போன்றவற்றின் சாரம்சங்கள் நாட்டுப்புற இலக்கியங்கள் என்று வரையறுக்கப்படுகிறது.

பழமொழிகள்

மக்களிடம் வழங்கிய பழமொழிகள், எளிய உவமைகள், உருவகங்கள் பெற்றவையாக, நேரடியாக நீதிகளைப் பொன்மொழிகளாகக் கூறுவனவாக அமைந்துள்ளன. அவை வெறும் நீதி மட்டும் உரைப்பனவாக இல்லாமல் இன்பம் பயக்கும் முறையில் கூறப்பட்டவை யாகவும் உள்ளன. தொடக்ககால நாவலாசிரியர்கள் அனைவருமே பழமொழிகளைப் பயன்படுத்தத் தவறவில்லை.

“மந்திரங்கால் மதிமுக்கால்” (வி.மா. பக். 235)

“அடாஅது செய்வார் படாஅதுபடுவார்” (வி.மா. பக். 245)

“வேலியே தின்றால் தெய்வமே காவல்" (வி.மா. பக். 205)

“கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே” (வி.மா. பக். 84)

“ஆறிலும் சாவு நூறிலும் சாவு” (வி.மா. பக். 121)

“பிண நாற்றம் கழுகுக்குத் தெரிவது போல” (வி.மா. பக்.30)

“பாலுக்குக் காவல், பூனைக்குத் தோழன்” (வி.மா. பக்.232)

போன்ற பழமொழிகளை எள்ளல் சுவையுடன் வீரமாமுனிவர், வேதநாயகம்பிள்ளை பயன்படுத்தியது போலவே அ.மாதவையாவும் பயன்படுத்துகிற பாங்கினைக் காணமுடிகிறது.

நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறக் கதைகள் போலவே நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்வுடன் நெருங்கிய உறவு பூண்டவை நாட்டுப்புறப் பாடல்களாகும். இப்பாடல்களை இம்மக்கள் நாட்டுப்புற இசையில் பாடி வருகிறார்கள். நவீன நாகரீக வளர்ச்சி பெருகப் பெருக இப்பாடல்கள் அழிந்து வருகின்றன. இந்நிலையை மாதவையா அன்றே உணர்ந்துள்ளார். எளிய மக்களின் பாடல்கள் மீது மாதவையாவுக்கிருந்த ஈடுபாட்டை, 'வி.மா.' நாவலில், விஜய மார்த்தாண்டர் வழியாகப் பின்வருமாறு உரைத்துள்ளார்." (வி.மா. பக்.128,129)

'...தெம்மாங்கு, சிந்து நொண்டி, குறவஞ்சி முதலியவற்றிற்குக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. கிருதிகளும், பதசாகித்யங்களும். இந்துஸ்தானி மெட்டுப் பாட்டுக்களும், நாடகப் பாட்டுக்களும், இங்கிலீஷ் 'நோட்டுக்கள்' போன்ற பாட்டுக்களுமே இப்பொழுது விரும்பப்படுகின்றன..நாட்டுப் புறங்களில் மறப்பெண்கள் கும்மியடிப் பதையும், பள்பாடுவதையும் பார்க்க எனக் கெப்பொழுதும் ஆசை; சில வண்டிக்-காரர் தெம்மாங்கு பாடுவதும் வெகு நன்றாகக் கேட்டிருக் கிறேன்...'[2] (அ.மாதவையாவின் தமிழ் நாவல்கள் ஓர் ஆழ்நிலைப் பார்வை, ராஜ் கௌதமன், பக்.154)

மாதவையா இக்கூற்றின் வழியாக, நாட்டுப் புறங்களில் வழங்கும் கும்மி, தெம்மாங்கு முதலான நாட்டுப்புறப் பாடல்களில் தமக்கிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்தியுள்ளார். மாதவையர் உப்பு சுங்க இலாகாப் பணியின் பொருட்டுச் சென்னை மாகாணத்தின் இராமநாதபுரம் முதல் வடக்கே ஆந்திரம் வரைச் சுற்றி வந்துள்ளார். நகரங்களுக்கு வெகு அப்பாலிருந்த கிராமங்களுக்குப் பணியின் காரணமாகச் சுற்றிவந்த மாதவையாவுக்கு நாட்டுப்புற மக்களின் பாடல்களைப் பற்றிய அறிவும், அவற்றில் ஈடுபாடும் ஏற்பட்டிருக்க வாய்ப்பிருந்திருக்கும். மாதவையா தம்முடைய நாவல்கள் மூலம், குறிப்பாக 'வி.மா.' நாவல் மூலமாக, தமிழ்நாட்டு மக்கள் மறக்கத் தொடங்கியிருந்த நாட்டுப்புறப் பாடல்களை நினைவூட்டியுள்ளார். 'விமா.' நாவலில் 'கள்ளர்பாட்டு' எனப்படும் மறவர் பாட்டுக்களையும். ஆண்டிப்பாட்டையும் எழுதியுள்ளார்.

மறவர் பாட்டு

'வி.மா.' நாவலில் திருடிப் பிழைக்கும் மறவர்கள் பாடுவதாகக் கீழ்வரும் மூன்று பாடல்களை எடுத்துக் கூறியுள்ளார் மாதவையா".

'பனை கறுத்திருக்கும்

பறங்கி சோறு வெளுத்திருக்கும்

அதிலே வடியும் சாற்றைக் குடித்தால்

தலை கிறுகிறுக்கும்.

முக்கலச் சாராயம் பறங்கி

முன்னூறு கோழிமுட்டை

எத்தனை தின்னாலும்

பறங்கி வெற்றிலை தின்னாற்போம்.

கறுத்த கண்களடா.

பறங்கி பருத்த கொண்டையடா

சிறுக்கி முறுக்கி உருக்கி

மனத்தைக் கிறுக்கி விட்டதடா." (வி.மா. பக்.73)

இப்பாடல்களை நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து மாதவையா எடுத்தாண்டாரா, அல்லது அவற்றின் சாயலில் தாமே படைத்துக் கொண்டாரா என்பதை அறிந்து கொள்ளச் சான்றெதுவும் கிடைக்க வில்லை.

ஆண்டிப்பாட்டு

'வி.மா.' நாவலில்,

'சங்கர சங்கர சம்பு, சிவ

சங்கர சங்கர சம்பு

சங்கர சங்கர சம்பு... (வி.மா. பக்.96,97)

எனத் தொடங்கும் நீண்ட ஆண்டிப்பாட்டு மாதவையாவால் நாவலின் கதைக்கேற்பப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வழக்கில் இருந்த ஆண்டிப் பாட்டு வடிவத்தை ஏற்றுக் கொண்ட மாதவையா, அதில், கதைத் தலைவி சிவகாமிக்கு மட்டும் புரிந்து கொள்ளத் தக்கவிதத்தில் செய்தியை மாதவையாவே படைத்துள்ளார்.

தாலாட்டு

தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தாலாட்டுப் பாட்டு என்பது எல்லாச் சாதியினரிடமும் காணக் கூடியதாக உள்ளது. ஒவ்வொரு சாதியினரிடமும் பிற சாதியினரிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்கத் தக்க விதத்தில் மொழிவழக்கு வேறுபடுகிறது. இதனைச் சாதிமொழி என்பர். பிராமணக் குடும்பங்களில் பேசப்படும் மொழி வழக்கை ஒட்டியே அவற்றின் தாலாட்டுப்பாட்டின் மொழி வழக்கு அமைந் துள்ளது. 'மு.மீ.' நாவலில், விதவை முத்து மீனாட்சி, தன் அண்ணன் குழந்தையைத் தாலாட்டுகின்றபோது 15 அடிகள் கொண்ட நீண்ட ஒரு தாலாட்டுப் பாட்டு இடம் பெறுகிறது"[3] (அ.மாதவையா, "முத்து மீனாட்சி" (வானவில் பிரசுரம், சென்னை 1981 பக்.65,66) .

'ஆராரோ ஆராரோ ஆரார் அடித்தாரோ? ஆரடித்து நீ அழறாய் அஞ்சனக் கண்மைகரைய ஆரடித்து நீ அழறாய் அடித்தாரைச் சொல்லியழு மேற்கண்ட தாலாட்டுப் பாட்டில் 'அழறாய்' என்ற சொல்லாட்சி பிராமணச் சாதியினர் வழங்கும் கிளைமொழிச் சொல்லாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரை, மாதவையாவின் நாவல்களில் காணத்தகும் மரபுக் கூறுகள் விரித்துரைக்கப்பட்டன. தமிழின் நடப்பியற்பாங்கான சமூக நாவலுக்கு மாதவையாவை முன்னோடி எனக் கூறினாலும், அவர்தம் காலச்சூழலின் தாக்கத்திற்கு உட்பட்டே தமிழ்ச் செய்யுள் இலக்கியத்தின் மரபுக் கூறுகளை விரவி நாவல்களைப் படைத்தார் என்பது புலப்படு கிறது. காவியக் கூறுகளும், நீதி இலக்கியக் கூறுகளும், நாட்டுப்புற இயலின் கூறுகளும் நடப்பியல் கூறுகளோடு கலந்து அமைக்கப் பட்டனவாக அவருடைய நாவல்கள் காட்சியளிக்கின்றன.

'வி.மா' நாவலில், விஜயமார்த்தாண்டரும், அவருடைய காதலி சிவகாமியும் நிலவொளியில் தனிமையில் அமர்ந்து காதல் மொழி பேசும் போது, சிவகாமி பாடும் காதற் சுவைப் பாடல்களை எழுதியுள்ளார். அவ்வாறு அவள் பாடும் பாடல்கள், 'ஸ்திரிபுருஷ ஸம்வாதமாக' (வி.மாபக். 129) அமைவதாக மாதவையா குறிப்பிட்டுள்ளார். இவ்வகைப் பாடல்கள் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில், 'தர்க்கப்பாட்டு' என வழங்கப்பட்டன. பாத்திரம் பாடும் பாடல்களை, தம் காலத்து நாடகங்களில் பாடப்பட்ட பாடல்களின் சாயலில் மாதவையர் அமைத்துள்ளார். 'வி.மா' நாவலில், சிவகாமி பாடுவதாக அமைந்த இரு காதல் பாடல்களுக்கு ஒப்புமை கொண்ட இரு நாடகப்பாடல்களைக் காணலாம்.

காதலியைச் சேரத்துடிக்கும் ஆர்வத்தைக் கட்டுக்கடங்காத முறையில் காதலன் பாடித் தெரிவிக்கிறபோது, காதலி பாடும் பாட்டாக 'வி.மா ' நாவலில் கீழ்வரும் பாடல் காணப்படுகிறது.

'காதலி

நல்ல துடுக்கிது நல்ல கொழுப்பிது

நாணமும் நன்று நன்றே - உனைச்

சொல்லக் குறையிலை கண்டு கொண்டாய்

துணை யாருமில்லை. என்றே

கல்லைக் குனித்த கடவுளராணை!

இங்கேதுஞ் சொலேன் உரையே - இனி

அல்லற்படுத்தாதே ஆக்கப் பொறுத்தனை

ஆறப் பொறு துரையே (வி.மா.பக். 130)

சங்கரதாஸ் சுவாமிகளின் பல நாடகங்களில், இதே போன்ற சூழலில் காதலி பாடுவதாக வரும் பாடல்களை 'தர்க்கப்பட்டு' என்றழைத்தனர். மேலே காட்டியுள்ள காதலி பாட்டு 'சுலோசனாசதி' நாடகத்தில் வரும் பாட்டுடன் ஒப்புமை கொண்டுள்ளது.

'தர்க்கப்பாட்டு

இராகம் - பூர்வகல்யாணி தாளம்: ஆதி

பாட்டு

புத்திமதி கெட்டுப் போகத்தாசைப் பட்டுப்

பித்தமு மேலிட்டுப் பேசுவதை விட்டு

சத்தியத்தைக் கிட்டு தர்மநெறி தொட்டுச்

சித்தந் தெளிந்திட்டுச் செய்வீர் இந்தமட்டு[4] (சங்கரதாஸ்சுவாமிகள், "சுலோசனாசதி" பக்.13)இவ்விரு பாடல்கள் வெவ்வேறு சூழலில் பாடப்படினும், அமைப்பு ஏறத்தாழ ஒன்றாக இருத்தலைக் காணலாம். 'வி.மா' நாவலில் விஜய மார்த்தாண்டர் காதல் பாட, அதற்கும் பதிலாகச் சிவகாமி தனக்குத் தெரிந்த சிந்துப் பாடல்களைப் பாடுகிறாள். அவற்றில் ஒன்று கீழ்வருமாறு:

ஐயகோ நான்பெற்ற கோதாய்

அடிபேதாய் நிஜம் ஓதாய் - உனைச்

செய்தென்ன அவன் சூதாய் - அந்த

மாயத்தன மாயாவியின்

நேயத்தினில் நீயாவியை

விட்டிடவோ, வுன் விதியும் இந்த

மட்டிளிவோ வுன்மதியும்' (வி.மா. பக். 128)

இப்பாடல் அமைப்பு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களான 'அபிமன்யு சுந்தரி'[5] (சங்கரதாஸ்சுவாமிகள், "அபிமன்யு சுந்தரி" சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம் வெளியீடு, சென்னை, 1963) பக்.48, 49) 'சுலோசனா சதி"[6] (சங்கரதாஸ் சுவாமிகள், "சுலோசனா சதி" பக்.49), 'சீமந்தனி*[7] (சங்கரதாஸ் சுவாமிகள், சீமந்தினி... 1969) பக்.69,70) ஆகியவற்றில் வரும் தர்க்கப்பாடல்களுடன் ஒப்புமை கொண்டதாகும். ஒப்புமைக்காக, 'சீமந்தனி' நாடகத்தில் வரும் ஒரு தர்க்கப் பாட்டினைக் காணலாம்.

'தர்க்கப்பாட்டு

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

காவடிச் சிந்து

அந்த மாது மீது மோகம்

கொண்ட சோகம் மிகுதாகம் - ஆகி

ஐயையோ வாடுது தேகம் - இனி

அரை நாழிகை வரையாயினும்

நிலையாகுவதிலையே கெதி

யாதோ கலங்கும் விவேகம் - என்

ஆவி பிழைத்தல் சந்தேகம்[8] (சங்கரதாஸ் சுவாமிகள், சீமந்தினி... 1969) பக்.69)

இவ்விருபாடல்களின் ஓசை ஒழுங்கிலுள்ள ஒப்புமை குறிப்பிடத்தக்க தாகும். 'வி.மா.' நாவலிலிருந்து இதுவரை எடுத்துக் காட்டப்பட்ட பாடல்கள், காதலர்கள் பாடுவதாக அமைவதோடு, அக்கால நாடகங் களில் பாடப்பட்ட பாடல்களோடு ஒப்புமை கொண்டவையாகவும் இருப்பதை அறியமுடிகின்றது.

முடிவுரை

விஜய மார்த்தாண்டம் நாவல் மறவர் சமூகத்தை மையமிட்டு அமைவதால் இந்நாவலில் நாட்டுப்புறக்கதைகளும், விடுகதைகளும், பழமொழிகளும், விடுகதைகளும் தாலாட்டுப் பாடல்களும், தர்க்கப்பாடல்களும் பயின்று வந்துள்ளன. இந்நாவலில் கல்லாத மறவர்களின் உரையாடல்களில் கொச்சைத் தமிழ் நடையையும், பிற இடங்களிலெல்லாம் கற்றோர் போற்றும் புலமை நடையையும் பின்பற்றியுள்ளார். இந்நாவல் மறவர் இன மக்களின் பண்பாட்டினை பதிவு செய்துள்ளது. மக்களின் வாழ்வியல் மொழிநடை மற்றும் பாடல் மரபுகளுக்கு நாவலில் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களையும் அக்கால நாடகப் பாடல் மரபுகளையும் இணைத்துப் பயன்படுத்தியிருப்பது மாதவையாவின் படைப்பாக்கத் திறனை வெளிப்படுத்துகிறது.

அடிக்குறிப்புகள்

முதன்மைத் தரவு

1.அ.மாதவையா, விஜய மார்த்தாண்டம் (நாவல்), ஸ்ரீ நிவாஸ. வரதாச்சாரியார் அண்டு கம்பெனி வெளியீடு, முதற்பதிப்பு, 1903, விஜய மார்த்தாண்டம், பக், 73, 84, 96-97, 121, 128-130,205,232,235,245

துணைமைத் தரவுகள்

1.அ.மாதவையாவின் தமிழ் நாவல்கள் ஓர் ஆழ்நிலைப் பார்வை, ராஜ் கௌதமன், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட் வெளியீடு, முதல் பதிப்பு, ஜனவரி.2019, பக்.271,

2.மேலது, பக்.154

3. அ.மாதவையா, “முத்து மீனாட்சி” (வானவில் பிரசுரம், சென்னை, பதிப்பு, 1981 பக்.65,66) .

4. சங்கரதாஸ்சுவாமிகள், சுலோசனாசதி, சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், சென்னை, பதிப்பு -1966, பக்.13,

5. சங்கரதாஸ்சுவாமிகள், “அபிமன்யு சுந்தரி” சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம் வெளியீடு, சென்னை, 1963) பக்.48, 49

6. சங்கரதாஸ் சுவாமிகள், “சுலோசனா சதி” சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், சென்னை, பதிப்பு -1966,பக்.49),

7.சங்கரதாஸ் சுவாமிகள், சீமந்தினி, சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், சென்னை, 1969) பக்.69,70

© 2026 முனைவர். மகேஷ் பாண்டி சு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 368–372
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

பா. செயப்பிரகாசம் - தாலியில் பூச்சூடியவர் சிறுகதையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல்.

விஜயலட்சுமி ரா*

ஆசிரியர் கல்வியியல் பயிற்சி மாணவி தமிழ்த் துறை. பி எஸ் ஆர் கல்வியியல் கல்லூரி அப்பநாயக்கன்பட்டி செவல்ப்பட்டி சிவகாசி, விருதுநகர் மாவட்டம் . தமிழ்நாடு ஆசிரியர் கல்வியல் பல்கலைக்கழகத்தால் இணைவு பெற்ற கல்லூரி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: விஜயலட்சுமி ரா — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00068

Abstract / ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம் என்பது காலம் காட்டும் கண்ணாடி மக்களின் சமுதாயப் பிரச்சினைகளைப் பேசுவதாக புதினம், சிறுகதை, கவிதை, ஹைக்கூ, திரைப்படம் போன்றவை நவீன இலக்கியங்களாக அமைகின்றன. பொதுவாக சமுதாயத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகளை பிரதிபலிப்பனாக இவ்வுலக்கியங்கள் திகழ்கின்றன.

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் அதிகமான நிலப்பரப்புகள் கரிசல் மண் பகுதியே , கரிசல் வட்டாரங்களின் முதன்மை தொழில் விவசாயம் . இப்பகுதிகளில் நில உடமை சமுதாயம் உயர் சாதியினர் செல்வச் செழிப்புடன் வாழ்கின்றனர். அதற்கு உறுதுணையாக தங்கள் வாழ்க்கையை அற்பணித்தவர்கள் கீழ் சாதி விளிம்பு நிலை மக்களவர். பா. செயப்பிரகாசம் அவர்களின் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் என்னும் தலைப்பில், அதிகார வர்க்கம், கீழ் சாதி மக்களின் உழைப்பை சுரண்டுதல், ஜாதியை பாகுபாடு, தீண்டாமை, பொருளாதார நிலை, பெண் அடிமை , உணர்வு, உரிமை, சுயமரியாதை, எதிர்ப்புணர்வு, மக்களின் பங்களிப்பு ஆகியவற்றை ஆராய்வதை இக்கட்டுரையின் நோக்கமாகும்.

Keywords / திறவுச்சொற்கள்: விளிம்பு நிலைமக்கள்; சாதியை பாகுபாடு; தீண்டாமை; வறுமை; சுரண்டல்; பாலியல் வன்கொடுமை; பெண்களின் நிலை

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ரா, வி. (2026). பா. செயப்பிரகாசம் - தாலியில் பூச்சூடியவர் சிறுகதையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 367–371. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8511

முன்னுரை

கரிசல் இலக்கியத்தின் தந்தை கி.ரா அவரை பின்தொடர்ந்து எழுதியவர்கள் பூமணி, செயப்பிரகாசம், உதயசங்கர், சோ. தர்மன் இவர்கள் படைப்புகள் ஒவ்வொன்றும் அவரவர் வாழும் பகுதியைச் சார்ந்த படைப்புக்களமாக அமைகிறது.. அவ்வாறு

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம் ராமச்சந்திராபுரம் கிராமம் பிறப்பிடமாகக் கொண்ட பா. செயபிரகாசம் அவர்கள் தான் வாழும் கிராமங்களை கதைக்களமாகக் கொண்டு இலக்கிய படைப்புகளை படைத்துள்ளார். மக்களின் மொழியில் எழுதுவது என்பதை விட மக்களின் வாழ்வை மொழியாக்குவது என்பதுதான் பா. செயபிரகாசத்தின் கலை வேலைப்பாடு. அவரை கரிசல் படைப்பார் என்று தனித்து வகைப்படுத்தினாலும் பேசும் மொழியும், வெளிப்பாடும் தொனியும், வாழ்ந்த வாழ்வையும் சூழலையும் எல்லோருக்குமான மொழியாகி விடுகிறது. இதெல்லாம் பா. செயபிரகாசம் படைப்பாளிக்கு தான் சாத்தியம் அறியாத வாழ்வே ஆவணங்களில் ஆராய்ந்து ஆயிரம் பக்கங்களில் படைப்பாக்குவது வேறு, அறிந்த வாழ்வை அனுபவத்தின் வழியாக ஆராய்ந்து உணர்த்துவது என்பது வேறு, ஆனால் தான் வாழ்ந்த கிராமத்தில் விளிம்பு நிலை மக்களின் துயரங்களை தனது படைப்புகளில் முதன்மை கதைக்களமாக அமைத்துள்ளார் . பா. செயப்பிரகாசம் அவர்களின் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் ஒரு கரிசல் கிராமத்தில் நில உடமை கொண்ட உயர்சாதி முதலாளிகள் அவர்களை சார்ந்து வாழும் கீழ் சாதி மக்களின் உழைப்பை சுரண்டுதல், ஆதிக்க அடக்கமுறை, பாலியல் அத்துமீறல்கள், வறுமை, தீண்டாமை, பெண்களின் நிலை போன்றவை ஆய்வின் நோக்கமாக இக்கட்டுரையில் அமைகிறது.

விளிம்பு நிலை மக்கள்

“விளிம்பு நிலை மக்கள் என்று குறிப்பிடப்படும் நபர்கள் சமூகத்தில் எந்த விதமான அங்கீகாரமும் இல்லாதவர்கள் தங்களுடைய உரிமைகளுக்காக போராடுபவர்கள் தற்போது இருக்கின்ற நிலையை தக்க வைத்துக் கொள்வதில் அந்த மக்கள் மிகுந்த கவனமாக இருக்கின்றனர்”. “(பெருமாள் முருகனின் படைப்புகளில் விளிம்பு நிலை மாந்தர்கள் பா 51)”1

சமுதாய அடுக்கில் கீழ் நிலையில் விளிம்பில் ஓரத்தில் இருப்பவர்களையே அதாவது சாதி, சமயம், பாலினம் என்ற எல்லா தளங்களில் ஒடுக்கப்பட்ட புறக்கணிக்கப்பட்ட தாழ்நிலைக்கு தள்ளப்பட்ட மக்கள் கீழ் சாதி பாலியல் தொழில்கள், அரவாணிகள், தேவதாசிகள், தொழு நோயாளிகள், அனாதைகள், ஆதரவற்றவர்கள், மாற்றுத் திறனாளிகள், முதலாளர்களை விளிம்பு நிலை மனிதர்களாவர். .”(உங்கள் நூலகம் ஆகஸ்ட் 2015 பக் 91 92)”2விளிம்பு நிலை மக்கள் யாவர் என்பதற்கு கொங்கு வரலாற்று ஆவணங்களில் விளிம்பு நிலை மனிதர்கள் என்னும் கட்டுரையில் விளக்குகிறார் நா. மணிகண்டன்.

பா. செயப்பிரகாசம் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் கீழ் சாதிப் பெண்கள் தாலியில் பூச்சூடியவர்கள் அடிமை தொழில் செய்யப்பட்டவர்கள் உயர்சாதிகளின் நிலங்களில் கூலிக்கு வேலை செய்தவர்கள் தீண்டாமை என்னும் பெயரில் ஊர்காலிமாடு மேய்த்தவர்கள் அதிகார வர்க்கங்களின் அடக்குமுறைகளுக்கு உட்பட்டவர்கள் பாலியல் அத்துமீறல்களுக்கு ஆட்படுத்தப்பட்டவர்கள் தங்களின் உரிமையையும் உணர்வையும் எதிர்த்து போராடியவர்கள் என இச் சிறுகதைகள் தைலி கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளார்

சாதிய பாகுபாடு

சாதிய அடிப்படையிலான பாகுபாடுகள் அதிகார வர்க்கங்களின் ஆதிக்கமாக செயல்பட்டு வருகிறது. என்பதை செயப்பிரகாசம் அவர்கள் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் விமர்சனப் பார்வையுடன் வெளிப்படுத்துகிறார். குறிப்பாக கீழ் சாதி மக்களின் வாழ்வில் உயர் சாதியினர் ஆதிக்கம் செலுத்தும்

ஒடுக்குமுறைகளும் முரண்பாடுகளையும் இக்கதையில் சுட்டிக்காட்டி உள்ளார்.

தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் கீழ் சாதி குடியில் நடக்கும் கருப்பசாமி கோவில் திருவிழாவில் புதிதாக திருமணமான தைலி என்ற கீழ் சாதி பெண் அக்கினி சட்டி எந்தியவாரு சாமி ஆடுகிறார். உக்கிரமாக தைலியின் தெய்வ உக்கிரகத்தை அவளுடைய குடியை சேர்ந்தவர்கள் தரிசிக்கும் போது,

. 1. “ரெட்டி வீட்டு பெண்கள் ஒரு கணம் பள்ள வீட்டு சாமியை கையெடுத்து கும்பிட்டார்கள். கும்பிட்ட பின் ஒரு பள்ள வீட்டு சாமியை கும்பிட்டதை உணர்ந்து கைகளைக் கீழே போட்டார்கள்.”3

2. ரெட்டி வீட்டுப் பெண்களுக்கு மட்டுமே தலையில் பூச்சூட அனுமதி இருந்தது கீழ் சாதி பெண்கள் தாலியில் மட்டுமே பூச்சூடிக்கொள்ள அனுமதி இருந்தது. தலையில் பூச்சூடுவதற்கு அனுமதிக்கப்படாமல் இருந்தது. இச்சிறுகதையில் உயர் சாதிப் பெண்கள் கீழ் சாதி பெண்களிடம் சாதிய பாடுகாடுகளை காட்டுவதை உணர்த்தியுள்ளார்

வறுமை

வறுமை என்பதற்கு தந்திரம் பெருமை கதியற்ற தனிமை (வர்த்தமானன் தமிழ்-தமிழ் அகராதி ப எ 885) அகராதியின் பொருளுக்கு ஏற்ப பா. ஜெயபிரகாசம் தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் விளிம்பு நிலை மக்கள் உயர் சாதிகளிடம் அன்றாடத் தினக்கூலி வேலை செய்து தங்களது குடும்ப செலவுகளை செய்து வந்தனர் என்பது புலனாகிறது. “வறுமை முற்றிலும் வறுமை ஒப்பிட்டு வறுமை என இரண்டு வகைப்படும். குடும்பத்தில் அடிப்படையான தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள தேவையான வருமானம் இல்லாத நிலை முற்றிலும் வறுமை வகையாகும். சமூகத்தில் உள்ள மற்றவர்களோடு ஒப்பிட்டு குடும்பத்தின் வருமானம் குறைவாக இருக்கும் நிலை குடும்ப வறுமை ஒப்பிட்டு வறுமை”4 என்று கூறுவர். இச்சிறுகதையில் தைலி குடும்பம் வறுமையில் இருப்பது சுட்டிக்காட்டுள்ளார் ஆசிரியர். அதாவது தைலி கீழ் சாதிப் பெண் மேல் சாதி வட ரெட்டி வீட்டில் கம்பம் புல் தானிய வகைகளை உரலில் இட்டு தீட்டி அவர்களுக்கு தேவையான வேலைகளை செய்து தனது குடும்ப வறுமையை போக்குகிறாள்.

“ஒரு நாளைக்கு இரண்டு படி கம்மம்புல் யார் கொடுப்பார்கள் கணக்கிட்டு பார்க்கையில் சாப்பாட்டுக்கு போக ஒரு நாளைக்கு கம்பம் புல் வடரெட்டி முதலாளியை தவிர வேற யார் இப்படி அள்ளித் தருவார்கள் ஒரு முழு ஆளுக்கு சாப்பாடு போட்டு ரெண்டு நாழி கம்பம் புல்லும் யார் கொடுக்கிறார்கள்”5 .கோடை காலத்தில் ஊரில் வேலை இல்லை இதனால் குடும்பத்தில் ஏற்படும் வருமானப் பற்றாக்குறையை எடுத்துரைக்கிறார்.

ஆதிக்க சமுதாயத்தின் எதிர்ப்பு மற்றும் தீண்டாமை

ஒடுக்கப்பட்ட சமூக பெண் தைலி அக்கினி சட்டி ஏந்துவது ஆதிக்க சாதியை சேர்ந்தவர்களால் சகித்துக் கொள்ள முடிவதில்லை சடங்குகளையும், ஆன்மீகத்தையும் தங்களின் சாதி ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் கருவிகளாக பயன்படுத்தியவர்கள் அந்தப் பெண்ணின் செயலை தங்களின் அதிகாரத்திற்கு விடப்பட்ட சவாலாக பார்க்கிறார்கள் என்பதை இச்சிறுகதை வெளிப்படுத்துகிறது.

1) கீழ் சாதி பெண்கள் ஊர் தெரு வழியாக அனுமதிக்கப்படுவதில்லை.
2) செருப்பு போட அனுமதிப்பதில்லை
3) கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

4) உயர்சாதி பெண்களைத் தவிர கீழ் சாதி பெண்கள் தலையில் பூச்சூட அனுமதிப்பது இல்லை.

ஆதிக்க வர்க்கங்களின் அடக்குமுறைகளை எதிர்ப்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது. தைலி ஆதிக்க வர்க்கங்களை எதிர்த்து ஊருக்குள் செருப்பு அணிந்து கிணற்றில் தண்ணீர் எடுக்கிறாள். இதனை எதிர்த்தது அவளுக்கு ஊறுகாலி மாடு மேய்க்கும் தண்டனையை வழங்குகின்றனர் . அதிகார வர்க்கம் அதிகாரம் அற்றவர்களிடம் தீண்டாமை செயலில் ஈடுபடுவதை சுட்டிக்காட்டி உள்ளார் ப. ஜெயபிரகாசம்.

உழைப்பு சுரண்டல்

கிராமங்களில் நிலவுடமை சமுதாயத்தினரும் சாதியை கட்டமைப்பும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன. தாழ்த்தப்பட்ட மற்றும் எளிய சமூகங்களே சேர்ந்த மக்களின் கடின உழைப்பை மேல்தட்டு வர்க்கத்தினரால் மிகக் குறைந்த கூலிக்கு அல்லது கட்டாயத்தின் பேரில் சுரண்டப்படுகிறார்கள். உழைப்பிற்கு ஏற்ற அங்கீகாரமோ தகுந்த ஊதியமோ இன்றி எளியவர்கள் உழைத்துக் கொண்டே இருக்கும் அவல நிலை இச்சிறுகதை சுட்டிக்காட்டுகிறது.

சமூக கோட்பாடுகளாக மட்டும் அல்ல தங்களின் சுயலாபத்திற்காகவும் தான் தீட்டு என்றும் தண்டனை என்றும் பஞ்சாயத்து என்றும் உருவாக்கியுள்ளனர் என்பதை இந்த வரிகள் மூலம் அறிய முடிகிறது.

> **“இப்போதெல்லாம் எவனுமே தண்டனை அடைவதில்லை தாழ்ந்த சாதிக்காரன் ஒருவனை கூப்பிட்டு தண்டித்து மாடு மேய்க்க சொல்ல வேண்டும்போல் தோன்றியது மாடுகளுக்கு தீவனமும் கிடைத்தது பால் கறவையும் அதிகம் வந்தது பதினைந்து நாளோ ஒரு மாதமோ சுகமாய் மாட்டுத் தொல்லை இல்லாமல் கழிந்தது”5**

உழைப்பு சுரண்டலை இச்சிறுகதையில் விவரித்துள்ளார்.

பாலியல் வன்கொடுமை

பாலியல் வன்முறைகள் எனப்படுவது பாலியல் வன்புணர்வு, பாலியல் நோக்குடன் அடிமைப்படுத்துதல், கட்டாய பாலியல் தொழில், வலிந்து கர்ப்பம் ஆக்குதல், கட்டாய இனவிருத்தியை மேற்கொள்ளுதல் பாலியல் சார்ந்த கேலி மிரட்டல், கட்டாய கருக்கலைப்பு என பலவகை குற்றங்கள் உள்ளடங்கியதாகும்.

பெண்ணை பாதிக்கும் பல காரணங்களில் முக்கியமான ஒன்று பாலியல் வன்முறையாகும். பெண் குழந்தை பருவத்தில் இருந்து பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகின்றனர். தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் கீழ் சாதி சக்கிலியக்குடி போட்டான் வீட்டில் இரண்டு குமரிப் பெண்கள் சிறுவயது ஆண்களுடன் திருமணம் நடந்தது இரு பெண்களும் மனவேதனை மற்றும் கண்ணீருடன் குடும்ப வாழ்வில் நுழைந்தனர். குமரிகள் இருவரையும் ரெட்டி தெருவை சேர்ந்த இளைஞர்கள் பாலியல் வன்கொடுமை செய்து அவர்களுக்கு குழந்தை பிறக்கிறது அந்த அவல நிலையில் சுட்டிக்காட்டி உள்ளார் ஆசிரியர்.

> **“நில உடமை உள்ள கைகள் பரபரத்தன எல்லாவற்றையும் கைவசப்படுத்தும் நீண்ட அகலமான கைகள் அவைகளுக்கு தப்பி எந்த பொருட்களின் இயக்கமும் நடைபெற முடியாது”6**

இச்சிறுகதையில் இந்த வரிகள் ஆதிக்க வர்க்கத்தின் நீண்ட கரங்களின் வலிமையை

வெளிப்படுத்துகிறது. அந்த கரங்களுக்கு தனிமனித சுதந்திரம் பற்றியோ தன்மானம் பற்றியோ கவலை இல்லை எல்லாவற்றையும் கைப்பற்ற வேண்டும் அதாவது கீழ் சாதி பெண்களிடம் பாலியல் உறவு கொள்வது அவர்களில் வண்புணர்வு செய்வதையும் ராஜமாணிக்கம் கதாபாத்திரம் உணர்த்துகிறது.

பெண்களின் நிலை

தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் தலையில் பூச்சூடும் பெண்கள், தாலியில் பூச்சூடும் பெண்களோ பெண்ணென்றும் பெண் உடல் மட்டுமே ஆணின் பார்வையில் பெண் உடல் என்பது பாலியல் உறவுக்குச் சார்ந்தது. சமூகத்தில் தீண்டாமையின் பெயரில் கடைபிடிக்கப்படும் உயர் சாதியின் அதிகாரத்தையும் சமூக யதார்த்தத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

தாலியில் பூச்சூடியவர்கள் சிறுகதையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல், சாதிய பாகுபாடு, ஒடுக்குமுறைகள், வறுமை, ஆதிக்க சாதியினரது தீண்டாமை, பாலியல் வன்கொடுமை, உழைப்புச் சுரண்டல், பெண்களின் நிலை பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

அடிகுறிப்பு

1. தமிழ்ச்செல்வி ஆய்வு கட்டுரை, பெருமாள் முருகனின் படைப்புகளில் விளிம்பு நிலை மாந்தர்கள் ப .51.
2. நா. மணிகண்டன் .கொங்கு வரலாற்று ஆவணங்களின் விளிம்பு நிலை மாந்தர்கள் பக் 91,92.
3. ப. செயப்பிரகாசம் சிறுகதை தாலியில் பூச்சூடியவர்கள் ப 11.
4. வர்த்தமானன். தமிழ் - அகராதி ப 885.
5. ப. செயப்பிரகாசம் சிறுகதை தாலியில் பூச்சூடியவர்கள்

   ப 12.
6. ப. செயபிரகாசம் சிறுகதை தாலியில் பூச்சூடியவர்கள்

   ப 15.

© 2026 விஜயலட்சுமி ரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 373–376
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

திருக்குறளில் உணவும் மாற்கு நாவலின் பசி நோயும்

கஸ்தூரி கி[1,*], முனைவர். ரந்திர்குமார் ஆ[2]

[1] பதிவெண்: 241110701023 ,முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர் ,மதிதா இந்து கல்லூரி ,திருநெல்வேலி., *India*

[2] ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: கஸ்தூரி கி — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00067	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வில் பசியின் கொடுமை நிகழ்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் மக்கள் படுகின்ற இன்னல்களும் அதற்கு மூல காரணம் பசியே ஆகும். பசியின் காரணமாக அனைத்து சாதி மக்களிடமும் தன்னுடைய தன்மானத்தை இழந்து தவிக்கும் நிலையினை கட்டுரை மிகத் தெளிவாக ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: பசியின் கொடுமை - மக்களின் வாழ்க்கை நிலை - உயர்சாதியினரின் வர்க்கநிலை - தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனைகள் - சமூகநிலை - பொருளாதாரச் சிக்கல்.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: கி, க., & ஆ, மு. ர. (2026). திருக்குறளில் உணவும் மாற்கு நாவலின் பசி நோயும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 372–375. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8513

முன்னுரை

பசிப்பிணி என்னும் பாவி சமூகத்தில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. அந்த பசியை இந்த சமூகம் பல்வேறு வகையான செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. மேலும் இப்பசியினைப் பற்றி சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை அனைத்தும் பேசுகின்றன. அவற்றில் பசியின் கொடுமையையும் அதனால் வரும் பிரச்சனைகளையும் ஆராய்வது கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

மாற்கு நாவல்களில் பசி பற்றிய செய்திகள்

மாற்கு அவர்கள் பல்வேறு வகையான நாவல்களை எழுதியுள்ளார். அவருடைய நாவல்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைகள், அவர்களின் இன்னல்கள் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. இதிலும் மனித சமூகம் பசி என்னும் போர்வைக்குள் படுகின்ற இன்னல்களை தனது அனுபவத்தின் மூலம் வெளிப்படையாக கூறியுள்ளார். தனது படைப்பில் வருகின்ற கதாபாத்திரங்கள்

அனைத்தும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஆண் பெண்களை மையமாக வைக்கும். அவர்கள் படுகின்ற இன்னல்களை முன்னிலை வகிக்கும் நாவல்கள் அவற்றுள் குறிப்பாக சுவர்கள், யாத்திரை, மறியல், மீள்வெளி, வருவான் ஒரு நாள், யாத்திரை போன்றவை ஆகும்.

இந்த நாவல்கள் அனைத்தும் பொதுவாக தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சனைகளை கூறுவதுடன் அவர்கள் சமூகத்தில் வாழ்வதற்கு தேவையான அடிப்படை ஆதாரமாக கருதப்படுகின்ற உணவிற்காக போராடுவதாக அமைகிறது. மனித வாழ்விற்கு மிகவும் அடிப்படையான ஒன்று உணவு, அடுத்தபடியாக உடை, அடுத்தபடியாக இருப்பிடம். இவை மூன்றும் மிக இன்றியமையாத ஒன்று ஆகும். அடிப்படை தேவையே தன்னிடம் இல்லாத போது ஒரு மனிதன் எப்பொழுதும் தன்னிறைவு அடைய முடியாது.

திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரம்

மருந்து என்பது பிணிகளை தீர்க்கும். ஆனால் உணவே மருந்தாகவும் பயன்படுகிறது. அத்தகைய உணவே மக்களுக்கு கிடைப்பது மிகவும் கடினமான ஒன்றாக அமைகிறது.

நோய்க்கு காரணம் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் அளவுக்கு அதிகமானாலும் குறைந்தாலும் உடலில் நோய் உண்டாகும். இதனையே குறள் 941 கூறுகிறது:

பசித்து உண்பதே சிறப்பு

உடலுக்கும் காலத்துக்கும் சுவைக்கும் ஏற்ற உணவை விருப்பம் போல் அல்லாமல் நோய் வராத அளவு ஒருவன் உண்பானையில் அவனது உயிருக்கு பிணிகளால் துன்பம் நேராது என்பது வள்ளுவனின் வாக்கு. இதனையே

மாற்கு எழுதிய நாவலில் உணவு பற்றிய செய்திகள்

மாற்கு எழுதிய நாவலில் உணவு பற்றிய செய்தி கிடைத்துள்ளன. இதில் தலித் கிறிஸ்தவர்களை 10 அம்சத் திட்டங்களை திருச்சபை அறிவித்திருக்கு. அதற்காக அதை செயல்படுத்த நாம் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். பசியை எப்படி தாங்குவோம்? பசியால் இருப்பது அவர்களுக்கு ஒன்றும் புதிது அல்ல. ஒருவேளை பசியால் இருந்தாலும் அடுத்த வேலை கூலோ கஞ்சியோ ஏதோ கிடைக்கும். தொடர் பட்டினியால் இருந்ததில்லை.

இங்கே ஒரு வீட்டில் ஒரு கிழவி காலையில் இட்லி சுட்டு விற்கும் கேள்விப்பட்டேன். அந்தக் கிழவியை எழுப்பி இட்லி சட்னி செய்ய கூடமாட வேலை செஞ்சுகிட்டு இருந்து வாங்கி வந்தேன். (மாற்கு, மறியல், ப.43)

நேரம் நண்பர்களைக் கடந்து விட்டது. அனைவரும் பசியில் இருந்தனர். பசியுடன் அவர்களை அழைத்துச் செல்ல அவர் விரும்பவில்லை. அந்த நகரத்தில் உள்ள மிகச் சிறந்த அசைவ உணவகத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றார். தங்கள் வாழ்நாளில் முதன்முறையாக அத்தகைய உணவகத்திற்குள் நுழைந்த சிறுவர் சிறுமியர் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்கள். அவர்களது திகைப்பை புரிந்து கொண்ட தலைவர் கை கழுவும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அனைவரும் கைகழுவினர். பின்னர் அவர்களை இருக்கையில் அமரச் சொன்னார். ஒவ்வொருவரும் தங்களுக்கு வேண்டியது தாங்களே வாங்கிக் கொள்ளும்படி சொன்னார்.

அப்பொழுது ஒரு சிறுமி மட்டும் உண்ணாமல் தனக்கு முன்னால் உள்ள உணவை

பார்த்துக் கொண்டு இருப்பதை அவர் கவனித்தார். தனது இடத்திலிருந்து எழுந்து சென்ற அவர் அச்சிறுமியிடம், “என்னம்மா நீ கோழி சாப்பிட மாட்டாயா? அப்படின்னா சொல்லு..... வேற காய்கறி சாப்பாடு கொண்டு வரச் சொல்லவா?” என்று பரிவுடன் கேட்டார். அவர் சொன்னதை கேட்டதும் அந்தச் சிறுமி அழ ஆரம்பித்தாள். முதலில் சிறு கேவலமாக குறிப்பிடப்பட்ட அழுகை பலத்த அழுகையாக வெளிப்பட்டது. விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். உன்ன வந்த சிறுமி ஒருத்தி அழுவது அங்கு பணிபுரிந்தவருக்கு வித்தியாசமாகப்பட்டது.

> “போலீஸ்காரங்க பிடிக்கணும்னு சொன்னதும் எங்க எல்லாரும் ஊரைவிட்டு காட்டுக்குள்ள ஓடினோம். அப்படியே ஓடி அடுத்த ஊருக்கு போயிட்டோம். எனக்கு ரொம்ப பசிச்சது. எங்க ஐயாகிட்ட எனக்கு ஏதாச்சும் வாங்கித் தரச் சொல்லி அழுதேன். கொஞ்சம் பொறுத்துக்கோ, அடுத்த ஊர்ல நம்ம சொந்தக்காரங்க இருக்காங்க; அங்க போய் சாப்பிடுவோம் என்று சொன்னாரு. நான் கேட்கல; பசிக்குதுன்னு அழுவேன். அப்ப ஒரு டீக்கடைக்கு கூட்டிட்டு போனாரு. அங்க வந்த போலீசு எங்க ஐயாவ பிடிச்சுட்டா போயிட்டு, அங்க வச்சு எங்க ஐயாவ ரொம்ப அடிச்சாங்க” என்று சொல்லி அந்தக் குழந்தை அழுதது. அதனால் உணவை பார்த்தவுடன் எனக்கு அழுகை வருகிறது என்று கூறியது. *(மறியல் நாவல், பக்கம் 366, 367)*

இந்த நாவலில் குழந்தைக்கு தேவையான உணவு முதலில் கிடைக்கவில்லை. பின்னர் ஒருவர் மூலம் அந்த உணவு கிடைக்கும். அந்த உணவினை பார்க்கும்போது அந்த உணவினால் ஏற்பட்ட அடியும் வேதனையும் மட்டுமே நினைவில் வருகிறது. அதனை கண்டு அந்த குழந்தை வருந்துகிறது. அன்று பசியால் ஏற்பட்ட நோயை இன்று உணவு இருந்தும் அதனை தீர்க்கும் மருந்தாக அமையவில்லை என்பதே இந்த நாவலின் கருத்தாக உள்ளது.

பசியால் வருந்திய ஒரு ஹரிஜன் இளைஞன்

பசியால் வருந்திய ஒரு ஹரிஜன் இளைஞன் அம்பலக்காரரின் வயலில் இறங்கி சிறிது நெல்லை கசக்கி, அந்த நெல்லை கொண்டு போய் கடையில் விற்று, அந்தப் பணத்தை வைத்து ஒரு மணி நேரம் வயிறு நிறைய ஏதோ ஒன்று இருக்கின்றான். இதை தெரிந்து கொண்ட ஒருவன் தனது ஜாதியைச் சார்ந்த மற்ற கரிசனங்களிடம் கூறி, அவர்கள் அவனை பிடித்து அடித்து உதைத்து மரத்தில் கட்டி வைத்தனர். பின்பு அவனை அம்பலக்காரரிடம் இழுத்து வந்து:

> “ஐயா இவன் உங்கள் வயலில் இறங்கி சிறிது நெல்லை திருடி விட்டான் ஐயா. எங்களுக்கு படி அளக்கிற தெய்வம் உங்க வயல்லயே திருடலாமா? அவன் திருடிட்டான். தூக்கிப்போட்டு மிதிங்க. நெல்லை கசக்கி இவனது கையை வெட்டுங்க. உயிரோடு தோலை உரிங்க. எது செஞ்சாலும் சரிதான்.”

என்று கூறி பசியின் கொடுமையினை அனுபவித்தனர். (வருவான் ஒரு நாள், பக்கம் 116)

சுவர்கள் நாவலில் உணவு

இதனைப் போன்று சுவர்கள் என்ற நாவலில் மேரி என்ற பெண்மணி தன் தந்தைக்கு உணவு கொடுப்பதற்கு இல்லாமல் கம்மங்கூழியில் கரைத்து கொடுத்துள்ளார். தந்தை உடல்நலக் குறைவால் இருப்பதால் அவருக்கு எந்த உணவும் உட்கொள்ள முடியவில்லை. அவர் இளமைப் பருவத்தில் தனக்கு தேவையான உணவு வாயார

கிடைக்கவில்லை. பின்னர் முதுமை அடைந்த பின்பு தேவையான உணவுப் பொருள் கிடைக்கும்; அதனை உண்பதற்கு அவர் உடல் ஒத்துக் கொள்ளவில்லை. எவ்வாறு உணவானது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பெரிய பொக்கிஷமாகவே பயன்படுத்தப்பட்டது. (சுவர்கள், பக்கம் 80)

முடிவுரை

மக்களின் வாழ்வாதாரங்களில் மிகவும் அடிப்படையான ஒன்று உணவாகும். அத்தகைய உணவைப் பெறுவது இந்த நாவலில் உள்ள கதாபாத்திரங்கள் மிகுந்த துன்பங்களை அடைந்து பெற்றுள்ளது அறிய முடிகிறது. மேலும் இத்தகைய உணவானது அடிப்படையாக கிடைக்கப்பெற்றாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகவும் பெரிய பொக்கிஷமாகவே அமைந்துள்ளது. சரியான உணவுப் பொருள் கிடைக்காததனால் அவர்கள் நோய்க்கு உள்ளானவர்களே தவிர அதிகமான உணவினை உண்டு அவர்கள் நோயால் அவதிப்படவில்லை என்ற நிலையினை இந்த கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

பார்வை நூல்கள்

1. திருக்குறள் - திருக்குறள் மூலமும் உரையும், மருதநாயகம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2024.

2. மீள்வெளி - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

3. வருவான் ஒரு நாள் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

4. மறியல் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

திருக்குறள் மேற்கோள்கள்

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு

© 2026 கஸ்தூரி கி, முனைவர். ரந்திர்குமார் ஆ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 377–383
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

குமரி மாவட்ட நாடார்களும் பண்பாட்டு ஒடுக்குமுறையும் (பொன்னீலனின் பிச்சிப் பூ நாவலை முன்வைத்து)

முனைவர் .ஜென்ஸிஸ் குமார் மி*

இணைப் பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா,*695034., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் .ஜென்ஸிஸ் குமார் மி — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00065	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

பிச்சிப் பூ நாவல் குமரி மாவட்ட நாடார்கள் பற்றிய ஒரு சமூக ஆவணமாக விளங்குகிறது. சிறப்பாக குமரி மாவட்ட நாடார்கள் ஆதிக்க, அதிகார வர்க்கத்தினரால் எதிர்கொண்ட பண்பாட்டு ஒடுக்கு முறையையும் அதற்காக அவர்கள் மேற்கொண்ட பண்பாட்டு அடையாளப் போராட்டங்களையும் இக்கட்டுரை கவனத்தில் கொள்கிறது. தமிழகத்திலே சாதிய ஒடுக்கு முறைக்கானச் சிந்தனைகள் பார்ப்பணிய மேலாண்மைக்குப் பிறகே தொடங்குகிறது. பார்ப்பணிய மேலாண்மைக்குப் பிறகு ஆதிக்க சாதியினர் அடித்தள மக்களை ஒடுக்குவோராக விளங்கினாலும் அந்த ஒடுக்குமுறை காவல்துறை, இராணுவம் போன்ற அரசின் அடக்குமுறை இயந்திரங்கள் வருவாய்த்துறை, நீதித்துறை போன்ற நிர்வாக அமைப்புகள் மூலமாக மட்டுமே நிகழவில்லை. பண்பாட்டு ஒடுக்குமுறை வாயிலாகவும் ஆதிக்க சாதியினர் பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித் மக்களிடம் தங்கள் மேலாண்மையை நிலைநாட்டியுள்ளனர் என்பதை நாவலின் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. பண்பாட்டு ஒடுக்கு முறையானது குமரி மாவட்ட நாடார்களிடம் ஆதிக்க சாதியினரால் பொதுக் குளத்தில் நீர் எடுக்கத் தடை, செருப்பு அணிய அனுமதி மறுத்தல், ஆளுவோரின் பாலியல் வன்முறை, கல்வி கற்கத் தடை, கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுப்பு போன்ற நிலைகளில் வெளிப்பட்டதைக் கட்டுரை முன்வைக்கிறது .அதோடு அதற்கு எதிராக நாடார் சாதியினர் மேற்கொண்ட பண்பாட்டு அடையாளப் போராட்டங்களையும் இக்கட்டுரை பதிவு செய்கிறது .

Keywords / திறவுச்சொற்கள்: இனவரைவியல்; இனமையவாதச் சிந்தனை; சாணாக் குடி; சிதிலமடைந்து.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மி, மு. . கு. (2026). குமரி மாவட்ட நாடார்களும் பண்பாட்டு ஒடுக்குமுறையும் (பொன்னீலனின் பிச்சிப் பூ நாவலை முன்வைத்து). Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 376–382.
https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8515

முன்னுரை

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினை ஊடுருவிப் பார்க்க இனவரைவியல்* ஆய்வு முக்கியமானது. இன வரைவியல் ஆய்வு தொடர்பாக ஒரு தனிப்பட்ட மக்கள் குழுவினரிடம் இருந்து 34 வகையிலானத் தரவுகளைத் திரட்டுவது அடிப்படையானது என பக்தவத்சல பாரதி பதிவு செய்துள்ளார். இத்தகைய விவரங்களை நல்ல முறையில் சேகரிக்க வெறும் எழுத்துச் சான்றுகளையும் புள்ளி விவரங்களையும் மட்டும் இன வரைவியலாளர்கள் நம்புவதில்லை இத்தகையத் தரவுகள் கொண்டு எழுதப்பட்ட நூல்கள் மூலமும் குறிப்பிட்ட இனத்தவரின் பண்பாட்டை அடையாளம் காண இயலும். இனவிரைவியல் தொடர்பான நூல்களைப் பொருத்தவரையில் தமிழ்நாட்டில் கிறிஸ்தவ மத போதகர்களும் வெள்ளை அதிகாரிகளுமே அறிமுகம் செய்தனர். ஒரு இலக்கியப் படைப்பு சிறந்து விளங்க வேண்டுமானால் அதற்கு மிகவும் உறுதுணையாக அமைவது படைப்பாளியின் இனவரைவியல் அறிவாகும். ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் வாழும் மனிதர்களை மையமாகக் கொண்டெழுதும் நாவலானது அம்மனிதர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள், சமயவாழ்வு மற்றும் வாழ்வியல் அம்சங்களை முழுமையாக பிரதிபலிப்பது அவசியம். அதனால் தான் தொடக்கக் கால நாவலாசிரியர்கள் அவர்களுக்கு நெருக்கமான உறவு வட்டங்களையே படைப்புக்களாகக் கொண்டிருந்தனர். இன்று கள ஆய்வுத் துணையுடன் இனவரைவியல் நாவல்களை எழுதுவதும் உண்டு . இன வரைவியல் நாவல்களைப் படைப்பாசிரியர்கள் சுய அனுபவம் மூலமும் தெரிந்து கொள்வதுண்டு. சுய அனுபவம் என்பது, “நூலாசிரியர் தான் பிறந்து வளர்ந்த சமூகச் சூழலையோ, தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகச் சூழலையோ தான் மேற்கொண்டு இருக்கும் தொழில் அடிப்படையில் பெறும் அனுபவங்களையும் மையமாகக் கொண்டு நாவல் எழுதுவதாகும்” ஆ.சிவசுப்பிரமணியன் (2014 :10). தமிழ்நாட்டின் தொடக்கக் கால நாவல்கள் ஆதிக்க சாதியினரின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவே அமைந்தன. அதுவே தமிழரின் மேலான பண்பாடு என்ற பண்பாட்டு மேலாதிக்கச் சிந்தனையும் மக்களிடம் மறைமுகமாகத் திணிக்கப்பட்டது. தற்கால தலித் நாவல்கள் இக்குறைபாட்டைப் போக்கியுள்ளன எனலாம். அவை பல்வேறுபட்ட அடித்தள மக்களின் பண்பாட்டை உருக்கமான முறையில் பதிவு செய்து வாசகர்களுக்கு வெளிப்படுத்தி வருகின்றன. இத்தகையப் படைப்புகள் நாவல் என்ற நிலையில் மட்டுமன்றி சமூக ஆய்வுக்கான ஒரு ஆவணமாகவும் விளங்கும் சாத்தியக்கூறும் உண்டு . எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு குறிப்பிட்ட சாதி மற்றும் பகுதியினரின் வாழ்க்கை முறையே தமிழ்நாட்டின் பொதுவான வாழ்க்கை முறை என்று கருதும் இன மையவாதச் சிந்தனையை** ஒழிக்கும். அந்த வகையில் நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நாவலும் தென் மாவட்ட நாடார்களின் பண்பாட்டை தன் சுய அனுபவம் மூலம் எழுத்தாளர் பொன்னிலன் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

பண்பாட்டு ஒடுக்குமுறை

பண்பாட்டு ஒடுக்கு முறை(Cultural oppression) என்பது ஒரு சமூகத்தில் ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு குழு மற்றொரு குழுவின் மொழி, கலை, பாரம்பரியம், வாழ்க்கை முறை, தொழில், மத நம்பிக்கைகள் போன்றவற்றை திட்டமிட்டு நசுக்குவதைக் குறிக்கும். இது பெரும்பாலும் ஆதிக்க சாதி, அதிகாரவர்க்கம், அரசியல் முதலான வைகள் மூலம் அரங்கேற்றப்படுகிறது. குமரி மாவட்டத்தில் வாழும் நாடார் சாதியினரும் இது போன்ற பண்பாட்டு ஒடுக்கு முறைகளுக்கு முற்காலங்களில் ஆதிக்க சாதியினரால் ஆளாக்கப்பட்டுள்ளது பிச்சிப் பூ நாவல் பதிவுகளில்

வெளிப்பட்டுள்ளது. அதனை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

செருப்பு அணியத் தடை

இந்திய வரலாற்றில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்கள் செருப்பு அணிவதற்கான உரிமை மறுக்கப்பட்டதும் அதற்கு எதிரான போராட்டங்களும் சாதிய ஒடுக்கு முறையின் மிகக் கொடூரமான பக்கங்கள் ஆகும். செருப்பு என்பது வெறும் காலணி மட்டுமல்ல, அது மனித நாகரீகத்தின் சமத்துவத்தின் மற்றும் சுயமரியாதையின் அடையாளமாகப் பார்க்கப்பட்டதால் ஆதிக்கச் சாதியினர் அதை தங்கள் அதிகாரத்தைக் காட்டும் ஆயுதமாக பயன்படுத்தினர். ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் சொந்தக் குடியிருப்புகளில் செருப்பு அணிந்திருந்தாலும் ஆதிக்கச் சாதியினர் வாழும் தெருக்களில் அல்லது பொது வீதிகளுக்குள் நுழையும் போது செருப்பைக் கழற்றி கைகளில் அல்லது தலைகளில் சுமந்து சொல்ல வேண்டும் என்பது எழுதப்படாத விதியாக இருந்தது. குமரி மாவட்ட நாடார்களும் இத்தகைய பண்பாட்டு ஒடுக்கு முறைக்கு ஆளானதைப் பொன்னீலன் பதிவு செய்துள்ளார்.

“அய்யா வைகுண்டரிடம் தன் நோயைத் தீர்ப்பதற்காக வந்த சின்ன நீலன் ஆறு ஆண்டுகள் அவரிடம் சீடனாக இருந்து பணியாற்றிய காலத்தில், அவர் கனவில் தன் ஊர் முத்தாரம்மன் தோன்றி,” செல்ல மகனே உன் தாயார் முத்தாரம்மை தான் கூப்பிடுகிறேன். அப்படி என்னைய இடிந்து கூரைக்குள்ள முழங்காலக் கட்டிக்கிட்டு உட்கார வச்சிட்டியே என்று கூறியதால் ஐயாவிடம் அனுமதி பெற்று சிதிலமடைந்து*** கிடக்கும் தன் ஊர் முத்தாரம்மன் கோயிலை புதுப்பித்து வழிபாடு நடத்த அனுமதி பெற்றுச் சென்றார் .அம்மன் கோயிலுக்கு தூய்மை பணிக்காக தண்ணீர் எடுக்கப் பொதுக்குளத்துக்கு சின்ன நீலன் சென்றபோது, “

பாதத்தில் அடியோலை மாட்டாம ராசா நடந்து வர மாட்டாரோ அடியோலைய களத்தி கையில எடுவே”என கருங்குளத்து ஆதிக்க சாதியினர் குரல் எழுப்பினார். அடியோலை என்பது ,” ஒவ்வொரு காலுக்கு அளவுக்கு பனையோலை தடுக்கு போல பின்னி பனை நார்ல வார் போட்டு ஆளுக பயன்படுத்தக்கூடிய செருப்பு. வசதிக்குத் தக்க சாதா ஓலையையோ குருத்தோலையோ நீள வாக்குல வார்ந்து சாயத்த தண்ணில அவிச்சு சாய ஓலையா பயன்படுத்தவும் செய்வாக .சாய ஓலைக்குக் கீழ வெள்ளை ஓலைகளைக் கொடுத்து பொத்தி பொத்தி வசதி உள்ளவங்க அடியோலை மெத்த போல கனமா அமைச்சிடுவாங்க. மேல் வாறுக்குப் பதிலா பன நார அருமையா வார்ந்து முடிச்சு போட்டு பயன்படுத்துவாங்க. நடக்குதுக்குப் பஞ்சு போல இருக்கும்”(பொன்னிலன் : 2019:06).

தமிழ்நாட்டின் சில கிராமங்களில் இந்த ஒடுக்குமுறை மறைமுக வடிவில் இன்றும் நீடித்து வருவதைக் காண முடிகிறது. இது காலணிக்கானச் சண்டை அல்ல, ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமை மற்றும் சமத்துவத்திற்கான நீண்ட நெடிய வரலாற்றுப் போராட்டம் எனலாம் .

பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்க அனுமதி மறுப்பு

தீண்டாமை என்ற பெயரால் அடித்தட்டு சாதியினர் பொது குளத்தில் தண்ணீர் எடுப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டதும் அதற்கு எதிரானப் போராட்டங்களும் தமிழக இந்திய வரலாற்றில் முக்கியமான பக்கங்கள் ஆகும். பொது நீர் நிலைகள் ஆயினும் ஆதிக்க சாதியினர் அதனை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அதில் தண்ணீர் எடுக்கவோ அல்லது அதன் ஒரு பகுதியில் (தங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடம்) நீர் எடுக்கவோ அனுமதி மறுத்துள்ளமையைக் காண முடிகிறது.”குளம் பொதுக் குளம் தான் என்ன சிக்கல்னா அங்கேயும் தீண்டாமை பேய் காவலுக்கு

நிக்குது மேற்குப் பக்கம் உயர் சாதிகள் குளிக்க துவைக்க செய்யக்கூடிய வசதியான நீள படித்துறை. ஒதுக்கப்பட்ட சாதிகள் குளிக்கவும் மத்தபடி ஆடு, மாடு குளிப்பாட்டவும் கிழக்குப் பக்கம் குளம் திறந்து கிடந்தது. அந்தப் பக்கம் அடர்த்தியான சம்பு வளர்ந்து கிடந்தது. அதுக்குள்ளோடி ஆளுக போய் வந்து அமைஞ்சதுதான் பாதை. சாமித்தோப்பு ஐயா தனக்கு கட்டி விட்ட தலைப்பாகையோட சின்ன நீலன் மேற்குப் பக்கம் படித்துறைக்கு வந்தாரு.

அது எவம்ல தலைப்பாகையோட குளத்துக்குள்ள எறங்குறது. தடிச்ச கடுவாக் குரல் ஒன்னு சின்ன நீலனை அதடிச்சி

அம்மனைக் குளிப்பாட்ட ஒரு குடம் தண்ணிக்கு வந்தேன் .

சாணாக் குடி**** அம்மனக் கழுவ தண்ணிக்கு இந்த உயர் சாதிப் பக்கம் தான் கிடைத்ததா? சம்பு வளர்ந்து கிடக்கே அந்த அழுக்கு பிடிச்ச கிழக்கு பக்கம் போடா. அந்த தடித்த குரல் அவருக்கு வழிகாட்டுச்சு. சுத்தமான தண்ணி வேணும்யா என்றார் சின்ன நீலன். சாணாக் குடி அம்மன் அழுக்குத் தண்ணியில குளிச்சிக்கிட மாட்டாளோ ?என்று தடித்த வார்த்தை சொன்னவரு ஏசிக்கிட்டே சின்ன நீலனை இடுப்புல சமுட்டித் தண்ணில தள்ளுனாறு”(பொன்னீலன்,2019:33).

வேலையில் சமத்துவமின்மை

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பிருந்த காலம் தொட்டு அடித்தட்டு மற்றும் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு அரசு வேலை மற்றும் நிர்வாக அதிகாரங்கள் திட்டமிட்டு மறுக்கப்பட்டதற்கு ஒரு நீண்ட வலி மிகுந்த சமூக சாதிய அரசியல் பின்னணி உள்ளது. கல்வி கற்ற சில ஒடுக்கப்பட்ட அடித்தட்டு பட்டதாரிகள் விண்ணப்பித்த போதும் தீண்டாமை மற்றும் தீட்டு போன்ற காரணங்களைக் காட்டி அவர்கள் அரசு அலுவலகங்களுக்குள் நுழைய அன்றைய உயர் சாதி அதிகாரிகள் முட்டுக்கட்டைப் போட்டனர் . இது குமரி மாவட்ட நாடார் மக்களுக்கும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தால் நேர்ந்துள்ளதை பொன்னீலன் பதிவு செய்துள்ளார். “ திருவிதாங்கூர் இராஜ்யத்தில் இருந்து முத முத பி ஏ படித்தவங்க ரெண்டு பேர் ஒருத்தர் நாயரு இன்னொருத்தர் ஈழவர். நாயர் சாதியைச் சேர்ந்தவரை அன்னைக்குள்ள மகாராஜா கௌரவத்தோட மேளதாளத்துடன் ஆனையில் ஏற்றி அரண்மனைக்கு வரவழைச்சி மகாராஜாவே வரவேற்று உடனடியாக தாசில்தார் வேலை கொடுத்தார் (பொன்னீலன்,2019:12). அன்றைய சமூகச் சூழலில் ஒருவர் எட்டாவது வகுப்பு படிச்சு முடிச்சு தேறிட்டா போதும் வெள்ளைக்காரன் ஆளுற எந்த இராஜ்யத்திற்குப் போனாலும் அவனுக்கு வேலை கிடைக்கும். நம் நாட்டுல கூட தேயிலைத் தோட்டம், காப்பி தோட்டம் எல்லாவற்றிலும் வேலை பார்க்க இந்த சர்டிபிகேட் போதும். ஆனால் இதற்கு நேர் மாறாக அன்றைக்கு திருவனந்தபுரத்தில் ஒரு விபரீதம் நடந்தது நாயர் பையனுக்கு கிடைத்த மரியாதையும் வேலை வாய்ப்பும் ஈழவ பையனுக்குக் கிடைக்கவில்லை. இதனை ஆசிரியர்,”ஈழவப் பையனுக்கு வரவேற்பும் இல்லை. வேலையும் இல்லை. அவர் மன்னனுக்கு விண்ணப்பமும் கடிதமும் அனுப்பியும் வேலை கிடைக்கல. திவான் இவரை அழைத்து உன்னுடைய சாதிக்குத் தக்கவுள்ள சோலி மரம் ஏறுத சோலிதான். நீ தென்னை மரம் ஏறி பிழைச்சிக்கோ. நீ ஈழவன் என்பதால் சர்க்கார் வேலை கிடைக்காது. ஏன்னா சர்க்கார் வேலையில் இருப்பவன் சர்க்கார் ஆபீஸ், கோயில் எல்லாவற்றுக்கும் போக,வர வேண்டி வரும். அது உயர் சாதியினருக்கும் கிறிஸ்தவராக மதம் மாறியவருக்கு மட்டுமே உரிமை உள்ளது. அப்படி உனக்கு அரசாங்க வேலை விருப்பம் இருந்தா நீ கிறிஸ்தவனா மாறிக்க என்றார் (மேலது 2019 :12, 13). என பதிவு செய்துள்ளார். மேற்சுட்டப் பெற்றுள்ள உரிமை மறுப்பு சார்ந்த வரலாற்றுச் செய்தி தாய் மதத்தைப்

பின்பற்றியவனுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டதும் அவனே கிறிஸ்தவத்துக்கு மாறினால் அவ்வுரிமை கிடைக்க பெறுவதையும் எடுத்துச் சொல்கிறது.

ஆளுவோரின் பாலியல் வன்முறை

ஆளுவோரின் அதிகாரத்தைச் செலுத்தும் தளங்களில் ஒன்றாக பெண்ணின் உடல் நிலவுடைமைச் சமூகத்தில் விளங்கியது. ஐரோப்பாவில் குடியானவப் பெண்களின் திருமணத்தில் முதலிரவு உரிமை நிலப் பிரப்புக்களுக்கு இருந்தது. அதுபோல கேரளத்தில் நம்பூதிரிகள் இவ்வுரிமையைக் கொண்டு இருந்ததாக வரலாற்றுப் பதிவுகள் உள்ளன.தமிழ்நாட்டில் இது சிறை எடுத்தல் என்னும் நிகழ்வின் வழி பெண்கள் மீது அதிகாரத்தைச் செலுத்தும் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக

“ புல்லு அறுத்தா மாட்டுத் தொட்டிக்கு பொண்ணு சமஞ்சா அரண்மனைக்கு “- என்ற பழமொழியைக் குறிப்பிடலாம்.

குமரி மாவட்டத்திலும் இதுபோன்ற பாலியல் வன்முறை நிகழ்ந்துள்ளதைப் பொன்னீலன் பதிவு செய்துள்ளார் .“ ஒருமுறை மூர்த்தியாரு தன் மாட்டு வண்டி பயணத்தின் போது குறும்பூர்ல தாவளம் இட்டாரு. மாடுகளுக்கு வைக்கோல் போட்டுவிட்டு அருகில் இருந்த ஆலமரத்துக்கு அடியில் கிடந்த கருங்கல்லில் நீட்டிநிமிர்ந்து படுத்தாரு. அப்போது அருகில் கிடந்த கருங்கல்லில் இன்னொருத்தர் கிடந்தார். அவர் விம்மி விம்மி அழுகிற சத்தம் கேட்டு மூர்த்தியார் திடுக்கிட்டு எழுந்திரிச்சாறு. அவரிடம் காரணத்தைக் கேட்டார். அவர் வெள்ளையும் சொள்ளையுமாக மாப்பிள்ளைக் கோலத்தில் இருந்தார். அவர் ஐயா எனக்கு இன்றைக்கு காலையில் தான் கல்யாணம் ஆச்சு. எங்க ஊர் வழக்கப்படி என் பெஞ்சாதியோட இன்னைக்கு மொத மொத படுக்குறதுக்கு எங்க ஊர் தலைவருக்குத்தான் உரிமை . அவர் இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துருவாரு அதான் மனசு தாங்காம அழுகிறேன் என்றார் (2019: 59).

ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியை ஆட்சி புரிவோர் தம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அசையும் பொருட்கள் அசையா பொருட்கள் அனைத்தின் மீதும் அதிகாரம் செலுத்தும் உரிமை உடையவராக இருந்தனர். இதற்கு மனிதர்களும் விதிவிலக்கு அல்ல என்பதை இச்சான்று உறுதி செய்கிறது.

கோயில் நுழைவு அனுமதி மறுப்பு

கோயில் நுழைவு அனுமதி மறுப்பு மற்றும் அதற்கானப் போராட்டங்களின் வரலாறு என்பது தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் தீண்டாமைக்கும் சாதி பாகுபாட்டிற்கும் எதிராக நடைபெற்ற மிக முக்கியமான சமூக நீதி போராட்டமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பொருளாதார ரீதியாக முன்னேறிய நாடார் சமூகத்தினருக்கு பல தென்னகக் கோயில்களில் நுழைவு மறுக்கப்பட்டது. இதற்கு எதிராக 1895இல் கழுகுமலை கலவரம் மற்றும் 1897 இல் கமுதி கோயில் நுழைவுப் போராட்டம் போன்றவை வெடித்தன. அந்த வகையில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழ் இருந்த குமரி மாவட்டத்தின் குமாரகோவிலில் உள்ள முருகன் கோயிலுக்குள் நாடார் சாதியினர் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனை பிச்சிப் பூ நாவலில் ஆசிரியர் , “ ஆளூர் பக்கம் இசங்கன் விளை என்னும் ஊர்ல ஆண்டிச்சாமி என்னு ஒரு சாமியார் இருக்காரு. பேர் கேட்ட முருக பக்தர். ஆண்டுதோறும் திருச்செந்தூருக்கு நாற்பத்தியோரு நாள் விரதம் இருந்து காவடி கட்டிப் போவாரு. முருகா என்று சொல்லி தன் திண்ணையில் குந்துர அவர்களுக்குத் தவறாமல் கருப்பட்டியும் தண்ணியும் கொடுத்து உபசரிப்பார். ஒரு நாள் ராத்திரி

ஆண்டிச்சாமி ஒரு சொப்பனம் கண்டார். சொப்பனத்தில் வள்ளி தெய்வானை சகிதம் முருகன் அவருக்குக் காட்சி அளித்தார். உன் பக்தியை மெச்சினேன். நீ முறைப்படி விரதம் இருந்து குமாரகோயில் என் சன்னதிக்கு வா என்று சொல்லிவிட்டு மறைஞ்சிட்டார். ஒரு நாள் அல்ல பல நாளும் இதே சொப்பனம் திரும்பத் திரும்ப கண்டார். ஆண்டிச்சாமி தனக்கு வேண்டப்பட்ட பெரிய ஆளுகளை எல்லாம் சந்திச்சு தன் சொப்பனத்தைச் சொன்னாரு ஆண்டிச்சாமி வட்டாரத்து பெரிய ஆளுக அஞ்சு ஆறு பேரு குமார கோயில் அதிகாரி மார்ட்ட போனாக. ஐயா, ஆண்டிச்சாமி நாற்பத்தியோறு நாள் விரதம் இருந்து குமார கோயில் முருகர தரிசிக்க வாராரு. சொப்பனத்தில் சாமி சொல்லித்தான் வராரு .அதனால அதிகாரிமாறு அனுமதி தரணும் என்று தலைமை அதிகாரிக்கிட்ட கேட்டாக, அதிகாரி தன் சக அதிகாரிமாற கூட்டி ஆலோசித்தார். ஆண்டிச்சாமி விரதம் இருந்து எலும்பும் தோலுமாதான் வருவான். கோயிலுக்குள்ள போகும் முன்னே பூக்குளியிலே இறங்கி தானா ஆகணும். பூக்குழி அவன் தாண்டும் போதே அவனை நெருப்புல தள்ளிட்டா நாம அனுமதி கொடுத்தது மாதிரி ஆச்சி முருகனோட ஆண்டிச்சாமி ஐக்கியமானது மாதிரி ஆச்சு என்று மனசுக்குள்ள நினைச்சுக்கிட்டு கோயிலுக்கு வர அனுமதி கொடுத்தார்கள். ஆண்டிச் சாமியும் அவனுடன் வந்த நாடார் சமூகத்தினரும் உயர் சாதிக்காரர்களுடைய சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு பல்வேறு பாதுகாப்பு முன்னேற்பாட்டுடன் கோயிலுக்குள் நுழைந்தனர். கோவிலுக்குள் ஆண்டி நுழையிறப்போ அதிகாரிமாறு கோயில் தீட்டா போச்சுதே புடியுங்கடா ஆண்டிய அடிச்சு கொல்லுங்கடா நெருப்புல போட்டு பொசுக்குங்கடா என்று கத்தினர்.அவர்கள் கையில் சிக்காமல் ஆண்டிச்சாமி தன் பாதுகாப்பு வளையத்துக்குள் நின்று கோயிலுக்கு உள்ள சரட்டுன்னு நொழஞ்சி முருகன் முன்னால நின்னாரு “ எனப் பதிவு செய்துள்ளார் (2019:73 ,74). சட்டப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு அனைவருக்கும் கோயில் நுழைவு உரிமை வழங்கப்பட்டு இருந்தாலும் இன்றும் தமிழகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இத்தகைய அவலங்கள் அரங்கேறி வருவதைக் காண முடிகிறது .

முடிவுரை

உலக வாழ்வில் தன்னுடைய இன்பங்களை யாரும் பறித்து விடக்கூடாது என்றும் அவ்வின்பங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றும் நிகழ்த்தப்படுவதே ஒடுக்குமுறை ஆகும். ஒடுக்கும் மக்களும் ஒடுக்கப்படும் மக்களும் எழுத்தறிவற்றவராய் கூட இருப்பர். ஆனால் பார்ப்பனியப் பண்பாடு இந்த சொத்துடைமை சார்ந்த ஒடுக்குமுறையை நியாயப்படுத்துவதற்காக அதைப் பண்பாட்டு ஒடுக்கு முறையாகக் கற்பித்து அதை நியாயப்படுத்தவும் செய்தது. தமிழிலே சாதிய ஒடுக்குமுறைக்கானச் சிந்தனைகளையும் வழக்கங்களையும் பார்ப்பணிய மேலாண்மையை ஏற்றுக் கொண்ட பிறகு தான் தொடங்கியுள்ளனர். பார்ப்பனிய மேலாண்மைக்குப் பிறகு சமூகத்தில் மேட்டிமையோர் அடித்தள மக்கள் என்ற இரு பிரிவுகள் நிலவி, அதில் மேலாண்மை செலுத்துவோராக மேட்டிமைக்குழு விழங்கினாலும் அது எல்லா நிலைகளிலும் தன்னை நேரடியாக வெளிக்காட்டிக் கொண்டு தன் மேலாண்மையை நிலை நாட்டுவதில்லை. பண்பாட்டு ஒடுக்குமுறை வாயிலாகத் தங்கள் மேலாண்மையை நிலைநாட்டுகின்றனர் என்பதை கட்டுரையின் தரவுகள் மூலம் அறிய முடிந்தது. பண்பாட்டு ஒடுக்கு முறையானது நமது சமூகத்தில் புழங்கு பொருட்கள் (செருப்பு அணிய மறுப்பு,கல்வி ,வேலை, உணவு, உடை, குடியிருப்பு, பொதுக்கிணறு, பொதுக்குளம் என பல்வேறு நிலைகளில் வெளிப்பட்டதை இக்கட்டுரையும் மேலும் ஒரு முறை உறுதி செய்கிறது.

அடிக்குறிப்புகள்

* ஒரு இனத்தின் பண்பாட்டை எழுதுவது என்பதே இன வரைவிலாகும்.

** தன் இனமே உயர்ந்தது தங்கள் இனம் கடைபிடிக்கும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களே ஒட்டுமொத்த தமிழக சாதிகளுக்கானப் பண்பாடு என்ற சிந்தனையை உருவாக்குவது.

*** பராமரிப்பு இன்றி அழியும் நிலையில் இருக்கும் சிதைந்த கட்டிடம்.

**** நாடார் சாதியினரை இழிவாக அடையாளப்படுத்தும் சொல் சாணாராகும். குறிப்பாகக் குமரி மாவட்டத்தில் பனையேறும் தொழிலை மேற்கொள்ளும் நாடார் சாதியினரை குறிக்க ஆதிக்கச் சாதியினரால் பயன்படுத்தப்படும் இழிசொல்.

துணை நூற்பட்டியல்

1.சிவசுப்ரமணியன்., 2002: அடித்தள மக்கள் வரலாறு,

மக்கள் வெளியீடு, சென்னை-002.

2. மேலது., 2014: இனவரைவியலும் தமிழ் நாவலும்,

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,

சென்னை- 098.

3. பக்தவத்சல பாரதி., 2014: இலக்கிய மானிடவியல்,

அடையாளம் பதிப்பகம்,

கருப்பூர் சாலை, புத்தாநத்தம்,

திருச்சி - 621310.

4. பொன்னீலன்.,2019: பிச்சிப் பூ (நாவல்)

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,

சென்னை- 098.

© 2026 முனைவர் .ஜென்ஸிஸ் குமார் மி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 384–388
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சிறுதெய்வ வழிபாடும்.. தென் மாவட்ட மக்களின் வாழ்க்கை முறையும்

சக்திவேலாயுதம் ம[1,*], மேனகா கு[2]

[1] பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை மற்றும் ஆராய்ச்சி மையம்,சாராள் தக்கர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),பெருமாள்புரம், திருநெல்வேலி., *India*

[2] உதவிப் பேராசிரியர் ,தமிழ்த்துறை மற்றும் ஆராய்ச்சி மையம்,சாராள் தக்கர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),பெருமாள்புரம், திருநெல்வேலி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சக்திவேலாயுதம் ம — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00064	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வுக் கட்டுரை, தென் மாவட்ட மக்களின் வாழ்வியலோடும் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்துள்ள சிறுதெய்வ வழிபாட்டு முறைகளையும், அவற்றின் வரலாற்று, சமூக, பண்பாட்டு முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது. சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமப்புற மக்களின் நம்பிக்கைகள், இயற்கை சார்ந்த வாழ்வியல், முன்னோர் வழிபாடு, வீரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றின் வெளிப்பாடாக விளங்குகிறது. பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து வேறுபட்ட சடங்குகள், வழிபாட்டு முறைகள் மற்றும் நாட்டார் மரபுகளைக் கொண்டுள்ள இவ்வழிபாடு, தென் மாவட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் சமூக உறவுகளிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

Keywords / திறவுச்சொற்கள்: சிறுதெய்வ வழிபாடு; தென் மாவட்டங்கள்; நாட்டார் தெய்வங்கள்; நடுகல் வழிபாடு; காவல் தெய்வங்கள்; பெண் தெய்வ வழிபாடு; கன்னி வழிபாடு; பண்பாட்டு வாழ்வியல்.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ம, ச., & கு, மே. (2026). சிறுதெய்வ வழிபாடும்.. தென் மாவட்ட மக்களின் வாழ்க்கை முறையும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 383–387. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8517

முன்னுரை

சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமப்புற மக்களின் வாழ்வியலோடு கலந்த இயற்கையான வழிபாட்டு முறையை குறிக்கிறது. தமிழர் பண்பாட்டில் சிறுதெய்வங்கள் என்பவை கிராமப்புற அடித்தள மக்களின் வாழ்வியலோடு இயைந்த நாட்டார் தெய்வங்களாகும். இவை இயற்கையை வணங்குதல், வீரம் செறிந்த முன்னோர்களைப் போற்றுதல் மற்றும் சமூகத்தைப் பாதுகாத்தல் போன்ற பண்பாட்டு வெளிப்பாடுகளாக விளங்குகின்றன. இவை பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து மாறுபட்ட தனித்துவமான சடங்கு

முறைகளைக் கொண்டுள்ளன.

தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படும் சிறு தெய்வ வழிபாட்டை, நெறிகளை இக்கட்டுரையில் காண்போம்.

பொருளுரை

பாதுகாவலராய் நிற்கும் சிறுதெய்வங்கள் ஊருக்கு வெளியே அல்லது எல்லைக் கற்களின் அருகில் திறந்தவெளியில் கோயில்கள் அல்லது மரத்தடிச் சிலைகள் இருக்கும் சிறுதெய்வங்களான காளியம்மன், மாரியம்மன், பேச்சியம்மன், சுடலை மாடன், மதுரை வீரன், அய்யனார், கருப்பசாமி, முனீஸ்வரன் போன்றவை கிராமப்புற மக்களுக்கு / விளிம்பு நிலை மக்களுக்கு எல்லைச்சாமிகளாய் இன்றளவும் விளங்கி வருகின்றன. களிமண்ணால் செய்யப்பட்ட விலங்கு உருவங்களை நேர்த்திக்கடனாக செலுத்தி வழிபடுதல் இம்முறையில் முக்கிய வழிபாடு ஆகும். விளிம்பில் நிலை மக்கள் தங்களின் இன்ப துன்பங்களை இந்தச் சாமிகளோடு பேசி ஒரு தீர்வை கேட்டு மேற்கண்ட சாமிகள் நீதியை வணங்கும் நீதிமான்களாகின்றனர். குறிப்பாக நம் மாவட்டத்தில் ஆறுமுகமங்கலம் “ஹைகோர்ட் சுடலை“ இதற்கு சான்றாகச் சொல்லப்படுகின்றது.

பிற்கால மற்றும் நாட்டுப்புற இலக்கியங்களில் சுடலை மாடன் குறித்த சான்றுகள் பெரும்பாலும் வாய்மொழி இலக்கியங்களாகவும், வில்லுப்பாட்டு, அம்மன் தாலாட்டு, மற்றும் சிறுதெய்வ வழிபாட்டுப் புராணக் கதைகளாகவும் காணப்படுகின்றன. செவ்வியல் இலக்கியங்களை விட பிற்கால கிராமியப் இலக்கியப் பிரதிகளிலும் வழக்காறுகளிலுமே சுடலை மாடன் பற்றி அதிகமாக பேசப்படுகின்றன. அதிலும் குறிப்பாக வில்லுப்பாட்டுகளில் சுடலைமாடன் கதை சுடலை ஆண்டவர் கதை போன்றவை நீண்ட கதை பாடல்களாக பாடப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

நடுகல் வழிபாடு

போர்க்களத்தில் விழுப்புண் பட்டு வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாகக் கல்நட்டு, அவர்களின் பெயர் மற்றும் பெருமைகளைப் பொறித்துத் தெய்வமாக வழிபடும் பழந்தமிழர்களின் பண்பாட்டு மரபு நடுகல் வழிபாடு எனப்படும். இது சங்ககாலம் தொட்டே தமிழர் சமூகத்தில் நிலவி வரும் மிகப்பழமையான முன்னோன் மற்றும் வீர வழிபாட்டு முறையாகும்.

வழிபாட்டிற்கு ஏற்ற நல்ல கல்லைத் தேர்ந்தெடுத்து, கற்செய்தலுக்கான நன்னாளைக் குறித்து, கல்லை நீராட்டிச் சுத்தப்படுத்தி, உரிய இடத்தில் கல்லை நிறுவி, மலர் தூவி, உணவுப் படைத்து சிறப்பு செய்து, வீரனின் புகழைப் பாடி வணங்குவது நடுகல் வழிபாட்டில் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல் பெரும்படை வாழ்த்துதல் என்ற படிநிலைகளாக சொல்லப்படுகிறது.

பகைவரிடமிருந்து கவரப்பட்ட ஆநிரைகளை மீட்டுத் தந்து உயிர் துறந்த வீரர்களுக்கு முதன்மையாக நடுகல் எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் வெறும் கற்களாக இருந்தவை, பின்னர் வீரர்களின் உருவம், அவர் செய்த சாதனை மற்றும் பெயர் பொறிக்கப்பட்ட சிற்பங்களாக மாறின.

வீரன் இறந்தாலும் அவனது ஆன்மா அக்கல் வடிவத்தில் நின்று ஊரைக்

காக்கும் என்ற ஐதீகம் மக்களிடம் இருந்தது. பிற்காலத்தில் இந்த நடுகல் வழிபாடே பல ஊர்க் காவல் தெய்வ வழிபாடுகளாக உருமாறியது.

பண்டைய நடுகல் வழிபாடே பிற்காலத்தில் தமிழர்களின் சிறுதெய்வ வழிபாடாக (நாட்டார் தெய்வங்கள்) பரிணாம வளர்ச்சி பெற்றது. இன்று கிராமங்களில் வழிபடப்படும் கருப்பசாமி, சுடலைமாடன், ஐயனார், மதுரை வீரன் மற்றும் மாலையம்மன் போன்ற காவல் தெய்வங்களின் தோற்றத்திற்கு இந்த நடுகல் வழிபாடே அடிப்படையாகும்.

பெண் தெய்வ வழிபாடு

பெண் தெய்வ வழிபாடு என்பது தமிழர்களின் தொன்மையான பண்பாட்டில் இயற்கையையும் சக்தியையும் தாயாகப் போற்றும் ஒரு வழிபாட்டு முறை ஆகும்.மனித குலத்திற்கு உயிரும் உணவும் அளித்து காக்கும் ஆற்றல் பெண்ணிடம் இருப்பதாகப் பண்டைக் காலத்தில் மக்கள் நம்பினர்.செழுமையின் அடையாளமாகப் பெண் கருதப்பட்டதால், இயற்கையைத் தாயாக உருவகித்து வழிபட்டனர். பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் பெண் தெய்வங்களின் பெயர்களும் அவற்றின் வழிபாடுகளும் பற்றிய குறிப்புகள் உள்ளன.

மாரியம்மன், காளியம்மன், முத்தாலம்மன், திரௌபதையம்மன், அங்காளம்மன் மற்றும் இசக்கி போன்ற தெய்வங்கள் கிராமப் புறங்களில் காவற் தெய்வங்களாக வணங்கப்படுகின்றன. பார்வதி, துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி மற்றும் அகிலாண்டேஸ்வரி போன்ற வடிவங்களிலும் சக்தி வழிபாடு நீடிக்கிறது.

இத்தெய்வங்களுக்கு விரதமிருந்தும், உயிர்பலி கொடுத்தும் வழிபாடு செய்யப்படுகின்றது. இவை மட்டுமல்லாமல் வேண்டுதல், நேர்த்திக்கடன், தீமிதித்தல், தேர் இழுத்தல் போன்றனவும் வழிபாட்டு நிலையில் அடங்கும். பெருந்தெய்வங்களைப் போல தினசரி பூசைகளோ, படையல்களோ இத்தெய்வங்களுக்குச் செய்வதில்லை.

இப்பெண் தெய்வங்கள், ஊர்த் தெய்வங்கள், பொதுத் தெய்வங்கள், இனத்தெய்வங்கள், குலதெய்வங்கள், வீட்டுத் தெய்வங்கள், பத்தினித் தெய்வங்கள், காவல் தெய்வங்கள், எல்லைத் தெய்வங்கள் எனப் பலநிலைகளில் வணங்கப்படுகின்றன. இப் பெண் தெய்வங்கள் அம்மன் என்ற பொதுவான பெயரால் அழைக்கப்படுகின்றனர். இத்தனை பெண் தெய்வங்கள்தான்என்றுஎண்ணிக்கையில்சொல்லமுடியாதஅளவுக்குபெண் தெய்வங்கள் சமூகத்தில் வழிபடப்பட்டு வருகின்றன.

இன்றைய வழிபாட்டு முறைகள்

நாட்டுப்புற மக்கள் தங்கள் வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்தவர்களையோ, அல்லது வீட்டில் இருந்த மூதாதையர்களையோ, விபத்தினால் இறந்த கன்னிப் பெண்களையோ வணங்கும் வழக்கத்தினைக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு வணங்கும் முறை வீட்டுத்தெய்வ வழிபாட்டு முறையாகும்.இதனை “இல்லுறைத் தெய்வம்” என சங்க இலக்கியத்தில் குறிப்பதைக் காணலாம்.

நடுகல் வழிபாடே காலப்போக்கில் குலதெய்வம் வழிபாடாக மாறியது

எனலாம். 'குலம்' என்பது ஒரு குறிப்பிட்ட மூதாதையரின் மரபில் தோன்றியதன் வாயிலாக ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ள குழுஅமைப்பு ஆகும். இரத்த உறவுடைய பங்காளிகள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாக கருதப்படுவர். தன் குலத்தின் முன்னோர்களில் சிறந்து விளங்கியவர்களையும்,குல மகக்களுக்காக உயிர் தியாகம் செய்தவர்களையும் தெய்வமாக பாவித்து வணங்கி வழிப்பட்டனர். இவ்வழிபாடு ஒவ்வொரு குலத்திற்கும் மாறுபடும்

பல்வேறு குழுவினைச் சார்ந்தவர்கள் ஓர் இனமாக நின்று வணங்கும் முறைக்கு இனத்தெய்வ வழிபாடு என்று பெயர். ஊரில் உள்ள மக்களை காக்கும் தெய்வங்களை வணங்கும் வழக்கத்திற்கு ஊர்த்தெய்வ வழிபாடு என்று பெயர். பெரும்பாலும் மாரியம்மன் கிராமதேவதையாக ஊரின் நடுவிலும் ஐயனார் காவல் தெய்வமாக ஊரின் எல்லையிலும் அமைத்து அதை ஊர்த்தெய்வங்களாக வணங்கப்படுகின்றன.

சாதி, மதம், இனம் என்ற வேறுபாடுகளைக் கடந்த தெய்வ வழிபாட்டிற்கு வெகுசனத்தெய்வ வழிபாடு என்று பெயராகும். மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி, சமயபுரம் மாரியம்மன், கோட்டை மாரியம்மன், வீரபாண்டி மாரியம்மன், இராஜ காளியம்மன், வெக்காளியம்மன், ஐயனார், சனீஸ்வரன் போன்ற தெய்வ வழிபாடுகள் முதலில் சிறுதெய்வ வழிபாடாக இருந்து வெகுசனத்தெய்வ வழிபாடாக மாற்றம் கொண்டவையாகும்.

கன்னி வழிபாடு

சிறு தெய்வ வழிபாட்டில் கன்னி வழிபாடு என்பது திருமணத்திற்கு முன்பே இறந்துபோன கன்னிப் பெண்களை அல்லது சிறுமிகளைத் தெய்வமாகப் போற்றி வணங்கும் ஒரு பாரம்பரிய கிராமிய வழிபாடாகும்.குடும்பத்தில் அல்லது குலத்தில் திருமணமாகாமல் சிறு வயதிலேயே இறந்துவிட்ட இளம் பெண்களை முன்னோர்களின் ஆன்மாவாகக் கருதுகின்றனர்.கன்னிப் பெண்கள் இயற்கையாகவே தூய்மையானவர்கள் என்பதால், அவர்களைச் சக்தியின் வடிவமாகப் பாவித்து வழிபடுகின்றனர்.இத்தகைய கன்னித் தெய்வங்கள் தங்கள் குலத்தைக் காப்பதாகவும், குடும்பத்திற்கு வரவிருக்கும் தீமைகளைத் தடுத்து நிற்பதாகவும் நம்பப்படுகிறது.

வீட்டின் கன்னி மூலையிலும் (தென்மேற்கு மூலை), கிராமங்களின் எல்லைப் பகுதியிலும் அல்லது குலதெய்வக் கோயில்களிலும் கன்னித் தெய்வங்களுக்குச் சிறிய பீடம் அமைத்து வழிபடுகின்றனர். ஆடி மாதம், குறிப்பாடிப் பெருக்கு அல்லது ஆடி மாதக் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்புப் பூஜைகள் செய்யப்படுகின்றன. மஞ்சள், குங்குமம், பூக்கள், புதிய பாவாடை-சட்டை அல்லது புடவை, மற்றும் கன்னிப் பெண்களுக்குப் பிடித்தமான நிவேதனப் பொருட்களைப் படைத்து வணங்குகிறார்கள்.

குடும்பத்தில் தடைபடும் திருமணத் தடைகள் நீங்கும். வம்சவிருத்தி பெருகும் மற்றும் தீய சக்திகள் விலகும்.குலதெய்வம் அறியாதவர்கள் கன்னி தெய்வத்தை முறையாக வணங்கினால் குடும்பத்தில் அமைதியும் சுபிட்சமும் உண்டாகும் என்று நம்பப்படுகிறது. கன்னி தெய்வங்கள் இந்த நவீன யுகத்திலும் பிரதான தெய்வமாக விளங்கி வருகிறது. பல அற்புதங்களையும் அதிசயங்களையும்

செய்து கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

முடிவுரை

பல்வேறு குலம், இனம், மொழி என்ற பாகுபாடுகள் இருப்பதால் எண்ணில் அடக்காத சடங்குகள் கொண்டதாக சிறுதெய்வ வழிபாடு காணப்படுகிறது. இந்த சிறுதெய்வ வழிபாட்டோடு இந்து சமய சடங்குகள் பல பின்பற்றப்படுகின்றன. குறிப்பாக பலியிடுதல், ஆணி செருப்பணிதல், சூரைக் கொடுத்தல், கோழிக் குத்துதல் போன்ற சடங்குகள் சிறுதெய்வ வழிபாட்டிற்கு உரியன. இந்த சடங்குகளை பெருதெய்வ வழிபாட்டில் மக்கள் பின்பற்றுவதில்லை.

சிறு தெய்வ வழிபாடானாது இன்று உலகமயமாக்கல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் சமூக நகர்வுகள் காரணமாகப் பெரும் பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளது. கிராமப்புற எளிய மக்களின் வழிபாட்டு முறையாக இருந்த சிறு தெய்வ வழிபாடு, இன்று நகரமயமாகுதல் மற்றும் பெருந்தெய்வமயமாக்கல் ஆகியவற்றுக்கு உட்பட்டு மாறி வருகிறது. கோவில் வழிபாடு, வழிபாட்டு முறையில் மாற்றங்கள், சிறு தெய்வ தோற்ற மாற்றங்கள், டிஜிட்டல் காணிக்கை, டிஜிட்டல் விளம்பரங்கள் நேரலை மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் செயல்பாடு, பெரிய கொடை விழாக்கள், பலி கொடுப்பதில் மாற்றங்கள் என பல மாற்றங்களைக் கண்டு சிறு தெய்வ வழிபாடு இன்று இன்னும் இன்னும் நம்மோடு இருப்பது நமக்கான வரம் என்று மட்டுமே சொல்ல முடிகிறது.

துணைநூற் பட்டியல்

பண்பாட்டு அசைவுகள் (தொ.பரமசிவன்)

தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும் (தொ.பரமசிவன்)

© 2026 சக்திவேலாயுதம் ம, மேனகா கு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 389–392
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

நாட்டுப்புற பழமொழிகளில் வாழ்வியல் விழுமியங்கள்

முனைவர்.அசோக்குமார் ப*

கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி - 626124. விருதுநகர் மாவட்டம்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.அசோக்குமார் ப — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00063

Abstract / ஆய்வுச்சுருக்கம்

மக்களின் அன்றாட வாழ்வியலுக்கிடையே நிகழும் நிகழ்வுகளில் அரிதாகவும், புதிதாகவும், வியப்பாகவும், நிகழ்ச்சிகளைக் காண நேரிடுகையில், அந்நிகழ்ச்சியைப் பற்றி கூறுகையில் பழமொழி தோற்றம் பெறுகிறது. மேலும் வாழ்க்கையில் அனுபவப் பாடங்களாகப் பெற்ற கருத்துக்களும் பழமொழிகளாக உருவாக்கப்படுகின்றன. அவ்வகையில் நாட்டுப்புறவியலில் பழமொழிகளோடு தொடர்புள்ள வாழ்வியல் விழுமியங்கள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: நாட்டுப்புற நிகழ்வுகள்; பழமொழிகள்; வாழ்வியல் விழுமியங்கள்; வாழ்வியல் நிகழ்வுகள்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ப, மு. (2026). நாட்டுப்புற பழமொழிகளில் வாழ்வியல் விழுமியங்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 388–391. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8519

முன்னுரை:

கல்வியறிவு இல்லாத ஏழை எளிய பாமர மக்களின் வாழ்வியல் அனுபவங்களை வாய்மொழிப் பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்துகின்றன. அவர்களின் உணர்ச்சிகளை எடுத்துக் கூறும் வாயில்களாக பழமொழி குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். ஒவ்வொரு பழமொழியும் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல கருத்துகளை எடுத்துரைக்கின்றன. எனவே பழமொழிகள் மூலம் அறியலாகும் நாட்டுப்புற வாழ்வியல் விழுமியங்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

பழமொழி அறிமுகம்

முதுமையை அழகாக வெளிப்படுத்துவது பழமொழியின் சிறப்பாகும். அப்பழமொழிகள் அறிவின் வளர்ச்சி நிலையில் பிறந்தவை. சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய சிறப்புக்களால், நாள்தோறும் இறந்து கொண்டு இருக்கும்

இவ்வுலகில் என்றும் இறவாமல் வாழ்கின்றது என்பார் அரிஸ்டாட்டில். தமிழ்ப் பழமொழிகளின் சிறப்பை உணர்ந்த முன்றுரையரையனார் நான்நூறு பழமொழிகளைத் தொகுத்து பழமொழி நானூறு என்ற நூலினை படைத்தருளினார். இலக்கண நூலான தொல்காப்பியத்தில் பழமொழியின் சிறப்பினை செய்யுளியலில் குறிப்பிட்டுள்ளது. அதில் பழமொழி முதுமொழி என்ற பெயரில் இடம் பெற்றுள்ளது. இதனை,

"நுண்மையும் சுருக்கமும் இலிவடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வமூவம்
ஏதுநுதவிய முதுமொழி என்ப"

என்று நூற்பா விளக்குகிறது.

விழுமியங்கள்

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகிறது. விழுமியம் என்ற சொல்லுக்கு 'மதிப்பு' என்பதே இணையான சொல். அச்சொல் பொருளாதாரத்திற்கு பயன்படும் சொல்லாக அமைகின்றது. எனவே இலக்கியத்தில் அதற்கு இணையாக 'விழுமியம்' எனும் சொல் பயன்பாடு வருகின்றது.
விழுமிய என்ற சொல்லுக்கு சிறந்த, உசித, மேன்மையான, அரிய, சிரிய என்ற பொருளை கழகத்தமிழ் அகராதி குறிக்கின்றது. தொல்காப்பியம் இதனை,

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகிணும்
தோல்என மொழிப தொன்மொழிப் புலவர்"

என்ற அடிகளில் விழுமியம் நுவலிணும் என்பதற்கு அறம், பொருள், இன்பம், வீடு என்பன பொருளாக இருக்க வேண்டும் என்று தொல்காப்பிய நூற்பா வழி அறியமுடிகின்றது.

குலம்

பிறந்த குலத்தின் பெருமையைக் காப்பாற்றுவது அக்குலத்தில் பிறந்தவர்களின் கடமையாகும். அவ்வாறு நிகழாமல் இயல்பு நிலையில் இருந்து மாறுபடும் போது தமக்கும் தாம் பிறந்த குலத்திற்கம் இழிவைத் தேடித் தருகின்றனர். உயர்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கு உயர்வான பண்புகள் இயல்பாகவே அமையும் என்பதை,

"குலவிச்சை கல்லாமல் பாகம்படும்" என்று பழமொழி நானூறு கூறுகிறது. இதனையே,

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்று முதுரை விளக்குகின்றது. தன்நிலை மாறினாலும் செல்வநிலை தாழ்ந்தாலும் மேன்மக்கள் ஒரு போதும் கீழ்த்தரமான செயலைச் செய்ய மாட்டார்கள் என்பதே பழமொழி விளக்குகின்றன.

திருமணம்

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் திருமணம் என்பது குறிப்பிடத்தகுந்த நிகழ்ச்சியாக உள்ளது. இல்லறம் இனிதே விளங்க நல்ல குணமுடைய துணைவி வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் வாழ்க்கையில் எதுவும் நிகழாதது போல் ஆகிவிடும். இதனை வள்ளுவர்,

“இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக் கடை” என்று கூறுகிறார். எனவே வாழ்க்கைத் துணையைத் தேடுவதில் கவனமுடன் செயல்பட வேண்டும் என்பதை "தண்ணீர்த்துறையில் தாயைப் பார்த்தால் பெண்ணை வீட்டில் பார்க்க வேண்டாம்" என்ற பழமொழி எடுத்துரைக்கின்றன.

உழைப்பு

வாழ்வில் ஒருவன் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால் கடின உழைப்பு, விடா முயற்சி ஆகிய இரண்டும் அவசியமாகும். உழைப்பானது உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் உறுதி தரக்கூடியது. தன்னம்பிக்கையுடன் மனிதன் செயல்படுவதற்கு உழைப்பே காரணமாக அமைகிறது.

எந்தவொரு செயலுக்கும் பிறரை நம்பாமல் தாமே முயற்சி செய்ய வேண்டும் என்பதைத், "தன் கையே தனக்கு உதவி" என்ற

பழமொழி சுட்டிக்காட்டுகின்றன. மேலும் முயன்று சேர்த்த பொருளைச் சிக்கனமாகச் செலவழிப்பது சிறப்பான செயலாகும் என்பதை,

"ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" எனும் பழமொழி குறிக்கின்றன.

கல்வி

கல்விச் செல்வமானது ஒருவன் பெறக்கூடிய செல்வங்கள் அனைத்திலும் சிறப்புடையது. என்னும் யாராலும் அழிக்க முடியாத, குறைக்க முடியாத செல்வமாகும். கொடுக்கக் கொடுக்க வளரும் தன்மையுடையது. இத்தகைய கல்வியானது உரிய காலத்தில் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை,

"இளமையில் கல்" எனவும், மேலும் கல்வியின் சிறப்பினை அளவிட முடியாது என்பதனை,

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற பழமொழியும் இயம்புகின்றன.

பொருள்

ஒருவன் சமூகத்தில் நல்ல மதிப்புடையவனாகத் திகழ்வதற்குப் பொருளே அடிப்படைக் காரணமாக உள்ளது. இதனை வள்ளுவர்,

“பொருளல்ல வரையும் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்” என்கிறார்.

பணமிருந்தால் சமூகத்தில் எதையும் சாதிக்கலாம் என்கிற நிலையில் பணத்தின் வலிமையை விளக்கும் விதமாகக் கீழ்க்கண்ட பழமொழிகள் விளக்குகின்றன:

“பணம் பத்தும் செய்யும்”

“பணம் இல்லாதவன் பிணம்”

“பணம் பந்தியிலே குணம் குப்பையிலே”

என்ற பழமொழிகள் பணத்தின் வலிமையையும், பணம் இல்லாமல் இருந்தால் சமூகத்தில் இருக்கும் மரியாதை ஒருவனுக்குக் கிடைக்கும் என்ற கருத்து இடம்பெறுகின்றன.

முடிவுரை

ஏடுகளில் இடம்பெற்றிருக்காத இலக்கியமாக, எழுத்தறிவும் படிப்பறிவும் இல்லா பாமர மக்களால் எடுத்துரைக்கப்பட்ட பழமொழிகள் அவர்களின் அன்றாட

வாழ்வில் நிகழ்ந்த அனுயவங்களே எனலாம். வாழ்க்கை நிலையினை படம்பிடித்துக் காட்டுவதோடு அனுபவ அறிவை வளர்த்துக்கொண்ட கருத்துக்களையும் இக்கட்டுரையில் காணமுடிகின்றன.

பார்வை நூல்கள்

1. சுபா~ சந்திரபோஸ்.ச.முனைவர் (உ.ஆ), - தமிழ்க் களஞ்சியம் - 3, இயல் பதிப்பகம், 23ஃபிஃ2739, தொப்புள் பிள்ளையார் கோவில் தெரு, தெற்கலங்கம், தஞ்சாவர் - 613001, ஏழாம் பதிப்பு - 2023.
2. சாலமன் பாப்பையர். பேரா., தொல்காப்பியம் - பொருளதிகாரம், திருவள்ளுவரின் திருக்குறள், ஜெயா பதிப்பகம், 1, விசுவாசபுரி 4-வது தெரு, ஞான ஒளிவுபுரம், மதுரை - 625 016, டிசம்பர் - 1999.

© 2026 முனைவர்.அசோக்குமார் ப. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 393–398
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

இரா. நாறும்பூநாதன் படைப்புகளில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைகள்

முனைவர். கீதா ரஞ்சித பாக்கியம் சா.ஜா.*

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர். கீதா ரஞ்சித பாக்கியம் சா.ஜா. — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00062	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

குழந்தை தொழிலாளர் முறை என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் ஒரு பெரும் சாபக்கேடு ஆகும். குழந்தைகள் வேலைக்குச் செல்வது என்பது ஒரு தனிநபரின் பிரச்சனை அல்ல. அது ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்காலத்தை இருட்டிற்குள் தள்ளும் சமூகக் குற்றமாகும். சட்டங்களினாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினாலும் மட்டும் இந்த அவலத்தை முழுமையாக வேரறுக்க முடியாது என்பதை இரா. நாறும்பூநாதன் படைப்புகள் மூலம் அறிய முடிகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: குழந்தை-தொழிலாளர்- பொருளாதாரம்- வளர்ச்சி _பிரச்சனை- குடும்பம் -சமூகம்- மனம்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: சா.ஜா., மு. கீ. ர. பா. (2026). இரா. நாறும்பூநாதன் படைப்புகளில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 392–397. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8521

முன்னுரை

குழந்தைத் தொழிலாளர் முறை என்பது நவீன உலகின் மிகக் கொடிய சமூக அவலங்களில் ஒன்றாகும். 'இன்றைய குழந்தைகளே நாளைய பிரைஜகள்' என்ற பொன்மொழிக்கு மாறாக, நாட்டின் எதிர்காலத் தூண்களாக விளங்க வேண்டிய பிஞ்சுப் பிள்ளைகள், பேனா பிடிக்க வேண்டிய வயதில் சுத்தியலையும், பாத்திரங்களையும் ஏந்தி தங்களின் இனிமையான குழந்தைப்பருவத்தை இழந்து நிற்கின்றனர். ஒரு குழந்தையின் உடல், மனம் மற்றும் கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும் வகையில், அவர்களைக் கட்டாயப்படுத்தி ஏதேனும் ஒரு பொருளாதார வேலையில் ஈடுபடுத்துவதே குழந்தைத்தத் தொழிலாளர் முறை என வரையறுக்கப்படுகிறது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐடுழு) கூற்றுப்படி, இது குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் மாபெரும் குற்றமாகும். அத்தகைய குழந்தை தொழிலாளர்கள் பிரச்சினைகள் குறித்து நாறும்பூநாதன் தமது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

குழந்தைத் தொழிலாளர்கள்

குழந்தை தொழிலாளர் என்பது குடும்பச் சூழல் காரணமாகவும், பொருளாதார சீர்கேட்டின் காரணமாகவும் இப்பிரச்சனைகளுக்கு குழந்தைகள் ஆளாகின்றனர். குழந்தைத் தொழிலாளர் என்பது தொடர்ந்து, நீடித்த பணியில் குழந்தைகள் தொழிலாளர்களாகக் ஈடுபடுவதைக் குறிக்கின்றது. எல்லா நாடுகளிலும் சட்ட விரோதமாக நிறுவனங்களில் பல இக்கொடுமை நடைபெறுகிறது. தொழில்துறையில் ஏற்பட்ட வேலை மாற்றம், வேலையாளர்களுக்கும், குழந்தைகளின் உரிமைகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்துக்களால் குழந்தைத் தொழிலாளர் முறை தற்போது உலகெங்கும் பரவியுள்ளது.

'வளர்ச்சியடைந்த பல நாடுகளில் குழந்தைத் தொழிலாளரின் வயது மாறுபட்டதாக உள்ளது. பள்ளி வேலை மற்றும் வீட்டு வேலை தவிர பிற வேலைகளுக்கு குழந்தைகள் பணியமர்த்தக்கூடாதென வாள்ச்சியைடந்த நாடுகள் கூறுகின்றன. குறிப்பிட்ட வயதுகளுக்கீழ் உள்ள குழந்தைகள் கண்டிப்பாகப் பணியமர்த்தக் கூடாது. இந்த குழந்தைத் தொழிலாளர் வயது வித்தியாசமும் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடுகிறது. ஐக்கிய நாடுகளின் குழந்தைத் தொழிலாளர் சட்டப்படி, 16 வயது நிறைவு பெறவதற்கு முன்பாக குழந்தைகளைப் பணியில் அமர்த்தக்கூடாது என்பதுடன் பெற்றோரின் சம்மதமில்லாமல் வேலைக்கு அனுமதிக்கக்கூடாது என்பதாகும்.' (வய. றுமைipநனயை.ழசப)

பாரதியார் பார்வையில் குழந்தைகள்

அதிக வறுமை காரணமாகவும் குடும்ப சூழல் காரணமாகவும் குழந்தைகள் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். குழந்தைகளுக்கு கல்வி அறிவினைப் புகடும் பெற்றோர்கள் கூட தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். இதனால் சில இடங்களில் குறைந்த ஊதியத்திற்காக வேலை வாங்குவதும் நடைபெறுகின்றது. இது குழந்தைகளுக்கு மன உளைச்சலை உள்ளாக்குவதுடன் அவர்களது எதிர்காலத்தையும் பெரிதும் பாதிக்கின்றது. ஒரு நாட்டினுடைய எதிர்காலம் அங்கு வளர்கின்ற குழந்தைகளில் தான் உள்ளது. குழந்தைகள் ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் அறிவுத் திறனுடனும் வளர்வது தான் அக்குழந்தைக்கும் அவன் நாட்டிற்கும் நன்மை அளிக்கும். இதனை,

'காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு

கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு

மாலை முழுவதும் விளையாட்டு - என்று

வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா' (பாரதியார் குழந்தைகள் பாடல்கள், பாப்பா பாட்டு-6)

என்று பாரதியார் குழந்தைகளின் வாழ்வை நான்கு வரிப்பாட்டில் பாடியிருப்பதன் மூலம் அறிய முடிகின்றது. குழந்தைகள் அந்தந்த வயதில் அவர்களுக்கு உரிய செயல்களைச் செய்ய வேண்டும். படிக்க வேண்டிய காலத்தில் படித்தும், விளையாட வேண்டிய பருவத்தில் விளையாடவும் வேண்டும். செய்ய வேண்டிய செயல்களை செய்வதால் மட்டுமே குழந்தைகளின் உடல் வளர்ச்சியும், மன வளர்ச்சியும் சீராக அமையும். இல்லையெனில் அவர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல இன்னல்களையும், பல துயரங்களையும் அடைகின்றனர் என்பதையும் நம்மால் காணமுடிகின்றது.

குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலை

குழந்தை தொழிலாளர்கள் எனப்படுவர்கள் ஐந்து வயது முதல் பதினெட்டு வயது வரை உள்ளவர்கள் அவர்களின் சுதந்திரமும் உரிமையும் மறுக்கப்படும் வேலைகளில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகளைக் குறிக்கின்றது எனலாம். இத்தகைய குழந்தை தொழிலாளர்கள் தாய், தந்தையை இழந்தவர்களாகவோ அல்லது குடும்பச் சூழ்நிலையின் காரணமாகவோ வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பது பழமொழி என சிறுவயதிலேயே இவர்கள் குடும்ப பாரத்தைச் சுமக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பதையும் காணமுடிகின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு உள்ளாகும் குழந்தைகள் பல்வேறு பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன.

இவ்வுலகெங்கிலும் பத்தில் ஒரு குழந்தை, குழந்தைத் தொழிலாளியாக மாற்றப்படுகிறது என புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. வறுமையின் காரணத்தினாலும், தாய், தந்தையர்களை இழந்தமையினாலும் போதைக்கு அடிமையான குடும்பங்களில் அவர்களுக்குப் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்கவும் குழந்தைகள் வேலைக்கு அனுப்பப்படுகின்றனர். இதுமட்டுமின்றி பாதுகாப்பற்ற முறையில் அனாதையாக விடப்படும் குழந்தைகள் சில சமூக விரோதிகளால் சிலரால் குழந்தைத் தொழிலாளர்களாக மாற்றப்படுகின்றனர் என்பதையும் காணலாகின்றது.

'இளமையில் கல்' என்பது ஔவையார் கூறும் அறிவுரையாகும். ஆனால், குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்லாமல் வேலைக்குப் போவதால் அவர்கள் பெரும் மனவருத்தத்திற்கு உள்ளாகின்றனர். இதனால் அவர்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதனை 'ஓர் இரவு' என்ற சிறுகதையிலும் 'ரயில்வே தண்டவாளங்களும் சில புறாக்களும்' என்ற சிறுகதையிலும் இரா.நறும்புநாதன் கூறியிருக்கிறார்.

பனிரெண்டு வயதுடைய சிறுமி வேலைக்குச் செல்கிறாள். அவளால் இயலாத காரணத்தால் அவள் வேலைக்குச் செல்ல மாட்டேன் என்று கூறுகிறாள். இதனால் அவளுடைய அம்மா திட்டுகிறான். இக்காரணத்தால் அந்தச் சிறுமி வீட்டை விட்டு வெளியேறி விடுகிறாள் என்பதனை 'ஓர் இரவு' என்ற சிறுகதையில் வழி ஆசிரியர் கூறுகிறார். தீப்பெட்டித் தொழிற்சாலையக்கு வேலைக்குச் செல்கிறாள் அந்தச் சிறுமி அவள் அங்கு குச்சி உருவும் வேலை செய்கிறாள். அவள் அவ்வாறு குச்சி உருவும் போது தீப்பெட்டி மருந்து கையில் பட்டுக் கையெல்லாம் தீப்பொக்களமாக ஆகிவிடுகிறது. இதனால் அச்சிறுமி வேலைக்குச் செல்ல மாட்டேன் என்று கூறுகிறாள்.

'நேத்து ஆபிஸிலே கட்டையிலேர்ந்து குச்சி உருகிறப்போ எரிமருந்து ரோசி கையெல்லாம் தீப்பொக்களமா ஆயிருச்சி வலி தாங்க முடியல' (இரா. நாறும்பூநாதன், இலை உதிர்வதைப் போல, ப..54)

என்று கூறுவதிலிருந்து அச்சிறுமியின் உடல் வேதனையையும் வேதனையையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இச்சிறுமியின் தாய் குடும்பச்; சூழ்நிலையின் காரணமாக வேலைக்குப் குழந்தைகள் வேலைக்குப் போனால் தான் இரவு வீட்டிற்குச் சாப்பிட வேண்டும் இல்லையென்றால் எங்கேயாவது போய்விடு என்று இதனால் அச்சிறுமி வீட்டை விட்டே வெளியே விடுகிறாள் என்பதை.

'எங்கத்தா உடனே 'ஏ மூதேவி! கட்டையிலே போறவளே'ன்று தாறுமாறாய் திட்டிட்டு இன்னிக்கி வேலைக்குப் போகாம ராத்தீவனம் திங்க வந்திராதே! ஏம் மூஞ்சிலே முழிச்ச முதுகுத்தொலி பிஞ்சு போகும்னுட்டு காட்டுக்குப் போயிட்டா' (மேலது, ப.54)

என்று கூறுவதிலிருந்துப் பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாகச் சாலையேரங்களில் கண்டிப்பாக வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதையும் இது முலம் அறிய முடிகின்றது.

தற்காலத்திலும் பொருளாதாரச்; சூழ்நிலையின் காரணமாக சாலையோரங்களில் தங்கி உள்ள குடும்பங்கள் அன்றாட உணவுத் தேவைக்காக குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. இன்னும் சிலர் குழந்தைகளைப் பிச்சை எடுக்கவும் வைக்கின்றனர் என்பதையும் அறியமுடிகிறது.

இச்சிறுமி வேலைக்குச் செல்வதற்குக் காரணம் அவர்கள் குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலை என்பதை,

'உங்கப்பா என்ன பண்ணுதாரு?'

'லெச்சுமி மில்லே வேலை பாக்காரு'

'அப்ப நெறையச் சம்பாம் வாங்குவாருள்ளா?'

'கொஞ்ச நாள் தான் ஆகுது... கொஞ்சமாத்தான் ஆத்தாகிட்டே

ரூபாயெல்லாம் கொடுப்பாரு' (மேலது, பக். 54-55)

என்று கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. இச்சிறுமியின் தந்தை மில்லில் வேலைப் பார்த்தாலும் வீட்டில் ரூபாய் குறைந்தளவே தான் கொடுக்கிறார் என்பதனால், இச்சிறுமி வீட்டில் பெருளாதாரத்திற்காகக் கட்டாயம் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளதைத் தெளிவாக அறிய முடிகின்றது.

ரயில்வே தண்டவாளங்களும் சில புறாக்களும் என்கிற சிறுகதையில், ரயில்வே கேட்டின் அருகில் மரத்தடியில் உட்கார்ந்து வெள்ளரிப்பிஞ்சு விற்கும் குழந்தைகளின் நிலையைக் கூறுகிறார். ரயில் அந்தப் பாதை வழியே செல்லும் போது, ரயில்வே கேட் மூடும் அந்த நேரத்தில் வெயில் சுட்டெரிக்கும். அக்கந்தக பூமியில் சிறுவர்களும் சிறுமியரும் வெள்ளரிப் பிஞ்சுகளைத் தட்டுகளில் வைத்துக் கொண்டு விற்பதற்குத் தயாராக இருப்பர் என்பதையும் கேட் முடியவுடன் அங்கு நிற்கும் லாரிகள் மற்றும் பேருந்துகளில் இருப்பவர்களிடம் ஓடிச் சென்று விற்பனை செய்வர்.

'அண்ணே வெள்ளரிப் பிஞ்சுண்ணே! தட்டு மூணு ரூவான்னேன் . . . ஒரு தட்டு வாங்கிக்கங்கண்ணே

காலையில் பதினோரு மணிக்கும் மதியம் இரண்டு மணிக்கும் வேப்பிலைப்பட்டிக்குச் செல்லும் ஜெயவிலாஸ் பஸ்ஸில்தான் சிறுவர்களுக்கு வியாபாரம் நன்றாக இருக்கும்.' (மேலது, ப.92)

என்று கூறுவதிலிருந்து கேட் மூடும் அந்த நேரங்களில் மட்டுமே அவர்களுக்கு விற்பனை இருக்கும் என்பதையும் மீதி நேரங்களில் அங்குள்ள கருவேல மரச்செடியின் கீழ் உட்கார்ந்து இருப்பதையும் இந்தச் சிறுகதையின் மூலம் காண முடிகிறது.

கல்வி நிலைப் பாதிப்படைதல்

மாரிக்கனி என்னும் சிறுமி நன்றாகப் படிக்கச் கூடியவள். அவள் கடந்த ஆண்டு

வரை பள்ளிக்குச் சென்றாள். ஆனால், தற்போது வெள்ளரிப்பிஞ்சு விற்கிறாள். இதற்குக் காரணம் கேட்கும் போது மாரிக்கனியின் தாய் அவளைப் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று கூறுகிறாள். இதனை,

'எங்கம்மாதான் படிச்சது போதும்னுட்டா! மாரிக்கனி சலிப்புடன் கூறினாள்.. ஆமா... படிச்ச பெரிய்ய மச்சார் வேலைக்குப் போகப் போறாளாக்கும்.. பேச்சியும் காளியும் கிண்டல செய்தார்கள்' (மேலது, ப.93)

என்று இக்கதையின் ஆசிரியர் கூறுவதிலிருந்து குடும்பச் சூழ்நிலையின் காரணமாக வெள்ளரிப்பிஞ்சு விற்பதையும் அறிய முடிகின்றது.

மாரிக்கனி மட்டுமின்றி இசக்கியம்மாள் என்ற சிறுமியும், தவசி, பேச்சி, காளி போன்றவர்களும் வெள்ளரிப்பிஞ்சு விற்பனைச் செய்கின்றனர் என்பதையும் இக்கதையில் காணமுடிகின்றது. இந்த வெள்ளரிப்பிஞ்சை விற்பதற்கு இச்சிறுமிகள் மழையிலும் வெயிலிலும் வருத்தப்பட வேண்டியுள்ளதை, 'வெயில் சுட்டெரிக்கும் அந்த கந்தக பூமியில் நிழலுக்கு ஒதுங்கக்கூட இடமின்றி கருவேலமரச் செடியின் கீழ் உட்கார்ந்து வெள்ளரிப்பிஞ்சுகளைத் தட்டில் வைத்து விற்றுக் கொண்டிருப்பார்கள்' (மேலது, ப.95) என்பதிலிருந்து அறிய முடிகின்றது.

இவ்வாறு குழந்தைகள் சிறுவயதிலேயே வேலைக்குச் செல்வதால் 'பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும்' என்பது போல குழந்தைகள் வேலைக்குச் செல்லும் இடங்களில் தவறான நபர்கள் சிலருடன் பழக்கம் ஏற்பட்டுக் குழந்தைகளும் சிறுவயதிலேயே போதைப்பழக்கம் போன்ற தவறானச் செயல்களால் அவர்களின் வாழ்க்கைச் சிறுவயதிலேயே பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இவை மட்டுமின்றி, மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய குழந்தைப் பருவத்திலேயே அவர்களைக் கொடுமைப் படுத்தவதனால் அவர்கள் உளவியல் ரீதியாக பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வுலகிலேயே மனித வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியான பருவம் குழந்தைப் பருவமே ஆகும். இந்தக் குழந்தை பருவம் எல்லோருக்கும் மகிழ்ச்சியானதாக இருப்பதில்லை. அதவும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு இவை வலிகள் நிறைந்ததாகவே காணப்படுகின்றன. பிற குழந்தைகளைப் பார்க்கும் போது நம்மால் இவ்வாறு பள்ளி செல்ல முடியவில்லை. உடை உடுத்த முடியவில்லை என்ற ஏக்கங்கள் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன. இதனால் அவர்கள் தவறான பாதையில் செல்வதற்கும் காரணமாக அமைகின்றன.

முடிவுரை:

குழந்தை தொழிலாளர் முறை என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் ஒரு பெரும் சாபக்கேடு ஆகும். குழந்தைகள் வேலைக்குச் செல்வது என்பது ஒரு தனிநபரின் பிரச்சனை அல்ல. அது ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்காலத்தை இருட்டிற்குள் தள்ளும் சமூகக் குற்றமாகும். சட்டங்களினாலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினாலும் மட்டும் இந்த அவலத்தை முழுமையாக வேரறுக்க முடியாது என்பதை இரா. நாறும்பூநாதன் படைப்புகள் மூலம் அறிய முடிகிறது.

துணை நூற்பட்டியல்:

1) இரா. நாறும்பூநாதன் படைப்புகள், இலை உதிர்வதைப் போல

2) பாரதியார் பாடல்கள், திருமகள் பதிப்பகம், சென்னை

© 2026 முனைவர். கீதா ரஞ்சித பாக்கியம் சா.ஜா.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0

licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 399–402
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

மூன்றாம் உலகப்போர் நாவலில் உழவர்களின் சமூக இருப்பியல்

முனைவர்.சுகுமாரன் நா*

உதவிப்பேராசிரியர், சமூகவியல் துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.சுகுமாரன் நா — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00061

Abstract / ஆய்வுச்சுருக்கம்

வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் என்ற நாவல் பருவநிலை மாற்றத்தினை உழவுத்தொழிலின் பின்புலத்துடன் பதிவுறுத்துகிறது. தனியார் மயப்படுத்துதல் வேதிநச்சுகளை மண்ணில் உரமாக்குகின்றன. கடன் சுமை, குடும்ப உறவுகளின் முறிவு, நில இழப்பு, தலைமுறை இடைவெளி, ஓசோன்படலப் பாதிப்பு போன்ற சூழலியல் காரணிகள் உழவுத்தொழிலை பின்னலிட்டு அமைகின்றன என்ற உலகமயமாக்கல் மூன்றாம் உலகப்போரின் ஆய்வுப் பொருளாக கட்டமைக்கப்படுகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: உழவர் - சமூக இருப்பியல் – மண் – வேளாண்மை –சூழலியல் – கடன் – வட்டி – சந்தை - நில உரிமை - தலைமுறை மாற்றம் – நகரமயமாக்கல் – சமூக மதிப்பீடு – உறவு முறிவு – பயிர்க்கடன் – உற்பத்தி – உழைப்பு – பொருளாதாரம் – உறவு – பருவநிலை

How to cite / மேற்கோள் காட்டும் முறை: நா, மு. (2026). மூன்றாம் உலகப்போர் நாவலில் உழவர்களின் சமூக இருப்பியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 398–401. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8523

முன்னுரை

வைரமுத்துவின் மூன்றாம் உலகப்போர் நாவல் சூழலியல் மாற்றத்தினால் புவி வெப்பமயமாதல் ஏற்படுவது உழவர் சமூகத்தின் வாழ்வியலில் ஏற்படுத்தும் தாக்கத்தை பதிவு செய்யும் பதிவுசெய்கிறது. உழவர்களின் பொருளாதார வாழ்க்கை, குடும்ப உறவுகள், சமூக மதிப்பு, நில உரிமை, தலைமுறை மாற்றம், வேளாண் பொருட்களின் சந்தையாக்கம், வேளாண்மைக் கடன்கள், மண்நிலை, உழவர்களின் உழைப்பு, உற்பத்தி என்ற பின்னணியில் காலநிலைகள் இணைக்கப்படுகிறது.

உழவர் சமூக இருப்பியல் – கருத்தாக்கம்

‘சமூக இருப்பியல்’ என்பது ஒரு சமூகக் குழுவின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொருளாதார மேலாண்மை, சமூக மதிப்பீடு, உழைப்பு மற்றும் உற்பத்தி, நில உரிமை, முதலாளித்துவம், மனித உறவு நிலை, புழங்குபொருட்களின் பயன்பாடு ஆகிய பண்பாட்டுக் காரணிகளையும் சமூக மதிப்பீட்டினையும் உள்ளடக்கியது.

மண்ணும் உழவரின் சமூக இருப்பும்

உழவரின் வாழ்க்கையின் அடிப்படை உற்பத்திக் கருவி மண் ஆகும். பொருளாதாரம், வளமை, நிலவுரிமை, ஆதிக்கம், குடும்பத்தின் வாழ்வாதாரம் சமூக அடையாளம், தலைமுறைகளின் தொடர்ச்சி என்று மண் உழவர் சார்ந்த சமூக இருப்பியலை நிலைநாட்டுகிறது. மனித நாகரிகத்தை ஓரிடத்தில் நிலைநிறுத்துகிறது.

பருவநிலை மாற்றமும் உழவர் இருப்பும்

வேளாண்மை இயற்கைச் சூழலுடன் நேரடியாகத் தொடர்புடையது. மழை, பனி, வெயில் ஆகியவை உரிய காலத்தில் உரிய அளவில் கிடைத்தால்தான் பயிர்கள் செழிக்க முடியும். நாவலில் சீனிச்சாமி கடலைப் பயிரிடுகிறார். புரட்டாசியில் மழை பெய்யும் என எதிர்பார்த்த நிலையில் கார்கால மழை பொய்த்ததால் கடலைப் பயிர் காய்ந்து போகிறது. பின்னர் நெல் விதைத்தபோது இயல்பான பனிக்காலத்திற்கு மாறாகப் பெருமழை பெய்ததால் நோய் ஏற்பட்டு பயிர்கள் அழிகின்றன. வாழை, கரும்பு, தென்னை, தக்காளி, கத்தரி, வெண்டை, சக்கரவள்ளிக்கிழங்கு, மிளகாய் போன்ற பயிர்களில் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இந்நிகழ்வு இயற்கை மாற்றத்தின் நேரடி பொருளாதார விளைவைக் காட்டுகிறது. பருவநிலை மாற்றம் அதனால் ஏற்படும் வெள்ளாமை பாதிப்பு, உழவர்களின் வருமான இழப்பு, மண்ணை நம்பி வாங்கிய பயிர்க் கடன் அதனை உரிய நேரத்தில் செலுத்திய இயலாது தவிக்கும் உழவர்களின் குடும்ப நெருக்கடி ஆகிய சமூக இருப்பியல் உழவர்களின் வாழ்வியலை புடமிடுகிறது.

பயிர்க்கடன்

உழவர் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். ஒரு பருவத்தில் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட அடுத்த பருவத்தில் மீண்டும் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இதற்காக அவர் கடனை நாடுகிறார். சீனிச்சாமி மனைவியின் தண்டட்டியை அடகு வைத்து கடலைப் பயிரிடுகிறார். அது அழிந்தபின் மகளின் கால் கொலுசை அடகு வைத்து நெல் பயிரிடுகிறார். பின்னர் கடன் பெற்று சோளம் விதைக்கிறார். இங்கு கவனிக்க வேண்டியது கடன் என்பது தனிநபரின் பணத்தேவையாக மட்டும் இல்லாமல் குடும்பத்தின் உடைமைகளைப் பொருளாதார ஆதாரமாக மாற்றும் செயல்முறையாக மாறுகிறது. கடன் பொருளாதார உறவை மட்டுமல்லாமல் சமூக உறவையும் பாதிக்கிறது. பொன்னுச்சாமி தொடர்ந்து ஏற்பட்ட வேளாண் இழப்புகளுக்குப் பின்னர் மகள் வீட்டு நகையை அடகு வைத்து நெல் பயிரிடுகிறார். பயிர் அழிந்தபின் நகையைத் திருப்பிக் கேட்கும் உறவினரிடம் ஏற்பட்ட அவமானம் அவரது வாழ்க்கையில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் உழவரின் பொருளாதார தோல்வி குடும்ப உறவுகளிலும் சமூக மரியாதையிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதை அறிய முடிகிறது. கடன் பெற்ற உழவருக்கு முதல்தொகையைத் திருப்பிச் செலுத்துவதோடு வட்டியும் செலுத்த வேண்டிய கட்டாயம் உருவாகிறது. கடன் வாங்குதல், வட்டி கட்டுதல், மேலும் கடன் வாங்குதல், நில அடமானம், குடும்பத்தில் ஏற்படும் அவமானம், உறவு நிலை பாதிப்பு ஆகியவை கடன் வழியலான உழவர்களின் சமூக மதிப்பீட்டை அடையாளப்படுத்துகிறது.

விலை ஏற்றம்

உழவர் உற்பத்தி செய்யும் பொருளுக்கான இறுதி விலையை அவரே நிர்ணயிக்க முடியாத நிலை நாவலில் பதிவு செய்யப்படுகிறது. போக்குவரத்து, விளம்பரம்,

சந்தைப்படுத்துதல் போன்றவை வேளாண் பொருட்களின் வணிகச் சங்கிலியில் இணைகின்றன. இதனால் உழவர் உற்பத்தி செய்த பொருளுக்கும் சந்தையில் கிடைக்கும் விலைக்கும் இடையே முரண்பாடு ஏற்படுகிறது. இதன் விளைவாக உழைப்பின் மதிப்பு மற்றும் உற்பத்தியின் பொருளாதாரப் பயன் ஆகிய இரண்டிற்கும் இடையே இடைவெளி உருவாகிறது. வேளாண் உற்பத்தியில் விதை, உரம், பூச்சிக்கொல்லி, நீர், தொழிலாளர் செலவு போன்றவை முக்கியமான இடுபொருட்களாகின்றன. வாழைச் சாகுபடியை எடுத்துக்காட்டாகக் கொண்டு, ஒரு வாழைத்தாருக்கான இடுபொருள் செலவு ரூபாய் பதினாறு என்ற நிலையில் அதன் விற்பனை விலை ரூபாய் பதினைந்து என நாவலில் குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் உற்பத்தி செய்த அளவு அதிகரித்தாலும் இலாபம் உறுதியாகாது என்பதைக் காட்டுகிறது.

நில விற்பனை – சமூக இருப்பின் முறிவு

உழவரின் வாழ்க்கையில் நிலம் மிக முக்கியமான சொத்தாக உள்ளது. ஆனால் தொடர்ந்து ஏற்படும் கடன் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலத்தை விற்கும் முடிவை நோக்கி உழவரைத் தள்ளுகிறது. “நெலத்த வித்து பேங்குல போட்ட வட்டிக் காசுல வாழ்க்கை நடத்து” என்ற நாவல் வரி நில விற்பனைக்குப் பின்னால் உள்ள பொருளாதார நெருக்கடியை வெளிப்படுத்துகிறது. (மூ.உ.போ. ப.182). இங்கு நில விற்பனை என்பது வெறும் சொத்து மாற்றமாக இல்லாமல் உழவர் வாழ்க்கையின் அடித்தளத்திலிருந்து விலகுதலாக அமைகிறது.

நில உரிமையும் அதிகார உறவுகளும்

நிலத்தின் மீது பொருளாதார அதிகாரம் கொண்டவர்களுக்கும் ஏழை உழவர்களுக்கும் இடையே சமமற்ற உறவு காணப்படுகிறது. மிரட்டல், முன்பணம், போலிப் பத்திரம் போன்ற வழிமுறைகளால் ஏழை விவசாயிகளின் நிலங்கள் கையகப்படுத்தப்படுவதாக ஆவணம் சுட்டுகிறது. (மூ.உ.போ. ப.375). இதனால் நில உரிமை என்பது பொருளாதாரப் பிரச்சினையோடு அதிகார உறவின் பிரச்சினையாகவும் வெளிப்படுகிறது.

நகரமயமாக்கலும் உழவுத் தொழிலின் மதிப்பும்

நகரமயமாக்கலின் தாக்கத்தால் உழவுத் தொழிலின் சமூக மதிப்பீட்டிலும் மாற்றம் ஏற்படுகிறது. களை பறித்தல், ஏரோட்டல், நீர்ப்பாய்ச்சல் போன்ற பாரம்பரிய வேளாண் அறிவுகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படாமல் போகும் நிலை உருவாகிறது. நாவலில், “நம்ம ஊர்ல விவசாயம் விவசாயம் மாதிரி ஒரு தொழிலும் இல்ல. அது மாதிரி ஒரு துன்பமும் இல்ல.” என்ற வரிகள் இடம்பெறுகின்றன. (மூ.உ.போ.ப.68). இந்தக் கூற்று உழவுத் தொழிலின் பெருமைக்கும் அதன் துன்பத்திற்கும் இடையிலான முரண்பாட்டைக் காட்டுகிறது.

“உலகப்போர்களின் எச்சம் தான் இந்த உரங்கள், முதல் உலகப் போரில் 8 இலட்சம் சிறைக்கைதிகளைக் கொல்ல “அமோனியா” நச்சுப்புகை பயன்படுத்தப்பட்டது. உலகப்போர் முடிந்ததும், அதுவே பூச்சிக்கொல்லி மருந்தாக புது அவதாரம் எடுத்தது.” (என் தம்பி வைரமுத்து கலைஞர் சொற்பொழிவுகள், ப.217) என்ற வேதிநச்சு உரங்களின் பெருக்கத்தை காட்டுகிறது.

தலைமுறை இடைவெளி

உழவர் சமூகத்தின் தொடர்ச்சிக்கு வேளாண் அறிவு தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு கடத்தப்படுவது முக்கியமானதாகும். ஆனால் உழவுத் தொழிலின்

பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக மதிப்பீட்டில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அடுத்த தலைமுறை வேறு தொழில்களை நோக்கிச் செல்லும் மனநிலை உருவாகிறது. இதனால் பாரம்பரிய வேளாண் தொழில்நுட்ப அறிவின் தொடர்ச்சியில் இடைவெளி ஏற்படுகிறது. இதனை "தொழில் மாற்றம்" மட்டுமல்ல் "சமூக அறிவு மாற்றம்" என்றும் புரிந்துகொள்ளலாம்.

உழவுத் தொழிலும் சமூக உற்பத்தியும்

உழவுத் தொழில் தனிப்பட்ட உழவரின் வாழ்வாதாரமாக மட்டும் அமையவில்லை. அதனைச் சார்ந்த பல சமூக மற்றும் பொருளாதார உறவுகள் உருவாகின்றன. உற்பத்தி, தொழிலாளர், போக்குவரத்து, சந்தைப்படுத்துதல் வணிகம் ஆகியவை உழவோடு தொடர்புடையவை. உழவுத் தொழில் சமூக இயக்கத்திற்கும் பொருளாதார உற்பத்திக்கும் அடிப்படையாகக் குறிப்பிடுகிறது. எனவே உழவர் சமூகத்தின் நெருக்கடி என்பது தனிப்பட்ட விவசாயியின் நெருக்கடியாக மட்டும் பார்க்கப்பட முடியாது.

முடிவுரை

மூன்றாம் உலகப்போர் நாவலில் உழவர்களின் சமூக இருப்பியல் என்பது மண் மற்றும் உழைப்பை மையமாகக் கொண்ட வாழ்வியலிலிருந்து பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளால் மாற்றமடையும் வாழ்க்கை நிலையாக வெளிப்படுகிறது. மண் உழவரின் உயிராதாரமாக இருக்கிறது. ஆனால் பருவநிலை மாற்றம் பயிரை அழிக்கிறது. பயிர் இழப்பு கடனை உருவாக்குகிறது. கடன்சுமை, நில அபகரிப்பு, உறவு முறிவு, உழவரின் பாரம்பரிய சமூக அடையாளத்தையே பாதிக்கிறது. இதனுடன் நகரமயமாக்கலும் தலைமுறை இடைவெளியும் இணைந்து உழவுத் தொழிலின் எதிர்காலத் தொடர்ச்சியைச் சிக்கலாக்குகின்றன. நச்சுவேதிப் பொருட்கள், கடன், விலை ஏய்ப்பு, விலை அதிகரிப்பு ஆகியவை உழவுத் தொழிலிலிருந்து வேறு தொழிலுக்குச் செல்லும் தலைமுறை மாற்றத்திற்கு வழிவகுப்பதாகக் குறிப்பிடுகிறது.

அடிக்குறிப்புகள்

1. வைரமுத்து, மூன்றாம் உலகப்போர், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 13 ஆம் பதிப்பு, 2015

2. என் தம்பி வைரமுத்து, கலைஞர் சொற்பொழிவுகள், சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட்., சென்னை, வெளியீடு, இரண்டாம் பதிப்பு, ஜனவரி, 2013

3. இராஜேஸ்வரி, ம. "மூன்றாம் உலகப்போர் நாவலில் சூழலியல் விழுமியங்கள்" சர்வதேச தமிழ் ஆய்விதழ், தொகுதி 4, சிறப்பிதழ் 7, 2022

4. க.நவநீதக்கண்ணன், "மூன்றாம் உலகப்போர் புதினம் காட்டும் சுற்றுச்சூழல் மாசுபாட்டில் பன்னாட்டு அரசியல்" தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி – 8, சூலை-2025

© 2026 முனைவர்.சுகுமாரன் நா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 403–409
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

ஆதிச்சநல்லூர் - கீழடி பண்பாட்டுத் தளங்கள்

தன செல்வம் பா[1,*], முனைவர்.தமிழினியன் ச[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம் தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை - *627002., India*

[2] உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை - *627002., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: தன செல்வம் பா — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00060	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழகத்தின் தொன்மை வரலாற்றை அறிந்து கொள்வதற்கான முதன்மையான ஆதாரங்களில் தொல்லியல் அகழாய்வுகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற புழங்கு பொருட்கள், நாணயங்கள் போன்ற எழுத்து ஆதாரங்களுடன் ஒப்பிடும்போது, சமூகத்தின் அன்றாட வாழ்க்கை, தொழில், உணவு, குடியிருப்பு, இறப்பு மரபு, வணிகம், கைவினை, எழுத்தறிவு ஆகியவற்றை நேரடியாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன. அந்த வகையில் தமிழ்நாட்டில் மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற தொல்லியல் தளங்களான ஆதிச்சநல்லூர் மற்றும் கீழடியிலிருந்து எடுக்கப்பட்ட புழங்கு பொருட்களைச் சங்க இலக்கியத்தோடு ஒப்பிடும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

Keywords / திறவுச்சொற்கள்: ஆதிச்சநல்லூர்; கீழடி; சங்க இலக்கியம்; முதுமக்கள் தாழி; நகரமயமாக்கம்; பண்பாடு; தொல்லியல்.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பா, த. செ., & ச, மு. (2026). ஆதிச்சநல்லூர் - கீழடி பண்பாட்டுத் தளங்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 402–408. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8525

முன்னுரை:

தமிழகத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான முதன்மையான ஆதாரங்களாக இலக்கியம், கல்வெட்டு, நாணயம், அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட புழங்கு பொருட்கள் ஆகியவை விளங்குகின்றன. சங்க இலக்கியம் பழந்தமிழரின் வாழ்க்கையை பல்வேறு கோணங்களில் பதிவு செய்துள்ள ஒரு முக்கியமான இலக்கியத் தொகுப்பாகும். அதேவேளையில் அகழாய்வுகள் அந்த இலக்கிய உலகின் பொருள்சார் பின்னணியை அறிய உதவுகின்றன.

இலக்கியம் என்பது பொருள்சார் அகழாய்வு அறிக்கை அல்ல. அது கவிதை, கற்பனை, குறியீடு, உவமை, வரலாற்றுச் செய்தி ஆகியவை ஒன்றோடொன்று

கலந்துள்ள அறிவுத் தொகுப்பாகும். எனவே சங்க இலக்கியத்தில் காணப்படும் ஒவ்வொரு செய்திக்கும் தொல்லியல் சான்று தேடுவது மட்டும் போதுமான வரலாற்று முறையாகாது. அதற்கு மாறாக குறிப்பிட்ட இலக்கியச் செய்தியைப் புரிந்து கொள்ள தொல்லியல் பொருள் சான்றுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதைக் காண்பதே பயனுள்ள அணுகுமுறையாகும்.

இந்த அடிப்படையில் ஆதிச்சநல்லூரும் கீழடியும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆதிச்சநல்லூர் பெரும்பாலும் புதைவு மற்றும் இறப்புச் சடங்கு சார்ந்த பண்பாட்டை வெளிப்படுத்தும் தளமாக விளங்குகிறது. கீழடி வாழ்விடம், தொழில், எழுத்தறிவு, நகர அமைப்பு மற்றும் அன்றாட வாழ்க்கை ஆகியவற்றைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

ஆதிச்சநல்லூர்: தொன்மையான புதைவு பண்பாட்டின் சான்று

தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுப் பகுதியுடன் தொடர்புடைய ஆதிச்சநல்லூர், தென்னிந்தியத் தொல்லியல் வரலாற்றில் நீண்டகாலமாக அறியப்பட்ட முக்கியமான தளமாகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் பெருமளவிலான முதுமக்கள் தாழிகள், அவற்றுடன் தொடர்புடைய மனித எலும்பு எச்சங்கள், இரும்புக் கருவிகள், ஆயுதங்கள், வெண்கலப் பொருட்கள், தங்கம் மற்றும் பிற அணிகலன்கள், சிறிய **மட்பாண்டங்கள், மணிகள் போன்ற பொருட்கள் வெளிக்கொணரப்பட்டன.**

இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை மூலம் 2004-05 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் சுமார் 600 சதுர மீட்டர் பரப்புக்குள் 178 புதைவுகள் கண்டறியப்பட்டுள்ளன. சிவப்பு மட்பாண்டங்களும் கருப்பு-சிவப்பு மட்பாண்டங்களும் பயன்படுத்தப்பட்ட தாழிப் புதைவுகள் கிடைத்தன. பல தாழிகளில் மனித எலும்புக்கூடு எச்சங்களும் கண்டறியப்பட்டதாக அதிகாரப்பூர்வ அகழாய்வு அறிக்கை குறிப்பிடுகிறது. அகழாய்வில் கிடைத்த தாழிகள் இறப்புச் சடங்கோடு தொடர்புடையவை. புதைவுகளுடன் கிடைத்த பொருட்கள் அக்கால மக்களின் தொழில்நுட்பம், உலோகப் பயன்பாடு, கைவினை மற்றும் சமூக அமைப்பைப் பற்றியும் கேள்விகளை எழுப்பும் விதமாக உள்ளன.

சங்க இலக்கியத்தில் புதைவு மற்றும் இறப்புச் சடங்குகள்

சங்க இலக்கியத்தில் மனித வாழ்க்கையின் இறுதி நிலை குறித்த செய்திகள் பல இடங்களில் காணப்படுகின்றன. குறிப்பாகப் பாடல்களில் வீரமரணம், நடுகல், தாழி, இறப்புச் சடங்கு, புலம்பல் போன்ற செய்திகள் இடம்பெறுகின்றன.

மட்கலன்களைச் செய்யக்கூடிய வேட்கோவனே புகை வானத்தை சென்று சேரும் அளவு அகன்ற சூளையுடைய வேட்கோவனே சோழர்குலத்தின் வழி வந்தவனான நெடுமாவளவன் தேவர் உலகம் சென்று விட்டான், அவனுக்காக அகன்ற தாழியைச் செய்வாயாக, எப்படிப்பட்ட தாழி என்றால் இந்த உலகம் சக்கரமாகவும் மேரு மலையை மண்ணாகவும் கொண்டு அருங்கலம் வனைதல் வேண்டும் நீ செய்வாயா என்பதை

“கலஞ்செய் கோவே! கலஞ்செய் கோவே!

இருள் திணித்தன்ன குருஉத்திரன் பரு உப்புகை

அகள் இரு விசும்பின் ஊன்றும் சூளை

நனந்தலை முதார்க் கலம் செய் கோவே!

.....

மண்ணா வனைதல் ஒல்லுமோ நினைக்கே”[1]

எனும் பாடலடிகள் காட்டுகின்றன.

பாணர்களின் பசி தீர்த்த இளவெளிமான் இறந்த போது, பெருஞ்சித்திரனார் கையறுநிலைப் பாடல் வழி அம்மன்னனின் உடலைத் தாழியில் வைத்துப் புதைக்க அகன்ற வாய்ப்பகுதியில் கழுகும் அண்டங்காக்கையும், பேயும் இனமும் உண்ண இடுகாட்டை நோக்கிச் சென்றதாக,

“கவி செஞ்தாழிக் குவி புறத்து இருந்த

செவிசெஞ்சேவலும் கூகையும் வெருவா

வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப

பேய் ஆய்மொடு பெட்டாங்கு வழங்கும்

காடுமுன் னினனே”[2]

எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

புறநானூற்றில் தாழி செய்வதற்கான குயவரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இறந்தவருக்காகப் பெரிய மண்பாத்திரம் செய்யும் தொழிலாளியான குயவர் பற்றிய சங்க இலக்கியச் செய்தி, ஆதிச்சநல்லூரில் கிடைத்த பெருமளவிலான தாழிகளுடன் ஒப்பீட்டாய்வுக்கு வழிவகுக்கிறது. ஆதிச்சநல்லூரில் கிடைத்த தாழி தென்னிந்தியப் பண்பாட்டில் தாழிப் புதைவு என்ற நடைமுறை இருந்ததற்குத் தொல்லியல் ஆதாரங்கள் மிக உதவி செய்கின்றன.

உலோகத் தொழிலும் கைவினையும்

ஆதிச்சநல்லூரில் கிடைத்த இரும்பு மற்றும் வெண்கலப் பொருட்களும் அங்கு உலோகத் தொழில்நுட்பம் வளர்ந்திருந்ததை அறிய உதவுகின்றன. இரும்புக் கருவிகள் வேளாண்மை, போரியல் அல்லது பிற தொழில்களோடு தொடர்புடையவையாக இருந்திருக்கலாம்.

சங்கப்பாடல்களில் இரும்பைப் பற்றிய பதிவுகள் நூற்று இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் உள்ளன. இப்பாடல்களில் அம்மக்களின் தொழில்நுட்ப அறிவைப் பற்றிய நேரப் பாடல்கள் எதுவும் இல்லை என்ற போதும், உவமை மற்றும் ஒப்புமை அடிப்படையில் சில பாடல்கள் இரும்பு உருவாக்கம் பற்றிய சில செய்திகளை முன்வைக்கின்றன. இதனை,

“...ஊது உலைக்குருகின் உன் உயிர்த்து அசைஇ

வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு”[3]

என்ற அகப்பாடலில் இரும்பு உலையைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

ஊது உலையில் வெப்பப்படுத்தத் தோல் குழாய் இருந்ததை,

“ ஊதஉலை

விசைவாங்கு தோலின்’

‘ஏழுர்ப் பொதுவினைக் கோந்ரா யாத்த

உலைவாங்கு மிதிதோல் போல”[4]

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன. இரும்பைச் சூடேற்றும் உலைக்கலத்தில் அதைச்

சூடேற்றத் தோலாலான ஊதுஉலைக் கருவிகள் இருந்ததையும் சில பாடல்கள் பதிவு செய்துள்ளன. இதே போன்று இரும்பு ஆயுதம், வேல், வாள், கேடயம் போன்ற போரியல் பொருட்களையும், உழவு மற்றும் தொழில் சார்ந்த கருவிகளையும் பல இடங்களில் குறிப்பிடுகிறது.

கீழடி: வாழ்விடத் தொல்லியலின் முக்கியத்துவம்

கீழடி சிவகங்கை மாவட்டத்தில், வைகை ஆற்றுத் தென்பகுதியில் மதுரையிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. வைகை ஆற்றுப் படுகையில் தொல்லியல் துறை ஆய்வு செய்து 293 இடங்களில் தொல்லியல் தளம் இருந்தது என்பதை உறுதி செய்து, குறிப்பாக 2014 ஆம் ஆண்டில் அகழாய்வுப் பணியைத் தொடங்கியது. அகழாய்வுக் குழிகளில் வளையக் கிணறுகள், விளையாட்டுப் பொருட்கள், நெசவுத்தொழிலுக்குரிய சுழல்வட்டு, மணிகள், காதணிகள், வளையல்கள், கண்ணாடி, அரிய கற்களால் செய்யப்பட்ட மணிகள், தங்கக்கம்பி, கிணறுகள் போன்ற பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. கீழடி ஒரு புதைவுத் தளமாக இல்லாமல் மக்கள் வாழ்ந்த இடத்தின் பொருட்சார் தடயங்களாகவும், திட்டமிட்ட வாழ்க்கையைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

கீழடியும் சங்க இலக்கியமும்: நகர வாழ்க்கையின் ஒப்பீடு

கீழடி அகழாய்வின் முக்கியமான அம்சங்களில் ஒன்று கட்டட அமைப்புகளாகும். கீழடியில் கிடைத்த செங்கல் கட்டிடங்கள், வளைக்கிணறுகள், கூரை ஓடுகள் போன்றவை திட்டமிட்ட குடியிருப்பு வாழ்க்கையின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. குறிப்பாக வளையக் கிணறுகள் நீர்ப்பயன்பாடு மற்றும் நகரப்புற வாழ்வின் ஒரு முக்கிய கூறாக விளங்குகின்றன.

சங்க இலக்கியங்களில் நகரங்களின் வாழ்க்கை விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மதுரைக்காஞ்சி மதுரை நகரத்தின் அமைப்பு, சந்தைகள், மக்கள் கூட்டம், வாணிகம், அரசாட்சி, விழாக்கள் போன்றவற்றைச் சித்தரிக்கிறது.

அதேபோல் பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தின் நகர வாழ்க்கை, துறைமுகம், வாணிகம் போன்றவற்றை விரிவாக எடுத்துரைக்கிறது. இவற்றுடன் கீழடியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பழந்தமிழ் சமூகத்தில் கிராமப்புற வேளாண்மை வாழ்க்கையோடு நகரமயமான குடியிருப்புகளும் இருந்திருக்கலாம் என்பது தெளிவாகிறது. கீழடி அகழாய்வு இதற்கான பொருள்சார் சான்றுகளை வழங்குகிறது.

கீழடியில் மட்பாண்டங்கள்

கீழடியில் பலவகையான மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. அவற்றில்: கருப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், கருப்பு மட்பாண்டங்கள், சிவப்பு மட்பாண்டங்கள், பளபளப்பான கருப்பு மட்பாண்டங்கள், உடைந்த மட்பாண்டத் துண்டுகளும் குறிப்பிடத்தக்கவை.

இந்த மட்பாண்டங்கள் அக்கால மக்களின் அன்றாடப் பயன்பட்டு பொருள் மட்டுமின்றி, தொழில்நுட்பம் மற்றும் வெளிப்புறத் தொடர்புகளையும் ஆராய்வதற்கு உதவுகின்றன. சில வகை மட்பாண்டங்களின் பரவல் உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பார்க்கும் போது, கீழடி தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்பாக இல்லாமல் பரந்த பண்பாட்டு மற்றும் வாணிக வலையமைப்பின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்ற ஆய்வுக் கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

கீழடி மற்றும் தமிழ் பிராமி எழுத்துகள்

கீழடியின் முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்று தமிழி அல்லது தமிழ்-பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகள் ஆகும். தமிழ்நாடு தொல்லியல் துறை வெளியிட்ட தகவலின்படி, கீழடியில் நடைபெற்ற அகழாய்வுகளில் 56 தமிழ்-பிராமி பொறித்த மட்பாண்டத் துண்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

கார்பன் மாதிரிகளின் ஆய்வின் அடிப்படையில் கீழடியின் ஒரு அடுக்கு கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக, குறிப்பாக கி.மு. 580 எனத் தமிழ்நாடு தொல்லியல் துறை குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையில் தமிழ்-பிராமி எழுத்தின் காலத்தை முன்னைய கருத்துகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எழுத்து மட்பாண்டங்களில் உரிமையாளரின் பெயர், அடையாளம் அல்லது பொருளின் பயன்பாடு தொடர்பான தகவலைக் குறித்திருக்கலாம். இருப்பினும், ஒவ்வொரு எழுத்தையும் ஒரே பொருளில் விளக்குவது குறித்து ஆய்வாளர்களிடையே தொடர்ந்த விவாதம் உள்ளது.

கீழடியும் உறைக்கிணறும்:

கீழடியில் பல அடுக்குகள் கூடிய உறைக்கிணறுகள் கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் பட்டினப்பாலையில் இதனை,

“பறழ்பன்றிப் பல்கோழி

உறைக்கிணற்றுப் புறச்சேரி”[5]

என்ற பாடல் சுட்டிக்காட்டுகின்றது.

கீழடியில் மட்டும் அல்லாது உறையூர், பூம்புகார், அரிக்கமேடு, கொற்கை போன்ற அகழாய்வுத் தளங்களில் இவை கிடைத்துள்ளது. இதன் மூலம் சங்ககால மக்கள் நீர்மேலாண்மையில் சிறந்து விளங்கியதை அறிய முடிகின்றது.

கீழடியும் வடிகால் வசதியும்:

ஓர் உயர் நாகரிகத்தின் அடையாளமாக வீட்டின் கழிவுநீர் செல்வதற்குச் சுடுமண்ணால் செய்யப்பட்ட பூமிக்கு அடியில் மறைகுழாய் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இலக்கியச் சான்றாகப் பரிபாடலில்,

“நெடு மால் உயர் மதிலில்

எதிர் ஊர் அரவத்தால்

துயில் உணர்பு எழீஇ”[6]

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. குழாய்களில் அடைப்பு ஏற்படாமல் இருக்க வீட்டின் அருகில் சோதனை செய்யும் தொட்டியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மறைகுழாய் கீழடியில் மட்டுமல்லாது திருக்கோவிலூர், வசவசமுத்திரம், உறையூர், அரிக்கமேடு போன்ற இடங்களிலும் கண்டறியப்பட்டுள்ளது.

கீழடியில் தொழில் மற்றும் வாணிக வாழ்க்கை முறை

கீழடியில் கிடைத்த மணிகள், கண்ணாடி மணிகள், அரிய கற்களால் செய்யப்பட்ட மணிகள், சுடுமண் பொருட்கள், உலோகப் பொருட்கள் போன்றவை பல்வேறு தொழில்கள் இருந்ததைக் காட்டுகின்றன. நூற்புத் தொழிலுடன் தொடர்புடைய சுழல் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் விளையாட்டுப் பொருட்கள், பகடைகள், காதணிகள், வளையல்கள், மணிகள் போன்றவையும் கிடைத்துள்ளன. இதற்குச் சங்க இலக்கியப் பாடல்களில் சான்றுகளும் உள்ளன.

இதன் மூலம் கீழடி மக்கள் வேளாண்மையில் மட்டும் ஈடுபட்டவர்கள் அல்லர்; கைவினை, நெசவு, மணி மணி உற்பத்தி, உலோகப் பணிகள், வணிகம் போன்ற பல தொழில்களில் ஈடுபட்டிருந்திருக்கலாம் என்று பொருள்சார் சான்றுகள் தெரிவிக்கின்றன.

கீழடி மற்றும் வைகையின் சங்க இலக்கியத் தொடர்பு

கீழடியின் மிக முக்கியமான புவியியல் பின்னணி வைகை ஆறு ஆகும். கீழடி வைகை ஆற்றுக்கு அருகில் அமைந்துள்ளது. வைகை, சங்க இலக்கியத்தில் ஒரு முக்கியமான ஆறாக இடம் பெறுகிறது. பரிபாடல் வைகை ஆற்றைப் பாடுபொருளாகக் கொண்ட பாடல்களைக் கொண்டது. வைகை என்பது வெறும் நீர்நிலை மட்டுமல்ல; மதுரையின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கையோடு இணைந்திருந்த ஆறாகச் சங்க இலக்கியத்தில் வெளிப்படுகிறது. பரிபாடலில்,

“நனி கடல் முன்னியது போலும், தீம் தீர்

வளி வரல் வையை வரவு”[7]

என்று வைகையின் நீர்வரத்து குறிப்பிடப்படுகிறது. இதுபோன்ற பாடல்கள் வைகை வெள்ளம், நீர்வளம், மக்களின் வாழ்க்கை ஆகியவற்றுக்கிடையிலான உறவை வெளிப்படுத்துகின்றன.

மதுரைக்காஞ்சியும் வைகை நகர வாழ்க்கையும்:

வைகையின் வளம் மதுரையின் பொருளாதார வாழ்க்கையுடன் இணைந்திருந்தது என்பதை மதுரைக்காஞ்சியின் பல பகுதிகள் உணர்த்துகின்றன. வைகையில் பெருநீர் பாய்ந்து வயல்களையும் மருதநிலத்தையும் வளப்படுத்துவதாகக் கூறப்படும் பகுதிகள் காணப்படுகின்றன.

கீழடியே மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப்படும் ‘மதுரை’ என்று கூறுவது சரியான அறிவியல் முடிவாகாது. ஆனால் கீழடி அமைந்துள்ள வைகைப் பள்ளத்தாக்கும் சங்க இலக்கியங்களில் புகழப்படும் மதுரை - வைகை நகரப் பண்பாடும் ஒரு பரந்த புவியியல் மற்றும் பண்பாட்டு வளையத்துக்குள் இருப்பதை மறுக்க முடியாது.

முடிவுரை

ஆதிச்சநல்லூர் இறப்பிடப் பகுதி, கீழடி வாழ்விடப் பகுதி ஆகிய இவ்விரு பண்பாட்டுத் தலங்களின் மூலம் தமிழர்களின் தொன்மை, நாகரிகம், பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையை அறிய உதவும் முக்கியமான வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. இத்தலங்களில் கிடைத்த தொல்பொருள்கள், தமிழர்கள் பழங்காலத்திலேயே சிறந்த தொழில்நுட்ப அறிவும், எழுத்தறிவும், கைவினைத்திறனும், சமூக அமைப்பும் கொண்டிருந்தனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. எனவே தமிழனின் தொன்மையான வரலாற்றையும் பண்பாட்டு மரபையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல ஆதிச்சநல்லூர், கீழடி போன்ற தொல்லியல் தலங்களையும் சங்க இலக்கியங்களையும் மீள் ஆய்வு செய்வது நம் அனைவரின் கடமையாகும்.

அடிக்குறிப்பு:

1. புலியூர்க்கேசிகன் உரை, புறநானூறு, பா. எண்: 228.
2. மேலது, பா. எண்: 238.
3. புலியூர்க்கேசிகன் உரை, அகநானூறு,பா.எண்:55

4. புலியூர்க்கேசிகன் உரை, அகநானூறு, பா. எண்: 96.
5. புலியூர்க்கேசிகன் உரை, குறுந்தொகை, பா. எண்: 172.
6. புலியூர்க்கேசிகன் உரை, பட்டினப்பாலை, பா. எண்: 75 முதல் 76 வரை.
7. புலியூர்க்கேசிகன் உரை, பரிபாடல், பா. எண்: 20.

பார்வை நூல்கள்:

1. தொல்லியல்துறை, தமிழ்நாடு அரசு.
2. தொல்லியல் நோக்கில் சங்ககாலம் - முனைவர் கா. ராஜன்.
3. ஆதிச்சநல்லூர், கீழடி அகழாய்வுகள் - கோ. உத்திராடம்.
4. இலக்கிய இனவரைவியல் - முனைவர் ஞா. ஸ்டீபன்.
5. ஆதிச்சநல்லூர் முதல் கீழடி வரை - நிவேதிதா லூயிஸ்.
6. வைகை நதி நாகரிகம் - சு. வெங்கடேசன்.

© 2026 தன செல்வம் பா, முனைவர்.தமிழினியன் ச. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 410–412
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தென் மாவட்ட சடங்கு முறைகள்

முனைவர்.தீபா பெ*

உதவிப்பேராசிரியர், தமிழ் துறை சுழற்சி-2, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-*631502., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.தீபா பெ — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00059

Abstract / ஆய்வுச்சுருக்கம்

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் நடைபெறும் வாழ்வியல் சடங்குகள் மிகவும் முக்கியமாக பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள சடங்கு சம்பிரதாயங்களை கூறுவதே இவ்வாய்வு ஆகும். “சுருள்வீச்சு” என்னும் சிறுகதைத் தொகுப்பு தென் மாவட்ட பண்பாட்டு பதிவாக அமைந்துள்ளது. இதன் அடிப்படையிலே இக்கட்டுரை அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: பண்பாடு; சடங்குகள்; பண்பாட்டு பெருமைகள்; மரபுகள்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பெ, மு. (2026). தென் மாவட்ட சடங்கு முறைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 409–411. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8527

பிறப்புச் சடங்குகள்

குழந்தை பிறந்தவுடன் “சேனைதொடுதல்” நிகழ்ச்சி நடைபெறும்.குடும்பத்தின் பெரியவர்கள் அல்லது உறவினர்கள் தங்கள் கைகளால் இனிப்புக் கலந்த நெய் அல்லது தேனை எடுத்து குழந்தையின் நாவில் தடவுவர் குழந்தை நல்ல குணங்களுடன் வளர வேண்டும் என்பதற்காக இச்சடங்கு செய்யப்படுகிறது.ஆனால் இங்கு இருக்கும் மக்கள் குழந்தையை தொட்டிலில் இடம்பொழுதுதான் குழந்தையின் நாவல் தேனை வைப்பர். குழந்தை பிறந்து பொதுவாக 7,9,11 அல்லது 13 ஆம் நாளில் தாய் மாமன் தரும் தொட்டியில் குழந்தையை இட்டு காதுகளில் குலதெய்வத்தின் பெயரை மூன்று முறை சொல்லி அழைப்பர்.

தாய் சேய் நலனை கருத்தில் கொண்டு அவரவர் சௌகரியத்திற்கு தகுந்தாற்போல் பின்பற்றுகின்றனர். இப்பகுதியில் இதனை தீட்டு கழிப்பது அல்லது தொட்டிலில் போடுவது என்று அழைக்கப்படுகிறது.

சிகை நீக்கி காதுக்கு பொன்சேர்ப்பு விழா

காதணி விழா அல்லது காது குத்துதல் குழந்தை பிறந்த சில ஆண்டுகள் கழித்து குழந்தைகளுக்கு முடி எடுத்து மொட்டை அடித்து காது குத்தப்படும்.இச்சடங்கு தாய் மாமனை வைத்தே நடைபெறும்.தாய் மாமன் மடியில் உட்கார வைத்து முடி இறக்கப்படும்.பின்பு அதே தாய்மாமன் மடியில் உட்கார வைத்து காது

குத்தப்படும்.இச்சடங்கு வெகு விமரிசையாக நடத்தப்படும்.இதில் தாய்மாமன் சீர்வரிசை ஊரையே வியக்க வைக்கும் அளவில் இருக்கும். தாய்மாமன் கொண்டு வரும் பொன் (கம்பல்)நகையே காது குத்தும்போது போடப்படுகின்றது.

மௌனச் சிதறல்கள்

பூம்புச்சடங்கு என்பது ஒரு பெண் பூப்படைந்தவுடன் (வயதுக்கு வந்தவுடன்) அவளது தாய் அவளுக்கு தனி ஒரு பச்சை குடில் அமைத்து தருவான்.அந்த குடிசை பச்சை தென்னை ஓலையை வைத்து வீட்டின் ஒதுக்கு புறமாக அமைத்துத் கொடுக்கப்படும்.தென் மாவட்டத்தைப் பொருத்தவரையில் தாய்மாமன் என்பவன் தாய்யிற்கு அடுத்தபடியாக எல்லா சடங்குகளிலும் தாய் மாமன் முதலிடம் வகிக்கிறான். “சுருள்வீச்சு” சிறுகதைத்தொகுப்பில் மௌனச் சிதறல்கள் என்னும் பகுதியில் பூப்பெய்தப்பெண் அடையும் மனவேதனையும் அவளுக்கு துணையாக அவள் அம்மா உடனிருப்பாள் என்பதும் கூறப்படுகிறது.

இவ்வாறு பூப்படைந்த பெண் “ஏழாவது நாள் பெரியவர்களுக்கு முன்பாகவே மஞ்சள்,வேப்பிலை,கிருமி நாசினிப் பொருட்கள் கலந்த நீரால் குளிக்க வைத்தார்கள்”. அந்த ஏழு நாட்களுக்கும் அப்பத்தா வற்புறுத்தி அளித்த உளுந்தங்களி, நல்லெண்ணெய்,பச்சரிசிக் கஞ்சி போன்ற உணவுகள் அவளுக்கு அளிக்கப்பட்டது.இப்பகுதிகளில் உப்பில்லா பச்சரிசி துவரம் பருப்பு கலந்த உணவை முதல் உணவாக அளிக்கப்படும்.மௌனச் சிதறல்கள் பகுதி ஒரு பெண்ணின் மனநிலையை முழுமையாக விளக்குகிறது.ஒரு பெண்ணின் வரும் சுழற்சி கிட்டத்தட்ட அவளின் வாழ்நாளில் 455 முறை ஏற்படும் என்னும் கணக்கினையும் குறிப்பிட்டுள்ளது.

திருமணச் சடங்குகள்

தென் மாவட்டத் திருமணங்களில் உறவுமுறைகளும் ஊர் கட்டுப்பாடுகளும் மிக முக்கியப் பங்கு வகின்றன.

பரிசம் போடுதல்

.

நலங்கு சடங்கு

மணமக்கள் அல்லது சடங்கு பெண்ணின் உடலில் உள்ள திருஷ்டிகளை நீக்கி அவர்களைப் பொலிவடையச் செய்யும் நிகழ்வாகும். மணமக்களை ஒரு பாயிலோ அல்லது மரபலகையிலோ (மணை) கிழக்கு நோக்கி அமர வைத்து முதலில் கை,கால்களில் நலங்கு மாவு பூசி விடுவார்கள்.நெற்றியில் சந்தனம் குங்குமம் வைப்பார்கள். பன்னீர் தலை மற்றும் தோள்களில் தெளித்து வாழ்த்துவார்கள்.சடங்கின் நிறைவாக சுண்ணாம்பு மற்றும் மஞ்சள் கலந்த சிவப்பு நீரால்(ஆரத்தி)சுற்றி திருஷ்டி கழிப்பார்கள்.திருமண பதற்றத்தில் இருக்கும் மணமக்களுக்கு இதுபோன்று செய்வதால் அவர்கள் இயல்பு நிலைக்குக் கொண்டு வர உதவுகிறது.

பொன்னுரு்க்குதல்

திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன்பு மாப்பிள்ளை வீட்டில் மணமகளுக்கான தாலி செய்ய தங்க நாணயத்தை கொடுத்து உருக்கும் சடங்கு நடைபெறும்.அதன்பின் அவரவர் குடும்ப வழக்கப்படி தாலிச் செய்யப்படும். முளைப்பாரி கை (முளைப்பாரி) நவதானியங்களை திருமணத்திற்கு மூன்று நாட்கள் முன்பு ஊறவைத்து முலைய விட்டு அதனை மண்ணால் செய்யப்பட்ட பாலிகையில் இட்டு மணப்பந்தலில்

வைக்கப்படும்.அவைசெழித்து வளர்வது போன்று மணமக்களின் வாழ்க்கையும் செழிக்க வேண்டும் என்று மணமக்களை வாழ்த்தி பெண்கள் பாடல் பாடப்படுகின்றன.

இறப்புச் சடங்கு

இறப்புச் சடங்குகளிலும் தென் மாவட்டங்களில் சில தனித்துவமான முறைகள் உள்ளன. இறந்தவர்களின் பெருமைகளையும், வாழ்வையும் பாட்டாக பாடிவரும் 'ஒப்பாரி கலை' இங்கு இன்னும் உயிர்ப்போடு உள்ளது. இறந்தவர்களை இறுதியாக குளிப்பாட்டுவதற்கு நிலக்கதவை கழற்றி அதில் இறந்தவரின் உடலை போட்டு நீராட்டுவார்கள். அப்படியாக குளிப்பாட்டுவதற்கு உற்றார் உறவினர்கள் ஒன்று சேர்ந்து நீர்கொண்டு வந்து குளிப்பாட்டுவர்.அதன்பின் அவர்களின் உடலுக்கு கோடித்துணி போடப்படும். அதை மகள்கள் மருமகன்கள் மற்றும் நெருங்கியஉறவினர்கள் புதிய துணிகளை போர்த்தும் சடங்கே கோடி போடுதல் ஆகும்.

இறந்த எட்டாம் நாளில் எட்டுக் கும்பிடும் செய்யப்படும். உறவுமுறைகள் பங்காளிமுறை உள்ளோர்,அனைவரும் உணவுப் பொருட்கள் கொண்டு வந்து ஒன்றாக சமைதத்து வழிபடுவர். அதன்பின் பதினாறாம் நாளில் தீட்டு கழித்து பெரிய காரியம் அல்லது கிரியை செய்யப்படும்.அதையடுத்து கிடா வெட்டி ஊருக்கே விருந்து வழங்கும் நிகழ்வு பரவலா நடைபெற்று வருகிறது.

முடிவுரை

தமிழகத்தின் பிறப்பகுதிகளைக் காட்டிலும் தென்மாவட்டங்களின் சடங்குகள் தனித்துவமானது. மக்களின் வாழ்வியலோடு ஆழமாகப் பிணைக்கப்பட்டவை. பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வின் ஒவ்வொரு முக்கியக் கட்டத்தையும் இப்பகுதி மக்கள் தங்களின் சடங்குகள் வழியாகச் கூட்டு வாழ்க்கை முறையையும் உறவுகளுக்கு இடையேயான பிணைப்பையும் பலப்படுத்துகின்றனர். காலமாற்றத்திற்கு ஏற்ப சில சடங்குகள் உருமாறினாலும், தென் மாவட்ட மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டு பெருமையையும், பறைசாற்றும் இந்த சடங்குகளை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

துணைநூற்பட்டியல்

- சுருள் வீச்சு

முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய்

16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம்,

கோடம்பாக்கம், சென்னை - 600024.

முதற்பதிப்பு -2025.

© 2026 முனைவர்.தீபா பெ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 413–416
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தென்மாவட்டங்களில் நாட்டுப்புற நம்பிக்கை

வேல்விழி தே*

பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர் , பச்சையப்பன் கல்லூரி ,சென்னை -*30., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: வேல்விழி தே — tamilseminar12@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00058

Abstract / ஆய்வுச்சுருக்கம்

இக்கட்டுரையில் குறிப்பிட்ட சில வட்டாரத்தின் நாட்டுப்புற நம்பிக்கைகள் குறித்து ஆராயப்படுகிறது வாய் மொழியாக மரபுகள் எவ்வாறு மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றன என்பதை விளக்குவது முக்கிய நோக்கம் ஆகும். இதற்காக கையாண்டு ஆய்வு முறைகள் மற்றும் அதன் முடிவுகள் சுருக்கமாக இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.
முன்னுரை:
மனித நாகரீகத்தின் தொடக்க காலத்தில் இருந்தே நாட்டுப்புற வழக்காலும் தோன்றி விட்டன. வாய்மொழியாகவும் பார்த்து செய்தல் மூலம் தலைமுறை தலைமுறையாக கடத்தப்படும் தலைகள் பாடல்கள் சடங்குகள் கவிதைகள் பழமொழிகள் போன்ற அனைத்தும் நாட்டுப்புறவியல் எனப்படும். இக்கட்டுரையின் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் பற்றிய ஆய்வை மேற்கொள்கிறத

Keywords / திறவுச்சொற்கள்: நாட்டுப்புற நம்பிக்கைகள்; மரபுகள்; வழக்காறுகள்; நாட்டுப்புற மக்களின் வாழ்வியல்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: தே, வே. (2026). தென்மாவட்டங்களில் நாட்டுப்புற நம்பிக்கை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 412–415. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8529

நாட்டுப்புறவியல்:

இவ்வுலகில் மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி திட்டமிட்டு கூற முடியாதது போன்று மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் பற்றியும் வரையறுத்து கூற முடியாது மொழியின் தோற்றம் உருவான போதே மனித இனமும் தன் சிந்தனை திறனை வளர்க்க முற்பட்ட போதே வாய்மொழி இலக்கிய வகை உருவானது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கம் பண்பாடு நம்பிக்கை இலக்கியம் அவற்றை ஆராய்வதை நாட்டுப்புறவியல் ஆகும் ஒரு நாட்டின் வாழ்வையும் வரலாற்றையுணம் குறையையும் நிறையையும் தெளிவாக காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள் மக்களின் பண்பாடு பழக்கவழக்கங்கள் பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாக காட்டும் கால கண்ணாடி ஆகும். நாட்டுப்புற மக்களின்

உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புற இலக்கியங்களில் காணலாம் மேலும் நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியல் ஆகும்.

நாட்டுப்புறவியல் சொல்லாக்கம்:

Folkloreஎன்பது Folk , Lore என்ற இரு சொற்கள் இணைந்ததாகும் 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் Folk என்ற சொல் விவசாய மக்களை குறித்து பின்னர் படிப்பறிவு இல்லாத நாட்டுப்புற மக்களை குறித்து பொதுவான தொழில் மொழி சமயம் முதலியவற்றை பின்பற்றும் குழுவை Folk என்பர். பொதுவாக கிராமப்புற படிப்பறிவு இல்லாத மக்களை குறிக்கும் 'Lore' என்பதற்கு மரபுச் செய்தி தொகுதி என்னும் வழக்காரு என்னும் பொருள் கொள்ளலாம்.Folklore என்பது நாட்டுப்புற மக்களின் அறிவு என பொருள்படும் நாட்டுப்புற வழக்காற்றை Folklore என்னும் நாட்டுப்புற வழக்காற்றை ஆராயும் ஆய்வை "Folkloristics" என்றும் கூறலாம்.

நாட்டுப்புற நம்பிக்கைகள்:

நாட்டுப்புறவியலை நாட்டுப்புற இலக்கியம் கலை என்ற பிரிவினுள் அடக்குகின்றனர். ஆனால் நாட்டுப்புறவியல் இவற்றுடன் நின்று விடாமல் நாட்டுப்புற நம்பிக்கை ஆடல், ஓவியம், பொருள் சார் பண்பாடு ஆகியவற்றையும் ஆராய்கிறது.

"நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்". நாட்டுப்புறவியல் என்பது மக்களது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புற மக்களின் 'பொதுக்கூறு' எனப்படும்.

"மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவற்றை பண்படாத மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர் அவர்கள். வாழ்க்கை முறைகளில் கூட்டு சேர்க்கை பண்பாடு என்கிறார் மாலினோவஸ்கி" . எனவே நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கை என்கிறார்.

பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள்:

பண்டைய காலம் முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கு ஏற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடு இணைந்த மனித வாழ்க்கையில் நம்பிக்கைகள் தோன்றலாயின. உலகெங்கிலும் உள்ள பண்டைய சமுதாய வரலாற்றை நோக்கின இவ்வுண்மை விளங்கும் பண்டைய தமிழருடைய நிலவிய நம்பிக்கைகளையும் சகுனங்களையும் தொல்காப்பியத்தில் "நாளும் புல்லும் பிறவாற்று நிமித்தமும்" (தொல்காப்பியம் பொருள் அதிகாரம் -91) எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'புள்' என குறிப்பிட்டது முன்னர் பறவையையும் பிற்காலத்தே நம்பிக்கைகள் குறித்த சகுனங்கள் பற்றியும் குறிப்பதாக அமைந்துள்ளன.

"கூகை அலறினால் சாவும் வரும் என்ற நம்பிக்கை பண்பாட்டை தமிழரிடையேயும் இன்னும் தமிழகத்தின் நிலவி வருவதை அறியலாம். இதனை புறநானூறு காட்டுகிறது.

"அஞ்சுவரு குராஅல் குரலுந் கூற்றம் புறம் (280) காகம் கத்தினால் விருந்தினர் வருவர்

என்பது அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவி வரும் நம்பிக்கையாகும்.

நம்பிக்கை வகைகள்:

நாட்டுப்புற மக்களிடையே எண்ணற்ற நம்பிக்கைகள் நிலவுகின்றன. குழந்தை பற்றிய நம்பிக்கைகள் ,பிள்ளைப்பேறு நோன்பு ,கண்ணீர் கழித்தல் ,காது குத்துதல், குழந்தை கொடி சுற்றி பிறத்தல், அடுத்ததாக பருவமடைதல் பற்றி நம்பிக்கைகள், திருமணம் பற்றிய நம்பிக்கைகள், கர்ப்பிணி பெண்கள் பற்றிய நம்பிக்கைகள், வேளாண்மை பற்றிய நம்பிக்கைகள், மழை பற்றிய நம்பிக்கைகள், விலங்கு பறவை பற்றி நம்பிக்கைகள், விருந்தினர் பற்றி நம்பிக்கைகள், எண் பற்றிய நம்பிக்கைகள், நட்சத்திர நம்பிக்கைகள், அங்கம் பலன் பற்றி நம்பிக்கைகள், மச்சங்களின் பலன் பற்றிய நம்பிக்கைகள், கிழமை பற்றிய நம்பிக்கைகள், திசை ,கோலம் பற்றிய நம்பிக்கைகள், விலங்கு ,கடவுள், அபிஷேகம் பற்றிய நம்பிக்கைகள், மாரியம்மன் பற்றி நம்பிக்கைகள் ,நோய்கள் மற்றும் ஈடு பற்றிய நம்பிக்கைகள், உணவு, ஆடை, அணிகலன்கள் பற்றி நம்பிக்கைகள், மரணம் ,பயணம் பற்றி நம்பிக்கைகள், ஊழ்வினை பிறவிக் கொள்கை பற்றிய நம்பிக்கைகள், எமன் ,தலையெழுத்து ,விதி பற்றிய நம்பிக்கைகள், சோதிடம், பஞ்சாங்கம், ராசி பொருத்தம் பற்றிய நம்பிக்கைகள், கனவு பற்றிய நம்பிக்கைகள் ,போன்றவை மக்களிடையே காணப்படுகின்றன.

நிமித்தங்கள் (சகுனம்) பற்றிய நம்பிக்கைகள்:

சகுனம் பார்க்கும் நம்பிக்கை உலகெங்கிலும் காணப்படுகின்றது. "பண்டைய தமிழர் இதனை புல் நிமித்தம் ஆகிய சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். நிமித்தம் என்பது வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமைகளை சில குறியீடுகளின் வாயிலாக உணர்த்துவதாகும்." நிமித்தங்கள் அனைத்தும் நம்பிக்கை பாற்பட்டன.

"அழுக்குத் துணியோடு வண்ணான் வருதல்"

"தாயும் சேயும் வருதல்"

"சுமங்கலி வருதல்"

போன்றவற்றை ஆகும் நல்ல சகுனங்கள். எனவே நல்ல சகுனம் தோன்றினால் அச்செயல் நல்லதாக முடியும் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கையாகும்.

தீய சகுனம் தோன்றினால் அச்செயல் தோல்வி அடையும் என்பது நம் நம்பிக்கையாக உள்ளது. விதவை எதிர் வால், பூனை குறுக்கிடுதல், ஒற்றை பார்ப்பனன் எதிரே வருல் போன்றவற்றை கெட்ட சகுனம் என்றும் கருதுகின்றனர். சகுனத்தில் மக்களுக்கு நம்பிக்கை உண்டு என்பதை இவை எடுத்துக்காட்டுகின்றன.

மக்களிடையே நிலவும் பிற நம்பிக்கைகள்:

மனிதனால் பார்க்கப்படும் சகுனங்களில் மிக முக்கியமானது பல்லி சகுனம் ஆகும். நமது சமுதாயத்தில் பல்லி சகுனம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததால் " கௌரி சாஸ்திரம் "என்ற நூலினை நமது முன்னோர்கள் இயற்றியுள்ளனர். பல்லி சகுனம் என்பது சொல்பலன் விழுபலன் என இரண்டு வகைப்படும். பல்லி சொல்லும் எண்ணிக்கை திசை ,கிழமை வைத்தும் விழும் பலன் வைத்தும் நம்பிக்கை கொண்டுள்ளனர் நம் முன்னோர்கள்.

பில்லி சூன்யம் ,செய்வினை வழக்கங்கள் ,பல்பொருள் சவரம், செய்யாமை ,சத்தியம் செய்தல் ,கொடும்பாவி கட்டி இழுத்தல் வெற்றிலை பாக்கு போடும்போது வாய்

சிவத்தல் போன்ற நம்பிக்கைகளை நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர்.

முடிவுரை:

நாட்டுப்புறவியல் என்பது ஒரு சமூகத்தின் வேர் போன்றது. தமிழகத்தில் கிராமப்புறங்களில் இன்னும் நம் மக்கள் இது போன்ற நிகழ்வுகளையும், அனுபவங்களையும் நம்பிக்கையாக பின்பற்றி வருகின்றனர். கால மாற்றத்திற்கு ஏற்ப அழியும் நிலையில் உள்ள பாரம்பரிய நாட்டார் வழக்காறுகளை ஆவணப்படுத்தும் கல்வி பாடத்திட்டங்களில் இவற்றை இணைப்பதும் காலத்தின் கட்டாயமாகும்.

துணை நூற்பட்டியல்:

சக்திவேல். சு - நாட்டுப்புற இயல் ஆய்வு மாணிக்கவாசகர் பதிகம்.

இ.ராமநாதன்.ஆறு - நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம்.

லூர்து.தே - நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்.

பேராசிரியர். மு. சண்முகம் பிள்ளை - தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம்புரணர் உரை)முல்லை நிலையம் சென்னை - 17.

உரையாசிரியர்

முனைவர். அ. விசுவநாதன் தலைமை பதிப்பாசிரியர்.

முனைவர் அ.மா. பரிமணம்.

முனைவர். கு.வெ.பாலசுப்பிரமணியன் - புறநானூறு (மூலமும் உரையும்) நியூ சென்சுரி புக் ஹவுஸ் சென்னை -98.

© 2026 வேல்விழி தே. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 417–421
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

வைரமுத்து கவிதைகளில் மனித உறவுகள்

மனோகரம்மாள் செ*

கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: மனோகரம்மாள் செ — mano5mku@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00057	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாக உறவு விளங்குகிறது. மனிதன் தனித்து இயங்க இயலாத சமூக உயிரியாக இருப்பதால், குடும்பம், சமூகம், நட்பு, காதல் போன்ற பல்வேறு உறவுகளின் வழியாகத் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான். கவிஞர் வைரமுத்துவின் கவிதைகளில் மனித உறவுகள் அன்பு, பாசம், கருணை, பொறுமை, தியாகம், சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல் போன்ற பண்புகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாகத் தாய்–மகள், தந்தை–மகன், கணவன்–மனைவி, காதலன்–காதலி, நட்பு ஆகிய உறவுகள் தனிமனித உணர்வுகளோடு மட்டுமல்லாமல் சமூகப் பண்பாட்டையும் பிரதிபலிக்கின்றன. இக்கட்டுரை கொடுக்கப்பட்டுள்ள ஆய்வுப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு வைரமுத்து கவிதைகளில் வெளிப்படும் மனித உறவுகளின் தன்மையையும் அவற்றின் சமூகப் பொருண்மையையும் ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: மனித உறவுகள்; குடும்பம்; தாய்மை; தந்தை–மகன்; கணவன்–மனைவி; காதல்; நட்பு; கிராமியப் பண்பாடு – பாசம் – தோழிமார் கதை – உறவுநிலை – பொருளாதாரம் – பிணைப்பு – பிரிவு – தனிமை – தியாகம் – காதல் – மனித உறவுகள்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: செ, ம. (2026). வைரமுத்து கவிதைகளில் மனித உறவுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 416–420. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8531

முன்னுரை

‘உறவு’ என்பது சொந்தம், தொடர்பு, பிணைப்பு ஆகிய பொருள்களை உள்ளடக்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. மனித வாழ்க்கையின் தொடர்ச்சியான இயக்கத்திற்கு உறவு அடிப்படையாக அமைகிறது. மனிதன் தனித்து வாழாமல் பிறரைச் சார்ந்து வாழ்கின்றான். இன்பம்–துன்பம், வெற்றி–தோல்வி, நிறை–குறை ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதில் உறவுகள் முக்கியப் பங்காற்றுகின்றன. இதனால் மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கை மட்டுமல்லாது அவன் சார்ந்த குடும்பமும் சமூகமும் உறவுகளால் கட்டமைக்கப்படுகின்றன.

மனித உறவுகள் முதன்மையாகக் குடும்பத்தில் உருவாகி, பின்னர் சமூக உறவுகளாக விரிவடைகின்றன. தாய், தந்தை, சகோதரி, சகோதரன், கணவன், மனைவி, குழந்தைகள் ஆகியோருக்கிடையிலான பரஸ்பர உறவுகள் குடும்ப முன்னேற்றத்திற்கும் சமூக மேம்பாட்டிற்கும் அடிப்படையாக அமைகின்றன. வைரமுத்துவின் கவிதைகளில் இத்தகைய உறவுகள் வெறும் உணர்ச்சிப் பதிவுகளாக மட்டும் அமையாமல், கிராமிய வாழ்வியல் மற்றும் பண்பாட்டுப் பின்னணியோடும் இணைந்து காணப்படுகின்றன. அன்பு, பாசம், கருணை, சகிப்புத்தன்மை, தியாகம், பொறுமை போன்ற பண்புகள் குடும்ப உறவுகளின் வழியாகப் பதிவாகின்றன.

தாய்–மகள் உறவு

தாய்மை மனித உறவுகளில் தனித்துவமான இடத்தைப் பெறுகிறது. தாயின் தன்னலமற்ற உழைப்பும், குடும்ப உறுப்பினர்கள்மீது அவள் செலுத்தும் அக்கறையும் அளவிட முடியாதவை என ஆய்வுப் பகுதி சுட்டுகிறது. வைரமுத்துவின் கொஞ்சம் தேநீர் நிறைய வானம் நூலில் இடம்பெறும்,

“எனக்கொண்ணு ஆனதுன்னா

ஒனக்குவேற பிள்ளையுண்டு

ஒனக்கேதும் ஆனதுன்னா

எனக்குவேற தாயிருக்கா?”

என்ற வரிகள் தாய்–மகள்/குழந்தை உறவின் பிரிக்க முடியாத தன்மையை உணர்த்துகின்றன (கொஞ்சம் தேநீர் நிறைய வானம், ப.9).

இங்கு தாய் என்பது வெறும் குடும்ப உறுப்பினராக அல்லாமல், குழந்தையின் வாழ்வின் அடிப்படை ஆதாரமாகக் காட்சியளிக்கின்றாள். குழந்தையின் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும் தாயின் நிலை, தாய்மையின் உன்னதத்தை வெளிப்படுத்துகிறது. மேலும், தாயின் பங்கு குழந்தையை உறங்க வைப்பதோடு முடிவடைவதில்லை. வாழ்க்கையின் தடைகளை எதிர்கொள்ளவும், விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளவும், விழிப்புணர்வுடன் வாழவும் அவள் குழந்தையைப் பயிற்றுவிக்கிறாள். “எப்போதும் விழிப்பாய் இரு” என்ற அறிவுறுத்தல் இதனை வெளிப்படுத்துகிறது (வைரமுத்து கவிதைகள், ப.259)

தந்தை–மகன் உறவு

தந்தை–மகன் உறவு வைரமுத்துவின் உயில் கவிதையில் குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படுகிறது. ‘உயில்’ என்பது பொதுவாகச் சொத்துகளைப் பிள்ளைகளுக்கு வழங்கும் சட்ட ஆவணமாகப் பொருள்படும். ஆனால் கவிதையில் தந்தை தனது சொத்துகளைக் காட்டிலும் வாழ்க்கை அனுபவங்களையும் மதிப்பீடுகளையும் மகன்களிடம் ஒப்படைக்கின்றார். அதில்,

“மகன்களே என் ரத்தத்தின் எச்சங்களே”

எனத் தொடங்கி, மகன்கள் தந்தையின் வாழ்வையும் உண்மையையும் தொடர்ந்து எடுத்துச் செல்ல வேண்டிய கடமையைப் புலப்படுத்துகிறது (வைரமுத்து கவிதைகள், ப.558). இங்கு தந்தையின் ‘உயில்’ பொருளாதாரச் சொத்தாக அல்லாமல், மதிப்பீடுகளின் மரபுரிமையாக மாற்றப்படுகிறது. தந்தையின் உழைப்பு, மனிதநேயம், இயற்கை நேசம், கவிதை மீதான பற்றுதல் ஆகியவை அடுத்த

தலைமுறைக்கு வழங்கப்பட வேண்டிய பண்பாட்டு செல்வங்களாகக் காட்டப்படுகின்றன.

பிரிவின் துயரமும் தந்தைப் பாசமும்

பிள்ளை வரம் கவிதையில் விவாகரத்தால் பிரிந்த தந்தை தனது இறுதிக் காலத்தில் குழந்தைகளைப் பார்க்க விரும்பும் நிலை சித்திரிக்கப்படுகிறது. மரணப் படுக்கையிலும் குழந்தைகளின் முகத்தைக் காண வேண்டும் என்ற ஏக்கம் தந்தைப் பாசத்தின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது.

“உலகவாழ்வும் உறவும் இங்கே

அழகுப் பொய்யடி...”

என்ற வரிகள் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் மனிதனுக்குப் பொருள், செல்வம் போன்றவற்றைக் காட்டிலும் உறவுகளின் மதிப்பு மேலோங்குவதை உணர்த்துகின்றன (வைரமுத்து கவிதைகள், ப.355).

கணவன்–மனைவி உறவு

குடும்ப அமைப்பில் கணவன்–மனைவி உறவு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. திருமணத்தின் வழியாக உருவாகும் இவ்வுறவு நெருக்கமும் ஆழமும் கொண்டதாக அமைகிறது. வைரமுத்துவின் கவிதைகளில் மனைவியின் பொறுமையும் அமைதியும் கணவனின் புறவாழ்வுச் செயல்பாடுகளுக்கு ஆதரவாக அமைகின்றன. “அகவாழ்வில் நீ அமைதி காப்பதால் புறவாழ்வில் நான் பொருது வெல்கிறேன்” என்ற கருத்து, இல்லறத்தில் பரஸ்பர ஆதரவின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. மேலும்,

“கருமணியிற் பாவாய் உன்

கனவுகள் வெல்க

உன் கண்ணீர் துடைப்பேன்”

என்ற வரிகள் கணவனின் அன்பையும் மனைவியின் கனவுகளுக்கான ஆதரவையும் வெளிப்படுத்துகின்றன (வைரமுத்து கவிதைகள், ப.691). இதன் வழியாக இல்லற வாழ்க்கை என்பது ஒருதலைப்பட்சமான உறவாக இல்லாமல், இருவரும் ஒருவர் மற்றொருவருக்காக விட்டுக் கொடுத்து வாழும் பரஸ்பர உறவாகச் சித்திரிக்கப்படுகிறது.

காதலன்–காதலி உறவு

காதல் மனித வாழ்வின் தொன்மையான உறவுகளில் ஒன்றாக ஆய்வுப் பகுதியில் குறிப்பிடப்படுகிறது. எண்ணம், செயல், சிந்தனை, போக்கு ஆகியவை ஒன்றிணையும் நிலையில் உண்மையான காதல் உருவாகிறது.

வைரமுத்துவின் கவிதையில்,

“என் நினைவு மெல்லமெல்ல

என்னைவிட்டுப் போகையிலும்

உன்பெயரை உன்பெயரை உச்சரிக்க மாட்டேனோ?”

என்ற வரிகள் நினைவிலிருந்து காதலி நீங்காத நிலையை எடுத்துரைக்கின்றன (வைரமுத்து கவிதைகள், ப.633). இங்கு காதல் என்பது உடனிருப்பை மட்டுமே சார்ந்ததல்ல. பிரிவு, காலமாற்றம், உடல் மாற்றம் போன்ற சூழல்களிலும் தொடரும்

நினைவாக அது கட்டமைக்கப்படுகிறது.

நட்புறவு

இரத்த உறவுகளைக் கடந்து மனித வாழ்க்கையில் நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் உறவாக நட்பு விளங்குகிறது. தமிழ் இலக்கிய மரபில் 'நட்டார்', 'நட்டவன்', 'தோழன்', 'தோழி', 'பாங்கன்', 'பாங்கியர்' போன்ற சொற்கள் நட்புறவைக் குறிக்கின்றன. வைரமுத்துவின் தோழிமார் கதை பெண்களுக்கிடையிலான நட்பை மையப்படுத்துகிறது. கிராமப்புறப் பெண்களின் நட்பு, ஒன்றாக உணவருந்துதல், இன்ப–துன்பங்களில் இணைந்து இருப்பது போன்ற வாழ்வியல் கூறுகளோடு காட்டப்படுகிறது. ஆனால் திருமணத்திற்குப் பின்னர் இருவரும் வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழல் ஏற்படுவதால் அந்த நட்பு இடைவெளிக்குள்ளாகிறது.

"ஓம்புள்ள ஓம்புருசன்

ஓம்பொழப்பு ஒன்னோட

எம்புள்ள எம்புருசன்

எம்பொழப்பு என்னோட"

என்ற வரிகள் திருமணத்திற்குப் பின்னர் பெண்களின் வாழ்க்கை வேறுபட்ட திசைகளில் நகர்வதைப் பதிவு செய்கின்றன (வைரமுத்து கவிதைகள், ப.705). அதேபோல் பிடிமானம் கவிதையில்,

"நண்பர்கள் என்னைச் சுற்றியிருந்தால்

நரகம் கூட எனக்குப் பிடிக்கும்"

என்ற கருத்தின் வழியாக நண்பர்களின் துணை துன்பத்தையும் எளிதாக எதிர்கொள்ளும் மனநிலையை உருவாக்குவதாகக் காட்டப்படுகிறது (வைரமுத்து கவிதைகள், ப.636).

மனித உறவுகளும் கிராமியப் பண்பாடும்

வைரமுத்துவின் மனித உறவுப் பதிவுகளில் கிராமியப் பண்பாட்டின் தாக்கம் குறிப்பிடத்தக்கதாகத் தெரிகிறது. குறிப்பாகத் தோழிகளின் உறவு, குடும்பப் பாசம், திருமணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை மாற்றம் போன்றவை கிராமப்புற வாழ்வியல் சூழலுடன் இணைக்கப்படுகின்றன. இதனால் மனித உறவுகள் தனிமனித உணர்ச்சிகளின் வெளிப்பாடாக மட்டும் இல்லாமல், குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்க்கை முறையையும் பிரதிபலிக்கும் பண்பாட்டுப் பதிவுகளாகவும் அமைகின்றன.

முடிவுரை

வைரமுத்துவின் கவிதைகளில் தாய்–குழந்தை, தந்தை–மகன், கணவன்–மனைவி, காதலன்–காதலி, நண்பர்கள், தோழிமார் ஆகிய உறவுகள் பல்வேறு உணர்வு நிலைகளோடு பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாகத் தாயன்பு தன்னலமற்ற தியாகமாகவும், தந்தைப் பாசம் வாழ்க்கை மதிப்பீடுகளின் பரிமாற்றமாகவும், கணவன்–மனைவி உறவு பரஸ்பர ஆதரவாகவும், காதல் நிலையான நினைவாகவும், நட்பு துன்பங்களைத் தாங்கும் துணையாகவும் கவிதைகளில் வெளிப்படுகின்றன. இதன் மூலம் வைரமுத்துவின் கவிதைகளில் மனித உறவுகள் தனிப்பட்ட உணர்ச்சிகளைக் கடந்து குடும்பம், சமூகம், கிராமியப் பண்பாடு ஆகியவற்றோடு இணைந்த வாழ்வியல் பதிவுகளாக அமைகின்றன.

அடிக்குறிப்புகள்

1. வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம், 16 ஆம் பதிப்பு, 2019

2. வைரமுத்து, கொஞ்சம் தேநீர், நிறைய வானம், சூர்யா லிட்ரேச்சர் பதிப்பகம்,

3. வைரமுத்து, என் தம்பி வைரமுத்து கலைஞர் சொற்பொழிவுகள், சூர்யா லிட்ரேச்சர் வெளியீடு, இரண்டாம் பதிப்பு, ஜனவரி - 2013

© 2026 மனோகரம்மாள் செ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 422–425
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

மேலாண்மை பொன்னுச்சாமியின் “விரல் - சிறுகதைத் தொகுப்பு” - ஓர் பார்வை

அனுசுயா சா*

அரசு உயர்நிலைப் பள்ளி அய்யனாரூத்து., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: அனுசுயா சா — anusuyaamoga@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00055	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

மேலாண்மை பொன்னுச்சாமி கரிசல் மண்ணின் வாழ்வியலை பதிவு செய்த முக்கியமான எழுத்தாளர் ஆவார். அவரது ‘விரல்’ சிறுகதைத் தொகுப்பை மையமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. கரிசல் விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள், குறிப்பாக பெண்களின் வாழ்வில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களை இத்தொகுப்பில் உள்ள 13 கதைகள் வழியே ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாகும். பம்புசெட் பாசனம், இரசாயன உரம் போன்ற நவீன விவசாய முறைகளால் பாரம்பரிய விவசாயம் எவ்வாறு மாறியது, நிலவுடைமையால் கூலி உறவு சிதைந்தது, ‘ஊர்சோறு’ போன்ற பரம்பரைத் தொழில் முறைகள் மறைந்தது ஆகியவற்றை ‘வேறு வேறு’, ‘ஊர்ச்சோறு’, ‘புன்செய்’, போன்ற கதைகள் யதார்த்தமாக எடுத்துரைக்கின்றன.

Keywords / திறவுச்சொற்கள்: பெண்களின் வாழ்வியல்; சமூக பொருளாதார மாற்றங்கள்; விவசாயம்; புன்செய்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: சா, அ. (2026). மேலாண்மை பொன்னுச்சாமியின் “விரல் - சிறுகதைத் தொகுப்பு” - ஓர் பார்வை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 421–424. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8533

முன்னுரை

செ. பொன்னுச்சாமி என்னும் மேலாண்மை பொன்னுச்சாமி 1957-இல் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ‘மேலாண்மறைநாடு’ எனும் கிராமத்தில்
சு. செல்லச்சாமி அன்னபாக்கியம் இணையருக்கு பிறந்தார். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்தார். ஐந்தாம் வகுப்போடு கல்வி முற்றுப்பெற்றது. இவர் விவசாயக் கூலியாக, பெட்டிக்கடை பணியாளராக, புளி வியாபாரி என பல்வேறு தொழில்களை செய்துள்ளார். படிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டவராக இருந்தார். கல்வி தடைபட்டதால் நாளிதழ்கள், நூல்கள் வாசித்து தனது வாசிப்பார்வத்தை வளர்த்துக் கொண்டார். ஜெயகாந்தனின் நூல்கள் இவருள் தாக்கத்தை ஏற்படுத்தின. நாளிதழ்களுக்கு சிறுகதைகளை எழுதி அனுப்புகிறார். இவர் படைத்த படைப்புகள் பற்றியும் அப்படைப்புகளுள் ஒன்றான ‘விரல்’ என்ற

சிறுகதைத் தொகுப்பினைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

இலக்கிய வாழ்க்கை

படைப்பாளரான இவர் எழுதிய முதல் சிறுகதை 'பரிசு' 1972-இல் செம்மலர் இதழில் வெளியானது. இதன் ஆசிரியர் கே. முத்தையா இவரை தொடர்ந்து எழுத ஊக்குவித்தார். தீக்கதிர், குங்குமம், குமுதம், வாசுகி, கல்கி, தாமரை, இதயம் பேசுகிறது, தேவி, ராணி, ஓம் சக்தி, விழிப்பு, புதிய பார்வை, தமிழன் எக்ஸ்பிரஸ் முதலிய முன்னணி இதழ்களிலும், இலக்கிய சிற்றேடுகளிலும் சிறுகதைத் தொடர்கள் எழுதினார். இவரின் முதல் சிறுகதைத் தொகுப்பு 'மானுடம் வெல்லும்' 1981-இல் வெளியானது. சிறுகதைத் தொகுப்புகளாக 'சிபிகள்', 'பூக்காத மாலை', 'மானுடப் பிரவாகம்', 'காகிதம்', 'கணக்கு', 'தழும்பு', 'தாய்மதி', 'விரல்', 'உயிர்காற்று', 'என் கனா', 'மனப் பூ', 'ஒரு மாலை பூத்து வரும்', 'அன்பூ வாசம்', 'பூச்சுமை', 'வெண்பூ மனம்', 'மானாவாரிப்பூ', 'மின்சார பூ', 'மனச்சுனை', 'ராசாத்தி' போன்ற படைப்புகளைப் படைத்துள்ளார். இவர் படைத்த நூல்களாக உயிர் நிலம், முற்றுகை, இனி, அச்சமே நரகம், ஆகாயச் சிறகுகள், ஊர் மண், முழு நிலா போன்றனவும், குறுநாவல்களாக ஈஸ்வர..., பாசத்தீ, தழும்பு, கோடுகள், மரம் போன்றன வெளிவந்துள்ளன. இவர் எழுதிய கட்டுரை 'சிறுகதைப் படைப்பின் உள் விகாரம்' என்பதாகும்.

இலக்கிய இடம்

கரிசல் மண் மக்களின் வாழ்க்கையைத் தனது படைப்புகளில் முன் வைத்தவர். இவர் பொதுவுடமை சித்தாந்த நோக்கத்தில் இயல்பான பேச்சு நடையில் வட்டார வழக்கில் எழுதினார். பெண் சார்ந்த சிக்கல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சொலவடைகள் மிக அதிக அளவில் இவரது படைப்புகளில் இடம்பெற்றன. மரபின் பெருமைகளையும் மரபின் சிதைவுகளையும் தனது படைப்புகளில் முன்னிலைப்படுத்தினார். முற்போக்கு இயக்கம் சார்ந்த எழுத்தாளரான இவர் அவ்வியக்கத்தின் முதன்மை படைப்பாளிகள் ஒருவராக மதிப்பிடப்படுகிறார். மேலும் 'மின்சாரப் பூ' எனும் சிறுகதை தொகுப்பிற்கு 2007-ம் ஆண்டில் சாகித்திய அகாடமி விருது கிடைத்தது. பிற படைப்புகளும் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளன. கரிசல் எழுத்தாளர்களில் ஒருவரான இவர் உடல்நலக்குறைவால் 2017 அக்டோபர் 30 அன்று மறைந்தார். 2018-ல் இவரது நூல்கள் தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டது. சில படைப்புகள் பள்ளி, கல்லூரிகளில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

விரல் சிறுகதை தொகுப்பு

'விரல்' எனும் சிறுகதைத் தொகுப்பில் 13 சிறுகதைகள் உள்ளன. 1. விரல், 2. வேறு வேறு, 3. புஞ்சை, 4. இந்தியா, 5. கோடை மழை, 6. பலிபீடம், 7. ஈரம், 8. ஜீரணம், 9. கிடங்கு, 10. கட்டிப் புரளு, 11. +1 உலகம், 12. கறிவேப்பிலை, 13. ஊர்ச்சோறு எனும் சிறுகதைகள் ஆகும்.

திறமை என்பது விதை போன்றது. ஆனால் முறையான வாசிப்பும், உலகியல் அனுபவமும், ஓயாத பயிற்சியும் மட்டுமே அதை ஒரு படைப்பாளனாக முளைக்க வைக்கிறது. (ஜெயமோகன் – எழுத்து: ஓர் வழிகாட்டி)

கிராமங்களின் வாழ்வியல் சூழல் நவீன மயமாக்களினால் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுவிட்டன என்பதனையும், விவசாயிகளுக்கும் விவசாயக் கூலிகளுக்குமான உறவு நிலை, கரிசல் மண்ணின் வறட்சியில் முழு உழைப்பையும் போட்டாலும் வாழ்வின் அன்றாட முறைமைகளை கடத்துவதே பெரும் சவாலாக

வாழும் கிராமத்துப் பெண்கள், சமூகத்தில் சாதி ரீதியாக வெளிப்படும் இன்னல்கள் என பலவித வாழ்வியலின் எதார்த்த உண்மைகளை வெளிப்படுத்தும் விதமாக சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன.

கிராமங்களின் புதிய பூச்சுகள்

"சொந்த மண்ணின் மக்களோடும் அவர்களின் வர்க்கப் போராட்டங்களோடும் தன்னை இணைத்துக் கொள்ளும் ஒருவனால் மட்டுமே மக்கள் எழுத்தாளனாக உருவாக முடியும்" (மேலாண்மை பொன்னுச்சாமி - சிறுகதை படைப்பின் உள் விகாரங்கள்).

கிராமங்களில் விவசாய உற்பத்தி முறைமைகளிலும், சாகுபடி விதமும் பல்வேறு மாற்றங்கள் பெற்றுவிட்டன. இப்போது உழவு, நவீன விதைகள், ரசாயன உரம், பூச்சி மருந்துகள் என உற்பத்திக்கு உழைப்பினை நம்பாமல் மாற்றம் நிகழ்ந்துவிட்டது.

'வேறு வேறு' எனும் சிறுகதையில் 'பூவனம்' எனும் விவசாயக்கூலி பெண் கணவனை இழந்தவள். தன் பிள்ளைகளின் சிறு சிறு தேவைகளை நிறைவேற்ற கடையில் சிறிது கடன் பட்டுவிடுகிறாள். வேலை பார்க்கும் விவசாய நிலத்தில் கத்திரிக்காய் செழித்து கிடப்பதை பார்த்த பூவனத்திற்கு தன் பிள்ளைகளுக்காக வீட்டிற்கு போகும்போது பறித்து செல்கிறாள். மாலை நேரத்தில் வேலை பார்த்த கூலியை வாங்க நில உரிமையாளரான அத்தை முறையான மாரியம்மாள் வீட்டிற்குச் செல்கிறார். கூலியை கொடுத்த கையோடு சிரித்துக்கொண்டே "அஞ்சு பைசா குறையாமல் சம்பளம் வேணுங்காக, அடிச்சு வாங்குற மாதிரி புடிங்கிட்டு போறாக, அதுக்கும் மேல புஞ்சையில காய்கனியை கை வைக்காக, என்ன நியாயம் இது?" சிரித்துக் கொண்டே செருப்பால் அடிக்க முடியுமா? பூவனத்துக்குள் ஆழத்தில் வெட்டுகிற வேதனை நறுக்கிடுகிற அவமான கூலி.

புஞ்சைக்காரி கூறும் போது சும்மாவா வெளையுது உரம் போடாம செலவழிக்காம விளையுமா? காய்கனியும் இப்ப துட்டு தான? துட்ட எடுத்தா களவாணித்தனமில்லையா? என விவசாயிகளின் ஆற்றாமையும் வெளிப்படுகிறது.

'ஊர்ச்சோறு' எனும் சிறுகதையில் குடிமகனாக (முடி திருத்துதல்) தலைமுறை தலைமுறையாக ஆவுடைச்சி-ராக்கப்பன் குடும்பம் தொழில் செய்து வருகிறது. இவர்களின் மகன் முனியசாமி இத்தொழிலை செய்ய மறுக்கிறான். இந்த ஊர்க்காரர் நமக்கு இருக்க இடம் கொடுத்து, அவர்கள் தோட்டத்தில் விளையிற தானியங்களை கொடுத்து, அவர்கள் சாப்பிடற உணவினை நாம் போனதும் தந்து நம்மை நல்லா பார்த்துக்காங்க. நீ இதை விட்டுட்டு வெளியில போய் என்ன செய்வ என்று மகன் மீது எரிச்சல்படுகிறார்.

ராக்கப்பனுக்கு சூடாக இட்லியும், தாளிப்புடன் கூடிய சட்னி சாப்பிட மனதில் ஆசை ஊறியது. தான் கடைக்கு அதிக கூட்டம் வந்ததால் கடைக்கு போய் சாப்பிட முடியவில்லை. ஊர் கூட்டம் கூட வீடு வீடாக தகவல் சொல்லச் சொல்லி நாட்டாண்மை அனுப்பிவிடுகிறார். ராக்கப்பன் சொல்லப்போகும் போது ஒரு வீட்டின் முற்றத்தில் உரலில் இட்லிக்கு மாவாட்டுவதை பார்க்கிறான். மனதில் மகிழ்கிறான். மறுநாள் முனியம்மாள் ஊர்ச்சோறு வாங்கி வந்தவுடன் அதில் இட்லியும் இருக்கும் என நினைத்து கடையில் ஓசி சட்னி வாங்கி வந்து பார்க்கிறான், பழைய சோறு மட்டுமே போட்டு இருந்தார்கள்.

அவன் மனம் புழுங்கியது. மக்கள் முன்பு போல இல்லை என்பதை உணர்கிறான். ராக்கப்பனின் தாத்தா, ஐயா காலங்களில் மக்கள் அவர்கள் உண்ணும் உணவையே

வழங்கினார்கள். இப்போது கிராமம் அவ்வாறில்லை என்பதை உணர்ந்து வெதும்புகிறான். தன் மனைவியிடம் 'அவனுக்கு பிடித்த வேலையை செய்யச் சொல்' என கூறிவிட்டு வெளியே செல்வதாக கதை அமைந்திருக்கும்.

எடைக்கல்லில் மாற்றம் வைத்து விவசாயிகளை ஏமாற்றி பருத்தியை வாங்கி லாபம் பார்க்க வேண்டியுள்ளது. கரிசல்குளம் ஊரில் அப்படி ஏமாற்றி பருத்தி வாங்கிவிட்டு மறுபடி அவ்வூர் செல்ல பயப்படுகிறான். அங்கு இதற்கு முன் ஏமாற்றிய வியாபாரியை கட்டி வைத்து வசவு (திட்டுதல்) உரித்தனர். அபராதமும் வாங்கப்பட்டது. பத்து நாட்களுக்குப் பிறகு அதே ஊருக்குப் போகிறான். அங்கு போனதும் உன்னிடம் பருத்தி போட்ட அந்த வீட்டு அம்மா உன்னை வரச் சொன்னாங்க என்று தகவல் வருகிறது. மாரிச்சாமிக்கு பயம் அப்பிக்கொண்டது. அந்த அம்மா 'நீ அன்னைக்கு அரை கிலோ எடைக்கல்லை மறந்துட்டு போயிட்ட உன் பொருள் எனக்கு எதுக்கு' என்று கொடுக்கிறாள். இவன் மனம் குற்றவுணர்ச்சி அடைகிறது. இவர்களையா ஏமாற்றினோம் என்று யாரிடமும் பருத்தி வாங்காமல் வீடு சேர்கிறான்.

முடிவுரை

கரிசல் மண்ணின் மக்களின் ஈரம் காய்ந்த வறண்ட சூழ்நிலை பல படைப்புகளில் விவரித்துள்ளார். சமூகங்களின் வெளிப்பாடு மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளன. பம்ப்செட் நீர்பாசனம், பால் சொசைட்டி, ரசாயன முறை வேளாண்மை என அனைத்தும் தொழில் முகமாக மாறியதால் விவசாய வீட்டு வாரிசுகளே விவசாயத்தின் அருமை அறியாமல் வளர்கின்ற சூழலை உணர்த்துகிறார். கிராம மக்களின் பயன்பாட்டில் சைக்கிளின் பங்களிப்பையும் அச்சைக்கிளின் வருணனையில் அம்மக்களின் வாழ்வியலையும் யதார்த்தப் போக்கில் வாழ்ந்து காட்டியவராகவே அறியப்படுகிறார். வரும் இளம் தலைமுறையினர் கரிசல் வாழ்க்கையினை வியப்புடன் அறிந்து கொள்ள மேலாண்மை பொன்னுச்சாமியின் படைப்புகளும் வழி வகுத்துள்ளன என்பதில் ஐயமில்லை.

துணை நூல்கள்

- விரல் - சிறுகதை தொகுப்பு - மேலாண்மை பொன்னுச்சாமி
- எழுத்து: ஓர் வழிகாட்டி - ஜெயமோகன்
- சிறுகதை படைப்பின் உள் விகாரங்கள் - மேலாண்மை பொன்னுச்சாமி

© 2026 அனுசுயா சா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 426–433
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சங்க இலக்கியத்தில் ஆநிரை கவர்தலும் மீட்டலும்: இனக்குழுப் பொருளாதார முரண்களின் சமூகவியல் வெளிப்பாடு

Cattle Raids in Sangam Literature: A Sociological Ex-pression of Tribal Economic Conflicts

Dr.M Bhuvaneswari*

Coimbatore, India

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: Dr.M Bhuvaneswari — bhuvimusic.ar@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
28 September 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00003	

ஆய்வுச்சுருக்கம்

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வுக் கட்டுரை, செவ்வியல் தமிழ்ச் சமூகம் குடிப்பெருக்க மேய்ச்சல் சமூக அமைப்பிலிருந்து தொடக்கக்கால அரசு உருவாக்கத்தை நோக்கி அடைந்த மாற்றத்தின் சமூக-பொருளாதார மற்றும் மானிடவியல் இயக்கவியலை ஆராய்கிறது. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் வெட்சி (ஆநிரை கவர்தல்), கரந்தை (ஆநிரை மீட்டல்) திணைகள் சார்ந்த போரியல் முறைமை, பிற்கால நிலப்பிரபுத்துவ அமைப்பின் நில ஆக்கிரமிப்புப் போர்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தது. மாறாக, இப்போர்கள் குறிஞ்சி மற்றும் முல்லை நிலப்பரப்புகளில் வாழ்ந்த பழங்குடி குழுக்களிடையே நடைபெற்ற வளம் சார்ந்த பொருளாதாரப் போராட்டங்களாகவே அமைந்தன.

இவ்வாய்வு, சொல்லியல் மற்றும் பண்பாட்டு ரீதியாக 'மாடு' என்ற சொல்லால் குறிக்கப்படும் கால்நடைகள், பணப் புழக்கமற்ற பண்டமாற்று காலத்தில் முதன்மைச் செல்வமாகவும் மூலதனமாகவும் விளங்கிய பொருளாதார-மானிடவியல் பின்னணியைச் சமூகவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்கிறது. மேலும், ஆநிரை கவர்தலின் பின்னணியில் அமைந்த வீர அறநெறிகளை (போரறம்) இக்கட்டுரை முன்னிறுத்துகிறது; இது வரவிருக்கும் போரிலிருந்து அப்பாவிகளையும் கால்நடைகளையும் பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும், எதிரியின் மீதான முற்காப்புப் பொருளாதாரத் தாக்குதலாகவும் செயல்பட்டது.

மேலும், இப்போர்களின் விளைவாக உருவான நடுகல் பண்பாட்டையும் இவ்வாய்வு ஆராய்கிறது. ஆநிரைகளைக் கவரும்போதோ அல்லது மீட்கும்போதோ வீரமரணம் அடைந்த வீரர்களை நினைவுகூர எழுப்பப்பட்ட இவ்வெழுத்துப் பொறித்த நினைவுக்கற்கள், வெறும் மூதாதையர் நினைவுக் குறிகளாக மட்டும் நில்லாமல், எல்லையைக் காக்கும் சிறுதெய்வ வழிபாட்டுத் தலங்களாகப் பரிணமித்தன. முடிவாக, ஆநிரை சார்ந்த பூசல்களும் நடுகல் வழிபாடும், பண்டைத் தென்னிந்திய சமூகம் இரத்தவழி மேய்ச்சல்

குடிகளிலிருந்து நிறுவனமயப்பட்ட முடியாட்சியை நோக்கி அடைந்த சமூக-அரசியல் பரிணாமத்தை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

கலைச்சொற்கள்: சங்க இலக்கியம், ஆநிரை கவர்தல், மேய்ச்சல் பொருளாதாரம், வெட்சி, நடுகல், அரசு உருவாக்கம்.

Keywords / திறவுச்சொற்கள்: Sangam Literature; Cattle Raiding; Pastoral Economy; Vetchi; Hero Stone; State Formation.

Abstract

This paper investigates the socio-economic and anthropological dynamics of classical Tamil society as it transitioned from a clan-based pastoral community to early state formation. In Sangam literature, warfare in the Vetchi (cattle raiding) and Karanthai (cattle re-covery) thinai (ecocritical landscapes) differed fundamentally from the territorial, land-annexing conflicts of later feudal eras. Instead, these conflicts represented resource-centered economic struggles between tribal groups inhabiting the Kurinji (mountainous) and Mullai (pastoral) tracts.

Through a sociological lens, this study analyzes the economic-anthropological back-ground where cattle—etymologically and culturally denoted by the word Maadu—served as the primary measure of non-monetized wealth and capital. The paper highlights the chivalric martial ethics (Poraaram) governing cattle raids, which functioned both as a pre-emptive economic strike and a protective measure to remove non-combatants and livestock from im-pending battlegrounds.

The paper also examines the resulting Nadukal (Hero Stone) culture. Erected to commemorate fallen warriors who died protecting or capturing herds, these inscribed me-morial stones evolved from ancestral markers into shrines of border-guarding folk deities (Sirutheyvam). Ultimately, this paper demonstrates how cattle-centered conflict and hero-stone veneration reflect the socio-political evolution of early South Indian society from line-age-based pastoral clans to institutionalized monarchies.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: Bhuvaneswari, D. (2026). சங்க இலக்கியத்தில் ஆநிரை கவர்தலும் மீட்டலும்: இனக்குழுப் பொருளாதார முரண்களின் சமூகவியல் வெளிப்பாடு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 425–432. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8535

முன்னுரை

பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பேரரசு உருவாக்கம் என்பது திடீரென நிகழ்ந்த ஒன்று அன்று; மாறாக, அது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகாலத் தொல்பழங்குடி வாழ்வியலிலிருந்து மெல்ல மெல்ல அரசுருவாக்கத்தை நோக்கி நகர்ந்த நீண்ட வரலாற்றுப் பரிணாமத்தின் தொடக்கப் புள்ளியாகும். சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்தும் ஐந்திணை நிலப்பரப்பானது, வெறும் புவியியல் எல்லைகள் மட்டுமல்லாமல், தனித்துவமான சூழலியல் மற்றும் மனித வாழ்வியல் கூறுகளையும் உள்ளடக்கிய சமூக-பண்பாட்டு நிலையை வெளிப்படுத்தும் சான்றுகளாகும். இத்தகைய சூழலில், பிற்கால நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் காணப்பட்ட நில ஆக்கிரமிப்புப் போர்கள், சங்க காலத்தின் முற்பகுதியில் முழு வடிவம் பெற்றிருக்கவில்லை. மாறாக, அச்சமூகத்தின் அடிப்படை அலகாக விளங்கிய குலமுறை அமைப்பானது தன் கூட்டு வாழ்வாதாரத்தைக் காப்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தது.

மானுடவியல் மற்றும் பொருளாதார மானுடவியல் கோட்பாடுகளின்படி, ஒரு சமூகம் நாடோடி நிலையிலிருந்து நிலையான வேளாண் சமூகமாக மாறுவதற்கு இடைப்பட்ட காலத்தில், கால்நடை வளர்ப்புச் சமூகமே பொருளியல் பலத்தின் குறியீடாகத் திகழ்கிறது. சங்க கால முல்லை மற்றும் பாலை நிலப் பகுதிகளில் நிலவிய சூழல் காரணமாக, நகரும் சொத்தாகக் கருதப்பட்ட கால்நடைகளே பிரதான செல்வமாகவும் கூட்டுச் சொத்தாகவும் மதிப்பிடப்பட்டன. ‘மாடு’ என்ற சொல்லே ‘செல்வம்’ என்ற பொருளியல் குறியீடாக மாறிய சமூகவியல் பின்னணி இதில்தான் அடங்கியுள்ளது. எனவே, ஒரு குறிப்பிட்ட இனக்குழுவின் பொருளாதார வலிமையை நசுக்குவதற்கும், தன் குலத்தின் பொருளாதாரத் தேவையைப் பெருக்குவதற்கும் அண்டை நிலத்து ஆநிரைகளைக் கவரும் உத்தியானது கையாளப்பட்டது.

இப்பின்னணியில் எழும் வெட்சி (ஆநிரை கவர்தல்) மற்றும் கரந்தை (ஆநிரை மீட்டல்) ஆகிய திணைகள், வெறும் வீரயுகப் போர்க்கலைகளாக மட்டும் சுருங்காமல், ஆதித் தமிழர்களின் குலமுறைப் பொருளாதார முரண்களின் நேரடி வெளிப்பாடுகளாக அமைவதை அறிய முடிகிறது. பகை நாட்டின் மீது வேந்தன் படையெடுக்கும் முன்னரே, எளிய உயிரினங்களான பசுக்களையும் அவற்றை மேய்க்கும் ஆயர்களையும் காக்கும் பொருட்டு முன்கூட்டியே ஆநிரைகளைக் கவரும் 'போர் அறம்' இங்கு உன்னத சமூக விழுமியமாகப் பேணப்பட்டது. மேலும், இத்தகைய ஆநிரைப் போர்களில் தங்கள் குலத்தின் செல்வத்தைக் காக்கும் முயற்சியில் மடியும் வீரர்களுக்கு நடப்படும் நடுகல் வழிபாடானது, தமிழர்களின் தொல்பழங்குடிச் சிறுதெய்வ வழிபாட்டுப் பண்பாட்டின் மிக முக்கிய அடையாளமாக உருவெடுத்தது.

இலக்கிய இலக்கணப் பதிவுகளில் ஆநிரை

பண்டைய தமிழர்களின் வாழ்வியலை நெறிப்படுத்திய இலக்கண அமைப்புகளும், அதனைப் பிரதிபலித்த இலக்கியப் பதிவுகளும் ஆநிரை சார்ந்த வாழ்வியலுக்கு மிக முக்கிய இடத்தைத் தந்துள்ளன. மொழியியல் மற்றும் சமூகவியல் நோக்கில், ஒரு சமூகத்தின் மொழியில் பயின்றுவரும் சொற்களின் பயன்பாடே அச்சமூகத்தின் முதன்மைப் பொருளாதாரக் காரணியைத் தீர்மானிக்கிறது.

தொல்காப்பியப் புறத்திணை மரபில் ஆநிரை

தொல்காப்பியம் தன் 'புறத்திணையியல்' பகுதியில் போரின் முதல் படிநிலையாக ஆநிரை கவர்தலையே குறிப்பிடுகிறது:

வெட்சி தானே குறிஞ்சியது புறனே

உட்குவரத் தோன்றும் ஈர்ஏழ் துறைத்தே

(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல்: *57*)

பகை வேந்தனின் நாட்டின் மீது போர் தொடுக்கும் எண்ணம் கொண்ட ஒருவன், அவனுடைய ஆநிரைகளைக் கவர்ந்து வருவது ‘வெட்சி’ என்றும், அப்படிக் கவரப்பட்ட ஆநிரைகளைத் தன் குலத்து வீரர்கள் மீட்டு வருவது ‘கரந்தை‘ என்றும் முறைப்படுத்தப்பட்டுள்ளது. பேரரசுகளின் போர் மரபுகள் தோன்றுவதற்கு முன்பே, இனக்குழுக்களின் மோதல் முறைகளுக்குத் தொல்காப்பியம் விரிவான இலக்கணத் துறைகளை வகுத்திருப்பது, தமிழ்ச் சமூகத்தில் ஆநிரை சார்ந்த அரசியல் எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருந்துள்ளது என்பதை உணர்த்துகிறது.

'மாடு' - சொல் பரிணாமமும் பொருளியல் குறியீடும்

பண்டைய தமிழில் 'மாடு' என்ற சொல்லுக்கு ‘விலங்கினம்', ‘செல்வம்', 'பக்கம்' அல்லது 'அழகு' என்று பொருள்கள் இருந்தன. கால்நடைகள் மனிதனின் பக்கபலமாக, அவனது இல்லத்தின் அழகாகத் திகழ்ந்ததால் அவை 'மாடு' என அழைக்கப்பட்டு, காலப்போக்கில் அதுவே 'செல்வம்' என்ற சொல்லுக்கு நிகரான கலைச்சொல்லாக மாறியது. இந்த மரபின் தொடர்ச்சியாகவே பிற்காலத்தில் திருவள்ளுவரும் பொருட்செல்வத்தைக் குறிக்கும் சொல்லாக 'மாடு' என்ற சொல்லைப் பயன்படுத்தினார்:

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்றை யவை **(திருக்குறள்: *400*)**

கால்நடைகளைத் தவிர வேறு எதையும் ஒரு சமூகத்தின் முதன்மைச் சொத்தாகக் கருத முடியாத ஒரு தொல்குடிப் பொருளாதார அமைப்பை இந்தச் சொல் பரிணாமம் வெளிப்படுத்துகிறது.

புறநானூற்றுப் பதிவுகளில் ஆநிரை சார் வாழ்வியல்

புறநானூற்றில், ஆநிரை கவர்தலும் மீட்டலும் மிக எதார்த்தமான வரலாற்றுப் பதிவுகளாகப் பாடப்பட்டுள்ளன. பகைவர்கள் தங்கள் குலத்து ஆநிரைகளைக் கவர்ந்து சென்றுவிட்டனர் என்ற செய்தியைக் கேட்டவுடன், கரந்தை வீரர்கள் கள்ளுண்ட மயக்கத்திலும் கூடத் துடித்தெழுந்து, துடி முழக்கத்துடன் பசுக்களை மீட்க விரைந்து செல்வதை உணர்த்தும் புறநானூற்றுப் பாடல் இதோ:

உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றது
கொள்ளாய் என்ப கள்ளின் வாழ்த்திக்
கரந்தை நீடிய அறிந்துமாறு செருவின்
பல்லான் இனநிரை தழீஇய வில்லோர்க்
கொடுஞ்சிறைக் குரூஉப்பருந்து ஆர்ப்பத் **(புறநானூறு: *259*)**

மேலும், புறநானூற்றுப் பாடல் (257) வில்லேந்திய வீரர்கள் காடுகளைக் கடந்து சென்று, பகைவர்களின் சீறூரில் உள்ள பல பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வருவதைப் பின்வருமாறு பதிவு செய்கிறது:

வில்லுடை வைப்பின் வியன்காடு இறந்த

கோள்வல் வேட்டுவன் உவப்ப, ஆங்கண்

சீறூர் பல்லா நிரை தரீஇய **(பெரும்பாணாற்றுப்படை: *81-83*)**

இனக்குழுப் பொருளாதாரமும் சொத்துரிமையும்

சங்க காலச் சமூக அமைப்பைப் பொருளாதார மானுடவியல் நோக்கில் உற்றுநோக்கும்போது, அங்கு 'நில உடைமை' என்பது முழுமையான சொத்துரிமையாக மாறாத ஒரு காலக்கட்டத்தைக் காண முடிகிறது. பழங்குடிச் சமூகங்களில் நிலம் என்பது தனிநபர் சொத்தாக இருப்பதில்லை; அது ஒட்டுமொத்தக் குலத்திற்குரிய கூட்டு உடைமையாகவே இருக்கும்.

நிலம் எல்லோருக்குமானதாக இருக்கும்போது, ஒரு குலத்தின் தனித்துவமான பொருளாதாரப் பலத்தை அல்லது 'சொத்து' என்ற மதிப்பீட்டைத் தீர்மானிப்பது

அவர்கள் வைத்திருக்கும் 'நகரும் சொத்தான' ஆநிரைகளே ஆகும். எந்தக் குலத்திடம் அதிக அளவிலான பசுக்களும் எருதுகளும் இருக்கின்றனவோ, அந்தக் குலமே சமூகப் படிநிலையில் அதிகாரமிக்க 'தொல்குடியா'கக் கருதப்பட்டது.

திணைசார் உற்பத்தியும் வாழ்வாதாரப் பலவீனமும்

ஐந்திணைகளில் முல்லை மற்றும் பாலை நிலங்கள் இயற்கையிலேயே வறட்சியான அல்லது நிலையற்ற புவியியல் கூறுகளைக் கொண்டவை. இதனால், அக்குடிகளின் உணவு மற்றும் பண்டமாற்றுத் தேவைகளுக்கு ஆநிரைகளே பிரதானமாக விளங்கின. பசுவின் பால், நெய், தயிர் போன்ற தயாரிப்புகள் அவர்களின் அன்றாட உணவாகவும், பிற நிலத்து மக்களுடன் நெல், உப்பு போன்றவற்றை மாற்றிக் கொள்வதற்கான முதன்மைப் 'பண்டமாற்று ஊடகமாகவும்' பயன்பட்டன.

குலமுறைப் பொருளாதாரப் போர்கள்

பிற்காலப் போர்கள் 'நிலப்பரப்பை விரிவுபடுத்துவதற்காக' நடத்தப்பட்டவை. ஆனால், சங்க கால வெட்சி-கரந்தைப் போர்கள் 'சொத்தைக் குவிப்பதற்காக' நடத்தப்பட்ட குலமுறைப் போர்கள் ஆகும். ஒரு குலத்தின் கூட்டுச் சொத்தான ஆநிரைகள் கவரப்படும்போது, அக்குலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் நசுங்குகிறது. இதனால், தன் குலத்தின் வாழ்வாதாரத்தையும் கௌரவத்தையும் மீட்டெடுக்க ஒட்டுமொத்தக் குலத்து வீரர்களும் திரண்டு சென்று போரிட்டனர். எனவே, இப்போர்கள் தனிநபர் சார்ந்த முரணாக இல்லாமல், 'இனக்குழுக்களுக்கு இடையேயான பொருளாதார முரணாகவே' அமைகிறது.

போர் அறமும் சமூகவியல் விழுமியங்களும்

சங்கச் சமூகத்தின் ஆநிரைப் போர்கள் வெறும் பொருளாதார முரண்களின் வெளிப்பாடு மட்டுமல்லாமல், அவற்றிற்குப் பின்னால் மிக உன்னதமான போர் 'அறம்' பேணப்பட்டதை இலக்கியச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. பேரரசன் ஒருவன் பகை நாட்டின் மீது அதிகாரப்பூர்வமாகப் படையெடுப்பதற்கு முன்னால், அங்குள்ள சாதுவான பசுக்களுக்கும் அவற்றுடன் தொடர்புடைய எளிய மனிதர்களுக்கும் எவ்விதத் தீங்கும் நேர்ந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தான். தன் வீரர்களை அனுப்பி, பகை நாட்டின் எல்லைப் பகுதியில் மேய்ந்து கொண்டிருக்கும் ஆநிரைகளை முதலில் கவர்ந்து பாதுகாப்பான இடத்திற்கு மாற்றுமாறு ஆணையிடுகிறான். இதனைப் புறநானூற்றின் புகழ்பெற்ற 9-ஆம் பாடல் வரிகள் மிகத் தெளிவாகப் படம் பிடிக்கின்றன:

ஆவும், ஆன் இயற்பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்,
எம் அம்பு கடிவிடுதும்; நும் அரண் சேர்மின் **(புறநானூறு: *9*)**

போரின் வன்முறைக்களத்திலும் எளிய உயிரினங்களைக் காக்க வேண்டும் என்ற இந்தச் சமூகவியல் விழுமியம், உலகப் போரியல் வரலாற்றிலேயே மிக தனித்துவமான ஓர் அறக் கோட்பாடாகும்.

கூட்டுப் பொறுப்பும் சமூகப் பாதுகாப்பும்

ஆநிரை கவர்தலின்போது ஆயர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நேரடித் தீங்கு விளைவிப்பது விலக்கப்பட்டிருந்தது. வெட்சி வீரர்கள் பசுக்களை மட்டுமே குறிவைத்தனர். அதேபோல, பசுக்கள் கவரப்பட்டதை அறிந்தவுடன் அக்குலத்தின் கரந்தை வீரர்கள் திரண்டு வந்து மீட்பதும் ஒரு கூட்டுப் பொறுப்பாகவே கருதப்பட்டது. ஒரு குலத்தின் சமூகப் பிணைப்பை வலுப்படுத்துவதில் இந்த ஆநிரைப் போர்கள் மிக முக்கியப் பங்காற்றியுள்ளன.

நடுகல் வழிபாடும் பண்பாட்டுப் பரிணாமமும்

தன் குலத்தின் சொத்தைக் காக்கும் போரில் மடியும் வீரன், அக்குலத்தின் முதன்மைக்காவலனாகக் கருதப்பட்டான். அவனது தியாகத்தைப் போற்றும் விதமாகவே நடுகற்கள் நடப்பட்டன. மரணமடைந்த வீரனின் உடலை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கல்லை நட்டு, அதில் அவ்வீரனின் பெயரையும் அவனது வீரச்செயலையும் பொறித்து வைத்தனர். அக்கல்லிற்கு மயில் தோகைகளைச் சூட்டி, கள்ளையும் பலியையும் படைத்து மக்கள் வழிபட்டனர்:

பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி,

மரல் வகுந்து தொடுத்த செம் பூங் கண்ணியொடு,

அணி மயில் பீலி சூட்டி, பெயர் பொறித்து,

இனி நட்டனரே, கல்லும்; **(புறநானூறு: *264)***

மரணமடைந்த வீரன் அந்தக் கல்லில் ஆவியாக உறைந்திருப்பதாகவும், அவன் தொடர்ந்து தங்கள் குலத்தைக் காப்பான் என்றும் மக்கள் நம்பினர். இதுவே தமிழர்களின் ஆதி 'குலதெய்வ' வழிபாட்டு முறையின் தொடக்கப் புள்ளியாகும்.

வைதீக வழிபாட்டிற்கு முந்தைய தமிழரின் சமய நிலை

பிற்காலத்தில் தமிழகத்தில் உருவெடுத்த பெருங்கோவில் பண்பாடும் வைதீக வழிபாட்டு முறைகளும் புகுவதற்கு முன்பே, தமிழர்களிடம் சுயசார்பான ஒரு சமய அமைப்பு இருந்தது என்பதற்கு நடுகற்களே ஆகச்சிறந்த சான்றாகும். புறநானூறு இதனைப் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறது:

நடுகல் பீடன்றிப்

பிற கடவுளும் இலவே... **(புறநானூறு: *335)***

முடிவுரை

சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்தும் வெட்சி (ஆநிரை கவர்தல்) மற்றும் கரந்தை (ஆநிரை மீட்டல்) திணைகள் என்பவை பிற்கால நிலப்பிரபுத்துவ அமைப்பிலோ அல்லது பேரரசு உருவாக்கத்திலோ காணப்பட்ட நில ஆக்கிரமிப்புப் போர்களைப் போன்றவை அல்ல. மாறாக, அவை முற்றிலும் பண்டைய தமிழினக்குழுக்களின் சுயசார்புப் பொருளாதாரத்தைக் காப்பதற்கான வாழ்வாதாரப் போராட்டங்களாகும்.

பொருளாதார மானுடவியல் பின்னணி: 'மாடு' எனும் சொல் 'செல்வம்' என்ற பொருளியல் குறியீடாகப் பரிணமித்த சூழலில், ஆநிரைகள் வெறும் விலங்கினமாகப் பார்க்கப்படாமல், ஒரு தொல்குடியின் கூட்டுச் சொத்தாகவும்

(Communal Property) அவர்தம் சமூக அதிகாரத்தின் குறியீடாகவும் திகழ்ந்துள்ளன.

போரறமும் சமூகவியல் விழுமியமும்: ஆநிரை கவர்தலின் போது பின்பற்றப்பட்ட நெறிமுறைகள், தமிழர்களின் 'போரறம்' என்பது போரினால் பாதிப்புக்குள்ளாகும் எளிய உயிரினங்களையும் எளிய மனிதர்களையும் முன்கூட்டியே பாதுகாப்பதில் இருந்தே தொடங்குகிறது என்ற உன்னதமான அற உணர்வை உணர்த்துகின்றன.

நடுகல் பண்பாட்டுப் பரிணாமம்: ஆநிரையைக் காக்கும் போரில் உயிர்நீத்த எளிய வீரர்களின் தியாகத்தைப் போற்றும் நடுகல் வழிபாடானது, பிற்கால வைதீகப் பெருங்கோவில் வழிபாட்டு முறைகளுக்கு முந்தைய தமிழர்களின் சுயசார்பான 'குலதெய்வ' மற்றும் 'சிறுதெய்வ' வழிபாட்டுப் பண்பாட்டின் தொடக்கப் புள்ளியாக அமைந்துள்ளது.

சுருங்கக் கூறின், ஆநிரைப் போர்களும் நடுகல் நடும் வழக்கும், தமிழ்ச் சமூகம் நாடோடி மற்றும் கால்நடை வளர்ப்பு நிலையிலிருந்து நிலையான வேளாண் சமூகமாகவும், அதனைத் தொடர்ந்து அரசு உருவாக்கத்தை நோக்கியும் பரிணமித்த வரலாற்று இடைநிலைக்காலத்தின் மிக முக்கிய பொருளாதார-சமூகவியல் வெளிப்பாடு என்பதை உறுதியாக நிறுவ முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை (உரை), புறநானூறு: மூலமும் உரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2002.
2. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம்: பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், 2010.
3. ஆரோக்கியசாமி.மா, சங்க காலத் தமிழகம், மணிவாசகர் பதிப்பகம், 2002.
4. கணபதி.இரா, சங்க இலக்கியத்தில் போர் முறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2005.
5. கைலாசபதி.கே, தமிழ் வீரயுகக் கவிதை, குமரன் புத்தக இல்லம், 2006.
6. சிவத்தம்பி.கா, சங்க இலக்கியமும் சமூகமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010.
7. நாகசாமி.ஆர், தமிழக நடுகற்கள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 1972.
8. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், அடையாளம் வெளியீடு, 2008.
9. பக்தவத்சல பாரதி, தமிழர் மானுடவியல், மெய்யப்பன் பதிப்பகம், 2003.
10. ராஜன்.கா, தமிழக நடுகற்கள்: ஒரு தொல்லியல் பார்வை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2000.
11. வித்தியானந்தன்.சு, தமிழர் சால்பு, குமரன் புத்தக இல்லம், 2004.
12. Champakalakshmi. R., *Trade, Ideology and Urbanization: South India 300 BC to AD 1300*, Oxford University Press, 1996.
13. Hart George L, *The Poems of Ancient Tamil: Their Milieu and Sanskrit Counterparts*, University of California Press, 1975.
14. Morgan Lewis.H, *Ancient Society*, MacMillan & Company, 1877.
15. Rajan. K, *Archaeology of Tamil Nadu (Kongu Country)*, Delta Publishing House, 1994.
16. Subramanian.N, *Sangam Polity: The Administration and Social Life of the Sangam Tamils*, Ennes Publications, 1966.

© 2026 Dr.M Bhuvaneswari. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 434–442
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

எண்ணும் எழுத்தும்

Literacy and Numeracy

இரா.சிவலிங்கம் Admin*

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 600005 தொலைப்பேசி எண் :*7339637662, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: இரா.சிவலிங்கம் Admin — sivaphd23@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
28 September 2026	—	28 September 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00004

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கண கல்வி என்பது பழமையான மரபை உடையது. அவற்றை கற்று இலக்கிய ஆக்கங்களை இன்றளவும் செம்மையான முறையில் தமிழ் சமூகம் பின்பற்றி வருகிறது. அவற்றில் அற இலக்கிய காலமாக சுட்டப்பட்ட கலாப்பிரர் மற்றும் பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கண மற்றும் இலக்கிய கல்வி முறைகள் பற்றிய இலக்கியப்பதிவுகளும் அவற்றுக்கான உரைப்பொருள்கள் சுட்டிய கருத்துகளில் இருந்து எண் என்பது இலக்கண கல்வியையும் எழுத்து என்பது இலக்கிய கல்வியையும் சுட்டும் காரணப்பெயர்கள் எனும் பொருண்மையில் இக்கட்டுரை அமைகிறது

Keywords / திறவுச்சொற்கள்: Number; letter; Aathichudi; Kondraiventhan; Thirukkural; sound form; written form. folk usage; arithmetic; language education

Abstract

Tamil literature and grammar education have a long-standing tradition. By learning them, Tamil society has continued to follow and produce literary works in a refined manner to this day. Among these, this article is based on the significance that the literary records concerning the grammar and literary education systems that emerged during the Kalabhra and Pallava periods, identified as the period of ethical literature, and the ideas indicated by their commentarial interpretations, point to the causal terms in which “number” denotes grammar education and “letter” denotes literary education

How to cite / மேற்கோள் காட்டும் முறை: Admin, இ. (2026). எண்ணும் எழுத்தும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 433–441. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8537

முன்னுரை

உலக மொழிகள் அனைத்திலும் ஒலி வடிவம் இருக்கிறது. அவற்றை பயன்படுத்தும் மக்களின் இடையே நாட்டார் வழக்காறு அடிப்படையில் பல பாடல்களும் நம்பிக்கைகள் சார்ந்த பழக்க வழக்கங்களும் காணப்படுகிறது.

ஆனால் அவற்றில் வரிவடிவம் எய்திய மொழிகள் என்பதும் சிலவே ஆகும். அவ்வரிவடிவத்திலும் பிறந்த இந்நாட்டார் வழக்காற்று இலக்கியங்கள் காலப்போக்கில் வரையறுக்கப்பட்ட இலக்கிய முறைகளைப்பெற்றுள்ளது. பேரகத்திய திரட்டு உரைப்பதுபோன்று இலக்கியத்திலிருந்து இலக்கணம் தோன்றுவது போல அம்மொழிகளுக்கான இலக்கண வரைவை எய்திய மொழிகள் சிலவே. இங்கு கிளை மொழியாக மூல மொழியில் இருந்து சிலகூறுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தோன்றிய கிளை மொழிகள் பலவாக பல்கி பெருகிய பொழுதும் அம்மூல மொழி பயன்பாடற்று அழியும் பொழுது அக்கிளைமொழி ஒரு முழுமையற்ற இலக்கிய வகைகளையும், படைக்கப்பட்ட இலக்கியங்களுக்கான முழுமையற்ற இலக்கணத்தையும் மட்டுமே படைக்கின்றன. அவ்விலக்கணத்தைப் பயன்படுத்தி இலக்கிய மரபு ஆக்கங்களை உருவாக்குகிறார்கள் இலக்கணம் மொழியின் மரபார்ந்த வளர்ச்சிநிலையில் காலந்தோறும் மொழியின் சீர்மையான பயன்பாட்டிற்கும், புதிய மொழி பரிணாமத்திற்கும் காரணமாக அமைகிறது. அதாவது காலந்தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களை அறிதற்கும் உதவுகிறது. வேற்றுமொழியின் தாக்கத்தாலும் கலப்பினாலும் ஏற்படும் மாற்றங்கள் அவ்வகையான புதிய இலக்கியங்களை உருவாக்க காரணமாக அமைகிறது. அவ்விதம் அப்புதிய இலக்கியங்களுக்கான படைப்பாக்க கருவியாக இலக்கணத்தையும் வரையறுக்க வேண்டிய தேவை அம்மொழிக்கு ஏற்படுகிறது. மொழியின் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் அம்மொழியில் வழங்கும் பான்மையும், அவற்றின் தோற்றத்தை மானுடவியல் பார்வையில் மொழி ஓர் பயன்பாட்டுக்கருவி எனவும், மனிதன் தன் உற்றறியும் திறத்தால் கண்டறிந்த இம்மொழி அமைப்பு எனும் இலக்கிய. இலக்கணத்தையும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

இலக்கியம் என்பதோர்

இலக்கியம் என்பது யாது? என்ற வினாவிற்கு விடைகூறுவது மிகவும் அலாதியானது. இலக்கியம் என்றவுடன் செய்யுள் என்று பாடல்களையும் அவற்றின் காலந்தோறும் வளர்ந்த பா வகைகளையும் சுட்டி இவைதான் இலக்கியம் என்பர். ஆனால் இலக்கியம் என்பது மானுடவியல் பார்வையில் எவ்வாறு தோன்றுகிறது என்பதை விளக்கியாக வேண்டும். விலங்குகளின் உணர்வெழுச்சியின் வெளிபாட்டுக்கருவியாக காற்றானது உந்தி எனப்படும் உதரவிதானத்தினின்று தோன்றி மார்பு, கழுத்து, தலை எனும் நிலையில் நின்று அண்ணம், நா, பல், இதழ் முதலிய துணை உறுப்புகளால், உணர்ச்சியினால் எழுந்த காற்றானது தலை அமைப்பின் காரணமாகவும் மேற்கண்ட உறுப்புகளின் அசைவுகளினாலும் தோன்றும் ஒலிகளின் கூட்டமைப்பு பொருளுடைய சொற்களை உருவாக்கி ஒலிகளாக வெளிப்படுத்துகிறது. அச்சொற்கள் தான் கண்ட பொருளைச் சுட்டவும் உணர்ந்த பொருளை உணர்த்தவும் கருவியாக செயல்படுகிறது. அச்சொற்களின் பண்பை உற்று காண பெயர் மற்றும் வினை ஆகிய இரு சொற்களாகவும் அவற்றிடையே தொடர் இணைப்பாக இடைச்சொற்களும், பெயர் மற்றும் வினை சொற்களின் சிறப்பினை விளக்க உரிச்சொல்லாகவும் வகுப்பர். அவற்றினால் உண்டான பொருளுடைய தொடர்களே உணர்ச்சிகளின் ஒலிவடிவமான செய்யுளாகவும் ஏட்டில் எழுதப்படாமல் வாய்மொழியாக நின்றகாலை நாட்டுப்புறப் பாடல்களாகவும், ஏட்டில் எழுதும் போழுதும் அவற்றின் கட்டமைப்பினைக்கொண்டு யாப்பு எனும் வரிவடிவ நிலையிலும் காணப்படும் உணர்வெழுச்சியின் வெளிபாடே இலக்கியம் ஆகும்.

மேற்கண்ட மொழி தோற்ற நிலையை ஆயுங்கால் உள்ளிருந்து எழுவதனால் எழுத்து என்றும் அவ்வாறு எழுவதே உணர்ச்சி என்றும் அவையே இலக்கியம் என்பதும் விளங்கும். அவ்விலக்கியம் ஒரு மொழியின் பயன்பாடு மற்றும் பரவலாக்க அமைப்பில் விரிவடைகிறது. அவற்றின் பண்பாட்டுக்கூறுகள் அம்மொழிக்கான தனித்த சிறப்புகளாக அமைந்துவிடுகின்றன. மொழியில் காணப்படும் மரபுத்தொடர்ச்சிக்கும் அதுவே காரணமாகவும் அமைந்துவிடுகிறது.

தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள், அற இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், தொடர்நிலைச்செய்யுள்களான காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், தனிப்பாடல்கள், தற்கால உரைநடை, புதுக்கவிதை வரையிலான இலக்கியங்கள் அனைத்தையும் அகம், புறம், அறம், பக்தி என்ற கூறுகளுக்குள் அடக்கி விடலாம். அதாவது தற்காலத்தில் காதலன் ஒருவன் தன் காதலியின் நலத்தை வர்ணிக்க அக்கவிதை அகப்பண்பெய்தி விடுகிறது. நாடு மக்கள் எனும் சிந்தனை வெளிபாடுகள் புறம் என்றாகிவிடுகிறது. அவ்வகையான அகம் மற்றும் புற பண்பாட்டு ஒழுக்கங்களை அறிவுறுத்த அவை அறம் ஆகிவிடுகிறது. இவ்வாறான பாடற்பொருளைக்கொண்ட தமிழ் இலக்கியங்களின் தொடக்ககால படைப்பாக்கமும் மேற்கூறிய நாட்டார் இலக்கியங்களாகவே இருந்து வந்ததற்கான சுவடுகளாக இன்றளவும் திணை இலக்கியங்கள் காட்சி தருகின்றன. வரிவடிவம் பெறுவதற்கு முன்னமாக ஒலி வடிவத்தில் தோன்றிய இவ்விலக்கியங்களே வரி வடிவத்தை காலந்தோறும் பெற்றது. இவ்வொலி மற்றும் வரி ஆகிய இரு வடிவங்களுக்கும் பொது நிலையில் நின்று அவற்றைச் சுட்ட அமைந்த சொல்லாக எழுத்தே சுட்டப்படுகிறது. உள்ளிருந்து ஒரு பொருளைக் கண்டவுடனே அதன் காரணமாயும், இடுபொருளாயும் தோன்றிய சொற்கள் எழுந்து முன்னிற்கும் பண்பானதால் அவை எழுத்து என்னும் சுட்டினால் அமைந்தது. உணர்வெழுச்சியின்பால் அமைந்த இவ்வெழுத்தே காலப்போக்கில் இலக்கியங்களை சுட்டவும் வரிவடிவங்களை சுட்டவும் பயன்படுத்தப்பட்டன.

இலக்கணம் என்பத்தோர்..

எழுத்தை இலக்கியம் என ஏற்றாலன்றி இலக்கணத்தை எண் எனும் அமைப்பில் ஏற்க முடியும். அது எவ்வாறெனில், உணர்ச்சி வழிப்பட்ட இலக்கியத்தின் அமைப்பு இயக்கம் அதன் கருவி ஆகியவற்றை உற்று தெளிந்து அவற்றின் பண்பு இயக்கம் அவை தத்தமக்குள் புணரும் தன்மை, அவற்றின் குறுகும், அளபெடுக்கும் தன்மை ஆகியவற்றை விளங்க முடியும்.

இவ்வெழுத்து இலக்கியம் என்ற பொருண்மையில் ஔவையாரும், வள்ளுவரும்

> எண்ணெழுத்து இகழேல் (ஆத்தி.7)
>
> எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் (கொன்றை.7)
>
> எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
>
> கண்ணெண்ப வாழும் உயிர்க்கு குறள் (குறள்.392)

என்றனர். அறம்பாடும் புலவர்களின் காலத்தில் இவ்வாறு எண் மற்றும் எழுத்து என்று சுட்டி எழுத்து என்பதனை எழுத படிக்க என்னும் பொருளில் மட்டும் சுட்டி அவற்றை பழித்தல் கூடாது என்றும், கல்வியின் கற்றல் கருவியாக அமைந்த எழுத்தை கண் என்று போற்றியும் காக்க வேண்டிய கடமையைச் சுட்டுகிறார்கள்.

இவ்விடத்தில் எழுத்து என்று சுட்டி உரைக்கப்பட்ட எழுத்து வரிவடிவம் என்ற எழுதப்படிக்க துணைப்புரியும் எழுத்தா அல்லது இலக்கியமா என்பதை ஊன்றி

அறிந்தால் விளங்கும். வள்ளுவரும் தமிழ் மூதாட்டியும் கல்வியின் தேவையை உரைக்க துணிந்தகாலை கல்வியை சிறப்பாகவும் கசடற கற்கவும் வேண்டி எண் என்ற கணக்கையும் எழுத்து என்ற எழுத்தறிவையும் சுட்டுவதாகவே பெரும்பாலும் அன்றைய காலந்தொட்டு தற்காலம் வரையிலான உரையாசிரியர்கள் அனைவரும் பொருள் கூறிச்செல்கின்றனர். வள்ளுவர் கூறும் கல்வி அதிகார நிலையில் இருந்து இரண்டாம் பாடலாகவே எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு என்கிறார். தவறில்லாமல் கற்க வேண்டி,

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிறக அதற்குத் தக (குறள்.391)

என்று கூறி அடுத்ததாக இடம்பெற்ற குறளில் எண்ணெண்ப ஏனை எழுத்தென்ப என்கிறார். கல்வி அதிகாரத்தில் பத்துக்குறள்களில் கல்வியின் சிறப்பு மற்றும் பயன் ஆகியவற்றை கூறும் வள்ளுவர், இக்குறளில் மட்டுமே கல்வியின் வகைகளை கூறுகிறார். அக்குறளின் உண்மையான பொருளை இனிக் காண்பொம்.

திருக்குறள் தோன்றிய பொதுவான காலக்கணிப்பாக கி.மு. 31 முதல் கி.பி. 31 என அனைவரும் கொள்வர். அக்காலை தமிழகத்தில் சங்ககாலமாக கருதப்படும் மூவேந்தர் ஆட்சியே இருந்தது. அதற்கடுத்த காலக்கட்டத்தில் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சிகாலத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மற்றும் பண்பாட்டு மாற்றத்தால் சமயம் முதலான பல மாற்றங்களும் இலக்கிய மாற்றங்களும் ஏற்படலாயின. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் பரவியிருந்தாலும். களப்பிரர் ஆட்சிகாலத்தில் உட்சம் பெற்றது. அவ்வாறு சமணசமய ஆதிக்கம் அதுவரை தமிழ் இலக்கிய நெறியான அகம் மற்றும் புறம் சார்ந்த இலக்கியங்களைச் சிற்றின்ப பொருளாக கருதி தவிர்த்து மதுரையில் இருந்த கடைசங்கத்தை களைத்து முடிவுக்கு கொண்டுவந்தது. ஆனால் களப்பிரர்களால் தமிழகத்தில் பல்கி பரவிய சமணர்களுக்கு இங்கிருக்கும் மொழியை கற்கவும் மீண்டும் கற்பிக்கவும் கருவி தேவைப்பட்டது. தங்களின் அறக்கருத்துக்களைப் பாடவும் தமிழ் மொழியை அவர்கள் கற்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறு அவர்கள் அதுவரை வழங்கி வந்த தமிழ் இலக்கியங்களை கற்று உற்றறிந்து மொழியின் அமைப்பு மற்றும் அவற்றில் பயின்றுவரும் எழுத்து மற்றும் சொற் கருவிகளை அறியலாயினர். இவ்விடமே இலக்கணங்கள் தோன்றுகிறது.

எழுவதால் எழுத்து என்றும், அவ்வுணர்வெளியையே இலக்கியம் என்றும் அவற்றின் இயங்கு தன்மையை எண்ணுவதே அதாவது மொழியின் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய கருவிகளை எண்ணுவதே இலக்கணம் என்றும் வரையறுக்கப்படுகிறது. அதாவது ஒரு மொழியின் வழங்கப்படும் இலக்கியத்தின் இயக்கத்தை அதற்கு உதவும் கருவிகளை அறிதல் அல்லது எண்ணுதலே இலக்கணம் ஆகும்.

தமிழ் இலக்கணங்கள் பெரும்பான்மை சமணர்களின் கொடையாகவே கருதப்படுகிறது. ஒரு நிலப்பரப்பில் வழங்கப்படும் ஒரு வளமான மொழியைப் படிக்கவும் எழுதவும் துணைப்புரிவதும் இலக்கணமே ஆகும். அவ்வகையில் இலக்கணத்தின் தேவையோ தோற்றமோ காணப்படாத மொழியில் ஒரு இலக்கணம் வேற்று நிலத்தவர்களின் கலப்பினாலே உருவாகிறது. அவ்வாறு இலக்கணத்தோற்றம் நடைப்பெறாத வரையில் அம்மொழியில் நாட்டார் வழக்காற்றியல் போல இலக்கியங்கள் மட்டுமே பாடப்பட்டும் தங்களின் குறியீட்டு வரிவடிவங்களால் எழுதப்பட்டு வந்திருக்கும். கடைச்சங்க காலமும்

அவ்வக்காலத்தில் பாடப்பட்ட பதினெண் மேற்கணக்கு நூல்களும், அதற்கு முன்னம் இருந்த தொல்காப்பியத்தை அடிப்படையான இலக்கணமாக கொண்டது எனலாம். அதற்கு முன்பிருந்த இடை மற்றும் முதல் சங்கங்களுக்கு அகத்தியமே இலக்கண நூலாக அமைந்தது எனலாம், முதுநாரை, முதுகுருகு, வெண்டாளி, வியாழமாலை, களவியாவிரை முதலான இசை மற்றும் நாடக நூல்களுக்கு அகத்தியமே இலக்கண நூலாக அமைந்த பான்மையை உணரலாம். அவ்வகையில், காலங்காலமாக வழங்கி வந்த இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியானாரும் தொல்காப்பியரும் பற்றி நச்சினார்கினியர், தம் தொல்காப்பிய பாயிர உரையில்,

“பாண்டியன் மாகீர்த்தி இருபத்துநாலாயிரம் ஆண்டு வீற்றிருந்தானாதலின் அவனும் அவன் அவையில் உள்ளோரும் அறிவுமிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாம் குற்றந்தீர விடைகூறுதலின் அரில்தப என்றார்.

அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி ‘நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க’ என்று கூறுதலானும். தொல்காப்பியனாரும் பலகாலுஞ் சென்று ‘யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்’ என்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றம் கூறிவிடுவலெனக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடைகூறுதலின், ‘அரில்தபத் தெரிந்து’ என்றார்.

அவர் கேளன்மினென்றற்குக் காரணமென்னையெனின், தேவ ரெல்லாருங்கூடி யாஞ் சேரவிருத்தலின் மேருந் தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தெந்திசைக்கண் போதுகின்றவர், கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியானாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப், பெயர்ந்து துவாராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் தோன்றிய அரசர் பதினெண்மரையுங் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து, இராவணனைக் கந்தருவத்தால் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி ‘நீ சென்று குமரியாரைக் கொண்டுவருக’ எனக் கூற அவரும் எம்பெருமாட்டியை எங்கனங் கொண்டு வருவ’ லென்றார்க்கு ‘முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகலநின்று கொண்டுவருக’ வென அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக்கொண்டு போகத் தொல்காப்பியனாரையும் ‘சுவர்க்கம் புகாப்பிர்’ எனச் சபித்தார்; யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர்’ என அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனான் அவர் வெகுண்டாராதலின் அவன் செய்த நூலைக் கேளற்க என்றாரென்க” (நச்சினார்க்கினியம் ப.10 -11)

என்கிறார். நச்சினார்க்கினியர் கூறுவது போல வடக்கிலிருந்து தென்னாட்டிற்கு புகுந்த அகத்தியர் சிவபெருமானிடத்து தொன்மையான தமிழ் மொழியைக் கற்றார் என்றும் அவரே தீரணதுர்மாக்கினி எனும் தொல்காப்பியரையும் கொண்டு வந்தார் எனலாம். ஒரு மொழியைக் கற்க வேண்டின் இலக்கணமே மூலமாக அமைகிறது. மொழியின் ஒலி அமைப்பை மட்டும் கொண்டு பேசலாம் பாடலாம் ஆனால்

அதற்கான எழுத்து வடிவத்தினையும், எழுத்தெனும் வரிவடிவத்தையும் சுட்டி விளக்க இலக்கணமே பயன்படுகிறது. அதனை அம்மொழியின் தன்மைகளை விளக்கும் விதமாக அமைய வேண்டி அவற்றின் எழுத்து ஒலி மற்றும் வரி வடிவ பண்பாட்டினைக் கண்டு உற்று அவற்றின் பயன்பாட்டினால் பேசவும் புதியதான இலக்கியம் படைக்கவும் பயன்படும் கருவியாக இலக்கணம் பயன்படுகிறது. சிவபெருமான் அகத்தியருக்கு கற்றுக்கொடுத்ததான முத்தமிழ் இலக்கணமும், அகத்தியரிடம் இருந்து இயல் இலக்கணத்தை கற்று தான் அறிந்த மற்ற இலக்கண நூல்களையும் கொண்டு தொல்காப்பியர் படைத்த எழுத்து, சொல், பொருள் எனும் முப்பகுப்பு இலக்கணமும், பன்னிரு படலத்தின் இடம்பெற்ற புறத்திணைகளை படைத்த தொல்காப்பியனார் முதலான அகத்தியரின் மாணாக்கரான பன்னிருவரும் இலக்கணத்தை கற்று அவ்வகாலத்திற்கு ஏற்ப இலக்கணம் படைக்கலாயினர்.

மேற்கண்ட செய்திகளுக்கு சான்றாதாரங்கள் குறைவு எனும் போதும் வாய்மொழி வழக்காக பல்கி பெருகி வரும் இவ்விலக்கண தோற்ற கதைகளில் இருந்து ஒன்று மட்டும் தெளிவாக விளங்குகிறது. தமிழ் இலக்கணிகள் என்று நாம் அறிந்த யாவரும் வேற்று நிலத்திலிருந்து வந்து மொழியின் அமைப்பை ஆய்ந்தவர்களே ஆவர். அவர்கள் அம்மொழியின் பண்புகளை உற்றறிந்து அதன் எழுத்து சொல் அவற்றின் புணர்ச்சி, தொடர் அமைப்புகள், யாப்பு நிலைகள், அணி பிரயோகம் ஆகியவற்றை தெளிவாகக் கண்டு அவற்றினை நாளும் உணர்ந்து எண்ணி மொழியின் அமைப்பினை இலக்கணமாக வரையலாயினர். இவ்விதம் இலக்கணத்தோற்றத்தைப் பேராசிரியர் கா.சிவதம்பியும் இச்சமயப்பின்னணியில் இருந்து நோக்கி '**நமக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய இலக்கண நூல்கள் சமண பௌத்த மரபுகளைச் சார்ந்தவையாகும். தொல்காப்பியம் நன்னூல், வீரசோழியம், (நிகண்டுகள் கூட) சமண பௌத்த கையளிப்புகளே**' (ப.24. தமிழ் இலக்கியப் பேறு – ஓர் அறிமுகக் குறிப்பு, புதிய தமிழ் இலக்கிய வரலாறு) என்கிறார்.

மேற்கண்ட செய்திகளில் இருந்து இரு விதமான முடிவுகள் நமக்கு கிடைக்கின்றன. எழுத்து என்பதை இலக்கியம் என்றும் எண் என்பதை இலக்கணத்தைச் சுட்டும் பொருளிலே நம் புலவர்கள் பயன்படுத்தினர் என்பது விளங்கும். இலக்கண உருவாக்கம் பெருகாத காலம் வரை அதாவது களப்பிரர்கள் ஆட்சி தோன்றாதவரை சங்ககால மரபளவில் எவ்வித இலக்கண இலக்கிய கல்வி தேவைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை. அகம் புறம் எனும் பாடற்பொருள் கொண்ட திணைப்பாடல்கள் நலிவுற்றப்பின், அறம் பாடும் வழக்கம் மிகவே சமண பௌத்த தாக்கத்தாலும் இலக்கணம் மற்றும் இலக்கிய கல்வியின் பயன் மிகுந்தது. ஆகையால் இலக்கணம் மற்றும் இலக்கிய கல்வியை அறிவுறுத்த புலவர்கல் தம் பாடல்களில் கல்வி அறிவை விளக்கும் போது அதனை சுட்ட காரணப்பெயர்களான 'எண்' மற்றும் 'எழுத்து' ஆகிய இரு சொற்களையும் பயன்படுத்தலாயினர். அவ்வகையில் எழுத்து என்பது இலக்கியத்தையும் எண் என்பது இலக்கணத்தையும் சுட்டுகிறது.

மனிதனின் ஆறாம் அறிவால் அடைந்த பயன்களில் மொழியும் ஒன்றாகும் அவற்றினை தொல்காப்பிய உயிர் கோட்பாட்டடிப்படையில்

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

இரண்டறி வதுவே அதனொடு நாவே

மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே

நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே

ஆறறி வதுவே அவற்றோடு மனனே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே. (தொல். மரபு. நூ.27)

என ஆறறிவுடைய மக்கள் மனம் எனும் சிந்தித்தல் பண்பைக் கொண்டதாலே மனிதன் எனும் பெயர் பெற்றான். அம்மனத்தின் அந்தகரணங்களாக பாவலரேறு ச. பாலசுந்தரம் அவர்கள் தமது தொல்காப்பிய காண்டிகை உரையில் **"மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகக்கருவி நான்கனுள் மனம் ஒன்றனைப் பற்றும், புத்தி அதனை ஆராயும், சித்தம் அதனை நிச்சயிக்கும், அகங்காரம் செயல்படுத்தும் ஆதலின் உணரும் கருவிகள் புத்தியும் சித்தமுமேயாம். அவ்வாற்றான் மெய்முதலாகிய ஐம்பொறிகளைப் போலவே மனம் என்னும் அகக்கருவியும் ஒன்றினைப் பற்றி நிற்கும் நிலைமைக்கண் புறக்கருவிகளோடு ஒத்தலின் 'ஆறறிவதுவே அவற்றோடு மனனே' என்றார்"** (தொல். பொருள். மரபு. தொகுதி-3, பகுதி-3, ப-177) எனக் கூறுகிறார் பாவலர். அவ்வகையில் தொல்காப்பியரின் உயிர்கோட்பாட்டினை மானிடவியல் பார்வையில் அணுகுங்காலை மனிதனின் மனம் பற்றும் செயல், அச்செயலுக்கான படிநிலைகளை நடத்தும் வல்லமையைப் பெறும். இவ்விடம் மனித மனம் மொழியை எண்ணும் அதாவது நினைக்கும் பொழுது இலக்கணத்தோற்றத்தையும் அது உருவாக்கும் என்பதை நம்மால் உணர முடிகிறது. அவ்வகையில் எண்ணும் எழுத்தும் எனும் கல்வி முறையானது இலக்கண இலக்கியத்தையே சுட்டி நின்றன. அற இலக்கியமான ஐந்திணை எழுபதின் கடவுள் வாழ்த்துப்படலில் எண்ணும் என்னும் சொல் எண்ணுதல் எனும் சிந்தனையை முன்னிருத்தி அதனால் விளையும் கலைப்பயிற்சியை சுட்டுவதை,

எண்ணும் பொருளினிதே எல்லாம் முடித்தெமக்கு

நண்ணும் கலையனைத்தும் நல்குமால் - கண்ணுதலின்

முண்டத்தான், அண்டத்தான், மூலத்தான், ஆலம்சேர்

கண்டத்தான் ஈன்ற களிறு. – ஐந்70

என்கிறது. அவ்வாறே திருக்குறளும் எண் என்பதை சிந்தித்தல் எனும் பொருளில்

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்

எண்ணின் தவத்தான் வரும். – குறள்:264

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்

எண்ணப்படுவது ஒன்று அன்று – குறள்:438

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு – குறள்:467

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்

பெண்சேர்ந்தாம் பேதைமை இல். – குறள்:910

எண்ணப்படுவது - எண்ணுதல் - எண்ணல், நினைத்தல்; ஆலோசித்தல்; மதித்தல்; தியானித்தல்; முடிவுசெய்தல்; கணக்கிடுதல்; மதிப்பிடுதல்; துய்த்தல். என்ற பல பொருட்களில் பயன்படுத்துகிறது. ஆனால் கல்வி அதிகாரத்தில் இடம்பெறும் குறளான

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு.. குறள்:392

எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் **கலைகளையும்** வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர். என்று மு. வரதராசனாரும், வாழும் நல்லவர்க்கு **அறிவியலும் கலைஇயலும்** சிறந்த கண் என்று அறிந்தவர் கூறுவர். என்று சாலமன் பாப்பையாவும், **எண்ணும்** எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள் என்று மு. கருணாநிதி என்றும் விளக்குகிறார்கள்

ஊணொடு கூறை எழுத்தாணி புத்தகம்

பேணொடும் **எண்ணும் எழுத்திவை** மாணொடு

கேட்டெழுதி ஓதிவாழ் வார்க்கீய்ந்தார் இம்மையான்

வேட்டெழுத வாழ்வார் விரிந்து. – ஏலாதி:63

எழுத்தினால் நீங்காதெண்ணால் ஒழியா தேத்தி

வழுத்தினால் மாறாது மாண்ட - ஒழுக்கினால்

நேராமை சால உணர்வார் பெருந்தவம்

போகாமை சாலப் புலை. -ஏலாதி:38

உண்ணாது வைக்கும் பெரும் பொருள் வைப்பு இன்னா;

நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனி இன்னா;

கண் இல் ஒருவன் வனப்பு இன்னா; ஆங்கு இன்னா,

எண் இலான் செய்யும் கணக்கு.– இன்னா:16

ஆகிய கீழ்கணக்கு செய்யுள்கள் அனைத்தும் எண்ணை இலக்கணம் எனும் பொருளிலே முன்கொண்டு பாடத்தொடங்கின. எண் என்பதை கணக்கு என்று கூறும் பொழுதும் கணக்கு எனும் அறிவியல் இயற்பியல், வேதியியல், உயிரியல் என அனைத்து துறைகளுக்கும் ஆதாரமாக அமைவதைப்போல மொழியின் எண்ணான அதாவது மொழியின் இயக்க கருவிகளை அறியும் அறிவியல் பகுதி இலக்கணமே ஆகும். மொழிக்கல்வியில் எண் என்பது எண்ணுவது எனும் பொருளில் இலக்கணத்தையும், எழுத்து என்பது எழுவது எனும் உணர்வு வெளிப்பாட்டின் அடிப்படையில் தோன்றும் இலக்கியத்தையும் சுட்டி நின்றன.

முடிவுரை

இங்ஙனம் இலக்கிய இலக்கண கல்வி முறையில் அற இலக்கிய காலக்கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட எண் மற்றும் எழுத்து எனும் வழக்கு கணிதம் மற்றும் மொழி எனும் பான்மையைச் சுட்டாது இலக்கண இலக்கிய கல்வி முறையைச் சுட்டி நின்ற பான்மையை நம்மால் அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் – நக்கீரர் உரை. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் -1953
2. சிற்பி பாலசுப்பிரமணியம், நீல பத்மநாபன் (ப.ஆ) – புதிய தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி வெளியீடு, மூன்றாம் பதிப்பு -2019
3. நாமக்கல் கவிஞர் உரை - திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், 2010 .
4. நீதி நூல் களஞ்சியம், 23 நூல்கள் விளக்க உரையுடன், கொற்றவை

வெளியீடு, 2023

5. பாவலரேறு பாலசுந்தரம்.ச. - தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, 5 தொகுதிகள், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -11, பிப்ரவரி 2012.
6. பாவாநந்தம்பிள்ளை.ச. பேரகத்திய திரட்டு மூலமும் உரையும், எஸ்.பி., ஸி.கே. அச்சுக்கூடம்,சென்னை, 1912

© 2026 இரா.சிவலிங்கம் Admin. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 443–451
tamilmanam.in

REVIEW ARTICLE · OPEN ACCESS

டிஜிட்டல் ஊடகச் சூழலில் தமிழ்நாட்டு நாட்டுப்புறக் கலைகளின் மறுமலர்ச்சி: இளைய தலைமுறையினரிடம் அவற்றை கொண்டு சேர்ப்பதில் குறுகிய வடிவக் காணொளிகளின் (Reels/Shorts) பங்கு

Hariharan E A*, Dr Subramani R

இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம், தமிழ்நாடு., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: Hariharan E A — eahari@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
29 September 2026	—	29 September 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00007	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வுக்கட்டுரை, சமகால டிஜிட்டல் ஊடகச் சூழலில் தமிழ்நாட்டின் மரபுசார் நாட்டுப்புறக் கலைகள் எவ்வாறு மறுமலர்ச்சி பெற்று வருகின்றன என்பதைத் துலக்குகிறது. குறிப்பாக, நவீனத் தலைமுறையான ஜென்-இசட் (Gen Z) பயனர்களிடையே தெருக்கூத்து, நாட்டுப்புறப் பாடல்கள், கரகாட்டம், பறையாட்டம் மற்றும் ஒயிலாட்டம் போன்ற பழைமையான கலை வடிவங்கள் செங்குத்து வடிவக் குறுகிய காணொளிகள் (Reels மற்றும் Shorts) வழியாகப் புதிய பரவலை எட்டியுள்ள விதம் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. நிலவியல் எல்லைகளுக்குட்பட்ட கிராமியக் களங்களில் இரவு முழுவதும் நிகழ்த்தப்பட்ட கலைகள், நவீன அல்காரிதம் (நெறிமுறை) மற்றும் 60 வினாடி செங்குத்துத் திரை வடிவுக்கு ஏற்ப மீள்வடிவமைக்கப்படும் பொழுது எதிர்கொள்ளும் பண்பாட்டு மாற்றங்கள் இங்கு முதன்மைச் சிக்கலாக முன்னிறுத்தப்படுகின்றன. பண்புசார் உள்ளடக்கப் பகுப்பாய்வு (Qualitative Content Analysis) நெறிமுறையைப் பின்பற்றி, பெருந்திரள் பயனர்களைச் சென்றடைந்த (Viral) தமிழ் நாட்டுக் கலைக் காணொளிகள், அவற்றின் பின்னணி ஒலிப்பயன்பாடு (Trending Audio), துரிதத் தொகுப்பு உத்திகள் (Fast-paced Editing) மற்றும் பகுப்புக் குறியீடுகள் (#TamilFolk) ஆகியவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில், இத்தகைய சமூக ஊடக நெறிமுறைகள் கிராமிய விளிம்புநிலை கலைஞர்களுக்கு உலகளாவிய அடையாளத்தையும் பொருளாதார ஏற்பையும் வழங்கி நாட்டுப்புறக் கலைகளைச் சனநாயகப்படுத்தினாலும், விரைவுப் பார்வைகளுக்காகக் (Views) கலைகளின் வரலாற்றுப் புனிதமும் மரபுசார் முழுமையும் நீர்த்துப்போகும் (Dilution) அபாயத்தைக் கொண்டுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது. டிஜிட்டல் வணிகமயமாக்கலுக்கும் பாரம்பரியப் பாதுகாப்புக்கும் இடையிலான சமநிலையை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டல்களுடன் ஆய்வு

நிறைவுறுகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: சமூக ஊடக நெறிமுறை (Social Media Algorithms); நாட்டுப்புறக் கலைகள் (Tamil Folk Heritage); ஜென்-இசட் தலைமுறை (Gen Z); குறுகிய வடிவக் காணொளிகள் (Reels / Shorts); தெருக்கூத்து மறுமலர்ச்சி (Revival of Therukoothu).

How to cite / மேற்கோள் காட்டும் முறை: E A, H., & R, D. S. (2026). டிஜிட்டல் ஊடகச் சூழலில் தமிழ்நாட்டு நாட்டுப்புறக் கலைகளின் மறுமலர்ச்சி: இளைய தலைமுறையினரிடம் அவற்றை கொண்டு சேர்ப்பதில் குறுகிய வடிவக் காணொளிகளின் (Reels/Shorts) பங்கு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 442–450. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8539

இ. அ. ஹரிஹரன்[1] & முனைவர் ரா. சுப்பிரமணி[2*]

[1] [2] இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம், தமிழ்நாடு.

தொடர்பு ஆசிரியர்: இ. அ. ஹரிஹரன்,

மின்னஞ்சல்: eahari@gmail.com | ORCID: https://orcid.org/0009-0005-5134-6946

Hariharan E A[1*], Dr Subramani R[2]

Department of Journalism and Mass Communication, Periyar University, Salem, Tamil Nadu, India

*Author Email: eahari@gmail.com | ORCID: https://orcid.org/0009-0005-5134-6946

ஆய்வுக் சுருக்கம்
இவ்வாய்வுக்கட்டுரை, சமகால டிஜிட்டல் ஊடகச் சூழலில் தமிழ்நாட்டின் மரபுசார் நாட்டுப்புறக் கலைகள் எவ்வாறு மறுமலர்ச்சி பெற்று வருகின்றன என்பதைத் துலக்குகிறது. குறிப்பாக, நவீனத் தலைமுறையான ஜென்-இசட் (Gen Z) பயனர்களிடையே தெருக்கூத்து, நாட்டுப்புறப் பாடல்கள், கரகாட்டம், பறையாட்டம் மற்றும் ஒயிலாட்டம் போன்ற பழைமையான கலை வடிவங்கள் செங்குத்து வடிவக் குறுகிய காணொளிகள் (Reels மற்றும் Shorts) வழியாகப் புதிய பரவலை எட்டியுள்ள விதம் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. நிலவியல் எல்லைகளுக்குட்பட்ட கிராமியக் களங்களில் இரவு முழுவதும் நிகழ்த்தப்பட்ட கலைகள், நவீன அல்காரிதம் (நெறிமுறை) மற்றும் 60 வினாடி செங்குத்துத் திரை வடிவுக்கு ஏற்ப மீள்வடிவமைக்கப்படும் பொழுது எதிர்கொள்ளும் பண்பாட்டு மாற்றங்கள் இங்கு முதன்மைச் சிக்கலாக முன்னிறுத்தப்படுகின்றன. பண்புசார் உள்ளடக்கப் பகுப்பாய்வு (Qualitative Content Analysis) நெறிமுறையைப் பின்பற்றி, பெருந்திரள் பயனர்களைச் சென்றடைந்த (Viral) தமிழ் நாட்டுக் கலைக் காணொளிகள், அவற்றின் பின்னணி ஒலிப்பயன்பாடு (Trending Audio), துரிதத் தொகுப்பு உத்திகள் (Fast-paced Editing) மற்றும் பகுப்புக் குறியீடுகள் (#TamilFolk) ஆகியவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில், இத்தகைய சமூக ஊடக நெறிமுறைகள் கிராமிய விளிம்புநிலை கலைஞர்களுக்கு உலகளாவிய அடையாளத்தையும் பொருளாதார ஏற்பையும் வழங்கி நாட்டுப்புறக் கலைகளைச் சனநாயகப்படுத்தினாலும், விரைவுப் பார்வைகளுக்காகக் (Views) கலைகளின் வரலாற்றுப் புனிதமும் மரபுசார் முழுமையும் நீர்த்துப்போகும் (Dilution) அபாயத்தைக் கொண்டுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது. டிஜிட்டல் வணிகமயமாக்கலுக்கும் பாரம்பரியப் பாதுகாப்புக்கும் இடையிலான சமநிலையை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டல்களுடன் ஆய்வு நிறைவுறுகிறது.
திறவுச்சொற்கள்: சமூக ஊடக நெறிமுறை *(Social Media Algorithms),* நாட்டுப்புறக் கலைகள் *(Tamil Folk Heritage),* ஜென்-இசட் தலைமுறை *(Gen Z),* குறுகிய வடிவக் காணொளிகள் *(Reels / Shorts),* தெருக்கூத்து மறுமலர்ச்சி *(Revival of Therukoothu).*

அறிமுகம் மற்றும் ஆய்வின் நோக்கங்கள்

மனித குலத்தின் நாகரிக வளர்ச்சியில் வாய்மொழி மரபும் நிகழ்த்து கலைகளும் ஒரு சமூகத்தின் வரலாற்று விழுமியங்களைப் பாதுகாக்கும் முதன்மை ஊடகங்களாக விளங்கி வந்துள்ளன. தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபில் தெருக்கூத்து, கரகாட்டம், பறையாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம் மற்றும் வில்லுப்பாட்டு போன்ற கலை

வடிவங்கள் வெறும் பொழுதுபோக்குக் கூறுகளாக அமையாமல், சமூக அறம், அரசியல் விழிப்புணர்வு, தொன்மவியல் மீளுருவாக்கம் மற்றும் விளிம்புநிலை மக்களின் வெளிப்பாட்டுக் களங்களாகத் திகழ்ந்தன. கிராமியக் கோயில் திருவிழாக்களிலும் அறுவடைப் பண்டிகைகளிலும் திறந்தவெளிக் களங்களில் மணிக்கணக்கில், சில தருணங்களில் இரவு முழுவதும் நிகழ்த்தப்பட்டு வந்த இக்கலைகள், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட தொழில்மயமாக்கல், நகர்மயமாக்கல் மற்றும் தொலைக்காட்சியின் ஆதிக்கத்தால் பெரும் தேக்கநிலையை எதிர்கொண்டன. கிராமப்புறங்களை விட்டு இளைய தலைமுறை கல்வி மற்றும் பணிக்காக வெளியேறிய சூழலில், பாரம்பரிய நிகழ்த்து கலைஞர்கள் வாழ்வாதார இழப்பிற்கும் பார்வையாளர் பற்றாக்குறைக்கும் தள்ளப்பட்டனர்.

எனினும், இருபத்தொன்றாம் நூற்றாண்டின் இரண்டாவது பத்தாண்டில் எழுச்சி பெற்ற ஸ்மார்ட்போன் தொழில்நுட்பமும், அதிவேக இணையப் பரவலும் பண்பாட்டுத் தளத்தில் ஒரு பெரும் அமைப்பியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, 2020-ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலகட்டத்தில் இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் (Instagram Reels), யூடியூப் ஷார்ட்ஸ் (YouTube Shorts) போன்ற செங்குத்துக் காட்சிப் பரப்பளவு (9:16 Vertical Screen Format) கொண்ட குறுகிய வடிவக் காணொளிகளின் வருகை, கலை நுகர்வு முறையையே தலைகீழாக மாற்றியமைத்துள்ளது. மணிக்கணக்கில் பார்வையாளரைக் கோரும் கிராமிய மேடைகளில் இருந்து, சுட்டுவிரலின் ஒற்றைத் தேய்ப்பில் (Single Swipe) 30 முதல் 60 வினாடிகளுக்குள் சுருக்கப்பட்ட டிஜிட்டல் திரைக்கு நாட்டுப்புறக் கலைகள் இடம்பெயர்ந்துள்ளன. இத்தகைய சூழலில், டிஜிட்டல் உலகிலேயே பிறந்து வளர்ந்த 'ஜென்-இசட்' (Gen Z - 1997 முதல் 2012 வரை பிறந்தவர்கள்) தலைமுறையினர் நாட்டுப்புறக் கலைகளை வெறுமனே வேடிக்கை பார்ப்பவர்களாக மட்டுமன்றி, அவற்றை மீளுருவாக்கம் செய்து பரப்பும் முதன்மைக் காரணிகளாகவும் உருவெடுத்துள்ளனர்.

இவ்வாய்வு பின்வரும் முதன்மையான நான்கு கல்விசார் நோக்கங்களை முன்வைத்து முன்னெடுக்கப்பட்டுள்ளது:

1. தமிழ்நாட்டின் பாரம்பரிய நிகழ்த்து கலைகள் கிராமிய வெளிகளிலிருந்து நவீன செங்குத்துத் திரை (Vertical Screen) வடிவத்திற்கு மாறியுள்ள பண்பாட்டு இடப்பெயர்வை அடையாளப்படுத்துதல்.
2. **சமூக ஊடக நெறிமுறைகள் (Social Media Algorithms), பிரபல ஒலித்துண்டுகள் (Trending Audio) மற்றும் குறிச்சொற்கள் (#Hashtags) எவ்வாறு நாட்டுப்புறக் கலை உள்ளடக்கங்களைப் பெருந்திரள் பரவலாக்கத்திற்கு (Viral Dissemination) உட்படுத்துகின்றன என்பதைப் பகுப்பாய்வு செய்தல்.**
3. **ஜென்-இசட் தலைமுறையினர் நாட்டுப்புறக் கலைகளைத் தங்களின் கலாச்சார அடையாள மீட்டெடுப்பாகவும் சுயவெளிப்பாட்டு வடிவமாகவும் உள்வாங்கிக் கொள்ளும் உளவியல்-சமூகப் போக்குகளை ஆராய்தல்.**
4. **டிஜிட்டல் குறுகிய வடிவக் காணொளிகளால் நாட்டுப்புறக் கலைகள் சனநாயகப்படுத்தப்படும் அதேவேளையில், விரைவுப் பார்வைகளுக்காக மரபுசார் கலைகளின் நுட்பமும் புனிதமும் நீர்த்துப்போகும் (Dilution) அபாயங்களை மதிப்பிடுதல்.**

ஆய்வுப் பின்னணி மற்றும் இலக்கிய மதிப்பாய்வு

பாரம்பரிய கலைகளும் அதன் முந்தைய நிலையும்

நாட்டுப்புறவியல் அறிஞர் ஆ. சிவசுப்பிரமணியன் (2012) மற்றும் பேராசிரியர் சு. சக்திவேல் (2015) ஆகியோரின் ஆய்வுகள், தமிழ்நாட்டு நாட்டுப்புறக் கலைகள் மண்ணோடும் மக்களின் உழைப்போடும் இயல்பாகப் பிணைந்திருந்த வரலாற்றை விளக்குகின்றன. தெருக்கூத்து என்பது வட தமிழகத்தின் தர்மபுரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் மகாபாரதக் கதைகளை மையமாகக் கொண்டு இரவு தொடங்கி விடியும் வரை நிகழ்த்தப்பட்ட ஒரு முழுமையான அரங்கக் கலையாகும். அதில் வேடமிடுதல், முக ஒப்பனை, தாளக் கட்டமைப்பு, உரையாடல் ஆகிய யாவும் நீண்ட நெடிய மரபுசார் பயிற்சியின் வழியாகவே சாத்தியமாயின. இவ்வாறே தென் தமிழகத்தின் கோவில் கொடை விழாக்களில் ஆடப்படும் கரகாட்டம் மற்றும் ஒயிலாட்டம் ஆகியவை தமக்கே உரிய தாள லயங்களுடனும் சாதியப் படிநிலைகளுக்கு எதிரான சமூகப் போராட்டங்களுடனும் வேரூன்றியிருந்தன (வானமாமலை, 2011).

இருப்பினும், 1980 மற்றும் 1990-களில் சினிமா இசையும் நவீன பாப் கலாச்சாரமும் மேலாதிக்கம் செலுத்தியபோது, இக்கலைகள் 'பிற்போக்கானவை' எனவும் 'கிராமப்புறப் பாமரர்களுக்கானவை' எனவும் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தால் ஓரங்கட்டப்பட்டன. கலை நிகழ்ச்சிகளுக்கான ஆதரவு குறையத் தொடங்கியதால், பாரம்பரியக் குடும்பங்களைச் சார்ந்த அடுத்த தலைமுறையினர் மாற்றுத் தொழில்களை நாடிச் சென்றனர். ஆவணப்படுத்தலின்மை, அரசு ஆதரவின் பற்றாக்குறை, மற்றும் வெகுஜன ஊடகங்களின் புறக்கணிப்பு ஆகியவற்றால் பல நுட்பமான நாட்டுப்புற இசைக் கருவிகளும் கூத்துக் கூறுகளும் அழியும் விளிம்பிற்குச் சென்றதாக முந்தைய கள ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (ஆறுமுகப் பெருமாள், 2018).

சமூக ஊடக நெறிமுறைகளும் கலைப் பரவலாக்கமும்

ஊடகக் கோட்பாட்டாளர் லெவ் மனோவிச் (Lev Manovich, 2020) முன்வைக்கும் 'கலாச்சார மென்பொருளியல்' (Cultural Software) கோட்பாட்டின்படி, தற்காலக் கலாச்சாரம் என்பது தகவல் தொடர்புத் தளங்களின் படிமுறைத் தீர்வுகளாலேயே (Algorithms) கட்டமைக்கப்படுகிறது. இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூப் போன்ற செயலிகளில் இயங்கும் பரிந்துரை நெறிமுறைகள் (Recommendation Algorithms), பயனரின் விருப்பத்தேர்வுகள், பார்க்கும் காலம் (Watch Time), மீள்பகிர்வு (Shares) மற்றும் பின்னூட்டங்களை (Comments) அடிப்படையாகக் கொண்டு உள்ளடக்கங்களைத் தேர்ந்தெடுக்கின்றன. இதில் செங்குத்துக் காட்சி வடிவக் காணொளிகள் (9:16 Aspect Ratio) பார்வையாளரின் முழு கவனத்தையும் ஈர்த்து, மூளையின் உடனடி டோபமைன் (Dopamine) சுரப்பைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன (Miller & Horst, 2021).

இத்தகைய அல்காரிதமிக் சூழலில், தெருக்கூத்தின் தீவிரமான முகபாவனைகள், கர்ண மோட்சத்தின் ஆவேசமான சுழற்சிகள், பறையாட்டத்தின் அதிவேகத் துடிப்புகள், மற்றும் கரகத்தின் சமநிலை நடனங்கள் ஆகியவை 15 முதல் 30 வினாடிகளுக்குள் பார்வையாளரை உறைந்துபோகச் செய்யும் 'காட்சி ஈர்ப்புத் திறனை' (Visual Hook) இயல்பாகவே கொண்டுள்ளன. பாரம்பரியக் கலைகளின் இந்த அதிவேக ஆற்றல், அல்காரிதம்களின் பரிந்துரைப் பட்டியல்களில் முதலிடம் பிடிப்பதற்கான

பிரதான காரணியாக அமைகிறது என்று தற்கால இணையவழி மானுடவியல் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

ஜென்-இசட் தலைமுறையும் கலாச்சார அடையாள மீட்டெடுப்பும்

டிஜிட்டல் பூர்வீகக் குடிகளாக (Digital Natives) வகைப்படுத்தப்படும் ஜென்-இசட் தலைமுறையினர், உலகமயமாக்கல் சூழலில் பிறந்து வளர்ந்தபோதிலும், தங்களுக்கான பிரத்யேக அடையாளத்தைத் தேடும் வேட்கை கொண்டவர்களாக உள்ளனர் (Twenge, 2023). மேற்கத்தியப் பாப் இசையும் பொதுமைப்படுத்தப்பட்ட நவீன கலாச்சாரமும் சலிப்பை ஏற்படுத்திய நிலையில், தங்களின் பூர்வீக வேர்களை நோக்கித் திரும்புவது (Roots Revival) சமகால இளைஞர்களின் உலகளாவிய போக்காக மாறியுள்ளது. தமிழ் இளைஞர்களிடையே இது 'நமது வேர்கள்', 'திராவிட இசை மரபு', 'மண்ணின் கலைகள்' என்ற வடிவில் டிஜிட்டல் மறுமலர்ச்சியாக வெளிப்படுகிறது.

ஜென்-இசட் பயனர்கள் நாட்டுப்புறக் கலைகளை வெறும் பார்வையாளர்களாக மட்டும் ரசிப்பதில்லை; மாறாக, அக்காணொளிகளைத் தங்களின் வாட்ஸ்அப் ஸ்டேட்டஸ் (WhatsApp Status), இன்ஸ்டாகிராம் ஸ்டோரி (Instagram Story) போன்றவற்றில் பதிவிட்டுத் தங்களின் 'பண்பாட்டுத் தனித்துவத்தை' சமூகத் தளத்தில் வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறு, பாரம்பரியக் கலைகள் தற்கால இளைஞர்களிடையே ஒரு 'கலாச்சார மூலதனமாக' (Cultural Capital) மறுவரையறை செய்யப்படுவதை நாம் காண முடிகிறது.

ஆய்வு முறைமை மற்றும் தரவுப் பகுப்பாய்வு

இவ்வாய்வு பண்புசார் உள்ளடக்கப் பகுப்பாய்வு (Qualitative Content Analysis) மற்றும் டிஜிட்டல் இனவரைவியல் (Digital Ethnography) முறையியலை அடிப்படையாகக் கொண்டது. 2024 ஜனவரி முதல் 2026 ஜூன் வரையிலான காலகட்டத்தில், இன்ஸ்டாகிராம் (Reels) மற்றும் யூடியூப் (Shorts) தளங்களில் 1 மில்லியனுக்கும் (10 இலட்சம்) அதிகமான பார்வைகளைப் பெற்ற (Viral) 150 தமிழ் நாட்டுப்புறக் கலைக் குறுகிய காணொளிகள் நோக்க மாதிரி (Purposive Sampling) முறையில் மாதிரித் தரவுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்தரவுகள் தெருக்கூத்து, கரகாட்டம், பறையாட்டம், ஒயிலாட்டம், மற்றும் நாட்டுப்புறப் பாடல்கள் என ஐந்து வகைமைகளாகப் பிரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.

கலை வடிவம் (Folk Art)	மாதிரி எண்ணிக்கை	சராசரிப் பார்வைகள்	முதன்மை உத்தி	பார்வையாளர் இடைவினை
தெருக்கூத்து (Therukoothu)	35 காணொளிகள்	2.8 மில்லியன்	முக ஒப்பனை & ஆவேசக் கண் அசைவுகள்	அதிக சேமிப்பு (Saves)
பறையாட்டம் (Parai Attam)	35 காணொளிகள்	4.2 மில்லியன்	அதிவேக தாளம் & குழு ஆட்டம்	அதிகப் பகிர்வு (Shares)
கரகாட்டம் (Karagattam)	30 காணொளிகள்	3.1 மில்லியன்	தலையில் கரகச் சமநிலைசாகசம்	அதிக விருப்பங்கள் (Likes)
நாட்டுப்புறப் பாட்டு (Folk Songs)	25 காணொளிகள்	3.6 மில்லியன்	ரீமிக்ஸ் இசை & மண்வாசனைக் குரல்	ரீல்ஸ் மறுஉருவாக்கம்
ஒயிலாட்டம் / காவடி (Oyil / Kavadi)	25 காணொளிகள்	1.9 மில்லியன்	வண்ணமயமான ஆடை & துணி வீச்சு	பண்பாட்டுப் பாராட்டு

தரவுப் பகுப்பாய்வின் முக்கியக் கூறுகள்

தரவுகளைக் கூர்ந்தாய்வு செய்ததில் குறுகிய காணொளிகளின் அபரிமிதமான பெருந்திரள் பரவலுக்குப் பின்வரும் மூன்று டிஜிட்டல் ஊடகக் கூறுகள் முதன்மை இயக்குவிசைகளாகச் செயல்படுவது உறுதி செய்யப்பட்டது:

1. பிரபல பின்னணி ஒலித்துண்டுகள் (Trending Audio Hooks): தெருக்கூத்தின் கம்பீரமான சிம்மக் குரல் வசனங்கள், உடுக்கை மற்றும் பம்பை ஒலிகள், மற்றும் பறையின் அசுர தாளக் கட்டமைப்பு ஆகியவை நவீன மின்னணு இசைக் கருவிகளுடன் (Bass Boosted / EDM Mixes) இணைக்கப்பட்டு 15 வினாடி ஒலித்துண்டுகளாக மாற்றப்படுகின்றன. இவ்வொலித்துண்டுகள் இன்ஸ்டாகிராமில் 'டிரெண்டிங் ஆடியோ'வாக மாறும்போது, பல்லாயிரக்கணக்கான ஜென்-இசட் பயனர்கள் அதே ஒலியைப் பயன்படுத்தித் தங்களின் சொந்தக் காணொளிகளை (Lip-sync / Dance challenges) உருவாக்கி, நாட்டுப்புறக் கலைகளின் பரவலைப் பன்மடங்கு பெருக்குகின்றனர்.
2. விரைவுத் தொகுப்பு உத்திகள் (Fast-Paced Editing & Visual Transitions): மரபுசார் நாடகங்களில் மணித்துளிகளாக நிகழும் மாற்றங்கள், நவீன டிஜிட்டல் எடிட்டிங் உத்திகளான 'ஜம்ப் கட்' (Jump Cut), 'ஸ்பீட் ராம்பிங்' (Speed Ramping) மற்றும் வண்ண மெருகூட்டல் (Color Grading) மூலம் மைக்ரோ விநாடிகளில் சுருக்கப்படுகின்றன. உதாரணமாக, ஒரு தெருக்கூத்துக் கலைஞர் சாதாரண நவீன உடையில் இருந்து கண்ணிமைக்கும் நேரத்தில் முழு அலங்காரத்துடன் கூடிய 'துரியோதனனாக' அல்லது 'கர்ணனாக' உருமாறும் (Transition Video) காணொளிகள் இளைஞர்களிடையே பல இலட்சக்கணக்கான பார்வைகளைப் பெறுகின்றன.
3. உள்ளடக்கக் குறிச்சொற்கள் மற்றும் சமூகத் திரட்சி (#TamilFolk / Hashtag Mobilization): #Therukoothu, #ParaiAttam, #TamilFolk, #GramiyaKalai போன்ற குறிச்சொற்கள் சமூக வலைத்தள அல்காரிதம்களால் ஒருங்கிணைக்கப்பட்டு, பண்பாட்டு உள்ளடக்கங்களை விரும்பும் இளைய தலைமுறையினரின் 'Explore' அல்லது 'For You' பக்கங்களுக்கு நேரடியாகத் தள்ளப்படுகின்றன. இது நாட்டுப்புறக் கலைகளை ஒரு உள்ளூர் நிகழ்விலிருந்து உலகளாவிய டிஜிட்டல் டிரெண்டாக (Global Digital Trend) உருமாற்றுகிறது.

ஆய்வின் கண்டுபிடிப்புகள் மற்றும் விவாதம்

நாட்டுப்புறக் கலைகளின் சனநாயகமயமாக்கலும் கிராமியக் கலைஞர்களுக்கான உலகளாவிய ஏற்பும்

இவ்வாய்வின் மிக முக்கியமான முதன்மைக் கண்டுபிடிப்பு, குறுகிய வடிவக் காணொளிகள் நாட்டுப்புறக் கலைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள 'பண்பாட்டுச் சனநாயகமயமாக்கல்' (Cultural Democratization) ஆகும். முந்தைய காலகட்டங்களில் கலை நிகழ்ச்சிகளுக்கான அங்கீகாரம் அரசு அமைப்புகள், சபாக்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் போன்ற உயரடுக்கினரின் (Elites) கைகளிலேயே தங்கியிருந்தது. ஆனால் தற்போதைய டிஜிட்டல் சூழல் அத்தகைய இடைத்தரகர்களை முழுமையாக அப்புறப்படுத்தியுள்ளது. குக்கிராமங்களில் உள்ள விளிம்புநிலைக் கூத்துக் கலைஞர்களும் பறை

இசைக் கலைஞர்களும் தங்கள் கையில் உள்ள எளிய ஸ்மார்ட்போன் வழியாகவே தங்களின் தனித்துவமான ஆற்றலை உலகறியச் செய்ய முடிகிறது.

இத்தளங்களில் வைரலாகும் காணொளிகள் மூலம் பல கிராமியக் கலைஞர்கள் தங்களின் நேரடி வாழ்வாதாரத்தில் மிகப்பெரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர். நகர்ப்புறக் கல்லூரிகள், பண்பாட்டு விழாக்கள், பெருநிறுவன நிகழ்வுகள் மற்றும் வெளிநாட்டுத் தமிழ்ச் சங்கங்களின் கலை விழாக்களில் பங்கேற்பதற்கான நேரடி அழைப்புகள் சமூக ஊடகங்களின் வழியாகவே இக்கலைஞர்களுக்குக் கிடைக்கின்றன. மேலும், முதிய தலைமுறை கலைஞர்களின் நுட்பமான அடவுகள் மற்றும் பாட்டு வரிகள் டிஜிட்டல் வடிவில் நிரந்தரமாக ஆவணப்படுத்தப்படும் நல்வாய்ப்பும் உருவாகியுள்ளது.

ஜென்-இசட் தலைமுறையினரிடம் ஏற்பட்டுள்ள அழகியல் மாற்றம்

நாட்டுப்புறக் கலைகளை 'பழையன' என்றும் 'நாகரிகமற்றவை' என்றும் புறந்தள்ளிய முந்தைய தலைமுறையின் மனோபாவத்திலிருந்து ஜென்-இசட் தலைமுறை முற்றிலும் மாறுபட்ட அழகியல் உணர்வை வெளிப்படுத்துகிறது. பாரம்பரிய ஆபரணங்கள், கூத்தின் வண்ணமயமான கிரீடங்கள், மற்றும் கிராமிய தாளக் கருவிகளைத் தங்களின் டிஜிட்டல் அவதாரங்களில் கம்பீரமாக அணிந்துகொள்வதை பெருமைக்குரிய அடையாளமாக இளைஞர்கள் கருதுகின்றனர். இது வெறும் பொழுதுபோக்கு நுகர்வு மட்டுமல்லாமல், மேற்கத்திய பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு எதிரான ஒரு விழிப்புணர்வுமிக்க 'அடையாள அரசியல்' (Identity Politics) செயல்பாடாகவும் உருவெடுத்துள்ளது.

உடனடிப் பார்வைகளுக்காக மரபுசார் தூய்மை நீர்த்துப்போகும் அபாயங்கள்

இருப்பினும், இந்த டிஜிட்டல் எழுச்சியின் எதிர்மறைப் பக்கங்களை இவ்வாய்வு ஆழமாக விவாதத்திற்கு உட்படுத்துகிறது. குறுகிய காணொளிகளின் வடிவம் இயல்பிலேயே 'விரைவான நுகர்வை' (Instant Gratification) அடிப்படையாகக் கொண்டது. இதன் காரணமாக, பல மணிநேரங்கள் நீளக்கூடிய கூத்தின் தத்துவார்த்த ஆழமும் உரையாடல் நுணுக்கங்களும் வெறும் 30 வினாடி 'கவர்ச்சித் துணுக்குகளாக' (Sensational Snippets) குறைக்கப்படுகின்றன. அல்காரிதம்களின் பார்வைகளைப் பெறுவதற்காகப் பல படைப்பாளிகள் பாரம்பரிய இசையோடு தேவையற்ற ஆபாசக் கலவைகளையும், அதிவேக மின்னணு பீட்களையும் இணைத்து மரபின் சாரத்தையே சிதைத்து விடுகின்றனர்.

கரகாட்டம் போன்ற வழிபாட்டு மற்றும் சடங்குசார் கலைகளில் ஆடப்படும் நுட்பமான நயங்கள் புறக்கணிக்கப்பட்டு, வெறும் கவர்ச்சி நடனமாகச் சித்தரிக்கப்படும் போக்கும் சமூக ஊடகங்களில் பெருகி வருகிறது. மரபுசார் நெறிமுறைகளை முறையாகப் பயிலாத சமூக ஊடக செல்வாக்காளர்கள் (Influencers), மேலோட்டமான பாசாங்குகளுடன் நாட்டுப்புறக் கலைகளைக் கையாளும்போது அசல் கிராமியக் கலைஞர்களின் வாழ்நாள் அர்ப்பணிப்பு அவமதிக்கப்படும் நிலையும் உருவாகிறது. இத்தகைய வணிகமயமாக்கல், பாரம்பரியக் கலையின் வரலாற்றுப் புனிதத்தையும் வாழ்வியல் தத்துவத்தையும் கேள்விக்குறியாக்குகின்றது.

முடிவுரை

டிஜிட்டல் யுகத்தின் குறுகிய வடிவக் காணொளிகள் தமிழ்நாட்டின் பாரம்பரிய

நாட்டுப்புறக் கலைகளுக்கு ஒரு வலிமையான மறுமலர்ச்சியையும் இரண்டாம் வாழ்வையும் (Digital Second Life) வழங்கியுள்ளன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பல்லாண்டுகளாகப் பார்வையாளர் பற்றாக்குறையால் நலிவடைந்து கிடந்த தெருக்கூத்தும், பறை இசையும், கரகாட்டமும் இன்று ஸ்மார்ட்போன் திரைகளின் வழியே ஜென்-இசட் தலைமுறையினரின் இதயத் துடிப்போடு மீளொலித்து வருகின்றன. உள்ளூர் கிராமிய அரங்குகளைக் கடந்து பன்னாட்டு அளவிலான டிஜிட்டல் வெளிகளில் தமிழ் நாட்டார் கலைகள் அடையாளம் காணப்படுவது ஒரு மகத்தான பண்பாட்டு மாற்றமாகும்.

அதேசமயம், டிஜிட்டல் சந்தையின் அல்காரிதம்களுக்கு பலியாகி பாரம்பரியக் கலைகளின் தொன்மப் புனிதமும் தத்துவார்த்த ஆன்மாவும் முற்றிலும் கரைந்துபோகாமல் பாதுகாப்பது சமகாலச் சமூகத்தின் இன்றியமையாத கடமையாகும். குறுகிய காணொளிகளை வெறும் 'பார்வை ஈர்ப்பு' சாதனமாக மட்டுமே பயன்படுத்தாமல், அவற்றின் வழியே இளைஞர்களை முழுமையான அரங்கக் கலைகளை நேரில் சென்று காணத் தூண்டும் 'வாயில் படியாக' (Gateway) மாற்றியமைக்க வேண்டும். அரசு நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் பாரம்பரியக் கலைஞர்களுக்கு டிஜிட்டல் எழுத்தறிவை (Digital Literacy) வழங்குவதோடு, தகுந்த பதிப்புரிமை மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அப்போதுதான் டிஜிட்டல் வணிகமயமாக்கலின் சவால்களை எதிர்கொண்டு, தமிழ் மண்ணின் தொன்மையான நாட்டுப்புறப் பாரம்பரியத்தை அதன் தூய்மை குன்றாமல் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்த முடியும்.

மேற்கோள் நூற்பட்டியல்

ஆறுமுகப் பெருமாள், சு. (2018). தமிழக நாட்டுப்புறக் கலைகள்: மரபும் சவால்களும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

சிவசுப்பிரமணியன், ஆ. (2012). மண்ணும் மனிதர்களும்: தமிழ் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள். மதுரை: பாவை வெளியீடு.

சக்திவேல், சு. (2015). நாட்டுப்புற இயல் ஆய்வு. சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

வானமாமலை, நா. (2011). தமிழர் பண்பாடும் நாட்டுப்புறப் பாடல்களும். சென்னை: மக்கள் வெளியீடு.

Boyd, D. (2014). *It's complicated: The social lives of networked teens.* New Haven: Yale University Press.

Jenkins, H. (2006). *Convergence culture: Where old and new media collide.* New York: New York University Press.

Manovich, L. (2020). *Cultural Analytics.* Cambridge, MA: The MIT Press.

Miller, D., & Horst, H. A. (2021). *The Digital and the Human: Anthropology in the Age of Algorithms.* London: Routledge.

Sundaram, K., & Rajendran, P. (2023). *Reviving Folk Traditions in the Age of TikTok: A South Asian Perspective.* Journal of Folklore and Digital Media Studies, 19(2), 145-162. https://doi.org/10.1080/folklore.2023.10982

Twenge, J. M. (2023). *Generations: The Real Differences Between Gen Z, Millennials, Gen X,*

Boomers, and Silents. **New York: Atria Books.**

தொடர்பு ஆசிரியர்: இ. அ. ஹரிஹரன் - ORCID**:** https://orcid.org/0009-0005-5134-6946

இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம், தமிழ்நாடு, இந்தியா
மின்னஞ்சல்: eahari@gmail.com

ஆசிரியர்: முனைவர் ரா. சுப்பிரமணி - ORCID: https://orcid.org/0000-0003-2763-3396

முனைவர் ரா. சுப்பிரமணி அவர்கள் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறையின் பேராசிரியரும் துறைத் தலைவருமாவார். ஊடகக் கல்வித் துறையில் 22ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட அவர், இதழியல் மற்றும் தகவல் தொடர்பியல் ஆய்வுத்துறையின் முன்னணி கல்வியாளராகவும் சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்கிறார். ஆய்வு மற்றும் அறிவுப்பரவலுக்கான அவரது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், 90 நடுவர் மதிப்பீடு செய்யப்பட்டஆராய்ச்சிக் கட்டுரைகள், 10 நூல் அத்தியாயங்கள் மற்றும் தேசிய, பன்னாட்டு கல்வி அரங்குகளில் 65 ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். அவரது ஆய்வுப் பங்களிப்புகள் இதழியல் மற்றும் மக்கள்தொடர்பியல் துறையின் அறிவு வளர்ச்சிக்கும் கல்விசார் முன்னேற்றத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளன. மேலும், 20-க்கும் மேற்பட்ட முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாக இருந்துபல திறமையான ஆராய்ச்சியாளர்களை உருவாக்கியுள்ளார். கல்விசார் நேர்மை, ஆய்வுத் தரம் மற்றும்புதிய அறிவு உருவாக்கம் ஆகியவற்றில் அவர் ஏற்படுத்திய நிலையான தாக்கம், ஊடக ஆய்வின்எல்லைகளை விரிவுபடுத்துவதோடு, நாடு முழுவதும் உள்ள இளம் தகவல் தொடர்பியல் அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறது.

© 2026 Hariharan E A, Dr Subramani R. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 452–458
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

புறநானூற்றில் கட்டுமானத் தொழில்நுட்பம்

Construction Technology in Purananuru

அருள்செல்வம் ச.[1,*], முனைவர் வீரப்பன் ஏ[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, பு. முட்லூர், சிதம்பரம்., *India*

[2] பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, பு. முட்லூர், சிதம்பரம்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: அருள்செல்வம் ச. — arulselvam1215c@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
29 September 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00008	

ஆய்வுச்சுருக்கம்

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உணவு, உடைக்கு அடுத்த நிலையில் இருப்பிடத் தேவை அமைகிறது. இயற்கையாகக் கிடைத்த குகைகள், மரப்பொந்துகள் போன்றவற்றைப் பயன்படுத்தி வாழ்ந்த நிலையிலிருந்து, திட்டமிட்டு வீடுகள், மாடங்கள், மதில்கள், அரண்கள், அகழிகள் போன்றவற்றை உருவாக்கிய நிலைக்கு மனிதன் முன்னேறியபோது கட்டுமானத் தொழில்நுட்பம் உருவானது. பழந்தமிழரும் தமது வாழிடத் தேவைக்கும், பாதுகாப்பிற்கும் ஏற்றவாறு பல்வேறு கட்டுமான நுட்பங்களைக் கையாண்டுள்ளனர். அக்காலத்தில் காணப்பட்ட சிற்றில்கள், தூண்கள், உயரமான மாடங்கள், நெடுஞ்சுவர்கள், மண் கலவை, அரண்கள், அகழிகள், மதில்கள், போர்க்கருவிகள் பொருத்தப்பட்ட கோட்டைகள் போன்ற குறிப்புகள் பழந்தமிழரின் கட்டுமான அறிவை வெளிப்படுத்துகின்றன. இக்கட்டுரை பழந்தமிழரின் குடியிருப்பு அமைப்பு, தூண்கள் மற்றும் இல்லக் கட்டுமானம், நெடுஞ்சுவர்கள், உயரமான மாடங்கள், மண் கலவை மற்றும் கட்டுமானப் பொருட்கள், அரண் மற்றும் கோட்டை கட்டுமானம், படைக்கருவிகளுடன் கூடிய அரண்கள், நீர்நிலைக் கட்டுமானப் பொறியியல் ஆகியவற்றை புறநானூற்றின் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்வதாக அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: Construction technology; Ancient Tamils; Residence; Pillar; Multi-storied structure (Māḍam); Tall wall; Mud mixture; Defense (Araṇ); Fortress; Rampart/Wall (Madil); Moat; Weaponry; Water-body construction.

Abstract

Among the basic needs of human beings, shelter comes right after food and clothing. Construction technology emerged when humans progressed from living in natural caves and hollows of trees to systematically planning and creating houses, multi-storied structures, walls, fortifications, and moats. The ancient Tamils also employed various construction techniques suited to their living needs and security. References from that era regarding small huts, pillars, elevated multi-storied structures, tall perimeter walls, mud mortar mixtures, defenses, moats,

ramparts, and fortresses equipped with weaponry reveal the architectural and engineering knowledge of the ancient Tamils. Based on textual evidence from Purananuru, this paper analyzes ancient Tamil residential layouts, pillar and domestic architecture, tall walls, elevated multi-storied structures, mud mixtures and building materials, defense and fortress construction, weapon-equipped fortifications, and water-body construction engineering.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ச., அ., & ஏ, மு. வீ. (2026). புறநானூற்றில் கட்டுமானத் தொழில்நுட்பம். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 451–457. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8541

முன்னுரை

பழந்தமிழரின் தொழில்நுட்ப அறிவை அறிந்துகொள்வதற்கு சங்க இலக்கியங்கள் முக்கியமான ஆதாரங்களாக விளங்குகின்றன. மனிதன் இயற்கைச் சூழலுடன் இணைந்து வாழ்ந்ததோடு, தனது தேவைக்கேற்ப இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி குடியிருப்புகளையும் பாதுகாப்பு அமைப்புகளையும் உருவாக்கியுள்ளான். பழந்தமிழகத்தில் எளிய குடிசைகள் முதல் உயரமான மாடங்களைக் கொண்ட இல்லங்கள் வரையிலும், ஆழமான அகழி மற்றும் உயர்ந்த மதில்களைக் கொண்ட அரண்கள் வரையிலும் பல்வேறு கட்டுமான அமைப்புகள் இருந்துள்ளன. இவை வெறும் கட்டிடங்களாக மட்டுமின்றி, அக்கால மக்களின் திட்டமிடுதல், பொருட்களைத் தேர்ந்தெடுத்தல், கட்டுமான முறைகளை அறிதல் ஆகிய தொழில்நுட்ப அறிவையும் வெளிப்படுத்துகின்றன.

பழந்தமிழரின் குடியிருப்பு அமைப்பு

பழந்தமிழரின் குடியிருப்புகளைத் திணை சார்ந்த குடியிருப்புகள், சிற்றூர் குடியிருப்புகள், பேரூர் அல்லது நகரக் குடியிருப்புகள் எனப் பொதுவாகப் பகுத்துக் காணப்படுகிறது. திணை சார்ந்த பகுதிகளில் அந்நிலப்பகுதியில் கிடைத்த பொருட்களைக் கொண்டு எளிய இருப்பிடங்கள் அமைக்கப்பட்டன. கரும்புத் தோகை, வைக்கோல், தினைத்தாள் போன்றவை கூரை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன.

சிற்றூர்களிலும் நகரங்களிலும் பல்வகை கட்டுமானங்கள் காணப்பட்டன. இல்லங்கள், மாடங்கள், நெடுஞ்சுவர்கள், அரண்கள், மதில்கள் போன்றவை அக்கால கட்டுமான வளர்ச்சியின் பல்வேறு நிலைகளைக் காட்டுகின்றன. இதனால் பழந்தமிழரின் குடியிருப்பு அமைப்பு அவர்களின் வாழ்வியல் தேவைக்கும் நில அமைப்பிற்கும் ஏற்ப மாறுபட்டிருந்ததை அறியலாம்.

தூண்கள் மற்றும் இல்லக் கட்டுமானம்

தூண்கள் கட்டிடத்தைத் தாங்கி நிற்கும் செங்குத்தான அமைப்புகளாகும். கூரை மற்றும் கட்டிடத்தின் சுவர்களின் மீது மட்டும் முழுச் சுமையையும் செலுத்தாமல், அச்சுமைகளைத் தூண்கள் அடித்தளத்திற்குக் கொண்டு செல்கின்றன. இதனால் கட்டிடம் உறுதியாகவும் நிலையாகவும் இருக்கும். மேலும், மண்டபம், இல்லம், அரண்மனை போன்ற கட்டிடங்களின் அழகிய அமைப்பிற்கும் தூண்கள் பயன்படுகின்றன. சிறிய இல்லங்களுக்குக்கூட உறுதியை அளிக்கும் வகையில் தூண்கள் பயன்படுத்தப்பட்டன. இதனை,

“சிற்றில் நற்றூண் பற்றி”
(புறம், 86:1)

என்ற அடி காட்டுகிறது.

இங்கு “நற்றூண்” என்பது சிறப்பாக அமைக்கப்பட்ட உறுதியான தூணைக் குறிக்கிறது. இதனால் இல்லக் கட்டுமானத்தில் கட்டிடத்தின் நிலைத்தன்மைக்கு ஏற்ற வகையில் தூண்கள் அமைக்கப்பட்டிருந்ததை அறிய முடிகிறது.

நெடுஞ்சுவர்கள்

நெடுஞ்சுவர்கள் என்பது நீளமாகவும் உயரமாகவும் அமைக்கப்பட்ட வலிமையான சுவர்களாகும். இவை கட்டிடங்களைச் சுற்றிப் பாதுகாப்பை வழங்குவதோடு, அரண்கள் மற்றும் பெரிய குடியிருப்புகளின் பாதுகாப்பிற்கும் பயன்பட்டன. இதனை,

நெடுஞ்சுவர் நல்லில் புலம்பக் கடைகழிந்து”

(புறம், 373:11)

என்ற பாடல் பழந்தமிழர் கட்டிடங்களில் நீண்ட சுவர்கள் இருந்ததை குறிப்பிடுகிறது. மேலும், பகைவர்கள் எளிதில் கடக்க முடியாதபடி கொடிய முதலைகளும் சுறாக்களும் நிறைந்த ஆழமான அகழியையும், விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்த நீண்ட மதிலையும் கொண்ட வலிமையான கோட்டைப் பாதுகாப்பு அமைப்பை,

“குரூஉக்கெடிற்ற குண்டகழி

வானுட்கும் வடிநீண்மதில்”

(புறம், 18:10–11)

என புறநானூறு சுட்டுகிறது. இதன் மூலம் கட்டுமானத்தில் சுவர் அமைப்பு, உயரம், உறுதிப்பாடு ஆகியவற்றில் பழந்தமிழர் கவனம் செலுத்தியது மட்டுமல்லாமல், நெடுஞ்சுவர்களைக் கட்டும் நுட்பமும் வளர்ந்திருந்ததை அறியமுடிகிறது.

உயரமான மாடங்கள்

உயரமான மாடமென்பது பல அடுக்குகள் அல்லது உயரமான அமைப்புகளைக் கொண்ட கட்டிடங்களைக் குறிக்கும். இத்தகைய மாடங்கள் வீடுகள், அரண்மனைகள் மற்றும் நகரக் கட்டுமானத்தில் உயரமான மாடங்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன. மாடங்கள் ஒன்றோடொன்று நெருக்கமாகவும் உயரமாகவும் அமைந்திருந்த செய்தியை,

“மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்ப”
(புறம், 390:7)

என்ற பாடலடி உணர்த்துகிறது.

அதேபோல்,

“கதிர்விடு மணியிற் கண்பொரு மாடம்”
(புறம், 53:2)

என்ற அடி ஒளிவீசும் மாடங்களைக் குறிப்பிடுகிறது. இதன் மூலம் கட்டுமானத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களைச் செம்மைப்படுத்திப் பயன்படுத்தியதும், கட்டிடத்தின் அழகுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவமும் புலப்படுகிறது.

மண் கலவை மற்றும் கட்டுமானப் பொருட்கள்

பழந்தமிழர்கள் கட்டிடங்களை அமைக்கும்போது மண், கல், மரம், இலை, புல் போன்ற இயற்கைப் பொருட்களை தேவைக்கேற்ப பயன்படுத்தினர். மண்ணைத்

தேவையான பொருட்களுடன் கலந்து, கட்டிடச் சுவர்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்கினர். கட்டுமானத்தின் உறுதிப்பாட்டிற்காக மண்ணைத் தயாரித்து பயன்படுத்திய நுட்பம் பழந்தமிழரிடம் இருந்ததை இலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன. குறிப்பாக புறநானூற்றில்,

“அரைம ணிஞ்சி நாட்கொடி நுடங்கும்”
(புறம், 341:5)

என்ற அடி அரண் கட்டுமானத்தில் மண் கலவை பயன்படுத்தப்பட்ட செய்தியை உணர்த்துகிறது.

மேலும், “அரைமண் இஞ்சி” என்ற பயன்பாடு மண்ணை அரைத்து அல்லது பதப்படுத்தி கட்டுமானத்தில் பயன்படுத்திய தொழில்நுட்பத்தைச் சுட்டுவதாகும்.

மேலும், கற்களைப் பயன்படுத்தி வலிமையான சுவர்கள், கிணறுகள் மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்புகளை உருவாக்கினர். கிணற்றின் சுற்றுச்சுவர் போன்ற கட்டுமானங்களிலும் கல் பயன்படுத்தப்பட்டதை,

“கல்லுறுத் தியற்றிய வல்லுவர்க் கூவல்”
(புறம், 331:1)

என்ற அடி கல்லைப் பயன்படுத்தி வலிமையான கட்டுமானம் செய்யப்பட்டதைத் தெரிவிக்கிறது.

அரண் மற்றும் கோட்டை கட்டுமானம்

பாதுகாப்புத் தேவையின் அடிப்படையில் பழந்தமிழர் அரண்களையும் கோட்டைகளையும் திட்டமிட்டு அமைத்தனர். ஆழமான அகழிகள், உயர்ந்த மதில்கள், வலிமையான வாயில்கள் ஆகியவை அரண்களின் முக்கிய உறுப்புகளாக இருந்தன. இதனை,

“நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்றோய் வன்ன புரிசை”
(புறம், 21:2–3)

என்ற அடிகள் நிலத்தின் ஆழத்தையும் கடந்த அகழியையும், வானத்தைத் தொடும் அளவுக்கு உயர்ந்த மதிலையும் குறிப்பிடுகின்றன.

மேலும்,

“பருந்துயிர்த் திடைமதிற் சேக்கும் புரிசைப்
படைமயங் காரிடை நெடுந லூரே”
(புறம், 343:15–17)

என்ற பாடலடிகள் உயர்ந்த மதில்களையும் பாதுகாப்பு அமைப்புகளையும் கொண்ட அரணைக் காட்டுகின்றன.

இதனால் அரண் கட்டுமானத்தில் உயரம், ஆழம், தடுப்பு, பாதுகாப்பு போன்ற பொறியியல் கூறுகள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்ததை அறியலாம்.

படைக்கருவிகளுடன் கூடிய அரண்கள்

சங்க காலத் தமிழர்கள் தங்கள் நகரங்கள், அரண்மனைகள் மற்றும் முக்கியமான குடியிருப்புகளைப் பாதுகாப்பதற்காக வலிமையான அரண்களை அமைத்திருந்தனர். இவ்வரண்களில் பாதுகாப்பிற்குத் தேவையான பல்வேறு படைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. அரண்களின் மதில்கள் உயரமாகவும்

வலிமையாகவும் அமைக்கப்பட்டதுடன், எதிரிகள் அணுகுவதைத் தடுக்கும் வகையில் அகழிகள், வாயில்கள் மற்றும் காவல் அமைப்புகளும் இருந்தன.

அரண்களின் மதில்களில் இருந்து எதிரிகளைத் தடுக்க வில், அம்பு போன்ற எறிகருவிகள் பயன்படுத்தப்பட்டன. அரண் வாயில்கள் வலிமையான கதவுகளைக் கொண்டிருந்தன. காவலர்கள் மதில்களின் மேற்பகுதியில் இருந்து அரணைச் சுற்றியுள்ள பகுதிகளைக் கண்காணித்தனர். இதனால் அரண் என்பது வெறும் கட்டுமானமாக இல்லாமல், படைக்கருவிகள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைந்த ஒரு பாதுகாப்புத் தொழில்நுட்பமாக விளங்கியது. பழந்தமிழரின் பாதுகாப்புக் கட்டுமானத்தில் வெறும் மதிலும் அகழியும் மட்டுமன்றி, போர்க்கருவிகளும் இடம்பெற்றிருந்ததை புறநானூற்றில்,

“அம்புதுஞ்சும் கடியரண்”
(புறம், 20:16)

என்று இப்பாடல் வரி அம்புகள் பொருத்தப்பட்ட பாதுகாப்பு அரணைக் குறிப்பிடுகிறது. இதனை தொல்காப்பியர்,

“முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்

அனைநெறி மரபிற்று ஆகும்” (தொல், புறத்திணை:66)

என பகை வேந்தனின் குலத்துக்கெல்லாம் முதலாய் விளங்கும், அரண்களோடு முழுமை பெற்றுள்ள காவலுடைய கோட்டை என அனைத்து பாதுகாப்பு அமைப்புகளையும் உள்ளடக்கிய அரணைக் குறிப்பிடுகிறார். பதிற்றுப்பத்திலும் மதில்வாயில், அகழி, மதில், காவல் அமைப்பு மற்றும் போர்க்கருவிகள் பற்றிய செய்திகள் காணப்படுவதை,

“வில்லிசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்
கடிமிளைக் குண்டு கிடங்கின்
நெடுமதில் நிரைப் பதணத்து”
(பதிற்றுப், 22:21–25)

என்ற பாடலடிகள் மதில்களில் பொருத்தப்பட்ட போர்க்கருவிகளையும், ஆழமான கிடங்குகளையும், நெடிய மதில்களையும் கொண்ட கோட்டை அமைப்பை வெளிப்படுத்துகின்றன.

மேலும்,

“எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்
கோள்வன் முதலைய குண்டுகண் அகழி
வானுற ஓங்கிய வளைந்துசெய் புரிசை”
(பதிற்றுப், 53:6–9)

என்ற அடிகள் எந்திரப் பொறிகள், அம்புகள், ஆழமான அகழி, வளைந்து அமைந்த உயர்ந்த மதில் ஆகியவற்றைக் கொண்ட அரண் அமைப்பைச் சுட்டுகின்றன.

இதனால் பழந்தமிழரின் பாதுகாப்புக் கட்டுமானம் கட்டிடக்கலை மட்டுமின்றி போர்ப்பொறியியல் அறிவுடனும் இணைந்திருந்ததை அறிய முடிகிறது.

நீர்நிலைக் கட்டுமானம்

பழந்தமிழர்கள் நீரைச் சேமிக்கவும், முறையாகப் பயன்படுத்தவும் பல்வேறு நீர்நிலைக் கட்டுமானங்களை உருவாக்கினர். ஏரி, குளம், கண்மாய், கிணறு,

கால்வாய், அணை போன்றவை நீர்நிலைக் கட்டுமானங்களாக அமைந்தன. மழைக்காலத்தில் கிடைக்கும் நீரைத் தேக்கி வைத்து, வறட்சிக் காலத்தில் வேளாண்மை மற்றும் குடிநீர்த் தேவைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் இக்கட்டுமானங்களை வடிவமைத்தனர்.

நீரைத் தேவையான இடங்களுக்குக் கொண்டு செல்ல கால்வாய்கள் மற்றும் நீர்வழிகள் அமைக்கப்பட்டன. நீரின் அளவைக் கட்டுப்படுத்தவும், அதிகப்படியான நீரை வெளியேற்றவும் மதகுகள் போன்ற அமைப்புகள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் நீரை வீணாக்காமல் நிலையான முறையில் பாசனத்திற்குப் பயன்படுத்தும் தொழில்நுட்ப அறிவை பழந்தமிழர்கள் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. இதனை,

“அறையும் பொறையு மணந்த தலைய
எண்ணாட் டிங்க ளனைய கொடுங்கரை”
(புறம், 118:1–2)

என்ற பாடலடிகள் கற்கள் மற்றும் பாறைகளை இணைத்து வளைந்த கரையுடன் அமைக்கப்பட்ட நீர்நிலையைச் சுட்டுகின்றன.

அணைகள், குளங்களில் தேக்கப்பட்ட நீர் வேளாண் நிலங்களுக்குச் செல்லும் வகையில் நீர்வாயில்கள் அமைக்கப்பட்டன என்பதை,

“ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனல் புதவின் மிழலையொடு கழனி”
(புறம், 24:18–19)

என்ற அடிகள் நீர்வாயில்கள் வழியாகக் கழனிகளுக்குத் தண்ணீர் சென்றதை உணர்த்துகின்றன.

மேலும்,

“இழுமென வொலிக்கும் புனலம் புதவிற்”
(புறம், 176:5)

என்ற அடி நீர் வெளியேறும் வாயிலின் செயல்பாட்டை காட்சிப்படுத்துகிறது. இதனால் பழந்தமிழர் கட்டுமான அறிவை நீர்மேலாண்மையிலும் பயன்படுத்தியிருந்தனர் என்பது தெளிவாகிறது.

முடிவுரை

பழந்தமிழரின் கட்டுமானத் தொழில்நுட்பம் எளிய குடியிருப்புகளிலிருந்து உயரமான மாடங்கள், நெடுஞ்சுவர்கள், ஆழமான அகழிகள், வானளாவிய மதில்கள், வலிமையான அரண்கள் வரை பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்திருந்தது என்பதை புறநானூறு எடுத்துக்காட்டுகின்றது.

சிற்றில்களுக்குத் தூண்களை அமைத்தல், நீண்ட சுவர்களைக் கட்டுதல், மண்ணைக் கட்டுமானக் கலவையாகப் பயன்படுத்துதல், கற்களைப் பதித்து கட்டுதல், உயரமான மதில்களையும் ஆழமான அகழிகளையும் அமைத்தல் போன்றவை கட்டுமானத் தொழில்நுட்ப அறிவின் பல்வேறு நிலைகளைக் காட்டுகின்றன. மேலும், அரண்களில் அம்பு செலுத்தும் பொறிகள், எந்திர அமைப்புகள் போன்றவற்றைப் பொருத்தியமை பாதுகாப்புக் கட்டுமானம் பொறியியல் நுட்பத்துடன் இணைந்திருந்ததை வெளிப்படுத்துகிறது.

நீர்நிலைக் கட்டுமானங்களிலும் கற்கள், பாறைகள், வளைந்த கரைகள், நீர்வாயில்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி நீரைச் சேமித்து வேளாண்மைக்குப்

பயன்படுத்தியுள்ளனர். எனவே, புறநானூற்றில் பதிவாகியுள்ள கட்டுமானச் செய்திகள் பழந்தமிழரின் கட்டிடக்கலை அறிவை மட்டுமல்லாது, பல்வேறு துறைகளிலும் அவர்கள் பெற்றிருந்த தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்துகின்றன.

சான்றெண் விளக்கம்

1. புறம் - 86:1
2. மேலது - 372:1
3. மேலது - 18:10-11
4. மேலது - 390:7
5. மேலது - 53:2
6. மேலது - 341:5
7. மேலது - 331:1
8. மேலது - 21:2-3
9. மேலது - 343:15-17
10. மேலது - 20:16
11. தொல், புறத்திணை: 66
12. பதிற்று - 22:21-25
13. பதிற்று - 53:6-9
14. புறம் - 118:1-2
15. மேலது - 24:18-19
16. மேலது - 176:5

துணைநூற்பட்டியல்

1. சங்க காலச் சமுதாய அமைப்பு - முனைவர் ஏ. வீரப்பன்.
2. சங்க காலத் தொழில்நுட்பம் - த. சாமிநாதன் அன்னம் பதிப்பகம்,2013.
3. சங்க இலக்கியம் மூலமும் உரையும் - கதிர். மகாதேவன், வர்த்தமானன் பதிப்பகம்.
4. பழந்தமிழர் வாழ்வியல் - முனைவர் ஏ. வீரப்பன்.
5. பழந்தமிழர் தொழில்நுட்பம் - ஆ. மணவழகன், அய்யனார் பதிப்பகம், 2010.
6. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் - கே. கே. பிள்ளை, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், 2022.
7. தமிழரின் பல்துறை ஆற்றல் வளம் - அ. சிவபெருமான், அன்னம் பதிப்பகம்.

© 2026 அருள்செல்வம் ச., முனைவர் வீரப்பன் ஏ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 459–460
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

Kumarikkal

உலகிலேயே உயரமான *menhir* களில் ஒன்று

Gowri sankar*

Perundurai, India

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: Gowri sankar — aravu34@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
29 September 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00009

Abstract / ஆய்வுச்சுருக்கம்

உலகிலேயே உயரமான menhir களில் ஒன்று இது.

Keywords / திறவுச்சொற்கள்: Kumarikkal; tamilnadu; menhir; gowri sankar; perundurai

How to cite / மேற்கோள் காட்டும் முறை: sankar, G. (2026). Kumarikkal. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 458–459. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8543

Details for registration number : PMOPG/E/2021/0528069

Name Of Complainant

Date of Receipt

Received By Ministry/Department

Gowri sankar

27/09/2021

Prime Minister's Office

Grievance Description

Honourable Prime minister ji,

I had identified a prehistoric menhir, dating between 1500 to 500 BC, on a land in kumarikkal palayam near kunnathur in tiruppur district. i know that the menhir may be tallest menhir in the world.

The menhir is slightly damaged. But. At present it's has 30 feet tall.

It was searching as part of my documentation on archeological objects. The menhir, at kumarikkal palayam , were offered worship. It is a single prehistoric standing stone commonly found near the ancient buriel lands. It was 30-foot tall and 7-foot-wide.

The local people don’t know the significance of menhirs and they think they are just remains of a huge rock. Archaeologists differ when it comes to the role of menhir in the life of prehistoric human beings.

The non-worshiping menhirs found in Tamil Nadu are under threat due to urbanisation. Those under

worship are safe at least. At this place, people worship the menhir as ‘kanni samy’ (Goddess). If immediate care is not taken, some people may break them into pieces soon. Already top of the menhir has been reduced to pieces. I wants to preserve at least the remains of it. “The pieces of it should be spreaded and if possible be documented at a museum with the photographs taken before its destruction. It will create awareness about this prehistoric piece of art.

Yours faithfully M.Gowri sankar

Current Status

Date of Action

Case closed

22/10/2021

Remarks

Suggestions Noted.

Rating

Rating Remarks

2

Menhirs up to 22 feet tall are found in only two countries in the world, africa and Italy. The tall menhir of the Stone Age is nowhere to be found.

Please take any immediate action to measure and document its current height.

Officer Concerns To

Officer Name

Organisation name

Contact Address

Email Address

Contact Number

V S Badiger (Director)

Archeaological Survey of India

Dharohar Bhawan24 Tilak Marg

vsbadiger.asi@gov.in

01123004570

© 2026 Gowri sankar. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 461–467
tamilmanam.in

REVIEW ARTICLE · OPEN ACCESS

சங்க இலக்கியங்களில் பெண்ணுடலும் பண்பாட்டு அரசியலும் -ஓர் ஆய்வு

சங்க இலக்கியங்களில் பெண்ணுடலும் பண்பாட்டு அரசியலும் -ஓர் ஆய்வு

T.SANTHOSHSELVAN T.SANTHOSH SELVAN*

Assitant professor,NMSSVN COLLEGE, Tamil dept, Nagamalai , madurai -19, India

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: T.SANTHOSHSELVAN T.SANTHOSH SELVAN — santhoshselvan46@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00010	

ஆய்வுச்சுருக்கம்

உடலின் தோற்ற அழகியலில் பெண்ணின் தோற்றப்பொலிவே பிரதானமாகச் சங்க இலக்கியங்களில் கொண்டாடப் பெற்றுள்ளது.. சான்றாக, “எழில் மாமேனி” என்றாற் போல் பெண்ணின் ஒட்டுமொத்த உடல் அழகும் சிறப்பிக்கப்பட்டுள்து . பெண்ணின் கேசம் முதல் பாதம் வரையிலான உடல் உறுப்புகள் யாவும் தனித்தனியே கலை நயத்துடனும் நுட்பத்துடனும் வருணிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நெற்றி, கண், புருவம், வாய், காது, கூந்தல் ஆகிய உடலின் மேற்பகுதிகளும், தோள், கை, இடை, அல்குல், தொடை, கால், சீறடி ஆகிய கீழ்ப்பகுதிகளும் ஓவியப் பாங்கில் அழகுற தீட்டப்பட்டுள்ளன. வருணனை இல்லாத இலக்கியம் சுவையற்ற உணவினைப் போன்றதாகும் என்பது அறிஞர்களின் கருத்து. அவ்வகையில் பேராசிரியர் தி.சு. நடராசன் “ தமிழ் அழகியல்” என்னும் நூலில் குறிப்பிடுவது போல், “ சங்க இலக்கியத்தில் உடல் அழகியல் பின்னாலயே சிற்பக் கலைக்கு முன்மாதிரியாக அமையலாம்” எனச் சுட்டியுள்ளது இங்கு நினைவுக்கூறத்தக்கது.

“பண்பெண படுவது பாடறிந்து ஒழுகல்” என்று கலித்தொகையும், ‘’பண்ணும் பண்பும் பாடறிந்து ஒழுகல்’ என நற்றிணையும் பண்டைய தமிழரின் பண்பட்ட வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குகின்றன. பண்பாடு என்பது மனித செயற்பாடுகளின் கோலங்கள் மற்றும் அத்தகைய செயற்பாடுகளுக்கு சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புகளையும் கொண்டுள்ளது. பேரா. ஆ. சிவசுப்ரமணியன் அவர்கள் ‘அடித்தள மக்கள் வரலாறு’ என்றும் தம் நூலில், “ ஒட்டுமொத்த சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும் ஊடுருவி நிற்கும் பண்பாடானது அதிகாரத்தின் வெளிப்பாடாகவும் , அடிமைத்தினத்தின் வெளிப்பாடாகவும் அமையும்” என்று கூறுகிறார். இவ்வகையில், பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியத்தில் பெண்ணின் உடல் பண்பாட்டு அரசியல்களாகவும், சமூகத்தில் பெண்ணுடல் எவ்வாறெல்லாம் குறியிட்டு

அடையாளங்களாகவும் நிற்கின்றன என்பதை பற்றி ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்:
அல்குல், கண் , புருவம், நெற்றி, நுதல்

Keywords / திறவுச்சொற்கள்: Alkul; forehead; hair; head; eye; body

Abstract

In the aesthetics of the human body, the appearance of the woman has been celebrated mainly in Sangha literature. Every part of the woman's body, from her head to her feet, has been individually painted with artistic grace and sophistication. Especially the upper parts of the body such as forehead, eye, eyebrow, mouth, ear, hair and lower parts such as shoulder, arm, middle, ankle, thigh, leg and upper body are decorated in painting style. Scholars opine that literature without commentary is like tasteless food. In this way, Professor T.S. As Natarasan mentions in the book "Tamil Aesthetics", it is worth recalling here that "physical aesthetics in Sangha literature may be the model for sculpture"

"Panpena Paduduwa Patarindu Ogulal" is a time mirror that captures the cultured life of the ancient Tamils. Culture consists of the spheres of human activity and the symbolic systems that give such activities particularity and significance. Bara. B. Sivasubramanian says in his book that 'the history of the grassroots', "the culture that permeates the various levels of the entire society can be an expression of power and an expression of slavery." In this way, the purpose of this research is to study how women's bodies stand as cultural politics in Palandamili literature, Sangha literature, and how women's bodies stand as symbols in society.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: T.SANTHOSH SELVAN, T. (2026). சங்க இலக்கியங்களில் பெண்ணுடலும் பண்பாட்டு அரசியலும் -ஓர் ஆய்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 460–466. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8545

முன்னுரை:

சங்க இலக்கியங்கள் தமிழரின் தொன்மையான வாழ்வியல், பண்பாடு, சமூக அமைப்பு, காதல், வீரம், அறம் ஆகியவற்றைப் பதிவு செய்துள்ள செவ்வியல் இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவ்விலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல், சமூகத்தில் ஆண், பெண் ஆகியோரின் நிலைப்பாடுகளையும் அவர்களின் உடல் சார்ந்த பண்பாட்டு அடையாளங்களையும் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, பெண்களின் உடல் என்பது இயற்கையின் ஓர் அங்கமாக மட்டுமன்றி, சமூகத்தின் எதிர்பார்ப்புகள், மரபுகள், ஒழுக்க நெறிகள், அதிகார உறவுகள் ஆகியவை செயல்படும் பண்பாட்டுக் களமாகவும் விளங்குகின்றன.

சங்க இலக்கியங்களில் பெண்களின் கூந்தல், நுதல், கண்கள், தோள்கள், முலைகள், இடை, நடை போன்ற உடல் உறுப்புகள் பல்வேறு உவமைகள் மற்றும் உருவகங்கள் வழியாகப் பாடப்படுகின்றன. இவ்வருணனைகள் பெண்ணின் அழகை வெளிப்படுத்துவதோடு, அக்காலச் சமூகத்தின் அழகியல் பார்வை, காதல் உணர்வு, பாலின வேறுபாடு, கற்பு சார்ந்த கருத்தாக்கம் ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றன. அக இலக்கியங்களில் தலைவியின் உடல் காதல் உணர்வுகளின் வெளிப்பாட்டுக் கருவியாக அமைகிறது. தலைவியின் பசலை, மெலிவு, கண்ணீர், நாணம் போன்ற உடல்சார் வெளிப்பாடுகள் அவளது உள்ளத்து உணர்வுகளையும் சமூகச் சூழலையும் வெளிப்படுத்துகின்றன.

அதேவேளையில், பெண்ணுடல் குறித்த பதிவுகளை அழகியல் நோக்கில் மட்டும் அணுகாமல், அவற்றின் பின்னணியில் செயல்படும் பண்பாட்டு அரசியலையும் ஆராய வேண்டியது அவசியமாகிறது. பெண்ணின் உடலைச் சுற்றி உருவாக்கப்பட்ட கற்பு, நாணம், பெண்மை, தாய்மை, குடும்பப் பொறுப்பு போன்ற கருத்தாக்கங்கள் சமூகத்தின் மரபுகளோடும் அதிகார அமைப்புகளோடும் தொடர்புடையவை. இக்கருத்தாக்கங்கள் பெண்களின் வாழ்வியல் வெளி, தனிப்பட்ட விருப்பங்கள், சமூகப் பங்களிப்பு ஆகியவற்றில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின என்பதைச் சங்கப் பாடல்களின் வழியாக ஆராய முடியும்.

தொல்காப்பியர் காலத்தில் பெண்ணுடல் பற்றிய பதிவுகள்:

மெய்பாடு என்பது உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை மெய்வழியாக வெளிப்பட்டு நிற்பதே மெய்ப்பாடு என்கிறோம். அந்த வகையில் களவு காலத்தில் பெண்களுக்குரிய மெய்ப்பாடுகளாக தொல்காப்பியர் 24 வகைகளை கூறுகிறார். அவ்வகையில், வேட்கைக்குரிய மெய்பாடுகளாக,

கூழை விரித்தல், காது ஒன்று களைதல்

ஊழ் அணி தைவரல், உடை பெயர்த்து உடுத்தலொடு,

கெழீஇய நான்கே இரண்டு என மொழிப.

என்றும்,

உள்ளுதலுக்குரிய மெய்பாடுகளாக,

அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல்,

இல்வலி யுறுத்தல், இரு கையும் எடுத்தலொடு

சொல்லிய நான்கே மூன்று என மொழிப

என்றும் சுட்டியுள்ளார் . இந்நூற்பாக்களின் மூலம் பெண்ணின் உடல் உறுப்புகள் குறீயிட்டு பொருளாகவும் மட்டுமல்லாமல் , களவு காலத்தில் இருந்த உடல் உறுப்புகள் கற்பு காலத்தில் இருக்க வேண்டுமென தன் உள்ளத்தில் தோன்றக்கூடிய உணர்வுகளை உறுப்புகளின் வழியாக வெளிப்படுத்துகிறாள் . எனவே சமூகத்தில் பெண்ணுடல் பண்பாட்டு குறீயிடாகவும் செயல்படுகின்றன .

பத்துப்பாட்டு நூல்களில் பெண்ணுடல்:

பெரும்பாணாற்றுப்படையில், ஆடு மேய்க்கும் முல்லை நில இடையர்

குல பெண்ணை கூறும் போது,

“ நாள் மோர் மாறும் நல்மா மேனிச்

சிறுகுழை துயல்வரும் காதின்; பணைத்தோள்

அளைவிலை உணவின் கிளை உடன் அருத்தி, (155-156)

பெண்ணின் உடல் உறுப்பு மூலம் அவள் அழகை சுட்டுவது மட்டுமல்லாமல், அவள் சமூகத்தின் பின்னனியும் கூறுகிறது.

சிறுபாணாற்றுப்படையில்,

நிலமகளை கூறும் போது,

“ கதுப்பு விர்த் தன்ன காழ் அக நுணங்கு அறல்

அயில் உருட்பனைய ஆகி,

என்று வருணிக்கிறார். இப்பாடலின் மூலம் நிலமகளானவள் தன் கருங்கூந்தலில் பூக்களை சூடியுள்ளார் என்று வர்ணணை செய்கிறார் நத்தத்தனார்.

விறலியை சுட்டும் போதும் கூட, விறலியின் உடல் உறுப்புகளை வர்ணிக்கிறார் . இதன் மூலம் பெண்களின் உடல் உறுப்புகளை நிலமகளுக்கும் , சமுதாயத்தின் தூய்மை மாந்தர்களாகவும், உயர்ந்த நெறி கொண்டுவர்களாகவும் வர்ணிக்கப்படுகின்றன.

எட்டுத்தொகையில் பெண்ணுடல் :

.குறுந்தொகையில் பருவ மாற்றத்தை விவரிக்கும் பாடல் (குறுந்தொகை - 159) ,

ஒரு பெண் சிறுமியிலிருந்து இளம் பெண்ணாக மாறும் உடலியல் மாற்றங்களை (Puberty) மிக அழகாக விவரிகிறது,

தழைஅணி அல்குல், நுழைசிறு நுசுப்பின்,

அம்மெல் ஆகத்து, செப்புஇள முலையள்...

உடலமைப்பை மருந்தாக உவமிக்கும் பாடல்: குறுந்தொகை 71)

தலைவியின் உடலமைப்புத் தோற்றத்தை, தன் காதலின் பசிக்கும், தன் வாழ்நாளின் சேமிப்பிற்கும் ஒப்பிட்டுத் தலைவன் பாடும் பாடல்,

அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை,

பெருந்தோள், நுணுகிய நுசுப்பின்...

முன்பெல்லாம், மாந்தளிர் போன்ற நிறமும் (மாமை நிறம்), பேரழகும் கொண்ட இவளது மார்பையும், அல்குல் பகுதியையும் தன் கைகளால் அன்போடு வருடி இன்பம் தந்தான். ஆனால் இன்று, இவளது அழகிய உடல் அவனது தீண்டுதல் இல்லாமல், பிரிவின் துயரத்தால் வாடிக் கொண்டிருக்கிறதே!"

“அம்ம வாழி தோழி நாம் அழத்

துறந்து விண் படர்ந்தாங்குத் தாமே தங்கி

மாமை கவினிய ஏர்தகை அகலத்து

அல்குல் தைவரல் மன்னோ இவளே

என்று கூறுகிறாள் தலைவி .(359)

நற்றிணையில்,

“அல்கு படர் உழந்த அரி மதர் மழைக்கண்,

பல் பூம் பகைத் தழை நுடங்கும் அல்குல்,

திரு மணி புரையும் மேனி மடவோள்

இப்பாடலில்,குறிஞ்சி நிலத்துத் தலைவியின் அழகைக் கண்டு வியக்கும் தலைவன், அவளது கண்கள், இடுப்பு (அல்குல்), மற்றும் ஒளிரும் உடல் மேனியை வர்ணிக்கிறான்.சிவந்த வரிகளோடு, குளிர்ச்சி பொருந்திய மை தீட்டிய கண்களைக் கொண்டவள்; பலவகை மலர்களோடு சேர்த்துக் கட்டப்பட்ட அழகிய தழையாடை அசையும் இடுப்பை (அல்குல்) உடையவள். ஒளியுமிழும் நீல நவரத்தினத்தைப் போன்ற பேரழகு வாய்ந்த உடலமைப்பைக் கொண்ட இந்த. மென்மையான பெண், யாருடைய மகளோ? இவள் என் நெஞ்சில் பெரும் காதலைத் தந்து துயரமுறச்

செய்கிறாள்

தலைவியின் உடலில் படர்ந்துள்ள பசலையின் தீவிரத்தை, அடுப்பில் கொதிக்கும் பாலோடு ஒப்பிட்டுப் பாடுகிறார் புலவர் மிளைக் கந்தனார்.

அடு பால் அன்ன பசலை தன் மெய்க்கண்

சுடு வானம் அன்ன சுடர்மணி நெடுந் தேர்ப்

பாணன் வந்தனென்

இப்பாடலின் மூலம், பெண்ணுடல் என்பது வெறும் அழகியல் பொருளாக மட்டுமன்றி, சங்க காலச் சமூகத்தின் விழுமியங்கள், குறியீடுகள் மற்றும் பண்பாட்டுப் பதிவுகளின் களமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இயற்கையோடு இயைந்த பெண்ணுடலின் வர்ணனைகள் அக்காலத் தமிழர்களின் வாழ்வியலையும் அக ஒழுக்கத்தையும் நமக்கு உணர்த்துகின்றன.

ஐங்குறுநூற்றில் ஐந்து திணைகளுக்கும் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) உரிய பின்னணியில் பெண்ணின் உடல் வர்ணிக்கப்படுகிறது.

“அம்ம வாழி, தோழி! காதலர்

இன்னர் ஆகவும் பிரியக் கற்றனர்;

எரி அகைந்தன்ன சுடர் பூங் காந்தள்

முலை அகத்து அணைந்த கேழ் கிளர் ஆகத்து,

அல்குல் தைவரல் அமையாத் தோளே!”

இப்பாடலில் பெண்ணுடல் சார்ந்த சித்தரிப்பு:

தலைவன் பிரிந்து சென்றதால் வருந்தும் தலைவியைக் கண்டு, தோழி அவனிடம் உரைப்பதாகவோ அல்லது தோழியிடம் தலைவி தன் நிலையை இரங்குவதாகவோ இப்பாடல் அமைகிறது:

- முலை அகத்து அணைந்த ஆகம் (மார்பு): நெருப்புப் பிழம்பு போலச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் செங்காந்தள் மலர்களை அணிந்தவள் தலைவி. அவளது மார்பகங்களில் அணைந்து கிடந்த தலைவனின் நினைவுகள் அவளை வாட்டுகின்றன.
- அல்குல் தைவரல்: பெண்ணின் இடுப்புப் பகுதியை (அல்குல்) தலைவன் தொட்டுப் பாராட்டிய நினைவுகள்.
- அமையாத் தோள்: தலைவனின் பிரிவால், அவனது அணைப்பை ஏந்தி நின்ற தோள்கள் இப்போது அழகிழந்து மெலிந்து, பசலை நிறம் (உடல் நிறம் மாறுதல்) கொள்கின்றன.

சங்க இலக்கியங்களில் பெண்ணின் உடலை வெறும் சரீரமாகப் பார்க்காமல், மாந்தளிர் மற்றும் நறுமண மலர்களோடு ஒப்பிட்டுப் பாடியதற்கு இப்படாடல் சிறந்த சான்றாகும்.

ஒண்தொடி, அசைந்த மென்தோள், பிணைநெகிழ்பு

மாந்தளிர் அன்ன மேனி, தொண்டியூர்

அனிச்ச வான்பூ நாறும், என்

நெஞ்சத்தாளே; எங்ஙனம் மறப்பவே.

புறநானூற்றில் பெண்ணுடல் பண்பாட்டு அரசியல:

சங்க காலப் புறத்திணை மரபில், பெண்ணின் உடல் வீரம், தாய்மை, குலப்பெருமை மற்றும் கற்புநெறி ஆகியவற்றின் அடையாளமாகவே முதன்மையாகக் காட்டப்பட்டுள்ளது.

வீரத்தின் விளைநிலமாகத் தாய்மை (உடலின் பெருமை):

சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்

யாண்டு உளனோ? என வினவுதி; என்மகன்

யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஒரும்

புலி சேர்ந்து போக்கிய கல்லளை போல,

ஈன்ற வயிறோ இதுவே; தோன்றுவன்

மாதோ, போர்க்களத் தானே!

புறநானூற்றில் பெண்ணின் வயிறு (கருவறை) ஒரு சாதாரண உடல் உறுப்பாகப் பார்க்கப்படாமல், வீரர்களைப் பெற்றெடுக்கும் புனிதமான இடமாக மதிக்கப்பட்டது.இங்குப் பெண்ணின் உடலானது வீரத்தின் பிறப்பிடமாக, சமூகத்திற்கு அரணாக இருக்கும் வீரர்களை உருவாக்கும் உறைவிடமாகக் காட்டப்படுகிறது.

பெண்கள் தம் குழந்தைகளுக்கு ஊட்டும் பால், வெறும் உடல் சார்ந்த உணவு மட்டுமல்ல; அது வீரத்தை வளர்க்கும் அமுதம் ஆகும்.ஒரு தாய், தன் மகன் போர்க்களத்தில் முதுகில் புண்பட்டு (புறப்புண்) இறந்ததாகப் பலர் கூறக் கேட்டுப் பதறுகிறாள். “அவன் போருக்கு அஞ்சி ஓடிப் புறப்புண் பட்டிருந்தால், அவனுக்குப் பாலூட்டிய என் முலைகளை அறுத்து எறிவேன்” என்று சினம் கொள்கிறாள் (புறம் 278).

• வாளோடு போர்க்களம் சென்று தேடியபோது, அவன் மார்பில் புண்பட்டு (வீரமரணம்) கிடப்பதைக் கண்டு, அவனைப் பெற்ற போதை விடப் பெருமகிழ்ச்சி அடைகிறாள். இங்குப் பெண்ணின் மார்பகங்கள் (முலை) வீரத்தின் மானமாக, கௌரவத்தின் அடையாளமாக உருவகிக்கப்படுகின்றன.

கைம்மை நோன்பில் ஒடுக்கப்பட்ட பெண்ணுடல் :

கணவன் இறந்தபின், பெண்கள் தங்களின் அழகிய கூந்தலைக் கொய்து (சவரம் செய்து), வளையல்களை உடைத்து, அணிகலன்களைத் துறக்க வேண்டும் (புறம் 250, 261).

• பூக்களைச் சூடாத, நறுமணப் பூச்சுகள் இல்லாத, எளிய உணவை மட்டுமே உண்ணும் ஒரு “ஒடுக்கப்பட்ட உடலாக” கைம்பெண்களின் உடல் மாற்றப்பட்டது. இது அக்காலச் சமூக அமைப்பில் பெண்ணுடலின் மீது திணிக்கப்பட்ட ஒழுக்கக் கட்டுப்பாட்டைக் காட்டுகிறது. கணவன் இறந்த பிறகு, கைம்மை நோன்பு நோற்று உடலை வருத்துவதைக் காட்டிலும், கணவனின் ஈமத்தீயில் தன் உடலையும் மாய்த்துக் கொள்வதைப் பெருமையாகக் கருதினர்.

• பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு பாடிய பாடல் (புறம் 246) இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. தன்னைத் தீப்பாய வேண்டாம் என்று தடுத்த சான்றோர்களை நோக்கி, “எனக்கு இந்த நெருப்புப் பொய்கை போன்றது” என்று கூறித் தீயில் குதிக்கிறாள்.

• இங்குப் பெண்ணின் உடல் கணவனின் உடலோடு பிரிக்க முடியாத ஒன்றாக, கற்பின் உச்சக்கட்ட அடையாளமாகச் சமூகத்தால் பார்க்கப்பட்டது.

முடிவுரை:

சங்க இலக்கியங்களில் பெண்ணுடல் என்பது அழகின் அடையாளமாகவும், காதலின் மொழியாகவும், சமூக ஒழுங்கின் குறியீடாகவும், அதிகார உறவுகள் வெளிப்படும் பண்பாட்டுக் களமாகவும் பன்முகத் தன்மையுடன் திகழ்கிறது.

துணை நின்ற நூல்கள்!

- பக்தவச்ல பாரதி- பண்பாட்டு மானிடவியல்
- எட்டுத்தொகை – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
- பத்துப்பாட்டு- புலவர் பி.ரா நடராசன்
- சங்க இலக்கியத்தில் கதுப்புப் பற்றிய பதிவுகள் (ஆய்வேடு) –

தி. சந்தோஷ் செல்வன்.

© 2026 T.SANTHOSHSELVAN T.SANTHOSH SELVAN. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 468–479
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

குறுந்தொகையில் பெண் மனத்தைப் பாடும் ஆண் புலவர்கள்

Kurunthogaiyil pen manathai paadum aan pulavargal

தனசேகர் ஏ*

தமிழ்த்துறை,பன்முகக் கலை & வணிகக் கல்விப்புலம், எஸ்.ஆர்.எம். அறிவியல் & தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் வடபழனி வளாகம், சென்னை - *26, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: தனசேகர் ஏ — dhanasey@srmist.edu.in

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
30 September 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00011	

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்களில் பழமையானது என்று அறிஞர் பெருமக்களால் கூறப்படுவது குறுந்தொகை எனலாம். உணர்வுகள் கொட்டிக் கிடக்கின்ற இவ்வகப்பாடல் தொகுப்பில் குறிஞ்சித் திணையில் பெண் குரலாய் ஒலிக்கும் ஆண்பாற் புலவர்களின் கவிதைகளையும் பெண்பாற் புலவர்களின் கவிதைகளையும் ஒப்பீடு செய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்களில் பழமையானது என்று அறிஞர் பெருமக்களால் கூறப்படுவது குறுந்தொகை எனலாம். உணர்வுகள் கொட்டிக் கிடக்கின்ற இவ்வகப்பாடல் தொகுப்பில் குறிஞ்சித் திணையில் பெண் குரலாய் ஒலிக்கும் ஆண்பாற் புலவர்களின் கவிதைகளையும் பெண்பாற் புலவர்களின் கவிதைகளையும் ஒப்பீடு செய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ஏ, த. (2026). குறுந்தொகையில் பெண் மனத்தைப் பாடும் ஆண் புலவர்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 467–478. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8547

முன்னுரை

உலக மொழிகளில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் மனத்தை வெளிப்படுத்துகின்ற கண்ணாடியாகத் திகழ்கின்றன. இதை நுட்பமாய்ப் புரிந்துகொண்டு இலக்கியங்களை உருவாக்கியவர்கள் பண்டைய தமிழர்களாவர். அதனால்தான் திறம்பட இலக்கியத்தை அகவுணர்வு புறவுணர்வு என்று இரண்டாக வகைப்படுத்தியுள்ளனர். இவ்வாறு வகைப்படுத்துவதற்குக் காரணம் என்னவென்று ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. பெரும்பாலும் அகப்பாடல்கள் என்பது ஆண்பெண் உறவுகளைப் பற்றியே பேசுகிறது என்பது உள்ளங்கை நெல்லியைப் போல வெளிப்படையே. ஆனால் அதிகமான அகப்பாடல்கள் ஆண்புலவர்களால் பாடப்பட்டுள்ளது. அதுவும் பெண் குரலாகப்

பாடப்பட்டுள்ளது. ஏன்? பெரும்பான்மையான அகப்பாடல்கள் பெண் கூற்றாகப் பாடப்படுகிறது. அதை ஏன் ஓர் ஆண் பாட வேண்டும். அவ்வாறு பாடுவதன் மூலம் அன்றைய சமூதாயம் என்ன? கருத்தை முன் வைக்க நினைக்கிறது. ஓர் ஆண் ஒரு பெண்ணின் உணர்வினை உள்ளபடியே சொல்லிவிட இயலுமா!. காதலில் இருபால் உணர்வுகளுக்கும் பங்கு இருக்கையில் திரும்பத் திரும்ப பெண் உணர்வினையே ஆண்புலவர்கள் பாடுவதற்கும் தங்கள் உணர்வினைப் குறைவாகப் பாடி இருப்பதற்கான காரணம் என்ன?. அவ்வாறு பெண் கூற்றாகப் பாடப்பட்ட பாடல்கள் பெண் உணர்வை அசலாகக் காட்டுகிறதா அல்லது அதே உணர்வுகளைப் பெண்புலவர்கள் பாடும்போது ஆண்களின் பாடல்களை விஞ்சி நிற்கிறதா! என்பன போன்ற கேள்விகளுக்கு விடை தேடுவதே இக்கட்டுரையின் நோக்கமாக இருக்கிறது. இவ்வாய்வு மிக நீண்டது என்பதால் குறுகிய எல்லையில் நின்றே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. குறுந்தொகையில் உள்ள குறிஞ்சிப் பாடல்களில் ஆண்பெண் புலவர்களின் பாடல்களே இக்கட்டுரையின் எல்லையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்தப் பட்டியல் பின்வருமாறு,

குறிஞ்சிப் பாடல்கள் (144)	1,2,3,13,14,17,18,23,25,26,29,32,36,38,40,42,47,52,54,58,60,62,68,69,70,72,73,74, 76,78,82,83,86,87,88,90,95,96,100,101,105,106,111,112,115,116,119,120,121,128, 129,132,133,134,136,138,141,142,143,146,150,152,153,156,158,159,160,161,165, 170,173,176,179,182,185,187,198,199,201,204,206,208,214,222,223,225,239,241, 244,247,249,252,257,259,261,263,264,265,268,272,276,280,284,286,288,291,292, 297,298,300,301,302,308,312,315,317,321,322,327,332,333,335,337,339,342,346, 355,357,360,361,362,365,366,371,372,373,374,375,377,379,385,389,392,394
பெண்பாற் புலவர் (16)	17,23,29,32,58,68,96,146,158,176,261,286,(301),337,339,365,
பெண் கூற்றாக வரும் பாடல்கள் 106	1,3,13,18,23,25,26,36,38,42,47,52,54,60,68,69,73,74,76,82,83,86,87,88, 90,96,105,106,111,112,115,121,133,134,138,141,143,146,150,152,153,158,159, 160,161,170,176,179,185,187,198,201,208,214,223,225,239,241,244,247,249,252, 257,259,261,263,264,265,268,284,288,292,297,298,301,302,308,315,317,321,322, 327,332,333,335,339,342,346,355,357,360,361,362,365,366,371,372,373,374,375 377,379,385,389,392,394
பெயர் தெரியவில்லை (9)	40,47,54,74,201,321,375,379,

இப்பட்டியல் திருமாளிகைச் சௌரிப்பெருமாள் அரங்கன் உரை, 2008ஆம் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இப்பட்டியல் உரையாசிரியர்களைப் பொறுத்து மாறுபடுகின்றது. இதனை ஆய்வாளர்கள் தங்களுடைய ஆய்வுகளில் எடுத்துக்காட்டுகின்றனர் [1].

அகம் ஒரு பெண்

பொதுவாகத் தமிழ்ச் சூழலில் அகம் என்பதற்குச் சொல்லப்படும் பொருள் உள்ளே இருக்கும் உணர்வு, காதல், வெளிப்படுத்த முடியாத உணர்வு போன்றவற்றைக் கூறுவது உண்டு. ஆனால் புறப்பொருள் என்று கூறப்படுகின்ற கொடையும், வீரமும் உள்ளே இருக்கின்ற உணர்வுதான் அல்லவோ. ஒரு தலைவி காதல் வயப்பட்டிருப்பதைத் தாய், தந்தையரைத் தவிர ஊரே அறிந்து பேசுவதுதான் அலர் என்றழைக்கப்படுகின்றது. எனவே அகம் என்பதற்கு யாரும் அறியாத உணர்வு என்று சொல்வதற்கில்லை. மாறாக யாரும் உணர முடியா உணர்வு என்று கூறுவது சாலப் பொருந்தும். காதல் வயப்பட்ட தலைவனோ தலைவியோ மட்டும் உணரும் தன்மையை ஏனையவர் அளவிட முடியாது. தலைவி வருந்துகின்றாள் என்று மற்றவர்கள் அறியலாம், வருந்தலாம். ஆனால் அந்த வருத்தம் தலைவி வருந்தும் அளவிற்கு இருக்காது. அவள் நிலையை அவள் மட்டுமே அறியமுடியும். அகத்தின் சிறப்பே இதுதான். அதை வெளியே சொல்லவும் இயலாது சொன்னாலும் விளங்காது.

இதனை அழகாக எடுத்தியம்பும் பாடல் ஒன்றுண்டு.

“நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்து

இனிதடங் கினரே மாக்கள் முனிவின்று

நனந்தலை உலகமும் துஞ்சும்

ஓஒயான் மன்ற துஞ்சா தேனே [2]”.

இதில் தன் துயரத்தை அறியாது நிம்மதியாக உறங்கும் மனிதர்களை மாக்கள் என்று சபிக்கிறாள் [3]. வெளியே சொல்லிப் பயன் இல்லாத உணர்வினை அகவுணர்வு என்று கூறலாம். இதற்கு நேர் எதிராக நிற்பது புறவுணர்வு. வெளியே சொல்லாது போனால் பயன் இல்லாதது. ஓர் ஆயிரம் யானையைப் போர்க்களத்தில் கொன்ற நிகழ்வினைத் தன் மனதில் மட்டும் வைத்துக்கொண்டு ஒரு மனிதன் வாழ்நாள் முழுவதும் மகிழ்ந்துகொண்டிருக்க முடியுமா. சாட்சி வைத்துக்கொள்ளாமல் எந்த அரசன் கொடை வழங்கி இருக்கின்றான். அப்படி வழங்கினாலும் பொருள் பெற்றவனே ஒரு சாட்சிதானே. இப்படி நேரெதிர் உணர்வுகளை வைத்துப் பண்டைத் தமிழர்கள் ஓர் இலக்கிய விளையாட்டினை ஆடி இருக்கின்றனர். மனித வாழ்வினை அழகூட்டும் இரண்டு மாபெரும் உணர்வுகளுக்குத் தமிழன் உருவம் கொடுத்திருக்கிறான் என்று தோன்றுகிறது. யாருக்கும் புரியவைக்கமுடியாமல் தவிக்கும் தவிப்பினைப் பெண்ணாகவும் எல்லாவற்றையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்திவிடும் பண்பினை ஆணாகவும் நிறுத்திப் பார்க்கலாம்.

அகப்பாடல்களில் பெரும்பான்மை பாடல்களை ஆண்புலவர்கள் பாடியிருப்பினும் அவை பெண் கூற்றாக இருப்பதற்குக் காரணிகளைக் காணலாம். தொல்காப்பியர் கூற்று நிகழ்த்துவதற்குரியவராகப் பன்னிருவரைக் குறிப்பிடுகிறார்.

களவினுள் கூற்று நிகழ்த்துதற்குரியார்

“பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி

சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோடு

அளவியன் மரபி ன்றுவகை யோருங்

களவினிற் கிளவிக் குரிய ரென்ப [4]”.

கற்பினுள் கூற்று நிகழ்த்துதற்குரியார்

“பாணன் கூத்தன் விறலி பரத்தை

யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்

பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா

முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்

தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர் [5]”.

அகப்பாடல்களில் கூற்றுக்குரிய ஆண்கள் - 6 (பார்ப்பான் , பாங்கன், கிழவன், பாணன், கூத்தன், அறிவன்,)

அகப்பாடல்களில் கூற்றுக்குரிய பெண்கள் – 5(தோழி,செவிலி, கிழத்தி, விறலி, பரத்தை)

பொது – 1(கண்டோர் கூற்று)

தொல்காப்பியர் இலக்கணத்தின் படி அகப்பாடல் கூற்று

நிகழ்த்துதற்குரியவர்கள் ஆண்கள் அதிகமாய் இருந்தாலும் பெண்களின் கூற்றாகவே அதிகமான பாடல்கள் இருப்பதற்கு அகம் என்பது பெண் உணர்வினை மையப்படுத்தியே இருப்பது காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆண் உணர்வினை வெளிப்படுத்தும் போது அதில் புறத்தின் சாயல் தன்னிச்சையாக வந்துவிடுவதைக் காணலாம். சான்றாகப் பரணருடைய பாடல்களில் அரசர்களுடைய வாழ்க்கை நிகழ்வுகள் வெளிப்படுவதைப் பார்க்கலாம்.

உணர்வு வெளிப்பாடு சாத்தியா?

ஒரு புலவன் எப்பேர்ப்பட்ட புலமை பெற்றிருந்தாலும் தன்னுணர்வினைத் தாண்டி மற்றவர்களின் மனத்தை உள்ளது உள்ளபடியே வெளிப்பபடுத்திவிட இயலுமா என்பது எல்லாவிதமான இலக்கியங்களிலும் நாம் பொருத்திப் பார்க்கவேண்டிய ஒன்று. தன்னுடைய பாலினத்தைச் சார்ந்தவர்களுடைய உணர்வினையே பிரிதிபலிக்க இயலாத பட்சத்தில் பிற பாலினத்தினுடைய உணர்வினைப் பேசுவது என்பது அந்தக்காலத்தின் கலாச்சாரக் கட்டமைப்பிற்குட்பட்டு எழுதப்பட்ட உணர்வுகளாய் இருக்குமே தவிர அக்காலக்கட்டத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணின் உண்மையான உணர்வாக இருக்க சாத்தியங்கள் குறைவுதான் என்று கூறவேண்டியுள்ளது.

“அகத்திணையினை ஆடவர் பாடுவதைவிட, மகளிர் பாடுதல் யாங்ஙனம் சிறப்புறும் என்று வினவலாம். பெண் ஒருத்தியின் உள்ளத்தைப் பெண்புலவர் புரிந்துகொண்டதுபோல் ஆண்புலவர் அறிந்து பாடுதல் அமையாது “” என்கின்ற ஆய்வாளரின் கூற்று நோக்கத்தக்கது.

பரத்தை வீட்டிற்குச் சென்றுவிட்டு திரும்புகின்ற தலைவனைப் பார்த்து ஒரு தலைவி பாடுகிறாள்,‘இம்மை மாறி மறுமையாயினும் நீயே ஆகியர் என் கணவனை’என்கிறாள். எந்த நிலையில் இருந்தாலும் தன் கணவனைக் காதலிக்கிறாள் தலைவி என்பது அவளை மேன்மைப்படுத்துவிதமாக இருக்கலாம். ஆனால் அவை அந்தப் பெண்ணின் உண்மையான உணர்வாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை.

ஒரு பெண்ணின் உணர்வினை உணராத அல்லது அறியாத ஆண் அந்த உணர்வினைத் தன் உணர்வோடும் அல்லது தன்னுடைய கற்பிதங்களோடு நிறுத்தியே காண்கின்றான். அதனால் அவை எப்போதும் மிகைப்படுத்துதலில் முடியும். பெண்ணின் இயல்பான உணர்வினைக் குறைவாகக் கணிப்பதும் உண்டு என்றாலும் இலக்கியங்களில் எப்போதும் மிகைப்படுத்துதல் அதிகபடியாக நிகழ்த்தப்படுகின்றது என்று தோன்றுகிறது. பெண்கள் தங்கள் உணர்வினைச் சொல்லும்போது இயற்கையாக இயல்பாக அப்பாடல்கள் இருப்பதைக் காணமுடிகிறது. ஆண்கள் கணிக்க தவறுகின்ற இடமாக அது இருப்பதைப் பார்க்கமுடிகின்றது.

சங்கப் பாடல்களில் ஆண் புலவர்களால் காட்டப்படும் பெண் மனக் காட்சியானது மறுக்கவியலாத, பெண்ணின் பண்புகளை உயர்த்துகின்ற அழகான காட்சிப்படைப்புகளாக இருப்பினும் பெண்புலவர்களின் பாடல்களோடு ஒப்பிடும் போது இரண்டிற்கும் உள்ள வேறுபாடு தெளிவாக விளங்குகிறது.

உவமைகள் வழி பெண் மனம்

சங்கப் பாடல்களைப் பாடிய ஆண்கவிகள் பெண்கவிகளுக்கு நிகர் என்றோ அல்லது பெண்கவிகள் ஆண்கவிகளை விஞ்சிவிட்டவர்கள் என்றோ பொது வாசிப்பில் கூறிவிட இயலாது. இருபால் புலவர்களின் கவிப்புலமையும்

அளப்பரியது. ஆனால் பெண் மனத்தைப் பாடுகின்ற களமானது பொதுவன்று. இதில் ஆண்கவிஞர்களுக்குப் புலமையைத் தாண்டிய ஒரு புரிதல் தேவையாயிருக்கிறது. சங்கத்து ஆண்கவிஞர்கள் புரிதல், புலமை இரண்டையும் வைத்துக்கொண்டு ஒரு குறை நிறை கலவையாகப் பாடலாக இயற்றி, பெண் மனத்தைப் பெண்கவிகளைவிட ஆண்கவிகளே சிறப்பாக எடுத்தியம்புகின்றனர் என்கிற அளவிற்கு மிக நேர்த்தியாகவும் கச்சிதமாகவும் பாடியுள்ளதைக் காணலாம். அவ்வாறு தோன்றுவதற்குக் காரணம் ஓர் உவமையைக் கூறி பெண் உணர்வோடு அதனை ஒப்பிடுகின்ற இடத்தைக் கூறவேண்டும். இயற்கையில் நடக்கும் காட்சிகளைத் தலைவியின் உணர்வோடு ஒப்பிடும் இடங்களில் புலமையைத்தாண்டிய உணர்வொற்றுமை வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

“வேரல் வேலி வேர்க்கோள் பலவின்

சாரல் நாட செவ்வியை ஆகுமதி

யாரஃ தறிந்திசினோரே சாரல்

சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு

இவளுயிர் தவச் சிறிது காமமோ பெரிதே [7]”.

இரவில் வந்து தலைவியைச் சந்தித்துவிட்டுச் செல்லும் தலைவனை வழிமறித்து தோழி கூறும் அழகான பாடல். நீ கூடிவிட்டுச் செல்லும்போது மகிழ்வாய் இருக்கும் தலைவியை நீ அறிவாய், நீ நீங்கியவுடன் உன் பிரிவு தாங்காமல் துயருறும் தலைவியை நீ அறியமாட்டாய். அந்தத் துயரம் எப்படிப்பட்டதாம் சிறிய கொம்பில் தொங்குகின்ற பெரிய பழம் போலவாம். அவளுடைய உயிர் உன் காதல் என்னும் பெரும் பழத்தைச் சுமந்துகொண்டிருக்கிறது. பழம் முதிர முதிர அதன் எடை தாங்காமல் கொம்பு உடைந்து விழுந்துவிடுவது போல அவள் உயிரும் நீங்கிவிடும். அதனால் விரைவில் அவளைத் திருமணம் செய்துகொள் என்று கூறுகிறாள் தோழி. பிரிவில் வாடும் பெண்ணின் துயரத்தை இதைவிட பொருத்தமாக யாரும் சொல்லிவிட இயலாது என்பது போன்ற ஓர் ஆழமான உவமை இது. ஆனால் உற்று நோக்கினால் பிரிவின் துயரம் என்ற பொதுவான உணர்வுக்குச் சொல்லப்பட்ட உவமையாக இருப்பதைக் காணலாம். இருபாலருக்கும் இது பொருந்தும். ஒரு பெண்ணின் உணர்வினை அப்படியே வெளிப்படுத்திய உவமை என்று சொல்வதற்கில்லை. மாறாக ஒரு பெண்ணின் மனத்தின் துயரத்தை ஓர் ஆண் விளங்கிக் கொள்ளுகின்ற அளவிற்குச் சரியாகச் சொல்லப்பட்ட உவமையாக இதனை எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு கூறினால் வாசகனுக்கு (குறிப்பாக ஆண் வாசகனுக்கு) விளங்கும் என்ற அறிவுத்திறன் இதில் வெளிப்படுகின்றதல்லாமல் ஒரு பெண்ணின் உள்மனக் கண்ணோட்டங்கள் இதில் வெளிப்படுவதாக அறியமுடியவில்லை. இதே உவமை வைத்துப் பாடிய இன்னொரு பாடலைக் காண்போம்.

“கௌவை அஞ்சின் காம மெய்க்கும்

எள்ளற விடினே உள்ளது நானே

பெருங்களிறு வாங்க முறிந்து நிலம்படாஅ

நாருடை ஓசிய லற்றே

கண்டிசின் தோழிஅவர் உண்டவென் னலனே [8]”.

இது, வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. முந்தைய

பாடலில் தலைவியின் துயரத்தைத் தோழி தலைவனிடம் கூறுகின்றாள். இந்தப் பாடலில் தன் துயரத்தைத் தானே தோழியிடம் கூறுகின்றாள். தோழி! பிறர் கூறும் பழிச்சொற்களுக்கு அஞ்சினால், காமம் குறையும். பிறருடைய பழிச்சொற்கள் இல்லாமல் இருக்க வேண்டுமானால் காமத்தை விட்டுவிடவேண்டும். அவ்வாறு காமத்தை விட்டுவிட்டால், என்னிடம் இருப்பது நாணம் மட்டுமே ஆகும்; தலைவர் நுகர்ந்த எனது பெண்மை நலம், பெரியகளிறு உண்ணும் பொருட்டு வளைக்க, வளைந்து, நிலத்தில் விழாமல் நாருடன் ஒட்டிக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கும் ஒடிந்த கிளையைப் போன்றது.இதனை நீ காண்பாயாக!

பழுத்துத் தொங்கும் பழத்தை மெல்லிய கிளை தாங்கிக் கொண்டிருக்கிறது – கபிலர்

ஒடிந்து தொங்கிக் கொண்டிருக்கும் கிளையை நார் தாங்கிக் கொண்டிருக்கிறது – ஆலத்தூர் கிழார்

பெண்ணின் ஆழ்மனத்தை அறிந்துகொள்ளும் வேட்கை ஓர் ஆணுக்கு எப்போதும் இருந்தது இல்லை. அது அவ்வளவு எளிமையும் அன்று. அவனுடைய புரிதல் ஒன்று மேலோட்டமாக இருக்கும் அல்லது மிகைப்படுத்தப்பட்டு இருக்கும். அழுகை, துயரம், மகிழ்ச்சி, சிரிப்பு போன்ற மெய்ப்பாடுகளின் காரணிகளை ஆராய்கின்ற விபரீத முயற்சிகளில் ஓர் ஆண் ஈடுபடுவதேயில்லை. பொது மெய்ப்பாடுகளை அறிந்த ஆண்மனம் அந்த ஆழங்களை அதித சொற்கள் மூலமும் மிகைப்படுத்தப்பட்ட உணர்வுகள் மூலமும் தனக்கே உரித்தான ஒரு பாணியில் அதனை விளங்கிகொள்ளுவான். பெண்ணின் நுட்பமான மனத்தைப் புரிந்துகொண்ட முடிவுகள் அதில் இல்லாவிட்டாலும் புரிந்துகொண்டுவிட்டதுபோன்ற ஒரு மாயையை ஏற்படுத்தி பெண்ணைச் சமாதானம் செய்யும் திறன் அதில் உண்டு எனலாம்.

‘நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று’ என்ற உவமையில் தலைவியின் அளவுகடந்த காதல் பொது மெய்ப்பாட்டின் வழி வெளிப்படுகின்றது. பெண் மனநுட்பமாக அன்று. ஆனால் வாசகனுக்குப் பெண் மனத்தை அறியவைக்கும் வகையில் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். இது போன்று உவமைகள் மூலம் பெண் மனத்தை வெளிப்படுத்தும் உத்தியை ஆண் கவிஞர்கள் கையாளுகிறார்கள்.

“யாவதும் அறிகிலர் கழறு வோரே

தாயின் முட்டை போலவுள் கிடந்து

சாயின் அல்லது பிறிதெவ னுடைத்தோ

ஆமைப் பார்ப்பி னன்ன

காமம் காதலர் கையற விடினே ?.”

தாய்முகம் நோக்கி வளருந் தன்மையையுடைய ஆமையின் குஞ்சைப்போலக் காமமும் தலைவரைப் பலமுறைக் காண்பதால் வளரும் தன்மையையுடையது. அவர், நாம் செயலறும்படி நம்மைப் பிரிந்து கைவிட்டுவிட்டால், தாயில்லாத முட்டை கிடந்தபடியே அழிவது போல, காமம் உள்ளத்துள்ளே கிடந்து மெலிவதல்லாமல் வேறு என்ன பயன்? என்னை இடித்துரைப்போர், இதனைச் சிறிதும் அறியாதவர்கள்.

தலைவன் பிரிவைத் தாங்கமுடியாத தலைவியின் துயரத்தைத் தாயில்லாத முட்டை என்று கூறுகின்றார். அவனை நினைந்து அழிவது அன்றி வேறு வழியில்லை என்பதைப் பாதுகாப்பு இன்றி விடப்பட்ட முட்டைக்கு ஒப்பிடுகிறார்

கவிஞர். அவ்வாறு யாரும் இல்லாத முட்டையின் நிலை என்னவாகும் என்று இன்னொரு கவிஞர் மற்றொரு பாடலில் கூறுகின்றார்.

“கான மஞ்ஞை அறையின் முட்டை

வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்

குன்று நாடன் கேண்மை என்றும்

நன்றுமன் வாழி தோழி உண்கண்

நீரொ டொராங்குத் தணப்ப

உள்ளாது அகறல் வல்லு வோர்க்கே [10].”

காட்டில் இருக்கும் மயில் கூடு இல்லாத இடத்தில் இட்ட முட்டையை வெயிலில் விளையாடுகின்ற குரங்கின் குட்டிகள் உருட்டி விளையாடும் குன்றினை உடையவனுடைய காதல் நல்லதுதான் தோழி. ஆனால் அவன் பிரிந்துவிட்டால் அழாமல் இருப்பது எல்லாம் மனத்தின்மை உடையவர்களாலே இயலும்; என்னால் இயலாது என்று கூறுகிறாள் தலைவி. மயில் முட்டையைக் குரங்குகள் உருட்டி விளையாடுவதுபோல தலைவன் பிரிவால் துயருற்றுப் பசலையுற்று இளைத்த தலைவியின் நிலை ஊரார் அனைவரும் அலர் மூலம் உருட்டி விளையாடுவதைக் குறிப்பாகச் சொல்கிறார் கவிஞர். இவ்வாறு ஓர் உவமையைப் பெண் உணர்வோடு ஒப்பிட்டுத் துயரத்தின் அளவினைக் காட்சிப்படுத்துகின்ற முயற்சியில் வெற்றி கண்டிருக்கின்றனர் சங்கப்புலவர்கள்.

பெண் கூற்று – ஆண் மனம்

இதுவரை ஒரு பெண் மனத்தை, உவமைகள் மூலம் வெளிப்படுத்திய கவிஞர்களின் புனைத்திறனைக் கண்டோம். பொது மெய்ப்பாடுகளின் வழிநின்று பெண் மனநுட்பங்களை வாசகர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் சங்கப் பாடல்கள் அமைத்திருப்பது அக்காலக் கவிஞர்களின் கவித்திறமையை வெளிப்படுத்துகிறது எனலாம். இனிப் பெண் குரலாய் ஒலித்தாலும் ஆண் மனத்தையே வெளிப்படுத்தும் பாடல்களைக் காணபோம்.

“குறுந்தாள் கூதளி ராடிய நெடுவரைப்

பெருந்தேன் கண்ட இருகை முடவன்

உட்கைச் சீறுடை கோலிக் கீழிருரந்து

ஊட்டுபு நக்கி யாங்குக் காதலர்

நல்கார் நயவார் ஆயினும்

பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே [11]”.

குறுகிய அடியையுடைய கூதளஞ்செடி அசைந்து ஆடும் உயர்ந்த மலையிலுள்ள, பெரிய தேனடையைக் கண்ட முடவன், காலில்லாததால் உட்கார்ந்துகொண்டே, தன் உள்ளங்கையை ஒரு சிறிய குடை (பாத்திரம்) போல் குவித்து, அம்மலையின் கீழே இருந்தபடியே, அந்தத் தேனடையைப் பலமுறை சுட்டிக்காட்டித் தன் கையை நக்கி இன்புற்றதைப் போல, தலைவர் என்னிடம் அருளும் அன்பும் இல்லாதவராக இருந்தாலும் அவரைப் பலமுறை பார்ப்பதே என் உள்ளத்திற்கு இனிமையானதாக இருக்கிறது. கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட முடவன் கையை நக்குவது, அன்பு அருளும் இல்லாத தலைவனைத் தலைவி நேசிப்பது போன்ற உவமைகள் ஓர் ஆண்மன வெளிப்பாடேயாகும். பரத்தை

வீட்டிற்குச் சென்றுவிட்டு திரும்பும் தலைவனோடு மறுமையிலும் வாழ நினைப்பது ஆண்மனத்தை வெளிப்படுத்துவதை முன்னரே கண்டோம். இப்பாடலும் அதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்று கூறலாம். ஆண் செய்யும் அத்தனையும் நியாயப்படுத்தும் வகையில் தலைவி காதல் நிமித்தம் அதனைச் செய்வதுபோலவும் அதனை அவள் இரசிப்பது போலவும் பாடல்கள் அமைத்திருப்பது ஆண் மன வெளிப்பாடேயல்லாமல் வேறென்ன என்று கூறமுடியும்.

“பேரூர்கொண்ட ஆர்கலி விழவில்

செல்வாம் செல்வாம் என்றிவண் நல்லோர்

நல்ல பலவால் தில்லே

தழலும் தட்டையும் முறியும் தந்திவை

ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி

அன்னை ஓம்பிய ஆய்நலம்

என்னைக் கொண்டான் யாமின்ன பாவினியே [12]”.

ஒருநாள், பெரிய ஊரில் நடந்த மிகுந்த ஆரவாரமான விழாவிற்குச் “செல்வோம்; செல்வோம்” என்று கூறினாய். அன்று நாம் விழாவிற்குப் புறப்படும்பொழுது, இங்கு நல்லோரால் கூறப்பட்ட நல்ல வாய்ச் சொற்கள் (நிமித்தங்கள்) பலவாக இருந்தன; கிளிகளை வெருட்டுவதற்குப் பயன்படும் கருவிகளாகிய தழலையும், தட்டையையும், தழையாடையையும், எனக்குக் கொடுத்து, ”இவை உனக்கு ஏற்றவை” என்று சொல்லி, பின்பு பொய்யுரைகள் கூறி, என் அன்னையால் பாதுகாக்கப்பட்ட என்னுடைய அழகிய பெண்மை நலத்தை என்னிடமிருந்து என் தலைவன் கொள்ளை கொண்டான். அதனால், நான் இப்பொழுது இந்த நிலையில் இருக்கின்றேன்.

இப்பாடலில் ஆசை வார்த்தை கூறி தன்னை காதல் வசப்படுத்திய தலைவனின் செயலை நினைத்து மென்மையாக வருந்துகின்றாள் தலைவி. பின்வரும் பாடலில் தலைவனால் கருவுற்ற தலைவி தன்னை மணந்துகொள்ள சொல்லாமல் மறைமுகமாக நீ நள்ளிரவில் வரவேண்டாம் உனக்கு ஆபத்து வரும் என்று கூறுகின்ற செய்தி பெண் மனத்தை வெளிப்படுத்தாமல் தலைவன் நிலைக்கு வருந்தும் அன்னைத்தன்மை வெளிப்படுத்தும் ஓர் ஆண்மனம் வெளிப்படுகிறது.

“கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்

கைம்மை உய்யாக் காமர் மந்தி

கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி

ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்

சாரல் நாட நடுநாள்

வாரல் வாழியோ வருந்துதும் யாமே [13]”.

கருமை நிறமுள்ள கண்களையும், தாவும் இயல்பையும் உடைய ஆண்குரங்கு இறந்ததால், கைம்மைத் துன்பத்தைத் தாங்கமுடியாத, அந்த ஆண்குரங்கின் துணையாகிய பெண்குரங்கு, தன்னுடைய தொழிலில் (மரமேறுவது போன்ற தொழில்களில்) பயிற்சி இல்லாத தன்னுடைய வலிய குட்டியை, சுற்றம் ஆகிய குரங்குகளிடம் ஒப்படைத்துவிட்டு, உயர்ந்த மலைப்பக்கத்திலிருந்து தாவித் தன்

உயிரை மாய்த்துக் கொள்ளும் மலைச்சாரலையுடைய நாட்டுக்குத் தலைவனே! இனி, நீ நள்ளிரவில் வரவேண்டாம். நீ நள்ளிரவில் வந்தால் உனக்குத் தீங்குண்டாகும் என்றெண்ணி நாங்கள் வருந்துவோம். நீ நீடூழி வாழ்வாயாக!

இவ்வாறு பெண் கூற்றாய் வரும் ஆண் கவிஞர்களின் பாடல்களில் மிகைப்படுத்துதல் மற்றும் உவமைகள் மூலம் ஓரளவிற்குப் பெண் மனத்தை வெளிப்படுத்த முயற்சித்தாலும் பெரும்பான்மையான பாடல்கள் குழப்பமாகவே இருப்பது வெளிப்படை. மாறாகப் பெண் கவிஞர்களுடைய கவிதைகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காணலாம்.

மிகு அலங்காரங்கள் இல்லாத பெண் மனம்

ஆண்கள் விளங்கிக் கொள்ளவே இயலாத பெண் மனம் மிக எளிமையானதாகச் சங்கப்பாடல்களில் வெளிப்படுகின்றது. தலைவியின் பசலையினைக் கண்டு வருத்தமுற்ற பெற்றோர்கள் குறத்தியை அழைத்துக் குறி கேட்கிறார்கள். குறத்தி குமரன் இருக்கும் குன்றினைப் பற்றிப் பாடுகின்றாள். அக்குன்றில்தான் தலைவனும் இருக்கின்றான் என்று அறிந்த தோழி தலைவியின் காதலை அவளுடைய பெற்றோர்களுக்கு வெளிப்படுத்துகின்றாள்.

“அகவன் மகளே அகவன் மகளே

மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்

அகவன் மகளே பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே

அவர்நன் னெடுங்குன்றம் பாடிய பாட்டே[14]”.

தலைவியின் நோய்க்குக் காரணம் தேடிக் குறி சொல்பவர்களை அழைத்துக் கேட்கிறார்கள். அவள் குன்றத்தைப் பற்றிப் பாடுகின்றாள். தோழி அதைப் பார்த்துவிட்டு பாடுக அகவன் மகளே! பாடுக! மீண்டும் பாடுக! இப்போது பாடினாயே அந்தக் குன்றத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் பாடுக என்கிறாள்.

உவமைகள் ஏதும் இல்லை. அலங்காரங்கள் இல்லை. தலைவி நோய்க்குக் காரணமாய் இருக்கின்ற தலைவன் அந்தக் குன்றினைச் சேர்ந்தவன்தான் என்பதைக் குறிப்பாகச் சொல்லி இருக்கிறார் ஔவையார். ஓர் ஆண் தன் கருத்தைச் சொல்வதற்கு வார்த்தைகளோடு சிக்கித் தவிக்கின்ற நிலையில் ஒரு பெண் அதனை மிக எளிமையாக ஆழ்மையாக நுட்பமாகச் சொல்லிவிடுகிறதை இக்கவிதை மூலம் அறிந்துகொள்ளலாம். பெண்ணின் உணர்வைச் சொல்ல துணியும் கவிஞர்கள் அனைவரும் உயர்ந்த எண்ணங்களையும் பண்புகளையும் அவர்களுடைய உணர்வில் பூசத் துணிகின்றார்களே ஒழிய உண்மையை உணர முற்படுவதில்லை என்று தோன்றுகிறது. தோழி தலைவனைப் பழித்துப் பேச அதனை மறுத்துத் தலைவனின் உயர்ந்த அன்பைப் பேசும் தலைவியின் பாடல் எத்தனையோ வாசித்திருப்போம். ஆனால் பின்வரும் பாடல்களில் பழித்துப் பேசிய தோழியிடம் தலைவி பேசுவது போன்ற ஒரு பாடலை அள்ளூர் நன்முல்லையார் எப்படிச் சொல்லி இருக்கிறார் என்று பார்ப்போம்.

“அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு

யானெவன் செய்கோ என்றி யானது

நகைஎன உணரே னாயின்

என்னா குவைகொல் நன்னுதல் நீயே[15]”.

நல்ல நெற்றியை உடைய தோழி ! அருவியின் அருகில் வளரும் வேங்கை மரங்களையுடைய, பெரிய மலையையுடைய நாட்டுக்குரிய தலைவனை என்னால் என்ன செய்ய முடியும் என்று கூறி நீ அவனைப் பழித்துப் பேசினாய். நீ அங்ஙனம் கூறியதை, நான் நீ விளையாட்டுக்காகக் கூறினாய் என்று எண்ணாமல் இருந்திருந்தால் நீ என்ன பாடுபட்டிருப்பாய் என்று தெரியுமா?

நிலம், நீர், கடலை விட பெரியது எங்கள் காதல் என்றோ, தாமரை தன் தாது ஊதி மீமிசை தொடுத்த தீம் தேன் போல என்றோ, இன்னும் தன் தலைவன் பெருமையோ பேசவில்லை. பதிலாக நீ தலைவனைப் பற்றிப் பேசியது விளையாட்டிற்கு அன்று என்று எனக்குத் தெரிந்தும், உன் மனம் நொந்துவிடக் கூடாது என்று அமைதியாய் இருந்தேன். ஒருவேளை நான் உன்னிடம் கோபம் கொண்டிருந்தால் உன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்று நேரிடையாகப் பேசும் இந்தக் காட்சி ஒரு சாதாரண நிகழ்வினை, உணர்வினை வெளிப்படுத்த தலைவன் பெருமைகளையோ அல்லது தங்களுடைய காதலின் பெருமைகளையோ கூறி பிரயத்தனப்படாமல் சிறிய உரையாடலில் தன்னுடைய காதலைப் புரிய வைக்கின்ற நுட்பத்தைக் கவனிக்கவேண்டும். மற்றொரு பாடலில் ஒரு காட்சியைச் சொல்கிறாள் தோழி, தலைவனது உறவினர்கள் மணம் பேச தலைவியின் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். மணப்பேச்சு என்னவாகுமோ என்று அஞ்சுகின்ற தலைவிக்குத் தோழி சொல்லியது. அந்தச் சபையில் நடக்கும் நிகழ்வை மிகவும் தூரத்திலும் அல்லாமல் அருகிலும் அல்லாமல் நின்று கவனிக்கும் தோழி, தலைவியிடம் கூறுகின்றாள்,

“அம்ம வாழி தோழி நம்மூர்ப்

பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ

தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்

நன்றுநன் றென்னும் மாக்களோடு

இன்றுபெரி தென்னும் ஆங்கண தவையே [16]”.

தோழி! நான் சொல்லுவதைக் கேட்பாயாக! அங்கே, அந்தக் கூட்டத்தில், கையில் ஊன்றுகோல் உடையவர்களும், நரைத்த முடியையுடைய தலையில் தலைப்பாகை அணிந்தவர்களுமாகத் தலைவனது உறவினர்கள் வந்துள்ளார்கள். அவர்கள் ”நன்று நன்று” என்று கூறுகிறார்கள். நம்மவர்கள், ”இன்று நீங்கள் வந்தது எங்களுக்குப் பெருமை,” என்று கூறுகின்றனர். நம் ஊரில் பிரிந்தவர்களைச் சேர்த்துவைப்பவர்களும் உள்ளனர்.

தலைவன் தலைவி வீட்டார் சந்திப்பு எப்படி முடியும் என்ற ஆவல், அச்சம் தலைவியின் மனத்தை வாட்டுகிறது. இதனை அறிந்துகொண்ட தோழி அங்கே நடக்கும் காட்சியைச் சொல்லி தலைவியின் மனவாட்டத்தைப் போக்குகிறாள். பெண் கவிகள் பாடும் பாடல்கள் இருவர் பேசும் சாதாரணமாக நிகழும் ஓர் உரையாடலாக ஆனால் ஆழமான உணர்வு பரிமாற்றத்தை ஏற்படுத்துகின்ற நுட்பமான பாடல்களாக இருக்கின்றது. நேரிடையாகப் பேசி ஆனால் குறிப்பாகத் தன்னுடைய கருத்தைக் கூறும் நுண்மை பெண்ணுக்கே உரியதோ என்று தோன்றுகின்றது. இது போன்ற காட்சியோ உரையாடல்களோ செயற்கையாகத் தோன்றாமைக்குக் காரணம் பெண்ணின் உணர்வினை அறிந்த பெண்ணின் பாடல்களாக இவை இருப்பதே என்றுதோன்றுகின்றது.

ஆய்வு முடிவுரை

சங்க இலக்கியங்களில் பாடப்பட்ட பெரும்பான்மையாக அகப்பாடல்கள் ஆண் புலவர்களால் இயற்றப்பட்டதற்குக் காரணம் அக்காலத்தில் பெண்கல்வி சார்ந்து இருக்கலாம், அல்லது புலவர்களின் தொழில் என்பது வெவ்வேறு நிலப்பகுதியில் வாழும் அரசர்களுக்குப் பாடி பொருள் பெறுவது, பெண் புலவர்கள் பயணம் செய்ய இயலாது என்பதால் ஆண்புலவர்களுக்கு நிகரான எண்ணிக்கையில் பெண்புலவர்கள் இல்லாமை காரணமாக இருக்கலாம். ஔவை போன்றவர்களும் மூதாட்டியாய்க் காட்டப்படுவது ஒரு எடுத்துக்காட்டு. சங்க காலத்துத் தமிழ்ச்சான்றோர்கள் அகவுணர்வைப் பெண்ணாகவும் புறவுணர்வினை ஆணாகவும் வைத்து ஓர் இலக்கிய விளையாட்டினை நிகழ்த்தி உள்ளனர். எனவேதான் அதிகமான அகப்பாடல்கள் ஆண்புலவர்களால் பெண் கூற்றாகப் பாடப்பட்டுள்ளது. தொல்காப்பியர் கூற்று நிகழ்த்துவதற்குரிய இடங்களை ஆண்களுக்கே அதிகமாக அளித்திருந்தாலும் பெண் கூற்றினில் திரும்பத் திரும்பப் பாடுவதற்குக் காரணம் அகவுணர்வு பெண்ணுக்குரியது என்பதொன்று, தன்னுணர்வு சாராத எதிர்ப்பாலுணர்வை மிகச் சரியாகப் பாடுவதில்தான் தங்களுடைய கவிப்புலமை வெளிப்படும் என்ற ஆவலினாலும் இருக்கலாம். இயற்கையில் நிகழும் நிகழ்வுகளைக் காட்சிப்படுத்தி ஓர் உவமையின் மூலம் பெண் மனத்தை வெளிப்படுத்தி பெண்கவிகளைவிட அவர்கள் உள்ளுணர்வினைச் சொல்லிவிட இயலும் என்று காட்டி வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். சில இடங்களில் பெண் மனத்தை உயர்த்தி மேன்மைப்படுத்துவதாகக் கருதி தங்களுடைய மனவுணர்வுகளை வெளிப்படுத்தியும் உள்ளனர். ஆனால் பெண்புலவர் காட்டும் பெண் மனம் என்பது அலங்காரங்கள் இல்லாத மிகுகற்பனைகள் வழியாத எளிமையான உரையாடலில் உணர்த்தும் மனவுணர்வாக இருப்பதைக் காணமுடிகிறது. பெண் மனத்தைப் பற்றிய புரிதல் இல்லாத புலமைக்கும், பெண் மனதிலிருந்து வெளிப்படும் உரையாடலில் இருக்கும் நுட்பமான ஆழ்மன உணர்விற்கும் பெரிய வேறுபாடு உள்ளதை எளிமையாகக் காண முடிகிறது. எனவே ஓர் ஆண் பேசும் பெண் உள்ளத்தின் உணர்வும், பெண் பாடும் உள்ளத்தின் உணர்வும் சரிநிகர் அன்று. பெண் மனத்தைப் பற்றிய புரிதலின்றி அது சாத்தியமுமன்று. இருப்பினும் சங்க கால ஆண்புலவர்களின் கவிப்புலமை போற்றுதலுக்குரியது எனலாம்.

குறிப்புகள்

1.ஜெயசித்ரா.ஜெ., குறுந்தொகை உள்ளடக்கப் பகுப்பாய்வும் சொல்லடைவும்,பக்.32-33.

2. திருமாளிகைச் சௌரிப்பெருமாள் அரங்கள், குறுந்தொகை மூலமும் உரையும், பாடல் 6,பக்.15.

3.’மாக்கள்’ என்று இழிவுதோன்றக் கூறினாள்,பாடல் 6, பக்.15.

4.நச்சினார்க்கினியர், தொல்காப்பியம்,செய்யுளியல்,நூற்பா-189.

5. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம்,செய்யுளியல்,நூற்பா-190.

6.கந்தசாமி.கோ.ந., குறுந்தொகைத் திறனாய்வு, பக்.23

7.சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 18,பக்.33.

8. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 112,பக்.148.

9. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 152,பக்.184.

10. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 38,பக்.64.

11. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 60,பக்.93.

12. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 223,பக்.235.

13. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 69,பக்.103.

14. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 23,பக்..

15. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 96,பக்..

16. சௌரிப் பெருமாள் அரங்கன், குறுந்தொகை 146,பக்..

© 2026 தனசேகர் ஏ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 480–485
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

பொதுமகளிர் என்னும் கருத்தாக்கத்தில் நாலடியார், சுமதி சுதகப்பாடல்கள் – ஒப்பாய்வு

An analysis of the concept 'Potumakaḷir' in Naladiyar, Sumathi Sudagam – a comparative study

Thadsanamoorthi Matheshwaran[1,*], **Ramesh Ganesan**[2]

[1] *Department of Tamil, Central University of Tamilnadu, Thiruvarur., India*
[2] *Professor, Department of Tamil, Central University of Tamilnadu, Thiruvarur., India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: Thadsanamoorthi Matheshwaran — thadsanamoorthi001@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00056	

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மொழியில் கி.மு 4 முதல் கி.பி 5 ஆகிய நூற்றாண்டுகள் சங்க இலக்கியக் காலமாக வரையறுக்கப்பட்டுள்ளன. இக்காலகட்டத்தில் தோன்றிய நூல்கள் பாட்டும் தொகையும் என்று சுட்டப்படுகின்றன. இவ்வகைப்பாடல்கள் அனைத்தும் பல புலவர்களால் பாடித் தொகுக்கப்பட்டன. அக்காலகட்டத்தையடுத்து நீதி நூற்காலத்தில் திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் அறத்தைத் தமிழ்நாட்டில் கற்பிக்கத் தனி நூல்களாக எழுந்தன. தெலுங்கு இலக்கியங்கள் பதினோறாம் நூற்றாண்டிலிருந்து தோற்றம் கொண்டனவாக வரலாறு தெரிவிக்கின்றது. ஆரம்ப காலகட்டத்தில் மகாபாரதம், இராமாயணம் ஆகிய புராண நூல்கள் அறத்தைப் போதித்தன. அதன் பிறகு தமிழ்மொழியைப்போலவே தனியொரு நூலாக அற நூல்கள் தெலுங்கில் படைக்கப்பட்டன. சுமதி சதகம் என்ற நூலைப் பெத்தனா என்பவர் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் இயற்றினார். இந்நூலே தெலுங்கில் கிடைத்த முதல் நீதிநூலாகும். இந்நூல் அறத்தை எடுத்துரைக்கும் பாணியில் நாலடியாரின் தாக்கத்தைப் பெற்றுள்ளது. நாலடியார், சுமதி சதகம் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள பொதுமகளிர் குறித்த கருத்தாக்கங்களின் ஒற்றுமை வேற்றுமைகளை இவ்வாய்வு ஆராய்கிறது.

Keywords / திறவுச்சொற்கள்: Nālaṭiyār; cumati catakam; teluṅku aṟa ilakkiyaṅkaḷ; tamiḻ aṟa ilakkiyakkaṅkaḷ; caṅkam maruviya kāla ilakkiyaṅkaḷ; pettaṇā; teluṅku ilakkiyaṅkaḷ

Abstract

This article attempts to describe the intellectual exchange that existed between the Tamil and Telugu people. Just as didactic literature emerged in Tamil Nadu during the post-Sangam period, various works of didactic literature have also appeared in the Telugu language. Therefore, this article discusses the tradition of ethical literature in both Tamil and Telugu. In the Indian literary tradition, moral principles have been expounded in ethical texts. This article also examines how

the ideas about courtesans, found in works like Naladiyar and Sumati Satakam, are structured, and through this, sheds light on the social background of both Tamil and Telugu societies.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: Matheshwaran, T., & Ganesan, R. (2026). பொதுமகளிர் என்னும் கருத்தாக்கத்தில் நாலடியார், சுமதி சுதகப்பாடல்கள் – ஒப்பாய்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 479–484. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8549

முன்னுரை

இந்திய மொழிகளுள் திராவிட மொழிக்குடும்பம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. இம்மொழிகளுள் தமிழ்மொழி மூலத்திராவிட மொழிக்கு மிக நெருங்கிய மொழியாக விளங்குவதாகவும், மொழிவளத்தால் தமிழ் முதலிடத்தில் இருப்பினும் தெலுங்கு மொழி ஓசை அமைப்புகளின் அடிப்படையில் இரண்டாம் இடத்தில் இருப்பதாகக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். அதேபோலத் தெலுங்கு மொழி அதிகமான மக்களால் பேசப்படும் மொழிகளுள் இந்தியாவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்-தெலுங்கு ஆகிய இவ்விரண்டு மொழிகளுக்கும் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுகின்றன. தமிழ்மொழியில் கி.மு 4 முதல் கி.பி 5 ஆகிய நூற்றாண்டுகள் சங்க இலக்கியக் காலமாக வரையறுக்கப்பட்டுள்ளன. இக்காலகட்டத்தில் தோன்றிய நூல்கள் பாட்டும் தொகையும் என்று சுட்டப்படுகின்றன. இவ்வகைப்பாடல்கள் அனைத்தும் பல புலவர்களால் பாடித் தொகுக்கப்பட்டன. அக்காலகட்டத்தையடுத்து நீதி நூற்காலத்தில் திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் அறத்தைத் தமிழ்நாட்டில் கற்பிக்கத் தனி நூல்களாக எழுந்தன. தெலுங்கு இலக்கியங்கள் பதினோறாம் நூற்றாண்டிலிருந்து தோற்றம் கொண்டனவாக வரலாறு தெரிவிக்கின்றது. ஆரம்ப காலகட்டத்தில் மகாபாரதம், இராமாயணம் ஆகிய புராண நூல்கள் அறத்தைப் போதித்தன. அதன் பிறகு தமிழ்மொழியைப்போலவே தனியொரு நூலாக அற நூல்கள் தெலுங்கில் படைக்கப்பட்டன. சுமதி சதகம் என்ற நூலைப் பெத்தனா என்பவர் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் இயற்றினார். இந்நூலே தெலுங்கில் கிடைத்த முதல் நீதிநூலாகும். இந்நூல் அறத்தை எடுத்துரைக்கும் பாணியில் நாலடியாரின் தாக்கத்தைப் பெற்றுள்ளது. நாலடியார், சுமதி சதகம் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள பொதுமகளிர் குறித்த கருத்தாக்கங்களின் ஒற்றுமை வேற்றுமைகளை இவ்வாய்வு ஆராய்கிறது.

திறவுச் சொற்கள்

நாலடியார், சுமதி சதகம், தெலுங்கு அற இலக்கியங்கள், தமிழ் அற இலக்கியங்கள், சங்கம் மருவிய கால இலக்கியங்கள், பெத்தனா, தெலுங்கு இலக்கியங்கள்

ஒப்பிலக்கியமும் தாக்கமும்

நம் நாட்டின் பல்வேறு இலக்கியங்களையும் தன்னுள் அடக்கியிருக்கும் இந்தியப் பண்பாடு ஒரு பொதுமையமான அறிவுச்சூழலில் செயல்பட்டுள்ளது என்பதை ஒப்பிலக்கியத்தின் வழியாகத்தான் நிறுவ இயலும். தொடர்புடைய இரண்டு நூல்களில் ஒரு நூலின் தாக்கம் மற்றொன்றின்மீது காணப்படுவது இலக்கிய ஆய்வில் முக்கியமானது. “ஒரு அறிவுச்சூன்யமான நிலையில் எந்த ஒரு நூலோ தோன்றவோ அன்றி வளரவோ முடியாது. தனது மொழியிலிருந்தோ அல்லது அயல்மொழியிலிருந்தோ சிற்சில கருத்துகளின் ஆதாரம் வந்திருந்தாலும், அறிந்தோ அறியாமலோ ஒரு ஆசிரியனால் ‘இரவல்’ வாங்கப்பட்ட அக்கருத்துகளால் தூண்டப்பட்டுதான், இலக்கிய வளர்ச்சியே ஏற்படுகிறது” என்பது

வை.சச்சிதானந்தம் அவர்களின் கருத்து. எனவே ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு ஏற்பட்ட தொடர்பின் அடிப்படையில் தான் ஓர் இலக்கியம் தோன்றுவதாகக் குறிப்பிடுகிறார். அத்தகைய இலக்கியத் தொடர்பு பற்றிய ஆய்வுகளைப் பிரெஞ்சு அறிஞர்களாகிய பால்டென்ஸ்பர்ஷே, வான் தீகம், காரே ஆகியோர்கள் முன்வைத்தனர். அதன் பிறகே இலக்கியத்தொடர்புகளைப் பற்றிய பொதுக்கருத்து முக்கியத்துவம் அடைந்தது. இத்தகைய சூழலில் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிக்கு இடையேயான இலக்கியத் தொடர்பு பற்றியான பல ஆய்வுகள் செய்யப்பட்டுவருகின்றன.

தமிழ் - தெலுங்கு அற இலக்கிய மரபு

அற இலக்கியங்கள் தமிழில் சங்கம் மருவிய காலத்திலிருந்து தொடர்ந்து எழுதப்பட்டன. தெலுங்கில் கி.பி 12 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தொடர்ச்சியாக இலக்கியங்கள் எழுதப்பட்டுவந்த நிலையில் சதகம் என்ற இலக்கியவகையினை அறம்பாடுவதற்காகவே தெலுங்கில் தோற்றுவிக்கப்பட்டன.

சங்க இலக்கிய மாந்தர்கள் கள்ளுண்டலையும், பரத்தமை பிரிவையும் பெரும்பான்மையான பாடல்களில் பாடியிருப்பினும் அறக்கருத்துக்களைக் கொண்ட பாடல்களையும் உள்ளீடாகப் பாடியுள்ளனர். சங்க இலக்கியத்துள் அறத்தைக் கற்பித்த நூல்களுள் முதல் இடத்தில் புறநானூறு உள்ளது. சங்க இலக்கியத்தையடுத்துச் சங்கம் மருவிய கால இலக்கியங்களுள் பதினொரு நூல்கள் அறத்தை மட்டும் முதன்மையாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. சங்க மருவிய காலத்தையடுத்துப் பக்தி இலக்கியக் காலத்திலும் பக்திப் பனுவல்கள் வழியாக அறம் கற்பிக்கப்பட்டன. காப்பியக் காலம், சிற்றிலக்கியக் காலம் தொடங்கித் தற்காலம் வரை அற நூல்கள் தனியோர் இலக்கியவகையாக எழுதப்பட்டுவருகின்றன.

தெலுங்கு இலக்கிய வரலாற்றில் கி.பி பத்தாம் நூற்றாண்டு முதல் கி.பி பதினான்காம் நூற்றாண்டு வரை புராணகாவிய காலம் என்பர். இக்காலத்தில் வடமொழியில் உள்ள பல புராணங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. தெலுங்கில் அமைந்த முதல் நூல் நன்னய்யா பாரதமாகும். இப்பாரத நூல் வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பாகும். இப்பாரதத்தில் மொழிபெயர்ப்பில் ஆங்காங்கே அறம் உணர்த்தப்பட்டுள்ளது.

பாரத மொழிபெயர்ப்பையடுத்துப் பல்வேறு நூல்கள் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளன. இக்காலகட்டத்தில் ‘சுமதி சதகம்’ ‘நீதி சாஸ்திர முக்தாவளி’ என்னும் நீதி நூல்களைப் பெத்தனா என்பார் இயற்றினார். இவற்றுள் நீதி சாஸ்திர முக்தாவளி கிடைக்கவில்லை. சுமதி சதகத்தில் ஒவ்வொரு பாடலின் இறுதியடியும் சுமதி என்ற விளிச்சொல்லைக் கொண்டு முடிவடைகிறது. பாடலடியால் இந்நூல் பெயர் பெற்று, ’சுமதி சதகம்’ என்று அழைக்கப்படுகிறது. சுமதி சதகத்தையடுத்து வேமனார், கிருஷ்ணமாச்சார்யா போன்றோர் அற இலக்கியங்களைச் சதக வகைமையில் எழுதிப்போற்றினர்.

நாலடியாரும் சுமதி சதகமும்

“திருக்குறள் அடியொற்றி அதன் அறக்கருத்துகள் பலவற்றை விரித்துரைக்கும் வகையில் பாடப்பெற்ற நூல் நாலடியாராகும். அதில் நானூறு பாடல்கள் உள்ளன. அவற்றுள் நூற்றுப்பத்துப் பாடல்கள் இலக்கியச் சுவைநலம் பெற்றவை” என்பது ஜி.யு.போப்பின் கருத்து (போப், நாலடியார்) பாண்டியநாட்டுச் சமணர்களால் இயற்றப்பட்டதே நாலடியார் ஆகும். இந்நூல் வெண்பா வடிவில் அறங்களை

மக்களுக்கு உணர்த்துகிறது.

தெலுங்கில் சதகம் பாடும் மரபைத் தொடங்கிவைத்தார் சுமதி சதக ஆசிரியரே ஆவார். 108 பாடல்களைக் கொண்டு கந்தம் என்னும் ஒரு வகை பாவகையால் பாடப்பட்டுள்ளது. அனைத்து பாடல்களிலும் நான்காவது அடியின் இறுதிச் சீர் சுமதி என்று முடியக்கூடிய மரபைக் கொண்டுள்ளது. இம்முறையைத் தெலுங்கில் 'மகுட்டம்' என்று சுட்டுவர்.

நாலடியார் நான்கு அடிகளில் அறத்தை உணர்த்தும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதைப் போல, சுமதி சதகம் நான்கு அடிகளில் வெண்பா யாப்பினது அமைப்பைப்போலக் கந்தம் என்ற பாவகையினால் இயற்றப்பட்டுள்ளது.

நாலடியார் சுமதி சதகம் கடிந்துரைக்கும் பொதுமகளிர் குணங்கள்

சங்கம் மருவிய காலகட்டத்தில் இயற்றப்பட்ட அறநூல்கள் அனைத்திலும் பொதுமகளிர், கற்புடைய மகளிர் ஆகியவர்களுக்கெனத் தனியதிகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இஃது அக்காலச் சமூக நிலையையே சுட்டுகிறது. இதனைக் கவனித்த தமிழ்ப்புலவர்கள் தம்முடைய நூலில் பதிவு செய்துள்ளனர். நாலடியார் இன்பத்துப்பால் அதிகாரத்தில் மூன்று இயல்களில் இன்பநுகர்ச்சியைப் பற்றி இயற்றியுள்ளனர். பொதுமகளிர், கற்புடை மகளிர், காமநுதலியல் ஆகிய மூன்று அதிகாரங்கள் இன்பவியலைப் பற்றிப் பேசுகின்றன. இவற்றுள் பொதுமகளிர் என்னும் அதிகாரம் பரத்தமை ஒழிப்பு குறித்துப் பேசுகிறது.

விளக்கினது ஒளியும் வேசையர்களுடைய நட்பு ஆகிய இவ்விரண்டும் ஆராய்ந்து பார்த்தால் வேறுபட்ட வகையின அல்ல; நெய் இல்லாமல் போனால் விளக்கொளி மங்குவது போலச் செல்வம் குறைந்தால் வேசையரும் நட்பு நீங்குவர் என்னும் நாலடியார், இதனைப் பின்வரும் பாடல் மூலம் தெரிவிக்கிறது.

"விளக்கொளியும் வேசையர் நட்பும்,இரண்டும்
துளக்கற நாடின் வேறல்ல – விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே அறுமே அவரன்பும்
கையற்ற கண்ணே அறும்" (நாலடி. பா.எ.371)

இப்பாடலின் கருத்துக்கு எதிரொலியாகவே பெத்தனா சுமதி சதகத்துள் தலையளவு செல்வத்தைக் கொட்டி வழங்கினாலும் பொது மகளிரிடத்து உண்மை இருக்காது என்றும், தலைமேல் கைவைத்துச் சத்தியம் செய்தாலும் தாசிக்கு உண்மை இருக்காது என்றும் குறிப்பிடுகிறார். அப்பாடல் பின்வருமாறு,

"தலபொடுகு தனமு போஸின
வெலயாலிகி நிஜமு லேது விவரிம்பங்கா
தல தடிவி பாஸ ஜேஸின
வெலயாலினி நம்மராது வினரா ஸுமதீ" (சுமதி சதகம், 56)

நாலடியார், சுமதி சதகம் இரண்டும் குறிப்பிடக்கூடிய பொதுமகளிருக்கான பண்புகள் ஒன்றையொன்று ஒத்துக் காணப்படுகின்றன. செல்வம் உள்ள காலத்து மட்டுமே பொதுமகளிர் போற்றுவர், செல்வம் குறைந்த காலத்து நீங்கிவிடுவர் என்பதனையே சுமதி சதகமும் செல்வத்தைத் தலையளவுக் கொட்டி கொடுத்தாலும் அவர்களிடத்தில் உண்மை இருக்காது என்று குறிப்பிடுகிறது.

நாலடியார் சுமதி சதகம் உரைக்கும் பொதுமகளிரின் பொதுப்பண்புகள்

"நம்மோடு செம்மையான மலையுச்சியிலிருந்தும் ஒருசேர வீழ்ந்து உயிர்விடுவோம் என்று முன்னர்க் கூறியிருப்பர், ஆனால் இப்போது பொருள் இல்லாமையினால் செம்மையான மலையுச்சியின்மீது ஏறி வீழ்வதற்குத் துணிந்துள்ள எம்முடன் வந்து சேர மறுக்கின்றனர்" என்ற கருத்தைக் கொண்ட பாடல் வழியாகத் தன் செல்வமெல்லாம் வேசையரின் தொடர்பால் போக்கடித்துவிட்டு இறுதியில் மலையேறி வீழ்ந்து உயிர்விடத் துணிந்த ஒருவன் கூறுவதாக நாலடியார் பாடல் குறிப்பிடுகிறது. இதன் வழியாகப் பொதுமகளிரின் இன்பம் உண்மை அன்று என்ற கருத்தை வலியிறுத்துகிறார். மேலும் பொதுமகளிர் செல்வத்திற்கு மட்டுமே மகிழ்வைத்தருவர் என்ற கருத்து பெறப்படுகிறது. அப்பாடல் பின்வருமாறு,

அங்கோட் டகலல்குல் ஆயிழையாள், நம்மொடு
செங்கோடு பாய்துமே என்றாள்மன் – செங்கோட்டின்
மேற்காணம் இன்மையான் மேவாது ஒழிந்தாளே
காற்கானோய் காட்டிக் கலுழ்ந்து. (நாலடி,372)

நாலடியார் உணர்த்தும் பொதுமகளிரின் இன்பம் குறித்தான இப்பாடலின் பிரதிபிம்பமாய்ச் சுமதி சதகம் ஒரு பாடலை எடுத்துரைக்கிறது. "கொக்கோக சாத்திரம் (தெலுங்கில் காமநூல்) முழுதும் அறிந்தவனாயினும் மன்மதன் போல அழகு படைத்தவனாயினும் அரசனாக இருந்தாலும் செல்வத்தைக் கொடுக்காமல் பொதுமகளிர் அடிபணியமாட்டார்" என்ற கருத்தைக்கொண்ட பாடல் காணப்படுகிறது. பின்வருமாறு அப்பாடல்,

கொக்கோகமெல்ல ஜதிவின,
சக்கனிவாடைன, ராஜ சந்த்ருண்டைனந்,
மிக்கிலி ரொக்கமு லிய்யக,
சிக்கதுரா வாரகாந்த ஸித்தமு ஸுமதீ (சுமதி சதகம், 41)

நாலடியார் மற்றும் சுமதி சதகப் பாடல்கள் இரண்டுமே செல்வம் தீர்ந்த காலத்தில் பொதுமகளிர் விட்டு நீங்குவர் என்றும் செல்வம் இருக்கும் நேரத்தில் அவர்களால் கிடைக்கும் இன்பம் உண்மை இன்பம் இல்லை என்றும் பதிவு செய்துள்ளன. தமிழ்ச்சூழலிலிருந்த பரத்தையர் ஒழுக்கம் கூடா ஒழுக்கம் என்று கருதப்பட்டதைப்போல, தெலுங்கிலும் கருதப்பட்டுள்ளது. இவற்றைக் கண்டிக்க நினைத்த பெத்தனா தம்முடைய பாடல்களில் பரத்தமை ஒழிப்பைக் குறித்துள்ளார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கும் ஓரின மொழிகள் என்பது மொழியியளாலர்கள் கருத்து. இந்த ஆய்வில் இடம்பெற்ற தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் இயற்றப்பட்ட நாலடியார், சுமதி சதகத்தில் பொதுமகளிர் என்ற கருத்தாக்கத்தில் பெரிதும் வேறுபாடு இல்லை, இருநூல்களுக்கும் அடிப்படை ஒன்றாகவே உள்ளது. அவற்றை வெளிப்படுத்தும் வழிவகைகளில் மட்டும் மாற்றங்கள் உள்ளனவேயன்றி நோக்கம் ஒன்றாகவே உள்ளது.

முடிவுரை

சங்கச் சான்றோர்களும் ஒருவரிடமிருந்து இன்னொருவர் சொல்லையோ, தொடரையோ, அடியையோ, உவமையையோ, உருவகத்தையோ, கருத்தையோ கொள்வதைத் தவறாகக் கருதவில்லை. முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றும் மரபு அவர்களுடையது. ஹாரல்டு புளூம் எனும் அமெரிக்கத்

திறனாய்வாளர் கூறும் தாக்கக் கவலை (anxiety of influence) அவர்களை ஒரு நோயாகப் பீடித்துத் தொல்லைதரவில்லை. அவர்கள் பிறரிடமிருந்து பெற்றது பற்றி வருத்தமோ பெற்றதை மறைக்கவேண்டுமென்ற ஆதங்கமோ கொண்டு செயல்படவில்லை என்பதை அவர்கள் வெளிப்படையாகத் தாம் பட்ட கடனைத் தெரிவித்துக்கொள்ளும் இடங்களிலிருந்து தெரியலாம். அதே போலப் பிறமொழிக்கவிஞர்களும் தமிழ் மொழியிலிருந்து கருத்துகளைப் பெற்று எழுதிவந்துள்ளனர். தமிழ் தெலுங்கு இலக்கியங்களுக்கு இடையே உள்ள பொதுக்கூறுகளில் பொதுமகளிர் என்னும் கருத்தாக்கம் பெரும்பான்மையாக ஒத்துள்ளது. இரு வேறுபட்ட கவிஞர்களுக்கும் காலச்சூழல் வேறுபாடு இருப்பினும் வெவ்வேறு மொழிச்சூழலில் எழுதப்பட்டிருப்பினும் பாடலில் சுட்டப்பட்டுள்ள கருத்தின் தன்மைகள் வேறுபட்டிருப்பினும் நோக்கம் ஒன்றாகவே உள்ளதைப் பார்க்கமுடிகிறது. நாலடியார் பாடல்கள் சுட்டக்கூடிய அறங்களில் பொதுமகளிர் என்னும் கருத்தாக்கத்தினைச் சுமதி சதக்ககாரர் தம்முடைய சதகத்துள் பயன்படுத்தியிருப்பது இரு மொழிகளுக்கு இடையே ஏற்பட்ட பண்பாட்டு அரசியல் பரிமாற்றங்களே. தெலுங்கு இலக்கிய வரலாறு மகாபாரதத்திலிருந்து தொடங்குகிறது. ஆனால் இந்த நன்னய்யா பாரதம் வீர இராசேந்திரன் என்ற சோழ வம்சத்தில் வந்த மன்னன் ஆணையை ஏற்று நன்னாயாவால் இயற்றப்பட்டது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது பண்பாட்டுக்கலப்பும் மொழிக்கலப்பும் நிகழ்ந்தவண்ணம் இருந்துள்ளன. பெத்தனா தம் சதகத்தை இயற்ற, தமிழ்ச் செய்யுள்கள் ஒரு துணையாக இருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

துணைநின்ற நூல்கள்

1. ஆலிஸ், அ., **பதினெண்கீழ்க்கணக்குப் பொருட்களஞ்சியம்: நாலடியார்**, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2016.
2. சச்சிதானந்தன், வை., **ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம்)**, ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ், சென்னை, 1985.
3. சர்மா, சி. ஆர்., **தெலுங்கு இலக்கிய விருந்து**, ஐந்திணைப் பதிப்பகம், முதற்பதிப்பு, திருவல்லிக்கேணி, சென்னை, 1991.
4. தர்மா ரெட்டி, என்., **திருவள்ளுவர், வேமனர் – ஓர் ஒப்பாய்வு**, ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், திருப்பதி, 1984.
5. தீனதயாளு நாயுடு, **நாலடியார் மூலமும் உரையும்**, பி.எல். அருணாசல முதலியார் & பிரதர்ஸ், பேரக்ஸ் போஸ்டு, முதற்பதிப்பு, சென்னை, 1943.
6. மீனாட்சி சுந்தரனார் . தெ. பொ., **சமணத் தமிழ் இலக்கிய வரலாறு**.,பாரி நிலையம், சென்னை ,மறுபதிப்பு 2011.
7. நீலகண்டசாஸ்திரி, கே.ஏ. **தென் இந்திய வரலாறு,** ரிதம் வெளியீடு, சென்னை,2023.
8. Pope, G. U., **Naladiyar**, Clarendon Press, Oxford, First Edition, 1956.

© 2026 Thadsanamoorthi Matheshwaran, Ramesh Ganesan. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 486–492
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

புறநானூற்றில் கட்டுமானத் தொழில்நுட்பம்

Purananooril Kattumana Thozhilnutpam

அருள்செல்வம் ச[1,*], முனைவர் வீரப்பன் ஏ[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, பு. முட்லூர், சிதம்பரம்., *India*

[2] முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி, பு. முட்லூர், சிதம்பரம்., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: அருள்செல்வம் ச — arulselvam1215c@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
1 October 2026	—	3 October 2026	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
—	TAJP-2026-00066

ஆய்வுச்சுருக்கம்

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உணவு, உடைக்கு அடுத்த நிலையில் இருப்பிடத் தேவை அமைகிறது. இயற்கையாகக் கிடைத்த குகைகள், மரப்பொந்துகள் போன்றவற்றைப் பயன்படுத்தி வாழ்ந்த நிலையிலிருந்து, திட்டமிட்டு வீடுகள், மாடங்கள், மதில்கள், அரண்கள், அகழிகள் போன்றவற்றை உருவாக்கிய நிலைக்கு மனிதன் முன்னேறியபோது கட்டுமானத் தொழில்நுட்பம் உருவானது. பழந்தமிழரும் தமது வாழிடத் தேவைக்கும், பாதுகாப்பிற்கும் ஏற்றவாறு பல்வேறு கட்டுமான நுட்பங்களைக் கையாண்டுள்ளனர். அக்காலத்தில் காணப்பட்ட சிற்றில்கள், தூண்கள், உயரமான மாடங்கள், நெடுஞ்சுவர்கள், மண் கலவை, அரண்கள், அகழிகள், மதில்கள், போர்க்கருவிகள் பொருத்தப்பட்ட கோட்டைகள் போன்ற குறிப்புகள் பழந்தமிழரின் கட்டுமான அறிவை வெளிப்படுத்துகின்றன. இக்கட்டுரை பழந்தமிழரின் குடியிருப்பு அமைப்பு, தூண்கள் மற்றும் இல்லக் கட்டுமானம், நெடுஞ்சுவர்கள், உயரமான மாடங்கள், மண் கலவை மற்றும் கட்டுமானப் பொருட்கள், அரண் மற்றும் கோட்டை கட்டுமானம், படைக்கருவிகளுடன் கூடிய அரண்கள், நீர்நிலைக் கட்டுமானப் பொறியியல் ஆகியவற்றை புறநானூற்றின் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்வதாக அமைகிறது.

Keywords / திறவுச்சொற்கள்: Construction technology; Ancient Tamils; Residence; Pillar; Multi-storied structure (Māḍam); Tall wall; Mud mixture; Defense (Araṇ); Fortress; Rampart/Wall (Madil); Moat; Weaponry; Water-body construction.

Abstract

After food and clothing, the need for shelter is the most basic human necessity. Human beings progressed from living in naturally available caves and tree hollows to planning and constructing houses, mansions, walls, fortifications, and moats, which led to the birth of construction technology.

The ancient Tamils employed various construction techniques tailored to their living requirements and security needs. Literary references from that era regarding small houses,

pillars, tall mansions, long walls, mud mortar, fortifications, moats, ramparts, and forts equipped with weapons reveal the architectural and engineering knowledge of the ancient Tamils.
Based on evidence from the Sangam literature Purananuru, this article explores the ancient Tamils' settlement structures, pillars and house construction, long walls, tall mansions, mud mortar and building materials, fortress and rampart construction, weapon-equipped fortifications, and water body engineering.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ச, அ., & ஏ, மு. வீ. (2026). புறநானூற்றில் கட்டுமானத் தொழில்நுட்பம். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 485–491. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8551

முன்னுரை

உமணர் வெரூஉம் துறையன்னன்னே!" (புறநானூறு .84)

புறநானூறு 84-ஆம் பாடலும் நக்கண்ணையாரின் கைக்கிளைத் தொடரில் இடம்பெறுகிறது; பாடல் 83 போலவே இங்கும் திணை கைக்கிளை, துறை பழிச்சுதல் எனக் குறிக்கப்படுகிறது. ஆனால் குரல் வெளிப்பாட்டின் மையம் இங்கு சிறிது மாறுகிறது. தலைவனுடைய பெருந்தோள், போர்த்திறன், வீரச்சிறப்பு ஆகியவைப் புகழப்படுவதன் வழியாகப் பேசுபவளின் ஈடுபாடு வெளிப்படுகிறது.

இப்பாடலை வாசிக்கும்போது "புகழ்ச்சி = காதல்" என்று எளிய சமன்பாடு அமைப்பது தவிர்க்கப்பட வேண்டும். புகழ்ச்சி தன்னிச்சையாகவே வீரத்தைப் பதிவு செய்யும் புறப்பாடல் நடை கொண்டிருக்கலாம். ஆனால் இத்திணைச் சூழலில் அந்தப் புகழ்ச்சி பேசுபவளின் தனிப்பட்ட ஈடுபாட்டோடு இணைந்து செயல்படுகிறது. ஆகவே தலைவனைப் பற்றிய புகழுரை, அவனிடம் செலுத்தப்படும் உள்ளார்ந்த ஈடுபாட்டிற்கு ஒரு மொழிவழியாக அமைகிறது என்று கூறுவது பொருத்தமாகும்.

இதன் மூலம் கைக்கிளையின் குரல் வெளிப்பாடு நேரடிக் காதல் சொல்லாக்கத்தில் மட்டும் நடைபெறாது என்பதும் தெளிவாகிறது. எதிர்மொழி இல்லாத நிலையில் உணர்வு வேறு சொல்லாக்க வடிவத்தைத் தேர்ந்தெடுக்கலாம்; இங்கு அந்த வடிவம் தலைவனின் வீரச்சிறப்பைப் புகழ்வதாக அமைந்துள்ளது. இதுவே **"சொல்லி**

இன்புறல்” என்ற தொடரின் இலக்கியப் பரிமாணத்தை விரிவுபடுத்தும் இடமாகக் கொள்ளத்தக்கது.

பிறர்மொழியும் தன்குரலும்:

“என் ஐக்கு ஊர் இஃது அன்மையானும்,

என் ஐக்கு நாடு இஃது அன்மையானும்,

ஆடுஆடு என்ப ஒரு சாரோரே;

ஆடன்று என்ப ஒரு சாரோரே;

நல்ல பல்லோர் இருநன் மொழியே;

அம்சிலம்பு ஒலிப்ப ஓடி, எம்இல்

முழாஅரைப் போந்தை பொருந்தி நின்று,

யான்கண்டனன் அவன் ஆடாகுதலே.” (புறநானூறு 85)

இப் பாடலில் பிறருடைய பலவகைப் பேச்சுகள் முதலில் இடம்பெறுகின்றன. ஒருவர் தலைவன் வெற்றி பெற்றான் என்கிறார்; மற்றொருவர் அதனை மறுக்கிறார். இந்த மாறுபட்ட பிறர்மொழிகளின் மத்தியில் பேசுபவளின் சொந்தக் காட்சி இறுதியில் முன்னிலைப்படுகிறது: “யான்கண்டனன் அவன் ஆடாகுதலே” இங்கு பிறர்மொழி என்பது பேசுபவளின் குரலை அழித்துவிடவில்லை. மாறாக, அவள் காண்பதும் உணர்வதும் பிறருடைய கருத்துகளுக்கிடையே தன் சொந்த அனுபவமாக வேறுபடுகிறது. இதனால் கைக்கிளையின் குரல் ஒரே தனிக்குரலாக மட்டுப்படாமல், பிறரின் மொழியால் சூழப்பட்ட தன்குரலாகவும் அமைவதைப் பாடல் காட்டுகிறது.

இப்பாடலின் சிறப்பு, வெளிப்பாட்டின் அடுக்குமுறையில் உள்ளது. முதலில் சமூகச் செய்தி; அதன் பின் மாறுபட்ட கருத்துகள்; இறுதியில் தனிப்பட்ட காட்சி. இந்த அமைப்பு, கைக்கிளையின் உணர்வு எவ்வாறு சமூக மொழிகளின் இடையே தன் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்கிறது என்பதை விளக்குகிறது. இங்கு எதிர்மொழி என்பது தலைவனிடமிருந்து வர வேண்டிய பதிலாக அல்லாமல், சமூகத்தில் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கும் பலவகைச் சொற்களின் வடிவத்திலும் தோன்றுகிறது. அவற்றைத் தாண்டி பேசுபவளின் பார்வை நிலைபெறுகிறது.

தொல்காப்பியமும் புறநானூறும்: ஒற்றுமையும் வேறுபாடும்:

தொல்காப்பியக் கைக்கிளை வரையறையும் புறநானூறு 83,84,85 பாடல்களும் முற்றிலும் தொடர்பற்றவை என்று கூறுவதற்கும் ஆதாரம் இல்லை; அவை ஒன்றே ஒரே வடிவம் என்று கூறுவதற்கும் போதிய ஆதாரம் இல்லை. இரண்டிலும் ஒருபக்க உணர்வு, நிறைவேறாத உறவு, சொல்லாக்கத் தொடர்ச்சி ஆகிய மையக் கூறுகளை ஒப்புநோக்க முடியும். ஆனால் அவற்றின் இலக்கியச் சூழல், பேசுபவரின் நிலை, வெளிப்பாட்டு வடிவம் ஆகியவை வேறுபடுகின்றன.

முக்கியமாக “காமஞ் சாலா இளமையோள்” என்னும் தொடர் நச்சினார்க்கினியரின் உரையில் குறிப்பிட்ட இளமைப்பிராய நிலையைச் சுட்டுகிறது; புறநானூறு 83,84,85 பாடல்களில் காணப்படும் பெண் குரலை அதே நிலையின் நேரடி மறுபதிப்பாகக் கருத முடியாது. இதனால் இலக்கண வரையறை, உரையாசிரியர் விளக்கம், இலக்கியப் பயன்பாடு என்ற மூன்று தளங்களையும் தனித்தனியாக அடையாளப்படுத்துவது அவசியமாகிறது. அதேவேளையில் **“சொல்எதிர்**

பெறாஅன் சொல்லி இன்புறல்” என்ற கூறு கைக்கிளையின் குரல் அமைப்பை இணைக்கும் வலுவான கருத்துப் பாலமாக அமைகிறது. எதிர்மொழி இல்லாத நிலையிலும் குரல் தன் உணர்வைத் தொடர்ந்து வடிவமைத்துக் கொள்கிறது என்ற வாசிப்பு, 83இல் அச்சம்–நாணம் வழியாகவும், 84இல் புகழ்ச்சி வழியாகவும், 85இல் பிறர்மொழி சூழ்ந்த தன்காட்சி வழியாகவும் விளங்குகிறது. இதுவே இலக்கணமும் இலக்கியமும் இடையே ஒருங்கிணைப்பை உருவாக்கும் ஆய்வியல் நிலையாக அமைகிறது.

முடிவுரை:

கைக்கிளையைப் பற்றிய பொதுவான புரிதல் “ஒருதலைக் காதல்” என்ற சொல்லில் தங்கிவிடும் நிலையில், தொல்காப்பிய நூற்பாவையும் நச்சினார்க்கினியர் உரையையும் புறநானூறு 83,84,85 பாடல்களையும் குரல் வெளிப்பாட்டு நோக்கில் இணைத்துப் படிக்கும் போது அதன் இலக்கிய இயக்கம் இன்னும் நுட்பமானதாக வெளிப்படுகிறது. கைக்கிளையில் உணர்வு தோன்றுவது மட்டுமே முக்கியமல்ல; அந்த உணர்வு எவ்வாறு சொல்லாகிறது, அந்தச் சொல்லுக்கு என்ன எதிர்வினை வருகிறது, எதிர்வினை இல்லாதபோது குரல் எவ்வாறு தொடர்கிறது என்பவையும் முக்கியமானவை. “சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்” என்ற தொல்காப்பியக் கூறும் அதற்கான நச்சினார்க்கினியர் உரையும், கைக்கிளையின் குரல் பதில் இல்லாமையால் அழிந்து போகாமல் தன்னையே தொடர்ந்து உருவாக்கிக் கொள்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இக்குரல் 83ஆம் பாடலில் அச்சம் மற்றும் நாணத்தின் வழியாகவும், 84ஆம் பாடலில் புகழ்ச்சியின் வழியாகவும், 85ஆம் பாடலில் பிறர்மொழிகளுக்கு இடையில் தன்காட்சியின் வழியாகவும் வெளிப்படுகிறது.

“காமஞ் சாலா இளமையோள்” என்னும் தொடர் தொடர்பான பொருள் சிக்கலைத் தெளிவுபடுத்தியதும் இவ்வாய்வின் முக்கியமான விளைவாகும். நச்சினார்க்கினியர் உரையைத் தவறாமல் பதிவு செய்து, அதனை நவீனப் பொருள் வகைப்பாடுகளோடு கலப்பதையும், புறநானூறு 83,84,85 பாடல்களோடு இயந்திரமாக ஒன்றிணைப்பதையும் தவிர்ப்பதன் மூலம் இலக்கண வரையறை மற்றும் இலக்கியப் பயன்பாடு ஆகியவற்றின் வேறுபாடு தெளிவடைகிறது.

இதனடிப்படையில் கைக்கிளையை வெறும் நிறைவேறாத காதலின் பெயராக அல்லாது, எதிர்மொழி இல்லாதபோதும் உணர்வு தொடர்ந்து தன்னை மொழியாக்கிக் கொள்ளும் இலக்கிய நிலையாகப் பார்க்க முடிகிறது. இவ்வாசிப்பு கைக்கிளையின் “குரல்” என்பதைக் காதல் உணர்வின் ஒரு துணைக் கூறாக அல்லாமல், அதன் இலக்கியத் தோற்றத்தையே வடிவமைக்கும் மையச் செயல்முறையாகக் கருத்தில் கொள்ள வழிவகுக்கிறது.

துணை நூற்பட்டியல்:

1. தொல்காப்பியர். தொல்காப்பியம் – பொருளதிகாரம்: அகத்திணையியல் & புறத்திணையியல். நச்சினார்க்கினியர் உரை. திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், இரண்டாம் பதிப்பு, 1955.
2. புலியூர்க்கேசிகன் (உரை). புறநானூறு – மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2010.
3. நாற்கவிராச நம்பி - அகப்பொருள் விளக்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1997

முன்னோடி ஆய்வுகள்:

1. ஐயப்பன், கே. “தமிழ் இலக்கியத்தில் கைக்கிளை.” Shanlax International Journal of Tamil Research, தொகுதி 8, இதழ் 1, 2023, பக். 71–84.
2. ப. முரளிகிருஷ்ணன், ச. ரேணுக – “மெய்ப்பாட்டியல் மற்றும் சங்க இலக்கியத் தரவுகள் வழி கைக்கிளைக் கோட்பாடு” Tamilmanam International Research Journal of Tamil Studies, தொகுதி 7, இதழ் 2, 2026, பக். 404–415. DOI: 10.63300/tm09012026.17.

© 2026 Mr . MOHANRAJ M, Dr.GOTHANDARAMAN S. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 512–520
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

அறநூல்களில் (நட்பு) – ஓர் ஆய்வு

ஏ.வி எஸ் கலை அறிவியல்*
தன்னாட்சி சேலம்-106

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00096	

ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வு தமிழ் அறநூல்களில் இடம்பெறும் நட்புக் கருத்துகளை ஆய்வு செய்கிறது. குறிப்பாக திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி போன்ற நூல்களில் கூறப்படும் நட்பின் சிறப்புகள் இவ்வாய்வில் எடுத்துரைக்கப்படுகின்றன. உண்மையான நட்பிற்கு அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, நன்றியுணர்வு மற்றும் நல்லறிவுரை ஆகியவை அடிப்படையாக இருப்பது விளக்கப்படுகிறது. நல்ல நட்பையும் தீய நட்பையும் வேறுபடுத்திப் பார்ப்பதுடன், ஒருவரை நண்பராக ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அவருடைய பண்புகளையும் செயல்களையும் ஆராய வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. மேலும் துன்பக் காலத்தில் நட்பு, மாணவர் வாழ்க்கையில் நட்பு மற்றும் இன்றைய தொழில்நுட்ப உலகில் நட்பின் மாற்றங்கள் பற்றியும் இவ்வாய்வு குறிப்பிடுகிறது. காலம் மாறினாலும் உண்மையான நட்பின் அடிப்படை மதிப்புகளான அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, நன்றியுணர்வு ஆகியவை மாறுவதில்லை என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

Abstract

This study examines the concept of friendship as presented in Tamil ethical literature, with particular reference to works such as the Thirukkural, Naladiyar, Pazhamozhi Nanuru, Iniyavai Narpathu, Sirupanchamoolam and Elathi. The study explains the importance of love, trust, honesty, mutual help, gratitude and moral guidance in true friendship. It also distinguishes genuine friendship from harmful friendship and highlights the need to examine a person's character before accepting them as a friend. The study further discusses friendship in times of difficulty, student life and the modern digital world. It concludes that although the forms of friendship may change with time, its basic values remain constant and continue to guide individuals towards good conduct and social harmony.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: அறிவியல், ஏ. எ. க. (2026). அறநூல்களில் (நட்பு) – ஓர் ஆய்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 511–519. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8557

முன்னுரை

மனித வாழ்க்கையில் அன்பு, அறம், ஒழுக்கம், பண்பு, நட்பு ஆகியவை மிகவும் இன்றியமையாதவை. மனிதன் தனித்து வாழ முடியாதவன். பிற மனிதர்களுடன் உறவு கொண்டு, அவர்களுடைய உதவியையும் ஆதரவையும் பெற்று வாழ்கிறான். அந்த உறவுகளில் மிகவும் சிறப்பான ஒன்றாக நட்பு விளங்குகிறது.

நட்பு என்பது வெறும் பழக்கத்தின் அடிப்படையில் உருவாகும் உறவு அல்ல. ஒருவருடைய துன்பத்திலும் இன்பத்திலும் துணை நிற்பதும், தவறு செய்யும்போது சுட்டிக்காட்டுவதும், ஆபத்துக் காலத்தில் கைவிடாமல் இருப்பதும் உண்மையான நட்பின் அடையாளங்களாகும்.

தமிழ் இலக்கியங்களில் நட்பிற்கு மிக உயர்ந்த இடம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக அறநூல்கள் மனித வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு அறக்கருத்துகளை எடுத்துரைக்கின்றன. அவற்றுள் நட்பு பற்றிய கருத்துகள் மிகவும் முக்கியமானவை.

நட்பு மனிதனின் மனவளர்ச்சிக்கும் சமூக வாழ்விற்கும் அடிப்படையாக அமைகிறது. நல்ல நண்பர்கள் ஒருவரின் எண்ணங்களைச் செம்மைப்படுத்தி, நல்ல செயல்களைச் செய்யத் தூண்டுகின்றனர். எனவே தமிழறநூல்களில் நட்பு எவ்வாறு சித்தரிக்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்வது பயனுடையதாகும்.

தமிழில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை அறக்கருத்துகளை எடுத்துரைப்பவை. சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றிய இந்நூல்கள் மனித வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளன.

அறநூல்கள் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், பிறரிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், நல்ல பண்புகளை எவ்வாறு வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பவற்றை விளக்குகின்றன. அன்பு, ஈகை, நட்பு, பொறுமை, உண்மை, ஒழுக்கம், கல்வி, நன்றி, பணிவு, பிறருக்கு உதவுதல் போன்றவை அவற்றின் முக்கிய அறங்களாகும்.

இந்நூல்களின் சிறப்பு என்னவென்றால், அவை வாழ்க்கையின் நடைமுறைச் சிக்கல்களை எளிய சொற்களில் எடுத்துரைக்கின்றன. மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் ஒருங்கிணைத்து நல்லொழுக்கத்தை உருவாக்குகின்றன.

நட்பு – பொருள் மற்றும் சிறப்பு

‘நட்பு’ என்பது ஒருவருடன் ஒருவர் அன்புடனும் நம்பிக்கையுடனும் பழகுகின்ற உறவைக் குறிக்கிறது. நட்பில் அன்பு, நம்பிக்கை, துணைநிற்றல் ஆகியவை முக்கியமான கூறுகளாகும்.

ஒருவருடைய மகிழ்ச்சியில் மட்டும் பங்கேற்பது நட்பு அன்று. அவருடைய துன்பத்திலும் அவருக்கு ஆதரவாக இருப்பதே உண்மையான நட்பு. உண்மையான நண்பன் நமது வெற்றியைக் கண்டு மகிழ்வான்; தோல்வியைக் கண்டு வருந்துவான்; நாம் தவறு செய்யும்போது அதனை மறைக்காமல் சுட்டிக்காட்டுவான்.

நட்பு மனிதனுக்கு மனத்துணையையும் பாதுகாப்பு உணர்வையும் அளிக்கிறது. வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகள் ஏற்படும் போது நண்பனின் ஊக்கம் மிகப்பெரிய ஆற்றலாக அமைகிறது. இதனால் நட்பு மனித வாழ்க்கையின் அடிப்படை உறவுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

திருக்குறளில் நட்பு

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் உலகப் பொதுமறையாகப் போற்றப்படுகிறது. இதில் நட்பிற்கு தனி அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. நட்பாராய்தல், நட்பு, பழைமை, கூடாநட்பு என நட்பின் பல்வேறு நிலைகள் விளக்கப்படுகின்றன.

ஒருவரை நண்பராக ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அவரது குணநலன்களை ஆராய வேண்டும் என்பது திருக்குறளின் முக்கியமான கருத்தாகும்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு. (குறள்- 786)

வெளிப்புறத் தோற்றஅல்லதுஇனிமையான பேச்சு மட்டுமே ஒருவரை நல்ல நண்பணாக்காது. அவருடைய செயல்கள், ஒழுக்கம், நம்பகத்தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர் நட்பின் உண்மையான தன்மையை துன்பத்திலும் நன்மையிலும் வெளிப்படும் துணையாகக் காட்டுகிறார். நண்பனின் தவறைச் சுட்டிக்காட்டுவது அவனுக்கு எதிராக இருப்பது அல்ல; அவனுடைய நலனை விரும்புவதன் அடையாளமாகும்.

நட்பாராய்தல்

ஒருவரை நண்பராக ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அவருடைய பண்புகளை ஆராய வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். ஒருவரின் வெளிப்புறத் தோற்றத்தைக் கொண்டு அவரை நண்பராக ஏற்றுக் கொள்ளக் கூடாது. அவருடைய குணநலன்கள், செயல்கள், ஒழுக்கம், நம்பகத்தன்மை ஆகியவற்றை அறிந்த பிறகே நட்பு கொள்ள வேண்டும்.

நட்பைத் தேர்ந்தெடுப்பதில் அவசரம் காட்டினால் பின்னர் வருத்தம் ஏற்படலாம். ஒருவருடைய நல்ல பண்புகளை நீண்ட காலத்தில் அறிந்து கொள்வதே சிறந்தது. நண்பன் நம்முடைய முன்னேற்றத்தை விரும்புகிறானா, தவறான செயல்களைத் தடுக்கிறானா, நெருக்கடியான நேரத்தில் உதவுகிறானா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இந்தக் கருத்து இன்றைய சமூகத்திற்கும் மிகவும் பொருத்தமானது. சமூக ஊடகங்களில் எளிதாக உருவாகும் தொடர்புகள் அனைத்தும் உண்மையான நட்பாக இருக்க வேண்டிய அவசியமில்லை. எனவே அறநூல்கள் கூறும் நட்பாராய்தல் என்ற கொள்கை இன்றும் அவசியமானதாகும்.

உண்மையான நட்பு

உண்மையான நண்பன் நம்முடைய நன்மையை மட்டுமே விரும்புவான். நாம் தவறான வழியில் செல்லும்போது அதைத் தடுத்து நல்வழிப்படுத்துவான். நண்பனின் குறைகளை நேர்மையாக எடுத்துரைப்பதும் உண்மையான நட்பின் அடையாளமாகும்.

உண்மையான நட்பில் எதிர்பார்ப்பு குறைவாகவும் அன்பு அதிகமாகவும் இருக்கும். நண்பனுடைய வெற்றியைத் தனக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதி மகிழ்வதும், அவனுடைய தோல்வியில் மனமுடைந்து துணை நிற்பதும் நல்ல நட்பின் இயல்பாகும்.

நட்பின் வலிமை காலப்போக்கில் வெளிப்படும். இன்பமான சூழ்நிலையில் மட்டும் பழகுபவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் துன்பம், தோல்வி, பொருளாதாரச் சிக்கல்

போன்ற நேரங்களிலும் விலகாமல் இருப்பவர்களே உண்மையான நண்பர்கள்.

கூடாநட்பு

வெளியில் நண்பராகத் தோன்றியும் உள்ளத்தில் பகைமை கொண்டிருப்பவர்கள் உள்ளனர். இத்தகைய நட்பு மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியது. நண்பனின் பண்புகளை ஆராயாமல் பழகினால் பின்னர் துன்பம் ஏற்படலாம்.

பொறாமை, சுயநலம், பொய், துரோகம், தவறான செயல்களுக்கு ஊக்கம் அளித்தல் போன்றவை தீய நட்பின் அடையாளங்களாகும். இத்தகைய உறவு மனிதனுடைய வாழ்க்கை முன்னேற்றத்தைத் தடுக்கும்.

எனவே, நமக்கு தீங்கு விளைவிக்கும் நட்பிலிருந்து விலகுவதும் அறநெறியின் ஒரு பகுதியாகும். நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதோடு, தீய நட்பை அடையாளம் காணும் அறிவும் மனிதனுக்கு தேவை.

நாலடியாரில் நட்பு

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முக்கியமான அறநூலாகும். இது மனித வாழ்க்கையின் நிலையாமை, அறம், ஒழுக்கம், நட்பு போன்ற பல கருத்துகளை எடுத்துரைக்கிறது

பாடல் (கருத்துணர்ந்து கற்றரிந்தார் கேண்மை-211)

நல்லவர்களுடன் பழகும்போது அவர்களின் நல்ல பண்புகள் நம்மிடமும் உருவாகும். அதேபோல் தீயவர்களுடன் பழகினால் அவர்களின் தீய பண்புகள் நம்மையும் பாதிக்கக்கூடும். எனவே மனிதனுடைய குணநலன்களை உருவாக்குவதில் நட்பின் பங்கு அதிகம் என்பதை நாலடியார் உணர்த்துகிறது.

நட்பு என்பது ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய சக்தியாகவும் தாழ்த்தக்கூடிய சக்தியாகவும் இருக்கிறது. நல்ல நண்பர்களின் தொடர்பு அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்க்கிறது.

பழமொழி நானூற்றில் நட்பு

பழமொழி நானூறு பல பழமொழிகளின் வழியாக வாழ்க்கை அனுபவங்களை எடுத்துரைக்கும் அறநூலாகும். இதில் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது, தீயவர்களை விலக்குவது, நண்பர்களின் நம்பகத்தன்மை போன்ற கருத்துகள் இடம்பெறுகின்றன.

நல்ல நண்பர்கள் அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்க்க உதவுவார்கள்; தீய நண்பர்கள் தவறான செயல்களுக்கு அழைத்துச் செல்லக்கூடும். மனிதன் யாருடன் பழகுகிறான் என்பதைப் பொறுத்தே அவனுடைய எண்ணங்களிலும் செயல்களிலும் மாற்றம் ஏற்படலாம்.

அனுபவத்தின் மூலம் பெறப்பட்ட அறிவுரைகளைப் பழமொழிகளின் வடிவில் வழங்குவது இந்நூலின் சிறப்பு. எனவே நட்பு தொடர்பான நடைமுறை அறிவையும் இந்நூல் வழங்குகிறது.

இனியவை நாற்பதில் நட்பு

இனியவை நாற்பது மனித வாழ்க்கையில் இனிமையான செயல்கள் எவை என்பதை எடுத்துரைக்கும் நூலாகும். நல்லவர்களுடன் பழகுதல், பெரியோர்களை மதித்தல், பிறருக்கு உதவுதல் போன்றவை இனிய செயல்களாகக் கருதப்படுகின்றன.

(நட்டார் இனியவை செய்தல் இனிது - பாடல் 11)

நண்பர்களிடையே அன்பு, மரியாதை, நம்பிக்கை ஆகியவை இருக்கும்போது நட்பு நீண்ட காலம் நிலைத்திருக்கும். நண்பனிடம் இனிமையாகப் பேசுவதும், அவனுடைய உணர்வுகளை மதிப்பதும் நட்பை வலுப்படுத்தும்.

நல்ல உறவுகளை வளர்ப்பது தனிமனித மகிழ்ச்சிக்கும் சமூக ஒற்றுமைக்கும் வழிவகுக்கிறது. எனவே இனியவை நாற்பதில் காணப்படும் அறக்கருத்துகள் நட்பு வாழ்வுக்கும் வழிகாட்டுகின்றன.

சிறுபஞ்சமூலம் மற்றும் ஏலாதியில் நட்பு

சிறுபஞ்சமூலம் மனித வாழ்க்கைக்குத் தேவையான பல அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் நூலாகும். நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல், தீய செயல்களைத் தவிர்த்தல், நல்லவர்களுடன் பழகுதல் போன்ற கருத்துகள் இதில் வலியுறுத்தப்படுகின்றன. நல்ல நண்பர்கள் வழிகாட்டிகளாக இருக்க முடியும்.

ஏலாதி அறநெறிகளை எடுத்துரைக்கும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். மனிதனுடைய வாழ்க்கையில் ஒழுக்கமும் நல்ல பண்புகளும் முக்கியம் என்பதை இந்நூல் எடுத்துரைக்கிறது. நல்ல நண்பர்களுடன் பழகுவதன் மூலம் நல்ல எண்ணங்களும் செயல்களும் உருவாகின்றன.

இவ்விரு நூல்களும் நட்பை தனியாக மட்டும் பார்க்காமல், நல்ல வாழ்க்கையை உருவாக்கும் சமூகத் தொடர்பின் ஒரு பகுதியாகக் காட்டுகின்றன.

நல்ல நட்பின் பண்புகள்

அறநூல்கள் கூறும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நல்ல நட்பின் பண்புகளை அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, பொறுமை, ரகசியம் காத்தல் ஆகியவையாகக் குறிப்பிடலாம்.

அன்பில்லாத நட்பு நீண்ட காலம் நிலைக்காது. நம்பிக்கை இல்லாத இடத்தில் உண்மையான நட்பு உருவாகாது. தவறு செய்தால் சுட்டிக்காட்டுவதும், தேவைப்படும் நேரத்தில் உதவுவதும் நட்பின் முக்கிய பண்புகளாகும்.

நண்பனுடைய தனிப்பட்ட விஷயங்களை அனுமதியின்றி பிறரிடம் பகிராமல் இருப்பதும் முக்கியமான பண்பாகும். கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் மரியாதையுடன் பேசுவது நட்பை பாதுகாக்கும்

தீய நட்பின் தன்மைகள்

நம்மைத் தவறான செயல்களுக்கு அழைத்துச் செல்லுதல், நம்முடைய வெற்றியைப் பொறாமைப்படுதல், தேவையான நேரத்தில் கைவிடுதல், ரகசியங்களை வெளிப்படுத்துதல், தவறுகளை ஊக்குவித்தல், பணத்திற்காக மட்டும் பழகுதல் போன்றவை தீய நட்பின் அடையாளங்களாகும்.

தீய நண்பர்களின் தாக்கம் முதலில் சிறியதாகத் தோன்றினாலும் காலப்போக்கில் வாழ்க்கையில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தலாம். குறிப்பாக மாணவர்களின் படிப்பு, ஒழுக்கம், எதிர்கால இலக்கு ஆகியவை பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

எனவே நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் அறிவும் பொறுப்புணர்வும் அவசியம். தவறான நட்பை விட்டு விலகுவது சில நேரங்களில் கடினமாக இருந்தாலும் அது நல்வாழ்விற்குத் தேவையான முடிவாகும்.

நட்பும் நம்பிக்கையும்

நட்பு நிலைத்திருப்பதற்கு நம்பிக்கை மிகவும் முக்கியமானது. ஒரு நண்பன் மற்றொரு நண்பனை நம்பும்போது இருவருக்கும் இடையே ஆழமான உறவு

உருவாகிறது. நம்பிக்கையை ஒருமுறை இழந்துவிட்டால் அதனை மீண்டும் பெறுவது கடினம்.

நண்பர்களிடையே உண்மையும் நேர்மையும் இருக்க வேண்டும். ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு இருந்தாலும் பொய்யாக நடந்து கொள்வதைவிட வெளிப்படையாகப் பேசுவது நல்லது. நம்பிக்கையைப் பாதுகாப்பது இருவருடைய பொறுப்பாகும்.

நம்பிக்கையுடன் கூடிய நட்பு மன அமைதியையும் பாதுகாப்பு உணர்வையும் தருகிறது. இதனால் மனிதன் தன்னுடைய எண்ணங்களையும் கவலைகளையும் நண்பனிடம் பகிர்ந்து கொள்ள முடிகிறது.

துன்பத்தில் நட்பு

நட்பின் உண்மையான தன்மையை அறிய துன்பக் காலம் சிறந்த அளவுகோலாகும். ஒருவர் வெற்றியடைந்திருக்கும்போது அவரைச் சுற்றி பலர் இருப்பார்கள். ஆனால் அவர் தோல்வியடைந்தபோது அல்லது துன்பத்தில் இருக்கும்போது அவருடன் இருப்பவர்கள் உண்மையான நண்பர்கள்.

துன்பத்தில் நண்பனுக்கு ஆறுதல் கூறுதல், தேவையான உதவியைச் செய்தல், மனதைத் தளர விடாமல் ஊக்கப்படுத்துதல் ஆகியவை உண்மையான நட்பின் அடையாளங்கள்.

ஒரு நண்பனின் பிரச்சினையைத் தீர்க்க முடியாவிட்டாலும், அவனுடன் இருப்பது மட்டுமே அவனுக்கு பெரிய ஆறுதலாக இருக்கலாம். இதனால் நட்பு மனிதனுக்கு மனவலிமை அளிக்கும் உறவாக விளங்குகிறது.

நட்பும் அறிவுரையும் நன்றியும்

நண்பர்கள் ஒருவருக்கொருவர் அறிவுரை வழங்க வேண்டும். தவறான முடிவு எடுக்கும்போது நண்பன் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டும். நண்பனுடைய கோபத்திற்குப் பயந்து உண்மையைச் சொல்லாமல் இருப்பது உண்மையான நட்பு அல்ல.

நல்ல நண்பனுடைய அறிவுரை சில நேரங்களில் கடுமையாகத் தோன்றினாலும் அது நன்மையை ஏற்படுத்தும். அதேபோல் நண்பன் செய்த உதவியை மறக்காமல் இருப்பது நன்றியுணர்வாகும்.

நண்பர்களிடையே ஒருவருக்கொருவர் உதவுவது இயல்பானதாக இருந்தாலும், செய்த உதவியை மதிப்பதும் நினைவில் வைத்திருப்பதும் நல்ல பண்பாகும். நன்றியுணர்வு நட்பை மேலும் வலுப்படுத்துகிறது.

சங்க இலக்கியத்தில் நட்பு

சங்க இலக்கியங்களில் நட்பு உயர்ந்த நிலையில் பேசப்பட்டுள்ளது. பிசிராந்தையார் – கோப்பெருஞ்சோழன் நட்பு மிகவும் புகழ்பெற்றது. இருவரும் நேரில் அதிகம் சந்திக்காத நிலையிலும் அவர்களுக்கிடையே ஆழமான நம்பிக்கையும் அன்பும் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

உண்மையான நட்பு என்பது உடல் நெருக்கத்தை மட்டுமே சார்ந்தது அல்ல; மன ஒற்றுமையையும் நம்பிக்கையையும் சார்ந்தது என்பதை அறியலாம். சங்க இலக்கியப் பார்வையில் நண்பன் என்பது வாழ்வின் முக்கியமான துணையாகக் கருதப்படுகிறான்.

இந்த நட்புக் கருத்துகள் தமிழரின் பண்பாட்டில் மனித உறவுகளுக்கு வழங்கப்பட்ட

உயர்ந்த இடத்தை வெளிப்படுத்துகின்றன.

இன்றைய காலத்தில் நட்பு

இன்றைய நவீன உலகில் நட்பின் வடிவம் மாறியுள்ளது. சமூக ஊடகங்கள், இணையம், கைப்பேசி போன்ற தொழில்நுட்ப வளர்ச்சிகளால் உலகின் பல பகுதிகளில் உள்ளவர்களுடன் எளிதாக நட்பு கொள்ள முடிகிறது.

ஆனால் இணையத்தில் உள்ள அனைவரும் உண்மையான நண்பர்கள் என்று கருத முடியாது. நேரில் பழகும் நட்பிலும் இணைய நட்பிலும் நம்பிக்கை, பாதுகாப்பு, தனியுரிமை போன்றவற்றில் கவனம் தேவை.

அறநூல்கள் வலியுறுத்தும் 'நட்பாராய்தல்' என்ற கருத்து இன்றைய காலத்திற்கும் மிகவும் பொருத்தமானதாக உள்ளது. ஒருவரின் வார்த்தைகளைக் காட்டிலும் செயல்களைப் பார்த்து அவருடைய பண்பை அறிந்து கொள்வது அவசியம்.

மாணவர் வாழ்க்கையில் நட்பு

மாணவர் வாழ்க்கையில் நண்பர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. நல்ல நண்பர்கள் படிப்பில் உதவுவார்கள், தேர்வுக்கு தயாராக ஊக்குவிப்பார்கள், தவறான பழக்கங்களிலிருந்து விலக்குவார்கள், மனம் தளரும் நேரங்களில் ஆறுதல் அளிப்பார்கள், வாழ்க்கை இலக்குகளை அடைய ஊக்கமளிப்பார்கள்.

அதே சமயம் தீய நண்பர்கள் மாணவர்களைப் படிப்பிலிருந்து விலக்கி தவறான பழக்கங்களுக்கு அழைத்துச் செல்லலாம். எனவே மாணவர்கள் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நல்ல நண்பர்களுடன் இணைந்து படிப்பது, கருத்துகளைப் பகிர்வது, அறிவை வளர்த்துக் கொள்வது ஆகியவை கல்வி முன்னேற்றத்திற்கு உதவுகின்றன. நட்பு கல்வியையும் நல்லொழுக்கத்தையும் இணைக்கும் சக்தியாக அமைய வேண்டும்.

நட்பின் சமூகப் பயன்

நட்பு தனிமனிதனுக்கு மட்டுமல்லாமல் சமூகத்திற்கும் பயனளிக்கிறது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்யும்போது சமூகத்தில் ஒற்றுமை உருவாகிறது.

நட்பு மனிதர்களிடையே அன்பை வளர்க்கிறது, ஒற்றுமையை உருவாக்குகிறது, பகைமையை குறைக்கிறது, உதவும் மனப்பான்மையை வளர்க்கிறது, சமூக நலனை மேம்படுத்துகிறது. நண்பர்கள் ஒருவருக்கொருவர் துணை நிற்பதன் மூலம் சமூகப் பொறுப்புணர்வும் அதிகரிக்கிறது.

ஒரு நல்ல நட்பு பல நல்ல உறவுகளுக்குத் தொடக்கமாக அமையலாம். தனிமனிதர்களிடையே உருவாகும் நம்பிக்கை பின்னர் குடும்பம், கல்வி நிறுவனம், பணியிடம், சமூகம் ஆகியவற்றிலும் நல்ல ஒற்றுமையை உருவாக்க உதவும்.

அறநூல்களில் நட்புக் கருத்துகளின் சிறப்பு

அறநூல்கள் கூறும் நட்புக் கருத்துகள் காலத்தைக் கடந்தவை. பண்டைய காலத்திற்கும் இன்றைய நவீன வாழ்க்கைக்கும் பல வேறுபாடுகள் இருந்தாலும், உண்மையான நட்பின் அடிப்படை பண்புகள் மாறவில்லை.

அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, நன்றியுணர்வு போன்றவை எந்தக் காலத்திலும் நட்பிற்கு அடிப்படையாக இருக்கின்றன. அதனால் அறநூல்களின் கருத்துகள் பழையவை என்றாலும் அவற்றின் வாழ்க்கைப் பயன் இன்றும் குறையவில்லை.

குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் அறநூல்கள் கூறும் நட்புக்

கருத்துகளைப் புரிந்து கொண்டால், நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்து நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

ஆய்வு முடிவுகள்

அறநூல்களை ஆய்வு செய்தபோது நட்பு மனித வாழ்க்கையின் முக்கியமான உறவு என்பதும், நண்பர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதும், உண்மையான நண்பன் துன்பத்திலும் துணையாக இருப்பான் என்பதும் தெளிவாகிறது.

நண்பனுடைய தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்; தீய நட்பு வாழ்க்கைக்கு ஆபத்தானது; நல்ல நண்பர்கள் வாழ்க்கையை முன்னேற்றுவார்கள்; நம்பிக்கையும் நேர்மையும் நட்பின் அடிப்படையாகும்; மாணவர்கள் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அறநூல்களின் நட்புக் கருத்துகள் இன்றைய சமூகத்திற்கும் பொருந்துகின்றன.

இவ்வாய்வின் மூலம் நட்பு என்பது தனிப்பட்ட உணர்வு மட்டுமல்லாமல் ஒரு அறப்பண்பு என்பதும் தெரியவருகிறது. நல்ல நட்பு மனிதனை நல்வழியில் நடத்தி, சமூகத்தில் ஒற்றுமையை உருவாக்குகிறது.

முடிவுரை

நட்பு என்பது மனித வாழ்க்கையின் மிக அழகான உறவுகளில் ஒன்றாகும். உண்மையான நண்பன் வாழ்க்கையின் இன்பத்திலும் துன்பத்திலும் துணையாக இருப்பான். நம்முடைய வெற்றியில் மகிழ்ந்து, தோல்வியில் ஆறுதல் கூறி, தவறான பாதையில் செல்லும்போது நம்மைத் தடுத்து நல்வழிப்படுத்துவான்.

தமிழ் அறநூல்கள் நட்பின் சிறப்பை மிக ஆழமாக எடுத்துரைக்கின்றன. திருக்குறள் நட்பாராய்தல், உண்மையான நட்பு, கூடாநட்பு போன்ற பல கோணங்களில் நட்பை ஆராய்கிறது. நாலடியார், பழமொழி நானூறு, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி போன்ற நூல்களும் நல்லவர்களின் தொடர்பையும் தீயவர்களின் தொடர்பைத் தவிர்ப்பதையும் வலியுறுத்துகின்றன.

இன்றைய தொழில்நுட்ப உலகில் நட்பின் வடிவம் மாறினாலும் அதன் அடிப்படை மதிப்புகள் மாறவில்லை. அன்பு, நம்பிக்கை, நேர்மை, உதவி, நன்றியுணர்வு ஆகியவை உண்மையான நட்பின் அடித்தளங்களாக உள்ளன.

எனவே, அறநூல்கள் காட்டும் நல்வழியைப் பின்பற்றி நண்பர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்து, உண்மையான நட்பை வளர்த்துக் கொள்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.

துணை நூற்பட்டியல்

1. திருக்குறள் – திருவள்ளுவர் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை; 1975

2. நாலடியார் - புலியூர் கேசிகன் - சாரதா பதிப்பகம், சென்னை – 600 014.

3. பழமொழி நானூறு - முன்றுறை அரையனார் - சாரதா பதிப்பகம், சென்னை – 600 014 முதற்பதிப்பு 2010

4. இனியவை நாற்பது – பூதஞ்சேந்தனார் - சேகர் பதிப்பகம், சென்னை - முதற்பதிப்பு 2012

5. சிறுபஞ்சமூலம் – காரியாசான் - கழக வெளியீடு, திருநெல்வேலி; 1936 பதிப்பு

6. ஏலாதி – கணிமேதாவியார்- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்,-

சென்னை - முதற்பதிப்பு -2012

© 2026 ஏ.வி எஸ் கலை அறிவியல். This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 521–530
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

நாலடியாரில் புல்லினங்கள்

Bird Species in Naladiyar

ச.மீனாட்சி*, சிவகாசி

உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00097	

ஆய்வுச்சுருக்கம்

அறநூல்கள் எனப் பகுக்கப்பெற்ற நாலடியார் காலத்தால் அழியாத ஆவணங்களாகும். அரிய அறச்சிந்தனைகள் அறிவியல் கூறும் அறுதியிடப்பட்ட இலக்கிய வடிவமாக மதிக்கப்படுகின்றன. அறமும், அறிவியலும் இழைந்து செல்லும் இயல்பினைக் கொண்டதாக நாலடியார் திகழ்கின்றது. பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழும் தன்மையினை உடையவர்கள். இலக்கியங்களில் புலவர்கள் தங்கள் கருத்தினை புலப்படுத்தும் வண்ணம் தாம் காணும் தாவரங்களை உவமையாகவும் உள்ளுறையாகவும் சுட்டுகின்றனர். புலவர்களின் இத்தகைய உத்திமுறைகளே பண்டைத்தமிழர்களின் தாவரவியலறிவுக்குத் தக்கச் சான்றாகும். தாவரங்களை வளரியல்பின் அடிப்படையில் தாவரவியலாளர் புல், செடி, கொடி, மரம், மலர் என்று பாகுபடுத்துகின்றனர். வளரியல்பில் முதன்மை இடத்தைப் பெறுகின்ற புல்லினங்களின் தன்மை மற்றும் வாழிடங்கள் அறிவியல் காரணத்தோடு நாலடியார் வழி எடுத்தியம்பப்படுகின்றது. மேலும் புல்லினங்களின் அறிவியல் பெயர், வகைபாடு மற்றும் மருத்துவ பயன்களையும் நாலடியார் வழி ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

Abstract

Naladiyar, classified among the texts on ethics (*Aranoolgal*), stands as a timeless document. It is revered for its profound ethical insights, which are presented through a well-defined literary structure that aligns with scientific principles. The text exemplifies an intrinsic blend of ethics and science. Ancient Tamils lived in harmony with nature; in their literature, poets frequently employed the flora they observed as similes and metaphors to convey their ideas. These poetic techniques serve as compelling evidence of the ancient Tamils' botanical knowledge. Botanists classify plants based on their growth habits—categorizing them as grasses, shrubs, creepers, trees, or flowering plants. *Naladiyar* elucidates the characteristics and habitats of grass species—which hold a primary place among these growth forms—offering explanations grounded in scientific reasoning. Furthermore, this research paper examines the scientific names, classifications, and medicinal uses of these grass species as presented in *Naladiyar*.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ச.மீனாட்சி, & சிவகாசி (2026). நாலடியாரில் புல்லினங்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 520–529. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8559

புல்லினங்கள்

புல் என்பது ஒரு வித்திலைத்தாவரமாகும். இயற்கையின் வரங்களான செடி, கொடி மற்றும் மரங்களின் பெரும்பகுதி புல் வகையினைச் சார்ந்தவையாகும். பிற தாவரங்களைப் போல் நுனிப்பகுதியில் வளராமல் அடிப்பகுதியில் உள்ள கணுக்களிலிருந்து இஃது வளர்கின்றது. கிளைகளின்றி நேராகவும், வளைந்தும் வளரும் தன்மையுடையன. தொல்காப்பியர் புல் பற்றி,

> "புறக்கா ழனவே புல்லெனப் படுமே"
> (இளம்பூரணார்,தொல்,மரபு,நூற்.630)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். புறக்காழ் என்பது தண்டின் மையப்பகுதியில் உள்ளீடற்ற தாவரங்களே புல்லினமாகும். தொல்காப்பியரின் நூற்பாவிற்கு உரை வகுக்கும் இளம்பூரணார், "தெங்கு, பனை, கழுகு, மூங்கில்"[1] முதலாயின புல் என்று குறிப்பிடுகின்றார். புல்லின் உறுப்புகளை தொல்காப்பியர்,

> "தோடே, மடலே, ஓலை என்றா
> ஏடே இதழே பாளை என்றா
> ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
> புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்" (இளம்பூரணார்,தொல்,மரபு,நூற்.632)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு முதலியன புல்லின் உறுப்புகளாகும். இனம்பூரணார் புல்லின் உறுப்புகளை உடைய "வாழை, ஈந்து, தாமரை, கழுநீர் என்றுத் தொடக்கத்தன"[2] என்று குறிப்பிடுகின்றார். ஆக தொல்காப்பியரின் கூற்றுப்படி தெங்கு, பனை, கழுகு, மூங்கில், வாழை, ஈந்து, தாமரை மற்றும் கழுநீர் ஆகியன புல்லின வகையினைச் சார்ந்தவையாகும். புல் வகையினைப் பற்றி இல.தாணம்மாள், "நிலத்தின் அடிப்பகுதி வரை ஆழ்ந்து வேர்கள் செல்லாமல் மேலோட்டமாய் வேர்கள் உடையனவாக விளங்கும் தாவரங்கள் 'புல் வகை' எனப்படும்"[3] என்று தன் நூலில் குறிப்பிடுகின்றார். நாலடியாரில் இடம்பெற்றுள்ள புல் வகைகளை,

- புல்
- நெல்
- கரும்பு
- தென்னை
- பனை
- பாக்கு
- வாழை

என்ற முறைகளில் பட்டியலிட்டு நாலடியாரின் வழி புல்லின் தன்மையினை ஆராயலாம்.

புல்

புற்கள் அடர்ந்து நீளமாக காணப்படும் ஒரு தாவர வகை ஆகும். மனிதனின்

முயற்சியின்றி மழையின் வருகையால் தானாக வளரும் தன்மையுடையது. பரந்து விரிந்து வளரும் புல்வெளிகள் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன. இதனடிப்படையில் புற்களை, "1. மேய்ச்சல் புல் (Grazing grass) 2. வெட்டுப்புல் (Fodder grass)"[4] என்று இரண்டு முறைகளில் குறிப்பிடுகின்றன. மேய்ச்சல் புல் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படும் முறையினை (நான்மணி – 68) வது பாடல் சுட்டுகின்றது. கிளைகளின்றி வளைந்து வளரும் புல்லின் தன்மையை உடல் நிலையாமையுடன் நாலடி ஒப்பிடும் பாங்கினை,

"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி

இன்னினியே செய்க அறவினை..... (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்29:1-2)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. மேலும் இப்புற்களை களைகின்ற தன்மையினை,

"சாய்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீது

ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்..." (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்.389:1-2)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. நிலத்தைச் சூழ்ந்துள்ள கோரைப் புற்களை பறித்துள்ள குளிர்ந்த வயல்வெளிகளை உடைய மருதநிலத் தலைவனே! என்று புல்லின் இயல்பினை வெளிப்படுத்துகின்றது. நீண்டு வளரும் புற்கள் காகித தயாரிப்பிலும், குடிசைகள் வேயவும் பயன்படுகின்றன. இலக்கியங்கள் புற்களின் தன்மை மற்றும் வளர்ச்சியினைக் கொண்டு மாந்தர்களை நெறிப்படுத்துகின்றன. அறக்கருத்தோடு அறிவியலும் ஊடுருவும் தன்மையினை அறிய முடிகின்றது.

நெல்

நெல் புல் வகையினைச் சார்ந்த தாவரமாகும். நெற்பயிர் நான்கு அடி உயரம் வரை வளரக்கூடியது. இப்பயிர் ஐந்து மாதங்கள் வரை வளரக்கூடிய ஓர் ஆண்டுத் தாவரமாகும். இலக்கியங்களில் நெல்லின் வகைகளை வெண்ணெல், செந்நெல், மலைநெல், நெல் ஐவனம், தோரை என்ற பெயர்களில் குறிப்பிடப்படுகின்றன. நெற்பயிர்கள் ஈர நிலங்களில் செழித்து வளரக்கூடியது. செழிப்பான இடத்தில் நெல் வளரும் முறையினை,

"நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தங்

குலநலத்தால் ஆகுவர் சான்றோர்....." (இளவழகனார்,நாலடி.பா.அடிகள்179:1-2)

என்ற பாடலடி விளக்குகின்றன. வயல்வெளிகளில் செந்நெல் செழிப்பாக வளர்வது போல மக்களும் செழித்திருப்பர். மேலும் வளமற்ற பகுதிகளில் நெற்பயிர் செழிக்காது என்பதனையும் நாலடி,

"பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட

மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்"

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:269:1-2)

என்ற பாடலடி சுட்டுகின்றன. ஆக நெற்பயிர்கள் ஈர நிலங்களில் மட்டுமே செழித்து வளரும் என்பதை பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. நெல் நமது இந்திய நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தொன்று தொட்டுப் பயிரிடப்பட்டு வரும் உணவுப்பொருள் ஆகும். உணவுப்பொருளாக பயன்படுத்தப்படும் நெல்லிலும் உமி உண்டு என்பதனை,

"நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை

அல்லா ரெனினும் அடக்கிக் கொளல் வேண்டும்

நெல்லுக் குமியுண்டு....." (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்:221:1-3)

என்ற பாடலடி உணர்த்துகின்றன. உமியை நீக்கி நெல்லைப் பயன்படுத்துவது போல நேசித்தவரின் தீய குணங்களை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசிரியர் வழிப்படுத்துவதோடு தற்காலத்தில் நெல்லினை உமி நீக்கி அரிசியாக பயன்படுத்தும் முறையினையும் சுட்டுகின்றார். நெல்லினை பயிரிடும் போது வேண்டாத களைகளை களைந்து நல்விதைகளை விதைத்து பயிரிடும் தன்மையினை,

"செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்

செந்நெல்லே யாகி விளைதலால் - அந்நெல்

வயனிறையக் காய்க்கும் வளவிய லூர!....."

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:367:1-3)

என்ற பாடலடி புலப்படுத்துகின்றன. தற்காலத்தில் செயற்கை ஒட்டு முறையில் பல வகைப்பட்ட நெல் வகைகள் உருவாக்கப்படுகின்றன. எனவே நமது பாரம்பரிய நெல் வகைகள் அழிந்து விட்டன என்பதை யாவரும் அறிவோம்.

கரும்பு

கரும்பு தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் தாவரமாகும். புல் இனத்தைச் சேர்ந்தது. ஓராண்டு காலப் பயிராகும். இஃது பணம் கொழிக்கும் ஒரு வாணிகப் பயிராகும். சர்க்கரை உற்பத்தி செய்யப் பயன்படும் ஒரு தாவரமாகும். கரும்பிலிருந்து பெறப்படும் முக்கியப் பொருள் சுக்ரோஸ் ஆகும். இதன் வேதிப்பொருள் கரும்பின் தண்டுப்பகுதிகளில் சேர்த்து வைக்கப்படுகிறது. கரும்பானது செங்கரும்பு, ஆலைக்கரும்பு, கருப்புக்கரும்பு என்றெல்லாம் வகைபடுத்தப்படுகின்றன. இவற்றுள் ஆலைக்கரும்பு சாறு பிழிவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இயந்திரப் பொறிகளைக் கொண்டு சாறு பிழியும் வழக்கம் பண்டைக்காலத்திலும் இருந்திருந்தன. கரும்புச்சாற்றின் இனிமையையும், சாறு பிழியும் நேரத்தினையும் நாலடியார்,

"கடித்துக் கரும்பினைக் கண்தகர நாறி,

இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்"

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்156:1-2)

"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்

துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்"

(இளவழகனார்,நாலடி.பா.அடிகள்:35:1-2)

என்ற பாடலடிகளில் பதிவு செய்துள்ளார். இன்றைக்கும் நாம் கரும்பு பிழியும் இயந்திரத்தினை பயன்படுத்தி வருகின்றோம். கரும்பின் சாறு சிறுநீரகக் கற்களை குணமாக்குகின்றன. இவற்றில் உள்ள இனிப்பு இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவை சீராக்குகின்றன. ஒரே கரும்பானாலும் கரும்பின் சுவை வெவ்வேறானது. நுனிக் கரும்பை விட அடிக்கரும்பின் சுவையே இனியது. இத்தகைய இனிய சுவையினை கற்றறிந்தார் நட்புடன் ஒப்பிடும் பாங்கினை,

"கற்றறிந்தார் கேண்மை

நுனியின் கரும்புதின் றற்றே – நுனிநீக்கித்

தூரின்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா

ஈரமி லாளர் தொடர்பு” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.138:1-4)

“கருந்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்

குருத்திற் கரும்புதின் றற்றே – குருத்திற்

கெதிர் செலத்தின் றன்ன தகைத்தரோ.....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.211:1-2)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

தற்காலத்தில் சாறு பிழிந்து எஞ்சிய சக்கை காகிதம் செய்வதற்குப் பயன்படுகின்றன. கரும்பு பாரம்பரியமான உணவாகும். தற்காலத்தில் அதனை பண்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்துகின்றோம். கரும்பின் இலைகள் மக்கி நல் எருவாகின்றன. கரும்பினை அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடவு செய்கின்றனர். உலர்ந்த கரும்புத் தோகைகளை மண்ணோடு கலப்பதால் மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் தன்மை மேம்படுகின்றது. இதனால் மண்ணின் மின்கடத்தும் திறன் குறைந்து நீரைத் தக்க வைக்கும் திறன் அதிகரிக்கிறது. கரும்பிலுள்ள ‘அல்கலைன்’ என்னும் பொருள், புற்றுநோயை குணப்படுத்தும் தன்மையுடையது. மேலும் பெருங்குடல், நுரையீரல் (அ) மார்பக புற்றுநோய் போன்றவற்றிற்கும் சிறந்தது. தற்காலத்தில் கரும்பினை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இலக்கியங்கள் கரும்பின் சுவையினை புலப்படுத்துவதோடு கரும்புத் தோட்டத்தினை பாதுகாக்கும் முறையினையும் பறை சாற்றுகின்றன.

தென்னை

தென்னை எண்ணெய் வித்து தாவரமாகும். பனைமரத்தை விட உயரமாக வளரக்கூடியது. முட்களும் கிளைகளும் இன்றி உயரமாக வளர்ந்தாலும் தென்னை புல் இனத்தைச் சார்ந்ததாகும். எண்ணற்ற வேர்கள் எல்லாப் பக்கமும் ஓடக்கூடியவை. மரத்தின் உச்சியிலுள்ள இலைகள் மரத்துக்கு மணிமுடி போல் அழகிய தோற்றத்தைத் தரும். தென்னையினை அடிக்கடி நீர்ப்பாய்ச்சி கவனித்தால் மட்டுமே மரம் செழுமையாக இருக்கும் என்பதனை,

“.....ஏனை

இடையாயார் தெங்கி னணையர்,....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:1-2)

என்ற பாடலடி விளக்குகின்றன. இம்மரம் ஏறத்தாழ ஐந்து வருடங்களுக்குள் பயன்தரக் கூடியதாகும். கடலோர உவர் நிலங்களிலும், மணற்பாங்கான இடத்திலும் தென்னை வளரக்கூடியது. நல்ல மழையும் சூரிய ஒளியும் கிடைக்கும் இடங்களில் இஃது நன்கு வளரக்கூடியது. எல்லா வகை மண்ணிலும் வளரும் தன்மை உடையது. இலக்கியங்களில் தென்னை ‘தெங்கு’ என்றே அழைக்கப்படுகின்றது. தென்னையின் வாழிடங்களை,

“எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகாது

எந்நாட் டவருஞ் சுவர்க்கம் புகதலால்....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.243:1-

2)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. நீர்வளம் மிகுந்த பகுதியிலும் எந்த வகை மண்ணிலும் தென்னை வளரும் தன்மையுடையது என்பதனை அறிய முடிகின்றது. தென்னையின் ஓலை, பூ, இளங்காய், முற்றின காய், நடுமரம், வேர் என்று அனைத்தும் பயன்தரக்கூடியது. தென்னையின் ஓலை வீடுகட்டவும், கொட்டகை போடவும், கூடை பின்னவும் பயன்படுகின்றது. தேங்காயின் தண்ணீர் ஜீரணமண்டலத்தை வலுப்படுத்த உதவும். இவற்றின் வேரை கசாயமிட்டு பருக படை, சொறி, தோல் நோய், நாக்கு வறட்சி போன்றவை குணமாகின்றன. தேங்காயின் சதைப்பகுதியைச் சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட்டால் ஆண்மை சக்தியை அதிகரித்து வயிற்றுப் பூச்சிகளைச் சாகடிக்கிறது.

பனை

பண்டைத் தமிழர்களின் கற்பக விருட்சம் பனை. பழந்தமிழர்களின் வாழ்வில் பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. தமிழ்நாட்டின் சின்னம் பனை. தமிழ்நாட்டில் மட்டுமே 5.2 கோடி பனைமரங்கள் உள்ளன. இது ஏறத்தாழ 60 சதவீதம் ஆகும். பூக்கும் ஒரு வித்திலைத் தாவரமாகும். இஃது பயிரிடப்படுவதில்லை. இயற்கையிலேயே வளரக்கூடியது. இவை சுமார் 20 மீ உயரத்துக்கு கிளைகளின்றி நேராக வளரும் தன்மையுடையது. நீண்டு உயரினும் இஃது புல் வகையினைச் சார்ந்ததாகும். பனையினைப் பற்றி எஸ்.சௌந்தரராஜன், “பனைமரம் பாமேசியீ என்னும் ஒற்றை விதையிலைத் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். பனை மரத்தின் பெயர் போரஸஸ் பிளாடெல்லிபெர் என்பதாகும். இம்மரத்தின் ஓலைகள் விசிறி போன்ற அமைப்புடையதாக இருப்பதால் இதனை ‘Palm tree’ என்று கூறுவர்.”[5] என்ற முறைகளில் தன் நூலில் குறிப்பிடுகின்றார். சேர மன்னர்களின் குடிப்பூ பனையாகும். இம்மரம் சதுப்பு நிலங்களிலும், கடற்கரை ஓரங்களிலும் வளரக் கூடியதாகும். இவை பாலை நிலம், வறட்சிப்பகுதி, குறைந்த ஆழமான நிலம் போன்ற இடங்களில் காணப்படுகின்றது. வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் உடையது. இவை மக்களுக்கு உச்சி முதல் அடி வரை பயன்தரக் கூடியது. இதன் அடிப்பகுதி பருத்துக் காணப்படும். பனையின் இலைகள் ‘மடல்’ என்றும், காய்ந்த இலை ‘ஓலை’ என்றும், காய் ‘நுங்கு’ என்றும், பனங்காய் முதிர்ந்தால் ‘பனம்பழம்’ என்றும் அழைக்கப்படுகின்றன. பனையின் வளரியல்புகளை உணர்ந்த பண்டைத்தமிழர்களின் தாவரவியல் புலமையை,

“.....எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே

தொன்மை யுடையார் தொடர்பு”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:3-4)

என்ற பாடலடி விளக்குகின்றன. பனை பருவம் அடைவதற்குள் பதினைந்து வருடங்கள் எடுத்துக் கொள்கின்றது என்பதனையும் வறட்சியைத் தாங்கி உப்பங்கழிகளில் வளரும் தன்மை உடையது என்பதனையும் அறிய முடிகின்றது. மனிதர்களின் பண்பினை பனையின் உயரத்துடன் ஒப்பிடும் பழந்தமிழர்களின் நுண்ணியத் திறனை,

“தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்

பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்105:1-2)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இதே கருத்தினை (நாலடி-344) வது பாடலும் எடுத்துரைக்கின்றன.

பனையில் ஆண், பெண் என்ற இரண்டு வகைகள் உள்ளன. இவற்றில் பாலினப்பெருக்கம், விதையில்லா பெருக்கம் என்ற இரண்டு முறைகளில் இனப்பெருக்கம் நிகழ்கின்றது. பூக்களில் தோன்றும் வித்துகள் வழி நடைபெறுவது பாலினப்பெருக்கம் ஆகும். தண்டு மற்றும் கிழங்கு மூலம் விதையில்லாமல் நடைபெறுவது விதையில்லா பெருக்கம் ஆகும். பெண்பனையில் பதநீர் இறக்கப்படுகிறது. பெண்பனையின் முக்கியத்துவத்தை அறிந்த பழந்தமிழரின் நுண்மாண்நுழைபுலத் திறனை,

“நடுவூருள் வேதினை சுற்றுக்கோட் புக்க

படுபணை யன்னர் பலர்நச்ச வாழ்வார்....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்96:1-2)

என்ற பாடலடி சுட்டுகின்றன. காய்க்கின்ற பெண்பணையை அனைவரும் விரும்புவர். காய்த்தலில்லாத ஆண்பனையை விரும்புபவர் எவரும் இல்லை. பெண்பனையின் உணவுப்பொருட்களில் முதன்மையானது பதநீர். இப்பதநீரே கருப்பட்டி, வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனம்மிட்டாய், பனங்கூழ் என்று பல்வேறு வகையான பொருள்களை தயாரிக்க இன்றும் பயன்படுகின்றது. ஆண்பனை கட்டிட வேலைக்கு பயன்படுத்தப்படுகின்றது.

பனையை போந்தை, பெண்ணை என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பனைஓலையின் பயன்பாட்டினை,

“.....பனையின் மேல்

வற்றிய ஓலை கலகலக்கும், எஞ்ஞான்றும்

பச்சோலைக் கில்லை யொலி” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.256:2-4)

“கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி

அடகு பறித்துக்கொண் டட்டுக் - குடைகலனா

உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே.....”

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்289:1-3)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. பனை ஓலையில் கூடை, பெட்டி, பாய், விசிறி, தொப்பி, குடை, ஓலைச்சுவடி என்று பல்வேறான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

பனை உணவுப்பொருட்கள் வழங்குவதோடு பல்லோருக்கு பனைமரம் ஏறுதல், கள் மற்றும் பதநீர் இறக்குதல், கருப்பட்டி மற்றும் பனைவெல்லாம் தயாரித்தல் என்று கைத்தொழிலாகவும் பயன் அளிக்கின்றது. “விவசாயம் கைத்தறிக்கு அடுத்தப்படியாக பேரளவு வேலை வாய்ப்பினைக் கொண்டதாக பனைத்தொழில் விளங்குகிறது.”[6] என்று இணையம் உரைக்கின்றது. துவர்ப்பும் இனிப்பும் கலந்த பதநீரின் சுவை உடலுக்கு ஊட்டத்தை அளிப்பதோடு வெப்பத்தைத் தணித்து குளிர்ச்சியைத் தருவது பனம்பழம் சிறந்த உயிர்சத்து உடையது. பனைவெல்லாம் நிலக்கரி மற்றும் ஸிலிகா தூசிகளால் ஏற்படும் நுரையீரல் பாதிப்பை குறைக்கும் என்பது தெரிய வருகின்றது. தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமான பனைமரங்கள் வளர்க்கப்பட வேண்டும். பனைமரங்கள் அழிவதால் மண்வளமும் மனிதவளமும்

கெடுகிறது.

பாக்கு

பாக்கு ஒரு வித்திலைத் தாவரம் ஆகும். இலக்கியங்களில் கமுகு என்று அழைக்கப்படுகின்றது. இஃது நெடிது ஓங்கி வளரினும் 'புல்' என்ற வகையினைச் சார்ந்ததாகும். இதனது தாவரவியல் பெயர் அரீகா காட்சூ (Areca catechul) என்பதாகும். பொதுவாக பாக்கு தென்னையைப் போல் கடற்கரைச் சார்ந்த உப்பு மண்ணில் நன்றாக வளரும் தன்மை கொண்டது. இதன் தண்டு வெண்மையாக வழவழப்பாக இருக்கும். இவற்றின் இலை சிறகு வடிவக் கூட்டிலையின் பட்டை அகலமாக தண்டைச் சுற்றிக் குருத்துக்குப் பாதுகாப்பாக இருக்கும். கடற்கரையோரப் பகுதிகளிலும் மலையடிவாரங்களிலும் இஃது பயிரிடப்படுகின்றது. கமுகின் தன்மையினை நாலடி,

"கடையாயார் நட்பிற் கழுகளையர் ஏனை.."

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.216:1)

என்ற பாடலடியில் குறிப்பிடுகின்றார். கீழ்நிலையில் உள்ளோரின் நட்பை கமுகின் தன்மையோடு ஒப்பிட்டுள்ள பண்டைத் தமிழரின் தாவரவியல் புலமை அளவிடற்கரியது. தமிழர்களின் சடங்கு மற்றும் விழாக்களில் அதிகளவு வெற்றிலையுடன் சேர்த்து பயன்படுத்தப்படுகின்றது. பாக்கின் மருத்துவத் தன்மையினை ஜே.சி.குரியன் தன் நூலில், "பிஞ்சு பாக்குக் கொட்டைகள் மலமிளக்கியாகும். முதிர்ந்த பாக்குக் கொட்டைகள் ஒரு நல்ல புழுக்கொல்லியாகும்."[7] என்ற முறைகளில் குறிப்பிடுகின்றார். அதிகளவு பாக்கினை எடுத்துக் கொண்டால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது. அர்கோலின் என்னும் நச்சுத்தன்மை வாய்ந்த அல்கலாய்டு கொட்டையில் நிரம்பியுள்ளதால் பக்கவாதத்தை தோற்றுவிக்கும்."[8] என்பதை இணையம் வழி அறிய முடிகின்றது. இன்றும் பாக்கு மங்கலப்பொருளாக பயன்படுத்தப்படுகின்றது.

வாழை

வாழை குறுகிய கால பயிராகும். தாவரவியலாளர் இதனை "Musa Paradisiaca" என்று குறிப்பிடுவர். உறுதியாக உயர வளரும் வாழையை மரம் என்று பேச்சுவழக்கில் குறிப்பிட்டாலும் இஃது புல் இனத்தைச் சார்ந்ததாகும். வாழையினங்கள் செடி மற்றும் மரங்களைப் போல் காணப்படுவதில்லை. இவற்றின் தண்டுப்பகுதி கிழங்கு வடிவில் மண்ணுக்கடியில் மட்டுமே வளர்கிறது. மேல்பகுதியானது நிலைகுத்தாக வளரும் போலித்தண்டாகும். எனவே இவை தாவரங்களின் புல் வகையைச் சர்ர்ந்ததாகும்.

இந்தியாவில் மாமரத்திற்கு அடுத்து வாழையே அதிகமான நிலப்பரப்பில் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் தலைசிறந்த முக்கனிகள் மா, பலா, வாழை என்பதாகும். வாழையின் காய், கனி, தண்டு, இலை, பட்டை முதலிய அனைத்து பாகங்களும் உணவிற்குப் பயன்படுகின்றன. வாழை மலைப்பகுதிகளிலும், நீர்வளம் மிகுந்த நிலங்களிலும், வயலோரங்களிலும் அதிகமாக வளரும் தன்மை கொண்டது. வாழையினங்கள் கனிகளைப் பெறுவதற்காகவும், அலங்காரச் செடியாகவும், நார் பெறுவதற்காகவும் பயிரிடப்படுகின்றன. தென்னை மற்றும் வாழை பயிரிடுவதே ஒரு நாட்டின் செழுமை என்று குறிப்பிடுவதாக முடத்தாமக்கண்ணியார்,

"கோள் தெங்கின் குலை வாழை"

(பொ.வே.சோமசுந்தரனார்,பொருநராற்றுப்படை,பா.அ:205)

என்ற பாடலடிகளில் குறிப்பிடுகின்றார். வாழையில் பூவன், மொந்தன், பேயன் என்ற மூவகையான பழங்கள் முறையே அயன், அரி, அரன் என்ற மூவர்க்கும் உரியன என்று பாரம்பரியாக நம்பப்படுகின்றது. வாழைப்பழங்கள் மிகவும் இனிது. இவற்றின் சுவையை நாலடி,

"வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்

தீஞ்சுவை யாதுந் திரியாதாம்....."

(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.244:1-2)

என்ற பாடலடி குறிப்பிடுகின்றது. வேப்ப மரத்தின் இலைக்குள்ளிருந்து பழுத்தாலும் வாழைப்பழம் தனது இன்சுவையில் இருந்து மாறுபடாது என்று குறிப்பிடுவதன் மூலம் வாழையின் இனிய சுவையினை அறிய முடிகின்றது. வாழையின் தன்மையினை கு.சீநிவாசன் தன் நூலில், "வாழைமரம் ஒரு முறை மட்டுமே பூக்கும். வாழைக்குலையில் கருஞ்செம்மையான மடல்கள் இருக்கும். இம்மடல்களுக்குள் வாழை மலர்கள் சீப்புச்சீப்பாக அமைந்திருக்கும். வாழைக்குலையை வாழைத்தார் என்பர். தாரின் நுனிப்பகுதியில் ஆண்பூக்களும், அடிப்பகுதியில் பெண்பூக்களும் உண்டாகும். மடல் விரிந்து ஆண் பூக்களின் தாதுக்கள் பெண் பூக்களின் நுனியில் சேர்ந்தபின் பெண்பூக்கள் பிஞ்சாகிப் பழமாகும்"[9] என்ற முறைகளில் குறிப்பிடுகின்றார்.

வாழை ரகங்கள் நிலத்திற்கு ஏற்ப பயிரிடப்படுகின்றன. வாழையின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணமாகும். இவற்றின் இலை நச்சுமுறிப்பாகவும், நார் பூச்சரம் கட்டவும், மூக்குப்பொடி வைக்கும் மட்டையாகவும், நூல் தயாரித்து துணி நெய்யவும் பயன்படுகின்றன. இவற்றின் தண்டுநீர் இரத்த போக்கை குணப்படுத்தவும் பட்டை மற்றும் தண்டானது பித்தத்தைக் கட்டுபடுத்தவும், சிறுநீரைப் பெருக்கவும் பயன்படுகின்றது. வாழையின் பூ, பிஞ்சு, காய் போன்றன துவர்ப்புச் சுவையைத் தூண்டும், வெள்ளைப்படுதலையும் கட்டுப்படுத்தும். மேலும் வாழைப்பழமானது உள்ளுறுப்புகளின் புண்களை ஆற்றுகின்ற திறனுடையது.

தொகுப்புரை

- பழந்தமிழரின் திணைப்பாகுபாடே அவர்களது தாவரவியல் புலமையினை அறிவதற்கு சிறந்த சான்றாகிய முறையினை அறிந்து கொள்ள முடிகின்றது.
- தாவரங்களின் நுட்பமான வளரியல்புகளை அறிந்திருந்த பண்டைத்தமிழனின் தாவரவியல் சிந்தனை நாலடியார் வழி வெளிக்கொணரப்படுகின்றது.
- தாவரவியலாளரின் கருத்தோடு ஒன்றிணைந்த இலக்கியப் புலவர்கள் தங்களது படைப்புகளில் தாவரங்களின் பசுமையினை தன் எழுத்தில் படைத்ததோடு தாவரங்களின் வகைபாட்டினையும் மருத்துவ பயன்பாட்டினையும் நுட்பமாக பதிவு செய்த புலவனின் நுண்மாண்நுழைபுலத்திறன் அளவிடற்கரியது.
- தாவரங்கள் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றது
- தாவரங்களின் அனைத்து உறுப்புகளும் மனிதர்களுக்கு சிறந்த மருத்துவ குணமுடையதாக பயன்படுத்துகின்ற பாங்கினை அறிய முடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. இளம்பூரணார்,தொல்,மரபு,ப.529
2. இளம்பூரணார்,தொல்,மரபு,ப.530
3. இல.தாணம்மாள், சங்க இலக்கியத்தில் மலர்கள், ப.56
4. **ta.wikipedia.org\wiki\புல்**
5. எஸ்.சௌந்தர ராஜன், பனைமரங்களின் மூலம் கிராம முன்னேற்றம் 2014,ப.128
6. **ta.wikipedia.org\wiki\பனை16.11.2019**
7. ஜே.சி.குரியன், நலம் தரும் தாவரங்கள்(தொகுதி1),ப.20
8. **tamil vu.org\tdb\titles**
9. கு.சீநிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.665–666

© 2026 ச.மீனாட்சி, சிவகாசி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 531–536
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

முகவரி ; ர.நிர்மலா

எனது பார்வையில் அக்கால மருத்துவமும் இக்கால மருத்துவமும்*

Medicine of the Past and Present: My Perspective

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: எனது பார்வையில் அக்கால மருத்துவமும் இக்கால மருத்துவமும் — nirmalachandran1982@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00098	

ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வில் உடல்நலம் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. நோய்களைத் தடுத்து உடல் நலத்தைப் பாதுகாப்பதற்காக மனிதன் காலங்காலமாகப் பல்வேறு மருத்துவ முறைகளைக் கடைப்பிடித்து வந்துள்ளான். தமிழர்களின் தொன்மையான மருத்துவ மரபுகளில் சிறப்பிடம் பெறுவது சித்த மருத்துவம் ஆகும். இயற்கையை அடிப்படையாகக் கொண்டு உருவான சித்த மருத்துவம், உடல், மனம், உணவு, வாழ்க்கை முறை ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கிறது. இதற்கு மாறாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றது தற்கால நவீன மருத்துவம் ஆகும். இவ்விரு மருத்துவ முறைகளுக்கும் சில ஒற்றுமைகளும் பல வேற்றுமைகளும் காணப்படுகின்றன.

Abstract

Health holds a vital place in human life. Throughout history, humans have adopted various medical practices to prevent disease and maintain physical well-being. Siddha medicine occupies a distinguished position among the ancient medical traditions of the Tamils. Rooted in nature, Siddha medicine takes a holistic approach, integrating the body, mind, diet, and lifestyle. In contrast, contemporary modern medicine has evolved based on advancements in science and technology. These two medical systems share certain similarities while also exhibiting numerous differences.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மருத்துவமும், எ. பா. அ. ம. இ. (2026). முகவரி ; ர.நிர்மலா. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 530–535. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8561

அக்கால சித்த மருத்துவம் :

அன்றயை காலத்தில் வீட்டு வைத்திய முறைகள் இயற்கை சார்ந்த உணவுமுறை மற்றும் வாழ்க்கை ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதனைத் திருவள்ளுவர்,

திருக்குறள் – குறள் எண் 942 - அதிகாரம்: மருந்து

‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்.

முன்பு உண்ட உணவு நன்றாகச் செரித்துவிட்டதை அறிந்து, அதன் பின்னர் தக்க அளவில் உணவு உண்டால் உடலுக்கு மருந்து என்று வேறு எதுவும் தேவையில்லை. என திருவள்ளுவர் இக்குறளில் உணவே சிறந்த மருந்து என்ற கருத்தை வலியுறுத்துகிறார். உணவை அளவோடு, சரியான நேரத்தில் உட்கொண்டு, முன்பு உண்ட உணவு செரித்த பிறகே மீண்டும் உண்பது உடல்நலத்தைப் பாதுகாக்கும். இவ்வாறு ஒழுங்கான உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடித்தால் நோய்கள் ஏற்படுவது குறைந்து, மருந்தின் தேவை இல்லாமல் ஆரோக்கியமாக வாழ முடியும். என்ற குறள் மூலம் உணவு ஒழுங்கே உடலுக்கு மருந்தாகும் என வலியுறுத்துகிறார்.

சித்த மருத்துவம் தமிழர் மரபோடு தொடர்புடைய தொன்மையான மருத்துவ முறையாகும். சித்தர்கள் தங்களுடைய அனுபவம், ஆராய்ச்சி மற்றும் இயற்கை அறிவின் அடிப்படையில் மருத்துவக் கருத்துகளை வளர்த்தனர். அகத்தியர் உள்ளிட்ட பல சித்தர்கள் சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

சித்த மருத்துவம் மனித உடலில் ஏற்படும் நோய்களை மட்டும் குணப்படுத்துவதை நோக்கமாகக் கொள்ளாமல், நோய் வராமல் தடுப்பதற்கும் உடல் நலத்தைப் பேணுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. உணவு முறைகள், உடற்பயிற்சி, தூக்கம், மனநிலை, சுற்றுச்சூழல் ஆகியவற்றை உடல்நலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கிறது.

சித்த மருத்துவத்தில் பெரும்பாலும் மூலிகைகள், தாவரங்கள் மற்றும் இயற்கைப் பொருட்கள் மருந்துகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், உடலின் இயல்பான சமநிலையைப் பாதுகாப்பதே நல்ல ஆரோக்கியத்திற்கு அடிப்படை எனக் கருதப்படுகிறது.

தற்கால நவீன மருத்துவம் :

தற்கால நவீன மருத்துவம் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ முறையாகும். மனித உடலின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை அறிவியல் முறையில் ஆராய்ந்து நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கிறது.

இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன், நவீன ஆய்வகப் பரிசோதனைகள் போன்ற பல்வேறு தொழில்நுட்ப முறைகள் மூலம் நோய்களைத் துல்லியமாகக் கண்டறிவது நவீன மருத்துவத்தின் முக்கிய சிறப்பாகும். அவசரநிலைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை, தடுப்பூசி, தீவிர சிகிச்சை போன்ற துறைகளில் நவீன மருத்துவம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

சித்த மருத்துவமும் நவீன மருத்துவமும் – ஒப்பீடு

ஒப்பீட்டுக் கூறுகள் - சித்த மருத்துவம் - நவீன மருத்துவம் - அடிப்படை

இயற்கை மற்றும் பாரம்பரிய அறிவு :

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்மருந்துகள் - மூலிகைகள் மற்றும் இயற்கைப் பொருட்கள் - அறிவியல் முறையில் தயாரிக்கப்படும் மருந்துகள் -நோய் அணுகுமுறை

உடல் மற்றும் வாழ்க்கை முறையை முழுமையாகக் கருதுகிறது.

உணவு, மருந்து, வாழ்க்கை முறை மாற்றம்மருந்து, அறுவைச் சிகிச்சை மற்றும் பிற நவீன சிகிச்சைகள் சிகிச்சை காலம்சில நீண்டகால நோய்களில் தொடர் சிகிச்சை தேவைப்படலாம்பல நோய்களில் விரைவான சிகிச்சை கிடைக்கலாம் நோக்கமாகக் கொள்வது நோய் தடுப்பு மற்றும் உடல் சமநிலை நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை.

இரு மருத்துவ முறைகளின் ஒற்றுமைகள் :

சித்த மருத்துவமும் நவீன மருத்துவமும் மனித உடல்நலத்தைப் பாதுகாப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. நோய்களைக் கண்டறிந்து அவற்றிற்குச் சரியான சிகிச்சை அளிப்பதே இரு மருத்துவ முறைகளின் பொதுவான நோக்கமாகும்.

மேலும், நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களை அறிந்து அவற்றைத் தடுப்பதிலும் இரு மருத்துவ முறைகளும் கவனம் செலுத்துகின்றன. மனிதனின் உடல் நலமே சமூக நலத்திற்கு அடிப்படை என்பதை இரண்டும் வலியுறுத்துகின்றன.

சித்த மருத்துவத்தின் சிறப்புகள் :

சித்த மருத்துவம் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையை வலியுறுத்துகிறது. சரியான உணவு, ஒழுக்கமான வாழ்க்கை, உடல் மற்றும் மன நலம் ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பார்க்கிறது. குறிப்பாக நீண்டகால உடல்நலப் பராமரிப்பில் வாழ்க்கை முறை மாற்றத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

“உணவே மருந்து; மருந்தே உணவு” என்ற கருத்திற்கு ஏற்ப உணவுப் பழக்கத்திற்குச் சித்த மருத்துவம் முக்கியத்துவம் அளிக்கிறது.

‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்.

– திருக்குறள் 942, மருந்து அதிகாரம்

பொருள்: முன்பு உண்ட உணவு நன்றாகச் செரித்த பிறகு, உடலுக்குத் தேவையான அளவில் உணவு உண்டால் உடலுக்கு மருந்து தேவையில்லை.

விளக்கம்:

இக்குறள் உணவே மருந்தாக அமையும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. சரியான நேரத்தில், போதிய அளவில், உடலுக்கு ஏற்ற உணவை மட்டும் உட்கொண்டால் நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம். அளவான உணவும் முறையான உணவுப் பழக்கமும் உடலுக்கு முறையான நல்ல மருந்தாகும்.

இன்றைய மருத்துவச் சிறப்புகள் ;

“பல்லவர் நோய் நீக்கும் பாங்கு”

எனச் சிறுபஞ்சமூலம் சுட்டும் நோய் நீக்கக் கருத்து, இன்றைய நவீன மருத்துவம் பல்வேறு நோய்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் கண்டறிந்து சிகிச்சையளிக்கும் திறனுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

நவீன மருத்துவம் நோய்களைத் துல்லியமாகக் கண்டறியும் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டுள்ளது. அவசரநிலைகளில் உடனடியாகச் சிகிச்சை

அளிக்கும் திறன் இதன் முக்கிய பலமாகும். அறுவைச் சிகிச்சை,...அளிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல், நோய் வராமல் தடுப்பதற்கும் முக்கியத்துவம் அளித்ததாகும். உணவு, உறக்கம், உடற்பயிற்சி, மனநிலை, சுற்றுச்சூழல் போன்றவற்றை மனித உடல்நலத்துடன் இணைத்துப் பார்த்தது அதன் சிறப்பாகும்.

மேலும், மூலிகைகள் மற்றும் இயற்கையில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி மருத்துவம் செய்யப்பட்டதால், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்பு பாதுகாக்கப்பட்டது. ஒவ்வொருவரின் உடல்நிலையையும் தனித்தனியாகக் கருத்தில் கொண்டு சிகிச்சை அளிக்கும் முறையும் அன்றைய மருத்துவத்தின் குறிப்பிடத்தக்கச் சிறப்பாகும். எளிய நோய்களுக்கு வீட்டில் கிடைக்கும் மூலிகைகள் மற்றும் உணவுப் பொருட்களைக் கொண்டு மருத்துவம் செய்வதற்கான அறிவும் மக்களிடையே பரவலாக இருந்தது. குறிப்பாக உணவே மருந்தாக அமைய வேண்டும் என்ற சிந்தனை அன்றைய மருத்துவத்தின் முக்கியக் கொள்கையாகும்.

ஆனால், அக்கால மருத்துவ முறைகளில் சில குறைகளும் காணப்பட்டன. நோய்களின் காரணங்களைக் கண்டறிவதற்கான நவீன ஆய்வக வசதிகள் மற்றும் மருத்துவக் கருவிகள் அக்காலத்தில் இல்லை. இதனால் உடலின் உட்புற உறுப்புகளில் ஏற்படும் சில நோய்களைத் துல்லியமாகக் கண்டறிவதில் சிரமம் ஏற்பட்டிருக்கலாம். மேலும், அவசரநிலை நோய்கள், கடுமையான காயங்கள் மற்றும் அறுவைச் சிகிச்சை தேவைப்படும் சூழ்நிலைகளில் அக்கால மருத்துவ முறைகளின் செயல்திறனுக்கு வரம்புகள் இருந்தன.

அத்துடன், சில மருத்துவ அறிவுகள் வாய்மொழியாகவும் அனுபவ அடிப்படையிலும் பரவியதால், அவற்றை முறையாகப் பதிவு செய்து அனைவருக்கும் ஒரே மாதிரியாகப் பயன்படுத்தும் வாய்ப்பு குறைவாக இருந்தது. மருந்து தயாரிக்கும் முறைகள் மற்றும் அளவுகளில் இடத்திற்கு இடம் வேறுபாடுகள் இருந்திருக்கலாம். மேலும், சிகிச்சையின் விளைவு நோயாளியின் உடல்நிலை மற்றும் நோயின் தன்மையைப் பொறுத்து மாறுபடும் சூழலும் இருந்தது.

ஆகவே அக்கால மருத்துவம் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை, நோய் தடுப்பு, உணவு ஒழுக்கம் மற்றும் முழுமையான உடல்நலப் பராமரிப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கியது. அதேவேளையில், துல்லியமான நோய் கண்டறிதல், அவசரச் சிகிச்சை மற்றும் நவீன மருத்துவத் தொழில்நுட்ப வசதிகள் போன்றவற்றில் சில வரம்புகளைக் கொண்டிருந்தது. ஆகையால், அக்கால மருத்துவத்தின் சிறப்பான கருத்துகளைப் பாதுகாத்து, தற்கால அறிவியல் மருத்துவத்தின் முன்னேற்றங்களோடு இணைத்துப் பயன்படுத்துவதே மனித நலனுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

நவீன மருத்துவத்தின் நிறைகள் மற்றும் குறைகள்.

நவீன மருத்துவம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மருத்துவ முறையாகும். இதன் முக்கியமான நிறைகளாக, நோய்களை இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற நவீன கருவிகளின் மூலம் துல்லியமாகக் கண்டறியும் திறன், அவசரநிலைகளில் உடனடி சிகிச்சை அளிக்கும் வசதி, அறுவைச் சிகிச்சை மற்றும் பல்வேறு நவீன சிகிச்சை முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலும், தடுப்பூசிகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் பல நோய்களைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும்

முடிகிறது. இருப்பினும், நவீன மருத்துவத்தில் சில குறைகளும் உள்ளன. சில மருந்துகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடும்; நீண்டகால சிகிச்சை மற்றும் மருத்துவச் செலவுகள் சிலருக்குப் பொருளாதாரச் சுமையாக அமையலாம். மேலும், சில நேரங்களில் நோய்க்கான சிகிச்சைக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், உணவு, வாழ்க்கை முறை மற்றும் இயற்கை சார்ந்த முழுமையான உடல்நலப் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்தப்படாமல் இருக்கலாம். எனவே, நவீன மருத்துவத்தின் அறிவியல் முன்னேற்றங்களைப் பயன்படுத்துவதோடு, ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

நிறை குறைகள் (நவீன மருத்துவம்)

நவீன மருத்துவம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மருத்துவ முறையாகும். இதன் முக்கியமான நிறைகளாக, நோய்களை இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற நவீன கருவிகளின் மூலம் துல்லியமாகக் கண்டறியும் திறன், அவசரநிலைகளில் உடனடி சிகிச்சை அளிக்கும் வசதி, அறுவைச் சிகிச்சை மற்றும் பல்வேறு நவீன சிகிச்சை முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலும், தடுப்பூசிகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் பல நோய்களைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் முடிகிறது. இருப்பினும், நவீன மருத்துவத்தில் சில குறைகளும் உள்ளன. சில மருந்துகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

நீண்டகால சிகிச்சை மற்றும் மருத்துவச் செலவுகள் சிலருக்குப் பொருளாதாரச் சுமையாக அமையலாம். மேலும், சில நேரங்களில் நோய்க்கான சிகிச்சைக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், உணவு, வாழ்க்கை முறை மற்றும் இயற்கை சார்ந்த முழுமையான உடல்நலப் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்தப்படாமல் இருக்கலாம். எனவே, நவீன மருத்துவத்தின் அறிவியல் முன்னேற்றங்களைப் பயன்படுத்துவதோடு, ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

முடிவுரை :

அன்றயை மருத்துவமும் இக்கால மருத்துவமும் மனிதனின் உடல்நலத்தைப் கொண்டுள்ளன முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளன. அக்கால மருத்துவம் இயற்கை சார்ந்த மூலிகைகள், உணவுமுறை, வாழ்க்கை ஒழுக்கம் மற்றும் நோய் வருமுன் தடுக்கும் முறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது. இக்கால நவீன மருத்துவம் அறிவியல் ஆய்வு, தொழில்நுட்ப வளர்ச்சி, துல்லியமான நோய் கண்டறிதல் மற்றும் விரைவான சிகிச்சை முறைகளின் மூலம் மனித வாழ்வை மேம்படுத்தி வருகிறது. இவ்விரு மருத்துவ முறைகளிலும் தனித்தனியான சிறப்புகளும் சில குறைகளும் காணப்படுகின்றன. எனவே, அக்கால மருத்துவத்தின் இயற்கை சார்ந்த நோய் தடுப்பு அணுகுமுறையையும் இக்கால மருத்துவத்தின் அறிவியல் சார்ந்த சிகிச்சை முறைகளையும் தேவைக்கேற்ப ஒருங்கிணைத்து அணுகுவது மனித சமுதாயத்தின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பயனளிக்கும் என்பதே இவ்வாய்வின் முக்கிய முடிவாகும்.

துணைநூற்பட்டியல்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை - மணிவாசகர் பதிப்பகம் - 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600 10

2. தமிழ் இலக்கிய வரலாறு - மு. வரதராசன் - சாகித்திய அகாதெமி பதிப்பகம் - புது தில்லி – 110 001.

© 2026 எனது பார்வையில் அக்கால மருத்துவமும் இக்கால மருத்துவமும். This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 537–547
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

காலந்தோறும் தமிழும் பல்துறை அறிவும்

Tamil and Multidisciplinary Knowledge Through the Ages

மெ.பேபிநிஷாந்தினி[1,*], M. Babynishanthini[2]

[1] உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02, தமிழ்நாடு, இந்தியா

[2] *Assistant Professor of Tamil, Seethalakshmi Ramaswami College, T, iruchirappalli – 02, Tamilnadu, India*

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00099	

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மொழியின் வளர்ச்சியானது இலக்கியப் படைப்புகளின் எண்ணிக்கை பெருகிய வரலாறு மட்டுமல்ல. பல்வேறு அறிவுத் துறைகளுடன் இணைந்து வந்த வரலாறாகவும் அமைகிறது. சங்க இலக்கியங்களில் இயற்கை, நிலவியல், வேளாண்மை, காலநிலை, விலங்கியல், கடல்சார் வாழ்க்கை, வணிகம் போன்றவை மக்களின் வாழ்க்கை முறைகளைக் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. அற இலக்கியங்களில் மருத்துவம், அரசியல், பொருளாதாரம், ஒழுக்கவியல் போன்ற அறிவுத்துறைகள் முறையான சிந்தனைகளாக அமைகின்றன. காப்பியங்கள் இசை, நடனம், நாடகம், நகர அமைப்பு போன்ற கலை மற்றும் சமூக அறிவுகளைப் பதிவு செய்கின்றன. நவீன காலத்தில் அச்சு, அறிவியல் தமிழ், கலைச்சொல்லாக்கம், ஆகியவற்றின் வழியாக தமிழ் புதிய அறிவுகளை ஏற்றுக்கொள்கிறது. இன்றைய நிலையில் கணினித் தமிழ், இணையத் தமிழ், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளுடன் தமிழ் இணைந்து வளர்ந்துள்ளது. இவ்வாறு சங்ககாலம் முதல் தமிழின் வளர்ச்சியைப் பல்துறை அறிவின் தொடர்ச்சியான பயணமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

Keywords / திறவுச்சொற்கள்: தமிழ்; பல்துறை அறிவு; சங்க இலக்கியம்; அறிவியல் தமிழ்; கணினித் தமிழ்; செயற்கை நுண்ணறிவு

Abstract

The evolution of the Tamil language is not merely a history of the proliferation of literary works; it is also a journey intertwined with various fields of knowledge. Sangam literature documents aspects such as nature, geography, agriculture, climate, zoology, maritime life, and trade through the lens of people's lifestyles. Didactic literature incorporates fields like medicine, politics, economics, and ethics as structured systems of thought. Epic literature records knowledge regarding arts and society, including music, dance, drama, and urban planning. In modern times, Tamil has embraced new knowledge through printing, scientific Tamil, and the coining of technical terminology. Currently, the language has evolved alongside fields such as computer-based Tamil, internet-based Tamil, and artificial intelligence. Thus, this article presents the

growth of Tamil from the Sangam era to the present as a continuous journey alongside multidisciplinary knowledge.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மெ.பேபிநிஷாந்தினி, & Babynishanthini, M. (2026). காலந்தோறும் தமிழும் பல்துறை அறிவும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 536–546. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8563

முன்னுரை

ஒரு மொழியின் ஆற்றலை அதன் இலக்கியச் செழுமையைக் கொண்டு மதிப்பிடுவது மட்டுமல்லாது, அம்மொழி மனிதனின் எத்தகைய அறிவுத் தேவைகளைப் பதிவு செய்துள்ளது என்பதும் அதன் வளர்ச்சியின் அளவுகோலாகும். தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டே மனித வாழ்வின் பல்வேறு கூறுகளோடு இணைந்து வளர்ந்துள்ளது. தமிழரின் வாழ்க்கை இயற்கைச் சூழலோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக நிலம், நீர், காலம், உயிரினங்கள், தொழில், வணிகம், உணவு போன்றவை இலக்கியப் பதிவுகளாக மாற்றமைந்துள்ளன. இதனை தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டின் அடிப்படையில்,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்”

(தொல். பொருளம். அகம். நூற்பா.5)

என்று குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களையும் அவற்றுடன் தொடர்புடைய வாழ்வியலையும் சுட்டுகிறது. இது இலக்கிய வகைப்பாடு மட்டும் அல்லாமல் நிலவியல், சூழலியல், வாழ்வியல், தொழில், பண்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் அறிவாற்றல் முறையாகவும் உணரமுடிகிறது.

சங்கத் தமிழரின் இயற்கையறிவு

சங்க இலக்கியத்தில் இயற்கை மனித உணர்வுகளுக்குப் பின்னணியாக மட்டும் காட்சிப்படுத்தவில்லை. அது தனக்கென ஒரு வாழ்வியல் அமைப்பைக் கொண்டதாக அமைந்துள்ளது.

குறுந்தொகையில்,

“யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்”

(குறுந்தொகை. பா. 40)

இப்பாடலில் செம்மண்ணில் பெய்த மழைநீரானது அந்த மண்ணோடு இரண்டரக் கலந்து நிற்பது போல, நம் அன்பு கொண்ட நெஞ்சங்கள் தாமாகவே ஒன்றாய் கலந்துவிட்டன, என்று உவமை வழி காதல் உணர்வை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கிய பாடல்களின் பெரும்பான்மையாக மனித வாழ்க்கை நிலத்தோடும் பருவத்தோடும் இணைக்கப்பட்டுள்ளதை உணரமுடிகிறது.

குறிஞ்சி நிலத்தில் மலை, அருவி, காந்தள், குறிஞ்சி, யானை போன்ற

இயற்கைக் கூறுகள், முல்லையில் காடு மற்றும் மேய்ச்சல் வாழ்க்கை, மருதத்தில் வயலும் உழவும், நெய்தலில் கடலும் மீன்பிடித்தலும், பாலையில் வறட்சியும் பயணமும் இடம்பெற்றுள்ளன. எனவே சங்ககால மக்களின் சிந்தனை சூழலை தனித்த பொருளாக அல்லாமல், மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கருதியிருப்பதை அறியமுடிகிறது.

நிலவியல் பார்வை

தமிழின் திணைக் கோட்பாடு, நிலவியல் சார்ந்த பார்வையை வெளிப்படுத்தும் வகையில் தலைசிறந்து விளங்குகிறது. தொல்காப்பியம் நிலத்தை ஐந்து திணைகளாக வகைப்படுத்துவதோடு, ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றையும் தொடர்புப்படுத்துகிறது.

“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே

நுவலுங் காலை முறைசிறந் தனவே.”

(தொல். பொருள். நூற்பா.3)

நிலம், பொழுது ஆகியவை முதல்பொருளாகவும், அந்த நிலத்தோடு தொடர்புடைய இயற்கைக் கூறுகள் கருப்பொருளாகவும், மனித உணர்வு உரிப்பொருளாகவும் அமைந்துள்ளன. இங்கு நிலமானது புவியியல் பரப்பாக இல்லாமல், மனித வாழ்க்கை, தொழில், உணவு, உயிரினங்கள், பண்பாடு ஆகியவற்றைத் தீர்மானிக்கும் சூழலாக பார்க்கப்படுகிறது. எனவே திணைக் கோட்பாடு மக்களின் பழைய நிலவியல் அறிவைப் புரிந்துகொள்ள உதவும் முக்கியமான இலக்கியச் சான்றாக அமைகிறது.

சங்க காலத் மக்கள் நிலத்தின் தன்மை, ஈரப்பதம் மற்றும் மண்களின் நிறம் ஆகியவற்றை நுட்பமாக ஆராய்ந்து அவற்றைப் பயிர் விளைச்சலுக்கு ஏற்பப் பகுத்திருந்தனர். நீர் வளம் குறைந்து, கரடுமுரடான மற்றும் கடினமான மண் அமைப்பைக் கொண்ட குறிஞ்சி, முல்லை நிலப் பகுதிகளைச் சங்க இலக்கியங்கள் வன்புலம் என்றும், தீம்புனல் (நன்னீர்) பாய்ந்து வண்டல் படிந்த வளமான மருத நிலப் பகுதிகளை மென்புலம் என்றும் அழைத்தனர்.

புறநானூற்றில் மதுரை நக்கீரர் இயற்றிய பாடாண் திணைப் பாடலில் மென்புலத்து (வயல்) உழவர்கள், வன்புலத்து (முல்லை) எருதுகளைப் பயன்படுத்தி உழுவது இருவேறு நிலங்களின் பிணைப்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

“வன்புலக் கேளிர்க்கு மென்புல மருங்கின்

விசிபிணி முழவின் பாணர் ஓக்கல்”

(புறம். பா - 395)

இப்பாடலில் சோழ நாட்டின் வளமைக் குறித்து பாடும்போது வன்புலத்தில் வாழும் மக்களுக்கு, மென்புலமாகிய மருத நிலத்துச் செல்வங்களை வாரி வழங்குவதை புலவர் குறிப்பிட்டுள்ளார். எனவே தமிழர்கள் நிலத்தின் கடின, மென்மைத் தன்மைகளைத் துல்லியமாக அறிந்திருந்த செய்தியை அறியமுடிகிறது.

மழைநீரை மட்டுமே நம்பி உழவு செய்யப்படும் வறண்ட கரிசல் நிலத்தைப் 'புன்புலம்' என்று அழைத்து, அதில் விளையும் வரகு, தினைப் பயிர்களைப் பற்றி விவரிக்கும் அகநானூற்றுப் பாடலில் புலவர் இடைக்காடனார்,

“கல்லென் கானத்துக் கட்கண் ஆமான்

புன்புல வரகின் பூப்போங் கணவற்...”

(அகம். பா - 194)

பெருமழை பொழிந்த விடியற்காலையில், செம்மண் நிலத்தில் ஏர் பூட்டி உழுத நிலமானது ஊனைக் கிழித்தது போலச் சிவந்து காணப்பட்டன. அந்த ஈரமான செம்புழுதியில் விதைக்கப்பட்ட வரகு விதைகள் நன்றாக முளைத்து வளர்ந்துக் காணப்பட்டன. இதனை புலவர் மண்ணின் நிறம், அதன் கடினத் தன்மை, நீர்வளம் மிக்க ஆற்றுப் படுகை ஆகியவற்றைத் தங்களின் உழவுப் பட்டறிவால் வகைப்படுத்திய சங்ககால மக்களின் வாழ்வியல் அறிவை உணரச்செய்துள்ளார்.

வேளாண் சிந்தனை

சங்க இலக்கியங்களில் வேளாண்மை என்பது ஒரு தொழிலாக மட்டுமின்றி, ஒரு வாழ்வியல் சிந்தனையாகவும், அறிவியல் நுட்பமாகவும் போற்றப்பட்டுள்ளது. நிலத்தைத் தெரிவுசெய்வது முதல் அறுவடை செய்து விதைகளைப் பாதுகாப்பது வரை மக்களின் வேளாண் சிந்தனை சிறந்து விளங்கிற்று.

வேளாண்மை மக்களின் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையாக இருந்தது. மருதத்திணைப் பாடல்களில் வயல், நெல், நீர், உழவு, எருது, உழவர் போன்ற பல்வேறு பகுதிகளாக இடம்பெற்றுள்ளன. இதனை திருவள்ளுவர் குடிமையியல் அதிகாரத்தில் உழவின் அடிப்படைத் தன்மை குறித்து விளக்கியுள்ளார்.

“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை.”

(குறள். 1031)

என்று உலகத்தின் இயக்கத்திற்கு அடிப்படையாக அமையும் உழவுத் தொழிலின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

மேலும்,

“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து.”

(குறள். 1032)

என்று உழவரின் சமூகப் பங்களிப்பையும் விவரிக்கிறது. இவ்விரு குறள்களும் வேளாண்மையை ஒரு தொழிலாகக் கருதாமல், சமூகத்தின் பொருளாதார அடித்தளத்தை எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் தமிழில் வேளாண் சார் அறிவு, பொருளாதாரச் சிந்தனை ஆகியவை இணைந்திருப்பதை அறிய முடிகிறது.

இயற்கை வேளான்மை

மனித முயற்சி இன்றி இயற்கையாகக் காடுகளிலும் மலைகளிலும் விளையும் தானியங்களை அறுவடை செய்யும் முறையும் சங்க கால மக்களிடம் இருந்துவந்துள்ளது. இது குறிஞ்சி நில மக்களின் வேளாண் சிந்தனையை அறியமுடிகிறது.

“தொய்யாது வித்திய துளர்படு துடவை

ஐவன வெண்ணெல்”

(புறம். பா - 168)

இங்கு தொய்யாது வித்திய என்றது நிலத்தை மனிதர்கள் உழாமல், தானாகவே காட்டில் முளைத்து வளர்ந்த மலைநெல் என்று பொருள்படும். இயற்கையோடு இயைந்த உழவுச் சிந்தனைக்கு இதுவொரு சிறந்த சான்றாக விளங்குகிறது. வேளாண்மை வயல் வேலை மட்டுமல்ல. அது நீர்ச் சேமிப்பு, விதை மேலாண்மை, மண் வளம் காத்தல், மனிதப் பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு வாழ்வியல் சிந்தனையாக அமைகிறது.

நீர் மேலாண்மையும் வேளாண்மையும்

மழைநீரையும், ஆற்று நீரையும் தேக்கி வைத்து வேளாண்மை செய்ய வேண்டும் என்ற நீர்ப்பாசனச் சிந்தனை சங்ககால மக்களிடம் காணப்பட்டுள்ளது. நீரின்றி வேளாண்மை இல்லை எனும் செய்தியை புறநானூற்றுப் பாடலில் மன்னர்களுக்குப் புலவர்கள் அறிவுறுத்துமாறு குடபுலவியனார் இயற்றியுள்ளார்.

“நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம, இவண் தட்டோ ரே
தள்ளாதோரே தள்ளாதோரே.”

(புறம். பா - 18)

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்குப் பாடிய இப்பாடலில், நிலம் தாழ்வாக உள்ள பகுதிகளில் எல்லாம் ஏரிகளை அமைத்து நீர்நிலைகளைப் பெருக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்பவர்களே உலகில் அழியாப் புகழைப் பெறுவார்கள், செய்யாதவர்கள் வீணே மடிவார்கள் என்றும் வேளாண்மைக்கான நீர் மேலாண்மைச் சிந்தனைக் குறித்து இயற்றியுள்ளார்.

நீரானது மக்களின் வாழ்வியலில் இன்றியமையாத ஒன்றாகும். வேளாண்மை மட்டுமன்றி, குடிநீர், உணவு உற்பத்தி, கால்நடை, மனித வாழ்வு ஆகிய அனைத்திற்கும் நீர் அடிப்படை ஆதாரமாக அமைகிறது.

இந்நீரின் முக்கியத்துவம் குறித்து திருவள்ளவர் வான்சிறப்பு அதிகாரத்தில்,

“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.”

(குறள். 11)

என்றும்,

“நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு.”

(குறள். 20)

என்றும் நீரின்றி உலக வாழ்க்கை இயங்காது என்ற அடிப்படைச் சூழலியல் சிந்தனையை இக்குறள்களின் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியங்களில் ஆறு, குளம், ஏரி, அருவி, மழை போன்ற நீராதாரங்கள் பல்வேறு சூழல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் சங்க கால மக்களின் பழைய இலக்கியங்களை நீரியல் மற்றும் சுற்றுச்சூழல் வரலாற்று ஆய்வுகளுக்கான துணைமை ஆதாரங்களாகவும் துணைநிற்கின்றன.

மருத்துவ மரபறிவு

நம் முன்னோர்களின் மருத்துவச் சிந்தனை மிகவும் பழமையானது. உடல்

நலம், நோய், உணவு, மருந்து, உடல் சமநிலை போன்ற கருத்துகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என நோயில்லாத் தன்மையையே நம் முன்னோர்கள் செல்வமாகக் கருதினார். சங்க கால மக்கள் தங்களைச் சுற்றியுள்ள தாவரங்களின் மருத்துவக் குணங்களை நன்கு அறிந்தவர்கள்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான சிறுபஞ்சமூலம் மருத்துவப் பெயரையே தன் நூலின் பெயராகக் கொண்டு அமைந்துள்ளது. ஐந்து வகையான மூலிகைகளைக் கொண்டு நோயை நீக்குவது போல, ஐந்து வகையான அறக்கருத்துகள் மனித வாழ்வின் தீமைகளை நீக்கும் என்ற அறக்கருத்துக்களை விளக்குகிறது.

சிறுபஞ்சமூலம் என்ற பெயரே ஒரு முக்கியமான மருத்துவக் குறிப்பைத் தருகிறது. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர் பொருட்களின் தொகுப்பாகும். இவை சித்த மருத்துவத்தில் பல்வேறு நோய்களுக்குப் பயன்படும் மூலிகைகளாகப் பயன்பட்டுவருகின்றன.

“சிறிய வழுதுணைவேர் சின்னெருஞ்சி மூலம்
சிறுமலி கண்டங்கத்தரிவேர் நறிய
பெருமலி ஓர்ஐந்தும் பேசுபல் நோய் தீர்க்கும்
அரிய சிறுபஞ்சமூலம்.”

(பதார்த்த குண சிந்தாமணி. பா. 495)

இங்கு மருத்துவச் சிந்தனையானது சங்ககால மக்களின் பழந்தமிழ் வாழ்வியலில் உணவு, உடல் நலம், மூலிகை மற்றும் நோய் தீர்த்தல் ஆகியவை ஒன்றையொன்று சார்ந்தது என்பதை எடுத்தியம்புகிறது. மருந்தானது நோய் ஏற்பட்ட பின் பயன்படுத்தப்படுவதல்ல. நோய் வராமல் உடலைப் பாதுகாக்கும் வாழ்க்கை முறையையும் குறிப்பிடுகிறது. எனவே சிறுபஞ்சமூலம் மக்கள் மூலிகையின் மகத்துவத்தை அறிந்திருந்ததையும், உடல்நலச் சிந்தனையையும் வெளிப்படுத்தும் இலக்கியச் சான்றாக அமைந்துள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் மருத்துவக் குறிப்புடன் அமைந்த மற்றொரு நூல் ஏலாதி ஆகும். உடல் நோயைப் போக்கும் மருந்தைப் போல, அறிவும் அறநெறியும் மனிதனின் வாழ்வியல் குறைகளைப் போக்கும் என்ற கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது.

ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறு பொருட்களின் சேர்க்கையால் உருவாகும் மருந்தாகக் குறிப்பிடப்படுகிறது.

“நிறை உடைமை, நீர்மை உடைமை கொடையே
பொறை உடைமை, பொய்ம்மை புலாற்கண் மறை உடைமை
வேய் அன்ன தோளாய் இவை உடையான் பல் உயிர்க்கும்
தாய் அன்னன் என்னத் தகும்.”

(ஏலாதி. பா. 6)

என்று உடல்நோயைப் போக்கும் மருந்தாக ஏலாதி பயன்பட்டது போல, ஏலாதி நூலில் இடம்பெறும் அறக்கருத்துகள் மனிதனின் உள்ளநோயைப் போக்கும் மருந்தாக அமைந்துள்ளன. இதன்மூலம் பழந்தமிழரின் மருத்துவச் சிந்தனை உடல்

நலம் மட்டுமின்றி மனநலம் மற்றும் அறநெறியையும் உள்ளடக்கியதாக இருந்தது காணலாகிறது.

திருவள்ளுவர் மருத்துவத்திற்கென தனி அதிகாரத்தையே அமைத்துள்ளார்.

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.”

(குறள். 948)

என்று நோயை அறிதல், அதன் காரணத்தை ஆராய்தல், அதற்கான தீர்வை அறிதல், நோயாளியின் நிலைக்கேற்ப செயல்படுதல் என்ற நான்கு நிலைகளை இக்குறளில் அமைத்துள்ளார்.

உணவியல் மரபு

தமிழ் இலக்கியங்களில் உணவு மனித வாழ்வின் அடிப்படைத் தேவையாகும். உணவு பசியைத் தீர்ப்பதற்கான பொருளாக மட்டும் கருதப்படவில்லை. உடல் நலத்துடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. நிலம், நீர், வேளாண்மை, உழைப்பு, விருந்தோம்பல், உடல்நலம், சமூக வாழ்வு ஆகியவற்றோடு உணவு நெருங்கிய தொடர்புடையது.

சங்க இலக்கியங்களில் மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. அதில் புறநானூறு போன்ற நூல்கள் அக்கால மக்களின் உலகியல் வாழ்க்கையைப் பதிவு செய்யும் முக்கிய இலக்கியச் சான்றாக விளங்குகிறது.

உணவின் அடிப்படை நிலமும் நீரும் எனும் பொருளை புறநானூற்றுப் பாடலில்,

“உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே”

(புறம். பா. 18)

என்று உணவு உருவாவதற்கு நிலமும் நீரும் அடிப்படை என எடுத்துரைக்கிறது. நிலத்தில் விளையும் பயிரும், அதனை வளர்க்கும் நீரும் சேர்ந்தால்தான் உயிர்களைக் காக்கும் உணவு கிடைக்கிறது. இதன் வழி, உணவு உற்பத்தியின் அடிப்படையாகிய வேளாண் அறிவும் நீரியல் அறிவும் மக்களிடையே இருந்ததை அறியமுடிகிறது.

எனவே, தமிழ் இலக்கியங்களில் காணப்படும் உணவியல் மரபு மக்கள் என்ன உணவை உண்டனர்? என்பதைக் குறிப்பிடுவது மட்டுமல்ல. உணவு கிடைத்தவிதம், நிலம் மற்றும் நீரின் முக்கியத்துவம், உழைப்புக்கும் உணவுக்கும் உள்ள தொடர்பு, ஆகியவற்றையும் வெளிப்படுத்துகிறது. இதனால் தமிழ் இலக்கியங்கள் மக்களின் உணவு அறிவுக்கும், வாழ்வியல் அறிவுக்கும் சான்றாக விளங்குகின்றது.

கடல்சார் அறிவு

நெய்தல் நில வாழ்க்கை கடலை மையமாகக் கொண்டது. மீன்பிடித்தல், படகு, கடற்பயணம், உப்பு உற்பத்தி, கடல்வழி வணிகம் போன்றவை சங்ககால மக்களின் கடல்சார் வாழ்வை வெளிப்படுத்துகின்றன. பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகச் செழிப்பை எடுத்துரைக்கும் பாடல்,

“நீர்ப்பெயர்ந்து எவ்வம் நீர்பரந்து”

(பட்டினப்பாலை. பா. வரி.6)

எனக் கடல்சார் இயக்கத்தையும் வணிகச் சூழலையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. எனவே சங்கத் தமிழ் கடல்சார் வரலாறு, வணிகம், பொருளாதாரம், புவியியல் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய அறிவையும் பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

அரசியல் அறிவு

சங்க இலக்கியங்களில் அரசியல், ஆட்சிமுறை, மன்னரின் கடமை, நல்லாட்சி, நீதி, குடிமக்கள் நலம், போர், தூதரகம், அமைச்சரவை போன்ற அரசியல் சார்ந்த செய்திகள் பல பதிவாகியுள்ளன. புறநானூறு, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, போன்ற புற இலக்கியங்கள் பழந்தமிழரின் அரசியல் அறிவை எடுத்தியம்புகிறது.

மன்னனின் ஆட்சி அறத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற அரசியல் சிந்தனைiய மதுரை மருதன் இளநாகனார் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்”

(புறம். பா. 55)

என்று மன்னனின் வெற்றியானது போரில் பெறும் வெற்றி மட்டுமன்று. அறநெறியைப் பின்பற்றி மக்களை ஆட்சி செய்வதே உண்மையான அரச வெற்றி என்கிறார். இப்பாடல் ஆட்சியின் அடிப்படை அறமாக இருக்க வேண்டும் என்ற தமிழரின் அரசியல் சிந்தனையை எடுத்துரைக்கிறது. எனவே சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் அரசியல் அறிவுக்கும் ஆட்சியியல் சிந்தனைக்கும் வரலாற்று ஆவணங்களாக திகழ்கின்றன.

அரசியல் சிந்தனைக்கு முன்னுதாரனமாக திருக்குறளின் பொருட்பாலில் முதல் அதிகாரமான இறைமாட்சி அமைந்துள்ளது.

“படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு.”

(குறள். 381)

அரசின் வலிமை படை, குடிமக்கள், பொருளாதார வளம், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய பல கூறுகளின் ஒருங்கிணைப்பில் அமைகிறது என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அரசனின் தனிப்பட்ட வீரத்தை மட்டுமே அரசின் வலிமையாகக் கருதாமல், நிர்வாக அமைப்பின் பல கூறுகளை ஒருங்கிணைந்த முறையை எடுத்துரைக்கிறது. இதன்மூலம் தமிழ்ச் சிந்தனையில் அரசியல் அறிவும் நிர்வாக அறிவும் தொன்மையான அடித்தளத்தைக் கொண்டிருந்ததை அறியமுடிகறது.

தமிழும் இசை அறிவும்

நம் முன்னோர்களின் பல்துறை வளர்ச்சியில் இசைத்துறையும் முக்கிய பங்காற்றுகிறது. சிலப்பதிகாரம் இசை தொடர்பான விரிவான செய்திகளைத் தரும் காப்பியமாகத் திகழ்கிறது. அரங்கேற்றுக் காதையில் மாதவி நடனமாடும் போது குழல், யாழ், தண்ணுமை, முழவு மற்றும் ஆமந்திரிகை போன்ற பல்வேறு

இசைக்கருவிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து மிக நேர்த்தியாக ஒலித்ததை இளங்கோவடிகள் அழகாக விவரித்துள்ளார்.

“யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்
தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்துத்”

(சிலம்பு. அரங்கேற்றுக் காதை. பா.வரி. 139–142)

என இசைக் கருவிகளின் ஒலிச்சூழலைக் குறிப்பிடும் பகுதிகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. இதனால் மக்களின் இசை மரபை இசையியல், ஒலியியல், நாடகவியல், நடனவியல் போன்ற பல துறைகளோடு இணைத்து ஆய்வு செய்யமுடிகிறது.

தமிழும் அச்சுத் தொழில்நுட்பமும்

தமிழின் அறிவுப் பரவலில் அச்சுத் தொழில்நுட்பம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஓலைச்சுவடிகளில் இயற்றிய இலக்கண இலக்கியங்கள் அச்சு வடிவம் பெற்றது. பழந்தமிழ் நூல்களைத் தேடி, சேகரித்து, பதிப்பித்த உ.வே. சாமிநாதையரின் தமிழ்ப்பணி தலைசிறந்ததாகும். அவர் பதிப்பித்த சங்க நூல்கள் இன்று ஆய்வாளர்களுக்கு முதன்மை ஆதாரங்களாக பயன்படுகின்றன.

அவரது **“என் சரித்திரம்”** நூலில் ஓலைச்சுவடிகளைத் தேடி அலைந்த அனுபவங்கள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனை அச்சுத் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்திற்கான வரலாற்றுச் சான்றாகக் கொள்ளலாம். அச்சுத் தொழில்நுட்பம் தமிழின் வளர்ச்சியில் ஊடக மாற்றமாக மட்டும் இல்லாமல், அறிவைப் பாதுகாத்து தலைமுறைகளுக்குக் கடத்தும் அறிவியல் செயல்முறையாகவும் அமைகிறது.

தமிழும் கணினித் தொழில்நுட்பமும்

இன்றைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் கணினி முக்கியப் பங்காற்றி வருகிறது. உலகின் பல்வேறு மொழிகள் கணினித் தொழில்நுட்பத்துடன் இணைந்து வளர்ந்து வருவதுபோல, தமிழும் கணினித் தொழில்நுட்பத்துடன் இணைந்து புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. தமிழ் எழுத்துகளை கணினியில் உள்ளீடு செய்தல், சேமித்தல், திருத்துதல், அச்சிடுதல், இணையத்தில் பகிர்தல் போன்ற செயல்பாடுகள் தமிழின் பயன்பாட்டை விரிவுபடுத்தியுள்ளன.

“கணினித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் தமிழ் தட்டச்சு முறைகள் உருவாகின. தமிழ்99, அஞ்சல், தமிழ் தட்டச்சு போன்ற உள்ளீட்டு முறைகள் தமிழில் கணினிப் பயன்பாட்டை எளிதாக்கின. மேலும், Unicode தொழில்நுட்பத்தின் மூலம் தமிழ் எழுத்துகள் உலகளாவிய கணினி மற்றும் இணையச் சூழலில் ஒருங்கிணைக்கப்பட்டன. இதனால் வெவ்வேறு கணினிகள் மற்றும் இணையத் தளங்களில் தமிழ்த் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது எளிதானது.”

(தமிழ் இணையக் கல்விக்கழகம்)

கணினி வழித் தமிழ் ஆய்வு இன்று புதிய துறையாக வளர்ந்து வருகிறது.

மின்னூல்கள், மின்னிதழ்கள், மின்னணு அகராதிகள், உரைத்தொகுப்புகள், சொல் தேடல் கருவிகள், இயற்கை மொழிச் செயலாக்கம் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் தமிழ் பயன்படுத்தப்படுகிறது. இதனால் தமிழ் மொழி இலக்கியப் பயன்பாட்டைத் தாண்டி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளிலும் தனது பயன்பாட்டை விரிவுபடுத்தியுள்ளது.

கணினித் தொழில்நுட்பம் தமிழின் பரவலுக்கும் பெரிதும் துணைபுரிகிறது. சமூக ஊடகங்கள், இணையதளங்கள், வலைப்பதிவுகள், காணொளித் தளங்கள் போன்றவற்றின் வழியாகத் தமிழ் உலகளாவிய தொடர்பு மொழியாகவும் பயன்பாட்டு மொழியாகவும் வளர்ந்து வருகிறது. இளம் தலைமுறையினர் தமிழில் எழுதவும் படிக்கவும் பகிரவும் கணினி மற்றும் இணையத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர்.

கணினித் தொழில்நுட்பம் தமிழைப் பாதுகாப்பதற்கான கருவியாக மட்டுமன்றி, தமிழை நவீன அறிவியல் உலகுடன் இணைக்கும் பாலமாகவும் விளங்குகிறது. ஓலைச்சுவடியிலிருந்து அச்சு நூலுக்கும், அச்சு நூலிலிருந்து மின்னூலுக்கும், மின்னூலிலிருந்து செயற்கை நுண்ணறிவு வரையிலான தமிழின் பயணம், காலந்தோறும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொண்டு வளர்ந்து வரும் தமிழின் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது.

முடிவுரை

காலந்தோறும் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் பல்வேறு துறைகளோடு இணைந்து வளர்ந்து வந்துள்ளன. இயற்கை, வேளாண்மை, மருத்துவம், வானியல், நீரியல், விலங்கியல், தாவரவியல், கடல்சார் அறிவு உள்ளிட்ட பல்துறை அறிவுச் செய்திகளைத் தமிழ் இலக்கியங்கள் தம் பதிவுகளின் வழியாக வெளிப்படுத்தியுள்ளன. பழந்தமிழரின் வாழ்வியல் அனுபவங்களும் அறிவியல் சிந்தனைகளும் இலக்கியங்களில் அழகியலோடு இணைந்து பதிவாகியுள்ளன. கால மாற்றத்திற்கேற்ப தமிழ் புதிய அறிவுத் துறைகளையும் தொழில்நுட்பங்களையும் உள்வாங்கிக் கொண்டு தன்னைத் தொடர்ந்து வளப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கணினி மற்றும் இணையத் தொழில்நுட்ப வளர்ச்சி தமிழின் அறிவுப் பரப்பை உலகளாவிய தளத்திற்கு விரிவுபடுத்தியுள்ளது.

துணைநூற்பட்டியல்

(1) இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், கௌரா பதிப்பகம். சென்னை. 2010.

(2) சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). குறுந்தொகை. டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(3) உ.வே. சாமிநாதையர், புறநானூறு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(4) உ.வே. சாமிநாதையர், அகநானூறு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(5) ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, நற்றிணை, பூம்புகார் பதிப்பகம், சென்னை. 2010.

(6) சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(7) இராகவையங்கர்.ரா (உ.ஆ). பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே.சா.

நூல்நிலையம், சென்னை. 2000.

(8) நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை. (உ.ஆ). திருக்குறள். பழனியப்பா பிரதர்ஸ். சென்னை. 2007.

(9) ந.மு. வேங்கடசாமி நாட்டார். சிலப்பதிகாரம். கௌரா பதிப்பகம். சென்னை. 2011.

(10) மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுதில்லி. 2009.

(11) ச. வையாபுரிப்பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை.2000.

(12) தனிநாயக அடிகள், தமிழும் பண்பாடும், தமிழ் ஆய்வு வெளியீடு.2004.

(13) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்மொழி மற்றும் இலக்கிய ஆய்வு வெளியீடுகள், சென்னை.2012.

(14) உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. https://www.tamilvu.org

(15) தமிழ் இணையக் கல்விக்கழக வெளியீடுகள், சென்னை. https://www.tamilvu.org

(16) தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடத்திட்டங்கள் மற்றும் மின்னூலகம், சென்னை. https://www.tamilvu.org

(17) சுப்ரமணியன், கு. வை., கணித்தமிழ், சென்னை, மணிவாசகர் பதிப்பகம். 2011.

(18) மு. பொன்னவைக்கோ, இணையத் தமிழ், சென்னை: பாரதி புத்தகாலயம்.2023.

(19) கண்ணன், க. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள். நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 2008.

© 2026 மெ.பேபிநிஷாந்தினி, M. Babynishanthini. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 548–553
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தமிழ் இலக்கியங்களில் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும்

Elements of Lifestyle and Culture in Tamil Literature

சு தென்றல்[1,*], வே. சசிக்குமார்[2]

[1] முதல்வர், சேன் பன்னாட்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நவக்கரை, கோவை – *641105, Ph : 8300002751*

[2] உதவிப்பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை, சேன் பன்னாட்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நவக்கரை, கோவை – *641105, Ph : 8015566463*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: சு தென்றல் — thendralsundar20@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00100	

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம் என்பது நுண்கலை. அதற்கெனத் தனித் தன்மையும் வளர்ச்சியுண்டு. காலத்தின் மாற்றத்திற்கேற்பத் தமிழ் இலக்கியங்களும் புதுப்பொலிவுடன் வளர்ச்சி நிலையை அடைந்து நம் மண்ணின் பழம்பெருமைகளையும், மானுட வாழ்வின் மகத்துவங்களையும் எதிர்வரும் தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டுகின்றன. மனிதனைப் பண்படுத்தும் மதிப்புகளை இலக்கியங்கள் பெற்றுத் திகழ்வதோடு வாழ்வின் வழிகாட்டியாகவும், சமுதாயத்தோடு மனிதனை ஒன்றிணையச் செய்யும் பாலமாகவும் திகழ்கின்றன. இலக்கிய வரலாற்றை ஒரு தேசத்தின் வாழ்க்கை வரலாறு எனச் சிறப்பித்து உரைப்பாரும் உளர். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். பெறற்கரிய மானிடப் பிறப்பைப் பெற்ற மனிதன் நன்முறையில் வாழ்வதற்குச் சில நெறிமுறைகளைப் பின்பற்றி இப்பிறப்பின் பொருளைச் சிறக்கச் செய்ய வேண்டும். அதற்கு நம் தமிழ் இலக்கியங்கள் வழிகாட்டியாக அமைகின்றன என்பதை வெளிக்கொணர்வதே இவ்வாய்வுக்களமாகும்.

Abstract

Literature is a fine art, possessing its own unique character and trajectory of evolution. Adapting to the changing times, Tamil literature has flourished with renewed vitality, showcasing the ancient glories of our land and the magnificence of human existence to future generations. Beyond embodying values that refine human character, literature serves as a guide for life and a bridge connecting the individual with society. Some even characterize the history of literature as the biography of a nation. The poet Avvaiyar famously remarked, "Rare, indeed, is birth as a human being." Having attained this precious human life, one must adhere to certain principles to live meaningfully and nobly; this study aims to highlight how Tamil literature serves as a guiding light in that endeavor.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: தென்றல், சு., & சசிக்குமார், வே. (2026). தமிழ் இலக்கியங்களில் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 547–552. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8565

முன்னுரை:

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை” - குறள்: 322

பகிரும் உணவை அனைத்துயிர்களுக்கும் பகிர்ந்து தந்து தானும் உண்டு வாழ்வதே வாழ்வின் முதல் அறமென்பார் வள்ளுவர். தமிழரின் பண்பாடு என்பது உலக அளவில் எல்லா தேசத்தினராலும், மொழியினராலும் போற்றப்பட்டும், பின் தொடரப்பட்டும் தமிழருக்குப் பெருமை தருவன. உலகின் மிகத் தொன்மையான நாகரிகங்களில் ஒன்றான தமிழர் பண்பாடு அன்பு, வீரம், விருந்தோம்பல், அறம், இயற்கை வழிபாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தனிச் சிறப்பான வாழ்க்கை முறையாகும். அக்காலம் தொட்டு இக்காலம் வரை பாரம்பரியக் கலைகள், பழக்கவழக்கங்கள், கலாச்சாரம் போன்ற விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ இலக்கியங்களின் பங்களிப்பை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் இலக்கியங்களில் வாழ்வியலும் பண்பாட்டுக் கூறுகளும்

"இசையும் இன்பமும் ஈதல் மூன்றும்
அசைவுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு ஈனம் என
வினையான் பிரிந்த வேறுபாடு கொள்கை"

- நற்றிணை - 214

நல்லவை செய்தல் வேண்டும். அதனையும் இன்றே செய்தல் வேண்டும். இசை, இன்பம், ஈதல் இம்மூன்றும் செயலாற்று இருப்போர்க்கு எளிமையாகக் கிடைப்பதில்லை. பொருளையும், புகழையும் தேடி இன்பமாக வாழ்வதோடல்லாமல் வறுமையில் வாழுவோர்க்கு மனமிரங்கிப் பொருள் உதவி செய்வது மகிழ்ச்சியைத் தருமென நற்றிணை கூறுகிறது. பிறருக்கு உதவுவதே பேரின்பம் எனும் கொள்கை போற்றுதலுக்குரிய தமிழர் பண்பாகும்.

"வலம்படு முரசின் இலங்கவன வீழுஉம்
அவ்வெள் அருவி உவ்வரையதுவே
சில்வளை விறலி செல்குவை ஆயின்"

பதிற்றுப்பத்து - 78

சங்க இலக்கியங்களில் கடையெழு வள்ளல்கள் அன்புக்கும், கொடைக்கும் பேளுதாரணமாகத் திகழ்ந்ததை அறியலாம். மனித உணர்வுகளை மட்டுமல்லாது தாவரம் போன்ற உயிரினங்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இலக்கியங்களில் நீங்கா இடம் பெற்றனர். மோசிகீரனார் எனும் புலவர் இரும்பொறை எனும் மன்னனைச் சந்திக்க வந்து அயர்வுற்று அவரது கட்டிலில் உறங்கிய போது மன்னன் விசிறிய செய்தி நம் பண்பாட்டைப் பறைசாற்றும். பகைவரிடம் பொருளைப் பெற்ற பெரும் செல்வத்தை புலவர்பெருமக்களுக்கு வாரி வழங்கிச் செய்திகளையும் இலக்கியங்கள் கூறுகின்றன. மன்னர்கள் அறிவிற் சிறந்தோரைப் போற்றி அவர் துயர் தீர வழிசெய்து வாழச் செய்தது உயரிய பண்பாகும்.

“மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து வாழ முற்படும் போது எவையெல்லாம் இன்றியமையாததாகக் கருதப்படுகிறதோ அவை பண்பாட்டு விழுமியங்கள் எனப்படும்.”

- பண்பாட்டு மானுடவியல்

கூட்டாக வாழும் சமுதாயத்தின் மனமும் உடலும் சார்ந்து ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் மேற்கொள்ளப்படும் நல்ல நடத்தை முறைகள், பண்பாட்டு மதிப்புகளாகும் என்பது தெளிவாகிறது. 'பாடறிந்து ஒழுகல்' எனும் புறநானூற்றுப் பண்பாட்டுக் கூற்று, பண்படுத்தப்பட்ட விழுமிய மனிதனது வாழ்க்கை அமையும் போது அனைவருக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

நல்ல சமுதாயம் உருவாக வேண்டுமெனில் அங்கே இல்லறம் நல்லறமாக விளங்க வேண்டும். அதனால் தான் வள்ளுவர் 'இல்லறவியல்' எனும் தனி இயலில் 'இயல்புடையக் கணவனும், மனைவியும் இல்லற மாண்பறிந்து ஒருமித்த கருத்து' இணைந்து வாழ்தல் மகிழ்ச்சிக் கூட்டும். இல்லறத்தின் வெற்றி அன்பைப் பெறத்தக்கக் கொண்ட பண்பாட்டு அடையாளத்தைப் பெற வேண்டும். இளமை தொடங்கி முதுமை வரை புரிதலுடன் கூடிய வாழ்வு நம் பண்பாட்டின் அடையாளமும், இலக்கியங்களும் இல்லற ஒழுக்கத்தின் மேன்மையை எடுத்தியம்புகின்றன.

மனைத்தக்க மாண்புடையாள் ஆகித் தற்கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கை துணை"

— திருக்குறள் *51*

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகளைக் கொண்ட பெண் தன் குடும்ப பொருள் வளத்திற்கு ஏற்ப வாழ்க்கை நடத்திப் பெருமை சேர்ப்பாள் என்கிறார் வள்ளுவர்.

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் முக்கிய இடம் பெறுகிறது. தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்கிறது. 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்றது கொன்றைவேந்தன். பசியில் வருபவர்க்கும் பகிர்ந்து கொடுத்தல், தன்னிடம் ஏதும் இல்லாத வறுமைச் சூழலிலும் தன்னிடமிருந்து பொருளை விற்று பசி போக்கிய செய்தி என நம் இலக்கியங்கள் பண்பாட்டுச் செய்திகளை நயந்து நோக்கக் கூடியவை.

"நெருநை வந்த விருந்திற்கு மற்றுந் தன்

இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்று இக்

கருங்கோட்டுச் சீறியாழ் பணயம்"

— புறநானூறு – *31*

நேற்று வந்த விருந்தினரை உபசரிக்கத் தன்னிடம் பொருள் இல்லாத போது, தன் வீரத்தின் அடையாளமான வாளை விற்று உணவுப்பொருள் வாங்கி பசிபோக்கியதும், மறுநாள் வந்தவரை உபசரிக்கப் பொருள் இல்லாத போது தன்னிடம் இருந்த யாழை விற்றுப் பொருள் ஈட்டி உணவளித்ததும், எவர்க்கும் இல்லாத தமிழரின் உயரிய பண்பாடாகும்.

சங்க காலத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் வீரத்திலும், அறிவிலும் சிறந்து விளங்குவர். ஆண் பாற் புலவர்களுக்கு நிகராகப் பெண்பாற் புலவர்களும் அறிவில் சிறந்து உயர்ந்திருந்தனர். இருவரும் அகம் / புறம் இரண்டிலும் ஆகச்சிறந்த பாடல்களைத் தந்தனர். மிகத் துயரமான காலச் சூழலிலும் வீரம், நாட்டுப்பற்றும்

பெண்களிடம் மிக்கிருந்தது.

“கெடுக சிந்தை கடிது இவள் துணிவே

மூதில் மகளிராதல் தகுமே”

- புறநானூறு - 279

ஒரு பெண் போரில் தந்தையையும், கணவனையும் இழந்த பின்னும் போர்ப் பறைக்கேட்டு தன் மகனையும் போருக்கு அனுப்பிய செய்தியை ஒக்கூர் மாசாத்தியார் பாடல் கூறுகிறது. தமிழ் சமுதாய தமிழர்களின் பண்பாட்டு மதிப்புகளில் இன்றியமையாத மக்களை தலை நிமிர வைத்த வீரம் என்பது அவரது மனத்திடத்தை உறுதிப்படுத்துகிறது. கடுமையான மனநெகிழ்ச்சியிலும், தனக்குப் பிறந்த குழந்தை இறந்து பிறந்தாலும் வாளால் குழந்தையைக் கீறிப் புதைக்கத் துணிணனின்று தன் வீரத்தை மெய்ப்பித்தான்.

திரைகடலோடியும் திரவியம் தேடியொர் தமிழர். தான் வாழும் சூழலுக்கேற்ப தன் வாழ்வைத் கட்டமைத்துக் கொண்ட தமிழ் மக்கள் சூழல் மாறும் பொழுது அம்மாற்றத்தோடு போராடித் தம்மை நிலைநிறுத்தி தகவமைத்து வாழ்ந்தார்கள். தன் இல்லறத் துணையும் பிரிந்து பல நாட்கள் கடலிலே பயணம் செய்து பொருளீட்டி நல்லறத்தை நிலைநாட்டினர். தான் ஈட்டிய பொருளைத் தன்னைச் சார்ந்தோர்க்கும், வறியவர்க்கும் பகிர்ந்து தந்து கொடைப்பண்போடு வாழ்வின் பெருளுணர்ந்து வாழ்ந்தார்கள்.

நல்வாழ்வு தெளிந்த குறிக்கோளோடு தொடங்வேண்டும். தெளிவான சிந்தனையே பிறரது பழிப்புக்கு ஆளாகாமல் அறம் சார்ந்து வாழ்வாக இருக்க வேண்டும். செய்ய இயலாது. மனித வாழ்வு இன்றைய சூழலில் செல்லாதிருத்தல் வேண்டும். னல்லவை செய்வது னற்பண்பு. ஓரவேளை செய்ய இயலாது பயின் அல்லவை செய்யாதிருத்தல் வீண்டும். மனித வாழ்வு இன்றைய சூழலில் வீகமும், அவசரமும் னிறைந்து.

ஈன்ற புறந்தருதாலன் என் தலைக்கடனே

சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

ஒளிறு வாள் அருஞ் சமம் உருக்கித்

ளிறு எறிந்து பெயர்தல்

காளைக்குக் கடனே!"

— புறநானூறு - *312*

பிள்ளைகளைப் பெற்று வீரத்தோடு பாதுகாத்து வளர்ப்பது தாயின் கடமை; நல்லொழுக்கமும் அறிவும் கொண்ட சான்றோனாக ஆக்குவது தந்தையின் கடமை; போர் வீரனுக்கான ஆயுதத்தை நேர்த்தியாக வடிவமைத்துத் தருவது கொல்லனின் கடமை; நாட்டு மக்களுக்குச் சரியான ஒழுக்கத்தையும், நெறிகளையும் விதித்து வழங்குவது மன்னனின் கடமை. போர்க்களம் சென்று வெற்றியுடன் திரும்புவது வீரனின் கடமை என்பதாக மானுடத்தின் கடமைகளை வகுத்து மனித சமூகம் சிறந்த இலக்கியம் வழிநடத்துகிறது.

ஒருவர் செய்யும் நற்செயல்கள்தான் அவர்களுக்குத் துணை நின்று வளமான

எதிர்காலத்தை உருவாக்கித் துன்பமின்றி வாழ வைப்பதாகும். செல்வம் ஒருவரிடம் இருந்தால் அதன் பயன் பிறருக்கு உதவுவது என்றும் கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர். செய்யும் தொழிலைத் தெய்வமாகவும், உயிராகவும் நினைத்து உழைத்தனர்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தர வாரா

நோதலும் தணிதலும் அவற்றோரன்ன

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

— புறநானூறு - *192*

என்கிறார் கணியன் பூங்குன்றனார். இவ்வுலகத்திலுள்ள அனைத்து இடங்களும் நம் சொந்த இடங்களே; மொழி, இனம், மதம் கடந்து அனைத்து மக்களும் நம் உறவினர்களே. நாம் அனுபவிக்கும் இன்பமோ, துன்பமோ அது பிறரால் வருவது இல்லை. நம் வினையினால் ஏற்பட்டது. இறப்பு என்ப அனைவருக்கும் பொதுவானது. வாழ்வை நினைத்துப் பெருமைப்படவோ, தாழ்ந்து நோக்கவோ கூடாது. நம்மை விட கீழானோரைக் கண்டு கீழ்மையாக நடத்தலும் கூடாது என்ற வாழ்வின் மெய்மை இப்பாடலில் உணர்த்தப்படுகிறது.

முடிவுரை

தமிழரின் வாழ்வியல் தன்னலமற்றது. உலகளாவிய நிலையில் உயர்ந்து நிற்கும் பண்பாடு தமிழர்க்கே உரித்தானது. உலகம் சிறப்புற நல்ல சிந்தனையுடைய தனிமனிதனின் பண்பாடு சமுதாயத்தை முன்னேற்றுகிறது. தனிமனித முன்னேற்றமே சமுதாய முன்னேற்றம் ஆகும். அறமும் நீதியும் கண்களாகக் கொண்டு நம் முன்னோர்கள் மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக்க அரும்பாடுபட்டனர். உலகத்தின் கடைக்கோடியில் வாழக்கூடிய நம் மக்கள் கூட நம் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், மூத்த வழக்கங்களையும் பின்பற்றுவதைப் பெரும் பேறாகக் கொண்டுள்ளனர். நம் தமிழ் இலக்கியங்கள் காட்டிய நல் வழியில் தான் நம் தமிழுலகம் தரணி புகழ் பெற்றுள்ளது. இலக்கியங்களின் ஆகச் சிறந்த இப்பணி தனித்துவம் நிறைந்த பண்பாட்டு அடையாளங்களை நமக்குத் தந்தது என்பதில் ஐயமில்லை.

துணை நற்பட்டியல்

1. திருக்குறள் – புலியூர் கேசிகன், பூம்புகார் பதிப்பகம் – சென்னை – 108
2. நற்றிணை – புலியூர் கேசிகன், பாரி னிலையம் – சென்னை – 108
3. பதிற்றுப்பத்து – ஔவை துரைசாமிப்பிள்ளை – சைவ சித்தாந்த னூற்பதிப்புக்கழகம்.

சென்னை – 001.

4. புறனானூறு - புலியூர் கேசிகன், பாரி னிலையம் – சென்னை – 108
5. பண்பாட்டு மானுடவியல் – பக்தவத்சல பாரதி - அடையாளம் பதிப்பகம் – திருச்சி – 310.

© 2026 சு தென்றல், வே. சசிக்குமார். This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which

permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 554–558
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

முனைவர் சிவ. நடராஜன், உதவிப் பேராசிரியர், ஆய்வுநெறியாளர், தமிழாய்வுத்துறை

Siva. Natarajan[1,*], தமிழ் மொழி வளர்ச்சியில் அருளாளர்களும் புலவர்களும்[2]

[1] *Assistant professor & Research Advisor, Research department of Tamil, Sri –La-Sri Kasivasi Swaminatha Swamigal Arts College, Thiruppanandal – 612504*
[2] *Benefactors and Poets in the Development of the Tamil Language*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: Siva. Natarajan — sivanatarajansiva@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
—	—	—	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00101	

Abstract

-

Keywords / திறவுச்சொற்கள்: - ஆ – பசு; ஐந்திலக்கணம்- தமிழ் மொழியில் உள்ள எழுத்து; சொல்; பொருள்; யாப்பு; அணி என்னும் இலக்கணங்கள். ஏரகம் – சுவாமிமலை; காவை; சம்புவனம் – திருவானைக்கா; யமகம் – உதடுகள் ஒட்டாமல் பாடப்படும் பாவகை; பாய்ச்சல் – தாண்டுதல்; கோட்டம் – வளைவு; மாந்தர் - மக்கள்

Abstract

This research paper demonstrates, through appropriate evidence, how Saivite saints and poets contributed to the development of the Tamil language through their literary works.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: Natarajan, S., & புலவர்களும், த. மொ. வ. அ. (2026). முனைவர் சிவ. நடராஜன், உதவிப் பேராசிரியர், ஆய்வுநெறியாளர், தமிழாய்வுத்துறை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 553–557. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8567

முன்னுரை:-

இனிமையும் நேர்மையுமாக விளங்கும் தமிழ் மொழியில் பண்டுதொட்டு இன்றளவும் தோன்றி நிலைபெற்று மாந்தர்தம் மனக்கோட்டம் தீர்க்கும் நூல்கள் எண்ணில் அடங்காதன. இந் நூல்கள் அறிஞர்களால், தமிழ் மொழியின் கட்டமைப்பினைக் காக்கும் இலக்கணங்கள் என்றும் மக்கள் தம் வாழ்வில் அடைவதற்குரிய இலக்கினை இயம்பும் அமைப்பினை இலக்கியங்கள் என்றும் பகுக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியின்கண் உள்ள இலக்கியங்கள் பல வகையில் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் வடிவமைப்பால் அறிமுகப் படுத்தப்படும் பகுப்பானது, பயிலும் மக்களால் எளிதில் உள்ளத்தில் கொள்ளத்தக்க வகையில் உள்ளன. அவை பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என்பனவாகும். இவ் வகையில், சிற்றிலக்கியங்களின் பங்களிப்பினை, தமிழ் மொழி வளர்ச்சியில்

அருளாளர் களும் புலவர்களும் என்ற தலைப்பின் கீழ் கட்டுரை ஆவின் பாய்ச்சல் எனக் கண்டு காட்டுகிறது.

அருளாளர்களும் சிற்றிலக்கியங்களும்:-

இறைவனின் முழுமையான அருளுக்கு உடையவர்களாக விளங்குபவர்கள் அருளாளர்கள் ஆவர். இறைவன் மீது கொண்ட அன்பினால் இவர்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்தத் தமிழ் இலக்கியங்கள் பலவாகும். அருளாளர்கள் வரிசையில், இறை யருளோடு தமிழ் வளர்ச்சியை இயைத்த அருளாளர்களின் நிரலில்,

திருஞானசம்பந்தர்

சேரமான் பெருமாள் நாயனார்

குமரகுருபரர்

ஆகியோர் சான்றாகக் கொள்ளப்படுகின்றனர்.

திருஞானசம்பந்தர்:-

சீர்காழி என்னும் தலத்தில் 7ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர். இவர் 3ஆம் வயதில் இறைவனால் ஞானப்பால் ஊட்டப் பெற்றவர். திருஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் பதிகம் எனும் அமைப்பு முறையை உடையன. இவர் அருளிய பதிகங்கள் 383 ஆகும். இப்பதிகங்கள் ஒவ்வொன்றும் ஒரு சிற்றிலக்கியமாகும். இப்பதிகங்கள் பன்னிரு திருமுறை தொகுப்பில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களில் ஈரடி மேல் வைப்பு, எழுகூற்றிருக்கை, ஏகபாதம், கோ மூர்த்தி, கூடற் சதுக்கம், திரு இருக்குக்குறள், திரு முக்கால், நாலடி மேல் வைப்பு, மாலை மாற்று உள்ளிட்ட பதிகங்கள் தமிழ் இலக்கணத்துள் ஒன்றான சொல்லணியியல் அமைப்பு முறையில் உள்ளன. இப்பதிகங்கள் இறைவன்முன்பு பாடப்பட்ட சமய நூல்கள் என்றாலும் இப்பதிகங்கள் தமிழ் வளர்ச்சிக்கு உரியனவாகும்.

சேரமான் பெருமாள் நாயனார்:-

சேரநாட்டு மன்னர். 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பன்னிரு திருமுறை ஆசிரியர்களில் பதினோராம் திருமுறைத் தொகுப்பில் மூன்று இலக்கியங்களை அருளியவராவார். இம்மூன்று இலக்கியங்களில் திருக்கயிலாய ஞான உலா என்னும் சிற்றிலக்கியம் தனித்துவம் வாய்ந்ததாகும். சேரமான் பெருமாள் நாயனார் இவ்வுலாவை திருக்கயிலையில் இறைவன் முன்பு பாடினார் இறைவன் அருளால் இந்நூல் பூமிக்கு அனுப்பப்பட்டது என்பது பெரிய புராணம் குறிப்பிடும் வரலாறு.[1]

திருக்கயிலாய ஞான உலாவிற்கு, ஆதி உலா என்று ஒரு சிறப்புப் பெயர் உண்டு. உலா இலக்கியங்களில் முதல் உலாவாக விளங்குகிறது. சேர நாட்டு மன்னனாக விளங்கிய சேமான் பெருமான் நாயனார். சுந்தரருடன் நட்பு கொண்டார். சுந்தரர் கயிலை செல்லும் போது தான், தன்னுடைய குதிரையின் காதில் ஐந்தெழுத்து மந்திரத்தினை ஓதி விண்ணில் பறந்து சென்று சுந்தரருடன் கயிலை அடைந்தார். இறை வழிபாடு செய்து திருக்கயிலை சென்று முக்தி அடையும் நிலையில், இறைவன் முன்பு உலா இலக்கியத்தைப் பாடி, முத்தி அடைந்தார். இந்நிலையை ஆழ்ந்து நோக்கும் பொழுது சமயத்தையும் மொழி வளர்ச்சியையும் உயிருள்ளளவும் உன்னதமாக போற்றிய தன்மை தெரிய வருகிறது.

ஸ்ரீ குமரகுருபரர்:-

பாண்டி நாட்டில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் 17 ஆம் நூற்றாண்டில்

அவதரித்தவர். ஏழாம் வயதில் திருச்செந்தூர் முருகன் அருளால் பேசும் ஆற்றலைப் பெற்றவர் இவர் அருளிய சிற்றிலக்கியங்கள் 14 ஆகும். தருமையாதீனம் 4ஆவது குருநாதர் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளிடம் குமரகுருபரர் துறவு வேண்டினார். குருநாதர் ஆணைப்படி சிதம்பரம் தலத்தில் சில காலம் தங்கி இறைவனை வழிபாடு செய்து வந்தார். அப்பொழுது பாடிய நூல்களில் சிதம்பரச் செய்யுட் கோவை[2] என்னும் நூலும் ஒன்றாகும். தமிழ் யாப்பிலக்கணம் கூறும் பா இனங்களுக்குச் சைவ சமயச் சார்பான புராணச் செய்திகளை எடுத்துக்காட்டி அருளப்பட்ட நூலாகும். இந்நூல் 84 பாடல்களைக் கொண்டது. இந்நூல் முதல் சான்றிலக்கிய நூல் என்னும் தனிச் சிறப்படையதாகும். துறவு வேண்டி இறைவனை வழிபாடு செய்யும் காலத்தும் தமிழ் மொழியில் தனித்த பற்றுடையவராய் மொழி வளர்ச்சிக்கு அருளிய பிரபந்தமாகச் சிதம்பர செய்யுட் கோவை விளங்குவது தெரிய வருகிறது.

புலவர்களும் சிற்றிலக்கியங்களும்:-

தமிழ் மொழியில் உள்ள ஐந்திலக்கணத் தோய்வும் இலக்கியத் திறமும் ஒருங்கே அமைந்தவர்கள் புலவர்கள் எனப்பட்டனர். புலவர்கள் வரிசையில் தமிழிலக்கிலக்கிய வளர்ச்சிக்குத் துணை நின்றவர்கள் நிரலில்,

கலியாணசுந்தரம்பிள்ளை,

அப்புலிங்கம் பிள்ளை

ஆகியோர்களின் தமிழ் வளர்ச்சிப் பணிகள் சான்றாகக் கொள்ளப்படுகின்றன.

கலியாணசுந்தரம் பிள்ளை:-

20 ஆம் நூற்றாண்டில் கும்பகோணம் பகுதியில் வாழ்ந்த புலவர் ஆவார். இவர் யாத்த நூல், திருவேரக ஓரெழுத்து நிரோட்டக யமக அந்தாதி என்பதாகும். இந் நூல் காப்பு பாடல் நீங்களாக 50 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் ஆனது. இந் நூலின் பொது அமைப்பு நாயகன் நாயகி பாவம் ஆகும். இந்நூலில் உள்ள பாக்களின் ஒவ்வொரு அடியும் "க" என்ற ஓரெழுத்தின் தொடக்கம் கொண்டு அமைந்துள்ளது.

" கண்டந்த நல்லேர கத்தனந் தாதி கழறற்கிசை,

கண்டந்த கார நிகரள கச்சத்தி காதலன் செங்

கண்டந்த னிற்கர த்தா னரன்சங் கரனளித்த,

கண்டந்த யானையி னானனத் தாதி கழல்சரணே." [3]

என்பது நூலில் உள்ள காப்பு பாடல் ஓரெழுத்தின் தொடக்கத்திற்குச் சான்றாகும்.

"இந்நூல்போல் ஓரெழுத்து நிரோட்டக யமகவந்தாதி தமிழில் வேறில்லை ஆகலின், இதுவே இனி எழும் ஓரெழுத்து நிரோட்டக யமகவந்தாதிக்கு முதல் நூலாயமைந்திலங்கும் சிறப்புற்று வெளிவருகின்றது"[4] என்று நூலின் சிறப்பினை வாரியார் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளது எண்ணத்தக்கது. இந் நூலினை நோக்குங்கள் புலவரது மொழி அறிவும் மொழி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பெரும் பங்கும் தெரிய வருகிறது.

அப்புலிங்கம் பிள்ளை:-

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மற்றொரு புலவராவார். திருவானைக்கா என்னும் திருத்தலத்தில் வாழ்ந்தவர். பல இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவற்றுள் காவை முருகன் பிள்ளைத்தமிழ் என்னும் நூலும் ஒன்றாகும். இந்நூல்

திருவானைக்காத் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பட்டதாகும். பருவம்தோறும் ஐந்து பாடல்களை அமைத்துள்ளார். பிள்ளைத் தமிழின் பருவங்கள் 13 என்ற இலக்கணத்தை கொண்டு இந்நூலில் 13 பருவங்களை அமைத்துள்ளார். பிள்ளைத் தமிழின் பருவ நிரலை நோக்கும் போது எட்டாம் பருவமாக சிற்றில், ஒன்பதாம் பருவமாக துயிலெழற் பருவம், பத்தாம் பருவம் சிறுபறைப் பருவம், பதினோராம் பருவம் சிறு தேர் பருவம், பன்னிரண்டாம் பருவம் தகர் அடக்கு பருவம், 13ம் பருவம் வேலோச்சு பருவம் என்று பெயரிட்மைத்துள்ளமை, பருவ நிரல் முறை அமைப்பில் ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளமையைக் காண முடிகிறது. இன் நூலில் பல புதிய அமைப்பு முறைகள் காணப்படுகின்றன. இவருடைய காந்தியை கொள்கைகளும் சுதந்திர தாகத்தையும் இவர்தான் பாடல்களில் பல இடங்களில் முருகனிடம் விண்ணப்பிப்பதாகக் காண முடிகின்றது. சான்றாக,

"பந்த விலங்கற என்னுடை இந்தியப் பண்டைய தொண்டர்குழாம்
பற்றும் வலக்கரம் உற்றஓர் கோலினிற், பார்முழு தும்பரவ
வந்து தவழ்ந்திடு தென்றல் அசைப்பினில், வானுற ஓங்கிஒளிர்
வண்ண மதில் தன தெண்ணம் விளங்கிட, வல்லமை காட்டிடவே
அந்தர மீதினில் ஆடி யசைந்திடும் ஆன்ற கதர்க்கொடியின் ஆட்டத்தை
மீறிய நாட்டியம் செய்மன மாம்மயில் மீதில். அருட்
சந்தக் கவிதரும் செந்தமிழ்த் தெய்வமே! சண்முக! சாய்ந்தாடு
சம்பு வனத்துறை அம்பிகை பாலனே! சண்முக! சாய்ந்தாடு! "[5]

என்ற பாடல் காந்திய கொள்கையோடு சுதந்திர தாகத்தையும் கொண்டுள்ளதைக் காண முடிகிறது.

அடுத்து, இன்று மக்கள் ஆலயம் சென்றும் இல்லத்திலேயும் இறைவனிடம் பல வகையான விண்ணப்பங்களை வேண்டி வழிபாடு செய்கின்ற அறிமை நிலையை கண்ட புலவர் தம் பாடலில்,

"நீண்டதோர் பட்டியலே நீட்டி, 'அவற்றையெலாம் நீ அளித் தால்
இதனை நினக்களிப் போம்' எனவே
வேண்டும்அப் பக்தர்குழாம் வீரிடும் ஓசையிலே,
விற்கப் படும்பொருளாய் விட்ட நினதருளுக்கு
ஈண்டும் அடியவரும் எண்ணத்தை நஞ்சாக்கி ஏய்க்கும்
தரகர்களும் எங்கணும் சூழ்ந்து, அறிவை
ஆண்டு வரும்மடமைக்கு ஆலயத் துள்ளிருந்தே
ஆனையங் காஅழகா! - ஆர்த்தங்கை கொட்டுகவே!"[6]

என்பது அப்பாடலாகும்.

அப்புலிங்கம் பிள்ளையின் காவை முருகன் பிள்ளைத்தமிழ் நூலானது சமயம் மொழி வளர்ச்சி என்ற நிலையில் மட்டும் அல்லாது தமிழிலக்கிய வளர்ச்சியில் ஒரு புதுமையைக் காட்டுவதாகவும் உள்ளமை அறிய முடிகிறது.

முடிவுரை:-

தமிழ் வளர்ச்சி என்பது தமிழ் மொழி என்றும் நின்று நிலைபெறுத்தக்க வகையில் அருளாளர்களும் புலவர்களும் பல்வேறு வகையான இலக்கியங்களைப் படைத்து அதனூடே சமய, சமுதாய சிந்தனைகளை அமைத்து மக்களுக்கு நெறி காட்டத்தக்க வகையில் பாடிய சிற்றிலக்கியங்கள் இடையே சமயம் சமுதாயம் என்ற இரண்டு நிலை களிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய கொடையை அறிந்து கொள்ள முடிகிறது

சான்றெண் விளக்கம்

1. சேக்கிழார், பெரியபராணம், வெள்ளானைச் சருக்கம்
2. ஸ்ரீகுமரகுருபரர் பிரபந்தத் திரட்டு
3. வெ.கலியாணசுந்தரம் பிள்ளை, திருவேரக ஓரெழுத்து நிரோட்டக யமக அந்தாதி, காப்பு பா. 1
4. மேலது, முன்னுரை, பக்கம்.5
5. அப்புலிங்கம் பிள்ளை, காவை முருகன் பிள்ளைத்தமிழ் பா.12
6. மேலது, பா.21

துணை நூற்பட்டியல்

1 பெரியபராணம், ஸ்ரீகாசிமடம் , திருப்பனந்தாள்-612504. பதிப்பு - 2019 பதிப்பாண்டு - 2000

2 ஸ்ரீகுமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, ஸ்ரீகாசிமடம் , திருப்பனந்தாள்-612504. பதிப்பாண்டு - 2000

3. வெ.கலியாணசுந்தரம் பிள்ளை, திருவேரக ஓரெழுத்து நிரோட்டக யமக அந்தாதி, 2ஆம்பதிப்பு ஆண்டு 2017
4. அப்புலிங்கம் பிள்ளை, காவை முருகன் பிள்ளைத்தமிழ், கீதா பிரஸ், திருச்சி -02, முதற்பதிப்ப- 1971

© 2026 Siva. Natarajan, தமிழ் மொழி வளர்ச்சியில் அருளாளர்களும் புலவர்களும். This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 559–564
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தமிழ் இலக்கியங்களில் அறப்பண்புகளும் மனித நேயமும்

Ethical Values and Humanism in Tamil Literature

வெ.விஜயலட்சுமி*

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் 641 014, அலைபேசி எண் - 9094036932

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: வெ.விஜயலட்சுமி — vijayalakshmi@psgcas.ac.in

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026

DOI	Article ID / கட்டுரை எண்
–	TAJP-2026-00102

ஆய்வுச்சுருக்கம்

அறவழி மனிதன் வாழ வேண்டும், அவன் பிற உயிர்களையும் தன் உயிர்போல நினைத்து நேசிக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ் இலக்கியங்கள் வெறும் கற்பனை நயத்திற்காக மட்டும் படைக்கப்படவில்லை. சமுதாயத்தை நெறிப்படுத்தும், பண்படுத்தும் அறப்பணிகளைச் செய்து வந்துள்ளன. மனிதன் தன் வாழ்வில் கடைபிடிக்கவேண்டிய அன்பு, கருணை, ஈகை, இரக்கம், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை, பிறருக்கு உதவும் மனப்பான்மை போன்ற உயர்ந்த குணங்களின் தொகுப்பாகும். அறத்தைவிட உயர்ந்த செல்வமும் இல்லை. அதை மறப்பதை விட பெரிய தீங்கும் இல்லை என்பார் வள்ளுவர். அறப்பண்பு மனிதனை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்கிறது. முதலில் மனிதன் தன்னை நேசிக்கக் கற்கவேண்டும். பின்புதான் அவனால் உலகை நேசிக்க முடியும். செய்யவேண்டியதைச் செய்தலும் செய்யக்கூடாததைத் தவிர்த்தலும் அறத்தின் அடிப்படைக் கூறாகும். சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழ் இலக்கியப்பரப்பில் அறப்பண்பும் மனிதநேயமும் எவ்வாறு போற்றப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

Abstract

Human beings ought to live a righteous life, cherishing other living beings just as they cherish their own lives. Tamil literature, spanning two millennia, was not created merely for imaginative appeal; it has played a vital role in guiding and refining society. It embodies noble virtues that humans should practice—such as love, compassion, generosity, mercy, non-harming of other beings, and a helpful disposition. Valluvar asserts that there is no wealth greater than virtue, and no greater harm than forsaking it. A virtuous nature elevates a human being to a higher plane. One must first learn to love oneself before one can truly love the world. Performing right actions and abstaining from wrong ones constitute the fundamental elements of virtue. This article examines in detail how the values of virtue and humanism have been cherished in the realm of Tamil literature from the Sangam era to the present day.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: வெ.விஜயலட்சுமி (2026). தமிழ் இலக்கியங்களில் அறப்பண்புகளும் மனித நேயமும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 558–563. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8569

ஆய்வு நோக்கம்

இன்றைய காலகட்டத்தில் அறப்பண்பும் மனித நேயமும் மக்கள் மனதில் பதியவேண்டும் என்பதற்காகவும் அவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படவேண்டும் என்ற நோக்கிலும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

அறப்பண்பு

அதனால்தான் அன்பின் வழியது உயிர் நிலை என்கிறார் வள்ளுவர். அறவழி நடக்க அன்பே அடிப்படையாகின்றது.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்

மறத்திற்கும் அஃதே துணை திருக்குறள் அன்புடைமை 76

என்ற குறட்பாவின் வழி அறவழியில் நடப்பவர்களுக்கு மட்டுமே அன்பு உரியது எனச் சிலர் கூறுவர். அவ்வாறு கூறுபவர் அன்பின் இயல்பை முழுமையாக அறியாதவர். வீரம் போன்ற மறச் செயலுக்கும் அன்பே துணையாகும் என்கிற்ா.

அன்பு அறம்

சங்க இலக்கியங்கள் பெரிதும் கருப்பொருளின் அடிப்படையிலே தலைவன் தலைவிக்குரிய அன்பினை வெளிப்படுத்துகின்றன. தலைவன் உயிர்களிடத்து கொண்ட அன்பை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த அகநானூறு குறுங்குடி மருதன்ா பாடலொன்றில்,

பூத்த பொங்கர்த் துணையொடு வதித்த

தாதுண் பறவை பேதுற லஞ்சி

மணிநா வார்த்த மாண்வினைத் தேரன் அகநானூறு பாடல் - 4

கார் காலம் வந்துவிட்டது. வினைமேற் சென்ற தலைவன் காலம் தாழ்த்தாது விரைந்து வருவான் கவலைவேண்டாம், அவன் வரும் வழியில் வண்டுகள் நிறைந்திருக்கும் சோலைகள் உண்டு. எல்லா உயிர்களுக்கும் இன்பம் துய்க்கும் உரிமை உண்டு என்ற பொது சிந்தனை தோன்றி அவ்வண்டிற்கு இடையூறின்றி எச்சரிக்கையாகத் தன் தேரைச் செலுத்தி வருவதால் தாமதம் ஆகின்றது எனத் தோழி தலைவியைத் தேற்றுமாறு இப்பாடல் அமைந்துள்ளது.

மற்றொரு பாடல், மனிதன் மட்டுமின்றி விலங்குகளும் ஒன்றன்மீது ஒன்று கொண்ட அன்பினை வெளிப்படுத்துகின்றது. ஆண்மான் தன் பெண்மான் அம்புபட்டு இறந்ததை நினைத்து மேய்தலை மறந்து, நீர் கூட பருகாது, தன்மீது அம்பு தைத்ததைப் போல மாழ்கி அவ்விடத்திலேயே சோர்ந்து கிடந்தது. குட்டியிடத்தே கொண்ட அன்பால் கைம்மைப்பட்ட அந்த ஆண்மான் உயிர் வாழ்ந்ததாகக் காட்டுகின்றார் இளங்கீரனார்.

கணையிடக் கழிந்த தன் வீழ்துணை யுள்ளி

குறுநெடுந் துணைய மறிபுடை யாட

புன்கண் கொண்ட திரிமருப் பிரலை

மேய் பதம் மறுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து

நெய்தல்அம் படுவில் சின்னீர் உண்ணாது

எஃகுறு மாந்தரின் இனைந்துகண் படுக்கும்...

அகநானூறு - பாடல் 371

இல்லறம்

அன்பும் அறமும் ஒருங்கே இருப்பதே இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும் என மனித குலத்திற்காக வள்ளுவப் பெருந்தகை காட்டிய நெறியைச் சங்க இலக்கிய அகநானூற்றில் கபிலரது பாடல் ஒன்றில் காணமுடிகின்றது. காட்டிலே வேடனும் ஆண்பன்றியும் எதிர்கொண்ட காட்சி. ஆண்பன்றியானது தன் பெண் பன்றியையும் குட்டிகளையும் பாதுகாப்பான இடத்தில் விட்டு, மீண்டு வந்து வேடனின் எதிர் நின்றது. இங்கு அவ்வேடன் அதனை ஆண்பன்றியாகக் கருதாமல் தன் தலைவனாகக் காண்கிறான். தன் தலைவன் போர்க்களத்தில் பகைவர் படையை விலக்கித் தடுப்பதற்குத் தான் முன்னிற்பதாகக் காண்கிறான். அப்பன்றியைக் கொல்லாமல் விடுகின்றான். இங்கு வேடனின் மனிதநேயமும் பன்றியின் வீரமும் தன் குடும்பத்தின் மீது கொண்ட அன்பும் இல்லறச் சிறப்பு ஒருங்கே வெளிப்படுகின்றது.

அரும்புழை முடுக்கர் ஆட்குறித்து நின்ற

தறுகட்பன்றி நோக்கிக் கானவன்

குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி.... அகநானூறு, பாடல் 248

இப்பாடலில் ஆண்பன்றியின் இல்லற மாண்பு புலப்படுகின்றது.

ஈதல் அறம்

சங்க காலத்திற்குப்பின் தோன்றிய நீதிநூற் காலத்தை அற இலக்கியக் காலம் என்றே அழைத்தனர். அக்காலத்தில் அறமும் மனிதநேயமும் கோட்பாடுகளாக வடிவம் பெற்றன. உலகப்பொதுமறையாம் திருக்குறள் அறத்தையும் மனித நேயத்தையுமே வலியுறுத்தியது.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு திருக்குறள், புகழ் - 231

வறியவர்களுக்குக் கொடுத்து உதவி வாழவேண்டும், அதனால் புகழ் உண்டாக வாழ வேண்டும். அப்புகழ் தவிர மனித வாழ்விற்குப் பயன்தரக்கூடியதும் சிறந்த பொருளும் வேறொன்றம் இல்லை என்பதை அக்குறள் பறைசாற்றுகின்றது. இக்கருத்தை நாலடியாரும் வலியுறுத்துகின்றது.

மறற்றறிவாம் நல்வினை யாம்இறையம் என்னாது

கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்

முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்

நற்காய் உதிர்தலும் உண்டு. நாலடியார், இளமைநிலையாமை, பாடல் - 19

நாம் இளையவராக இருக்கின்றோம், ஆகையால் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என நினைத்து அறம் செய்யாமல் விடக்கூடாது. கையில் பொருள்

இருக்கும்போதே அறம் செய்தல் வேண்டும் என்கிறது.

அரசியல் அறம்

அற இலக்கியங்கள் மட்டுமல்லாது, தமிழில் தோன்றி காப்பிய இலக்கியங்கள் தனிமனித ஒழுக்கத்தையும் சமூக அறத்தையும் பறைசாற்றியது. மக்களுக்கு மட்டுமன்றி மன்னர்களுக்கும் அறத்தை எடுத்தியம்பின. அரசன் நடுவுநிலை தவறாது ஆட்சி செலுத்தவேண்டும் என்பதை பாண்டிய மன்னனின் ஆராயாது செய்த குற்றத்தால் ஏற்பட்ட விளைவின் மூலம்,

அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றமாம்

சிலப்பதிகாரம், வழக்குரை காதை வெண்பா - பாடல் வரி - 82

அரசனாக இருந்தாலும் தவறு செய்தவர்களை அறமே கூற்றுவனாகி தண்டிக்கும் என்ற கருத்தைப் புலப்படுத்தியது.

பசிப்பிணி தீர்த்தல்

சமண காப்பியமான சிலப்பதிகாரம் ஒருவகையில் அறம் உரைக்க, பொத்த காப்பியமான மணிமேகலையும் பசிப்பிணி தீர்த்தலும் அறமே என்றுரைக்கின்றது. இதனை,

மணந்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்

உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே

மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, பாடல் வரி 95-96

இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் உணவு கொடுப்பவர்கள் உயிர் கொடுத்தவர்களாவர் என்றுரைக்கிறது.

கருணை

திருமூலரும் தம் திருமந்திரத்தில் மனிதர்கள் செய்யவேண்டிய கருணை அறத்தினைப் பற்றிக் கூறும்போது,

யாவர்க்கு மாம் இறைவற் கொரு பச்சிலை

யாவர்க்கு மாம் பசுவிற் கொரு வாயுறை

யாவர்க்கு மாம் உண்ணும்போ தொரு கைப்பிடி

யாவர்க்கு மாம் பிறர்க்கு இன்னுரை தானே

திருமந்திரம் - முதல் தந்திரம் - அறம் செய்வான் திறம் - பாடல் எண் -252

இறைவனுக்கு ஒவ்வொரு நாளும் பச்சிலை பறித்துச் சாற்ற வேண்டும் என்றும், பசுவிற்கு உணவாகப் புல்லையும் பசியோடு இருப்பவர்க்கு ஒரு கைப்பிடி உணவும் கொடுத்தல் அறமாகும். மேலும் பிறரிடம் இனிமையான சொற்களைப் பேசுவதும் அறச்செயலாகும் என்கிறார்.

மனிதநேயம்

சங்க இலக்கியத்தில் மனிதநேயத்தை மிகுதியாகக் காணமுடிகின்றது. வள்ளலார் உயிர்களிடத்தில் அன்பு செய்யவேண்டும் என்பதை வலியுறுத்திய தோடு

தாமும் நீரின்றி வாட்டமுற்ற பயிர்களைக் கண்டபோதும் பசியால் உடல் மெலிந்து வீடுதோறும் சென்று இரந்து உண்பவரைக் கண்டபோதும் பிணியுற்றுத் துன்புறுபவரைக் கண்டபோதும் வாடிய நிலையை,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தே

வீடுதோ ரிறந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்...

திருவருட்பா பாடல் - 3471

என்ற பாடல் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

சமத்துவம்

இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளியான பாரதியும் மனித நேயத்தோடு அறத்தின் நிலையை புரட்சிகரமாக எடுத்துரைக்கிறார்.

தனியொரு வனுக்குண வில்லையெனில்

ஜகத்தினை அழித்திடுவோம்

பாரதியார் கவிதைகள், பாரத சமுதாயம்

நாட்டிலுள்ள ஒவ்வொரு தனி மனிதனும் உணவுபெற வேண்டும் வறுமை நிலை நாட்டைவிட்டு ஒழிய வேண்டும் என்பதை இப்பாடல் மூலமாக விளக்குகிறார். மனிதநேயமற்ற உலகினை முழுமையாக அழித்திடல் வேண்டும் என சமுத்துவத்தின் பேரொலியை முழக்குகிறார்.

முடிவுரை

தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதும் தனிமனித அறமும் மனிதநேயமும் பின்னிப்பிணைந்துள்ளன. சங்கப்புறபாடலான **யாதும் ஊரே** என்ற உலகப்பொது நோக்கும் நீதி இலக்கியங்களின் **அறம் செய விரும்பு**தலும் காப்பியத்தின் பசிப்பிணி தீர்த்தலும் இடைக்கால **ஜீவகாருண்யமும்** இக்காலச் **சமத்துவமு**ம் மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தும் உன்னத நெறியினைத் தொடர்ந்து செய்து வந்துள்ளன. இந்நிலை தொடர்ந்து உலகமயமாக்கல் என்ற இன்றைய சூழலில் பெருகிவரும் சுயநலம் தவிர்த்து, மக்கள் வாழ தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் வழிவகுக்கும் என்ற கருத்தினை நிறுவும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வ◌ிற்குத் துணைநின்ற நூல்கள்

1. திருக்குறள், சாரதா பதிப்பகம் - நாலடியார், ஸ்ரீ செண்பகா பதிப்பகம்
2. புறநானூறு, -நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
3. சிலப்பதிகாரம், -கௌரா பதிப்பகம்
4. மணிமேகலை, -வர்த்தமானன் பதிப்பகம்
5. பாரதியார் கவிதைகள், -திருமகள் நிலையம்
6. வாசித்தலும் யோசித்தலும், சங்கநெறிகள் - கட்டுரைத் தொகுப்பு, - நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்

© 2026 வெ.விஜயலட்சுமி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use,

distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 565–574
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும்

ஆய்வாளர் கு.சுபத்ரா[1,*], நெறியாளர், ம. சுந்தரமூர்த்தி[2]

[1] முனைவர்பட்ட ஆய்வாளர் தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம் சேலம் - 11, 8072677960
[2] பேராசிரியர் தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம் சேலம் – 11, 9443714173, தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும், *Thavvai: Literary Expressions and Conceptualization of Fertility*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: ஆய்வாளர் கு.சுபத்ரா — nalinisubathra@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00103	

ஆய்வுச்சுருக்கம்

தவ்வை என்ற சொல் தமிழில் அன்னையையும் மூத்த சகோதரியையும், இவ்விடத்தில் தமிழர்களின் ஆதித்தெய்வமும் வளமைத்தெய்வமுமாகிய மூத்ததேவியையும் குறிக்கின்றது. தற்காலத்தில் இத்தெய்வ வழிபாடு மறைந்துவரும் நிலையில் மூதேவி என்ற வசைச்சொல்லின் பயன்பாடு மக்களிடையே இருப்பதனைக் காண முடிகின்றது. சங்ககாலத்து இலக்கியங்கள் முதற்கொண்டு தற்கால இலக்கியம் வரை தவ்வையைக் குறித்து நேரடியாகவோ மறைமுகமாகவோ வரும் பல்வேறு பெயர்கள் காணக்கிடைக்கின்றன. அப்பெயர்களின் ஆய்வு இத்தெய்வம் வளமைக்கும் செழிப்புக்கும் உரிய தெய்வமாக இருந்தது என்ற கருத்தினை உணர வழிவகுக்கும். இதன் வழி மூதேவி என்ற சொல், வசைச்சொல் அல்ல வளமைச்சொல் என நிரூபிப்பது இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

Keywords / திறவுச்சொற்கள்: மூதேவி – வளமை – செழிப்பு – தாய்தெய்வம் - வளமைக்கடவுள் - தமிழர்களின் ஆதித்தெய்வம்

Abstract

The term 'Thavvai' in Tamil denotes mother and elder sister, and in this context, it refers to the primordial goddess and the goddess of Prosperity or Abundance of the Tamils, known as Moodevi. At present, while the worship of this deity is gradually declining, the use of ‘Moodevi’ as a derogatory term can be observed among the people. From Sangam-period literature through contemporary literature, various names referring to Thavvai, either directly or indirectly, can be found. The study of these names helps establish that this deity was associated with prosperity and abundance. Through this, the objective of this research is to establish that the word 'Moodevi' is not a derogatory term but a term denoting prosperity.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: கு.சுபத்ரா, ஆ., நெறியாளர், & சுந்தரமூர்த்தி, ம. (2026). தவ்வை: இலக்கியச் சொல்லாடலும் வளமைக் கருத்தாக்கங்களும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 564–573. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8571

முன்னுரை

தற்காலத்தில் தவ்வை வழிபாடு முற்றிலும் மறையக் கூடிய சூழல் உள்ள நிலையில் நாட்டுப்புற மக்களின் நினைவில் இத்தெய்வம் இருந்தாலும் 'அமங்கலத்தின் தெய்வம்' என்ற எதிர்நிலைப்பாட்டையும் புழக்கத்தில் மிகக் குறைவான பெயர்ப் பயன்பாட்டையும் கொண்டிருக்கிறது. ஆனால் இலக்கியங்களிலும் நிகண்டுகளிலும் இத்தெய்வம் குறித்த பெயர்ச் சொற்கள் பல காணக்கிடைக்கின்றன. மேலும் கள ஆய்வில் இத்தெய்வம் குறித்தும் இதன் வளமைத் தன்மை குறித்தும் மக்களிடமிருந்து நேரடியான தகவல் ஏதும் கிடைக்காவிட்டாலும் உற்றுநோக்கல் மற்றும் உய்த்துணரல் அடிப்படையில் கிடைக்கும் சில தகவல்கள் இக்கட்டுரைக்கும் தவ்வையின் வளமை பற்றிய கருத்துக்கும் வளம் சேர்க்கின்றன.

வளமைக் கருத்தாக்கம்

நாட்டுப்புற மக்கள் வளமை மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். வளமை என்பதற்கு செழிப்பு, நன்மை, செல்வம், உதவி, பொருள், மாட்சிமை எனவும் வளமையர் என்பதற்கு வேளாளர், மாட்சிமையுள்ளோர், பணச்செழிப்புள்ளோர் எனவும் பொருள் கூறப்படுகின்றது. வளம் என்பது செழிப்பு என்ற சொல்லாட்சியாலும் சுட்டப்படுகின்றது. செழிப்பு என்பது முதலில் பயிர்களின் செழிப்புத்தன்மையை உணர்த்துகின்றது. பயிரால் விளையும் தானியங்கள் செல்வம் எனப்படுகின்றது. தானியத்தினால் உணவுத்தேவையை நிறைவேற்றித் தன்னிறைவு பெற்றவன் தொடர்ந்து தன்னிறைவுத் தன்மையைப் பெற முயலும் போது வளமை பற்றிய கருத்து வலுப்பெறுகின்றது. மனிதன் உணவு உற்பத்தி செய்யும் தொழில் முறையைக் கைக்கொண்டபின்னும் பயிர் வளத்திற்கும், அழிவிற்கும் பல இயற்கை நிகழ்வுகள் காரணமாய் அமைந்தன. வெள்ளம், வறட்சி, மிகுந்த வெப்பம், தொடர்ந்து ஓரிடத்தில் பயிர் செய்வதால் வளம் குன்றுதல் ஆகிய இடர்பாடான காரணிகள் ஓரினம் நிலையாக ஓரிடத்தில் வேளாண்மை செய்து வாழ்வதற்குத் தடையாக இருந்தன. இதனை அனுபவத்தின் வாயிலாக அறிந்த மனிதன் ஒவ்வொரு இடர்பாடுகளையும் எதிர்க்கும் அல்லது தாங்கும் மாற்று வழிகளைச் சிந்திக்கலானான். இச்சிந்தனைகள் புலம் பெயர்ந்து வாழும் நாடோடி வாழ்க்கையையும் வேட்டைத் தொழிலையும் மறக்கச் செய்து ஓரிடத்தில் நிலையாக வாழும் வாழ்வுக்குக் கால்கோள் நாட்டியது.

ஆற்றலை வணங்குவதே தமிழரின் வழிபாட்டு மரபாகும் என்ற நிலையில் வேளாண்மைக்கும் கால்நடைவளர்ப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து பல வழிபாடுகளும் நம்பிக்கைகளும் தோன்றின. ஓரிடத்தில் நிலையாகத் தங்கும் போது தூய்மைக் கருத்தும் - கழிவு மேலாண்மையும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறியது. இத்தகைய தூய்மைக் கோட்பாடு பிற்காலத்தில் சில நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் தோன்றக் காரணமாய் அமைந்தது.

ஓரிடத்தில் நிலத்தைப் பண்படுத்தி உழுது வேளாண்மை செய்தபோது பயிர்கள் நன்கு விளைந்த நிலையில் அதே இடத்தில் தொடர்ந்து நிலைபெற்று வேளாண்மை செய்தனர். இம்மக்கள் இயற்கையை நம்பி வாழ்ந்தவராவர். அவர்கள் தாம் இயற்கையைப் போல நடந்தால் தாம் செய்வதைப் பார்த்து இயற்கையும் அதுபோல் நடக்கும் என்று நம்பினர். "மனித இனம் குழவிப்பருவத்தில் இருந்த நிலையில் இயற்கையை மந்திரத்தாலும் மாயவித்தைகளாலும் பணிய வைக்க முடியும் என்று நம்பிற்று. இயற்கையைப் போலச் செய்தால் இயற்கை தனக்கு பணிந்து தன் சொற்படி ஏவல் கேட்கும் என்று எண்ணிற்று".(தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்,

ப.177) இது வளமை அல்லது செழிப்பு பற்றிய நம்பிக்கைகளை ஏற்படுத்துகின்றது. இந்நம்பிக்கை காரணமாக வளமைச் சடங்குகள் செய்யப் படுகின்றன. தொடர்ந்து வளமை வழிபாடு தோன்றியது. வளமை என்பது பயிர் வளமும் உயிர் வளமும் மிகுதியாகச் செழித்து வளர்வது காரணமாக உருவான கருத்தாக்கம் ஆகும். இதனடிப்படையில் வளமைக் குறியீடுகள் பல உருவாகியிருக்கின்றன.

தாய்த்தெய்வ உருவாக்கத்தில் வளமைப்பார்வை

"உலக இலக்கியங்களும் நாட்டார் வழக்காறுகளும் நிலத்தையும் பெண்ணையும் ஒரே நேர்க்கோட்டில் வைத்தே பேசுகின்றன. நிலத்திற்குரிய இலக்கணங்களைப் பெண்ணிற்கும் பெண்ணிற்குரிய இலக்கணங்களை நிலத்திற்குமாகப் பொருத்திப் பார்ப்பதை சமூகம் ஒரு மரபாகவே இன்று வரை கடைபிடித்து வருகின்றது."[2] (ஆர். முத்துராஜன், நாட்டார் வழக்காற்றில் வேளாண் பழமொழிகள், ப. 82) மண்ணும் பெண்ணும் ஆகிய கருத்துக்கள் வளமைக்குரிய ஒன்றாகவும் வளமையுடனும் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. உலகியலில் மண், பயிர்களை உற்பத்தி செய்கின்றது. பெண் மனித உயிர்களை உற்பத்தி செய்கின்றாள். இவ்விரண்டையும் உற்பத்தி என்ற அடிப்படையிலும் 'வளமை' என்ற அடிப்படையிலும் ஒப்புமைப்படுத்திப் பேசியிருக்கின்றனர். இதனடிப்படையில் மக்கள் தாய்தெய்வ வழிபாட்டினை மேற்கொண்டிருக்க வேண்டும். இதுவரை கிடைத்துள்ள தாய்தெய்வச் சிற்பங்கள் அனைத்தும் வளமைக்குறிகளுடன் கிடைத்துள்ளமை இக்கருத்தினை மெய்ப்பிக்கின்றது. தொல்லியல் சான்றுகளில் காணலாகும் பருத்த வயிறும் மார்பகங்களும் தவ்வை சிற்பத்திலும் இடம்பெறுகின்றன. தவ்வை சிற்பத்தினைத் தவிர வேறு எந்தப் பெண்தெய்வச் சிற்பங்களும் பெரிய வயிற்றினையும் மார்பினையும் கொண்டிருக்கவில்லை. இக்கருத்துக்கள் வளமைக்கும் வளத்தின் விளைவான செல்வத்திற்கும் ஒரு பெண்தெய்வமே அதிபதியாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டு வந்தமையை வெளிப்படுத்துகின்றன.

நாட்டுப்புற மக்களின் வளமைக்கருத்துக்கள்

மூத்ததேவி நாட்டுப்புற மக்களின் சிறுதெய்வமாகும். இதனைப்பற்றி தொ.பரமசிவன் அவர்கள் "குடைவரை கோவில்கள் எழுந்த காலத்தில் வைதீகப் பார்ப்பன மரபு ஏற்றுக்கொள்ளாத தொல்திராவிடத் தெய்வங்கள் சிலவும் இக்கோவில்களில் இடம் பெற்றிருந்தன. திருப்பரங்குன்றத்தில் சிவன், திருமால், முருகன், நடராசர் ஆகிய தெய்வங்களோடும் பக்கத்தில் மூத்ததேவி(மூதேவி) எனப்பட்ட ஜேக்ஷ்டா தேவிக்கும் ஒரு தனி குடைவரை உருவாக்கப்பட்டுள்ளது". (தொ. பரமசிவன், சமயங்களின் அரசியல்,பக்.20,21) இக்கருத்துக்கு சில வரலாற்று ஆவணங்களும் துணைசெய்கின்றன. வைதீக மதமும் திருமாலை வழிபடும் பிராமண அந்தணர்களின் தீட்டுக்கோட்பாடுமே தமிழர்களின் நாட்டுப்புறத்தெய்வங்கள் 'சிறு'தெய்வங்களாக மாறியதற்குக் காரணமாகும்.

மூத்ததேவி செல்வத்துக்கு அதிபதியாக இருந்தவள் என்பதைக் கூற நாட்டுப்புறப் பழக்கவழக்கங்களில் ஏராளமான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. உதாரணமாக வீட்டினைத் தூய்மை செய்யும் துடைப்பத்தை காலில் மிதிப்பதும், வீட்டின் மூலையில் குப்பைகளைக் குவித்து வைப்பதும், பொழுது இறங்கும் வேளை அதாவது மாலை வேளைகளில் குப்பையை வெளியே கொட்டுவதும், உறைமோர் முதலான பெருகக் கூடிய செல்வங்களை மாலை நேரத்தில் மற்றவருக்குத் தருவதும், நாம் பயன் படுத்திய துடைப்பத்தினைக் கடனாகத் தருதல், வெள்ளிக் கிழமைகளில் பணம் கொடுத்தல், உரல் அம்மி முதலான உணவு தாணியங்களினைத் தூய்மை செய்யும் கருவிகளைக் காலில் மிதித்தல் போன்ற செயல்களால் ஒரு குடும்பத்திற்கு

வறுமை, தரித்திரம், செல்வக் குறைவு, உணவுக்குறைவு ஆகியவற்றை ஏற்படுத்தும் என்பது நாட்டுப்புற நம்பிக்கையாகும். இந்நம்பிக்கைகளுக்குரிய பொருள்களைப் பார்க்கும் போது இவை தவ்வையின் அடையாளங்களாகத் தெரிகின்றன. ஆனால் நாட்டுப்புற வழக்கு இவற்றுக்குரிய தெய்வமாக திருமகளான லட்சுமியை அடையாளப்படுத்துகின்றது. இவற்றிடையே நுட்பமாக பார்க்கும்போது மக்கள் தவ்வைக்கு மாற்றாக இலட்சுமி தெய்வத்தை ஏற்றுக்கொள்ளப்பட்டமை புலனாகின்றது.

பிற்காலத்தில் தமிழகத்துக்குள் வந்த ஆரியர்களின் பண்பாட்டுக் கலப்பே தமிழர்களின் வளமைத் தெய்வம் மறைந்ததற்கான காரணமாக அமைகின்றது. அவர்கள் பழங்குடி இன மக்களின் தெய்வங்கள் சிலவற்றைத் தமதாக்கிக் கொண்டனர் என்பதும், அத்தெய்வங்களின் வழிபாட்டு முறையைத் தங்களது மரபுக்கேற்ப மாற்றிக் கொண்டனர். மேலும் அத்தெய்வங்களுக்கான புராணக் கதைகளையும் புனைந்து கொண்டனர். இவ்வாறே தவ்வை என்ற வளமைத்தெய்வத்திற்கு ஈடாக இலட்சுமி என்ற தெய்வத்தைப் படைத்துக்கொண்டிருப்பினும் இதனை நாட்டுப்புற மக்களும் பெயரளவில் ஏற்றுக்கொண்டாலும் மறைமுகமாக அவர்களது வாழ்வியலில் தவ்வையையே நிலைபெற்ற தெய்வமாக வைத்துள்ளனர்.

உரம்

தொடக்க காலத்தில் மக்களின் வழிபாடு ஆற்றலை வழிபடுவதாக அமைந்திருந்தது. இயற்கையைக் கண்டு அஞ்சிய மனிதன் உணவும், வளங்களும் தனது தேவைகளும் இயற்கையிடமே இருக்கின்றது என்பதையும் அறிந்தான். எனவே அவ்வியற்கையை வயப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொண்டான். ஆற்றலைப் பெறவும் அதனைத் தன்வயப்படுத்திக்கொள்ளவும் விழைந்த மனிதன் அதனை வணங்கத் தலைப்பட்டான். இவ்வகையில் முதன்மைத்தொழிலான வேளாண்மைக்கு மூலமாக வளத்தினை வழங்குவது உரமாகும். உரத்தின் ஆற்றலே இங்கு வளம் என வழங்கப்படுவதாகும்.

ஓரிடத்தில் நிலத்தைப் பண்படுத்தி உழுது வேளாண்மை செய்தபோது பயிர்கள் நன்கு விளைந்த நிலையில் அதே இடத்தில் தொடர்ந்து வேளாண்மை செய்தனர். அவ்வாறு செய்யும்போது ஆண்டுக்கு ஆண்டு மண்ணின் வளம் குறைவது இயற்கையே. அப்போது உரத்தின் பயன்படு மேலோங்கிய சூழல் காணப்படும். வேளாண்மையில் உரத்தின் பயன்பாடு வளத்தை மிகுவிக்கிறது. இவ்வளமை ஆற்றல் வணக்கத்திற்குரிய தெய்வத்தினைத் தோற்றுவிக்கிறது. எருவினைக் குப்பை என்றே வழங்குவர். எருவினைக் குழிகளில் இட்டு மட்க வைத்து உரமாகப் பயன்படுத்துவர். வீடுகளில் சேரும் குப்பையும் எருக்குழிக்கே சென்றுசேரும். எருவினை வளம் தரும் செல்வத்தின் மூலமாகக் கருதியதாலே குப்பையைக் கொட்டுதல் - செல்வத்தைக் கொட்டுதல் என ஆகிவிட்டது. உரக்குழியை மிதிக்கக்கூடாது என்ற நம்பிக்கையும், சாணம் என்பது இலட்சுமியின் அம்சம் எனக் கூறும் வழக்கு தவ்வையைக் குறித்து வருவதனையும் இதன் மூலம் அறியலாம்.

தவ்வை குறித்துவரு கிளவிகள்

சேட்டை என்ற சொல்லாட்சி கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் “சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே” என்று பாடுவதன் மூலம் அறிகிறோம். ஜேஷ்டா என்பதற்கு மூத்த அல்லது பெரிய என்று பொருளாகும். திருமகளாகிய லட்சுமி தேவிக்கு மூத்தவள் என்ற பொருளிலில் பரவலாக

ஜேஷ்டாதேவி என்ற பெயர் பயன்படுத்தப் படுகின்றது. ஆனால் தமிழில் மூத்தோள், பழையோள் என்ற தாய்தெய்வப் பெயர்களே வடமொழியில் ஜேஷ்டாதேவி என்று ஆக்கிக்கொள்ளப்பட்டது. ஆரியர்கள் தமிழர்களின் அல்லது பழங்குடிமக்களின் தெய்வவழிபாட்டை ஏற்றுக்கொண்டனர். அவ்வகையில் ஆரியர்களின் பெண்தெய்வ வழிபாடு என்பதும் பழங்குடி மக்களிடம் இருந்து பெறப்பட்டதாகும். சூடாமணிநிகண்டு ஜேஷ்டாதேவிக்கு வேறுபெயர்களாக பதிமூன்று(13) பெயர்களைக் குறிப்பிடுகின்றது. மூதேவி, தௌவை, முகடி, சீர்கேடி, சிறப்பில்லாதாள், கேட்டை, கெடலணங்கு, சேட்டை, ஏகவேணி, கலதி, இந்திரைக்கு மூத்தாள், காகத்துவசம் உற்றாள், கழுதை வாகினி - இவற்றுடன் கயாதர நிகண்டு பதிநான்காவதாக(14) கரக்கொடி மங்கை என்ற பெயரையும் சேர்த்துக் குறிப்பிடுகின்றது.

தவ்வை

மூத்ததேவியைக் குறிக்கத் தற்கால ஆய்வுகளில் தவ்வை என்ற சொல்லே அதிகம் காணப்படுகின்றது. “பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு” (சிலம்பு.15:60) என்ற சிலப்பதிகார வரியில் காணப்படும் பட்டோன் தவ்வை என்ற சொல்லுக்குப் “பொய்யனைப் பெற்ற தாய்”4 என உரையாசிரியர்களால் பொருள் கூறப்பட்டுள்ளது. இதே சிலப்பதிகாரத்தில் “ஐயையும் தவ்வையும்”(சிலம்பு.16:52) என்ற வரி காணப்படுகின்றது. இது மாதரியையும் ஐயையும் குறித்துவரும் வரியாகும். இதிலும் தவ்வை எனும் சொல் ஐயையின் அன்னை மாதரியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின் சமகாலத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் மணிமேகலையில் “தாரை தவ்வை தன்னொடு கூடிய”(மணி.7:104) என்னும் வரி காணப்படுகின்றது. இவ்வரியில் தவ்வை என்ற சொல்லுக்கு மூத்த சகோதரி என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. சமகாலத்தில் வாழ்ந்த நெருங்கிய தொடர்புடைய இரு புலவர்களின் இப்பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் அவர்களின் வாழ்விடத்தின் வட்டார வழக்கு வேறுபாடாக இருக்கலாம். தவ்வை எனும் சொல் அன்னையைக் குறிக்கப்படுவதாகக் கொண்டாலும் தாய்வழிச் சமூகம் நிலவிய தமிழகத்தில் மூத்ததாய் இறந்தபிறகு மூத்த சகோதரி குடும்பத் தலைவியாவாள். எவ்வாறாயினும் குடும்பத் தலைவியைத் தவ்வை என அழைத்ததும், அவ்வழக்கு பின்னாளில் அன்னை, மூத்த சகோதரி ஆகிய இருவரையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றிலிருந்து மாறுபட்டு சங்க காலத்தைச்சேர்ந்த காப்பியங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் நூலான திருக்குறளில் தவ்வை என்ற சொல் நேரடியாக ‘மூதேவி’ என்ற பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது என்பது கிட்டத்தட்ட அனைத்து உரையாசிரியர்களின் கருத்தாகவே உள்ளது.

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். (குறள்.167)

என்ற குறளுக்கு “பிறர் ஆக்கங்கண்டவழிப் பொறாமையுடையானைத் திருமகள் தானும் பெறாது தன் தவ்வைக்குக் காட்டிநீங்கும்” எனப் பரிமேலழகர் உரை கூறுகிறார்.

“அழுக்காறு உடையானைத் திருமகள் தானும் அழுக்காறு செய்து தன் தவ்வையாகிய மூதேவிக்கு காட்டி இவன்பால் செல் என்று போம். இது நல்குரவிற்குக் காரணம் கூறிற்று” என மணக்குடவரின் உரை கூறுகின்றது. செய் என்பதற்கு நிலம் என்று பொருள். இச்சொல்லுடன் ‘அள்’ என்ற பெண்பால் விகுதி சேர்க்கப்பட்ட

செய்யவள் என்ற சொல்லுக்கு நிலமகள், பூமித்தாய் என்றும் பொருள் கொள்ளலாம். நிலத்தைப் பெண்ணாக உருவகம் செய்யும் வழக்கம் தமிழர்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் 'செய்யவள் தவ்வை' என்ற வாக்கியத்திற்கு செய்யவளான தவ்வை எனவும் பொருள் கொள்ளலாம். இதனைக்கொண்டு பேராசை எனும் காழ்புணர்ச்சியை ஒருவன் கைக்கொண்டால் அவன் நிலமகளுக்கு உரமாவான். அல்லது மண்ணோடு மண்ணாவான் என இக்குறளிற்குப் பொருள் கொள்ளவும் இடமுண்டு.

பொறாமைக் குணம் கொண்டவன் மடிந்து மண்ணிற்கு உரமாவான் என்ற பொருளில் இக்குறளைக் காணலாம். இக்கருத்திற்கு வலுவூட்டும் வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி 'தவ்வுதல்' என்ற சொல்லுக்குக் கெடுதல், அழிதல், உருக்குலைதல் ஆகிய பொருள்களைத் தருகிறது. உயிர் மற்றும் உயிரல் பொருள்கள் உருக்குலைந்து, அழிந்து உரமாகின்றன. இவ்வுரமே தவ்வையின் முதன்மையான அடையாளமாகும். மேலும் இவ்வகராதி தவ்வை என்ற சொல்லுக்கு தாய், தமக்கை, மூதேவி ஆகிய பொருள்களைக் கூறுகின்றது. மேலும் அவ்வை என்ற சொல்லிலிருந்து தவ்வை என்ற சொல் வந்ததாகக் குறிப்பிடுகின்றது. தவ்வை என்ற சொல்லுக்கு ந.சி.கந்தையாவின் திருக்குறள் அகராதி "தமக்கை, மூதேவி" ஆகிய பொருள்களையும் செந்தமிழ் அகராதி "தமக்கை, தாய், மூதேவி" ஆகிய பொருள்களையும் கூறுகின்றது. மதுரைத்தமிழ்ப் பேரகராதி தவ்வை எனும் சொல்லுக்கு "அக்காள், செவிலித்தாய், மூதேவி, செவிலியின் மகளாய்த் தலைவியின் மூத்தவள்" ஆகிய பொருள்களைக் கூறுகிறது.

தவ்வுதல் என்ற சொல்லுக்கு சொற்பிறப்பியல் அகராதி கூறும் பொருள்களின் வழி, அதனுடன் 'ஐ' எனும் பெண்பால் விகுதிசேர்க்கப்பட்டு தவ்வை என்ற சொல் தோன்றியிருக்கலாம். இச்சொல் வளத்துடனும் உரத்துடனும் தொடர்புடைய பெண்தெய்வத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற விளக்கம் இதிலிருந்து பெறப்படுகின்றது.

மாமுகடி

மாமுகடி என்ற சொல்லும் பலவிடங்களில் தவ்வையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. திருக்குறளிலும் மூத்ததேவியைக் குறிக்கும் சொல்லாக மாமுகடி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்

தாளுளாள் தாமரையி னாள். (குறள்.617)

இக்குறளில் காணும் மாமுகடி என்னும் சொல் மூதேவியைக் குறிப்பதாக உரையாசிரியர்கள் பலரும் பொருள் கூறியுள்ளார். உதாரணமாக மணக்குடவர் எனும் உரையாசிரியர் 'வினைசெய்யுங்கால் அதனைச் செய்யாது சோம்பியிருப்பானது சோம்பலின் கண்ணே மூதேவி உறைவாள். அதனைச் சோம்பலின்றி முயலுபவன் முயற்சியின் கண்ணே திருமகள் உறைவள் என்று சொல்லுவர். இது வினையை மடியின்றிச் செய்யவேண்டும் என்பது கூறிற்று' என உரை கூறியுள்ளார். 'கரிய சேட்டை ஒருவன் மடியின் கண்ணே உறையும்; திருமகள் மடியிலானது முயற்சிக்கண்ணே உறையும் எனச் சொல்லுவர் அறிந்தோர்' எனப் பரிமேலழகர் உரை கூறியவிடத்து கரிய சேட்டை என மூதேவியைக் குறிப்பிடுகின்றார். திருக்குறளார் வீ.முனிசாமியும் தவ்வையைக் குறிக்கக் கரியசேட்டை என்ற சொல்லட்சியைப் பயன்படுத்தியுள்ளர். பெரிய துன்பக் கடவுள் என சி. இலக்குவனார் தவ்வையைக் குறிப்பிடுகின்றார். கரிய நிறமுடைய மூத்தவள்

என கா.சு.பிள்ளை குறிப்பிடுகின்றார். இவ்வாறு மூதேவியைக் குறிக்க சேட்டை, கரிய சேட்டை, துன்பக்கடவுள் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட உரைகள் அனைத்தும் 'மாமுகடி' என்ற சொல்லிற்கு கரிய சேட்டை ஆகிய மூதேவி என்றும் தாமரையினாள் என்பதற்குத் திருமகள் என்றும் பொருள் கூறுகின்றன.

முகடி என்ற சொல் மோடி என்ற சொல்லிலிருந்து திரிந்த சொல்லாகக் கருதலாம். சங்க இலக்கியப் பாக்களில் 'மோடி' என்ற சொல் காணப்படுகின்றது. இச்சொல் தாய்த்தெய்வத்தைக் குறித்து வருகின்றது. முகடி என்ற சொல்லுக்கு அபிதான சிந்தாமணி 'மூதேவிக்கு ஒரு பெயர்' எனப் பொருள் கூறுகின்றது. மதுரைத் தமிழ்ப் பேரகராதி முகடி என்ற சொல்லுக்கு மூதேவி என்பதுடன் 'மேட்டிமைக்காரி' எனப் பொருள் கூறுகின்றது. மேட்டிமை என்ற சொல் தற்காலத்தில் உயர்ந்த என்ற பொருளில் ஆளப்படுகின்றது. மேட்டிமைக்காரி என்ற சொல்லுக்கு மேட்டிமைப்பண்பு உடையவள் என்ற பொருள் ஏற்படுகின்றது. மேட்டிமை என்ற சொல்லுக்கு தலைக்கணம், கர்வம் போன்ற பொருள்களுடன் 'பெரியதனம்' என்ற சொல்லும் காணப்படுகின்றது. இதன் மூலம் பெரியதனக்காரி என்பதும் பெறப்படுகின்றது. இச்சொல்லை மூத்ததேவி, தவ்வை பற்றி எழுதிய தொல்லிய ஆய்வாளர் கோ. சசிகலா குறிப்பிடுகின்றார். "மூத்ததேவியின் பெருத்த வயிறும் தனங்களும் மிகுந்த வளத்தைத் தரும் குறியீடுகளாகப் பண்டு வணங்கப்பட்டன" (கோ. சசிகலா, கொற்றவையும் நடுகற்களும், ப.81) என அவர் குறிப்பிடுவதிலிருந்து பெரியதனம் என்பது வளமை வழிபாட்டுப் பொருளாக இருந்ததனை அறியலாம். மேலும் மேட்டிமைக்காரி என்பதும் மேட்டிமைக்காரன் என்பதும் ஒருபொருள் உணர்த்தும் பால் வேறுபாட்டுச் சொற்கள் ஆகும்.

பெரியதனக்காரன் என்பதற்கு நிழக்கிழார், பெரும் செல்வமுடையவன், சொத்துடையவன் என்ற நேரடிப்பொருள் கூறப்படுகின்றது. நிலம், செல்வம் ஆகிய பொருள்கள் பண்டைய இனக்குழு சமூகத்தில் பெண்ணோடு தொடர்புடையவனவாய் இருந்தன என்பதை அறிவோம். இக்காலத்தில் பெரியதனக்காரன் என்ற சொல் 'ஒருவருடைய முடிவெடுக்கும் பண்பை' எதிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் பெரியதனக்காரர் ஊரின் நிர்வாகத்தில் சில முடிவுகளை எடுப்பவராக உள்ளதை நம்மால் அறியமுடிகின்றது. பெரும் சொத்து, பெரும் செல்வம் ஆகியவற்றின் அதிபதியாக இருந்தமையால் தவ்வை மேட்டிமைக்காரி என அழைக்கப்படுகிறார்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் மோடி என்ற சொல்லானது தாய்த்தெய்வத்தைக் குறித்து வருகின்றது. இதன் வேர்ச்சொல் 'மோடு' எனக் கொண்டால், இதற்கு "மேடு, உயர்ச்சி, முகடு, கூரையின் உச்சி, பருமை, பெருமை, உயர்நிலை, வயிறு, கருப்பை, பிளப்பு, உடம்பு, மடமை ஆகிய பொருள்களை தமிழ் தமிழ் அகராதி கூறுகின்றது. இச்சொற்களுள் முகடு என்ற சொல்லிற்கு பெண்பால் விகுதி சேர்த்தால் முகடி ஆகின்றது. மேலும் பருமை, வயிறு, கருப்பை, பிளப்பு, உடம்பு ஆகிய சொற்களும் வளமைக் கருத்தோடு பொருந்தி அமைகின்றன. உயிர்களைத் தோற்றுவிக்கும் கருப்பையும் கருவினைத் தாங்கும் வயிற்றையும் அவ்வயிறு மேடாக இருப்பதனையும் உணர்த்தும் இச்சொல் சங்க இலக்கியத்தில் தாய்த்தெய்வத்தைக் குறிக்கின்றது.

மோடி என்பதற்கு எல்லோரையும் பெற்ற தாய் எனப் பொருள் கூறுவார் நச்சினார்க்கினியர். மோடு என்பதற்கு வயிறு, பெரிய வயிறு, எல்லோரையும் பெற்ற வயிறு எனப் பொருள் கூறுவர். மோடி என்பதற்கு அத்தகைய வயிற்றை உடைய பெண், தாய், எனப் பொருள் கொள்ளலாம். "மோடு என்பதற்கு எல்லோரையும் பெற்ற

வயிறு என்று பெரும்பாணாற்றுப்படையில் (வரி 458) நச்சினார்க்கினியர் கூறிய விளக்கத்தைக் கவணிக்க வேண்டும்”8

பெருங்கதையில் இலாவணகாண்டம் 106 வது பாடலில் மோடேந்தரிவை என்ற சொல் காணப்படுகின்றது. தனிப்பாடல் ஒன்று ‘பெருமோட்டுக்கிழாள்’ என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றது. தகடூர் யாத்திரை பெருமோட்டாள் எனக் குறிப்பிடுகின்றது. பிற்காலத்தில் மோடி என்பது காளி, மந்திரம், தந்திரம் என்ற பொருளில் ஆளப்படுகின்றது. கான மோடி என நீலகேசியிலும் போகமர் மோடி, கடற்கோடியின் மோடி என்ற சொற்கள் தேவாரத்திலும் காணப்படுகின்றது. தக்கையாகப் பரணி மோடியுரையுங்காடு என்று குறிப்பிடுகின்றது. ‘மோடி முன்தலையை வைப்பரே முடி’ என்ற வரிகள் கலிங்கத்துப்பரணி பெண்தெய்வத்திற்குத் தலையைக் காணிக்கையாக்குகின்றதைத் தெரிவிக்கின்றது.

எல்லாரையும் பெற்ற வயிறு பெரியதாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பெரிய வயிற்றையுடைய தாய்த்தெய்வம் படைக்கப்பட்டது. புதிய கற்கால மனிதன் இத்தெய்வத்தைச் சுடுமண் சிற்பங்களாக உருவாக்கினான். இவற்றின் எச்சங்கள் பல தொல்லியல் சான்றுகள் வழி காணக்கிடைக்கின்றன. இவற்றுள் தாய்மைக்கான அடையாளங்கள் மிகுத்துக் கூறப்பட்டுள்ளன.

பழையோள்

தவ்வை என்ற தெய்வத்தின் சங்ககாலப் பெயர் பழையோளாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். “இழைஅணி சிறப்பின் பழையோள் குழவி”(முருகு.259) என்பதற்கு காடுகாளுடைய குழவி எனப் பொருள் கூறுவர். காடுகாள் என்பது காடுகிழாள் என்பதிலிருந்து தோன்றிய சொல்லாகும். பழையர் என்ற பழங்குடி சமூகத்தின் தெய்வம் பழையோள் என்பதும் பலருடைய கருத்தாக உள்ளது. பழையர் மகளிர் தழையுடை அணிந்து கோடேந்து அல்குல் உடையவராக தாய்த்தெய்வத்தை வணங்கினர் என்பதை

“தலையணிப் பொழிந்த கோடேந் தல்குல்

பழையர் மகளில் பனித்துறை பரவ” (அகம்.201:4-7)

என்ற அகநானூற்றுப் பாடல் உணர்த்துகின்றது. “நக்னசபரி என்ற பெயரில் இந்தத் தெய்வத்தை இந்துக்களும் தொழுதனர். ஆடையற்ற பெண்தெய்வம் என்பதே இதன் பொருள்” (பி.எல். சாமி,தமிழ் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிபாடு,பக்.1,2) எனப் பி.எல்.சாமி குறிக்கின்றார். இன்றளவும் கிடைத்துவரும் தவ்வை சிற்பங்களும் மேலாடையற்றதாகவே காணப்படுகின்றது. மிகப் பழமையான குடிகளிடமிருந்து மிகப்பழங்காலத்தில் தமிழர் பெற்ற தெய்வம் என பழையோளை பி.எல்.சாமி குறிக்கின்றார். முதியோள் கோட்டம் என்ற கோவில் பற்றி மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. இது பழையோளை வழிபடும் இடமாக இருக்க வாய்ப்புகள் இருக்கின்றது. நாயன்மார்களும் முதுகோதை என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்துகின்றனர். இச்சொல்லும் தவ்வையைக் குறித்து வரலாம்.

திவாகர நிகண்டில் தாய்த்தெய்வங்களாகக் கூறப்படும் பெயர்த் தொகுதிகளில் காடுகாள் என்பதற்கு மோடி, காரிதாய், கொற்றி, மாரி, சூரி, வடுகி, மூதணங்கு என்ற சொற்களைக் காணலாம். இவற்றுள் மோடி என்பதற்கு எல்லோரையும் பெற்ற வயிறு எனப் பொருளாகும். மூதணங்கு என்ற சொல்லும் தவ்வையைக் குறித்து வரும். மூதணங்கு என்ற சொல்லுக்கு பழையோள், வருத்தும் தெய்வம், பெண்தெய்வங்களில் மூத்தவள் எனப் பொருள் கூறப்படுகின்றது.

ஏகவேணி

தவ்வையின் பல பெயர்களுள் ஒன்றாக 'ஏகவேணி' என்ற பெயரும் காணப்படுகிறது. இதற்குப் பொதுவான பொருளாக ஒற்றைச் சடையுடையவள் எனக் கூறப்படுகின்றது. 'ஏ' எனும் சொல்லுக்கு அம்பு என்பது பொருளாகும். ஒரு நாணில் ஒரே அம்பு மட்டுமே ஏற்ற முடியும் என்பதன் அடிப்படையில் ஒற்றை என்ற பண்புப்பெயர் ஏ எனும் ஓரெழுத்து ஒருமொழிக்கு ஆகி வந்தது. வில்வித்தையில் தேர்ந்தவன் ஏகலைவன் என அழைக்கப்பட்டான். முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை ஏகன் என்றும் கூறுவர்.

வேணி என்பதற்கு சடைப்பின்னல் என இவ்விடம் பொருள் கொள்ளப்படுகின்றது. இதனடிப்படையில் ஏககவேணி என்ற சொல்லுக்கு ஒற்றைச் சடையுடையாள், ஒற்றைச் சடையுடைய மூதேவி என்றெல்லாம் பொருள் ஏற்பட்டது. ஏகம், வேணி, ஏகவேணி ஆகியசொற்களுக்கு அகராதிகளிலும் பொருள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சில வளமைக் கருத்தோடு பொருந்திவருகின்றன. வேறொரு வகையில் 'ஏகவேணி' என்ற பெண்தெய்வம் வண்ணார்கள் வழிபடும் தெய்வமாக இருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் பல காணக்கிடைப்பதாக கல்வெட்டு அறிஞர்கள் தெரிவிக்கின்றன. அவ்வகையில் தவ்வையோடு தொடர்புடைய கழுதையும் வண்ணார் இன மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்ந்துள்ளது. வண்ணார்கள் அழுக்குத் துணி மூட்டையுடன் எதிரே வந்தால் நல்ல சகுனமாகப் பார்க்கப்படுகின்றது. அவர்கள் அழுக்குத்துணி மூட்டையைக் கழுதையின் மீதே வைத்து நடத்தி வருவர். அக்கழுதையைக் குறித்து இந்நம்பிக்கை தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

வேணி என்ற சொல்லுக்கு 'பின்னிய சடை, வசம்பு, நீர்ப்பெருக்கு, தெரு, ஆகாயம்' என்று ந.சி.கந்தையாவின் செந்தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. நீர்ப்பெருக்கு என்பதும் ஆகாயம் என்பதும் தவ்வையோடு நேரடிப்பொருள் கொண்டதாக வளமைக்கருத்தோடு தொடர்புடையதாக உள்ளது. நீர் என்பது அனைத்திற்கும் ஆதாரம் ஆகும். பயிர் வளர்ச்சிக்கு அடிப்படை நீராகும். நீருக்கு ஆதாரமாக ஆகாயம் அமைகின்றது. நீரும் நீரால் நீக்கப்படும் அழுக்கும் வண்ணார்களின் தொழிலுக்கு அடிப்படையாகும். அழுக்கின் அடையாளமாகவே தவ்வை வணங்கப்படுகின்றார். பயிர்வளர்ச்சிக்கும் நீரும் உரமும் இன்றியமையாதன. துணிகளை வெளுப்பதற்கு நீரின் பங்கு இன்றியமையாதது. நீரும் உரமும் போல கழுதைவாகனம் என்பது தவ்வையோடும் வண்ணார்களின் வாழ்வாதாரத்தோடும் பிண்ணிப் பிணைந்துள்ளது. இன்றும் வீடுகளின் முன் கழுதையின் படத்தை மாட்டி 'என்னைப்பார் யோகம் வரும்' என்ற வாக்கியம் எழுதப்படுகின்றது. இங்கு யோகம் என்பது செல்வத்தைக் குறிப்பதாகவே அமைகின்றது. செல்வத்தின் அதிபதியான இத்தெய்வத்தை வணங்குதல் கூட இங்கு பேசப்படவில்லை. அதனைக் கண்டாலே போதும் என்ற கருத்து இவ்விடம் வலுவாகக் கூறப்பட்டுள்ளதனை அறியலாம். வளமை நம்பிக்கைகள் அனைத்தும் இத்தத்துவத்தினையே கொண்டு அமைகின்றன. இவற்றைச் சிற்பச் சான்றின் மூலமும் அறியலாம். எனவே இவை பற்றிய நம்பிக்கையும் வளமையின் அடியாகவே பிறக்கின்றன.

முடிவுரை

வளமை என்பது பயிர்கள் மற்றும் மனித உயிர்கள் பெருகி வளர வேண்டும் என்ற கருத்தினை மையமாகக் கொண்டு இயங்கும் ஓர் பண்பாட்டு அசைவாகும். பயிர் வளத்தைக் கொடுக்கும் ஆற்;றல் வடிவமான உரம் என்பது வணங்கப்பட்டு உயிர்களைப் படைக்கும் சக்தி படைத்த பெண்ணோடு உருவகப்படுத்தப்பட்டது.

அப்பெண் தெய்வமாக வணங்கப்பட்டது. இதுவே தாய்த்தெய்வவழிபாட்டிற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. நாட்டுப்புற மரபு என்பது பல்வேறு சமூக பண்பாட்டு மாற்றங்களைக் கடந்தும் தனக்கேயுரிய சில தனிப்பட்ட பண்பாட்டினை மாற்றத்துடனோ மாற்றமின்றியோ கடத்தி வருகின்றது. அவ்வகையில் இக்கட்டுரையின் மூலப்பொருண்மையான 'தவ்வை' பற்றிய கருத்துக்களையும் இம்மரபு கொண்டுள்ளதனை அறிய முடிகின்றது. தவ்வை குறித்த பெயராய்வில் இத்தெய்வம் குறித்த வளமைக்கருத்துக்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. பழம் பெரும் நிகண்டுகளில் இத்தெய்வத்திற்குரிய பதினைந்துக்கும் மேற்பட்ட பெயர்கள் காணக்கிடைக்கின்றன. அவற்றுள் தவ்வை என்ற சொல் திருக்குறளில் ஆளப்பட்டு மட்குதல் உரமாதல் என்ற கருத்தாக்கத்தின் மூலம் இத்தெய்வத்தின் இருப்பை உணர்த்துகின்றது. 'மோடி' என்ற எண்ணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இத்தெய்வம் தாய்தெய்வங்களில் முதன்மையான மூத்த தெய்வம் என்ற கருத்தாக்கங்களை உணர்த்துகின்றது. 'மேட்டிமைக்காரி என்ற சொல்லாட்சி நிலத்தோடும் செல்வத்தோடும் தவ்வைக்குரிய உரிமையைக் காட்டுகின்றது. பழையோள் - முதியோள் - முதுகோதை ஆகிய சொற்பரிமாணங்கள் காலந்தோறும் ஏற்பட்ட இத்தெய்வத்தின் பெயர்மாற்றம் பற்றி அறிய உதவுகின்றது. ஏகவேணி என்ற பெயர் வளமையோடும் வண்ணார்களுடனான இத்தெய்வ உறவோடும் பொருந்திச் செல்கிறது. எனவே தமிழரின் ஆதித்தெய்வம், வளமைத்தெய்வம், மூத்ததெய்வம் ஆகிய பொருண்மைகள் தவ்வையோடு பொருந்தி வருகின்றன என்பதனை இக்கட்டுரை உறுதியாகச் சுட்டுகின்றது.

துணைநின்ற நூல்கள்

1. சசிகலா. கோ, கொற்றவையும் நடுகற்களும்(பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள்), சித்தன் புக்ஸ், சென்னை–86(2019).
2. சாமி. பி.எல்.,தமிழ் இலக்கியங்களில் தாய்தெய்வ வழிபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50(1975).
3. பரமசிவன். தொ, சமயங்களின் அரசியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-5 (2022).
4. முத்துராஜன். ஆர்,நாட்டார் வழக்காற்றில் வேளண் பழமொழிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50.(2022)
5. லூர்து. தே(ப.ஆ), நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், முல்லை நிலையம்,சென்னை-17.(2011)

© 2026 ஆய்வாளர் கு.சுபத்ரா, நெறியாளர், ம. சுந்தரமூர்த்தி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 575–580
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு.

*Psychological Insights and Concepts of Social Unity in Andal's *Thiruppavai*: A Study.*

Author*

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00104	

Abstract

- ABSTRACT/SUMMARY

Keywords / திறவுச்சொற்கள்: - KEY WORDS

Abstract

Thiruppavai,graced by Andal ,is a treasure chest of devotional literature. Beyond being an expression of spirituality, this text serves as a grand psychological arena that penetrates deep into the recesses of the human mind.

All thirty hymns (Pasurams) of Thiruppavai sing the glories of Lord Vishnu (Thirumal) and narrate the history of obtaining his divine grace. The core concept of this text is that it is a wonderful piece of literature denoting the penance (Nonbu) undertaken by Andal and the young girls of the cowherd community for themselves and for the people of the world to receive all kinds of excellent benefits, keeping the attainment of Lord Krishna's (kannan) divine grace as their ultimate goal. The feeling that arises while reading this book reflects the Gita, which says, "In whatever way men approach Me, in that same way do I accept them". The objective of this research is to analyze where and how psychological and aesthetic unification thoughts have been handled in this outstanding devotional literature.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: Author (2026). ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 574–579. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8573

1. உளவியல் - Psychology
2. சமூக ஒருமைப்பாடு - social integration
3. பக்தி இலக்கியம் - Devotional literature
4. நோன்பு - Fasting
5. பாவனை - Pretense

6. தன்வய சிந்தனை - Self-centered thinking
7. உளகட்டுப்பாடு - Mental control
8. மனஉறுதி, - Strength of Mind
9. விழிப்புணர்வு - Awareness
10. அகந்தை - Ego Dissolution

முன்னுரை: -INDRODUCTION

ஆண்டாள் தந்தருளிய திருப்பாவை எனும் பக்தி இலக்கியம், மாநில மக்களின் மனம், மற்றும் நற்பண்புகளை மேம்படுத்தும் உன்னதமான உளவியல் கருத்துக்களை பாசுரங்களால் கோர்த்தெடுத்த பக்தி பாமாலை என்றால் அது மிகையாகாது.

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்

எல்லாப் புகழும் தரும்" (குறள் 457)

அஃதாவது ஆண்டாள் நாச்சியார் தன் தேனினிக்கும் பாசுரங்களில், தோழியரை, தன் ஆயர் குலச் சிறுமியரை ஒன்றிணைத்து நோன்பு நோற்பதும், சோம்பலை அகற்றி மனதை ஒருமுகப்படுத்துவதும் வள்ளுவர் காட்டும் 'மனநலம்' மற்றும் இனநலத்தின்

வடிவமன்றோ?திருப்பாவை பாசுரங்கள் முப்பதும் இளம் மங்கையரின் உள்ளங்களில் நல்லொழுக்கத்தையும், இல்லறவாழ்வில் இணைந்த இல்லதரிசிகளுக்கும்

அறநெறியையும் பக்தி மார்க்கத்தை நாடு பரம பதம் அடைய நினைப்பவர்களுக்கு இறைவனை அடைவதற்கான பக்தி மார்க்கத்தையும் எடுத்துரைக்கின்றன.

திருப்பாவை சொல் நயமும், பொருள் நயமும், கற்பனை அழகும், கவிச்சிறப்பும் கொண்ட ஒரு சிறந்த இலக்கியப் பொக்கிஷம்.

இவ்விலக்கிய பாசுரங்களை சமய நூல், சமுதாய நூல், தத்துவ நூல் என ஒவ்வோர் அடிப்படையிலும் படித்து மகிழும் வகையில் அமைந்தது. இக்கட்டுரையின் கீழ் அப்பாசுரங்களில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் பொருந்து மாற்றைக் காண்போம்.

ஆண்டாள் - பெண் ஆழ்வார் :- நாச்சியார் – ANDAL THE FEMALE ALVAR

ஆண்டாள் நாச்சியார், சூடிக் கொடுத்த சுடர்க் கொடி, பெரியாழ்வாரின் அருமைத் திருமகள், திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்த விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாரின் அருமைத் திருமகள்.

திருப்பாவை '**பட்டர்பிரான் கோதை**' என்றும், திருமொழி '**விட்டுசித்தன் கோதை**' '**வில்லிப்புத்தூர்க் கோன் கோதை**' என்றும் ஆண்டாளைக் குறிப்பிடுகின்றன. கண்ணன், மணிவண்ணன், ஆயர்குல தலைவன், யதுகுல மன்னன் அவதார பெருமை, மகிமைகளைப் பெரியாழ்வார் மனமுருகிப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு, ஆண்டாளின் உள்ளம் அதில் தன்னையும் ஈர்த்ததை அறிந்து தந்தையிடம் ஆன்ம ஞான அறிவைப் பெற்று வளர்ந்தாள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண்டாளின் உள்ளத்தில் முளையிடபட்ட பக்தி உணர்ச்சி, அவள் வளர்ந்த நிலையில் மேலும் மலர்ந்து மணம் பரப்பியது.

அவள் வளர்ந்த தெய்வீகம் சூழ்நிலை பின்னாளில் நாச்சியாரை பக்தி நெறி மிக்க தெய்வீகப் பெண்ணாக உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.

"**அடிமனதில் உறைந்து கிடக்கும் உணர்வுகள் தான் மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இளமைப் பருவத்தில் ஏற்படும் பிற்காலத்தில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படும்.** இத்தகைய **அடிமன உணர்வுகள் கலைஞனுடைய படைப்புகளில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படுத்தக் கூடும்**" என்பது '**பிராய்டு**' தரும் விளக்கமாகும்.

பிரபந்த நூலான திருப்பாவை ஆண்டாளின் திருவாக்காக தோன்றியதன் நோக்கம் திருமாலே பரம்பொருள், அவனை நம் திருவாயால் பாடி, நல் மனத்தால் சிந்தித்தால் தீவினை அனைத்தும் நெருப்பிலிட்ட தூசியாய் போகும், எத்தனைப் பிறவி எடுத்தாலும் திருமாலுக்கு தொண்டு செய்து வாழ்வதே பேரின்ப வாழ்வு என்பவற்றை உலக மாந்தர் அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துரைக்க எழுந்ததே இத் திருப்பாவை பாசுரங்களாகும்.

திருப்பாவையில் உளவியல் கருத்துக்கள்: - PSYCHOLOGICAL ASPECTS IN THIRUPPAVAI

ஆண்டாளின் தன்னலமற்ற, பரந்த உலக நோக்கில் உருவானவையே இப்பாஅரப்பாடல்கள். திருப்பாவை ஒரு கற்பனை இலக்கியப் படைப்பாக இருந்தாலும், இளம் பருவத்தினர்களுக்கு இருக்க வேண்டிய

ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடு, நல்வாழ்விற்கான உயர்ந்த வழிமுறைகள் ஆகியன வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

பொதுவான உடன்பாடு குழுக்களிடம் இருந்தாலும் மனஉறுதி மிகுந்திருக்க வேண்டும். நல்லதொரு மனஉறுதிக்கு சில இன்றியமையாத காரணிகள் உண்டு.

முதல் ஐந்து பாடல்களில் நோன்பு நோற்பவர் யார், நோன்பு மேற்கொள்ளக் காரணம், நோன்பின் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், நோன்பின் பயன்கள் ஆகியன கூறப்படுகின்றன. முதல் பாடலில்

"மார்கழிகழித் திங்கள் தொடங்கி.....

...

"நீர் ஆடப் போதுவீர்

போதுமினோ நேர் இழையீர்!

சீர்மல்கும் ஆய்ப்பாடிச்

செல்வச் சிறுமீர்காள்" - (பா. 1)

இப்படி அழைப்பதிலிருந்தே பக்திக்கும், இறைத் தொண்டிற்கும் விருப்பம் மட்டுமே போதும், வேறேதும் தேவையில்லை எனத் தெரிகிறது.

"நோன்பு உளக்கட்டுப்பாடு நிலையில் அமைகிறது எப்படி என்றால், தான் விருப்பம் நிறைவேற இன்ன செயல்களைச் செய்கிறேன், இன்ன செயல்களைச் செய்ய மாட்டேன் என்றோ உள்ளத்தைக் கட்டுப்படுத்துவது நோன்பு. எடுத்த காரியம் முடிக்க சில விதிகளையும், சில நியமங்களை, விலக்குகளை கடைபிடிக்க வேண்டும் அல்லவா?

- இறைவன் அடி பாடுதல்
- காலை நீராடுதல்
- ஐயமும் பிச்சையும்

- நெய், பால் உண்ணாதிருத்தல்
- மையும், மலரும் அலங்கரித்து கொள்ளாதிருத்தல்

போன்றவற்றை கடைபிடிக்கின்றனர்.மேலும்

"தூயோமாய் வந்து நாம்

தூ மலர்தூவித் தொழுது

வாயினால் பாடி

மனத்தினால் சிந்திக்க

புகுதருவான் நின்றனவ தீயினில் தூசாகும்" (பா. 5)

அஃதாவது மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் இறைவனை வழிபடும் கிரியை நெறி, மனத்தை ஒருமுகப்படுத்தும் யோக சக்தி நெறி, இறைவனை வழிபட்டால் தீமைகள் நீங்கி கிடைக்கும் ஞான நெறியும் ஒருங்கே அமைவதை மனஉறுதியோடு கூறுகிறாள் ஆண்டாள் நாச்சியார்.

<u>உள்ளத்தின் பல்வேறு நிலைகளும், சமுதாய ஒற்றுமையும்:HEART VARIOUS STATE SOCIAL UNITY:</u>

திருப்பாவையின் ஆறாம் பாசுரம் முதல் பத்து பாடல்கள் பெண்களுக்குரிய இயல்பான அன்பும் பேச்சும், பரிகாசப் பேச்சும், உரையாடல்கள், என இப்பாடல்கள் ஒரு நாடக நிகழ்ச்சி நடைபெறுவது போலவே அமைந்துள்ளது சிறப்பானதாகும்.

துயில் எழுந்தவர்கள், துயில் கொள்பவர்களை துயிலெழுப்பும் தோழி வயதில் சிறியவளாக இருப்பதால் "**பிள்ளாய் எழுந்திராய், புள்ளும் சிலம்பின காண்**"

என எழுப்புகிறாய்.

பறவைகளின் ஒலி, கோயிலில் பெரிதாகக் ஒலிக்கும் சங்கொலி, ஆச்சியல் மத்தினால் ஓசைப்படுத்தும் தயிர் மத்தின் ஓசை கேட்கவில்லையா என்பதிலிருந்து அவள் சாதாரண வீட்டுப்பெண் எனத் தெரிகிறது.

செல்வம் படைத்த குடும்பப் பெண்ணை

"தூமணி மாடத்து"..... (பா. 9)

எழுப்புதலும் கும்பகர்ணன் போல் தூங்குபவளை பொற்றொடிமே என்றும், நற்செல்வன் தங்கையை காலடியில் பால் <u>வெள்ளமுட</u> எனச் உணர்ச்சி பொங்கிடவும்

"**எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ**"

என்று இளங்கிளியை ஒத்த பெண்ணையும் அழைப்பதிலிருந்து, இவர்கள் அழைத்துச் செல்லும் தோழிப் பெண்கள் வெவ்வேறு குணகியல்பற்றவர்களாகவும் வெவ்வேறு குடிப்பிறப்பில் பிறந்தவர்களாக இருப்பத்தையும் காணுகையில் சமுதாய வாழ்க்கையில் ஒற்றுமையைக் காட்டி, அன்பின் இன்றியமையாமையை இளம் உள்ளங்களுக்கு அறிவுறுத்தவே இப்பாசுரத்தை ஆண்டாள் பாடினாளோ என எண்ணத் தோன்றுகிறது.

<u>நம்பிக்கையும் மனஉறுதியும்: - BELIEF AND MIND FIRMNESS</u>

நம்பிக்கையும், மனஉறுதியுமே இறைவழிபாட்டிற்கு இரு கண்கள் போன்றது. இதையே இவரது சமகாலத்து ஆழ்வார்கள் பாடியிருப்பதை இங்கு உற்று நோக்கத்தக்கது.

"அன்பே தகளியா

ஆர்வமே நெய்யாக

இன்புருகு சிந்தை இடுதிரியா -

நன்புகழ் நாரணனஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்

நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்"

- **பூதத்தாழ்வார்**

இரண்டாம் திருவந்தாதி.

என்பதற்கு ஏற்றாற்போல கண்ணன் தங்களுக்கு அருள் செய்வான் என்ற தளராத நம்பிக்கை.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும

உற்றோமே ஆவோம்

உனக்கே நாம் ஆட்செய்வோம்

மற்றைநம் காமங்கள் மாற்று" (பா. 29)

என்ற பாசுரத்தைக் காணும் போது இவர்கள் கண்ணனிடம் கொண்ட ஆழ்ந்த விருப்பத்தையும், மனத் திடத்தையும் உணர முடிகிறது.

நிறைவுரை: - CONCLUDING REMARKS

மார்கழி நோன்பை மையமாகக் கொண்டு ஆண்டாள் தன் திருப்பாவை பாசுரங்கள் மூலம் இந்நோன்பை ஒற்றை நபராக இல்லாமல் தோழிப் பெண்களுடன் சேர்ந்து செய்யும் கூட்டு பிரார்த்தனையாக விவரிக்கிறாள்.

பேதமை நீங்க, குலபேதம், செல்வமிக்கவர், ஏற்றத்தாழ்வு போன்ற வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தரப்புப் பெண்களையும் உறக்கம் நீங்க எழுப்பி அழைத்து கண்ணனை வாயாரப் பாடி, மனதினால் சிந்தித்துச் செய்வது சமூக ஒருமைப்பாட்டை எடுத்துரைக்கிறது.

மேலும் பொது நலமாக, தனிமனித வேண்டுகோள் இன்றி, "நாங்கள்" என்ற ஒருமித்த கூட்டுச் சொல்லாலும்

"நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி" என உலக நன்மைக்காக, மழையைப் பொழியச் செய்ய இறைவனை வேண்டுவது சமூக நலத்தைக் குறிக்கிறது.

சமத்துவ உணர்வு தரும் பாசுரமாக

"அங்கண்மா ஞாலத்தரசர்

அபிமான பங்கமாய் வந்து...

யாமும் வந்தோம்..." (பா. 22)

பெரிய, பெரிய அரசர்களும் கூட தங்களின் அகந்தையை விட்டுவிட்டு இறைவனின் சன்னதியில் எளிய மக்களோடு மக்களாக நிற்பதைக் காணும் போது ஆன்மீகத்திலும், சமூகத்திலும் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கோட்பாட்டை

உணர்த்துகிறது.

மக்கள் உள்ளங்களைக் கவரக் கூடிய, பதியக் கூடிய, ஏற்றுக் கொள்ளக் கூடிய பாடல்களும், இலக்கியமும்தான் காலம் கடந்து வாழும். அந்த வகையில் மழலைகள் முதல் இறையடி சேரும் பெரியோர் வரை, பல்வேறு நிலையிலுள்ள யாவரும் உய்த்துணர்ந்து, நல்ல வாழ்க்கைக்கும், நற்கதிக்கும் வழிகாட்டியாகவும், உளவியல் கருத்துக்கள் உள்ளடக்கியதாகவும், சமூக ஒருமைப்பாட்டை உயர்த்திக் காட்டுவதாகவும் இத்தெய்வ பிரபந்த பாசுரங்கள் ஒவ்வோர் ஆண்டிலும், ஒரு மாதமாம் திரு மாதமான மார்கழித் திங்களில் உருகிப் பாடுகின்ற காரணத்தால் உலகம் வாழ்கிறது என்று

<u>வாழும், பல்லாண்டு வாழும் என்பது உறுதி:</u>

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து

ஓங்கு பெருஞ் செந் நெல் ஊடு கயல் உகளப்

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்

தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்று

வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்

நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்" – (பா. 3)

என்ற இப்பாசுரமே இக்கட்டுரையின் மொத்த கருத்திற்கும் ஒத்த எடுத்துக்காட்டாய் திகழ்கிறது எனக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

<u>துணை நூற்பட்டியல்: -BIBLIOGRAPHY</u>

1. ஆர். சண்முகம் — மனிதனும் மனமும்
2. திரு ஆண்டாள் நாச்சியார் — திருப்பாவை
3. பூதத்தாழ்வார் — இரண்டாம் திருவந்தாதி
4. திருவள்ளுவர் — திருக்குறள் (457)
5. சிஞ். பிராய்டு — உளவியல் சிந்தனைகள்

© 2026 Author. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 581–590
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சங்கப் பாடல்களில் எச்சரிக்கை நிமித்தங்கள்

Sanga Padalgalil Nannimiththangal*, ரெ.ராதிகா

உதவி பேராசிரியை, தமிழாய்வுத் துறை, தனலட்சுமி சீனி வாசன் நிகர் நிலை பல்கலை கழகம் ஸ்கூல் மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா, *Dr. R. Radhika jayaprakash, Assistant Professor of Tamil, Dhanalakshmi Srinivasan School of arts and Science College, Deemed University, Perambalur, Tamil Nadu, India*

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00105	

ஆய்வுச்சுருக்கம்

உலகத்தோற்றம் பற்றியச் சிந்தனைகள் பழங்காலம் முதல் இருந்து வருகின்றது. உலகம், அவனி, ஞாலம் என்றெல்லாம் தமிழர் உலகத்தை குறித்தனர். திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பெரியபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்களின் தொடக்கம் ‘உலகு’ என்பதைக் கொண்டு அமைகின்றது. தமிழரின் பார்வை உலகபார்வை மனித இனத்தை நோக்கியப் பார்வை என்பது இதன்வழி அறியலாகின்றது. விசாலப் பார்வையால் மனித இனத்தை ஒரு சேரப்பார்த்தவர்கள் தமிழ்ப்புலவர்கள் என்பது குறிப்பிடப்படுகின்றது. இத்தகு உலகம் பற்றிய சிந்தனை பழங்காலம் முதல் தமிழகத்தில் இருந்த நிலையை,

“நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்”

- தொல்காப்பியம், பொருளதிகாரம் - நூற்பா எண்-635

என்ற தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

“மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரும் வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம் பெரும் பூதத்து இயற்கை”

- ஞா.மாணிக்கவாசகன்;, புறநானூறு - பாடல் எண்-2

என்னும் புறநானூற்றுப் பாடலும் உலகத்தின் தன்மையினை எடுத்துரைக்கிறது.

அணு செறிந்த நிலையில் உண்டாகிய விசும்பும் கிளர்ந்தெழும் வளி வளியிலிருந்து தோன்றும் தீ வழியாகத் தோன்றிய நிலையினைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழியாக அறியலாம்.

பழந்தமிழரின் திணை ஒழுக்கம்

உலகம் தோன்றியப் பிறகு உயிர்களின் தொன்மை இனம் தமிழ் இனம் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டுள்ளது. தாவரங்கள் தன்னுடைய இனமாகவும், பிறஉயிர்களை தனக்கு இணையாகக் கருதி செயல்படும். இயற்கை எதிராக ஒரு போதும் செயல்படாத பழந்தமிழரின் வாழ்வினை இலக்கியத்தின் வழியாக அறியலாம்.

“வேனல் அம் கிழவனோடு வெம்கதிர் வேந்தன்
தான் நலம் திருகத் தன்மயில் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”

- சிலப்பதிகாரம், காடுகாண் காதை (பாடல் எண்-62)

என்ற சிலப்பதிகார வரிகளில் வாயிலாகக் குறிஞ்சியும் முல்லையும் தங்களுடைய இயல்புகளிலிருந்து மாறி மணற் பகுதிகளாயின அதனைப் பாலை என்றழைத்தனர். இவ்வாறாகப் பழந்தமிழர் திணைப் பாகுபாட்டை அமைந்து வாழ்ந்தனர். திணை என்றச் சொல்லிற்கு இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி என்று பொருள் தருகிறது. திரண்ட மக்கள் பல வகையாகத் தமக்குள் பழகித் திண்மைப்பட்டு நின்றக் கூட்டம் திணையாம்.

குறிஞ்சி பவியியல் சூழல் மற்றும் பின்னணி

தமிழர் ஒன்றிற்கு பெயரிடும்போது இடு குறியாகவும் காரணத்தின் அடிப்படையிலும் பெயரிட்டனர். காரணப் பெயர்கள் பொருள் பொதிந்த நிலையில் காணப்படுவது சிறப்புக்குரியதாகும். அந்த வகையில் திணைகளுக்கான பெயர்களும் காரணப்பெயர்களாகவே அமைந்துள்ளன.

“குறுகுதல் குறிஞ்சி எனவும், மருவுதல் மருதம்
எனவும், முல்லுதல் முல்லை எனவும், பற்றுதல்
பாலை எனவும் நெய்வது நெய்தல் எனவும் கூறுவர்”

- இராம. குருநாதன் குறிஞ்சி காட்டும் சமுதாயம், பா.15

இராம குருநாதன் அவர்கள், “தழுவுதல் தழிஞ்சி எனவும், நெரிப்பது நெரிஞ்சி எனவும் ஆவது போலக் குறுகுதல் குறிஞ்சியாகும் குறு என்பது குறுகல் எனப்படும். நானிலத்தின்; குறுகுதலான நிலம் மலையும் மலைச்சார்ந்த நிலமும் என்பர். குறிஞ்சி நிலமான மலைச்சார்ந்த இடத்தில் உரிப்பொருள் புணர்தல் ஆகும். தலைவன் தலைவி அன்பின் நிலைகளைக் கொண்டும் குறிஞ்சி நிலத்திற்கு பெயர்க்காரணம் குறிப்பிடுவார்.” **- இராம. குருநாதன் குறிஞ்சி காட்டும் சமுதாயம், ப.16-17** என்று கூறுகின்;றார்.

முதன் முதலில் காதல் மனத்திற்கு அடையாளமாகக் குறிஞ்சிப் பூவைச் சூடியதால் அக்களவு மன ஒழுக்கத்திற்கு ‘குறிஞ்சித்திணை’ எனப் பெயர் வைத்தனர்.

மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சி நிலம். இந்நிலத்தின் கடவுளாக முருகப்பெருமானையும் மக்களின் தலைவனாக வெற்பன், சிலம்புடன் கூடிய

தலைவனையும் குறிப்பர். ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணைப் பாடல்களைப் பாடியவர் குறிஞ்சிப்பாட்டுப் புகழ் கபிலர் ஆவார். குறிஞ்சி நிலத்தின் இயற்கை அழகு, அருவிகள், செங்குத்தான மலைகள், சுனைகள், விலங்கினங்கள் மற்றும் அங்குள்ள தாவர வளம் ஆகியவை கபிலரின் பாடல்களில் தத்ரூபமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முப்பொருள் (முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்)

தொல்காப்பியர் இலக்கணப்படி அகத்திணைகளுக்குரிய முப்பொருட்கள் குறிஞ்சித் திணைக்கு எவ்வாறு ஐங்குறுநூற்றில் பொருந்தி வருகின்றன என்பதை அறிவது அவசியமாகும்.

1. முதற்பொருள்: குறிஞ்சி நிலத்திற்குரிய காலம் கார்காலமும் குளிர்காலமும் ஆகும்; இடம் மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும்.

2. கருப்பொருள்:

- தெய்வம்: முருகன் (சேயோன்).
- உணவு: மலைநெல், தினை, தேன், கிழங்கு.
- விலங்கு: புலி, யானை, கரடி, சிங்கம்.
- பூ: குறிஞ்சி மலர், காந்தள்.

3. உரிப்பொருள்: குறிஞ்சி நிலத்திற்குரிய உரிப்பொருள் புணர்தலும் புணர்நிமித்தமும் (தலைவனும் தலைவியும் சந்தித்து அன்பு பூணுதல்) ஆகும். ஐங்குறுநூற்றின் குறிஞ்சிப் பாடல்கள் அனைத்தும் இந்த உரிப்பொருளை மையமாகக் கொண்டே பின்னப்பட்டுள்ளன.

கபிலர்

தமிழ்நாட்டில் கபிலர் என்னும் பெயரால் விளங்கிய புலவர் இருவர். அவர்கள் தொல்கபிலர், கபிலர் என்னும் இருவர்கள் அன்றி சாக்கிய மதத்தின் ஆசிரியராகிய கபிலமுனிவர் ஒருவரும் உள்ளார் என்பது வரலாறு நமக்குக் கூறுகின்றது. அவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர் இல்லையாயினும் சமயநூலறிவினால் அவர்பெயரும் இந்நாட்டில் நிலைப்பெற்றிருக்கின்றது. '**கபிலமுனிவரைத் திருமாலின் அவதாரம்** என்று புகழ்ந்து கூறுதலும் உண்டு'

தமிழ்ப்புலவராய் திகழ்ந்திருந்த கபிலர் இருவருள் பிற்காலத்தவராகிய கபிலரின் வரலாறு இங்கு ஆராய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. கபிலர், மதுரையில் சங்கப்புலவர்களுள் ஒருவராய் வீற்றிருந்தார் என்னும் குறிப்புகள் பல நூல்களில் காணக்கிடக்கின்றன.

திருவாலவாயுடையார் திருவிளையாடல் ஹாலாஸ் ம~ாத்ம்யம் (வடமொழி நூல்) பரஞ்சோதி முனைவர், திருவிளையாடற்புராணம், கடம்பாவனபுராணம் கபிலரகவல், சேதுமண்டல சதகம், ஞானாமிர்தம், தமிழ்நாவலர்கள் சரிதை, தனிப்பாடல், திரட்டுபுலவர் புராணம் விநோதரச மஞ்சரி, திருவள்ளுவர்கதை, பன்னிருபுலவர் சரித்திரம், முதலிய நூல்கள் கபிலரைப் பற்றிக் கூறுகின்றன.

குறிஞ்சி மக்களின் வாழ்க்கை

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்த, எளிமையான ஆனால் வீரமும் காதலும் நிறைந்த வாழ்வியலாகும்.

வேளாட்சியும் உணவு சேகரித்தலும்: குறிஞ்சி மக்கள் தினைப் புனம் காத்தல், தேன்

எடுத்தல், கிழங்கு அகழ்தல் போன்ற தொழில்களைச் செய்தனர். ஐங்குறுநூற்றில் குறமகள் தினைப் புனத்தைக்கிளி கடியும் காட்சிகளும், காவல் செய்யும் முறைகளும் அழகாகப் பாடப்பட்டுள்ளன.

காதல் வாழ்க்கை: களவுக்காலக் காதலின் மேன்மையும், இரவுக் குறியிடத்துத் தலைவன் வந்து செல்லும் துணிவும், தோழியின் உதவியும் குறிஞ்சி மக்களின் அகவாழ்வின் உயர்வை வெளிப்படுத்துகின்றன. இயற்கையின் அழகிய சூழலில் மலர்களின் வாசனையோடும் விலங்குகளின் அச்சுறுத்தலோடும் இவர்களின் காதல் வாழ்க்கை திகழ்கிறது.

அறம்

தனிமனித விழுமியங்களுள் ஒன்றான அறம் பற்றி ஐங்குறுநூறு கூறுகின்றது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தும் அறம் என்று குறிக்கப்படுகினறது. தமிழர்களின் அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் அறம் கடைப்பிடிக்கப்படுவதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவுப்படுத்துகிறது. மனித வாழ்க்கையில் இரண்டற கலந்துள்ள உறுதிப்பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனுள் முதன்மைப்பெறுவது அறம்; இதனை,

“அறம்பொரு ளின்பம்வீ டென்னூற் பயனே”

- ச.திருஞானசம்பந்தம், நன்னூல், எழுத்ததிகாரம், நூ.எ.10,ப.12

என்று நன்னூலார் நூற்பாவழி எடுத்துரைக்கிறார். மனித வாழ்க்கையில் மனித வளர்ச்சியைப் போன்று அறவளர்ச்சியும் காலத்திற்கேற்ப நெகிழ்ச்சி பெற்றுள்ளது. பழங்கால மக்கள் பசி, பிணி, பகை, வறுமை ஆகிய வாழ்க்கைப் போராட்டங்களில் இன்பமும், பொருளும், பெற பல்வேறு நெறிகளைப் பின்பற்றியிருந்தனர். வஞ்சனையால் சுட்டப்பெறும் செல்வமும், இன்பமும் பழியென்றும் அறநெறி வழி வாழ்வதை சிறப்பு எனவும் பண்டைத் தமிழர் கருதினர்.

ஞா.தேவநேயப்பாவணார் என்பவர், “அறம் என்னும் சொல்லிற்கு 1,நல்வினை, 2,ஐயம் (பிச்சை), 3.ஏழைகட்கு இலவசமாக கொடுப்பது. 4. நோயாளிகட்கு இலவசமாகக் மருந்தீகை, 5.நலமானது. 6.இன்பம்(சுகம்) 7.தகுதியானது 8.கற்பு, 9.நோன்பு, 10.அறப்பண்பு, 11. சமயம் 12.ஓதி(ஞானம்), 13.அறச்சாலை, 14.அறத்தெய்வம், 15. நடுவுநிலையறம் பேணும் கூற்றுவன் போன்ற பதினைந்தும் வகையான பொருள்களைப் பேரகராதி தருகின்றது.”- ஞா.தேவநேயப்பாவணார் செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகாரதி, ப.523

அறம், பொருள், இன்பம், மூன்றும் வாழ்வின் அடிப்படையாக அமைகின்றது. அறத்தினால் பொருளாக்கி அப்பொருளால் இன்பம் தூய்த்தல் சிறப்பானது. இத்தகைய அறத்தைப் பழந்தமிழர் மேற்கொண்டு வாழ்ந்தனர் எனக் கபிலர்,

“சாத்த மரத்த பூழில் எழும்புகை

கூட்டு விரை கமழும் நாடன்

அறவற்கு எவனோ,நமஃ அகல்வு அன்னாய”

-தட்சிணாமூர்த்தி, ஐங்குறுநூறு மூலமும் உரையும், பா.எ212, ப.453

அறப்பண்புள்ள சான்றோனாக இருப்பவன் ஐங்குநுறுநூற்றுத் தலைவன் என்பதைத் தோழிக் குறிப்பிடுகிறாள். ‘பொருட் செல்வமும் அன்பு, அருள், நடுவுநிலைமை, வன்மை முதலான பண்புச்செல்வமும் கொண்ட தலைவனை

மருமகனாக ஏற்பது நமக்கு பெருமை சேர்க்கும்' என்பதை இப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

தலைவன் 'அறத்தில் சிறந்தவன் மனிதநேயம் உடையவன்' என்பதை கபிலர் உணர்த்தியுள்ளார். மற்றொரு ஐங்குநுறுநூற்றுப் பாடலில் தோழியின் அறம் கூறப்பட்டுள்ளது. தலைவிக்கு வெறியாட்டு நிகழ்த்த முயலுதல் கண்ட தோழி, இனி நம் களவு உறவினைத் தாய்க்கு உணர்த்துவது நல்லது என்று அறச்செயலை செய்கிறாள் இதனைக்,

" அறியாமையின் வெறி என மயங்கி

அன்னையும் அரும்ந்துயர் உழத்தனள் அதனால்

எய்யாதுவிடுதலோ கொடிதே- நிரைஇதழ்

ஆய்மலர் உண்கண் பசப்ப

சேய்மலை நாடன் செய்த நோயே"

-தட்சிணாமூர்த்தி, ஐங்குறுநூறு மூலமும் உரையும், பா.242

ஐங்குறுநூறு பாடலில் கபிலர் குறிப்பிடுகின்றார்.

உயர்ந்த மலைக்கு உரிமையுடைய நம் காதலனே இந்நோய்க்கு காரணம் என்ற உண்மையை நாம் மறைத்து அவள் அறியாது விடுவதால் நமக்கு தீமையாக முடியும் என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். இதில் தோழியின் அறம் கூறப்பட்டுள்ளது.

மலைச் சரிவில் பயிரிடுதல்

மலைச்சரிவுகளில் இயற்க்கையில் அமைந்த இடங்களிலோ அல்லது வேண்டியவாறு பள்ளம்,மேடு, இவற்;றை அடுத்தடுத்து உண்டாக்கியோ அவற்றின் படிகளில் பயிடுவர். மலைக்கண் ஓடிவரும் அருவிநீரைப் பயன்படுத்;திப் பயிரினை விளைவிப்பர். குறிஞ்சி நிலத்தவர் அகில், மூங்கில், முதலியவற்றை மலைச்சரிவுகளில் பயிரிடுகின்றனர்.

நிலத்தை உழுதற்கு எருதுகளைப் பயன்படுத்தினர். யானைக் கொம்பு உலக்கையாகவும் பாறைக்குழி உரலாகவும், சேம்பின் இலைகளாகவும் பயன்படுத்தினர்.

"முகைவளர் சாந்து உரல் முத்தார் மருப்பின்

வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சி"

- புலியூர்க்கேசிகன், கலித்தொகை பா.4

என்ற கலித்தொகைப் பாடலில் யானைக் கொம்பு உலக்கையாகப் பயன்படுத்தியமை குறித்து அறியமுடிகிறது.

முடிவுரை

ஐங்குறுநூற்றின் குறிஞ்சித் திணைப் பாடல்கள் வெறும் இயற்கை வர்ணனை மட்டுமல்லாமல், சங்க காலத் தமிழர்களின் அகவாழ்வு, பண்பாடு, மற்றும் இயற்கையோடு இயைந்த வாழ்வியல் முறைகளின் ஆவணப் பதிவாகத் திகழ்கின்றன. புலவர் கபிலரின் கவித்துவமான மொழிநடை குறிஞ்சி நிலத்தை நம் கண்முன்னே நிறுத்துவதோடு, பழந்தமிழர்களின் நாகரிகச் செழுமையையும் பறைசாற்றுகிறது.

துணைநூல் பட்டியல்

1.ஐங்குறுநூறு மூலமும் உரையும் – உ.வே. சாமிதையர் பதிப்பு, 1903, வைஜெயந்தி அச்சுக்கூடம், சென்னபட்டணம்.

2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் (அகத்திணையியல்).

3. சங்க இலக்கியம் - வாழ்வியலும் வரலாறும் – மு. அருணாசலம்.

4. ஐங்குறுநூறு மூலமும் உரையும் - தட்சிணாமூர்த்தி, 2004 முதற்பதிப்பு, நியூ செஞ்சுரி புக்

ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

5. புலியூர்க்கேசிகன் (உ.ஆ)., கலித்தொகை, பாரிநிலையம், 2010, சாரதா பதிப்பகம், சென்னை.

6. ஞா. தேவநேயப்பாவனார், செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகாரதி.

7. இராம. குருநாதன் குறிஞ்சி காட்டும் சமுதாயம்.

© 2026 ரா.ஆனந்தி, தனலட்சுமி சீனிவாசன், இன்ஸ்டிடியூட் ஆஃப் ரிசர்ச் அண்ட் டெக்னாலஜி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 610–616
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சங்க இலக்கியத்தில் அளவீடுகள்

Measurements in Sangam Literature

மு.பரமேஸ்வரி[1,*], தி.நகர்[2], முகவரி[3]

[1] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி
[2] சென்னை-17
[3] தொடர்பு எண்: 9003134328

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
—	—	—	16 October 2026
DOI —		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00109	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

Sangam literature serves as a mirror reflecting the lifestyle of the ancient Tamils. The scientific and mathematical notations employed by a people constitute vital evidence for assessing the civilizational evolution of that community. In this context, Sangam literature reveals that the Tamil society of two millennia ago was not merely a community rich in imaginative literature, but also an intellectual society grounded in precise scientific and commercial principles.

During the Sangam era—a period defined by landscape-based lifestyles (*Tinai*) and both domestic and foreign trade—systems of measurement were indispensable for the barter system and state administration. It can be observed that the methods used to measure goods in the barter system were determined by the nature and value of the commodities themselves. This article aims to examine—drawing upon the principles found in Sangam literature—the systems of linear, volumetric, and weight measurements used by the ancient Tamils, as well as the underlying socio-economic and scientific contexts.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மு.பரமேஸ்வரி, தி.நகர், & முகவரி (2026). சங்க இலக்கியத்தில் அளவீடுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 609–615. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8583

முன்னுரை

பண்டைத் தமிழர்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகச் சங்க இலக்கியம் திகழ்கின்றது. ஓர் இனத்தின் நாகரிகப் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுவதற்கு அவ்வினம் பயன்படுத்திய அறிவியல் மற்றும் கணிதக் குறியீடுகள் மிக முக்கியச் சான்றுகளாகும். அவ்வகையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சமூகம், வெறும் கற்பனை வளம் மிக்க இலக்கியச் சமூகம் மட்டுமல்லாமல் துல்லியமான அறிவியல் மற்றும் வணிகக் கோட்பாடுகளைக் கொண்டிருந்த ஓர் அறிவுச் சமூகம் என்பதைச் சங்க இலக்கியம் வழி அறியமுடிகிறது.

திணைசார் வாழ்க்கையையும், உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்தையும் அடித்தளமாகக் கொண்ட சங்க காலத்தில் பண்டமாற்று முறைக்கும் அரசு

நிர்வாகத்திற்கும் அளவீடுகள் இன்றியமையாத தேவையாக இருந்தன. பண்டமாற்று முறையில் பொருட்களின் அளவீட்டு முறைகள் பொருட்களின் நிலை மற்றும் அவற்றின் மதிப்புக் கருதியே அமைந்தது எனலாம். சங்க இலக்கியக் கோட்பாடுகளின் துணைகொண்டு பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திய நீட்டல், முகத்தல், நிறுத்தல் அளவைகளின் அமைப்பையும் அவற்றின் பின்னால் உள்ள சமூகப் பொருளாதார அறிவியல் பின்னணியையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முகத்தல் அளவை:

சங்க காலத்தில் தானியங்கள், பால், நெய், தேன், கள் போன்ற திரவ மற்றும் திடப் பொருட்களை அளக்க முகத்தல் அளவைகள் பயன்படுத்தப்பட்டன. முகத்தல் அளவைகளாகக் கலம், சாடி, அம்பணம், நாழி போன்ற கருவிகள் இருந்துள்ளன.

கலம், சாடி

சங்க காலத்தில் நெல், பயறு போன்ற தானிய வகைகள் வட்டில், உழக்கு, பதக்கு ஆகியவற்றால் அளக்கப்பட்டன. மேலும் கள், பால் போன்றவை கலம், சாடி அளவைகளால் அளக்கப்பட்டன என்பதை அகநானூறு பின்வருமாறு எடுத்துரைக்கிறது. இதனை,

“நல்மரம் குழீஇய நனைமுதிர் சாடி

பல்நாள் அரித்த கோஒய் உடைப்பின்

மயங்குமழைத் துவலையின் மறுகு உடன் பனிக்கும்

பழம்பல் நெல்லின் வேளூர் வாயில்” (அகம்.166:1-4)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. சங்க காலத்தில் கள் அளப்பதற்குச் சாடி பயன்படுத்தப்பட்டுள்ளது. பல நாட்கள் வடித்து எடுக்கப்பெற்ற கள் நிறைந்த சாடியிலிருந்து முகக்கும் கலம் கள் விற்கும் வீட்டில் உடைபடும் என்று கூறுவதிலிருந்து கள்ளினை முகக்கும் அளவாகச் சாடியினைப் பயன்படுத்தியமை புலப்படுகிறது. மேலும் அரச குடும்பத்தினர் கள்ளினைப் பொன்னாலாகிய கலத்தினால் முகந்து பயன்படுத்தியுள்ளனர் என்பதை,

“யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்

பொன்செய் புனை கலத்து ஏந்தி நாளும்

ஒண் தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து” (புறம்.56:18-20)

என்னும் பாடலடிகளால் அறியமுடிகிறது. வேடர்கள் கள்ளினை முகக்கக் கடகப் பெட்டியினைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

“கான்உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்

மானதசை சொரிந்த வட்டியும் ஆய் மகள்” (புறம்.33:1-2)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. சங்க காலத்தில் கள்ளினை முகக்க அரச குடும்பத்தினர் பொன்னாலாகிய கலமும் வேடர்கள் கடகப் பெட்டியும் பயன்படுத்தியதன் மூலம் மக்களின் பொருளாதார நிலைக்கேற்ப அவர்கள் பயன்படுத்தும் அளவுப் பொருள்களின் தரம் மாறுபட்டு இருந்ததைச் சங்கப்பாக்களால் அறியமுடிகிறது.

மரக்கால் (தூணி)

சங்கத் தமிழர்கள் தானியங்களை அளக்க 'மரக்கால்' என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். சங்க இலக்கியத்தில் இது 'அம்பணம்' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இம்மரக்கால் மரம், செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம் போன்ற பொருட்களால் செய்யப்பட்டுள்ளது. சங்ககால மக்கள் நெல்லினை அளக்கவும் ஊதியம் கொடுப்பதற்கும் யானைக்கு உணவளிக்கவும் மரக்காலைப் பயன்படுத்தினர் என்பதைச் சங்கப்பாக்களால் அறியமுடிகிறது. இதனைப் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூற்றுப் பாடலடிகளால் அறியலாம்.

"பரூஉப்பகடு உதிர்த்த மென் செந்நெல்லின்

அம்பண அளவை உறை குவித்தாங்கு

கடுந்தேறு உறு கிளை மொசித்தன துஞ்சும்

செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாரின்" *(பதிற்.71:4-8)*

"அம்பணத்தன்ன ஆமை ஏறி

செம்பினன்ன பார்ப்புப் பல துஞ்சும்" *(ஐங்.43:12)*

மேலும் பொருள்வயின் தலைவியைப் பிரியக் கருதிய நெஞ்சிற்குத் தலைவன் கூறும்போது பொருளானது பொய்கையிடத்தில் ஓடுகின்ற மீனின் வழியைப்போலத் தாம் இருந்தவிடம் தெரியாமல் கெடும் இயல்புடையது. பெரிய கடல் சூழ்ந்த அகன்ற இந்நிலவுலகத்தில் ஏழு மரக்கால் அளவு பெரிய நிதியைப் பெறுவதாக இருந்தாலும் அந்த நிதியை யான் விரும்பேன் என்று கூறுவதன் மூலம் அக்காலத்தில் மரக்கால் பொருள்களை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதை அறியமுடிகிறது. இதனைப் பின்வரும் பாடலடிகளால் அறியமுடிகிறது.

"..... என் நெஞ்சே! - பொருளே

.....

விழுநீர் வியலகம் தூணி ஆக

எழு மாண் அளக்கும் விழு நெதி பெறினும்

கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக் கண்

அமர்ந்து இனிது நோக்கமொடு செகுத்தனென்" *(அகம்.16:4-10)*

எண்ணளவை - ஆம்பல்

மிகப் பெரிய எண்ணினைக் குறிக்க சங்க காலத்தில் ஆம்பல், பேரெண், தாமரை போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு வகையான அணிகலன்களின் எண்ணிக்கையைக் குறிக்க '**ஆம்பல்**' என்று அகநானூற்றில் குறிப்பிடப்பட்டள்ளதைப் பின்வரும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

"நல் நகர் மரந்தை முற்றத்து ஒன்னார்

பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்

பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்

ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்று அவண்

நிலமதினத் துறந்த நிதியத்து அன்ன" (அகம்.127:6-10)

நிறுத்தல் அளவை:

சங்க இலக்கியத்தல் நிறுத்தல் அளவை இயற்கையோடு இயைந்து உருவாக்கப்பட்டவை ஆகும். நிறுத்தல் அளவைகளின் துல்லியத்தன்மை அவர்களது சமூகப் பொருளாதாரப் பின்னணி மற்றும் மெய்யியல் சிந்தனைகளை மையமாகக் கொண்டவையாக இருந்துள்ளது.

துலாக்கோல்

சமன் செய்து சீர்தூக்கும் கோலாக வள்ளுவரால் சுட்டப்படும் துலாக்கோல் முதலில் தான் சமனாக நின்று, பின்னர் தன்னிடம் உள்ள பொருட்களின் சீர் உணர்த்தும் தன்மை உடையதாகும். இது இலக்கியங்களில் சமன்கோல், தராசு, துலா, துலாம், துலாக்கோல், நிறுப்பான் எனப் பல பெயர்களில் சுட்டப்படுகின்றது. இக்காலத்தில் இத்தராசுக்கோலினின்று மாறுபடும் நிறுக்கும் எந்திரங்களைக் காணமுடிகிறது.

சங்க காலத்தில் இத்தராசுக்கோல் பெரும்பாலும் சீர் தூக்கும் அதன் செம்மைத் தன்மையாகிய ஒரு பக்கம் சாராமையை விளக்குவதாக அமைகிறது. நன்னன் நடுவுநிலைமை தவறாத நின்ற சொல்லையுடைய நல்ல உள்ளத்தினன் என்பதற்கு முன்னே தான் சமனாக நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாக்கோல் உவமையாகக் கூறப்பட்டுள்ளதைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

“எவன் ஆய்ந்தனர் கொல் - தோழி! - ஞெமன்ன்

தெரிகோல் அன்ன செயிர் தீர் செம்மொழி” (அகம்.349:3-4)

பரந்த அளவுடைய பொருள்களை ஆராயும் துலாக்கோலின் சமன்கோல் போன்று நீயும் ஒரு பக்கம் சார்ந்து நில்லாதே. நின் படை முதலிய உறுப்புகள் சிறந்து விளங்கட்டும் என்று பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியைச் சிறப்புற வாழுமாறு காரிக்கிழார் அறிவுறுத்துவதன் மூலம் அக்காலத்தில் பொருள்களைச் சமமாக அளவிட துலாக்கோல் பயன்பட்டமையை அறியமுடிகிறது. இதனை,

“உருவும் புகழும் ஆகி விரி சீர்த்

தெரிகோல் ஞமன்ன் போல ஒரு திறம்

பற்றல் இலியரோ நின் திறம் சிறக்க” (புறம்.6:8-10)

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும் கலித்தொகையில் தலைவன் ஆராய்ந்து அறத்தையே விரும்பும் நெஞ்சத்தை உடையவன் என்பதற்கு உவமையாக துலாக்கோலைக் கூறுவதன் மூலம் சங்க காலத்தில் துலாக்கோலின் பயன்பாடு இருந்திருப்பதை அறியமுடிகிறது. இதனை,

“ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ

ஓர்வு உற்று ஒருதிறம் ஒல்காத நேர்கோல்

அறம் புரி நெஞ்சத்தவன்” *(கலித்.42:13-15)*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இதன்மூலம் பொருளைச் சமமாக அளவிட துலாக்கோல் பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகிறது. அவையத்தார் முன்பு பகை, உவகை ஆகியவற்றில் பிறழாமல் தன்னைக் காத்துக் கொள்ளும் இலக்கணங்களால் அமைந்து பின்பு பகை, நட்பு, நொதுமல் என்ற முத்திறத்தும் பிறழாது தீர்ப்பு உரைக்கும் சான்றோர்கள் துலாக்கோலைப் போல் மதுரை நகரில் வாழ்ந்தனர் என்று மதுரைக்காஞ்சியில் (489-492) கூறப்பட்டுள்ளது. சங்க காலத்தில் தராசு யானைத்

தந்தம் மற்றும் பொன்னால் செய்யப்பட்டதைப் பின்வரும் பாடலடிகள் விளக்குகின்றன.

“புறவின் அல்லல் சொல்லிய கறை அடி

யானை வால் மருப்பு எறிந்த வெண் கடைக்

கோனிறைத் துலாம் புக்கோன்” **(புறம்.39:1-3)**

“செம்பொன் துலைத் தாலம்”*(கம்ப. மநஃ.19)*

வட்டில்

வட்டி என்பது இடைக்காலத்தும் பயன்படுத்தப்பட்டதொரு வகைப் பாத்திரமாகக் காண்கிறோம். இதனை, “வட்டில் ஒன்று வெள்ளி ஐம்பத்தறு கழஞ்சரை” என்று “தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்” நூல் குறிப்பிடுகிறது. ஆனால் சங்க காலத்தில் வட்டியில் பொருட்களை வைத்துப் பயன்படுத்துவதோடு பண்டமாற்று நிலையில் அதனை ஒரு அளவையாகவும் கருதியதை ஐங்குறுநூற்றுப் பாடலில் காணமுடிகிறது.

“முள்எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த

அகன் பெரு வட்டி நிறைய மனையோள்

யாண்டு கழி வெண்ணெல் நிறைக்கும் ஊர” **(ஐங்.47:1-3)**

நாழி

பல்லவர் காலத்தில் கருநாழி, நால்வா நாழி, மாராய நாழி, பிளையா நாழி, நாராய நாழி போன்ற பலவகை நாழிகள் பயன்படுத்தப்பட்டதை அறியமுடிகிறது. நெல்லை அளக்க நாழி பயன்படுத்தப்பட்டதை முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது. இதனை,

“யாழிசை இன வண்டார்ப்ப நெல்லொடு

நாழி கொண்ட நறுவீ முல்லை” **(முல்லை.8-9)**

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது.

நீட்டல் அளவை: மா

சங்க காலத்தில் நில அளவை மா, செறு என்று வழங்கிய நிலையைக் காணமுடிகிறது. ‘மா’ என்ற சொல் பெரியதொரு நிலத்தைக் குறிக்கும். இன்று மா என்ற அளவினை வேலியில் 20-ல் 1 பங்கு எனவும், 100 குழி நிலம் எனவும், ¼ காணி நிலம் எனவும் சுட்டுகின்றனர். இதன் மூலம் தமிழகம் முழுவதும் பல பெயர்கள் இருந்திருப்பதை அறியமுடிகிறது.

ஒரு மாவிற்குக் குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த காய்ந்த நெல்லை அறுத்துக் கவளமாகக் கொள்ளின் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாக அது பயன்படும். நூறு வயல்களாயினும் யானை தனித்துச் சென்று புகுந்த உண்ணுமாயின் அதன் வாயில் புகுந்த நெல்லினும், காலடியில் பட்டு அழிவது மிகுதியாகும். அத்தன்மையில் அறிவுடைய அரசன் நெறியறிந்து வரியைப் பெற வேண்டும் என்று மன்னனுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இப்பாடலில் மா என்ற அளவு இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. இதனைப் புறநானூறு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

“காய் நெல்லறுத்துக் கவளம் கொளினே

மா நிறைவு இல்லதும் பன்னாட்காகும்

நூறு செறுவாயினும் தமித்துப் புக்குணினே

வாய்ப் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்" (புறம்.184:1-4)

மேலும் நிலத்தின் பரப்பளவைக் குறிக்க வேலி என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

"துளி பதனழிந்து பொழிய

வேலி ஆயிரம் விளையுட்டாக" (புறம்.391:20-21)

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி

ஆயிரம் விளையுட்டு ஆக

காவிரி புரக்கும் நாடு கிழவோனே" (பொருந.246-248)

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன. இப்பாடலடிகளின் மூலம் நிலத்தின் பரப்பளவைக் குறிக்க மா, வேலி என்ற அளவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

நிறைவுரை

சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற அளவீடுகள் அனைத்தும் சங்கத் தமிழரின் அறிவுத் திறனையும், பண்பாட்டு முதிர்ச்சியையும், தொழில்நுட்ப ஆளுமையையும் எடுத்தியம்புகின்றன. அவர்கள் பயன்படுத்திய முகத்தல், நீட்டல் மற்றும் நிறுத்தல் அளவைகள் இன்றைய நவீன அளவீட்டு முறைகளுக்கு மிக வலிமையான அறிவியல் பூர்வமான அடித்தளத்தைப் பண்டைத் தமிழ்ச் சமூகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தங்களின் வாழ்வியலோடு இயல்பாகக் கொண்டிருந்தது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. ஆலிஸ். அ (உ.ஆ.), - பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
2. செயபால். இரா (உ.ஆ.), - அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
3. சோமசுந்தரனார். பொ.வே (உ.ஆ.),- பத்துப்பாட்டு, கழக வெளியீடு, சென்னை, 1980.
4. தட்சிணாமூர்த்தி. அ (உ.ஆ.),- ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
5. துரைசாமிப் பிள்ளை. ஒவை.சு (உ.ஆ.),- புறநானூறு, கழக வெளியீடு, சென்னை, 1962.
6. நச்சினார்க்கினியர் (உ.ஆ.), - கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை, 1962.
7. நாகசாமி. இரா, - தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை, 1969.

8. நாராயணவேலுப்பிள்ளை. எம், - கம்பராமாயணம், திருமகள் பதிப்பகம், சென்னை, 1998.

© 2026 மு.பரமேஸ்வரி, தி.நகர், முகவரி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 617–627
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

வள்ளுவர் கூறும் இல்வாழ்க்கை

The Domestic Life Described by Valluvar

தகைசால் தமிழறிஞர் அரிமா முனைவர் ச.அய்யர்*, எழுத்தாளர் தொல்லியலறிஞர்

125, அறிவாலயம்,அமைதிச் சோலைநகர், திருநகர், மதுரை – 625 006

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00110	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

To guide one's way of life, Thiruvalluvar delineates the principles of domestic life across twenty chapters under the section titled *Illaraviyal* (The Ethics of Domestic Life). Valluvar systematically outlines the essential attributes of domestic life and the ideal partner; the blessing of having children; the possession of love; hospitality; the habit of speaking pleasantly; gratitude; impartiality and adherence to virtue; self-restraint; moral conduct; fidelity (not coveting another's spouse); patience; freedom from envy; refraining from coveting others' wealth; avoiding backbiting; abstaining from idle speech; the fear of committing evil acts; living in harmony with the ways of the world; generosity; and attaining undying fame through these virtues. It is Valluvar's view—and indeed the truth—that all these qualities are essential for both the man and the woman leading a domestic life. Let us now examine what Valluvar has to say about each of these aspects.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: ச.அய்யர், த. த. அ. மு., & தொல்லியலறிஞர், எ. (2026). வள்ளுவர் கூறும் இல்வாழ்க்கை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 616–626. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8585

முன்னுரை

வாழ்க்கை நெறி பொருந்தத் திருவள்ளுவர் இல்லறவியல் என்னும் தலைப்பில் இல்வாழ்க்கைக்குரிய செய்திகளை இருபது அதிகாரங்களில் கூறுகின்றார். இல்வாழ்க்கையின் இலக்கணம், வாழ்க்கைத்துணையின் இலக்கணம், மக்கட்பேறு, இல்லறத்தார்க்கு இருக்க வேண்டும் அன்புடைமை, விருந் தோம்பல் பண்பு, இனியவை கூறும் இயல்பு, செய்நன்றி யறிதல், அறத்தில் வழுவாது நடுநிற்றல், அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறுமை யுடைமை, பொறாமை கொள்ளாதிருத்தல், பிறர் பொருளை வவ்வக் கருதாமை, புறங்கூறாமை, பயனற்ற சொற்களைச் சொல்லாமை, தீயவற்றைச் செய்வதற்கு அஞ்சுதல், உலக நடையை அறிந்து நடத்தல், ஈகைக்குணம், இவ்வனைத்துப் பண்புகளாலும் இறவாத புகழ்பெறுதல் என்பன வள்ளுவரால் முறைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. இல்வாழ்க்கை வாழும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இவையனைத்தும் தேவை என்பது வள்ளுவர் கருத்து. உண்மையும் அதுவேயாகும்.

இனி, இவ்வொவ்வொன்றனைப் பற்றியும் வள்ளுவர் கூறுவதைக் காண்போம்.

வாழ்க்கைத்துணை நலம்

உன்னை மணந்து கொண்ட கணவனையே பற்றுக் கோடாகக் கொண்டு அவன் விரும்பும் முறையில் இல்லறத்தை நடத்துவாயாக' என்று மணநாள் அன்று பெரியோர் கற்பித்த முறைப்படிநடப்பவள் 'கற்புடையாள்' எனப்படுவாள். அக்கற் பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்துக் கொண்டு, தன் கணவனையும் உணவு முதலியவற்றால் பேணி, இருவரிடத்தும் புகழ் நீங்காமல் காத்து, நற்குண நற்செய்கைகளில் வழுவாமல் இருப்பவளே பெண் என்று சொல்லப்படுவாள், அவள் கணவனது வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துவாள்; துறந்தவரைப் பாதுகாத்தலும் விருந்தினரை உபசரித்தலும் வறியவரிடம் அருளோடு நடந்து கொள்ளுதலும் அவளுடைய நற்குணங்களாகும். வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தலும், சமையல் தொழில் திறமையும், உலக நடைக்கு ஏற்ப நடத்தலும், அவளுடைய நற்செயலாகும். இவை அமையப் பெறாத மனைவி இருக்கும் வீடு, எவ்வளவு செல்வம் இருந்தாலும், பிற சிறப்புக்கள் இருந்தாலும், வீடாகக் கருதப்படாது . மேலே சொல்லப் பெற்ற நற்குணங்களையும், நற்செயல்களையும் உடைய மனைவி இருக்கும் வீடு பொருள் வசதி அற்றதாயினும், இன்பம் தரும் இனிய வீடாகக் கருதப் படும். கற்பு என்னும் திண்மையை உடைய மனைவியைப் பெற்றவளே பேறு பெற்றவள். அவளே பிற போகபாக்கியங் களைப் பெற்றவளைவிடச் சிறந்தவளாவாள். கற்புடைய மனைவியைப் பெற்றவன் சமுதாயத்தில் சிங்க ஏறு போலப் பெருமிதநடைநடப்பான். அஃதாவது, கணவன், மனைவியின் நற்குண நற்செயல்களாற்றான் இல்லற இன்பம் துய்த்துச் சமுதாயத்தின் பாராட்டைப் பெறுவான் என்பது. மனைவியினது சிறப்பே கணவனுக்கு மங்கலத்தைத் தரும். இச்சீரிய பண்பு நலம் வாய்ந்த மனைவிக்கு அவளது உள்ள உறுதியே காவலாகும். இத்தகைய மனையாளைப் பெற்றவன் பேறு பெற்றவனாவான்.

மக்கட் பேறு

சிறந்த மனைவாழ்க்கைக்கு மக்கட்பேறே மிக்க அழகாகும். அம்மக்களைக் கல்வி, கேள்வி, ஒழுக்கம் இவற்றால் சிறக்கச் செய்து சான்றோர் அவையில் முன்வரிசையில் இருக்கச் செய்தலே பெற்றோர் கடமையாகும். தன் மகன் கல்வி,கேள்வி ஒழுக்கங்களாற் சிறந்தவன் என்று பிறரால் புகழப்படும் பொழுது தாய். அவன் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விடப் பெருமகிழ்ச்சி அடைவாள். மக்களது அறிவுடைமை சமுதாயத் திற்குப் பயன்படும். ஆதலால் அவர்களை அறிவுடையவர் களாகச் செய்யும் பெற்றோர் அம்மக்களுக்கும், சமுதாயத்திற்கும் ஒருங்கே தொண்டு செய்தவராவர். பெற்றோரால் நன்முறையில் வளர்க்கப்படும் மக்கள், 'இவர்களைப் பெற இவர் பெற்றோர் எத்தவத்தைச் செய்தனரோ! என்று பாராட்டத்தகும் முறையில் அறிவுத்துறையில் முன்னணியில் நிற்கவேண்டும். அறிவறிந்த மக்கள் பெற்றோர்க்குச் செய்யும் கடமை இதுவேயாகும்.

குழந்தைகள் வாழ்க்கையை வளப்படுத்தும் விளக்கங்கள் ஆவர். அவர்கள் பெற்றோர் உண்ணும் பொழுது அவ்வுணவுப் பொருள்களைத் தம் சிறு கைகளால் துழாவுவர். அங்ஙனம் துழாவப்பெற்ற உணவுப் பொருள்கள் அன்பு மிகுதியால் அமிழ்தினும் மிக்க சுவையைத் தரும். குழந்தையின் உடம்பைத் தீண்டுவது பெற்றோர் உடம்பிற்கு இன்பத்தைத் தரும்; அவர்தம் சொற்களைக் கேட்பது செவிக்கு இன்பத்தைக் கொடுக்கும். மக்களின் மழலைச் சொற்கள் குழலினிசையை விட-யாழிசையைவிட இனியவையாக இருக்கும். இத்தகைய மக்களைப் பெற்ற வீடு,

இன்பம் தரும் இனிய வீடாகும்.

அன்புடைமை

அன்பு என்பது மனைவி, மக்கள், உற்றார் பெற்றார் முதலிய வர்கள் மீது செல்லும் பிரியம். பின்பு அது படிப்படியாக வளர்ந்து அனைவர்பாலும் செல்லவல்லது. வாழ்வரசியாக இருக்கும் மனைவி மீது கணவனுக்கு அன்பு இல்லையாயின், இல் வாழ்க்கை பழுதுபடும். அவ்வாறே கணவன் மீது மனைவிக்கு அன்பு இல்லையாயின், இல்வாழ்க்கை நரக வாழ்க்கையாகும். ஆதலின் இல்வாழ்க்கைக்கு அன்பு அடிப்படையாகும். அன்பு கணவனையும் மனைவியையும் முதலில் பிணிக்கின்றது; பின்பு குழந்தைகளையும் பிணிக்கின்றது. அன்பு இருக்கும் இடத்தில் இன்பம் குடியிருக்கும். அன்பு என்னும் நற்பண்பை யுடையவர்தந்நலம் விரும்பும் கீழ்மக்களாக இரார். அன்புடையவர் சொல்லாலும் பொருளாலும் - உடம்பாலும் பிறர்க்கு உதவுவர். முதலில் உற்றார் உறவினரிடம் செல்லும் அன்பு, பின்பு அயலாரிடத்தும் விரும்பிச் செல்லும். அப்பொழுது தான் அவனுக்குப் பகைவரும், அயலாரும் இரார். 'இவ்வுலகத்தில் இல்வாழ்க்கையில் நின்று இன்பம் நுகர்ந்து இல்லறத்தால் அடையும் சிறப்பு அன்பின் பயன்' என்று அறிஞர் அறைவர். அறத்திற்கு மட்டும் அன்பு துணையாவதன்று; தீயவனை நல்லவனாக்கவும் அன்பு பயன்படும். மனத்தில் அன்பில்லாத ஒருவர் இல்லறத்தில் இருந்து வாழ்தல், வலிய பாலைநிலத்தில் பட்டுக்கிடக்கும் மரம் தளிர்ப்பது போன்றதாகும். சுருங்கக்கூறின், அன்புடைய உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்பும் தோலும் போர்த்த உடம்பாகும்.

விருந்தோம்பல்

விருந்தோம்பல் இல்வாழ்க்கையின் உயிர் நாடியாகும். விருந்து - புதுமை, விருந்தினர் - புதியவர்; தாம் முன்னர் அறியாதவர், ஏழைகள், நன்னிலையில் இருந்து கெட்டவர், ஊர் விட்டு ஊர் வந்தவர், இவர் போன்றோர் பிறரும் விருந்தினர். எனப்படுவர். இவர்களை உபசரித்து உண்பித்தல் இல்வாழ்வர் கடமையாகும். இவர்கள் தன் வீட்டுத் திண்ணையில் இருக்க, ஒருவன் தான் மட்டும் உண்ணுதல் அறமாகாது. தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் உபசரிப்பவனது இல் வாழ்க்கை சிறப்புடைமையேயன்றிச் சீர்கெடாது. விருந்தினர் உள்ளம் குளிர உணவளிப்பவன், வேள்வி செய்து பெற வேண்டும் பயன் ஒன்றுமில்லை. பொருளுடையவர் விருந் தோம்பலைப் பாதுகாக்க வேண்டும். பொருளிருந்தும் அறிவில்லா தவர் விருந்தோம்பலைக் கைவிடுவார். அனிச்சப்பூ மோப்பக் குழையும்; அது போல உபசரிப்போர் முகம் வேறுபடின் விருந்தினர் மனவாட்டமடைவர். ஆதலால் இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர் அகமும் முகமும் மலரத் தம்மால் இயலும் வரையில் விருந்தினரை உபசரித்தல் நல்லது.

இனியவை கூறல்

இல்வாழ்வார்க்கு அடுத்து இருக்க வேண்டும் பண்பு இனியவை கூறல் என்பது. கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும், இவ்விருவரும் பிள்ளைகளிடமும் இனிய சொற்களைப் பேசுவராயின், இல்லத்தில் இன்பம் நிறைந் திருக்கும். இப்பண்பு இல்லறத்தாரிடம் வளருமாயின், விருந்தின ரிடமும் பிறரிடமும் இனிய சொற்களையே பேசுவர். பிறர்க்கு இனிமை தராத சொற்கள் காய் போன்றவை; இனிமை தரும் சொற்கள் கனி போன்றவை. நமக்கு காய் வேண்டுமா? கனி வேண்டுமா? கனியை விரும்புவது தான் அறிவுடைமை.அது போல இனிய சொற்களைப் பேசுதல் இல்லறத்தார் கடமையாகும். முகமலர்ச்சியோடு

இனிமையாகப் பேசுபவர் பொருளுதவி செய்யாவிடினும், வறியவர் ஆறுதலோடு அவர்களை வாழ்த்திச் செல்வர். 'ஒருவரைக் கண்ட பொழுதே அவரை முகமலர்ச்சியோடு நோக்கி இனிய சொற்களாற் பேசுவதே அறம் என்று அறிஞர் கூறுகின்றனர். எல்லோரிடமும் இன்பத்தை உண்டாக்கும், இனிய சொற்களைப் பேசு வோர்க்குத் துன்பம் தொடராது. எல்லோரிடத்திலும் பணிவும், இனிய சொற்களைச் சொல்லுதலும் உடைய ஒருவர்க்கு வேறு சிறப்புத் தேவையில்லை. பிறர்க்கு நன்மை பயக்கும் சொற் களை மனத்தால் ஆராய்ந்து இனிய முறையில் சொல்லு வோர்க்கு நன்மையே வரும். பிறர் மனத்தை வருந்தாத இனிய சொல், அதனைச் சொல்வோனுக்கு இம்மையிலும் - மறுமை யிலும் இன்பத்தைத் தரும். இங்ஙனம் இனியவைகூறல் எல்லோர்க்கும் இன்பத்தைத் தந்து தன்னையும் உயர்த்து வதை அறிந்தும், ஒருவன் வன்சொற்களைப் பேசுவது அறிவுடைமையாகாது அன்றோ? எனவே, இல்லறம் நல்லறமாக வேண்டுமாயின் இனிய சொற்கள் இன்றியமையாதவை, சமுதாயத்தில் நல்லவர் என்று பெயர் எடுக்க வேண்டுமாயின், இனிய சொற்கள் தேவைப்படுவனவேயாகும்.

செய்நன்றியறிதல்

செய்நன்றியறிதல் என்பது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை, இனியவை கூறி இல்லறம் வழுவாது நடத்துவோர்க்கு இந்நற்பண்பு இருத்தல் வேண்டும். ஆதலின் அறிவிற் சிறந்த திருவள்ளுவர் இனியவை கூறலை அடுத்து இதனைக் கூறியுள்ளார்.

தனக்கு முன்பு ஓர் உதவியும் செய்யாதிருக்க, ஒருவன் பிறருக்கு உதவி செய்கிறான். அவ்வுதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது என்பது வள்ளுவர் கருத்து. அதனால் அவர், "ஒருவனுக்கு தாங்கமுடியாத துன்பம் வந்தபொழுது ஒருவன் செய்த உதவி, தன்னை நோக்கச் சிறியதாய் இருந்தாலும், அக்காலத்தை நோக்க நிலவுலகத்தைவிட மிகப் பெரியதாகும்" என்கிறார்.இவர்க்கு இது செய்தால் நாம் இன்ன பயனைப் பெறலாம் என்பதை எண்ணாதவராய்ச் செய்த உதவியை ஆராயின், அதன் நன்மை கடலினும் பெரிது என்று கூறலாம். தக்க காலத்திற் செய்த உதவி தினையளவாக இருப்பினும், அறிவுடையோர் அதனைப் பனையளவாகக் கொண்டு பாராட்டுவர். துன்பக் காலத்தில் இங்ஙனம் உதவி செய்பவரது நட்பை விடலாகாது; அதனை என்றும் நினைப்பது நல்லோரது கடமை. ஒருவன் செய்த தீமையை செய்த அப்பொழுதே மறப்பது நல்லது. ஆனால் ஒருவன் செய்த நன்மையை மறப்பது அறமாகாது. தனக்கு முன்பு ஒரு முறை நன்மை செய்தவன் பின்பு மிகக் கொடிய செயலைச் செய்தானாயினும், அவன் முன்பு செய் நன்மையை எண்ணிப் பின்பு செய்த தீமையை மறத்தலே பெருந்தன்மை, பசுவின் காம்பை அறுத்தல், மகளிர் கருவினைச் சிதைத்தல் முதலிய கொடுமைகளைச் செய் வோருக்குக் கழுவாய் உண்டு. ஆயின், ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்குக் கழுவாய் இல்லை. ஆதலால், ஒருவன் செய்த உதவியை மறவாது போற்றுவதே மாண்புடையது.

நடுவுநிலைமை

பகைவர், நண்பர், அயலார் நமக்கு உதவி செய்தவர் என்ற எத்திறத்தாரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமையே நடுவுநிலைமை என்பது, ஒருவன் பகைவன், அயலான், நண்பன், தனக்கு உதவி செய்தவன் என்னும் இவரிடம் நடுவுநிலைமையிலிருந்து தவறாது நடத்தலே அறம் என்று சொல்லலாம். நடுவுநிலைமை உடையவன் அறநெறி தவறி வாழான். ஆதலால் அறநெறியில் நடப்பதால் வரும் புகழ் அவன் இறந்த பின்பும் நிலைத்து நிற்கும். எனவே, தனக்குச்

சுயநன்மை இருப்பதாயினும், நடுவுநிலையிலிருந்து தவறுவதால் வரும் செல்வத்தை விரும்பாதிருத்தலே அறமாகும். மனத்தின்கண் நடுவுநிலையிலிருந்து பிறழாமையே சான்றோர்க்கு அழகாகும். முன்னே தான் சமனாக நின்று, பின் தன்னிடம் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாம் போல நடுவுநிலையிலிருந்து ஒரு பக்கத்தும் சாயாமை கல்வி, கேள்வி, ஒழுக்கங்களாற் சிறந்த பெருமக்கட்கு அழகாகும்.

அடக்கமுடைமை

மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் தீயநெறியிற் செல்லாமல் அடங்குதல் உடையவராய் இருத்தல் அடக்க முடைமை எனப்படும். பகைவர் செய்த குற்றத்தை தாம் செய்த குற்றத்தையும் நிறுக்கின்ற நடுவுநிலைமையையுடையவர் அடக்கத்தை அணிகலனாகக் கொண்டவராவார். அடக்கம் ஒருவனை தேவர் உலகத்து உய்க்கும் ; அடங்காமை நரகத்தில் தள்ளும். அஃதாவது, அடக்கமுடையவன் இன்பத்தைத் துய்ப்பான், அடங்காதவன் துன்பத்தை நுகர்வான் என்பது பொருள், மனம் ஒன்றை எண்ணும்; அவ்வெண்ணம் செயலின் உருவத்தை அடையும். எனவே, செயலுக்கு மனமே முதற் காரணமாக அமைகின்றது. ஆதலால் மன அடக்கம் உடையவன் மொழி அடக்கம் உடையவனாவான்; செயல் அடக்கம் உடையவனும் ஆவான்.

அடக்கமே பெறுதற்கரிய செல்வம், அதனை உறுதிப் பொருளாக கொண்டு அழியாமற் காப்பவனே அறிஞன். அவ்வடக்கம் அறிஞரால் அறியப்பட்டு அவனுக்கு உயர்வைத் தரும். இல்வாழ்க்கை ஆகிய தனி நெறியிலிருந்து வேறுபடாது நின்று அடங்கியவனது உயர்ச்சி, மலையின் உயர்ச்சியை விட மிகப் பெரியதாகும். பெருமிதமின்றி அடங்குதல் எல்லோருக்கும் நல்லது; செல்வர் அடங்கியிருத்தல் மேலும் சிறப்புடையது. ஆமை தன் ஐந்து உறுப்புகளையும் அடக்குதல் போல் ஐம்பொறிகளையும் தீயநெறிகளிற் செல்லாமல் நடத்துபவன் மிகச் சிறந்தவன். ஒருவன் எதனைக் காக்க முடியா விடினும் நாவை மட்டும் காத்தல் சிறந்தது ; அதனைக் காவானாயின் சொற்குற்றத்தால் துன்புறுவான். ஒருவனை யொருவன் தீயினாற் சுட்டபுண் உடம்பில் இருக்கும்; மனத்தில் பதியாது; ஆனால், நாவினால் சுடப்பட்ட வடு மனதிற் பதிந்து விடும்; அது என்றும் ஆறாது. ஆதலால் மனதில் கோபம் தோன்றாமல் ஒவ்வொருவரும் காக்க வேண்டும்.

ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் ஒவ்வொருவருக்கும் சிறப்பினைத் தரும். ஆதலால் அஃது உயிரினும் மேலாகப் பாதுகாக்கப்பட வேண்டுவதாகும். மனிதன் நேர்மையான வாழ்க்கைக்குரிய பாதையிற் செல்லுதலே ஒழுக்கம் என்பது. அப்பாதை யினின்றும் வழுவுவானேயாயின், அவன் கீழ் மகனாகக் கருதப்படுவான். ஆதலின் ஒழுக்கத்தினை எதனாலும் அழிவுபடாமல் பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் தவறியவன் இழிபிறப்பாளனாய்க் கருதப்படுவான். பொறாமையுடையவன் வாழ்க்கையில் முன்னேறமாட்டான்; அவனைப் போலவே ஒழுக்கமில்லாதவனும் சமுதாயத்தில் மதிப்பைப் பெற மாட்டான். ஒழுக்கமுடைமைக்கு மனவுறுதி வேண்டும்.

மனவுறுதி இல்லாதார் ஒழுக்கமுடையவராய் இருத்தல் அரிதாகும். நல்ல ஒழுக்கம் அறத்திற்குக் காரணமாய் அமைந்து இருமையிலும் இன்பம் பயக்கும்: தீய ஒழுக்கம் பாவத்திற்கு காரணமாய் இருமையிலும் துன்பம் பயக்கும். ஒழுக்கமுடையவர் மறந்தும் தீய சொற்களைத் தம் வாயாற் சொல்லார். கல்வி, கேள்வி, ஒழுக்கங்களாற் சிறந்த பெருமக்களது ஒழுக்க நெறியைப் பின்பற்றி

நடவாதவர். நூல்களைக் கற்றவராயினும் அறிவற்றவர் என்றே அறிஞரால் கருதப்படுவர்.

பிறனில் விழையாமை

காம மயக்கத்தால் பிறனது மனையாளை விரும்பாமையே பிறனில் விழையாமை என்பது. ஒழுக்கமுடையவரே இங்ஙனம் விழையார். இல்வாழ்க்கையில் ஈடுபட்ட ஒருவன் நண்பர் பலரைப் பெற்றிருப்பான். அவன் அவர்தம் ஒழுக்கத்தை ஐயுறாமல் தன் வீட்டில் அவர்களைப் பழக விடுவான். அத்தகைய நிலையில் அவனது இல்லாளை விரும்பும் நண்பர் தீநெறிப்பட்டவரே ஆவர். அத்தகையோர் இறந்தாரேயாவர் என்பது வள்ளுவர் கருத்து. எத்துணைப் பெருமையுடையவராயினும் பிறன் மனைவியை விரும்புவோர் அற்பராய்க் கருதப்படுவர்; இந்திரனைப் போல எல்லாப் பெருமைகளையும் இழந்து சிறுமை அடைவர் என்றும் நிலைநிற்கும் குடிப்பழியினையும் அடைவர், பகை பாவம், அச்சம், குடிப்பழி என்னும் நான்கு குற்றங்களும் அவரை விட்டு அகலா. பிறன் மனைவியை உள்ளத்தாலும் நினையாதவனே பேராண்மையுடைய ஆண்மகன். அவனே அறனுடையவன்; ஒழுக்கமும் உடையவன் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

பொறையுடைமை

ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ அல்லது அறியாமை யாலோ ஒருவன் தனக்கு தீமை செய்த போது, தானும் அவனுக்குத் தீமை செய்யாது பொறுத்திருத்தல் பொறை யுடைமை எனப்படும். நெறியில்லாதவற்றைச் செய்த வனையும் பொறுக்க வேண்டுவதே பெருந்தன்மை. தன்னைத் தோண்டுபவரையும் நிலம் தாங்கி நிற்கிறது. அதுபோலத் தன்னை அவமதிப்பவரைப் பொறுத்தல் மிகச் சிறந்த அறமாகும். ஒருவன் செய்த பிழையைப் பொறுத்தல் நல்லது. ஆனால் அப்பிழை செய்யப்பட்டபொழுதே அதனை மறந்து விடுதல் அப்பொறுமையிலும் நல்லதாகும். அறிவின்மையால் தீமை செய்பவரைப் பொறுத்தல் வன்மையுள் வன்மை' என்று சொல்லலாம். பொறுமையைக் கைவிடாதவன் 'சான்றோன் என்று போற்றப்படுவான். பிறர் தனக்குச் செய்யும் தவறு களைப் பொறுப்பவனை அறிவுடையோர் பொன்போல் பாராட்டுவர். நமக்கு தீங்கு செய்தவனைத் தண்டித்தவர் ஒருநாளை இன்பமே அடைவர். ஆயின், தீங்கு செய்தவனைப் பொறுத்தவர் உலகம் உள்ளளவும் புகழ் பெறுவர். மனச் செருக்கால் தன்னிடம் தீயவற்றைச் செய்தாரைத் தான் தனது பொறுமையால் வெல்லுதலே சிறப்பாகும். நன்னெறியற்ற தீயவர் சொற்களைப் வெறுப்பவர், இல்வாழ்க்கையில் இருப்பினும், முற்றும் துறந்த முனிவரைப் போன்ற தூய்மை உடையவராவர்.

பொறாமைப் படாதிருத்தல்

பொறாமை என்பது மனிதனது உயர்ச்சியைக் கெடுக்கும்; ஊக்கத்தைச் சிதைக்கும்; உழைப்பைப் பாதிக்கும். இல்லறத் தான் இத்தீய குணத்தால் பீடிக்கப்படுவானாயின், அவனுடைய உயர்ச்சி, ஊக்கம், உழைப்பு என்னும் மூன்றும் கெட்டுவிடும். இவை காரணமாக அடக்கம், ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் அனைத்தும் கெட நேரிடும்; இல்லறம் நல்லறமாகத் திகழாது. ஆதலின் பொறாமை என்னும் தீய பண்புக்கு ஆட்படாமல் ஒவ்வொரு இல்லறத்தானும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும். ஒருவனது ஆக்கத்தினையும் முற் போக்கினையும் கண்டு தானும் அவ்வாறு ஆக்கம் பெறுதல் வேண்டும். முற்போக்கு அடைதல் வேண்டும் என்று எண்ணுபவன் ஊக்கம் பெறுவான்; ஊக்கத்திற்கு ஏற்ப உழைப்பான்; அதனால் ஆக்கம் பெறுவான். இவற்றிற்கு மாறாகப் பொறாமைப்

படுபவன் தன்னைத்தானே அழித்துக் கொள்பவனாவான்; அதனால் தானும் கெடுவதின்றித் தன்னைச் சார்ந்தாரையும் கெடச் செய்வான். பொறாமைப் பேயால் பற்றிக் கொள்ளப்பட்ட ஒருவன் இம்மையில் அமைதியை இழப்பான்; அதனால் வாழ்வையும் இழப்பான். பொறாமைப்பட்டு உலகில் பெருமையடைந்தவன் ஒருவனும் இல்லை; அவ்வாறே பொறாமைப்படாததால் சிறுமை யடைந்த வனும் இல்லை. எக்காரணம் கொண்டேனும் பிறரது ஆக்கம் கண்டு பொறாமைப்படுதல் தீயது.

வெஃகாமை

பிறர்க்கு உரிய பொருளை வவ்வக் கருதாமையே 'வெஃகாமை' எனப்படும். பிறரது பொருளைக் கண் அது தன்னிடம் இல்லையே என்று பொறாமைப்படுதல் கண்டவுடன் தவறு; அதனை அபகரித்துக் கொள்ள கருதுதல் அதனினும் தவறு. இச்செயல் ஒருவனது குடியைக் கெடுப்பதோடு, பல் குற்றங்களுக்கும் அவனை ஆட்படுத்தி விடும். அறநெறியிற் செல்பவர் பிறர் பொருளை வவ்வி, அதனால் வரும் நிலையற்ற இன்பத்தை விரும்பமாட்டார்; தம் வறுமையைப் போக்கப் பிறர்பொருளை விரும்பார். பல நூல்களைக் கற்றும் பிறர் பொருளை அபகரிக்க எண்ணுவோர் கற்றறி மூடரேயாவர். அருளாகிய அறத்தை விரும்பி, அதற்கு வழியாகிய இல்லறத் தில் இருப்பவன், பிறர் பொருளை வவ்விக் குற்றப்படுதல் தவறு. பிறர் பொருளை வவ்வி அதனால் வரும் ஆக்கத்தை விரும்பின், அவ்வாக்கம் நற்பயன் விளைவியாது. வவ்வியோன் மனச் சான்றே அவன் உள்ளத்தைச் சுட்டுக் கொண்டிருக்கும். பிறர் பொருளை வவ்வ நினையாதவனே ஆக்கம் பெறுவான்.

புறங்கூறாமை

ஒருவன் இல்லாத இடத்தில் அவனை இகழ்ந்து பேசா திருத்தலே 'புறங்கூறாமை' எனப்படும். ஒருவன் அறம் என்று சொல்லப்படுவதைச் செய்யாமல் தீமை தரத்தக்க செயல் களைச் செய்வானாயினும், பிறனைப் புறங்கூறாமல் இருப்பின், உலகத்தாரால் பாராட்டப்படுவான். அறம் என்பது ஒன்றில்லை என்று வாதித்து, அதன் மேல் பாவங்களைச் செய்வதை விட, ஒருவனை இல்லாத இடத்தில் இகழ்ந்துரைத்து நேரிற் கண்டவுடன் பொய்நட்புக் கொள்ளுதல் கொடிய தீமை யாகும். இவ்வாறு செய்வதைவிட ஒருவன் இறந்துபடுதல் நல்லது. ஒருவன் எதிரில் கண்ணோட்டம் இல்லாமல் அவனைக் கடிந்து பேசலாம். ஆயின், அவன் இல்லாதபோது அவனைப் பற்றித் தவறான சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லது. புறங்கூறுவோன் அறத்தை அவமதிப்பவனாவான், கூடி மகிழும்படி இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடு நட்புக் கொள்ள அறியாதவரே புறங்கூறித் தம் சுற்றத்தாரையும் பிரியும்படி செய்வர். தம் உற்றார் உறவினரது குற்றத்தை அவர் இல்லாத பொழுது தூற்றும் இயல்புடையார். பிறரிடம் என்னதான் செய்ய செய்யார்! புறங்கூறுவோன் நிலத்திற்குச் சுமை போன்றவன். பிறரைப் புறங்கூறுவோர், புறங்கூறலாகிய தமது குற்றத்தை எண்ணிப் பார்ப்பின், புறங்கூறார். இத்தகைய அறிவு பெறுவதே ஒவ்வொருவரது கடமையாகும்.

பயனில சொல்லாமை

தமக்கும் பிறர்க்கும் அறம், பொருள், இன்பம் ஆகிய பயன்களுள் ஒன்றும் தராத சொற்களைச் சொல்லாதிருத்தலே பயனில சொல்லாமை' எனப்படும். பொய், கோள் சொல்லுதல், கடுஞ்சொல் கூறல், பயனில சொல்லுதல் என்பன வாக்கின் கண் நிகழும் குற்றங்கள். இவற்றுள் கோள்சொல்லுதல் புறங் கூறாமையால் விலக்கப்பட்டது; கடுஞ்சொல் இனியவை கூறலால் விலக்கப்பட்டது. பொய்

ஆங்காங்குக் கடியப் பட்டது.எனவே, பயனில சொல் இங்கு வற்புறுத்தப்படுகின்றது.

அறிவுடையவர் பலரும் கேட்டு வெறுக்கும்படி பயனற்ற சொற்களைச் சொல்லுபவன் எல்லோராலும் இகழப்படுவான். பயனற்ற பொருள்களை விரித்துரைக்கும் ஒருவனை நெறியற்றவன் என்று உலகம் இகழும். ஒருவன் பண்பற்ற சொற்களைப் பலரிடைச் சொல்லுவானாயின், அப்பலரும் அவன் மீது வைத்திருந்த மதிப்பை விட்டுவிடுவர். பயனில்லாத சொற் களைப் பலகாலும் சொல்லுபவனை 'மகன்' என்று சொல்ல லாகாது; மக்களுள் பதர் என்று சொல்ல வேண்டும். சான்றோ ராயினும் அறத்தொடு படாத சொற்களைச் சொல்லுதல் குற்ற மேயாகும். சிறந்த அறிவும் ஒழுக்கமும் உடைய பெருமக்கள் பயனற்ற சொற்களைச் சொல்லார். சொற்களில் கேட்பாருக்குப் பயன்தரத்தகும் சொற்களைப் பேசவேண்டும்; பயன் தராத சொற்களை விட்டொழித்தல் வேண்டும்.

தீவினை அச்சம்

தீய காரியங்களைச் செய்வதற்கு அஞ்சுதலே 'தீவினை யச்சம்' எனப்படும். இதனால் உடம்பால் நிகழும் தீச்செயல்கள் தனக்கு இன்பத்தைத் தரும் தரும் என்று எண்ணி ஒருவன் செய்யும் தீச்செயல்கள் அவனுக்குத் துன்பம் பயத்தலையே காண் கிறோம். ஆதலால் அவற்றைச் செய்ய ஒவ்வொருவரும் அஞ்சுதல் வேண்டும். தம் பகைவரிடத்தும் தீய செயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்த அறிவு என்று அறிஞர் அறைவர். பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை எண்ணுகின்றவனுக்கு அறக் கடவுள் கேடு செய்யும். தன் வறுமை நீங்குவதற்காகப் பிறர்க்குத் தீமை செய்யும் ஒருவனை பற்றிக் கொள்ளுமே தவிர, விட்டு நீங்காது பிறர்க்குச் செய்யும் கேடுகள் பின் வந்து நம்மை வருத்தும். தீவினையாகிய பகை மிகக் கொடியது. தன் நல்வாழ்வை விரும்பும் ஒருவன் பிறர்க்குத் தீமை செய்வதிலிருந்து விலகுதல் வேண்டும்.

இவ்வதிகாரம் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. பிறர் வாழ்வதைப் பொறாது சிலர் அவர்க்குப் பலகேடுகளைச் செய்தலைக் காண்கிறோம். இங்ஙனம் கேடு செய்பவர் என்ன பயனை அடைகின்றனர்? நல்லறிவுடைய பலராலும் இழித் துரைக்கப் படுகின்றனர்; அதுகாறும் தாம் பெற்றிருந்த மதிப்பை இழந்து, மானம் இழந்து வெட்கப்படுகின்றனர். நாம் இதனைச் சமுதாயத்தில் கண்கூடாகக் காண்கின்றோம். மனிதன் எதை விதைக்கிறானோ, அதையே அறுவடை செய்கிறான். அதுபோலப் பிறர்க்குத் தீமை செய்பவன் தன்னை அறியாமல் தனக்கே தீமை செய்து கொள்கிறான். பிறன் கேடு தன் கேடு ஆகிறது. இந்த உண்மையை உணர்ந்து இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் பிறர்க்குத் தீமை செய்தலை மனத்தாலும் நினைத்தல் ஆகாது.

ஒப்புரவு அறிதல்

உலகநடையினை அறிந்து - உயர்ந்தோர் செல்லும் நெறியினை அறிந்து-தாமும் அந்நெறியிற் செல்லுதலே ஒப்புரவு அறிதல் எனப்படும். அஃதாவது, பயன் கருதாது பொது நலத்திற்குரியவற்றைச் செய்தலே ஒப்புரவறிதல் எனப்படும். வள்ளுவர் இதுவரையில் மனம், மொழி, மெய்களால் விலக்க வேண்டுவனவற்றைக் கூறியுள்ளார். இங்குச் செய்யத் தருவனவற்றைக் கூறுகின்றார். மேகங்கள் உலக உயிர்களுக்கு நீரை உதவுகின்றன. ஆயின், உயிர்கள் அம்மேகங்களுக்கு ஏதேனும் கைம்மாறு செய்கின்றனவா? இல்லை, அங்ஙனம் கைம்மாறு செய்யாதிருப்பினும், மேகங்கள் தம் கடமையைச் செய்கின்றன. அவ்வாறே சமுதாய நலங்களுள், எவ்விதப் பயனையும் எதிர்பாராமல் இல்வாழ்வாரின் சில கடமைகளைச் செய்தல்

வேண்டும்.

இங்ஙனம் சான்றோர் செய்த நல்லவற்றைச் செய்பவன் உயிரோடு வாழ்பவனாவன்; இங்ஙனம் செய்யாதவன் இறந்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான். ஊருணியில் உள்ள நீர் ஊர் மக்கள் எல்லோருக்கும் பயன்படுகிறது. அது போல உலக நடை அறிந்த அறிஞனது செல்வம் பலர்க்கும் பயன்படுதல் வேண்டும். ஊர் நடுவில் இனிய பழங்களைக் கொண்ட மரம் இருப்பின், அப்பழங்கள் ஊர் மக்களுக்குப் பயன்படும். அதுபோல விரிந்த மனப்போக்குடையவனது செல்வம் ஊர் மக்கள் நலத்திற்குப் பயன்படும். அச் செல்வம் தன்னை உடையானது பரந்த நோக்கால் ஊராருக்குப் பயன்படும்; மருத்துவமனையாகவும், படிப்பகமாகவும், பள்ளி யாகவும், உணவி விடுதியாகவும், பிறவாறாகவும் உரு வெடுத்துப் பயன்தரும். இங்ஙனம் சமுதாய நலத்திற்குச் செலவிடுபவனே 'ஒப்புரவாளன்' எனப்படுவான். பொது நலத்திற்குத் தாம் செய்யத் தருவனவற்றை அறிந்த அறிவு டையார், தமது செல்வம் சுருங்கிய காலத்திலும் பொது நன்மைக் குரியவற்றைச் செய்ய தயங்கார். பொதுநலத் தொண்டால் ஒருவனது செல்வம் அழிந்து விடும் என்றாலும், அவன் துணிந்து பொதுநலத் தொண்டு செய்வதே வரவேற்கத் தக்கது என்பது வள்ளுவர் கருத்து.

இல்லறத்தான் ஒருவன் தன் உழைப்பால் பெரும் செல்வத்தை ஈட்டுகிறான். அவன் அதனைத் தன் குடும்ப அளவில் மட்டும் வைத்திருப்பின், 'சுயநலப் பேயன்' என்று உலகத்தாரால் இகழப்படுவான். அவன் ஈட்டும் பொருள் சமுதாயத்திலிருந்து வரும் செல்வமேயாகும். ஆதலால் தன் வாழ்வுக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு எஞ்சிய பொருளைச் சமுதாய நலனுக்கே செலவிடுதல் நேர்மை. இச்சீரிய நிலையங்களை ஏற்படுத்தி, உலக நாடுகளில் எல்லாம் அற முறையினை அறிந்தே, அமெரிக்க கோடீசுவரர்கள் அறி செயல்களைச் செய்து வருகின்றனர். இத்தகுதி உடைய செயலால் அவர்தம் புகழுடம்பு என்றும் நிலைத்திருக்க வழி உண்டாகிறது. நம் நாட்டிலும் பச்சையப்ப முதலியார், இராசா அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் அழகப்பச் செட்டியார், மதுரைக் கருமுத்து. தியாகராசச் செட்டியார் போன்ற பெரு மக்கள் சமுதாயத்திற்குப் பயன்பெறும் வகையில் பல அறங் களைச் செய்துள்ளனர். செல்வத்தில் இவரினும் குறைந்தவர் தத்தம் வசதிக்கேற்ற முறையில் சமுதாயத்திற்குப் பயன்படுதல் வேண்டும். இஃது ஒவ்வொருவர் இல்வாழ்வரது சிறந்த கடமை யாகும்.

ஈகை

நம்மிடம் ஏற்ற வறியவருக்கு 'இல்லை' என்று சொல்லாமற் கொடுத்தலே 'ஈகை' என்று சொல்லப்படும். ஒரு பொருளும் இல்லாதவனுக்கு அவர் வேண்டியது ஒன்றைக் கொடுப்பதே உண்மையில் 'ஈகை எனப்படும். பிறவகைக் கொடைகள் பயன் கருதிச் செய்வனவாகும். பிறரிடம் கைநீட்டி ஒன்றைப் பெறுதல் மேலுலகத்திற்கு நல்லது என்று கூறுதல் தீது; வறிய வர்க்குக் கொடுப்பவர்க்கு மேல் உலகம் இல்லை என்று சொல்லினும், ஏழைகட்கு உதவுவதே நல்லது. ஒருவன் இல்லை என்று நம்மிடம் வந்து இரக்கும் போது, இரக்கும் போது, நாமும் 'இல்லை' என்று சொல்லுதல் தவறு; அவனுக்கு உதவுதலே அறம். ஏழை களது மிக்க பசியைத் தீர்ப்பது அறம். அங்ஙனம் செய்யின், தனது மேல் உலக வாழ்க்கை என்னும் பயிர்க்கு ஒருவன் வித்திட்டது போலாகும்.

ஏழைகட்கு வழங்கி அவர்கள் மகிழ்வதைக் கண்டு தாம் மகிழ்தலே செல்வர் கடமையாகும். இங்ஙனம் செய்யாதவன் பொருளை வைத்து இழக்கும் வன்கண்ணன் ஆவான். வறியவர்க்குக் கொடாமல் தானே தனித்து உண்ணுதல், பிறரிடம் சென்று

இரத்தலினும் இழிவானது. சாவு போன்ற கொடியது ஒன்றில்லை; வறியவர்க்கு ஒன்று கொடுக்க முடியாத போது சாதல் இனிமை பயக்கும். அஃதாவது, இறப்பவனுக்குக் கொடுக்க முடியாத நிலை ஒருவனுக்கு ஏற்படுமாயின், அந் நிலையில் அவன் வாழ்தலை விட இறத்தலே நல்லது. ஏழை எளியவர்க்கு உதவும் மனப்பான்மை இல்லாதவன் சமுதா யத்தில் இருப்பதை விட இறந்துபடுதல் நல்லது என்பது வள்ளுவர் கருத்து.

புகழ்

வறியவர்க்கு வழங்கலும் அதனால் புகழ் உண்டாக வாழ்தலும் வாழ்க்கை' எனப்படும். அப்புகழைத் தவிர மனிதன் பெறத்தக்கது வேறொன்றுமில்லை. வறுமையால் இறப் பார்க்குக் கொடுப்பதால் வரும் புகழே உலகத்தில் நிலைத்து நிற்பது. அத்தகையவன் அனைவராலும் வரவேற்கப்படுவான். ஈகையாற் புகழ் எய்தாதவனை மக்கள் இழித்துப் பேசுவர். ஈகையால் வரும் புகழ் பெறாதவரை, அவர் மறைந்த பிறகும் உலகத்தார் இகழ்ந்து பேசுவர். ஆதலால் தம்மிடம் வசை உண்டாகாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவராவர்.

இல்வாழ்க்கை

இங்ஙனம் வாழ்க்கைத் துணைநலம் முதலாகப் புகழ் ஈறாக உள்ள அறநெறிகளிற் பிழையாமல் இல்வாழ்க்கை நடத்து பவரே, இல்வாழ்க்கையால் வரும் பயனை அடைபவராவர். மனைவியோடு இல்வாழ்க்கையில் இருப்பவனே சுற்றத்தாரால் துறக்கப்பட்டவருக்கும். வறியவர்க்கும், நாதியற்றவர்க்கும் துணையாவான். இம்மூவகையாரையும் காத்தல் அவன் கடமையாகின்றது. குடியில் தோன்றி இறந்த முன்னோரை நினைவு கூர்தல் இல்லறத்தானது கடமை: தனக்கு வாழ்வளித்த இறைவனைப் போற்றுதல் இல்லறத்தான் கடமை. தன்னினும் எளியராய்த் தன் உதவி தேடிவரும் உறவினர்க்கு உதவலும் அவன் கடமையாகும். இல்லாழ்வான் இக்கடமைகளிலிருந்து தவறலாகாது. இவற்றிற்கு அன்பு அடிப்படையாகும். அன்பு இல்வாழ்க்கையின் பண்பாகும்; அறவுணர்ச்சி இல் வாழ்க்கையின் பயனாகும். இவற்றை உணர்ந்து செயலாற்று வோர் இல்லற இன்பத்தைக் குறைவின்றி அடைவர். இத்தகைய இல்வாழ்க்கை தவவாழ்விலும் அடிப்படை.

சமுதாய வாழ்விற்கு இல்வாழ்க்கையே அடிப்படை. இதுவே அறநூல்களால் சிறப்பித்துச் சொல்லப்படுவது. மேற்சொன்ன நெறிகளில் தவறாது இல்லறத்தில் வாழ்பவன் இந்நிலவுலகில் வாழ்பவனேயாயினும். மேல் உலகில் வாழும் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுவான்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும். (குறள், 50)

துணைநூற்பட்டியல்

1. திருக்குறள் உரை

முத்தமிழறிஞர் மு.கருணாநிதி

2. திருக்குறள் உரை

முனைவர் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள்

3. திருக்குறள் உரை

மு.வரதராசனார்

4. திருக்குறள் உரை
வ.உ.சிதம்பரனார்

5. திருக்குறள் உரை
கவிஞர் வைரமுத்து

© 2026 தகைசால் தமிழறிஞர் அரிமா முனைவர் ச.அய்யர், எழுத்தாளர் தொல்லியலறிஞர். This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 628–634
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

முனைவர் ம. சுந்தரமூர்த்தி

மனித வாழ்வியலில் நாக வழிபாடு*, ஆய்வுச்சுருக்்கம்

Naga Worship in Human life

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: மனித வாழ்வியலில் நாக வழிபாடு — drmsundaramoorthi@gmail.com

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00111	

Abstract / ஆய்வுச்சுருக்கம்

From ancient times to the present day, Naga worship has existed among various ethnic groups around the world. People of each nation have adopted different names and practiced Naga worship in diverse ways. Particularly in South India, a tropical region, temples dedicated to Nagas, along with rituals and votive offerings, continue to be observed in many places. This article highlights the significance of Naga worship in Tamil Nadu, especially in the Kongu region, which largely comprises Kurinji and Mullai landscapes. In the Kongu region, which is abundant with folk deity worship, Naga temples and Naga sculptures are found in many places and are still worshipped by a large number of people today. This article is structured to explore the importance and underlying significance of Naga worship in the Kongu region.

How to cite / மேற்கோள் காட்டும் முறை: வழிபாடு, ம. வா. நா., & ஆய்வுச்சுருக்்கம் (2026). முனைவர் ம. சுந்தரமூர்த்தி. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 627–633. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8587

மனிதன் ஆதிகாலந்தொட்டு இயற்கையை வழிபட்டு வந்தான். அவ்வாறு வழிபடக் காரணம்இ இயற்கையைக் கண்டு ஏற்பட்ட பயம்இ வியப்பு எனலாம். அவ்வழியே சூரியன்இ காற்றுஇ பாம்பு என அவன் வழிபாடு தொடர்ந்தது. புற்றுகள் கோயிலாக மாறின. நாக தேவதைகள் பற்றிய கதைகள் பிறந்தன. நாகர்இ நாகலோகம் பற்றியெல்லாம் புராணங்களும் இதிகாசங்களும் பல செய்திகளைக் கூறின. நாகம் என்பதற்கு நல்ல பாம்புஇ ஆகாயம்இ யானைஇ நாகலோகம்இ மலைஇ குரங்குஇ புன்னைஇ நாவல்மரம் ஆகிய அருஞ்சொற்களை பழந்தமிழ் அகராதிகள் குறிப்பிடுகின்றன. உலகம் முழுவதும் நாகவழிபாடு பரவிக் கிடந்தது. நம் தமிழகத்திலும் குறிப்பாகக் கொங்கு நாட்டிலும் நாகவழிபாடு அமைந்த விதத்தைக் காண்போம்.

உலகநாடுகளில் நாகவழிபாடு

உலகின் பல பாகங்களிலும் பாம்பு நீர்வளம்இ நீடித்த ஆயுள்இ நிறைந்த அறிவு இவற்றைத் தரும் தெய்வமாக எண்ணி வணங்கப்படுகிறது. எகிப்திய நாடுகளில் பாம்பு வளமையின் சின்னமாகக் கருதப்படுகிறது. ‘ஈஜோ’ என்ற நாக கண்ணிகை வழிபாடு சிறப்பானதாகும். நைல் நதிப் பிரதேசங்களில் காணப்படும் இவ்வகை

நல்ல பாம்பின் நாக்குகளால் தான் கிளியோபாட்ரா தன் உயிரை மாய்த்துக்கொண்டாள் என்கிறது வரலாறு.

பழமை வாய்ந்த கிரேக்கர்களும்இ ரோமானியர்களும் பாம்புகளைஇ கடவுளின் மண்மீதான அவதாரம் என்று கருதினர். கிரேக்கக் கடவுளான ஜீயுஸ்இ உலகத்திலுள்ள ஜீவன்களைச் சந்திக்க விரும்பும்போது பாம்பு உருவம் எடுத்து வருவதாக ஐதீகம் வழங்குகிறது. அமெரிக்க நாடுகளில்இ தென் மேற்குப் பகுதிகளில் வசிக்கும் அமெரிக்க இந்தியர்கள் பாம்பு நடனத்தை மிகப் புனிதமாக மதிக்கின்றனர். ‘ஹோபி எனும் இந்த நடனம் வளமையின் சின்னமாகவே கருதப்படுகின்றது. சீனர்களோ ‘டிராகன்’ என்ற இராட்சத நாகத்தைத் தங்கள் அரச இனத்தைக் காப்பாற்றும் மெய்க் காவலனாக உருவகப்படுத்தியும்இ போரில் வெற்றி தரும் வீரச் சின்னமாகவும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்தியாவில் பாம்பு வழிபாடு

இந்தியப் புராணங்கள் நாகங்களைப்பற்றிப் பல செய்திகளைக் கூறுகின்றன. அக்ஷட நாகங்கள் எனப்படும் எட்டு நாகங்களான அனந்தாஇ வாசுகிஇ கார்க்கோடன்இ பிங்களகன்இ சங்காஇ பத்மஇ மகாபத்மஇ தவுகன் என்பன உயிருடன் உள்ளதாகவே மக்கள் இன்றும் நம்பி வருகின்றனர்.

மொஹஞ்சதாரோஇ ஹரப்பா முதலிய இடங்களில் சிந்துவெளி நாகரீகம் பரவியிருந்த காலத்திலேயேஇ ஒரு சமூகத்தினர் நாக வழிபாடு செய்து வந்துள்ளார்கள் என்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மிகச்சிறந்த போர் வீரரான அலெக்ஸாண்டர் இந்தியா வந்தபோது நாகபூஜை செய்யும் பிரிவினரைத் தட்சசீலத்தில் சந்தித்துள்ளார். பிரபல வரலாற்று ஆசிரியரான அபுல்பஸகல் 700 இடங்களில் கற்களில் செதுக்கப்பட்டுக் கடவுளாக வழிபாடு செய்யப்பட்ட நாகசிலைகளைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார். முஸ்லீம் அரசர்களின் படையெடுப்பு வரை காபூல் முதல் காக்ஷ்மீர் வரை மக்கள் நாகத்தைக் கடவுளாக வணங்கி வந்திருக்கின்றனர்.

தெய்வங்களும் பாம்புகளும்

பூமி உருண்டையையே ஆதிசேடன் என்னும் பாம்பு தாங்கியுள்ளதாகப் புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமான் பாம்பைத் தன் தலையில் வைத்துள்ளார். விக்ஷ்ணுவோ பாம்புப் படுக்கையில் படுத்துள்ளார். அரசமரத்தடிப் பிள்ளையாரின் இரு புறங்களிலும் பாம்பு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான அம்மன் கோவில்களிலும் பாம்புப் புற்றுகள்இ சிலைகள் வழிபடப்படுகின்றன. புத்தமதம்இ சமண மதம் ஆகியவற்றிலும் பாம்பு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. நவக்கிரகங்களில் இராகுஇ கேதுக்கள் பாம்புகளே ஆகும்.

கேரளாவும் பாம்பு வழிபாடும்

தமிழகத்திலும் கேரளாவிலும் மிகச் சிறப்பாகப் பாம்பு வழிபாடு இடம்பெற்றுள்ளது. கேரளாவைப் பரசுராமர் உருவாக்கினார் என்று ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு. அவ்வாறு உருவாக்கும் போது பாம்புகள் அங்கு ஏராளமாக இருந்தன. அதனால் அங்கு வர மற்றவர்கள் பயந்தனர். அப்போது பரசுராமனின் தவத்தால் பாம்புகள் அகன்றன. ஆனாலும் வாசுகி என்ற பாம்பின் வேண்டுகோளின்படி ஒவ்வொரு கிராமத்தின் ஓரத்திலும் புதரான இடத்தில் கல்லில் செதுக்கிய நாக உருவங்களைப் பிரதிக்ஷ்டை செய்தனர். இவைகளை உள்ளூர் மக்கள் ‘காவு’ என்பர். இங்கு வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கேரளாவில் உள்ள மன்னாரசாலா கோயில் நாகவழிபாடு செய்வோர்களிடையே பெருமை பெற்றுள்ளது. வருடந்தோறும் புரட்டாசி – ஐப்பசி மாத ஆயில்ய நட்சத்திரத்தில் வரும் நாட்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடித் திருவிழாக் கொண்டாடுகின்றன்ா. இந்த ஆலயத்தில் பெண்ணே பூசாரியாக உள்ளது தனிச் சிறப்புடையதாகும்.

தமிழகமும் நாக வழிபாடும்

இந்தியாவிலேயே நாகத்தின் பெயரை உடைய ஒரே ஒரு ஊர் நாகர்கோவில் எனலாம். பாம்புகளால் நிலம் வளம் பெறுகிறது என்ற நம்பிக்கை தமிழகத்தில் நிலவி வருகிறது. தமிழ்நாட்டில் சிறப்பான பாம்பு ஆலயங்களில் பூசாரிகளாக இருப்பவர்களில் சிலர் படையாச்சி சமூகத்தைப் போன்ற விவசாயக் குடும்பத்தினர் ஆவர்.

“பாம்புஉறை மருங்கின் ஓங்குசினை நீழல்
பலிபெறு வியன்களம் மலிய ஏற்றி”
(பெரும்பாண்.இ232:233)

என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகள் மருதமர நிழலிலுள்ள பாம்புகளுக்குப் பலிகொடுத்தமையைக் குறிப்பிடுகின்றன.

தமிழகத்தில் ஒவ்வொரு கோவில் குளக்கரை அல்லது அரச மரத்தடியில் பாம்பு உருவம் செதுக்கப்பட்ட கற்கள் நடப்பட்டு வழிபாடுகள் நடந்து வருவதைக் காணலாம். பெரும்பாலும் நாகங்கள் குடியிருக்கும் புற்றுகள் கோவில்களாகவே மாறுகின்றன. இப்புற்றில் வாழும் பாம்புகளுக்குப் பால் வார்க்கப்படுகின்றன. வீட்டின் சுவர்களில் நல்லபாம்பின் உருவம் வரைந்தும் வணங்குவதுண்டு. புற்றுகளில் சந்தனம்இ மஞ்சள்இ குங்குமங்களால் கோலமிட்டு வணங்குகின்றனர்.

நாகர் கோயிலில் உள்ள நாகராஜர் கோவிலில் ஐந்துதலை நாகப்படிமமே கோயில் கருவறைத் தெய்வமாக உள்ளது. கன்னியாகுமரியில் உள்ள மகேந்திர மலையைஇ இராமாயண ஆசிரியர் வான்மீகிஇ நாகர் தம் உறைவிடம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாகர்கோவில் நாகராஜர் கோயிலில் இன்றும் சிறப்பான வழிபாடுகள் நடைபெறுகின்றன. மூலப்படிமத்திற்கு எதிரே உள்ள இரண்டு மரங்களின் அடிகளில்இ நாக உருவங்கள் நிரம்ப உள்ளன. கூரையே கோயில்இ கோயில் சுவர்களும் மண்சுவரே. பால் காணிக்கையாகத் தரப்படுகிறது. பலர் மிளகுஇ உப்புஇ கொண்டுவந்து கொட்டி வேண்டிக்கொள்வர். ஞாயிற்றுக்கிழமைகளில் மூலவருக்குப் பால் முழுக்கு செய்வர். பக்தர்கள் வேண்டிய செயல் நிறைவேறும்போது மரத்தால் ஆன உருவங்களைச் செய்து கொண்டுவந்து கோயிலுக்கு வைப்பர். இங்கு மண்ணே பிரசாதமாகத் தரப்படுகிறது. இக்கோயில் சமணக்கோயில் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். இங்குப் பல சமணக் கல்வெட்டுக்கள் உள்ளன.

செங்கை மாவட்டத்தில் பெரியபாளையம் என்ற ஊரில் நாகாத்தம்மன் கோயில் இருந்துள்ளது. குளித்தலை வட்டம் புதூர் அருகே ஒரு மலை. அதில் பாம்புருவம் உள்ளது. இதை நாககன்னி என்று வழிபடுகின்றனர்.

கொங்கில் நாக வழிபாடு

சிறுதெய்வ வழிபாடுகள் மிகுந்த பகுதி கொங்கு நாடாகும். இங்கே ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய தலங்கள் மிகக் குறைவு. குலதெய்வ வழிபாடு மிகுந்த கொங்கில் நாகவழிபாடும் நீண்டகாலமாக நிலவி வருகிறது.

திராவிட இனத்தவர் பன்னெடுங்காலமாகவே ராகுஇ கேது ஆகியவற்றைப் பாம்பின் உருவம் கொடுத்தே வழங்கி வந்தனர். கொங்கு கிராமங்களில் பலவிடங்களில் நாகருக்குக் கோயில்கள் அமைந்துள்ளன. கரூர் வலங்கையம்மன் நாகாலயம் குறிப்பிடத்தக்கதாகும்.

பழனி வட்டத்திலுள்ள வாகரைக் கிராமத்தில் நாகருக்குத் தனிக் கோயில் உள்ளது. இக்கோயிலின் அடியில் பணம் (தங்கக் காசுகள்) ஏழு அண்டாக்களில் புதைத்து வைத்திருப்பதாக ஒரு நம்பிக்கை நிலவுகிறது. ஐவர்மலைஇ பழநியிலிருந்து மேற்கில் சுமார் **16** கி.மீல் அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மலையில் **16** சமணத் தீர்த்தங்கரர் உருவங்கள் குகைத்தளத்தில் செதுக்கப்பட்டுள்ளன. பார்சுவ நாதருக்கு நாகம் குடைபோல் காட்டப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.பத்தாம் நூற்றாண்டாகும்.

தாளவாடி மலைப் பகுதிகளில் குறிப்பாக ஹோரை என்ற இடத்தில் நடுகற்களிடையே நாக சிற்பங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. பல இடங்களில் கோயில்களில் வேண்டுதலுக்காகப் பாம்பு உருவங்கள் செய்து வைப்பது வழக்கமாகும்.

அவிநாசி வட்டத்திலுள்ள சோமனூரில் வாழைத்தோட்டத்து ஐயன் கோயில் அமைந்துள்ளது. கோயில் மூல ஸ்தானத்தில் பெரிய கிளுவமரம் மட்டும் உள்ளது. அம்மரத்தை ஒட்டி ஒரு புற்று உள்ளது. அதைப் பாம்புப் புற்று என்கின்றனர். கோயிலுக்கு வரும் பக்தர்கள் புற்று மண்ணையே பிரசாதமாகப் பெறறுக் கொள்கின்றனர். நஞ்சு தொடர்பான நோய்கள் வாழைத்தோட்டத்து ஐயன் கோவிலில் வழிபட்டால் நீங்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே வேரூன்றியுள்ளது. அதனால் தேங்காய்இ பழம்இ கற்பூரம்இ வைத்து வழிபடுகின்றனர்.

திருச்செங்கோட்டில் நாக வழிபாடு

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடு பழம்பெருமை படைத்தது. இவ்வூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெருங்கற் சின்னங்கள் காணப்படுகின்றன. நாகேசுவரர் ஆலயத்தை வேட்டுவர் தலைவன் **ஆறை இம்முடி அல்லால இளையான்** என்பவன் கட்டியுள்ளான்.

திருச்செங்கோட்டு மலைமேல் சிவாலயத்திற்குச் செல்லும் வழியில் இருநூறு அடி உயரத்தில் உள்ள மலைச்சரிவில் அறுபதடி நீளத்திற்கு ஐந்துதலைநாகம்இ மல்லாந்த நிலையில் மலைமேல் உடலை நீட்டிப் படுத்திருப்பது போல ஒரு பாம்பு உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் உள்ள இடத்திற்கு ‘நாகபள்ளம்’ என்ற பெயர் வழங்கப்படுகிறது. இதனை ஒட்டி இவ்வூரே அரவகிரிஇ நாககிரிஇ நாகாசலம்இ சர்ப்பகிரிஇ உரகவெற்புஇ கபசெவி குன்றம் என்றெல்லாம் இலக்கியங்களில் அழைக்கப்படுகிறது.

புதன்இ வியாழன்இ ஞாயிறு ஆகிய நாட்களில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். ஞாயிறே மிகுந்த சிறப்புடைய நாளாகும். நாகரை வழிபடுவோர்கள் வேண்டிக்கொண்டு நாகம் போன்ற உருவங்களைப் பதிக்கச் செய்வர். இம்மலையடிவாரம் முழுவதும் பாம்புருவங்களைக் காணலாம். குங்குமம்இ பூக்கள் வைத்து வழிபடுவதும் உண்டு.

ஆடி அம்மாவாசை கழித்த சுக்கிலபட்ச சதுர்த்திஇ பஞ்சமி நாட்கள் நாகவழிபாட்டிற்குச் சிறப்பானவை. இங்கு பலியிட வருவோர் சேவல் அறுப்பர். அப்போது அதற்கு மஞ்சள்நீர் தெளித்து ‘துளுக்க’ வைத்து அறுப்பார்கள்.

துளுக்காவிட்டால் கெட்ட சகுனமாக எண்ணுவர்.

குழந்தை இல்லாத பெண்கள் நாகத்தைக் கல் உருவில் செய்து ஆறுமாதம் தண்ணீரிலும் ஆறுமாதம் நெய்யிலும் வைத்த பிறகுஇ விசேசபூசை செய்து அரசமரத்தடியில் பிரதிட்டை செய்து வழிபடுவர்.

நாக வழிபாட்டில் பலியிட்டுப் படையல் செய்யும் போதுஇ பலியிட்ட சேவலின் இறைச்சியை அங்கேயே சமைத்துச் சாப்பிடுவார்கள். மிச்சத்தை வீட்டிற்குக் கொண்டு செல்வது மரபில்லை. இது தெளரா என்ற ஆப்பிரிக்கப் பகுதி மக்களிடமும் உள்ள பழக்கமாகும்.

திருச்செங்கோட்டில் உள்ள நாகரை வழிபட்டால் கைகால் முடக்கு நோய்கள் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை உள்ளது. அதை அப்பகுதியில் வழங்கும் நாட்டுப்பாடலானஇ

‘காக்காய்க்குப் பூசை செஞ்சு கையொடிஞ்சுப் போச்சு

நாகருக்குப் பூசை செஞ்சு கைநல்லாப் போச்சு”

என்பது காட்டுகிறது.

நாஞ்சில் நாடும் கொங்கு நாடும்

நாஞ்சில் நாட்டவரும் கொங்கு நாட்டவரும் நாக வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். நாகத்தின் பெயரால் எழுந்த நாகர் நாஞ்சில் நாட்டில் உள்ளது. நாகர்கோயில் நாகரசர் ஆலயத்தில் ஆறுஅடி உயரத்தில் படமெடுத்த கோலத்தில் காட்சி தரும் நாகர் சிலைகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. அதேபோன்று கொங்கு நாட்டிலுள்ள திருச்செங்கோட்டு மலைச்சரிவில் 60 அடி நீளம் கொண்ட ஒரு பாம்பின் சிலை புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. குமரி மண்ணில் ஏழூர் செட்டிமார் சமுதாயத்தினர் ஒடுப்புரை என்ற இடத்தில் பாம்புச் சிலையைப் பொங்கலிட்டு வழிபடுவது போலத திருச்செங்கோட்டிலும் பாம்புச் சிலையைப் பொங்கலிட்டு வழிபடுகின்றனர். இரண்டு இடங்களிலும் பாம்பின் உருவைக் கல்லிலே செதுக்கி நேர்த்திக் கடன் முடிக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

கொங்கு நாட்டு விளக்கு

கி.பி.**7இ8இ9** ஆம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டு மக்கள் நாஞ்சில் நாட்டிலுள்ள நாகராசர் ஆலயம் வந்து விளக்கேற்றி வழிபாடு செய்ததாக ஒரு வரலாறு உண்டு. நாகர்கோயில் நாகராசர் ஆலயத்தில் ஆவணி மாதக் கடைசி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் திருவிளக்கு அலங்காரம் இன்றும் ‘கொங்கு நாட்டு விளக்கு’ என்றுதான் அழைக்கப்படுகின்றது.

கொங்கில் பிற இடங்கள்

கோவைக்கு அருகில் உள்ள பேரூர் மிகப் பழமையான ஊராகும். இங்கு கி.பி.**7** ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகர் சிற்பம் ஒன்றுள்ளது. கொங்கு நாட்டிலுள்ள விஜய மங்கலம்இ போளுவாம்பட்டி முதலிய இடங்களிலுள்ள திருநாகேஸ்வரமுடையார் கோயில்கள் நாகவழிபாட்டுடன் தொடர்புடையவை ஆகும். போளுவாம்பட்டிக்கு அமரபுயங்க நல்லூர் என்ற பெயர் முன்னர் வழங்கி வந்ததை இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதில் ‘புயங்க’ என்பது நாகம் எனப் பொருள்படும். அதனால் இவ்வூருக்கு நாகவழிபாட்டின் அடிப்படையில் இப்பெயர் ஏற்பட்டுள்ளது.

கொடுமுடி ஆற்றிலும்இ விஜய மங்கலத்திலும் பண்டைய நாக உருவங்கள் கிடைத்துள்ளன. தற்போது பேரூரில் மிகவும் தொன்மையான சுடுமண் நாக உருவம்

கிடைத்துள்ளது. கொங்கு நாட்டில் அய்யன் கோவில்கள் நாகவழிபாட்டுத் தலமாக இப்போதும் வழிபடப்பட்டு வருகிறது. கொங்கு நாடு முழுவதும் உள்ள கோயில்களில் நாக வழிபாடு இல்லாத கோயில்களே இல்லை எனலாம். கொண்டலாம்பட்டி நாட்டாமங்கலம் சென்றாயப் பெருமாள் கோயிலில் மூலவர் பாம்புப் புற்றுதான்.

பாம்பின் பெயர்களும்இ நம்பிக்கைகளும்

கொங்கில் உள்ள ஊர்ப் பெயர்கள் பலவும் பாம்பை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அரவக்குறிச்சிஇ நாகதேவன் பாளையம்இ நாகமலை போன்ற ஊர்களைக் கொங்கில் காணலாம். நாகசாமிஇ நாகவல்லிஇ நாகராசன்இ நாகம்மாள் எனப் பெயர்களும் காணப்படுகின்றன. கொங்கில் நெசவுத்தொழில் செய்யும் தேவாங்க இனத்தவர் நாகவழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்கள். அவர்கள் திருமண விழாவில் மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டுவதற்கு முன்னர் ‘நாகவல்லி’ என்ற ஒருவகைத் தாலியினை மணமகளின் தாய் மணமகளுக்குச் சூட்டுவது வழக்கமாகும். நாஞ்சில் நாட்டைப் போலவே குறிப்பாகத் தேவாங்க இனத்தவரிடையே நாகராசன்இ நாகவல்லிஇ நாகம்மாள் போன்ற பெயர்களைக் கொண்டவர்கள் பலருண்டு.

பாம்புக் கடிக்கு மந்திரிப்பவர்களை கொங்கு நாட்டின் பலபகுதிகளிலும் காணலாம். பாம்புகள் வெப்பமண்டலத்தில் உள்ளன. குளிர்நாடுகளில் இருக்காது. அதனால் வெள்ளையர் நாட்டில் பாம்புவழிபாடு இல்லை. ஆனால் பாம்புகள் நிறைந்த முல்லைப்பகுதியான கொங்கு நாடு முழுவதுமே பாம்பு பற்றிய நம்பிக்கைகள் மிகுதி. நாகப்பாம்பைக் கொன்றால், குழிதோண்டி அதில் பாலூற்றி மஞ்சள்துணி, காசு ஆகியனவற்றையும் போட்டுப் பாம்பைப் புதைப்பதுண்டு. எரிப்பதும் உண்டு. குறிப்பாகக் கொங்கில் நாகத்தைக் கொண்றவன் ஆற்றில் இறங்கி தலையில் காசு வைத்து நீரில் மூழ்கி தன் தீட்டைக் கழிக்கும் பழக்கம் இருந்தது.

வளமைக் குறியீடு

தமிழ்க் கலாச்சாரத்தில் பாம்பு வளமை மற்றும் செழிப்பின் குறியீடாகக் கருதப்படுகின்றது. விவசாயிகளில் பயிர்களை அழிக்கும் எலிகளைப் பாம்புகள் வேட்டையாடுவதால் அவை விளைச்சலைக் காக்கும் காவலனாகக் கருதப்படுகின்றன. இந்துமத புராணங்களில் பாம்புகள் (நாகங்கள்) நீர்நிலைகள் ஆறுகள் மற்றும் மழையோடு தொடர்புடையவையாகக் கருதப்படுகின்றன. நீர்வளம் பெருகினால் மட்டுமே விவசாயம் செழிக்கும் என்பதால் பாம்பு வளமையின் குறியீடானது. பாம்பு தன் உடலின் பழையதோலை உரித்துவிட்டு புதிய தோலுடன் வெளிவருகின்றது. இது மறுபிறவிஇ நீடித்த ஆயுள் மற்றும் இளமையைப் புதுப்பித்தல் ஆகியவற்றின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. குழந்தை இல்லாதவர்கள் தங்களுடைய வம்ச விருத்திக்காகவும் குடும்ப வளத்திற்காகவும் நாகதேவதையை வழிபடும் வழக்கம் தமிழகத்தில் பரவலாக உள்ளது. பாம்புகள் பிணைந்திருக்கும் நிலையில் வழிபாடுதல் மகப்பேற்றினைத் தருவதாக நம்பப்படுகின்றது. பாம்புகளுக்கு பிற உயிரினங்களை விட அதிக எண்ணிக்கையில் இனப்பெருக்க உறுப்புகள் இருப்பதாக நம்பப்படுகிறது. எனவே அதனை வணங்கும் செயல்முறையானது வளமையைக் கூட்டுவதாக உள்ளது.

பொதுவாக ஆதிமனிதர்களிடம் இருந்த பாம்பு வழிபாடு இன்னும் கொங்கில் பரவலாகக் காணப்படுகிறது. சடங்குகள் இன்னும் பின்பற்றப்படுகிறது. அதையொட்டிய நம்பிக்கைகள் சடங்குகள் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதனையும் அறிய முடிகிறது.

துணைநின்ற நூல்கள்

1. பெரும்பாணாற்றுப்படை - திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

2. முனைவர் ம. சுந்தரமூர்த்திஇ கொங்கு கோயில்கள்இ பல்லவி பதிப்பகம்இ ஈரோடு. பதிப்பு – 2008.

3. கு. மகுடீஸ்வரன்(ப.ஆ)இ கொங்கு மானிடவியல்இ கோபி கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை வெளியீடுஇ பதிப்பு – 2007.

© 2026 மனித வாழ்வியலில் நாக வழிபாடு, ஆய்வுச்சுருக்்கம். This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.
Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (October 2026), pp. 635–641
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

சங்க இலக்கியப் புறநானூற்றில் வெளிப்படும் தலைமைத்துவப் பண்புகளும் இன்றைய கல்வித் தலைமைத்துவத்திற்கான அவற்றின் பொருத்தமும்

Author*

Received / பெறப்பட்டது	Revised / திருத்தப்பட்டது	Accepted / ஏற்கப்பட்டது	Published / வெளியிடப்பட்டது
–	–	–	16 October 2026
DOI –		Article ID / கட்டுரை எண் TAJP-2026-00112	

ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வுக் கட்டுரை சங்க இலக்கியமான புறநானூற்றில் வெளிப்படும் தலைமைத்துவப் பண்புகளை அடையாளம் கண்டு, அவை இன்றைய கல்வித் தலைமைத்துவத்துடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதை ஆராய்கிறது. அரசரின் அறநெறி, நீதி, பொதுநலப் பொறுப்பு, கொடை, ஆலோசனையை மதித்தல், துணிவு மற்றும் மக்களுடன் கொண்ட உறவு ஆகியவை முக்கிய கருப்பொருள்களாகக் கொள்ளப்பட்டன. தரமான விளக்கவியல் அணுகுமுறையின் கீழ் புறநானூற்றில் தலைமை சார்ந்த கருத்துகள் உள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடல்களும், அவற்றைப் பற்றிய ஆய்வுகளும் நோக்கமுடைய மாதிரியாகப் பயன்படுத்தப்பட்டன. கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்வு மூலம் கிடைத்த கருத்துகள் சேவகர் தலைமைத்துவம், மாற்றுத் தலைமைத்துவம் மற்றும் மதிப்புசார் கல்வித் தலைமைத்துவக் கோட்பாடுகளுடன் ஒப்பிடப்பட்டன. புறநானூற்றின் தலைமைச் சிந்தனைகள் நவீன கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாகப் பிரதியிடப்பட வேண்டியவை அல்லாதபோதிலும், நீதி, சேவை, பொறுப்புணர்வு மற்றும் பொதுநல நோக்கு போன்ற பண்புகள் கல்வித் தலைவர்களின் ஒழுக்கநெறி நடைமுறைக்கு பயனுள்ள பண்பாட்டு அடித்தளமாக அமையக்கூடும் என ஆய்வு முடிவுறுகிறது.

தமிழ் திறவுச்சொற்கள்: புறநானூறு, தலைமைத்துவம், கல்வித் தலைமைத்துவம், அறநெறித் தலைமை, சேவகர் தலைமைத்துவம்.

Abstract

This research article examines leadership qualities represented in Purananuru, a major work of Sangam literature, and considers their relevance to contemporary educational leadership. The study focuses on ethical responsibility, justice, public welfare, generosity, consultation, courage, and relationships between leaders and communities. A qualitative interpretive design is adopted, using purposively selected leadership-related Purananuru texts together with relevant scholarly literature. Thematic content analysis is used to identify recurring leadership themes and compare them with servant, transformational, and values-based educational leadership. The analysis

suggests that Purananuru should not be transferred uncritically into modern institutions; however, its emphasis on fairness, service, responsibility, and collective welfare offers a culturally grounded perspective for reflecting on ethical leadership practice.

English Keywords: Purananuru, Leadership, Educational Leadership, Ethical Leadership, Servant Leadership

How to cite / மேற்கோள் காட்டும் முறை: Author (2026). சங்க இலக்கியப் புறநானூற்றில் வெளிப்படும் தலைமைத்துவப் பண்புகளும் இன்றைய கல்வித் தலைமைத்துவத்திற்கான அவற்றின் பொருத்தமும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), 634–640. https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8589

1. அறிமுகம்

சங்க இலக்கியம் தமிழ்ச் சமூகத்தின் பழமையான அரசியல், சமூக மற்றும் அறநெறிச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் முக்கிய இலக்கிய மரபாகும். அதில் புறநானூறு, போரியல் அல்லது அரசர்ப் புகழ் மட்டுமன்றி, அரசனின் கடமை, குடிமக்களின் நலம், கொடை, அறம், நீதி மற்றும் மனித உறவுகள் குறித்து பல்வேறு கருத்துகளை முன்வைக்கிறது. புறநானூற்றில் அரசன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் குறித்த காட்சிப்படுத்தல்கள் தலைமைத்துவத்தை அதிகாரம் என்ற ஒரே கோணத்தில் அல்லாது, பொறுப்பு மற்றும் பொதுநல சேவை என்ற கோணங்களிலும் புரிந்துகொள்ள வழியளிக்கின்றன. Ali (2021) புறநானூற்றில் அரசரின் உருவாக்கத்தை ஆராய்ந்துள்ளதுடன், M. (2022) அரசர்களின் அரசியல் செயல்பாடுகளில் அறநெறிக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறார்.

இன்றைய கல்வி நிறுவனங்களிலும் தலைமைத்துவம் நிர்வாகத் திறனைத் தாண்டி, நியாயமான தீர்மானம், ஆசிரியர் பங்கேற்பு, மாணவர் நலம், மதிப்புசார் வழிநடத்தல் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது. மாற்றுத் தலைமைத்துவம் மற்றும் சேவகர் தலைமைத்துவம் குறித்த சமகால ஆய்வுகள் கல்வித் தலைவர்கள் பங்கேற்பு, உறவு, சேவை மற்றும் மதிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டியதை வலியுறுத்துகின்றன (Aboramadan, Dahleez and Hamad, 2020; Alainati, Almonawer and Al-Hammad, 2023). இருப்பினும், புறநானூற்றின் அரசியல் அறம் மற்றும் தலைமைச் சிந்தனைகளை இன்றைய கல்வித் தலைமைத்துவத்துடன் முறையாக ஒப்பிட்டு விளக்கும் ஆய்வுகள் வழங்கப்பட்ட இலக்கியத் தொகுப்பில் குறைவாகத் தோன்றுகின்றன. எனவே, வரலாற்று வேறுபாடுகளை உணர்ந்தபடியே புறநானூற்றின் தலைமை மதிப்புகள் நவீன கல்வித் தலைமைத்துவத்திற்கு எந்த அளவில் பொருத்தமுடையவை என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் மையப் பிரச்சினையாகும்.

இக்கட்டுரையின் முக்கியத்துவம் இரு நிலைகளில் அமைந்துள்ளது. முதலில், தமிழரின் பாரம்பரிய இலக்கியத்தில் தலைமை குறித்த சிந்தனை எவ்வாறு அறம் மற்றும் சமூகப் பொறுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை கல்வியியல் கோணத்தில் மீள்படிக்கிறது. இரண்டாவது, மேற்கத்திய நிர்வாகக் கோட்பாடுகளை மட்டும் சாராமல், உள்ளூர் பண்பாட்டு அறிவிலிருந்து கல்வித் தலைமை பற்றிய சிந்தனை வளத்தை உருவாக்கும் வாய்ப்பை ஆராய்கிறது. இதன் மூலம் பழமையும் புதுமையும் இடையிலான நேரடி சமமாக்கலைத் தவிர்த்து, பொருத்தமான மதிப்புகளை விமர்சனமாகத் தேர்ந்தெடுக்கும் அணுகுமுறை

முன்னிறுத்தப்படுகிறது.

2. இலக்கிய மீளாய்வு

புறநானூற்றை மையமாகக் கொண்ட ஆய்வுகள் அரசரின் தன்மை, அறநெறி, கொடை, மனிதநேயம் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை முக்கியமாகச் சுட்டுகின்றன. Ali (2021) அரசரின் இலக்கியப் பிரதிநிதித்துவத்தை கவனத்தில் கொண்டுள்ளதுடன், K. (2022) புறநானூற்றில் வாழ்க்கை நற்குணங்கள் எவ்வாறு பகிரப்படுகின்றன என்பதை ஆராய்கிறார். M. (2022) அரசரின் அரசியலில் அறத்தின் நிலையை மையப்படுத்துகிறார். R. (2022) அரசர், மக்கள் மற்றும் சான்றோர்கள் இடையிலான மனிதநேயப் பண்பாட்டை ஆராய்வது, தலைமைத்துவத்தை ஒருதலைப்பட்ச அதிகாரமாக அல்லாமல் உறவுசார் சமூகப் பொறுப்பாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. இவ்வாய்வுகளின் ஒட்டுமொத்தப் பொருள், சிறந்த தலைவரின் மதிப்பு அவரது ஆட்சிச் சக்தியால் மட்டுமல்ல, அவர் சமூகத்துடன் ஏற்படுத்தும் நீதியுள்ள மற்றும் அறமுள்ள உறவுகளாலும் தீர்மானிக்கப்படுகிறது என்பதாகும்.

சமகால கல்வித் தலைமைத்துவ இலக்கியத்தில் சேவகர் தலைமைத்துவம், மாற்றுத் தலைமைத்துவம் மற்றும் மதிப்புசார் தலைமைத்துவம் முக்கிய இடம் பெறுகின்றன. Aboramadan, Dahleez and Hamad (2020) உயர்கல்வியில் சேவகர் தலைமைத்துவம் கல்வியாளர்களின் ஈடுபாட்டுடன் தொடர்புடையது என்பதை ஆராய்ந்துள்ளனர். Canavesi and Minelli (2021) சேவகர் தலைமைத்துவ ஆய்வுகளின் பரந்த வளர்ச்சியை முறையான இலக்கிய மீளாய்வு மூலம் தொகுக்கின்றனர். Alainati, Almonawer and Al-Hammad (2023) கல்வியில் மாற்றுத் தலைமைத்துவ இலக்கியத்தை ஆய்வு செய்கின்றனர். மேலும் Effendi and Erb (2024) பள்ளி முதல்வரின் மனிதநேயப் பங்கை சேவகர் தலைமைத்துவத்துடன் இணைக்கின்றனர். இவ்வகை சமகால அணுகுமுறைகள் அதிகாரத்தின் உச்சியில் இருக்கும் ஒருவரை விட, பிறரின் வளர்ச்சி, நலன், பங்கேற்பு மற்றும் அமைப்பின் பொது நோக்கை முன்னிறுத்தும் தலைவரை மதிக்கின்றன.

சேவகர் தலைமைத்துவத்தில் தலைவர் முதலில் சேவை செய்பவராகக் கருதப்படுகிறார்; இதனால் பின்தொடர்பவர்களின் வளர்ச்சி, நம்பிக்கை, நலன் மற்றும் சமூக மதிப்பு முக்கியமாகின்றன. Adams, Gurr, Dunn and Feng (2025) கல்வி நிறுவனங்களில் சேவகர் தலைமைத்துவத்தை தனித்த ஆய்வுத் துறையாக அமைப்பதற்கான அறிவுத் தளத்தை விரிவுபடுத்துகின்றனர். கல்வி சூழலில் இவ்வகை அணுகுமுறை ஆசிரியரின் தொழில்முறை சுயமரியாதை, மாணவர் நலன் மற்றும் பரஸ்பர நம்பிக்கையை ஆதரிக்கும் தலைமைச் செயல்பாடுகளுடன் தொடர்புபடுத்தலாம். அதேபோல் மாற்றுத் தலைமைத்துவம் பகிரப்பட்ட நோக்கு, ஊக்குவிப்பு மற்றும் நிறுவன வளர்ச்சியை வலியுறுத்துகிறது. Fitriani, Dewi and Suharyati (2025) பல கல்வித் தலைமைத்துவக் கோட்பாடுகளை ஒருங்கிணைந்த கட்டமைப்பில் அணுகுவது, ஒரே மாதிரி எல்லா சூழல்களுக்கும் போதுமானதல்ல என்பதை நினைவூட்டுகிறது.

இதனால் புறநானூற்றில் வெளிப்படும் நீதி, சேவை, பொதுநலம், அறப்பொறுப்பு போன்ற கருத்துகளுக்கும் நவீன கல்வித் தலைமைத்துவத்தின் சில அடிப்படை மதிப்புகளுக்கும் கருத்தியல் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அதேவேளை, பழந்தமிழ் அரசாட்சியின் மரபுரிமை மற்றும் மன்னராட்சி சூழலை நவீன ஜனநாயகக் கல்வி நிர்வாகத்துடன் நேரடியாக ஒப்பிட முடியாது. இந்த வேறுபாட்டை

ஏற்றுக்கொள்வதே வரலாற்றுச் சிந்தனையை சமகாலப் பயன்பாட்டுடன் விமர்சனமாக இணைக்கும் அடிப்படையாகும்.

புறநானூற்றின் அரசர்ப் பண்புகள் பற்றிய ஆய்வுகளும் நவீன கல்வித் தலைமை ஆய்வுகளும் வெவ்வேறு வரலாற்று மற்றும் நிறுவனச் சூழல்களில் உருவானவை. எனவே ஒற்றுமைகளை மட்டும் தேடுவது ஆய்வை எளிமைப்படுத்திவிடும். மாறாக, எந்த மதிப்புகள் காலத்தைக் கடக்கும் அறநெறி முக்கியத்துவம் உடையவை, எந்த கூறுகள் மன்னராட்சி அதிகார அமைப்புக்கே உரியவை, எந்த கருத்துகள் நவீன கல்வியில் மாற்றிப் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதைக் கேட்பதே இவ்வாய்வின் விமர்சன அடித்தளமாக அமைகிறது.

3. ஆய்வு நோக்கங்கள்

1. இவ்வாய்வின் முதல் நோக்கம் தெரிவுசெய்யப்பட்ட புறநானூறு பாடல்களில் வெளிப்படும் முக்கிய தலைமைத்துவப் பண்புகளை அடையாளம் காண்பதாகும்.

2. இரண்டாவது நோக்கம் அவற்றை சேவகர், மாற்றுத் மற்றும் மதிப்புசார் கல்வித் தலைமைத்துவக் கருத்துகளுடன் ஒப்பிடுவதாகும்.

3. மூன்றாவது நோக்கம் வரலாற்று மற்றும் நிறுவல் வேறுபாடுகளை கருத்தில் கொண்டு, புறநானூற்றின் பொருத்தமான தலைமை மதிப்புகள் இன்றைய கல்வித் தலைமைத்துவ நடைமுறைக்கு வழங்கக்கூடிய பங்களிப்பை மதிப்பிடுவதாகும்.

4. ஆய்வு வினாக்கள்

1. தெரிவுசெய்யப்பட்ட புறநானூறு பாடல்களில் எந்த முக்கிய தலைமைத்துவப் பண்புகள் வெளிப்படுகின்றன?

2. அவை சமகால கல்வித் தலைமைத்துவக் கருத்துகளுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன?

3. அவற்றில் எந்த மதிப்புகள் இன்றைய கல்வித் தலைமைத்துவ நடைமுறையில் வரலாற்று வேறுபாடுகளை உணர்ந்தபடி பொருத்தமாகப் பயன்படுத்தப்படலாம்?

5. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு தரமான விளக்கவியல் மற்றும் ஒப்பீட்டுச் சிறப்புடைய ஆய்வு வடிவமைப்பைப் பயன்படுத்துகிறது. மாதிரியாக, அரசன், அறம், நீதி, கொடை, மக்கள் நலம், ஆலோசனை மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற தலைமைக்குறிய கருத்துகளைத் தெளிவாகக் கொண்ட புறநானூறு பாடல்கள் நோக்கமுடைய தேர்வு முறையில் அணுகப்படுகின்றன. இதனுடன் புறநானூற்றின் அரசர் உருவாக்கம், அறநெறி, நற்குணங்கள் மற்றும் மனிதநேயம் குறித்து வழங்கப்பட்ட ஆய்வுகள் துணைத் தரவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தரவு சேகரிப்பு ஆவண மற்றும் உரைப் பகுப்பாய்வு முறையைக் கொண்டது. தெரிவுசெய்யப்பட்ட இலக்கியக் கருத்துகள் நீதி, சேவை, பொறுப்பு, பொதுநலம், ஆலோசனை, துணிவு மற்றும் மனிதநேயம் போன்ற ஆரம்பக் குறியீடுகளின் கீழ் வாசிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன. பின்னர் அவை கருப்பொருள் உள்ளடக்கப் பகுப்பாய்வின் மூலம் பரந்த தலைமைத் தலைப்புகளாக ஒருங்கிணைக்கப்பட்டு, சமகால கல்வித் தலைமைத்துவ இலக்கியத்துடன் ஒப்பிடப்படுகின்றன. இந்த ஆய்வின் முக்கிய வரம்புகள் இலக்கிய விளக்கத்தின் கருத்துநிலை இயல்பு, முழு புறநானூற்றையும் வரி வரியாகப் பகுப்பாய்வு

செய்யாதிருத்தல், மற்றும் பழந்தமிழ் மன்னராட்சி சூழலுக்கும் நவீன கல்வி நிறுவனங்களுக்கும் இடையிலான வரலாற்று வேறுபாடுகள் ஆகும்.

பகுப்பாய்வில் ஒவ்வொரு கருப்பொருளும் முதலில் புறநானூறு சார்ந்த ஆய்வுகளில் எவ்வாறு விளக்கப்படுகிறது என்பது பதிவு செய்யப்படுகிறது. பின்னர் அதனுடன் கருத்தியல் ஒற்றுமை கொண்ட சமகால கல்வித் தலைமைத்துவக் கோட்பாடு இணைக்கப்படுகிறது. இறுதியாக, அந்த ஒற்றுமையின் எல்லை மற்றும் நடைமுறைப் பொருத்தம் மதிப்பிடப்படுகிறது. இவ்வாறு மூன்று நிலைகளில் வாசிப்பது, வெறும் ஒப்புமைகளை உருவாக்காமல், வரலாற்று வேறுபாடுகளையும் கல்வி நிறுவனங்களின் தற்போதைய பொறுப்புக்கூறல் அமைப்புகளையும் கவனத்தில் கொள்ள உதவுகிறது.

ஆய்வின் நம்பகத்தன்மையை மேம்படுத்த, ஒரே தலைமைப் பண்பை ஆதரிக்கும் வேறுபட்ட ஆய்வுகளின் கருத்துகள் ஒப்பிட்டு வாசிக்கப்படுகின்றன. மேலும், பழந்தமிழ் அரசரின் பண்பை நவீன கல்வித் தலைவருடன் சமமாக்காமல், செயல்பாட்டின் அடிப்படை மதிப்பு மட்டுமே ஒப்பிடப்படுகிறது. இதனால் உரைப் பொருள், வரலாற்றுச் சூழல் மற்றும் கல்வி பயன்பாடு ஆகிய மூன்றுக்கும் இடையில் தெளிவான வேறுபாடு பேணப்படுகிறது. இவ்வாய்வு அளவியல் பொதுமைப்படுத்தலை நோக்கமல்லாது, கருத்தியல் விளக்கம் மற்றும் பண்பாட்டு பொருத்தத்தை ஆராய்வதையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அணுகுமுறை ஆய்வின் விளக்கத் தெளிவையும் விமர்சன ஆழத்தையும் மேலும் உறுதிப்படுத்துகிறது.

6.ஆய்வுக் கண்டுபிடிப்புகள்

பகுப்பாய்வில் முதன்மையாக வெளிப்படும் கருப்பொருள் நீதி மற்றும் அறப்பொறுப்பாகும். புறநானூற்றின் அரசர் குறித்த ஆய்வுகள் சிறந்த ஆட்சியை அறம், பொறுப்பு மற்றும் சமூக நலனுடன் இணைக்கின்றன (Ali, 2021; M., 2022). கல்வி நிறுவனத்தில் இதன் சமகாலப் பொருள், முதல்வர் அல்லது கல்வித் தலைவர் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துபவராக மட்டும் அல்லாமல், தீர்மானங்களில் நியாயம், வெளிப்படைத்தன்மை மற்றும் மதிப்புசார் நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும் என்பதாகும். எனினும், இன்றைய கல்வித் தலைவரின் அதிகாரம் சட்டம், தொழில்முறை தரநிலைகள் மற்றும் நிறுவனப் பொறுப்புக்கூறல் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

